உ1293
General

4243
१४६७

A COMPENDIUM OF ENGLISH MEDICAL SCIENCE

T004243
Sarasvati Mahal Library. Thanjavur

INDEX

Book I.

THE ANATOMY.

PRELIMINARY OBSERVATIONS, 1.

CHAPTER.

1 Osteology, The Skeleton, 1 ; Vertebral Column, 3 ; Bones of the Skull, 4 ; Bones of the Face, 6 ; Suturus, 7 ; Orbits, 8 ; Nasal Fossæ. 8; Teeth, 9; Thorax, 10 ; Upper Extremity, 11 ; Pelvis, 13, Lower Extremity, 14.
2 The Ligaments, 16 ; Joints, 17.
3 The Muscles, 18.
4 The Arteries, 19.
5 The Venis, 23.
6 The Lymphatic Vessels and Absorbents, 25 ; Lacteals, 25 ; Thoracic Duct, 26.
7 The Nervous System, 26 ; Duramater, 26; Arachnoid Membrance, 27 ; Piamater, 27 ; Cerebrum, 27; Cerebellum, 27 ; Medulla Oblongata, 27 Spinal Cord, 28 ; Cranial Nerves, 28 ; Spinal Nerves, 30.
8 Organs of Sense, 31; Noses, 31; Eyes, 31 ; Ear, 33 ; Tongue, 34 ; Skin, 34.
9 The Viscera ; Thorax, 35 ; The Heart, 35 ; Larynx, 36 ; Trachea and Bronchi, 37 ; The Lungs, 37 ; Pleura, 37.
Abdomen, 38 ; Regions, 38; Peritoneum, 38 ; Alimentary Canal, 39; Salivary Glands, 40 ; Phorynx, 40 ; Œsophagus, 40—The Stomach, 40—Small Intestines, 41—Large Intestines, 41 ; The Liver, 42 ; Pancreas, 42 ; Spleen, 42—Kidneys, 43.
Pelvic Cavity, 43. Bladder, 43 ; Prestate Gland, 44 ; Vesiculæ Seminales, 44 ; Male Organs of Generation, 44 ; Penis, 44. Urethra, 44—Testicle, 45—Semen, 45—Female Pelvis, 46—Vagina, 46—Uterus, 46—Fallepian Tubes, 47—Ovaries, 47—Female External Organs of Generation, 47—Mammary Glands, 48
17 The Fœtus, 49.

Book II.

PHYSIOLOGY.

PRELIMINARY OBSERVATIONS, 1.

CHAPTER.

1 The Blood,1Circulation of the Blood, 3 ; Capillaries, 3.
2 Respiration, 3 ; Animal Heat, 4.
3 Digestion, 4 ; Gastric Juice, 5 ; Chyme, 5 ; Chyle, 5 ; Hunger, 5 ; Thurst, 5.
4 The Skin and its Secretion, 6.
5 The Kidney and its Secretion, 7 ; Uria, 7 ; Uric Acid, 7.
6 The Nervous System, 8
7 Of Voice, and Speech, 9.
8 The Senses, 9 ; The Sense of S mell, 10 ; The Sense of Sight, 10 ; The Sense of Hearing, 11 ; The Sense of Taste, 11 ; The Sense of Touch, 11.
9 Generation, 12 , Menstruation, 12 ; Fœtal Circulation, 13.

Book III.

MATERIA MEDICA AND THERAPEUTICS.

INTRODUCTION, 15.

Circumstances to be attended to in prescribing Age, 16 ; Sex, 16; Temperament, 16; Idiosyncrasy, 17 ; Pulse, 17.
Weights and Measures of the Pharmacopœia of India of 1868-18
Forms of Prescription, 20.
Pharmaceutical Preparations, 21.
Classes of Medicines, 25,
Vegitable Materia Medica. 34
Animal Materia Medica, 166. (*a*)
Inorganic Materia Medica, 166. (*f*)

Book IV.

PRACTICE OF MEDICINE, 167.

PRELIMINARY OBSERVATIONS, 168.

CHAPTER.

1 General Diseases, 170.
Morbid States of the Blood, 170.
Plethora, 170 ; Ancemia, 171.
Hydrophobia, 172.

Hæmorrhage, 174; Epistaxis, 175; Stomatorrhagia, 176; Hœmoptysis 176 ; Hœmatemesis, 177; Hœmaturia, 174; Menorrhagia, 178.
Dropsy 179.
Gout, 181.
Rheumatism, 183.
2 Fevers, 186—Continued, 187—Simple, 187—Typhus, 189—Typhoid 191—Relapsing, 193.
Intermittent Fever, 194.
Remittent Fever, 197.
Eruptive Fever, 199—Small pox, 201—Cow pox, 202—Chicken pox, 204—Measles, 204—Scarlet Fever, 205.
3 Diseases of the Nervous System, 206.
Encephalitis, 207.
Hydrocephalus, 208.
Appoplexy, 210.
Sun-stroke, 212.
Insanity, 213.
Headache, 217.
Palsy, 220.
Epilepsy, 224.
Hysteria, 225.
Neuralgia, 226.
4 Diseases of the Organs of Respiration and Circulation, 228.
Cold, 228.
Ozæna, 229.
Croup, 230.
Laryngitis, 231.
Laryngismus Stridulus, 232.
Bronchitis, 232.
Hooping Cough, 234.
Asthma, 236.
Pleurits, 237.
Pneumonia, 239
Consumption, 240.
Pericarditis, 243.
Hypertropy of the Heart, 244.
Rupture of the Heart, 245.
Angina Pectoris, 245.
5 Diseases of the Organs of Digestion
Glossitis, 246; Ulcers of the Tongue, 247; Cracked Tongue, 247.
Aphthæ of the Mouth, 247.
The Mumps, 248.
Quinsy, 248.
Indigestion, 249.
Gastritis, 254.
Enteritis, 255.
Dysentry, 259.
Diarrhœa, 260.
Cholera, 261.
Colic, 265.
Constipation, 266.
Worms, 267.
6 Diseases of the Liver and Spleen, 269.
Hepatits, 269.
Jaundice, 271.
Hypertrophy of the Spleen, 272.
7 Diseases of the Peritoneum, 272.
Peritonitis, 273.
Dropsy of the Belly, 274.
Tabes Mesenterica, 275.
8 Diseases of the Kidneys and Bladder 276.
Nephritis, 276.
Gravel, 277.
Diabetes Mellitus, 279.
Irritability of the Bladder, 281.
Spasm of the Bladder, 282.
Paralysis of the Bladder, 283.
Inflammation of the Bladder, 284
9 Diseases of the Skin, 285.
Urticaria, 285.
Ring-worm, 285.
Tinea, 286.
Itch, 286.
Itching, 286.

Book V.

SURGERY.

INTRODUCTION, 289.
CHAPTER.
1 Nervous symptoms that follow injuries, 289.
Collapse, 289.
Tetanus, 290.
2 Hypertrophy, 292.
Atrophy, 292.
Inflammation, 293.
Adhesion, 293.
Suppuration, 293.
Abscess, 296.
Hectic Fever, 298.
Erysipelas, 299.
Ulcers, 300.
Mortification, 303.
Scrofula, 304.
Tumours, 306; Cancer 307.
Elephantiasis, 309.
3 Different kinds of Injuries.
Wounds, 310; Gunshot Wounds.
Burns and Scalds, 312.
Effects of Minerals and Vegetable; 313.
Irretants, 314.
Effects of Poisonous Insects and Serpents, 314.
Guinea-worms, 315.
Venerial Disease, 316.
Gonorrhœa, 316; Chancre, 318.
Bubo 321.
4. (*a*) Injuries and Surgical Diseases of various Tissues, Organs and Regions, 321.
Surgical diseases of the Skin, 321.

(*b*) Diseases and Injuries of Muscles, Tendous and Bursœ, 324.
(*c*) Diseases and Injuries of the Bones, 325; Hypertrophy, 325 ;Periostitis, 323; Necrosis, 326; Exfoliation. 327; Caries, 327; Fractures, 327.
(*d*) Diseases and Injuries of joints Synovitis. 327; Auchylosis, 358; Diseases of the Hip joint, 339; Wounds of joints, 340; Dislocations, 341.
(*e*) Injuries and Diseases of Arteries, 347; Wounds of Arteries, 347; Aneurysin, 349.
(*f*) Injuries and Diseases of the Veins 351.
(*g*) Injuries and Diseases of the Nerves. 351.
(*h*) Injuries of the Head, 352; Wounds of the scalp, 352; Concussion 352, Compression, 353; Fracture of the Skull; 354 Wounds of the Brain, 355; Trephining, 355; Paracentesis, 356.
(*i*) Injuries and Diseases of the eye, 356; Foreign body in the eye, 357; Diseases of the Eyelids, 357; Diseases of the Lachrymal Apparatus, 357; Diseases of the Gonjunctive, 360; Diseases of the Cornea, 563; Diseases of the selerotic 364; of the Iris 364, of the selerotic 364, Amanrosis 365; Short and Long sight, 365.
(*j*) Diseases and injuries of the Ear, 366.
(*k*) Diseases and Injuries of Face and Nose, 367; Affection of the Lips, Nasal, 368: Cavities 369; Teeth and Gums, 369.
(*l*) Surgical Diseases and Injuries of the Neck, 370; Tonsilitis, 370; Enlargement of Uvula, 370; Foreign bodies in the Pharynx 370; Foreign, bodies in the Larynz, 371; Hanging, 371; Drowning, 371; Wounds of the Throat, 372.
(*m*) Injuries of the Abdomen, 372; Tapping, 372.
(*n*) Hernia, 373.
(*o*) Diseases and Injuries of the Rectum and Anus, 374.
(*p*) Diseases of the Urinary organs, 377; Stricture, 377; Fistula in Permeo, 378. Stone in the Bladder, 379.
(*q*) Diseases of the Male Genitals, of the Penis, 379; of the Testis, 380.

Book VI.

MIDWIFERY

CHAPTER.

1. Utiro-gestation, 383.
Signs of Pregnancy, 386.
Duration of Pregnance, 387.
Abortion, 389.
Diseases of Pregnancy, 390.
2. Parturition, 390.
(*a*) Natural Labour, 393. Convalescence after Natural labour, 398.
(*b*) Difficult Labours, 402.
(*c*) Obstetric operations, 406. Turning, 407. Vecties, 409. Forceps, 409. Crnistomy, 411. The Cæsarian Section, 413.
(*d*) Irrigularities of Head Presentation, 414.
(*e*) Preternatural Labours, 415.
(*f*) Complex Labours, 417. Twin, 417. Fuins presentation, 418. Retention of the Placenta, 418. Hæmorhage-420. Rupture of the Uterus, 424, Inversion of the Uterus, 425. Convulsions, 426. Paralysis, 429. Tetanus, 430. Sudden death, 430.
(*g*) Puerperal Fever, 430.
(*h*) Phlegmasia Dolens, 433.
(*i*) Puerperal Mania, 434.
(*j*) Ephemeral Fever, 435.
(*k*) Sore Nipple, 436.

Book VII.

HYGIENE.

PRELIMINARY OBSERVATION.

1 Air, 439.
2 Water, 440.
3 Food, 440.
4 Personal Cleanliness, Bathing Clothing, 442.
5 Regularity of the Bewels, 445.
6 Exercise, 445.
7 Cheerful Enjoyments, 446.
8 Sleep, 446.
9 Habitation, 447.
10 Infectious and Contagious Diseases, 447.
Appendix of Formulæ, 448.
Aliments.

ERATTA

பிழை திருத்தம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
11-த்தில்	22-ல்	காதுளோது.	காதுகேளாது.
44 ,,	9 ,,	டிளகுந்தூள்.	மிளகுத்தூள்.
44 ,,	18 ,,	லாடெனம் $\frac{1}{4}$-டிரும்.	$\frac{1}{2}$-டிரும்.
102 ,,	12 ,,	1060-கிறேன்.	160-கிறேன்.

தவிர 1906௵ முதல் இக்கிரந்தம் வெளியிடுவதற்கு முயற்சித்து, அநேக இடையூறுகள், வந்ததுமன்றி, முக்கியமாய் இதை சஞ்சிகைகளாக வெளியிட ஆரம்பித்ததுமுதல் திரேக அசெளக்கியமாய் விட்டபடியால், அக்ஷர பிழைகள் அங்காங்கு அடங்கிவிட்டது. நண்பர்கள் அதை கவனிக்கமாட்டார்களென்று விரும்புகிறோம்.

இவராலியற்றியதும் எங்களால் இரண்டாவது தடவை வெளியிட்ட கிரந்தங்கள், பைஷஜகல்பம். Hindu Pharamacopœia.

இதை எழுதியவர் ம-ஸ- ஜகந்நாத நாயுடு [illegible]

அட்டவணை

BOOK I

THE ANOTOMY

சாரீரம்

	பக்கம்.		பக்கம்.
அண்டகோசம்	45	கடிதடம்	47
அண்டம்	45	கணையம்	42
அந்தரம்	41	கண்கள்	31
அபானம்	41	கண்குழிகள்	8
அல்குல்	47	கண்சவ்வு	32
அன்னவாகி	40	கண்டம்	36
அன்னாசயம்	40	கண்ணீர்க்கோளம்	32
ஆக்கிராண நரம்பு	28	கண்மடல்	33
ஆசனம்	41	கண்மணி	32
ஆணிசவ்வு	32	கண்ரெப்பை	33
ஆண்குறி	44	கபாலரேகைகள்	7
ஆமாசயம்	40	கரு	47
இடுப் பெலும்பு	13	கருப்பாசயம்	46
இடைக்குழி	13-43	கருப்பிண்டம்	49
இந்திரிய கமலம்	44	கருப்பை	49
ஷை நரம்புகள்	28	கருவிழி	32
இந்திரியம்	45	கல்லீரல்	42
இருதயக்கோசம்	35	கவாடங்கள்	36
இருதயம்	35	கவுட்டி	38
இரைக்குழல்	39	கன்னங்கள்	39
இரைப்பை	40	காது	33
இறைச்சி	18	கால்	14
ஈரல்	42	கிஷ்ணமணி	32
ஈறு	39	கிஷ்ணமண்டலம்	32
உச்சித்துவாரம்	8	கீல்கள்	17
உண்ணாக்கு	39	குக்ஷி	40
உதடுகள்	39-48	குடல்சவ்வு	38
உதரம்	38	குதம்	41
உபஸ்தம்	47	குய்யம்	47
உமிழ் நீர்க்கோளங்கள் ...	40	குரல்வளை	36
ஊத்தாம் பிள்ளை	43	கூபகம்	13
எலும்புகள்	1	கூபகம்குழி	43
ஜமன் சவ்வு...	48	கை	11

	பக்கம்.
கொங்கை	48
கோசம்	44
சங்கம்	36
சதை	18
சந்திகம்	16
சந்திரநாடி	48
சருமம்	34
ஜலப்பை	43
சலனநரம்புகள்	28
ஜலாசயம்	42
ஜடரம்	36
ஜலத்துவாரம்	44
ஸ்தனம்	48
சிசினம்	44
சிசு	46
சிரசு	4
ஷை நரம்புகள்	28
சிரவங்கள்	36
சிறுகுடல்	41
சிறுநாக்கு	39
சினைப்பாதை	47
சினைப்பை	47
சின்னமூளை	27
சுக்கிலமண்டலம்	32
சுக்கிலம்	45
சுவாசக்குழல்	37
சுவாசப்பை	37
சூத்து	41
செவி	33
செவு ரொட்டி	42
ஞானேந்திரியம்	31
டான்சில்ஸ்	40
டியூராமெடர்	26
தந்தங்கள்	9
தந்துதிகள்	20
தலை	4
தாது	45
திரிகஸ்தான எலும்பு	3
தீனிப்பை	40
தொண்டை	43
தொனிதந்திகள்	36
தோல்	34
நகம்	35
நாக்கு	34-39
நாசி	31

	பக்கம்.
நாசித்துவாரம்	8
நாடிகள்	19
நாதக்குமிழ்கள்	47
நாதம்	47
நாதவாகி	47
நாளங்கள்	23
நிணநரம்புகள்	25
நிதம்பம்	48
நீர்த்தாரை	44
நுரையீரல்	37
நெஞ்சறை	10-35
நேத்திரங்கள்	31
ஷை சவ்வு	32
ஷை நரம்பு	28
பகம்	48
பஞ்சேந்திரியங்கள்	31
பரிபுப்புசம்	32
பவளவாய்	41
பற்கள்	9
பாதங்கள்	15
பாதநரம்பு	28
பான்கிரியஸ்	42
பித்தப்பை	42
பிரமலிபி	7
பிரமாந்திரம்	8
பிராட்ஸ்டேட்கிளாண்ட்ஸ்	44
பிலீகம்	42
பீஜக்கொடி	45
பீஜப்பை	45
பீஜம்	45
புப்புலம்	37
புருஷஜனனேந்திரம்	44
புருவங்கள்	33
பெண்இடைக்குழி	45
பெண்குளி	48
பெரியமூளை	27
பெரினியம்	48
பெருங்குடல்	41
பெருநாடி	20
மணி	44
மணிக்கட்டு	12
மண்ணீரல்	42
மயிர்	35
மலக்குடல்	41
மலத்துவாரம்	41

	பக்கம்.		பக்கம்.
மாமிசம்	18	யோனி	64
மார்புக்குழி	35	லிங்கம்	48
முகுளம்	27	ரச இந்திரியம்	34
முட்டைப்பை	44	ரத்தாசயம்	35
மூதுகெலும்பு	3	ரூபவுபர்த்திசவ்வு	32
முருத்து	16	ரோமம்	35
மூலை	48	லலாடலிபி	7
முள்ளந்தண்டு	3	லிங்கம்	44
முள்ளந்தண்டுகொடி ...	28	ஷை கவசம்	43
ஷை நரம்புகள்	30	வயறு	24
மூக்கு	31	வாசனைநரம்பு	38
மூட்டு	16	வாய்	48
மூத்திரக்குண்டிக்காய் ...	43	விந்து	39
ஷை துவாரம் ...	44-48	விருஷணம்	45
ஷை பை ...	43-46	விழிகள்	35
மூளை	26	வீணாதண்டு	41
யகிர்த்கண்டம்	42	வெள்ளீரல்	47

BOOK II to VII.

2-வது புஸ்தகமுதல் 7-வது புஸ்தகம் வரையில்

அகத்தி ...	77	அஸ்திசுரம் ...	189
அகத்திவிரை ...	52	அஸ்திசோபை ...	325
அகாலப் பிரசவ உற்பத்திக்கிரியை ...	406	அஸ்திதாபிதம் ...	325
அகாலப் பிரஸவம் ...	389	அஸ்திபங்கம் ...	327
அக்கி ...	299	அஸ்திவிரணம் ...	327
அக்கிராகாரம் ...	99	அஸ்மரிரோகம் ...	277
அக்கினிதிராவகம் ...	166g	அஞ்சனக்கல் ...	166y
,, பிளாஸ்திரி ...	166b	,, சிந்தூரம் ...	166y
அக்கினிமந்தம் ...	249	,, சுண்ணம் ...	166y
அக்கினிவிரணம் ...	312	,, பஸ்மம் ...	166y
அக்குரோட்டு ...	133	அடுப்புக்கரி ...	166f
அங்காகர்ஷண நாஸகாரிகள்	27	அடைக்கண் ...	359
அங்குஷ்டவாதம் ...	182	அட்டை	166 a
அசதி சந்நி ...	210	அட்ரோபியா ...	120
அக்ஷரம் ...	247	அதிசார சந்நிபாதசுரம் ...	191
அசிடிக் ஆவிட் ...	165	அதிசாரம் ...	259
அசிடேட் அவ்போடாஷ் ...	166q	அதிமதுரப்பால் ...	75
,, மார்பியா ...	45	அதிமதுரம் ...	75
,, லெட்	166bb	அத்தர் ...	79
அசீரணபேதி ...	259	அத்தி ...	139
அசீரணம் ...	249	அந்தர் சினிக்தசாரிகள் ...	30
அஸ்த உதயம் ...	416	அபஸ்மாரகரோகம் ...	224
		அபதந்திரிகவாதம் ...	245

	பக்கம்.		பக்கம்.
அபமிருத்தியு	... 430	ஆகாச கெருடன் கிழங்கு	... 87
அபினி	... 42	ஆகொனைட்	... 35
அபினிகலந்த பரிமள சீமைச் சுண்ணமபு சூரணம்.	166v	ஆக்கிராணஉப்பு	...166b
அபினித்தைலம்	... 44	ஆசன உதயம்	... 415
அபினி பாவனத்திரவம்	... 43	ஆசனக்குளிகை	... 22
அமரம்	... 362	ஆசிட்டார்ட்ரேட் ஆவ் பொடாஷ்	...166p
அமுக்கிரா	... 124	ஆடாதோடை	... 116
அம்மாம்பச்சரிசி	... 135	ஆடுதீண்டாபாளை	... 131
அம்மை	... 199	ஆட்டு கொழுப்பு	...166e
அம்மைகுற்றல்	... 202	ஆனிசவ்வு தாபிதம்	... 363
அம்மோனியாகம்	... 91	ஆணிப்பூ	... 363
அயச்சிந்தூரம்	166cc	ஆமணக்கு	... 133
அயப்பாவன ஒயின்	166dd	ஆமல நாசகாரி	... 26
,, திரவம்	166dd	ஆயல் ஆவ் டர்பன்டைன்	... 140
அரத்தை	... 147	ஆரஞ்சிப்பழம்	... 55
அரரூட்	... 146	ஆரோமாடிக் ஸ்பிரிட்ஸ் ஆவ் அம்மோனியா	...166l
அரிசி	... 159		
அரிதாரம்	...166x	ஆர்ஸ் ராடிஷ்	... 46
அருநெல்லி	... 135	ஆலமரம்	... 139
அரூதா	... 54	ஆலீவ் ஆயல்	... 102
அரைக்கண்	... 159	ஆல்கோ அல்	... 162
அரையாப்புகட்டி	... 321	ஆல்ஸ்பைஸ்	... 84
அரைவாதம்	... 222	ஆல்பகோரா	... 81
அர்த்தமுகவாதம்	... 223	ஆவாரை	... 77
அர்திதவாதம்	... 223	ஆளிவிரை	... 52
அலசரோகம்	... 265	ஆற்றுத்தும்மட்டி	... 85
அலரி	... 105	ஆன்கிலோவிஸ்	... 338
அலிசிவிதை	... 52	ஆன்டிமோனியல் ஒயின்	...166y
அல்ப்பசுரம்	... 187	,, ,, பவுடர்	...166x
அவகாகம்	... 443	இங்கு நவக்ஷாரமது	...166b
அழவணம்	... 81	இசிவு	... 292
அழிகர்ப்பம்	... 389	இஸ்போகல்விரை	... 124
அழிகிப்போகுதல்	... 303	இடுப்புவலி	... 185
அழுக்கு	... 399	இந்திரிய காட்சிகள்	... 9
அறிவு	... 8	இந்துப்பு	...166p
அறுகம்புல்	... 161	இபிகாக்	... 94
அறுக்கீரை	... 125	இரட்டைபிள்ளை	... 417
அனீசு	... 36	இராக்குருடு	... 365
அன்னதுவேஷம்	... 253	இருதயசோபை	... 244
அன்னபாகம்	... 5	,, தாபிதம்	... 243
அன்னபேதி	166cc	இருதயத்தொழில்	... 2
அன்ஞசயத்தாபிதம்	... 254	இருதயகிழிவு	... 245
அன்னியுரிசம	... 349	இருமல்	4-232
ஆகந்துகசுரம்	... 186	இரைப்பு	... 236

	பக்கம்.
இலவங்கப்பட்டை	... 129
இலவங்கம்	... 83
இல்டீரியம்	... 86
இலுப்பை	... 100
இலைக்கள்ளி	... 134
இழைக்கட்டி	... 306
இளகிய சவுக்காரம்	... 103
இளநீர்	... 154
இளம்பிள்ளை வாயுவு	... 222
இளிச்சக்கண்	... 358
இன்பிளமேஷன்	... 293
ஈதர்	... 163
ஈயச்சிந்தூரம்	166bb
உக்கிர ரோகசமன காரிகள்	... 27
உச்சாககாரிகள்	... 33
உஷ்ணகாரிகள்	... 33
உஷ்ணசந்தி	... 212
உஷ்ணபேதி	... 259
உணங்கல்	... 292
உண்ணாக்கு வளர்த்தி	... 350
உதயசலம்	... 385
உதயம்	... 391
உதரவாத ஹரகாரிகள்	... 28
உத்தாமணி	... 107
உப்பசம்	... 236
உபத்திரவசுரம்	... 186
உப்புதிராவகம்	... 166j
உலாத்துதல்	... 445
உழமண் உப்பு	...166q
உள்ளுருக்கி	... 275
உற்கருசி	... 409
உன்மாதம்	... 213
ஊதளை	... 113
ஊமத்தை	... 120
ஊறுகள்	... 310
எக்டிக்பீவர்	... 298
எக்ட்ரோபியன்	... 358
எச்சிற்றழும்பு	... 285
எட்டிக்கொட்டை	... 108
,, உப்பு	... 109
எப்சம்சால்ட்	...166v
எரிவண்டு	...166b
எருக்கு	... 106
எர்கட்	... 156
எலிப்பாஷாணம்	.. 166x

	பக்கம்.
எலுமிச்சன்	... 54
,, பழஉப்பு	... 57
எலும்புமுறிவு	... 327
எழுர்ச்சிக் கண்ணோவு	... 362
எள்ளு	... 111
என்ட்ரோபியன்	... 358
ஏகாஹிகசுரம்	... 194
ஏலரிசி	... 145
ஏழிலைப்பாலை	... 104
ஐசிங்கிளாஸ்	166 c
ஐட்ரோ குளோரேட் ஆவ் மார்ப்பிய	... 44
ஐட்ரோ சையானிக் ஆசிட்	... 80
ஐம்புலன்கள்	... 9
ஐம்பொறிகள்	... 9
ஐயோடைட் ஆவ்பொடாசியம்	166q
ஐயோடைன்	...166i
,, களிம்பு	...166i
,, பாவனத்திரவம்	...166i
,, பூசுத்தைலம்	...166i
ஒட்டுவாரொட்டி	... 447
ஒட்டுவியாதி	169-447
ஓதியன்	... 66
ஒயிட் பிரிசிபிடேட்	...166ff
ஒலி	... 9
ஒற்றிடம்	... 23
ஒற்றுணர்வுள்ள நரம்புகள்	... 9
ஓனிக்ஸ்	... 364
ஓசை	... 9
ஓமம்	... 89
ஒவ்ம்	... 9
ஔஷதஅளவு	... 18
ஔஷதடாப்பு எழுதும் கிரமம்	20
ஔஷதப்பிரயோக ரூபங்கள்	21
ஔஷதவகுப்பு	... 25
கக்கரிக்காய்	... 87
கக்கிருமல்	... 235
கக்குவாய்	... 235
கசகசாசெடி	... 41
கசம்புவாதுமை	... 81
கசப்புவெட்பாலை	... 105
கஷாயம்	... 23
கஷ்ட பிரசவம்	... 402
கஸ்தூரி	...166d
கஸ்தூரிமஞ்சள்	... 146

	பக்கம்.
கஞ்சா	... 138
கஞ்சாங்கோரை	... 118
கடலைப்புளிப்பு	... 77
கடற்பாசி	... 160
கடினப்புத்து	... 308
கடுகு	... 46
கடுகுரோகினி	36-114
கடுக்காய்	... 82
கடுக்காய்பூ	66-83
கட்டிகள்	306-322
கணை	275-306
கண்கட்டி	... 357
கண்கூச்சம்	... 355
கண்டங்கத்திரி	... 123
கண்டமாலை	... 304
கண்டுபரங்கி	... 116
கண்ணீர்	... 10
கண்ணீர்பெருகல்	... 359
கண்ணோய்	... 360
கண்பூ	... 363
கண்ரோகம்	... 275
கண்வரக்ஷி	... 359
கத்தரி	... 124
கந்தகத்திராவகம்	...166g
கந்தகம்	... 166f
கந்தம்	... 9
கபஹரகாரிகள்	... 32
கபாலசேதனம்	... 11
கபாலச்சூலை	... 217
கபாலவாயு	... 217
கமுகு	... 155
கம்பவாதம்	... 223
கம்பிரஷன்	... 353
கம்பியுப்பு	...166o
கம்பு	... 161
கரசிலாங்கண்ணி	... 100
கரப்பான்	... 286
கரி போல்டஸ்	... 166f
கரியுப்பு திராவகம்	...166g
கரியபோளம்	... 149
கரு	... 3
கருங்காலி	... 101
கருஞ்சீரகம்	... 36
கருணை	... 156
கருநொச்சி	... 114
கருந்தகரை	... 73
கருப்பக்கால அட்டவணை	... 388
,, பிரமாண்ணம்	... 387
கருப்பக்குறிகள்	... 386
கருப்பச்சின்னங்கள்	... 386
கருப்பஸ்திரீரோகங்கள்	... 390
கருப்பாசயச் சேதனம்	... 413
,, பங்கம்	... 424
கருப்பிணிவாதம்	... 429
,, ரத்தச்சுழல்	... 13
கருப்பையின் அகம்புறமாகுதல்	425
கரும்புற்று	... 307
கருவழிக்கிறவிதி	... 406
கருவழிவு	... 389
கருவளர்த்தி	... 383
கருவாப்பட்டை	... 129
கருவேல்	... 76
கர்கடகசிங்கி	... 66
கர்ப்பூரக்கலவை பாவனத்திரவம்	... 129
கர்ப்பூரதைலம்	... 129
கர்ப்பூரம்	... 128
கர்ப்பூரவள்ளி	... 119
கர்னரோகங்கள்	... 366
கலம்பாவேர்	... 38
கலிங்கம்	... 85
கலியாணப்பூசினி	... 87
கல்பாசி	... 161
கல்லுப்பு	...166s
கல்லோடியன்	... 50
கழலை	... 306
கழிச்சல்	... 259
களிச்சக்காய்	... 71
களிம்பு	... 22
களா	... 289
கள்ளி	... 134
கறியபிலை	... 59
கறியுப்பு	... 166s
,, திராவம்	...166h
கறுப்புப்பு	... 166s
கற்றாழை	... 151
கனப்பு	... 294
கன்கஷ்ஷன்	... 352
கன்காடன்	... 49
கன்னப்புற்று	... 367

	பக்கம்.		பக்கம்.
காக்கட்டான்	... 77	கிட்டப்பார்வை	... 365
காக்காய் கொல்லி	... 39	கிரஹணதோஷம்	... 367
காக்கைவலி	... 224	கிரஹிணி	... 257
காசரோகம்	... 232	கிரகம்	... 447
காசுக்கட்டி	... 67	கிரந்தி	... 300
காச்சக்கட்டி	... 196	கிரமபிரசவம்	... 393
காஞ்சொறி	... 135	,, நிர்வாகம்	... 393
காஸ்டர்	...166e	கிரமாதீதப் பிரசவம்	... 393
காஸ்டிக்போடாஸ்	...166n	கிராணி	... 256
காஸ்ட்டிரிக் ஜூஸ்	... ii 5	கிராபிபின் முட்டைகள்	... 12
காடி	... 165	கிராம்பு	... 83
காடிக்காரம்	166kk	கிரிகொரீபவுடர்	... 126
காட்டாமணக்கு	... 133	கிரியஸோட்	... 142
காட்டுஅலரி	... 105	கிரியாத்து	... 111
காட்டுக் கருணை	... 156	கிரீம் ஆவ் டார்டர்	...166p
காட்டுச்சீரகம்	... 99	கிருதம்	... 22
காட்டுள்ளி	... 151	கிருத்திரசிவாதம்	... 227
காது	... 33	கிருமிசத்துரு	... 79
காதுதாபிதம்	... 366	கிருமிநாஸகாரி	... 27
காதுவலி	... 367	கிருமிப்பொடி	... 98
காதெழுச்சி	... 366	கிரேபவுடர்	166ff
காந்தமண் பஸ்மம்	...166v	கிலேதம்	... 21
காப்பிகொட்டை	... 96	கிளிசரீன்	... 103
காமாக்ஷிப்புல்	... 160	கீல்சவ்வுதாபிதம்	... 337
காயங்கள்	... 310	கீல்வாதம்	... 183
சாயபுட்டிதைலம்	... 83	கீழாநெல்லி	... 134
காய்ச்சுரை	... 50	குங்கிலியத்தைல	... 68
காரமுள்ளநவக்ஷாரவாயுஜயநீர் 166k		குங்கிலியம்	61-62
காரம்	166q-18	குங்குமப்பூ	... 148
காரன் ஆயில்	...166u	குடசப்பாலை	... 105
கார்த்திகைக் கிழங்கு	... 151	குடல்சல்வு தாபிதம்	... 431
கார்பஸ்லூடியம்	... 13	குடல்தாபிதம்	... 255
கார்பொனேட் ஆவ் சோடா	...166g	குடைச்சல்	... 226
,, பொடவ்ஷ்	...166h	குட்டிவிளா	... 59
,, மக்னிஷியா	...166v	குண்டுகாயம்	... 312
கார்போக அரிசி	... 78	குதிரைப் புடுக்குமரம்	... 52
கார்போலிக் அசிட்	... 166	குத்தல்	... 226
காலதேனு	... 113	குந்தம்	... 264
காலிக் ஆசிட்	... 138	குத்திரிகம்	... 61
காமெலாமல்	...166h	குப்பைமேனி	... 134
கால்ஷிகம்	... 152	குய்யரோகம்	... 316
கால்பேனம்	... 91	குரல்வளை தாபிதம்	... 231
கிச்சிலி	... 55	குரோசானி யோமம்	... 122
,, கிழங்கு	... 146	குலை எரிவு	... 252
கிஷ்ணயண்டல தாபிதம்	... 364	குல்கந்து	... 78

	பக்கம்.		பக்கம்.
குவாஷியா	... 59	கோரோசனை	...166f
குவாமாவு	... 146	கோச ஆகாரகட்டி	... 307
குவையாகம்	... 53	கோவை	... 87
குவைஞ	... 93	கோளக்கட்டி	... 307
குளிகை	... 22	கோனியம்	... 91
குளிர்க்காச்சல்	... 194	கோஷ்டம்	... 108
குளோரேட் ஆவ் பொடாஷ்	...166p	சங்கங்குப்பி	... 116
,, லைம்	..166v	சங்கோசனகாரி	... 28
குளோரோபாரம்	... 164	சடாமாஞ்சி	... 96
குறடு	... 28	சணம்பு	... 50
குறிகள்	... 269	சதகுப்பை	... 89
குறுக்கு	... 416	சததசுரம்	... 186
குறுந்தொட்டி	... 52	சதாப்பு	... 54
குறுமாந்தம்	... 230	சதுரக்கள்ளி	... 133
குற்றக்காயம்	... 310	சதைப்படர்த்தி	... 363
குன்மம்	... 249	சதைப்படலம்	... 363
குன்றிமணி	... 75	சதைவுகாயம்	... 311
கூந்தல்பனை	... 154	சந்ததசுரம்	... 197
கூவாமாவு	... 146	சந்தனமரம்	... 230
கெச்சக்காய்	... 71	சந்திக சிலேஷ்மரோகம்	... 183
கேக்விதை	... 88	சந்தோஷ காலக்ஷேபம்	... 446
கேழ்வரகு	... 161	சந்தி	... 292
கேழ்வி	... 11	சந்நிபாதசுரம்	... 189
கைகால் பிடிப்பு	... 220	சப்ஜா	... 118
கைநோ	... 75	சப்தம்	... 9
கைல்	... 5	சப்பாத்திப்பூ	... 51
கையாந்தகரை	... 100	சமனகாரிகள்	... 33
கொடிகாக்கட்டான்	... 113	க்ஷதசுக்கிலம்	.. 264
கொடிநார்த்தை	... 58	க்ஷயம்	... 240
கொடிமுந்திரி	... 64	சயித்தியக்கட்டி	... 248
கொடிவேலி	... 119	சரக்கொண்ணை	... 69
கொட்டாவி	... 4	சரீரகுணம்	... 16
கொத்துமல்லி	... 90	சருக்கரை	... 157
கொப்பா	... 68	சருப்பக்கடி	... 314
கொம்புப்புடல்	... 88	சருமசோபை	... 321
கொய்யாச்செடி	... 84	சருமம்	... 6
கொருக்கு	... 318	சர்க்கரா அஸமரிரோகம்	... 277
கொழுப்புக்கட்	... 306	சர்வாங்க வியாபகரோகங்கள்	170
கொள்ளைநோய்	... 169	சர்பத்	26-158
கோசஆகாரகட்டி	... 307	சல்பேட் ஆவ் சோடா	...166t
கோதுமை	... 158	,, பொடாஷ்	...166p
கோமசூரிகை	... 202	,, மாக்னிஷியா	... 166v
கோமாரி அம்மை	... 202	சவட்டுமண் உப்பு	...166q
கோரியன்	... 384	சவுக்காரம்	... 140
கோரைக்கிழங்கு	... 165	சவுக்கார் பூசுத்தைலம்	... 103

	பக்கம்.		பக்கம்.
சவுக்கியம்	... 168	சாயமரம்	... 71
சுவுக்குமரம்	... 140	சாலாமிசிரி	... 144
சவ்வீரம்	...166ii	சாலேசரம்	... 365
ஜகனுவர்த்தவாதம்	... 185	சால்முகுரா	... 47
ஜம்பீரம்	... 56	சாவணம்	... 409
ஜயநீர்	... 23	சான்டொனீன்	... 98
ஜலசம்சர்க்கம்	... 21	ஜாலப்	... 111
ஜலதோஷம்	... 228	சிகிச்சாவிதிகள்	... 169
ஜலபயரோகம்	... 172	சிகிச்சை	... 169
ஜலமஸ்தகம்	... 405	சிங்கோனு	... 92
ஜலம்	166 f 440	சிசுவைத்திருப்பு	... 407
ஜலயந்திரம்	... 24	சிட்ரனுயின்ட்மெண்டு	...166jj
ஜலவர்த்தனகாரி	... 31	சிட்ரிக் ஆசிட்	... 57
ஜலுப்பு	... 228	சித்தரத்தை	... 147
ஜனனம்	... 12	சித்திரமூலம்	... 119
ஜன்மவியாதி	... 169	சித்திரீகரணம்	... 411
ஸ்காமொனி	... 112	சிந்தூரம்	166bb
ஸ்கோல்விரை	... 124	சிம்பதடிக்நர்வ	... 9
ஸ்டிகிங் பிளாஸ்டர்	... 142	சிம்பிளிபெரன்	... 359
ஸ்டிரிக்னிய	... 109	சிரகாயங்கள்	... 352
ஸ்டோராக்ஸ்	... 81	சிரங்கு	... 286
ஸ்தம்பரோகம்	... 220	,, துளைத்தல்	... 411
ஸ்தூலம்	... 168	சிரசெலும்புமுறிவு	... 354
ஸ்நானம்	... 442	சிரசைக்குற்றி நீரெடுக்குதல்	356
ஸ்பரிசநரம்புரோகம்	... 61	சிராபீனசம்	368
ஸ்பரிசம்	... 11	சிரெட்டா	... 110
ஸ்பிரிட்ஸ் ஆவ் அம்மோனியா ஆரோமாடிக்ஸ்	...166b	சிலந்தி	... 322
		சிலீபதம்	... 309
,, நைட்ரிக் ஈதர்	... 164	சில்விஷம்	... 314
ஸ்போடசுரங்கள்	... 199	சிவதைவேர்	... 113
ஸ்மிரிதிரோதகாரி	... 26	சிவப்புசந்தனம்	... 74
சாக்மிகிச்சர்	...166v	சிவனுர்வேம்பு	... 77
சாங்கிராமிக ரோகங்கள்	447-169	சிறுகீரை	... 124
,, ரோகநிவர்த்தனகாரி	... 28	சிறுதேக்கு	... 116
சாடராக்கினி	... 5	சிறுநாவற்பூ	... 49
சாதிக்காய்	... 127	சிறுபரு	... 322
சாதிபத்திரி	... 127	சிறுபீளை	... 125
சாதிலிங்கம்	... 166 ff	சிற்றாமணக்கெண்ணெய்	... 132
சாதுர்க்கிகசுரம்	... 187	சிற்றாமுட்டி	... 52
சாத்திய அசாத்திய நிதானம்	168	சினிக்தகாரிகள்	... 31
சாபல்லியம்	... 216	சின்னபின்னகாய்	... 311
சாமந்தி	... 97	சின்னம்மை	... 204
சாம்பலுப்பு	...166n	சீதக்கடுப்பு	... 257
சாம்பிராணி	... 101	சீதசுரம்	... 194
,, பதங்கம்	... 102	சீதபேதி	... 257

	பக்கம்.		பக்கம்.
சீதளகாரிகள்	... 33	,, ஜலம்	...166u
சீந்தில்கொடி	... 39	,, ,, தைலம்	...166u
சீமை அகத்தி	... 76	சுத்திசெய்த சீமை சுண்ணாம்பு	166u
,, அதிமதுரம்	... 76	சுப்பிரவஸ்திரதாரணம்	... 442
சீமை அத்தி	... 138	சுயசம்பவ ரத்தப்பிரவாகம்	... 420
,, ஆமணக்கு	.. 133	சுரஹரகாரிகள்	... 32
,, இந்துப்பு	...166v	சுரக்கட்டி	... 272
,, எண்ணெய்	... 102	சுரசம்	... 24
,, எரிவண்டு	...166a	சுரம்	... 186
,, ,, காடி	...166b	சுருமா	...166j
,, காடி	...165b	சுரோணிதம்	... 11
,, பிளாஸ்திரி	...166b	சுரைச்செடி	... 88
,, சுண்ணாம்பு	...166u	சுவயிச்சா விமோசனம்	... 416
,, ,, குழம்பு	...166u	சுவாஸகாசம்	... 236
,, ,, சூரணம்	...166v	சுவாஸம்	... 3
,, ,, அபினிகலவசூரணம்	166v	சுவேதகாரிகள்	... 30
,, சடாமாஞ்சி	... 96	சுவை	... 11
,, செவ்வந்தி	... 98	சுளுக்கு	... 324
,, சோம்பு	... 89	சுறாமீன்நெய்	166d
,, நன்னாரி	... 143	சுஷ்கம்	... 168
,, நாபி	... 35	சூதகஜன்னி	.. 225
,, முளகாய்	... 123	சூதகப்பாண்டு	... 171
,, வாதுமை	... 80	சூதகம்	... 11
,, விளாம்பிசினி	... 66	சூதகமெழுகு	166ff
,, வெள்வேலன்	... 76	சூதம்	166ff
சீயக்காய்	... 78	சூரணம்	... 22
சீரகம்	... 92	சூரியஇடி	... 212
சீரணம்	... 4	சூரியாவர்த்தவாதம்	... 227
சீவவர்க்கம்	... 25	சூலை	... 226
சீழ்க்கட்டி	... 296	சூலைக்கட்டு	... 183
சீழ்க்காது	... 366	ஸெட்லிட்ஸ் பவுடர்	...166t
சீழ்க்கொள்ளுதல்	... 296	செண்பகம்	... 37
சீழ்க்கண்ணோவு	... 361	செப்புநெரிஞ்சி	.. 78
சீனக்காரம்	166w	செம்பருத்தி	... 51
சீனக்கிழங்கு	... 125	செம்பை	... 78
க்ஷீணவாதம்	... 220	செம்மரம்	... 63
க்ஷீரசுரம்	... 435	செரி	... 162
க்ஷீரநாசகாரிகள்	... 34	செவிடு	... 367
க்ஷீரவர்த்தனி	... 34	செவிநோய்	... 367
சுக்கிலப்படலம்	... 363	செவ்வந்தி	... 100
சுக்கு	... 144	ஜென்ஷன்	... 109
சுக்குநார்புல்லு	... 159	சேமை	... 155
சுகர்லெட்	166bb	சேராங்கொட்	... 64
சுண்டை	... 124	சேர்க்கை	... 295
சுண்ணாம்பு	...166u		

	பக்கம்.		பக்கம்.
ஸைட்ரேட் ஆவ் ஐரன் அன்ட் குவைனு	...166ii	தலைமுழுக்கு	... 11
சொத்தைப்பல்	... 369	தலைவலி	... 217
சொர்னபேதி திராவகம்	...166k	தழுதாழை	... 116
சொறி	... 286	தனுர்வாதம்	... 290
சோகம்	... 289	தாகம்	5-252
ஷோணகாரிகள்	... 33	தாதுக்ஷீணரோதி	... 27
சோபாநாஸகாரி	... 30	தாபிதம்	... 293
சோம்பு	... 89	தாருட்டியகாரி	... 34
சோயி	... 89	தார்	... 142
சோவை	... 179	தாவரவர்க்கம்	... 25
சோளம்	... 161	தாளகம்	...166x
ஞாபகம்	... 8	தாளிசபத்திரி	... 48
ஞானப்பைத்தியம்	... 214	தான்றிக்காய்	... 82
ஞானேந்திரியம்	... 9	திக்குவியாதி	... 169
டர்பன்டைன்	... 140	திப்பிலி	... 136
டாமர்	... 61	திமிரம்	... 347
டார்டார்மெடிக்	...166 z	திமிர்	... 228
டார்டாரிக் ஆவிட்	... 64	திமிர்ப்பூச்சி	... 267
டார்டெரேடெட் அண்டி மொனி	...166 z	திராவகாரிகள்	... 33
,, ஸோடா	... 166t	திராக்ஷ உப்பு	...166p
,, பொடாஷ்	...166p	திராக்ஷபழம்	... 64
டானிக் ஆவிட்	... 138	,, ரஸபுளிப்பு	... 64
டிஜிடேலிஸ்	... 114	திராவகவிரணம்	... 363
டிஸ்லொகேஷன்	... 341	திரியாஹிகசுரம்	... 186
டிரிகையேவிஸ்	... 358	திருதி	... 24
டிரெகெகாந்த்	... 76	திருநீற்றுபச்சை	... 118
டோரக்விகம்	... 99	தீக்ஷணரோகம்	... 169
டோலாயந்திரம்	... 24	தீர்	... 24
டொவர்ஸ்பவுடர்	... 95	தீபனவர்த்தனகாரிகள்	... 34
தக்கோலம்	... 136	தீவ்விரரோகம்	... 169
தடிப்பு	... 292	துத்தி	... 51
தடுக்கக்கூடாத ரத்தப்பெருக்கு	422	துத்திரோகம்	... 247
தட்டம்மை	... 204	துப்பாக்கிகுண்டுகாயம்	... 312
தணிவுசுரம்	... 197	தும்பிலிக்காய்	... 101
தண்ணீர்	... 166	தும்மட்டி	... 86
தண்ணீர் விட்டாங்கிழங்கு	... 157	துரிசு	166ee
தந்தசூலை	... 369	துவர்கள்	... 28
தந்தரோகம்	... 369	துவக்ஸ்போடகாரிகள்	... 28
தந்தவித்திருதி	... 370	துவிப்பிரசவம்	... 417
தந்திமேகம்	... 317	துளசி	... 118
தந்துகிகள்	... 3	துத்தம்	166aa
தமரகவாய்வு	... 245	தூதுவளை	... 124
தருப்பூசி	... 87	தூரப்பார்வை	... 365
		தெனை	... 161
		தென்னமரம்	... 153

	பக்கம்.		பக்கம்.
தேககாங்கை	... 4	நாடிகாயம்	.. 337
தேகசுசி	... 442	நாடிக்கட்டி	... 349
தேக்குமரம்	... 116	நாடிநடை	... 17
தேத்தாங்கொட்டை	... 109	நாட்சென்றவியாதி	... 169
தேவதாரு	... 143	நாட்டெளிவண்டு	... 166
தேள்கொட்டல்	... 315	நாட்டு சடாமாஞ்சி	... 97
தேள்கொடுக்குப்பூண்டு	... 113	நாட்டுவாதுமை	... 83
தேன்	...166b	நாதம்	...9-12
தேன்களிம்பு	...166c	நாபி	... 36
தேன்மரம்	... 63	நாபிக்கொடி	... 385
தைலங்கள்	... 24	நாயுருவு	... 125
தொடைவாழை	... 433	நாய்த்துளசி	... 118
தொப்புள்கொடி	... 385	நாய்ப்பாலை	... 107
தொற்றுவியாதி	... 447	நாய்வேளை	... 47
நசுங்கள்	... 311	நாரப்புண்	... 315
நஞ்சறுப்பான்	... 107	நாரக்கொடீன்	... 45
நஞ்சு	... 384	நாவல்	... 84
,, உதையம்	... 423	நாளங்கள் காயம்	... 351
,, கொடி	... 385	,, சுருட்டு	... 351
,, பிடித்தம்	... 418	,, தாபிதம்	... 351
நத்தைச்சூரி	... 96	நிஜவேதனை	... 393
நந்தியாவட்டம்	... 105	நிணக்கழலை	... 306
நம்டேச்சிரங்	... 286	நித்திராகாரிகள்	... 32
நமைச்சல்	... 286	நித்திரை	... 446
நரம்புச்சிலந்தி	... 315	நிமிளை பஸ்மம்	...166z
நரம்புச்சுருட்டு	... 351	நிரந்தரசுரம்	... 187
,, மண்டலம்	... 8	நிலஆவாரை	... 70
நரிவிளா	... 59	நிலப்பனை	... 148
நரிவெங்காயம்	... 150	நிலவிளா	... 59
நல்லெண்ணெய்	... 111	நிலவேம்பு	... 144
நவக்ஷாரம்	166m	,, சூரத்து	... 110
நவக்ஷாரஉப்பு	...166k	நீக்குரோஸஸ்	... 326
நவக்ஷாரஜயநீர்	...166k	நீரடிமுத்து	... 47
,, பூசுத்தைலம்	...166k	நீரிழிவு	... 279
நறுவிளி	... 113	நீரேற்றம்	... 179
நன்னாரி	... 106	நீர்க்கோவை	... 179
நாகஉப்பு	166aa	நீர்நாய்விரை	...166e
நாகபஸ்மம்	166aa	,, சவ்வாது	...166e
நாகமல்லி	... 116	நீர்ப்படலம்	... 363
நாகமுஷ்டி	... 109	நீர்ப்பிரமி	... 114
நாகேசுரம்	... 49	நீர்ப்பீனசம்	... 228
நாகப்பூச்சி	... 267	நீர்முள்ளி	... 115
நாக்குதாபிதம்	... 246	நீர்வெண்ணெய்	...166u
நாங்குவெடிப்பு	... 247	நுணா	... 96
நாசி எலும்பு	... 330	நெரிஞ்சில்	... 54

	பக்கம்.		பக்கம்.
நெருப்புப்புண்	... 312	பாதங்கள் உதயம்	... 416
நெல்லி	... 134	பாம்புக்கடி	... 314
நேத்திர ரோகங்கள்	... 364	பாரம்பரியரோகம்	... 169
,, வாய்வு	... 365	பாரிசவாதம்	... 221
நேர்ளாளம்	... 131	பார்பரி	... 40
நோர்ச்சி	... 115	பார்லி	... 158
நோய்	... 226	பார்வை	... 10
பக்கச்சூலை	... 229	பாலதோஷம்	... 275
பக்ஷவாதம் } பக்கவாதம் }	... 221	பால்	... 400
		பால்சம்பிரு	... 72
பக்கப்பிளவை	... 323	பால் துற்றம்	166aa
பசி	... 5	பரல்வள்ளி	... 105
பஞ்சதாரை	... 157	பாவனத்திரவம்	... 23
பஞ்சேந்திரியங்கள்	... 9	பிடிட்ஸபிரிட் ஆவ் அம்மோனியா	166m
படர்த்தாமரை	... 285		
படிக்காரம்	...166w	பிண்டம்	... 385
பதவாடை	... 23	பித்தத்தழும்பு	... 285
பத்திராக்ஷி	... 125	பித்தநீர்	... 5
பந்நீர்	... 79	பித்தப்பாண்டு	... 271
பப்பளிச்செடி	... 88	பிரஷ்டை	... 11
பம்பளிமாஸ்	... 58	பிரஸவம்	... 390
பரிஹஸ்திதாபித	... 326	பிரஸவகாரிகள்	... 32
பரு	... 322	,, காலசமையம்	... 391
பருத்திப்பஞ்சு	... 49	,, கிரியாவித்ஞ்நியம்	... 391
பர்ப்பாடகம்	... 84	,, கிருத்தியங்கள்	... 406
பர்கண்டிபிட்ஸ்	... 140	பிரஸவசுரம்	... 430
பலகாரிகள்	... 34	பிரஸவநோய்	... 390
பல்காறை	... 369	,, பெரும்பாடு	... 420
பல்பிடுங்கல்	... 369	பிரஸவபைத்தியம்	... 434
பல்லரணை	... 369	,, லக்ஷணம்	... 393
பல்வலி	... 369	பிரஸவவலி	.. 426
பலாஸ்	... 75	பிரஸவஸ்திரீயைரக்ஷிக்கிறகிரமம்	400
பழுக்குதல்	... 296	,, ஸ்திரீவாதம்	... 423
பறங்கிசாம்பிரானி	... 61	பிரஸவாந்தியவேதனை	... 399
,, பாஷாணம்	... 166ii	பிரஸவந்திய ரத்தப்பிரவாகம்	423
பறங்கிச்சக்கை	... 144	பிரஸ-ுதவாயு	... 393
பனிச்சிக்காய்	... 101	பிரமதண்டு	... 45
பன்னீர்க்குடம்	... 385	பிரமேகம்	... 316
பனைமரம்	... 154	பிரமேக கண்ணோ	... 362
பன்றிநெய்	...166e	பிரமேகவாதம்	... 185
,, சாப்பிராணி கலந்தது	... 102	பிராந்தி	... 162
பாக்குமரம்	... 155	பிளாஸ்திரி	... 22
பாஷாணம்	...166x	பிளவை	... 300
,, ஜயநீர்	...166x	பிறவிப்பைத்திய	... 216
பாண்டுரோகம்	... 171	பின்னோக்காடு	... 399

	பக்கம்.		பக்கம்.
பீச்சிடுமருந்து	... 21	பெருமூச்சு	... 4
பீநாறி	... 52	பெரும்பாடு	... 198
நீவேலன்	... 76	பெருவயிறு	... 274
பீனசம்	... 229	பெர்கொலேஷன்	... 24
புகு	... 55	பெல்லடோனா	... 119
புகையிலை	... 112	பேச்சு	... 9
புங்கன்	... 77	பேதானா	... 81
புச்சாவர்த்தவாதம்	... 181	பேதி	... 259
புட்டாலம்மை	... 248	பேதிக்கிழங்கு	... 125
புண்	... 300	பேயத்தி	... 139
புத்தி	... 8	பேயாவாரை	... 77
புப்புஸதாபிதம்	... 239	பேய்தும்மட்டி	... 88
புரசன்	.. 75	பேய் நாய்கடி ஜன்னி	... 172
புஜத்தெலும்பு முறிவு	... 331	பேய்ப்பாலை	... 107
புரூவஸ்பிரிட்	... 163	பேய்புடல்	... 88
புரூன்ஸ்	... 81	பேய்மிரட்டி	... 118
புழுகு	...166f	பேராத்தை	... 147
புழுப்பல்	... 369	பேராமட்டி	... 52
புழுவெட்டு	... 358	பேன்	... 287
புளி	... 69	பைகார்போனேட் ஆப் ஸோடா	...166o
புளிச்சக்கீரை	... 50	பைகார்போனேட் ஆப் பொடாஸ்	...166t
புளிப்புகாரத்தை	... 58	பைசல்பேட் ஆப் பொடாஷ்	166r
புளியேப்பம்	... 253	பைத்தியம்	... 212
புல்லுரோகம்	... 307	பொடோபில்லின்	... 40
புனராவர்தக சுரம்	... 193	பொட்டிலுப்பு	...166o
புன்னைமரம்	... 48	,, திராவகம்	...166j
பூசினி	... 87	பொரிகாரம்	...166r
பூசுத்தைலம்	... 22	பொன்னாவிரை	... 77
பூச்சிக்கடி	... 315	போஷணகாரி	... 34
பூதிகந்தநாசகாரிகள்	... 30	போஜனம்	... 440
பூநீர்	...166q	போஸ்தக்காய்	... 41
பூநீருப்பு	...166q	மகம்மாரிரோகம்	... 169
பூயஸம்பவசுரம்	... 298	மகோதரம்	... 274
பூரக்கிலேதம்	...166ii	மக்கி	... 48
பூரம்	...166ii	மசூரிகை	... 199
பூவர்சு	... 51	மஞ்சளலரி	... 105
பூனைக்காஞ்சொரி	... 74	மஞ்சள்	... 146
பூனைக்காலி	... 74	மஞ்சள் காமாலை	... 271
பெப்பர்மின்ட்	... 117	மஞ்சிஞ்டி	... 96
பெரிபெரி	... 180	மட்டிப்பால்	... 60
பெரீரா	... 38	மணத்தக்காளி	... 122
பெருங்காயம்	... 90	மண்ணெண்ணெய்	... 166
பெருங்கோரை	... 97	மதுமூத்திரம்	... 279
பெருந்துத்தி	... 51		
பெருமருந்து	... 131		

	பக்கம்.		பக்கம்.
மதுமேகம்	... 279	மார்ச்சளி	... 232
மந்தம்பிரசவவேதனை	... 402	மார்பிய	... 45
மந்தாரகாசம்	... 236	மார்பு	
மயிர்மாணிக்கம்	... 51	,, சவ்வுதாபிதம்	... 237
மயில்கொண்ணை	... 78	மார்புநோவு	... 245
மயில்துத்தம்	166ee	மாலைக்கண்	... 365
மரவுப்பு	...166n	மாவிலிங்கம்	... 47
மரவுப்புகாரம்	...166n	மாவுக்களி	... 23
மரவுப்புஜயநீர்	...166n	மிஸ்ரமப்பிரசவம்	... 417
மரமஞ்சள்	... 40	மிண்டி	... 409
மரஎண்ணெய்	... 49	மித்தியாவேதனை	... 393
மரவள்ளிக்கிழங்கு	... 134	மிருதார்சிங்கி	166aa
மராட்டிமொக்கு	... 122	,, பிளாஸ்திரி	166bb
மருக்காளங்காய்	... 96	மிருதுவான புத்து	... 309
மருக்கொழுந்து	... 99	மிளகரனை	... 58
மருதம்பட்டை	... 140	மிளகு	... 135
மருந்து அளவுநிரை	... 18	மீன் யெண்ணெய்	...166c
மருந்துபட்டோலைகள்	... 448	மீன்வச்சிரம்	...166c
மருந்துவகுப்பு	... 25	மீன் கொழுப்பு	...166d
மருள்	... 152	முதுவுதயம்	... 404
மலக்காசாம்பிராணி	... 102	முகஜன்னி	... 226
மலக்கிரமம்	... 445	முகருகிறஉப்பு	...166b
மலக்கிருமி	... 267	முசுமுசுக்கை	... 88
மலபந்தம்	... 266	முடக்குவாதம்	... 183
மலம்	... 5	முட்டை	...166d
மலைதாங்கிப்பூண்டு	... 50	முத்தக்காசு	... 156
மலைவேம்பு	... 63	முந்திரி	... 64
மல்லிகைபூ	... 104	முருக்கன்	... 75
மறு	... 322	முருங்கை	... 66
மனம்	... 8	முருதுக்கடி	... 307
மாங்காய்	... 65	முலை காம்பு விரணம்	... 436
மாசக்காய்	... 137	முழங்காலுதையம்	... 416
,, உப்பு	... 138	முளகாய்	... 123
மாசிபத்திரி	... 100	முள்ளிலவு	... 51
மாஸ்டிச்	...4865	முள்ளுக்கீரை	... 124
மாதவிடாய்	... 12	முறைக்காச்சல்	... 194
மாதாந்திர ருது	... 11	முறைவியாதிரோதிகள்	... 27
மாதுளன்	... 85	முன்னை	... 116
மாத்திரை	... 22	மூக்குரட்டை	... 125
மாந்த இரைப்பு	... 232	மூங்கில்	... 160
மாமடி அல்லம்	... 146	மூஷாம்பரம்	... 149
மாமிசசுஷ்கரோகம்	... 324	மூச்சுப்பிடிப்பு	... 185
மாமிசபீனசம்	... 368	மூச்சடைவுகொட	... 338
மாரியம்மை	... 199	மூட்டுகாயம்	... 340
மாரடைப்பு	... 245	மூட்டுவிலகல்	... 340

	பக்கம்.		பக்கம்.
மூத்திர குண்டிக்காய்	7276	ரஜத பஸ்மம்	166ll
,, தாபிதம்	... 276	ரசதாரை	... 5
,, பேதிகள்	... 31	ரசபஸ்மம்	166hh
,, இசிவு	... 282	ரசக்களிம்பு	166ii
,, ஸ்தம்பம்	... 283	ரசமெழுகு	166ff
,, தாபிதம்	... 282	ரசப்பதங்கம்	166ff
,, அழலுகை	... 281	ரசப்பிளாஸ்திரி	166gg
மூத்திரம்	... 7	ரசப்பூசுத்தைலம்	166gg
,, வர்த்தனகாரி	... 31	ரசமெழுகு	166ff
மூலக்கிரகனி	... 284	ரசம்	11-166ff
மூளை	... 8	ரசாயனம்	... 24
,, அதிர்ச்சி	... 354	ரசாயனிகள்	... 5
,, அமுக்கம்	... 354	ரத்தகாசம்	... 176
,, காயம்	... 355	ரத்தச்சுழல்	... 3
,, பிதுக்கம்	... 355	ரத்ததூஷியம்	... 170
மெழுகு	... 22	ரத்தபித்தரோகம்	... 174
,, களிம்பு	...166e	ரத்தபீனசம்	... 175
மேக காங்கை	... 316	ரத்தபுஷ்டி	... 171
மேகச்சூடு	... 316	ரத்தமசூரிகை	... 204
மேகப்புடை	... 320	ரத்தமூத்திரம்	... 178
மேகப்புண்	... 318	ரத்தம்	... 1
மேகரோகம்	... 316	ரத்தவமனம்	... 177
மேகவாய்வு	... 318	ரத்தவிரேசனம்	... 177
மேகவிரணம்	... 318	ரத்தரோகம்	... 170
மேதோ கிரந்தி	... 306	ராஜபிளவை	... 323
மேனு	... 103	ருசி	... 11
மொகடம்	... 101	ருதுவர்த்தனகாரி	... 32
மொலாம்பழம்	... 87	ரூபம்	... 10
யகிர்தகண்ட தாபிதம்	... 269	ரூமிமஸ்தகி	... 65
யவக்ஷாரம்	...166o	ரெக்டிபைட் ஸ்பிரிட்	... 163
யானைகற்றுழை	... 148	ரேவல்சின்னி	... 125
யானைக்கால்	... 309	ரோகநிதானம்	... 421
யானைதிப்பிலி	... 155	ரோகம்	... 168
யானைநெருஞ்சி	... 111	ரோசல் ஸால்ட்	...166t
யானை புளியமரம்	... 51	ரோஜனம்	... 140
யூரிக் ஆஸிட்	... 7	ரோஜன பிளாஸ்திரி	... 142
யூரியா	... 7	,, களிம்பு	... 142
யூவா அர்ச்சை	... 100	ரோஜாப்பூ	... 79
ரக்த்த சந்தனம்	... 74	ரோஸமெரி	... 118
,, ஸதம்பனகாரி	... 34	லகுவிரேசனகாரி	... 29
ரசகர்ப்பூரம்	166hh	லக்ஷணங்கள்	... 169
ரசக்களிம்பு	166gg	லவங்கப்பட்டை	... 130
ரசக்காரச் சிந்தூரம்	166gg	லவங்கப்பத்திரி	... 130
,, களிம்பு	166hh	லவங்கம்	... 83
ரசச்சுண்ணம்	166ff	லவண்டர்	... 116

	பக்கம்.		பக்கம்.
லாக்டியல்ஸ்	... 5	விடாக்காச்சல்	... 187
லாடனம்	... 44	வித்திருதி	... 296
லெபோரியஸ்லேபர்	... 404	விபரீதப்பிரசவம்	... 417
லேகியம்	... 22	விப்புருதி	... 296
லைகர் அம்மோனியம்	...166k	வியதாபேதகாரி	... 26
,, அவிடேடிஸ்	166m	வியர்வை	... 6
,, பொடாவி	...166n	வியாயாமம்	... 445
,, ஸோடீகுளோரேட்	...166q	விரல்மூறிவு	... 333
லோக சிந்தூரம்	166cc	விரணகாரி	... 31
வசநாபி	... 36	விரணகிரந்தி	... 307
வசம்பு	... 155	விரணஜந்ரி	... 430
வச்சிரபீஜம்	... 71	விரணம்	... 300
வஸ்தி	... 21	விரேசனகாரி	... 29
வண்டுகொல்லி	... 76	விலாமிச்சுவேர்	... 160
வமனகாரிகள்	... 31	விலாரி	... 95
வயது	... 16	வில்வம்	... 57
வயிர்கொட்டல்	... 257	விழிகண்குருடு	... 365
வயிறு உப்பசம்	... 254	விளாம்பழம்	... 66
வயிற்றுவலி	... 265	விளாம்பிசின்	... 66
வரியாத்துக்கிழங்கு	... 124	வீக்கம்	... 179
வர்த்தங்கி	... 71	வீடு	... 447
வலம்புரிக்காய்	... 52	வீடுதூரம்	... 11
வலி	... 226	வீரம்	166ii
வல்லாரை	... 91	,, கிலேதம்	166jj
வாசஸ்தானம்	... 447	,, ஜயநீர்	166jj
வாசனை	... 9	,, பஸ்மம்	166jj
வாதச்சூலை	... 304	,, களிம்பு	166jj
வாதரோகம்	... 220	வெங்காயம்	... 152
வாதுமைக்கொட்டை	... 80	வெங்காரம்	...166r
வாந்தி	... 253	வெடிப்பஞ்சு	... 49
வாந்தி உப்பு	...166z	வெடியுப்பு	166jj
வாந்திபேதி	... 261	,, திராவகம்	...166jj
வாயலம்பு மருந்து நீர்	... 21	வெட்டிவேர்	... 160
வாயு	... 439	வெட்டுகாயம்	... 310
வார்த்திகசுக்கிலம்	... 364	வெட்டை	... 316
வாலுகாயந்திரம்	... 24	வெட்பாலை அரிசி	... 105
வாலுழுவையரிசி	... 64	வெண்டை	... 50
வாலேந்திரப்போளம்	... 60	வெண்நொச்சி	... 116
வால்மிளகு	... 137	வெற்றிலை	... 136
விக்கல்	... 253	வெந்நீர் ஊறல்கஷாயம்	... 23
விஷசுரம	... 189	,, விரணம்	... 313
விஷபேதி	... 261	வெலீரியன்	... 96
விஷமூங்கில்	... 147	வெல்லம்	... 157
விஷ-ஒசிகரோகம்	... 261	வெள்விழிதாபிதம்	.. 364
விஷ்ணுக்கிராந்தி	... 113	வெள்வேல்	... 76

	பக்கம்.		பக்கம்.
வெள்ளரி	... 87	வெள்ளைப்பூண்டு	... 152
வெள்ளருகு	,... 111	வெள்ளைமிளகு	... 84
வெள்ளீய உப்பு	166aa	வெறி	... 213
,, பஸ்மம்	...166ll	வெற்பேந்தி	... 50
வெள்ளெழுத்து	... 365	வேங்கைப்பிசின்	... 74
வெள்ளை	... 316	வேதனுசாந்தகாரி	... 26
,, குந்தரிகம்	... 49	வேப்பன்	... 61
,, துற்றம்	166aa	வேர்க்கடலை	... 76
,, போளம்	... 166	வேலிப்பருத்தி	... 107
,, பாஷாண ஜயநீர்	...166x		

1-வது, புஸ்தகம்

BOOK 1

சாரீரம்

அநாடமி. The Anatomy
(in Tamil)

பொதுவசனம்

சரீரத்திலுள்ள தாதுக்கள் உறுப்புகள் ஆகிய இவைகளின் ஏற்பாட்டைக்குறித்து விவரிக்கிற நூலுக்கு, சாரீரம் என்று பேர். இதனை அங்கவிபாகம், அங்காதிபாதம், சரீரக்கூறுபாடு, அங்கசோதனை வித்தை, உடற்கூறிலக்கணம், உடற்கூறு சாஸ்திரம், உடற்கூறு தத்துவம், என்றுஞ் சொல்லுவர். மானிடதேகத்திலிருக்கிற உறுப்புகளையும், அவைகளின் தொழில்களையும், வைத்தியர்கள் ஆரம்பத்தில் விசாரணை செய்ய வேண்டியது; இவ்விரண்டிலும் கியானமில்லாவிட்டால், ரோகநிதானஞ் செவ்வையாகத் தெரியமாட்டாது. இந்நூல் மெத்த விரிவானது; இதில் அற்பக்கியானம், நமது ஜனங்களுக் குண்டாகும்படி இவ்விடத்தில் கூறப்படும்.

நமது திருஷ்டிகளுக் ககப்படுகிற சகலத்தையும், பிராணிகள், (அனிமல்ஸ், Animals) ஸ்தாவரங்கள், (வெஜிடபில்ஸ், Vegetables) தாதுக்கள், (மினரல்ஸ், Minerals) என மூனறுபிரிவுகளாய் பிரித்திருக்கின்றன. பிராணிகள், ஸதாவரங்கள், ஆகிய இவ்விரண்டுக்கும், பொதுவாய் இந்திர வஸ்துக்கள் (ஆர்கானிக் பாடீஸ், Organic bodies) என்றும் தாதுக்களுக்கு, அநிந்திர வஸ்துக்கள் (இன் ஆர்கானிக் பாடீஸ், Inorganic bodies) என்றும் சொல்லப்படும்.

---

1. அத்தியாயம்

எலும்புகள்
(போன்ஸ், Bones)

சரீரத்திலுள்ள எலும்புகளைக்குறித்து விவரிக்கிற அத்தியாயத்துக்கு, அஸ்தி விவரணம், என்று பேர். (ஆஸ்டியாலொஜி, Osteology). எலும்பு

களை, அவைகளுக்கியல்பான ஸ்தானங்களில் அமர்த்தி, தந்திகளால் கட்டி வைத்திருக்கிற கூட்டுக்கு, அஸ்திகூடு, என்று பேர். சல்லியகடம், கங்காளம். எலும்புகோவை, என்றும் சொல்லுவதுண்டு. (ஸ்கெலிடன், Skeleton.)

எலும்பில் இரண்டுவித பதார்த்தங்களுண்டு; பாஸ்பேட் ஆவ் லைம் (Phosphate of lime) என்னும் சுண்ணும்பும், ஜிலடீன் (Gelatine) என்னும் பசையும், ஆம். சுண்ணும்பால், எலும்புக்கு உறுதியும், பலமும் உண்டாகின்றன. வச்சிரத்தைப்போலொத்த பசையால், நயப்புண்டாகின்றது.

மனிதன், குதிரை, ஆடு, மாடு, முதலிய பிராணிகளில், எலும்புகள், சதைகளுக்குள்ளும், நண்டு, நத்தை, இருல், முதலிய ஜந்துக்களில், அவைகளின் உறுப்புகளுக்குக் கெடுதி வாராமல் காக்கும் பொருட்டு ஓடாகி, உறப்புகளுக்கு வெளியிலும் இருக்கின்றன. சரீரத்தில் எலும்புகள் ஓர் வித அஸ்திவாரமாயிருக்கின்றன; மூளை, இருதயம், புப்புஸம், முதலிய மிருதுவான உறுப்புகளுக்கு, அபாயம் நேரிடாமல், ரக்ஷிக்கின்றன; மாமிசங்கள் ஒட்டிக்கொள்ள இடந்தருகின்றன.

கருப்பிண்டத்தில் எலும்புகள், இளசாயிருக்கும்; அந்த மிருத்துவ பதார்த்தத்துக்கு, முருந்து (குருத்தெலும்பு) (கார்டிலேஜ், Cartilage) என்று பேர். பிறகு வயது விருத்தியில், சுண்ணும்பு படிப்படியாய் அதிகரித்து அந்த முருந்துக்கு வைரமேறி எலும்பாகிவிடும். எலும்புகளை ஓர்விதசவ்வு மூடிக்கொண்டிருக்கிறது; அதற்கு பரியஸ்தியம் (சல்லியக்கவிப்பு, அஸ்திக்கவிப்பு) (பெரியாஸ்டியம், Periosteum) என்று பேர்.

எலும்பைத் திராவகத்தில் போட்டுச் சிலநாள் ஊறவைத்திருந்தால், அதிலிருக்கிற சுண்ணும்பு நீங்கிப் பசைமாத்திரம் நிற்கும்: அதை மனதுக்கேற்றபடி இலேசாய் வளைக்கலாம். எலும்பை அக்கினியிலிட்டெரித்தால், அதிலிருக்கிற பசை நீங்கி, சுண்ணும்பு மாத்திரம் நிற்கும்; அது வெள்ளையாயும், இலேசாயுமிருக்கும். எளிதில் தூளாகும். அதிபால்லியத்தில், எலும்புகள் இளசாயிருக்கும், வளையும், முறியமாட்டாது; ஒருவேளை ஒடிந்தபோதிலும், சீக்கிரத்தில் கூடிவிடும். விருத்தாப்பியத்தில், எலும்பில் சுண்ணும்பு அதிகமாயிருக்கும், எளிதில் ஒடியும்; ஒடிந்த எலும்பு சீக்கிரத்தில் கூடாது.

தேகத்தில் பல ரூபமான எலும்புகளுண்டு. தலை, இடுப்பு, இவைகளில் தட்டையாயும், புஜம், முன்கை, தொடை, கால் இவைகளில் நீண்டும், முள்ளந்தண்டு, கணுக்கை, கணுக்கால் இவைகளில் விரூபமாயும் இருக்கின்றன.

அஸ்திபஞ்சரத்தி லிருக்கிற எலும்புகளை, மூன்று பாகங்களாய் பிரித்திருக்கின்றன. தலை எலும்புகள், உடல் எலும்புகள், கால் கை எலும்புகள், ஆம். மனிததேகத்தில், 246 எலும்புகளுண்டு. அவைகளாவன :—

சிரசில்	8
காதுக்குள்	6
முகத்தில்	14
பற்கள்	32

முள்ளந்தண்டில்	... ...	26
நாக்கில்	... ...	1
மார்பில்	... ...	1
விலாவில்	... ...	24
கைகளில்	... ...	64
கால்களில்	... ...	62
கை கால் பெருவிரல்களின் குளசுகளில் இருக்கிற சிறிய எலும்புகள்		8
	ஆக	246

முள்ளந்தண்டு

(வர்டிபிரல் காலம், VERTEBRAL COLUMN.)

பிரதிபதங்கள்:—தண்டெலும்பு, நடுவெலும்பு, முதுகெலும்பு, வீணாதண்டு.

சிரசுக்கடியிலிருந்து, கீழுக்கிறங்கிற துண்டெலும்புகளின் கோர்வைக்கு முள்ளந்தண்டு என்று பேர். இதிலிருக்கிற ஒவ்வொரு எலும்புக்கு முள்ளெலும்பு என்று சொல்லப்படும். (வர்டிபிர, Vertebra). முள்ளெலும்புகளின் மத்தியமாய் குருத்தெலும்புண்டு; அதற்கு முள்ளெலும்பு மத்திய முருந்தென்று பேர். (இன்டர்வர்டிபிரல் ஸப்ஸ்டான்ஸ், Intervertebral substance). இவைகள் முள்ளெலும்புகளை யொன்றோடொன்று பொருந்தும்படிச் சேர்த்து, நாலுபக்கங்களிலுஞ் சலபமாய் அசையும்படிச் செய்விக்கின்றன. ஒவ்வொவொரு முள்ளெலும்பில், ஒரு பெரிய துவாரமுண்டு; அந்த துவாரங்கள் சேர்ந்து, முள்ளந்தண்டில் நெடிய துவாரமொன்றேற்படும்; அதில் மூளைக்கொடி (ஸ்பைனல்மாரொ, Spinal marrow) பிரவேசித்திருக்கும். முள்ளந்தண்டில் வளைவுகளுண்டு; கழுத்திலும், இடுப்பிலும் இருக்கிற வளைவுகள், முன்னுக்கு வளைந்து, பின்னுக்குக் கவிழ்ந்திருக்கும்; முதுகிலிருப்பது முன்னுக்கு கவிழ்ந்து பின்னுக்கு வளைந்திருக்கும். குதிப்பு முதலிய ஆடல்களால், மூளை குலுங்கி, அதிர ஒட்டாமல், இந்த வளைவுகள் ஒருமார்க்கமாய் தடுக்கும். முள்ளெலும்புகள் 3-பிரிவுகளாகின்றன; கழுத்து, முதுகு, இடுப்பு ஆகிய இவைகளாம்.

கழுத்துமுள்ளெலும்புகள்.	(ஸர்வைகல்.	Cervical)	7.
முதுகுமுள்ளெலும்புகள்.	(டார்ஸல்.	Dorsal)	12.
இடுப்புமுள்ளெலும்புகள்.	(லம்பார்.	Lumbar.)	5.

கழுத்து முள்ளெலும்புகளில், சிரசைத் தாங்கிக்கொண்டிருக்கிற முதுகெலும்புக்கு, அட்லாஸ் (Atlas) என்றும், அதன் கீழிருக்கிற இரண்டாம் எலும்புக்கு, ஆக்ஸிஸ் (Axis) என்று இங்கிலீஷில் பேர்.

திரிகஸ்தான எலும்பு. (சேக்கிரம், Sacrum).—முள்ளந்தண்டுக் கடியில்,, முக்கோணரூபமாய் ஒரெலும்புண்டு, அதற்கு திரிகஸ்தான எலும்பு என்று பேர். இதனைக் குண்டி எலும்பு என்றுஞ் சொல்லுவார். குழந்தையில், இது 5 துண்டுகளாய் இருக்கும். இந்த எலும்பின் முன்பக்கத்து

மேற்புறம் முன்னுக்குப் பிதுங்கி இருக்கும்; அதற்கு பிராமொண்டொரி (Promontory) என்று பேர். இது ஸ்திரீகளுக்கு அதிகமாய்ப் பிதுங்கி இருந்தால், பிரஸவகாலத்தில் சிசுவின் தலை கீழுக்கிறங்க இடமில்லாமல், தலைசிக்கிக்கொண்டு, தாயாருக்கு அதிக வேதனையையுண்டாக்கும். மருத்துவத் தொழில்செய்வோர் இதை கவனிக்கவேண்டியது. இந்த எலும்பில் துவாரங்கள் உண்டு, அவைகளின்வழியாய், ஸ்பரிசநரம்புகள் வெளிப்பட்டு, ஸமீபத்திலிருக்கிற உறுப்புகளுக்குப் போய் வியாபிக்கின்றன. இது 4-எலும்புகளோடு சேர்ந்திருக்கும்.

குயில்மூக்கெலும்பு. (புச்ச எலும்பு). (காக்ஸிக்ஸ், Coc-cix).—திரிகஸ்தான எலும்புக்கடியில், குயில்மூக்கைப்போல் வளைந்து ஓர் எலும்பிருக்கும், அதற்கு, குயில்மூக்கெலும்பு என்று சொல்லப்படும்; இது குழந்தையில் 4 துண்டுகளாயிருக்கும். ஸ்திரீகளுக்கு இது ஆட்டமில்லாமல் உறுதிப்பட்டிருந்தால், பிரஸவகாலத்தில், கருப்பிண்டத்தின் விரைவாய் வெளிப்படுவது கஷ்டமாகும்.

சிரசு

(ஸ்கல், SKULL)

பிரதிபதங்கள்.—தலை, சென்னி

கருப்பையிலிருக்கிற குழந்தையில், தலை எலும்புகள் வெவ்வேறாயிருக்கும்; ஏனென்றால் பிரஸவகாலத்தில், சிசுவு, தாயின் கருப்பையை விட்டு இடைக்குழியில் இறங்கி வெளிப்படுகிறபோது, அந்தந்த ஸ்தானங்களுக்குத் தக்கபடி, சிரசு பொருந்தவேண்டியது. எலும்புகள் அசையாமல் சேர்ந்து இருந்தால், சிரசு ஒடிங்கித் தக்கபடி இடைக்குழியில் அமையாமல் சிக்கிக்கொண்டு, சிசுவுக்கும் தாயருக்கும் அபாயம் சம்பவிக்கும், மேலும் தலை ஒரெலும்பாய் இருந்தால், பலம் குறைச்சல்; ஆகையால் பல எலும்புகளாய்க் கடவுள் சிருஷ்டித்திருக்கிறார்.

சிரசு எலும்புகளில் 2-பிரிவிகளுண்டு; கபால எலும்புகள், முகத்தெலும்புகள், எனவாம். கபாலத்தைச் சார்ந்த எலும்புகள், 8. முகத்தெலும்புகள், 14. கபால எலும்புகளாவன; பிடரி எலும்பு, பித்தகை எலும்பு, நெற்றி எலும்பு, காதெலும்பு, வவ்வால் எலும்பு, எத்மாயிட்போன், ஆகிய இவைகளாம்.

பிடரி எலும்பு. (பிடர் எலும்பு). (ஆக்ஸிபிடல் போன், Occipital Bone).—இந்த எலும்பு, தலையின் பின்புறத்திலிருக்கும். இதில் அண்டவடிவாய் ஒரு பெரிய துவாரமுண்டு, அதற்குக் கபாலமூலத்துவாரம் (போரேமன் மாக்னம், Foramen Magnum) என்று பேர். அதன் வழியாய் மூளைக்கொடி வெளிப்படுகின்றது. இது தவிர, நரம்புகளும் வெளிப்படும். ரத்த நரம்புகளும் உள்ளுக்குப் பிரவேசித்திருக்கும். அந்த துவாரத்துக்கு இரண்டு பக்கத்திலும், பிதுக்கங்களுண்டு, அவைகளுக்கு மூட்டு முடிகள் (காண்டாயில்ஸ், Condyles) என்று பேர். அவைகள் அட்லாஸ் என்கிற எலும்போடு சேர்ந்து, தலையை முன்னுக்கும், பின்னுக்கும் அசையச்செய்யும். கபால

மூலத்துவாரத்துக்கு முன்பாக ஒருதளமான பிதுக்கமுண்டு, அதற்கு இங்கிலீஷில் பாஜிலர் பிராஸெஸ்(Basilar process) என்று பேர். அதன் உட்புறம் குடைவாயிருக்கும், அந்தக்குடைவில், முள்ளந்தண்டுக் கொடியின் சிகரம் அடங்கியிருக்கும். பிடரி எலும்புக்கு அகத்தில் சிலுவையைப்போல் வரம்புண்டு; அதில் மூளையின் சவ்வு ஒட்டிக்கொண்டிருக்கும்.

பித்திகை எலும்பு. (பெரைடல் போன், Parietal Bone).—பித்திகையெலும்புகள் இரண்டு. கபாலத்தில் பக்கத்துக்கொன்றாய் அமைந்து, உச்சந்தலையில் (Vertex) சேர்ந்திருக்கும். அதன் வெளிப்புறம், குவிப்பாயிருக்கும்; அதற்கு பெரைடல் எமினென்ஸ் (Parietal eminence) என்று பேர். எலும்பு அகம் பள்ளமாய், கால்வாய்கள் காணப்படும்; அவைகளில் நாடி நரம்புகள் ஓடுகின்றன.

நெற்றியெலும்பு. (லலாட ஹஸ்தி)பிரன்டல் போன், (Frontal Bone) கபாலத்தின் முன்புறத்திலிருக்கிற எலும்புக்கு, நெற்றி யெலும்பென்று பேர். அது இரண்டு துண்டுகளாய் இருப்பதும் உண்டு. நெற்றியில் இருபுறமாயிருக்கிற மேடுகளுக்கு நெற்றிமேடுகளென்றும் (பிரன்டல் எமினென்ஸ், Frontal eminence), அவைகளினடியிருகிறவைகளுக்கு, புருவமேடுகள் (சூபர்ஸில் யெரிரிட்டெஸ், Superciliary ridges) என்றும், அவ்விரண்டுக்கு மத்தியில், நாசிக்கு ஊர்த்தமுகமாயிருப்பதற்கு நாஸிகாபீடம் (நேஸல் டியுபாரஸிடி, Nasal tuberosity) என்றுஞ் சொல்லப்படும். இந்த நாஸிகாபீடத்துக்குள் அறைகளாய் இருக்கும். நெற்றி எலும்புக்கடியில், பின்னுக்குப் பிதுங்கி, சன்னமாயும், தட்டையாயும், இரண்டு பிதுக்கங்களுண்டு; அவைகளுக்குக் கண் கூட்டுத்தட்டை எலும்புகள் (ஆர்பிடல் பிளேட்ஸ், Orbital plates) என்று பேர். நெற்றியெலும் புக்ககத்தில். மத்தியமாய் ஒரு நீண்ட வரம்புண்டு; அதில் மூளையின் சவ்வு ஒட்டிக்கொண்டிருக்கும்.

காதேலும்பு. (கேசார எலும்பு, கன்னப்பொறி எலும்பு, அள்ளெலும்பு). (டெம்பிரல் போன், Temporal Bone).—பக்கத்துக் கொன்றாய்) இரண்டு காதெலும்புகளுண்டு, காதெலும்பில் மூன்று பிரிவுகளிருக்கின்றன. சன்னமாய் முன்புறத்தி லிருப்பதற்கு, ஸ்குவேமஸ் (Squamous) என்றும், முலைக்காம்புரூபமாய் பின்புறத்தி லிருப்பதற்கு, மாஸ்டாயிட் (Mastoid) என்றும், மிகவும் உறுதியாய், முச்சவுக்கமாயிருப்பதற்கு, பீட்ரஸ் (Petrous) என்றும், இங்கிலீஷில் சொல்லப்படும். ஸ்குவேமஸ் என்கிற பிரிவுக்கடியிலிருந்து முன்னுக்குப்போய் கன்னத்தெலும்போடு கூடியிருக்கிற சன்னப் பிதுக்கத்துக்கு, இங்கிலீஷில் ஜைகோமா (Zygoma) என்று பேர். மாஸ்டாயிட் என்னும் பிதுக்கத்தின் முன்பாக ஒரு துவாரமுண்டு; அதற்கு, காது வெளித்துவாரம் (எகிஸ்டர்னல் ஒபனிங் ஆவ் தி இயர், External opening of the ear) என்று பேர். அதின் வழியாய் ஸப்தம் காதுக்குள் பிரவேசிக்கும். பீட்ரஸ் என்னும் பாகமானது, மிகவும் அழுத்தமாய், குவிந்தரூபமாய், உள்ளுக்குப் பிரவேசித்திருக்கும்; அதில் முன், பின், அடி என மூன்றுபக்கங்களுண்டு. பினபக்கத்தைப் பார்வையிட்டால், ஒரு துவாரமகப்படும். அதற்கு, காது உட்துவாரம், (இன்டர்னல் ஒபநிங் அவ்தி இயர், Internal opening of the ear) என்று பேர். அதன்வழியாய்க் கேள்விநரம்பு காதுக்குள் பிரவேசிக்கின்றது. பீட்ரஸ் பாகத்துக்கடியில் எழுத்தாணியைப்போல், நீண்டு, கூர்மை

யாய், ஒரு முளையுண்டு; அதற்கு இங்கிலீஷில், ஸ்டைலாயிட்ப்ராஸெஸ் (Styloid process) என்று பேர். அந்த முளைக்கு முன்புறமாய் ஒருபள்ள மிருக்கும், அதற்கு கிளிநாயிட் (கியாவிடி Glenoid cavity) என்றபேர். அதில் கீழ்த்தாடை எலும்பின் மூட்டுமுடி பொருந்தி இருக்கும். பீட்ரஸ் பாகத்துமுனையில் ஓர் வட்டத்துவாரம் காணப்படும், அதுவழியாய், கண்ட நாடி உள்ளுக்குப் பிரவேசிக்கின்றது. காதெலும்பில் சதைகள் ஒட்டிக்கொள்ள, மேடுபள்ளங்களும், நரம்புகள் ஓட, துவாரங்களுமிருக்கின்றன.

வவ்வாலெலும்பு. (ஸ்பிநாயிட் போன், Spehenoid Bone).—கபாலத்துக் கடிப்புறத்தில் ஓர் எலும்புண்டு; அது ரெக்கைகள் விரிந்தவவ்வாலைப் போலிருக்கும், ஆகையால், வவ்வாலெலும்பென்று பெயரிடப்பட்டது. வவ்வாலெலும்பின் மத்தியஸ்தானத்துக்கு, உடல் என்றும், பக்கங்களிலிருக்கிற ஓடுகளுக்கு, ரெக்கைகள் என்றும், உவமானமாய்ச் சொல்லப்படும். இந்த எலும்பிலிருக்கிற மேடுபள்ளங்களில், மாம்ஸங்களொட்டிக்கொண்டும் துவாரங்களவழியாய், நரம்புகளோடியு மிருக்கும்.

எத்மாயிட் போன். (Ethmoid Bone).-இந்த எலும்பு செல்லரித்தது போல், நேத்திரக்குழிக ளிரண்டுக்கும் மத்திய ஸ்தானத்தில், மூக்கின் மேற்புரத்தில் அமைந்திருக்கின்றது. எலும்புக்கு மத்தியில் திரைச்சீலைப்போல ஓர் தட்டையெலும் புண்டு; அது ஓமா என்னும் எலும்புடன்கூடி மூக்கின் நடுத்தண்டாகின்றது. அந்தத் தட்டை எலும்புக்கு மேற்புறத்தில், ஓர் பிதுக்கமுண்டு, அதற்கு கொண்டை (கிரிஷ்டகாலி, Crista galli) என்று பேர், அதில், பால்க்ஸ்ஸிரிபிரை (Falx cerebri) என்னும் சவ்வு ஒட்டிக்கொண்டிருக்கும். கொண்டைக்கு இருபுறங்களிலும் சிறிய துவாரங்கள் காணப்படும், அவைகளின் மார்க்கமாய், வாஸனை நரம்புகளின் இழைகள் பிரவேசிக்கின்றன. எலும்புக்குள் இரண்டுபக்கங்களிலும், சன்ன எலும்புகள் சுரிண்டிருக்கும்; அவைகளுக்கு, டர்பிநேடெட்போன்ஸ் (Turbinated Bones) என்றும், அவைகளின் மத்தியத்திலிருக்கிற சந்துக்களுக்கு, மியேடஸ் (Meatus) என்றுஞ் சொல்லப்படும்.

முகத்தெலும்புகள்

(போன்ஸ் ஆவ் தி பேஸ், BONES OF THE FACE.)

முகத்தில் 14 எலும்புகளுண்டு; நாசி எலும்புகள்-2; மேல் தாடை எலும்புகள்-2; லாக்கிரமல் போன்ஸ்-2; கன்னத்தெலும்புகள்-2; அண்ணத்தெலும்புகள்–2; இன்பீரியர் டர்த்னேடெட் போன்ஸ்-2; ஓமர்-1; கீழ்த்தாடை எலும்பு-1; ஆகிய இவைகளாம்.

நாஸி எலும்புகள்.—மூக்கெலும்புகள். (நேஸல் போன்ஸ், Nasal Bones) —இந்த எலும்புகளிரண்டும், நீண்டு மூக்கின் மேற்புறமாய் அமைந்திருக்கின்றன

மேல்தாடை எலும்புகள். (சுபீரியர் மாக்ஸிலெரி போன்ஸ், Superior maxillary Bones).—மேல்தாடையில் இரண்டு எலும்புகள் உண்டு; அவைகள் சேர்ந்து, மூக்கு, கண்குழி, கன்னம், அண்ணம் ஆகிய

இவைகளின் ஏற்பாட்டில் சம்பந்தப்படுகின்றன. ஒவ்வொன்றில் ஒரு கெபி யுண்டு; அதற்கு ஆன்ட்ரம் (Antrum) என்று பேர். எலும்புக்கடியில், 8-குழிகள் காணப்படும்; அவைகளில் 8-பற்கள் அமைந்திருக்கும்.

லாக்கிரமல் போன்ஸ். (Lachrymal Bones).—இவ்விரண்டும், கண் குழிக்கு அகத்தில் முன்பாக இருக்கின்றன. இந்த எலும்பின் வெளிப்புறத்தில், நீண்ட பள்ளம் காணப்படும்: அதில் கண்ணீர் சவ்வுப்பை (லாக்கிரமல் ஸாக், (Lacrymal sac) அமைந்திருக்கும்.

கன்னத்தெலும்புகள். (மெலார் போன்ஸ், Malar Bones).— இவைகள் தட்டையாய் உறுதியாயிருக்கும்; கன்னமேடுகளை யுண்டாக்கி, கண் குழிகளின் ஏற்பாட்டில் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

அண்ணத்தெலும்புகள். (பாலெட் போன்ஸ், Palate Bones).— அண்ணததில் இரண்டெலும்புகளுண்டு; அவைகள் மூக்கின் பின்புறத்திலிருக்கின்றன. அவைகள் அண்ணம், மூக்குப் பக்கங்கள், கண்குழி ஆகிய இவைகளின் ஏற்பாட்டில் அமைந்திருக்கின்றன.

ஓமர். (Vomer).—நாஸிமத்தியில் சன்னமாய், தட்டையாய், நாற்சதுரமாய் ஓரெலும்புண்டு; அது நாசியின் மத்தியஸ்தானத்தில் இருப்பதால் நாஸி கெபி, இரண்டு பிரிவுகளாகின்றது.

கீழ்த்தாடை எலும்பு. மோவாய்க்கட்டை எலும்பு. முகரை எலும்பு. (லோயர் ஜா போன், Lower Jaw Bone).—கீழ்த்தாடை எலும்பு வில் வளைவாய் வளைந்திருக்கும்; அதில் பற்கள் அமைய 16-குழிகளுண்டு. குழந்தையில் அது இரண்டு துண்டுகளாயிருக்கும், பிறகு மத்தியஸ்தானத்தில், ஒன்றோடொன்று இணைந்துபோகும். அந்த ஸ்தானத்துக்கடியில், முன்னுக்குக் கொஞ்சமாய் பிதுங்கியிருப்பதற்கு, முகக்கட்டை, மோவாய்க்கட்டை, முகரை, சிபுகம், (சின், Chin) என்று பேர். பின்புறத்தில் தட்டையாய், நாற்சதுரமாய் மேலே வளர்ந்திருப்பதற்கு ரேமஸ் (Ramus) என்றும், அதன் மேல்புறத்தில் கூர்மையாய் இருப்பதற்கு, காரொநாயிட் ப்ராஸெஸ் (Coronoid Process) என்றும், மழுமழுவென்று உருண்டு நீண்டிருக்கிறவைகளுக்கு, மூட்டு முடிகள் (காண்டாயில்ஸ், Condyles) என்றும், அவ்விரண்டு பிதுக்கங்களுக்கு மத்தியிலிருக்கிற பள்ளத்துக்கு, ஸிக்மாயிட் நாட்ச் (Sigmoid notch) என்றும் சொல்லப்படும். மூட்டுமுடிகள், காதெலும்பிலிருக்கிற கிளினாயிட் காவிடீஸ் என்னும் பள்ளங்களில் அமைந்து, அசைவு கொடுத்து, வாய்மூடவுந் திறக்கவுஞ் செய்கின்றன.

கபால ரேகைகள்

(சூக்ஷர்ஸ், SUTURES)

பிரதிபதங்கள்—கபாலசந்திகள், கரோடிகள், தலையோட்டுப்பொருத்துகள், பிரமலிபிகள், லலாடலிபிகள்.

சிரசில் எலும்புகள் ஒன்றோடொன்று சேருகிற இடங்களில், தையலைப்போற் காணப்படுகிறவைகளுக்கு, ரேகைகள் என்று பேர்.

அவைகளை விதியைக் காட்டுகிற பிரமனெழுத்தென்பது வழக்கம். அடிபட்டு தலையெலும்பில் வடவுகண்டால், அதையதிகமாய்ப் பரவவொட்டாமல், கபாலரேகைகள் தடுக்கின்றன. விரசில் நாலுரேகைகள் உண்டு. கபாலத்தின் முன்புறத்தில், குறுக்காக, ஒரு பக்கத்திலிருந்து, மற்றொரு பக்கத்திற்கு உச்சிமார்க்கமாய், ஓடுகிற ரேகைக்கு, கரொனல் சூக்ஷர் (Coronal suture) என்றும்—உச்சியில் நீண்டு, முன்னிருந்து பின்னுக்கு ஒன்று ஓடும், அதற்கு ஸாஜிட்டல் சூக்ஷர் (Sagittal suture) என்றும்,—(அது சிலவேளை நெற்றியெலும்பு மத்தியில் ஓடுவதுமுண்டு.)கபாலத்தின் பின்புறத்தில் குறுக்காய் ஒன்று ஓடும்,அந்த ரேகைக்கு, லாம்டாயிட் சூக்ஷர் (Lambdoid suture) என்றும்,—காதெலும்பின் மேல்புறத்தை,ஒரு ரேகைச் சுற்றிக்கொண்டிருக்கும், அதற்கு, ஸ்க்வேமஸ் சூக்ஷர் (Squamous suture) என்றும், இங்கிலீஷில் சொல்லப்படும்.

குழைந்தைகளுக்கு, உச்சியில் 2-இரந்திரங்களிலிருக்கும்; அவைகளுக்கு, பிரமரந்திரம், அல்லது உச்சித்துவாரம், (பாண்டெநெல்ஸ் Fontanelles, பிரக்ம Bregma) என்றுபேர், மேலும் விரஸெலும்புகள் பிரத்தியேகப்பட்டிருக்கும். பிரஸவகாலத்தில், தாயின் இடைக்குழியில் விரஸு அந்தந்த ஸ்தானத்துக்குத் தக்கபடி, அமையவேண்டியதாகையால், எலும்புகள் சேர்ந்திருந்தால், அமையமாட்டாது, பிரமரந்திரங்களிருப்பதால், தலையோடுகள் ஒன்றின்மேலொன்றேறி விரஸு சிறுக்க இடந்தருகின்றது. இப்படியிருக்க விசு தாயின் கருப்பையிலிருக்கிறபோது, இவைகளின் வழியாய்,ஆகாரம் உள்ளுக்கிறங்குகிறதென்று, சிலர் கொண்டிருக்கிற எண்ணம் அபத்தம். மருத்துவத்தொழில் செய்கிறவர்கள், இவைகளின் உதவியால், விரஸு இடைக்குழியிலிருக்கிற ஸ்திதியைக் கண்டுகொள்ளுகிறார்கள்.

கண்குழிகள்

(ஆர்பிட்ஸ், ORBITS)

பிரதிபதங்கள்.—கண்கூடுகள், கண்குவளைகள், நேத்திரக்குழிகள்.

கண்குழிகள், 7-எலும்புகள் சேர்ந்து, உண்டாகின்றன. கண்குழியில், விழி, அதுக்குடைய சதைகள், ரத்தநரம்புகள், ஸ்பரிஸ நரம்புகள், கண்ணீர்க்கோளங்கள், கொழுப்பு ஆகிய இவைகளடங்கி இருக்கும். ஒவ்வொரு குழியில் 9-துவாரங்களுண்டு. அவைகளில், விருத்தமாய் மத்தியிலிருப்பதற்கு, நேத்திரதுவாரம் (ஆப்டிக் பொரேமன், Obtic foramen) என்றுபேர். அதுவழியாக நேத்திரநரம்பு ஓடி விழிகளுக்குப் போகும்.

நாஸித்துவாரங்கள்.

(நேஸல் பாஸி, NASAl FOSSÆ).

நாஸித்துவாரத்தில் ஸம்பந்தப்பட்ட எலும்புகள் 8-நாஸி மத்தியிலிருக்கிறதற்கு, தண்டு, (ஸெப்டம், Septum) என்று பேர். நாஸித்துவாரத்துக்கும், கண்கூட்டுக்கும் சம்பந்தமாய் துவாரமுண்டு, அதில் கண்ஜவ்வுக்குழல் அமைந்திருக்கும்; அந்தக் குழல்வழியாக, கண்ணீர் இ[illegible] ாஸிக்கடியில் விழுகின்றது.

பற்கள்

(டீத், TEETH)

பிரதிபதங்கள்.—தந்தங்கள்

முதல்முதல் முளைக்கிற பற்களுக்கு பால்பற்கள் (பாலர்பற்கள்) (மில்க் டித், Milk teeth) என்றும், அவைகள் விழுந்து, இரண்டாந்தரம் முளைக்கிறவைகளுக்கு, ஸ்திரப்பற்கள் (பெர்மெனென்ட் டீத், Permanent teeth) என்றும் பேர். குழந்தைகளுக்கு 20-பற்களுண்டு; அவைகளாவன:—முன்பற்கள்—8. கோரைப்பற்கள்—4. கடைவாய்ப்பற்கள்—8. ஆக இருபதாம். ஸ்திரப்பற்கள்—32. அவைகளாவன:—முன்பற்கள்—8. கோரைப்பற்கள் 4. கடைவாய்ச் சிறியப்பற்கள்—8. கடைவாய்ப் பெரியப்பற்கள்—12. ஆக முப்பத்திரண்டாம்.

ஈறுக்கு வெளியிற் காணப்படுகிற பல்லுக்கு, பற்சிகரம் என்றும் (கிறவுன், Crown), அதற்கடியிலிருக்கும் சுருங்கிய ஸ்தானத்திற்கு, கழுத்து என்றும் (நெக், Neck), பற்குழிக்குளிருக்கிற பாகத்துக்கு, வேர் என்றும் (தந்தமூலம்) ரூட், Root), சொல்லப்படும். வேரை ஒருவித சவ்வு மூடிக்கொண்டிருக்கும்; அது பற்குழியைச் சுற்றிக்கொண்டிருக்கிற சவ்வுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது. தந்தமூலமுனையில் ஒரு துவாரமுண்டு; அது வழிவாய், நரம்புகள் பல்லுக்குள் பிரவேசிக்கின்றன பல்லில் முக்கியமாய் இரண்டுவித பதார்த்தங்களுண்டு; பற்சிகரத்தை மேலாகச் சுற்றிக்கொண்டு, வெள்ளையாயும் உறுதியாயுமிருக்கிற பதார்த்தத்துக்கு, இனமெல் (Enamel) என்றும், வேரில் தந்தத்தைப்போலிருக்கிற பதார்த்தத்திற்கு, ஐவொரி (Ivory) என்றும் சொல்லப்படும். பல்லின் சிகரத்துக்குள் ஓர் பள்ளமுண்டு, அதில் சவ்வு (பல்ப், Pulp) பரவியிருக்கும். அந்தச் சவ்வானது வேரின் துவாரத்திலிறங்கி வேரின் வெளிப்புறமாய் இருக்கிற சவ்வுடன் கலந்துவிடும்.

குழந்தைகளுக்குப் பற்கள் ஒரே நிதானமாய் முளைக்கிறதில்லை; சிலருக்குச் சீக்கிரத்திலும், சிலருக்குத் தாமசப்பட்டும், முளைக்கும். கீழ்ப்பற்கள் முதல் முளைக்கிறது வழக்கம். பல் முளைக்கிற காலக்கிரமமாவது:—

7-ம் மாதம், மத்திய முன்பற்கள் 2-முளைக்கும்-2-middle incisors.

9-ம் மாதம், பக்கத்து முன்பற்கள் 2-முளைக்கும்—2-lateral incisors

12-ம் மாதம், கடைவாய்ச் சிறிய முன்பற்கள் முளைக்கும்—First molars.

18-ம் மாதம், கோரைப்பற்கள் முளைக்கும்—Canine.

24-ம் மாதம் கடைவாய்ச் சிறிய பின்பற்கள் முளைக்கும்—2 last molars.

ஸ்திரப்பற்கள் முளைக்கிற காலக்கிரமம்.

$6\frac{1}{2}$-வயதில், கடைவாய்ப் பெரிய முதற்பற்கள் முளைக்கும். (பஸ்ட் மொலேர்ஸ்,) Fist molars).

7-ம் வயதில், மத்திய முன்பற்கள் 2-முளைக்கும். (மிடில் இன்ஸைஸர்ஸ், 2 middle incisors)

8-ம் வயதில், பக்கத்து முன்பறகள் 2-முளைக்கும். (லாடிரல் இன்ஸைஸர்ஸ்,2 lateral incisors).

9-ம் வயதில், கடைவாய்ச் சிறிய முதற்பற்கள் முளைக்கும். (பஸ்ட் பைகஸ் பிடஸ், First bicuspids).

10-ம் வயதில், கடைவாய்ச் சிறிய இரண்டாவது பற்கள் முளைக்கும். (ஸெகன்ட் பைகஸ்பிடஸ், Second bicuspids).

11-முதல் 12-ம் வயதில், கோரைப்பற்கள் முளைக்கும். (கெஸநன், Canine).

12-முதல் 13-ம் வயதில், கடைவாயில் பெரிய இரண்டாவது பற்கள் முளைக்கும். ஸெகன்ட் மொலேர்ஸ், Second molars).

17-முதல் 21-ம் வயதில், கடைவாயில், கடைப்பற்கள் (ஞானப்பற்கள்) (விஜடம்டீத். Wisdom teeth) முளைக்கும். (லாஸ்ட் மொலேர்ஸ், (Last molars.)

அந்த வயதில் சரீர உறுப்புகளெல்லாம் ஸம்பூரணமாகி, லோக வாழ்க்கையில் ஞானம்பிறக்கும்.

நாக்கெலும்பு

(ஹையாட் போன், HYOID BONE).

நாக்கினடியில் ஒரெலும்புண்டு, அதற்கு நாக்கெலும்பென்று பேர் அதின் மத்தியில் தட்டையாயிருக்கிற பாகத்துக்கு, உடல் என்றும், பிதுக்கங்களுக்கு, கொம்புகள் என்றும் பேர். நாக்கெலும்புக்கும், குரல்வளைக்கும் மத்தியில் ஒரு சவ்வுண்டு, அதற்கு தைரோஹையாய்டியன் மெம்பிரேன் (Thyro-hyoidean membrane) என்று பேர்.

நெஞ்சரை

(தோராக்ஸ், THORAX)

பிரதிபதம்.—வக்ஷஸ்தலம்.

நெஞ்சரையில் 25-எலும்புகளுண்டு. மார்க்கண்ட எலும்பு-1, விலா எலும்புகள்-24, ஆகிய 25-ஆம்.

மார்க்கண்ட எலும்பு. வக்ஷ எலும்பு. (ஸ்டர்னம், Sternum)—இந்த எலும்பு மார்பு மத்தியஸ்தானத்தில் இருக்கும். வெளிப்புறம் கவிந்தும், உட்புறம் குவிந்துமிருக்கும். மேல்முனையில் இரண்டு பள்ளங்களுண்டு, அவைகளில் காறைஎலும்பு கூடியிருக்கும். எரும்பின் வலது, இடது பக்கங்களில் 7-பள்ளங்களுண்டு, அவைகளில், பழுவெலும்பின் முருந்துகள். (காஸ்டல் கார்டிலேஜெஸ், Costal Cartilages) பொருந்தியிருக்கும் இந்த எலும்பின் கீழ் முனை பல ரூபங்களாயிருக்கும்; சிலவற்றில் கூர்மையாயும், சிலவற்றில் அகலமாயும், சிலவற்றில் மெல்லியதாயுமிருக்கும்; அதில் விருத்தமான துவாரம் ஒன்று இருப்பதுமுண்டு.

விலா எலும்புகள். பழு எலும்புகள். (ரிப்ஸ், Ribs).—பக்கத்துக்கு-12 ஆக-24 விலா எலும்புகளிருக்கின்றன. அவைகளில் 7-மார்கண்ட எலும்புடன் சேர்ந்திருக்கும் (ட்ருரிப்ஸ், True ribs). 3-ஒன்றின்மேலொன்று

படிந்திருக்கும் (ப்பால்ஸ் ரிப்ஸ், False ribs). அடியிலிருக்கிற மற்ற இரண்டின் முனைகளும், அந்தரமாயிருக்கும் (ப்ளோடிங் ரிப்ஸ், Floating ribs). விலா எலும்புகள் படிப்படியாய், இறக்கத்தில் 8-எலும்புகள் நீண்டிருக்கும்; பிறகு படிப்படியாய்க் குறையும். அகலத்திலும் இவ்விதமாகவே குறைந்துகொண்டுவரும். முதல் பழுவெலும்பு சமனுயும், மற்றவைகள் சாய்வாயு மிருக்கும். பழுவெலும்புகளின் வெளிப்புறம் குவிந்தும், மாமிஸங்கள் ஒட்டிக்கொண்டு மிருக்கும்; உட்புறம் தட்டையாயும் சவ்வு (ப்ளூரா, Pleura) ஒட்டிக்கொண்டுமிருக்கும்; முதுகு முள்ளெலும்புகளுடன் சேர்ந்திருக்கிற முனைக்கு சிரசு (ஹெட், Head) என்று பேர்.

கை

(அப்பர் எக்ஸ்டிரமிடி, UPPER EXTREMITY)

ஒவ்வொரு கையில் 32-எலும்புகளுண்டு.—சவடியெலும்பு-1. தோள்பட்டையெலும்பு-1. புஜ எலும்பு-1. இரத்தினி எலும்பு-1. ஆரையெலும்பு-1. மணிகட்டெலும்பு-8. உள்ளங்கை எலும்புகள்-5 கைவிரல் எலும்புகள்-14 ஆகிய 32-ஆம்.

காறை எலும்பு. சவடி எலும்பு. (கிளாவிகல், Clavicle)—இந்த எலும்பு நீண்டு, ஒரு முனை, மார்கண்ட எலும்போடும், மற்றொரு முனை தோள்பட்டை எலும்போடும் கூடியிருக்கும்.

தோள்பட்டை எலும்பு. சப்பட்டை. எலும்பு. ஸ்காபியுலா, Scapula) —இந்த எலும்பு தோளின் பின்புறமாய் இருக்கின்றது. இது தட்டையாயும் திரிகோணரூபமாயும் இருக்கும், முன்புறம் கவிப்பாய் அதில் மாமிஸங்கள் ஒட்டிக்கொண்டுமிருக்கும்; பின்புறம் குவிப்பாய், அதின் மேல் ஒரு மேடு, குறுக்காய் ஓடியுமிருக்கும்; அதற்கு ஸ்பைன் (Spine) என்று பேர். அந்த ஸ்பைன் என்னும் மேடின் முனையானது, தட்டையாய் பிதுங்கியிருக்கும், அதற்கு அக்குரோமியன் பிராஸெஸ், (Acromian process) என்று பேர். அது காறை எலும்புடன் சேர்ந்திருக்கும். தோள்பட்டை எலும்பின் விரவில், எலும்பு சந்திப்பு ஸ்தானமொன்று காணப்படும், அதற்கு கிளினாயிட் காவிடி (Glenoid cavity) என்று பேர்; அந்த ஸ்தானத்தில் புஜ எலும்பின் சிரசு சேர்ந்திருக்கும். தோள்பட்டை எலும்பு சிரசுக்கு மேல், உருண்டு வளைந்து ஒரு பிதுக்கமிருக்கும், அதற்கு காரோகாயிட் ப்ராஸெஸ், (Coracoid process) என்று சொல்லப்படும். சிரசுக்கடியில் சுருங்கியிருக்கிற ஸ்தானத்துக்குக் கழுத்து என்று பேர்.

புஜ எலும்பு. (ஹூமர்ஸ், Humerus) —இந்த எலும்பு நீண்டு, சிகரம் உண்டாயிருக்கும்; சிகரத்துக்கடியில் இரண்டு மேடுகள் உண்டு, (டியுபிராஸிடி, Tuberosity) அவைகளில், மாம்ஸங்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். அந்த மேடுகளுக்குக் கீழாக ஸூக்ஷ்க்கித்திருக்கும், அதற்குக் கழுத்து என்று பேர். அந்த ஸ்தானத்தில் தான் எலும்பு அடிக்கடி ஒடியும். புஜ எலும்பு முழுதும் மாம்ஸங்கள் ஒட்டிக் கொண்டிருக்கும். புஜ எலும்பின் கீழ்முனையானது, தட்டையாப் இருக்கும், அதில் எலும்பு சந்திப்புஸ்தானம், ஒன்று

காணப்படும், அந்த ஸ்தானத்தின் அகத்தில், இரத்தினி எலும்பும், புறத்தில் ஆரையெலும்பும் சேர்ந்திருக்கின்றன. அந்தச் சந்திப் புஸ்தானத்திற்கு மேலாக, முன்பக்கத்தில் ஒரு சிறிய பள்ளந்தோன்றும், அதில் கையை முடக்கும்போது, இரத்தினியெலும்பின் பிதுக்கம் (காரொனுயிட் ப்ராஸஸ், Coronoid process) வந்து அமையும். அதற்கு நேராய்ப் பின்புறத்தில் ஒரு பெரிய பள்ளமுண்டு, அதில் கையை நீட்டும்போது, மேற்சொல்லிய எலும்பின் சிகரம் போய் அமையும்.

இரத்தினி எலும்பு. (அல்னு, Ulna).—முன்கையில், அகத்திலிருக்கிற எலும்புக்கு, இரத்தினி எலும்பென்று பேர். அதின் சிகரத்தில் சந்திரப் பிறையைப்போல் ஒரு பள்ளமுண்டு (கிரேடர் ஸிக்மாட் நாக்ஷ், Greater sigmoid notch); அந்தப் பள்ளத்தில் புஜமெலும்பு சேர்ந்திருக்கும். அந்த பள்ளத்துக்கு வெளிப்புறமாக மற்றொரு பள்ளமுண்டு, அதில் ஆரை எலும்பின் சிகரம் கூடியிருக்கும். சந்திரப் பிறையை யொத்த பள்ளத்துக்கு மேற்புறமாய், ஒரு பிதுக்கமுண்டு, அதற்கு ஒலிக்கிறேனன் ப்ராஸெஸ் (Olecranon process) என்றும், கீழ்ப்புறத்திலிருக்கிற சிறிய பிதுக்கத்துக்கு காரோனுயிட் ப்ராஸெஸ் (Coronoid process) என்றும் பேர். இரத்தினி எலும்பை முழுவதும் மாம்ஸங்கள் ஒட்டிக்கொண்டிருக்கும்; அதின் கீழ் முனை ஆரை எலும்போடு சேர்ந்திருக்கின்றது.

ஆரை எலும்பு. (ரேடியஸ், Radius).—முன்கையில் வெளிப்புறத்தில் பெருவிரல்பக்கமாயிருக்கிற நீண்ட எலும்புக்கு, ஆரையெலும்பென்று பேர். அதன் சிகரம் உருண்டு, முனையில் பள்ளமாய் இருக்கும்; அந்தப் பள்ளம் புஜ எலும்புடன் சேர்ந்திருக்கும். ஸிகரத்தின் ஓரமானது, இரத்தினி எலும்போடு சேர்ந்திருக்கும். சிரஸுக்கடியில் ஓர் மேடுண்டு, அதில் மாம்ஸங்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். முன்னங்கையிலிருக்கிற இரண்டு எலும்புகளுக்கு மத்தியில் ஓர் ஜவ்வுண்டு, அதற்கு இன்டராஷியஸ் மெம்பிரேன் (Interosseous membrane) என்று பேர். எலும்பின் கீழ்முனை அகன்று, முனையில் சந்திப்புஸ்தானங்கள் அகப்படும். அகத்திலிருக்கிற சந்திப்புஸ்தானத்தில், இரத்தினி எலும்பும், முனையிலிருக்கிறதில், மணிக்கட்டெலும்புகளும் கூடியிருக்கின்றன.

மணிக்கட்டு. கைகுளசு. (கார்பஸ், Corpus).—மணிக்கட்டில் 8-எலும்புகளுண்டு; அவைகள் வரிசைக்கு 4-ஆக, இரண்டு வரிசைகளாயிருக்கும். முதல் வரிசை எலும்புகளின் பேர்களாவன:—ஸ்கேபாயிட் (Schaphoid), ஸெமிலூனர் (Semilunar), கியுனிபாரம் (Cuneiform(, பிஸிபாரம் (Pisiform). 2-வது வரிசையில்:—ட்ரெபீஜியம் (Trapezium), ட்ரெபிஜாய்டியஸ் (Trapezoides), ஆஸ்மாக்னம் (Os Magnum), அன்ஸிபாரம் (Unciforme).

உள்ளங்கை எலும்புகள். (மிடெகார்ப்ஸ், Metacarpus).—உள்ளங்கையில் 6-எலும்புகளுண்டு; அவைகள் நீண்டிருக்கும்; முனை உருண்டும், அடி சதுரமாயும் இருக்கும்.

விரல் எலும்புகள். (பெலாஞ்ஸெஸ், Phalanges).—ஒவ்வொரு விரலுக்கு மும்மூன்றாக, 4-விரல்களில் 12-ம், பெருவிரலில் (அங்குஷ்டம்) உ-ம் ஆக 14-எலும்புகள், ஒவ்வொரு கையிலிருக்கின்றன.

கூபகம்

(பெல்விஸ், PELVIS).

சரீரத்தின் கீழ்ப்புறத்தில் 4-எலும்புகள் சேர்ந்து, குழிபோலுண்டா கிற ஸ்தானத்துக்கு, கூபகம் (இடை) என்று பேர். அந்தக் கூபகத்திலிருக் கிற குழிக்கு, இடைக்குழி என்று பேர். அந்த இடைக்குழியில், மூத்திரப் பையும், மலக்குடலும், ஸதிரீகளில், கர்ப்பாஸயமும், அடங்கியிருக்கின்றன. கூபகத்தில் 4-எலும்புகளுண்டு இடுப்பெலும்புகள்-2, திரிகஸ்தான எலும்பு 1, குயில் மூக்கெலும்பு-1, ஆகிய இவைகளாம்.

இடுப்பெலும்பு. நாமஸூன்னிய எலும்பு. (ஆஸ் இன்னுமிநேடம், Os Innominatum).—குழந்தையில் இடுப்பெலும்பானது மூன்று துண்டு களாயிருக்கும் பிறகு அவைகள் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரே எலும்பாகி விடு கின்றன. ஆகையால் அந்த எலும்பு, இலியம், இஸ்கியம், பியுபிஸ், என மூன்று பாகங்களாக, பிரிக்கப்பட்டிருக்கின்றது இந்த எலும்பு மேற்புறத் தில், அகலமாய் விரிந்து, திரிகஸ்தான எலும்புடன் சேர்ந்திருக்கிற பாகத் துக்கு, இலியம் (Ilium) என்று பேர். இடுப்பெலும்புக்கடியில் உறுதியா ருக்கிற பாகத்துக்கு, இஸ்கியம் (Ischium) என்று பேர். நாம் உட்கார்ந்தி ருக்கும் போது. இந்த எலும்பு நமது சரீரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும். இடுப்பெலும்புக்கு முன்பாக இருக்கிற பாகத்துக்கு, மர்மஸ்தான எலும்பு (பியுபிஸ், Pubis) என்று பேர். இதில், அல்குல், ஆண்குறி முதலிய அவயவங் கள் ஒட்டிக்கொண்டிருக்கும். இடுப்பெலும்பின் வெளிப்புறத்தில், ஆழ்ந்த கிண்ணத்வதைப்போல் ஒரு பள்ளம் உண்டு, அதற்கு, அஸிடாபியுலம் (Acetabulum) என்று பேர்; அதில் தொடையெலும்மின் சிகரம் சேர்ந்திருக் கும் இந்த எலும்பில் அண்டவடிவாய் ஒரு பெரிய துவாரம் காணப்படும், அதற்கு தைராயிட் பொரேமன் (Thyroid foramen) என்று பேர். அந்தத் துவாரம் ஜவ்வால் மூடப்பட்டிருக்கின்றது.

இடைக்குழி

(பெல்விக் காவிடி, PELVIC CAVITY)

இடைக்குழியில், 2-பிரிவுகளுண்டு; குழியைச் சுற்றிக்கொண்டிருக் கிற மேட்டுக்கு, வரம்பு என்று பேர், (பிரிம், Brim); அந்த வரம்புக்கு மேலாய், எலும்புகள் விரிந்து விசாலமாய் இருக்கிற ஸ்தானத்துக்கு, பொய் க்குழி (பால்ஸ் பெல்விஸ், False Pelvis) என்றும், வரம்புக்கடியில், கிண் ணத்தைப்போலிருக்கிற பள்ளத்துக்கு, மெய்க்குழி (ட்ரு பெல்விஸ், True Pelvis) என்றும் பேர். ஆணுக்கும் பெண்ணுக்கும், இடைக்குழியில் சில வித்தியாசங்களகப்படும். ஆணில் எலும்புகள் தளமாயும் கெட்டியாயும், பள்ளமானது, ஆழமாயும் குறுகலாயும் இருக்கும். பெண்ணில் எலும்புகள் லேசாயும் மிருதுவாயும் அகன்றும், பள்ளம் விசாலமாயும் அதிக ஆழ மில்லாமலும், டியுபிராஸிடி (Tuberosity) என்னும் உருளைகள் ஒன் றுக்கொன்று தூரமாயும். மர்மஸ்தானவளைவு (பியுபிக் ஆர்ச், Pubic arch) அகன்றுமிருக்கும். மருத்துவ வைத்தியர்களுக்கு, இடைக்குழியின்

குறிக்களவுள் செவ்வையாய்த் தெரிந்திருக்கவேண்டியது. இடைக்குழிக்கு 3-அளவுகளுண்டு:—மர்மஸ்தான எலும்பு சந்திக்கும், திரிகஸ்தான எலும்பு பிதுக்கத்துக்குமிருக்கிற இடத்துக்கு, எதிர் அளவு என்று, (ஆன்ட்ரோ போஸ்டீரியர், Antero-Posterior diameter) பேர்; இது 4-அங்குல நீளம். வரம்பின் ஒரு பக்கத்துக்கும் மற்றொரு பக்கத்துக்குமிருக்கிற இடத்துக்கு, குறுக்களவு (ட்ரான்ஸ்வர்ஸ், Transverse diameter) என்று பேர்; இது 5-அங்குல நீளம். திரிகஸ்தான எலும்பும் இலியமும் சேருகிற ஸந்திப்பு ஸ்தானத்துக்கும் மற்றொரு பக்கத்து, அவிடாபியுலம் என்கிற பள்ளத்துக்கு மேலிட்ட வரம்புக்குமிருக்கிற இடத்துக்கு, கோண அளவு (Oblique dimeter) என்று பேர்; இதுவும் 5-அங்குல நீளம். ஷை அளவுகளின் கணக்கு வித்தியாசப்படும், நிக்ஷயமாய்ச் சொல்லக்கூடாது.

கால்

(லோயர் எக்ஸ்ட்ரமிடி, Lower. EXTREMITY).

காலில் 6-பிரிவுகளுண்டு; தொடை, முழங்கால், கால், கணுக்கால், பாதம், விரல்கள், ஆகிய இவைகளாம்.

தொடை எலும்பு. (பீமர், (Femur).—தேகத்திலிருக்கிற எலும்புகளுக்குள், தொடையெலும்பு பெரிது, அதின் சிகரம், உருண்டு, பந்தைப் போலிருக்கும். அது, அவிடாபியுலம் என்னும் பள்ளத்தில், அமைந்து சரீரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கின்றது விகரத்தின் மத்தியில் ஒரு பள்ளமுண்டு, அதில் ஒரு உருண்ட சந்திபந்தனம், (ரவுண்ட் லிகமென்ட், Round liganent) ஒட்டிக்கொண்டிருக்கும். விகரத்தின் கிழிருக்கிற ஸ்தானம், சுருங்கியிருக்கும், அதற்கு கழுத்து என்று பேர். கழுத்துக்கடியில், இரண்டு பிதுக்கங்கள் காணப்படும்; அவைகளுக்கு, ட்ரொகான்டர்ஸ் (Trochanters) என்று பேர்; அவைகளில் சதைகள் ஒட்டிக்கொண்டிருக்கும். எலும்பின், பின்புறத்திலிருக்கிற நீண்டவரம்புக்கு, லினிய ஆஸ்பிர (Linea aspera) என்று பேர் தொடை எலும்பின் கீழ்முனை இரண்டு பிரிவுகளாயிருக்கும், அவைகளுக்கு கான்டால்ஸ் (Condyles) என்று பேர். உட்புறமாயிருப்பது நீண்டும், வெளிப்புறமாயிருப்பது அகலமாயுமிருக்கும்.

முழங்கால் சில்லி. முழங்கால்சிப்பி, (பெடெல்ல, Patella) இந்த எலும்பானது வேறெலும்போடு சேராமல், தனியாய், உஞணிக்குள் ஐக்கியமாயிருக்கின்றது.

நளகம். குதிரைமுக எலும்பு. (டிபிய, Tibia) கால்களில் இரண்டெலும்புகளுண்டு; அகத்திலிருக்கிற பெரிய எலும்புக்கு, நளகம் என்று பேர். அதின் சிகரமானது, பெருத்து, தொடையெலும்புடன் சேர்ந்திருக்கும். சிகரத்துக்குக் கீழாய், முன்புறத்தில் ஓர் மேடுண்டு, அதில் முழங்கால்சில்லியின் உன்ஞணி, ஒட்டிக்கொண்டிருக்கும். (லிகமென்டம் பெடெல்ல. Ligamentum Patella) எலும்பின் கீழ்முனையில், ஓர் பிதுக்கமுண்டு அதை, கணுக்கால் உள்முழி, (இன்டர்நல் மாலிஒலஸ், Internal malleolus) என்று சொல்லப்படும். இந்த முனையானது, சரவெலும்போடும், அஸ்டிராகெலஸ் (Astregulas) என்னும் எலும்போடும் சேர்ந்திருக்கும்,

சாவெலும்பு. (பிபியுல, Febula).—காலில் வெளிப்புறமாய், கொஞ்சம் பின்னுக்கிடைந்திருக்கிற எலும்புக்கு, சாவெலும்பென்று பேர். இது சன்னமாய் நீண்டிருக்கும்; பெருத்து தளமாயிருக்கிற சிகரமானது, நளகத்தோடு சேர்ந்திருக்கும்; கீழ்முனை நீண்டு, தட்டையாயிருக்கும், அதற்கு, கணுக்கால் வெளிமுழி (எகிஸ்டர்னல் மாலியோலஸ், (External malleolus) என்று சொல்லப்படும்; அது அஸ்ட்ராகெலஸ் என்கிற எலும்போடு சேர்ந்திருக்கும். கால் எலும்புகள் இரண்டுக்கு மத்தியில், ஓர் ஜவ்வு ஒட்டிக் கொண்டிருக்கும், அதற்கு, இன்டராஷியஸ் மெம்பிரேன், (Interosseous membrane) என்று பேர்.

பாதத்தின் எலும்புகள்

ஒவ்வொரு பாதத்தில் 26-எலும்புகளுண்டு. குதிகாலில் 7-ம் உள்ளங்காலில் 5-ம் கால்விரல்களில் 14-ஆம். பாதத்தை இவ்விதச் சிறிய எலும்புகளால் செய்திராமல், கெட்டியான ஓரெலும்பால் செய்திருந்தால், குதிக்கிறபோது, தேவையானபடி வளையாமல், ஒடிந்து போகும். பாதமானது வில் வளைவா யிருக்கின்றது; வில்வளைவு மெத்த பளுவைச் சுமக்கும், மேலும் நடப்பதற்கும், ஓடுவதற்கும், மெத்தச் சுலபமாயிருக்கும்.

குதிகால் எலும்புகள். (டார்ஸல் போன்ஸ், Tarsal bones).—சாரி எலும்பு, (ஆஸ்டிராகெலஸ், Astragalus)—குதிகால் எலும்பு, (ஆஸ்கால் ஸிஸ், Os Calsis)—நாவு எலும்பு, (ஸ்கேபாயிட், Scaphoid) உள்ஆப்பு எலும்பு, (இன்டர்னல் கியுனிபாரம், Internal cuniform)—மத்திய ஆப்பு எலும்பு, (மிடல் கியுனிபாரம், Middle cuneiform)— வெளி ஆப்பு எலும்பு (எக்ஸ்டர்நல் கியுனிபாரம், External cuneiform)—கன எலும்பு, (கியுபாயிட், Cuboid) ஆகிய இவைகளாம்.

உள்ளங்கால் எலும்புகள். (மிடேடார்ஸல் போன்ஸ், Metatarsal bones).—உள்ளங்காலில் 5-எலும்புகளுண்டு; அவைகள் நீண்டு, இருபுறமும், அடங்கியிருக்கும்; அடி சதுரமாயும், முனை உருண்டும் இருக்கும்.

கால் விரல் எலும்புகள். (பெலான்ஜெஸ், Phalanges).—கால்பெருவிரலில் இரண்டு எலும்புகளுண்டு; மற்ற விரல்களில், ஒவ்வொன்றில் மும்மூன்றாக. 4-விரல்களில், 12 எலும்புகளிருக்கின்றன.

ஸெஸமாயிட் போன்ஸ், (Sesamoid bones).—கால், கை பெருவிரல்களின் கீல்களில் சிறிய எலும்புகளுண்டு, அவைகளுக்கு ஸெஸமாயிட் போன்ஸ் என்றபேர். ஒவ்வொரு கீலுக்கு இரண்டாக, 4-கீல்களிலும், 8-எலும்புகள் இருக்கின்றன.

2. அத்தியாயம்

ஹஸ்திபந்தனங்கள். ஸந்திபர்தனங்கள். (லிகெமெண்டஸ், Ligaments)—எலும்புகளை ஒன்ரோடொன்று சேர்த்து கட்டிவைத்திருக்கிற பெலனுள்ள வெள்ளைச் சவ்வுக்கு, ஹஸ்திபந்தனம் என்று பேர்.

மூட்டு. கீல், ஹஸ்திசந்தி, கொளுசு, குளசு, பொருத்தம், பூட்டு, சந்திகம், (ஜாயின்ட், Joint).—எலும்புகள் சேர்ந்திருக்கிற ஸ்தானத்துக்கு, மூட்டு என்று பேர். மூட்டுகளில் சிலது அசையாமலும், சிலது கொஞ்சமாக அசைந்து கொண்டும், சிலது மெத்த அசைந்து கொண்டும் இருக்கும். மண்டையோடுகளும், பற்களும், அசையாமல் கூடியிருக்கும்; அவ்வித கீலுக்கு, ஸைஞர்த்துரோஸிஸ் (Synarthrosis)) என்று பேர். முள்ளெலும்புகள், திரிகஸ்தான எலும்பு, ஆகிய இவைகள், கொஞ்சமாய் அசையும்படி கூடியிருக்கும்; அவ்விதக் கீலுக்கு ஆம்பியார்த்திரோஸிஸ் (Amphi-ar-throsis) என்று பேர். புஜ எலும்பு, தொடை எலும்பு, முதலியவைகள் மெத்த அசையும்படி கூடியிருக்கும் ; அவ்விதக் கீலுக்கு டையார்தது ரோஸிஸ் (Diathrosis) என்று பேர். கையில், முழங்கை, மணிக்கட்டு, விரல்கள்,—காலில், முழந்தாள், கணுக்கால், விரல்கள் ஆகிய இவைகள் பெட்டிக் கீல்களைப்போல். முன்னுக்கும் பின்னுக்குமாத்திரம் அசைந்துகொண்டிருக்கும், அவ்விதக் கீலுக்கு ஹின்ஜ் ஜாயின்ட் Hinge joint—கிங்கிளிமஸ், Ginglymus) என்று பேர். தொடை, தோள், ஆகிய இவைகளின் கீல்கள், நாலுபக்கமும் செக்கைப்போல் சுழன்றுகொண்டிருக்கும்; அவைகளுக்கு, பால் அன்ட் ஸாகெட் ஜாயின்ட் (Ball and Socket joint) என்று பேர்,

முருந்து. குருத்தெலும்பு. கார்டிலேஜ், Cartilage).—மூட்டுகளில் கூடியிருக்கிற எலும்புகளின் முனைகள் தேய்ந்துபோகாமல், அவைகளின் மேல் ஒட்டிக்கொண்டு, மழமழவென்றிருக்கிற பதார்த்தத்துக்கு, முருந்து என்று பேர்.

கொழுப்பு. மேதம். (அடிபோஸ் டிஸ்யு, Adipose tissue, Fat).—ஜவ்வுக்குள் அடங்கி முட்டைபோலிருக்கிற ஒர்வித எண்ணெய்க்கு. கொழுப்பென்று பேர். மனித தேகத்தில் பள்ளமாயிருக்கிற ஸ்தானங்களை சுற்றுக்கொண்டும் சருமத்துக்கடியிலும் கொழுப்பிருக்கும். குழந்தைகளுக்கும் வாலிபர்களுக்கும் கொழுப்பு அதிகமாயிருக்கும், ஆகையால் அவர்களுடைய ஸரீரம் திரண்டு, பருத்துக்காணப்படும் வயது சென்றவர்களில் கொழுப்பு மெத்தக் குறைந்திருக்கும். கொழுப்பின் பிரயோசனமாவது, வியாதி கண்டு, அன்னத்துவேஷத்தால் ஸரீர போஷணை யில்லாமலிருக்கிறபொழுது, கொழுப்பு ரத்தமாய் மாறி, ஸரீரத்தை போஷிக்கின்றது; அப்போது தேகம் இளைத்து, எலும்புகள் காணப்படும், முகம் சுஷ்கிக்கும், கண்கள் குழிவிழும்.

கீல் ஜவ்வு. ஙித்தாசில்லி, ஸந்திகசிலேஷம் ஜவ்வு. (ஸைநோவியல் மெம்பிரேன், Synovial Membrane).—எலும்பு ஸந்திப்பு ஸ்தானங்களின், முருந்தை மூடிக்கொண்டிருக்கிற ஜவ்வுக்கு, கீல் ஜவ்வு என்று

பேர். இந்தச் சவ்வில் ஓர்வித எண்ணெய்ப்பசை சுரக்கும், அதற்கு ஸந்திகசிலேஷ்மம் (நிணநெய், நித்தை) (ஸைநோவிய, Synovia) என்று பேர். வண்டிகளுக்குச் சக்கரம் சுலபமாய் சுழலும்படி போடுகிற எண்ணெய்யைப் போல், இந்த ஸந்திகசிலேஷ்மமானது, கீல்களுக்கு வழவழப்புக் கொடுக்கின்றது.

கீல்கள்

(ஜாயின்ட்ஸ், JOINTS). (அர்டிகியுலேஷன்ஸ், ARTICULATIONS).

தாடைக்கால். தாடைப்பூட்டு. (அர்டிகியுலேஷன் ஆவ் தி லோயர் ஜா, Articulaion of the lower jaw). கீழ்த்தாடை எலும்பின் மூட்டுமுடிகளானவை, காதெலும்பிலிருக்கிற கிளிநாயிட்காவிடி என்னும் பள்ளங்களில் அமைந்து. தாடைமூட்டு ஏற்படுகின்றது. கீழ்த்தாடையெலும்பு தாழ்ந்தால், வாய்திறக்கும் ; உயர்ந்தால் வாய்மூடும் ; முன்னுக்கு வந்தால் முகரை பிதுங்கும் ; இதில் பக்கவாட்ட அசைவுகளும் உண்டு.

தோள்மூட்டு. தோட்சந்து. (ஷோல்டர் ஜாயின்ட், Shoulder joint). தோள்பட்டை எலும்பிலிருக்கிற கிளிநாயிட்காவிடி என்கிற பள்ளத்தில், புஜ எலும்பின் முடி சேர்ந்து, தோள்மூட்டு உண்டாகின்றது. இந்த மூட்டுக்கு, நீட்டல், முடக்கல், அணைத்தல், (நெருக்கல்), அகற்றல், சுழற்றல், என 5-வித அசைவுகள் உண்டு.

முழங்கை. (எல்போ ஜாயின்ட், Elbow Joint).—புஜ எலும்புடன் முன்னங்கையில் இரண்டு எலும்புகளும் சேர்ந்து, முழங்கை ஏற்படுகின்றது. இந்த மூட்டுக்கு' முடக்கல், நீட்டல், ஆகிய இரண்டுவித அசைவுகள் மாத்திரமுண்டு. ஆரையெலும்பின் சிகரம், இரத்தினி எலும்போடு சேர்ந்து, உருளுவதால், கைதிரும்பல் உண்டாகின்றது. உள்ளங்கையை, கீழ்நோக்கும்படித் திருப்புதலுக்கு, கவித்தல் (ப்ரோநேஷன், Pronation) என்றும், மேல் நோக்கும்படித் திருப்புதலுக்கு, மலர்த்தல் (ஸுபைநேஷன் Supination) என்றும் சொல்லப்படும்.

மணிக்கட்டு. (ரிஸ்ட் ஜாயின்ட், Wrist Joint).—ஆரைஎலும்பின் அடியானது, ஸ்கேபாயிட், ஸெமிலூனர், கியுனிபாரம், ஆகிய இம் மூன்று எலும்புகளோடு சேர்ந்து, மணிக்கட்டு ஏற்படுகின்றது. இந்த மூட்டுக்கு, முடக்கல், நிமிர்த்தல், தாழ்த்தல், உயர்த்தல், சுழற்றல், என 5-வித ஆட்டங்களுண்டு.

தொடைசந்து. (ஹிப் ஜாயின்ட், Hip Joint.—தொடை எலும்பின் சிகரமானது, அஸிடாபியுலம் என்னும் குழியில் சேர்ந்து, தொடைச்சந்து உண்டாகின்றது இந்த மூட்டுக்கு, முடக்கல், நீட்டல், நெருக்கல், அகற்றல் சுழற்றல் என 5-வித அசைவுகளுண்டு.

முழங்கால். (நீ, Knee).— தொடையெலும்பின் கீழ் முனையும், குதிரைமுக எலும்பின் சிகரமும் சேர்ந்து, முழங்கால் ஏற்படுகின்றது. இந்தக் கீல் 13-பந்தனங்களால், உறுதியாய்க் கட்டப்பட்டிருக்கின்றது,

இந்தக் கீலுக்கு முடக்கல், நீட்டல், என இரண்டுவித அசைவுகள் மாத்திர முண்டு.

கணுக்கால். (ஆன்கில், Ankle).—நளகத்தின் கீழ்முனையும், சரவெலும்பின் கீழ்முனையும், சாரி எலும்புடன் சேர்ந்து, கணுக்கால் ஏற்படுகின்றது. இந்த மூட்டுக்கு, முடக்கல், நீட்டல், என இரண்டுவித ஆட்டங்களுண்டு, பக்கவாட்டமாயும் கொஞ்சம் அசையும்.

---

3. அத்தியாயம்

மாமிசம்

(மஸில்ஸ், MUSCLES)

பிரதிபதங்கள்.—சஸத, இறைச்சி, புலால், ஊன், தசை, பேசி.

மனித தேகத்திலிருக்கிற சிவந்த மாமிசங்கள், அடுக்கடுக்காய் அமைந்திருக்கும். சில அகலமாயும், சில நீண்டுமிருக்கும். அநேக சிறிய இழைகள் சேர்ந்து, ஒவ்வொரு மாமிசம் ஏற்படுகின்றது. இழைகளையும், மாமிசங்களையும், ஒன்றோடொன்று இணையும்படி, வலைபோலொத்த சவ்வால் கட்டியிருக்கும். (ஸெல்லுலர் டிஸ்யு, Cellular tissue) எலும்போடு ஒட்டிக்கொண்டிருக்கிற மாமிசமுளைகள், வெளுத்து பலரூபங்களாயிருக்கும், சில நரம்புகளைப்போல் நீண்டும், சில அகலமாயும் இருக்கும். அதற்கு, மாமிஸதந்தி (உள்நாணி, தசைநார், வன்னசை) (டென்டன், Tendon) என்று பேர். அகலமாய் விரிந்திருக்கிற மாமிசதந்திக்கு, அப்பனியுரோஸிஸ் (Aponeurosis) என்று பேர். மாமிசத்தின் துவக்கத்துக்கு, ஆரம்பமுனை (ஆரிஜன் Origin) என்றும், இணைந்து போகிற முனை, (இன்ஸர்ஷன், Insertion) என்றுஞ் சொல்லப்படும். சதையின் மத்திய பாகத்துக்கு, உடல் என்று பேர்.

நமது ஸரீரத்தில் இரண்டுஜாதி சதைகளுண்டு; ஒரு ஜாதி மனதுக்கேற்றபடி அசையும்; அவைகளுக்கு, மனதுக்கயிக்கசதைகள் (வாலன்டெரி மஸில்ஸ், Voluntary muscles) என்று பேர்; மற்றொரு ஜாதி, தற்செயலாய் அசையும், மனதுக்கயிக்கமாட்டாது, அவைகளுக்கு மனதக்கயிக்கமில்லாத சதைகள் (இன்வாலென்டரி மஸில்ஸ், Involuntary muscles) என்று சொல்லப்படும். இரப்பை, குடல், இருதயம், ஆகிய இவைகளிலிருக்கிற சதைகளுக்கு, தற்செயலாய் நடக்கிற குணமுண்டு, மனதுக்கு வசப்படாது; நமது ஸ்வாதீனத்துக்கு உட்படாமலிருக்கிறபடியால், அவைகள், மனதுக்கயிக்கமில்லாத சதைகள்; மற்றவைகள், மனதுக்கயிக்கியப்பட்டவைகள் ஆம்.

மனித தேகத்தில் சுமார் 4126 சதைகள் உண்டு; அந்த நானூற்றிருபத்தாறுக்கும், இங்கிலீஷில் பேர்களுண்டு; அந்த பெயர்கள் இவ்விடத்தில் கூறினால் நூல் மிகவும் விரியுமாதலால் நீக்கப்பட்டன.

மாமிச சலனத்தால் தேகத்தினுடைய வியாபாரங்கள் நடக்கின்றன. கண்சிமிட்டுதல், நாக்கை நீட்டுதல், கைகால்களை அசைக்குதல், தம்புருமீட்டுதல், அபிநயம் செய்தல், சம்மட்டியடிக்குதல், இவை முதலிய சலனங்கள், மாமிசங்களால் உண்டாகின்றன.

மாமிசங்களுக்குறிய தொழிலை ஒருவாறுய்ச் சேர்த்துச்செய்த அட்டவணையை இதனடியில் காண்க.—

1. நெற்றிச்சதைச் சுருங்கினுல், புருவங்கள் மேலுக்குப்போகும்.
2. கண்குழிகளைச் சுற்றிக்கொண்டிருக்கிற சதைகள் சுறுங்கினுல், கண்கள் மூடிக்கொள்ளும்.
3. மூக்குக்கடியிலிருக்கிற சதைகள் சுருங்கினுல், மேலுதடு உயரும்
4. உதடுகளின் சதைகள் சுருங்கினுல், வாய மூடும்
5. முகவரையிலிருக்கிற சதைகள் சுருங்கினுல், கீழுதடு கீழுக்கிரங்கும்
5. கழுத்து முன்புறத்துச்சதைகள் சுருங்கினுல், தலை முன்னுக்கு வளையும்.
7. பிடரிச்சதைகள் சுருங்கினுல், தலையை நிமிரச்செயயும்
8. சரீர முன்புறத்துச் சதைகள் சுருங்கினுல், உடம்பு முன்னுக்கு வளைந்து, விலா எலும்புகள் கீழுக்கிறங்கும்
9. முதுகுச்சதைகள் சுருங்கினுல், முதுகு நிமிரும்
10. மார்புச்சதைகள் சுருங்கினுல், தோள்கள் மார்போடணையும்.
11. முதுகின் மேல்புறத்துச் சதைகள் சுருங்கினுல், தோள்கள் பின்னுக்கிடையும்.
12. புஜத்தின் முன்பக்கத்துச் சதைகள் சுருங்கினுல், முழங்கை முடங்கும்
13. புஜத்தின் பின்புறத்துச்சதைகள் சுருங்கினுல், முழங்கை நிமிரும்
14. முன்கையின் முன்புறத்துச் சதைகள் சுருங்கினுல், மணிக்கட்டும், விரல்களும்முடங்கும்.
15. முன்கையின் பின்புறத்துச் சதைகள் சுருங்கினுல், மணிக்கட்டு பின்னுக்கு வளையும், விரல்கள் நிமிரும்.
16. பிரட்டத்துச் சதைகள் சுருங்கினுல், தொடை வெளிப்புறம் புரண்டு பின்னுக்குப் போகும்.
17. தொடையின் முன்புறத்துச் சதைகள் சுருங்கினுல், முழங்கால் நிமிரும்.
18. தொடையின் பின்புறத்துச் சதைகள் சுருங்கினுல், முழங்கால் முடங்கும்.
19. முழங்காலுக்குக்கீழ், காலின் முன்புறத்துச் சதைகள் சுருங்கினுல், புறங்கால் முன்னுக்கு வளைந்து, விரல்கள் நிமிரும்.
20. கெண்டைச் சதைகள் சுருங்கினுல், பாதம் பின்னுக்கு வளைந்து, விரல்கள் வளையும்.

முன்கையைப் பற்றிப்பிடித்து, விரல்களை அசைத்துப்பார்த்தால், மாமிச சலனத்தைக் கண்டுகொள்ளவும்.

---

4. அத்தியாயம்

நாடிகள்

(ஆர்ட்ரீஸ், ARTERIES).

இருதயத்திலிருந்து, ரத்தத்தைச் சரீரமுழுதும் கொண்டுபோகிற உருண்ட குழல்களுக்கு, நாடிகள் என்று பேர். பிரேதங்களை அறுத்

துச் சோதித்தால், நாடிகளில், இரத்தமிராது, வெறுங்குழல்களாயிருக்கும் அந்தக்குழல்களில், பிராணவாயு (வைடல் ஸ்பிரிட்ஸ், Vital spirits) இருக்கிறதென்றும், அது போய்விடுவதே, பிராணன் போகிறதற்குக் காரணமென்றும், முன்னோர் எண்ணியிருந்தார்கள்; கேலன் (Galen) என்பவர், இவைகளில் இரத்தம் ஓடுகிறதென்று தெரிந்துகொண்டபிறகு, அந்தச்சந்தேகம் நிவிர்த்தியாயிற்று.

நாடியானது, இருதயத்தின் இடதுபக்கத்திலிருந்து, ஆரம்பிக்கின்றது. அதற்குப் பெருநாடி என்று பேர்; அந்தப் பெருநாடியிலிருந்து அநேக நாடிகள் கிளைத்து, தேகமெங்கும் வியாபித்திருக்கின்றன.

தமிழ் நூல்களில், நாடியானது தொப்புளில் இருந்து உற்பத்தியாகிறதென்றும், தேகத்தில் 72,000 நாடிகள் இருக்கிறதென்றும் கண்டிருக்கின்றது. கருப்பையிலிருக்கிற பிண்டத்தில் இரத்தம் தாயின் கருப்பையிலொட்டியிருக்கிற நஞ்சுக்கேறி, அதிலிருந்து நஞ்சுக்கொடி வழியாய நாபிக்கு வந்து, வயிற்றுக்குட்சென்று, இருதயத்துக்குப் போய, அதிலிருந்து சிசுவின் ஸரீரமெங்கும் வியாபித்துத் தேகத்தைப்போஷிக்கும்; அந்த இரத்தம் கெட்டுப்போனபிறகு, மறுபடியும் நாபிக்கொடியின் மார்க்கமாகவே நஞ்சுக்குச்சென்று, அதிலிருந்து கருப்பாஸயத்துக்கேறி, தாயின் கெட்ட இத்தத்தோடு கலந்துவிடும். சிசுவின் இரத்த ஓட்டம் இவ்விதமாய இருப்பதால், "நாபியிலுதித்த நாடி 72,000 எண்" என்று நமது சாஸ்திரிகள் முறையிடுகின்றன. அந்த எண்ணத்தை இப்போது நாம் நீக்கிவிடவேண்டியது.

நாடிகளுக்குள் ஓடுகிற இரத்தம், இந்திரகோபம்போல்சிவந்திருக்கும். நாடிகள் ஒன்றோடொன்று கூடுகிறதற்கு, எனஸ்டமோஸெஸ் (Anastomoses) என்று இங்கிலீஷில் சொல்லப்படும். நாடிகள் போகப்போக ஸன்னமாகி, நாளங்களில் முடியும். நாடிகளுக்கும், நாளங்களுக்கும், மத்தியில் ஓர்வித ஸன்னநரம்புகளிருக்கின்றன, அவைகளுக்கு தந்துகிகள் (காபில்லெரிஸ், Capillaries) என்று பேர்; அந்த தந்துகிகள், ஊசிமுனைப்புக இடமில்லாத, அவ்வளவு நெருக்கமாய், சரீரமெங்கும் வியாபித்திருக்கின்றன; அவைகளால், சகல தேகவியாபாரங்கள், உண்டாகின்றன. நாடிக்குழலில் மூன்று புரைகள் இருக்கின்றன.

பெருநாடி. பிரஹன்நாடி, கண்டரை, சுழிமுனை, காந்தாரி, ரத்த மூலாதாரநரம்பு (ஏயார்டா, Aorta).—பெருநாடியானது, இருதயத்தின் இடதுபக்கத்திலிருந்து உற்பத்தியாகி, மேலுக்கேறி, பிறகு இடதுபக்கம் வளைந்து, முள்ளந்தண்டு ஓரமாய் இறங்கி, 4-வது இடுப்பு முள்ளெலும்பு ஸ்தானத்தில், இரண்டாய்ப் பிரிந்து, இரண்டு கால்களுக்கும் போகின்றன. பெருநாடி ஆரம்பத்தில், 3-கபாடங்களுண்டு, அவைகளுக்குப் பிறைச்சுபாடங்கள் (ஸெமிலூனர் வால்ஸ், Semilunar valves) என்று பெயர். அவைகள், பெருநாடியிலோடுகிற இரத்தத்தைப்பின்னிட்டு வரவொட்டாமல் தடுக்கும். இரத்தம் பின்னிடுகிறகாலங்களில், அந்தக் கபாடங்கள், விரிந்து, துவாரத்தைஅடைத்துக்கொள்ளும்.

பெருநாடிவளைவில், 3-கிளைகளுண்டு. முதல் கிளைக்கு நாமஸூன்னிய நாடி (ஆர்டீரிய இந்நாமிநேட, Arteria innominata) என்று பேர். அது 1½-அங்குலம் நீளமுள்ளது. நாமஸூன்னிய நாடியானது, இரண்டாகப் பிரியும்; அதில் ஒரு கிளை, கழுத்து வலதுபக்கமாக மேலுக்கேறும்; மற்றொன்று, வலதுதோள்மார்க்கமாய் வந்து, வலதுகைக்கு இறங்கிவிடும்.

வலதுகண்டநாடி. கழுத்து வலதுபக்கத்திலிருக்கிற நாடிக்கு, வலது கண்டநாடி (ரயிட் காமன் கெரோடிட், Right common Carotid) என்று பேர். அது ஸுவாஸக்குழல் ஒருமாக மேலுக்குச் சென்று, குரல்வளையின் மேல்புறம் சமானமாய்ப் போகும்போது இரண்டு கிளைகளாகப் பிரியும்; புறமாக இருக்கிற கிளைக்கு, பஹிர்க்கதகண்டநாடி (எகிஸ்டர்னல் கெரோடிட், External Carotid) என்றுபேர். அதிலிருந்து ஜனிக்கிற கிளைகள் வலதுபக்கத்துக் கழுத்து, பிடரி, முகம், நாக்கு, காது, கன்னம், சிரசு, ஆகிய இவைகளுக்குப்போய் வியாபிக்கின்றன. அகத்திலிருக்கிற கிளைக்கு, அந்தர்க்கதகண்ட நாடி (இன்டர்னல் கெரோடிட், Internal Carotid) என்று பேர். அது தொண்டையோடு சம்பந்தமாகச் சென்று, காதெலும்பில் பீட்ரஸ் போர்டின் என்னும் பிரிவிலிருக்கிற துவாரத்திற்குட் பிரவேசித்து சிரசுக்குட் சென்று, அநேக கிளைகளாகப் பிரிந்துவிடும், அந்தக்கிளைகள் மூளையைப் போஷிக்கின்றன.

இடது கண்டநாடி. (லெப்ட் காமன் கெரோடிட், Left common Carotid).—பெருநாடி வளைவிலிருக்கிற இரண்டாவது கிளைக்கு, இடது கண்டநாடி என்று பேர். அது மேல்விவரித்தப்பிரகாரம் அநேக கிளைகளாகப் பிரிந்து, இடது பக்கமிருக்கிற ஸ்தானங்களுக்குப் போய் வியாபிக்கின்றன. கண்டநாடிக் கிளைகளின் அந்தியங்கள் ஒன்றோடொன்று கூடியிருக்கும்.

இடதுதோள்நாடி. (லெப்ட் ஸப்கிளேவியன், Left Subclavian).—பெருநாடி வளைவிலிருக்கிற மூன்றாவது கிளைக்கு, இடது தோள்நாடி என்று பேர் இது இடதுகைக்கிறங்கி பரவிவிடுகின்றது.

மேற்சொல்லிய மூன்று நாடிகளிலிருந்து, கிளைக்கிறகிளைகள், எந்தெந்த ஸ்தானங்களில் ஓடுகின்றதோ அந்தந்த ஸ்தானத்தின், பெயரே, அவைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

கன்னப்பொறிநாடி. (டெம்பொரல் ஆர்ட்ரி, Temporal artery).—இது பஹிர்க்கதகண்டநாடியின் ஓர் கிளை. கன்னப்பொறி மார்க்கமாய் மேலுகோடி, நெற்றி, உச்சந்தலை, இவைகளுக்கும் போய் பரவுகின்றது.

முகத்துநாடி. (பேஷியல் ஆர்ட்ரி, Facial artery).—இது பஹிர்க்கதகண்டநாடியின் ஓர் கிளை, அது, கீழ்த்தாடை எலும்பின் மேல் ஓடி, கன்னத்தில் பரவுகின்றது.

தோள்நாடி. (ஸப்கிளேவியன் ஆர்ட்ரி, Subclavian artery).—வலதுபக்கமிருப்பது, நாமஸஹன்னிய நாடியிலிருந்தும், இடது பக்கம் இருப்பது, பெருநாடிவளைவிலிருந்தும் கிளைக்கின்றன. இது தோள்மார்க்கமாய்ச் சென்று, அக்குளுக்குப் போகின்றது

அக்குள்நாடி கைம்மூலநாடி. (அக்ஜிலெரி ஆர்ட்ரி, Axillary artery).—இது தோள்நாடியின் தொடர்ச்சி; அக்குளிலிருக்கின்றது.

புஜநாடி. (பிரேகியல் ஆர்ட்ரி, Brachial artery).— இது புஜத்தில் உட்பக்கமாய் ஒடி, முழங்கைக்கிரங்கி, அவ்விடத்தில் இரண்டாகப் பிரியும் ஒரு கிளைக்குப் பெருவிரல் நாடி என்றும், மற்றொரு கிளைக்கு, சுண்டுவிரல் நாடி என்றும் பேர்.

பெருவிரல்நாடி. அங்குஷ்டநாடி. (ரேடியல் ஆர்டிரி, Radial artery).—அது முழங்கையிலிருந்து, ஆரை யெலும்புமேல், பெருவிரலில் பக்கமாயோடி, பெருவிரலைச்சுற்றிக்கொண்டு, உள்ளங்கைக்குப்போய், சுண்டுவிரலில் நாடியோடு,சம்பந்தப்பட்டுவிடும். நாம் கைப்பார்க்கிறநாடிஇதுதான்,

சுண்டுவிரல் நாடி. (அல்னர் ஆர்ட்ரி, Ulnar artery.—இது முழங்கையிலிருந்து, இரத்தினிஎலும்புமேல்,சுண்டுவிரல் பக்கமாயோடி,உள்ளுக்கு வளைந்து உள்ளங்கையில். பெருவிரல்நாடியோடுசம்பந்தப்பட்டுவிடுகின்றது.

மார்புபெருநாடி. தொராஸிக் எயார்ட, Thoracic aorta)—மார்புக்குள்ளிருக்கிற பெருநாடியின் கிளைகள், இருதயகவசம் (பெரிகார்டியல், Pericardiac) சுவாஸக்குழலின் கிளைகள் (பிராங்கியல், Bronchial) இதரக்குழல் (இஸாபேஜியல், Œsophageal), விலா எலும்புகள் (இன்டர்காஸ்டல், Intercostal) இவைகளுக்குப் போய் வியாபிக்கின்றன

வயிற்றுப்பெருநாடி. (அப்டாமினல் எயார்ட, Abdominal aorta.—வயிற்றுக்குள்ளிருக்கிற பெருநாடியிலிருந்து கிளைக்கிற கிளைகள்.—ஈரல்தாங்கி (பிரீனிக் Phrenic), இரைப்பை (காஸ்ட்ரிக் Gastric) யகிர்த்கண்டம் ஹிபாடிக் Hepatic), பிளீகம் (ஸ்பிளீனிக் Splenic), குடல்கள் (ஸுபீரியர் அன்ட் இன்பீரியர் மிஸென்ட்ரிக் Superior and Inferior Mesenteric), பீஜம் ஸ்பெர்மாடிக் Spermatic), கிட்னி (ரீனல் Renal) இடுப்பு (லம்பார் Lumbar) ஆகிய இவ்வுறுப்புகளுக்குப் போய் போஷிக்கின்றன.

வயிற்றுப் பெருநாடியானது, இரண்டாகப் பிரிந்து இரண்டு கால்களுக்குப் போய்ப் பரவுகின்றன. தொடையில் இறங்கிப் போகிறபோது தொடைநாடி (பிமோரல் ஆர்ட்ரி, Femoral artery) என்றும், முழங்காலில் ஓடுகிற பாகத்துக்கு, முழங்கால் மடிப்பு நாடி (பாப்லிடியல் ஆர்ட்ரி, Popliteal artery) என்றும் முன்னங்காலில் ஓடுகிற பாகத்துக்கு, முன்னங்கால் நாடி (அன்டீரியர் டிபியல், Anterior Tibial) என்றும் கெண்டைச்சதைக்குள், ஓடுகிறபாகத்துக்கு, பின்னங்கால்நாடி (போஸ்டீரியல் டிபியல் Posterior Tibia) என்றும் பெயர் பெறும்.

புப்புஸநாடி. (பல்மொனேரி ஆர்ட்ரி; Pulmonary artery.—இருதயத்தின் வலது பக்கத்திலிருந்து, உற்பத்தியாகி நுரையீரலுக்குப் போகிற குழலுக்கு, புப்புஸநாடி என்று சொல்லப்படும். அதில் கெட்டரத்தம் ஓடினபோதிலும், நாடி என்றே சொல்லப்படுகின்றது. அந்த நாடியானது இரண்டாகப்பிரிந்து, ஒன்று வலது, ஒன்று இடது புப்ஸத்துக்கும் போய்ப் பரவுகின்றது.

5. அத்தியாயம்

நாளங்கள்

(வெயின்ஸ், VEINS).

சிவந்தரத்தம், தேகமெங்கும் போய்ப் பரவிக் கறுத்துக் கெட்டுப் போனபிறகு, அதை மறுபடியும், இருதயத்தின் வலது பக்கத்துக்குக் கொண்டுபொகிற குழல்களுக்கு, நாளங்கள் என்று பேர். நாடிகளைப் பார்க்கிலும், நாளங்களின் புரைகள், மெத்தச் சன்னமாயும், பிகுவில்லாமலுமிருக்கும்; ஆதலால், துண்டித்த மூனைகன் குவிந்து விடும். நாளங்கள், தந்துகிகளிலிருந்து ஆரம்பித்து, ஒன்றோடொன்று சேர்ந்து பெருத்து, முடிவில் இரண்டு பெரிய நாளங்களாகி, ஒன்று மேலாகவும், மற்றொன்று, கீழாகவும், இருதயத்தின் வலது சிரவத்தில் முடிகின்றன.

பரதான நாளங்களிருக்கிற இடங்களும், அவைகளின் பேர்களும் இதன் அடியில் கூறப்படும்.

நெற்றிநாளம். (பேஷியல் வெயின், Eacial vein) —நெற்றிய மத்தியத்தில், இரண்டு நாளங்களிருக்கும்; அவைகள் கீழுக்கிறங்கி, அந்தர்க்கத கண்ட நாளங்களுடன் சேர்ந்துவிடுகின்றன.

சிரோநாளங்கள். (ஸைநஸெஸ், Sinuses).—சிரசுக்குள்ளிருக்கிற டியுராமேடர் என்னும் சவ்வானது பிரிந்து, ஏற்படுகிற குழல்களுக்கு, சிரோநாளங்கள் என்று சொல்லப்படும். அவைகளின் மார்க்கமாய், மூளையிலிருக்கிற கெட்டரத்தம், அந்தர்க்கதகண்டநாளங்களுக்குப் போகும்.

பஹிர்க்கதகண்டநாளங்கள். (எக்ஸடர்னல் ஜுகுலர் வெயின்ஸ், Externel Jugular veins).—இவைகள் கழுத்தில் மூலைவாட்டமாய், மேலிலிருந்து கீழுக்கிறங்கி, தோள்நாளங்களோடு கலந்துவிடுகின்றன.

அக்கிரபாககண்டநாளம். (அன்டீரியர் ஜுகுலர் வெயின், Anterior Jugular vein).—இது கழுத்து மத்தியத்தில் கீழுக்கிறங்கும்.

அந்தர்க்கதகண்டநாளங்கள். (இன்டர்னல் ஜுகுலர் வெயின்ஸ், Internal Jugular veins).—இவைகள் வலது, இடதுபக்கங்களிலிருக்கி, கண்டநாடிகளோடு தொடர்ந்து, கீழுக்கிறங்கி, தோள்நாளங்களோடுசேர்ந்து ஒரே நாளமாகும், அதற்கு நாமஸுன்னியநாளம் (வீனு இன்னமினேடா, Vena Innominata) என்று பேர். வலது இடது பக்கத்து, நாமஸுன்னியநாளங்கள் இரண்டும் சேர்ந்து, ஒரே நாளமாகும்; அதற்கு ஊர்த்தபிரஹன்நாளம் (சுபீரியர் வீனகேவ, Superior Vena Cava) என்று பேர்.

அந்தர்க்கதபுஜநாளம். (பெஜிலிக் வெயின், Basilic vein).—இது, புஜத்தில் உட்பக்கமாய் மேலுக்கேறி, கைம்மூல நாளமாகின்றது.

பஹிர்க்கதபுஜநாளம். (கிபாலிக் வெயின், Cephalic vein).— இது புஜத்தில் வெளிப்புறமாய் மேலுக்குச் சென்று, கைம்மூலநாளத்துடன் கலந்து விழுகின்றது.

கைம்மத்தியநாளம். (மீடியன் வெயின், Median vein).—இது உள்ளங்கையிலிருக்கிற இரத்தத்தைச்சேர்த்துக்கொண்டு, மணிக்கட்டு ஸ்தானத்தில் ஆரம்பித்து, முன்னங்கையில் மத்தியமாய் மேலுக்கேறி, முழங்கை ஸ்தானத்தில், இரண்டாகப் பிரியும்; அவைகளில் ஒரு கிளை, பஹிர்க்கதபுஜநாளத்துடனும், மற்றொரு கிளை, அந்தர்க்கதபுஜநாளத்துடனும், கலந்துவிடுகின்றன. வெளிப்புறத்து புஜநாளத்துடன் போய்ச் சந்திக்கிற கிளைக்கு, கைம்மத்திய நாளத்தின் வெளிக்கிளை (மீடியன் கிபாலிக், MedianCephalic) என்றும், உடபக்கத்து புஜாநாளத்துடன்போய்ச் சந்திக்கிற கிளைக்கு, கைம்மத்தியநாள உட்கிளை (மீடியன் பெஸிலிக், Median Basilic) என்றும் சொல்லப்படும். கைம்மத்தியநாளத்தின் வெளிக்கிளைக்கு அடியில், ஒரு நரம்பு (எக்ஸ்டர்னல் கியுடேனியஸ் நர்வ், Externol cutaneous nerve) ஓடுகின்றது. உட்கிளைக்குமேலே ஒரு நரம்பும் (இன்டர்னல் கியுடேனியஸ் நர்வ், Internal cutaneous nerve), அடியில புஜநாடியும் (பிரேகியல் ஆர்ட்ரி Brachial artery) ஓடுகின்றன. ஆகையால், நாளத்தைச் சேதித்து இரத்தம் வாங்கும்போது, அபாயமில்லாமல் வெளிக்கிளையைக் குத்தி வாங்கலாம்.

அக்குள்நாளம். (அக்ஸிலெரி வெயின், Axillary vein).— இது அக்குள்நாடிக்கு உட்புறமாய் ஓடுகின்றது.

தோள்நாளம். (ஸப்கிளேவியன் வெயின், Subclavian vein).— இது தோளில், முதல் பழுவெலும்புமேல் படிந்திருக்கும்.

முழங்கால்மடிப்புநாளம். (பாப்ளிடியல் வெயின், Popliteil vein), இது, முழங்கால்மடிப்பு ஸ்தானத்தில் ஓடுகின்றது.

தொடைநாளம். (பிமரல் வெயின், Femoral vein).—இது தொடைக்கு அகத்திலிருக்கும்; தொடையிலிருந்து, மேலுக்கு ஓடி, வயிற்றுக்குட் சென்றுவிடும்.

பின்னங்கால்நாளம். (எக்ஸ்டர்னல் ஸெபீனஸ் வெயின், External Saphenous vein).—இது பாதத்தின் வெளிப்புறமாயிருக்கிற ஓரத்திலிருந்து கணுக்கால் வெளிமுழிக்குப் பின்னாகசசென்று, பின்னங்கால் மத்தியமார்க்கமாய் மேலுக்கேறி, முழங்கால் மடிப்புநாளத்துடன் கலந்துவிடுகின்றது.

கால்உள்நாளம்.—(இன்டர்னல் ஸெபீனஸ் வெயின், Internal Sephenous vein).—இது கால், பெருவிரல், ஆரம்பித்து, கணுக்கால் உள்முழி மார்க்கமாய் மேலுக்கேறி, தொடைநாளத்துடன் கலந்துவிடுகின்றது.

ஊர்த்தபிரஹன்நாளம். ஸ்பீரியர் வீன கேவ, Superior Vena Cava).— இது சுமார் 3-அக்குல நீளமிருக்கும். நாமஸன்னிய நாளங்கள் இரண்டுஞ்சேர்ந்து, உண்டாகி, இருதயத்தின் வலது சிரவத்தில் மேல்பக்கமாய், முடிகின்றது. இருதயத்துக்கு, ஊர்த்தமுகமாயிருக்கிற ஸ்தானங்க

ளாகிய, தலை, கழுத்து, கை முதலியவைகளிருக்கிற கெட்ட ரத்தத்தை, இது இருதயத்துக்குக் கொண்டு போகின்றது.

அதோபிராஹன்நாளம். (இன்பீரியர் வீனகேவ, Inferior Venacava) இருதயத்துக்குக் கீழ்ஸ்தானங்களாகிய, கால், குடல், ஜீரண உறுப்புகள், மூத்திரக்குண்டிக்காய், பீஜம், யகிர்திகண்டம், முதலியவைகளிருக்கிற கெட்டரத்தத்தை, இது, இருதயத்தின் வலது சிரவத்துக்குக் கொண்டுபோகின்றது.

புப்புஸநாளங்கள். (பல்மொனெரி வெயின்ஸ், Pulmonary veins). 4-புப்புஸநாளங்களுண்டு ; 2-வலதுபுப்புஸத்திலிருந்தும், 2-இடதுபுப்புஸத்திலிருந்தும் போய், இடது சிரவத்தில் மூடிகின்றன. இவைகள் ஸுவாஸப்பையிலிருக்கிற பரிசுத்தரத்தத்தை இருதயத்துக்குக் கொண்டுபோகும்.

---

6. அத்தியாயம்

நிணநரம்புகள்.

(லிம்பாடிக் வெஸல்ஸ், LYMPHATIC VESSELS. அப்ஸார்பென்ட்ஸ், ABSORBENTS).

பிரதிபதங்கள்—மேதோவாகினிகள், மஜ்ஜவாகினிகள், ஸோஷணக்குழல்கள்.

தேகத்திலிருக்கிற கெட்ட நீரைக்கிரகித்து, நாளங்களுக்குக் கொண்டுபோகிற குழல்களுக்கு, நிணநரம்புகள் என்று சொல்லப்படும். சிறுகுடலிலிருக்கிற அன்னரசத்தைக் கிரகித்து, இரத்தத்துக்குக் கொண்டுபோகிற நரம்புகளுக்கு ரஸாயனிகள் (லாக்டியல்ஸ், Lacteals) என்று பேர். அவைகள் கண்களுக்குத்தெரியாத அவ்வளவு சன்னக்குழல்களாகி, போகப்போக ஒன்றோடொன்று சேர்ந்து பெருத்து, முடிவில் ஒரே குழலாகிவிடுகின்றது. மூளை தவிர மற்ற இடங்களெல்லாம் நிணநரம்புகள் வியாபித்திருக்கும். நிணநரம்புகளில் கபாடங்களுண்டு; ஆகையால் அந்நரம்புகள் முடிகளிட்டதுபோல் காணப்படும். நிணநரம்புகளுடன் சம்பந்தித்திருக்கிற கட்டிகளுக்கு, ஸோஷணக்கிரந்திகள் (மாமிஸக்கிரந்திகள்) (லிம்பாடிக் கிளாண்ட்ஸ், Lymphatic glands) என்று பேர். அவைகள் கழுத்துப்பக்கத்திலும் அக்குளிலும், கவுட்டியிலும், மணிக்குடலிலும் அதிகமாய்க் காணப்படும். தேகம் இளைத்தபோது, இந்தக்கிரந்திகள், கட்டிகள் போலகப்படும்; வீங்கி வேதனைகொண்டால், நெறிகட்டிற்றென்று சொல்வது வழக்கம். தேகபோஷணைக்குவேண்டிய அன்னரஸம், குறையும்போது, இந்நரம்புகள் கொழுப்பைக் கிரகித்து, சரீரபோஷணைக்குக் கொண்டுபோகும், கொழுப்பு குறையும்போது, தேகம் இளைக்கும். அதிசீதளப்பிரதேசங்களில் மழைக்காலத்தில் மிருகங்கள் தீனிக்காக வெளியில் வந்து சஞ்சரிக்கக்கூடாமையாய் இருக்கும்போது, கொழுப்பே தேகத்தைப் போஷிக்கின்றது. தே

கத்தின்மேல் தடவுகிற பதார்த்தங்களை உள்ளுக்குக் கொண்டுபோகிறதும் இந்த நரம்புகள்தான். அபினியை மேலுக்குத் தடவினால், நித்திரை வரும்; நேர்வாளத்தைத் தொப்புளில் பூசினால், பேதியாகும்; வைசூரியின் பாலைக் குத்திவைத்தால், அது ரத்தத்துக்கேறி, முத்துக ளெழும்பும்.

ரஸதாரை. (தொராஸிக் டக்ட், Thoracic duct).—சிறு குடல்களிலிருக்கிற ரஸவாஹினிகள், ஒன்றோடொன்று சேர்ந்து, முடிவில் ஒரே குழலாகும். அதற்கு ரஸதாரை என்று பேர். அந்தத் தாரையானது, முள்ளந்தண்டு மத்தியமாய் மேலுக்கேறி, இடதுதோள் நாளத்துடன் சேர்ந்துவிடுகின்றது. அன்னரஸமானது, ரஸதாரை வழியாகத்தான் சென்று ரத்தத்தில் கலந்துவிடும்.

---

7. அத்தியாயம்

நரம்புமண்டலம்

(நர்வஸ் ஸிஸ்டம், NERVOUS SYSTEM).

மூளை, மூளையின் கொடி, அவைகளின் நரம்புகள், ஒற்றுணர்வுள்ள நரம்புகள், ஆகிய இவைகளைச் சேர்க்கையாய், நரம்புமண்டலம் என்று சொல்லப்படும். சிரசுக்குள் நிறைந்திருக்கிற மூளையின் நிறம், புறத்தில் ஊதாவாயும், அகத்தில் வெள்ளையாயும் இருக்கும். மூளையில் 3-பிரிவுகளுண்டு; பெரியமூளை, சின்னமூளை, முள்ளந்தண்டுக்கொடியின் சிகரம், ஆகியஇவைகளாம். மூளை 3-சவ்வுகளால் மூடப்பட்டிருக்கும். புருஷர்களுக்கு மூளை, சுமார்3-பவுன் இருக்கும்; ஸ்திரீகளுக்கு, 4-5-அவுன்ஸ் குறைந்திருக்கும். வித்வான்களின் மூளை பளுவில் அதிகரித்திருக்கும்.

டியுரா மெடர், (Dura mater). தலையோட்டை அறுத்து நீக்கிப்பார்த்தால், மூளைமேல் சவ்வுகாணப்படும், அதற்கு டியுர மெடர் என்று பேர். அது பைப்ரஸ் மெம்பிரேன் என்னும் இனத்தைச் சேர்ந்தது. இந்த சவ்வு முள்ளந்தண்டுக்குழலின் துவாரத்திலிறங்கி, கொடியையும் சுற்றிக்கொண்டிருக்கும். (தீக வர்டிப்ரெலிஸ், Theca Vertebralis). டியுர மெடர் என்னும் சவ்விலிருந்து உட்புறமாய்ச் சவ்வுகள் கிளைத்திருக்கும். அவைகளில் ஒன்று அரிவாளைப்போல் வளைந்து மூளையின் பிளப்பில் அமைந்திருக்கும், அதற்கு பால்கஸ்ஸிரிபிரை (Falx cerebri)என்று பேர். நெற்றியெலும்போடு ஒட்டிக்கொண்டிருப்பது, சிறுத்தும், பிடரியெலும்போடு ஒட்டிக்கொண்டிருப்பது அகன்றும் இருக்கும். மற்றொன்று சின்னமூளையை மூடிக்கொண்டு, பெரிய மூளையின்பளுவுஅதில் தாங்காமலிருக்கச் செய்யும்,அதற்கு டென்டோரியம் ஸிரிபெல்லை (Tentorium Cerebelli) என்று பேர். குதித்தோடுகிற சிலசெந்துக்களில்இந்தச்சவ்வு எலும்பாயிருக்கும். பிடரியெலும்பில் ஒட்டிக்கொண்டு, சின்னமூளைப்பிளப்பில்,மற்றொரு சவ்வுக்கிளை அமைந்திருக்கும்,அதற்கு பால்

க்ஸ் ஸிரிபெல்லே என்று பேர். ஹை. டியுர மெடர் சவ்வின் புரைகள் பிரிந்து, சில குழல்களாய் ஏற்படுகின்றன ; அவைகளுக்கு ஸைனஸெஸ் (Sinuses) என்று பேர்; அவைகளில் கெட்ட ரத்தம் ஓடும்; குழந்தை உச்சந்தலையில்அடித்துக்கொள்ளுகிறது இவைகளில் ஒன்று; அது நாஸிகாபீடத்திலிருந்து ஆரம்பித்து, உச்சிமார்க்கமாய் ஓடி, பிடரி எலும்பு மத்தியத்துக்கு வந்து, இரண்டாகப் பிரிந்து, அவ்விரண்டும் பக்கந்துக்கொன்றாய் வளைந்து கீழுக்கிறங்கி, வெளிக்குவந்து, அந்தர்க்கதகண்டநாளங்க ளாகிவிடுகின்றன. இந்தக் குழலுக்கு ஸிரோமத்தியதீர்க்கநாளாம் (ஸுபீரியர் லாஞ்சிடியுடினல் ஸைனல், Superior longitudinal sinus) என்றபேர்.

அரக்னுயிட் மெம்பிரேன். Arachnoid membrane).—இது மேற்சொன்ன ஜவ்வுக்கடியிலும், மூளை ஜவ்வுகள் மூன்றுக்கும் மத்தியமாயுமிருக்கும். சிலந்திக்கூடுபோல் வளையாயகப்படும் ; மூளையைச் சுற்றிக்கொண்டு, பிறகு கொடிக்கிறங்கியிருக்கும். இது ஸீரஸ் ஜவ்வினத்தில் சேர்ந்தது.

பையமேடர் (Pia mater).—இது மூளையை அடுத்திருக்கும் ; ரத்த நரம்புகளால் ஏற்பட்டு, மூளையைச் சுற்றிக்கொண்டு, உள்ளுக்கும் பிரவேசித்து, அதைப் பேஷிக்கின்றது.

பெரியமூளை

(ஸிரிபிரம், CEREBRUM)

மேற்புறமாய் இருக்கிறபெரிய மூளையைப் பார்வையிட்டால், அதன்மேல் சுருண்டிருக்கும், அவைகளுக்குச் சுருள்கள் (கான்வொலூஷன்ஸ் Convolutions) என்று பேர். மத்தியில் ஓர் பிளப்பினுல் இரண்டாகப் பிளந்திருக்கும், அந்த பிளவுகளுக்கு அர்த்தகோளங்கள் (ஹெமிஸ்பியர்ஸ், Hemispheres) என்று பேர். ஒவ்வொரு அர்த்தகோளத்துக்கடியில், மூன்று மேடுகளுண்டு (லோபஸ், Lobes). அர்த்த கோளங்கள் இரண்டையும், நீக்கிப் பார்வையிட்டால் மத்தியில் வெள்ளையாய் அகப்படும், அதற்கு கார்ப்பஸ் கல்லோஸம் (Corpus callosum) என்று பேர். அதன்மேல் நடுவில் கெடிய கீற்றென்று காணப்படும், அதற்கு ரேகை (ராபி, Raphe) என்று பேர். அந்த ரேகைக்கு இரண்டு பக்கமாய்க் கீறிப் பார்வையிட்டால் பள்ளங்கள் அகப்படும்; அவைகளுக்குப் பக்கப்பள்ளங்கள் (லாட்ரல் வென்ட்ரிகில்ஸ், Lateral Ventricles) என்று பேர்.

சின்னமூளை. துணைமூளை. (ஸிரிபெல்லம், Cerebellum).—பெரிய மூளைக்கு இது 7-பங்கு சிறிது, பின்னுக அதற்கடியிலிருக்கும்; இதுவும் இரண்டாகப் பிளந்திருக்கும், நெடுக அறுத்துப் பார்வையிட்டால், கிளைகளுடைய செடியைப்போல் அகப்படும்; அதற்கு பிராணவிருக்ஷம் (ஆர்பார்வைடி, Arbor vitæ cerebelli; tree of life of the brain) என்று பேர்.

முகுளம். முள்ளந்தண்டுக்கொடியின் சிகரம். (மெடெல்ல அப்லாங்கேட, Medulla oblongata).—முகுளமானது 1-அங்குலம் நீண்டு, மொக்குள்போ லிருக்கும், நீண்ட ரேகைகளும் மேலே அகப்படும். அது

பிடரியெலும்பிலிருக்கிற பாஜிலர் பிராஸெஸ் என்னும் பிதுக்கத்தின்மேல் படிந்திருக்கும்.

முள்ளந்தண்டுக்கொடி. மஜ்ஜதந்து. (ஸ்பைனல் கார்ட், Spinal cord).—இது மூளையிலிருந்து ஆரம்பித்து, கபாலமூலத்துவாரத்தின் வழியாக வெளிப்பட்டு, முள்ளந்தட்டுக்குழலில் அமைந்திருக்கும். இது வெள்ளையாய், 18-அங்குலநீளமாய், கைவிரல் பருமனாய் இருக்கும். மூளையின் 3-சவ்வுகளும், இதைச் சுற்றிக்கொண்டிருக்கும். இந்தக்கொடியின்மேல் முன்னும் பின்னும் நீண்ட ரேகையொன்று (பிஷ்ஷர், Fissure) காணப்படும். முள்ளந்தண்டுக்கொடியின் முனையானது, சல்லிவேர்களைப்போல் சிலும்பலாய், அநேக நரம்புகளாய்ப் பிரிந்திருக்கும், அதற்குக் குதிரைவால் (காடா இக்குவைன, Cauda eqina) என்று உபமானப் பேர்.

சிரசு நரம்புகள்

(கிரேனியல் நர்வ்ஸ், CRANIAL NERVES).

ஸரீரத்தில் மூன்றுஜாதி நரம்புகளுண்டு 1-வது. இந்திரியநரம்புகள் (நர்வஸ் ஆவ் ஸ்பெஷியல் ஸென்ஸ், Nerves of Special sense.—அவைகள் மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய பஞ்சேந்திரியங்களுக்குப் போய், ஸ்பரிஸ, ரூப, ரஸ, கந்த, சப்தமாகிய ஐம்புலன்களைத் தெரிவிக்கின்றன. 2-வது. சலனநரம்புகள் (நர்வ்ஸ் ஆவ் மோஷன், Nerves of motion).—அவைகள் சதைகளை, மனதுக்கேற்றபடி ஆட்டுவிக்கும். 3-வது. ஒற்றுணர்வுள்ள நரம்புகள் (ஸிம்பெதெடிக் நர்வ்ஸ், Sympathetic nerves) அவைகள் உறுப்புகளை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்தி வைக்கும்.

மூளையிலிருந்து 9-சதைநரம்புகள் ஜனிக்கின்றன. அவைகளை இதனடியில் கூறப்படும்.—

1-வது.—வாசனைநரம்பு ஆக்கிராணநரம்பு. நாஸிநரம்பு. (ஆல்பாக்டொரி நர்வ், Olfactory nerve).—இது மூளையிலிருந்து ஜனித்து, முன்னுக்கு நாஸிமேல் வந்து அநேக கிளைகளாய்ப் பிரியும். அக்கிளைகள், சல்லடைக்கண்களில் பிரவேசித்து, சளியூருஞ் சவ்வின்மேல் வியாபித்து விடும்.

2-வது.—பார்வைநரம்பு. நேத்திரநரம்பு. (ஆப்டிக் நர்வ், Optic nerve).—இது மூளையிலிருந்து ஜனித்து, முன்னுக்கு வந்து, வவ்வாலெலும்பின்மேல், வலது நரம்பு இடமாகவும், இடதுநரம்பு வலமாகவும், மாறி, நேத்திர நரம்புத்துவாரம் வழியாக நேத்திரக் குழிக்குட்சென்று, விழிக்குட் பிரவேசித்து, மலர்ந்துவிடும்; மலர்ந்த சவ்வுச்கு ரூப உற்பத்திச்சவ்வு (ரெடின, Retina) என்று பேர்.

3-வது.—மோடோரஸ் அகியுலோகம். Motores Oculorum.—இது மூளையிலிருந்து ஜனித்து, முன்னுக்கு வந்து, கண்குழிக்குட்பிரவேசித்து, கண்சதைகளில் பரவிவிடும்.

4-வது.—பெதிடிசை. (Pathetici)—இதுவும் ஷை நரம்பு போகிற வழியாகச் சென்று, கண்சதைகளில் பரவிவிடும்.

5-வது ட்ரைபேஷியல். (Trifacial)—இது சிரசு நரம்புகளுக்குள் பெரியது; மூன்று கிளைகளாகப் பிரிந்திருக்கும்.—

a. அப்தால்மிக். (Ophthalmic)—இது ஷை நரப்பிலிருந்து ஜனித்து முன்னுக்கு வந்து, கண்குழிக்குள் பிரவேசித்து, புருவத்தின் உள்முனை மார்க்கமாக நெற்றிக்கேறி பரவிவிடுகின்றது. இதன் கிளைகள், கண், மூக்கு, முகம், நெற்றி, கண்ணீர்க்கோளம் ஆகிய இவைகளுக்குப் போய, பரவும்.

b, ஸுபீரியர் மாக்ஜிலெரி. (Superior Maxillary).—இது ஷை நரம்பிலிருந்து ஜனித்து, கண்குழிக்கடியிலிருக்கும் நீண்டதுவாரம் வழியாய பிரவேசித்து முகத்துக்கு வந்து, மேல்வாயப்பற்கள், அண்ணம், கண்கீழ்ரெப்பை, கன்னம், மேலுதடு, ஆகிய இவைகளுக்குப் போய வியாபிக்கும்.

c. இன்பீரியர் மாக்ஜிலெரி. (Inferior Maxillary).—இது ஷை நரம்பிலிருந்து ஜனித்து, கிழ்வாயப்பற்கள், ஈறு, நாக்கு, காது, முகம், கீழுதடு, மெல்லுகிற சதைகள், ஆகிய இவைகளுக்குப்போய வியாபிக்கும். இக்கிளைகளில் பிரதானமானவைகள் இரண்டு.—(1) இன்பீரியர் டென்டல் (Inferior dental). இது கீழ்த்தாடையெலும்பின் அகத்திலிருக்கிற துவாரத்திற் பிரவேசித்து, உள்ளேவந்து முகரை சமீபத்திலிருக்கிற துவாரம் வழியாக வெளிப்பட்டுவிடும். அதன் கிளைகள் பற்களுக்கும், இறுகளுக்கும், போகின்றன. (2) கஸ்டெடெரி (Gustatory) இது நாக்கில் பரவிவிடும்.

6-வது. அப்டியுஸென்டஸ். (Abducentes).—இந்த நரம்பு கண் சதைகளுக்குப் போய்ப் பரவிவிடும்.

7-வது. இதில் இரண்டு பிரிவுகளுண்டு. (1) பேஷியல் (Facial. போர்ஷியோ டியுர, Portio dura).—இந்தப் பிரிவு காதின் உட்துவாரத்திற் சென்று, உள்ளே வந்து, ஸ்டைலோமாஸ்டாயிட் பொரெமன் (Stylo-mastoid foramen) என்னும் இரந்திரமார்க்கமாய் வெளிக்கு வந்து, முகத்துக்குப் போய்ப் பரவிவிடும். (2) கேழ்வி நரம்பு, சுரோத்திரநரம்பு. (ஆடிடெரி, Auditory. போர்ஷியோ மாலிஸ், Portio mollis). இது காதுக்குட் சென்று, அநேக இழைகளாய்ப் பிரிந்து, அவ்விடத்தில் அறைகளுக்குள்ளிருக்கிற நீரின்மேல், மிதந்துகொண்டிருக்கும்.

8-வது. இதில் மூன்று நரம்புகளுண்டு. (1) கிளாஸொ பெரிஞ்சியல், (Glosso pharyngeal) இது அந்தர்க்கதகண்டநாளம் வருகிற துவாரம் வழியாய், வெளிக்கு வந்து நாக்கு, தொண்டை இவைகளில் வியாபிக்கும். (2) பார்வேகம் (Parvagum. நியுமொகாஸ்ட்ரிக், Pneumogastric). இது ஷை துவாரமார்க்கமாகவே வெளிக்கு வநது கண்டநாடி, கண்டநாளம் இவைகளோடிணைந்து, நெஞ்சறைக்கிறங்கி, குரல்வளை, சுவாக்ஸக்குழல், புப்புஸம், தொண்டை, தீனிப்பை, இருதயம் ஆகிய இவைகளுக்குப் போய் வியாபிக்கும். (3) ஸ்பைனல் அக்ஸெஸ்ஸொரி (Spinal Accessory). இது பிடரிச்சதைகளிற் போய் வியாபிக்கும்.

9-வது. லிங்குவல். (Lingual. ஹைபொகிளாஸல், Hypoglossal) இது நாக்குச்சதைகள் யாவற்றிலும் போய் வியாபிக்கும்.

முள்ளந்தண்டுக்கொடியின் நரம்புகள்

(ஸ்பைனல் நர்வ்ஸ், SPINAL NERVES).

முள்ளந்தண்டுக்கொடியிலிருந்து ஜனிக்கிற நரம்புகள்-31. சதை ஒவ்வொன்றுக்கு, இரண்டுவேர்களுண்டு; அவைகளில் முன்புறமாக இருக்கிற வேருக்கு, சலனத்தைத் தருகிற குணமும், பின்வேறுக்கு, சிறிதாயிருந்த போதிலும் வேர்களிருக்கிற வித்தியாச பதார்த்தங்களைக் காணலாம். ஆகையால் சரீரமெங்கும் வியாபித்திருக்கிற நரம்புகளுக்கு ஸ்பரிசமும், சலனமும் கொடுக்கிற குணங்களுண்டு. பின்புறமாயிருக்கிற வேரின் ஆரம்பத்தில் ஒரு முடியுண்டு, அதற்கு காங்கிளிய (Ganglia) என்று பேர். மேற்கண்ட 31-சதை நரம்புகளை 5-பிரிவுகளாகப் பிரிந்திருக்கின்றன —

(1) கழுத்து நரம்புகள்	8-சதை.	ஸர்வைகல் நர்வ்ஸ்,	Cervical Nerves.
(2) முதுகு நரம்புகள்	12-சதை.	டார்ஸல் நர்வ்ஸ்,	Dorsal Nerves.
(3) இடுப்பு நரம்புகள்	5-சதை.	லம்பார் நரவ்ஸ்,	Lumbar Nerves.
(4) திரிகஸ்தான நரம்புகள்	5-சதை.	ஸேக்கிரல் நர்வ்ஸ்,	Sacral Nerves.
(5) காக்ஸிஜியல் நர்வு	1-சதை.		Coccygeal Nerve.

அக்குள்நரம்புக்கூட்டம். (பின்னல்) பிரேகியல், அல்லது அக்ஸிலெரி பிளெக்ஸஸ், Brachial, or Axillary plexus).—இந்தக் கூட்டம் அக்குளிலிருக்கும். இதிலிருந்து ஓர் பெரிய நரம்பு, புஜநாடியோடு தொடர்ந்து ஓடும்; அதற்கு மத்திய நரம்பு (மீடியன் நர்வ், Median nerve) என்று பேர். முழங்கையின் உள்முகுழியின்மேல் ஒரு சிறியநரம்பு ஓடும் (அல்நார் நர்வ். Ulnar nerve), அதன்மேல்அடிபட்டால், சிலுசிலுப்பு, சுண்டுவிரலுக்கோடும்.

முதுகுநரம்புகள். இந்த 12-சதைகளும், முதுகுச்சதைகளுக்கும், பழுவெலும்புச்சதைகளுக்கும், சருமத்துக்கும் போய் வியாபிக்கும்.

இடுப்புநரம்புகள். இந்த 5-சதைகளும், அடிவயிற்றுச் சதைகள் தோல், தொடை, பீஜகவஸம் ஆகிய இவைகளுக்குப் போய் வியாபிக்கும்.

திரிகஸ்தானநரம்புகள். இந்த 5-சதைகளும் பிரட்டம், மூத்திரப்பை, யோனி, ஆஸனம், ஆண்குறி, பீஜகவஸம், தொடை, முழங்கால், கெண்டைச்சதை, பாதம் ஆகிய இவைகளுக்குப் போய் வியாபிக்கும். இந்தக் கூட்டத்திலிருந்து ஒரு பெரியநரம்பு ஜனித்து, தொடையின் பின்புறமாக கீழ்க்கிறங்கும், அதற்கு கிரேட் இஸ்க்கியாடிக் நர்வ் (Great Ischiatic nerve) என்று பேர். நரம்புகளுக்குள் இது பெரிது. உட்காரும்போது, இதன் மேல் பளுவு சுமந்தால், காலில் திமிர் காணும்.

ஒற்றுணர்வுள்ள நரம்புகள். (ஸிம்பெதிடிக் நர்வ்ஸ், Sympathetic Nerves.—இவைகள் முள்ளந்தண்டில் இருபுறத்திலும், மணிக்கோவைபோல், சிரஸிலிருந்து ஆஸனம்வரையில், நீண்டு சரீரநரம்புகளோடு சம்பந்தித்திருக்கும். இவைகளுக்குப் பிரதான ஸ்தானம், இரைப்பைக்குப் பின்புறமாகையால்; வயிறுநிறைய போஜனம் செய்திருக்கும்போது, ஈரக்குழியிலடிபட்டால், அபாயம் நேரிடும்; அதனால் இறந்தபேருமுண்டு.

8. அத்தியாயம்

பஞ்சேந்திரியங்கள்

(ஆர்கன்ஸ் ஆவ் ஸென்ஸ், ORGANS OF SENSE).

பிரதிபதங்கள்:—ஞானேந்திரியங்கள், அறிவுக்கருவிகள், ஐம்பொறிகள்.

நாஸி மூக்கு. (நோஸ், The Nose).—இது பதார்த்தங்களுடைய வாசனையைத் தெரிந்துகொள்ளுகிற புலன். எலும்பு, முருந்து, சதை, சருமம் இவைகள் சேர்ந்து நாஸியையேற்படுத்துகின்றது. நாஸிக்குள் மத்தியமாயிருப்பதற்குத் தண்டு (கலம்ன, Columna) என்று பேர். இது நாஸியை இரண்டு துவாரங்களாகப் (நாஸ்ட்ரில்ஸ், Nostrils) பிரிக்கும். ஒவ்வொரு நாஸித்துவாரத்தில் 3-பள்ளங்களுண்டு; (மியேடஸ், Meatus). கீழ்ப் பள்ளத்தில், நாஸித்தாரை (நேஸல்டக்ட், Nasal duct) வந்து முடிந்திருக்கும். இந்தத் தாரையானது கண்ணுக்கும் சம்பந்தப்பட்டிருக்கும்; இதன் வழியாகக் கண்ணீர் நாஸிக்கிறங்கும். நாஸியில் சளியூருஞ்சவ்வு (பிடியுடெரி அல்லது ஷினடீரியின் மெம்பிரேன், Pituitary or Schneiderian membrane) ஒட்டிக்கொண்டிருக்கும்; அதின் மேல்பாகத்தில் வாசனை நரம்புகளின் இழைகள் வியாபித்திருக்கும். நாஸியில் ரோமங்களுண்டு. (வைபிரிஸ்ஸி, Vibrissæ).

கண்கள்

(ஐஸ், EYES).

பிரதிபதங்கள்,-நேத்திரங்கள், திருஷ்டிகள், நயனங்கள், விழிகள், விலோசனங்கள்.

கண்குழிக்குள்ளிருக்கிற உருண்ட உருப்புக்கு, விழி (ஐ பால், Eye ball) என்று பேர். விழியைச் சதைகளும், கொழுப்பும், நரம்புகளும், ரத்த நரம்புகளும் சூழ்ந்துகொண்டிருக்கும். விழியைப் பற்றிக்கொண்டு 6-சதைகளுண்டு, அவைகள் தேவையானபடி விழியை அசையச்செய்யும். மூன்று புரைகளால் விழி யேற்பட்டிருக்கின்றது. வெள்ளைச்சவ்வு, கோராயிட் கோட், ரெடின ஆகிய இவைகளாம்.

வெள்ளைச்சவ்வு வெள்விழி. (ஸ்கிலிராடிக் கோட், Sclerotic coat)—இது வெள்ளையாய், உறுதியாய், விழியகத்திலிருக்கும். இது (பைப்ரஸ் மெம்பிரேன், Fibrous membrane) என்னும் இனத்தைச் சேர்ந்த ஜவ்வு.

கோராயிட்கோட். (Choroid coat).—இது விழியின் மத்தியபுரை ரத்த நரம்புகளா லேற்பட்டு, கருத்திருக்கும். பின்னுகக் கறுத்த பசை ஒட்டிக்கொண்டிருக்கும் (பிக்மென்டம் நைகிரம், Pigmentum nigrum), கண்ணுக்குள் பிரவேசிக்கிற அதிக கிரணங்களை அது கிரகித்துக்கொள்ளும், இல்லாவிட்டால், பார்வை சிதரிப்போகும். வெள்ளை குஷ்டரோகிகளுக்கு அது வெளுத்திருப்பதால், அவர்கள் வெளிச்சத்தைச் செவ்வையாய்ப் பார்க்க மாட்டார்கள்.

நுபஉற்பந்திஜவ்வு. நேத்திரசித்திரஜவ்வு, ரெடின, Retina) — இது விழியின் உட்புரை, துல்லியமாயிருக்கும். பார்வை நரம்பு மலர்ந்து ஏற்படுகின்றது.

சுக்லமண்டலம். ஆணிஜவ்வு. கருவிழி. கார்னிய, Cornea).— இது விழியின் முன்புறமாய் வளைந்து, வட்டமாய், வெள்ளையாய், அழுத்தமாய், கைக்கடியாரக் கண்ணாடியைப்போலிருக்கும். இதற்குப்பின் கருத்த ஜவ்விருக்கிறபடியால், இதுவும் கறுப்பாகவே காணப்படுகின்றது. கடியாரத்தின் கண்ணாடியானது ஜவ்வி லொட்டிக்கொண்டிருக்கிற தன்மையாகவே, இது அடுத்த வெள்ளை ஜவ்வோடொட்டிக்கொண்டிருக்கும்.

கண்ஜவ்வு- (கஞ்ஜங்டைவ, Conjunctiva).—கண் ரெப்பையின் அகத்தையும், விழியின் புறத்தையும் மூடிக்கொண்டிருக்கிற ஜவ்வுக்கு கண்ஜவ்வு என்று பேர். இது மூகஸ் மெம்பிரேன் என்னும் விலேதம் ஜவ்வுச் சாதியைச் சேர்ந்தது.

கிருஷ்ணமண்டலம். தாராமண்டலம். கண்வரி. (ஐரிஸ், Iris).— இது சுக்கிலமண்டலத்துக்குப் பின்புறமாயிருக்கும்; கறுத்து, மத்தியில் ஒரு துவாரமிருக்கும்; அதற்கு, கண்தாரை (கிருஷ்ணமண்டலத்துவாரம், பாப்பபியுபில், Pupil) என்று பேர். இந்தத்துவாரம் வெளிச்சத்துக்குத் தக்கபடி, சுருங்கவும், விரியவுமாயிருக்கும் கிஷ்ணமண்டலத்தின் நிறம் பலவிதம். சிலருக்குக் கறுத்தும், சிலருக்கு நீலமாயும், சிலருக்கு ஊதாவாயுமிருக்கும். நிறத்துக்குத் தக்கபடி கருவிழி, நீலவிழி, ஊதாவிழியென்று சொல்லுவர். சில ஜெந்துவில், கண்தாரை நெடுக்காக நீண்டிருக்கும்.

கண்மணி. கிஷ்ணமணி. லிங்கம் முகுரம். ஒளிவட்டம். (லென்ஸ், Lens).—கண்தாரைக்குப்பின், யானைக்குன்றிமணிப்போல், ஸ்படிகநிறமாய் ஓர் மணியுண்டு, அதற்குக் கண்மணியென்று பேர். மச்சங்களில், இது உருண்டிருக்கும்.

அறைகள். (சேம்பர்ஸ், Chambers).—சுக்லமண்டலம், கிருஷ்ணமண்டலம் ஆகிய இவைகளுக்கு மத்தியில் இருக்கிற சிறிய இடத்துக்கு, முன்னறை (அன்டீரியர் சேம்பர், Anterior Chamber) என்று பேர். கிஷ்ணமண்டலத்துக்குப் பின்னும், கண்மணிக்கு முன்னுமாய் ஓரிடமுண்டு; அதற்குப் பின்னறை (போஸ்டீரியர் சேம்பர், Posterior Chamber) என்று பேர். இவ்விரண்டறைகளிலும் துல்லிய நீரிருக்கும் (ஆக்வியஸ் யூமர், Aqueous Humour).

வித்ரியஸயூமர். (Vitreous humour).—இது விழிக்குள் பின்புறமாய், முட்டை வெள்ளைக்கருவைப்போல், குழகுழப்பான ஓர்வித நீராயம், ஒரு ஜவ்வு பைக்குள்ளடங்கியும் உருக்கும். (ஹைெயலாயிட் மெம்பிரேன், Hyaloid membrane). விழியில் $\frac{3}{4}$-பிரமாணத்துக்கு, ஷை நீர் நிறைந்து, கண்ஜவ்வுகளை விரிவாக வைத்திருக்கும்; ஷை நீர் போய்விட்டால், கண் நொள்ளையாகிவிடும்.

கண்ணீரக்கோளம். (லாக்கிரமல் கிளாண்ட், Lachrymal gland). கண்ணீர்க்கோளானது கண்குழிக்குமேல், வெளிப்புறமாய் அமைந்திருக்கும்; அதற்கு குழைகளுண்டு; அந்தக் குழைகள் வழியாக,

கண்ணீரிறங்கி, விழிக்கு ஊர்த்தமுகமாக, கண்சவ்வுமேல் வடியும், கண்ணீரால் கண் சதாகாலமும் ஈரமாகவே இருக்கும்; குறைந்தால் வறக்ஷியும், வேதனையும் தரும் மூக்குப் பக்கமாய் கண்ரெப்பை முனைகளில் மொக்குள்போல் சிறிய பிதுக்கங்களுண்டு ; அவைகளின்மேல் ஒரு சிறியதுவாரம் காணப்படும் (பங்ட, Puncta). அத்துவாரத்தில் கண்ணீரிறங்கி, நாவிக்கடியில் போய்விழும்.

புருவங்கள். (ஐபுரோஸ், Eyebrows).—கண்களுக்கு அதிக வெளிச்சம் படவொட்டாமலும், நெற்றிவியர்வை கண்களில் போகவொட்டாமலும், புருவங்கள் தடுக்கின்றன.

கண்ரெப்பைகள். கண்மடல்கள். (ஐலிட்ஸ், Eyelids)—கண்ரெப்பைகளானவை முருந்துகளாலேற்பட்டு, ஜவ்வால் மூடியிருக்கும். கண்ணுக்கு அபாயம் நேரிடாமல், கண்ரெப்பைகள் ரக்ஷிக்கின்றன.

காது

(இயர், THE EAR)

பிரதிபதங்கள்.—செவி, கன்னம், சுரோத்திரம்.

வெளிக்காது, நடுக்காது, உட்காது, என காதில் மூன்று பிரிவுகளுண்டு. காதுமடலும், துவாரமுஞ் சேர்ந்து, வெளிக்காதாகின்றது. முருந்தாலேற்பட்ட காதுமடலானது, (பின்ன, Pinna) மேடு பள்ளமாயிருக்கும். காதுமடலின்கீழ் தொங்கிக்கொண்டிருக்கிற மிருதுவான சருமத்துக்கு, சோணைக்காது (லாபியுலஸ், Lobulus) என்று பேர். காதுத்துவாரம், சுமார் 1-அங்குலம் ; கொஞ்சம் வளைந்திருக்கும் ; ரோமங்களுண்டு ; குறும்பியும் சுரக்கும் (இயர் வாக்ஸ் Ear wax; விருமன், Cerumen). ஷை ரோமங்களும், குறும்பியும், தூசு, கிருமி முதலியவைகளை காதுக்குள் பிரவேசிக்கவொட்டாமல் செய்யும் காதுக்குள் அண்டவடிவான ஓர் ஜவ்வுண்டு, அதற்கு காதின் உட்சவ்வு (சுரோத்திரேந்திரிய ஜவ்வு-பறை-ஆனகம்) (மெம்பிரெனடிம்பெனை, Membrana tympani) என்று பேர்.

நடுக்காது. (டிம்பெனம், Tympanum).—காதின் உட்சவ்வுக்குப் பின்புறமாக இருக்கிற ஸ்தானத்துக்கு, நடுக்காது என்று பேர். அதில் காற்றுக்கொண்டிருக்கும் ; 3-சிறிய எலும்புகள் கோவையாய் சேர்ந்திருக்கும். அவைகளில் சுத்தியல்போலிருப்பதற்கு, சுத்தியல் எலும்பு என்றும் (மாலியஸ், Malleus ; ஹாமர், Hammer)—பட்டடைப்போலிருப்பதற்கு, (அடைகல்) பட்டடையெலும்பு என்றும் (இன்கஸ், Incus ; ஆன்வில், Anvil)—அங்கபடியைப்போலிருப்பதற்கு, அங்கபடியெலும்பு என்றும் (ஸ்டெபீஸ், Stapes; ஸ்டிரப், Stirrup) பேர். நடுக்காதிலிருந்து, சுமார் $1\frac{3}{4}$-அங்குல நீளமுடைய பாங்காவைப்போலொத்த குழல் ஒன்று தொண்டைக்குப் போகும், அதற்கு யூஸ்டேகியன் டியூப் (Eustachian tube) என்று பேர்; அதன் மார்க்கமாய் காற்று போக்குவரவாயிருக்கும். வியாதியால் இந்தக்குழல் அடைத்துப் போனால், கேள்வி மந்தப்படும்.

உட்காது. பிரமணம். (லாபரின்த், Labyrinth).—உட்காதைக் கவனித்துப்பார்த்தால், ஒரு பள்ளமும், மூன்று வளைந்த குழல்களும், நத்தையோடுபோல் ஓரெலும்பும் அகப்படும். பள்ளத்துக்கு வாரி (வெஸ்டிபியூல், Vestibule) என்றும்—வளைந்த குழல்களுக்கு திரிதடங்கள் (ஸெமிஸர்க்கியுலர் கெனல்ஸ், Semicircular canals) என்றும் நத்தையோட்டெலும்புக்கு கம்பு (காக்கிளிய, Cochlea) என்றும் பேர். அவைகளுக்குள் ஜலம் நிறைந்திருக்கும்; அந்த ஜலத்தின்மேல், கேள்விநரம்பின் இழைகள் மிதந்துகொண்டிருக்கின்றன.

ரச இந்திரியம்

(ஆர்கன் ஆவ் டேஸ்ட், ORGAN OF TASTE. டங், TONGUE.)

பிரதிபதங்கள்.—நாக்கு, நா, ஜிஃவா.

நாக்கானது சதைகளால் ஏற்பட்டு, நாக்கெலும்பில் ஒட்டிக்கொண்டிருக்கும். நாக்குக்கடியில் ஜவ்வு மடிந்து நீண்டிருக்கும், அதற்குப் ப்ரீனம் லிங்குவி (Frænum linguæ) என்று பேர். அதன் இரண்டு பக்கங்களிலும் உமிழ்நீர்க் கோளங்களுடைய குழல்களின் துவாரங்கள் அகப்படும். நாக்குமேல் காணப்படுகிற முள்ளுகளுக்கு, நாக்கடு (பாபில்லி, papillæ) என்று பேர். அடிநாக்கில் முள்ளுகள் பெரிதாயிருக்கும்; சுரம் முதலிய வியாதிகளில் அவைகள் நீண்டிருக்கும், அதற்கு நாக்கில் முள்ளுண்டாகி தோஷித்துவிட்டதென்று சொல்வது வழக்கம். நாக்கில் புளிப்புப்பட்டால், அவைகள் நீண்டுவிடும். நாக்குக்குப் போகிற நரம்புகள் மூன்று; கஸ்டெடொரி, கிளாஸொபெரின்ஜியல், ஹைபொகிளாஸல் ஆகிய இவைகளாம். இந்த நரம்புகள் நாக்குமுள்ளுகளிற் சென்று முடிந்துவிடும்.

சருமம்

(ஸ்கின், THE SKIN).

பிரதிபதங்கள்—தோல், தொலி, ஸ்பரிஸ இந்திரியம்.

சரீரத்தை மூடிக்கொண்டிருக்கிற தோலுக்கு, இரண்டு புரைகள் உண்டு; மேற்புரைக்கு மீத்தோல் (கியுடிகில், Cuticle) என்றும், அதுக்கடியிலிருப்பதற்கு உட்தோல் (கியுடிஸ், Cutis or True skin) என்றும் பேர். உள்ளங்கை, உள்ளங்கால் இவைகளின் தோல் மெத்த தளமாயிருக்கும். கண்ணிரெப்பை, ஆண்குறி, அண்டகோசம் ஆகிய இந்த ஸ்தானங்களில் தோல் மிருதுவாயிருக்கும். மேல்தோலுக்கும், உட்தோலுக்கும் மத்தியில், ஒருவித பதார்த்தமுண்டு, அதற்கு சருமமத்திய பதார்த்தம் (ரிடிமியுகோஸம், Retemucosum) என்று பேர். இது சரீரத்துக்கு நிறத்தைக் கொடுக்கின்றது. உஷ்ணப்பிரதேசிகளுக்கு இந்தப் பசைக்கறுத்தும், சீதளபிரதேசிகளுக்கு வெளுத்தும், அமெரிக்கா தேசஸ்தர்களுக்கு தாம்பிரநிறமாயுமிருக்கும்; ஆகையால் உஷ்ணத்துக்குத் தக்கபடி தேசவாசிகளின் தேகம், கறுத்தும் வெளுத்தும், சிவந்துமிருக்கும். உட்தோலானது, ரத்தநரம்புகளாலும்,

ஸ்பரிஸநரம்புகளாலும், ஏற்பட்டிருக்கின்றது. சருமத்தில் வேர்க் குருபோல் காண்பதற்கு பாபில்லி (Papillae) என்று பேர்; இவை களில் ஸ்பரிஸநரம்பி னிறைகளிருக்கும், ஊசி மூனை நாட்ட இடமில் லாமல், அவ்வளவு நெருக்கமாய் ரத்தநரம்புகளும், ஸ்பரிஸநரம்புகளும், வியா பித்திருக்கும். உள்தோலுக்கடியில் கொழுப்புண்டு; அதில் ஸுவேதகோள ங்கள் (ஸுடோரிபெரஸ் கிளாண்ட்ஸ், Sudoriparous or ஸுவேட் கிளா ண்ட்ஸ், Sweat glands) புதைந்திருக்கும். அவைகளில் உண்டாகிற வேர் வையானது, சருமத்துவாரங்களில் வெளிப்படும். சருமத்தின் கீழ் நிணக் கோளங்களுமுண்டு (ஆயல், Oil or ஸெபிபெரஸ் கிளாண்ட்ஸ், Sebiparous glands). அவைகள் ரோமக்கால்களி லொட்டிக்கொண்டிருக்கும். அவை களில் ஜனிக்கிற எண்ணெய்ப் பசையானது ரோமக்கால்வழியாய் வெளிப் படும்; அது சருமத்துக்கு மிருதுத்வம் கொடுக்கின்றது.

நகம். (நெயில், Nail).—இது வெளித்தோலால் உண்டாகிறது; நகத் துக்கும் மேல்தோலுக்கும் வித்தியாசமில்லை, ஆனால் நகமானது கொஞ்சம் வைரத்தையுடையது.

ரோமம். மயிர். (ஹேர், Hair).—வெளித்தோலிலிருந்து ரோமம் பிறக்கின்றது. சிலவிடத்தில் ரோமம் மெத்தக் குறுகலாயும், சிரஸில் மிகவும் நீண்டுமிருக்கும். மீசை, தாடி இவைகளின் ரோமங்கள் மெத்தத் தளமாயிருக்கும். பூதக்கண்ணாடியால் பார்வையிட்டால் ரோமத் தில் துவாரமகப்படும், அதில் ஓர்வித எண்ணெய்ப்பச்சை கசிந்திருக்கும்; அதின் நிறமே ரோமத்துக்குண்டு.

---

9. அத்தியாயம்

நெஞ்சறை. மார்புக்குழி.

(தோரக்ஸ், THORAX. தொராஸிக் காவிடி, THORACIC CAVITY).

பிரதிபதங்கள்.—மார்புக்கூடு, உரக்குழி.

நெஞ்சறையானது, அடி விரிந்து, நுனி குவிந்திருக்கும்; முன்பாக, மார்பெலும்பு, விலா எலும்புகளின் முருந்துகள், சதைகள் ஆகிய இவை களும், பின்புறத்தில் முதுகுத்தண்டெலும்புகளும் சதைகளும்,—மேல்புறத் தில் முதல் பழுவெலும்பும், சவ்வுகளும்,—அடியில் ஈரல் தாங்கியும் இருக் கின்றன. நெஞ்சறைக்குள் நுரையீரல்கள், இருதயம், பரிபுப்புஸம், அன்ன வாகி, பெருநரம்புகள் ஆகிய இவைகள் இருக்கின்றன.

இருதயம். இதயம். ரத்தாசயம். (ஹார்ட், The Heart) —இரு தயமானது, மார்புக்குள், இரண்டு நுரையீரல்களுக்கு நடுவில் ஒரு சவ்வுப்பைக்குள் அடங்கியிருக்கும், அந்தப் பைக்கு இருதயக்கோசம் பெரிகார்டியம், Pericardium) என்று பேர். இருதயஞ் சாய்ந்து, அடி

யானது (பேஸ், Base) வலதுபுஜத்தை நோக்கியும், நுனியானது (ஏபெக்ஸ, Apex) கீழுக்கிறங்கி இடதுபக்கம் 5-6-வது பழுவெலும்புகளுக்கு மத்தியமாயுமிருக்கும்; கீழ்ப்புறம் தட்டையாய், ஈரல்தாங்கியின்மேல் படுத்துக்கொண்டு, மேற்புறம் உபுக்கலாயுமிருக்கும். இதன் நீளம் சுமார் 5-அங்குலம், அகலம் $3\frac{1}{2}$-அங்குலம், தளம் $2\frac{1}{2}$-அங்குலம் இடையில் புருஷர்களுக்கு 11-அவுன்ஸ் ஸ்திரிகளுக்கு 9-அவுன்ஸ் ஆகவுமிருக்கும். இருதயம் சதைகளால் ஏற்பட்டு, தாமரைமொக்குள்போலிருக்கும்; உள்ளே 4-அறைகளுண்டு; 2-மேலும், 2-கீழுமாக இருக்கும். மேல் அறைகளுக்கு சிரவங்கள் என்றும் (ஆரிகிலஸ் Auricles), கீழறைகளுக்கு, ஜடரங்கள் என்றும் (வென்ட்ரிகில்ஸ், Ventricles) பேர். வலதுபக்கத்தில் கறுத்த ரத்தமும், இடது பக்கத்தில் சிவந்த ரத்தமும் இருக்கும். அறைகளுக்குள் திரைச்சீலைப்போல் ஜவ்வுகளுண்டு, அவைகளுக்கு கவாடங்கள் (வால்வஸ், Valves) என்று பேர். அந்தக் கவாடங்கள், முன்னுக்குப் போகிற ரத்தத்தைப் பின்னுக்கு வரவொட்டாமல் தடுக்கும், வலது ஜடரத்திலிருக்கிற கவாடம், மூன்றுபிரிவுகளாய், திரிகோணரூபமாயிருக்கும், அவைகளுக்கு திரிகவாடங்கள் (ட்ரைகஸ்பிட் வால்வ்ஸ், Tricuspid valves) என்று பேர். அவைகள் வலது ஜடரத்திலிருக்கிற ரத்தம், சிரவத்துக்கேறுமற் செய்யும். இடது ஜடரத்தில் இரண்டு கவாடங்களுண்டு ; அவைகளுக்கு, துவயமவாடங்கள் (மைட்ரல் வால்வஸ, Mitral valves) என்று பேர். இருதயத்தின் இடது ஜடரத்திலிருந்து, ஒரு பெரியகுழல் உற்பத்தியாகும், அதற்குப் பெருநாடி (ஏயார்ட், Aorta) என்று பேர். அந்த நாடியானது அநேக கிளைகளாய்ப் பிரிந்து, தேகமெங்கும் போய்ப் பரவிவிடுகின்றன. வலது ஜடரத்திலிருந்து வேறொரு குழல் உற்பத்தியாகி, நுரையீரலுக்குப் போகும், அதற்கு புப்புஸநாடி (பல்மொநெரி ஆர்ட்ரி, Pulmonary artery) என்று பேர். பெருநாடி ஆரம்பத்திலும், புப்புஸநாடி ஆரம்பத்திலும், பிறைபோலொத்த மூன்றுகவாடங்கள் உண்டு, அவைகளுக்குப் பிறைக்கவாடங்கள் (ஸெமிலூனர் வால்வ்ஸ், Semalunar valves) என்று பேர்.

குரல்வளை. கண்டம். குரல்செப்பு. கிருகம். (லேரிங்ஸ், Larynx) ஸ்வாசக்குழலுக்கு மேல்புறமாயும், நாக்குக்கடியிலும் இருக்கிற முருந்துச்செப்புக்கு, குரல்வளை என்று பேர். அதன் முன்புறம் பிதுங்கிக் கூர்மையாயிருக்கும், அதற்கு சங்கம் (போமம் எடாமை, Pomum Adami) என்று பேர். குரல்வளையில், முருந்துகள், சந்திபந்தனங்கள், சதைகள், ரத்தநரம்புகள், ஸ்பரிஸநரம்புகள், சவ்வு ஆகிய இவைகளுண்டு. நாக்குக்கடியில், இலையைப்போல் நிமிர்ந்திருக்கிற முருந்துக்கு, கிருகவாடம் (எபிகிளாடிஸ், Epiglottis) என்று பேர் நாம் எதையாவது விழுங்குகிறபோது, குரல்வளை மேலுக்கு வரும், அப்போது அதன் துவாரத்தைக் கிருகவாடம் மூடிக்கொள்ளும், அதற்குத்தப்பி குரல்வளைக்குள் அணுப்பிரமாணம் ஏதாகிலும் இரங்கிவிட்டால், இருமல் காணும்; அதற்குப் புரை ஏறினதென்று சொல்வது வழக்கம். குரல்வளைக்குள், இரண்டு பக்கங்களிலும் ஜவ்வு மடிந்து தந்திகள்போலிருக்கும், அவைகளுக்குத் தொனிதந்திகள், குரல்நாணிகள் (ஒகல் கார்ட்ஸ், Vocal chords) என்று பேர். ஒவ்வொரு பக்கத்துக்கு இரண்டு தொனி தந்திகளுண்டு. அவைளின் மத்தியமாயிருக்கிற துவாரத்து

க்கு கிருகவாயில் (கிளாடிஸ், Glottis) என்று பேர் அது ஒரு விரல் நுழைகிற பிரமாணமுள்ளதாயிருக்கும்.

ஸ்வாஸக்குழல். தமரகம். (ட்ரேகிய, Trachea Wind-pipe).—இது முருந்துகளால் எற்பட்டிருக்கிறது; 4-அங்குலம் நீளமுள்ளதாயும், குறுக்கில் 1-அங்குலமுள்ளதாயுமிருக்கும். இது கீழுக்கிறங்கி, நெஞ்சரைக்குட்சென்று, இரண்டு கிளைகளாய்ப் பிரியும். அவைகளுக்கு ஸ்வாக்குழல் கிளைகள் (பிராங்கஸ், Bronchus) என்று பேர். அவைகள் வலது இடது புப்புஸங்களுக்குச் சென்று, அநேகம் சிறிய குழல்களாய்ப் பிரிந்து, முடிவில் மெத்த சன்னமாகிவிடும்; அவைகளுக்கு ஸ்வாஸப்பைக் கண்ணறைகள் (ஹேர்ஸெல்ஸ், Aircells) என்று பேர். ஸ்வாஸக் குழலிலிருக்கிற முருந்துகள், போகப் போகக் குறைந்து, முடிவில் ஜவ்வாகிவிடும். ஸ்வாஸக் குழலை, விருக்ஷத்துக் கொப்பிட்டுச் சொல்லலாம். அதெப்படியெனில், ஸ்வாஸக்குழல் மரத்தின் அடிக்குச் சமானமாகவும், கிளைகள் சவ்வுகளுக்குச் சமானமாகவும், அவைகளின் பிரிவுகள், கிளைகளுக்குச் சமானமாகவும், கண்ணறைகள் தளிர்களுக்குச் சமானமாகவும் இருக்கின்றன.

தைராயிட் கிளான்ட். (Thyroid Gland).—ஸ்வாஸக்குழலுக்கு முன், குறுக்காய் ஒரு மாமிஸகண்டம் ஓடியிருக்கும், அதற்கு தைராயிட் கிளான்ட் என்று பேர் அதன் பிரயோஜனம் இன்னம் செவ்வையாய்த் தெரியவில்லை.

நுரையீரல். வெள்ளீரல். புப்புஸம். ஸ்வாஸப்பை. (லங்ஸ், The Lungs). நுரையீரல்கள் இரண்டு; பக்கத்துக்கொன்றாய் நெஞ்சறைக்குள் இருதயத்தைத் தழுவிக்கொண்டிருக்கும். அவைகளின் வெளிப்புறம் உபுக்கலாயும், உட்புறம் குடவாயுமிருக்கும், நுனி சிறுத்து, குவிந்தும், அடியகன்று, ஈரல்தாங்கியின்மேல் படிந்துமிருக்கும்; பின்னால் முள்ளந்தண்டு சமீபமாயிருக்கிற ஓரம் உருண்டு, பருத்தும், முன்பாக இருக்கிற ஓரம் சிறுத்துக் கூர்மையாயுமிருக்கும் வலது 3-பிளப்பாகவும், இடது 2-பிளப்பாகவும் வகிர்ந்திருக்கும். இருதயம் இடது பக்கமிருப்பதால், இடது நுரையீரல் கொஞ்சம் சிறுத்திருக்கும்; நிறத்தில் குசும்பா அல்லது வெள்ளையும் சிவப்பும் கலந்த சாயலாய், மேலே புள்ளிகளுடயதாயிருக்கும். சுமார் 40-ஔன்ஸ் பளுவுள்ளது; வலது 2-ஔன்ஸ் கூடியிருக்கும். நுரையீரல்களுக்குள், ஸ்வாஸக்குழல் கிளைகளும், புப்புஸநாடிகளும், பிரவேசித்திருக்கும், புப்புஸநாளங்கள் வெளிப்படும். இவைகளைச் சேர்க்கையாய் புப்புஸமூலம் (ரூட், Root) என்று சொல்லப்படும். நுரையீரல்களுக்குள்ளிருக்கிற கண்ணறைகளை ரத்தநரம்புகள் பரவி சுற்றிக்கொண்டிருக்கும்.

பரிப்புப்புஸம். நெஞ்சறை. உட்சவ்வு. (ப்ளூர, Pleura).—நுரையீரல்களை ஓர்வித ஸீரஸ் மெம்பிரென் (Serous membrane) என்னும் ஜவ்வு மூடிக்கொண்டிருக்கும்; அதற்குப் பரிப்புப்புஸம் என்று பேர். அது முகமில்லாத ஓர்விதப்பைப்போலிருக்கும்; அதற்குள் கொஞ்சம் ஜலமுண்டு. (ஸீரம், Serum) பழுவெலும்புகளையும் சதைகளையும் ஷை ஜவ்வு ஒட்டிக்கொண்டிருக்கும்.

வயிறு

(அப்டொமென், ABDOMEN)

பிரதிபதம்.—உதரம்

வயிற்றுக்கு முன்னும், பக்கத்திலும், பழுவெலும்புகளும் சதைகளு முண்டு; பின்னுக முதுகுத்தண்டெலும்பும் சதைகளுமிருக்கும். மேற்புற மாய் ஈரல்தாங்கியும், கீழ்ப்புறத்தில் இடைக்குழியு மிருக்கின்றன. வயிற்றுக் குள்ளிருக்கிற உறுப்புகளாவன :—தீனிப்பை, குடல்கள், யகிர்த்கண்டம், பானகிரியஸ், பீலீகம், மூத்திரகுண்டிக்காய்கள் ஆகிய இவைகளாம்.

வெளிவயிற்றை 11-ஸ்தானங்களாகப் பிரித்திருக்கின்றன; அவைகளுக்கு ரீஜின்ஸ் (Regions)என்றுபேர். 8-வது பழுவின் முருந்து நேராய் ஒன்றும், இல்லியதித்ன் மிகவும் உயர்ந்த வாட்டத்தில் ஒன்றுமாக இரண்டு வரிகளேச் சரீரத்தைச் சுற்றிலும் வரிந்தால், வயிறு 9-பிரிவுகளாகும்; மேல்வயிறு, நடுவயிறு, அடிவயிறு ஆம். அவைகளுக்கு ஜோன்ஸ் (Zones) என்று பேர். பிறகு, 8-வது பழுவெலும்பிலிருந்து, போப்பார்ட்ஸ் லிகமென்ட் (Poupart's ligament) என்னும் பந்தநத்துக்கு நடுவில் விழும்படியாக, இரண்டு பக்கமும் வரிந்தால், மேற்கண்ட பிரிவுகள் ஒவ்வொன்றும் மூன்று சிறிய ஸ்தானங்களாகும். (ரீஜின்ஸ்).

மேல்வயிறு. (அப்பர் ஜோன், Upper Zone).—மேல்வயிற்றில் மத்திய ஸ்தானத்துக்கு, ஈரற்குழி (ஈரற்குலே, குலேவயிறு, ஆமாசயஸ்தானம், இரைக்குழி) (எபிகாஸ்ட்ரியம், Epigastrium, pit of the stomach) என்று பேர். அதற்கு வலதுபக்கம் இருக்கிற ஸ்தானத்திற்கு, யகிர்த்தகண்டஸ்தானம் (ரைட் ஹைபொகாண்ட்ரியம், Right Hypochondrium) என்றும், இடதுபக்க மிருப்பதற்கு, பிலீகஸ்தானம் (லெப்ட் ஹைபொகாண்ட்ரியம், Left Hypochondrium) என்றும் பேர். இதில் தீனிப்பை, கல்லீரல், மண்ணீரல், பான்கிரியஸ், இவைகளிருக்கின்றன.

நடுவயிறு. (மிடில் ஜோன், Middle Zone,—நடுவயிற்றில் மத்திய ஸ்தானத்துக்கு, நாபிஸ்தானம், (உந்தி, தொப்புள், பக்குவாஸஸ்தானம்) (அம்பிலிகல் ரீஜின், Umbilical region) என்று பேர். அதற்கு வலது இடது பக்கமாயிருப்பதற்கு மூத்திர குண்டிக்காய் ஸதானங்கள் (லம்பார் ரீஜின்ஸ், Lumbar regions') என்று பேர். நடுவயிற்றில் பெருங்குடல், சிறுகுடல், தோஞ்சை, மூத்திரகுண்டிக்காயகள், இவைகளிருக்கின்றன.

அடிவயிறு (இன்பீரியர் ஜோன், inferior Zone).— அடிவயிற்றில் மத்திய ஸ்தானத்துக்கு, வஸ்தி(ஹைபொகாஸ்டிரிக் ரீஜின், Hypogastric region)என்றும் அதின் இரண்டுபக்கங்களிலும் இருப்பவைகளுக்கு, இலியக்ரீஜின்ஸ்,(Illiacregion) என்றும் பேர். அடிவயிற்றில் சிறுகுடல், தோஞ்சை, சீகம், பெருங்குடல், மூத்திரக்குழல்கள் இவைகளிருக்கின்றன.

கவுட்டி. அரைப்பூட்டு. வங்க்ஷணம். (இன்குவினல் ரீஜின், Inquinal region—கிராயின், Groin) தொடைமடிப்புக்கு, கவுட்டி என்று பேர்.

குடல்ஜவ்வு. அந்தர்வேஷ்ட்ணம்.(பெரிடொனியம், Peritoneum).—இது வயிற்றுக்குள்ளிருக்கிற உறுப்புகளேயும், சதைகளேயும் மூடிக்

கொண்டிருக்கும்; ஸீரஸ் மெம்பிரென் என்னும் இனத்தைச் சேர்ந்தது; பைபோலிருக்கும், உள்ளே ஜலமுண்டு; இந்த ஜவ்வானது, மடிந்து 4-புரைகளாய், திரையைப்போல், குடலுக்குமுன்புறமாய்த் தொங்கிக்கொண்டிருக்கும்; அதற்கு தோஞ்சை, மேதோவுதரம் (ஒமெண்டம், Omentum) என்று பேர். இதில் கொழுப்பு ஒட்டிக்கொண்டிருக்கும். ஸ்தூலசரீரமுடையவர்களுக்கு, இந்த கொழுப்பு அதிகமாயிருக்கும். சிறுகுடலையெல்லாம் சேர்த்துப் பின்புறமாய் முள்ளந்தண்டுடன் ஒரு ஜவ்வு பற்றியிருக்கும், அதற்கு மணிக்குடல் மத்தியாந்திரம் (மிஸெண்ட்ரி, Mesentery) என்று பேர்.

இரைக்குழல்

(அலிமென்டெரி கெனல், ALIMENTARY CANAL)

பிரதிபதங்கள்.—ஆகாரக்குழல், போஜனக்குழல்

வாய் முதல், ஆஸனம் வரையில் நீண்டிருக்கிற குழலுக்கு, இரைக்குழல் என்று பேர். இது ஸ்தானத்துக்குத் தக்கபடி ரூபம் விகற்பப்படும். வாய், தொண்டை, அன்னவாசி, இரப்பை, சிறுகுடல், பெருங்குடல் எனப் பேரும் வித்தியாசமாகும்.

வாய். (மௌத், Mouth).—நாக்கு, பற்கள், உதடுகள், கன்னங்கள், அண்ணம், ஈறு இவைகள் சேர்ந்து வாய் உண்டாகிறது. கடைவாய் பற்களுக்குப் பின்னுக, இருபக்கங்களிலும், கோளங்களுண்டு, அவைகளுக்கு டான்ஸில்ஸ் (Tonsils) என்று பேர்.

உதடுகள், (லிப்ஸ், Lips).—சதைகளால் ஏற்பட்டிருக்கிற உதடுகளை, வெளியில் தோலும், அகத்தில் மூயுகஸ் மெம்பிரென் என்னும் ஸிலேத்ம ஜவ்வும் மூடிக்கொண்டிருக்கும். மேலுதடும் கீழுதடும் மத்தியமாக, எலும்போடு சேர்ந்து ஒட்டிக்கொண்டிருக்கிற ஜவ்வுமடிப்புக்கு பிரீனம் (Frænum) என்று பேர்.

கன்னங்கள். (சீக்ஸ், Cheeks).—சதைகளும், சருமமும் கூடி உண்டாகிற கன்னங்களுக்குள், மேல்வாய் மத்தியில், சுமார் இரண்டாவது கடைவாய்ப்பல்லுக்குச் சமீபமாக, ஓர் குமிழ் (பாபில்லி, Papillae) உண்டு, அதிலிருந்து உமிழ்நீர் வடியும்.

ஈறுகள் முரசு. (கம்ஸ், Gums).—இவைகள் மியூகஸ் மெம்பிரென் என்னும் ஜவ்வு, மெத்த தடித்திருக்கும்.

நாக்கு. நா. ஜிஃவா. தாலு. (டங், Tongue)—நாக்கானது சதைகளால் ஏற்பட்டிருக்கின்றது; ஸிலேத்ம ஜவ்வு மூடிக்கொண்டிருக்கும்; நாக்குக்கடியிலிருக்கிற ஜவ்வுமடிப்புக்கு, பிரீனம் லின்குவி, Frænum linguæ) என்று பேர். அதற்கு இருபக்கத்தில் குமிழ்களுண்டு, அவைகளிலிருந்து உமிழ்நீர் வடியும்.

உண்ணாக்கு சிறுநாக்கு. (யூவில், Uvula).— இது சதைகளால் ஏற்பட்டிருக்கும். பதார்த்தங்களை விழுங்கும்போது, அண்ணத்தின் சதைகள் நாஸியின் பின்துவாரங்களை மூடிக்கொள்ளும்; அப்போது மத்

தியில் கொஞ்சம் சந்திருக்கும் ; அதை உண்ணுக்கு மூடிக்கொள்ளும், பதார்த்தங்கள் நாவசித்துவாரங்களுக்குள் பிரவேசிக்கமாட்டாது.

டான்ஸில்ஸ். (Tonsils).—தொண்டையின் இருபக்கத்தில் நாக்கின் அடிச் சமீபத்தில் இருக்கிற கோளங்களுக்கு டான்ஸில்ஸ் என்று பேர். அவைகள் வீங்கி வேதனையெடுத்தால் "சயித்தியக்கட்டி" என்று சொல்வது வழக்கம். அவைகளுக்கு முன்னும் பின்னுமாக இருக்கிற ஜவ்வுமடிப்புகளுக்கு பில்லர்ஸ் (Pillars) என்று பேர்

உமிழ்நீர்க் கோளங்கள். (ஸாலிவெரி கிளாண்ட்ஸ், Salivery glands) —பக்கத்துக்கு மூன்றாக 6-உமிழ்நீர்க்கோளங்களுண்டு. காதுக்கு முன்பாக ஒரு கோளமுண்டு, அதற்குச் செவியடிக்கோளம் (பெரோட்டிட் கிளாண்ட், Parotid gland) என்று பேர். உமிழ்நீர்க்கோளங்களுக்குள் இது பெரிது. இதிலிருந்து வருகிற குழலுக்கு, ஸ்டினன்ஸ் டக்ட் (Stenon's duct) என்று பேர். இந்தக் குழலானது கன்னத்தில் குறுக்காக ஓடி, மேல்வாயின் இரண்டாவது கடைவாய்ப்பல்லருகில் முடியும்.—தாடையுட்கோளம். (ஸப்மாக்ஸிலெரி கிளாண்ட், Submaxillary gland) இது கீழ்த்தாடையெலும்புமூலையின் உட்புறத்திலிருக்கும்; இதன் குழலுக்கு வார்டன்ஸ் டக்ட் (Whorton's duct) என்று பேர்; இது நாவினடியிலிருக்கிற ஜவ்வு மடிப்புப்பக்கத்தில் போய் முடியும். அவ்விடத்தைப் பார்வையிட்டால், முள்ளுபோல் குமிழ்கள் அகப்படும்.—நாவடிக்கோளம். (ஸப்லிங்குவல் கிளாண்ட், Sublingual gland), இது நாக்குக் கடியிலிருக்கும் இதன் குழல், மேல்கண்ட குழலோடு சேர்ந்து முடிந்துவிடும்.

தொண்டை. மிடறு. பேரிங்ஸ், Pharynx).—இது சதைகளுக்கு ஜவ்வுஞ் சேர்ந்து பையைப் போலேற்பட்டு, முள்ளந்தண்டின்மேல் படிந்து, குரல்வளைக்குப் பின்புறமாக இருக்கும் ; 4-அங்குல நீளம் உண்டு; இருபக்கத்திலும், காதிலிருந்து வருகிற யூஸ்டேகியன் டியூப் (Eustachian tube) என்னும் குழலின் முனை வந்து முடியும்.

அன்னவாகி. (இஸாபெகஸ், Œsophagus.—தொண்டையின் அடியிலிருந்து, இரைப்பைக்குப்போகிற தடித்தக் குழலுக்கு அன்னவாகி என்று பேர்; இது சுவாஸக்குழலுக்குப் பின்னாக இருக்கும்; ஒரு அடி நீளமுள்ளது; அன்னபானாதிகள் இதன் வழியாக இறங்கி இறைப்பையில் சேர்ந்துவிடும்.

இரைப்பை. தீனிப்பை. குக்ஷி. ஜடரம். உதரம். அன்னாசயம். ஆமாஸயம். (ஸ்டமக், The stomach).—இரைப்பையானது, துரித்திப் பையைப் போல் வளைந்து, பிலீகஸ்தானத்திலிருந்து ஈரல் குழிக்கு எட்டியிருக்கும் ; சதைகளுக்கு, ஜவ்வுகளுக்குஞ் சேர்ந்து உண்டாகின்றது, இரண்டு துவாரமிருக்கும் ; ஒன்று அன்னவாகியோடும் (கார்டியக் ஆரிபிஸ், Cardiac orifice), மற்றொன்று, சிறுகுடலோடும் (பைலோரிக் ஆரிபிஸ். Pyloric orifice) சேர்ந்திருக்கும். பைலோரிக் துவாரத்தில், விருத்த ஜவ்வுமடிப்புக் கவாடம் ஒன்றுண்டு, (பைலோரிக் வால்வ், Pyloric valve) அது செவ்வையாய்த் தகியாத பதார்த்தங்களைக் குடலுக்குப்போகவிடாது.

இரைப்பைக்கு 2-வளைவுகள் உண்டு, ஒன்று சிறுத்து மேற்புறமாயும், மற்றொன்று பெருத்து கீழ்ப்புறமாயுமிருக்கும், 5-10-பயின்ட் ஜலம் அடங்கும்படியான விசாலமிருக்கும்; உள்ளிருக்கிற மியூகஸ் மெம்பிரேன் என்னும் சிலேத்ம ஜவ்வு, மடிந்து நீண்டிருக்கும், அவைகளுக்கு ரூஜி (Rugæ) என்று பேர். அவைகளிலிருந்து அன்னபானாதிகளை தகிக்கிற ஓர்விதபுளிப்பு திரவம் ஜனிக்கும், அதற்குஜாடராக்கினி (காஸ்ட்ரிக் ஜூஸ், Gastric juice) என்று பேர். தீனிப்பைக்கு, பிசைவு, நெளிவு, ஆகிய இரண்டு வித அசைவுகளுண்டு.

சிறுகுடல். அந்திரம். (ஸ்மால் இன்டெஸ்டைன்ஸ், Small Intestines)- சிறுகுடல், 20-25-அடி நீளமுள்ளது; தேகத்துக்கு 6-பங்கு நீண்டிருக்கும். இதில் 3-பிரிவுகளுண்டு; டியோடினம், ஜிஜூனம், இலியம், ஆம். டியோடினம் (Duodenum) துணைக்குக்ஷி. இது இரப்பையைத் தொடர்ந்திருக்கும்; 8-10-அங்குல நீளமுள்ளது; தீனிப்பைக்குப் பின்னாக இருக்கும்; இதில் ஏகோபித்த பித்தப்பைக்குழலும், (காமன் பயில் டக்ட், Common bile duct) கணையக்குழலும், (பான்கிரியாடிக்ட் டக்ட், Pancreatic duct) சேர்ந்து முடிகின்றன. ஜிஜூனக்குடல் (Jejunum). இது துணைக்குச்சியைத் தொடர்ந்திருக்கும்; பிரேதங்களில் எப்போதும் இதில் ஒன்றுமிராது.—இலியக்குடல் (Heum). இது ஜிஜூனக் குடலைத் தொடர்ந்து பெருங்குடலில் போய் முடியும், உந்திஸ்தானத்திலும், அடிவயிற்றிலும், இடைக் குழியிலும், நிறைந்திருக்கும். சிறு குடல்களுக்குள் விருத்தமாகவும், பிறைப்போலவும் இருக்கிற ஜவ்வு மடிப்புகளுண்டு (வால்வியுலி காணிவென்டிஸ், Valvulæ conniventes), அவைகளில் ரஸாயனிகள் (லாக்டியல்ஸ், Lacteals) பரவியிருக்கும்; அந்த அன்னரஸத்தைக் கிரக்கிற ரஸாயனிகள் மணிக்குடலில் பிரவேஶித்து, ஒன்றோடொன்று சேர்ந்து, முடிவில் ரஸதாரையில் கலந்துவிடும்.

பெருங்குடல். (லார்ஜ் இன்டெஸ்டைன்ஸ், Large intestines; கோலன், Colon).— இது நீளத்தில் 5-6-அடியுள்ளதாயிருக்கும்; அடிவயிறு வலதுபக்கத்துப் பள்ளத்திலிருந்து (ரயிட் இல்லியக் பாஸா, Right Iliac fossa) ஆரம்பித்து (ஸீக்கம், Cæcum), மேலுக்கேறி, உந்திஸ்தானத்தில் குறுக்காய்ச் சென்று, பிறகு இடதுபக்கமாய்க் கீழுக்கிறங்கி, இடது அடிவயிற்றுப் பள்ளத்தில் வளைந்து, திரிகஸ்தான எலும்புக்கு முன்பாக கீழுக்கிறங்கி, குதத்தில் போய் முடிகின்றது. வலது பக்கம் ஊர்த்தமுகமாய் போவதற்கு, அஸ்ஸென்டிங் கோலன் (Ascending colon) என்னும்— குறுக்காக ஓடுகிறதற்கு, ட்ரான்ஸ்வர்ஸ் கோலன் (Transverse colon) என்றும் கீழுக்கிறங்குகிற பாகத்துக்கு டிஸென்டிங் கோலன் (Descending colon) என்றும்—வளைவுக்கு ஸிக்மாயிட் பிளக்ச்சர் (Sigmoid flexure) என்றும்— திரிகஸ்தான எலும்புக்கு முன் இருப்பதற்கு, மலக்குடல் (ரெக்டம், Rectum) என்றும்— முடிவுக்கு, குதம் (மலத்துவாரம்) பவனவாய், ஆஸனம், அபானம், (சூத்து) (ஏனஸ் Anus) என்றும், பேர். சிறுகுடலும் பெருங்குடலும் சந்திப்புஸ்தானத்தில், 2-கவாடங்களுண்டு. அவைகளுக்கு இலியோஸீக்கல் வால்வ்ஸ் (Ileocæcal valves) என்றும், ஸீக்கத்தில் நாகப்பூச்சி

போல் சுருண்டிருப்பதற்கு அப்பெண்டிக்ஸ் வெர்மிபார்மிஸ் (Appendix Vermiformis) என்றும் பேர்.

யகிர்த்கண்டம். யகுர்திகண்டம். காலகண்டம். ஈரல். கல்லீரல். கறளை (லிவர் The Liver).—மேல்வயிற்றில் வலதுபக்கத்தில் இருக்கிற உறுப்புக்கு, யகிர்த்கண்டமென்று பேர். இது ஈரற்குழியிலும் சென்றிருக்கும், தேகத் துறுப்புகளுக்குள் இது பெரிது, மேற்புறம் உப்பலாயும், அடி குடைவாயுமிருக்கும்; 4-பவுன் இடையுண்டு; நீளத்தில் 12-அங்குலமிருக்கும்; முன் ஓரம் கூர்மையாயும், பின் உருண்டுமிருக்கும். இது பக்கத்து உறுப்புகளோடு ஐவ்வால் கட்டப்பட்டிருக்கும், அவைகளுக்கு லிகெமென்ட்ஸ் என்று பேர். ஈரலுக்கடியில் பார்வையிட்டால், 5-வெடிப்புகள் காணப்படும். (பிஷ்ஷர்ஸ், Fissures); ஒன்றில் பித்தப்பை ஒட்டிக்கொண்டிருக்கும். யகிர்த்கண்டத்துக்குப் பித்தநீர் சுறப்பிக்கிற தொழிலும், கெட்டரத்தத்தில் இருக்கிற தோஷங்களை நீக்கிவிடுகிற குணமும் இருக்கின்றன. பித்தநீரைக் கொண்டுபோகிற குழலுக்கு, யகிர்த்கண்டக்குழல் (ஹிப்பாடிக் டக்ட், Hepatic duct) என்று பேர்.

பித்தப்பை. பித்தாஸயம். (கால் பிளாடர், Gall bladder).—இது ஈரலுக்குக் கீழிருக்கிற வெடிப்பில் ஒட்டிக்கொண்டு கூச்சாயிருக்கும்; அடி கொஞ்சம் வெளியில் பிதுங்கியிருக்கும்; பித்தப்பைக் குழலும் (ஸிஸ்டிக் டக்ட், Cystic duct); யகிர்த்கண்டக் குழலுஞ் சேர்ந்து, ஏகோபித்த பித்தக்குழல் (காமன் பயில் டக்ட், Common bile duct) ஆகின்றது. இது கணைக்குழலுடன் இணைந்து ஓடி, துணைக்குக்ஷியின் பின்புறத்திற் சென்று, உள்ளே பிரவேசித்து, ஒரு குமிழில் முடிந்துவிடும். யகிர்த்கண்டத்தில் சுரக்கிற பித்தநீரானது, பித்தப்பையில் போய்த் தங்கியிருக்கும்; அவசியமானபோது, துளித்துளியாய் அன்னபாகத்துடன் போய்ச் சேருகின்றது. சீரணசமயத்தில் மாத்திரம் இந்த நீர் போய்ச் சேரும். இது உண்ணும் உணவுகளை, ரஸம் வேறு திப்பி வேருசச் செய்யும், மலத்தைப் போக்கும்.

கணையம். (பான்கிரியஸ். Pancreas).—இது தட்டையாய் 6-அங்குல நீளமுள்ளதாய், 3-4-அவுன்ஸ் பளுவுள்ளதாய் அன்னசயத்துக்குப் பின்புறத்தில் குறுக்காக அமைந்திருக்கும். இதன் குழல் பித்தக்குழலுடன் தொடர்ந்து, துணைக்குக்ஷியில் முடியும். பிரயோஜனம். இந்த உறுப்பு உமிழ்நீரைப்போல் ஓர்வித திரவத்தைச் சுரப்பிக்கின்றது; அந்தத் திரவம் கொழுப்பைத் தகிக்கிறதென்று சிலருடைய சித்தாந்தம்.

பிலீகம். மண்ணீரல். வாளீரல். கருப்பீரல், செவுரொட்டி. (ஸ்பிளின், Spleen).—இந்த உறுப்பு பிலீகஸ்தானத்திலிருக்கும்; சிவப்பும் நீலமும் கலந்த நிறமாய், 5-அங்குலம் நீளமுள்ளதாய், 6-அவுன்ஸ் பளுவுள்ளதாய், ரத்தநரம்புகளால் ஏற்பட்டு, கடற்பாசியைப்போல் மிருதுவாயிருக்கும்; அழுத்தித் தொட்டால் உடைந்துபோகும்; வெளிப்புறம் உப்பலாயும், உட்புறம் கொஞ்சம் குடைவாயும் தீனிப்பையோடிணைந்திருக்கும். இதின் பிரயோஜனம் இன்னம் செவ்வையாகத் தெரியவில்லை; இதிலிருந்து ஒன்றும் சுரக்கிறதில்லை. தேகம் குளிர்ந்திருக்கும்போது, சருமத்திலிருக்கிற ரத்தம் உள்ளுக்கிறங்கி, பிலீகத்தில் தங்கியிருக்குமென்று எண்ணம். சீதசுரத்தில்,

பிலீகம் பருத்துப்போனல், அதற்குக் காச்சக்கட்டி என்று சொல்வது வழக்கம்.

மூந்திரக்குண்டிக்காய்கள். மூத்திரபிண்டங்கள். பிருக்கங்கள். (கிட்னீஸ், Kidneys).—இவைகள் தங்கள் ஸ்தானத்தில், முள்ளந்தண்டுக்கு இரண்டுபக்கமாக ஒட்டிக்கொண்டிருக்கும்; 4-5-அங்குலம் நீளமுள்ளதாயும், 2½-அங்குலம் அகலமுள்ளதாயும், 1-அங்குலம், தளமுள்ளதாயும், ரூபத்தில் மாங்காய்ப்பருப்பைப்போலவும் இருக்கும். 3-5. அவுன்ஸ் இடையுள்ளது. எப்போதும் கொழுப்பு மேலே ஒட்டிக்கொண்டிருக்கும் கிட்னியை நீண்டமார்க்கமாக அறுத்துப்பிளந்து பார்வையிட்டால், உள்ளே இரண்டுவித பதார்த்தங்கள் காணப்படும். புறத்திலிருப்பது, ரத்தநரம்புகளால் ஏற்பட்டுச் சிவந்தும், அகத்திலிருப்பது குழல்களால் ஏற்பட்டு மொக்குள் போலவுமிருக்கும்; அந்த மொக்குள் முனைகள் உள்நோக்கி, சிறிய பள்ளங்களில் பிதுங்கியிருக்கும்; மொக்குள்களுக்கு, கோன்ஸ் (Cones) என்றும், முனைகளுக்கு பாபில்லி Papillæ) என்றும் பேர். முனைகளைப் பார்வையிட்டால், சிறிய துவாரங்கள் காணப்படும், அவைகளிலிருந்து மூத்திரம் சுரந்துகொண்டேயிருக்கும். மூத்திரக்குண்டிக்காயிலிருந்து ஒரு ஜவ்வுக் குழல் பிறந்து கீழ்க்கிறங்கி, மூத்திரப்பையோடு சம்பந்தப்பட்டிருக்கும். அதற்கு மூத்திரக்குண்டிக்காய்க் குழல் (யூரிடர், Ureter) என்று பேர். அது சுமார் 18-அங்குலம் நீளமுள்ளது. அதன் வழியாக மூத்திரமிறங்கி ஜலப்பையில் விழும்.

இடைக்குழி

(பெல்விக் காவிடி, PELVIC CAVITY)

பிரதிபதம்.—கூபக்குழி, மதப்புக்குழி

இடையைக்குறித்து நாம் முன்னமே யோசித்து இருக்கிறோம்; இப்போது இவ்விடத்தில் அதிலடங்கிய உறுப்புகளைக்குறித்து யோசிக்கவேண்டியது. இடைக்குழியில் மூத்திரப்பை, மலக்குடல் ஆகிய இவைகளிருக்கின்றன.

மூந்திரப்பை. ஜலாஸயம். ஜலப்பை, ஊத்தாம்பிள்ளை. (பிளாடர், Bladder).—ஜவ்வுகளும் சதைகளும் சேர்ந்துண்டாகிற மூத்திரப்பையானது, அதில் மூத்திரம் நிறைந்திருந்தால் அண்டாகாரமாய், மர்மஸ்தான எலும்புக்குப் பின்னுக அதை இணைந்துகொண்டும், மலக்குடல்மேல் படிந்துமிருக்கும். அங்குமிங்கும் நழுக ஒட்டாமல், ஜவ்வுகளால் பக்கத்து உறுப்புகளுடன் கட்டியிருக்கும்; அவைகளுக்குப் பந்தனங்கள் என்று பேர். பையில் மூத்திரமில்லாதபோது, சுருங்கி குழிக்குள்ளடங்கியிருக்கும். மூத்திரப்பையின் அடி சுரங்கி, குழலைப்போல் இருப்பதற்கு கழுத்து என்று பேர்; அதை ஒருகோளம் சுற்றிக்கொண்டிருக்கும் (பிராஸ்டேட் கிளாண்ட், Prostate gland). மூத்திரப்பையின் சிகரத்திலிருந்து ஒரு நரம்பு மேலுக்கோடி உந்தியில் ஒட்டிக்கொண்டிருக்கும், (யூரேகஸ், Urachus); அது குழந்தையில் நாபியிலிருந்து வயிற்றுக்குள் போகிற ரத்தநரம்புகளின் விகற்பம்.

ப்ராஸ்டேட் கிளான்ட். (Prostate gland).—இது மூத்திரப்பையின் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும்; மலக்குடலில் விரலைவிட்டுப் பார்த்தால், தட்டுப்படும்; ஓர்வித நீர் அதிலிருந்து சுரந்து, நீர்த்தாரையில் வந்து விழும்.

இந்திரியகமலங்கள். இந்திரியபாத்திரங்கள்; (வெஸிக்கியுலி ஸெமிநேலிஸ், Vesiculæ Seminales) —மூத்திரப்பைக்கு அடியில் முகுளாகாரமாய்ப் பக்கத்துக்கொன்றாய் இரண்டு உறுப்புகள் ஒட்டிக்கொண்டிருக்கும்; அவைகளுக்கு இந்திரியகமலங்கள் என்று பேர். 2-அங்குல நீளமுள்ளதாய், மலப்பையோ டிணைந்திருக்கும். $\frac{3}{4}$-அங்குல நீளமுள்ள அதின் குழலுக்கு, இந்திரியகமலக்குழல் (இஜாக்கியுலெடொரி டக்ட், Ejaculatory duct) என்று பேர்;) அது நீர்த்தாரை ஆரம்பத்திலிருக்கிற குமிழில் போய்ச் சேர்ந்துவிடும்.

புருஷஜனனேந்திரியங்கள்

(மேல் ஆர்கன்ஸ் ஆவ் ஜெனரேஷன், MALE ORGANS OF GENERATION)

ஆண்குறி, பீஜம் ஆகிய இவைகள் புருஷ ஜனனேந்திரியங்களாகின்றன.

ஆண்குறி சிஸனம். கோசம். வீணைதண்டு. (பீனிஸ், penis).—இதில் இரண்டுவிதப் பதார்த்தங்களுண்டு; மேற்புறமிருப்பதற்கு கார்பஸ் கவர்னோஸம் (Corpus Cavernosum) என்றும், அடியில் இருப்பதற்கு, கார்பஸ் ஸ்பஞ்சியோஸம் (Corpus Spongiosum) என்றும் பேர். கார்பஸ் கவர்னோஸமானது, இரண்டாகப் பிரிந்திருக்கும்; அகத்தில் சீப்பின் பற்களைப்போலொத்த இழைகள் காணப்படும். மற்றொன்று, நீர்ப்பஞ்சுபோலும், அதில் நீர்த்தாரை அமைந்துமிருக்கும். கோசத்தில் ரத்தம் குறைந்திருந்தால், அது துவண்டும், அதிகரித்திருந்தால், விம்மியுமிருக்கும். எலும்போடு ஒட்டிக்கொண்டிருப்பதற்கு, அடி (ரூட், Root) என்றும்—மத்தியபாகத்துக்கு தண்டு (பாடி, Body) என்றும்—முனைக்கு லிங்கம், மணி, பூ, (கிளான்ஸ் பீனிஸ், Glans penis) என்றும் பேர். லிங்கத்தின் முனையிலிருக்கிற வெடிப்பே நிர்த்தரையின் வாய்; அதின் பக்கங்களில் உதடுகளுண்டு. நீர்த்தாரை வாயிலிருந்து ஜவ்வு மடிந்து கீழ்க்கோடும் (ப்ரீனம் Frænum). லிங்கத்துக்கடியில் சுற்றிலும் மேடாயும் (கரோன கிளாண்டிஸ், Corona glandis); அதற்கு பின்புறத்தில் பள்ளமாயுமிருக்கும். லிங்கத்தை மூடிக்கொண்டிருக்கிற மிருதுவானதோலுக்கு, லிங்க கவசம் (ப்ரிபியூஸ், Prepuce) என்று பேர். கோசத்தின் சருமம் மிருதுவாய் துவண்டிருக்கும், அடியில் கொழுப்பிராது.

நீர்த்தாரை. ஜலத்துவாரம். மூத்திரத்துவாரம். (யூரித்திரா, Urethra).—இது சுமார் 8-அங்குலம் நீளமுடையது; மியுகஸ் மெம்பிரென் என்னும் ஜவ்வால் ஏற்பட்டு மார்க்கம் வளைந்து, மூத்திரப்பையோடு சேர்ந்திருக்கும்; அந்த ஸ்தானத்தில், இந்திரிய கமலக்குழல்கள் வந்து முடிந்திருக்கும். மூத்திரத்துவாரமானது ஏக சமனாயிராது,

ஓரிடத்தில் சிறுத்தும், ஓரிடத்தில் விரிந்தும், வாய் பெத்த சிறுத்துமிருக்கும். சிலாக்கானது, துவாரத்தின் வாயில் நுழைந்துவிட்டல், பிறகு முழுதும் தாராளமாய்ப் போய்விடும். துவாரத்தின்வாயில் இருந்து சுமார் $1\frac{1}{2}$- அங்குலத்துக்கு அகத்தில் சிறியகோளங்கள் உண்டு, மேகவியாதியில் இவைகளிலிருந்து சீழ் வடியும்.

பீஜம். அண்டம். வித்து. விதை. விருஷ்ணம், (டெஸ்டிஸ், டெஸ்டிகில், Testicle).—பக்கத்துக்கொன்ருக, 2-பீஜங்களுண்டு; பீஜக்கொடி அதனைத் தொங்கவைத்துக்கொண்டிருக்கும், (ஸ்பெர்மாடிக்கார்ட், Spermatic cord), பீஜத்தை மூடிக்கொண்டிருக்கிற சருமத்துக்கு, பீஜப்பை, அண்டகோசம், பீஜகவசம், (ஸ்க்குரோடம், Scrotum) என்று பேர். இடது பக்கத்துப் பையானது எப்போதும் கொஞ்சம் நீண்டிருக்கும்; பைக்கு மத்தியில் ஒரு தடித்த ஜவ்விருந்து, வலம் இடமாக, பையை 2-பாகங்களாய்ப் பிரித்துவிடுகின்றது பீஜப்பையானது எப்போதும் சுருங்கித் தளர்ந்துகொண்டிருக்கும், நாடிகள், நாளங்கள், நரம்புகள், விந்துவாகி ஆகிய இவைகள் சேர்ந்து பீஜக்கொடி யண்டாகின்றது. இந்தக் கொடியானது பீஜத்திலிருந்து மேலுக்கேறி, பீஜக்கொடித்துவார வழியாகச் (ஸ்பெர்மாடிக் கெனல், Spermatic canal) சென்று, வயிற்றுக்குள்ளிறங்கிவிடும்; இதை ஜவ்வு சுற்றிக்கொண்டிருக்கும்; இடது பக்கத்துக்கொடி கொஞ்சம் நீண்டிருக்கும்.

பீஜமானது சிறுத்து, உருண்டு, நீண்டு, சுமார் $1\frac{1}{2}$-அங்குல நீளமுள்ளதாய், பக்கங்கள் உள்ளடங்கியிருக்கும்; மேலாக உருண்டையாய் ஒன்று காணப்படும், (எபிடிடிமிஸ், Epididymis). பீஜத்தை ஸீரஸ் மெம்பிரென் என்னும் ஜவ்வு சுற்றிக்கொண்டு, பிறகு அது மடிந்து பீஜப்பையையும் சுற்றிக்கொண்டிருக்கும்; அதற்கு பீஜ சவ்வு (ட்யூனிகா வாஜினேலிஸ், Tunica vaginalis) என்று பேர்; அது முகமில்லாத ஓர் பை; அதற்குள் ஜலம் சேர்ந்தால், நீரண்டம் எனப் பேர் பெறும். மெத்த சிறிதான இந்திரியக்குழல்கள் (ட்யூபியுலே ஸெமினிபிரை, Tubuli seminiferi) சேர்ந்து, பீஜம் ஏற்படுகின்றது. இந்திரியக்குழல்களானவை, ஒன்ரோடொன்று சேர்ந்து; பின்னிக்கொண்டு, முடிவில் ஒரே குழலாக ஏற்படும்; அந்தக் குழலுக்கு விந்துவாகி. இந்திரியதாரை, (வாஸ்டி ரென்ஸ், Vas deferens) என்று பேர் விந்துவாகியானது, பீஜக்கோடியில் பின்புறமாக மெலுக்கச் சென்று, பீஜக்கொடித்துவாரம் வழியாய் வயிற்றுக்குட் சென்று மூத்திரப் பைக்குப் பின்புறமாக அதின் அடிக்கிறங்கி, அந்த ஸ்தானத்திலிருக்கிற இந்திரியக்கமலக்குழலோடு சேர்ந்து ஒரே குழலாகி, நீர்த்தாரையில் முடிந்துவிடும். அதற்கு ஸ்கலிதக்குழல் (இஜாகியுலெடோரி டக்ட், Ejaculatory duct) என்று பேர். சுக்கிலமானது பீஜத்தில் ஜனித்து, விந்துவாகிவழியால் வயிற்லுக்குடசென்று மூத்திரப்பைக்கு அடியிலிறங்கி, இந்திரியகமலங்களில் தங்கியிருக்கும். ஸம்யோககாலங்களில் அது வெளிப்பட்டு, நீர்த்தாரை வழியாக இறங்கி, யோனியில் ஸ்கலிதமாகிவிடுகின்றது.

இந்திரியம். சுக்கிலம். விந்து. தாது. இரேதஸ். (ஸீமென், Semen; ஸ்பெரம், Sperem) —இந்திரியத்தைப் பூதக்கண்ணுடியால் பார்வையிட்டால், அதில் புழுக்கள் அகப்படும், அவைகளுக்கு விந்துக்கிருமிகள் (ஸ்பெர்மெடோஜோவா, Spermatozoa) என்று பேர். அது பெருத்த

சிரஸோடும், நீண்ட வாலோடுமிருக்கும். விந்துக்கிருமிகள், நாதத்தோடு சேர்ந்து, கருப்பற்றும்படிச் செய்யும்.

பெண்ணின் இடைக்குழி

(ப்பீமேல் பெல்விஸ், FEMALE PELVIS)

ஸ்திரீகளுக்கு இடைக்குழியில், மூத்திரப்பை, யோனி, கருப்பை, மலக்குடல் ஆகிய இவைகளிருக்கின்றன.

மூத்திரப்பை. (பிளாடர், Bladder)—இது பியூபிஸ் எலும்புக்குப் பின்னும், கருப்பைக்கு முன்னுமாக, யோனியின்மேல் படிந்திருக்கும். நீர்த்தாரை, சுமார் $1\frac{1}{2}$-அங்குலப் பிரமாணமுள்ளதாய், யோனியின் மேற் படிந்து, பியூபிக் ஆர்ச் என்னும் வளைவுக்கடியில் வந்து முடிந்திருக்கும்.

யோனி. (வெஜைன, Vagina).—ஜவ்வும் சதைகளுஞ் சேர்ந்து ஏற்பட்ட யோனியானது, சிலருக்குச் சின்னதாயும், சிலருக்கு நீண்டுமிருக்கும், ஆனால் ஏகதேசம் 56-அங்குலம் நீண்டு, வாய் சுருங்கியும், அகத்தில் கருப்பையின் கழுத்தைச் சுற்றிக்கொண்டுமிருக்கும். யோனிக்குள் ஜவ்வு மடிந்து நீண்டிருக்கும்.

கருப்பை. கர்ப்பாஸயம். (யூட்ரஸ், Uterus).—இது தட்டையாய் மேற்புறம் அகன்று விரிந்தும், கீழ்ப்புறம் உருண்டு சிறுத்து மலக்குடலுக்கும், மூத்திரப்பைக்கும் மத்தியில் தொங்கிக்கொண்டிருக்கும். இதின் அகன்ற இடத்துக்கு, அடி (பண்டஸ், Fundus) என்றும்—மத்திய பாகத்துக்கு, உடல் (பாடி, Body) என்றும்—சிறுத்திருக்கிற இடத்துக்கு, கழுத்து (நெக், Neck)—என்றும்—துவாரத்துக்கு வாய் (ஆஸ்யூடிரை, Os-uteri) என்றும் பேர். அந்த வாயானது, பிள்ளை பெற்றவளில் நீண்ட விடைவாயும், பெறாதவளில் விருத்தமாயும் இருக்கும. வாய்க்கு இருபுறமாய் இருக்கிற மேடுகளுக்கு உதடுகள் (லிப்ஸ், Lips) என்று பேர். கருப்பையை நெடுகப் பிளந்துப் பார்வையிட்டால், உள்ளே முக்கோண ரூபமுடைய ஒரு பள்ளம் காணப்படும்; அதற்கு கருக்குழி (காவிடி ஆவ் தி யூட்ரஸ், Cavity of the Uterus) என்று பேர். கருக்குழியின் ஓர் மூலையானது கருப்பையானது கருப்பையின் வாயோடும், மற்ற இரண்டு மூலைகள் சினைப்பாதைகளோடும், சம்பந்தப்பட்டிருக்கும் சுவாபீகஸ் திதியில், கருப்பையானது, நீளத்தில்-3 அகலத்தில்-2 தளத்தில்-1. அங்குலமுள்ளதாயிருக்கும்; பிரவிடையாகிறவயதில், கருப்பையின் எடை $1\frac{1}{2}$-அவுன்ஸ் ஆகவும், சந்ததியுடையவளுக்கு 2-3-அவுன்ஸ் ஆகவும், பூரண கர்ப்பமுடையவளுக்கு 2-4-அவுன்ஸ் ஆகவுமிருக்கும்.

கருப்பையைச் சேர்ந்த உறுப்புகள்

(அப்பென்டெஜெஸ் ஆவ் தி யூடிரஸ், APPENDAGES OF THE UTERUS.)

சினைப்பாதை, சினைப்பை ஆகிய இவைகளும் கருப்பையைச் சேர்ந்த உறுப்புகளாகின்றன.

சினைப்பாதை. நாதவாகி. நாதக்குழல். (பெலோபியன் டியூப், Fallopian tube. ஓவிடக்ட், Oviduct).—இது பக்கத்துக்கொன்ருக, தாரையைப்போல் நீண்டு, ஒரு முனைக்கருப்பையின்மேல் முனையோடு கூடியும், மற்றொன்று (பிம்பிரியேடென் எகிஸ்ட்ரமிடி, Fimbriated extremity) குஞ்சம்போல் விரிந்து அந்தரமாயும், 4-5-அங்குலம் நீளமுள்ளதாயும், உட்துவாரம் மெத்த சன்னமுள்ளதாய், கருக்குழியோடுச் சம்பந்தப்பட்டுமிருக்கும். குஞ்சமுனையானது சினைப்பையோடு ஒரு நரம்பால் சேர்ந்திருக்கும்.

சினைப்பைகள். கருக்கூடுகள். நாதாஸயங்கள். முட்டைப்பைகள். (ஓவெரீஸ், Ovaries).—இவைகள் இலுப்பைக் கொட்டையைப்போல், உருண்டு, வெள்ளைநிறமாய், கருப்பையின் பக்கத்துக்கொன்ருய் அமைந்திருக்கும். ஒரு முனை கருப்பையோடும். மற்றொரு முனை நாதக்குழலோடுஞ் சேர்ந்திருக்கும். இவைகள் ஸ்திரீகளுக்கு பீஜங்கள். சினைப்பையை அறுத்துப் பார்வையிட்டால், சிறிய அணுக்கள் காணப்படும், அவைகளுக்கு கிராபியன் முட்டைகள் நாதக்குமிழ்கள் (கிருபியன் வெஸிகில்ஸ், Graafian vesicles) என்று பேர். ஒவ்வொரு சினைப்பையில், சுமார் 10-20-30 நன்ருக ஏற்பட்ட முட்டைகளிலிருக்கும்; அவைகள் ஜலப்பைகள்போல் காணப்படும். கிருபியன் முட்டையிலொன்றைப் பூதக்கண்ணுடியால் பார்வையிட்டால், அகத்தில் சிறிய குமிழ் ஒன்று காணப்படும், அதற்கு நாதம் (ஒவம், Ovum; ஒவியூல், Ovule ; ஜெரம், Gerum) என்று பேர். அத்த நாதத்துக்குள் மங்கலான ஒரு சிறிய புள்ளியிருக்கும், அதற்கு கரு, நாதத்தின் புள்ளி (ஜெர்மினைல் ஸ்பாடி, Germinal spot) என்று பேர். நாதத்தோடு விந்துக்கிருமிகள் சேர்ந்தால், கரு தரிக்கும், (இம்பிரக்னேஷன் Impregnation ; கன்ஸெப்ஷன், Conception ; பிகன்டேஷன், Fecundation) அதற்கு, கருப்பற்றுதல், கருக்கூடுதல், கருக்கொள்ளுதல், கருத்தங்கச்செய்தல் என்றுஞ் சொல்லுவர். மாதாந்திர ருதுகாலத்தில் கிருபியன்முட்டையில் ஒன்று பருத்து, முற்றி, வெடிக்கும், அத்தருணத்தில் குஞ்சமுனையானது, சினைப்பையைக் கவ்விப் பிடிக்கும் (மார்ஸஸ் டையாபொலை, Morsus diaboli). அப்போது வெளிப்படுகிற நாதமானது சினைப்பாதையிலிறங்கி அதன்வழியாக வந்து கருக்குழியில் விழுந்து சுரோணித்தோடு கலந்து ஸ்கலிதமாகிவிடும்; நாதம் வெளிப்படுகிற காகிங்களில் கிரீடித்தால், கரு தரிக்குமென்று சித்தாந்தம்.

ஸ்திரீயின் புறஸ்தான ஜனனேந்திரியங்கள்

(எகிஸ்டர்னல் ஆர்கன்ஸ் ஆவ் ஜெனரேஷன், EXTERNAL ORGANS OF GENERATION).

பிரதிபதங்கள்:—அல்குல், உபஸ்தம், பெண்குறி, குய்யம்.

அல்குல் ஸ்தானத்திலிருக்கிற உறுப்புகளாகிய கடிதடம், நிதம்பங்கள், புழக்கை, சந்திரநாடி, யோனிலிங்கம், நீர்த்துவாரம், யோனிவாசல் ஆகிய இவைகளுக்கு அல்குல் என்று பொதுப்பேர்.

கடிதடம். (மான்ஸ் வினரிஸ், Mons Veneris).—அடிவயற்றின் கீழ் மேடாய், மிருதுவாய் இருக்கிற ஸ்தானத்துக்கு, கடிதடம் என்று

பேர், அது கடிதடஸ்தான எலும்பின்மேற்படிந்து, கொழுப்படைந்து, ரோமங்கள் முளைந்திருக்கும்.

நிதம்பங்கள். உதடுகள். (லேபிய மெஜோர, Labia majora).—அல்குலில் சருமமானது மடிந்து, நீண்டு, பக்கத்துக்கொன்றாயிருக்கிற உறுப்புகளுக்கு உதடுகளென்று சொல்வது வழக்கம். இவைகளில் கொழுப்படைந்து ரோமங்கள் முளைத்திருக்கும். உதடுகளின் மத்தியமாயிருக்கிற பிளப்புக்கு புழக்கை. அல்குல்பிளவு. (வல்வா, Vulva) என்று பேர். நிதம்பங்களானவை, கீழுக்கிறங்கி, ஒன்றோடொன்று கூடியிருக்கிற ஸ்தானத்துக்கு, போர்ஸெட் (Fourchette) என்று பேர். அது பிரஸவகாலங்களில், சிசுவின் சிரசு வெளிப்படும்போது, கிழிந்துவிடும்; ஆகையால் மருத்துவ ஸ்திரீகள் அதைக் கையால் தாங்கிக்கொண்டிருக்கவேண்டியது. ஆஸனத்துக்கும், போர்ஸெட் என்னும் ஸ்தானத்துக்கு மத்தியிலிருக்கிற இடத்துக்கு (பகம்பெரினியம் Perinæum) என்று பேர்; அது சுமார் 1-அங்குலத்துக்கு அதிகமிராது.

சந்திரநாடி. (நிம்பி, Nymphæ; லேபிய மைனோரா, Labia minora).—உதடுகளுக்கு அகத்தில் ஜவ்வு மடிந்து நீண்டிருக்கும், அதற்கு சந்திரநாடி என்று பேர். இந்தப் பேர்கள் கொக்கோக சாஸ்திரத்தில் காணலாம்.

யோனிலிங்கம். மணிமூக்கு நுனி. சுழிமுனை. மொக்குள் மன்மதன் வெற்றிக்குடை. (கிளிடோரிஸ், Clitoris).—கடிதடத்துக்கடியில், கூர்மையாய், இருக்கிற உறுப்புக்கு, யோனிலிங்கமென்று பேர். அதை ஆண்குறிக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். அதை அங்குலியாற்றடவினால், ஸ்திரீகளுக்குச் சுரதவின்பமுண்டாகும்.

யோனிவாஸல். யோனிலிங்கத்துக்கு, 1-அங்குலம் பின்னிட்டு, அண்டாகாரமாய் இருக்கிற துவாரத்துக்கு, யோனிவாசல் என்று பேர். கன்னியழியாதவர்களுக்கு, யோனிவாசலைச் சந்திரப்பிறைப்போலொத்த ஜவ்வு மூடிக்கொண்டிருக்கும்; அதற்கு ஹைமென் ஜவ்வு (Hymen) என்று பேர். அந்த ஜவ்வில் துவாரமுண்டு. அதன் வழியாக சுரோணிதம் வெளிப்படும்; துவாரமில்லாதிருந்தால், சூதகம் அடைபட்டு மெத்த உபத்திரவம் காணும். ஜவ்வு பலரூபமாய் இருக்கும்; சிலருக்கு இல்லாமலிருப்பதுமுண்டு.

மூந்திரதாரை. (யூரித்ரா, Urethra).—யோனிவாசலுக்கு மேலும், லிங்கத்துக்குக் கீழுமாகவிருக்கிற பள்ளத்தில், மூத்திரதாரையின் துவாரம் காணப்படும்.

ஸ்தனங்கள்

(மாம்மெரி கிளாண்ட்ஸ், MAMMARY GLANDS)

பிரதிபதங்கள்.—கொங்கைகள், முலைகள்.

ஸ்தனங்கள் கோளங்களால் (glands) ஏற்பட்டிருக்கும். கோளங்களின் குழல்கள் ஒன்றோடொன்று சேர்ந்து பருத்து, முடிவில், 15-25-குழல்களாகி, முலைக்காம்பில் முடியும். முலைக்காம்பை பூதக்கண்ணாடியால் பார்த்தால், பால் வடிகிற குழல்கள் காணப்படும்; முலைக்காம்பை கறுத்த

ரேகை (ஏரியோல, Areola) ஒன்று சுற்றிக்கொண்டிருக்கும், அதில் சிறிய கொப்புளங்கள் காணப்படும். (ஸெபிபெரஸ் கிளாண்ட்ஸ்; Sebiparous glands) அவைகளிலிருந்து ஓர்வித எண்ணெய்ப்பசைக் கசிந்துகொண்டிருக்கும்.

---

10. அத்தியாயம்

கருப்பிண்டம்

(பீடஸ், FŒTUS)

கருப்பையிலிருக்கிற பிண்டத்தின் நிலை. பிண்டமானது உட்கார்ந்து கொண்டிருக்கிறதென்றும், பிறகு பிரசூதவாயுவால், தலைகீழாகத் தள்ளப்படுகிறதென்றும், முன்னோர் சொல்லுவர்; அந்த விஷயம், அனுபோகத்தில் நிசமாகவில்லை. எப்போதும் பிண்டமானது, தலைகீழும் கால்கள் மேலுமாகவிருக்கும்; கைகள் கட்டி மார்போடணைந்திருக்கும்; முழங்கால்கள் மேலுக்குயர்ந்து, பாதங்கள் ஒன்றுமேலொன்றாக குறுக்கிட்டமைந்திருக்கும்; முதுகுஞ் சிரசும் முன்னுக்கு வளைந்திருக்கும். கருதரித்து, 6-மாதஞ் சென்றபிறகு, பிண்டத்தின் நிலையை அறியலாமேயொழிய, அதற்கு முன்னுதாய், ஸ்தானநிலையை நிதானித்துச் சொல்லுவது பிரயாசை.

அப்போது ஜனித்த சிசுவானது, சுமார் 7-பவுன் இருக்கும். 17 அங்குலம் உயரமிருக்கும்; சிரசு பருத்து பின்னுக்கு நீண்டிருக்கும்; முகம் சிறுத்திருக்கும்; கைகள் பூரித்திருக்கும்; மார்பு அகன்றிருக்கும், யகிர்த் கண்டம் பாரியாயிருப்பதால், மேல்வயிறு பருத்தும், அடிவயிறு சிறுத்துமிருக்கும்; மற்ற அவயவங்களைப்பார்க்கிலும், கால்கள் சுஷ்க்கித்திருக்கும்; குறிகள் பெருத்திருக்கும்; விழிகள் பாரியாயிருக்கும்; கருப்பையிலிருக்கிறபோது, கிஷ்ணமண்டலத்துவாரம் (பியுபில், pupil) ஜவ்வால் அடைத்திருக்கும்; அந்த ஜவ்வு, 7-ம் மாதம் மறைந்துவிடும். சிசுவில் சுவாஸம் ஏற்படாததற்கு முன், நுரையீரல் கெட்டியாயும், கனமாயுமிருக்கும், ஜலத்தில் போட்டால் அமுழ்ந்திவிடும். ஸ்வாஸம் விட்டதாயிருந்தால் மிதக்கும். கருப்பிண்ட இருதயத்தில், சிரவங்களுக்கு மத்தியமிருக்கிற அடைப்பில் ஒரு துவாரமுண்டு. (பொரேமன் ஒவேலி. Foramen ovalæ); அந்த துவாரம் சிசு ஜன்மித்தபிறகு, அடைந்துபோகும், 8-9-நாட்களுக் கதிகப்பட்டிருப்பது அரிது; ஒருவேளை அடையாமலிருந்தால், கறுத்தரத்தம், சிவந்த ரத்தத்தோடு கலந்து, தேகம் நீலநிறமாகும், இந்த ஸ்திதிக்கு ஸையனோஸிஸ் (Cyanosis) என்று பேர். கருப்பிண்டத்தில், பீஜங்களானவை, வயிற்றுக்குள் மூத்திரக்குண்டிக்காய்களுக்கெதிரில் இருக்கும்; 7-ம் மாதம், மெதுவாய் கீழுக்சிறங்கி, பீஜக்கொடிதுவாரங்களின் வழியாக வந்து, வெளிப்பட்டு, அண்டகோசத்தி லிறங்கிவிடும்.

2-வது புஸ்தகம்

BOOK 11

சாரீரவியாபார சாஸ்திரம்

பிசியாலொஜி Physiology

(in Tamil)

மானிட சரீரத்திலிருக்கிற உறுப்புகளின் சுக ஸ்திதி தொழிலைக் குறித்து விவரிக்கின்ற நூலுக்கு, சாரீர வியாபார சாஸ்திரம் என்று பேர். இது "சுகரணவாதம்" என்றும் சொல்லப்படுகின்றது. பிரதி உறுப்புக்குந் தொழிலுண்டு:—மூளையானது புத்தியைத் தருகின்றது; இருதயமானது ரத்தத்தை தேகமெங்கும் பரவச்செய்கின்றது; நுரையீரலானது கெட்ட ரத்தத்தைப் பரிசுத்தப்படுத்துகின்றது; தீனிப்பையானது புசிக்கிற அன்னபானுதிகளைத் தகிக்கச்செய்கின்றது; யகிர்த்கண்டமானது பித்தநீரைச் சுரப்பிக்கின்றது; சிறுகுடலானது அன்னரசத்தைக் கிரகித்து, அதை ரத்தத்தில் சேர்த்து விடுகின்றது; மூத்திரகுண்டிக்காய்களும், சருமமும், ரத்தத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்களை மூத்திரம், வியர்வை ஆகிய இவைகளின் வழியாக வெளிப்படுத்தி விடுகின்றன; பீஜங்களானவை இந்திரியத்தைச் சுரப்பிக்கின்றன; கருப்பையானது மாதாந்திர ருதுவைச் சுரப்பித்துக் கருவை வளர்க்கின்றது. இவ்விதமாக அந்தந்த உறுப்புக்குத் தொழில் வெவ்வேறுண்டு. உறுப்புகளின் தொழில் கிரமமாய் நடக்கிறவரையில் தேஹமும் சவுக்கிய ஸ்திதியிலிருக்கும்; அவைகளின் தொழில் எப்போது விகற்கப்படுகின்றதோ, அப்போதே தேஹத்துக்கு அசௌக்கியம் நேரிடுகின்றது, அதுவே வியாதி என்று சொல்லப்படும்.

---

1. அத்தியாயம்

ரத்தம்

பிளட், THE BLOOD

ரத்தமானது சரீரத்துக்குப் பிரதானமாயிருக்கிற வஸ்து; அதனால் நூதன சம்பவமும் (டிவலப்மெண்ட், Development), வளர்த்தியும் (குரோத், Growth), சமானமாக்கிக் கொள்ளுகையும் (அஸ்ஸிமிலேஷன்,

Asslmilation) உண்டாகின்றன. ஜீவனிலைக்குக் காரணம் ரத்தமேயாம். அந்த ரத்தமானது உறுப்புகளால் ஸமரஸப்படுகின்றது. ரத்தம் தேகத்தைச் சுழன்றுக்கொண் டிருக்கும்போது, திரவரூபமாயிருக்கும். அதைத் தேஹத்திலிருந்து வெளிப்படுத்தினால், உறைந்துவிடும். ரத்தத்தில் ஜலமும், அணுக்களுமுண்டு. ஜலத்துக்கு ரத்தநீர் (லிகர் ஸான்குவினிஸ், Liquor sanguinis) என்றும், அணுக்களுக்கு ரத்த அணுக்கள் (கிளாபியூல்ஸ் Globules, என்று பேர். ரத்தநீரில் சீரம் (Serum) என்கிற ஜலமும், பைபிரின் (Fibrin) லிமப், (Lymph) என்கிற இழைகளையொத்த பதார்த்தமுமிருக்கின்றன. ரத்தம் உறையும்போது, பசையானது ரத்த அணுக்களைச் சேர்த்து இறுக்கிக்கொள்ளும்; அதற்கு கிளாட் (Clot) என்று பேர். சீரமானது கசிந்து கிளாட்டைச் சூழ்ந்துகொண்டிருக்கும். சீரத்தில் அல்பியூமென் (Albumen) என்னும் பதார்த்தமும், சில உப்புகளும், கொஞ்சம் கொழுப்பும் இருக்கின்றன. கிளாட் என்னும் உறைந்த ரத்தத்தில், பைபிரின் என்னும் பசையான பதார்த்தமும், ரத்த அணுக்களும் இருக்கின்றன. ரத்த அணுக்களில், இரண்டு விதங்களுண்டு; அவைகளில் ஒன்று சிறுத்துச் சிவப்பாய், பக்கங்கள் அழுந்தி விஸ்தாரமாய் இருக்கும். மற்றொன்று பெருத்து, வெள்ளையாய், குறைந்திருக்கும். சிவந்த அணுக்களே ரத்தத்துக்கு நிறத்தைக் கொடுக்கின்றன. அவைகளில் அயம் உண்டு அந்த அயம் குறைவதே பாண்டுரோகமாம். ஜலத்தைப் பார்க்கிலும் ரத்தம் அதிக கனம்; புருஷரைவிட ஸ்திரீகளுக்கு ரத்தம் கனத்தில் குறைந்திருக்கும். ரத்தத்திலிருக்கிற ஜலமானது காலத்துக்குக் காலம் பேதப்படும் போஜனத்தினாலும், திரிச்சலினாலும், காற்றினாலும், அதன் அளவு விகற்பப்படும். ரத்தத்தின் பிரயோஜனமானது சர்வாங்கத்தையும் போஷித்து ஆதரிக்கின்றது. தேஹபோஷாப்புக்குடைய பதார்த்தங்களெல்லாம் ரத்தத்திலிருப்பதால், அது தேஹத்தில் வியாபிக்கும்போது, அந்தந்த உறுப்புகள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை கிரகித்துக்கொள்ளும்; அல்லது உறுப்புகளுக்கு வேண்டிய பதார்த்தங்களை ரத்தம் கொண்டுபோய் கொடுக்கின்றதென்றும் சொல்லலாம். தேஹத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்களைச் சேர்த்துக்கொண்டு, ரத்த பரிசுத்த ஸ்தானமாகிய நுரையீரலுக்குக் கொண்டுபோகின்றது. நாடியிலிருக்கிற ரத்தம் அதிக சிவப்பாயிருக்கும், அது நல்ல ரத்தம். நாளத்திலிருப்பது கறுத்திருக்கும் அது கெட்ட ரத்தம். நாடி அறுபட்டால், பீச்சாங்குழலிலிருந்து பீரிடுவதுபோல் ரத்தம் பீரிட்டோடும் (Gets out); நாளத்திலிருந்து ரத்தம் கசியும் (oozes out). மானிடதேஹத்தில் சுமார் 30-பவுன் ரத்தமுண்டு ஆனால் இந்த நிதான அளவு, தேஹக்கூறுக்குத் தக்கபடி வித்தியாசப்படும். இருதயத்தினுடைய அறைகள் சுமார் 4-அவுன்ஸ் ரத்தம் கொள்ளும். சரீர சுகத்திலிருக்கிற புருஷருக்கு, இருதயமானது ஒரு மின்னிட்டுக்குச் சராசரி, 70-முதல் 80 ஆவர்த்தி அடித்துக்கொள்ளும்; ஆனால் குழந்தைகளுக்கு நாடி அதித் தீவிரமாக ஓடும். அது 120 முதல் 140 தாய் யிருக்கும், ஸ்திரீகளுக்கு இருதய நடை அதிகப்பட்டிருக்கும் நடக்கும்போதும், நிற்கும்போதும், இருதயம் சீக்கிரமாயும், படுத்துக்கொண்டிருக்கும்போதும், நித்திரைசெய்யும்போதும் மெதுவாயும் நடக்கும்.

இருதயத்தின் தொழில்.—இருதயத்துக்கு கமலம்போல் விரிந்து குவிகிற இரண்டு தொழிலுண்டு. மேல் அறைகள் இரண்டும். ஏககாலத்தில் விரிந்து, ஏககாலத்தில் குவியும்; கீழறைகளும் அவ்விதமாகவே விரிந்து

குவியும். மேல் அறைகள் விரியும்போது, கீழ் அறைகள் குவியும்; கீழ் அறைகள் விரியும்போது மேல் அறைகள் குவியும்

ரத்தச்சுழல். (ஸர்குலேஷன் ஆவ் தி பிளட், circulation of the blood).—இருதயத்தின் இடதுபக்கமிருக்கிற சிவந்தரத்தமானது, தேஹமெங்கும் பரவி, உறுப்புகளைப் போஷிக்கும். தேகத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்கள் ரத்தத்திற்கலந்து, ரத்தம் கறுத்துவிடும். இவ்விதமாய்க் கறுத்துக் கெட்டுப்போன ரத்தமானது, இரண்டு பெருநாளங்கள் (வீனிகேவி, Venæ cavæ) வழியாய், இருதயத்தின் வலது சிரவத்துக்கு (ரயிட் ஆரிகில், Right Auricle) வருகின்றது. அதிலிருந்து, வலது சடரத்துக்கு (ரயிட் வென்டிரிகல்) Right Ventricle) இறங்கும். பிறகு அதிலிருந்து, புப்புஸ நாடிவழியாய் ஸ்வாஸப்பைக்குட் செல்லும். சுவாஸப்பையில் இந்த கெட்டரத்தமானது, காற்று வாடைபட்டு தோஷம் நீங்கி, சிவந்து, நல்லரத்தமாகிவிடும். இவ்வாறு பரிசுத்தப்பட்ட ரத்தமானது பிறகு புப்புஸ நாளங்கள் (பல்மொனெரி வெயின்ஸ், Pulmonary Veins) வழியாய் இருதயத்தின் இடது சிரவத்துக்கு (லெப்ட் ஆரிகல், Left Auricle) வரும்; அதிலிருந்து இடது சடரத்திலிறங்கும். பிறகு அதிலிருந்து பெருநாடி (எயார்ட, Aorta) வழியாகச்சென்று, தேகமெங்கும் வியாபித்து, கெட்டு, மறுபடியும் இருதயத்திற்கு வருகின்றது. இவ்விதமாக ரத்தமானது, சதாகாலமும் தேகத்தைச் சுற்றிக்கொண்டேயிருக்கின்றது. ரத்த ஓட்டம் இருக்கிறவரையில் பிராணனிருக்கும், அது நின்றுவிட்டால் பிராணன் போய்விடும்.

தந்துகிகள். (காபில்லேரிஸ், Capillaris). நாடிகளின் அந்தியத்திலும், நாளங்களின் ஆரம்பத்திலும், இருக்கிற சிறிய குழல்களுக்கு தந்துகிகள் என்று பேர் அவைகள் ஊசி முனைபுக இடமில்லாமல், அவ்வளவு நெருக்கமுற்று தேஹமெங்கும், வியாபித்திருக்கும். பூதக்கண்ணாடி கொண்டு பார்வையிட்டால் கண்களுக் ககப்படும். தந்துகிகளின் மத்தியில், உறுப்புகளின் பிரதான பதார்த்தங்கள் அடங்கி இருக்கும் அந்தச் சிறிய நரம்புகளாற்றான் தேஹத்துக்குரிய சகல வியாபாரங்களும் நடக்கின்றன. பிரயோஜனமான வடி நீர்களும் (ஸிக்கிரீஷன்ஸ், Secretions), துர்மலங்களாகிய அப்பிரயோஜன விசர்க்க நீர்களும் (எக்ஸ்கிரீஷன்ஸ், Excretions) அந்த தந்துகிகளிலேயே உண்டாகின்றன.

---

2. அத்தியாயம்

சுவாஸம்

ரெஸ்பரேஷன், RESPIRATION.

நாஸி, வாய் ஆகிய இவைகளின் வழியாகக் காற்று சுவாஸப்பைக்குட் பிரவேசிக்கும்படியாயும், வெளிக்கு வரும்படியாயும் செய்துகொண்டிருக்கிற தொழிலுக்கு ஸ்வாஸம் என்று பேர், ஸ்வாஸத்தை நடப்பிக்கிற உறுப்புகள் பிரதானமாய் நுரையீரல்கள், ஸ்வாஸத்தால், நுரையீரல்

களிலிருக்கிற கெட்ட ரத்தமானது நல்ல ரத்தமாகி விடுகிறது. உஸ்வாஸத்தில் [=ஸுவாஸம் உள்ளுக்கு வாங்குதல்] (இன்ஸ்பைரேஷன்; Inspiration) சுவாஸப்பையானது உப்பும். நிஸ்வாஸத்தில் [=சுவாசம் வெளிக்கு விடுதல்] (எகிஸ்பைரேஷன், Expiration) சுருங்கும் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிற வாயுவில் 20 பங்கு, ஆக்ஸிஜென் (Ozygen) என்கிற பிராணவாயுவும் 80 பங்கு நைட்ரோஜென் (Nitrogen) என்கிற சமான வாயுவும், கொஞ்சம் கார்போனிக் ஆஸிட் காஸ் (Carbonic acid gas) என்கிற கெட்டவாயும், கொஞ்சம் நீராவியும், கலந்திருக்கின்றன. ஸுவாஸத்தால் வாயுவில் பேதமுண்டாகின்றது; வாயு ஸுவாஸப்பைக்குட் போனபிறகு அதிலிருக்கிற ஆக்ஸிஜென் வாயுவை, ரத்தம் கிரகித்துக்கொள்ளும்; ரத்தத்திலிருக்கிற கார்ப்பன் என்கிற கரியோடு அது சம்பந்தப்பட்டு கார்போனிக் ஆஸிட் என்கிற வாயுவாகி, வெளிப்படுகின்றது. நிஸ்வாஸவாயுவில் கொஞ்சம் ஆவி நீரும் வெளிப்படும்; அற்ப உஷ்ணமாயுமிருக்கும். நுரையீரல்களில் 300 கன அங்குலம் (கியூபிக் இன்செஸ் Cubic inches) பிரமாணமுள்ள வாயுவு அடங்கும். அது 1-காலனுக்கு (Gallon) கொஞ்சம் அதிகம். இயல்பாய் உஸ்வாஸத்தில் 30-கன அங்குலவாயு சுவாஸப்பைக்குட் செல்லும்; நிஸ்வாஸத்திலும் அப்பிரமாணமாகவே வெளிப்படும். பெருமூச்செறியும்போது, 100 அங்குலத்துக்கதிகமான வாயு புப்புசத்துக்குட் பிரவேசிக்கும். ஒரு மினிட்டில், சுவாஸம் சுமார் 18 முதல் 20 ஆவர்த்திபறியும், ஆனால் இது வயது, ஆண் பெண், தேஹக்கூறு, காலம், ஆகிய இவைகட்குத் தக்கபடி வித்தியாசப்படும்.

இருமலாவது, புப்புஸத்திலும் சுவாஸக்குழவிலு மிருக்கிற மிகுசளி, முதலியவைகளை வெளிப்படுத்துகிற சேஷ்டையாகும்.

பெருமூச்சு, தேம்பி அழுதல், கொட்டாவி விடுதல் ஆகிய இச்செய்கைகள், உஸ்வாஸ பேதத்தா லுண்டாகின்றன.

இருமல், தும்மல், நகைப்பு, விக்கல், காறித்துப்பல் ஆகிய இவைகள் நிஸ்வாஸபேதத்தா லுண்டாகின்றன.

தேககாங்கை (அனிமல் ஹீட், Animal heat). சரீர உஷ்ணமானது, சுவாஸத்தாலும், மாமிசாதிகளுடைய சலனத்தாலும் ஜனிக்கின்றது. மானிடதேக உஷ்ணம், 98 முதல் 100 டிக்கிரி அளவுள்ளதாய் இருக்கும்; மனிதன் எந்ததேசம் போனபோதிலும், எவ்விடத்திலிருந்தபோதிலும், இந்தகிரம சங்கியை விகற்பப்படாது. ரத்தஉஷ்ணம், சுமார் 100 டிக்கிரி அளவுள்ளதாயிருக்கும். பெரியவர்களைப் பார்க்கிலும் குழந்தைகளுக்கு தேஹஞ்சூடாயிருக்கும். சில வியாதிகளில் தேஹ உஷ்ணம் அதிகப்படும், வாந்திபேதியில் குறையும், நித்திரையிலும் குறைந்துபோகின்றது.

---

3. அத்தியாயம்

ஜீரணம்

டைஜெஷன், DIGESTJON

தேஹபோஷணைக்காகப் புசிக்கப்பட்ட பதாரத்தங்களைப் பக்குவப்படுத்தி, அதிலிருக்கிற ரஸம் ரத்தத்திற்போய்ச் சேரும்படிசெய்கிற தொழி

லுக்கு, ஜீரணம் என்று பேர். அன்னபானாதிகள் தஹனமாகி, தேஹத்தைப் போஷிக்கிற விதமாவது:—

ஆகாரம் வாய்க்குட் சென்றபிறகு, பற்களால் மெல்லப்பட்டு (மாஸ்டிகேஷன், Mastication) மசியும்போது, வாய் நீர் அதிகமாகச் சுரந்து (இன்ஸாலிவேஷன், Insalivation) அதனுடன் சேர்ந்து மிருதுவாகும்; அப்படி மிருதுவான பிறகு, அந்த கவளம் விழுங்கப்பட்டு (டிக்ளுடிஷன், Diglutition) தொண்டைக்குட்சென்று, அன்னவாகிவழியாய் கீழிறங்கி, தீனிப்பையிற்போய் விழும். ஒரு தவணை சாப்பிடுகிற அன்னபானாதிகளெல்லாம் இம்முறையாய் தீனிப்பையிற்போய் சேர்ந்தபிறகு, தீனிப்பையானது அதைப் பிசைந்து நன்றாய் மசியும்படி செய்கிறது (கைமிபிகேஷன், Chymification, அத்தருணத்தில், தீனிப்பையிலிருந்து ஜாடராக்கினி (காஸ்ட்ரிக் ஜூஸ், Gastric juice) என்னும் புளிப்புரசம் ஜனித்து, அத்துடன் மிஸ்ரமித்தபின்; அவ்வாகாரத்தின் நிறம் சாம்பல் அல்லது வெள்ளையாய் மாறும். இப்படிச் சகலமுஞ்சேர்ந்து, உண்டாகிறதற்கு, அன்னபாகம் (கைம், Chyme) என்று பேர். அந்தப் பாகமானது, பைலோரிக் (Pyloric) துவாரத்தின்வழியாக வந்து, துணைக்குக்ஷியி லிறங்கிறபோது அவ்விடத்தில் பித்தநீரும் (பைல், Bile), கணையநீரும் (பான்கிரியாடிக் ஜூஸ், Pancryatic juice) வந்து மிஸ்ரமிக்கும்; பின்பு அது ரஸம்வேறு திப்பிவேறாய்ப் பிரியும். அவ்வாறு பிறிந்த ரஸத்துக்கு அன்னரசம் (கைல், Chyle) என்றும், திப்பிக்கு மலம் (எக்ஸ்கிரமெண்ட், Excrement) என்றும் பேர். இவைகள் சிறுகுடல் மார்க்கமாகப் பிரிந்து வரும்போது, ரஸாயனிகள் (லாக்டியல்ஸ், Lactials) அன்னரசத்தைக் கிரகித்து, ரஸதாரைக்குக் (தொராஸிக் டக்ட், Thoracic duct) கொண்டுபோகும். அதிலிருந்து ரஸமானது மேலுக்கேறி, இடது புஜநாளத்தில் விழும். இவ்விதமாக அது கெட்ட ரத்தத்தோடு கலந்து, இருதயத்துக்குச்சென்று, பிறகு அதிலிருந்து புப்புசத்துக்குப் போய், ரத்தமாகி, தேஹத்தைப் போஷிக்கின்றது. திப்பியானது, சிறுகுடலிலிருந்து, பெருங்குடலுக்குவந்து, மலமாகி, குதத்துவாரம் வழியாய் வெளிப்பட்டுவிடும்.

ஒரு ஆவர்த்தி சாப்பிடுகிற போஜனமானது, ஜீரணமாக 3-4-மணி நேரஞ் செல்லும். சாப்பிட்ட உடனே ஆயாசமுண்டாகும்; ஏனெனில் நரம்புகளுடைய பலம் ஜீரண உறுப்புக்களுக்குப் போகின்றமையால், மாம்சங்களின் பலம் குறைந்து, தேஹத்தில் ஆயாசமுண்டாகின்றது. பதார்த்தங்களைச் செவ்வையாய்மென்று விழுங்கவேண்டும்; அப்படிச் செய்தால் ஜாடராக்கியானது; அவைகளுடன் செவ்வையாய் மிஸ்ரமித்து, சீக்கிரத்தில் தரித்துவிடும்; அப்படி தகனமாகாவிட்டால், அஜீரண முண்டாகும். பல்விழுந்தவர்களுக்கு, இவ்வியாதி யனுசரிக்கின்றது.

குடலுக்கு இரண்டுவித அசைவுகளுண்டு; ஒன்று கிருமி நகர்தல் போலும் (வெர்மிகியுலர் மோஷன், Vermicular motion), மற்றொரு பிசைகிறதன்மையைப்போலும் (பெரிஸ்ட்டல்டிக்மோஷன், Peritsialtic motion) இருக்கும்.

பசி. (ஹங்கா, Hunger). பசியானது, தேஹத்துக்குப் போஷணை வேண்டியதென அறிவிக்கிற ஓர்வித உணர்ச்சி; அந்த உணர்ச்சியானது, அன்னாசயத்திற் காணப்படும்.

தாகம் (தர்ஸ்ட், Thirst). தாஹமானது, ரத்தநீர் குறைவுபட்டிருக்கிறதை அறிவிக்கின்ற ஓர்வித உணர்ச்சி; அது வாயிலும், தொண்டையிலும் காணப்படும்.

4. அத்தியாயம்

சருமம். அதன் விஸர்க்க நீர்கள்

தி ஸ்கின் அன்ட் இட்ஸ் ஸிக்கிரீஷன், THE SKIN AND ITS SECRETION

சருமத்தின் மேற்புறையாகிய பீத்தோலுக்கு, உணர்ச்சியும் ரத்த நரம்புகளுமில்லை; அது அடித்தோலை ரக்ஷிக்கின்றது; தேஹத்தின்மேற் படுகிற வஸ்துக்களை உள்ளுக்குப் பிரவேசிக்கவொட்டாமல் ஓர்விதமாய்த் தடுக்கின்றது. இந்த குணமில்லாவிட்டால் நாம் தொடுகிற பாஷாணம் முதலிய விஷபதார்த்தங்களும், தேஹத்தின்மேற் படுகிற விஷக்காற்றுகளும், உட்சென்று, துர்க்குணஞ்செய்யும். சர்மத்துக்கு கிரகிக்குஞ் சக்தியிருக்கின்றது. ஆதலால் வைத்தியர்கள் மருந்துகளைச் சருமத்தின்மேல் தேய்த்து உள்ளுக்கிறங்கும்படி செய்கிறார்கள். சரீரநிறத்துக்குத் தக்கபடி, உஷ்ணம் தேஹத்தில் நிற்கும் கறுத்ததேஹம் சீக்கிரத்தில் உஷ்ணத்தை வெளிப்படுத்திவிடும். இந்தக் காரணத்தைப்பற்றித்தான், உஷ்ணப்பிரதேசிகள் கறுத்தும், சீதளப்பிரதேசிகள் வெளுத்தும் இருக்கிறார்கள்.

உட்தோலின் பிரயோஜனங்கள்.—உட்தோல் வியர்வையை உண்டாக்கி, அதன் மார்க்கமாக தேகத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்களை வெளிப்படுத்திவிடுகின்றது; வியர்வையால் தேஹஉஷ்ணமும் சமரஸப்படுகின்றது. தேஹம் அத்தியுஷ்ணங் கொண்டிருந்தால், வியர்வை அதிகப்பட்டுக் குளிர்ச்சியாகும். பதார்த்தங்களைக் கிறகிக்கிற தன்மையும், ஸ்பரிசத்தைக் கொடுக்கிற தன்மையும், உட்தோலிற்குண்டிருக்கிறது.

வியர்வையில் ஜலம், கறியுப்பு, சொற்பஅயம், ஓர்விதப்புளிப்பு முதலிய பதார்த்தங்கள் சேர்ந்திருக்கின்றன. இவைகளன்றி, காற்போனிக் ஆஸிட் காஸ் (Carbonic acid gas) என்னும் வாயுவும் வெளிப்படுகின்றது. மூத்திரகுண்டிக்காயும், சருமமும், தொழிலில் ஒன்றுக்கொன்று சம்பந்தித்திருக்கும். ஒன்றின்தொழில் மெதுவுண்டால், மற்றொன்றின் தொழில் அதிகரிக்கும். சவுக்கிய ஸ்திதியிலிருப்பவர்களுக்கு, நாள்தோறும் சுமார் 2-பவுன் வியர்வை வெளிப்படும்; ஆனால் உஷ்ணகாலத்திலும், நடந்து தேகம் அலுத்தபோதும், அதிக ரத்தம் சருமத்துக்குப் போகிறபடியால், அதிக வியர்வை காணும், அவ்வியர்வையால் ஊஷ்ணம் நீங்கி, சரீரங் குளிர்ச்சியாகின்றது. உடம்பில் அழுக்குப்படிந்திருந்தால் தேஹசவுக்கியங்கெடும்; அவ்வழுக்கு போகும்படி தினமுங் குளித்து, சுத்தவஸ்திரங்களை யணிவதால் சவுக்கியம் மிகும். பலஹீனம், வியசனம், பயம் ஆகிய இவைமுதலிய காரணங்களினால் சருமத்தின்தொழில் கெடும். துரிதநடை, உஷ்ணவஸ்திரமணிதல், வெந்நீர்ஸ்நானம், வேது, வெந்நீர்பானம், ஸுவேதகாரி ஔஷதங்களைக் கொள்ளல் ஆகிய இவை முதலியவைகளால் வியர்வை மிகும். ஸ்நானஞ்செய்த ஈரம் உடம்பிலூறினால், குளிர்காணும்; ஆகையால் ஸ்நானஞ்செய்ததக்ஷணம், உடம்பில் ஈரமில்லாமல் துடைத்துப் பரிசுத்த வஸ்திர மணிந்துகொள்ளவேண்டியது.

5. அத்தியாயம்

மூத்திரக்குண்டிக்காய்கள். மூத்திரம்

தி கிட்னீஸ், அன்ட் தேர் ஸீக்ரீஷன், THE KIDNEYS AND THEIR SECRETION,

மூத்திரக் குண்டிக்காய்கள், ரத்தத்திலிருக்கிற கெட்ட நீரையும்,உப்புகளையும், பிரித்து, மூத்திரமாய் வெளிப்படுத்தி, ரத்தத்தைப் பரிசுத்தப் படுத்துகின்றன. சருமத்துக்கும் மூத்திரக் குண்டிக்காய்களுக்கும் சம்பந்தம் மெத்தவுண்டு: அதெப்படியெனில், வியர்வை அதிகமானல், மூத்திரம் குறையும், மூத்திரம் அதிகமானல் வியர்வை குறையும் மூத்திரகுண்டிக்காய்களை, நீண்டவாட்டமாய் அறுத்துப் பார்வையிட்டால், முகுளாகாரமான பிம்பங்கள் காணப்படும்; அவைகள் குழல்களால் ஏற்பட்டிருக்கின்றன. அக்குழல்களுக்கு, டியுபியுலை யூரினிபிரை (Tubuli uriniferi) என்று பேர். அவைகள் சேர்ந்து, முகுளங்களேற்படுகின்றன அந்த முகுளங்களுக்கு கோன்ஸ் ஆவ் மால்பிஜீயை (Cones of malpighi) என்று பேர். ஒவ்வொரு குண்டிக்காயில் 10-20 முகுளங்கள் காணப்படும். அந்த முகுளங்களின் மூனைகளில் மூத்திரக்குழல்கள் வந்து கூடியிருக்கும். மூத்திரஜலமானது, மூத்திரக்குழல்களில் சுரந்து, மூத்திரக்குண்டிக்காயிலிருக்கிற பள்ளங்களில் கசியும். கசிந்த நீரானது சேர்ந்து, மூத்திரக்குண்டிக்காயின் குழல் (யூரிடர், Ureter) மார்க்கமாய் இறங்கி, துளித்துளியாய மூத்திரப்பையில் வந்து விழும். இவ்விதமாய் மூத்திரம் வந்துசேர்ந்து, மூத்திரப்பையானது நிறைந்தபிறகு, அதை விசர்க்கிக்கும்படியாய் ஓர்வித உணர்ச்சி பிறக்கும்; அப்போது ஜலப்பையின் சதைகள், பிசைந்து, மூத்திரத்தை வெளிப்படுத்திவிடுகின்றன.

சாதாரண மூத்திரமானது, தெளிவாய், இளமஞ்சள்வன்னமாய், ஓர்வித சுகந்தமாய் இருக்கும்; ஆனல், மூத்திரம் கெட்டுப்போனல் நெடியுண்டாகும். ஜலத்தைப்பார்க்கிலும் மூத்திரத்தின் பளுவு அதிகம். ஜலம் தத்கனத்தில் 1000 ஆகில், மூத்திரம், சுமார் 1020 இருக்கும். (ஸ்பெஸிபிக் கிராவிடி, Specific gravity). இந்த பளுவு மணிமணிக்கு வித்தியாசப்படும். அதிகநீர் சாப்பிட்டபிறகு இறங்குகிறமூத்திரம் பளுவில் குறைந்தும், போஜனஞ்செய்தபிறகு இறங்குகிற மூத்திரம் பளுவில் அதிகமாயும் இருக்கும்; ஆகையால், காலையில் படுக்கையிலிருந்து எழுந்து உடனே பெய்கின்ற மூத்திரம், பரீக்ஷைக்கு உத்தமம். மழைகாலத்தில் மூத்திரத்தின் தக்கனம் 1015-ஆகவும், வசந்தகாலத்தில் 1025 ஆகவும் இருக்கும். போஜனத்துக்குத்தக்கபடி தத்கனமும் வித்தியாசப்படும். மதுமூத்திரரோகத்தில், சருக்கரை அதிகரித்திருப்பதால், மூத்திரத்தின் பளுவு 1050 - 1060 வரையில் அதிகரிக்கும். ஒருநாளில் ஆகிற ஜலஸ்பரிசநீரின் அளவை நிச்சயிக்கக் கூடாது; காலவித்தியாசத்தாலும், போசன விகல்பத்தாலும், மூத்திரஜனிப்பு வித்தியாசப்படுகின்றது. மூத்திரத்தில் ஜலமும், யூரிய, (Urea) யூரிக் ஆஸிட், (Uric acid) என்னும் உப்புகளும் சேர்க்கையாய் இருக்கின்றன. இவைகளில் யூரிய என்கிற உப்பே மூத்திரத்துக்குப் பிரதான் பதார்த்தம். இரத்தத்திலிருக்கிற இந்த யூரியாவை, வெளிப்படுத்துவதே மூத்திரக்குண்டிக்காய்களின் பிரதான தொழில். இந்தவஸ்து ரத்தில் நின்றுவிட்டால், அநேக துர்க்குணங்கள் சம்பவிக்கும்.

6. அத்தியாயம்

நரம்புமண்டலம்

தி நெர்வஸ் ஸிஸ்டம், THE NERVOUS SYSTEM

புத்தி, ஞாபகம், சித்தம், அறிவு இவைகள் இருக்கிற ஸ்தானம் மூளையேயாம்; சகல உணர்ச்சிகளுக்கும் மூளையே பிரதானம் சரீரத்தின்மேற்படுகிற உணர்ச்சியை, ஸ்பரிசநரம்புகளால் மூளையுணருகின்றது. ஸ்பரிசநரம்புகளுக்கு வியாதிகண்டு உணர்ச்சிகொடுக்கிற தன்மை யற்றுப்போவதற்கு திமிர் என்று சொல்லப்படும். தேகத்திலிருக்கிற மாம்ஸாதிகளின் சலனத்தைக் கிரமப்படுத்துகிற அதிகாரம் சின்னமூளைக் கிருக்கிறதென்று பரீக்ஷையால் சில பண்டிதர்கள் கண்டிருக்கிறார்கள். கபால லக்ஷணசாஸ்திரிகள் (பிரினலொஜிஸ்ட்ஸ், Phrenologists), காமமானது [மோகம், சிற்றின்பம்] பின் தலையின் சின்னமூளையி லிருக்கிறதென்று நம்புகிறார்கள். சின்னமூளையில் வியாதியால், சிலருக்கு ஆண்குறி விம்மல்கொண்டு நிமிர்ந்திருக்கும்; சிலருக்கு ஸ்திரீ இச்சையில்லாமற் போய்விடும். இவ்வகைக் காரணங்களால், சின்ன மூளையே காமஸ்தானமென்று அவர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது. நம்மைச் சூழ்ந்திருக்கிறபொருளாதி விஷயங்களை, ஐம்புலன்கள் உணர்ந்து மூளையின் மூலமாய், மனதுக்கு அறிவிக்கின்றன. மூளையில் மனது ஐக்கியப்பட்டிருக்கிறஸ்தானம், இன்னதென்று இதுவரையில் செவ்வையாய்த் தெரியவில்லை. மூளையைக் கொஞ்சம் அறுத்தெடுத்தபோதிலும் புத்தி, அறிவு இவைகளுக்கு யாதொரு குறைவு நேரிடாது. மூளையில் முள்ளந்தண்டுக்கொடியின் சிகரமே பிரதானமாம்; ஏனெனில், சுவாஸச்செய்கை, விழுங்குகின்ற முயற்சி ஆகிய இவ்விரண்டு தொழில்களுக்கும் அதுவே பிரதானஸ்தானம். இந்த ஸ்தானத்தைக்குத்தினால், உடனே இசிவுகண்டு, மூச்சடைப்புகாணும்.

மூளைக்கும், சதைகளுக்கும் ஸ்பரிச நரம்புகளால் சம்பந்தமுண்டு, அதெப்படியெனில், ஒருவஸ்துவை யெடுக்க விரும்பினால், புத்தியிலுண்டாகிற தோற்றத்தை, மூளையுணர்ந்து நரம்புகளுக்கு; அறிவிக்கும் அவைகள் சதைகளைத் தூண்டி, சலனத்தை உண்டாக்கி; வஸ்துவைப்பற்றி எடுக்கச் செய்கின்றன மூளையின் தொழில் மந்தப்பட்டிருக்கும்போது, சதைகளுடைய வியாபாரமும் மந்தப்பட்டிருக்கும்; இப்படி இருப்பதால் மாமிசங்கள் மனதுக்கேற்றபடி இணங்கி இருக்கின்றன.

மனதுக்கும், மூளைக்கும், நெருங்கிய சம்பந்தமுண்டு. மூளைவியாதியில் புத்தி தடுமாறும், பைத்தியங்காணும். நரம்புமண்டலவியாதியால் மனதுக்குநேரிடும் விகற்பசேஷ்டையை, பேய்பிடித்ததென்று சொல்லுகிறார்கள். அந்த வியாதியுடைய பெண்களை பயப்படுத்தி, வெறுப்புண்டாகும்படிசெய்தால், நரம்புகளுடைய விகற்பசேஷ்டை யதிகப்படும். யௌவனஸ்திரீகளுக்கு இவ்வித வியாதி முக்கியமாய்க் காணுகின்றது. பயம், கோபம், வியசனம், சந்தோஷம் இவை முதலியவைகளால் அநேகர் இறந்துபோனதும் உண்டு. துப்பாக்கியில் வெடிமருந்துமாத்திரம் போட்டுச்சுட்டும், ஜாதகத்திலெழுதியிருந்த மரணநாளைக்குறித்து திகிலடைந்தும், சிலர் இறந்துபோனதுண்டு.

மூளைக்கும், இரைப்பைக்கும், பார்வேகம் என்கிற நரம்பினால் சம்பந்த முண்டு. சிரசில் அடிபடுவதாலும், அஸங்கியமான பதார்த்தங்களைப் பார்ப்பதினாலும், துர்வாசனையாலும், வாந்தி காண்கின்றது. வெப்பமான பதார்த்தங்களைச் சாப்பிடுவதாலும், பசியினாலும் தலைவலிகாணும்.

ஒத்துணர்வுள்ள நரம்புகள். (ஸிம்பெதடிக் நர்வ்ஸ், Sympathetic nerves). இந்த நரம்புகள் ஐக்கியப்படாம லிருக்கின்றன. அவைகளுக்கு உணர்ச்சியைத்தருகிற குணமும், சலனத்தைத் தருகிற குணமும் இல்லை. சரீரத்திலிருக்கிற உறுப்புகளின் தொழிலை, வித்தியாசமில்லாமல் ஒன்றோடொன்று சமரஸப்படுத்திவைக்கிற முயற்சியே, இவைகளின் தொழிலாகின்றது.

---

7. அத்தியாயம்

தொனி, பேச்சு

(வாய்ஸ், VOICE) (ஸ்பீச். SPEECH)

பிரதிபதங்கள்.—நாதம், ஓசை, ஒலி, சப்தம்

தொனியானது கண்டத்தில் பிறக்கின்றது. கண்டத்தில் தொனியுண்டாகிற விதமாவது, சுவாஸப்பையிலிருக்கிற வாயுவானது ஊர்த்தமுகமாய் வெளிப்படுகிறபோது, தொனித்தந்திகள் அதிர்ந்து, தொனிபிறக்கின்றது; அந்தத்தொனியாகிய வாயு, வாய்க்குள்வந்து நாக்கு, பற்கள், உதடுகள், நாசி இவைகளுடைய சகாயத்தால், விகற்பப்பட்டு எழுத்து, அசை, சொல், முதலியவைகளை உண்டாக்குகின்றது. குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் கண்டம் சிறுத்திருப்பதால், அவர்களுடைய தொனி அதிகரித்திருக்கும்.

---

8. அத்தியாயம்

இந்திரியகாக்ஷிகள்

(ஸென்ஸெஸ், THE SENSES.)

பிரதிபதங்கள்:—பஞ்சேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள், அறிவுக் கருவிகள், ஐம்பொறிகள், ஐம்புலன்கள்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இவைகளுக்கு பஞ்சேந்திரியங்கள் என்றுபேர். இவைகள் மனதுக்கு ஊழியக்கருவிகளாக இருக்கின்றன. தேகத்தின்புறம்பாய் நடக்கிற சகல வியாபாரங்களையும் உணர்ந்து மனதுக்குத் தெரிவிக்கின்றன. மெய் முதலிய புலன்களால் அறிகிற தன்மைக்கு, இந்திரியக்காக்ஷி அல்லது தன்மாத்திரை யென்றுபேர். அவை சப்தம், ஸ்பரிஸம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய இவைகளாம்,

கந்நம். (தி ஸென்ஸ் ஆவ் ஸ்மெல், The sense of smell). வாசனை யுணர்தல். பதார்த்தங்களுடைய வாசனை, யணுக்களை ஆக்கிராணிக்கும் போது, சளியூறுஞ் சவ்வின்மேல் பரவியிருக்கிற ஆக்கிராணேந்திரிய நரம் பிழைகளின்மேல் உறுத்தும்; அந்த உணர்ச்சியை, வாசனை நரம்புகள் மூளைக்குக் கொண்டுபோகும்; மூளை புத்திக்குத்தெரிவிக்கும்; அப்போது, பதார்த்தங்களுடைய கந்தம் உணரப்படுகின்றது. நாஸிதுவாரத்தின் மேற புறமாய் வாசனை நரம்புகள் பரவியிருப்பதால், பதார்த்தங்களை முக ரும்போது, மூச்சை மேலுக்கிழுத்தால் வாசனை செவ்வையாய்த் தெரி யும். நாசிக்கு வாசனையைத் தெரிவிக்கிற குணமன்றியில், தொனியையும் மனதுக்கேற்றபடி இணையச்செய்கிறன்றது. சளியூறுஞ்சவ்வானது, வியா திகொள்ள, அதிலிருந்து, அதிகஜலம் சுரந்து, வடிவதற்கு, ஜலதோஷம் என்று பேர். சிரசுக்குள் நீர்கோர்த்து, ஜலதோஷம் காணுகிறதென்று சொல்வது வழக்கம். வாசனை அறிகிற சக்தி பழக்கத்தினல் அதிகப்படு கின்றது. சிலதேச ஜனங்களுக்கு ஜாதியையும், மனுஷரையும் முகர்ந்து தெரிந்துகொள்ளுகிற கியானம் உண்டு. நாய்க்கு வாசனை அறிவு அதிகம். மூக்குத்தூள்போடுவதினல் சுகமில்லை; அதனல் சளியூறும் ஜவ்வுதடித்து, நரம்புகளுடைய உணர்ச்சி மந்தப்படும். வாசனை செவ்வையாகத்தெரி யாது, அடிக்கடி மூக்கடைப்புகண்டு, சுவாஸம் வாயால்பறியும். நாஸி யானது வாய்க்குமேல் இருக்கவேண்டிய பிரயோஜனமானது, பதார்த்தங் களை வாயிலிடுவதற்கு முன்னதாய், அவைகளுடைய வாசனையைத் தெரிந்து கொள்ளும்பொருட்டு, கடவுள் அவ்விடத்தில் சிருஷ்டித்திருக்கிருர். நாஸிக் குள்ளிருக்கும் ரோமங்கள் (வைப்பிரிஸி, Vibrissœ), தூசு, கிருமிமுதலிய வைகள் உள்ளேபிரவேசிக்காமல் தடுக்கின்றன.

ரூபம்.(தி ஸென்ஸ் ஆவ் ஸைட், The senso of sight). பார்வை தெரி தல், நாம் பார்க்கிற வஸ்துக்களின் பிரபை (விம்பம்) ஆனது, கண்ணின் சுக்கிலமண்டலத்தை (கார்னிய, Cornea) உருவி, கிருஷ்ணமண்டலத்து வாரம் வழியாய் (பியுபில், Pupil) பிரவேசித்து, கண்மணியையும் (லென்ஸ், Lens) உருவி ரூபஉற்பத்தி சவ்வுமேல் விழும்; அந்த உணர்ச்சியானது, பார்வை நரம்புவழியாய் மூளைக்குப்போக மனது தெரிந்துகொள்ளுகிறது. கிருஷ்ணமண்டலத்தில் ஜோதிக்குத் தக்கபடி சலனமுண்டாகும். அதிக வெளிச்சத்தில் துவாரம் சுருங்கும், குறைந்திருந்தால் விரியும் இத்தன்மை யால் பார்வைக்குத் தேவையான வெளிச்சம் விழிக்குள் பிரவேசிக்கும்.அதிக மாகியவெளிச்சக் கிரணங்களை கறுத்த பசையானது கிரகித்துக்கொள்ளும். வெள்ளை குஷ்டரோக்கிக்கு (ஆல்பிஞேஸ் Albinoes) கண்களில் இந்தக் கறுத்த மைப்பசைக் குறைந்திருப்பதால், அவைகள் வெளிச்சத்தைச் செவ்வையாய்ப் பார்க்கமாட்டார்கள், பார்வை சிதறும், கண் கூசும். பூனைமுதலிய சில ஜந்துக்களுக்கு, புகலைப்பார்க்கிலும், இரவில் செவ் வையாய்க் கண்தெரியும், ஏனெனில், இவைகளின் விழிகளிருக்கிற கறுத்தமைப்பசையானது; கொஞ்சம் வெளுத்திருப்பதால், பகல் வெளிச் சம் கண்களைக் கூச்சும். தளர்ந்தவயதில் வெள்ளெழுத்து உண்டாகிறதற் குக் காரணம் என்னவெனில், விழிக்குள்ளிருக்கிற நீர்கள் குறைந்துபோவ தால், ரூப உற்பத்திச் சவ்வின்மேல் உறுத்தவேண்டிய விம்பமானது, சவ் வைத்தாண்டிப் பின்னுக்குப் போகும், ஆகையால் எழுத்துகளை தூரவைத் துப் பார்த்தால் தெரியும்; இதற்கு தூரப்பார்வையென்று பேர். கண்ணின் முன்புறம் அதிகமாய் முன்னுக்கு வளைந்திருந்தால், விம்பமானது, மேற் சொன்ன சவ்வுவரையில் அதற்குமுனகவே நின்றுவிடும், ஆகையால் எழுத்

துகளைக் கிட்டவைத்துப் பார்க்கவேண்டியதாகும். இதற்கு குறிகியபார்வையென்று பேர். கண்ணுக்குக் காண்கிற இவ்வித விகற்பங்கள், மூக்குக் கண்ணாடியால் நீக்கப்படும். தூரபார்வைக்கு, இருபுறமும் மேடாயிருக்கிற கண்ணாடியையும் (டபில் கான்வெக்ஸ் கிளாஸ், Double convex glass), குறுகியபார்வைக்கு இருபுறமும் பள்ளமாயிருக்கிற கண்ணாடியையும் (டபில் கான்கேவ் கிளாஸ் Double concave glass), உபயோகித்துக் கொள்ள வேண்டியது.

கண்ணீரின் பிரயோஜனம், கண்ணை எப்போதும் ஈரமாகவே வைத்திருப்பதாம், அது குறைந்தால் கண்வரகூதிகண்டு வேதனை பிறக்கும்

புருவங்களின் பிரயோஜனம். கண்களுக்கு அதிக வெளிச்சம் படவொட்டாமலும், நெற்றியின் வியர்வை கண்களுக்குள் போகவொட்டாமலும், புருவங்கள் தடுக்கின்றன.

கண் ரெப்பைகள், கண்களுக்கு அபாயம் நேரிடாமல் ஸம்ரக்ஷிக்கின்றன.

சப்தம் (தி ஸென்ஸ் ஆப் ஹியரிங், The sense of hearing). கேள்வியுண்டாகிற விதமெம்படியெனில்— அசைவுண்ட வாயுவுக்கு சப்தம் என்று பேர்; அந்தச் சப்தமானது, காதுக்குட் சென்று, காதின் உட்சவ்வின்மேல் பட அது அசையும்; அந்த அதிர்ச்சியானது, எலும்பு கோவையின் மார்க்கமாகச் சென்று, உட்காதில், ஜலத்தின்மேல் படர்ந்து மிதந்துகொண்டிருக்கிற, கேள்வி நரம்புகளின் இழைகளுக் குறுத்தும்; அந்த உணர்ச்சியைக் கேள்வி நரம்புகள் மூளைக்குக் கொண்டுபோக மனது தெரிந்துகொள்ளுகின்றது, காதுக்குள்ளிருக்கிற உறுப்புகளேதாவதுபின்னமடைந்தால் காதுளோது பிறவிச்செவிடு ஊமையாகும்.

ரஸம், (தி ஸென்ஸ் ஆப் டேஸ்ட், The sense of taste). பதார்த்தங்களுடைய ருசி [சுவை] தெரிகிறவித மெப்படியெனில், பதார்த்தங்களை வாயிலிட்டால், நாக்கின்மே லிருக்கிற முள்ளுகள் மலர்ந்து, அவைகளில் வியாபித்திருக்கிற சுவை நரம்புகளுக்கு ருசியுறுத்தும். அந்த உணர்ச்சி சுவை நரம்புகளால் மூளைக்கோட, மனது தெரிந்துகொள்ளுகின்றது. வாயிலிடுகிற பதார்த்தம் சீக்கிரத்தில் கரைந்தால், ருசி அதிசீக்கிரத்தில் தெரியும்; மெதுவுற்றால் தாமஸப்படும்.

ஸ்பர்சம் (தி ஸென்ஸ், ஆப் டச், The sense of touch) ஸ்பரிசஸ்தானம் சருமமேயாம். சருமத்தைக் குறுத்து, முன்னிட்டே விவரித்திருக்கிறோம். ஸ்பரிச நரம்புகள் சருமத்திற் பரவி சர்வாங்கமும் வியாபித்திருப்பதால், ஸ்பரிசம் ஓரிடத்திலிராது; ஸர்வாங்கத்துக்கும் அதை யறிகிறதன்மையுண்டு. சருமத்தில் காணப்படுகிற சிறிய குமிழிகளில், ஸ்பரிச நரம்புகள் வியாபித்திருக்கின்றன. உள்ளங்கையிலும், விரல்களிலும் இருக்கிற ஸ்பரிச நரம்புகள் மெத்த வேகமுள்ளவைகளாகையால், விரல்களுக்கு ஸ்பரிசம் செவ்வையாக அகப்படும். ஸ்பரிச நரம்புகளானவை மூளையிலும், முள்ளந்தண்டுக்கொடியிலுமிருந்து, ஜனித்துச் சருமத்துக்குச் சென்று வியாபிக்கின்றன.

9. அத்தியாயம்

ஜனனம்

(ஜெனரேஷன், GENERATION).

ஜனனத்தைக்குறித்து யோசிக்கிறதற்கு முன்பாகக் கருப்பையின் தொழிலைத் தெரிந்துகொள்ளவேண்டியது. கருப்பையானது, மாதாந்தரருதுவைச் சுரப்பிக்கின்றது. கருதரித்தபிறகு அதை வைத்துக்கொண்டு வளர்த்து, ரக்ஷித்து, பக்குவகாலத்தில் வெளிப்படுத்திவிடுகின்றது.

சூதகம். [மாதவிடாய், தலைமுழுக்கு, தலையமுக்கு, மதாந்திரருது வீட்டுதூரம், வீடுவிலக்கம், பிரஷ்டை] (மென்ஸ்ட்ருஎஷன், Menstruation). மாதக்கிரமமாய், கருக்குழியிலிருங்கு, வெளிப்படுகிற ரத்தஸ்கலிதத்துக்கு, சூதகம் என்றும், அந்த உதிரத்துக்கு சுரோணிதம் என்றும் (மென், ஸெஸ் Menses (பேர்சுரோணிதத்துக்கு உறைந்துபோகிற தன்மையில்லை பெண்கள் பிரவிடையாகிற வயது, வித்தியாசப்படும். உஷ்ண தேசங்களில், சீக்கிரத்திலும், சீதளதேசங்களில் தாமசித்தும், கன்னிகைகள் பிரவிடையாகிறார்கள். உஷ்ணதேசத்தில்9-முதல்-10-வயதுக்குள்ளும், உஷ்ண சீதளம் சமமாயிருக்கிற தேசத்தில் 14-முதல்-15-வயதுக்குள்ளும், அதி சீதளதேசத்தில் 18-முதல்-20-வயதுக்குள்ளும், ஸ்திரீகள் புத்தியறிகிறகாலமென்று, ஒருவிதமாக யுத்தேசித்துச் சொல்லலாம். மேற்கண்ட வயதுக்குக் குறைந்தும், சிலவேளை மேற்பட்டும், பிரவிடையாகிறதுமுண்டு நமது தேசத்தில் 10-வயதில் பிரஸவித்துமிருக்கிறார்கள். ஸ்திரீகளுக்கு சுமார் 30-வருஷம்வரையில் சூதகம் காணும், சூதகம் எப்போது காணுகிறதோ அப்போதே பிள்ளை பெறும்படியானதன்மை யுண்டாகின்றது. சிறிய வயதில் பிரவிடையானால், சீக்கிரத்தில் சூதகம் நின்றுவிடும். நாட்டுப்புறத்துப் பெண்கள் தாமஸப்பட்டும், அதிகச் செல்வத்தோடிருக்கிற பட்டணவாஸப் பெண்கள் சீக்கிரமாகவும் பிரவிடையாவார்கள். ஒவ்வொரு தவணைக்குச் சூதகம் 2 - 3 - நாள் வரையில் காணும். அந்த நாட்கள் குறைவதும் அதிகப்படுவதுமுண்டு. தேஹப்பிரகிர்த்திக்குத் தக்கபடி சூதகத்தின் பிரமாணம் வித்தியாசப்படும். ஆனால் $\frac{1}{2}$ - முதல் - 1 - ஆழாக்கு அளவுக்கிருப்பது வழக்கம். சுரோணிதம் துளித்துளியாக வெளிப்படும். ஆனால் அதுவே கிரமமென்று சொல்லலாகாது. புருஷனுக்குள் அயிக்கியமான ஸ்திரீக்கு தலைமுழுக்குக் கிரமத்திலிருப்பது அரிது. சூதகமானது வழக்கமாய் 28-நாளைக்கொருதரங் காணவேண்டிய கிரமம். அனால் தேஹசவுக்கியத்துக்குத்தக்கபடி இந்தக்காலக்கிரமம்வித்தியாசப் படுகின்றது. சிலருக்கு 28-நாளுக்குமுன்னதாகவே காணும்;சிலருக்கு நாள்கள் அதிகப்படும். ஸ்திரீகளுக்கு 40-முதல்-50-வயதில் தலைமுழுக்குநின்றுவிடுகிறது வழக்கம்; ஆனால் உஷ்ணதேசத்தில் வெகு சீக்கிரத்தில் நின்றுவிடுகின்றது.

ஜனனம் ஸ்திரீகளுக்கு மாதாந்திர ருதுகாலத்தில், சினைப்பையிலிருக்கிற கிராபியன் முட்டைகளில் ஒன்று பெருத்து, முற்றி, வெடிக்கும். அந்த தருணத்தில், சினைப்பாதையின் குஞ்சமுனையானது, சினைப்பையைக்

கவ்விக்கொள்ளும், அப்போது கிராபியன் முட்டையிலிருந்து வெளிப்படுகிற நாதமானது (ஓவம், Ovum) சினைப்பாதையிலிறங்கி அந்தவழியாகச்சென்று கருக்குழில் விழும். பிறகு அதுஜீர்ணித்துப் போகும். சினைப்பாதை வழியாக நாதஞ்சென்று கருப்பையில் விழ சுமார் 8-10-நாட்செல்லுமென்று உத்தேசம். ஒரு சாஸ்திரி நினைப்பது என்னவெனில்—தலைமுழுக்குக் கண்டு அது நிற்கிற தருணத்தில், நாதம் வெளிப்படுகிறதென்றும், அது சினைப்படாவிட்டால், சினைப்பாதை யடியில் வந்தாவது அல்லது கருக்குழியிலாவது நசித்துவிடுகிறதென்றும், யோசிக்கின்றார். மனித ஜாதியில் புத்திர பலனுண்டாகத், தலைமுழுக்கு நின்று 8-அல்லது 10-தினங்களுக்குள்ளாக கிரீடிக்கவேண்டியதென்று நம்பப்பட்டிருக்கின்றது. தலைமுழுக்கான-1-2-தினங்களுக்கு முன்னிட்டுப் புணர்ச்சி நேரிட்டாலுங், கருப்பற்றுமென்று மற்றொரு பண்டிதருடைய எண்ணம். சினைப்பட்ட நாதமானது கருக்குழியில் வந்திறங்கிப் பெருத்து ரூபங்கள் ஏற்பட்டு, 10-மாதம், அல்லது-280 நாள்களுக்குப் பிறகு ஜன்மிக்கும். நாதமானது வெளிப்பட்ட பிறகு, சினைப்பையின்மேல் ஒரு வெடிப்புகாணப்படும்; அந்தப் பள்ளத்தில் ஒரு துளி ரத்த மிருக்கும். நாள்பட்டால் அந்த வெடிப்பு மஞ்சள் நிறமாகி விடும். அந்த வடிவுக்கு (கார்ப்பஸ் லூடியம், Corpus lutium) என்று பெயர் மாதாந்திர ருதுவில் காணுகிறவடிவு சிறிதாயும், சினைப்பட்ட நாதம் வெளிக்கண்ட பிறகு காணுகிறவடிவு கொஞ்சம் பெரிதாயுமிருக்கும். இந்த லக்ஷணங்களால் ஒரு ஸ்திரீ பிள்ளைப்பெற்றவளென்றும், பிரஸவித்து இத்தனை நாளாச்சுதென்றும், தெரிந்துகொள்ளலாம்.

கருப்பிண்டத்தின் ரத்தச்சுழல். (பீடல் ஸர்க்கியுலேஷன், Fœtal circulation). கருப்பையிலிருக்கிற நல்ல ரத்தம், நஞ்சுக்கேறும் (ப்ளெஸென்டா, Placenta), அதிலிருந்து, நஞ்சுக்கொடி நாளம் (அம்பிலிகல் வெயின், Umbilical vein) வழியாக உந்தியில் பிரவேசித்து, கல்லீரலுக்குப் போகும்; அதிலிருந்து ஒரு குழல் வழியாக (டக்டஸ் வினோஸஸ், Ductus venosus) அதோபிரஹன் நாளத்துக்குசென்று (இன்பிரியர் கேவ, Inferior cava) கால்களிலும் வயிற்று உறுப்புகளிலுமிருந்து வருகிற கெட்ட ரத்தத்தோடு கலந்து, வலது சிரவத்துக்குப் போய், பொரமன் ஒவேலி (Foramen ovale) என்கிற துவாரம் வழியாக இடது சிரவத்தில் பிரவேசிக்கும்; அதிலிருந்து, இடது சடரத்திலிறங்கி, பெருநாடி வழியாக சிரசுக்குங் கைகளுக்கும் போய் வியாபித்து மறுபடியும் ஊர்த்த பிரஹன் நாள் மார்க்கமாய் (ஸுபீரியர் கேவ, Superior cava), வலது சிரவத்துக்கு வரும்; அதிலிருந்து வலது சடரத்திலிறங்கும். கருப்பிண்டத்தில், புப்புஸமானது கட்டியாயும், காற்றுப்புக இடமில்லாமலு மிருப்பதால், வலது சடரத்திலிருக்கிற ரத்தத்தில், கொஞ்சம் புப்புஸத்துக்குச் சென்று, மற்றதெல்லாம் ஒரு குழல் வழியாக (டக்டஸ் ஆர்டீரியோஸஸ், Ductus arteriosus) பெருநாடியின் இறக்கத்துக்குப் போகும்; அவ்விடத்தில் சிரசுக்குங் கைகளுக்கும் போகாத நல்ல ரத்தத்தோடு கலந்து, பெருநாடியிலிறங்கி, கொஞ்சங் கால்களுக்குப் போகும்; அதிக ரத்தம் தொப்புள் கொடி நாடிகள் வழியாக (அம்பிலிகல் ஆர்டிரீஸ், Umbilical arteries) நஞ்சுக்கேறி கருப்பையிற்சென்று, அதிலிருந்து சரீரத்தோடு கலந்து, கிரமப்பிரகாரம் பரிசுத்தமாகி விடுகின்றது.

3-வது புஸ்தகம்

BOOK 111

குணபாடம்

Materia Medica and Therapeutics

(in Tamil)

INTRODUCTION

முகவுரை

வியாதிகளைப் பரிகரிக்க உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகப்படுத்துகிற பதார்த்தங்களைக்குறித்து விவரிக்கிற நூலுக்கு குணபாடம் என்று பேர், அது இங்கிலீஷில், "மெடீரிய மெடிகா" (Materia Medica) என்று சொல்லப்படும்.

ஔஷதங்களுக்குடைய ரோககண்டனைக் குணங்களைத் குறித்து விவரிக்கிற பாகத்துக்கு, இங்கிலீஷில், "திரபியூடிக்ஸ்" (Therapeutics என்று பேர்.

மருந்துகள் செய்கிற விதிக்கு, வாகடவிதி என்றும், இங்கிலீஷில் பார்மெகோபிய, (Pharmacopœia) என்றும் பேர். இங்கிலீஷ் மருந்துகளை, 1867ஆ அச்சிட்ட பிரிடிஷ் பார்மெகோபியா (British Pharmacopœia) என்னும், வாகட விதிப்பிரகாரம் செய்யவேண்டியது. குணபாடத்தில் ஒவ்வொரு பதார்த்ததத்தினுடைய குணம், பிரயோஜனம், தோஷம், ;அதைப் பிரயோகிக்கிற கிரமம், ஒருவேளைக்குக் கொடுக்கவேண்டிய பிரமாணம், ஆகிய இவை முதலியவைகள் விவரித்துச் சொல்லப்படும்.

ஔஷதங்களைக் கையாடுகிறவர்கள் இதனடியில் கண்டிருக்குஞ் சில சங்கதிகளை முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது;—

1. பாஷாணம் முதலிய நஞ்சு பதார்த்தங்களை வைத்திருக்கிற பாத்திரங்களுக்கு "நஞ்சு" என்று எழுதி ஒட்டவைத்து, அவைகளைத் தனிப்பட வைக்கவேண்டியது.

2. வெளிச்சமும் காற்றும் பட்டு கெட்டுபோகிற ஔஷதங்களை, காற்றுப்புகாமல் அடைப்பட்டு, நீலநிறமுடைய புட்டிகளில் வைத்து, இருண்ட இடத்தில் வைக்கவேண்டியது. வெள்ளைச் சீசாவானால், அதன்மேல் நீலக்கடுதாசியைச்சுற்றி வைக்கலாம்.

3. நாள்பட்ட ஔஷதங்களைப் பரீக்ஷித்து, பிறகு உபயோகிக்கவேண்டியது,

4. நஞ்சின் குணமுடைய பதார்த்தங்களை உபயோகிக்கும்போது, புஸ்தகத்தைப் பார்வையிட்டு, அவைகளின் அளவைத்தெரிந்துகொண்டு, பிறகு ரோகிக்குக் கொடுக்கவேண்டியது.

நோயாளிக்கு ஔஷதங் கொடுக்கும்போது, வயது, நாடி, மலமூத்திரக்கிரமம் இவை முதலிய அஷ்ட பரீக்ஷைகளால், ரோகத்தையும், ரோகியின் தேகஸ்திதியையும் கண்டறிந்து பிறகு, ஔஷதத்தைப் பிரயோகிக்க வேண்டியது

வயது. (ஏஜ், Age). ஒவ்வொரு ஔஷதத்துக்கு குறித்திருக்கிற அளவு பெரியவர்களுக்சாகையால், சிறியவர்களுக்கு வயதுக்குத் தக்கபடி அளவைக் குறைத்துக் கொடுக்கவேண்டியது; அளவுக்கதிகப்பட்டால், அமிர்தமும் நஞ்சாகும். இதையறியாத நமதுவீட்டு ஸ்திரீகள், மருந்தை அதிகமாய்க் கொடுத்தால் சீக்கிரத்தில் வியாதி நீங்குமென்று நம்பிக்கஷாயம், எண்ணெய் முதலியவைகளைக் குழந்தைகளுக்கு அதிக அளவில் கொடுப்பதால், அனேக துர்க்குணங்கள் சம்பவிக்கின்றன. அபினி, வாளம், வாந்தி உப்பு, முதலிய கொடிய ஔஷதங்களை, குழந்தைகளுக்கு உபயோகிக்கலாகாது; ஒருவேளை உபயோகிக்கும்படி நேரிட்டால், வெகு ஜாக்கிரதையாய்க் கொடுக்கவேண்டியது. இங்கிலீஷ் வைத்தியர்கள் காபியஸ் (Gaubius'table) என்னும் நிறுக்கின்படி மருந்துகளை யுபயோகப்படுத்துவது வழக்கம்; அந்த அட்டவணை யிதனடியில் விவரிக்கப்படும்.

வாலீபனுக்கு ஒருவேளைக்குக் கொடுக்கிற மருந்தின் அளவு,
1-அல்லது-1-திராம் ஆகில்,

1 - வருஷத்துக்கு உட்பட்டால்		$\frac{1}{12}$	அல்லது	5	கிறேன் வேண்டியது.
2	,,	$\frac{1}{8}$	,,	8	,,
3	,,	$\frac{1}{6}$	,,	10	,,
4	,,	$\frac{1}{4}$	,,	15	,,
7	,,	$\frac{1}{3}$	,,	20	,,
14	,,	$\frac{1}{2}$	,,	30	,,
20	,,	$\frac{2}{3}$	,,	40	,,
21-முதல் 60-வயது வரையில் பூரண அளவு...		1	,,	1 - திராம்,	

நாலுமாதத்துக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு, அபினிசேர்ந்த மருந்துகளைக் கொடுக்கலாகாது. ரசம்சேர்ந்த ஔஷதங்களைக் குழந்தைகளுக்கு அதிகமாயக் கொடுக்கலாம். குழந்தைகளுக்குக்கொடுக்கிற சூரணங்களின் பிரமாணம் 10-கிறேன் நிதானத்துக்குக் குறைந்திருக்கவேண்டியது. 1 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஜலரூப ஔஷதத்தை, 1. உத்தரணி அல்லது, 1-தே இலக்கரண்டி, அல்லது, 60: துளிநிதானத்துக்குக்கொடுக்கவேண்டியது.

ஸ்திரீ-புருஷஜாதி. (ஸெக்ஸ் Sex). புருஷாளுக்குக் கொடுக்கிற பிரமாணப்பிரகாரம், ஸ்திரீகளுக்குக் கோடுக்கலாகாது; குறைத்துக் கொடுக்க வேண்டியது. மாதவிடாய்க் கிரமத்தையும் அறியவேண்டியது. கருப்பவதிகளுக்கும், குழந்தைகளுக்குப்பால் கொடுக்கிற ஸ்திரீகளுக்கும், மாதவிடாய் கண்டிருக்கிற பெண்களுக்கும், நேர்வாளம் முதலிய வெப்பகுணமுடைய பேதி மருந்துகளைக் கொடுக்கலாகாது.

சரீரகுணம். (டெம்பெரமென்ட் Temperament). இங்கிலீஷ் வைத்திய முறையாய், சரீரகுணம் நான்குவகைப்படும்; அவைகளாவன,—ஸான்கு

வின் (Sanguine), பிளக்மாடிக் (Phlegmatic), பிலியஸ் (Bilious), நெர்வஸ் (Nervous), என்பனவாம். தமிழ் வைத்தியத்தின்படி, வாதபித்த சிலேஷ்ம தேகமென, மூன்று விதப்படும்.

ஸான்குவின் தேஹக் குறிகளாவன.—நாடி விரைவாய் நடக்கும், எளிதில் சோபதாபங்கள் உண்டாகும், காமக்குரோதாதிகள் அதிகரித்தும், தேகத்தில் அதிக ரத்தமுமிருக்கும். இந்த தேகியை, தாபிதம், ரத்த பித்தரோகம், கடுஞ்சுரம் முதலிய ரோகங்கள் அனுசரிக்கும்.

பிளக்மாடிக் தேஹக்குறிகளாவன.—நாடி மெதுவாய் நடக்கும், தேகம் தளர்ச்சியுடன் அசதியுள்ளதாயும், புத்தி மந்தமாயுமிருக்கும். இந்த தேகியை தீர்க்க ரோகங்கள், கண்டமாலை சம்பந்தமான வியாதிகள், நீர்க்கோவை, பாண்டுமுதலிய ரோகங்கள் அனுசரிக்கும்.

நெர்வஸ் தேஹக்குறிகளாவன.—அதிக மிரக்ஷியும், துர்ப்பல, நாடியும் சன்மார்க்கத்தில் இச்சையும், இருக்கும். இந்த தேகியை இசுவு, சந்நிரோகம், பயித்தியரோகம், முதலியவைகள் அனுசரிக்கும்.

பில்லியஸ் தேஹக்குறிகளாவன.—திடத்துவமும், தீரமும், கஷ்டமான காரியங்களைச் சாதிக்கிற சக்தியும் இருக்கும். இந்த தேகியை, அக்கினி மந்த ரோகம், பித்ததோஷம் முதலியவைகள் அனுசரிக்கும்.

இடியோஸிங்கிரஸி. (Idiosyncrasy) இடியோஸிங்கிரஸி என்பது ஓர்வித விசேஷ தேகக்கூறு; இதற்கு அபினிகொடுத்தால் பேதியாகும், நித்திராபங்கம் நேரிடும்; சிலருக்கு வாந்திமருந்து பேதியாகும், பேதிமருந்து வாந்தியாகும். இவ்வித விசேஷ தேகக்கூறு உண்டென்றும் நமக்குத் தெரிந்திருக்கவேண்டியது.

நாடிநடை (பல்ஸ் Pulse). கை, கண்டம், கன்னப்பொறி, காற் பெருவிரல், கணுக்கால், ஆகிய இவ்விடங்களில் இருக்கிற நாடியைப் பிடித்துப் பரீக்ஷிக்கலாம்; ஆனல் கை நாடிப்பரீக்ஷையே சிரேஷ்டம் கையில் பெருவிரற்பக்கமாக ஆரை எலும்பின்மேல் ஓடுகிற பெருவிரல் நாடியை மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் மேலாக மூன்றுவிரல்களால் சமனுயும், மெதுவாயும், அழுத்தி பார்க்கில், நாடி நடை விரல்களுக்கு அகப்படும். நோயாளியைத் தரிசனம் செய்தவுடனேயும், நோயாளி நடந்து வந்தவுடனேயும், மனோவிசாரம் கொண்டிருக்கிறபோதும், நாடியைப் பரீக்ஷிக்கலாகாது. நோயாளியைப் படுக்கவைத்தாவது, உட்காரவைத்தாவது, நாடியைப் பரீக்ஷிக்க வேண்டியது. சிலரில் சுவாபீகமாய் ஓடுகிற ஸ்தானத்தைவிட்டு நாடி மாறியோடும்; அப்போது நாடி இருக்கவேண்டிய ஸ்தானத்தில் நாடி நடை அகப்படாது; மற்றொருகையில் நாடியைப்பார்க்க வேண்டியது. நாடிநடையுண்டாவதற்குக் காரணம் யாதெனில், இருதயமானது, விரியவும் சுருங்கவுமாக இருப்பதால், அதனுடன் சேர்ந்தநாடி நரம்புகளும் விரிந்து சுருங்கும். இந்தச் செய்கை நாடிநடை என்று சொல்லப்படும். ஆகையால் நாடிநடை யானது, இருதய நடைக்கு ஒத்திருக்கும். இருதய நடை தேஹஸ்திதிக்கு ஒத்திருக்கும். நாடி நடையால், தேஹஸ்திதி யின்னதென்று நமக்குத் தெரியவருகின்றது.

தமிழ் வைத்தியமுறையாய் நாடி நடையில் வாதம், பித்தம், சிலேஷ்மம், என 3 விதங்களாகும். முதல் விரலின் கீழ் அடிப்பதற்கு வாதநாடி யென்றும் இரண்டாவது விரலின் கீழ் அடிப்பதற்கு, பித்தநாடியென்றும் மூன்றாவது விரலின் கீழ் நடப்பதற்கு, சிலேஷ்மநாடி யென்றும்பேர். இம்மூன்றும் தொந்தப்பட்டிருப்பது முண்டென்பர்.

நாடி நரம்பானது ஒரே குழல்; அதில் ஓடுகிற ரத்தம் ஒரேமிதம்; அப்படியிருக்க, அதை மூன்று விரல்களால் ஏகதேசமில்லாமல் சமனாய அழுத்தினால், மூன்றுவிரல்களுக்கும் ஒரேகிரமமாய் ஏககாலத்தில் தட்டுப்படவேண்டியது; ஆனால் விரல்கள் நீளத்தில் வித்தியாசமாயும், நாடி நரம்பானது ஓரிடத்தில் மேலாகவும், மற்றோரிடத்தில் சதைகளுக்குள் அழுந்தியுமிருப்பதால், அடித்துகொள்ளுகிற விசையில்வித்தியாஸங்களாகப்படுகின்றன; இந்த வித்தியாஸங்களுக்கே வாத, பித்த, சிலேஷ்ம மெனப்பேரிட்டிருக்கிறார்கள். அவைகளால் வியாதியின்னதென்று அறிவது அஸாத்தியம். நாடி நடையின் வித்தியாஸமறிவதே பிரயாசை; அன்னம், ஆமை, அட்டை, கோழி, ஒணான், காக்கை, மயில், ஆகிய இவைகளின் நடைக்கு, நாம் நடையை ஒப்பிட்டிருப்பதைக் கண்டுகொள்வது அதிலும் பிரயாசை. அதை யாராகிலும் புத்திமான்கள் தெரிந்துகொண்டபோதிலும், அதனாலேயே, ரோகநிதான மறியக்கூடாது. அஷ்டபரிக்ஷையாலுணரவேண்டியது. அஷ்டபரிக்ஷைகளில் நாடியொன்று. நாடி நடைபேதங்களை அனுபோகத்தினால் கண்டறியவேண்டியது; வாசிப்பதில் தெரியமாட்டாது. ஆகையால் சுலபமாயிருக்கிற, இங்கிலீஷ்மார்க்கத்தையே யனுசரித்து, நாடிப்பரீக்ஷையைத் தெரிந்துகொண்டால், சகலத்துக்கும் உத்தமம். வாத, பித்த, சிலேஷ்மத்தை தேஹஸ்திதிக்கு வைத்துக்கொண்டு, நாடி நடக்கிற கிரமத்தை யனுஸரிப்பது இங்கிலீஷ்மார்க்கம்; ஆதலால், வாதநாடி, பித்தநாடி, சிலேஷ்மநாடி என்று சொல்வதற்குப் பதிலாக, வாததேஹி, பித்ததேஹி, சிலேஷ்மதேஹி என்பது யுக்தமாயிருக்கும்.

புருஷனுக்கு ஆரோக்கியஸ்திதியில், ஒரு மின்னிட்டுக்கு நாடி-70-75-விசை அடித்துக்கொள்ளும்; அதற்குக் கிரமநாடி (ரெகுலர் பல்ஸ் regular pulse) என்று பேர். இந்தத்தொகைக்கு அதிகப்பட்டால் படபடத்த நாடி (ப்ரிக்வெண்ட் frequent) என்றும், குறைந்தால் மந்த நாடி (ஸ்லோ slow) என்றும் சொல்லப்படும். விரல்களுக்குப் படுகிற நாடியின் விசை சுறுக்காயின் விசை சுறுக்காயிருந்தால் அதற்குத் தீவ்ர நாடி (குவிக் quick) என்று பேர். நாடி நரம்பில் ரத்தம் நிறைந்தோடினால், அது பெருத்திருக்கும்; அதைப் பூரண நாடி (ப்புல் full) என்றும், ரத்தங் குறைந்தோடினால், நாடி சிறுத்திருக்கும்; அதை சூக்ஷ்ம நாடி (ஸ்மால் small) என்றுஞ் சொல்வதுண்டு. தீக்ஷண வியாதிகளில், நாடி தீவிரமாயும், ரத்தக்ஷீண ரோகங்களில், நாடி மந்தமாயும் நடக்கும்.

இங்கிலீஷ்மருந்துகள் நிறுக்கிற, நிறைகள், அளவுகள்

WEIGHTS AND MEASURES OF THE PHARMACOPŒIA OF INDIA OF 1868

நிறைகளில், கிறேன், ஸ்டிருபில், டிராம், ஔன்ஸ், பவுன்ட், என 5-விதங்களுண்டு. கிறேன் என்பது சுமார் ½-குன்றிமணி எடை, அல்லது, 2-நெல்லெடை.

gr.		இது கிறேன் என்பதற்குக்குறி.
Fi.		இது ஸ்குரூபில் என்பதற்குக்குறி.
drm.	(zi)	இவைகள் டிராம் என்பதற்குக்குறிகள்.
oz.	(zi)	இவைகள் ஔன்ஸ் என்பதற்குக்குறிகள்.
lb		இது பவுன்ட் என்பதற்குக்குறி.

நிறைகள். வெயிட்ஸ் Weights).

20 - கிறேன் கொண்டது - 1 - ஸ்குருபில்.

60 - கிறேன் ,, 1 - டிராம்.

$437\frac{1}{2}$. (437.5) கிறேன் 1 - ஒளன்ஸ்.

16 - ஒளன்ஸ், அல்லது 7,000 கிறேன் கொண்டது 1 - பவுன்ட்.

அளவுகளில், மினிம், ப்ளூயிட்டிராம், ப்ளூயிட்ஔன்ஸ், பையின்ட், காலன், என - 5 - விதங்களுண்டு. மினம் என்பது, சுமார் $1\frac{1}{2}$ - துளிக்குச் சமனானது ஔன்ஸ என்பது, சுமார் $\frac{1}{8}$, அரைவீசம் ஆழாக்குக்குச் சமனானது.

min. (*m*) இவைகள் மினம் என்பதற்குக் குறிககள்.
fl. drm (f. zi) இவைகள் ப்ளூயிட்டிராம் என்பதற்குக் குறிகள்.
fl. oz. (f. zi) இவைகள் ப்ளூயிட் ஔன்ஸ் என்பதற்குக் குறிகள்.
O. இது பையின்ட் என்பதற்குக் குறி.
B. இது காலன் என்பதற்குக் குறி.

அளவுகள். மெழர்ஸ் Measures).

60 - மினிம் கொண்டது.................1-ப்ளூயிட்டிராம்.
8 - ப்ளூயிட்டிராம்.......................1-ப்ளூயிட் ஔன்ஸ்.
20 - ப்ளூயிட் ஔன்ஸ்...................1-பைன்ட்.
8 - பைன்ட் ....1-காலன்.

டேபில் ஸ்பூன் (Table spoon) = சுமார் $\frac{1}{2}$ - ஔன்ஸ்.
டெஸர்ட் ஸ்பூன் (Dessert spoon) = ,, 2 - டிராம்.
டீஸ்பூன் (Tea spoon) = 1 - டிராம் அல்லது 60 - மினிம்.
ஒயின்கிளாஸ் (Wine glass) = சுமார் $1\frac{1}{2}$ - ஔன்ஸ்.
ஒரு உத்தரணி, சுமார் 1 - டிராம்.

1-குப்பி	=	சுமார் 24-ஔன்ஸ்	1-மஞ்சாடி	=	4-கிறேன்
1-ஆழாக்கு	=	6-ஔன்ஸ்.	1-களஞ்சி	=	80-கிறேன்.
1-ரூபாய்	=	3-டிராம்.	$\frac{1}{8}$- ஆழாக்கு	=	$\frac{3}{4}$-ஔன்ஸ்.
$\frac{1}{4}$-ரூபாய்	=	45-கிறேன்	1-ஔன்ஸ்	=	$\frac{7}{8}$-பலம்.
1-வீசை	=	120-ரூ எடை.	1-ஔன்ஸ்	=	சுமார் 12 பை.
1-திருவிதாங்கோட்டு		சக்கரம் = 6-கி	1- ,,	=	6-களஞ்சி.
		றேன்.	1-டிராம்	=	$\frac{3}{4}$ - களஞ்சி.
1- ,, காசு	=	10-கிறேன்.	1-ஔன்ஸ்	=	$\frac{1}{2}$ - தொடம்.

ஔஷத டாப்பு (பத்திரிகைபட்டி) எழுதும் கிரமம்

FORMS OF PRESCRIPTION.

ஹிந்து வைத்தியர் ஔஷத டாப்புகளை, வாய்முறையாகச் சொல்லி விடுகிறது வழக்கம், அது கிரமமல்ல, ; அதைக் கேட்டுக்கொண்டு போகிற வர்கள், வைத்தியர் சொற்பிரகாரம், மருந்துகளைச் சேகரிக்கிறதுமில்லை, அதைச் செய்கிறதுமில்லை, கடைக்காரன் கொடுக்கிறதை வாங்கி வந்து, இஷ்டப்பிரகாரம் பக்குவப் படுத்திக் கொடுப்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம், அதனால் ஔஷதத்தின் பெருமையும், வைத்தியருடைய கீர்த் தியுங் கெடுக்கின்றன, ஆகையால் டாப்புகளை ஒரு நறுக்கி லெழுதி நோயாளி யிடத்தில் கொடுத்துவிட வேண்டியது. ஔஷதடாப்பில், 5 - சரக்கு களுக்கு அதிகமாகச் சேர்க்கலாகாது.

ஔஷதடாப்பை, இங்கிலீஷ் முறையாக எழுதுங்கிரம மாவது.— தலைப்பில் நோயாளியின் பெயர் ; 2-வது வருஷம் ; மாதம், தேதி ; 3-வது. அதன்கீழ் மருந்துகளின்பேர் ; 4-வது. சரக்குகளைக் கூட்டிச் செய்கிற ரூபம் ; 5-வது. அதை உபயோகிக்கிற கிரமம் - ஆகிய இவைகளாம். உதாரணம்:—

________________ அவர்களுக்கு.

1870ஹு ஜனவரிமீ 1உ.

R (எடுத்துக்கொள்ளவேண்டியதாவது.)

சிற்றுமணக்கெண்ணெய் ஆழாக்கு........$\frac{1}{4}$

கறி உப்பு..................விராகனெடை 2

எலுமிச்சம் பழரசம்......தேவையானது

நீராகாரம்..................ஆழாக்கு.........$\frac{1}{4}$

இவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

இதைக்காலையிற் சாப்பிடவேண்டியது.

ஔஷதத்தை நிருணயிக்கும்போது, நோயாளிக்கிஷ்டமான ரூபமாய்ச் செய்து கொடுக்கவேண்டியது ; ஏனெனில் சிலர் மாத்திரைரூபமான மருந் துகளை விரும்பார்கள். சிலர் லேகியமும், சிலர் திரவரூபத்தையும் இச்சிப் பார்கள் ; வைத்தியனிஷ்டப்படிக் கொடுக்கிற ஔஷதரூபத்தில் விரக்தி பிறக்கும். ஆனால் ஒவ்வொரு சமயத்தில் அவர்களிஷ்டப்படி செய்துகொ டுக்க முடியாது, வைத்தியன் கொடுப்பதையே, அங்கீகரிக்கவேண்டியதாகி வரும்.

ஔஷதங்களைக் கூட்டும்போது, சத்துருமித்திரு பதார்த்தங்களைக் கண்டறிந்து, சேர்க்கவேண்டியது ; சத்துருபதார்த்தம் சேர்ந்தால் ஔஷத குணம் கெடும். அன்னபேதியுடன், மாசக்காய் சேர்ந்தால், கறுக்கும் ; காடிக்காரத்துடன் கிணற்றுஜலம்சேர்ந்தால் வெளுக்கும்.

ஔஷதப்பிரயோக ரூபங்கள்

PHARMACEUTICAL PREPARATIONS

பதார்த்தங்களை அனேக ரூபங்களாய்ச்செய்து உபயோகப்படுத்தப் படும்; தமிழில் 32-வித சிகிச்சைகளென்று கூறப்படும், அவைகளில் கண் கலிக்கச் சிகிச்சை கெட்டது. இங்கிலீஷ் ஔஷதரூபங்களிற் சில இதனடியிற் கூறப்படும்:—

கைபாகம், செய்பாகம், ரஸவாதபாகமுறைகளயே, பிரதி ஔஷதத்தையும் விதிப்படி, கலந்திருப்பதை ஆய்ந்து - தூள்செய்வதை யிடித்து - மைபோலாக நவதை அரைத்து - திப்பியை நீக்கவிடுவதை வஸ்திரகாயம் அல்லது சலித்து - கலங்கியிருப்பதை வடிகட்டி - ரஸமெடுப்பதைப் பிழிந்து - நீர்போக்கவேண்டியதைச் சுண்டவைத்து - கெட்டிரூபமானவைகளை உருக்கிச்சேர்த்து - சிவப்பிப்பதைச் சிந்தூரித்து - சுண்ணமாக்குவதைநீற்றி உப்புகளிலிருக்கிற நீரைபோக்க பொரித்து - திநீர் திராவகம், ஓமம், பெப்பர்மெண்ட்தைலம் முதலியவைகளை வாலையிலிட்டிறக்கி - குடன், கந்தகம், பாஷாணம். சாம்பிராணி, இவைகளைப் பதங்கித்து - சுத்தப்படுத்த உப்பு இனங்களைக்கரைத்து உப்பு கட்டச்செய்து எடுத்துக்கொண்டபிறகு, பிரயோக ரூபங்களில் சேர்த்துக்கொள்ளவேண்டியது:

ஜலசம்ஸர்க்கம். (மிக்ஸ்சர் Mixture). அடிக்கடி கொடுக்க, ஜலரூபமாய்ச் செய்துகொண்ட ஔஷதத்துக்கு, ஜலஸம்சர்க்கம் என்று பேர். இதை 2-தினத்துக்குவேண்டிய அம்மாத்திரமே, ஒவ்வொரு தவணைக்குச்செய்துகொண்டு புட்டியைக்குலிக்கி, மருந்தை ஊற்றிக்கொள்ளவேண்டியது.

ஏகபானம். (ட்ரராப்ட் Draught). ஒருவேளைக்குச் சாப்பிடும்படி செய்த ஜலரூப ஔஷதத்துக்கு, ஏகபானம் என்று பேர்.

வாயலம்பு மருந்து நீர். உமிழ்மருந்து நீர். (கார்கில் Gargle). வாய் கொப்புளிக்க ஜலரூபமாய்ச்செய்த மருந்துக்கு, வாயலம்பு நீர் என்று பேர். சுமார் $\frac{1}{8}$-ஆழாக்கு ஜலத்தை வாயிலிட்டு, விரலைப் பின்னுக்குச்சாய்த்து, கொப்புளித்து, கொஞ்சநேரம் வாயில் வைத்திருந்து, உமிழ்ந்துவிடவேண்டியது. 2-மணிக்கொருதரம் இவ்விதமாய்ச் செய்வது கிரமம்.

பீச்சிடுமருந்து (இன்ஜெக்ஷன் Injection). நீர்த்தாரை, விரணம், இவைகளுக்கு, பீச்சாங்குழலால் பீச்சு ஜலரூபமாகச் செய்துகொண்டதற்கு பீச்சிடு மருந்தென்று பேர்.

வஸ்தி. (கிளிஸ்டர் Clyster இனீம Enema). பீச்சாங்குழலால் ஆஸனத்தில் பிரயோகிக்கிற ஜலரூபமருந்துக்கு வஸ்தி என்று பேர்.

கிலேதம். நனைத்திடு நீர். ஸேஷணம். (லோஷன் Lotion வாஷ் Wash). வீக்கம், ரணம் இவைகளுக்குத் துணியைப்போட்டு அது உலராமல் நனைத்துக்கொண்டிருக்க, படிகாரம், நவக்ஷாரம், முதலியவைகளைச் சேர்த்துச்செய்கிற ஜலத்துக்கு, கிலேதம் என்று பேர். உஷ்ணிக்கப்போடுகிறதற்கு, உஷ்ணக்கிலேதம் (ஸ்டிமுயுலேடிங் லோஷன் Stimulating lotion) என்றும், குளிர்ச்சி யுண்டாகப்போடுகிறதற்கு, சீதக்கிலேதம்

(கோல்ட்லோஷன் Cold lotion) என்றும், ரத்தம் முதலியவைகளை நிறுத்து உபயோகிப்பதற்கு, ஸங்கோசனக்கிலேதம் (அஸ்ட்ருன்ஜென்ட் லோஷன் Astringent lotion) என்றும், சீக்கிரம் உலர்ந்துபோகிறதற்கு ஸோஷணக்கிலேதம் (இவாபொரேடிங் லோஷன் Evaporating lotion) என்றும் பேர்.

சூரணம். (பௌடர் Powder) வேர் முதலியவைகளை யிடித்துச் செய்த சன்னத் தூளுக்கு, சூரணமென்று பேர். நாகம் முதலியவைகளைப் புடம் வைத்து நீற்றிய வெள்ளைச் சூரணத்துக்கு, பஸ்மம் என்றும், சிவந்திருப்பதற்குச் சிந்தூரம் என்றும், பெயர். கலவைச் சூரணத்தின் சரக்குகளைத் தனியாயிடித்துச் சூரணித்து, பிறகுசேர்த்து, 2 - 3 - ஆவர்த்தி வஸ்திரகாயஞ் செய்துகொண்டால், சூரணங்கள் செவ்வையாகக் கலந்துவிடும். கனமுள்ள சூரணத்தை, தேன், நெய், வெண்ணெய், அனுபானத்தில் கொடுக்கவேண்டியது.

மாத்திரை. குளிகை. (பில் Pill). பல சரக்குகளைச் சேர்த்து, பட்டாணியைப்போல் உருண்டையாய்ச் செய்துகொள்ளுகிற ரூபத்துக்கு, மாத்திரை என்று பேர். பருமனிம் ஒவ்வொன்று பட்டாணிக்கதிகமாயிருக்கலாகாது. எடையில் 5-கிறேன் இருக்கவேண்டியது.

மெழுகு. (பில்மாஸ் Pill mass). பல சரக்குகளைச்சேர்த்து செய்த மெழுகுபத ஔஷதத்துக்கு, மெழுகு என்று பேர். சூதமெழுகு, கலிங்காதிமெழுகு, ரஸபஸ்ம கலவைமெழுகு, இவைகளைப்போலொத்தவைகளாம்.

ஆஸனக்குளிகை. (ஸப்பாஸிடொரி Suppository). ஆஸனத்தில் பிரயோகிக்க, பெரியமாத்திரை ரூபமாய்ச் செய்துகொள்ளுவதற்கு, ஆஸனக்குளிகை என்றபேர்.

லேகியம். (கன்பெக்ஷன் Confection). மூலிகைச் சூரணங்களை, சருக்கரைப்பாகு, அல்லது தேன் விட்டு மிஸ்ரமித்துச்செய்கிற பாகத்துக்கு லேகியம் என்று பேர்.

கிருதம். நெய்விட்டுச் செய்வதற்கு, கிருதம் என்று பேர்.

பிளாஸ்திரீ. (பிளாஸ்டர் Plaster). துணியிலாவது, தோலிலாவது தடவி ரணத்துக்குபயோகிக்கச் செய்துகொள்ளுகிற கெட்டி களிம்புக்கு, பிளாஸ்திரி என்றுபேர். ஒட்டுப் பிளாஸ்திரியைப் போலொத்த மருந்துகளாம்.

களிம்பு. (ஆயின்ட்மென்ட் Ointment). மெழுகு முதலியவைகளைச் சேர்த்து வெண்ணெய்போல் செய்துகொள்ளுகிறரூபத்துக்குக்களிம்பு என்று பேர். மெழுகுகளிம்பு, ரஸக்களிம்பு, மீன்கோழுப்புக்களிம்பு, இவைகளைப் போலொத்தவைகளாம்.

பூசுதயிலம். (லினிமென்ட் Liniment). சரீரத்தின்மேல் தேய்க்கத் தயில ரூபமாகச் செய்துகொள்ளுகிற பாகத்துக்கு, பூசுதயிலம் என்றுபேர். அபினிப்பூசுதயிலம், சவுக்காரப்பூசுதயிலம், இவைகளைப்போலொத்தவைகளாம்.

ஒற்றிடம். காய்ப்பிடம். (ப்போமன்டேஷன், Fomentation) வெந்நீரில் துணியை நனைத்தாவது, மணல், சாம்பல், இலை, இவைகளை வருத்தாவது, வேதனையுள்ள இடத்தில் ஒற்றுகிற செய்கைக்கு, ஒற்றிடம் என்று பேர்.

மாவுந்கனி. பதலாடை. பற்கை உற்காரிகை. (போல்டீஸ். Poultice). ரணம், கட்டி முதலியவைகளுக்கு உபயோகப்படுத்த அரிசிமாவு, அரைத்த சாதம், பசரைக்கீரை, வெண்டைக்காய், முதலியவைகளில் எதையாவது பக்குவப் படுத்திக் கொள்ளுகிறதற்கு, போல்டீஸ், என்றுபேர்.

கஷாயம். (டிகாக்ஷன், Decoction). வேர், பட்டை இவைகளிலெதையாவது ஜலத்திலிட்டுக்காய்ச்சிக்கொள்ளுகிற நீருக்குக் கஷாயமென்று பேர். காய்ச்சுகிறதில், சத்து நீரிலிறங்கும்; அதிகச்சூடு மருந்தைக் கெடுக்கும்; கொஞ்சஞ் சூடாயிருக்கும் பொதே வடிகட்டிக்கொள்ளவேண்டியது, குளிர்ந்தால் சத்து அடியில் படிந்துவிடும். கஷாயங்களைக் கலக்கிச் சாப்பிடவேண்டியது. நில ஆவாரை, லவங்கம், சீரகம், சோம்பு இப்பேர்பட்டவைகளைக் கஷாயமிடலாகாது. கஷாயத்தைச் சுண்டக்காய்ச்சுகிற வழக்கம் கெட்டது. அடைகஷாயமுறையில் பலனில்லை. கஷாயங்களை ஒருவேளைக்கு $\frac{1}{8}$-$\frac{1}{4}$-ஆழாக்கு, அல்லது 1-2-ஔன்ஸ் அளவுக்குக் கொடுக்கவேண்டியது. குழந்தைகளுக்கு ஷை அளவில், 8-ல், அல்லது 16-ல் ஒரு பங்கு கொடுக்கவேண்டியது. இந்தக் கிரமமறியாத நமது வீட்டுஸ்திரீகள், குழந்தைகளுக்குக் கஷாயங்களை அளவில் கூட்டிக் கொடுக்கிற வழக்கங்கெட்டது. நன்னாரிவேர்க்கஷாயம், பார்லி அரிசிக்கஷாயம், மாதுளம்வேர்க்கஷாயம், இவைகளைப்போலொத்தவைகளாம்

வெந்நீர் ஊறல்கஷாயம். (இன்பியூஷன் Infusion). மூலிகைகளை வெந்நீரிலிட்டு ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளுகிற நீருக்கு, வெந்நீர் ஊறல் கஷாயமென்று பேர். நிலவாகை, நிலவேம்பு முதலியவைகளை ஷை முறையாய்க் கஷாயமிடவேண்டியது. இந்த விஷயமறியாதவர்கள், 1-படி ஜலம் விட்டு $\frac{1}{4}$-படியாய்க் காய்ச்சுகிற முறையில் வீரியமில்லை; வெந்நீர் உஷ்ணத்துக்குங் கெட்டுப்போகிற மருந்துகள் சிலவுண்டு, அவைகளைச் சீதஜலத்தில் ஊறவைத்துக்கொள்ளவேண்டியது. கஷாயங்கள் தீவிரத்தில் கெட்டுப்போகிறபடியால், பிரதிதினமும் வேண்டியதைமாத்திரம் செய்துகொள்ளவேண்டியது. 1 - முதல் 6 - மணிநேரம், வெந்நீர் ஊறல் கஷாயத்துக்கும் 10 - 30 - நிமிஷம், கஷாயத்துக்கும், போதுமானகாலம்.

ஜயநீர் (லிகர், Liquor. ஸொல்யூஷன், Solution). வீரம், பாஷாணம், வங்கம்முதலிய உப்புகளைக்கலந்து செய்கிறஜலத்துக்கு, ஜயநீர் என்று பேர். சவ்வீரம், பாஷாணம் முதலிய நஞ்சினங்களின் அளவு மெத்த சூக்ஷமமாகையால், அவைகளை ஜலத்தில் கரைத்துக்கொண்டால் எளிதில், அளவைநிறுக்கிடலாம்.

பாவநத்திரவம். (டிங்சர், Tincture) சாராயத்தில் ஊறவைத்துக் கொள்ளுகிறவைகளுக்கு, பாவனத்திரவமென்று பேர். அபினிப்பாவனத்திரவம், சுக்குப்பாவனத்திரவம், காசுக்கட்டிப்பாவனத்திரவம், இவைகளைப் போலொத்தவைகளாம்.

தீநீர். (மெடிகேடெட் டிஸ்டில்ட் வாடர், Medicated Distilled water). ஜலத்தில் பதார்த்தங்களைச்சேர்த்து வாலையிலிட்டு எரித்து இறக்கிக்கொள்ளுகிற நீருக்கு, தீநீர் என்றுபேர். இவைகள் சீக்கிரத்தில் கெட்டுப்போகும், அவசியமானபோது தைலத்தை ஜலத்திலிட்டுச்செய்து கொள்ளுவது உத்தமம். பெப்பர்மெண்டுத் தீநீர், பந்நீர், கருவாய்ப்பட்டைத்தீநீர், இவைகளைப்போலொத்தவைகளாம்.

ரஸாயனம் ஷர்பத். (ஸிரப், Syrup). பஞ்சதாரையைச்சேர்த்து, பாகுபதமாய்ச் செய்துகொள்ளுகிற முறைக்கு, ரஸாயனம் என்று பேர். நமது தேசம் அதிக உஷ்ணமாகையால் ரஸாயன இனங்கள் சீக்கிரத்தில் புளித்துக்கெட்டுப்போகும், நாள் படவைத்திருக்க உதவாது. நன்னாரிவேர் ரஸாயனம், குங்குமப்பூ ரஸாயனம், சக்குரஸாயனம், இவைகளைப்போலொத்தவைகளாம்

தயிலம். (ஆயில், Oil). தயில இனத்தில் இரண்டு விதம்; காற்றில் பறந்துவிடுகிற இனத்துக்கு, வாலடைல் அயில் (Volatile oil) என்றும், மற்றோரினத்துக்கு பிக்ஸெட் ஆயில் (Fixed oil) என்றும் பேர். பெப்பர்மென்டுத்தயிலம், சோம்புத்தயிலம், ஜாதிக்காய்த்தயிலம் அத்தர், இவைமுதலியவைகள் காற்றில் பறந்துவிடுகிற தயிலங்கள். ஆமணக்கெண்ணெய், தேங்காயெண்ணெய், நேர்வாளத்தயிலம், இவைமுதலியவைகள் ஸ்திரமானவைகள்.

தமிழ் முறையில் குடிதயிலம், முழுக்குத்தயிலம், அல்லது முடித்தயிலம், பூசுதயிலம், எனப்பலவிதங்களுண்டு. கலிங்காதித்தயிலம், வச்சிரபீஜத்தயிலம், இவைபோலொத்தைலகள், குடிதயிலங்களாம். அரக்குச்சந்தநாதித்தயிலம், கொம்பரக்குத்தயிலம், இவைகள், முடித்தயிலங்களாம்.

சத்து (திருதி.) (எகிஸ்ட்ராக்ட் Extract). சுரஸத்தை வெயிலிலாவது அனலிலாவதுவைத்து மெழுகுபதமாகச் செய்துகொண்ட பாகத்துக்கு சத்துஎன்றுபேர். ஜலம் அல்லது சாராயத்தில் ஊறவைத்தாவது, அல்லது கஷாயஞ்செய்தாவது மூலிகைகளின் சத்தை எடுத்துக்கொள்ளுவதும் ஒருமுறை. கஞ்சாச்சத்து, கலிங்காதிச்சத்து, அதிமதுரச்சத்து, இவைகளைப்போ லொத்தவைகளாம்.

ஸ்வரஸம். (பிரஷ்ஜூஸ், Fresh juice). இலை, வேர், பட்டை, இவைகளி லொஸ்றை யிடித்து,பிழிந்துகொள்ளுகிற தனிரஸத்துக்கு ஸ்வரஸமென்றுபேர்.

கண்ணாடி, பீங்கான், மண், இவ்வகளாற்செயத பாத்திரங்களில், மருந்துகளைச் செய்யவும் வைக்கவும் வேண்டியது ; லோகபாத்திரங்கள் கெடுத்துவிடும்.

ஜலயந்திரம். (வாடர்பாத், Water bath). மருந்துகள் செய்முறையில் உபயோகிக்கிற வெந்நீர்ப் பாத்திரத்துக்கு ஜலயந்திரமென்று பேர். வெந்நீர் உஷ்ணத்தில் சிலமருந்துகள் பக்குவப்படுத்திக்கொள்ளப்படும்.

டோலாயந்திரம். (வேபர்பாத் Vapour bath). நீராவிபடும்படி உபயோகிக்கிற பாத்திரத்துக்கு, டோலாயந்திரம் என்று பேர். புட்டிடுவது டோலாயந்திரத்தி லொருவிதமாகும்.

வாலுகாயந்திரம். (ஸான்ட்பாத், Sand bath). மணல் சூடுபடும்படி உபயோகிக்கிற பாத்திரத்துக்கு, வாலுகாயந்திரமென்று பேர்.

பெர்கொலேஷன். (Percolation). பாவனத்திரவங்களை இப்போது பெர்க்கொலேஷன் என்னும் நூதனமுறையாகச் செய்துகொள்ளவே

ண்டியது. ஷ முறையில் உபயோகிக்கிற கண்ணுடிப் பாத்திரத்துக்கு, பெர்க்கோலேடர் (Percolator) என்று பேர். பாத்திரங்கள் இரண்டுண்டு. ஒன்று அடியிலும், மற்றொன்று அதின் மேலாகவுமிருக்கும். மேலிருக்கிற பாத்திரத்தில் சரக்கைப்போட்டு அதின்மேல் சாராயத்தைவிட்டால் அது சரக்கிலூறி அடிப்பாத்திரத்தில் மெதுவாக இருங்கும். இதின் முறையாகச் செய்வது எப்படியெனில்:—சரக்கை, குறித்த எடையில் எடுத்துக்கொண்டு 15-ஔன்ஸ் சாராயத்தைவிட்டு, மூடி, அடிக்கடி குலுக்கி, 48-மணிநேரம் ஊறவைத்து, பிறகு பெர்க்கொலேடரில் ஊற்றி சாராயமெல்லாம் இறங்கினபிறகு, 5-ஔன்ஸ் சாராயம் மறுபடியும் சரக்கில் விடவேண்டியது. அதின் பிறகு. பாத்திரத்திலிருக்கிற சரக்கைப் பிழிந்து, வடிகட்டி, ஒன்றாய்ச் சேர்த்து, 1-பையின்ட் அளவுக்குத் தேவையான சாராயம் விட்டுக்கொள்ள வேண்டியது. இதுதான் பெர்க்கொலேஷன் என்னும் பாகமுறை.

நீற்றல். சுண்ணமாக்குதல்; பஸ்மமாக்குதல்; எரித்தல். (கால்ஸிநேஷன், Calcination) மருந்துகளை பஸ்மமாக்குதலுக்கு, நீற்றல் என்று பேர்.

ஔஷத வகுப்புகள்

கிளாஸஸ் ஆவ் மெடிஸன் Classes of Medicine.

வியாதிகளைத்தடுக்க, அல்லது சுவஸ்த்தப்படுத்த உபயோகிக்கிற பதார்த்தங்கள் ஔஷதங்களென்று சொல்லப்படும். ஔஷதங்கள் தாதுவர்க்கங்களிலிருந்தும், தாவரவர்க்கங்களிலிருந்தும், ஜீவவர்க்கங்களிலிருந்தும் சேகரிக்கப்படுகின்றன.

அயச்சிந்தூரம், அன்னபேதி, இயச்கிந்தூரம், காடிக்காரம், சொர்னபஸ்மம், ரஸபஸ்மம், துத்தம், துருசி, கந்தகம், வெங்காரம், சீனக்காரம், பாஷாணம், வெடியுப்பு, கறியுப்பு இவை முதலியவைகள், தாதுவர்க்க சம்பந்தமான ஔஷதங்கள்.

தாவரவர்க்கத்தில்:—

வேர்வகையில்.—நன்னாரி, சுக்கு, அதிமதுரம், வசம்பு, அரத்தை, பூண்டு, சிவதை, மஞ்சள், ஜாலப், சடாமாஞ்சி, மாதுளம்வேர் முதலியவைகளாம்.

இலை இனத்தில்.—நிலவாகை, பெப்பர்மின்ட் (Peppermint), புகையிலை, மாஸிபத்திரி, துத்தி, ஊமத்தை இலை, அருதா, துளசி முதலியவைகளாம்.

பட்டை யினத்தில்.—கருவாப்பட்டை, ஸிங்கோனுப்பட்டை, வேப்பம் பட்டை முதலியவைகளாம்.

புஷ்ப வகையில்.—ரோஜாப்பூ, குங்குமப்பூ, சீமைச் செவந்திப்பூ, கிராம்பு முதலியவைகளாம்.

வித்து வகையில்.—ஓமம், கொத்துமல்லி, ஏலரிசி, சப்ஜாவிரை, துளசிவிரை சோம்பு கடுகு, சீரகம், வெந்தியம், நேர்வாளம் முதலியவைகளாம்.

சந்தை யினத்தில்.—சந்தனக்கட்டை, செம்மரம், குவாஷியா முதலியவைகளாம்.

பிசின் வர்க்கத்தில்.—விளாம்பிசின், குங்கிலியம், பெருங்காயம், அபினி முதலியவைகளாம்.

கஸ்தூரி, மெழுகு, தேன், அட்டை, முட்டை, பால், புள்ளிவண்டு, மீன் எண்ணெய், மீன் கொழுப்பு, பன்றி நெய் இவை முதலியவைகள், ஜீவ வர்க்க சம்பந்தமான ஔஷதங்கள்.

மேற்கண்ட மூன்று இனங்களிலிருந்தும் சேகரிக்கிற மருந்துகள், அவைகளின் செய்கையின் பிரகாரம், பலவகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன ; அவைகளை யிதனடியிற் காணலாம். மருந்துகளுடைய செய்கைகள் அனுபோகத்தின்மேல் நமக்குத் தெரியவருகின்றன. மருந்துகளுடைய செய்கைக்கு (சரீரத்தினுடைய வியாபாரங்களை கிரமம், அல்லது விகற்பப் படுத்துகிற செய்கைக்கு) பிஜியாலைக்ஜிகல் ஆக்ஷன் (Physiological action) என்றும், உபயோகத்துக்கு (வியாதிகளைப் பரிகரிக்கிற தன்மைக்கு) திரபியூடிக் ஆக்ஷன் (Therapeutic action) என்றும் பெயர்.

வியதாபேதகாரிகள் பரிணாமிகள். (ஆல்டெரெடீவ்ஸ், Alteratives). சர்வாங்கத்தை யனுசரித்தாவது, அல்லது ஓர் உறுப்பைப்பற்றியாவது, இருக்கிற வியாதியைப் படிப்படியாக, நீக்கி, சரீரத்தைச் சுகஸ்திதியிற் கொண்டுவருகிற மருந்துகளுக்கு, வியதா பேதகாரிகள் என்று பேர். இம்மருந்துகள், தேகத்துக்குள்ளே வியாபித்து வெளிக்கு யாதொன்றையும் காண்பிக்காமல, வியாதியைக் கண்டிக்கும். இவைகளை, வாரக்கணக்கு அல்லது மாதக்கணக்காய்ச் சாப்பிடவேண்டியது. இவைகளைச் சேவிக்கும்போது, பத்தியத்திலும், ஸ்நானபான முதலியவைகளிலும், நோயாளி கிரமமாய் இருக்கவேண்டியது ; இல்லாவிட்டால் பலமில்லாமற் போய்விடும். இந்தவகுப்பிற் சேர்ந்த ஔஷதங்களாவன.—சவ்வீரம், ரஸபஸ்மம், சுவர்ண பேதி திராவகம், நன்னாரிவேர், ஐயோடைட் ஆவ் பொடாஸியம், மீன் எண்ணெய், பாஷாணம், எருக்கன்வேர்பட்டை, சால்முகுரா, வல்லாரை, யானைக்கத்தாழைவேர், ஆகாசகெருடன்கிழங்கு, கிறுதேக்கு, காவ்ஜப்பான், கரிசிலாங்காணி, குருவிஞ்சி, சதுரக்கள்ளி, நீரடிமுத்துநெய், பால்வள்ளி, பரங்கிச்சக்கை இவை முதலியவைகளாம். ரோகங்கள்.—சாவதானப்பட்ட ரோகங்கள், சருமரோகங்கள், கீல்வாதம் இவை முதலிய தீர்க்க வியாதிகளுக்கு, இவ் ஔஷதங்களைக் கொடுக்கலாம்.

ஸ்மிருதிரோதகாரிகள். விசஞ்ஞதிகள் (அனிஸ்திடிக்ஸ், Anæsthetics). பிரக்கினையில்லாமற் செய்து, வேதனை தெரியவொட்டாமற் செய்கிற மருந்துகளுக்கு, ஸ்மிருதிரோதகாரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—ஈதர், குளோரோபாரம் இவைகளாம். ரோகங்கள்.—ஸஸ்திரசிகிச்சை, பிரசவம் இவை முதலியவைகளில் காணுகிற வேதனைகளுக்கு, இவ் ஔஷதங்களைப் பிரயோகிக்கலாம்.

வேதனா சாந்திகாரிகள். அனுகக்கினிகள். (அனோடையின்ஸ், Anodynes). வேதனையைத் தணிக்கிற மருந்துகளுக்கு, வேதனாசாந்திகாரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—அபினி, குரோசானியோம், பெல்லடோனா, வெந்நீர் முதலிய ஒற்றிடங்கள் இவை முதலியவைகளாம். ரோகங்கள்.—உபத்திரவமுள்ள வியாதிகளுக்கு, இவ் ஔஷதங்களைப் பிரயோகிக்கலாம்.

ஆம்லநாசகாரிகள். அமிலக்கினிகள்.—(அன்டாஸிட்ஸ், Antacids) வயிற்றிலிருக்கிற புளிப்பைக்கண்டிருக்கிற மருந்துகளுக்கு, ஆம்லநாசகாரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—கார்போனேட் ஆவ் அம்மோனிய, ஸோடா, பொடாஷ், மாக்னீஷிய, சீமைச்சுண்ணம்பு, சுண்ணம்புஜலம் இவை முதலியவைகளாம். ரோகங்கள்.—புளியேப்பம், மந்தம் இவைகளுக்கு இவ் ஔஷதங்கள் கொடுக்க உதவும்.

கிருமிநாசகாரிகள். கிருமி கொல்லிகள். கிருமிக்கினிகள் (ஆந்தல்மின்டிக்ஸ், Antheimintics). வயிற்றுக்கிருமிகளை அதஞ்செய்கிற மருந்துகளுக்கு கிருமிநாசகாரிகள் என்று பேர். இவைகளில் சில கிருமிகளை உயிரோடும், சில கொன்றும், சில பேதி மூலமாயும் வெளிப்படுத்தும். கிருமிகள் சாக மருந்து கொடுத்தபிறகு, பேதிக்குக்கொடுத்து அவைகளை வெளிப்படுத்தவேண்டியது. இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—ஸான்டொனீன் (Santonine). மாவிலிங்கப்பத்திரி, மாதுளம்வேர், கர்ப்பூரத்தயிலம், புரஸன்விரை, பூனைக்காலிச்சுனை, ஆடு தீண்டாப்பாளை, வேப்பம் நெய், பப்பளிப்பால், சிறுதேக்கு, பூசினி விதை, குடசப்பாலை, வெட்பாலை, மாம்பருப்பு, மலைவேப்பம்வேர்ப் பட்டை, காட்டுச் சீரகம் இவை முதலியவைகளாம். ரஸபஸ்மம், மக்கி, ஜாலப், ஸ்காமோனி (Scammony), இவைகள் பேதியையுண்டாக்கி கிருமிகளை வெளிப்படுத்தும். கசப்பு கஷாயங்கள், அயப்பாவனத்திரவம், கறிஉப்பு, அன்னபேதி, இவ்வகள் கிருமி உற்பத்தியைத் தடுக்கும். பெருங்காயம், கறி உப்பு, இவைகளை வஸ்திசெய்து, ஆஸனத்தி லடித்தால், திமிர்ப்பூச்சிகளை அதஞ்செய்யும்.

முறைவியாதி ரோதிகள். (ஆன்டிபீரியாடிக்ஸ், Antiperiodics). முறைக்காய்ச்சல், முறையாய் வருகிற ரோகங்கள், இவைகளைத் தடுக்கிற மருந்துகளுக்கு, முறைவியாதிரோதி ள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—குவைனு, பாஷாணம், எழிலைப் பாலைப்பட்டை, வேப்பம்பட்டை, களச்சிப்பருப்பு, மிளகு, செம்மரப்பட்டை, எட்டிக்கொட்டை, மிளகரணை, வசம்பு, யானைப் புளியமரம்பட்டை, பெருமருந்து, ஆடுதீண்டாப்பாளைவேர், தேன்பூச்சி மரப்பட்டை, குடசப்பாலைப்பட்டை, கருநொச்சி, கடுகுரோகுணி, செண்பகப்பூ, கொடிவேலிவேர், நாகமுஷ்டி இதை முதலியவைகளாம். ரோகங்கள்.—சீதசுரம், முகஜந்நி, வாதரோகங்கள் இவை முதலியவைகளுக்கு ஷை ஔஷதங்களைக் கொடுக்கலாம்.

உக்கிரரோக சமனகா கள். தாபக்கினிகள். (ஆண்டிப்ளொஜெஸ்டிக்ஸ், Antiphlogistics). தாபனம் முதலிய தீக்ஷண வியாதிகளை சமனப்படுத்துகிறவைகளுக்கு, உக்கிரரோக சமனகாரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—ரத்தங்குத்தி வாங்குதல், ரஸபஸ்மம், டிஜிடேலில், அஞ்சனக்கல், கால்சிகம். இவைகளாம். ரோகங்கள்.—தாபனங்கள், தீக்ஷணரோகங்கள், கொடிய சுரங்கள், இவைகளுக்கு ஷை மருந்துகளை உபயோகிக்கலாம்.

தாதுக்ஷீணரோதிகள் (ஆண்டிஸெப்டிக்ஸ், Antiseptics). சரீரதாதுக்களை அழுகிப்போக ஒட்டாமல், தடுக்கிறவைகளுக்கு தாதுக்ஷீணரோதிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—குளோரின், கறிஉப்பு, திராவகங்கள், வெள்ளைப்பாஷாணம், சவ்வீரம், பொட்டிலுப்பு, ஆல்கோஹல், கிரியாஸோட், டானிக்ஆஸிட், சருக்கரை இவை முதலியவைகளாம். ரோகங்கள்.—சந்நிபாதசுரங்கள், அஸ்திவிரணம், இவைகளுக்கு ஷை மருந்துகளை உபயோகிக்கலாம்.

அங்காகர்ஷண நாசகாரிகள். கருசக்கினிகள். (ஆன்டிஸ்பாஸ்மோடிக்ஸ், Antispasmotics). இசுவுகளைத் தணிக்கிற மருந்துகளுக்கு, அங்காகர்ஷண நாசகாரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—அபினி, பெருங்காயம், கஸ்தூரி, சடாமாஞ்சி, சுக்குநார்ப்புல்,

தயிலம், கஞ்சா, ஓமம், ஊமத்தை, புகையிலை, மருக்கொழுந்து, நாய்க்கடுகு, ஆடாதோடைபுனுகு இவை முதலியவைகளாம். ரோகங்கள்.—இசிவு, வயிற்றுப்பொறுமல், சூதகஜந்நி இவைகளுக்கு ஷை ஔஷதங்களைக் கொடுக்கலாம்.

ஸங்கோசனகாரிகள். துவர்கள். (அஸ்ட்ரின் ஜெண்ட்ஸ், Astringents). சரீரதாதுக்களையும், நரம்புகளையும் சுருங்கச் செய்து ரத்தம், சீழ் முதலியவைகளை நிறுத்துகிற மருந்துகளுக்கு, ஸங்கோசனகாரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—கந்தகத் திராவகம், வில்வப்பழம், சீனக்காரம், காசுக்கட்டி, மாசக்காய், கடுக்காய், மாதுளம்பிஞ்சு, வெங்காரம், செம்மரம், வங்கஉப்பு, துத்தம், புரசன்பிசின், பனிச்சிக்கா, கருவேல், ஆவாரை, நருவளிப்பட்டை, விளாங்காய், அழவணம், மாம்பருப்பு ஒதியன்பட்டை, நெல்லிக்காய்வற்றல், சொய்யாப்பட்டை, நாவற்பட்டை, இவை முதலியவைகளாம் ரோகங்கள்.—ரத்தபித்தரோகங்கள், அதிசாரம், சீதபேதி, மதுமூத்திரரோகம், பிரமேஹம், கபரோகம், அதிவியர்வை இவைகளுக்கு ஷை துவர்ப்பு ஔஷதங்களை உபயோகிக்கலாம்.

துவக்ஸ்போடகாரிகள். விஸ்போடிகள். (பிளிஸ்டர்ஸ், Blisters). சருமத்தின்மேற் போட்டால் நீர்க்கொப்புளம் உண்டாக்கிற மருந்துகளுக்கு, துவக்ஸ்போடகாரிகள் என்று பேர். கொப்புளத்துக்குள்ளிருக்கிற நீருக்கு ரத்தநீர் (ஸீரம், serum) என்று பேர். அண்டகோசம், ஸ்தனம் முதலிய மிருதுவான ஸ்தானங்களில் பொள்ளிக்கலாகாது. அக்கினிப் பிளாஸ்திரியைப் போட்டு, 12 - 24 - மணிநேரம் வைப்பது வழக்கம் ; அது யுக்தமல்ல 5 - 6 - மணி நேரம்வரையிற் போட்டு. வைத்து, பிறகு எடுத்துவிட்டு, சூடான போல்டீஸ் போட்டால் உடனே கொப்புளிக்கும். குழந்தைகளுக்கு வெகு ஜாக்கிரதையாய்ப் பொள்ளிக்க வேண்டியது. பிளிஸ்டர் போட்டு சருமம் சிவக்கிறவரையில் வைத்திருந்து, எடுத்துவிட்டு, சூடான போல்டீஸ் போட்டால், 2-3-மணி நேரத்தில் கொப்புளம் எழும்பும்; அதைக் கத்தரித்துவிட்டு, வாழையிலைக்கொழுந்தையாவது, மெழுகு களிம்பையாவது, மேலுக்குப் போட்டுக்கொண்டு வரவேண்டியது. இந்த வகுப்பிற்சேர்ந்த ஔஷதங்கள்.—புள்ளிவண்டு, சித்திரமூலம் இவைகளாம். கொதிக்கிற ஜலமும் வெகு சீக்கிரத்தில் பொள்ளிக்கும். ரோகங்கள்.—உன்மாதமுதலிய ரோகங்களுக்குப் பிடரியிலும்-பாரிசவாதத்துக்கு, முள்ளன்தண்டின்மேலும் சூதகச்சூலை, சொட்டுமூத்திரம் இவைகளுக்கு திரிகஸ்தானத்திலும், வாந்தி சிற்க ஈரற்குழியிலும், கண்ணோவுக்கு, கன்னப்பொரி, பின்காது, பிடரி, மேற்புருவம் இந்த ஸ்தானங்களின்மேலும்-காதுவலிக்கு, காதுக்குப்பின்புறமாயும்-இருமலுக்கு மார்பிலும், மற்ற ரோகங்களுக்கு வியாதியுள்ள இடத்திலும், பிளிஸ்டர் போட்டு சிகிச்சை செய்தால் அவைகள் வசப்படும்.

உதரவாத ஹாரகாரிகள். வாயுக்கினிகள். (கார்மினேடீவ்ஸ், Carminatives). வயிற்றில் உஷ்ணத்தையுண்டாக்கி, உபத்திரவத்தைத் தணித்து, வாயுவைக் கண்டிக்கிற மருந்துகளுக்கு, உதரவாத ஹாரகாரியென்று பேர். இந்த வகுப்பிற்சேர்ந்த ஔஷதங்கள்.—ஓமம், ஏலம், கிராம்பு, கருவாப்பட்டை, பெப்பர்மின்டு, சோம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, சுக்கு நார்ப்புல்லு தயிலம், சாதிக்காய், வசம்பு, அரத்தை, பேய்மிரட்டி, மருக்கொழுந்து,

வெற்றிலை, சன்னலவங்கப்பட்டை, பூலாங்கிழங்கு, சீரகம், விளாயிலை, சித்தரத்தை, கச்சோலம், கருவேப்பிலை, கருஞ்சீரகம், கண்டங்கத்திரி, காட்டுச்சீரகம், அமுக்குரா, கஸ்தூரிமஞ்சள் இவை முதலியவைகளாம். ரோகங்கள்.—வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அஜீரணம் இவை முதலியவைகளுக்கு ஷை ஔஷதங்களைக் கொடுக்கலாம்.

விரேசனகாரிகள். பேதி (கெதார்டிக்ஸ், Cathartics, பர்கெடீவ்ஸ், Purgatives). பேதியை உண்டாகிற மருந்துகளுக்கு, விரேசனகாரிகளென்று பேர். இதில் மூன்று வகுப்புகளுண்டு; அவைகளாவன:—உபத்திரவ விரேசனி - ஜலவிரேசனி - லகுவிரேசனி ஆகிய இவைகளாம். வயிற்றில் வேதனையுண்டாக்கி, அதிகமாய்ப் பேதியாகச்செய்கிற மருந்துகளுக்கு, உபத்திரவ விரேசனிகள் (டிராஸ்டிக் பர்கெடீவ்ஸ், Drastic purgatives) என்று பேர். தண்ணீர் தண்ணீராய்ப் பேதியாகச் செய்கிற மருந்துகளுக்கு, ஜல விரேசனகாரிகள் (ஹைட்ரேகாக்ஸ், Hydragogues) என்று பேர். மலத்தை இளகச்செய்கிற மருந்துகளுக்கு மலகாரிகள் (அப்பீரிஎன்ட்ஸ், Aperients, லாக்ஸெடீவ்ஸ், Laxatives) என்று பேர். தேகஸ்திதிக்குத் தக்கபடி, பேதிமருந்துகளைக் கொடுக்கவேண்டியது. துர்ப்பலமுடையவர்களுக்கும், ரக்தக்ஷீணக்காரருக்கும் வயது சென்றவர்களுக்கும், குழந்தைகளுக்கும், உப்புபேதி கொடுக்கலாகாது. மூலரோகிகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், மூஷாம்பரபேதி யுதவாது. அடிக்கடி பேதிக்குச் சாப்பிடுகிற வழக்கங் கெட்டது. உப்புபேதிகள், ஜாலப், மக்கி, நிலவாகை இவைகளைக் கொடுத்தால், 3 - 4 - மணி நேரஞ்சென்று பேதியாகும் சிற்றாமணக்கெண்ணெய்க்கு பேதியாக 4-6-மணி நேரஞ்செல்லும். நேர்வாளம் 1 - 2-மணிக்குள் பேதியை யுண்டாகும். மூஷாம்பரத்துக்கு பேதியாக தாமஸிக்கும். வயிற்றுவலி ரோகங்களுக்கு, பேதிமருந்துடன் அபினியைச் சேர்த்துக் கொடுக்கவேண்டியது. நிலவாகையை உப்புடன் சேர்த்தும், ரஸபஸ்மத்தை கலிங்காதிமெழுகுடன் சேர்த்துங் கொடுத்தால் செவ்வையாய் பேதியாகும். ரஸபஸ்மம், ஜாலப் இவைகள் பித்தநீரைக் கிரமப்படுத்தும்; மூஷாம்பரமானது பெருங்குடல், மலத்துவாரம் இவைகளை உஷ்ணித்து மலத்தைப் போக்கும்; உப்பு, எண்ணெய் இவைகள் குடல்முழுதும் வியாபிக்கும். எதையும் விழுங்கக்கூடாத ஸ்திதியில், பேதிக்குக் கொடுக்க அவசியமிருக்கிற போது, 1 - 2 - துளி நேர்வாளத்தயிலத்தை நாக்கில் தடவினால், பேதியாகும்; அல்லது ஆஸனத்தில் வஸ்தியைப் பிரயோகிக்கலாம். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்களில் - உபத்திரவ பேதிமருந்துகளாவன.—நேர்வாளம் ஆமணக்கெண்ணெய், ஆற்றுத்தும்மட்டி, சந்நிநாயகம், ரஸபஸ்மம், மக்கி, கடுகுரோகணி, ஜாலப், சிவதைவேர், ரேவல்சின்னி, நிலாவாகை, சதுரக்கள்ளி, குப்பைமேனி, கற்றாழை, பிரமதண்டு விதைத்தையிலம், சீமைஅகத்தி, காக்கட்டான், காட்டாமணக்கு, கடுகு ரோசிணி, பத்திராக்ஷகிழங்கு கடுக்காய் ஆகிய இவைகளாம். ஜலவிரேசனவகுப்பிற் சேர்ந்த மருந்துகளாவன.—சீமை இந்துப்பு, திராக்ஷ உப்பு, ஸல்பேட் ஆவ்ஸோடா ஆகியஇவைகளாம் மலகாரி மருந்துகளாவன.—கந்தகம், மேனா, சரக்கொன்றைப் புளி, ஆல்பகோரா, ரோஜாப்பூ, புளி, சீமை அத்திப்பழம், அகத்தி இலை, வாதுமைக்கொட்டை எண்ணெய், தேன் ஆகிய இவை முதலியவைகளாம், ரோகங்கள்.—மலபந்தம், நீர்க்கோவை சூதகரோகங்கள், வாதரோகங்கள். சிரோரோகங்கள் ஆகிய இவை முதலிய வியாதிகளுக்கு, ஷை ஔஷதங்களைக் கொடுக்கலாம்.

அந்தர்ஸ்னிக்தகாரிகள். (டிமல் ஸெண்ட்ஸ்), Demulcents). உட்கொண்டால், தாதுக்களின் எரிச்சலைத் தணித்து, அவைகளைத் துவளச் செய்கிற மருந்துகளுக்கு, ஸினிக்த காரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்களாவன.—விளாம்பிசின், துத்தியிலை, வாதுமைக் கொட்டை யெண்ணெய், அதிமதுரம், சவ்வரிசி, தேன், பார்லி, பால், கூவ மாவு, கஞ்சித்தண்ணீர், முட்டை, கற்கண்டு, எண்ணெய்கள், குன்றிவேர், வெண்டை, இஸ்கோல்விரை, கீரை, காக்கட்டான் வேர்ப்பட்டை, நிலைப்பனை, யானைநெருஞ்சி, பேதானு, நாட்டுவாதுமை, தேள்கொடுக்குயிலை, ஆகிய இவை முதலியவைகளாம். ரோகங்கள் —இருமல், சீதபேதி, நீர்சுருக்கு, பிரமேகம் இவைகளுக்கு ஷை ஔஷதங்களைப் பிரயோகிக்கலாம்.

ஸோபா நாசகாரிகள். (டீஅப்ஸ்டுருஎன்ட்ஸ் Deobstruents). வீக்கங்களைக் கறைக்கிற மருந்துகளுக்கு ஸோபா நாசகாகரிள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—ரஸம், ஐயோடின், அமுக்கிருங் கிழங்கு இவை முதலியவைகளாம். ரோகங்கள்.—வீக்கம், கட்டி இவைகளுக்கு ஷை ஔஷதங்களை உபயோகிக்கலாம்

பூதிகாந்த நாசகாரிகள்.—கந்தக்கினிகள். (டீயோடரைசிங், Deodorizing). நாற்றங்களைப் போக்கிவிடுகிறவைகளுக்கு, பூதிகந்த நாசகாரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்.—குளோரின், கந்தகப்புகை, சாம்பிராணி, சந்தனம், கரி இவைகளாம்.

ஸ்வேதகாரிகள். (டையேபோரிடிக்ஸ், Diaphoretics). தேகத்தில் வியர்வையை பிறப்பிக்கிற மருந்துகளுக்கு, ஸ்வேதகாரிகள் என்று பேர். வியர்வைபிறக்க மருந்து சாப்பிட்டபிறகு, அதிக ஜலம் சாப்பிடுதல், காற்றுப்படாமல் கம்பளியைப் போர்த்துக்கொண்டு, உஷ்ண இடத்தில் சயனித்திருக்குதல், பாத அவகாஹம் (Foot-bath) செய்துகொள்ளல் ஆகிய இவைகளால், வியர்வை அதிகரிக்கும். மூத்திரபேதி, விரேசனங்கள், சீதளக்காற்று, இவைகள் வியர்வையைக் குறைக்கும். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்களாவன.—லிகர் அம்மோனியா அஸிடேடிஸ் Liqour Ammonœ Acetatis) என்னும் ஜெயநீர், அஞ்சனக்கல் பஸ்மம், வாந்தி உப்பு, (ஜேம்ஸ் பவுடர், jame's powder), டோவர் பவுடர் (Daver's powder), வல்லாரை, ஸ்பரிட்ஸ் ஆவ் நைடர் (Spirits of Nitre) என்னும் திரவம், நன்னாரி, கோரைக்கிழங்கு பற்பாடகம், பேய்ப்புடல், முக்காவேளை, நிலவிளா, விஷ்ணுக்கிராந்தி, வெட்டிவேர், சுக்குநாரப்புல தயிலம், எருக்கன் வேர்ப்பட்டை, விஷமூங்கில், அபினி, இஞ்சி, வசம்பு, கற்பூரவள்ளி, பேய்மிரட்டி, வாலுழவை, கருநொச்சி, முருங்கை, துளசி, திருநீற்றுப்பச்சை, கொடிவேலி வேர், யானைத்திப்பிலி இவை முதலியவைகளாம். வேதுபிடிக்குதலாலும் வியர்வை பிறக்கும். ரோகங்கள்.—ஜ்வரம் அதிமூத்திரரோகம் ஆகிய இவைகளுக்கு ஷை மருந்துகளைக் கொடுக்கலாம்.

சாங்கிராமிக ரோக நிவர்த்தன காரிகள்.—அபசர்சாரிகள். (டிஸ்இன்பெக்டானட்ஸ், Disinfectants). ஒட்டு வியாதிகளையும், தொற்றுவியாதிகளையும், நிவர்த்தி செய்கிறவைகளுக்கு, சாங்கிராமிகரோக நிவர்த்தன காரியங்கள் என்று பேர். மேற்கண்ட ஔஷதங்களே இந்த வகுப்பிலும் வரும்.

பாஹ்ய ஸினிக்தகாரிகள் (இம்மாலிஎன்ட்ஸ், Emollients).வேதனை, வீக்கம், வித்திருதிகட்டிகள் இவைகளுக்கு மேலுக் குபயோகிக்கிறவை

களுக்கு, பாகிய விளிக்தகாரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்தவை களாவன:—போல்டீஸ், வெந்நீர் ஒற்றிடம், பூசுதயிலங்கள், மெழுகுக்களிம்பு கள் இவை முதலியவையாம்.

விரணகாரி. (எஸ்கெரொடிக்ஸ, Escharotics). சருமத்தைப் புண்ணுக்குகிற ஔஷதங்களுக்கு, விரணகாரிகள் என்று பேர். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்களாவன.—வெடியுப்புத்திராவகம், காடிக்காரம், துரிசு, வெள்ளைப்பாஷாணம், ரசக்காரச்சிந்தூரம், மரஉப்புக்காரம் (Caustic potash) ஆகிய இவைகளாம். ரோகங்கள்.— துர்மாமிசம், விஷக்கடி, தேள் கொட்டல், நாய்க்கடி, வித்திருதி இவைமுதலிய வியாதிகளுக்கு, ஷை ஔஷதங்களை யுபயோகிக்கலாம்.

ஜலவர்த்தனகாரிகள். (டிலியுஎன்ட்ஸ், Diluents). ரத்தநீரை அதிகரிக்கிற மருந்துகளுக்கு, ஜலவர்த்தனகாரிகள் என்று பேர். இவைகளை அதிகமாகச் சாப்பிடவேண்டியது. வியர்வை மருந்துகள், மூத்திரபேதிகள், வாந்திமருந்துகள் இவைகளுடைய செய்கையை இந்த மருந்துகள் விருத்திபடுத்தும், சோபை, அஜீர்ணம், பகுமூத்திரம், முதலிய ரோகங்களுக்கு, அதிக ஜலம் சாப்பிடலாகாது. இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்களாவன.—பாரலி அரிசி கஞ்சி, கஞ்சித்தண்ணீர், தேயிலைத்தண்ணீர், ஜலம் முதலியவைகளாம். ரோகங்கள்.—தாபனரோகங்கள், சுரம், வாந்திபேதி, மூத்திரக்கிரிச்சிரம், பிரமேகம் இவை முதலிய ரோகங்களுக்கு ஷை ஔஷதங்கள் கொடுக்க வுதவும்.

மூத்திர வர்த்தனகாரிகள். மூத்திரபேதிகள். (டையூரிடிக்ஸ், Diuretics). மூத்திரத்தை அதிகப்படுத்துகிற மருந்துகளுக்கு, மூத்திரவர்த்தனிகள் என்று பேர். மூத்திரபேதிகளைச் சாப்பிட்டுக்கொண்டு வருகிறபோது, அதிக ஜலம் குடித்து, குளிர்ந்த ஸ்தலத்தில் இருக்கவேண்டியது. இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்கள்,—டிஜிடேலிஸ், எரிவண்டுபாவனத்திரவம், அஸிடேட் ஆவ்பொடாஷ், திராக்ஷ உப்பு, வெடியுப்பு, ஸ்குலில், வெங்காரம், வால்மிளகு, குங்கிலியத்தயிலம், ஸ்பிரிட்ஸ் ஆவ் நைடர், விஷமூங்கில், மர எண்ணெய், நன்னாரி, நாயுருவி, இலைக்கள்ளி, நீர்ப்பிரமி, வெண்டை, நீர்முள்ளி, முருங்கைவேர், கல்பாச்சி, யானைநெருஞ்சி, கீழ்க்காய் நெல்லி, சந்தனத்தயிலம், கண்டங்கத்திரி, மணத்தக்காளி, நெருஞ்சி, நரிவெங்காயம், அமுக்கிரா, முதலியவைகளாம். ரோகங்கள்.—நீர்க்கோவை, மகோதரம், இருதயரோகம், தாபனம், இவைகளுக்கு ஷை ஔஷதங்களைக் கொடுக்கலாம்.

வமனகாரிகள். (இமெடிக்ஸ் Emetics). அன்னாசயத்தை வக்கிர கதியாக நடப்பித்து, வாந்தியை யுண்டாக்குகிற மருந்துகளுக்கு வமனகாரிகள் என்றுபேர். இருதயரோகம், அபஸ்மாரரோகம், குடலிறக்கம், குதப்பிரம்ஸம், கர்ப்பபிரம்ஸம், பூர்ணகர்ப்பம், துர்ப்பலம், இவைகளுக்கு வாந்திக்குக் கொடுக்கலாகாது. வாந்திக்கு எடுத்துக்கொண்டபிறகு, வெந்நீர் அதிகமாய்ச்சாப்பிட்டால், வாந்தி தாராளமாய் ஆகும். அபினி வாந்தியை நிறுத்தும். நஞ்சுண்டோருக்கு, வாந்திக்கு துத்தத்தையாகிலும், துரிசையாகிலும், கொடுத்தால், ஆயாசமில்லாமல் அதித்துரையில் வாந்தியாகும்; வாந்தி உப்பு, இபிகாக், இவைகளைக்கொடுக்கலாகாது. வாந்திக்கு அடிக்கடி எடுத்துக்கொள்ளுகிற வழக்கம் கெட்டது. பிரபலமாய் வாந்தியானல், ஸோடா வாடரோடு, லாடனத்தைச் சேர்த்துக்கொடுத்தால், வாந்தியை நிறுத்தும் இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்களாவன,—இபிகாக், வாந்தி உப்பு,

தத்தம், துரிசு, கடுகு, கறிஉப்பு, ஆக்கிராணஉப்பு, எருக்கன்வேர்ப்பட்டை, விஷமூங்கில், கொடிக்குருஞ்சா, குப்பைமேனி, இலுப்பைப்புண்ணாக்கு, நரி வெங்காயம், அமுக்கிரா இவைகளாம். ரோகங்கள்.—சுரம், உன்மாதம், கபரோகம், காசம், கக்கிருமல், இவைகளுக்கும், அன்னசயத்திலிருக்கிற நஞ்சையும், அஜீர்ணபதார்த்தங்களையும், வெளிப்படுத்த வாந்திக்குக் கொடுக்கலாம்.

ருதுவர்த்தனகாரிகள். (இம்மெனாகாக்ஸ் Emmenagogues). ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் காணுகிற சுரோணிதத்தைக் கிரமப்படுத்துகிற மருந்துகளுக்கு, ருதுவர்த்தினிகள் என்று பேர். கர்ப்பஸ்திரீகளுக்கும், கருப்பைரணரோகத்திலும், இந்த மருந்துகளைக் கொடுக்கலாகாது. விலக்கங்காணச் சமீபித்த நாட்களில், ருதுவர்த்தினிகளைக் கொடுத்தால் நல்லகுணத்தைத்தரும். இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்களாவன —மூஷாம்பரம், பொட்டிலுப்பு, அர்கட், அரூதா, வெங்காரம், வெட்டிவேர், ஆடுதீண்டாப் பாளை, பெருமருந்து, பப்பளிக்காய்விரை, செங்கொடிவேலிவேர், எள்ளு, இவை முதலியவைகளாம். தேஹதாருட்டியங்குறைந்து, விலக்கத்தில் அக்கிரமங்கண்டால், அயம் கொடுக்கவேண்டியது. அதி தூலரோகத்திலெடுத்த சூதகக்கட்டுக்கு, ரசம்கொடுத்தால் நன்மைசெய்யும். ரோகங்கள்.—சூதகச்சூலை, சூதகக்கட்டு, ஆகிய இவைகளுக்கு ஷை ஔஷதங்களைக் கொடுக்கலாம்.

கபஹரகாரிகள், (எகிஸ்பெக்டொரான்ட்ஸ் Expectorants) கபத்தை வெளிப்படுத்தி, இருமலைத்தணிக்கிற மருந்துகளுக்கு, கபஹரகாரிகளென்றபேர். குமட்டலுடைய கபஹரகாரிகளை துர்ப்பலரோகிகளுக்குக் கொடுக்கலாகாது. இந்த வகுப்பில் சேர்ந்த ஔஷதங்களாவன,—இபிகாக், வாந்தி உப்பு, பெருங்காயம், சாம்பிராணிபதங்கம், பாலஸம்பிரு பால்ஸம் டொலு விஷமூங்கில், கொடி குருஞ்சாயிலை, குப்பைமேனி, கர்ப்பூரவள்ளி குக்கிலம், மூக்கிரட்டை, உத்தாமணி, ஆடாதோடை, திருநீத்துப்பச்சை, துளசி, கண்டங்கத்திரி, நரிவெங்காயம், இவை முதலியவைகளாம். ரோகங்கள்.—இருமல் ரோகங்களுக்கு ஷை. மருந்துகளைக் கொடுக்கலாம்.

ஜுரஹரகாரிகள் சுரக்கினிகள். (பெப்ரிபியூஜெஸ், Febrifuges). காயச்சலை நீக்குகிற மருந்துகளுக்கு,—ஜுரஹாரகாரிகளென்று பேர். இந்த வகுப்பில் சேர்ந்த ஔஷதங்களாவன.—குவைநா, பார்க்பவுடர், வெள்ளை பாஷாணம், சுவேதகாரிகள் அஞ்சனக்கல் பஸ்மம், சீதளகாரிகள் வேப்பம் பட்டை, ஆகிய இவைகளாம்.

நித்திராகாரிகள் (நார்காடிக்ஸ் Narcatics.) நித்திரையை யுண்டாக்குகிற மருந்துகளுக்கு, நித்திராகாரிகள் என்று பேர். இவைகளை நித்திரை செய்யப்போகிற காலங்களில் கொடுக்க வேண்டியது. இந்த வகுப்பில் சேர்ந்த ஔஷதங்களாவன,—அபினி, மார்பியா, குரோசானியோமம், கஞ்சா, பெல்லடோனா ஆகிய இவைமுதலியவைகளாம். ரோகங்கள்,—நோவு, நித்திராபங்கம், பேதி இவைகளுக்கு ஷை ஔஷதங்களைக்கொடுக்கலாம்

பிரஸவகாரிகள். (பார்ட்யூரிபேஸியென்ட்ஸ், Parturifacients). பிரஸோதவாயுவை யதிகரித்து, கருப்பையைச் செவ்வையாய்ச் சுருங்கச்செய்கிற மருந்துகளுக்கு, பிரஸவகாரிகளென்று பேர். இந்த வகுப்பில் சேர்ந்த மருந்துகளாவன,—அர்கட், கஞ்சா, வெங்காரம், ஆடுதீண்டாப்பாளை, திப்பிலி, புழுத்தபார்லி அரிசி, ஆகிய இவைகளாம்.

சீதளகாரிகள். (ரிபிரிஜிராண்ட்ஸ் Refrigerents). அத்தியுஷ்ணத்தைத் தணித்து தாகத்தை யடக்குகிற மருந்துகளுக்கு, சீதளகாரிகளென்று பேர். இந்த வகுப்பில் சேர்ந்த மருந்துகளாவன,—பொட்டிலுப்பு, எலுமிச்சம்பழரசம், புளிப்பினங்கள்; புளி, குளிர்ந்த ஜலம் தடவுதல், கத்தாழை, பனைநொங்கு, பனங்கள்ளு, இளநீர், பனங்கற்கண்டு, கடலைப்புளி செம்பருத்தி, சந்தனப் பூச்சு, ஆகிய இவை முதலிய வைகளாம். ரோகங்கள்,—அத்தியுஷ்ணம், சுரம், தாபன ரோகங்கள், ரத்தபித்த ரோகங்கள், இவைகளுக்கு ஷை மருந்துகளை யுபயோகிக்கலாம்.

ஷோணகாரிகள். (ரூபிபெஷியென்ட்ஸ், Rubefacients). போட்டவியத்தைச் சிவப்பித்து, எரிச்சலையும், உஷ்ணத்தையும் உண்டுபண்ணுகிற மருந்துகளுக்கு, ஷோணகாரிகள் என்று பேர். இவைகளைப் போட்டு நேரப்படவைத்தால், கொப்புளிக்கும். இந்த வகுப்பிலுள்ள ஔஷதங்களாவன,—கடுகு, அக்கரகாரம், முளகாய், மிளகு, சுக்கு, வெங்காயம், பூண்டு, முருங்கைவேர், நவக்ஷாரம், டார்ப்பன்டயின், சுக்கு நார்புல் தயிலம், நேர்வாளம், சாதிக்கா தயிலம், முந்திரிக்கொட்டைப்பால், பேயமிருட்டி தயிலம், வெத்திலை, திப்பிலி, சதுரக்கள்ளி, திருகுக்கள்ளி, நாய்க்கடுகு, காட்டு ஆமணக்கு, செங்கொடி வேலி, கொடிவேலி, சேங்கொட்டை, வெள்ளைக் குங்கிலியம், ஆகிய இவைகளாம். ரோகங்கள்,—வேதனையுள்ள ஸ்தானங்கள், தடிப்பு, இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

சமனகாரிகள். (ஸெடடீவ்ஸ் Sedatives). ரத்ததாது, மஜ்ஜதாது இவைகளின் கொதிப்பை சமனப்படுத்துகிற மருந்துகளுக்கு, சமனகாரிகள் என்றுபேர். இந்த வகுப்பிற்சேர்ந்த ஔஷதங்களாவன,—வாந்தி உப்பு, டிஜிடேலிஸ், புகையிலை, நாபி, கஞ்சா, குளோரொபாரம், கோஷ்டம் சந்தனக்கட்டை, அமுக்குரா ஆகிய இவைகளாம். ரோகங்கள்.—சுரங்கள், தாபன ரோகங்கள், விரணஜந்நி, பேய்நாய்க்கடிஜந்நி, இருதயரோகம், இவைகளுக்கு ஷை மருந்துகளை உபயோகிக்கலாம்.

திரவகாரிகள். (ஸையெலொகாக்ஸ் Sialogogues). உமிழ்நீரை அதிகப்படுத்தி, நாக்கில் திரவத்தை யுண்டாக்கிற மருந்துகளுக்கு, திரவகாரிகள் என்றுபேர். இந்தவகுப்பிற் சேர்ந்த மருந்துகளாவன,—தாம்பூலம், சுக்கு, அக்கிரகாரம், மிளகு, லவங்கம், புகையிலை,மிளகாய், முருங்கை, கொடிவேலி கண்டங்கத்தரிவிதை, இவைகளை வாயிலிட்டு மெல்லுதலால், அதிக திரவம் சுரக்கும். ரோகங்கள்.—நாக்கு, ஈறு, பல்லு, தலை, காது, இவைகளுடைய ரோகங்களுக்கு, ஷை மருந்துகளை உபயோகிக்கலாம்.

உஷ்ணகாரிகள். தீபனிகள். உச்சாஹகாரிகள். (ஸ்டிமியு லென்ட்ஸ். Stimulants). நாடியை அதிக்கிரமித்து, தேஹகாங்கையை விர்த்திப்படுத்துகிற மருந்துகளுக்கு, உஷ்ணகாரிகள் என்றுபேர். இந்த் மருந்துகள் சாப்பிட்ட உடனே, ஸ்பரிசாரம்பு மண்டலத்துக்கு, உச்சாகம் பிறந்து அதன் வழியாக மாம்ஸதாதுக்கள் பலமடைந்து, தேகத்துக்கு ஓர்வித உச்சாகம் பிறப்பிக்கும், நாடி நடை தீவிரமாகும், சுவாஸம் அதிக்கிரமிக்கும்; மருந்தின் வேகம் தணிந்தபிறகு, தேஹம் அசதியாகும். சுரம், தாபனம், அதிதூலரோகம், சுரமனு சரித்த ரத்த பித்த ரோகங்கள், ஆகிய இவைகளுக்கு, உச்சாஹகாரிகள் உதவாது. இந்த வகுப்பிற் சேர்ந்த ஔஷதங்களாவன,—சுக்குநார்புற்தயிலம், கஞ்சா, முந்திரிச்சாராயம், இலுப்பைச்சாராயம், பனஞ்சாராயம், தெங்குச் சாராயம், வாலுழுவைத் தயிலம், நாட்டுச்சடாமாஞ்சி, நொச்சில், ஈதர், சாராயம், ஸ்பிரிட்ஸ் ஆவ் அம்மொனியா, சூடன், மிளகு,

ஓமம், சுக்கு, திப்பிலி, கடுகு, குங்குமப்பூ, லவங்கம் ஆகிய இவை முதலிய வைகளாம். ரோகங்கள்,—மூர்ச்சை ஜந்நி, வாந்திபேதி பலவீனம், இவைக ளுக்கு, ஷை மருந்துகளை உபயோகிக்கலாம்.

ரக்தஸ்தம்பனகாரிகள். (ஸ்டிப்டிக்ஸ் Styptics). ரத்தப்பெருக்கை நிறுத்துகிற வைகளுக்கு, ரக்தஸ்தம்பன காரிகள் என்று பேர். இவைகள் ரத்த நரம்புகளைச் சுருக்கச் செய்வதாவது, அல்லது ரத்தத்திலிருக்கிற ஆல் பியூமென் (Albumen) என்கிற பதார்த்தத்தை, உறையச்செய்வதாவது ரத்தத்தை நிறுத்தும். இதத வகுப்பிற் செர்ந்த ஔஷதங்களாவன,— சீனக்காரம், துரிசு, காடிக்காரம், அயப்பாவனத்திரவம், சீதஜலம், பனம் பஞ்சு, தென்னம்பஞ்சு, ஆகிய இவை முதலியவைகளாம். ரோகங்கள்,— ரத்தப்பெருக்கு.

பலகாரிகள். தாருட்டியகாரிகள். (டானிக்ஸ் Tonics). சரீரத்துக்கு பலம் வரும்படிச் செய்கிற வைகளுக்கு, பலகாரிகளென்று பேர். இவை கள் மெதுவில் சவுக்கியத்தைத்தரும், ஜீரண சக்தியையும், அதிகப்படுத் தும், அயஞ் சேர்ந்த மருந்துகள், ரத்தத்திலிருக்கிற அணுக்களை விருத்தி செய்து, மாம்ஸதாதுவின் பலத்தை அதிகரிக்கும். இந்த வகுப்பிற் சேர் ந்த மருந்துகளாவன.—அயம், குவைநா, கலம்பா, கிரியாத், நிலவேம்பு, குவாஷிய, திராவகங்கள், அன்னபேதி, ஜென்ஷன், வேப்பம்பட்டை, செம் மரம், தேன்பூச்சிமரம். கரிங்காலி தாளிசப்பத்திரி, களிச்சிப் பருப்பு எட்டி, குலான்சா, வசம்பு, பெருமருந்து, மருக்கொழுந்து. வெள் ளறுகு கண்டு பரங்கி. மரமஞ்சள். நாகேசரம். செண்பகப்பூ பேய்ப்பு டல், ஆணகொரட்டை ஆகிய இவை முதலியவைகளாம். நல்ல போஜனம் பரிசுத்தமானகாற்று, குளிர்ந்த ஜலஸ்நானம், இவைகளும், தேஹதாருட்டி யத்தை வர்த்திக்கும்.

தீபனவர்த்தனிகள். தீபனிகள். ஜாடராக்கினி வர்த்தனகாரிகள். (ஸ்டமக்கிஸ் Stomochics). பசியை அதிகப்படுத்துகிற மருந்துகளுக்கு தீபனிகள் என்றுபேர். ஓமம், சுக்கு, திப்பிலி, மிளகு முதலியவைகளுக்கு ஷை குணமுண்டு.

காக்காய்க் கொல்லி, வசம்பு, கோஷ்டம், வேப்பெண்ணெய், காட்டுச் சீரகம், இவைகளுக்கு பேன் முதலிய சிறிய புழுக்களைக் கொல்லுகிற குண மிருப்பதால், இங்கிலீஷில், இன்ஸெக்டிஸைட் (Insecticides or Insectifuges) என்றுபேர்.

க்ஷீரநாசினிகள். (லாக்டிபியூஜெஸ் Lactifuges). வெற்றிலை, கொடி முல்லை, வேப்பிலை, இவைகளுக்கு முலைப்பாலை வறட்டுகிற குணமுண்டு.

க்ஷீரவர்த்தனிகள். லாக்டெகாக்ஸ் Lactagogues). ஆமணக்கிலை, காட்டாமணக்கிலை, இவைகள் முலைப்பாலை சுரப்பிக்கும்.

போஷணகாரிகள். (நுயீட்ரிடீவ்ஸ் Nutritives). சுறாமீன் நெய், தேங் காய்ப்பால், இவைகளுக்கு தேகத்தைப் போஷிக்கிற குணங்களுண்டு.

ஒஷதி குணபாடம்

அல்லது,

தாவர பதார்த்தங்களின் குணங்கள்

வெஜிடேபில் மெடீரியா மெடிகா

VEGETABLE MATERIA MEDICA

நாபியினம். (RANUNCULACEAE)

சீமை நாபி (வேர், இலை).

சீமை நாபிச்செடி.—ஆகொனைடம் நெபெல்லஸ்; Aconitum Napellus, ஆகொனைட்; Aconite, மான்க்ஸ்ஹுட்; Monkshood.

சீமை நாபிவேர்.—ஆகொனைட் ரூட், Aconite root; ஆகொனைடை ராடிக்ஸ், Aconite radix.

சீமைநாபி இலை. ஆகொனைட்லீவ்ஸ், Aconite leaves, ஆகொனைடை போலியா; Aconiti Folia,

விவரணம்.—யூரோப், ஏஷியா, மத்திய பாகம் இவ்விடங்களில் விளைகிற இந்தச் செடியின் வேரானது, 1-3-அங்குல நீளமாய், நடுவிரல் கனத்தில், கூச்சியாய், கறுத்தும் உள்ளே வெளுத்துமிருக்கும்; சொஞ்சம் வாயிலிட்டு பத்திரமாய் மெண்ணால்; விறுவிறுப்பும், மரத்திலுமுண்டாகும். இலைகள் மிருதுவாய் 5-பிளப்புள்ளதாயிருக்கும்; மெண்ணால் விறுவிறுப்பு காணும். நாபியின் வேகதுணம். ஆகொனீஷியா, (Aconitia) என்னும் உப்பிலிருக்கிறது; அது கொடிய நஞ்சு. உள்ளுக்குக் கொடுக்கலாகாது.

செய்கை.—ஸமனகாரி, வேதனைசாந்திகாரி, உக்கிரரோகஸமனி, அதிகமாகில் சொல்லும்.—Sedative, Anodyne, Antiphlogistic.

உபயோகம்.—வேதனை, விரணஜந்நி, கீல்வாதம், இருதயரோகம் இவைகளுக்கு சீமை நாபியை உபயோகிக்கலாம். இது உயர்ந்த மருந்து, வெகுபத்திரமாய் உபயோகிக்கவேண்டியது.—In neuralgia, tetanus, rheumatism, diseases of the heart.

சீமைநாபி பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் ஆகொனைட், Tincture of Aconite. டிங்சுரா ஆகொனைடை, Tinctura Aconiti.)—செய்யுமுறை: சதைத்த சீமைநாபிவேர், $2\frac{1}{2}$ ஔன்ஸ்: இரட்டித்து வடித்த சாராயம், 1 பைண்ட் ஊறவைத்து, பெற்கொலேடரில் விட்டு வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—5-15 மினம், கொடுக்கலாம்.—Aconite root, oz. $2\frac{1}{2}$; Rectified, Pint 1.) Dose.—5-15 Minims..

சீமை நாபி பூசுந்தயிலம். (லினிமென்ட் ஆவ் ஆகொனைட், Liniment of Aconite-லினிமெண்டம் ஆகொனைடை Linimentum Aconiti)- செய்முறை சதைத்த சீமை நாபிவேர், 20-ஔன்ஸ்; சூடன், 1 - ஔன்ஸ்; இரட்டித்து வடித்த

சாராயம் தேவையானது. வேரில் கொஞ்சம் சாராயம் விட்டு, மூடி, 3 நாள் ஊற வைத்து பிறகு பெற்கொலேட்ரில் ஊற்றி, அடிப் பாத்திரத்தில் சூடனைப்போட்டு, வடிகட்டிக்கொள்ளவும். பிறகு ஒரு பைன்ட் அளவுக்கு தேவையான சாராயம் சேர்த்துக்கொள்ளவேண்டியது. உபயோகம். இதை மேலுக்குமாத்திரம் உபயோகிக்கலாம், வாதநோய் மூட்டு வலி, இவைகளுக்கு எடுத்தமருந்து. பீத்தோல் நீங்கிய ஸ்தானத்தில் படாமல், ஸம்ரக்ஷிக்கவேண்டியது. 1-ஔன்ஸ் திராவகமானது, 1-ஔன்ஸ் உலர்ந்த வேருக்குச்சமனு இருக்கும்.—(Aconite root, oz 20 ; Camphor, oz 1 ; Rectified Spirit, Pint, 1.)—Only for external use.

நாபி (வேர்.)

பிரதி பதங்கள்.—நாடி வச்ச நாபி, வஸநாபி.

நாபிச்செடி.—ஆகோண்டம் பீராக்ஸ், Aconitum Ferox. பிக்ஷ் பிஷ் Bikh or Bish.

விவரணம்.—ஹிமோத்கிரி பருவதச்சாரலில் விளைந்து நமது கடைகளுக்குவருகிற இந்தச் சரக்கில் பல ஜாதிகளுண்டு. (Aconitum Napellus, A Palmetum. A. Luridum). கிழங்கு கூச்சியாய், 2-3-அங்குல நீளமுள்ளதாய், மேல்முனை ½-1-அங்குல தளமுள்ளதாய் கறுத்து சுருங்கிய மேல்தோலுடையதாயிருக்கும் ; ஒடித்துப்பார்த்தால், பளபளப்பான பல நிறமுள்ளதாயிருக்கும் ; சில வெள்ளையாய் மிருதுவாயிருக்கும் ; அவைகள் மற்ற அழுத்தமான இனத்தைப்பார்க்கிலும், சிரேஷ்டமென்று சொல்லப்படுகிறது. நாபிக்கு வாசனையில்லை ; கொஞ்சம் கசந்து பிறகு நாக்கிலும் தொண்டையிலும் மரத்தலுண்டாகும். பிரத்தானசத்துக்கு, ஆகோனீஷியா (Aconitia) என்று பேர். வெள்ளைநாவி, கறுநாவி, வச்ச நாவி, சூத்திரநாவி என 4 ஜாதிகளுண்டென்று தமிழில் விவரித்திருக்கின்றது. வசம்பு முற்றினல், வச்ச நாவியாகிறதென்று சொல்வது வழக்கம். அவ்விரண்டும் வெளிவேறான இனங்கள்.

உபயோகம்.—சீமை நாபிக்குப்பதிலாக இதை உபயோகிக்கலாம் ; ஆனல் நாட்டுச்சரக்கு மெத்த வீரியமுள்ளதால், பாவனத்திரவம் செய்து உள்ளுக்குக்கொடுக்க உதவாது.—Similar to those of A. Napellus of Europe.

கருஞ்சீரகம். కృష్ణజీరకం. (நைஜெல்லஸைடைவா Nigella sativa) (வித்து) வயிற்றுவாயுவை கண்டிக்கும். பாவனத்திரவம் (வித்து 4½-ஔ ; சாராயம் 2-பை) செய்து. ½-1-டிராம் வீதம் பேதிமருந்துகளோடுச் சேர்த்துக்கொடுக்கலாம். இதை அறைத்து, எண்ணெயில் குழைப்பி சிரங்குக்குப் பூசலாம்.

கடுதரோகணி. கடுரோஹிணி (ஹெல்லிபோரஸ் னைஜர், Helleborus Niger. பிளாக் ஹெல்லிபோர், Black Hellebore. Christmas Rose,) (வேர்) இது கறுத்து, உள்ளேவெள்ளையாய், கெட்டவாசனையாய் கசப்பும், காரமுமுள்ளதாயுமிருக்கும், வாயிவிட்டால் திமிற் உண்டாகும், வேர் உலர்ந்தாலும், நாட்சென்றாலும். ரசமற்று குணம்கெடும். இது விரேசனி, ருதுவார்த்தனி.—கஷாயமிட்டு வயிற்றையிளக்க நமது ஜனங்கள் கொடுக்குறார்கள் 18-20 கிறேன் கொடுத்தால், சாடித்து பேதியாகும். வென்னீர்க் கஷாயத்தில் (வேர்-2-டி ; வென்னீர்-1-பை) 1-ஔன்ஸ் கொடுக்கலாம்.

செண்பகப்பூ இனம். (MAGNOLIACEÆ)

அனீசு - (காய்)

பிரதிபதங்கள்.—அன்னசி, நக்ஷத்திரசீரகம்.

அனீசுசெடி.—இல்லிஸையம் அனிஸேடம் Illicium Anisatum ஸ்டார் அனீஸ், Star Anise.

விவரணம்.—சீனதேசத்தில் விளைகிற இந்தக் காயானது, 8-பிரிவுக ளாய் அபிங்கியிருக்கும் ; உள்ளிருக்கிற விதைகள், சோம்பு போல் நல்ல வாஸனை புடையதாய், இனிப்பாயிருக்கும் ; வாலையிலிட்டு வடித்தால், தைல மிறங்கும், அதுதான் மருந்துக் குபயோகம். (ஓலியம் இல்லிஸை அனி ஸேடை, Oleum Illici Anisati). அந்த தைலம் கொஞ்சம் மஞ்சளாய், நல்ல வாசனையா யினிப்பாயிருக்கும்.

செய்கை.—ஜாடராக்கினி வர்த்தனி, கர்ப்பவாதஹாரி. Stomachic Garminative.

உபயோகம்.—குன்மம் முதலிய வயிற்றுவலிகளைக் கண்டிக்கும்.—In flatulency, &c.

மாத்திரை.—தயிலத்தில், 2 - 5 மினிம் கொடுக்கலாம். Dose.—2 - 5 Min.

(NON-OFFICINAL.)

சேண்பகத்துச்செடி.—(மிசீலிய சாம்பேக. Michelia Champaca). சுசந் துவாசனையாக இருக்கிற இதன்பட்டையை மோரீஸ் தீவில், வெந்நீர், காஷாயமிட்டு (Infusion) (1-ஔ-1-பயின்ட்ஜலம்) சீத சுரங்களுக்கு (ague) ஒரு வைத்தியர் கொடுத்ததுண்டு. 1-ஔன்சுக்கு 2-பையின்ட் ஜலம் விட்டு, 1பையின்டுக்கு சுண்டக் காய்ச்சி கஷாயமாகச் செய்தும் (Decoction)கொடுக்கப்பட்டது. ஒரு ஒயின் கிளாஸ் (Wineglass) வீதம் சுரம் வருகிறதற்குமுன் மணிக்கொருதரம், 3-ஆவர்த் தியும், அதேப்பிரகாரம் சுரம் விட்டபின்பும், கொடுத்ததாய் கண்டிருக் கிறது. இந்தச்செடி நமதுதேசத்தில் எளிதிலகப்படும். புஷ்பம்வாசனையாயிருக்கும்.

கலம்பா இனம். (MENISPERMACEÆ.)

கலம்பவேர். (வேர்.)

கலம்பாசெடி.—ஜடியொரைஜா கொலம்பா. Jateorhiza Columba; காக்கிருலஸ் பால்மேடஸ். Cocculus palmatus.

கலம்ப வேர்.—கலம்ப ரூட், Calumba root; Calumbæ radix.

விவரணம்—ஆப்ரிகா கண்டத்தில் விளைகிற கொளம்பு வேரானது, தட்டையான பில்லைகளாய் மத்தியில் சன்னமாய், மிருதுவாய், மஞ்சள் நிற மாய், கொஞ்சம் வாஸனையுள்ளதாய், மெத்தக்கசப்பாய் இருக்கும்.

செய்கை.—பலகாரி, ஜாடராக்கினி வர்த்தனி—Tonic, stomachic.

உபயோகம்,—அக்கினி மந்தம், நோயுற்றெழுந்தோர்களுக் கிருக்கிற துர்ப்பலம், கர்ப்பணிகளுக்குக் காணுகிற வாந்தி, நாள்பட்ட பேதி, கிரகணி, இவைகளுக்குக் கொடுக்கலாம்; இதில் துவர்ப்பு சத்து இல்லாததால், அயத் தைச் சேர்த்துக்கொடுக்கலாம். In debility, dyspepsia, gastric iritability, &c.

மாத்திரை,—5-20 கிறேன் வீதம், தினத்து 2-3 ஆவர்த்திக் கொடுக்க லாம். Dose.—5-20 grins of the powder.

கலம்பவேர் வெந்நீர் ஊறல்கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் கலம்பா. Infusion of Calumba. இன்பியூஷன் கலம்பீ. Infusum Calumbœ.) செய்முறை.—கலம்பாவேர் ½-ஔன்ஸ்; குளிர்ந்த ஜலம், 10-ஔன்ஸ்

இவைகளைச்சேர்த்து மூடி 1-மணிநேரம் ஊறவைத்து,வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை. 1-2-ஔன்ஸ் வீதம் கொடுக்கலாம். (Calumba Root oz. ½; Cold water, foz. 10.) Dose.—1-2. ounces.

கலம்பாவேர் பாவனத்திரவம். (டிங்சர் ஆவ் கெலம்பா. Tincture of Calumba.— டிங்சுராகெலம்பி, Tinctura Calumbæ.) செய்முறை. சிறுதாய்த் துண்டித்த கலம்பவேர் 2½-அவுன்ஸ்; புரூவ் ஸ்பிரிட், 1-பயின்ட். ஊற வைத்து பெற்கொலேடரில் விட்டு, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—½-2 டிராம் வீதம் கொடுக்கலாம். (Calumba root, oz. 2½ proof spirit, pint. 1) Dose.-½ 2-fdrs.

பெரீரா - (வேர்)

பெரீராசெடி. ஸிஸ்ஸாம்பிலஸ் பெரீரா. Cissampelos pareira, பெரீராபரேவா; pareira brava.

விவரணம்.—இது ஒரு கொடியின் வேர் ; கறுத்து உள்ளே சிறிய ரந்திரங்களுடையதாய், மஞ்சள் கலந்த சாம்பல் நிறமாய், வாசனையற்றதாய், கசப்புள்ளதாயிருக்கும்.

செய்கை.—பலகாரி, மூத்திரவர்த்தனி Mild tonic, anb diuretic

உபயோகம்.— மூத்திரப்பை எரிச்சலுக்கும், மஜ்ஜாமூத்திரம், சிலேஷ்ம மூத்திரம் இவைகளுக்கும் உபயோகப்படும். Chronic cystitis, catarrhal affection of the bladder, and cystirrhæ.

பெரீரா கஷாயம். (டிகாக்ஷன் ஆவ் பெரீரா, Decoction of Pareira டிகாக்டம் பெரீரி. Decoctum Pareiræ) செய்முறை.—துண்டித்த பெரீராவேர் 1½-ஔன்ஸ் ஜலம் 1-பைண்ட் பாத்திரத்தைமூடி, 15-நிமிஷம்காச்சி வடிகட்டி, ஒரு பையின்ட் அளவுக்கு தேவையான ஜலத்தை வடித்துணியில் விட்டு எடுத்துக் கொள்ளவேண்டியது. மாத்திரை.—1-3-ஔன்ஸ் வீதம் கொடுக்கலாம். (Pareira root oz. 1½; water, pint 1. Dose. 1-3. oz.

பெரீராசத்து.—(எகிஸ்ட்ராக்ட் ஆவ் பெரீரா, Extract of Pareira; எகிஸ்ட்ராக்டம் பெரீரி, Extractum Pareiræ). மாத்திரை.—10-20-கிறேன்வீதம் கொடுக்கலாம். Dose —10-20 grs.

பெரீரா திரவச்சத்து. (லிக்குவிட் எகிஸ்ட்ராக்ட் ஆவ் பெரீரா, Liquid Extract of Pereira; எகிஸ்ட்ராக்டம் பெரீரிலிக்குவிடம். Extractum Pareiræ Liquidum.) மாத்திரை.—½-2-டிராம் வீதம் கொடுக்கலாம். Dose.—½-2 fdrs.

காக்காய்க் கொல்லி. (கனி.)

பிரதி பதங்கள்.—நஞ்சுக்கொட்டை, కాకిచంపు.

காக்காய் கொல்லிச்செடி.--அன்மிர்ட காக்கியுலஸ், Anamirta Cocculus; காக்கியுலஸ் இன்டிகஸ்; Cocculus Indicus.

விவரணம்.—இலங்கை, மலையாளம், திருவிதாங்கோடு, ஒடியாதேஸம் முதலிய இடங்களில் அகப்படுகிற இந்த உலர்ந்த காயானது, பட்டாணிக்குக்கொஞ்சம் பெரிதாய், மாங்காய்ப்பருப்பு ரூபமாய்க் கருத்துத் தோல் சுருங்கி இருக்கும்; ஓட்டை நீக்கிப் பார்த்தால் உள்ளே மாங்காய்ப்பருப்பு போல, மஞ்சளானவித்து இருக்கும், அதில் தைலமுண்டு. இதின் வீரியசத்துக்கு, பைக்கிரொடாக்ஸைன் (Picrotoxine) என்று பேர், அது கொடிய நஞ்சு.

உபயோகம்.—இதை உள்ளுக்குக் கொடுக்கிறதில்லை; அடியில் கண்ட களிம்பை மேலுக்குப்போட்டால் பேன் நாஸமடையும்.

காக்காய்க் கோல்லிக்காயின் களிம்பு.—(ஆயின்ட்மென்ட் ஆவ் காக்கியுலஸ் இன்டிகஸ்,Ointment of CocculusIndicus ; அன்குவன்டம் காக்கியுலை, Unguentum Cocculi செய்முறை. காக்காய்க்கொல்லி விதை, 80கிறேன்; சுத்திசெய்த பன்றிநெய், 1-ஔன்ஸ் விதையை உரலில் செவ்வையாய் இடித்து நெய்யோடு மிஸ்ரமித்துக்கொள்ளவும். இதை ரணங்களில் படாமல் சூக்ஷித்து, பூசவேண்டியது. (Seeds, grs. 80 Prepared Lard, oz. 1) Insecticide.

சீந்தில் (கொடி, கிழங்கு)

பிரதிபதங்கள்.—அமிர்தக்கொடி, சீந்திற் கிழங்கு. ಠಿಪ್ಪತೀಗ

சீந்தில்செடி.—டினுஸ் போர கார்டிபோலிய, Tinospora Cordifolia காக்கியுலஸ் கார்டிபோலியஸ்,Cocculus cordifolius; குலான்ச,Gulancha.

சீந்திற்கிழங்கு.—டினுஸ்பொரி ராடிக்ஸ், Tinosporæ radix. சீந்திற்கொடி டினுஸ்போரி காலஸ், Tinosporæ Caules.

விவரணம்.—பெங்காளம், வடதேசங்கள், மலையாளம், மைசூர்முதலிய உஷ்ணதேசங்களில் அகப்படுகிற இந்தக் கிழங்கையும் கொடியையும் வெய்யில் காலத்தில் சேகரித்தால், கசப்புகுணம் அதிகமாயிருக்கும்; வசானையிராது, கசக்கும், கஷாயத்தில் அன்னபேதியைப்போட்டால் கறுக்காது.

செய்கை.—பலகாரி, முறை வியாதிரோதி, மூத்திரவர்த்தனி. Tonic, antiperiodic, diuretic.

உபயோகம்.—அற்ப சீதசுரங்கள், துர்ப்பலம், மேக வியாதிகள், புராதன கீல்வாதம் இவைகளுக்குக்கொடுத்து குணம்கண்டதுண்டு. (சர்வ மேகம், ரத்தபித்தம், மாந்தசுரம், பேதி, ஆம்பலபித்தம், சர்ப்பவிஷம், இவைகள் போகும், ஜாடராக்கினியுண்டாகும். சிந்தாமணி.) Intermittents, general debility, secondary syphilis, chronic rheumatism.

சீந்தில் பாவனத்திரவம்—(டிங்சர் ஆவ்குலான்ச, Tincture of Gulancha; டிங்சுரா டினுஸ் போரி, Tinctura Tinosporæ.) செய்முறை.-துண்டித்த சீந்தில் கிழங்கு 4 - ஔன்ஸ் ; புரூவ் ஸ்பிரிட், 1 - பைன்ட், பாத்திரத்தைமூடி, அடிக்கடி குலுக்கி, 7 - நாள் ஊறவைத்து, வடிகட்டி, 1 - பைன்ட் அளவுக்குத் தேவையான சாரயம் விட்டுக்கொள்ளவும். மாத்திரை. 1 - 2 - டிராம் வீதம் கொடுக்கலாம். (Gulancha, oz. 4; Proof Spirit 1 pint.) Dose.—1-2 fdrs.

சீந்தில் வெந்நீர் ஊறல்கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் குலான்ச, Infusion of Gulancha ; (இன்பியூஸம் டினுஸ்போரி, Infusum Tinosporæ.) செய்முறை.—துண்டித்த சீந்தில் கிழங்கு, 1-ஔன்ஸ் ; குளிர்ந்த ஜலம், 10-ஔன்ஸ். மூடி, 2-மணிநேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-3 ஔன்ஸ் வீதம், தினத்துக்கு 3-ஆவர்த்தி கொடுக்கலாம். (Gulancha, oz. 1 ; Cold water foz 10.) Dose.—1-3 foz.

சீந்தில் சத்து. (எகிஸ்ட்ரக்ட் ஆவ் குலான்ச, Extract of Gulancha ; எகிஸ்ட்ராக்டம் டினுஸ்போரி, (Eztractum Tinosporæ.) செய்முறை.—சதைத்த சீந்திற் கிழங்கு 1-பௌவுன்; ஜலம், 4-பைன்ட், கிழங்கை 2-பைன்ட் ஜலத்தில், 12-மணி நேரம் ஊறவைத்து, இறுத்து பிழிந்து

கொள்ளவும் ; மறுபடியும், திப்பியில் அவ்வளவே ஜலம்விட்டு ஊறவை த்து, முன்போலவே இறுத்து பிழிந்துகொண்டு, இரண்டையும் ஒன் றுய்ச்சேர்த்து, ஜலயந்திர சுடுகையில்வைத்து, மாத்திரை செய்யும்படி யான மெழுகு பதத்துக்குச் சுண்டவைத்துக் கொள்ளவும். மாத்திரை.—10-30-கிறேன் சத்தைப்பங்கிட்டு, ஒருதினத்தில் கொடுக்கலாம். இது நமது ஜனங்கள் உபயோகிக்கிற பேலொ, (Palo) என்னும் சீந்தில் சருக்கரைக் கொப்பானது; அதை 1-3-டிராம் வீதம், சுரதுர்ப்பலத்துக்கும், பிலீகரோ கங்களுக்கும் கொடுக்க நல்லமருந்தாம்.

(NON-OFFICINAL.)

மரமஞ்சள், மா஁நபஸுபு.—(காஸ்ஸீனியம் பினிஸ்ட்ரேடம், Coscinium fenistratum, Tree Turmeric.) சக்கையானது பசுமையாய், கசப்பாய் இருக்கும், கலம்பாவேருக்குப் பதிலாக இதை உபயோகிக்கலாம். பலகாரி. கலம்பாமுறையாகவே, வெந்நீர் ஊறல்கஷாயம், பாவனத்திரவம், இந்த ரூபங்களாகச் செய்து கொடுத்து, பிரயோஜனப்பட்டதுண்டு.(முக்குகணம், அரோசகம், சுரம், விலகும். சிந்தாமணி.

பெர்பிரிடி இனம், (BERBERIDEÆ.)

பொடோபில்லின், (ரோஜனம்.)

PODOPHYLLIN

விவரணம்.—இது அமெரிகாதேசத்தில் விளைகிற பொடோபில்லம் பெல்டேடம், (Podophyllum Peltatum) என்னும், செடியின் வேரிலிருந்து எடுக்கிற உப்பு;கொஞ்சம் கறுத்ததூளாயிருக்கும்; சாராயத்தில்கரையும்.

செய்கை.—வீரேசனி, பித்தகாரி, வியதா பேதகாரி, (Purgative Cholagoue, Alterative.

உபயோகம்.—மலபந்தம், புராதன யகிர்த்கண்ட ரோகங்கள், கீல்வாத ரோகம், மேகவியாதிகள், இவைகளுக்குக் கொடுத்துச் சவுக்கியமானதைக் கண்டதுண்டு. In constipation, chronic hepatic affections, rheumatism, and syphilitic affections.

மாத்திரை.—1-2-கிறேன் கொடுத்தால் பேதியாகும், பித்தநீரைக் கிரமப்படுத்தும். $\frac{1}{2}$-1-கிறேன் கொடுத்தால், லகுவிரேசனமாகும். வீசம்முதல் $\frac{1}{8}$-கிறேன் வீதம், தினத்துக்கு 2-3-பிராவசம் கொடுத்தால், நாள்பட்ட ரோகங்களைப் போக்கும்.

பார்பெர்ரி (வேரின்பட்டை.)

பார்பெர்ரி செடி.—பெர்பிரிஸ் ஏஷியாடிகா, Berberis Asiatica ; பெர்பிரி அரிஸ்டேடா, B. Aristata ; பெர்பிரிஸ் லைஸியம், B. Lycium ; இன்டியன் பார்பெர்ரி, Indian Barberry.

பார்பெர்ரிவேரின் பட்டை.—பார்பெர்ரி ரூட் பார்க், Barberry root bark, பெர்பிரிஸ் கார்டெக்ஸ், Berberis Cortex.

விவரணம்.—இந்தப்பட்டை தக்கைபோல் வாசனை யில்லாமல் கசப்பாயும் வெளிறித்த முடையதாயு மிருக்கும், இதின் வீரியத்துக்கு, பெர்ப்பிரீன் (Berberine) என்று பேர்.

செய்கை.—பலகாரி, முறைவியாதிரோதி, சுவேதனி. Tonic, antiperiodic, diaphoretic.

உபயோகம்.—சீதசுரம், தூர்ப்பலம் இவைகளுக்குக்கொடுக்க மெத்த நல்லமருந்து ; இதின் ரூஸட் (Rusot) என்னும் சத்தை, நேத்திர வியாதிகளுக்கு பூசப்படும்.

பார்பேர்ரி பாவய்த்திரவம்.—(டிங்சர் ஆவ் இன்டியன் பார்பெர்ரி) Tincture of Indian Barberry., டிங்சுர பெர்பிரிஸ் (Tinctura Berberis) செய்முறை. பட்டை 12-ஔன்ஸ ; புரூவ் ஸ்பிரிட். 2-பைண்ட். 7-நாள் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை. 3-4-6-டிராம் அளவுக்கு, குளிர் காண்பதற்கு முன்னதாய்க் கொடுத்தால், சீத சுரம் நிற்கும். ½-முதல் 2-டிராம் வீதம் தினத்துக்கு 2-3-பிராவசம் கொடுத்தால், பலம்வரும். (Root Bark oz, 12; Proof spirit, pints, 2) Dose.—3-4-6-fdrs as an Antiperiodic ; ½ to 2 fdrs as a Tonic.

பார்பேர்ரி வெந்நீர் ஊறல் கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் இன்டியன் பார்பெர்ரி, Infusion of Indian Barberry.) செய்முறை.—பட்டை ½-ஔன்ஸ், வெந்நீர் 10-ஔன்ஸ். மூடி 1-மணி நேரம் ஊறவைத்து வடிகட்டிக் கொள்க. மாத்திரை.—1½-3.ஔன்ஸ வீதம் 2-3-ஆவர்த்தி கொடுக்கலாம்.Root Bark, oz ½; Boiling water foz, 10) Dose.—1½ to 3 foz.

பார்பேர்ரிச்சத்து.—(எகிஸ்ட்ராக்ட் ஆவ் இன்டியன் பார்பெர்ரி Extract of Indian Barberry.) மாத்திரை.—20-30-கிறேன் வீதம், ஒரு தினத்துக்குக் கொடுக்கலாம். Dose.—20-30-grs.

கசகசா இனம். PAPAVERACEÆ,

போஸ்தக்காய் (காயின்தோல்.)

கசகசாச்செடி.—ஒயிட்பாபி, White Poppy; பாபெவர் ஸாம்னிபிரம்; Papaver Somniferum.

கசகசாகாயின் தோல்.—పోస్తుకాయ, (போஸ்தக்காய்), பாப்பி காப்சுயூல்ஸ். Poppy Capsules.

விவரணம்.—கசகசாவின் காய்க்கி போஸ்தக்காய் என்று பேர்; எல்லோருக்கும் தெரிந்த சரக்கு, அதிகம் முற்றிப்போகாம விருப்பது நல்லது; புட்டுப்பார்த்தால், உள்ளே கசகசா வித்துகள் ஒட்டிக்கொண்டிருக்கும்.

போஸ்தக்காய் கஷாயம்.—(டிகாக்ஷன் ஆவ் பாப்பீஸ் Decoction of Poppies). செய்முறை.—2-ஔன்ஸ் போஸ்தக்காயை 1½-பையின்ட் ஜலத்திலிட்டு, 10-மின்னிட்டு நேரம் காச்சிப் பிறகு வடிகட்டி, 1-பையின்ட்க்கு வேண்டிய ஜலம் திப்பியிலிட்டு அதையும் எடுத்துக் கொள்ளவேண்டியது. செய்கை.—சமனகாரி, வேதனு சாந்திகாரி. உபயோகம்.—கண் வியாதி, வயிற்று வலி, மூட்டுவேதனை, இவைகளுக்கு, இதைச்சுடசுட ஒற்றிடம் கொடுக்கலாம். நமது வீடுகளில் இதனோடு துத்தி இலையைச் சேர்த்துக்காச்சிக்கொள்வது வழக்கம். ஆயுள்வேதியர்கள், போஸ்தக்காயுடன் அதிவிடையம், கடுக்காப்பூ, சிறுநாவல்பூ, முதலிய துவர்ப்பு சரக்குகளைச் சேர்த்து, கஷாயமிட்டு, பேதி நிறுத்தக்கொடுக்கிறார்கள். போஸ்தக்காயில் அபினியிருப்பதால், குழந்தைகளுக்கு வெகுஜாக்கிரதையாய் கொடுக்கவேண்டியது. (Poppy Capsules, oz. 2; Water, pint 1½.) Sedative fomentation.

போஸ்தக்காய்ச்சத்து.—(எகிஸ்ட்ராக்ட் ஆவ் பாபீஸ், Extract of Poppies; எகிஸ்ட்ராக்டம் பாபெவெரிஸ், Extractum Papaveris. மாத்திரை.—இதில் 2-5-கிறேன் வீதம் கொடுக்கலாம். Dose.—2-5 grs.

போஸ்தக்காய் பாணிதம்.—(போஸ்தக்காய் ஷர்பத், அல்லது ரஸாயனம்) ஸிரப் ஆவ் பாபீஸ், Syrup of Poppies; ஸைரூபஸ் பாபெவெரிஸ், Syrupus Papaveris. மாத்திரை.—1-டிராம் வீதம் கொடுக்கலாம்; இது அதிக உஷ்ணத்தில் புளித்துப்போகும்; நமது தேசத்தில் செய்துவைக்க உதவாது, ஆனால் தேவையானபோது செய்து கொண்டால் நல்லது. Dose 1. dr.

அபினி. (உரைந்த பால்.)

నల్లమందు. ஓபியம், Opium.

விவரணம்.—போஸ்தக்காயிலிருந்து வடிந்து உறைந்தபாலாகிய அபினியானது, கட்டிகளாய் அதன்மேல் இலையை மூடப்பட்டிருக்கும். புதுச்சரக்கு பிசுபிசுப்பாய், ஊதாநிறமாய்; ஓர்விதவாசனையாய், கசப்பாய் இருக்கும். சீமையில் உபயோகிப்பது, ஸ்மிர்னு (Smyrna) அல்லது டர்க்கி (Turkey) அபினி; இந்தியா தேசத்தில் உபயோகமாகிறது,பாட்னு அபினியும் (Patna Garden Opium) மால்வா அபினியுமாம் (Malva Opium). இவைகள் தவிர இன்னம் பலதேசத்து அபினியுமுண்டு. இந்தச் சரக்கில் மண்ணு, வெராட்டிப்பொடி, வெல்லம், பிசின் கரித்தூள், அரிசிமாவு, இப்பேர்ப்பட்டவைகளைக்கலந்து விற்பதுண்டு; செவ்வையாக பரீக்ஷித்து வாங்கவேண்டியது. மார்பியா என்னும் உப்பு அதிகமாய் இருக்கிற சரக்கே நல்லது. அபினியில் அனேக கூட்டு பதாரத்தங்களுண்டு; அவைகளில் மார்பியா (Morphia). கோடியா, (Codeia) நார்கோடீன் (Narcotine), இம்மூன்றும் பிரதானமானவைகள்; மார்பியா கொடியா இவைகள் நித்திராகாரி, ஸமனகாரி நார்கொடீன், பலகாரி, முறைவியாதிரோதி.

செய்கை.—அபினி, முதல் உஷ்ணம் செய்யும்; பிறகு நித்திராகாரி, வேதனசாந்திகாரி, அங்காகர்ஷண நாசகாரி, ஆகிய இக்குணங்களை யுண்டாக்கும். அபினி முக்கியமாம் மூளையிலும், முள்ளந்தண்டுக் கொடியிலும் வீரியத்தைக்காட்டும்; பிறகு சகல உறுப்புகளுக்கும் வியாயிக்கும். அபினி, தேகத்திலுண்டாகிற சுரப்பு நீர்களை வரட்டும்; ஆனால் வியர்வையை மாத்திரம் அதிகப்படுத்தும்; மாத்திரையில் அதிகமானால் விஷமிக்கும். Primarily stimulant; secondarily narcotic, anobyne, antispasmodic.

உபயோகம்.—அபினியின் உபயோகம் அனந்தம்; குறைந்த அளவில் கொடுத்தால், உஷ்ணிக்கும், கொஞ்சநேரம்சென்றபிறகு உறக்கம் காணும்; நாடிமெதுவிடும் பின்னிட்டு அக்கினிமந்தமும், மலபந்தமு முண்டாகும். குழந்தைகளுக்கு வெகு ஜாக்கிரதையாய் கொடுக்கவேண்டியது. அபினியைத்தின்று வழக்கப்பட்டவர்களுக்கு, அளவில் அதிகரித்துக் கொடுக்க வேண்டியதாய் இருக்கும். பேதி, வாந்திபேதி, இசிவு, சூலை, வயிற்றுவலி, வாந்தி இவைகளுக்குக் கொடுத்தால் சவுக்கிய முண்டாகும். தாபன ரோகங்களுக்கு, அபினியோடு, ரஸபஸ்மமும், இபிகாக்சூரணமும் சேர்த்துக்கொடுத்தால், நன்மைசெய்யும், தலைவலியுடையவர்களுக்கும், கருப்பிணிகளுக்கும், அபினி உதவாது. இது ஒரு சிரேஷ்ட மருந்து. சீதபேதிக்கு இதை அஸனத்திலிட்டால், வேதனைத்தணியும்; கண்ணோவுக்கு, ஜலத்தில் கரைத்து, போடலாம்; ரணங்களுக்கு, போல்டீஸ், பிளாஸ்திரி இவைகளோடுசேர்த்து உபயோகித்தால் நலந்தரும். நித்திராபங்கத்துக்கு, இராத்திரியில் கொடுத்தால், நித்திரைவரும்; அதிமூத்திரம், இவைகளுக்கு அயச்செந்தூரத்தைச் சேர்த்து உபயோகிக்கலாம். இரைப்பு வியாதிக்குக் கொடுத்தால், உடனே குணந்தரும். எண்ணெயில் காச்சி, கர்ன சூலைக்கு காதில் விட

லாம், கர்ப்பூரத்தைச்சேர்த்து மாத்திரைச்செய்து, மந்த சூலைக்கு பல்லில் இடலாம். சீதபேதிக்கு, இதனோடு ரஸபஸ்மமும் இபிகாக்சூரணமும் சேர்ந்து கொடுக்கலாம். கட்டுவாதிமாத்திரையில் அபினிசேரும் (அபினியால் வயிற்றுநோய், வாதாதிக்கம், கர்ணசூலை, தந்தநோய், அதிசாரம், அஜீரணம் முதலியவைகள்போம். சிந்தாமணி)

In inflammation of serous membranes, fevers, painful spasmodic affections, gastorodynia, vomiting, diarrhœa, dysentery, colic, cystitis, dysmenorrhoea, tetanus, cholera, gangrene. Externally to pains, ophthalmia. & c.

மாத்திரை .—$\frac{1}{4}$-2 கிறேன் அல்லது இன்னம் அதிகமாகவும் வியாதிக்குத் தக்கபடி கொடுக்கலாம். சில வியாதிகள் அபினியை அதிகமாய்க் கொள்ளும். Dose —$\frac{1}{4}$-2 grs. or more.

சுத்தி செய்த அபினி.– எகிஸ்ட்ராக்ட்ஆவ்ஒபியம் Extract of Opium; எகிஸ்ட்ராக்டம்ஒபை, Extractum Opii.) செய்முறை.—அபினி 1-பௌன் தீநீர் 6-பைண்ட், அபினியை 2-பைண்ட் ஜலத்தை 24-மணிநேரம் ஊற வைத்து, பிழிந்துகொள்ளவும். மூன்றும் முறையும் அவ்விதமாகவே செய்யும். ஷை பிழிந்தெடுத்த ஜலங்களை யொன்றாகச் சேர்த்து, பிளானலில் வடிகட்டி, ஜலயந்திரத்தில் வைத்து, மெழுகபதத்துக்கு, சுண்டவைத்துக் கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-2கிறேன் எடைக்குக் கொடுக்கலாம், (Opium oz. ! ; Waler, pints 6.) Dose.—$\frac{1}{2}$ to 2 grains.

திரவஅபினிச்சத்து.—(லிக்குவிட் எகிஸ்ராக்ட ஆவ் ஒபியம், Liquid Extract of Opium; எக்ஸ்ராக்டம் ஒபைலிக்குவிடம், Extractum Opii Liquidum.) மாத்திரை.—10-40-மினம் அளவுக்குக் கொடுக்கலாம். 1-ஔன்ஸில், 22-கிறேன் அபினியிருக்கிறது. லாடனத்தைப் பார்க்கிலும், வீரியத்தில், $\frac{1}{8}$-பங்கு கூடியிருக்கும்.

அபினிபாவனத்திரவம்.-(அபினித்திராவகம், அபினிச்சாராயம் டிங்சர் ஒபியம், Tincture of Opium; டிங்சுரா ஒபை, Tinctura Opii; லாடெனம் Laudanum.) செய்முறை.—அபினிப்பொடி 1$\frac{1}{2}$-ஔன்ஸ், புரூவ் ஸ்பிரிட், 1-பையின்ட், இவைகளைப் பாத்திரத்தில் போட்டு மூடி, அடிக்கடி குலிக்கிக் கொடுத்து, 7-நாள் ஊறவைத்து, பிறகு பிசைந்து வடிகட்டி, 1-பையின்ட் அளவுக்குவேண்டிய சாராயத்தை விட்டுக்கொள்ளவும். (1-ஔன்ஸில் 33-கிறேன் 15-மினத்தில், 1-கிறேன் வீதம், அபினியிருக்கிறது.) உபயோகம். அபினிவகைகளில், இதைதான் முக்கியமாய் கையாடுகிறது. மேலுக்கும் உபயோகிக்கலாம், குழந்தைகளுக்கு வெகுஜாக்கிரதையாய்க் கொடுக்கவேண்டியது; 4-துளிகொடுத்து, இறந்துபோனதும் உண்டு; 2-துளியால் மயக்கமும், அயர்ந்த நித்திரையும் உண்டானதுண்டு. பேதிகட்ட பெப்பர்மிண்டு ஜலத்திலும், நித்திரைவர ஜலத்தில் கலந்து படுக்கைச்சமையத்திலும், கொடுக்கலாம்; எண்ணெயோடு கலந்து, காதுவலிக்கு விடலாம்; சூலை, வேதனை இவைகளுக்கு, நோயுள்ள ஸ்தானத்தில் தேய்க்கலாம்; பல்வலிக்கு, பஞ்சியில் நனைத்து வைக்கலாம். மாத்திரை.—5-40 மினம் வீதம் கொடுக்கலாம் (Opium oz. 1$\frac{1}{2}$; Proof Spint 1) Dose.—5 to 40 minims.)

அபினி ஒயின். (வைன்ஆவ் ஒபியம், Wine of Opium; வைனம் ஒபை Vinumopii.) செய்முறை.—அபினிச்சத்து, 1-ஔன்ஸ்; சன்ன லவங்கப் பட்டைத் தூள், 75-கிறேன்; கிராம்புத்தூள் 75-கிறேன்; ஒயின் சாராயம் 1-பையின்ட். இவைகளைச்சேர்த்து மூடி, அடிக்கடி குலுக்கி, 7-நாள் ஊற

வைத்து, வடிகட்டிக்கொள்ளவும். (1-அவுன்ஸில், சுமார் 22-கிறேன்; அபினிச்சத்து இருக்கிறது.) உபயோகம்.—நேத்திரவியாதிகளுக்குக் கண்ணில் விடலாம். மாத்திரை.—10-40 மினித்துக் கதிகமாகவும் கொடுக்கலாம். (Opium oz. 1; Cinnamon Bark, Cloves, of each, gra. 75; Sherry, Pint 1.) Dose.—10 to 40 minims, or more,

கலவை அபினிச்சூரணம்.—(கம்பவுண்ட் பவுடர் ஆவ் ஒபியம், Comspound Powder of Opium; புல்விஸ் ஒபை கம்பாஸிடஸ், Pulvis Ops-Compositus.)

செய்முறை.—அபினித்தூள், $1\frac{1}{2}$-ஔன்ஸ; மிளகுந்தூள், 2-ஔன்ஸ்; சுக்குத்தூள், 5-ஔன்ஸ். கேக்விதைத்தூள், 6-ஔன்ஸ்; ட்ரெகெகாந்த் தூள், $\frac{1}{2}$ஔன்ஸ். இவைகளை மிஸ்ரமித்து, வஸ்திர காயஞ்செய்து, முடிவில் கலுவத்திலிட்டு, லேசாய் அரைத்துக்கொள்ளவும். 10-கிறேன் சூரணத்தில், 1-கிறேன் அபினி யுண்டு) மாத்திரை.—2-5-கிறேன் வீதம் கொடுக்கலாம். (Opium, oz ; $1\frac{1}{2}$. Black pepper, oz. 2; Ginger, oz. 5; Caraway fruit, oz. 6; Thagacanth, oz, $\frac{1}{2}$.) Dose.—2 to 5 grs.

அபினிலேகியம்.—கன்பெக்ஷன் ஆவ் ஓபியம், Confection of Opium; கன்பெக்ஷியோ ஓபை, Confectoi Opii). செய்முறை.—கலவை அபினிச்சூரணம், 192-கிறேன்: சருக்கரைப்பாகு, 1-ஔன்ஸ், இவைகளை மிஸ்ரமித்துக் கொள்ளவும் (சுமார் 40-பங்கில்-1-பங்கு அபினியுண்டு.) செய்கை.—உஷ்ணகாரி, வேதனசாந்திகாரி. உபயோகம்.—நாள்பட்ட அதிசாரத்துக்குக் கொடுக்க நல்ல மருந்து. மாத்திரை.—5-20-கிறேன் வீதம் கொடுக்கலாம். Compound powder of Opium, grs. 192; syrup, oz. 1.) Dose.—5 to 20 grs.

அபினி பில்லை.—ஒபியம் லாஸென்ஜெஸ், Opium Lozenges; ட்ரோசிஸை ஒபை Trochisei Opii ஒவ்வொரு பில்லையில், $\frac{1}{10}$ கிறேன் அபினி சத்து இருக்கிறது. 1-6 பில்லைகள் வீதம் சாப்பிடலாம்.

அபினி வஸ்தி.—(இனீம ஆவ் ஓபியம், Enema of Opium; இனீம ஓபை, Enema Opii.) செய்முறை.—லாடெனம், $\frac{1}{4}$-டிராம்; அரிசிமாவு கஞ்சி, 2-ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும். உபயோகம்.—சீதபேதி, மூத்திரக்கிரிச்சிரம், மூத்திரப்பையில் வேதனை, இவைகளுக்கு, ஆஸனத்தில் பிரயோகித்தால், வேதனை யுடனே தணியும். Tincture of Opium fdr. $\frac{1}{2}$; Mucilake of starch, foz. 2.)

அபினி பூசுத்தயிலம். (லினிமென்ட் ஆவ் ஒபியம், Liniment of Opium; லினிமென்டம் ஒபை, Linimentum Opii.) செய்முறை —அபினிப்பாவனத்திரவம், சவுக்காரத்தயிலம், வகை 1-க்கு, 2-ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும். உபயோகம், வாயுவேதனை, குடைச்சல், இவைகளுக்கு இதைத் தேய்த்தால், உபத்திரவம் சமனமாகி, அயர்ந்த நித்திரைப்பிறக்கும் (Tincture of Opium, and Liniment of Soap, of each, foz. 2)

ஹைட்ரோகுளோரேட் ஆவ் மார்பியா என்னும் அபினி உப்பு.-Hydrochlorate of Morphia; மார்பியி ஹைட்ரொகுளோரஸ் Morphiæ Hydrochloras. மார்பியி மியூரியஸ், Morphioe Murias) இந்த உப்பு வெள்ளைத்தூளாயிருக்கும், கசக்கும், வாசனையிராது, ஜலத்திலும் சாராயத்திலும் கரையும். உபயோகம்.—அபினிக்கிருக்கிற குணங்களெல்லாம் இதற்குமுண்டு, ஆனால், தலைவலி, விகாரம், மலபந்தம் இவ்வித துர்க்குணங்களை அதி

கமாய்ப் பிறப்பிக்காது; உஷ்ணப்படுத்தாது; லாடெனம் கொடுக்கிற ரோகங்களுக்கு இதைக் கொடுக்கலாம். மாந்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{2}$ கிறேன் இடைக்குக் கொடுக்கலாம். Dose.—$\frac{1}{8}$ to $\frac{1}{2}$ gr.

ஸொலூஷன் அவ் தி ஹைட்ரோகுளோரேட் அவ் மார்பிய.—Solution of the Hydrochlorate of Morphia; லைகர் மார்பியிஹைட்ரொகுளோரேடிஸ், Lipuor Morphik Cydrochloratis.) செய்முறை.—ஹைட் ரொகுளோரேட் ஆவ் மார்பியா, 4-கிறேன்; விளாவினகறி யுப்புத்திராவகம், 8-மினிம். ரெக்டிபைட் சாராயம், 2-டிராம். சுத்தஜலம், 6-டிராம். திராவகம், சாராயம், ஜலம், ஆகிய இவைகளைக்கலந்து, அதில் மார்பியாவைக் கரைத்துக்கொள்ளவும். 1-டிராம் திரவத்தில், $\frac{1}{2}$-கிறேன் உப்பு இருக்கிறது. மாத்திறை.—10-60 மினம் கொடுக்கலாம். (Hydrochlorate of Morphia, grs 4; Dilute Hydrochloric Acid, minims 8; Rectified Spirit, fdrs. 2; Water, fdrs. 6.) Dose.—10 to 60 minims.

அஸிடேட் அவ் மார்பியா.—Acetate of Morphia. மார்பியா அஸீடஸ் Morphiœ Acetus.) இந்த உப்பானது, வெள்ளைத்தூளாய், வெகு கசப்பாயிருக்கும். சீக்கிரத்தில் அதிலிருக்கிற புளிப்புச்சண்டி கெட்டுப்போகும். ஆகையால், அஸிடிக் ஆஸிட் காடியைச் சேர்த்தே எப்போதும் கொடுக்கவேண்டியது. உபயோகம்.—மேல்கண்ட மருந்தின் குணமே இதற்குமுண்டு, அதைப்போலவே இதையும் உபயோகிக்கலாம். மாத்திரை.—$\frac{1}{8}$-$\frac{1}{2}$-கிறேன் இடைக்கதிகமாகவும் கொடுக்கலாம். Dose.—$\frac{1}{8}$ to $\frac{1}{2}$ gr. or more.

ஸொலூஷன் அவ் தி அஸிடேட் அவ் மார்பியா.—(Solution of the Acetate of Morphia. லைகர்மார்பியி அஸிடேடிஸ். Liquor Morphiæ Acetatis.) செய்முறை.—ஆஸிடேட் ஆவ் மார்பியா, 4-கிறேன்; டில்லியூடேட் ஆஸிடிக் ஆஸிட், 8-மினிம்; ரெக்டிபைட் சாராயம் 2-டிராம்; சுத்தஜலம், 6-டிராம். திரவங்களைச் சேர்த்து, உப்பைக்கூட்டிக்கலந்து கொள்ளவும். 1-டிராம்ஜலத்தில் $\frac{1}{2}$-கிறேன் உப்பு இருக்கிறது. மாத்திரை.—10-60-மினிம் கொடுக்கலாம். (Acetate of Morphia, grs. 4; Diluted Acetic Acid, minims 8; Rectified spirit, fdr. 2; water, fdr. 6. Dose. 10 to 60 minims.

நார்கோடீன்.—(Narcotine.) அபினியிலிருந்து எடுக்கிற இந்த உப்பின் செய்கை, பலகாரி, முறைவியாதிரோதி; அதிகமாய்க்கொடுத்தால், சுவேதகாரியாகும். உபயோகம்.—சீதஜுரம், துர்பலம், ரோகம் நீங்கி உடம்பு தேறிவருகிறபோதும் இதைக் கொடுக்கலாம், மாத்திரை.—பலம் வருகிறதற்கு $\frac{1}{2}$-1-கிறேன் இடைக்கி தினத்துக்கு 3-ஆவர்த்தி கொடுக்கலாம். சுரத்தத்தைத் தடுக்க, 2-3-கிறேன் வீதம், ஜலத்திலிட்டு, கறியுப்பு, அல்லது கந்த கத்திராவகம் கலந்து தினத்துக்கு, 3-தவணைக் கொடுக்கலாம். Action.—Tonic, antiperiodic; in large doses, diaphoretic, use.—In ague, debility. Dose.—$\frac{1}{2}$ to 1 gr. Tonic; 2 to 3 grs. antinorioqic.

(NON-OFFINICAL).

பிரமதண்டு.—బ్రహ్మదండి. (ஆர்ஜிமொனி மெக்ஸிகேனு Argemone Mexicana; எல்லோ திஸில் Yellow Thistle.) இதன் விரையிலிருந்து எடுக்கிற தயிலத்தில். 30-துளி கொடுத்தால், மலத்தைப்போக்கி, வயிற்றுவலியை நீக்குமென்று கண்டிருக்கிறது. நூதன தயிலத்துக்கு வீரியம் அதி

கம். சருமரோகங்களுக்கு மேலே போட்டால், தணிக்குமாம். நமது ஜனங்கள்; இதின் பாலை மேகம் முதலிய துஷ்ட ரணங்களுக்குத்தடவுகிறார்கள், மெத்த நல்லதாம். கண்ணோவுக்கு இந்தப்பாலைத் தடவுகிற வழக்கம் கெட்டது. Aperient in colic, herpies, &c. Dose.—½ fdr.

கடுகு இனம். (CRUCIFERÆ.)

ஹார்ஸ்ராடிஷ்.—Harseradish) இது சீமையில் பைராக்குகிற ஒரு விதசெடி; அதின் வேரின் செய்கை உஷ்ணகாரி, சுவேதகாரி, மூத்திரவர்த்தனி. மேலேபோட்டால் எரியும், கொப்புளமுண்டாகும், மெண்ணல் வாய்நீர் அதிகமாகும், முருங்கைவேரை, இதற்கு பதிலாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

கடுகு (வித்து.)

ஒவாலு, மஸ்டர்ட். Mustard. ஸைநேபிஸ், Sinapis. கடுகுப்பூண்டு.

விவரணம்.—நமது தேசத்துக்கடுகு, கறுத்திருக்கும்; சீமையினத்தில் வெள்ளையும் கறுப்புமுண்டு. சீமைக்கடுகுக்குப்பதிலாக இதை உபயோகிக்கலாம். தயிலமெடுத்த திப்பிக்கு வீரியம் அதிகம்; நாள்பட்டால், காரம் குறையும், ஆகையால் உபயோகத்துக்குப் புதுச்சரக்காக இருக்க வேண்டியது. சீமைக்கடுகுப்பொடி மஞ்சளாய் விறுவிறுப்புள்ளதாய், ஜலம் சேர்த்தால் நெடியுண்டாகி, கண்ணிலும் மூக்கிலும் எரிச்சலுண்டாகும்

செய்கை.—ஷோணகாரி, நேரப்படவைத்திருந்தால், பொள்ளும். கொஞ்சமாய் போஜனத்தோடு சேர்த்துக்கொண்டால், ஜீரணகாரியாகும். 1–3-உத்திரணி அளவுக்கு, ஒரு டம்ளர் ஜலத்தில் கலந்து கொடுத்தால், சீக்கிரத்தில் சுகவாந்தியையுண்டாக்கும் வெறிக்க சாராயம் குடித்ததற்கும், தளர்ச்சியில்லாமல் வாந்தியாக வேண்டியபோதும், இதை வாந்திக்குக் கொடுக்கலாம். Rubefacient, Vesicant, digestive, emetic.

கடுகுபோல்டீஸ்.—(மஸ்டர்ப்போல்டீஸ், Mustard poultice. ஸிநெபிஸம், Sinapism காடெபிளாஸ்ம ஸிநெபிஸ், Cataplasma Sinapis. செய்முறை.—கடுகுத்தூள், 2½-ஔன்ஸ்; அலிஸிவிரைமாவு, அல்லது அரிசிமாவு, 2½-ஔன்ஸ், வெந்நீர், 10-ஔன்ஸ் இவைகளைச் சேர்த்து கிளறிக்கொள்ளவும். எரிச்சல், அல்லது சிகப்புக்காணுகிறவரையில், கடுகு போல்டீஸ்போட்டுவைப்பது கிரமம். உபயோகம்—குளுமை, வயிற்றுவலி, குடைச்சல் இவைகளுக்கு உபயோகிக்கலாம். குழந்தைகளுக்குப் போடும்போது போல்டீஸின்மேல் சன்னதுணியால் மூடி, அதைப்போட்டு சீக்கிரத்தில் எடுத்துவிடவேண்டியது இருமலுக்கு, மார்பிலும், கண்டத்திலும், மயக்கத்துக்கும், தோஷகுணத்துக்கும், பிடரியின்மேலும் போட்டுக் கட்டலாம். (Mustard powder, Linseed meal, of each, oz 2½ ; Cold or Tepid Water, foz. 10)

கடுகுநெய்—(கடுகுத்தயிலம்). (ஆயல் ஆவ் மஸ்டர்ட், Oil of Mustard. ஒலியம் ஸைநேபிஸ். Oliem Si napis) இது கொஞ்சம் மஞ்சளாயும் நெடியுள்ளதாயும், விறுவிறுப்பும், எரிச்சலுமுடைய சுவைபுள்ளதாயுமிருக்கும், தேகத்தின்மேல் பட்டால் உடனே கொப்புளிக்கும்.

மிஸ்ரம கடுகு பூசுத்தயிலம். கம்பௌண்ட் லினிமெண்ட், ஆவ் மஸ்டர்ட் Compound Liniment of Mustard ; லினிமெண்டம் ஸிநேபிஸ் கம்பாஸிடம், Linimentum Sinapis Compositum.) செய்முறை.—கடுகு

நெய், 1-டிராம், ஈதரியல் எகிஸ்ட்ராக்ட் ஆவ் மேஜீரியன், 40-கிறேன்; கர்ப்பூரம், 120-கிறேன்; சிற்றுமணக்கெண்ணெய், 5-டிராம்; ரெக்டிபைட் சாராயம், 4 ஔன்ஸ். சாராயத்தில் சூடனையும், சத்தையும் கரைத்துக்கொண்டு, நெய்களைச் சேர்த்துக்கொள்ளவும். உபயோகம்.—வாதநோய், ஸ்தம்பவாதம், இவைகளுக்குத் தேய்க்க நல்லதயிலம்.

வேளை யினம். (CAPPARIDEÆ.)

(NON-OFFICINAL.)

நாய்வேளை.—(கைநான்ட்ராப்ஸிஸ் பெண்ட பில்லா, Gynandropsis penta phylla ; Dog Mustard) இதற்குப் பெருங்காய வாசனையுண்டு; இலையைச் சமைத்துச் சாப்பிடுகிறது நாட்டு வழக்கம்; அதை இடித்துக்கட்டினால், தோல் சிவக்கும், பொள்ளிநீர்வடியும்; பிளிஸ்டருக்குப்பதிலாக இதைப் போடலாம், தூர்க்குணமில்லாமல் செய்யும்; ரஸத்தைக்காதுவலிக்கு விடுவது வழக்கம். விதைக்கு (seeds) நாய்க்கடுகு என்றுபேர்; கடுகுக்குப்பதிலாக விதையை உபயோகிக்கலாம்; தைலமிறங்கும். இலையைத் தைலமாக்கி, சிரங்குக்குப் போடுகிறார்கள். ಏಲಂಟ.

மாவிலங்கை —க்ரெடீவரிலிஜிஒஸ், Cratæva religiosa. Cratæva Nurvale, ಮಾಶೆಲು. இதின் இலை தாருட்டியகாரியாம், அதை வெந்நீர்கஷாயமிட்டு (இலை 2-ஔ-வெந்நீர்-1-பை:) 2-4-ஔன்ஸ் வீதம் தினத்துக்கு-3-ஆவர்த்திக்கொடுப்பதுண்டு. பட்டையின் ரஸத்தை வலிகளுக்கும், கருப்பவாதத்துக்கும் கொடுப்பதுண்டு. தயிலமிட்டு வாதநோய்களுக்கும் போடுகிறார்கள்.

தாளிசபத்திரியினம். (Bixineæ.)

சால்முகரா.—(Chaulmugra.) கைனொகார்டிய ஒடொரேட, (Gynocardia odorata.) இந்த விரையின் செய்கை பலகாரி, அதிகமானால் வமனகாரியாகும். உபயோகம்.—குஷ்டத்துக்குக் கொடுத்து சுகுணத்தைக் கண்டதுண்டு; கண்டமாலை, சருமரோகம், கீல்வாதம் இவைகளுக்கும் கொடுக்கலாம். மாத்திரை —விரையின் பொடியில், 6-கிறேன் அளவுக்கு மாத்திரைசெய்து, திரிகாலக்கிரமாய் கொடுக்கலாம்; 18-அல்லது 24-கிறேன் அளவுக்கு அதிகரித்து கொடுப்பதும் உண்டு. குமட்டலுண்டானால், அளவை குறைக்கவேண்டியது; அல்லது, சிலநாள் மருந்தை நிறுத்திவைக்கலாம். சால்முகரா தைலத்தில், 5-6-துளி வீதம் கொடுத்து அளவைப்படிப்படியாய் அதிகரித்துக்கொள்ளலாம்; தயிலத்தை மேலுக்கும் பூசுவதுண்டு. சால்முகரா களிம்பு.—(Chalmugra Ointment.) விரையை அரைத்து, தேவையான மெழுகுகளிம்பு சேர்த்து பதப்படுத்திக்கொண்டு, கரப்பான் முதலிய சருமரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

(NON-OFFICINAL.)

நீரடிமுத்து.—(மரோட்டி) ஹிட்னொகார்பஸ் இனிப்ரியன்ஸ். Hydnocarpus inebrians இந்தவித்து சுமார் சால்முகரா வித்துப்போல்வே சிறுத்திருக்கும்; நீரடி முத்தின் தயிலம், குஷ்டத்துக்கு உபயோகிக்க நல்ல மருந்தென்று சுதேசிகளுடைய எண்ணம், சால்முகராவித்தின் தயிலத்துக்குப் பதிலாக உபயோகித்துப் பார்க்கலாம். $\frac{1}{2}$-தேயிலைக்கறண்டி வீதம் தினத்துக்கு 2-வேளை கொடுக்கலாமென கண்டிருக்கிறது, முதல் குறைந்த

அளவில் ஆரம்பிப்பதே நல்லது. [நீரடிமுத்து தீராச்சிரங்கு, தினவு, பெரு நோய், நீங்கும். சிந்தாமணி.]

தாளிசபத்திரி.—తాళిసపత్రి (Flacortia Cataphracta.)(இலை தளிர். சங்கோசனி, சாடராக்கினிவர்த்தனி, பேதி, சீதபேதி, சுரம், துர்ப்பலம், காசம் இவைகளுக்கு, ½-விராகனிடை வீதம் கொடுக்கலாம். தொண்டைக்கம்மலுக்கும் கொடுப்பதுண்டு. தாளிசபத்திரி சூரணம். செய்முறை.-தாளிசபத்திரி பலம் 10-திரிகடுகு, திரிபலம், கோஷ்டம், அக்கிரகாரம், யானைத்திப்பிலி, கொத்துமல்லி, வாய்விளங்கம், கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, சீரகம், சடாமாஞ்சி, சோம்பு, வால்மிளகு, லவங்கப்பட்டை, வகைக்குப் பலம்,1-இடித்துச் சூரணித்து, சமனிடை சருக்கரைக்கூட்டி,திரிகடிப்பிரமாணமாகக் கொள்ள, காசம் அஸ்தி சுரம், தாகம், பித்தப்பாண்டு, கிரகணி, அரோசகம், பொருமல், விக்கல், கைகாலெரிவு இவைகள் விலகும். (வைத்திய சாரசங்கிரகம்.)

புன்னை யினம். (GUTTIFERÆ)

மக்கி (உறைந்தபால்)

மக்கிச்செடி.—கார்சீனியா பிக்டோரியா. Garcinia Pictoria. இண்டியன் காம்போஜ்ட்ரி, Indian Gamboge Tree.

மக்கிப்பால்.–காம்போஜியா இண்டிக Cambogia Indica.

விவரணம்.—மைசூர், கனரா முதலிய இடங்களில் உண்டாகிற இந்தச் சரக்கு மஞ்சள் நிறமாயிருக்கும், பாலை மூங்கில்குழலில் விட்டு உலரவைத்து, பக்குவப்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஸையாம் தேசத்து, மக்கியைப் போலவே இதுவும் இருக்கும்.

செய்கை,—ஜலவிரேசனி, உபத்திரவ விரேசனி, கிரிமிக்கினி. Hydragogue, cathartic, anthelmintic.

உபயோகம்.—நீர்க்கோவை, மலபந்தம், சூதக்கட்டு, கிருமி இவைகளுக்குக் கொடுக்கலாம். In dropsy, constipation, amenorrhœa, worms.

மாத்திரை.—3-4-கிறேன் வீதம், திராக்ஷஉப்பு, சருக்கரை இவைகளுடன் சேர்த்து கொடுக்கலாம். கட்டிச்சவுக்காரம் அல்லது ரஸபஸ்பம், சேர்த்தால் வாந்தி, வயிற்றுக்கடுப்பு இவைகளை நீக்கும். 3-4 grs.

கலவைமக்கி மெழுகு. (கம்பௌண்ட் காம்போஜ் பில், Compound Gamboge Pill; பிலூல காம்போஜியி கம்பாசிடா. Pilula Cambogiæ Composita.) செய்முறை.—மக்கித்தூள், மூஷாம்பரத்தூள், கலவை, கருவாப்பட்டைத்தூள், வகைக்கு 1-ஔன்ஸ்; கட்டிச்சவுக்காரத்தூள் 2-ஔன்ஸ் சருக்கரைப்பாகு தேவையானது. சூரணங்களைச் சேர்த்து பாகைவிட்டு ஒன்றாய் இடித்துக்கொள்ளவும். மாத்திரை.—5-10 கிறேன் கொடுக்கலாம். (Gamboge, aloes, compound powder of cinnamon, of each oz. 1; soap, oz. 2; syrup, a sufficiency.) Dose.– 5-10 grs.

(NON-OFFICINAL.)

புன்னைமரம். పొన్న చెట్టు. (கேலொபில்லம் ஐனோபில்லம், Calophyllum Inophyllum. Alexandrian laurel.)—புன்னக்கா யெண்ணெயை வாதநோய்களுக்குப் பூசலாமென்று சொல்லுகிறார்கள்.

நாகேசுரம். சிறுநாகப்பூ (மிசுவ பெர்ரீய, mesua ferrea).—இந்தப்பூ உலர்ந்தும் வாசனையாயிருக்கும்; முக்கியமாக வாசனைக்குச் சேர்க்கப்படும். மருந்தின் குணம் இதற்கில்லை.

டாமர்செடியினம். (DIPTEROCARPEÆ.)

மரயெண்ணெய். (உட் ஆயல், Wood oil.)—மரம் கெடாமலிருக்கப் பூசுகிற மர எண்ணெய்க்கு, குங்கிலியத் தயிலத்துக்கிருக்கிற குணங்களுண்டு; அதற்குப் பதிலாய் பிரமேகத்துக்கு இதை உபயோகிக்கலாம்; நல்ல மருந்து. மாத்திரை. $\frac{1}{2}$-1-டிராம் வீதம் தினத்துக்கு 2-3-பிராவசம், தனியாயாவது, குழம்பு செய்தாவது கொடுக்கலாம்.

(NON-OFFICINAL.)

டாமர். (Dammer; Shorea rebusta).—செடியிலிருந்து எடுக்கிற இந்தக்குங்கிலியம், டர்பன்டைன் எண்ணெயிலும், மத்த ஆட்டி எடுக்கிற எண்ணெய்களிலும், கரையும்; நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் முதலியவைகளோடுச் சேர்ந்து பிளாஸ்திரிகள் ஆகின்றன. நல்லச்சரக்கை, சீமை குங்கிலியத்துக்குப் பதிலாக உபயோகித்துக்கொள்ளலாம். கறப்பு டாமர் இனம் வேறு.

‡‡ வெள்ளைதுந்தரிகம். ధూపదామర. (ஒயிட்டாமர், White dammer; Vateria Indica).—இதில் சரக்குக்குச் சரக்கு வித்தியாசமுண்டு மெழுகும் எண்ணெயும் சேர்த்தால் நல்ல களிம்புகளாகின்றன. சீமை ரோஜனத்துக்குப்பதிலாக இதைச் சேர்த்துக்கொள்ளலாம்.

பருத்தியினம். (MALVACEÆ.)

பருத்திப்பஞ்சு. (வித்தின்மேலிருக்கிற ரோமம்.)

பருத்திச்செடி. (காசிபியம் ஹெர்பேஷியம். Gossypium Herbaceum. காடன், பிளான்ட். Cotton plant.)

பருத்திப்பஞ்சு. (காசிபியம், Gossypium; காடன், Cotton.)

உபயோகம்.—பலவித செடிகளிலிருந்து எடுக்கிற பருத்திப்பஞ்சை அக்கினி, வென்னீர் முதலிய விரணங்களின்மேல் வைத்துக் கட்டினால், காற்றுப்பட ஒட்டாமல் செய்து, சுகுணத்தைத் தரும் அக்கி, தாபனஸ்தானங்கள் இவைகளுக்கும் வைத்து, கட்டலாம். இலைக்கு குழகுழப்பு உண்டு. பருத்திவிரையின் தயிலத்தை பலவிதமாக உபயோகின்கிறார்கள்; மாடுகளுக்குக் கொடுத்தால் சதைபிடிக்கும். In burns, erysipelas, inflammations.

வெடிப் பஞ்சு.—(கன்காடன், Gun-Cotton. பைராக்ஸிலின், Pyroxylin.) செய்முறை. பஞ்சு 1-ஔன்ஸ்; கந்தகத்திராவகம், வெடியுப்புத் திராவகம் வகைக்கு 5-ஔன்ஸ். திராவகங்களைச் சேர்த்து, அதில் பஞ்சைப் போட்டு 3-நிமிஷம் செவ்வையாகப் புரட்டி, எடுத்து, ஜலத்திலிட்டு, திராவகம், போக நன்றாய்க்கழுவி, ஊறுகிற கடுதாசியிலிட்டு ஜலத்தை ஒற்றி எடுத்துவிட்டு, பிறகு ஜலயந்திரத்தில் வைத்து உலர்த்திக்கொள்ளவும். Cotton, oz. 1; Sulphuic Acid, Nitric Acid, of each foz. 5.)

கல்லோடியன். (Collodion. Collodium) செய்முறை. வெடிப் பஞ்சு 1-ஔன்ஸ்; ஈதர் 36- ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம் 12-ஔன்ஸ், திராவகங்களைச் சேர்த்து பஞ்சைப்போட்டு, சிலநாள் வைத்துவிடவும். இதைக் காற்றுப்புகாத நல்ல மூடியுள்ள குப்பியில் வைத்துக்கொள்ள வேண்டியது. இது வெள்ளைத் திரவமாய், ஈதருக்குடைய வாசனையோடிருக்கும்; காற்றுப்பட்டால் சீக்கிரத்தில் உலர்ந்துவிடும், மேலே எடு போல் படியும். உபயோகம்.—இதை வெட்டுகாயம், ரணம், முலைக் காம்பு, உதடுவெடிப்புகள், அக்கினி விரணம், அக்கி இவை முதலியவைகளுக்கு மெத்த உபயோகப்பட்டு வருகிறது. கோழியிறகால் இதைத் தடவலாம் (Gun-cotton, oz. 1; Ether, foz 36; Rectified spirit, foz. 12.)

(வெண்டை காய் இலை.)

வெண்டைச் செடி.—(ஹைபிஸ்கஸ் எஸ்கியுலென்டஸ், Hibiscus esculentus. ஈடெபில்ஹை பிஸ்கஸ், Edible Hibiscus. ஒகிற, Okra.)

வெண்டைக்காய். బెండకాయ. Hibisci Capsulæ.

செய்கை.—ஸ்னிக்தகாரி, மூத்திர வர்த்தனி Emollient domulcent, diuretic.

உபயோகம்.—இருமல் நீர்க்கடுப்பு, பிரமேகம் இவை முதலியரோகங்களுக்கு வெண்டைக்காய் கஷாயத்தை நம்பிக்கையோடு உபயோகிக்கலாம். காயையாவது, இலையையாவது சதைத்து போல்டீஸ் செய்து ரணங்களுக்குக்கட்ட, மெத்த நன்மைசெய்யும், சீதபேதிகளுக்கு பத்தியத்துக் குதவும். In Catarrh, ardor urinæ, dysuria; gonorrhœa.

வெண்டைக்காய் கஷாயம் —(டிகாக்ஷன் ஆவ் ஹைபிஸ்கஸ், Decoction of Hibiscus.) செய்முறை. இளசாய் இருக்கிற வெண்டைக்காயை தறித்து 3-ஔன்ஸ் எடுத்துக்கொண்டு, 1½-பைன்ட் ஜலம்விட்டு 1-பைன்ட் அளவுக்குக் காச்சி வடிகட்டி, இனிப்புக்குச் சருக்கரையைச் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—3-6-ஔன்ஸ்வீதம் ஜலபானமாதிரியாய் அடிக்கடி கொள்ளலாம். இந்த கஷாயத்தின் ஆவியை உட்கொண்டால் இருமல், தொண்டைக்கம்மல் முதலிய தொண்டையில் காணுகிற எரிவுகள் விலகும். பச்சைக்காய்க்குப் பதிலாக உலர்ந்தவிதையைச் சேர்த்துக் கொள்ளலாம். (Capsules, oz. 3; water pint 1½). Dose 3-6 ozs.

(Non-officinal)

புளிச்சக்கீரை:—சணம்பு; காய்ச்சுரை; காய்ச்சிரங்கு. గోంగూర (ஹைபிஸ்கஸ் கெநெபைனஸ், Hibiscus cannabinus.) இதன் கீரை புளிப்பாய் ஸ்னிக்தத்தோடிருக்கும்; சமையல்களுக்கு உதவும்; இடித்து வித்திருதி கட்டிகளுக்கு, கட்டலாம். சணப்புநார் ; జనపనార గోంగనార (Hemp) இது சஸ்திரச் சிகிச்சைகளுக்கு உபயோகமாகும்.

மலைதாங்கிப்பூண்டு.—வெற்பேந்தி ఐష్ఋష్ఠి. (ஸைட அகியூடா, Sida acuta.) இதன் வேரில் ஸ்னிக்தமும் கசப்புமுண்டு; வேரை வெந்நீர் ஊறல் கஷாயமிட்டுக் கொடுத்ததில், வியர்வை அதிகப்பட்டதாயும், தீபனவர்த்தன

மானதாயும் கண்டிருக்கின்றது. கசப்பு மருந்துகளுக்குப் பதிலாக இதை உபயோகிக்கலாம். இலையை எண்ணெய்விட்டு வதக்கிக்கட்ட சீழ்க் கொள்ளும்.

மயிர்மாணிக்கம்.—(ஸைடரிடுஸ. Sida retusa) இதன்வேர் வாத ரோகங்களுக் கெடுத்ததென்று சொல்லுகிறார்கள்.

பூவரசு.— గంగరావి (தெஸ்பிஸிய பொப்ல்நிய, Thespesia populnea. போர்ஷியாட்ரி; Portia tree.) பூவரசின் காயிலிருக்கப்பட்ட மஞ்சள் பாலை, எச்சித்தழும்பு முதலிய சருமரோகங்களுக்குத் தடவுகிறது வழக்கம். இதன் பட்டையின் கஷாயத்தால் முதல் கழுவி, பிறகு பாலைப்போடுகிறது முண்டு. தயிலமுறைகளில் பூவரசுப்பட்டைச் சேருகிறது.

செம்பருத்தி.—சப்பாத்திப்பூச்செடி (ஹைபிஸ்கஸ் ரோஜா ஸைநென்ஸிஸ். Hibiscus Rosa-sinensis. ஷூ-ப்ளவாட்ரி. Shoe flower plant.) இதன் புஷ்ப இதழ்களை கடுதாசியின்மேல் தேய்த்தால் நீலநிறத்தைத்தரும்; அதை லிட்மஸ் பேபர் (litmus paper) என்னும் பரீக்ஷைகளுக்கு உபயோகிக்கிற கடுதாசிக்குப் பதிலாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம். புஷ்பத்தை வெந்நீர் ஊறல் கஷாயமிட்டு, சுரங்களுக்கு தாகசமினியாகக் கொடுக்கலாம். கலியாண பூசினிக்காய்க்குள் புஷ்பங்களைப்போட்டு 1-2-தினம் ஊற வைத்து, பிறகு அதிலுண்டாகிற ஜலத்தில் இனிப்பேற்றி, மூத்திரதரிப்புக்குக் கொடுப்பது, தமிழ்முறை

முள்ளிலவு.—బూరుగచెట్టు. பெம்பாக்ஸ் மலபாரிகம். Bombax Malabaricum. ரெட்காடன்ட்ரி, Red cotton tree.) இதன் பிசினியையும் வேரையையும் நிஷ்பலமாய் நமது ஜனங்கள் உபயோகிக்கிறார்கள். பஞ்சு மெத்தை தலையணிகளுக் குபயோகமாகின்றது.

யானை புளியமரம்.—(ஆட்டன் ஸோனிய டிஜிடேடா, Adansonia digitata. பேயோபாப், Baobab. Monkey bread tree.) இது ஆப்ரிகா தேசத்து செடி; இப்போது நமது தேசத்தில், விஸ்தாரமாய்விட்டது. பழத்தின் சதையை சீதபேதிகளும், பட்டையை கஷாயமிட்டு (1-ஔ; 1-பைன். ஜலம். மூன்றில் ஒன்று) சீதசுரங்களுக்கும், கொடுக்கலாமென்று கண்டிருக்கிறது.

பெருந்துத்தி. తుత్తురబెండ. (அபியுடைலன் இண்டிகம். Abutilon Indicum. கன்ட்ரிமாலோ, Country mallow.) துத்தியில் அனேகசாதிகளுண்டு; தேசத்துக்குத் தக்கபடி வித்தியாசப்படும். ரேய்கை. சினிக்தகாரி உபயோகம். இலையை வதிக்கி வேதனைகளுக்கு ஒற்றிடமிடலாம், அல்லது கட்டலாம். கஷாயமிட்டு, பாலும் சருக்கரையுஞ் சேர்த்துச் சாப்பிட்டுக்கொண்டுவந்தால், மேகச்சூட்டைத்தணிக்கும்; சிறுபயறும், வெங்காயமும் சேர்த்து, கூட்டுக்கறி செய்து சாப்பிட்டால், மலம் இளகும்; சாதத்துடன் அரைத்து, கட்டிகளுக்குக் கட்டினால், சீக்கிரம் பழுத்துடையும். துத்தி வேரை கஷாயமிட்டு (வே 4-ஔ; திராக்ஷப்பழம் 2-ஔ; ஜலம், 5-பைன்ட், 3-பைன்ட் அளவுக்குச் சுண்ட வைத்து வடிகட்டிக்கொள்க) தினத்துக்கு 1-2-பைன்ட் அளவுக்கு சாப்பிட்டால், நீர்சுருக்கு, தாகம் ஆகிய இவைகள் விலகும்.

பேராமட்டி பெருங்குறுந்தோட்டி (பெவேனியா ஓடொரேடா, Pavania odorata.) இதின் வேரின் வெந்நீர்க் கஷாயத்துக்கு, சுரமும். போகுமாம்.

சிற்றுமட்டி (சிறுங்குறுந்தோட்டி பெவினியா ஜிலானிகா Pavania Zeylanica.) இதின் வேரின் வெந்நீர்க் கஷாயத்துக்கு சுரம் நீங்குமாம். தயிலமுறைகளில் சேருகிறது.

பீநாறிச்செடி யினம். (STERCULIACEÆ)

NON-OFFICINAL.

வலம்புரிக்காய்.—(ஐஸோரா கோரிலிபோலியா, Isora corylifolia.) காயை எண்ணெயிலிட்டுக் காச்சி, காதுரணத்துக்கு விடுகிறார்கள்.

பீநாறிமரம்.—குதிரைபுடுக்குமரம். (ஸ்டெர் கூலியா பிடிடா, Sterculia fœtida.) துர்வாசனையுள்ள இந்த மரத்தின் இலைக்கும் பட்டைக்கும், மலகாரி, சுவேதகாரி, மூத்திரவர்த்தனி ஆகிய இக்குணங்களுண்டாம்.

அலிவிவிரைச் செடியினம். (LINEÆ.)

அலிவிவிதை. (வித்து, தயிலம், மாவு.)

பிரதிபதங்கள். ஆளிவிரை, ஆழிவிரை, சிறுசானல் விரை, அகத்தி விரை, உமாபீஜம், ஆதவிபீஜம்

அலிவிவிரைச்செடி. லைனம் யூஸிடெடிஸ்ஸிமம். Linum usitatissimum; Common flax

அலிவிவிரை.—லின்ஸீட, Linseed. லினைஸிமைனு Lini Simina.

செய்கை —ஸினிக்தகாரி, போஷணி, Emollient, demulcent, nutritive.

உபயோகம்.—இருமல், மூத்திரத்தரிப்பு இவைகளுக்குக் கொடுக்க உதவும். In cough, dysuria.

அலிசிவிதை வெந்நீர் ஊறல் கஷாயம். (இன்பியூஷன் ஆவ் லின்ஸிட் Infusion of Linseed; இன்பியூஸம் லினை Infusum Lini.) செய்முறை. அலிவிவிதை 160-கிறேன்; இடித்த புதிய சீமை அதிமதுரம், 60-கிறேன்; கொதிக்கிற ஜலம் 10-ஔன்ஸ். இவைகளைச்சேர்த்து மூடி 4-மணி நேரம் ஊரவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். உபயோகம். இருமல், கிரகணி, கல்லடைப்பு, நீர்ச்சுருக்கு, பிரமேகம், இவைகளுக்குக் கொடுத்தால், வேதனை தணியும். மாத்திரை. 2-4-ஔன்ஸ் வீதமாவது அல்லது இஷ்டமானபோதெல்லாம் உட்கொள்ளலாம். ஒரு துண்டு எலுமிச்சம் பழத்தையும், சருக்கரையையும் சேர்த்துக்கொண்டால், மதுரமாயிருக்கும். Linseed, grs 160; Liquorice root, dr. 1; Boiling water, oz. 10) Dose.—2-4 oz. or ad libitum.

அலிசிமாவு போல்டீஸ்.—(லின்ஸீட் போல்டீஸ் Linseed Poultice காடேபிளாஸ்ம லினை Cataplasma Lini) செய்முறை. அலிவி விதை மாவு, 4-ஔன்ஸ்; சீமை எண்ணெய் $\frac{1}{2}$-ஔன்ஸ்; கொதிஜலம். 10-ஔன்ஸ்.

மாவை, கொஞ்சம் கொஞ்சமாக ஜலத்திலிட்டுக்கலந்து, பிறகு துழவிக் கொண்டே எண்ணெய்யைவிட்டு மிஸ்ரமித்துக் கொள்ளவேண்டியது. உபயோகம். கட்டிகள், ரணங்கள், இவைகளுக்கு இதை வைத்துக்கட்டினால், எரிச்சல் தணியும். (Linseed meal, oz 4; Olive oil, foz ½; Boiling water, foz. 10)

அலிஸிவிதைத்தயிலம். அகத்தி எண்ணெய்). லின்ஸிட் ஆயல் Lin seed oil; ஒலியம் லினி Oleum Lini.) உபயோகம். இது நீர் வெண்ணெயில் சேருகிறது. ½-1 அவுன்ஸ் கொடுத்தால், மலம் உதையும்.

நெருஞ்சில் இனம். (ZYGOPHYLLEÆ.)

குவாகம் (சக்கை, ரோஜனம்.)

குவாகம் செடி.—குவாகம். அபிலிபினேலி. Guaiacum officinale

Guaiacum Tree.

குவாகம் சக்கை.—குவாஸை லிக்னம் Guaiaci Lignum.

குவாகம் உட், Guaicum wood.

குவாகம் ரோஜனம்.—குவாஸை ரிஸைஞ, Guaiaci Resina;

குவாகம் ரிஸின், Guaiacum Resin..

விவரணம்.—வெஸ்ட் இன்டீஸ் என்னும் தேசத்தில் விளைகிற இந்தச் செடியின் சக்கையை உளியால் இழைக்தாவது, அரத்தால், ராவி பொடித்தாவது, அனுப்பப்படுகின்றது. இதில் வெடியுப்பு திராவகம் விட்டால் நீலநிறமாகும்; அந்த திருஷ்டாந்தத்தால் மற்றமரப்பொடிகளிருந்து இதைக் கண்டுகொள்ளவேண்டியது ரோஜனமானது மரத்திலிருந்து தற்செயலாய் வடியும், அல்லது எரித்து எடுக்கப்படும். அது கட்டியாய், பனம்பழநிறமாய், எளிதில் சூரணமாகத் தக்கதாய், புட்ட இடம் மினுமினுப்பாய், சாம்பிராணி வாசனையுடையதாய், வாயிலிட்டால், தொண்டையில் எரிச்சலை யுண்டாக்குகிறதாய் இருக்கும்.

செய்கை —உஷ்ணகாரி, சுவேதகாரி, வியதாபேதகாரி, ருதுவர்த்தனி. Stimulant, diaphoretic, alterative, emmenagogue.

உபயோகம்.—மேகரோகத்துக்கும், கீல்வாதக்துக்கும், இது எடுத்த மருந்து. சூதகச்சூலை, சூதகக்கட்டு முதலிய கருப்பரோகங்களையுங், கேழ்க்கும். In rheumatism, gout, dysmenorrhœa, amenorrhœa.

மாத்திரை —ரோஜனத்தில் 10-30-கிறேன் வீதம், உண்டையாகச் செய்தாவது, அல்லது குழம்பாகச்செய்தாவது, கொடுக்கலாம். 10-30. grs.

குவாகம் குழம்பு.—(குவாகம் மிகிச்சர் Guaiacum Lixture. மிஸ்டியூரா குவாஸை Mistura Guaiaca.) செய்முறை குவாகம் ரோஜனம் ½-ஔன்ஸ்; சருக்கரை. ½-ஔன்ஸ்; விளாம்பிசினித்தூள், ¼-ஔன்ஸ்; கருவாப்பட்டை ஜலம், 1-பையின்ட் சூரணங்களை மிஸ்ரமித்து, முடிவில் ஜலத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக; விட்டு அரைத்துக் கொள்ளவேண்டியது. மாத்திரை. ½-2-ஔன்ஸ் வீதம், தினத்துக்கு 2-3-ஆவர்த்தி கொடுக்கலாம். 1-ஔன்ஸ் குழம்பில் 11-கிறேன் ரோஜனமுண்டு, (Cuaiacum

Resin, oz. ½ ; Refined Suger, oz ½ Gum-Acacia, oz ¼; Cinna mon water, pint 1. Dose .—½-2-foz.

அம்மோனியேடேட் டிங்சர் ஆவ் குவாகம். Ammoniated Tincture of Guaiacum; டிங்சுரா குவாஸை அம்மோனி ஏடா. Tinctura Guaiaci Ammoniata) செய்முறை.—குவாகம் ரோஜனத்தின் தூள், 4-ஔன்ஸ்; ஆரோமாடிக்ஸ்பிர்ட் ஆவ் அம்மோனியா, 1-பைன்ட், காற்றுப்புகாமல்மூடி 7-நாள் ஊறவைத்து, வடிகட்டி, ஒரு பைன்ட் அளவுக்குத் தேவையான ஷை மதுவை விட்டுக்கொள்ளவேண்டியது. மாத்திரை. ½-1-டிராம் வீதம் விளாம்பிசினிப் பாகுடன் சேர்த்து தினத்துக்கு 2-3-ஆவர்த்தி, நாள்பட்ட கீல்வாதம், சூதகரோகம், இவைகளுக்குக் கொடுக்கலாம் ; நல்ல ஔஷதம். Guaiacum Resin oz. 4; Aromatic Spirit of Ammonia, pint 1.) Dose —½-1fdr.

சந்நை யானது, நன்னாரிவேர் கஷாயத்திலும், ரோஜனமானது, பூர மெழுகிலும் சேருகின்றது.

(NON-OFFICINAL.)

நெருஞ்சில். పల్లేరు. (ட்ரிபியுலஸ் லசியு ஜினோஸஸ், Tibulus lanuginosus.) இதன் காயில் வீரியம் அதிகம், மூத்திரவர்த்தனி, அதை கஷாயமிட்டு (காய், 2-ஔன்ஸ், கொத்துமல்லி, 2-டிராம்; ஜலம், 1-பைன்ட். அரைபைன்ட் அளவுக்கு சுண்டவைக்கவும்.) கொடுக்கலாம். காயையும், வேரையும், அரிசியோடு வேகவைத்து, கஞ்சியை வடித்து இனிப்பேற்றி அதை பிரமேகம், நீர்க்கடுப்பு இவைகளுக்கு தாராளமாய்க் கொடுப்பது, நமது ஜனங்களுக்குப் பிரீதி

அருதா இனம். (RUTACEÆ)

அருதா (இலை)

பிரதிபதங்கள் —சதாபு இலை. సదాపుఆకు అరుంధా.

அருதாபூண்டு —ரூடா அன்கஸ் டிபோலிய, Ruta angustifolia. நமது தேசத்தில் பயிரிடுகிற அருதா சீமை அருதாவுக்கு ஒத்ததுதான் (ரூடா கிராவிவோலென்ஸ் Ruta Graveolens. காமன் ரூ, Common Rue.) இது கெட்டவாசனையாய், கசப்பாய் இருக்கும்.

செய்கை —உஷ்ணகாரி, ருதுவர்தனகாரி, கிருமிநாசகாரி. அதிமாத்திரையில் விஷமிக்கும். Stimulant, emmenagogue, anthelmintic,

உபயோகம்.—சூதகசந்நி, சூதகக்கட்டு முதலிய கருப்ப வியாதிகளுக்கு முன்பு உபயோகித்ததுண்டு. காக்கைவலி, குழந்தைகளுக்குக் காணுகிற வலி, மாந்தம் இவைகளுக்கும் கொடுத்திருக்கிறார்கள். இப்போது இதை மெத்த உபயோகிக்கிறதில்லை. மாத்திரை.—20-40 கிரேன். வீதம் கொடுக்கலாம். In hysteria, amenorhœa. Dose.—20-40 grs.

அருதா தயிலம்.—(ஆயில் ஆவ்ரூ Oil of Rue. ஒலியம் ரூடி Oleum Rutæ.) இலைகளையும் காய்களையும், வாலையிலிட்டிறக்கி, தயிலத்தை எடுக்கப்படும்; மாத்திரை.—2-5-துளி, ஜலத்திலிட்டு சருக்கரைச்சேர்த்துகொடுக்கலாம். 2-5 drops.

ஙுகு. (இலை.)

ஙுகு இலை. (ஙுகு லீவ்ஸ் Buchu leaves. ஙுகு போலியா Buchu folia—இந்த இலை, ஆப்ரிகா தேசத்திலிருந்து வருகிறது. மூத்திரவியாதிகள் கீல்வாதம், அஜீர்ணம் இவைகளுக் குபயோகம். இலைத்தூளில், 20-30-கிறேன் எடைக்கும், வெந்நீர்கஷாயத்தால், 1-4- ஔன்ஸ் அளவுக்கும். பாவனத்திரவத்தில், 1-2-டிராம் அளவுக்கும் கொடுக்கலாம்.

ஆரஞ்சிப்பழ இனம். (AURANTIACEÆ.)

ஆரஞ்சிப்பழம்

பிரதிபதங்கள்.—தித்திப்பு நாரத்தை, கிச்சிலி, கொழுஞ்சி. நாரங்கம் கொழுமிச்சன். ఖరంజిపండు.

தித்திப்பு, புளிப்பு ஆரஞ்சிச்செடி.—ஸைட்ரஸ் அரான்டம் Citrus Aurantum. ஆரஞ் ட்ரீ. The Sweet and Bitter Orange Tree.

ஆரஞ்சிப்பழத்தோல்.—ஆரஞ்சி பீல், Orange Peel. அரான்டை கார்டெக்ஸ். Aurantii Cortex.

விவரணம்.—இந்தப்பழத்தின் தோலானது வாசனையாய் கொஞ்சம் கசப்பாய் இருக்கும் ; புளிப்பினத்தில் அதிக மதுரமுண்டு, அதுதான் மருந்துகளுக் குபயோகம். அதை போஜனகஸ்தூரி என்றும் சொல்வதுண்டு.

செய்கை.—தீபனகாரி, பலகாரி. உபயோகம்.—அக்கினிமந்தம், வாந்தி, தூர்ப்பலம், இவைகளுக்கு, உபயோகிக்கலாம். ஆரஞ்சிப்பழ ரசம், குளிர்ச்சியைத்தரும், இளைப்பையாற்றும் ; ரோகிகளுக்குக் கொடுக்கலாம். தோலை வெந்நீர் கஷாயம், பாவனத்திரவம், பாணிதம், ஆகசசெய்தும், புஷ்பத்தை, தீ நீர், பாணிதமாகச்செய்தும், மருந்துகளுக்கு அனுபானமாய் உபயோகப் படுத்தப்படும், தனிப்பட கொடுப்பதில்லை. வேறு மருந்துகள் செய்முறையிலும் சேருகின்றது.

எலிமிச்சம் பழம்

பிரதிபதங்கள்.—ஜம்பீரம், எலுமிச்ச நாரங்கா.

எலுமிச்சைச் செடி.—ஸைட்ரஸ் பெர்கேமியா, Citrus Bergamia; லைம் ட்ரீ, the Lime Tree.

எலுமிச்சம்பழம். నిమ్మపండు. லைம், Lime

விவரணம்.—நமது தேசத்து எலிமிச்சை சின்னதாய், தோல் சிறத்து, மெத்தவாசனையில்லாததாய் இருக்கும். ரஸத்தின் குணத்தில் வித்தியாஸமிராது, ஆனால் ஸிட்ரிக ஆஸிட் அதிகமுண்டு. சீமை எலுமிச்சம் பழமானது பெருசாயிருக்கும், அதற்கு லிமன், (Lemon) (ஸைட்ரஸ் லிமோனம், Citrus Limonum; லிமன் ட்ரீ the Limon tree) என்றுபேர்; அதுக்குப்பதிலாக நமது தேசத்து எலுமிச்சம்பழத்தை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

செய்கை.—(தோல்) தீபனகாரி வாதஹாரி. Stomachic, carminative.

உபயோகம்.—ஆரஞ்சிக்குடைய உபயோகமே இதற்கு முண்டு. In atonic dyspepsia, anorexia, general debility.

எலுமிச்சந்தோல் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் லெம் பீல் Tincture of Lemon Peel; டிங்சுரா லேமோனிஸ் Tinctura Limonis (செய்முறை.—எலுமிச்சம் பழத்தின் பச்சைத்தோல் $2\frac{1}{2}$-ஔன்ஸ்; புரூவஸ்பிரிட், 1-பையின்ட். இவைகளைச்சேர்த்து, மூடி, அடிக்கடி குலுக்கி, 7-நாள் ஊற வைத்து, பிழிந்து வடிக்கட்டி 1-பைன்ட்க்குத் தேவையான சாராயத்தைச் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை. 1-2-டிராம். (Fresh Lemon Peel, oz. $2\frac{1}{2}$; Proof Spirit, pinti.) Dose. 1-2 fdrs.

ஜம்பீர×தயிலப்.—(ஆயல் ஆவ் லிமன் Oil of Lemon. ஒலியம் லேமோனிஸ் Oleum Limonis.) தோலை வாலேயிலிட்டிறக்கி எடுக்கிற இந்ததயிலமானது நல்லவாஸனையாய், காரமாயிருக்கும்; 2-4-துளி கொடுத்தால், வாயுவை கண்டிக்கும். Dose 2-4 drops.

பழரஸம்.—(லேம் ஜூஸ் Lime Juice), இதில் ஸிட்ரிக ஆஸிட் என்னும் புளிப்பு இருக்கின்றது. வாதுமை நெய்யாவது, அல்லது மதுரமான எந்த எண்ணெயாவது மேலே மிதக்கும்படி கொஞ்சம் விட்டுவைத்தால் கெடாமல் நாள்பட இருக்கும். செய்கை.—சீதளகாரி, உப்புகளை முறித்துவிடும், ஆண்டிஸ்கார் பியூடிக் Antiscorbutic, refrigerant, antalkaline, antacid.

உபயோகம்.—ஸ்கர்வி (Scurvy) என்னும் ரோகத்துக்கு இது எடுத்த ஔஷதம். சுரம், தாபனம் இவைகளுக்கு, போன்சு செய்துகொடுத்தால், நல்ல தணிப்பு உண்டாகும், தாகந்தணியும். தீக்ஷண கீல்வாதரோகத்துக்கும், பேதி, சீதபேதி இவைகளுக்கும் தொடுத்து சௌக்கியம் கண்டதுண்டு. மூலிகை விஷங்களையும் கண்டிக்கும். Use-In scurvy, fevers, rheumatism dysentery, diarrhœa.

மாத்திரை.—2-டிராம் முதல் 1-ஔன்ஸ்க்கு அதிகமாயும் கொடுக்கலாம். தீக்ஷணகீல்வாதத்துக்கு, 1 2-ஔன்ஸ் வீதம், 4-6 மணிக்கொருதரம் கொடுப்பது வைத்தியமுறை. $\frac{1}{2}$-ஔன்ஸ், ரஸமானது 30-கிறேன் ஸிட்ரிக் ஆஸிட் என்னும் உப்புக்குச் சமனாயிருக்கும். போன்சு (Lemonade) செய்முறை.—2 பழத்தை அறுத்து ஒருகுப்பி வெந்நீரில்போட்டு, 2-ஔன்ஸ் பஞ்சதாரையைச்சேர்த்து ஊறவைத்து, குளிர்ந்தபிறகு வடிகட்டிக்கொள்ளவும். கஞ்சித்தண்ணீரிலாவது, பார்லி அரிசித்தண்ணீரிலாவது, சேர்த்தும் கொடுக்கலாம். Dose.—2 fdrs. to oz i

ஜம்பீரபாணிதம்.—எலுமிச்சம்பழரஸ ஷர்பத் (ஸிரப் ஆவ் லெமன்ஸ், Syrup of Lemons. ஸைரூபஸ் லேமோனிஸ், Syrupus Limonis.) செய்முறை.—பச்சை எலுமிச்சந்தோல், 2-ஔன்ஸ்; வடிகட்டிய பழரசம், 1-பைன்ட்; பஞ்சதாரை $2\frac{1}{4}$-பௌன் பழரஸத்தைக் கொதிக்கச்காச்சி, அதில் தோலைப்போட்டு, மூடிவைத்து, குளிர்ந்த பிறகு வடிகட்டி சருக்கரையைச் சேர்த்து, சிறு தீயில் வைத்து கரைத்துக்கொள்ளவும். கின்றது $3\frac{1}{2}$-பவுன் இடை இருக்கவேண்டியது. மாத்திரை.—1-2-டிராம் கொடுக்கலாம். இது சீக்கிரம் கெட்டுப்போவதால் தேவையானபோது செய்துகொள்ளவேண்டியது. Lemon Peel, oz. 2; Lemon juice, pint 1; Sugar, lb. $2\frac{1}{4}$.

ஜம்பீரலவணம்.—(எலுமிச்சம்பழ ரஸத்தின் உப்பு). ஸிட்ரிக் ஆஸிட், Citric acid. அஸிடம் (ஸிட்ரிகம், Acidum citricum.) விவரணம்.—பழரஸத்திலிருந்து எடுக்கிற இந்த உப்பானது, கற்கண்டு கட்டிகளைப்போல் வெளுத்து, அதிக புளிப்பாய் இருக்கும், ஜலத்திலும் சாராயத்திலும் கரைந்து விடும்; 34-கிறேன் உப்பை, 1-ஔன்ஸ் ஜலத்தில் கரைத்து கொண்டால், அது பழரஸத்துக்கு சமனாகும். மாத்திரை.—10-30-கிறேன் கொடுக்கலாம்.—இந்த உப்பு முக்கியமாய், பொங்குநீர், சீதஜலம், இவைகளைச் செய்ய உபயோகமாகின்றது. 8-டிராம் உப்பை, 16-ஔன்ஸ் ஜலத்தில் கரைத்து, ஜம்பீர தயிலத்தில் கொஞ்சம் விட்டுக்கொண்டால், பழரஸத்துக்கு இடாகிவிடும். உப்பை போஞ்சு செய்து கொடுத்தால் அழலை தணியும், தாகமடங்கும், ஆரோக்கிய முண்டாகும்; பூநீருப்போடு சேர்த்து, பொங்குநீர் செய்து உட்கொண்டால், வாந்தியை நிறுத்தும். பொங்குநீர்செய்ய புளிப்பும், உப்பும், எடுத்துக்கொள்ள வேண்டிய கிரமம் இதனடிழல் காண்க —

ஸிட்ரிக் ஆஸிட்.	பழரஸம்.	20-கிறேன்
14-கிறேன்,	$3\frac{1}{2}$-டிராம்.	பைகார்பொ. ஆவ் போடாஷ்
24 ,,	6 ,,	கார்பொனேட் ஆவ் அம்மோனியா.
17 ,,	4 ,,	பைகார்பொனேட் ஆவ் ஸோடா

வில்வம்

வில்வச்செடி.—ஈக்லி மார்மிலாஸ், Ægle Marmelos. பேல் Bael. பீலா Bela.

வில்வப்பழம்,—பீலிபிரக்டஸ், Belæ Fructus. பேல் Bael.

விவரணம்.—இந்தப் பழம் பிரசித்தமானது, பழத்துக்குள்ளிருக்கிற பசைபோலொத்த சோற்றில், டானிக் ஆஸிட் இருக்கின்றது.

செய்கை.—சங்கோசனகாரி? குடலுக்கு வலுவைக்கொடுத்து, பேதியை நிறுத்தும், மலபந்தத்தை நீக்கும். Astringent? laxative.

உபயோகம்.—தூர்ப்பலமுடையவர்களுக்குக் காண்கிறபேதி, சீதபேதி அதிசாரம், கிரகணி, வழக்கமான மலபந்தம் ஆகிய இவைகளுக்குக் கொடுக்க நல்ல ஔஷதம். Diarrhœa, dysentery, habitual constipation,

வில்வாதி பாணிதம்.—(பேல்மிகிச்சர் Bael Mixture. மிஸ்டியூரா பீலி, Mistura Belæ.) செய்முறை.—பழத்தின் சதை 2-ஔன்ஸ்; ஜலம் 4-ஔன்ஸ். செவ்வையாக மிஸ்ரமித்து, 2-ஔன்ஸ், அல்லது இனிப்புக்குத் தேவையான சருக்கரையைச் சேர்த்துக்கொள்ளவும். இதைத் தினத்துக்கு 2-3-தடவை கொடுக்கலாம். ஒருவேளை மருந்து எத்துக்கொள்ளாவிட்டால், அளவைக்குறைத்து கொஞ்சமாக அடிக்கடி கொடுக்கலாம், அல்லது சத்தையாவது பிரயோகிக்கலாம். (The pulp, oz 2; Water, oz. 4; Sugar, oz. 2.)

வில்வாதி சத்து.—(எகிஸ்ட்ராக்ட் ஆவ் பீல், Extract of Bael. எகிஸ்ராக்டம் பீல் Extractum Belæ) செய்முறை.—நல்ல பழுத்த பழத்தின் சதையை எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு, அது முழுகும்படிக்கு ஜலம்விட்டு, 2-மணி நேரம் துழவிக்கொடுத்து, கெட்டித்துணியில் வடிகட்

டிக்கொள்ளவும். இவ்விதமாக பலதரம் செய்து, ஜலயந்திரத்தில் வைத்து, மெழுகு பதத்துக்குச் சுண்டவைத்துக்கொள்ளவும். இதில் பழத்துக்குடைய பணமிருக்கும். பழத்தைப்பார்க்கிலும் பக்குவப்படுத்தினகாய் நாள்படவிருக்குமாம். மாத்திரை.—$\frac{1}{2}$-1-டிராம் எடைக்கு, தினத்துக்கு, 2-3-பிராயஸமாவது, அல்லதுஇன்னம் அடிக்கடியாவது கொடுக்கலாம். Dose—dr. $\frac{1}{2}$-1

மிளகரணை, (வேரின்பட்டை.)

பிரதிபதங்கள்.—కొండకసింద.

மிளகரணைச்செடி.—டொட்டேலிய அக்கியூலிஎடா, Toddalia Aculeata. டொட்டேலியா. Toddalia.

மிளகரணை.—டொட்டேலியிராடிக்ஸ், Toddaliae Radix.

செய்கை.—பலகாரி, உஷ்ணகாரி, முறைவியாதி, ரோதி. Tonic, stimulant, antiperiodic?

உபயோகம்.—துர்ப்பலம், சுரம் முதலிய வியாதிகளில் கர்ணுகிற துர்ப்பலம், இவைகளுக்குக் கொடுக்க திவ்விய மூலிகை. அஜீரணம், வாயு இவைகளுக்கும் கொடுக்கலாம், Debility.

மிளகரணை பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் டொட்டேலியா, Tincture of Toddalia, டிங்சுர டொட்டேலியி, Tinctura Toddaliæ.) செய்முறை.—மிளகரணை வேரின் பட்டை, 2$\frac{1}{2}$-ஔன்ஸ். புரூவ்ஸ் பிரிட் 1-பைன்ட் மூடி 7-நாள் குலுக்கிக் குலுக்கி ஊறவைத்து, இறுத்து, பிழிந்து, வடிகட்டி, 1-பைன்டுக்குத் தேவையான புரூவ்ஸ் பிரிட் என்னும் சாராயத்தை விட்டுக்கொள்ளவும். மாத்திரை.—1$\frac{1}{2}$-3-டிராம்வீதம் தினத்துக்கு,2-3-ஆவர்த்தி கொடுக்கலாம். (The root bark, ox. 2$\frac{1}{2}$; Proof Spirit, pint 1;) Dose.—fdrs. 1$\frac{1}{2}$-3.

மிளகரணை வெந்நீர் ஊரல்கஷாயம். (இன்பியூஷன் ஆவ் டொட்டேலிய Infusion of Toddalia. இன்பியூஸம் டொட்டேலியி. (Infusum Toddaliæ.) செய்முறை.—இடித்த மிளகரணை வேரின்பட்டை 1-ஔன்ஸ் வெந்நீர்-10 ஔன்ஸ், மூடி-1-மணி நேரம் ஊரவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை —1-2-ஔன்ஸ் தினத்துக்கு 2-3-ஆவர்த்தி கொடுக்கலாம். The root bark. oz. 1; Boiling water, foz. 10.) Dose.—foz. 1-2.

(None-officinal.)

புளிப்பு நார்த்தை.—இது ஊறுகாய் போடுவதற்கு நல்லது.

கொடி நார்த்தை.—(ஸைட்ரஸ் மெடிக, Citras medica. ஸிட்ரன், The Citron.) இதின் பெரிய பழத்தை தணிப்புக்காக ரோகியின் பக்கத்தில் வைப்பதுண்டு, ஊறுகாய் போட நல்லகனி.

பம்பளிமாஸ்.—(ஸைட்ரஸ் டிகியுமேனு, Citrus decumana ஷாடக் Shadock.) இதில் பல இனங்களுண்டு. கனிகளில் இது சிரேஷ்டமானது.

விளாம் பழம்.—ఎలగపండు. (உட் ஆப்பில், Wood-apple விளாஞ் செடி, பிரோனிய எலி பான்டம், Feronia Elephantum) பழத்தை, சாதாரணமாக சாப்பிடுகிறது வழக்கம்; பித்தசாந்தி; காயில் சங்கோசன காரி குணமுண்டு, வில்வப்பழத்துக்கு ஒத்திருக்கும். இதின் கொழுந்தைக் கியாழமிட்டு தீபனகாரியாகவும், கர்பவாதஹர காரியாகவும் கொடுப்பதுவழக்கம். செடியிலிருந்து வடிகிற விளாம் பிசின், சீமை விளாம்பிசினிக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம், குணத்தில் மெத்த வித்தியாஸமிராது.

நிலவிளா.—குட்டிவிளா, நரிவிளா —இதின் இலையை, வெந்நீர் ஊறல் கியாழமிட்டு, அதிதாகம், பித்தம், சுரம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

கறிவேப்பிலை.—கருவேப்பிலை, கறியபிலை, (மரேயா கொனிஜியை, Murraya (Bergera) Konigii. Curry leaf.) இதின்பட்டை, வேர், இலை இவைகளுக்கு பலகாரி, தீபனகாரி, குணங்களுண்டு. இலையை வெந்நீர் கியாழமிட்டு கொடுத்தால், வாந்தி நிற்கும். ஈர்க்கின்பரனையை, மூலைப்பால் விட்டு இடித்து, ரசம்பிழிந்து, கிராம்பு, திப்பிலிசேர்த்து, குழந்தைகளுக்கு வாந்திநிற்க, தினத்துக்கு 2-3-தடவை கொடுக்கலாம். கறிவேப்பிலைத் துவையலை அரோசகம், சுரம், பித்தம், வயிற்றுளைச்சல், இவைகளுக்கு உபயோகித்தால் நலந்தரும். கொழுந்தை கறிகளைத்தாளிக்க உபயோகிப்பது வீட்டு வழக்கம்; சீரண சக்தியை அதிகப்படுத்தும்.

ஸிமரூப இனம். (SIMARUBEÆ)

குவாஷியா

குவாஷியாச்செடி.—பைக்ரீன எக்ஸெல்ஸ. Picraena Excelsa. Quassia Tree.

குவாஷியாசக்கை.—குவாஷியிலிக்னம், Quassiæ Lignum; குவாஷிய. Quassia

விவரணம்.—வெஸ்ட் இன்டீஸ் (West Indies.) என்னும் இடத்தில் விளைகிற இந்தச் செடியின் சக்கை மெத்தக்கசக்கும், வாசனையற்றது, நிறம் பலவிதம்; இதில் துவர்ப்பு இல்லாததால், அயத்தைச் சேர்த்துக் கொடுக்க உதவும்.

செய்கை.—பலகாரி, தீபனவர்த்தனி. Tonic stomachic.

உபயோகம் —துர்பலம், அக்கினிமந்தம் இவைகளை விலக்க இது நல்ல மருந்து; சீதசுரத்தையும் கேழ்க்கும்; ஆஸனவஸ்திசெய்து பிரயோகித்தால், திமிர்ப்பூச்சிகள் வெளிப்பட்டுவிடும். In debility, dyspepsia, fevers, thread worms.

குவாஷிய வெந்நீர் ஊறல்கிழாயம் —(இன்பியூஷன் ஆவ் குவாஷியா, Infusion of Quassia. இன்பியூஸம் குவாஷியீ Infusum Quassiae) செய்முறை.—குவாஷியா சக்கை 60–கிறேன்; குளிர்ந்தஜலம், 10-ஔன்ஸ் இவைகளை மூடி, $\frac{1}{2}$-மணிநேரம் ஊறவைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும், மாத்திரை.—12-ஔன்ஸ் அளவுக்கு தினத்துக்கு, 2-3-தடவைக்கொடுக்கலாம் அயஞ்சேர்ந்த மருந்துகளுக்கு இது நல்ல அனுபானம். (Quassia chips, grs. 60; Coldwater, foz 10). Dose—1-2 foz.

குவாஷிய பாவனத்திரவர்.—டிங்சர் ஆவ் குவாஷியா, Tincture of Quassia. டிங்குரா குவாஷியீ, Tinctura Quassiae) செய்முறை.—குவாஷியா சக்கை $\frac{3}{4}$-ஔன்ஸ், புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். மூடி, குலுக்கிக் குலுக்கி 7-நாள் ஊறவைத்து, இறுத்து, பிழிந்து, வடிக்கட்டிக்கொண்டு, 1-பைன்டுக்குத் தேவையான சாராயத்தைச் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-2-டிராம். (Quassia wood, $\frac{3}{4}$; Proof Spirit, pint 1.) Dose—$\frac{1}{2}$-2 fdrs.

(Non-officinal.)

மட்டிப்பால்.—மட்டுப்பால் (எய்லாந்தஸ் மலபாரிகா, Ailanthus Malabarica.) பெருமரம் எனனும் செடியைக்கீறி யெடுக்கிற இந்தப்பாலை சீதபேதிக்குக் கொடுப்பதுண்டு. கபரோகத்துக்கும் நல்லதாம். (சிரஸ்தாபம், சலதோஷம், கபவாந்தி, அருசி போம். சிந்தாமணி.)

வாலேந்திரபோள இனம். (BURSERACEÆ)

வாலேந்திரபோளம்

பிரதிபதங்கள்.—வெள்ளைப்போளம், வெள்ளாத்திப்போளம், மீறு.

வாலேந்திரபோளச்செடி —பால்ஸெமொடென்டிரான் மர்ரா, Balsamodendron Myrrha. The Myrrh Tree.

வாலேந்திரபோளம்.—மர்ரா Myrrha. மர் Myrrh

விவரணம்.-அரேபியாதேசத்தில் விளைகிற செடியிலிருந்து சேகரிக்கிற இந்த ரோஜனப் பிசினியானது கட்டிகளாகய், சிவப்புங்கறுப்புங் கலந்த நிறமாய், கைப்புள்ள நல்ல வாசனையாய் இருக்கும்; எளிதில் தூளாகும்; ஜலத்தில் குழம்பாகிவிடும்.

செய்கை.—உஷ்ணகாரி, கபஹாரி, ருதுவர்த்தனி. Stimulant, expectorant, emmenagogue.

உபயோகம்.—சூதகக்கட்டு, சூதகப்பாண்டு முதலிய கர்ப்பாசயரோகங்களுக்கும், கபரோகங்களுக்கும், காசத்துக்கும், அக்கினிமந்தரோகங்களுக்கும் கொடுக்க இது திவ்விய ஔஷதம்; வாய்ரணத்துக்கும், ஆறுதவிரணங்களுக்கும் அதிகமாய் உபயோகப்பட்டுவருகின்றது. சூதகக்கட்டுக்கு, இதனோடு அயம், மூஷாம்பரம் இவைகளைச்சேர்த்துக் கொடுத்தால், சவுக்கியமுண்டாகும். In amenorrhœa, chlorosis, asthma, dyspepsia, sore mouth.

மாத்திரை—இதின் சூரணத்தில், 10-20-கிறேன் வீதம் தூள்ளயாவது, மாத்திரைச்செய்தாவது கொடுக்கலாம். grs. 10-20.

வாலேந்திரபோளப் பாவனத்திரவம்.—மீறுபாவனத்திரவம் (டிங்சர் ஆவ் மர், Tincture of Myrrh, டிங்சுரமர்ரி, Tinctura Myrrhœ செய்முறை.—போளம் $2\frac{1}{2}$-ஔன்ஸ்; ரெக்டி பைட்சாராயம் 1-பைன்ட் இவைகளை ஊறவைத்து பெர்க்கொலேடர் கருவியில்விட்டு வடிக்கட்டிக்கொள்ளவும் மாத்திரை.—$\frac{1}{2}$-1-டிராம் கொடுக்கலாம். ஆனால் ஜலத்தில் கலந்து வாய்க்கொப்பளிக்கச்செய்வது வழக்கம். இது அனேகமருந்து முறைக

ளில் சேருகின்றது. ரணங்களுக்குத் தடவலாம். Myrrh, oz. 2½; Rectified Spirit, 1.) Dose.—½-1 fdr.

பறங்கிச் சாம்பிராணி.

பிரதிபதங்கள்.—நறும்பிசின், குமைஞ்சான், குந்தலிக்கம், குந்தரிக்கம் குங்கிலியம் సీమసాంబ్రాణి కుందురికి.

பறங்கிச்சாம்பிராணிச்செடி.—பாஸ்வெலிய பிளோரிபண்ட, Boswellia Flribunda ஒலிபேனம் அல்லது பிரான்கின் ஸென்ஸ்ட்ரி, The Olibanum or Frnkincense Tree.

பறங்கிச்சாம்பிராணி.—ஒலிபெனம், Olibanum.

விவரணம்—இதில் ரோஜனம் பிசினும் உண்டு; பலவிதமாய் உருண்டு மஞ்சள்நிறமாய், நல்லவாசனையாய் இருக்கும், கந்தபரோஜா என்பதை யூனானியில் உபயோகப்படுத்துகிறார்கள்

செய்கை.-உஷ்ணகாரி முக்கியமாய் புப்புஸத்திலிருக்கிற சிலேஷ்ம சவ்வை உஷ்ணிக்கும் Stimulant

உபயோகம்.—கபரோகங்களுக்கு இதை முக்கியமாய் உள்ளுக்குக் கொடுத்து, புகையையையும் உபயோகப்படுத்துவதுண்டு. ராசபிளவை, விரணங்கள், கட்டிகள் முதலியவைகளுக்கு இதை மேலுக்குப்போடலாம். In Bronchitis; locally in carbuncle, ulcers, boils.

மாத்திரை.—15-கிறேன் முதல்-2-டிராம் grs 15—drs. 2.

பறங்கிச் சாம்பிராணிக் களிம்பு.—(ஒலிபேனம் ஆயின்ட்மென்ட், Olibanum ointment. அன்குவென்டம் ஒலிபெனை, Unguenium olibani) செய்முறை.—பறங்கிச்சாம்பிராணி, நல்லெண்ணெய், வெள்ளை மெழுகு, வகைக்கு-1-ஔன்ஸ் இவைகளைச் சிறுதீயிட்டு உருக்கி, வடிகட்டிக் கொள்ளவேண்டியது.

குங்கிலியம்.—గుగ్గులం. பால்ஸமோ டென்டிரான்முகல், Balsamodendron Mukul. B. pubescens. ஷை இரண்டு இனமும், சிந்துதேசத்திலுண்டு; அவைகளின் பிசினிக்கு குங்கிலியம் (பிடெல்லியம். Bdellium; Gugul) என்று பேர். வாலேந்திர போளத்தின் குணமே இதற்குமுண்டு, இது நயமானபடியால், அதற்குபதிலாக இதை உபயோகப்படுத்தலாம். இதனுடன், கந்தகம், காசுக்கட்டி, வெங்காரம் சேர்த்து, ரணங்களை சுத்தி செய்யப் போடுவதுண்டு.

டாமர்.—(Canarium strictum, Black Dammar.) இதை பர்கென்டிபிச், (Burgundy Pitch) என்னும் பிசினுக்குப்பதிலாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

வேம்பு இனம். (MELIACEÆ)

வேப்பன். (பட்டை, இலை, தைலம், கள்ளு, பூ, பிசின்,)

பிரதிபதங்கள்.—நிம்பம். வேம்பு. వేపచెట్టు.

வேப்பமரம்.—அஸாடிராக்ட இன்டிக. Azadirachta Indica; நிம், மார்கோஸாட்ரி. Nim or Margosa Tree.

வேப்பம்பட்டை.—(நிம்பார்க், Nim Bark.) செய்கை.—சங்கோசன பலகாரி, முறை வியாதிரோதி. உபயோகம்.—சீதசுரமுதலியவைகளுக்கு உபயோகப்பட்டுவருகிறது. மாத்திரை.—பட்டையின் தூளில் 1-டிராம் வீதம் சுரம் விட்டிருக்கிறபோது தினத்துக்கு 3-4-ஆவர்த்தி கொடுக்கலாம். Astringent, tonic, antiperiodic. Use.—In ague debility.

வேப்பம்பட்டைக்கியாழம்.—(டிகாக்ஷன் ஆவ் நிம் பார்க் Decotion of Nim Bark. Deçoctum azadirachtæ.) செய்முறை பட்டையின் உள்பரணே 2-ஔன்ஸ்; ஜலம் $1\frac{1}{2}$-பைன்ட். 15-நிமிஷம் காச்சி சூடாயிருக்கும்பொழுதே வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை $1\frac{1}{2}$-3-ஔன்ஸ் வீதம் சுரம் வருவதற்கு முன்னதாய், 2-மணிநேரத்துக்கொருதரம் கொடுக்கலாம். பலகாரியாக, 1-2-ஔன்ஸ் வீதம், தினத்துக்கு-2-தடவை கொடுக்லாம். வெயில்காலத்தில் இந்தக் கியாழம் சீக்கிரத்தில் கெட்டுப்போகும். ஆகையால் தேவையான அவ்வளவே பிரதிதினமும் செய்துகொள்ள வேண்டியது. (Inner layer of the bark, oz. 2; Water, pint $1\frac{1}{2}$.) Dose.—f oz. 1-2.

வேப்பம்பட்டைபாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் நிம்பார்க், Tincture of Nim Bark. Tinctura azadirachtæ.) செய்முறை. இடித்த பட்டையின் உள்பரணே-$2\frac{1}{2}$-ஔன்ஸ்; புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். மூடி, குலுக்கிக் குலுக்கி 7-நாள் ஊறவைத்து, இறுத்து, பிசைந்து, வடிகட்டி, 1-பைன்ட்க்குத் தேவையான சாராயம் விட்டுக்கொள்ளவும். மாத்திரை —$\frac{1}{2}$-2-டிராம் வீதம் கொடுத்தால் பலம் வரும். (Inner layer of the bark, oz. $2\frac{1}{2}$; Proof Spirit, pint 1.) Dose.—fdrs. $\frac{1}{2}$-2.

வேப்பிலை.—(நீம் லீவ்ஸ், Nim leaves. azadirachta folia.) வேப்பன் இலை உஷ்ணகாரி, இதை அரைத்து போல்டீஸ் செய்து, துஷ்டவிரணங்களுக்குப்போடலாம். ஒருவேளை எரிச்சலெடுத்தால், சமன் அரிசிமாவைச் சேர்த்துக்கொள்ளலாம்.

வேப்பிலை போல்டீஸ்.—(போல்டீஸ் ஆவ் நிம் லீவ்ஸ், Poultice of Nimleaves. Cataplasma Azadirachtæ)செய்முறை.—தேவையான இலையையெடுத்து, வெந்நீர் விட்டு அரைத்துக்கொள்ளவும். இதைச் சொறி சிரங்கு, அம்மை ரணம், இவைகளுக்குத் தடவினால் சவுக்கியமுண்டாகும்.

வேப்பெண்ணெய்.—வேப்பெண்ணெய் (நிம் ஆயல், Nim Oil.) இது ரணங்களை ஆற்றும், வாதரோகங்களுக்கு மேலுக்குப் பூசலாம், கிருமிகளையும் போக்கும்.

வேப்பங்கொழுந்து.—இதனுடன் ஓமம், மிளகு, வசம்பு, பூண்டு, இவைகளைச் சேர்த்தரைத்துக்கொடுத்தால் வயிற்றுப்பொருமல் நீங்கும்.

வேப்பம்பூ.—(Nim flowers.) இதைத் துவையல்செய்து சாப்பிட்டால், பித்தத்தையடக்கும். வேப்பன் ஈர்க்கு சுரகியாழங்களில் சேருகின்றது. வேப்பங்கள்ளுக்கு (Nim Toddy.) தீபனவர்த்தன குணம் உண்டு.

செம்மரம். (பட்டை.)

செம்மரச்செடி.—చేవమాను. சாய்மிட பிப்ரிபியூகா, Soymida febrifuga; Rohun tree.

செம்மரப்பட்டை.—ரோஹன்பார்க், Rohun bark; Soymidæ cortex

செய்கை.—சங்கோசனி, பலகாரி, முறைவியாதி, Astringent, tonic-antiperiodic.

உபயோகம்.— சுரங்கள், துர்ப்பலம், சாவதானப்பட்டபேதி, சீதபேதி முதலிய இன்னம் துவர்ப்பு மருந்துவேண்டிய ரோகங்களுக் கெல்லாம் உபயோகிக்கலாம் In ague, debility, chronic dysentery diarrhœa.

மாத்திரை. பட்டையின் தூளில், 1-டிராம் வீதம் தினத்துக்கு 2-வேளைகொடுக்கலாம். உள்ளுக்குக் கொடுக்க சூரணமே சிறந்தது. dr. 1.

செம்மரப்பட்டைக் கியாழம்.—(டிகாக்ஷன் ஆவ் ரோஹன், Decoction of Rohum; Decoctum soymidæ) செய்முறை.—இடித்த பட்டை $1\frac{1}{2}$-ஔன்ஸ் ஜலம் 1-பைன்ட் 1-பைன்ட். மூடி-15-நிமிஷம் சாச்சி வடிக்கட்டி, 1-பைன்ட் அளவுக்கு தேவையான ஜலம் திப்பியில் விட்டு வடிகட்டிக்கொள்ளவேண்டியது. வாய் கொப்புளிக்கவும், வஸ்திகளுக்கும், ரணங்களுக்கு பீச்சுவதற்கும் இது திவ்விய மருந்தாகின்றது The bark oz $1\frac{1}{2}$; Water, pint 1.)

(NON-OFFICINAL.)

மலைவேம்பு – కొండవేప (மிலிய அஸிடராக், Melia azedarach.)இதற்கு கிருமிகளைப்போக்குகிற குணமுண்டாம். கசப்பும் வெகட்டலுமுடைய இதனுடைய வேரின் பட்டையைக் கியாழமிட்டு (வேரின் பச்சைப்பட்டை 4-ஔன்ஸ் ஜலம் 2-பைன்ட் 1-பைன்ட் அளவுக்குக்காச்சிக் கொள்ளவும்.) குழந்தைக்கு 1-பாலடை வீதம் 3-மணிநேரத்துக் கொருதரம், வாந்தியாவது பேதியாவது காணுகிறவரையில் கொடுக்கவும். அல்லது காலை மாலை இரண்டு நேரம் சிலநாள் கொடுத்து பிறகு பேதிக்குக்கொடுக்கலாம். மாத்திரை அதிகமானல் விஷமிக்கும். பட்டையானது உலர்ந்து விட்டால் வீரியம் குறையுமென்றும், காய்க்கும், இலைக்கும், விஷகுணமுண்டென்றும் கண்டிருக்கின்றது

தேன் மரம் —தூண்மரம். (ஸிட்ரீ லாடுனே, Cedrela toona. Idian mahogany Bastard cedar.) இந்தச் செடியின் பட்டையில் மெத்த துவர்ப்புண்டு. துவர்ப்பு மருந்துகளுக்குப்பதிலாக இதை உபயோகிக்கலாம். சிங்கோனவுக்குபதிலாக இதை கொடுக்கலாமென்று ஒருவருடைய அபிப்பிராயம். உலர்ந்த பட்டையின் தூளில் 1-ஔன்ஸ் வீதம் கியாழமிட்டு ஒரு தினத்துக்குக் கொடுக்கலாம். பட்டையின்தூளை ரணங்களுக்குத் தூவினல் சீழ்நிற்கும்

வாலுழுவையினம். (CELASTRINEÆ.)

(NON-OFFICINAL.)

வாலுழுவை அரிசி.—(ஸிலாஸ்ட்ரஸ் பனிகியூலேடா, Celastrus paniculata.) (மால்கங்நி (ఐనిగ. இதை வாலேயிலிட்டுவடித்து எடுக்கிற வாலுழுவைதயிலத்தை (ஓலியம் நைகிரம். Oleum nigrum) பெரிபெரி (Beri-beri என்னும் ரோகத்துக்கு ஒருவர் கொடுத்ததுண்டு; 10-15 துளி வீதம் தினத்துக்கு-2-தடவை கொடுத்தால் அதிக உஷ்ணம் செய்யும். இதைக்கொடுத்தால் கொஞ்சநேரத்துக்குப்பிறகு வியர்வைபிறக்கும். சிலருக்கு இதனல் சவுக்கியமுண்டாயிற்று, சிலருக்கு ஒன்றும் காணவில்லே. வியாதி ஆரம்பத்தில் கொடுத்தால், ஒரு வேளை வியாதியைக் கேழ்க்கும்.

கொடிமுந்திரி இனம். (AMPELIDEÆ.)

கொடிமுந்திரிகை

பிரதிபதங்கள்.—திராக்ஷப்பழம் முந்திரிங்கா. ద్రాక్షపండు திராக்ஷ செடி. வைடிஸ் வைநிபிரா, Vitis vinitra, The Grape Vine.

விவரணம்—கொடிமுந்திரிப் பழத்தை ஆரோக்கியத்துக்குச் சாப்பிடுகிறதுண்டு. உலர்ந்த பழத்துக்கு, திராக்ஷப்பழ வத்தல் ரேஸின்ஸ், Raisins, யூவி Uvæ.) என்று பேர். நல்ல வாசனையாய் இனிப்பாய் இருக்கும், அரோசமுடையவர்களுக்கும், நோயிற்றெழுந் தோர்களுக்கும் கொடுக்கலாம். ஸினிக்தகாரி. இனிப்புக்காக மருந்துகளோடு முக்கியமாய் சேர்க்கப்படும்.

திராக்ஷ உப்பின் புளிப்பு.—(டார்டாரிக் ஆஸிட், Tartaric acid; அஸிடம் டார்டாரிகம், Acidum tartaricum.) திராக்ஷரஸம் புளித்து நுரைக்கும் போது, ஒருவித உப்பு அடியில்படியும், அதற்கு, திராக்ஷஉப்பு (Acid Tartrate of Potash) என்று பேர். அந்த திராக்ஷ உப்பிலிருந்து, ஷை உப்பை சேகரிக்கப்படுகின்றது. இந்த உப்பானது மெத்த புளிப்பாயிருக்கும், ஜலத்திலும் சாராயத்திலும் கரையும். செய்கை.—சீதளகாரி சுரங்களுக்கு குடிநீர்செய்ய, ஜம்பிரலவணம் சேர்ப்பதற்கு பதிலாய், இதைச் சேர்த்துக்கொள்ளப்படும். முக்கியமாய் பொங்குநீர் செய்வதற்கு, இது உபயோகம்.—

20-கிறேன் திராக்ஷ உப்பின் புளிப்புக்கு வேண்டிய உப்புகளின் நிறை.
27-கிறேன் பைகார் பொனேட் ஆவ் போடாஷ்
22- ,, கார்பொனேட் ஆவ் போடாஷ்.
$15\frac{1}{2}$,, ஸஸ்க்கு விகார்பொனேட் ஆவ் அம்மோனியா.
$38\frac{1}{2}$,, கார்பொனேட் ஆவ் ஸோடா.
22- ,, பைகார்பொனேட் ஆவ் ஸோடா,

ஷை பொங்குநீர்கள் தாகத்தைத்தணிக்கும். அன்னசயத்திலிருக்கிற கார்போனிக் ஆஸிட் வாயுவை வெளிப்படுத்திவிடுவதால், குமட்டலும், வாந்தியும் நிற்கும். மாத்திரை—10-30-கிறேன், கொடுக்கலாம். Action.—Refrigerant Dose.—10-30.

திராக்ஷ ரஸத்திலிருந்து, ஆல்கோஹால், ஒயின், காடி இவைகள் உண்டா கின்றன.

மாங்காய் இனம். (ANACARDIACEÆ.)

ரூமிமஸ்தகி. (ரோஜனம்.)

ரூமிமஸ்தகிச்செடி.—பிஸ்டேஷிய லென்டிஸ்கஸ், Pistacia lentiscus. The Mastich Tree.

ரூமிமஸ்தகி.—மாஸ்டிச், Mastiche. Mastich.

விவரணம்.—செடியைக் கீறியெடுக்கிற ரோஜன இனத்தைச் சேர்ந்த இந்த பதார்த்தம் உருண்டு, சிறிய மணிகளாய் மஞ்சட் சாயலாய், தூளாகிற தாய், பிசுபிசுப்புள்ளதாய் இருக்கும்; மென்றால் மிருதுவாகிவிடும்.

செய்கை.—உஷ்ணகாரி, மூத்திரவர்த்தினி. Stimulant, diuretic.

உபயோகம்.—இதை உள்ளுக்குக்கொடுப்பது அரிது; ஜலத்திலிட்டுக் காய்ச்சி, அந்த ஜலத்தைக் குழந்தைகளுக்கு, பேதிகட்ட கொடுக்க உதவு மென்று கண்டிக்கின்றது. இதை, சொத்தப்பல்லில் வைத்து அடைத்தால், வேதனைதணியும். பட்டாணிப்பெண்கள், தாஸனப்பொடியோடு சேர்க்கி றார்கள். தூபமிட உபயோகிக்கலாம். ஹிந்துகள் இதை சிலாகித்துப்பேசி சாலமிசிரியோடுசேர்த்து, தாது புஷ்டிக்குக் கொடுப்பதுண்டு.

மாத்திரை —10 - 30 - கிறேன் வீதம் கொடுக்கலாம். grs. 10-30.

(Non-officinal.)

மாமரம்.—మామిడిచెట్టు. (மான்ஜிபிர இன்டிக, Mangifera Indica. மான்கொட்ரி, Mango tree.) மாம்பழம். மான்கோ, Mango. இதில் பலசாதிகளுண்டு. உப்புலிட்ட காயும், பிஞ்சும், நல்ல ருசியாயிருக்கும், அரோசகத்தை நீக்கும். காயை சட்னி (Bengal Chatney) செய்துகொண் டால் மெத்த ருசியாயிருக்கும். மாங்கொட்டைப் பருப்பு தூள்செய்து, 20-30-கிறேன் வீதம் கொடுத்தால், கிமிப்பூச்சிகள் நாசமடையும். இதில் காலிக் ஆஸிட் என்னும் துவர்ப்பு அதிகமாய் இருப்பதால், ரத்தமூலத்துக் கும், பெரும்பாடுக்கும் கொடுக்கலாம், வேரின் பட்டையைக் கியாழமிட்டு சீதபேதிக்குக்கொடுத்தால் நலந்தரும்.

முந்திரிச்செடி.—ముంతమామిడి (அனகார்ட்டியம் ஆக்ஸிடேன்டேலி, Anacardium occidentale, Cashew tree.) இதின் பிசினியில் பலமில்லை. கொட்டையின் பால், மேலே பட்டால் புண்ணாகும், ஊதலைப்பிறப்பிக்கும்; உபயோகப்படுத்தலாகாது. முந்திரிப்பருப்பின் உபயோகம் சகலருக்கும், பிரசித்தமாய் தெரியும், அதின் தயிலத்தை மருந்துகளுக்கு உபயோகிக்க லாம். பழரஸத்தை வடித்து சாராய மெடுப்பதுண்டு; அதை வேறு சாரா யங்களுக்குப் பதிலாக உபயோகிக்கலாம்.

சேராங்கொட்டை மரம்.—சேராங்கொட்டை, భల్లాతకి, జీడిగింజ, (ஸெமிகாரபஸ் அனெகார்டியம். Semecarpus anacardium. மார்கிங்நட் ட்ரி, Marking-nut tree.) வண்ணார், துணிகளுக்கு அடையாளம்போடுகிற

இந்தப்பால் கெட்டது, மேலே பட்டால் புண்ணாகும்; இதைப்போட்டு, ஆறாதவிரணம் உண்டாகி இறந்துபோனதும் உண்டு, இதின் வாடைபட்டாலும் முகம் வீங்கும், தேகத்தில் நீர் உண்டாகும், வெகு பத்திரமாய் கையாடவேண்டியது. இதைபோட்டுப் புண்ணாக்கிற வழக்கத்தையும், மஹாபல்லாதகி, இடிபல்லாதகி என்னும் லேக்கியங்கள், பல்லாதகி கிரதங்கள் ஆகிய இவைகளைக்கொடுக்கிற வழக்கத்தையும் இப்போதே நிறுத்திவிட்டால் உத்தமம். கருவை அழிக்க, கருப்பையின்வாயில், சேங்கொட்டையைக் கசக்கி ஸ்திரீகள் வைப்பதுமுண்டு சேங்கொட்டைப் பாலால் காணுகிற வீக்கத்துக்கும், சுரத்துக்கும் உப்பினங்களைக்கொடுத்து, மேலுக்கு வங்க ஜெய நீரை (Liquor Plumbi.) தடவி கண்டிக்கவேண்டியது.

ஒதியன்.—ஒதிமரம். (ஒடினு உடியர், Odina Wodier.) ஒதியன்பட்டை, சங்கோசனகாரி, கஷாயமிட்டு, ரணங்களுக்குத் துவாலைப் போடலாம்; வாய்ரணத்துக்கு, வாயிலிட்டு கொப்புளிக்கலாம். ஒதியன் பிசினிக்கு துவர்ப்புகுணமுண்டு.

கர்க்கடகசிங்கி. கடுக்காபூ. కరకాయ పూవ్వు. (ரஸ் சக்சிடேனிய, Rhus succeddanea.) கிளைகளில் புழுக்கள் துளைத்து உண்டாகிற இந்தச் செடியின் பதார்த்தத்துக்கு துவர்போடுகூடிய பலகாரி குணமுண்டு.

முருங்கையினம். (MORINGEÆ.)

(NON-OFFICINAL.)

முருங்கைவேர்.—ములగ వేరు. (ஹார்ஷ ராடிஷ், Horse-Radish.) முருங்கைச்செடி. (மொரிங்கா டெரிகாஸ்பர்மா, Moringa pterygosperma.) இந்த வேரை அரைத்து மேலுக்குப் போட்டால், சருமம் சிவக்கும், பொள்ளும். அதிக எரிச்சலைத் தருவதால், தனிப்பட உபயோகிக்கிறதில்லை. இதின் ரசத்தை கடுகுடன் சேர்த்து போல்டீஸ் செய்தும் போட்டால், கடுகின் வீரியம் அதிகப்படும். ரசத்தை உள்ளுக்குக் கொடுத்தால், உஷ்ணிக்கும், மூத்திரத்தை வர்த்திக்கும். வேரின் கஷாயத்தைத் தொண்டை கம்மலுக்குக் கொப்புளிக்கலாம்; பாரிசவாதம், சீதசுரம், கார்கைவலி, சூதகசந்நி இவைகளுக்குக் கொடுப்பதுண்டு. வித்திலிருந்து தயிலமெடுப்பதுண்டு. முருங்கிலை சமையலுக்கு நேர்த்தியானது, மலம் உதையும்; கண்ணேவுக்குக் கொழுந்தை ஒத்திக்கொள்ளச் செய்வதுண்டு. பட்டை, பிசினி இவைகளையும் மருந்துகளுக்குபயோகிப்பது நாட்டுவழக்கம். பூவைப் பாலில் காய்ச்சி, இந்திரிய புஷ்டிக்குக்கொடுப்பதுண்டு.

புளியமரயினம். (LEGUMINOSÆ.)

சீமைவிளாம்பிசின்

சீமைவிளாம்பிசினிச் செடி.—அக்கேவிய வீரா, Acacia vera Gum Arabic Tree.

சீமைவிளாம்பிசின்—సీమ వెలగబంక. அக்கேவியி கம்மை, Acaciæ Gummi, Gum Acacia; கம் அராபிக், Gum Arabic.

விவரணம்.—அரேபியா, ஆப்ரிகா தேசங்களில் விளைகிற பலஜாதி செடிகளிலிருந்த எடுக்கிற இந்த பிசினிக்கு வாசனையும் ருசியுமில்லை; வெள்ளை

மஞ்சள் நிறமான கட்டிகளாயிருக்கும், எளிதில் தூளாகும், புட்டால் அந்த இடம் பளபளப்பாய் இருக்கும், ஜலத்தில் கரையும், சாராயத்தில் கரையாது. இதனோடு வேறு பிசினிகளைக் கலந்து விற்பதுண்டு. கறுவேலன்பிசினி இதற்குத் தாழ்ந்த இனமாய் இருந்தபோதிலும், விளாம்பிசினிக்குப் பதிலாகச் சேர்த்துகொள்ளலாம்.

செய்கை.—ஸினிக்தகாரி. Demulcent, emollient.

உபயோகம்.—இருமல், மூத்திரக்கிரிச்சிரம், பேதி முதலியவைகளுக்குதவும். முக்கியமாய் மருந்துகளுக்கு அனுபானமாயும், ஜலத்தில் மிஸ்ரமமாகாத மருந்துகளை மிஸ்ரமிக்கவும், உபயோகப்படுத்தப்படும்; இதைச்சேர்த்தால் எளிதில் மாத்திரைரூபமாய்ச்செய்யலாம் ஒரு துண்டை வாயிலிட்டு அடக்கி ரஸத்தை விழுங்கிக்கொண்டுவந்தால், வரக்ஷி இருமலும் நெஞ்செரிவும் நீங்கும். வங்கஉப்பையும், அயத்திராவகத்தையும், இதனோடு சேர்க்கலாகாது. In cough, stranguary, diarrhœa.

சீமைவிளாம்பிசினிப்பாகு.—மியூஸிலேஜ் ஆவ் கம் அக்கேஸியா, Mucilage of Gum Acacia. மியூஸிலேகோ அக்கேஸியீ, Mucilago Acacia செய்முறை —விளாம்பிசினிதூள், 4-ஔன்ஸ்; தீநீர் 6-ஔன்ஸ் இவைகளை மண்பாண்டத்திலிட்டு, மூடி பிசின் கரைகிறவரையில், அடிக்கடி கிளறி தேவையானல், சல்லாத்துணியில் வடிகட்டிக் கொள்ளவும். மாத்திரை.—தினத்துக்கு, 3-6 ஔன்ஸ் வீதமாவது, அல்லது அவஸியமானபோதெல்லாம் ஆவது எடுத்துக்கொள்ளலாம். (Gum, oz 4; Water, oz. 6,) DOSE.—oz. 3-6.

காசுக்கட்டி

காசுக்கட்டிச்செடி.— ஒதலைமரம். ఖాదిరము అక్కేషియ காடிகியு Acacia Catechu. The Catechu Acacia.

காசுக்கட்டி.—ப்ளாக் காடிகியூ, Black Catechu. காடிகியு நைகிரம், Catechu Nigrum.

விவரணம்.—இது கட்டிகளாய், சிலவேளை யிலையால் சுத்தியிருக்கும்; கறுத்து பளப்பளப்போடு பளுவாய், கசப்புடன் மெத்த துவர்ப்புள்ளதாயிருக்கும். நமது கடைகளில் வேறுஜாதி காசுக்கட்டிகளும் உண்டு.

செய்கை ஸ்ங்கோசனி Asringent.

உபயோகம்.—அதிசாரம், சீதபேதி, அக்ஷம், பல்லரணை, இருமல், தொண்டைக்கம்மல், பிரமேகம், மூலக்காம்பு வெடிப்பு, ஆகிய இவைகளுக்கு உபயோகிக்கலாம். ஸ்திரீகளுக்கு வெள்ளை விழுதலுக்கும், தூர்ப்பலபெரும்பாட்டுக்கும் வஸ்திசெய்து அடிக்கலாம். In diarrhœa, ptyalism, relaxation of the uvula; leucorrhœa, menorrhagia.

மாத்திரை.—10-20-கிறேன், சூரணஞ்செய்து கொடுக்கலாம், ஆனல் அப்படிக்கொடுப்பது அரிது. grs. 10-20.

சீதபேதிக்கு, காசுக்கட்டியுடன், கருவாப்பட்டையைச்சேர்த்து தேனில் குழப்பி கொடுக்கலாம். வாயிலிட்டடக்கி ரஸத்தை ஊரச்செய்தால் வாய் ரணம் நீங்கும். மூலக்காம்பு ரணத்தைச் சுத்தி செய்து, காசுக்கட்டித் தூளைத் தூவினல், அது குணமாகும்.

காசுக்கட்டி வெந்நீர் ஊறல் கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் காடிகியூ. Infusion of Catechu இன்பியூசம் காடிகியூ. Infusum Catechu.) செய்முறை.—காசுக்கட்டித்தூள், 160-கிறேன்; கருவாப்பட்டைத்தூள், 30கிறேன்; கொதிக்கிறவெந்நீர், 10-ஔன்ஸ். மூடி ½-மணிநேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-2-ஔன்ஸ். (Catechu, grs. 160 Cinnamon bark, grs. 30; Boiling water, foz. 10.) Dose.—foz. 1-2.

காசுக்கட்டிப் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் காடிகியூ. Tincture of Catechu. டிங்சுரா காடிகியூ, Tinctura Catechu.) செய்முறை.—காசுக்கட்டித்தூள். 2½-ஔன்ஸ்; கருவாப்பட்டைத்தூள், 1-ஔன்ஸ்; புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். இவைகளை மூடி, 7-நாள் ஊறவைத்து, பிசைந்து, இறுத்து, வடிகட்டிக்கொண்டு, 1-பைன்ட் அளவுக்குத்தேவையான சாராயத்தைச் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—½-2-திராம். இதை, சீமைச்சுண்ணம்புக் குழம்பு முதலிய துவர்ப்பு மருந்துகளுடன் சேர்த்துக்கொடுக்க நல்லமருந்து. (Catechu, oz. 2½; Cinnamon bark, oz. 1; Proof Spirit, pint 1.) Dose.—½-2-fdrs.

கலவை காசுக்கட்டிச் சூரணம்.—(கம்பௌன்பவுடர் ஆவ் காடிகியூ, Compound powder of Catechu. பல்வஸ்காடிகியூ கம்பாஸிடஸ், Pulvis Catechu Compositus.) மாத்திரை.—15-30-கிறேன். அதிசார பேதிக்குக்கொடுக்க இது நல்ல மருந்து. Dose.—grs. 15-30.

குங்கிலியத்தயிலம்

குங்கிலியத்தயிலச்செடி —கொபேபிரா மல்டிஜுகா, Copaifera multijuga.

குங்கிலியத்தயிலம்.—కొపైల తైలము, கொபேபா, Copaiba; கோபேவா, Copaiva.

விவரணம்.—அமெரிகாதேசத்தில் விளைகிற மரத்திலிருந்து வடிகிற ஓர்வித ரோஜனம்; துல்லியமாய், இளமஞ்சள் நிறமாய், எண்ணெய்போல் ஓர்வித வாசனையால், கசப்பாய், கறகறப்புடன் வெதுட்டலையுடையதாய் இருக்கும்.

செய்கை.—மூத்திரவர்த்தனி. Diuretic.

உபயோகம்.—இது, முக்கியமாய் பிரமேகத்துக்குக்கொடுக்க நல்ல மருந்து; ரோக ஆரம்பத்தில் கொடுத்தால் சீக்கிரம் கண்டிக்கும்; தந்திமேகத்துக்கு இதை மெழுகுதுணி சிலாக்கில் (Bougie) தடவி, நீர்த்தாரையில் விட்டுக்கொண்டுவந்தால், நாள்பட்டிருந்தபோதிலும் அதைசொஸ்தப்படுத்தும். மேகவாதம். மூலம், நாள்பட்ட இருமல், மாதர்களுக்குக்காணுகிற வெள்ளை முதலியவைகளுக்குங் கொடுத்து குணம் கண்டதுண்டு. In gonorrhœa, leucorrhœa, hœmorrhoids, chronic cystitis, chronic bronchitis.

மாத்திரை.—20-60-மினம் அளவுக்கு விளாம்பிசினிப் பாகிலாவது ஜலத்திலாவது விட்டு, தினத்துக்கு-2-3-ஆவர்த்தி சாப்பிடலாம். பாலும், காப்பியும்கூட நல்ல அனுபானமாகும். ஜிலடீன் (Gelatine) என்னும் பசைக்குள்வைத்து, மாத்திரைசெய்திருப்பதற்கு, கொபேபா காப்ஸூல்ஸ், (Copaiba capsules) என்று பேர். Dose.—Minims, 20-60.

குங்கிலியத்தயிலத்தின் தயிலம்.—ஆயல் ஆவ் கொபேவா, Oil of Copaiva ; ஒலியம் கொபேபி, Oleum Cupaibæ) குங்கிலியத் தயிலத்தை வடித்து, இதை எடுக்கப்படும். மாத்திரை. 5-20-மினம் வீதம் தினத்துக்கு 2-3-ஆவர்த்தி கொடுக்கலாம் Dose.—Minims, 5-20.

புளி.

புளியமரம். చింతచెట్టు சிம்ஞ்ஜே. டமரின்டஸ் இன்டிகா, Tamarindus Indica. The Tamarind tree.

புளி. చింతచెట్టు. டமரின்ட் பல்ப், Tamarind pulp.

விவாரணம்.—இது எல்லோருக்கும் பிரசித்தமாய்த் தெரிந்த பதார்த்தம். இதில் சிட்ரிக் ஆஸிட், டார்டாரிக் ஆசிட் என்னும் புளிப்பு இருப்பதால், புளிப்புச்சுவையைத் தருகின்றது.

செய்கை; உபயோகம்.—லகுவிரேசனி, சீதளகாரி, சீதபேதி, சுரம், இவைகளுக்குக் கொடுக்கலாம், 2-ஔன்ஸ் புளியை, $1\frac{1}{2}$-பைன்ட்பாலி விட்டு காய்ச்சி வடிக்கட்டி, சுரங்களுக்குக் கொடுத்தால். தாகமடங்கும், வாய்க்கினிப்பாகவு மிருக்கும். புளியைக்கரைத்து, சருக்கரைச் சேர்த்து, சீதபேதிக்குக் கொடுத்தால் குணமாகுமென்று கண்டிருக்கிறது. Laxative, refrigerant.

சரக்கொன்றைப் புளி

பிரதிபதங்கள். கொன்றை; கொண்ணே.

கொன்றைச்செடி. రేలచెట్టు. காஷியபிஸ்டியுலப், Cassia Fistula; Purging Cassia.

சரக்கொன்றைப்புளி. రేలపండు. காஷியபலப், Cassia pulp; காஷியிபல்பா, Cassiæ Pulpa

விவரணம்.—இதின் காயும் புளியும் சகலருக்கும் பிரசித்தமாய்தெரிந்த சரக்குகள்.

சுத்திசெய்த சரக்கொன்றைப்புளி. (பிரிபேர்ட் காஷியா, prepared Cassia; காஷிய பிரிபெரேடா, Cassia preparata.) செய்முறை.—1-பௌன் காய்களைச் சதைத்து, அது முழுகும்படி ஜலம்விட்டு அடிக்கடிக் குலுக்கி 6-மணி நேரம் ஊரவைத்து, ரோமச்சல்லடையில் வடிகட்டி, லேகியபத்துக்குச் சுண்ட வைத்துகொள்ளவும்.

செய்கை. குறைந்தமாத்திரையில் லகுவிரேசனியாகும், அதிகமானல் மெத்த பேதியாகும். தனியாகக்கொண்டால் வாயுசெய்து வயிறு கடுக்கும், ஆகையால் திரிகடுகுடன் சேர்த்துக்கொடுக்கவேண்டியது. இதனல் சில வேளை மூத்திரம் கறுத்திருக்கும். Laxative, purgative.

உபயோகம்.—மலபந்தம். In constipation.

மாத்திரை.—1-2-டிராம் கொடுத்தால், மலம் இளகிப்போகும்; 1-2-ஔன்ஸ் கொடுத்தால்பேதியாகும். drs. 1-2 laxative—oz. 1-2 purgative.

நிலவாகை (இலை.)

பிரதிபதங்கள்.— நிலஆவரை, சூரத்து நிலஆவரை, நிலாவிரை, சுன்னமுக்கி.

நிலவகைச்செடி. இன்டியன் ஆர்டின்னைவல்லி ஸென்னயிளான்ட், Indian or Tinnevelly Senna Plant. காஷியலான்ஸியோ லேடா, Cassia Lanceolata.

நிலவாகை. నేలతంగేడు. ஸென்னலீவ்ஸ், Senna leaves.

விவரணம்—இந்தச்சரக்கு பலதேசங்களில் விளைகின்றது, ரூபத்தில் வித்தியாசப்படும்; திருநெல்வேலியில் விளைகிற சரக்கு சிரேஷ்டமானது, அது 2-அங்குலம் நீண்டு கூர்மையாய், பச்சையாய் இருக்கும்; நிலவாகைக்குக் கசப்பும் வெகுட்டலுமுண்டு.

செய்கை.—விரேசனி. குழந்தைகள், வயதுசென்றவர்கள், மெலிந்த தேகமுடைய ஸ்திரீகள் ஆகிய இவைகளுக்குப் பேதிக்குக்கொடுக்க இது நல்ல மருந்து. Purgative

உபயோகம்.—மலச்சிக்க முதலியவைகளுக்குச் கொடுக்க பேர்போனது. In constipation.

மாத்திரை.—½-2-டிராம் கொடுக்கலாம். சூர்ணத்துடன் திராக்ஷ உப்பு, சுக்குத்தூள், சருக்கரை முதலியவைகளைச் சேர்த்து கொடுக்கலாம், ஆனால் கஷாயமே தகுதியானது

நிலவாகை வெந்நீர் ஊறல்கஷாயம். (இன்பியூஷன் ஆவ் ஸென்னு, Infusion of Senna ; இன்பியூஸம் ஸென்னீ, Infusum Sennæ.) செய்முறை.—நிலவாகை, 1-ஔன்ஸ் ; சுக்குத்தூள், 30-கிறேன் ; வெந்நீர், 10-ஔன்ஸ். இவைகளை மூடி, 1-மணிநேரம் ஊறவைத்து வடிகட்டிகொள்ளவும். மாத்திரை.—1-2 ஔன்ஸ் கொடுக்கலாம். இந்தக்கஷாயத்துடன் சீமையிந்துப்பு சேர்த்துக்கொடுத்தால், வயிறுகடுக்காமல் பேதி செவ்வையாய் ஆகும் ; அந்த முறைக்கு பிளாக்டோஸ் (Black dose) என்றுபேர். சூடான கஷாயத்துடன் பாலும் சருக்கரையும் சேர்த்து சாப்பிட்டால், இனிப்பாய் இருக்கும் ; அப்படிசெய்து, சுலபமாய் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். (Senna, oz. 1 ; Ginger, grs 30 ; Boiling water, foz. 10.) Dose.—oz. 1-2.

நிலவாகைப் பாவனத் திரவம். (டிங்சர் ஆவ் ஸென்னு, Tinctur of Senna. டிங்சுரா ஸென்னீ, Tinctura Sennæ செய்முறை.—நிலவாகை 2½-ஔன்ஸ் ; நொறுக்கிய கேக்விதை, ½-ஔன்ஸ் ; நொருக்கிய கொத்துமல்லிவிதை, ½-ஔன்ஸ் புரூவ்ஸ் பிரிட், 1-பையின்ட். இவைகளை ஊறவைத்து, பெர்க்கொலேடரில்விட்டு, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-3-டிராம் கொடுக்கலாம். உப்புமுதலிய பேதிமருந்துகளோடு சேர்த்துக் கொடுக்க இது நல்லமருந்து. (Senna, oz 2½ ; Caraway, oz. ½ ; Coriander, oz. ½ ; Proof Spirit, pint 1.) Dose 1-3 fdrs.

நிலவாகை லேகியம். (கன்பெக்ஷன் ஆவ் ஸென்னு, Confection of Senna ; கன்பெக்ஷியோ ஸென்னீ, Confectio Sennæ) செய்முறை.

நிலவாகைச்சூரணம், 7-ஔன்ஸ் ; கொத்துமல்லிச்சூரணம், 3-ஔன்ஸ் ; சீமை அத்திப்பழம் 12-ஔன்ஸ் ; புளி 9-ஔன்ஸ் ; சரக்கொன்றைப்புளி; 9-ஔன்ஸ் ; ஆல்பகோரா, 6-ஔன்ஸ் ; அதிமதுரச்சத்து, $\frac{3}{4}$; ஔன்ஸ், பஞ்சதாரை 30-ஔன்ஸ் ; ஜலம் தேவையானது. 24-ஔன்ஸ் ஜலத்தில், அத்திப்பழத்தையும், ஆல்பகோராவையும் போட்டு மூடி, 4-மணிநேரம் சுட வைத்து பிறகு, 24-ஔன்ஸ்க்குத் தேவையான ஜலம்விட்டு புளி, சரக் கொன்றைப் புளி இவைகளைப்போட்டு 2-மணி நேரம் ஊறவைத்து, அவைகளை ரோமச்சல்லடையில் போட்டுத்தேய்த்து, விரைகளையும் திப்பியையும் நீக்கிவிட்டு, குழம்பில் பஞ்சதாரையும், அதிமதுரப் பாலையும் போட்டு சுடவைத்து கரைத்து, பாகு சூடாயிருக்கும் போதே நிலவாகைச் சூரணத்தையும், கொத்துமல்லிவிதைச் சூரணத்தையும் ஒன்று கச் சேர்த்து, அதைக்கொஞ்சங்கொஞ்சமாகக் கலந்து, மிஸ்ரமித்துக் கொள்ளவும். லேகியமானது, 75-ஔன்ஸ் எடை இருக்கவேண்டியது மாத்திரை 1-2 டிராம். (Senna, oz 7 ; Coriander, oz 3; Fig. oz. 12; Tamarind oz. 9. Cassia, oz. 9; Prunes, oz 6; Extract of Liquorice, oz. $\frac{3}{4}$; Rifined Sugar, oz. 30 ; Water, oz 24.) Dose.—1-2-drs.

சாய மரச்சக்கை

பிரதிபதங்கள். வர்த்தங்கி சக்கை.

சாயமரச்செடி. ஹிமொடாக்ஸிலன் காம்பிசியேனம், Hæmatoxylon Campechianum ; லாக் உட்ட்ரீ, Logwood tree.

சாயமரச்சக்கை,—லாக் உட், Logwood

விவரணம்,—இந்தச்சக்கை மேலேகறுத்து உள்ளே சிவப்பாயும் நல்ல மணமாயும் தித்திப்பாயுமிருக்கும் வாயிலிட்டு மென்றால் உமிழ்நீர் சிவந்து விடும். இதில் டானிக் ஆஸிட் என்னும் துவர்ப்புண்டு.

செய்கை.—ஸங்கோசனி, பலகாரி. Astringent, tonic.

உபயோகம்.—நாள்பட்டபேதிகளுக்குக் கொடுக்கலாம். ஸதிரீகளுக் குச் காணுகிற கர்ப்பமேகத்துக்கு, வஸ்திசெய்து பிரயோகிக்கலாம். In chronic diarrhœa, leucorrhœa.

சாயச்சக்கையின் கஷாயம்.— (டிகாக்ஷன் ஆவ் லாக் உட், Decoction of Logwood டிகாக்டம்ஹிமொடாக்ஸிலை, Decoctum Hæmatoxyli) செய்முறை சக்கை 1-ஔன்ஸ்; கருவாபட்டைபொடி, 60-கிறேன்; ஜலம் 1-பைன்ட். 10-நிமிஷம் காச்சி, கருவாப்பட்டையைக் கடைசியில்போட்டு வடிகட்டி, 1-பைன்ட் அளவுக்குத்தேவையான ஜலம்திப்பியில்விட்டு சேகரித் துக்கொள்ளவும். மாத்திரை.—1-2- ஔன்ஸ் கொடுக்கலாம். (Wood, oz. 1; Cinnamon, grs. 60; Water, Pint 1,) Dose.—foz. 1-2.

சாயச் சக்கையின் சத்து.—(எகிஸ்டிராக்ட் ஆவ் லாக்உட், Extract of Logwood) மாத்திரை.-10-30-கிறேன் கொடுக்கலாம். Dose —grs. 10-30.

கழற்சி வித்து

பிரதிபதங்கள்.—களிச்சி, வச்சிரபீஜம், கெச்சக்காய். గచ్చకాయ.

கழற்சிக்கொடி. விஸல் பீனியாபாண்டு ஸெல்லா, Cæsalpinia, (Guilandina) Bonducella; பண்டக் Bonduc.

கழற்சிவித்து. பண்டக்ஸீட்ஸ், Bonduc seeds; பாண்டுஸெல்லி ஸிமைனு, Bonducellæ Semina.

செய்கை.—பலகாரி, முறைவியாதி ரோதி. Tonic Antiperiodic.

உபயோகம்.—சீதசுரம், துர்பலம் இவைகளுக்கு உபயோகப்படுத்திவருகின்றது. In ague, debility.

மாத்திரை.—10-15-கிறேன்வீதம், தினத்துக்கு இரண்டுதடவைகொடுக்கலாம் Dose.—10-15 grains.

கலவைகழற்சி வித்துச்சூரணம்.—(கம்பவுண்ட் பவுடர் ஆவ் பண்டக் Comqound powder of Bonduc பல்விஸ் பண்டுஸெல்லி கம்பாஸிடஸ், Pulvis Bonducellæ Compositus). செய்முறை.—களிச்சிப் பருப்பின் தூள், 1-ஔன்ஸ; முளகுத்தூள் 1-ஔன்ஸ். இவைகளைச் செவ்வையாக மிஸ்ரமித்து, காற்றுப் புகாதபுட்டியிலிட்டு பத்திரப்படுத்திக் கொள்ளவும். மாத்திரை.—15-30 கிறேன் வீதம் திரிகாலக்கிரமமாய்க் கொடுக்கலாம் (Bonduc seeds, Black pepper, of each oz. 1.) Dose.—15-30-grains.

பாலஸம் ஆவ் பிரு

ஷை நயிலத்தின் செடி. மைராக்ஸிலன், பெரீீ, Myroxylon Pereiræ. பால்ஸம் ஆவ்பிரு ட்ரீ, Balsam of Peru ; Tree.

பால்ஸம் ஆவ்பிரு, Balsam of Peru ; பால்ஸம் பிருவியானம். Balsamum Peruvianum.

விவரணம்.—அமரிகாதேசத்தில் விளைகிற செடியிலிருந்து எடுக்கிற ஓர்வித குங்கிலியத்தயிலம் ; இது வெல்லப் பாகைபோல் கறுப்பும் சிவப்பும் கலந்த வன்னமாம், ஓர் விதசாம்பிராணி வாசனையாய் கசப்புள்ள தாய் இருக்கும்.

செய்கை.—உஷ்ணகாரி, கபஹாரி Stimulant and expectorant.

உபயோகம்.—அடியில் கண்டிருக்கும் பால்ஸம் ஆவ்டொலு என்னும் சரக்கை உபயோகிக்கிற வியாதிகளுக்கு, இதையும் உபயோகிக்கலாம், ஆனால் அதிகமாய் கொடுப்பதில்லை இதன் ஆவியை வாயால் ஆக்கிராணித்தால் கபரோகங்கள் குணமாகும். நூதன காயங்களுக்கும் ஆராத விரணங்களுக்கும், மூலைகாம்பு விரணத்துக்கும், சிழ்காதுக்கும், மேலே தடவலாம். Use as Balsam of Tolu.

மாத்திரை.— 10-15- மினிம் வீதம் குழம்பு செய்து கொடுக்கலாம், Dose.—10-15-minims.

பால்ஸம் ஆவ் டொலு

ஷை நயிலத்தின் செடி. மைராக்ஸிலன் டொலூபிரம், Myroxylon Toluiferum. பால்சம் ஆவ் டொலு ட்ரீ, Balsam of Tolu tree.

பால்சம் ஆவ் டோலு என்னும் ரோஜனம், Balsam of Tolu, பால்ஸமம் டொலுடேனம், Balsamum tolutanum.

விவரணம்.—நியூ கிரெனெடா (New Granada) என்னும் தேசத்தில் விளைகிற செடியிலிருந்து எடுக்கிற இந்தச் சரக்கு, நல்ல வாசனையாய், சிவப்பும் மஞ்சளுங் கலந்தவன்மையாவது, அல்லது ஊதாநிறமாயாவது இருக்கும்; மரத்தைக்கீறி எடுக்கிற இந்தச்சரக்கு எப்போதும் உலர்ந்து கட்டியாய் இருக்கும், எளிதில் தூளாகும், சரக்குபுதுசாயிருந்தால், தேனைப்போல இளகலாய் தித்திப்பாயிருக்கும்.

செய்கை.—உஷ்ணகாரி, கபஹாரி. Stimulant, expectorant.

உபயோகம்.—தாபனக்குறிகளில்லாத கபரோகங்களுக்கு, இதைக் கொடுக்கலாம்; இதின் ஆவியை வாயால் ஆக்கிராணித்த போதிலும் நன்மை பிறக்கும். In chronic bronchitis.

மாத்திரை.—10-20-கிறேன் வீதம், விளாம்பிசினி பாகோடுச்சேர்த்து கொடுக்கலாம். grs. 10-20.

டோலு பாவனத்திரவம். (டிங்சர் ஆவ் டொலு, Tincture of Tolu; டிங்சுர டெலு டேனு, Tinctura tolutana.) செய்முறை.—டொலு, $2\frac{1}{2}$-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், தேவையானது. 15-ஔன்ஸ் சாராயத்தில், ஷி சரக்கைப்பேட்டு மூடி, அடிக்கடிக் குலுக்கி, 6-மணி அல்லது, சரக்கு கரைகிற வரையில் ஊறவைத்து வடிக்கட்டி. 1-பையின்ட் அளவுக்குத்தேவையான சாராயத்தைச் சேர்த்து கொள்ளவும் மாத்திரை.—20-40-மினிம். இதை கபஹாரிமருந்துகளோடுச் சேர்த்துக்கொடுக்க நல்ல ஔஷதம். 1-ஔன்ஸில் $54\frac{1}{2}$-கிரேன்டொலூ இருக்கின்றது. (Tolu, oz. $2\frac{1}{2}$; Rectified Spirit, pint.) 1 Dose. 20-40 minims.

டோலு பாணிதம். (ஸிரப் ஆவ் டொலு, Syrup of Tolu; ஸிரபஸ் டொலுடேனஸ், Syrups Tolutanus.) செய்முறை.—டொலு, $1\frac{1}{4}$-ஔன்ஸ்; ஜலம் 1-பையின்ட், அல்லது தேவையானது; பஞ்சதாரை, 2-பௌன். டொலுவைஜலத்திலிட்டு, அடிக்கடி கிளறி $\frac{1}{2}$-மணி சொதிக்கவைத்து, பிறகு தீயைவிட்டிறக்கி 16-ஔன்ஸ் அளவுக்கு வேண்டிய ஜலம் விட்டு, குளிர்ந்தபிறகு வடிகட்டி, அதில் பஞ்சதாரையைச் சேர்த்து ஜலயந்திரத்தில் வைத்து கரைத்துக்கொள்ளவும். இது 3-பவுன் இடையிருக்கவேண்டியது. மாத்திரை.—1. 2-டிராம். (Tolu, oz. $1\frac{1}{4}$; Sugar, lbs. 2; Water, pint 1;) Dose.—fdrs 1-2.

வேங்கைப்பிசின் (பால்.)

பிரதிபதங்கள்.—கருந்தகரை.

வேங்கைமரம்.—டிரோகார்பஸ் மார்சூபியம். Pterocarpus Marsupium. இன்டியன் கைனோட்ரீ. The Indian Kino tree.

வேங்கைப்பிசின். கைனோ, Kino. சீமை காண்டாமிருக ரத்தம். సీమ కాండామృగం నెత్తురు.

விவரணம்.—இது சிறிய கட்டிகளாய் வாசனையில்லாமல் துவர்ப்பாய் இருக்கும். காசுக்கட்டிக் குடைய குணங்களே இதற்குமுண்டு.

செய்கை. ஸங்கோஸனி. Astringent.

உபயோகம்.—காசுக்கட்டியைப்போலவே இதை உபயோகிக்கலாம், ஆனால் குணத்தில் சாந்தமுள்ளது. குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் கொடுக்க நல்லமருந்து. Use, similar to that of Catechu.

மாத்திரை.—10-30-கிறேன். Dose.—10-30 grs.

வேங்கைப் பிசினிப் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் கைனோ, Tincture of Kino. டிங்சுரா கைனோ, Tincture Kino.) செய்முறை.—கைனோ பொடி 2-ஔன்ஸ்; ரெக்டிபைட்சாராயம், 1-பைன்ட். இவைகளை 7-நாள் ஊறவைத்து வடிகட்டி, 1-பையின்ட் அளவுக்கு வேண்டிய சாராயம் சேர்த்துகொள்ளவும். மாத்திரை.—½-2-டிராம். சங்கோசன மருந்துகளோடு சேர்த்துக்கொடுக்க நல்ல ஔஷதம் (Kino, oz. 2; Rectified,sprit pint 1;) Dose.—½-2 fdrs.

கலவை வேங்கைப்பிசினிச் சூரணம். கம்பவுன்ட் கைனோ பவுடர், Compound Kino powder. புல்விஸ் கைனோ கம்பாஸிடஸ், Pulvis Kino Compositus.) செய்முறை.—கைனோ, 3¾-ஔன்ஸ்; அபினித்தூள், ¼-ஔன்ஸ்; கருவாப்பட்டைச் சூர்ணம், 1-ஔன்ஸ் இவைகளை மிஸ்ரமித்து, சல்லடையில் வடிகட்டி. கலுவத்திலிட்டு மெதுவாய் அரைத்துகொள்ளவும். மாத்திரை.-5-20-கிறேன், 20-கிறேன் சூரணத்தில், 1-கிறேன் அபினியுண்டு. பித்தவாந்திக்கும், அஜீரணத்துக்குங் கொடுக்க நல்லஔஷதம் (Kino, oz. 3¾; Dried Opium, oz. ¼; Cinnamon, oz. 1;) Dose—5-20-grs

சிவப்பு சந்தனக்கட்டை. (ரக்தசந்தனம்.) రక్తచందనం అగరుగంధం. சிவப்பு சந்தனக்கடைச் செடி. (டிரோகார்பஸ் ஸான்டெலைனஸ், Pterocarpus Santalinus. Red Sandalwood tree.) சிவப்புச் சந்தனக்கட்டை (ரெட்சான்டால் உட், Red Sandalwood. டிரோகார்பைலிக்னம் Pterocarpic lignum.) மருந்துகளுக்கு சிவப்பு நிறம் கொடுக்க, இதை உபயோகிப்பதுண்டு; இந்திரகோபத்துக்கு பதிலாக இதைச் சேர்த்துக்கொள்ளலாம். இதில் கொஞ்சந் துவர்ப்பு சத்துண்டு.

பூனைக்காலிக்காய்

பிரதிபதங்கள்.—பூனைக்காஞ்சொரி. காஞ்சொரி. పిల్లియడుగు కాయ. దురదగొండి.

பூனைக்காலிச்செடி. மியூகியூனு புரூரி என்ஸ். Mucuna Pruriens.

பூனைக்காலிச்சுணை, மியூகியூனு, Mucuna. கவ்வேஜ், Cowhage.

விவரணம்.—காயானது நீண்டிருக்கும்; அதின்மேலிருக்கிற சுணை தேகத்தில் பட்டால், சகிக்கக்கூடாத தினவுண்டாகும்.

செய்கை.—கிருமிக்னி. Anthelmintic.

உபயோகம்.—திமிர்ப்பூச்சுகளை வெளிப்படுத்த இதைக்கொடுப்பதுண்டு உருண்டைக் கிருமிகளை அதிகமாய் போக்ச்செய்யாது. In worms.

மாத்திரை.—வெல்லப்பாகு, சருக்கரைப்பாகு, தேன், இவைகளில் எதிலாவது காயைத் தூவைத்து, சுரண்டிக் கலந்துகொள்ளவும்; இவ்விதமாய்

காய்களைச்செய்து, லேகிய பதமாக்கிக்கொண்டு அதில், பெரியவர்களுக்கு ஒரு பெரியகரண்டி அளவுக்கும், குழந்தைகளுக்கு தேயிலைக்கரண்டி அளவுக்கும், காலையில் 3-4-நாள் கொடுத்து, ஒரு பிறகு பேதிக்கிக்கொடுத்தால், கிருமிகள் உயிரோடு வெளிக்கு வந்துவிடும். இதின் வேரை கஷாயமிட்டு இருமலுக்குக் கொடுப்பதுண்டு.

புரசன்

பிரதிபதங்கள்.—பலாஸ் முருக்கன். మోదుగచెట్టు.

முருக்கமரம். பியூடியா பிரான் டோஸா, Butea Frondosa Bengal Kinno Tree.

புரசன்பிசினி. பெங்கால் கைநோ, Bengal Kinno.

விவரணம்.—செடியைக்கீறி எடுக்கிற இந்தப்பிசினியானது, வேங்கைப் பிசினியின் குணத்துக்கு ஒத்திருக்கும்; அதற்குப்பதிலாக இதை உபயோகிக்கலாம். அதிசாரம், சீதபேதி இவைகளை நிறுத்தும். புரசன் வித்து.—(Seeds) இது தகடாய் விருத்தமாய் காவிக்கல் நிறமாயிருக்கும். உள்ளுக்குக்கொடுத்தால், கிருமிகளை வெளிப்படுத்திவிடும் வித்தை ஜலத்தில் ஊறவைத்து, தோலைநீக்கி உலர்த்தி தூள்செய்து, அதில் 20-கிறேன் இடைக்கு தினத்துக்கு 3-ஆவர்தி, 3-நாள் தொடர்ச்சி யாய்க் கொடுத்து. 4-ம் நாள் எண்ணெய் பேதிக்கிக்கொடுத்தால், கிருமிகள் கூண்டோடு வெளிப்படும். இதில் சில துர்க்குணங்கள் காண்பதும் உண்டு, ஆகையால் பத்திரமாய் உபயோகிக்கவேண்டியது. வித்தை எலுமிச்சம்பழ ரஸம்விட்டு அரைத்து, எச்சிற்தழும்புக்குக் பூச குணமாகும்.

அதிமதுரம் (வேர்.)

பிரதிபதங்கள். குன்றிமணி. குன்றி. குன்னி. குண்டுமணி. గురిగింజ-గురువెంద.

குன்றிச்செடி. எப்ரஸ் பிரிகெடோரியஸ், Abrus Precatorius. இன்டியின் லிகொரிஸ் பிளான்ட், Indian Liquorce plant.

அதிமதுரம். అతిమధురం, இண்டியன் லிகொரிஸ், Indian Liquorice. எப்ரிராடிக்ஸ், Abri Radix.

செய்கை.— ஷினிக்தகாரி Demulcent, and,emollient.

உபயோகம்.—இருமல் பேதி, நீர்ச்சுருக்கு, இவைகளுக்குக் கொடுக்கலாம். மருந்துகளுடைய கசப்பை யேடுத்துவிடும்; வாயிலிட்டடக்கி ரசத்தை விழுங்கினால் இருமல் தணியும்.

அதிமதுரைப்பால். அதிமதுரச்சத்து. (எகிஸ்ட் டிராக்ட் ஆவ் எப்ரஸ் Extra of Abrus. எகிஸ்ட் டிராக்டம் எப்ரை, Extractum Abri.) செய்முறை.—அதிமதுரவேர் 1-பவுன்; ஜலம், 4-பைன்ட். வேரை 2-பைன்ட் ஜலத்திலிட்டு, 12-மணிநேரம் ஊறவைத்து இறுத்துப்பிழிந்து, மறுபடியும் திப்பியை மீந்தஜலத்தில் 6-மணி ஊறவைத்து இறுத்துப் பிழிந்து, இரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து, காய்ச்சி, பிளானலில் வடிகட்டி, ஜலயந்திரத்தில் வைத்து, மெழுகு பதத்துக்குச் சுண்டவைத்துக் கொள்ளவும். உப

(யோகம்.—இதை மூஷாம்பரம்; நில்வாலுகை, நவக்ஷாரம் முலிலிய மருந்து களுடைய வெகுட்டாலே நீக்க, அவைகளோடு கூட்டிக் கொடுக்கப்படும். Livuorice root, lb. 1 ; Water, pints, 4,) Used for disguising the unpleasant taste of aloes, senna, &c,

வேர்க்கடலே. நிலக்கடலே. నేలశనగలు. (அரேசிஸ் ஹைபொஜியா, Arachis Hypogœa Ground Nut plant.) வேர்க்கடலே எண்ணெய் (ரவுண்ட் நட் ஆயல், Groud Nut oil. ஒலியம் அரேசிஸ் Oleum Arachis உபயோகம்.—இதை ஆலீவ் ஆயல் என்னும் சீமை எண்ணெய்க்குப் பதிலாய் உபயோகிக்கலாம்.

சீமைஅதிமதுரம் (லிகொரிஸ் ரூட், Liquorice root. கிளிஸரை ஸிராடிக்ஸ், Glycyrrhizæ Radix. சீமை அதிமதுரச்செடி. கிளிஸாரை கிளேபிரா Glycyrrhiza glabra The Linbuorice Plant.) உபயோகம்.—நாட்டு அதிமதுரமாகிய குன்றிவேரை, இதுக்குப்பதிலாக உபயோகித்துக் கொள்ளலாம்.

டிரெகெகாந்த். (Tragaconth.) இது பெர்ஷியா தேசத்திலிருந்து வருகிற ஓர்விதப்பிசினி, ஸினிக்தகாரி. இருமல், மூத்திரக்கிரிச்சிரம் இவைகளுக்கு உபயோகப்படுத்தி வருகின்றது.

(Non-officinal)

கருவேலன். నల్లతుమ్మ. (அக்கேஷிய அரேபிகா, Accia Arabica, பேபூல்ட்ரி, Babul tree.) இதின் பட்டையில் (Babul bark,) அதிக துவர்ப்புண்டு; கஷாயமிட்டு, குதப்பிரம்ஸத்துக்குப் பொடலாம்; கர்ப்பமேகத்துக்கு வஸ்திசெய்யலாம்; வாய்ரணத்துக்குக் கொப்புளிக்கலாம். இதை அரைப்புக்குப் பதிலாய் உபயோகிப்பதும் உண்டு. கருவேலன் பட்டையோடு, பனைவெல்லம் சேர்த்துக் காய்ச்சி. பட்டை சாராயம் (Arrack) இறக்கிறார்கள். கொழுந்தை அரைத்து துஷ்டவிரணங்களுக்குக் கட்டினல் துர்நீரை நிறுத்தும். கருவேலன் பிசினியை சீமை விளாம்பிசினிக்குப்பதிலாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

பீவேலன். పీతుమ్మ. Acacia Farnesiana.

சீமைவெள்வேலன். ఆనచంద్ర Acacia Ferruginea

வெள்வேல். తెల్లతుమ్మ. Acacia Leucophlæa.

இவைமுதலிய மரங்களின் பிசினியை, சிலதருணங்களில் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

சீமைஅகத்தி. மலேத்தகரை. வண்டுகெல்லி. శీమఅవిశె. మెట్టతామర. (காஷிய அலேடா, Cassia Alata, ரிங் ஒரம் ஷிரப், Ringworm Shrub) இதன் இலேயை பழரசம் விட்டரைத்து எச்சிற்தழும்புக்குப் போட்டால், சவுக்கிய முண்டாகும். இலேக்கு மலத்தை போக்குகிற குணமுண்டு. இலே ரஸத்தை மெழுகுபதமாக்கி கலிங்காதி லேகியத்துக்குப் பதிலாகக் கொடுக்கலா மென்று கண்டிருக்கின்றது.

பொன்னாவிரை. பொன்னாந்தகரை, పైడితంగేడు తగరచెట్టు (காஷியா ஸாபோரா, Sophora.) உபயோகம். பட்டையைக் கஷாயமிட்டும், விரையைத் தூள்செய்து தேனில் சேர்த்தும் நீரிழிவுக்கு கொடுப்பதுண்டு இலையையும், வேரையும் எச்சிற்தழும்புக்கும், ரணத்துக்கும் போடுகிறார்கள். இலையைக் கஷாயமிட்டுக் கொடுத்தால், பேதியாகும்,

பேயாவாரை కసింద (காஷியா ஆக்ஸிடெண்டேலிஸ், Cassia Occidentalis.) ஊசித்தகரை. (காஷியா டோரா, Cassia tora.) இவ்விரண்டினங்களின் இலையையாவது, வேரையாவது பழரஸம் விட்டரைத்து, படர்த்தாமரைக்கும் பூசலாம். வித்தையரைத்து மோரில் கலந்து சொறிசிறங்குக்குப் பூசலாம்.

அகத்தி అవిసె. (அகத்தி கிராண்டி ப்ளோரா, Agati garndiflora.) சீமை மலகாரி, பித்தசமனி; பட்டை பலகாரி.

ஆவாரை. తంగేడు. (காஷியா ஆரிகியு லேடா, Cassia auriculata) உபயோகம் இதின் விரையைக் கண்ணோவுக்குப் போட்டால் குணமாகும்; பட்டையின் கஷாயத்தை வாய்கொப்புளிக்கச் செய்யலாம் வஸ்தியாகவும் உபயோகிக்கலாம்; இதில் துவர்ப்புண்டு.

புங்கமரம் కానగచెట్టు (பொன்கேமியா கிளேபிரா, Pongamia glabara) உபயோகம்.— வித்திலிருந்து எடுக்கிற புங்கன் நெய்யை சொறிசிரங்குக்குப் போட்டால் மெத்த நன்மை செய்யும். புங்கன்வேர் ரஸத்தைப் புரையோடுகிற ரணங்களுக்குத் தயிலஞ்செய்து போடலாம்.

காக்கட்டான். சங்குபுஷ்பச்செடி. காக்கணத்தி. నల్లదింటన. (கிளிடோரியா டர்னேடிய. Clitorea ternatea.) (வித்து, வேர்.) இதில் வெள்ளை, நீலம் என இரண்டு சாதிகளுண்டு, வெள்ளையினம் நல்லது விரையை நெய்விட்டு, இளவறுப்பாய் வறுத்துத் தூள்செய்து, 1-டிராம் இடைக்கிக் கொடுத்தால், சுகமாய் பேதியாகும். திராக்ஷ உப்பைச்சேர்த்தும் கொடுக்கலாம். இதின் வேரின்பட்டையில்-1-2-டிராம் எடுத்து வெந்நீர்ஊறல் கஷாயமிட்டு, மூத்திரப்பை, நீர்த்தாரை ஆகிய இவைகளின் எரிச்சலுக்குக் கொடுக்கலாமென்றும், மூத்திரத்தை யதிகப்படுத்துமென்றும், சிலரில் மலத்தைப் போக்குமென்றும் கண்டிருக்கின்றது,

கடலைபுளிப்பு. శనగపులుసు. (Vinegar of the Bengal Horse-gram) கடலைச்செடி. (ஸிஸர் ஏரிடைனம். Cicer arietinum) கடலைச்செடியின் மேல் விழுகிற பனியைச் சல்லாத்துணியைப்போட்டுச் சேகரித்துப்பிழிந்து எடுத்துக்கொள்ளப்படும்; இந்தப்புளிப்பை, ஜலத்திலிட்டுக் குடிநீராகச்செய்துக் கொடுத்தால் தேஹ அழலை தணியும்; அதிகமானால், தூர்க்குணம்செய்யும். இதில், அக்ஸாலிக், அஸிடிக் ஆஸிட் என்னும் புளிப்புகளுண்டு.

சிவனார்வேம்பு. (இன்டிகோபிரா ஆஸ்பெலெதாய் டெஸ், Indigofera aspalathoides) இதன் இலை, புஷ்பம், கொழுந்து இவைகளுக்கு சீதளகாரி, ஸினிக்தகாரி குணங்களுண்டாம்; கஷாயமிட்டு, குஷ்டத்துக்குக் கொடுப்பதுண்டு. பல்வலிக்கும், வாய்ரணத்துக்கும், வேரைமெல்ல, வைப்பதுண்டு,

செப்புநெருஞ்சில். (இன்டிகொபிரா என்னி யெப்பில்லா, Indigofera enneaphylla.) உபயோகம்.—சமூலத்தை வெந்நீர்க்கஷாயமிட்டு, மூத்திரவர்த்தனமாகும்படியாயும், சுரம் இருமல் இவைகளுக்கும் கொடுக்க லாம், நல்லமருந்து.

கார்போக அரிசி. (ஸொரேலியா கொரிலிபோலியா, Psoralea Corylifolia.) உபயோகம்.—வாசனையுடைய இந்த விதை கொஞ்சங்கசக்கும். பசியை அதிகரிக்கவும், குஷ்டத்துக்கும், தமிழ்வைத்தியர்கள் கொடுப்ப துண்டு.

செம்பை. (ஸெஸ்பேனியா இஜிப்டியேகா, Sesbania Egyptica.) இதில் இரண்டு சாதிகளுண்டு, இலையை, கட்டிகள் பழுக்கவும், வீக்கங்களுக்கும் வதக்கிக்கட்டலாம்.

சீயக்காய். சிகைக்காய். (அக்கேஷியா கான்ஸின்ன, Acacia Concina.) (காய், கொழுந்து) காயைக்கொடுத்தால், பேதியும் வாந்தியும் ஆகும்; நஸியமிட உதவும். கொழுந்து புளிக்கும், துவையல்செய்து சாப்பிட்டால், பித்தசமனமாகும். புளிக்குப்பதில் இதைச்சேர்த்துக்கொள்ளுவ துண்டு.

மயில்கொண்ணை. சிட்டிமந்தாரம். (Poinciana pulcherrima.) இலைக்கு பேதியையுண்டாக்குகிற குணமிருப்பதால், நிலவாகைக்குப் பதிலாக அதை உபயோகப்படுத்துவதுண்டு.

ரோஜா இனம். (ROSACEÆ.)

சிகப்பு ரோஜாப்பூ

சிவப்பு ரோஜாசெடி. ரோஸாகால்லிக. Rosa Callica. ரெட்ரோஜ், French or Red Rose.

சிவப்பு ரோஜாப்பூ. ரோஷியி கால்லி ஷியிப்ளோரஸ், Rosæ Galliceæ Flores.

செய்கை. உபயோகம்.—இது அற்ப பலகாரி, சங்கோசனி, Slightly tonic and astringent.

சிவப்பு ரோஜாப்பு வெந்நீர் ஊறல் கஷாயம். ஆசிட் (இன்பியூஷன் ஆவ் ரோஸெஸ். Acid Infusion of Roses.) செய்முறை. சிவப்பு ரோஜாப்பூ இதழ்கள், ¼-ஔன்ஸ்; வெந்நீர் 10-ஔன்ஸ்; விளாவின கந்தகத்திராவகம், 1-டிராம். திராவகத்தை ஜலத்தில் கலந்து, அதில் புஷ்பத்தைச் சேர்த்து, மூடி ½-மணிநேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். செய்கை. அற்பசங்கோசனி, பலகாரி. மாத்திரை. 1-2-ஔன்ஸ், உப்பு பேதிமருந்து களும், குவைனுவும் இந்த கஷாயத்துடன் சேர்த்துக்கொடுக்க நல்ல அனுபானமாகும் (Red Rose Petals, oz ¼; Dilute Sulphuric of Acid, dr. 1; Boiling water, foz 10.) Dose.—1-2-foz.

குல்கந். (கன்பெக்ஷன் ஆவ் ரோஸஸ், Confection of Roses கன்பெக்ஷியோ ரோஷி கலிஷி, Confectio Rosæ Gallicæ.) செய்முறை.—சிகப்புரோஜா புஷ்பத்தின் பச்சையிதழ்கள், 1-பவுன்; பஞ்சதாரை, 3-பவுன்

புஷ்பத்தைக் கல்லுரலிலிட்டு மைய இடித்து, பஞ்சதாரையைச் சேர்த்து மிஸ்ரமித்து கொள்ளவும். செய்கை.—லகுவிரேசனி, ஸங்கேசனி. உபயோகம்.—குளிகைகள் செய்ய இது நல்லது. மாத்திரை.—1-2-டிராம் இடை கொடுக்கலாம். (fresh Red Rose Petals, 1. ℔; Refined Sugar, 3. ℔s.

ரோஜாப்பூ

பிரதிபதங்கள். குலாப்பூ; குலாப்பூ புஷ்பம்; பன்னீர்ப்பூ; ரோஜா புஷ்பம் പനീർപൂവു.

ரோஜாபுஷ்பச்செடி. ரோஜாஸென்டிபோலியா, Rosa centifolia. The hundred-leaved or Cabbage Rose.

செய்கை.—அற்ப லகுவிரேசனி; பன்னீர்செய்ய உபயோகமாகிறது Mildly laxative.

பன்னீர். പനീർ. (ரோஜ்வாடர் Rose water; ஆகுவர்ரோஸி, Aqua Rosæ.) செய்முறை.—ரோஜாபுஷ்ப பச்சையிதழ்கள் (அல்லது பச்சையிதழ்களை உப்புவிட்டு பத்திரப்படுத்தியது) 10-பவுன் ஜலம் 2-காலன். இவைகளை வாலையிலிட்டுக்காய்ச்சி, 1-காலன் நீரை இறக்கிக்கொள்ளவேண்டியது. உபயோகம்.—வாசனை திரவ்வியம்; கிலேதங்களுக்கு அனுபானமாகும்.

அத்தர். അത്തർ. (The Volatile oil; Attar or Utr of Roses.) நல்ல வாசனையாய் இருப்பதால், இதைக்கெட்ட வாசனையுடைய களிம்புகளோடும், மேலுக்குப்போடுகிற பலவித ஔஷதங்களோடும் சேர்க்கப்படும்.

கிருமிசத்துரு

பிரதிபதங்கள்.—ക്രിമിശത്രു.

கிருமிசத்துருசெடி.—பிரேயீரா ஆந்தல்மின்டிகா. Brayera anthelmintica. குஸ்ஸோ, Cusso; கஸ்ஸோ, Kousso.

விவரணம்.—அபிஸீனியாதேசத்தில் உண்டாகிற இந்தமூலிகை புஷ்பங்களும், தளிர்களுமாயிருக்கும், குங்கிலியவாசனை வீசும், வெருட்டலாயிருக்கும்.

செய்கை.—கிருமிக்கினி; Anthelmintic.

உபயோகம்.—தட்டைக்கிருமிகளை நிச்சயமாய்க் கொல்லும். இதைக் கொடுத்தபிறகு பேதிக்கிக்கொடுக்கவேண்டியது.

மாத்திரை.—பெரியவர்களுக்கு, $\frac{1}{2}$-ஔன்ஸ்வீதம் 7-12-வயதுள்ளவர்களுக்கு, $2\frac{1}{2}$-டிராம் வீதமும்-3-7-வயதுள்ளவர்களுக்கு, 2-டிராயம், 3-வயதுக்கதிகப்பட்டவர்களுக்கு, $1\text{-}1\frac{1}{2}$-டிராம் வீதமும் கொடுக்கலாம். இதை வெந்நீர் கஷாயமிட்டாவது, தேனில் கலந்து லேகியஞ்செய்தாவது கொடுக்கலாம்.

கிருமிசத்துருவெந்நீர்கிஷாயம்.–(இன்பியூஷன் ஆவ்கஸ்ஸோ, Infusion of Kousso; இன்பியூஸம் குஸ்ஸோ, Infusum Cusso) செய்முறை,—கிரு

(கிசுத்துருத்தூள், $\frac{1}{4}$-ஔன்ஸ்; வெந்நீர், 4-ஔன்ஸ்; பாத்திரத்தைமூடி 15-நிமிஷம் ஊறவைக்கவும். இதை பெரிய ஆளுக்கு புஷ்பத்தோடு ஜலத்தை ஒரேவேளையாய் வெறும் வயிற்றில் கொடுத்து, கொஞ்சநேரம் பிறகு பேதிக்கிச்கொடுக்கவேண்டியது. (Kousso, $\frac{1}{4}$ oz; Boiling water, 4-oz.) This forms a dose for an adult

வாதுமைப்பருப்பு

பிரதிபதங்கள்.—சீமைவாதுமை; பாரீசுவாதுமை; బాదము.

தித்திப்பு வாதுமைச்செடி.—அமிக்டெலஸ் கம்மியூனிஸ், டல்ஸிஸ், Amygdalus communis, var. dulcis; Sweet Almond Tree.

கசப்புவாதுமைச்செடி.—அமிக்டெல்ஸ் கம்மியூனிஸ், அமரா. Amygdalus communius, var. Amara Bitter Almond Tree.

தித்திப்புவாதுமைப்பருப்பு.— சுவிட் ஆமண்ட்ஸ், Sweet Almonds Amygdaloe dulces.

கசப்புவாதுமைப்பருப்பு.—பிட்டர் ஆமண்ட்ஸ், Bitter Almonds Amyydalœ.

செய்கை. உபயோகம்.—தித்திப்பு வாதுமைக்கு, சினிக்த போஷண குணங்களுண்டு. கசப்புவாதுமையிலிருந்து, நெய்மாத்திரம் எடுக்கப்படும்.

கலவை வாதுமைப்பருப்புச் சூரணம்.— கம்பவுண்பவுடர் ஆவ் ஆமண்டஸ், Compouud Powder of Almonds; Pulvis Amygdalæ Compositus ; Confectio Amygdalæ.) செய்முறை —தித்திப்பு வாதுமைபருப்பு, 8-ஔன்ஸ் ; பஞ்சதாரை, 4-ஔன்ஸ் ; விலாபிசினித்தூள், 1-ஔன்ஸ் பருப்பை வெந்நீரில் நனைத்து தோலேநீக்கி துணிமேல் போட்டு செவ்வையாய்புலர்த்தி, கலுவத்திலிட்டு மைபோலரைத்து பிறகு, பிசினி, சருக்கரை இவைகளைச் சேர்த்து ஷை சரக்குடன் கூட்டி அரைத்துக் கொள்ள வேண்டியது. (Sweet Almonds, 8-oz ; Gum 1 oz ;)

வாதுமைப்பருப்புக்குழம்பு—(ஆமண்ட் மிகிஸ்சர், Almond Mixture மிஸ்டியூரா அமிக்டெலி, Mistura Amygdalæ.) செய்முறை.—கலவை வாதுமைப்பருப்புச் சூரணம். $2\frac{1}{2}$-ஔன்ஸ் ; தீ நீர், க-பைன்ட் ; சூரணத்தில் கொஞ்சம் ஜலம்விட்டு அரைத்து மொத்தை செய்து பிறகு, மற்ற ஜலம் விட்டு சல்லாத்துணியில் வடிக்கட்டிக் கொள்ளவேண்டியது. செய்கை.—ஸினிக்தகாரி, வேறுமருந்துகளுக்கு அனுபானமாக உபயோகிக்கலாம். மாத்திரை.—1-2-ஔன்ஸ் கொடுக்கலாம். (Compound powder of Almonds, oz. $2\frac{1}{2}$; Distilled water, pint 1.) Dose—1-2 oz.

வாதுமைப்பருப்புநெய்.—(ஆமண்ட் ஆயல், Almond oil; ஓலியம் அமிக்டெலி, Oleum Amygdalœ.) செய்முறை.—ஷை இரண்டு சாதிகளில் ஒன்றைக்கசக்கி, நெய்யை எடுக்கப்படும். செய்கை.—ஸினிக்தகாரி, மலகாரி, உபயோகம். களிம்புகள் செய்முறையில் சேர்க்கப்படும்.

விளாவின ஹைட்ரோஸையானிக் ஆஸிட்.—(டில்லியூடெட் ஹைட்ரோஸையானிக் ஆஸிட், Diluted Hydrocyanic Acid; அஸிடம் ஹைட்ரொஸையானிகம் டில்லியூடம், Acidum Hydrocyanicum dilutum) விவ

ரணம்.—கசப்புவாதுமைப்பருப்பின் தயிலத்திலும் இன்னம்சில பதார்த் தங்களிலும், ஹைட்ரோஸையானிக் ஆஸிட் என்னும் விஷபதார்த்தம் உண்டு; ஆனஸ் மருந்துக்குவேண்டியதை, எல்லோபுருஷியேட் ஆவ் போட்டாஸியம் Yellow Prussiate of Potassium) என்னும் உப்புடன், கந்தகத்திராவகம், ஜலம் இவைகளைச்சேர்த்து, வடித்து, எடுக்கப்படும். இது தெல்லிய ஜலமாய் ஓர்வித வாசனையாய் இருக்கும். செய்கை.—சமனகாரி, வேதனசாந்தகாரி. மாத்திரை.—அதிகமானல் அதிசீக்கிரத்தில் கொல்லும். உபயோகம்.—இதை கபரோகங்கள், கக்கிருமல், காஸசுவாசம், மாரடைப்பு, இவைகளுக்குக் கொடுக்கலாம். வாந்திகுணமும், அன்னசயவேதனை, குலைஎரிவு இவைகளுக்கும் கொடுக்க இது திவ்யமருந்து. இதில் ஜலம்விட்டு விளாவி, கிலேதம் செய்து மேலுக்குப்போட்டால், வேதனை, எரிச்சல்தணியும், பெரிய விரணத்துக்குப் போட்டால், வேதனை, துர்க்குணம் செய்யும். மாத்திரை.– 2-8-மினிம், ஜலத்தல் விட்டுக்கொள்ளலாம். 1-2-டிராம் விளாவின ஹைட்ரோஸையானிக் ஆஸிடை, 8-ஔன்ஸ் ஜலத்திலிட்டு, கிலேதம் செய்து மேலுக்குப்போடலாம்.

ஆல்பகோரா.—ఆలీబకోరా. (புரூன், Prune; புரூனம், Prunum; Prunum Domesticata. The Plum Tree.) செய்கை. உபயோகம்.—வினிக்தகாரி, லகுவிரேசனி. தனியாய் உபயோகிக்கிறதில்லை. அரோசகத்துக்குச் சாப்பிடச்செய்யலாம்.

(NON-OFFICINAL.)

பேதானு.—குவின்ஸ் ஸீட்ஸ், Quince seeds. Pyrus Cydonia இந்த விதையை யூனானி வைத்தியர்கள் மெத்த உபயோகிப்பதுண்டு. இது விஸினிக்த தாருட்டியகாரி; கஷாயமிட்டு சீதபேதி, பிரமேகம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

அழவணச்செடியினம். (LYTHRARIEÆ.)

(NON-OFFICINAL.)

அழவணச்சேடி.—மருதோன்னி. గోరంటాకుచెట్టు. (லாஸோனியா அல்ப, Lawsonia alba.) இதின் இலையை நகத்துக்கிடுவது பிரசித்தம். இதில் துவர்ப்புசத்துண்டு, ஸங்கோஸனகாரி. இலையை காடிவிட்டரைத்து களியாகச்செய்து பாதங்களுக்கு வைத்துக்கட்டினல் பாதத்திலிருக்கிறஎரிச்சல் குணமாகுமாம். இலையை பாதத்திலிட்டும் தேய்க்கலாம், காயங்களுக்கும், சுளுக்குக்கும் வைத்துக்கட்டலாம்.

ஹமெமிலிடியி. (HAMAMELIDEÆ.)

ஸ்டோராகஸ்.

ஸ்டோராகஸ் செடி.—Liquidambar orientale; Liquid Storax Tree.

சுத்திசெய்த ஸ்டோராகஸ்.—பிரிபேர்ட்ஸ் டோராகஸ், Prepared Storax; Styrax Præparatus.

விவரணம். செடியின் பட்டையிலிருந்து சேகரிக்கிற ஓர்வித இளகிய குங்கிலியம். கருப்பும் மஞ்சளும் கலந்தச் சாயலாய், தடித்த தேனைப்போல் நல்லவாசனையாயும் ருசியாயுமிருக்கும்.

செய்கை. உஷ்ணகாரி, கபஹாரி. Stimulant, expectorant.

உபயோகம். நாள்பட்ட கபரோகங்கள், காசம், இவைகளுக்குக் கொடுக்க நல்லமருந்து பிரமேகத்துக்கும், கர்ப்பமேகத்துக்கும், கொபேபாவுக்குப் பதிலாய் உபயோகிக்கலாம். துஷ்டவிரணங்களுக்குப் போடலாம். In chronic coughs, asthma, gonorrhœa, leucorrhœa, and indolent ulcers.

மாத்திரை. 5-20-கிரேன்; மாத்திரை செய்தாவது, குழம்பு, செய்தாவது கொடுக்கலாம். 5-20-grs.

கடுக்கா இனம். (COMBRETACEÆ.)

(NON-OFFIICNAL.)

தான்றிக்காய்.—தானி. [Telugu]. (டெர்மினேலிய பெல்லிரிக, Terminalia Bellerica) இதற்கு துவர்ப்புகுணமுண்டு; மேகரணத்துக்கு இழைத்துப்போடலாம்; அனேககூட்டு மருந்துகளில் சேருகிறது

கடுக்காய்.—வரிக்காய் அரிதகி [Telugu]. (டெர்மினேலியசிபியுல Terminalia Chebula; Chebulic Myrobalans.) இதில் அனேக ஜாதிகளுண்டு, குணத்தில் மெத்த வித்தியாசமிராது, காபூலிக்கடுக்காய் சிறந்தது. கடுக்காய் காசுக்கட்டி இவைகளைச் சமனாய் அரைத்துநாக்குரணத்துக்குத்தடவலாம் குழந்தைகளுக்குத் தலைக்குவார்த்தபிறகு கடுக்காயை உரைத்து நாக்கின்மேல் தடவுகிறது வீட்டுவழக்கம். உப்பு பேதிகஷாயத்தில் இதைச் சேர்க்கலாம். கடுக்காய், பழரஸம் இவைகளைச்சேர்த்து பாவனாக்கடுக்காய். என்றுசெய்வது ஒரு, முறை. கடுக்காய்த்துவையல் அரோசகத்தை நீக்கும், மலத்தைப்பிடிக்கும், வெந்நீர்கஷாயமிட்டு, அதிமூத்திரம், கண்ணோய் இவைகளுக்கு உபயோகிக்கலாம். கடுக்காய்ப் பொடியால் பல்துலக்கினால், ஈறுவிருந்துவடிகிற ரத்தம்நிற்கும், ரணம் ஆறும், பல்விறுகும். கடுக்காயை ஒருவருஷம் விடாமல் காலையில் சாப்பிட்டுக்கொண்டுவந்தால், ரோமங்கள் நரையாதென்று கேழ்வி, தூளையாவது, கஷாயமாவது மூலத்தின்மேல் போடலாம் ரத்தம்நிற்கும், ரத்தபீனஸத்துக்கு நஸியமிடலாம். 6-கடுக்காயைநொறுக்கி விரையைநீக்கி 1-விராகனிடை கிராம்பு அல்லது லவங்கப்பட்டை சேர்த்து, $\frac{3}{4}$-ஆழாக்கு ஜலத்திலிட்டு 10–நிமிஷம்காய்ச்சி, வடிக்கட்டி சாப்பிட்டால், வயிற்றுக்கடுப்பு வாந்தி இவைகளில்லாமல், 4-5-தடவை செவ்வையாய் பேதியாகும்; ஜலத்துக்குப்பதில் பால்சேர்த்துகொள்ளலாம். சீதபேதிக்கு இதைக்கொடுக்கலாம். இது லகுவிரேசனி, சங்கோசனி. Aperient, Astringent.

கடுக்காய்ப்பிஞ்சி.—[Telugu]. (Indian or Black Myrobalans.) இது சுருங்கி கறுத்திருக்கும், மெத்த துவர்க்கும். ஆமணக்கெண்ணெய் தடவி வறுத்து தூள்செய்து சீதபேதிக்குக் கொடுத்தால் நன்மைசெய்யும்.

கடுக்காய்ப்பூ—கர்க்கடசிங்சி. ಕರ್ಕಾಟಕಶೃಂಗಿ. ஸங்கோஸனி. முக்கியமாய் குழந்தைகளுக்குக் காணுகிற சீதபேதி, பேதி இவைகளுக்குக் கொடுக்கலாம் 1-வருஷத்துக்குட்பட்ட குழந்தைக்கு, 1-கிறேன் வீதம், 3-மணிக்கொருதரம் கொடுக்கலாம்.

நாட்டு வாதுமை.—నాటుబాదాము. (டெர்மினேலிய கடேப, Terminalia Catappa, Country Almonds.) இதின் பருப்பையும் பருப்பிலிருந்து எடுக்கிற தயிலத்தையும், சீமை வாதுமைப்பருப்புக்குப் பதிலாய் உபயோகிக்கலாம். பட்டையில் துவர்ப்புண்டு.

சிராம்பு இனம். (MYRTACEÆ)

காயப்புட்டிதயிலம்.

காயப்புட்டிதயிலச்செடி.—மிலெலியுகா மைனர். Melaleaca Minor The Lesser Melaleuca.

காயப்புட்டிதயிலம்,—ஆயல் ஆவ் காஜுபட், Oil of Cajuput. *ஓலியம் காஜுபுட்டை,* Oleum Cajuputi. *ஸ்தலம், மலேகாதேசம்.*

விவரணம்.—இலையை வாலையிலிட்டு வடித்தெடுக்கிற ஓர்வித தயிலம் இது தெளிவாய், பச்சைநிறமாய், கர்ப்பூர வாஸனையாயிருக்கும்; வாயிலிட்டால் காரமாய் பிறகு சில்லிட்டுப்போகும்.

செய்கை.—உஷ்ணகாரி, அங்க கர்ஷண நாசனி, சுவேதகாரி, மேலே தடவினால், சருமம் சிவக்கும். Stimulant.

உபயோகம்.—க்ஷீணசுரம், பக்ஷவாதம், கீல்வாதம், இவைகளுக்கு உபயோகிக்க மெத்த நல்லது. வயிற்றுவலி, சூலை வயிறுநோவு, சூதகவலி இவைகளுக்கும் எடுத்தது. கீல்வாதம், வாதநோய், பக்ஷவாதம் இவைகளுக்குப் பூசினால் குணமுண்டாகும்.

மாத்திரை—1-5-துளிகொடுக்கலாம், (1-5-drops.)

காயபுட்டிதயிலத்தின்மது.—(ஸ்பிரிட் ஆவ் காஜுபட், Spirit of Cajuput; Spiritus Cajuputi.) செய்முறை.—காயபுட்டிதயிலம், 1-ஔன்ஸ் ரெக்டிபைட் சாராயம் 49-ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும். மாத்திரை.—½-1-டிராம் கொடுக்கலாம் (Oil of Cajuput, oz. 1; Rectified Spirit, foz, 49.) Dose—½-1-fdr.

கிராம்பு. (உலர்ந்த மொக்கு.)

பிரதிபதங்கள்.—லவங்கம்.

கிராம்புச்செடி.—*கரியாபில்லஸ் ஆரோமாடிகஸ்,* Caryophyllus Aromaticus; the Clove Tree.

கிராம்பு ലവംഗം. *குளோவ்ஸ்.* Cloves. *கரியாபில்லம்,* Caryophyllum,

விவரணம்.—கிராம்பு நல்ல வாசனையாயும், காரமாயும், விறுவிறுப்பாயுமிருக்கும்.

செய்கை.—உஷ்ணகாரி, கர்ப்பவாதஹாரி, Stimulant Carminative.
உபயோகம்.—மந்தாக்கினி, வாந்தி, கருப்பிணிகளின் வாந்தி, இவைகளுக்கு கிராம்பின் கஷாயத்தையாவது, தயிலத்தையாவது கொடுத்தால் நன்மைசெய்யும், ஆனால் முக்கியமாய் வாசனைக்கு, மருந்துகளோடு சேர்க்கப்படும், In dyspepsia, vomiting, and for aroma to other medicines.

கிராம்பு வெந்நீர்க் கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் குளோவ்ஸ், Infusion of Cloves இன்பியூஷம் கரியாபில்லை, Infusum Caryophylli.) செய்முறை.—கிராம்புத்தூள் ¼-ஔன்ஸ், வெந்நீர், 10-ஔன்ஸ், இவைகளை மூடி, ½-மணி ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-4-ஔன்ஸ்.

கிராம்புத்தயிலம்.—(ஆயல் ஆவ் குளோவ்ஸ், Oil of Cloves; ஒலியம் கரியாபில்லை, Oleum Caryophilli) விவரணம்.—வாலையிலிட்டுவடித்து எடுக்கிற இந்த தயிலமானது, புதுசாயிருந்தால் துல்லியமாயும், நாளேற சிவந்துமிருக்கும்; நல்ல வாசனையாயும் காரமாயுமிருக்கும்; ஜலத்தில் கீழுக்கிறங்கிவிடும் மாத்திரை.—2-6-மினிம் வீதம் சருக்கரையிலிட்டு கொடுக்கலாம். கொஞ்சம் பஞ்சை தயிலத்தில் நனைத்து, பல்வலிக்குவைத்தால், சவுக்கியமுண்டாகும்.

ஆல்ஸ்பைஸ். வெள்ளை மிளகு. (Allspice. Eugenia Pimenta, Pimento. Allspice Tree.) கிராம்புக்குடைய குணங்களை இதற்குமுண்டு.

(NON-OFFICINAL.)

வெள்ளைக்கொய்யாச்செடி.—(ஒயிட் கோவாட்ரி, White Guava Tree; Psidium pyriferum.) பேரக்காய்ச்செடி జామపండుచెట్టు. கொய்யாப்பழத்தின் பிரயோஜனம் சகலருக்கும் பிரசித்தம்; அதின்வேரின்பட்டையில் துவர்ப்புகுணமுண்டு; அதைக் கஷாயமிட்டு (வேரின் பட்டை ½-ஔன்ஸ்; ஜலம் 6-ஔன்ஸ். 3-ஔன்சுக்குச் சுண்டவைத்துக்கொள்ளவும்), அதில் ஒரு உத்திரணிவீதம் குழந்தைகளுக்குக் காணுகிற பேதிகட்ட உள்ளுக்கும், குதப்பிரம்சத்துக்கு மேலுக்கும் உபயோகித்தால் சவுக்கியமுண்டாகும்.

சிவப்பு கொய்யாச்செடி.—(ரெட்கோவாட்ரீ, Red Guava Tree; Psidium pyriferum) இதற்குந் துவர்ப்புகுணமுண்டு, ஆனால் மெத்த உபயோகப்படுத்துகிறதில்லை. இதின் இலையின் கஷாயத்தை, வாந்தி பேதிக்கிக் கொடுத்து, வாந்தியும் பேதியும் நின்றதாய்த் தெரியவருகிறது.

நாவல்,—నేరేడు (ஸைஜி ஜியம் ஜாம்பொலேனம், Syzigium Jambolanum. நாவல் பட்டையில் துவர்ப்புண்டு; கஷாயமிட்டு, நாள்பட்ட சீதபேதிக்கிக் கொடுக்கலாம் பழரஸத்தைப் பாணிதஞ்செய்து (Syrup) கொடுத்தால், ஜாடராக்கினியை வர்த்திக்கவும், நாள்பட்டபேதியைக்கட்டவும் செய்யுமாம்.

பர்ப்பாடகம். పర్పాటకము.(Mollugo Cerviana.) இதை வெந்நீர் கஷாயமிட்டு சுரங்களுக்குக் கொடுத்தால், வியர்வைபிறக்கும்.

மாதளைச்செடியினம். (GRANATEÆ.)

மாதளைச்செடி.—దానిమ్మచెట్టు. பம்கிரேனெட் ட்ரி, The Pomegranate Tree) பியுனிக கிரேனேடம் Punica Granatum

மாதுளம்வேர்ப்பட்டை.—பம்கிரேனெட் ரூட்பார்க், Pomegranate Root-bark; கிரெனெடை ராடிஸிஸ் கார்டெக்ஸ், Granati Radicis Cortex.

மாதுளங்காயின் தோல்.—கிரெனெடை கார்டெக்ஸ், Granati Cortex; the dried rind or pericarp of the fruit.

செய்கை.—வேரின்பட்டை கிருமிக்கினி. பழத்தின் தோல் சங்கோசனி. Root-bark, anthelmintic; rind of the fruit, astringent.

உபயோகம்.—தட்டைக்கிருமிகளைக்கொல்ல வேரின் பட்டை நல்லது; ஆனால் அதற்குப்பேதியாக்குகிற குணமில்லாததால், விரேசன மருந்து கொடுத்து, கிருமிகளை வெளிப்படுத்தவேண்டியது. பேதி, சீதபேதி முதலிய துவர்ப்பு மருந்து வேண்டிய வியாதிகளுக்கு, பழத்தின் தோலைக்கொடுக்க உதவும்.

மாதுளம்வேரின்கஷாயம்.-(டிகாக்ஷன் ஆவ் பம்கிரேனெட் ரூட் Decoction of Pomegranate root. டிகாக்டம் கிரெனெடை ராடிஸிஸ் Decoctum Granati Radicis.) செய்முறை — இடித்த மாதளன்வேரின் பச்சைப்பட்டை 2-ஔன்ஸ்; ஜலம், 2-பையின்ட். 1-பையின்ட்க்குச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, தேவையிருந்தால் திப்பியில் ஜலம் அதிகம்விட்டு 1-பைன்டிருக்கச் செய்துகொள்ளவும் மாத்திரை.—கிருமிகளை வெளிப்படுத்த இதில் 2-ஔன்ஸ், வெறும் வயிற்றில் கொடுத்து, பிறகு அந்த அளவே, $\frac{1}{2}$-மணிநேரத்துக்கொருதரம் 6-ஆவர்த்திகொடுத்து, பிறகு உடனே பேதிக்கிக் கொடுக்கவேண்டியது: (Root-bark, oz. 2; Water, pints, 2.) Dose.—foz. 2.

மாதுளம் பழத்தோலின் கஷாயம்.—(டிகாக்ஷன் ஆவ் பம்கிரேனெட்ரின்ட், Decoction of Pomegranate rind. டிகாக்டம் கிரெனெடை கார்டிஸிஸ், Decoctum Granati Corticis.) செய்முறை—உலர்ந்து இடித்த மாதுளம் பழத்தோல் 2-ஔன்ஸ்; ஜலம் 1-பைன்ட். மூடி 15-நிமிஷம் காய்ச்சி, பிறகு வடிகட்டி, 1-பைன்ட் அளவுக்குத்தேவையான ஜலம் திப்பியில் விட்டுக்கொள்ளவும். மாத்திரை.—1-1$\frac{1}{2}$-ஔன்ஸ். இது வாய்க் கொப்பளிக்கவும், இன்ஜெக்ஷன் செய்யவும் நல்ல மருந்து. உள்ளுக்குக் கொடுக்கிற கஷாயத்தில் கிராம்பு முதலிய வாசனை பதார்த்தங்களைச் சேர்த்துக்கொண்டால், இனிப்பாய் இருக்கும். அபினியைச்சேர்த்து பேதிகட்டக்கொடுக்கலாம். (The Rind, oz. 2; water, pint, one.)

வெள்ளரியினம். (CUCURBITACEÆ.)

ஆற்றுத்தும்மட்டி· (காய்)

ஆற்றுத்தும்மட்டிக்காய்ச்செடி.—ஸைட்ரல்லஸ் காலொஸின்திஸ் Citrullus Colocynthis; Bitter Cucumber or Colycynth Plant.

ஆற்றுத் தும்மட்டிக்காய்.—கலிங்காதி, கும்மட்டி, பேய்த்தும்மட்டி, பேய்க்கும்மட்டி, வரிக்கும்மட்டி యేటిపుచ్చ. వెఱ్ఱిపుచ్చ.

விவரணம்.—இந்தக்காய உருண்டு, மஞ்சள், வெள்ளை, பச்சை, கலந்த புள்ளிகள் மேலேயுள்ளதாய், வாசனையற்றதாய் மெத்தக்கசப்பாய், குமட்டலை யுண்டாக்குகிறதாய் இருக்கும்; உள்ளே இருக்கிற சதைஉலர்ந்தால் லேசாய், செல்லடித்ததுபோல் இருக்கும், மெத்தக் கசக்கும். (காலொஸிந்த் பல்ப், Colocynth pulp காலோஸிந்தி டிஸ் பல்ப, Kolocynthidis pulpa.)

செய்கை.—ஜலவிரேசனி Hydragogoue cathartic.

உபயோகம்.—மலபந்தம், யகிர்த்கண்டரோகம், நீர்க்கோவை, முதலிய பேதிமருந்து தேவையான வியாதிகளுக்கெல்லாம் கொடுக்க நல்ல மருந்து. இதைத் தனியாய்க்கொடுப்பது அரிது, அடியில் கண்ட முறைகளாய்ச் செய்து கொடுக்கப்படும். In constipation, hepatic affections, dropsy &c.

மாத்திரை.—2-8-கிறேன். 2-8, grains.

தும்மட்டிக்காய்க் கலவைச்சத்து.—(காம்பவுன்ட் எகிஸ்ட்ராக்ட் ஆவ் காலொஸிந்த, Compound Extract of Colocynth எகிஸ்ட்ராக்டம் காலொசிந்தி டிஸ்கம்பாசிடம், Extractum Colocynthidis Compositum.) செய்முறை.—ஆற்றுத் தும்மட்டிக்காயின் உலர்ந்த சதை, 6-ஔன்ஸ்; மூஷாம்பரச்சத்து, 12-ஔன்ஸ்; ஸ்காமொனி, 4-ஔன்ஸ்; கட்டிசவுக்காரத்தூள், 3-ஔன்ஸ்; ஏலத்தூள், 1-ஔன்ஸ்; புரூவ்ஸ்பிரிட் சாராயம், 1-காலன், தும்மட்டிக்காயின் சதையை, சாராயத்தில், 4-நாள் ஊறவைத்து பிழிந்து, சாராயத்தை வாலையிலிட்டு வடித்து பிறகு மூஷாம்பரம், சவுக்காரம், ஸ்காமொனி இவைகளைச்சேர்த்து ஜலயந்திரத்தில் சுண்டவைத்து மெழுகு பதமாக்கி, முடிவில் ஏலத்தூளைச் சேர்த்துகொள்ளவும், மாத்திரை —3-10-கிறேன். (Colocynth pulp, oz 6; Extract of Socottrins Aloes, oz 12 ; Resin of Scammony, oz. 4 ; Hard Soap, oz 3; Cardamom Seeds powder, oz. 1; Spirit, gallon 1.) Dose. 3-10-grs.

தும்மட்டிக்காய்க் கலவைமெழுகு.—(காம்பவுன்ட்பில் ஆவ் காலொசிந்த், Compound Pill of Colocynth, பிலூலகாலொசிந்தி டிஸ்கம் பாசிட Pilula Colocynthidis Composita.) செய்முறை.—தும்மட்டிக்காயின் சதைத்தூள், 1-ஔன்ஸ்; மூஷாம்பரம், 2-ஔன்ஸ் ; ஸ்காமொனி, 2-ஔன்ஸ்; ஸல்பேட் ஆவ் போடாஷ், $\frac{1}{4}$-ஔன்ஸ்; கிராம்புத்தயிலம், 2-டிராம்; தீநீர்தேவையானது. சூர்ணங்களை மிஸ்ரமித்து, கிராம்புதயிலத்தைச்சேர்த்து, ஜலம் விட்டுக்கொண்டே இடித்து மெழுகு பதமாக்கிக்கொள்ளவும். மாத்திரை.—5-10-கிறேன் (Colocynth pulp, oz. 1; Barbadoes Aloes, Scammony of each, Oz. 2; Sulphate of Potash, oz. $\frac{1}{4}$; Oil of Cloves, fdrs 2; Water a sufficiency.) Dose 5-10-grs.

இலெடீரியம்

இலெடீரியச்செடி.—எக்பேலியம் அபிசிநேரம், Ecbalium officinarum. The squirting Cucumber.

எகிஸ்ட்ராக்டம் இலெடீரியை.—Extractum Elaterii.

விவரணம்—காயின்ரஸத்திலிருந்து அடியில்படிகிற இந்த வண்டல் சன்னதட்டைபில்லைகளாய், சிலவேளை சுருண்டுமிருக்கும்; இலேசானது,

எளிதில் பொடியாகும்; கொஞ்சம் வாசனையுண்டு; கறகறப்போடு கசக்கும்; மருந்து காயப்போட்ட துணியின் இழைகள், பில்லைகளின்மேல் காணப்படும்.

செய்கை.—விரியமுள்ள ஜலவிரேசனி. Powerful hydragogue cathartic.

உபயோகம்—நீர்க்கோவை, அசதிசன்னி முதலிய சிரோரோகங்களுக்கு பேதியாகும்படி கொடுக்கலாம். In drospy, apoplexy, &c.

மாத்திரை.—$\frac{1}{16}$-முதல் $\frac{1}{2}$-கிறேன் இடை, 4-மணிக்கொருதரம், பேதியாக ஆரம்பிக்கிறவரையில் கொடுக்கவும். முளகாய்ப் பொடியையாவது குரோசானி யோமச்சத்தையாவது சேர்த்துக்கொண்டால், வயிற்றைக் கடுத்துக் குமட்டலையுண்டாக்குகிற துற்குணமிராது.

(Non-officinal.)

ஆகாசகருடன் கிழங்கு.—கொல்லன் கோவைக்கிழங்கு. (பிரையோனிய இபிஜிய, Bryonia epigœa.) செய்கை.—உபயோகம்.—இந்தக்கிழங்கு கசக்கும், வியதாபேதகாரி, பலகாரி. மேகரோகங்கள், நாள்பட்ட சீதபேதி இவைகளுக்கு நமது ஜனங்கள் உபயோகப்படுத்துகிறார்கள்.

கலியாணபூசினி. బూడిదగుమ్మడి పెండ్లిగుమ్మడి. కూష్మాండం (Cucurbita Pepo. White Pumpkin.) கூஷ்ப்பாண்டலேகிய முறையில் இந்தக் காயைச்சேர்ப்பது நாட்டுவழக்கம். காயைத்துளைத்து உள்ளே செம்பருத்திபூவைப்போட்டு ஊறவைத்து, ரசமெடுத்து அதில் சருக்கரைசேர்த்து, பிரமேகம், நீர் எரிச்சல் இவைகளுக்குக் கொடுப்பதுண்டு. இதின் விரைக்குத் தட்டைக் கிருமிகளைப்போக்குகிற குணமுண்டென்று கண்டிருக்கிறது.

பூசினி. గుమ్మడి. (Cucurbita Maxima.) பூசினிவிதைக்கும் கிருமிகளைப் போக்குகிற குணமுண்டாம். $\frac{1}{2}$-1-பலம் வீதம், சருக்கரையிலாவது தேனிலாவது, கலந்து கொடுக்கலாம். பூசினிப்பழத்தை வேகவைத்து, களிசெய்து, அழுகிப்போன ரணங்களுக்கு வைத்து கட்டினால், சவுக்கியமுண்டாகும்.

மோலாம்பழம், మొలాంపండు.(Cucumis Melo). இதற்கு தேகத்தைக் குளிர்ச்சிசெய்கிற குணமுண்டு.

வெள்ளரி.—(Common cucumber; Cucumis sativus.) இதற்கும் தேகத்தைத் தணிப்பிக்கிற குணமுண்டு; பிஞ்சை பச்சடிசெய்தும், காடியில் ஊறவைத்தும் சாப்பிட்டால், இனிப்பாயிருக்கும்.

கக்கரிக்காய். முள்வெள்ளரி. ముళ్లదోసకాయ (Cucumis Utilissimus Field cucumber.) வெள்ளரிக்காய் விரையைக் கஷாயமிட்டு, மூத்திரம் அதிகமாக, கொடுப்பது நாட்டுவழக்கம்.

தர்ப்பூசி. దర్బూజ. (Water melon; Cucurbita citrullus.) இதனோடு சருக்கரைசேர்த்து, பாணிதம்செய்து சாப்பிட்டால், நீர் எரிச்சல் நீங்கும்.

கோவை. దొండ. (Coccinia Indica.) கோவையிலை ரசத்துடன் வெண்ணெய் சேர்த்துச் சிரங்குக்குப் பூசுவதுண்டு.

சுரைச்செடி, ఆనపకాయచెట్టు, (Lagenaria vulgaris.) சுரையிலைக்கு நீரை அதிகப்படுத்துகிற குணமுண்டு; அதைக் கஷாயமிட்டு நீர்க்கோவைக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்.

கோம்புப்புடல். కొమ్ముపొట్ల (Trichosanthes nervifolia, T. dioica.)—இந்தச்செடியின் கிழங்குக்கு ஜலவிரேசனி செய்கையுண்டு. இலெடீரியம் என்னும் மருந்துக்குப் பதிலாய் உபயோகிக்கலாமென்று கண்டிருக்கிறது. இதின் காயின் சத்தில், 3-5, கிறேன்வீதம், 3-மணி நேரத்துக் கொருதரம், பேதியாகிறவரையில் கொடுத்தால் சுகமாயும், செவ்வையாயும் பேதியாகும்.

பேய்ப்புடல்.—చేదుపొట్ల, (Trichosanthes Cucumerina.) இதின் கொழுந்தை வெந்நீர்க்கஷாயமிட்டு, வயறிளக்கக் கொடுப்பதுண்டு. விரைக்கு வாதத்தைக் கண்டிக்கிற குணமும், கிருமிகளைப்போக்குகிற குணமுமுண்டு. இலையின் ரசம் கொடுத்தால் வாந்தியாகும். வேரின் ரசத்தில், $\frac{1}{4}$-ஆழாக்கு அளவு குடித்தால், அதிகபேதியாகும்.

முசுமுசுக்கை (Bryonia Scabrella.) இதின் இலைக்கு இருமலைக் கண்டிக்கிற குணமுண்டு. இலையின் ரசத்தில், கோரோஜனம் சேர்த்து கொடுப்பது வழக்கம்; வேரைக் கஷாயமிட்டுக்கொடுப்பது முண்டு.

பப்ளி யினம், (Papayaceæ.)
(Non-officinal.)

பப்பளிச்செடி, బొప్పాయిచెట్టు, మదన ఆనపకాయచెట్టు, (Papaw tree; Carica Papaya.) இதின் இளம்பிஞ்சில் பால் அதிகம்; அந்தப் பாலுக்குக் கிருமிகளைப்போக்குகிற குணமுண்டு. 1-கரண்டிபாலை, 1-கரண்டி தேனுடன் கலந்து, மிஸ்ரமித்து, 3-4-கரண்டி வெந்நீர் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சேர்த்து, குளிர்ந்தபிறகு அதைச்சாப்பிட்டுவிடவேண்டியது. 2-மணிநேரஞ் சென்றபிறகு, ஆமணக்கெண்ணெயில் எலுமிச்சம்பழ ரஸம்விட்டு சாப்பிட்டால், கிருமிகள் வெளிப்படும். அவசியமிருந்தால் இவ்விதமாய், 2-நாள் செய்யவேண்டியது. 7-10-வயது குழந்தைகளுக்கு, ஷை அளவில் பாதிகொடுக்கலாம். 3-வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, 1-உத்தரணி அளவு கொடுக்கலாம். இந்தப்பழத்தின் வித்துகளுக்கும் கிருமி நாசகாரிசெய்கையுண்டாம், ஆனல் நிச்சயமில்லை. கருதரிக்காமலிருக்க, ஸ்திரீகள் பழத்தைச் சாப்பிடுவதுண்டு. கருவழிக்க பாலைக் கருப்பையின்வாயில் வைப்பது வழக்கம். மாமிசத்தைப் பப்பளிச்செடியில், 2-3-மணிநேரங் கட்டிவைத்து சமையல் செய்தாலும்சரி, அல்லது மாமிசத்தில் காயைச்சேர்த்து சமையல் செய்தாலும் சரி, மிருதுவாகுமாம். பல்வலிக்குப் பாலை விடுவதுண்டு.

ஓமப்பூண்டினம். (Umbelliferæ.)

கேக்விரை

கேக்விதைப்பூண்டு. Caraway plant; Carum carui.

கேக்விரை. சீமைசோம்பு. సీమసోపు, Caraway fruit; Carui Fructus.

செய்கை, உபயோகம். வாசனையாய் இருக்கிற இந்த வித்துக்கு, ஜாடராக்கினி வர்த்தனி, கர்ப்பவாதஹாரி ஆகிய இக்குணங்களுண்டு. வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அக்கினிமந்தம் ஆகிய இவைகளை நீக்கும், வாசனைக்கு மசாலையோடு சேர்ப்பது வழக்கம். Stomachic, Carminative. In flatulence, colic, dyspepsia &c.

சீமைசோம்புத்தயிலம். (Oil of Caraway ; Oleum Carui.) வித்தை வாலையிலிட்டு வடித்து எடுக்கிற இந்தத் தயிலம் நல்லவாசனையாய் இருக்கும்; 2-6-துளி சருக்கரையில்விட்டு கொடுக்கலாம். 2-6-drops.

ஓமம்

ஓமப்பூண்டு. Ajwain or Omum Plant; Carum (Ptychotis) Ajowan.

ஓமம்.—ఓమము. Ajwain Fruit; Fructus Ptychotis.

செய்கை. உஷ்ணகாரி, கர்ப்பவாதஹாரி, அங்காகர்ஷண நாசகாரி. Valuable stimulant, carminative, antispasmodic.

உபயோகம். வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அக்கினிமந்தம், பேதி இவைகளுக்குக் கொடுத்தால். சவுக்கியம் உண்டாகும். வாந்திபேதி ரோகத்துக்கு இதைக்கொடுத்து. பேரெடுத்ததுண்டு. In flatulence, colic, dyspepsia, diarrhœa, cholera.

ஓமத்தயிலம்.—(Oil of Ajwain, or Omum; Oleum Ptychotis.) ஓமத்தை வாலையிலிட்டு வடித்து எடுக்கிற இந்தத்தயிலம், மெத்தகாரமாயும் மாசனையாயுமிருக்கும். மாத்திரை.—1-3-துளி சருக்கரையில் விட்டுக்கொடுக்கலாம். 1-3-drops.

ஓமத்தீநீர்.—ஓமம் வாடர் Ajwain or Omum water; Aqua Ptychotis.) செய்முறை.—ஓமம், 20-ஔன்ஸ்; ஜலம், 2-காலன். வாலையிலிட்டு, 1-காலன் ஜலம் வடித்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—1-2-ஔன்ஸ். இதை எண்ணெயோடு சேர்த்துக் கொடுத்தால், வெகுட்டல், வயிற்றுக்சடுப்பு இவைகள் இல்லாமல்செய்யும்.

சோம்பு

சோம்புப்பூண்டு.—Pimpinella Anisum; Common Anise.

சோம்புக்கு, (సోంపు.) கர்ப்பவாயுவைக் கண்டிக்கிற செய்கையுண்டு. சோம்பை வாலையிலிட்டு வடித்து எடுக்கிற தயிலம் (ஆயல் ஆவ் அனீஸ், Oil of Anise; Oleum Anisi.) இங்கிலீஷ் வைத்தியத்தில் மெத்த உபயோகப்படுத்துவதுண்டு சாராயம்விட்டுக் கலந்த சோம்புத்தயிலத்தில் (எஸ்ஸென்ஸ் ஆவ் அனீஸ், Essence of Anise; Essentia Anisi.) (சோம்புத்தயிலம், 1-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 4-ஔன்ஸ்.) 10-20-மினம் கொடுக்கலாம். Carminative. The dose of the essence of Anise is 10-20 minims.

சதகுப்பை.—(Common Dill; Anethum Graveolens.) கேக்விரைக்கிருக்கிற குணங்களே சதகுப்பைக்கு முண்டு.

ஸோயி.—(Anethum Sowa). இவ்விடத்தில் விளைகிற சோயிக்கீரைக்கும், சீமை சதைகுப்பைக்கும் பேதமில்லை, செய்கையும் ஒன்று.

கொத்துமல்லி

கொத்துமல்லிப்பூண்டு.—The common Coriander; Coriandrum Sativum.

கொத்துமல்லி.—ధనియాలు. கோரியான்டர், Coriander fruit.

Coriandri Fructus.

செய்கை; உபயோகம்.—கேக்விரைக்கிருக்கிற குணங்களே இதற்குமுண்டு, அநேக மருந்துமுறைகளில் சேருகின்றது. வாலையிலிட்டு வடித்தெடுக்கிற கொத்துமல்லி தயிலத்தில், (ஆயல் ஆவ் கோரியுான்டர், Oil of Coriander; Oleum Coriandri.) 2-5-துளி, சருக்கரையில் விட்டுக்கொடுக்கலாம்.

பெருங்காயம்

பெருங்காயச்செடி.—Assafœtida Plant; Ferula Assafœtida.

பெருங்காயம்.—இங்கு. ഹിംഗു. அஸ்ஸெபிடீடா, Assafœtida

விவரணம்.—பெர்ஷியாதேசத்தில் விளைகிற செடியிலிருந்து எடுக்கிற பாலாகிய பெருங்காயம், கட்டிகளாய், மஞ்சள்நிறமாய் இருக்கும், அதிகவாசனையுண்டு, வெள்ளுள்ளிவாடை வீசும்; காகரப்புடன் மெத்தக் கசக்கும்; சாராயத்தில் கரையும்; ஜலம்விட்டு அரைத்தால் பால்போலாகும்; மாஉப்பு சேர்த்தால் சூரணமாகும்.

செய்கை.—அங்காகர்ஷண நாசகாரி, உஷ்ணகாரி, கிருமிக்கினி. Antispasmodic, stimulant, anthelmintic.

உபயோகம்.—சூதகசன்னி, காசம், மாரடைப்பு, வயிற்றுவலி இவைகளுக்குக் கொடுக்க நல்லமருந்து. குழந்தைகளுக்குக் காணுகிற இருமலைத் தணிக்கும், கிருமிகளையும் போக்கும். In hysteria, asthma, hooping-cough, angina pectoris, colic, bronchitis, worms.

மாத்திரை.—5-20-கிறேன். மாத்திரை செய்தாவது, ஜலத்தில் கலந்தாவது கொடுக்கலாம். 5-20 grains.

பெருங்காயப்பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் அஸ்ஸெபிடீடா, Tincture of Assafœtida; Tinctura assafœtidœ) செய்முறை.—பெருங்காயப் பொடி $2\frac{1}{2}$-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம் தேவையானது. 15-ஔன்ஸ் சாராயத்தில் காயத்தைப்போட்டு மூடி, 7-நாள் குலுக்கிக்குலுக்கி ஊறவைத்து வடிகட்டி, பிறகு 1-பைன்டுக்குத் தேவையான சாராயத்தைச் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-1-டிராம். (Assafœtida, oz. $2\frac{1}{2}$; Rectified Spirit, one pint.) Dose.—$\frac{1}{2}$-1 fdr.

பெருங்காயக் கலவை மெழுகு.—(காம்பவுண்ட் பில் ஆவ் அஸ்ஸெபிடீடா, Compound pill of Assafœtida, Pilula Assafœtida Compoista; Pilula Galbani Composita). செய்முறை.—பெருங்காயம், கால்பேனம், வெள்ளைபோளம், வகைக்கு 2-ஔன்ஸ்; வெல்லப்பாகு 1-ஔன்ஸ். இவைகளை ஜலயந்திரத்தில்வைத்து உருக்கி, சகலமும் ஏகோபிக்கிறவரையில் குழவிக்

கொடுக்கவும். மாத்திரை.-5-10-கிறேன். சூதகவலியுடைய ஸ்திரீகளுக்குக் காணுகிற, அஜிரணத்துக்குக் கொடுக்க இது திவ்வியமருந்து. (Assafœtida galbanum, myrrh, of each oz. 2; treacle, oz. 1.) Dose.—5-10-grs.

அம்மோனியாகம்.—(Ammoniacum Ammoniacum Plant. Dorema Ammoniacums). இது பெர்ஷியாவிலிருந்து வருகிற ஓர்விதபிசினி; உருண்டைகளாயாவது, கட்டியாயாவது இருக்கும்; ஓர்விதவாசனையாய், கசப்பாய், வெகுட்டலாயிருக்கும்; ஜலம்விட்டரைத்தால் பால்போலாகும். செய்கை-—உஷ்ணகாரி, கபஹாரி. உபயோகம்.—வார்த்தீப இருமல், காசம்முதலிய கபரோகங்களுக்கு உபயோகிக்க நல்லமருந்து. மாத்திரை.—10-20-கிறேன். இதை மாத்திரைசெய்தாவது, ஜலத்தில் கரைத்தாவது கொடுக்கலாம். Expectorant, Stimulant In coughs, asthma. Dose.—10-20-grains.

அம்மோனியாகம் மிக்ச்சர்.—(Ammoniacum mixture; Mistura Ammoniaci.) (பிசினி, $\frac{1}{4}$-ஔ; ஜலம் 8-ஔ.) இதில் $\frac{1}{2}$-1 ஔன்ஸ் அளவுக்குக் கொடுக்கலாம்.

கால்பேனம்.—(Galbanum, Galbanum plant. Ferula Galbaniflua.) இது பெர்ஷியா தேசத்திலிருந்து வருகிற ஓர்வித பிசின். செய்கை.—உஷ்ணகாரி, அங்காகர்ஷண நாசகாரி, கபஹாரி. உபயோகம்.—பெருங்காயத்துக்கிருக்கிற குணங்களே இதற்குமுண்டு, ஆனால் சாந்தமானது. இதைப் பிளாஸ்திரிசெய்து (காலபேனம் பிளாஸ்டர், Galbanum plaster; Emplastrum Galbani.) கட்டிகளுக்கும், நாள்பட்ட கபரோகங்களுக்கும் உபயோகிப்பதுண்டு. மாத்திரை.——10-20-கிறேன். இதை மாத்திரைசெய்து கொடுக்கலாம். Stimulant, antispasmodic, expectorant. Use. Similar to those of Assafœtida.

கோனியம் அல்லது ஹெம்லாக். (Conium or Hemlock.) இது சீமையில் விளைகிற ஓர்விதபூண்டு, இலையும் காயும் உபயோகம்; நித்திராகாரி, வேதனைசாந்தகாரி, அங்காகர்ஷண நாசனி. மாத்திரை அதிகமானால் கொல்லும். உபயோகம்.—இருமல், கீல்வாதம், வாலநோய்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—இலையின் தூளில், 2-8-கிறேன் வீதம் கொடுக்கலாம்.

கோனியம் சத்து.—(எகிஸ்ட்ராகட் ஆவ் ஹெம்லாக், Extract of Hemlock; எகிஸ்ட்ராகட் ஆவ் கோனியை, Extract of Conii). மாத்திரை.—2-6-கிறேன். நாள்பட்டால் வீரியம் குறைந்துவிடும். Dose.—2-6 grains.

வல்லாரை. (இலை.)

வல்லாரைப்பூண்டு.—Indian Hydrocotyle or Penny Wort, Hydrocotyle Asiatica.

வல்லாரை இலை.—మండూకబ్రహ్మీ. ஹைட்ரொகாட்டைல், Hydrocotyles Folia.

செய்கை.—வியதாபேத தாருட்டியகாரி, மேலுக்குப்போட்டால் உஷ்ணகாரியாகும்.

உபயோகம்.—தீமிரோடுகூடிய குஷ்டத்துக்குக் கொடுத்து, சவுக்கியம் கண்டதுண்டு. மேகப்புடைகளுக்குக் கொடுக்க நல்லமருந்து. சாதாரண சர்மரோகங்களுக்கு, உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகிக்கலாம்.

வல்லாரைச்சூரணம்.—(பவுடர் ஆவ் ஹைட்ரொகாட்டைல், Powder of Hydrocotyle; Pulvis Hydrocotyles) தேவையான இலையை ஆய்ந்து காம்புகளை நீக்கிவிட்டு, மெத்த சூடுபடாமல் நிழல்காற்றில் நன்றாய் உலர்த்தி, பிறகு இடித்து சன்னதூளாக்கக்கொண்டு, காற்றுப்புகாத புட்டியில் போட்டுப் பத்திரப்படுத்திக்கொள்ளவும்; வெயில், அக்கினி இவைகளின் உஷ்ணம்பட்டால், அதிலிருக்கிற தயிலம் போய்விடும், அந்த தயிலத்தில்தான் சத்து இருக்கின்றது. மாத்திரை —5-8-கிறேன் வீதம், தினத்துக்கு 3-ஆவர்த்தி கொடுக்கலாம். ரணங்களின்மேல் தூவினால், ஆறுகிற பக்குவத்தில் கொண்டுவரும்.

வல்லாரை இலையை ஜலம்விட்டு சதைத்து போல்டீஸ்செய்து, (Hydrocotyle poultice; Cotaplasma Hydrocotyles.) மேகவிரணங்களுக்குப்போட்டால் மெத்த நன்மைசெய்யும்.

(Non-officinal.)

சீரகம். జీలకర. (கம்மின் ஸீட்ஸ், Cumin Seeds; Cumium Cyminum) இது மசாலைகளில் சேருகின்றது. இதில் தயிலமுண்டு. இதின் குணம் கர்ப்பவாதஹாரி. இங்கிலீஷ் வைத்தியத்தில் உபயோகமில்லை, நமக்கு மெத்த உபயோகம்.

காப்பிக்கொட்டைச்செடியினம், (RUBIACEÆ.)

சிங்கோனுபார்க்

விவரணம்.—இதில் 3-சாதிகளுண்டு:

மஞ்சள் விங்கோனுபட்டை.—எல்லோவிங்கோனு பார்க், Yellow Cinchona Bark. Cinchonæ flavæ Cortex, Cinchona flava. Cinchona Colisaya, or Calisaya Yellow Cinchona.

வெளுரோடி விங்கோனுனபட்டை.—பேல்விங்கோனுபார்க், Pale Cinchona Bark, called also Crown or Laxa Bark. Cinchonæ Pallidæ Cortex, Cinchona Pallida. Cinchona Condaminea. C. Chahuarguera, C. Crispa Pale Cinchona.

சிவப்பு விங்கோனுபட்டை.—ரெட் விங்கோனு பார்க். Red Cinchona Bark. Cinchonæ rubræ Cortex. Cinchona Rubra. Cinchona Succirubra.

மேற்படி மூணுசாதிகளுக்குள், மஞ்சள் இனப்பட்டையில், குவைனு அதிகமாய் இருக்கும். இதற்கு பிரூவியன்பார்க் என்று (Peruvian Bark) சொல்லுவதுண்டு.

செய்கை.—முறைவியாதிரோதி, பலகாரி, ஸங்கோசனி. Antiperiodic. tonic, astringent.

உபயோகம்.—குவைனுவைப்போலவே உபயோகிக்கலாம்.

மாத்திரை —10-60-கிறேன் கொடுக்கலாம், ஆனுல் சூரணமாய்க் கொடுப்பது அரிது.

குவைனு

பிரதிபதங்கள்.—சுரசத்துரு. ஜ்வரசத்ரு. சல்பேட் ஆவ் குவைனு, Sulphate of Quina. குவைனிஸல்பஸ், Quinæ Sulphas; Quinæ Disulphas:

விவரணம்.—குவைனு என்னும் உப்பானது வெள்ளையாய், பளபளப்பாய், வாசனையற்றதாய், அதிக கசப்பாய், சிறிய கம்பிகளைப்போல் நீண்டிருக்கும், காற்றுப்பட்டால் தூளாகிவிடும். இது விலையுயர்ந்த சரக்காகையால் சருக்கரை, அாரூட்மாவு இவைமுதலியவைகள் கலந்து விற்பதுண்டு. கந்தகத் திராவகம் சேர்த்தால், உடனே ஜலத்தில் கரையும், குளிர்ந்த ஜலத்தில் கரையாது. குவைனைன் கரைந்திருக்கிற ஜலம், கொஞ்சம் நீலநிறமாய் இருக்கும்.

செய்முறை.—மஞ்சள் விங்கோனுப்பட்டை நொறுக்கியது, 1-பவுன் கிறிப்பு திராவகம், 3-ஔன்ஸ்; தீநீர்தேவையானது; பூநீர்கரைத்தசலம், 4-பையின்ட்; விளாவின கந்தகத்திராவகம் தேவையானது இவைகளைக் கொண்டு, குவைனு செய்துக்கொள்ளப்படுகின்றது. (Yellow Cinchona bark, ℔. 1; Hydrochloric Acid, foz. 3; Distilled water, a sufficiency; solution of Soda, pints 4; Diluted Sulphuric Acid, a sufficiency.)

செய்கை.—முறைவியாதிரோகி, பலகாரி, Antiperiodic, tonic.

உபயோகம்.—சீதசுரத்துக்கு இந்த ஔஷதம் சஞ்சீவி விடாக்காச்சலில் அத்தனை நன்மைசெய்யாது. சந்நிபாத சுரங்களுக்குக் குறைந்தமாத்திரையில், திராவகங்களைக்கலந்து கொடுத்தால் நன்மைசெய்யும். ஸ்போடக சுரங்களில் நாள்சென்றபிறகு, பலம்வருவதற்கு இதைக் கொடுக்கலாம். காச்சக்கட்டிக்கு, இதனோடு நல்லபேதி மருந்துகளைச் சேர்த்துக் கொடுக்கலாம் காலக்கிரமமாய்வருகிற வேதனைகளையும், தடுக்க இதற்கு வல்லமையுண்டு. கருக்கிருமல், இருமல், கண்வலி, அக்கி, சீதபேதி, பேதி, க்ஷயம் இவைமுதலிய ரோகங்களுக்கு குவைனுகொடுத்து ஆசுவாஸம் பிறந்ததுண்டு. குவைனுகொடுப்பதில், மலபந்தம், தலைநோய், காதில் கிங்காரத்துவனி இவைகள் பிறப்பதும் உண்டு. குவைனுவை அதிகமாய்ச் சாப்பிட்டு, செவிடு கண்டுமிருக்கிறது; இதைக் கொடுத்துக்கொண்டுவரும் போது காதிரைச்சல் கண்டால், உடனே மருந்தை நிறுத்திவிடவேண்டியது, அது மருந்து தேகத்தில் ஊறினதற்குக் குறி. வாந்திக்கும், பேதிக்குங் கொடுத்து, வயிற்றுதுஷ்டிகளை நீக்கி, பிறகு இதைக் கொடுத்தால் உடம்பில் சீக்கிரம் பற்றும். தேககொதிப்பு கண்டிக்கிறபோதும், தலையில் வேதனையிருக்கிறபோதும், இதைக் கொடுக்கலாகாது. Intermittent and typhoid fevers; splenic enlargement, neuralgic affections of periodical character, &c.

மாத்திரை.—1-3-கிறேன், தினத்துக்கு 2-3-ஆவர்த்தி கொடுத்தால் பலகாரியாகும். சுரம் முதலியவைகளைத் தடுக்க, 3-10-கிறேன் வீதம், வியாதி விட்டிருக்கிறபோது, அடிக்கடியாவது அல்லது அதிகமாய் ஒரேதடவை

யாய், சுரம் காணுகிற தருணத்திலாவது அல்லது வியர்வைகண்டு விடும் போதாவது கொடுக்கலாம். குவைஞவோடு, கந்தகத்திராவகம் கலந்து கொடுப்பது நல்லது ; அது விருப்பமில்லாத பக்ஷத்தில், மாத்திரை செய்து கொடுக்கலாம். வெறும் வயிற்றில் இதைக்கொடுத்தால், சீக்கிரந் தேகத் தில் பற்றுவது நிச்சயம்.

குவைஞபாவனத்திரவம். (டிங்சர் ஆவ் குவைஞ, Tincture of Quina; Tinctura Quiniœ). செய்முறை.—ஸல்பேட் ஆவ் குவைஞ, 160, கிறேன்; ஆரஞ்சித்தோல் பாவனத்திரவம், 1-பைன்ட். குவைஞவை, திரவத்திலிட்டு சூடேத்தி கரைத்து பிறகு அதை மூடி அடிக்கடிக் குலுக்கி 3-நாள்வைத்து, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.½-2-டிராம் கொடுக்கலாம். ஒரு திரா ணில், 1-கிறேன் குவைஞ உப்பு உண்டு. (Sulphate of quina, grs. 160; Tincture of Orange Peel, pint 1) Dose.—½-2 fdrs.

ஸிங்கோனப்பட்டைக்கஷாயம். டிகாக்ஷன் ஆவ் எல்லோ பார்க், Decoction of Yellow bark; Decoctum Cinchonœ flavæ). நொறுக்கிய மஞ்சள் சிங்கோனப்பட்டை-1¼-ஔன்ஸ்; ஜலம் 1-பைன்ட், மூடி 10-நிமிஷம் காச்சி, கஷாயம் குளிர்ந்தபிறகு வடிகட்டி, மறுபடியும், 1-பைன் ட்டுக்குத் தேவையான ஜலத்தை, திப்பியில்விட்டுச் சேகரித்துக்கொள்ளவும். மாத்திரை.—1-2-ஔன்ஸ். (Yellow bark, oz. 1¼, Water, pint 1.) Dose.—1-2 foz.

ஸிங்கோனப்பட்டை வெந்நீர் ஊறல் கஷாயம். (இன்பியூஷன் ஆவ் எல்லோ சிங்கோஞ, Infusion of Yellow Cinchona; Infusum Cinchonæ flavæ.) செய்முறை.—மஞ்சள் சிங்கோனப்பட்டைத்தூள், ½-ஔன்ஸ்; வெந்நீர் 10-ஔன்ஸ் மூடி 2-மணிநேரம் ஊறவைத்து வடிகட்டிக் கொள்ளவும்.மாத்திரை.-1-2-oz. இதுவும், கஷாயமும் நல்லபலத்தைத்தரும். கொஞ்சம் கந்தகத்திராவகம் சேர்த்தால், வீரியம் அதிகப்படும். இவைகளை வாய் ரணத்துக்குக் கொப்புளிக்கலாம்.

ஸிங்கோனப்பட்டை பாவனத்திரவம். (டிங்சர் ஆவ் எல்லோ சிங் கோஞ, Tincture of yellow Cinchona; Tinctura Cinchonæ flavæ). செய்முறை.—மஞ்சள் ஸிங்கோனப்பட்டைத்தூள், 4-ஔன்ஸ்; புரூவ்ஸ் பிரிட், 1-பைன்ட். இவைகளை, 2-நாள் ஊறவைத்து, பெர்க்கொலேடரில் விட்டு வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—½-2-டிராம். (Yellow Cinchona, oz. 4; Proof spirit, pint 1.) Dose.—½-2 fdrs.

இபிகாகியு ஏஞ. (வேர்.)

இபிகாக்செடி. Cephaelis Ipecacuanha. Ipecacuanha.

இபிகாக்வேர். இபிகாகியு ஏஞ. Ipecacuanha. Ipecacuanhæ Radix

விவரணம்.—இபிகாக் என்னும் வேரானது, நீண்டு, முடிச்சு முடிச்சா யிருக்கும். இதின் சூரணம், சந்தனநிறமாய், ஒருவித கெட்டவாசனையாய், கசப்பாய் இருக்கும்.

செய்கை.—வமனகாரி, சுவேதகாரி, கபஹாரி, கொஞ்சமாய்க் கொடுத் தால், வியதாபேதகாரி செய்கையைக் காட்டும். சூரணத்தைக் களிம்புசெய்து,

மேலுக்குத் தேய்த்தால் எரிச்சலெடுத்து, சிறிய சீழ்க்கொப்புளங்கள் ஜனிக்கும். Emetic diaphoretic, expectorant, alterative, counter-irritant.

உபயோகம்.—சீதபேதிக்கிக் கொடுக்க இது நல்ல மருந்து. 30-60-கிறேன் எடைக்குக் கொடுப்பதுண்டு. பேதி, அக்கினிமந்தம், இருமல், சுவாசகாசம், க்ஷயம், கக்கிருமல் இவைகளுக்கும் கொடுப்பது வழக்கம். பெரும்பாடுக்குக் கொடுக்கலாம். வயிற்று துஷ்டுகளை நீக்க இதை வாந்திக்குக் கொடுக்கலாம். குழந்தைகளுக்கும், சுகுமாரர்களுக்குங் கொடுக்க உதவும். விஷப்பூச்சிக்கடிகளுக்கு, இபிகாத்தூளில் ஜலம்விட்டுப் பிசைந்து போடலாம். In dysentery, dyspepsia, coughs, stings of insects, &c.

மாத்திரை.—15-30-கிறேன் கொடுத்தால் வாந்தியாகும். வெந்நீர் அடிக்கடி குடிக்கச்செய்தால், தாராளமாய் வாந்தியாகும். 1-3-கிறேன் எடை கொடுத்தால் குமட்டலுண்டாகும். கபமும் வெளிப்படும். $\frac{1}{4}$-$\frac{1}{2}$ கிறேன் கொடுத்தால் வியதாபேதகாரி செய்கையைத் தரும். 15-30 grs. emetic ; 1-3 grs. nauseant expectorant ; $\frac{1}{4}$-$\frac{1}{2}$ gr. alterative.

ஒயின் அவ் இபிகாகியுஏனு. (Wine of Ipecacuanha ; Vinum Ipecacuanhæ.) செய்முறை.—இபிகாக்வேர், 1-ஔன்ஸ; ஷெரி 1-பைண்ட். பாத்திரத்தை மூடி, அடிக்கடி குலுக்கி, 7-நாள் ஊறவைத்து, இறுத்து வடிகட்டி, 1-பைண்ட் அளவுக்குத் தேவையான ஷெரி ஒயின் சேர்த்து கொள்ளவும். மாத்திரை.—3-6-டிராம் கொடுத்தால் வாந்தியாகும், 5-40-மினம் கொடுத்தால், கபஹாரி, சுவேதகாரி, செய்கையைத்தரும். குழந்தைகளுக்கு 1-டிராம்வீதம், $\frac{1}{2}$-மணிக்கொருதரம் வாந்தியாகிறவரையில் கொடுக்கவேண்டியது. இது உபத்திரவமில்லாமல் வாந்தியையுண்டாக்கும். 1-ஔன்ஸ் திரவத்தில் 22-கிறேன் இபிகாக் சூரணமுண்டு. (Ipecacuanha, oz. 1; Sherry, pint, 1.) Dose.—3-6-fdrs. as emetic; 5-40 minims, as an expectorant and diaphoretic.

இபிகாக் கலவைசூரணம். டோவர்ஸ்பவுடர் (கம்பவுண்ட் பவுடர் ஆவ் இபிகாகியுஏனு. (Compound powder of Ipecacuanha ; Pulvis Ipecacuanhæ Compositus ; Pulvis Ipecacuanhæ cum opio.) செய்முறை.—இபிகாக்சூரணம், $\frac{1}{2}$-ஔன்ஸ்; அபினித்தூள், $\frac{1}{2}$-ஔன்ஸ்; ஸல்பேட் ஆவ் போடாஷ், 4-ஔன்ஸ். இவைகளைச் சேர்த்து, மிஸ்ரமித்து, சன்ன துணியில் வஸ்திரகாயஞ்செய்து, முடிவில் கலுவத்திலிட்டு, லேசாய் அரைத்துக்கொள்ளவும். மாத்திரை.—5-15-கிறேன் கொடுக்கலாம். இதில் சமனகாரி, சுவேதகாரி இச்செய்கைகள் விசேஷித்திருக்கின்றன. கீல்வாதம், வாதநோய்கள், சீதபேதி, பேதி, ஹஸ்மரிரோகம் இவைகளுக்குக் கொடுக்க இது நல்லமருந்து. 10-கிறேன் சூரணத்தில், 1-கிறேன் அபினியுண்டு. இதைத் தேனிலாவது, வெல்லத்திலாவது கலந்து சயனிக்கும்போதுகொடுத்தால், நல்ல நித்திரை பிறக்கும். (Ipecacuanha, oz. $\frac{1}{2}$; Opium, oz. $\frac{1}{2}$; Sulphate of Potash, oz. 4.) Dose.—5-15 grs. in 10 grs. 1 of Opium.

விலாரி. బండారచెట్టు, (Hymenodictyon excelsum. Cinchona excelsa.) இதின் உள்பட்டைக்கு, சிங்கோனுவுக்கிருக்கிறகசப்பு, துவர்ப்பு குணங்கள் உண்டு ; அதற்குப் பதிலாய் இதின்பட்டையை உபயோகித்துப் பார்க்கலாம். இதின் இலையை ரணங்களுக்குவைத்துக் கட்டுவது நாட்டு வழக்கம்.

மருக்காளங்காய். మంగకాయ. మ్రంగకాయ, మండాకాయ (Randia Dumetorum ; Emetic nut.) இதற்கு வாந்தியை யுண்டாக்குகிற குணமுண்டு. காயை உடைத்து உள்ளிருக்கிற உலர்ந்தசதையை எடுத்து தூள் செய்து, துணியில் வடிகட்டினால், விரைகள் துணியில் நின்றுவிடும். சூரணத்தை மறுபடியும் சன்னமாய் அரைத்து, மெல்லியதுணியில் வடிகட்டி, காற்றுப்புகாத புட்டியில்போட்டு வைத்துக்கொள்ளவும். இது இபிகாக் என்னும் சூரணத்துக்குச் சமனானது. வயிற்றிலிருக்கிற துஷ்டுகள்போக வாந்திக்கும், சீதபேதிக்கும் கொடுக்கலாம். மாத்திரை.—40-கிறேன் எடை, தேனிலாவது, சருக்கரையிலாவது கொடுத்தால் வாந்தியாகும் ; 15-30-கிறேன் எடை சீதபேதிக்கிக் கொடுக்கலாம். 2-3-காயை உடைத்து, 3-4-ஔன்ஸ் ஜலத்தில் 10-15-நிமிஷம்ஊறவைத்து பிசைந்து, வடிகட்டிக்கொடுத்தால், 10-நிமிஷத்தில் வாந்தியாகும், வெந்நீர் குடித்தால் அதிகப்படும். குழந்தைகளுக்கு வயதுக்குத் தக்கபடி, வாந்திக்கும், கபத்தைக் கண்டிக்கவும் கொடுக்கலாம். சீதபேதிக்குக் கொடுக்க 1-2-கால்கள் போதும். 20-40-துளி லாடனம்சேர்த்து, தினத்துக்கு 3-4–தடவை கொடுக்கலாம். அபினியைச் சேர்ப்பதில் மருந்தின் வீரியம் அதிகப்படுகின்றது.

மஞ்சிட்டி.(Indian Madder; Rubia Cordifolia.)మంజిష్ఠ, తాంమ్రవల్లి. துணிகளுக்குச் சாயம்போட உபயோகிக்கிற இந்தவேரைக் கஷாயமிட்டு பிரசவித்தவர்களுக்கு, அழுக்கு செவ்வையாய்விழ கொடுப்பது வீட்டுவழக்கம் ; தயிலமுறைகளில் இதைச் சேர்ப்பதுண்டு.

காப்பிக்கோட்டைச்செடி. (Coffee; Coffea Arabica.) காப்பிக்கு பலகாரி, உஷ்ணகாரிசெய்கைகளுண்டு. காரமாய்ச்செய்த காபிஜலம், பேதியைநிறுத்தும்; அதிகமாய்க் குடித்தால் பேதியாகும், ஜாடராக்கினிவர்த்தன குணமுமுண்டு. குவைனை, நில ஆவாரை, சீமை இந்துப்பு இவைகளைக் காபிஜலத்தோடு சேர்த்துக்கொடுத்தால், அவைகளுக்குடைய வெகுட்டலைப் போக்கும். சுவாசகாசத்துக்கு காபிஜலம் குடிக்கவைத்தால், கஷ்டசுவாசம் உடனே சமனப்படும்.

நுணச்செடி. మాఁడిచెట్టు. (Morinda Umbellata.) இதின் இலையின் ஈர்க்கோடு துளசி, கரசிலாங்காணி, மிளகு, சுக்கு முதலியவைகள் சேர்த்து, கஷாயமிட்டு குழந்தைகளுக்குக் கொடுத்தால், பேதிநிற்கும்

நத்தைச்சூரி. మొదన (Spermacoce hispida.) நன்னாரிவேரைப்போல் மதுரமாய் இருக்கிற இதைக் கஷாயமிட்டு மேகரோகங்களுக்கு, வியதாபேதகாரியாய்க் கொடுப்பது நாட்டுவழக்கம்.

சடாமாஞ்சியினம். VALERIANEÆ.

சீமை சடாமாஞ்சி

சீமைசடாமாஞ்சிச்செடி. Valeriana Officinalis; Common Valerian.

சீமை சடாமாஞ்சிவேர். வெலீரியன்ரூட், Valerian root; Valerianæ Radix.

விவரணம்.—நீண்ட இந்தவேரில், சல்லிவேர்கள் அதிகமாய் ஒட்டிக்கொண்டிருக்கும்; அதிககாரமுள்ள வாசனையுண்டு; அது புதுவேரில் இனிப்பாய் இருக்கும், நாள்சென்றால் துற்வாசனை வீசும்.

செய்கை.—உஷ்ணகாரி, அங்காகர்ஷணநாசனி. Stimulant and antispasmodic.

உபயோகம்.—சூதகவலிக்கு இது எடுத்தச்சரக்கு; சாவதானப்பட்ட சுரங்கள், தாபனரோகங்கள் இவைகளுக்கு உஷ்ணகாரியாய்க் கொடுக்கலாம். In hysterical affections, fevers, asthenic inflammations.

மாத்திரை.—சூரணத்தில் 20-40-கிறேன் கொடுக்கலாம். Of the powder, 20-40-grs.

சீமைசடாமாஞ்சிவெந்நீர் ஊறல்கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ்வெலீரியன், Infusion of Valerian; Infusum Valerianœ.) செய்முறை.—சீமை சடாமாஞ்சிவேர், 120-கிறேன்; வெந்நீர், 10-ஔன்ஸ். பாத்திரத்தை மூடி, 1-மணிநேரம் ஊறவைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-2-ஔன்ஸ். (Valerian root, grs. 120; Boiling water, oz. 10.) Dose.—1-2 foz.

சீமை சடாமஞ்சி பாவனத்திரவம். (டிங்சர் ஆவ் வெலீரியன், Tincture of Valerian; Tinctura Valerianæ.) செய்முறை.—இடித்தச் சடாமாஞ்சிவேர் $2\frac{1}{2}$-ஔன்ஸ்; புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். இவைகளை ஊறவைத்து, பெர்கொலேடரில் போட்டு வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-2-டிராம் கொடுக்கலாம். (Valerian root, oz. $2\frac{1}{2}$; Proof Spirit, pint 1.) Dose.—1-2 fdrs.

நவக்ஷாரமது கலந்த சீமை சடாமாஞ்சி பாவனத்திரவம். (அம்மோனியேடெட் டிஞ்சர் ஆவ் வெலிரியன், Ammoniated Tincture of Valerian; Tinctura Valerianœ Ammoniata.) செய்முறை.—சீமை சடாமாஞ்சிவேர், $2\frac{1}{2}$-ஔன்ஸ்; பரிமளநவக்ஷாரமது, 1-பைன்ட். இவைகளை மூடி, 7-நாள் ஊறவைத்து, பிறகுவடிகட்டி, 1-பைன்ட் அளவுக்குத் தேவையானமதுவை விட்டுக்கொள்ளவும்.) மாத்திரை.—$\frac{1}{2}$-1-டிராம். சூதகஜந்நி முதலிய வியாதிகளுக்குக் கொடுக்க இது உயர்ந்த ஔஷதம்.

(NON-OFFICINAL.)

நாட்டு சடாமாஞ்சி.—பெருங்கோரை. ஜடாமாஂஜ. (நார்டாஸ்டேசிஸ் ஜடாமாஞ்ஸி, Nardostachys Jatamansi.) இது ஹிமோத்கிரி பருவதஸ்தானங்களிலிருந்து வருகின்றது. குணத்தில் சீமைச்சரக்குக்கு ஒத்திருக்குமென்று நம்பிக்கை. இதை நமது வைத்தியர்கள் அபஸ்மாரகம், சூதகஜந்நி, வலிகள் முதலியவைகளுக்கு கஷாயமிட்டுக் கொடுப்பது வழக்கம்.

சாமந்திப்பூ இனம். (COMPOSITÆ.)

சாமந்திபுஷ்பம்

இதில் வெள்ளை, மஞ்சள், ஊதா என மூன்றுஜாதிக ளுண்டு. சீமை சாமந்திபுஷ்பத்துக்குப் பதிலாக, நமது தேசத்து புஷ்பத்தை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

சீமை சாமந்திப்பூ. செவ்வந்திப்பூ, (காமோமைல் பிளவர்ஸ், Chamomile Flowers. Anthemidis Flores. Anthemis Nobilis. Common Chamomile.)

செய்கை.—உஷ்ண பலகாரி, காற்பவாதஹாரி. Stimulant, tonic and carminative.

உபயோகம்.—துற்பலம், சூதகஜந்நி, மந்தாக்னி இவை முதலியவைகளுக்குக் கொடுக்க உதவும். முன்பு சீதசுரத்துக்குக் கொடுத்ததுண்டு, ஆனால் இப்போது இதைப்பார்க்கிலும் விசேஷ ஔஷதங்கள், கையிலிருக்கின்றன. In debility, hysteria, dyspepsia ; formerly in fevers.

சீமை செவ்வந்திப்பூ வெந்நீர்ஊறல் கஷாயம். (இன்பியூஷன் ஆவ் காமொமைல், Infusion of Chamomile ; Infusum Anthemidis.) செய்முறை.—செவ்வந்திப்பூ $\frac{1}{2}$-ஔன்ஸ்; வெந்நீர், 10-ஔன்ஸ். மூடி 15-நிமிஷம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$1\frac{1}{2}$-ஔன்ஸ் வீதம், தினத்துக்கு 2-3 ஆவர்த்திகொடுத்தால் பலம்வரும். வாந்திக்கிக் கொடுத்து பிறகு இந்த கஷாயத்தைக் கொடுத்தால், தாராளமாய் வாந்தியாகும். சுளுக்கு முதலியவைகளுக்கு, இதை ஒத்திடமாகவுங் கொடுப்பதுண்டு.

இந்தப் புஷ்ப்பத்திலிருந்து வடித்தெடுக்கிற தயிலமும் (Oil of Chamomile), சத்தும் (Extract of Chamomile) உபயோகமாகின்றன. தயிலத்தில், 1-5-துளி சருக்கரையில் விட்டும், சத்தில், 5-10-கிறேன் வீதம், மாத்திரைச்செய்தும் கொடுக்கலாம்.

ஸான்டொனீன் கிருமிப்பொடி

ஸான்டொனீன்.—Santonin Santoninum.

விவரணம்.—வொரம்ஸீட், (Worm seed; Santonica; Artemisia.) என்றும் பூண்டிலிருந்து எடுக்கிற உப்பாகிய ஸான்டோனீன் என்பது, தகடுகளாய், பளபளப்பாய், நேற்றியாய் இருக்கும், வெளிச்சம்பட்டால் வெகு சீக்கிரத்தில் மஞ்சள் நிறமாகிவிடும்; கசக்கும், ஜலத்தில் கரையாது, சாராயத்தில் கரையும்; கொஞ்சஞ் சூடுபட்டால் பரந்துவிடும். இது ரஷியா தேசத்துச் சரக்கு.

செய்கை.—கிருமிநாசகாரி.

உபயோகம்.—நீண்டு நாகப்பூச்சிப்போலிருக்கிற கிருமிகளை அதஞ் செய்வதற்கு இதைவிட வேறொன்றுமில்லை, சீக்கிரத்தில் வெளிப்படுத்துமென்று சந்தேகமறச் சொல்லலாம்.

மாத்திரை.—4-வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 2-4-கிறேன் வீதமும், 12-வயதுக்கு மேல்பட்டால் 6-8-கிறேன் வீதமும், பஞ்சதாரையிலாவது, வெல்லத்திலாவது வைத்துக் கொடுத்துவிடலாம். இராத்திரி ஒரு தடவை கொடுத்து, மறுநாள் காலையிலும் ஒருமுறை சாப்பிடச்செய்து, கொஞ்சநேரஞ் சென்றபிறகு, ஆமணக்கெண்ணெய் கொடுத்தால், கிருமிகள் கூடோடு வெளிப்பட்டுவிடும்.

டெராக்ஸெகம். (வேர்.)

டெராக்ஸெகம்.—(Taraxacum; Taraxaci radix. Dandelion.) இந்த வேருக்கு, வியதாபேதகாரி, பலகாரி, பித்தகாரி (Alterative, tonic, cholagogue) இத்துணங்களுண்டு. இதை அக்கினிமந்தம், யகிர்த்கண்ட ரோகங்கள், (முக்கியமாய் மஞ்சட்காமாலை) இவைகளுக்குக் கொடுத்து சவுக்கியம் கண்டதுண்டு. டெராக்ஸிகம் சத்தில், (எகிஸ்ட்ராக்ட் ஆவ் டெராக்ஸெகம். Extract of Taraxacum; Extractum Taraxaci) 10-30-கிறேன் வீதம் தினத்துக்கு 3-4-தடவை கொடுக்கலாம்.

அக்கிராகாரம்

அக்கிராகாரச்செடி.—(பெல்லிடொரி ஆவ்ஸ்பெயின், Pellitory of Spain. Anacyclus Pyrethrum).

அக்கிராகாரம்.-பெல்லிடொரி ரூட், Pellitory root; Pyrethri Radix.

விவரணம்.—இந்தவேர் சுமார் விரல்பிரமாணமாய், கறுத்திருக்கும்; மென்ருல், உதடுகளிலும், நாக்கிலும் விறுவிறுப்போடு எரிச்சலெடுக்கும்.

செய்கை.—உஷ்ணகாரி, மேலுக்குப் போட்டால் காந்தலெடுத்து, சிவப்புண்டாகும், திரவகாரி. Stimulant; locally irritant, rubefacient; sialagogue.

உபயோகம்.—பல்வலி. உண்ணுக்குவளர்த்தி, தொண்டைக்கம்மல், ஜிக்குவாஸ்தம்பனம் இவைகளுக்கு உபயோகித்து சவுக்கியம் கண்டதுண்டு. In tooth-ache, relaxation of the uvula, aphonia, paralysis of the tongue.

அக்கிராகாரப்பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் பெல்லிடொரி, Tincture of Pellitory; Tinctura Pyrethri.) செய்முறை.—அக்காரகாராம் பொடித்தது, 4-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 1-பைன்ட். இதைப் பெர்க்கொலேஷன் முறையாய்ச் செய்துகொள்ளவேண்டியது. முக்கியமாய் பல்வலிக்கு இதைப் போடப்படும். (Pellitory root, oz. 4; Rectified Spirit, pint 1.) Chiefly in tooth-ache.

(NON-OFFICINAL.)

காட்டுசீரகம்.—అడవిజీలకర్ర. (வெர்ஞேனிய ஆந்தல் மின்டிக, Vernonia anthelmintica.) செய்கை.—கிருமிக்னி. உபயோகம்.—இதைப் பொடித்து, $1\frac{1}{2}$-திராம் எடுத்து 2-பங்குசெய்து இரண்டுதடவையாய், தேனில் கலந்துக்கொடுத்து, பிறகு பேதிக்கிக் கொடுத்தால் கிருமிகள் செத்துவிழுமென்று சொல்லுகிருர்கள். 10-30-கிறேன் எடைக்கு வெந்நீர் ஊறல் கஷாயமிட்டுக் கொடுக்கலாமென்றும் கண்டிருக்கிறது. இதை எலுமிச்சம் பழரஸம் விட்டரைத்து, பேனைக்கொல்ல தலைக்கு பூசுவதுமுண்டு. இதற்கு பலகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி, மூத்திரவர்த்தனகாரி இக்குணங்களும் உண்டென்று கண்டிருக்கிறது.

மருக்கொழுந்து.—దవనం. (ஆர்டிமீஸியா இன்டிகா, Artemisia Indica.) இது பலத்தைத்தரும், தீபனத்தை அதிகப்படுத்தும். தேகக்ஷீணத்

தின்மேல் காணுகிற வலிகளுக்குக் கொடுக்க உதவும். ரணங்களுக்கு ஒற்றிட மிடலாம். வெந்நீர் ஊறல் கஷாயமிட்டுக் கொடுக்கலாம்.

கோஷ்டம்.—விரணாரி. కోష్ఠము Aplotaxis auriculata. (Costus Arabicus). அபினிக்குப் பதிலாய் இதை முன்னம் புகைபிடித்ததுண்டாம் உஷ்ணகாரி; முக்கியமாய் துணிகளைப் பூச்சுகளடிக்காமல் இதை வாசனைக்கு வைப்பதுண்டு. வெந்நீர் கஷாயமிட்டு தோஷசுரங்களுக்குக் கொடுப்பது நாட்டுவைத்தியம்.

செவ்வந்திப்பூ.—சாமந்திப்பூ. చేమంతి. Chrysanthemum Roxburghii.) இதைச் சீமை செவ்வந்தி புஷ்பத்துக்குப் பதிலாய் உபயோகிக்கலாம். உலர்ந்த புஷ்பத்தை மென்றால் நாக்கில் விறுவிறுப்புகாணும். வேருக்கு, அக்கராகாரத்தின் குணமுண்டு, ஆனால் அதற்குப் பதிலாய் இதை நம்பிக்கையுடன் உபயோகப்படுத்த உதவாது.

கையாந்தகரை.—கரசனுங்கண்ணி. கரசிலாங்காணி. గుంటగలిగర. (இக்ளிப்டப்ராஸ்ட்ரேரடா, Eclipta prostrata). இதின்வேருக்கு, விரேசன வமனகாரி குணங்களிருக்குதென்று எண்ணம். இதை மஞ்சட்காமாலை, காசக்கட்டி, நீர்க்கோவை இவைகளுக்குக் கொடுக்கலாமென்றும், டொராக்ஸியம் என்னும் சரக்குக்குப் பதிலாக உபயோகிக்கலாமென்றும் கண்டிருக்கிறது. இந்தப் பூண்டின் தனிரசம், (சுரசம்) கொடுத்தால் நல்லது. பாலமாந்தங்களுக்குக் கஷாயமிட்டுக் கொடுப்பது வீட்டுவழக்கம். இதைத் தயிலமுறைகளில் சேர்ப்பதுண்டு.

மாஸிபத்திரி.—మాచిపత్రి. (உரம்உட், Worm wood; Artemesia Absinthium.) செய்கை.—கிருமிக்கினி, பலகாரி. உபயோகம்.—கிருமிரோகம், துற்பலம், அக்கினிமந்தம் இவைகளுக்குக் கொடுக்கலாம். வீக்கங்களுக்கு ஒத்திடமிடலாம். மாத்திரை.—சூரணத்தில் 20-30-கிறேன் இடைக்கும், வெந்நீர் ஊறல்கஷாயத்தில், 1-2-ஔன்ஸ் அளவுக்கும் கொடுக்கலாம். சான்டோனீன் என்னும் உப்பு இதிலுண்டு.

யூவா அர்ஸை.—(Uva Ursi; Uvæ Ursi Folia; Bear-berry leaves; Arctostaphylos Uva Ursi.) சீமையிலும், அமெரிக்காதேசத்திலும் விளைகிற ஒருசாதி பூண்டின் இலை; இதற்குச் சங்கோசன, மூத்திரவர்த்தன காரி குணங்களுண்டு. மூத்திரப்பை ரோகங்களுக்கு உபயோகிக்கலாம். தூளில், 10-30-கிறேன் வீதமும், வெந்நீர் உறல் கஷாயத்தில் ($\frac{1}{2}$-ஔன்ஸ் இலை-10-ஔன்ஸ் ஜலம்) 1-2-ஔன்ஸ் வீதமும் கொடுக்கலாம்.

இலுப்பைச்செடியினம். (SAPOTACEÆ.)

(NON-OFFICINAL.)

இலுப்பை.—இதில் நாட்டிலுப்பை. ఇప్పచెట్టు.(Bassia Longifolia)-காட்டிலுப்பை, (Bassia latifolia.) என இரண்டு சாதிகளுண்டு. இலுப் பெண்ணெய் சீக்கிரத்தில் காறலெடுத்துப்போவதால், மருந்துகளுக்கு உதவாது, ஆனால் சவுக்காரஞ்செய்யத் தகுதியானது. இலுப்பைப்பூ சாராயத்தை பிராந்திக்குப் பதிலாக உபயோகிக்கலாம். இலுப்பைக்கட்டிக்கு வமனகுணமுண்டு. ஊமத்தங்காயைத் தின்றவர்களுக்கு, வாந்திக்கு இதைக் கொடுத்ததாய் கண்டிக்கிறது.

மோகடஞ்சேடி.—పొగడచెట్టు (Mimusops Elengi.) இதின் பட்டைக்கு ஸங்கோசன, தாருட்டியகாரி குணங்களுண்டாம். சுரங்களுக்கும், துற்பலத்துக்கும் இதைக் கொடுப்பதுண்டு; பட்டையின் கஷாயத்தை வாய்ரணத்துக்குக் கொப்புளிக்கலாம்; மொகடம்புஷ்பத்தீநீர் மருந்துகளுக்கும், வாசனைக்கும் உபயோகமாகும்.

கருங்காலியினம். (EBENACEÆ.)

தும்பலிக்காய். பனிச்சிக்காய்

பனிச்சிக்காய்ச்செடி.— Diospyros Embryopteris; Embryopteris glutinifera.

பனிச்சிக்காய்.—తుమికి, తెండుకి, తుబికి. Diospyri Fructus.

செய்கை.—சங்கோசனி.

பனிச்சிக்காய் சத்து.—எகிஸ்ட்ராக்ட் ஆவ் டையாஸ் பைராஸ், Extract of Diospyros; Extractum Dyospyri.) செய்முறை.— தேவையான பழத்தையெடுத்து, சதைத்து, பிழிந்து, ரஸத்தை ஜலயந்திரத்தில்வைத்து, ஈரத்தைப் போக்கிக்கொள்ளவும். இதைக் கல்கார்க்குடைய புட்டியில் வைத்துக்கொள்ளவேண்டியது இதில் சங்கோசனகாரிகுணம் அதிகமுண்டு. பேதி, சீதபேதி இவைகளுக்குக் கொடுக்க உதவும். 2-டிராம் சத்தை, 1-பையின்ட் ஜலத்தில் கறைத்து, கருப்பப்பிரமேகத்துக்கு வஸ்தி செய்து பிரயோகிக்கலாம். மாத்திரை.—1–5-கிறேன்வீதம், திரிகாலக்கிரமமாய்க் கொடுக்கலாம்.

(NON-OFFICINAL.)

கருங்காலிமரம்.—Diospyros melanoxylon, (Ebony Tree.) இந்தச் செடியின் பட்டைக்குப் பலகாரி, சங்கோசனகாரி குணங்களுண்டு; கஷாயமிட்டு, பேதி, அக்கினிமந்தம், துற்பலம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

மலக்கா சாம்பிராணியினம். (STYRACACEÆ.)

மலக்கா சாம்பிராணி

மலக்காசாம்பிராணிச்செடி.—பென்ஜாயின் டிரி, Benzoin Tree. Styrax Benzoin.

மலக்காசாம்பிராணி.—பென்ஜாயின், Benzoin ; Benzoinum.

விவரணம்.—பார்னியோ, ஜேவா, சுமேட்ரா, சியாம் இந்த தேசங்களில் விளைகிற செடியின் பட்டையிலிருந்து வடிந்து, உலர்ந்துபோன ஓர் வித தயிலம்; புட்டுப்பார்த்தால், சிறியம்ணிகளைப்போல் அகப்படும்; நல்ல வாசனையாய், இனிப்பாய் இருக்கும்.

செய்கை.—உஷ்ணகபஹாரி, மேலுக்குப்பேட்டால், உஷ்ணகாரி குணத்தைத் தரும்.

உபயோகம்.— புராதன இருமல் முதலிய கபரோகங்களுக்கு இதைக் கொடுக்கலாம். இதின் தூபம், துற்வாசனைகளையும், கக்கிருமல் ரோகத்தையும் விலக்குமென்று கண்டிக்கிறது. இதை உள்ளுக்குக் கொடுப்பது அரிது.

மாத்திரை.— 10-20- கிறேன்.

மலக்கா சாம்பிராணி கலவைபாவனத் திரவம்.—(காம்பவுண்டு டிங்சர் ஆவ் பென்ஜாயின், Compound Tincture of Benzoin; Tinctura Benzoini composita.) செய்முறை.—மலக்கா சாம்பிராணிப்பொடி, 2-ஔன்ஸ்; சுத்திசெய்த ஸ்டோராக்ஸ், $1\frac{1}{2}$-ஔன்ஸ்; பால்ஸம் ஆவ் டொலு, $\frac{1}{2}$-ஔன்ஸ்; மூஷாம்பிரம் 160-கிறேன்; ரெக்டிபைட் சாராயம், 1-பைன்ட். மூடி, 7-நாள் ஊறவைத்து, வடிகட்டி, 1 பைன்டுக்குத் தேவையான சாராயம் விட்டுக் கொள்ளவும் மாத்திரை.—$\frac{1}{2}$-1-டிராம். இதற்கு பிரியர்ஸ் பால்ஸம், (Friar's Balsam) என்றுபேர். காயங்களுக்கும், ரணங்களுக்கும் இதை உபயோகித்து நல்லபே ரெடுத்ததுண்டு.

சாம்பிராணிகலந்த பன்றிநெய்.—(பென்ஸோ எடெட் லார்ட், Benzoated Lard; Adeps Benzoatus) செய்முறை.— சுத்திசெய்த பன்றி நெய், 1-பவுன்; மலக்கா சாம்பிராணித்தூள், 1060-கிறேன். பன்றி நெய்யை ஜலயந்திரத்தில்வைத்து உருக்கி, சாம்பிராணியைச் சேர்த்து, அடிக்கடித் துழவிக்கொடுத்து, 2 - மணிநேரஞ் சுடவைத்து, முடிவில் வடிகட்டி வண்டலைப்போக்கிவிடவேண்டியது. இது சீக்கிரத்தில் கெட்டுப்போகாது. சுத்திசெய்த பன்றிநெய்யைப்போலவே, இதையும் உபயோகிக்கப்படும். (Lard. ℔ 1 ; Benzoin,160 grs.)

மலக்கா சாம்பிராணிப்பதங்கம்.—(பென்ஜாயிக் ஆஸிட், Benzoic Acid ; Acidum Benzoicum.) விவரணம்.—மலக்கா சாம்பிராணியைப் பதங்கித்து, இதைச் சேகரிக்கப்படும். இது மிருதுவாய், வெள்ளையாய், சிறிய கம்பிகளாய் இருக்கும் ; சாம்பிராணியைப்போல், இதற்கு நல்ல வாசனையுண்டு; ஜலத்தில் மெத்தக் கறையாது, சாராயத்தில் தீவிரம் கரைந்துவிடும். புளிப்பும், காரமுமாய் இருக்கும்; காற்றில்கெடாது; எரித்தால் புகைந்துவிடும்; இதின்புகை இருமலையுண்டாக்கும் செய்கை.—கபஹாரி உபயோகம்.—மூத்திரதோஷங்களை இது எடுக்குமென்று எண்ணம். மஞ்சட்காமாலை, குழந்தைகளுக்குக் காணுகிற சொட்டுமூத்திரம் இவைகளுக்குக் கொடுத்து சௌக்கியம் கண்டதுண்டு. மாத்திரை.—10-15-கிறேன் எடைகொடுக்கலாம். Stimulant. Dose.—10-15 grs.

ஆலிவ் என்னும் செடிஇனம். (OLEACEÆ.)

சீமை எண்ணெய்

ஆலீவ்செடி,—European Olive; Olea Europæa.

சீமை எண்ணெய்.—சுவீட் ஆயில், Sweet Oil; ஸலாத் ஆயல். Salad oil; ஆலிவ் ஆயல், Olive Oil, Olivæ Oleum.

குணங்கள்.—யூரோப், ஆபிரிகா, இந்தத்தேசங்களில் விளைகிற செடியின் வித்திலிருந்து எடுக்கிற இந்த எண்ணெயானது, தாவள்ளியமாய், தடித்து பிசுபிசுப்பாய் மஞ்சள் நிமாயாவது, துல்லியமாயாவது, பச்சை சாயலாயாவது இருக்கும். முதல்தரமான எண்ணெய் தெளிவாய் வாசனையில்லாமலிருக்கும். பழத்தைச் செக்கிலிட்டு, இந்த எண்ணெய் எடுக்கப்படும். இதில் இலேயீன் அல்லது ஒலியீன் (Elaine or Oleine) மார்கெரீன் (Margarine) என்கிற பதார்த்தங்க ளிருக்கின்றன.

செய்கை. உபயோகம்.—லகுவிரேசனி; ஆனல் முக்கியமாய் வினிக்தத்துக்கு உபயோகிக்கப்படும்; நஞ்சுதின்றவர்களுக்குக் கொடுத்தால், அதைப்

பிசுறிக்கொண்டு அன்னுசயத்தில் பிரவேசிக்கவொட்டாமல் செய்யும் பூசுத் தைலங்களும், களிம்புகளும் செய்கிறமுறையில் இதைச் சேர்க்கப்படும். சொறி சிரங்கு, அக்கினிவிரணம், வெந்நீர் விரணம் இவைகளுக்குப் போடலாம். மாத்திரை.—1-2-ஔஸன்ஸ் கொடுத்தால் மலம் இளகும், ஆனால் அப்படிக் கொடுப்பது அரிது. Mild laxative, emollient. Dose.—1-2-foz.

கட்டிச்சவுக்காரம்.—(ஹார்ட்சோப், Hard Soap; Sapo Durus; called also Castile or Spanish Soap.) சீமைஎண்ணெயுடன் ஸோடாவைச் சேர்த்து இதைச் செய்யப்படும்.

சவுக்காரப்பூசுத்தயிலம்.—(ஸோப்லினிமெண்ட், Soap Liniment; Linimentum Saponis.) செய்முறை.—கட்டிச்சவுக்காரம், $2\frac{1}{2}$-ஔன்ஸ்; சூடன், $1\frac{1}{4}$-ஔன்ஸ்; ரோஸ்மரிதயிலம், 3-திராம்; ரெக்டிபைட் சாராயம், 18-ஔன்ஸ்; தீநீர்-2-ஔன்ஸ். ஜலத்தைச் சாராயத்துடன் கலந்து, அதில் மத்தசசரக்குகளைப்போட்டு, அடிக்கடிக் குலுக்கி, 7-நாள் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். உபயோகம்.—சீல்வாதம் முதலிய வாதநோய்களுக்குப் பூச மெத்த சிரேஷ்டமானது. Hard Soap, oz. $2\frac{1}{2}$; Camphor, oz. $1\frac{1}{4}$; Oil of Rosemary, fdr. 3; Rectified Spirit, foz. 18; Water, foz. 2.) Use.—In rheumatism and other painful affections.

சவுக்காரக் கெட்டிக்களிம்பு.—(ஸோப் பிளாஸ்டர், Soap Plaster; Emplastrum Saponis.) செய்முறை.—கட்டிச்சவுக்காரம் 6-ஔன்ஸ்; வங்கப்பிளாஸ்திரி, $2\frac{1}{4}$-பவுன்; ரோஜனம், 1-ஔன்ஸ். பிளாஸ்திரியைச் சிறுதீயிட்டுருக்கி, பிறகு மற்ற இரண்டையும் உருக்கி, டை சரக்கோடுச் சேர்த்து, பதத்துக்குக் காய்ச்சிக்கொள்ளவும். இதை முக்கியமாய் மூட்டு வியாதிகள், சுளுக்கு இவைகளுக்கு உபயோகப்படுத்தப்படும். (Hard Soap, oz. 6; Lead Plaster, ℔. $2\frac{1}{4}$; Resin, oz. 1.) Use.—Chiefly in affections of the joints, sprains, &c.

இளகியசவுக்காரம்.—(ஸாப்ட் ஸோப், Soft soap; Sapo mollis.) சீமை எண்ணெயுடன், போடாஷ் சேர்த்து இதைச் செய்யப்படும். செய்கை. உபயோகம்.—வினித்தகாரி; கரப்பான் முதலிய சருமரோகங்களுக்கு மேலுக்குத் தேய்த்துக் கழுவலாம்.

கிளிஸிரீன்.—(Glycerine; Glycerynum) எண்ணெய்களிலும், கொழுப்புகளிலுமிருந்து இதைச் சேகரிக்கப்படுகிறது. இது துல்லியமாய், வாசனையில்லாமல், இனிப்பாய், ஜலத்திலும், சாராயத்திலும் கறையத்தக்கதாய், எண்ணெயைப்போலவே இருக்கும். செய்கை. உபயோகம்.—வினித்தகாரி. செவுடுக்கு இதைக் காதிலிட்டால், குணமுண்டாகுமென்று கண்டிக்கிறது; கொஞ்சநேரமாத்திரம் இதின் குணமிருக்கும். மாத்திரை.—1-2-டிராம். Emollient. In deafness. Dose.—1-2 fdrs.

மான்னு

மான்னுச்செடி.—Fraxinus Ornus; Flowering Ash; Fraxinus Rotundifolia; Round-leaved Ash.

மான்னு.—சீர்கஸ்த். ಮನಾ Manna.

விவரணம்.—யூரோப்தேசத்தில் விளைகிற செடியைக் கீறிஎடுக்கிற இந்தப்பாலானது கட்டிகளாய், இனிப்பாயிருக்கும்.

செய்கை. உபயோகம்.—லகுவிரேசனி. இதில் இளிப்பிருக்கிறபடியால் குழந்தைகளுக்குக் கொடுக்க நல்லது; நிலவாகை, உப்புபேதி இவைகளுடன் சேர்த்துக்கொடுக்க உதவும்; வெகுட்டலைநீக்கி செவ்வையாய் பேதியாகு [illegible]. Laxative, well adapted for children.

மாத்திரை.—குழந்தைகளுக்கு, 1-3-திராம்வீதமும், பெரியவர்களுக்கு, 1-2-ஔன்ஸ்வீதமும் கொடுக்கலாம். For children, 1-3 drs, for adults, 1-2 oz.

மல்லிகைப்பூச்செடியினம். (JASMINEÆ.)

(Non-officinal.)

மல்லிகைப்பூ.—Jasminum Sambac. இதில் பலசாதிகளுண்டு மல்லிகை, మల్లపువ్వులు; கொடிமல்லிகை, (பிச்சிப்பூ, சாதிப்பூ) ముల్లెలు ஊசிமல்லிகை, జాజులు; குடமல்லிகை, గుండుమల్లె. மல்லிகைப்புஷ்பத்தை ஸ்தனங்களுக்கு வைத்துக்கட்டினால், பால்வரண்டுவிடும்; தினத்துக்கு 2-ஆவர்த்திவீதம், 2-3-நாள் கட்டவேண்டியது.

அலரியினம். (APOCYNEÆ.)

ஏழிலைப்பாலை.

ஏழிலைப்பாலைச்செடி.—పాలగరుడ. Alstonia scholaris.

ஏழிலைப்பாலைப்பட்டை.—Alstoniæ cortex.

செய்கை.—சங்கோசன தாருட்டியகாரி, கிருமிநாசகாரி, முறைவியாதிரோதி. Astringent, tonic, anthelmintic, antiperiodic.

உபயோகம்.—நாள்பட்டபேதி, சீதபேதி இவைகளுக்குக் கொடுக்கலாம். சுரம் முதலியவைகளில் காணுகிற துர்பலத்துக்கும் கொடுக்க உதவும். In chronic diarrhœa and dysentery, and in debility after fevers and other diseases.

மாத்திரை.—3-5-கிறேன் எடைக்கு தனியாயாவது, பேதியை நிறுத்த கொடுக்கும்போது, இபிகாக்கும், ஜென்ஷன் சத்தும் சேர்த்தாவது, கொடுக்கலாம்.

ஏழிலைப்பாலைப்பட்டையின் பாவனத்திரவம்—(Tincture of Alstoniæ.) செய்முறை.—இடித்த பாலைப்பட்டை, $2\frac{1}{2}$-ஔன்ஸ்; புரூவ்ஸ்பிரிட்சாராயம், 1-பைன்ட். மூடி, அடிக்கடி குலுக்கி 7-நாள் ஊறவைத்து, வடிகட்டி, 1-பைன்ட்க்குத் தேவையான சாராயம் விட்டுக்கொள்ளவும். மாத்திரை.—1-2-டிராம், (Alstonia Bark, oz. $2\frac{1}{2}$; Proof Spirit, pint. 1.) Dose.—1-2 fdrs.

ஏழிலைப்பாலைப்பட்டையின் வெந்நீர் ஊறல்கஷாயம்.—Infusion of Alstonia; Infusum Alstoniæ.) செய்முறை.—இடித்த பாலப்பட்டை, $\frac{1}{2}$ ஔன்ஸ்; வெந்நீர், 10-ஔன்ஸ். மூடி-1-மணிநேரம் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-2-ஔன்ஸ் வீதம், தினத்துக்கு 2-3-ஆவர்த்தி கொடுக்கலாம். இது தேகபலத்தை நன்றாய் வர்த்திப்பிக்கும்.

(Non-officinal.)

குடசப்பாலை.—கசப்புவெட்பாலை. చేదుకొడిశ అంకుడు (Holarrhena antidysenterica; H. pubescens,) இதின் கசப்பு பட்டைக்கு பலகாரி, சுரஹாரிகுணங்க ளுண்டென்று சொன்னபோதிலும், சீதபேதியைக் கண்டிக்கிற குணம் அதிகமுண்டென்று பரீக்ஷையால் ஸ்திரப்படுத்தப்பட்டது. குடசப்பாலைப் பட்டையைக் கஷாயமிட்டு (பட்டை, 8-ஔ; ஜலம்-2-பைன்ட், 1-பைன்ட்டுக்குக் சுண்டக் காச்சிக்கொள்ளவும்) $1\frac{1}{2}$-2-ஔன்ஸ் வீதம் தினத்துக்கு-2-3-ஆவர்த்தி கொடுக்கலாம். வேரின்பட்டையில் சத்தெடுத்து, 3-கிறேன் வீதம் $\frac{1}{2}$ கிறேன் அபினி சேர்த்து கொடுத்தால், குணமென்று கண்டிருக்கிறது. குடசப்பாலை விரையைக் கஷாயமிட்டு சீதபேதி, பேதி, வாந்திபேதி, வாந்தி இவைகளுக்குக் கொடுப்பதுண்டு; ரத்தமூலத்துக்கும் நல்லதாம்; கிருமிநாசகாரி குணமுமுண்டாம்.—இந்தக் குடசப்பாலையின் பட்டையும், விதையும், வெட்பாலையின் பட்டைக்கும் அரிசிக்கும் ஒற்றிருப்பதால், அபத்தம் நேரிடும்; ஆகையால் வித்தியாசத்தைக் கண்டறிந்து உபயோகப்படுத்தவேண்டியது.

வெடுபாலை அரிசி.—ఉజిల్లివత్తులు. (Wrightia Tinctoria.) இதை சீதபேதி, பேதி இவைகளை சிறுத்த தமிழ்வைத்தியர்கள் உபயோகிப்பதுண்டு. இந்தச் செடியின் பட்டைக்கு, சங்கோசன தாருட்டியகாரி குணங்களுண்டாம், சுரத்துக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். இந்த விதையில் கசப்பிராது.

பால்வள்ளி.—నలతీగె. (Ichnocarpus frutescens.) இதின்வேருக்கு, வியதாபேத பலகாரி செய்கை யுண்டென்று எண்ணி, நன்னாரி வேருக்குப் பதிலாக உபயோகிப்பதுண்டு.

மஞ்சள் அலரி.—(Thevetia neriifolia; The Exile or Yellow Oleander) இதின்பட்டையின் செய்கை முறைவியாதிரோதி; சீதசுரங்களுக்கு பாவனத்திரவம் செய்து (பட்டை-1-ஔ; ரெக்டிபைட் சாராயம், 5-ஔ. 8-நாள் ஊறல்) 10-15-துளி வீதம் தினத்துக்கு 3-தடவை கொடுத்து நல்ல குணம் கண்டதுண்டு. 30-60-துளி கொடுத்தால், அதிக வாந்தியும் பேதியுமாகும்; இன்னம் அதிகமானல் விஷமிக்கும். கசப்புள்ள இதின் வித்திலிருந்து எடுக்கிற தயிலம், வாந்தியையும், விபரீத பேதியையும் உண்டாக்கும்.

அலரி. செவ்வலரி.—గన్నేరు. (Nerium odorum; sweet-scented Oleander.) இதில் 2-3-சாதிகளுண்டு; வெள்ளைக்கு கஸ்தூரிபட்டை என்று பேர். பிராணத்தியாகம் செய்துகொள்ள அலரிவேரை அரைத்து சாப்பிடுகிறது வழக்கம் இந்த விஷயச்செடியை யாரும் உபயோகிக்காமல் செயவதே நல்லது

காட்டு அலரி.—உதலமரம். (Cerbera odollam or C. Manghas.) இதின்பாலுக்கும், இலைக்கும், பேதி, வாந்தி, உண்டாக்கிற குணமுண்டு இதை உள்ளுக்கு உபயோகிக்கலாகாது, விஷமிக்கும்.

நந்தியாவட்டம்.—నందియావట్టం. (Tabernæmontana Coronaria.) இதில் ஒத்தை, இரட்டைப் பூக்களுண்டு. கண்ணோவுக்கு பூவின் ரஸத்தைப் பிழிவது வழக்கம். வேரை பல்வலிக்கு மெல்லுவதுண்டு.

எருக்கன் இனம். (ASCLEPIADEÆ)

நன்னாரி. (வேர்.)

நன்னாரிப்பூண்டு.—Hemidesmus Indicus; Hemidesmus.

நன்னாரிவேர்.—సుగంధిపాల. ஹெமிடெஸ்மஸ் ரூட், Hemidesmus Root; Hemidesmi Radix

விவரணம்.—இந்த வேர் நீண்டு, கறுத்து, நல்ல வாசனையாய் இருக்கும்.

செய்கை.—வியதாபேத பலகாரி, மூத்திரவர்த்தனி, சுவேதகாரி. Alterative, tonic, diuretic, diaphoretic.

உபயோகம்.—இதை துற்பலம், மேகப்புடை, நாள்பட்ட கீல்வாதம், சருமரோகங்கள் இவைகளுக்குக் கொடுத்து நல்ல குணங்கண்டதுண்டு.

நன்னாரிவேர் வேந்நீர் ஊறல் கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் ஹெமிடெஸ்மஸ், Infusion of Hemidesmus; Infusum Hemidesmi.) செய்முறை.—இடித்த நன்னாரிவேர், 1-ஔன்ஸ்; வெந்நீர்-10-ஔன்ஸ். பாத்திரத்தைமூடி, 1-மணி நேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—2-3-ஔன்ஸ் அளவு, தினத்துக்கு, 3-தடவை கொடுக்கலாம். The roots of Hemidesmus, 1 oz; Boiling Water, 10 foz.) Dose—2-3 foz.

(இந்த கஷாயம் நல்லது; சூடாகவே சாப்பிட்டால், வீரியம் அதிகமாகும். பாலும் சருக்கரையும் சேர்த்தால் வெகு இனிப்பாயிருக்கும், குழந்தைகள் இஷ்டமாய் குடிப்பார்கள்; ஐயோடைட் ஆவ் பொடாஷியம் முதலிய மருந்துகள் கொடுக்க நல்ல அனுபானம். பச்சைவேருக்கு வீரியம் அதிகம்.)

நன்னாரிவேர் பாணிதம், ஷர்பத், ரசாயனம். ஸிரப் ஆவ் ஹெமிடஸ்மஸ், Syrup of Hemidesmus; Syrupus Hemidesmi.) செய்முறை.—இடித்த நன்னாரிவேர், 4-ஔன்ஸ்; வெந்நீர், 1-பைன்ட்; பஞ்சதாரை, 2-8 ஔன்ஸ். வேரை ஜலத்திலிட்டு மூடி-4-மணி நேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொண்டு, அசையாமல் வைத்தால், அடியில் வண்டல் படிந்துவிடும், பிறகு கஷாயத்தைத் தெளிவாய் இறுத்துக்கொண்டு, பஞ்சதாரை சேர்த்து, சிறுதீயிட்டெரித்து, கரைத்துக்கொள்ளவும். இது, 2-பவுன், 10-ஔன்ஸ் எடையிருக்கவேண்டியது மாத்திரை—1-2-டிராம் அளவுக்கு அதிகமாகவும் கொடுக்கலாம். நமது தேசத்தில் இது சீக்கிரம் கெட்டுபோகும். (The root, 4 oz; Refined Sugar, 28 oz; Boiling water, pint 1. Dose.—1-2 fdrs.

எருக்கு

எருக்கஞ்செடி.—Calotropis Procera; C. Gigantea; Mudar

எருக்கம்வேர்பட்டை.—జిల్లేడు వేరుపట్టు. முடார் ரூட் பார்ச். Mudar root bark; Calotropis Cortex,

விவரணம்.—முதல்கண்ட இனம் சிறிது, மற்றது பெரிது. வேரானது சிறிய தட்டை துண்டுகளாய் விளைந்திருக்கும்.

செய்கை.—வியாதாபேத பல்காரி, சுவேதகாரி மாத்திரையி லதிகமானல் வமனகாரியாகும். Alterative, tonic, diaphoretic, emetic.

உபயோகம்.—குஷ்டம், மேகப்புடை, ரசம் தின்று காணுகிறதோஷம், மேகம் முதலிய விரணங்கள், சீதபேதி, பேதி, நாள்பட்ட கீல் வாதம் இவைகளுக்குக் கொடுத்து நல்லகுணம் கண்டதுண்டு. In leprosy, constitutional syphilis, venerial ulcers, dysentery, diarrhœa, chronic, rheumatism.

எருக்கம்வேர்ப்பட்டைத்தூள். (பவுடர்ஆவ் முடார், Powder of Mudar; Pulvis Calotropis.) மணற்பாங்கில் முளைந்திருக்கிற செடியின் வேரை, சித்திரை, வைகாசி மாதங்களில் சேகரித்து, கழுவி துஷ்டுகளை நீக்கி, வெயில் படாமல் காற்றில் உலர்த்தி, வடிகிறபால் சுண்டிப்போனபிறகு, சாக்கிரதையாய் எடுத்து, உலர்த்தி, சூரணித்து, புட்டியிலிட்டு செவ்வையாய் அடைப்பிட்டுக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—வியதாபேத தாருட்டியகாரிக்கு, 3-முதல் கிரமேணுய் அதிகரித்து, 10-கிறேன் எடைக்கு அதிகமாயும், திரிகாலக்கிரமமாய் கொடுக்கலாம். $\frac{1}{2}$-1-டிராம் கொடுத்தால் வாந்தியாகும். [மேல் கண்டபடி வேரைப் பக்குவப்படுத்தாவிட்டால் பிரயோஜனமிராது.]

நஞ்சறுப்பான், (இலை.)

நாய்ப்பாலை; பேய்ப்பாலை. కుక్కపాల; వెర్రిపాల. Tylophora Asthmatica.

நஞ்சறுப்பான் இலை.—Tylophoræ Folia.

செய்கை.—வமனகாரி, சுவேதகாரி, கபஹாரி.

உபயோகம்.—வயிற்றிலிருக்கிற துஷ்டுகளை வெளிப்படுத்த இதை வாந்திக்கிக் கொடுக்கலாம். சீதபேதி, இருமல் முதலியவைகளுக்கும் கொடுத்து நல்லகுணம் கண்டதுண்டு.

மாத்திரை.—25-30-கிறேன் இலைச் சூரணத்தில்; $\frac{1}{2}$-1-கிறேன் டார்டர் மெடிக் சேர்த்துக் கொடுத்தால் வாந்தியாகும்; 3-5-கிறேன் வீதம் தினத்துக்கு 3-ஆவர்த்தி கொடுத்தால் வியர்வைபிறக்கும், கபம் வெளிப்படும். இதனோடு அபினியும் சேர்த்து கொடுக்கலாம். வேருக்கும் ஷை குணமுண்டு, ஆனல் இலையே சிரேஷ்டமானது. இபிகாக் என்னும் மருந்துக்கு பதில், இதை உபயோகப்படுத்தலாம்.

உத்தாமணி, வேலிப்பருத்தி. జిట్టుపాకు. (Dæmia extensa.) இதற்கு வமனகாரி, கபஹாரிகுணங்களுண்டென்று கண்டிக்கிறது; குழந்தைகளுக்கு அதிகமாய் உபயோகிப்பதுண்டு.

எட்டிச்செடியினம். (LOGANIACEÆ)

எட்டிக்கொட்டை

எட்டிச்செடி.—Strychnos Nuz Vomica.

எட்டிக்கொட்டை.—காஞ்சிரம். ஃஸ்ஹீஷஹ். நகஸ்வாமிக, Nux Vomica.

விவரணம்.—இந்தவித்தில் ஸ்டிரிக்நிய (Strychnia) புரூஷிய (Brucia) என, இரண்டுவித பதார்த்தங்களுண்டு.

செய்கை.—நரம்பு தாருட்டியகாரி, உஷ்ணகாரி, மாத்திரை அதிக மானால் கொல்லும். Nervine, tonic, stimulant.

உபயோகம்.—பக்ஷவாதம், நரம்புவியாதிகள், பேதி, சீதபேதி,மலபந்தம், குதப்பிரம்ஸம், சொட்டுமூத்திரம், இந்திரியநஷ்டம் இவைகளுக்கும் முள்ளந்தண்டின் துர்ப்பலத்தைப் பத்திக் காணுகிற வியாதிகளுக்கும் கொடுக்க இது உயர்ந்தமருந்து. In palsy, neuralgia, atonic diarrhœa, chronic dysentery, &c.

மாத்திரை.—வித்தின் சூரணத்தில் 2-3-கிறேன் எடையிலிருந்து, கிரமேணுய் அதிகரித்து, 10-கிறேன் எடைக்கு தினத்துக்கு, 2-3-தரம் கொடுக்கலாம். 2-3 grs. gradually increased to 10 grs.

எடிக்கோட்டை வெந்நீர் ஊறல் கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் நக்ஸ்வாமிக, Infusion of Nux Vomica, Infusum Nucis Vomicæ.) செய்முறை.—எட்டிக்கொட்டைத்தூள், 2-டிராம்; வெந்நீர், 12-ஔன்ஸ், பாத்திரத்தை மூடி 1-மணிநேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—4 டிராம், அளவிலிருந்து படிப்படியாய் அதிகரித்து, 8-10-டிராம் அளவுக்கு, தினத்துக்கு 3-தடவைகொடுக்கலாம். துர்ப்பலம், நீரேத்தம் இவைகளுக்குக் கொடுக்க இது உயர்ந்தமருந்து; செய்கையை சாக்கிரதையாய் கண்டுகொள்ளவேண்டியது. (Nux Vomica seeds, drs. 2; Boiling water, oz 12.) Dose.—4-8 and 10 fdrs. gradually increased.

எட்டிக்கோட்டைப் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் நக்ஸ்வாமிகா Tincture of Nux Vomica. Tinctura Nucis Vomicæ. செய்முறை.—எடிக்கொட்டை, 2-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 1-பைன்ட். வித்தை புட்டுபோல்வைத்து அவித்து மெதுவாக்கி, பிறகு சீக்கிரத்தில் உலர்த்தி, சன்னத்தூள்செய்து, சாராயத்தில் போட்டு ஊறவைத்து, பெர்க்கொலேஷன் முறையாய் வடிக்கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—10-20-துளி கொடுத்தால், நரம்பு தாருட்டியகாரியாயும், 5-10-துளி பலகாரியாயும் ஆகும். (Nux Vomica, oz 2; Rectified Spirit pint 1.) Dose.—10-20 drops as a nervine, stimulant; 5-10 drops as a tonic.

எட்டிக்கோட்டை சத்து.—(எக்ஸ்ட்ராக்ட் ஆவ் நக்ஸ்வாமிக, Extract of Nux Vomica; Extractum Nucis Vomicæ.) செய்முறை —எட்டிக்கொட்டை, 1-பவுன்;ரெக்டிபைட் சாராயம் தேவையானது. கொட்டையை புட்டுபோல் அவித்து மிருதுவாக்கி, உலர்த்திக்கொண்டு, பிறகு சன்னத்தூளாக்கி அதில் சாராயம் கொஞ்சம் கொஞ்சமாய்விட்டு சாராயத்தில் கசப்பு இல்லாமல்போகிறவரையில், காய்ச்சி, வடிகட்டி சாராயத்தை வாலையிவிட்டு வடித்துவிட்டு, அடியில் நிற்பதை ஜலயந்திரத்தில் வைத்து சுண்டக்காச்சி, மெழுகுபத மாக்கிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{4}$-2-கிறேன் கொடுக்கலாம். அக்கினிமந்தத்துக்குக் கொடுக்க இது திவ்விய ஔஷதம்.

எட்டிக்கோட்டையின் உப்பு. ஸ்டிரிக்நியா.(Strychnia.) விவரணம்.—எட்டிக்கொட்டையி லிருந்தெடுக்கிற இந்த உப்பு, பழுப்புநிறமாய், சிறுமணலைப்போல் வாசனையற்றதாய், அதிக கசப்பாய், ஜலத்தில் கரையாததாய் இருக்கும். செய்கை. உபயோகம்.—வித்துக்குடைய செய்கையே இதற்குமுண்டு; இது கொடிய நஞ்சானபடியால், வெகு சாக்கிரதையாய் சூக்ஷித்து உபயோகிக்கவேண்டியது. பக்ஷவாதங்களுக்குக் கொடுக்க இது திவ்விய ஔஷதம். இதைக் கொடுத்துக்கொண்டுவரும்போது, சதைகளுக் கிசிவுகண்டால், உடனே மருந்தை நிறுத்திவிடவேண்டியது மாத்திரை.—ஒரு கிறேனில் 50-தில்-1-பாகம் வீதம், திரிகாலாக்கிரமமாய் கொடுத்தால், பலகாரியாகும். 30-தில்-1-பாகம்முதல்-12-ல்-1-பாகம்வரையில் கொடுத்தால் நரம்பு உஷ்ணகாரியாகும். (Use.—In palsy. Dose.—$\frac{1}{50}$ gr as a tonic. From $\frac{1}{30}$ to $\frac{1}{12}$ gr. gradually increased as a nervine stimulant.

எட்டியுப்புஜெயநீர்.—ஸோலூஷன் ஆவ் ஸ்டிரிக்னியா, Solution of Strychnia; Liquor Staychniæ.) செய்முறை.—எட்டியுப்பு-4-கிறேன்; விளாவின கறியுப்பு திராவகம், 6-மினிம்; ரெக்டிபைட் சாராயம், 2-டிராம்; ஜலம், 6-டிராம். திராவகத்தை-4-டிராம் ஜலத்தில்சேர்த்து அதில் உப்பைப் போட்டு, சுடவைத்துக் கரைத்து, பிறகு சாராயத்தையும் சேஷம் ஜலத்தையும், சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—3-10-மினிம்கொடுக்கலாம். ஒரு மினத்தில் $\frac{1}{90}$கிறேன் ஸ்டிரிக்கியா இருக்கிறது. ஆகையால்-9-மினத்தில்-$\frac{1}{10}$ கிறேன் இருக்கும். இதையும் மற்ற முறைகளைப்போலவே முதல் குறைந்த மாத்திரையில் ஆரம்பித்து, கிரமேணய் அதிகரித்துக்கொள்ளுவதே உத்தமம், தோஷங்கள் நேரிடாது (Strychnia, 4 grs.; Dilute Hydrochloric Acid, 6 min.; Rectified Spirit, 2-fdrs; Distilled Water, 6 fdrs.) Dose.—3-10 - min.

எட்டிப்பட்டையிலும், ஸ்டிரிக்னியா உண்டு. இதைச்சேர்த்து செய்த பூசுத்தயிலங்கள், மெத்த சிரேஷ்டமானது. சருமலோகங்களுக்கும் பெருவியாதிக்கும் உபயோகிக்கலாம்.

(NON-OFFICINAL.)

நாகமுஷ்டி.—నాగముష్టి. (Strychnos colubrina. Snake wood tree.) இதின்பட்டைக்கு, சர்ப்ப விஷங்களைக்கண்டிக்கிற குணமுண்டென்று கண்டிருக்கிறது, ஸ்திரப்படவில்லை. இது துற்குணம் செய்யும், நீங்கிவிடுவதே உத்தமம்.

தேத்தாங்கொட்டை.—చిల్లగింజలు. (கிளியரிங்னட் Clearing nut. Strychnos Potatorum. வித்தை நாட்டுவைத்தியத்தில், வாந்திக்கும், மது மூத்திரரோகத்துக்கும், பிரமேகத்துக்கும் கொடுப்பதுண்டு, ஆனல், கலங்கலான ஜலத்தை தெளியவைப்பதற்கு, இதை முக்கியமாய் உபயோகப் படுத்தப்படுகின்றது.

வெள்ளருகு இனம். (GENTIANACEÆ.)

ஜென்ஷன்

ஜென்ஷன் செடி.—Gentiana Lutea.

ஜென்ஷன்வேர்.—ஜென்ஷன் ரூட், Gentian root; Gegtianæ radix.

செய்கை.—மெத்தக் கசப்புடைய இந்த வேருக்கு பலகாரிகுணமுண்டு. இது ஐரோப்பிய தேசத்தில் விளைகிறது.

உபயோகம்.—துர்ப்பலம், மந்தாக்கினி, சுரங்கள் முதலியவைகளுக்குக் கொடுக்கலாம்.

ஜென்ஷன்கலவை. வெந்நீர்கஷாயம்.—காம்பவுன்ட் இன்பியூஷன் ஆவ் ஜென்ஷன், Compound Infusion of Gentian. Infusum Gentianæ compositum.) செய்முறை.—ஜென்ஷன் வேர், கசப்பு ஆரஞ்சி பழத் தோல், வகைக்கு 60-கிறேன்; எலுமிச்சன் பழத்தோல், $\frac{1}{4}$-ஔன்ஸ்; வெந்நீர், 10-ஔன்ஸ், பாத்திரத்தை மூடி, 1-மணிநேரம் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை—1-2-ஔன்ஸ் தினத்துக்கு 2-3-தடவை கொடுக்கலாம். (Gentian root; Bitter orange peel of each, grs. 60; fresh limon peel, oz. $\frac{1}{4}$; Boiling water, foz. 10.) Dose—1-2 foz.

ஜென்ஷன்சந்து.—(எகிஸ்ட்ராக்ட் ஆவ் ஜென்ஷன். Extract of Gentian, Extractum Gentianæ.) மாத்திரை—2-10-கிறேன். மாத்திரைகள் செய்வதற்கு இது நல்ல மருந்து. Dose.—2-10-grs.

காம்பவுன்ட் டிங்சர் ஆவ் ஜென்ஷன்.—(Compound tincture of Gentian; Tinctura Gentianæ Composita.) செய்முறை.—இடித்த ஜென்ஷன் வேர், $1\frac{1}{2}$-ஔன்ஸ்; இடித்த ஆரஞ்சிப்பழத்தோல். $\frac{3}{4}$-ஔன்ஸ்; சிதைத்த ஏலரிசி, $\frac{1}{4}$-ஔன்ஸ்; புரூவ்ஸ் பிரிட் 1-பைன்ட். இவைகளை ஊறவைத்து, பெர்க்கலேடரில் போட்டு வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-2-டிராம். (Gentian, oz. $1\frac{1}{2}$; Bitter orange peel, oz. $\frac{3}{4}$; Cardamoms, oz. $\frac{1}{4}$; Proof spirit, pint 1.) Dose.—$\frac{1}{2}$-2 drs.

சூரத்து நிலவேம்பு

Ophelia Chirata. Chiretta.

சீமை நிலவேம்பு. சீமை கிரியாத், சிரெட்ட, Chirata; சிரெட்ட. Chiretta.

விவரணம்.—இந்தத் தண்டு சுமார் 3-அடி நீளமுள்ளதாய், உருண்டு மழமழவென்று, பழுத்த நிறமாய், கிளைகள் நேர் நேராய், அநேக புஷ்ப்பங்களுடையதாய் இருக்கும், மெத்தக் கசக்கும்.

செய்கை.—உபயோகம்—பலகாரி. ஜென்ஷன் என்னும் வேரைப் போலவே இதையும் உபயோகிக்கலாம்.

சூரத்து நிலவேம்பு வெந்நீர்க்கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் சிரெட்டா, Infusion of Chiretta; Infusum Chiratæ.) செய்முறை.—சூரத்து நிலவேம்பு, $\frac{1}{4}$-ஔன்ஸ்; ஜலம், 10-ஔன்ஸ். பாத்திரத்தை மூடி-$\frac{1}{2}$-மணிநேரம் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.--1-2-ஔன்ஸ் வீதம் தினத்துக்கு 2-3-தடவை கொடுக்கலாம். (Chiretta, oz $\frac{1}{4}$; Water, oz. 10. Dose.—1-2 foz.

சூரத்து நிலவேம்புகலவை பாவனத்திரவம்.—(கம்பவுண்டிங்சர் ஆவ் சிரெட்டா, Compound Tincture of Chiretta, Tinctura Chiratæ Com-

posita.) செய்முறை,—சூரத்து நிலவேம்பு, $1\frac{1}{2}$-ஔன்ஸ்; ஆரஞ்சித்தோல் $\frac{3}{4}$-ஔன்ஸ்; ஏலரிசி, $\frac{1}{4}$-ஔன்ஸ்; புரூவ் ஸ்பிரிட், 1-பைன்ட் பாத்திரத்தை மூடி, அடிக்கடி குலுக்கி 7-நாள் ஊறவைத்து, இறுத்து, பிழிந்து வடிகட்டி, 1-பைன்ட்டுக்குத் தேவையான சாராயம் விட்டுகொள்ளவேண்டியது. மாத்திரை.—1-2-டிராம். (Chiretta, oz. $1\frac{1}{2}$; Orange peel, oz. $\frac{3}{4}$; Cardamom, oz. $\frac{1}{4}$; Proof spirit, pint 1.) Dose.—1-2-fdrs.

[இவ்விடத்தில் இதற்கும் நாட்டுச் சரக்குக்கும் எப்போதும் சந்தேகம்; நாட்டுச்சரக்கு வேறு இனம். (கிரியாற்று.)]

(NON-OFFICINAL.)

வெள்ளருகு.—గొలిమిడి. చేవుకు తిచెట్టు. Cicendia hyssopifolia. இது கசக்கும், தீபனகாரி, பலகாரி; லகுவிரேசனி.

எள்ளு இனம் (SESAMEÆ.)

எள்ளு.—నువ్వులు. తిలలు. ஸிஸெமம். Sesamum; Sesamum Indicum.) அதிகமாய் எள்ளு சாப்பிட்டால், கரு அழிவு உண்டாகுமென்று சொல்லுகிறார்கள் சூதகக்கட்டுக்கு, ஒரு பிடியெள்ளை இடித்து வெந்நீரிலிட்டு ஸ்நானம் செய்தால் சுகுணமுண்டாகுமாம். எள்ளு இலைக்கு ஸினிக்தகாரி குணமுண்டாம்-1-2-பச்சையிலை எடுத்து குளிர்ந்த ஜலத்தில் அல்ச்சினால், ஸினிக்தம் ஜலத்திலிறங்கும், அதை வியாதிகளுக்குக் கொடுக்கலாம். உலர்ந்த இலையை வெந்நீர் ஊறல்கஷாயமிட்டுக்கொள்ளலாம்; பச்சையிலையை, போல்டீஸ் ஆகவும் செய்துகொள்ளலாம். எள்ளெண்ணெய். நல்லெண்ணெய்.—(ஜிஞ்ஜிலி ஆயல், Gingely oil.) మంచినూనె. இதை சீமை எண்ணெய்க்குப் பதிலாய் உபயோகிக்கலாம். காயங்களுக்கும், ரணங்களுக்கு மிடலாம். தயிலமுறைகளில் சேருகிறது. நாள்தோரும் கூரல் எண்ணெயில் கொஞ்சம் சாப்பிட்டுக்கொண்டுவந்தால், தேகம் பூரிக்கும், சொறி சிரங்கு நீங்கும், இருமல் தணியும்.

யானைநெரிஞ்சி.—యేనుగపల్లేరు. (பிடேலியம் மியூரெக்ஸ், Pedalium murex.) இதின் கொடியை இலையோடு குளிர்ந்த ஜலத்தில் அலம்பினால் ஜலம் குழகுழப்பாகி தடித்துவிடும், அதனோடு சருக்கரை சேர்த்து, பிரமேகத்துக்குக் கொடுக்கலாம். இதை நேரப்படவைத்தால், குழகுழப்பு போய் விடும், ஆகையால் அப்போதைக்கப்போது செய்துகொள்ளவும். யானை நெரிஞ்சி வித்துக்கு, ஸினிக்தகாரி, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு. நாட்டுவைத்தியத்தில் இது பிரமேகத்துக்கும், நீரிழிவுக்கும், நீர்க்கோவைக்கும், உபயோகப்படுகின்றது.

சிவதைவேர் இனம். (Convolvulaceæ.)

ஜாலப்

ஜாலப்செடி.—Exogonium Purga; Jalap plant.

ஜாலப்கிழங்கு.—జాలప్. ஜாலப். Jalap; Jalapa.

விவரணம்.—மெக்ஸிகோ (Mexico) என்னும் தேசத்தில் விளைகிற இந்த கிழங்கு, உருண்டையாய், சிறுதும் பெரிதுமாய், மேற்தோல் சிலுத்துக் கொண்டு, உள்ளே மஞ்சள் சாயலாயிருக்கும்; வெகுட்டலுண்டு.

21

செய்கை.—விரேசனி, கிருமிக்கினி. Cathartic, anthelmintic.

உபயோகம்.—மலபந்தம், நீர்க்கோவை, இவைகளுக்கு இது சிரேஷ்ட டமானது. ரசபஸ்பம் சேர்த்துக்கொடுத்தால் கிருமிகள் விழும். திராக்ஷ உப்பு சேர்த்துக்கொடுத்தால், நீர் அதிகமாகும். குழந்தைகளுக்கு, கிருமி களைப்போக்கக் கொடுக்கலாம். In constipation; dropsies, worms.

மாத்திரை.—சூரணத்தில் 10-30-கிறேன் கொடுக்கலாம் சிறுகுழந்தை களுக்கு 2-5-கிறேன் கொடுக்கலாம். தேன், இஞ்சிரசம், சுக்குகஷாயம், துளசிரசம், பெப்பர்மெண்டுஜலம் இவைகளிலொன்றில் கொடுக்கலாம். 10-30 grs; for young children, 2-5-grs.

ஜாலப்கலவைச்சூரணம்.—(காம்பவுண்ட் பவுடர் ஆவ் ஜாலப், Compound powder of Jalap; Pulvis Jalapæ Compositus.) செய் முறை.—ஜாலப் சூரணம்-5-ஔன்ஸ், திராக்ஷ உப்பு-9-ஔன்ஸ்; சுக்குத்தூள்-1-ஔன்ஸ். இவைகளை மிஸ்ரமித்து வஸ்திரகாசஞ்செய்து, கலுவத்திலிட்டு மெதுவாய் அரைத்துக்கொள்ளவும். மாத்திரை.—20 - 60 - கிறேன். (Jalap powder, oz. 5 ; Acid Tartrate of Potash, oz. 9 ; Ginger powder, oz. 1.) Dose.—20-60 grs.

ஜலப்பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் ஜாலப், Tincture of Jalap, Tinctura Jalapæ.) செய்முறை.— ஜாலப்தூள் - 2½ - ஔன்ஸ் ; புரூவ் ஸ்பிரிட் - 1 - பையின்ட் ஊறவைத்து, பெர்க்கொலேடரில் போட்டு வடி கட்டிக்கொள்ளவும். மாத்திரை.—½ - 2 - டிராம். (Jalap, oz. 2 ½ ; Proof spirit, pint, 1 Dose.—½-2 fdrs.

ஜாலப்சத்து.— (எக்ஸ்ட்ராக்ட் ஆவ் ஜாலப், Extract of Jalap Extractum Jalapæ.) மாத்திரை.— 5 - 15 - கிறேன். 5-15 grs.

ஸ்காமொனி

ஸ்காமொனிச்செடி.—Convolvulus Scammonia. Scammony. plant.

ஸ்காமொனிவேர்.— Scammoniæ Radix. ஸ்காமொனி, Scammony, scammonium.

விவரணம்.—இந்தச்செடி கிரீஸ் (Greece) தேசத்தில் விளைகிறது. இதின் வேரிலிருந்து எடுக்கிற பிஸினி, சாம்பல்படிந்த கறுத்தநிறமாயிருக் கும், மென்றால் தொண்டையில் கரகரப்புகாணும்.

செய்கை.—விரேசனி, கிருமிக்கினி. Cathartic anthelmintic.

உபயோகம்..—ஜாலப் என்னும் சூரணத்தை உபயோகிக்கிற வியாதி களுக்கு இதை உபயோகிக்கலாம்.

மாத்திரை.—5-10-கிறேன். சரக்கு கெட்டதாய் யிருந்தால், 15-கிறேனுக்கு அதிகமாய் கொடுக்கவேண்டியதாயும் வரும். 5-10 grs.

ஸ்காமொனி கலவைச்சூரணம்.—(காம்பவுண்ட்பவுடர் ஆவ் ஸ்கா மொனி. Compound powder of Scammony; Pulvis scammonii

compositus.) செய்முறை.—ஸ்காமோனித்தூள், 4-ஔன்ஸ்; ஜாலப்தூள், 3-ஔன்ஸ்; சுக்குத்தூள், 1-ஔன்ஸ் இவைகளை மிஸ்ரமித்து, வஸ்திரகாயஞ் செய்து, முடிவில் கலுவத்திலிட்டு லேசாய் அரைத்துக்கொள்ளவும். மாத்திரை.—பெரியவர்களுக்கு, 10-20-கிறேன் வீதமும், 10-வயதுக்குள்பட்ட குழந்தைகளுக்கு, 6-8-கிறேன்வீதமும் பாலருக்கு, 3-5-கிறேன் வீதமும் கொடுக்கலாம். (Scammony, oz 4; Jalap, oz. 3; Ginger, oz. 1. Dose.—10-20- grs. for adults; for children under 10 years, from 6-8-grs, for infants, from 3-5 grs.

கொடிகாக்கட்டான்

கொடிகாக்கட்டான் செடி.—Pharbitis nil. Kaladana.

கொடிகாக்கட்டான் வித்து.—ಜಠಿಗಿವಿತ್ತು. ಕಾಲ್ಲಿವಿತ್ತುಲು. Pharbitis semina. காலதேனு, Kaladana.

நமது தேசத்தில் விளைகிற இந்தச்செடியின் வித்துக்கு, சுகபேதியுண்டாகிற குணமுண்டு; செய்கையிலும், உபயோகத்திலும், ஜாலப் என்னும் சூரணத்துக்கு ஒற்றிருக்கும். ஜலாப்புக்கிருக்கிற அவ்வளவு வீரியம் இதற்கு இல்லாதபோதிலும், அதற்குப் பதிலாய் இதை உபயோகப்படுத்தலாம். கொடிகாக்கட்டான் வித்தின்சத்து, பாவனத்திரவம், கலவைச்சூரம், பிசின், இவைகளுண்டு; அவைகளை ஜாலப் சூரணமுறைகளாகவே செய்து கொள்ளப்படும். சத்தில் (Extract of Kaladana) 5-10-கிறேன் இடையும், பாவனத்திரவத்தில் (Tincture of Kaladana) 2-3-டிராம் அளவுக்கும், சூர்ணத்தில் (Compound Powder of Kaladana) 50-60-கிறேன் வீதமும்; ரோஜனத்தில் (Resin of Kaladana) 5-8-கிறேன் வீதமும் கொடுக்கலாம்.

(NON-OFFICINAL.)

சிவதைவேர்.—తెగడవేరు (ஐபோமியா டர்பீதம், Ipomæa Turpethum) இந்தவேருக்கு விரேசனகாரி குணமுண்டு; கடைச்சரக்கில் மெத்த மோசங்களுண்டு; சரக்கு கெட்டதானல் பேதியாகாது. நிஜமானவேர் சிறிதா இருக்கும். வேரின் சூரணத்தில்-½-1-டிராம் கொடுக்கலாம்; இதனேடு கல்லுப்பாவது, திராக்ஷ உப்பாவது சேர்த்துக்கொண்டால், செவ்வையாய் பேதியாகும்.

விஷ்ணுக்கிராந்தி.—విష్ణుక్రాంతం. (இவால் வீயுலஸ் ஆல்ஸிநாய்டெஸ், Evolvulus, alsinoides.) இந்தப்பூண்டு சமூலத்தைக் கஷாயமிட்டு, சீதபேதி, சுரம் இவைகளுக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்.

தேள்கொடுக்கு இனம். (BORAGINACEÆ.)

(NON-OFFICINAL)

நறுவிளி.—చిన్న నక్కెర చెట్టు. (Cordia angustifolia). இதன் பட்டையைக் கஷாயமிட்டு வாய்ரணத்துக்குக் கொப்பளிக்கிறதுண்டு.

தேள்கொடுக்குப்பூண்டு.—తేలుమన్ను. నాగదంతి. Tiaridium Indicum. இதின் இலையை ரணங்கள், காயங்கள், வீக்கங்கள் இவைகளுக்குப் போடுவது நாட்டுவழக்கம். வினிக்தகாரி.

நீர்ப்பிரமி இனம். (SCROPHULARIACEAE.)

டிஜிடேலிஸ்

டிஜிடேலிஸ் பர்ப்பியூரியா.—Digitalis Purpurea. Purple Foxglove.

டிஜிடேலிஸ் இலை.—டிஜடேலிஸ் போலிய, Digitalis Folia.

செய்கை.— சீமையில் விளைகிற இந்த பூண்டின் இலைக்கு சமனகாரி, மூத்திரவர்த்தனி குணங்களுண்டு. குறைந்தமாத்திரையில் இடைக்கிடைக் கொடுத்தால், உடம்பில் மருந்து சேர்ந்திருந்து, பிறகு ஒரேதடவையாய் அதின் வீரியத்தைக்காட்டி துர்க்குணம் செய்யும், பிராண அபாயமும் நேடுவதுண்டு. ஆகையால் வெகுபத்திரமாய் உபயோகிக்கவேண்டியது. மாத்திரை அதிகமானல் கொல்லும்.

உபயோகம்.— நீர்கோவை ரோகங்களுககு இது எடுத்தமருந்து. இருதயத் துடிப்புக்குங் கொடுக்கலாம்; இன்னம் அநேக ரோகங்களுக்குக் கொடுக்கிறதுண்டு.

மாத்திரை.—இலையின் சூரணத்தில், ½ - 2 கிறேன் வீதம், 6-8-மணிக்கொருதரம் கொடுத்தால், சமனகாரியாகும். மூத்திரவர்த்தனத்துக்கு, வெந்நீர் ஊறல்கஷாயமே நல்லது.

டிஜிடேலிஸ் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் டிஜிடேலிஸ், Tincture of Digitalis; Tinctura Digitalis.) செய்முறை.—டிஜிடேலிஸ் இலைப் பொடி, 2½-ஔன்ஸ்; புரூவ்ஸ் பிரிட், 1-பைன்ட் ஊறவைத்து பெர்க்கொலேடரில் போட்டு வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—10-30-மினிம். (Digitalis, oz. 2½; Proof spirit, pint 1) Dose.—10-30. Min.

NON-OFFICINAL.)

கடுகுரோகிணி.—కటుకరోహిణి. (Picrorrhiza kurroa.) இதை அதிகமாய் கொடுத்தால் பேதியாகுமென்று கண்டிருக்கின்றது, ஆனல் சிலர் பரிக்ஷித்து மோசம்போனதுண்டு. இதற்கு தாருட்டியகாரிகுணமும், முறை வியாதிரோதி குணமும் விசேஷித்துண்டென்று கண்டிருக்கின்றது. முதல்குணத்துக்கு 10-20-கிறேன் எடைக்கும், இரண்டாவது குணத்துக்கு 20-40-கிறேன் எடைக்கும் கொடுக்கலாம்.

நீர்ப்பிரமி.—సాంబ్రాణిచెట్టు (Herpestis Monniera.) இந்தக்கொடிக்கு மூத்திரவர்த்தன, லகுவிரேசன குணக்களுண்டென்றும் இதின் சுரசத்தொடு மண்தயிலம் கலந்து கீல்வாதத்துக்குப் பூசுகிறதுண்டென்றும், கண் கண்டிருக்கிறது.

ஆடாதோடை இனம். (ACANTHACEÆ.)

நிலவேம்பு

நிலவேம்புப்பூண்டு.—கிரியாற்று. Kariyat; Andrographis Paniculata

நிலவேம்பு.—నేలవేము. கிரியாற்று, Kariyat ; or Creyat Andrographis Caules et Radix.

விவரணம்.—வேரோடிருக்கிற தண்டானது, 1 - அடி நீளமாய் நாற்சதுரமாய், கொஞ்சங்கருத்து மெத்தக் கசப்பாயிருக்கும்.

செய்கை.—பலகாரி, தீபனவர்த்தனி, குவாஷியாவுக்கு சமானமுள்ளது. Tonic, stomachic.

உபயோகம்.—துர்ப்பலம், சுரத்திலிருந்து உடம்பு தேறிவரும்போதும், புராதன சீதபேதிக்கும் கொடுக்கலாம். In debility, convalescence after fever, dysentery.

நிலவேம்புகலவை வெந்நீர் ஊறல்கஷாயம்.—(காம்பவுண்ட் இன்பியூஷன் ஆவ் கிரியாற்று, Compound Infusion of Kariyat; Infusum Andrographis Compositum.) செய்முறை.—நிலவேம்பு, ½-ஔன்ஸ்; ஆரஞ்சிப்பழத்தோல், கொத்துமல்லிவிதை, வகைக்கு, 60 - கிறேன்; வெந்நீர், 10 - ஔன்ஸ், பாத்திரத்தைமூடி, 1 - மணிநேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1⅓ - 2 - ஔன்ஸ், வீதம் தினத்திற்கு, 2 - 3 - தடவை கொடுக்கலாம். (Kariyat, oz. ½; Orange Peel, Coriander of each grs. 60 ; Boiling Water, oz. 10.) Dose.—1½; 2 foz.

நிலவேம்பு கலவைப்பாவனத்திரவம்.—(காம்பவுண்ட் டிங்சர் ஆவ் கிரியாற்று, Compound Tincture of Kariyat ; Tinctura Andrographis Composita.) செய்முறை.—நிலவேம்பு, 6-ஔன்ஸ் ; வெள்ளை போளம், மூஷாம்பரம், வகை 1-க்கு, 1-ஔன்ஸ், பிராந்தி, 2 பைன்ட். மூடி இடைக்கிடைக் குலுக்கி, 7-நாள் ஊறவைத்து, இறுத்து, பிழிந்து வடிகட்டி, 2-பைன்ட்டுக்கு வேண்டிய பிராந்தியை விட்டுக்கொள்ளவும். மாத்திரை.—1-4-டிராம். டிரகுமேர் "Drogueamere" என்னும் சிறந்த மருந்துக்குப் பதிலாய் இதைக் கொடுக்கலாம். இதற்கு பலகாரி, உஷ்ணகாரி, லகுவிரேசனி இக் குணங்களிருக்கிறதென்றும், அக்கினிமந்தம், மலச்சிக்கல் இவைகளுக்குக் கொடுக்கலாமென்றும் கண்டிருக்கிறது. Kariyat, oz. 6 ; Myrrh, aloes, a a oz. 1; Brandy, pints 2.) Dose.—1-4 fdrs.

நிலவேம்பு இலையின் சுரசத்தை குழந்தைகளுக்குச் சீதபேதிக்கிக் கொடுப்பது வீட்டுவழக்கம்.

(NON-OFFICINAL.)

நீர்முள்ளி.—నీరుగొబ్బి. (Hygrophila spinosa; Asteracantha longifolia.) இது மூத்திரவர்த்தனி. நீர்கோவைக்குக் கொடுக்கலாம். நீர்முள்ளி கஷாயம்.—நீர்முள்ளிவேர், 1-ஔன்ஸ்; ஜலம், 1-பைன்ட். 14-ஔன்ஸ் அளவுக்கு சுண்டக்காச்சி, வடிகட்டி, 1-2½-ஔன்ஸ் வீதம் தினத்துக்கொருமுறை கொடுக்கலாம். நீர்முள்ளி காடி. உலர்ந்த நீர்முள்ளி இலை 2-ஔன்ஸ்; காடி (Distilled vinegar.) 16-ஔன்ஸ், 3-நாள் ஊறவைத்து, பிழிந்து வடிகட்டிக்கொள்ளவும். இதில், 4-8-டிராம் அளவுக்குக் கொடுக்கலாம். உலர்ந்த பூண்டைச்சுட்ட சாம்பலில், ½-கரண்டி, தினத்துக்கு 2-3-ஆவார்த்தி கொடுப்பது நாட்டுவழக்கம்.

கருநொச்சி.—నల్లావావిలి. (Justicia Gendarussa; Gendarussa vulgaris.) இதற்குச் சுவேதகாரி குணமிருப்பதுபோல் காணப்படுகிறது. இலையைச் சதைத்து கஷாயமிட்டு கீல்வாதத்துக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்.

ஆடாதோடை.—అడ్డసంపాకు. ஜஸ்டீஷியா ஆடாதோடா, Insticia Adhatoda; Adhatoda vasica.) இந்த இலைக்கு, அங்காகர்ஷண நாசகாரி குணமும், கபஹாரி குணமும் இருக்கிறது; இருமல், சுவாசகாசம், சீதசுரம் இவைகளுக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம். ரசத்தை மெழுகுசெய்து, 4-10-கிறேன்வீதம் இருமல், சுவாசகாசம் முதலிய கபரோகங்களுக்குக் கொடுத்து பரிக்ஷித்து சுகுணம் கண்டதுண்டு. க்ஷயத்துக்கும் கொடுத்து நல்லகுணம் கண்டதாய் தெரியவருகிறது. திப்பிலி இதின் வீரியத்தை அதிகப்படுத்துகிறதாம்.

நாகமல்லி.—నాగమల్లె (Rhinacanthus Communis.) இதின் வித்தை இழைத்து, புடைகளுக்குப் போடுகிறதென்றும், வேரை பழரசம் விட்டரைத்து சருமரோகங்களுக்குப் போடுவது நாட்டுவழக்கமென்றும், கண்டிருக்கிறது.

நொச்சியினம். VERBENACEÆ.

(NON-OFFICINAL.)

வெண்ணொச்சி.—వావిలి. (வைடெக்ஸ் நிகண்டோ, Vitex Negundo) நீர்நொச்சி. (V. trifolia.) இவ்விரண்டினத்தில் இரண்டாவதே சிரேஷ்டமென்று எண்ணம். இதற்கு வேதனைசாந்தகாரி, மூத்திரவர்த்தனி, ருதுவர்த்தனி இக்குணங்களுண்டாம். நொச்சி இலையை வதக்கி மூட்டுநோய்களுக்கு ஒத்திடம் கொடுப்பது வழக்கம்; இலையை ஜலத்தில் போட்டுக்காய்ச்சி சுரம், பிரசவம் இவைகளில் அந்தநீரை மேலுக்கு விட்டுக்கொள்ளுகிறதும் உண்டு, நாட்டுவைத்தியத்தில் இது பேர்போனது. இதின் ரசத்தில் உப்பு கலந்து கொடுத்தால் வாந்தியாகும். இலையைத் துணிகளோடு வைத்தால், புழுக்கள் அணுகாது.

கண்டுபாரங்கி. சிறுதேக்கு.—గంటుభారంగి. (Clerodendron serratum.) இதை சுரம், இருமல் இவைகளுக்கு உபயோகிப்பது நாட்டுவழக்கம்.

தேக்குமரம்.—టేకుమాను. (Tectona grandis.) மரத்தை இழைத்து சேராங்கொட்டை, முந்திரிக்கொட்டை இவைகளின் பால்பட்டு காணுகிற வீக்கங்களுக்குப் போட்டுப் பார்க்கலாமென்று கண்டிக்கிறது.

சங்கத்துப்பு.—పీచంగి (Celerodendron inerme.) இதின் இலையை வதக்கி அரையாப்புக்கட்டிகளுக்குக் கட்டுவதும், வேரை தயிலமாக்கி, வாதநோய்களுக்குப் பூசுவதும் நாட்டுவழக்கம்.

தழுதாழை இலை.—తక్కిలి చెట్టు. Clerodendron phlomoides.) இதின் ரஸத்தை வியதாபேதகாரியாய் மேகவாதத்துக்குக் கொடுப்பதுண்டு.

முன்னை. (Premna integrifolia.) இதன்வேரைக் கஷாயமிட்டு, சுரம் முதலியவைகளுக்குக் கொடுக்கிறார்கள்.

துளசியினம். (LABIATÆ.)

லவண்டர்

லவண்டர் பூண்டு.—Lavandula vera; Common Lavender,

லவன்டர்தைலம்.—లవన్డరు తైలము. ஆயல் ஆவ் லவன்டர். Oil of Lavender. Oleum Lavandulæ.

விவரணம்.—சீமையில் விளைகிற பூண்டின் புஷ்பத்தை வாலையிலிட்டு எரித்து எடுக்கிற இந்த தைலமானது, துல்லியமாய் அல்லது இளமஞ்சள்நிற மாய் இருக்கும், புஷ்பத்துக்குடைய மணமுண்டு.

செய்கை.—உபயோகம். கருப்பவாதஹாரி, அங்காகர்ஷண நாசகாரி. ஆனால் இதைத் தனிப்பட உபயோகிப்பது அரிது. களிம்புகளில் வாசனைக் காகச் சேர்ப்பதுண்டு.

மாத்திரை.—2-5-துளி கொக்கலாம்.

லவண்டர்மது.—(ஸ்பிரிட் ஆவ் லவன்டர். Spirit of Lavender.) Spiritus Lavandulæ.) செய்முறை.—லவன்டர்தைலம், 1-ஔன்ஸ்; ரெக்டி பைன்ட் சாராயம், 49-ஔன்ஸ். இவைகளைக் கரைத்துக்கொள்ளவும். மாத்திரை.—½-1-டிராம் (Oil of Lavender, oz. 1; Rectified spirit, oz. 49.) Dose.—½-1-fdrs.

லவன்டர் பாவனத்திரவம்.—(காம்பவுண்டிங்சர் ஆவ் லவன்டர், Compound Tincture of Lavender.) செய்முறை.—லவன்டர்தைலம், 1½ டிராம்; ரோஸ்மெரிதைலம், 10-மினிம்; கருவாப்பட்டை, ஜாதிக்காய் இவைகளின் தூள், வகைக்கு-150-கிறேன்; சிவப்பு சந்தனக்கட்டை, 300-கிறேன் ரெக்டிபைட் சாராயம், 2-பைன்ட் பட்டை, காய், கட்டை இவைகளைச் சாராயத்திலிட்டு மூடி, இடைக்கிடைக் குலுக்கி-7-நாள் ஊறவைத்து, இறுத்து, தைலங்களைச் சேர்த்து, வடிகட்டி, 2-பைன்டுக்குத் தேவையான சாராயம் விட்டுக்கொள்ளவும். மாத்திரை.—½-2-திராம். உஷ்ணகாரி, வலி, சூதக சந்நி, மூர்ச்சை, வயிறு உப்பஷம், வயிற்றுவலி இவைகளுக்குக் கொடுக்க நல்லமருந்து, (Oil of Lavender, fdr. 1½; Oil of Rosemary, Minims 10; Cinnamon, Nutmeg, of each grs. 150; Red Sandalwood, grs. 300; Rectified Spirit, pints 2.) Dose.—¼- fdrs.

பெப்பர்மின்ட்

பெப்பர்மின்ட்பூண்டு.—Mentha Piperita. Peppermint.

பெப்பர்மின்ட்தைலம்.—ஆயல் ஆவ் பெப்பர்மின்ட், Oil of Peppermint. Oleum Menthæ Piperitæ.

விவரணம்.—சீமையில் விளைகிற பச்சைப்பூண்டை வாலையிலிட்டு வடித்தெடுக்கிற இந்த தைலமானது, வெள்ளை அல்லது கொஞ்சம் மஞ்சளாய் இருக்கும். பூண்டுக்குடைய வாசனையுண்டு; வாயிலிட்டால் காரமானவாசனையாய், பிறகு குளிர்ச்சிதோன்றும். இதில் 2-தைலங்களுண்டு; ஒன்று திரவமாயும், மற்றொன்று உப்பாயுமிருக்கும், இந்தக்கட்டிக்கு பெப்பர்மின்ட் கற்பூரம் (Peppermint Camphor) என்று பேர்.

செய்கை.—உதரவாதஹாரி; தீபனவர்த்தனி, அங்காகர்ஷணநாசனி. Carminative, stomachic, antispasmodic.

உபயோகம்.—வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, குமட்டல் இவைகளுக்கு இந்த மருந்து எடுத்தது. In flatulence, colic, nausea.

மாத்திரை.—2-5-துளிசருக்கரையிலாவது, மியுஸிலேஜிலாவது கொடுக்கலாம். 2-5-drops.

பெப்பர்மின்ட் ஜலம்.—(பெப்பர்மின்ட் வாடர், Peppermint water; Aqua Menthæ Piperitæ.) செய்முறை. பெப்பர்மின்ட் தைலம், $1\frac{1}{2}$-டிராம்; ஜலம், $1\frac{1}{2}$-காலன். வாலையிலிட்டு, 1-காலன் அளவுக்கு வடித்துக்கொள்ளவும். மாத்திரை.—1-3-ஔன்ஸ். (Peppermint Oil dr. $1\frac{1}{2}$; Water, gallon $1\frac{1}{2}$.) Dose.—**1**-3 oz.

மாத்திரை.—2-5 துளி சருக்கரையிலாவது, மியுஸிலேஜிலாவது கொடுக்கலாம். 2-5-drops.

பேப்பர்மின்ட் ஜலம்.—(பெப்பர்மின்ட் வாடர், Peppermint water; Aqua Menthæ Piperitæ.) செய்முறை. பெப்பர்மின்ட் தைலம், 1½-டிராம்; ஜலம், 1½-காலன். வாலையிலிட்டு, 1-காலன் அளவுக்கு வடித்துக்கொள்ளவும். மாத்திரை.—1-3-ஔன்ஸ். (Peppermint Oil dr. 1½; Water, gallon 1½.) Dose.—1-3 oz.

பேப்பர்மின்ட் மது.—(ஸ்பிரிட் ஆவ் பெப்பர்மின்ட், Spirit of Peppermint; Spiritus Menthæ piperitæ.) செய்முறை.—பெப்பர்மின்ட் தைலம், 1-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 49-ஔன்ஸ். இவைகளைச் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—30-60-மினம் கொடுக்கலாம். (Oil of Peppermint, 1 foz; Rectified Spirit, 49 foz.) Dose.—30-60 min.

ரோஸ்மேரி.—(Resemary; Rosmarinus officinalis.) இதுவும் சீமையில் விளைகிற ஒரு பூண்டு. ரோஸ்மெரி தைலத்தில் (ஆயல் ஆவ் ரோஜ்மெரி, Oil of Rosemary; Oleum Rosmarini) 2-5 துளிவீதம் கொடுக்கலாம்.

(NON-OFFICINAL,)

துளசி.—கருந்துளசி. ராமதுளசி. கிஷ்ணதுளசி. திருத்துளா. తులసిచెట్టు. (அஸிமம் ஸாங்கடம், Ocimum sanctum; Holy Basil.) துளசிக்கு, உஷ்ணகாரி, சுவேதகாரி கபஹாரிகுணங்களுண்டென்று, நாட்டிலுள்ளோருக்கு எண்ணம். உலர்ந்த இலையின் தூளை பீனசத்துக்கு நசியமிடுகிறார்கள், புழுக்களையும் வெளிப்படுத்தும். துளசிவிரையை குளிர்ந்த ஜலத்தில் ஊறவைத்தால், குழகுழப்புண்டாகும்; அதை வினிக்தகாரியாய், இருமல், பிரசவித்தபிறகு காணுகிற வேதனை யிவைகளுக்குக் கொடுப்பது நாட்டுமுறை. இதைப் பிரமேகத்துக்குங் கொடுக்கலாம். இலையைப் புட்டிட்டு, ரசமெடுத்து கோரோஜனம் சேர்த்து குழந்தைகளுக்கு இருமலுக்குக் கொடுப்பது வீட்டுவழக்கம்; இலையை ஜலத்திலிட்டுக் காய்ச்சி, ஸ்நானம் செய்வதும் உண்டு, வேதும் பிடிக்கவைக்கலாம்.

திருநீற்றுப்பச்சை.—திருநீற்றுப்பத்திரி, சப்ஜா. రుద్రజడ. విభూదిపచ్చ. (அஸிமம் பாஸிலிகம். Ocimum Basilicum; Sweet Basil.) துளசிக்கிருக்கிற செய்கையே இதற்கும் உண்டு; விரையை சீதபேதி ரோகத்துக்குக்கொடுப்பதுண்டு. ரசத்தைக் காதுவலிக்கு விடுவதும், சீமையில் போஜனபதார்த்தங்களோடு வாசனைக்காக சேர்ப்பதும் வழக்கம்.

கஞ்சாங்கோரை.—நாய்த்துளசி. కుక్క తులసి విష్ణుతులసి. (அஸீமம் ஆல்பம், Ocimum Album; White Basil or country Tea.) இதின் ரசத்தைக் குழந்தைகளுக்கு மாந்தம், இருமல், சுரம் இவைகளுக்குக் கொடுப்பது வீட்டுவழக்கம். இலையைத் தேயிலைக்குப் பதிலாய் உபயோகப்படுத்துவதும் உண்டு.

பேய்மிரட்டி.—మొగబీర. (Anisomeles Malabarica; Malabar Catmint.) நாட்டுவைத்தியத்தில் இதில் நம்பிக்கை மெத்தவுண்டு. இதின் கசப்பு இலையைக் கஷாயமிட்டு வாந்தி, பேதி, இருமல், சீதசுரம் இவைகளுக்கு

உபயோகிப்பது நாட்டுவழக்கம். இலையைக் கஷாயமிட்டு அதின் ஆவியை ஆக்கிராணிக்கச்செய்து, வேர்வைபிறப்பிப்பதும் உண்டு. கஷாயமிட்டு விடாக்காச்சலுக்கு வியர்வை பிறக்கக் கொடுக்கலாம்.

கருப்பூரவள்ளி.—కర్పూరవల్లి. (அனிசாவிலஸ் கார்னோஸம், Anisochilus carnosum; Thick-leaved Lavender.) இதின் ரசத்துக்கு உஷ்ண, சுவேத, கபஹாரி குணங்களுண்டு; இருமலோடுகூடிய ஜலுப்புக்கு இதைக் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு ஒரு பாலடை அளவு கொடுப்பதுண்டு.

கொடிவேலியினம். (PLUMBAGINEÆ.)

(NON-OFFICINAL.)

செங்கொடிவேலி.—ఎఱ్ఱ చిత్రమూలము. (ப்ளம்பேகோரோஸியா, Plumbagorosea; Rose coloured leadwort) கொடிவேலிவேரின்பட்டைக்கு, துவகஸ்போட காரிகுணமுண்டு; அதை ஜலம்விட்டரைத்து, கொஞ்சம் அரிசிமாவுசேர்த்து மிஸ்ரமித்து, துணிமேல்தடவி, ½-மணிநேரம் தேகத்தின் மேல் போட்டுவைத் தெடுத்துவிட்டால், 12-18-மணி நேரத்துக்குள் கொப்புளம் உண்டாகும். அக்கினி பிளாஸ்திரிக்குப் பதிலாய் இதை உபயோகிக்கலாம், மூத்திரத்தரிப்பு உண்டாகாது, நயத்தசரக்கு. உள்ளுக்கெடுத்துக் கொண்டால், உஷ்ணகாரியாகும்; மாத்திரை அதிகப்பட்டால், கொடிய நஞ்சின் குணத்தைக் காட்டும். இதற்குக் கருப்பையை உஷ்ணிக்கிற குணமிருப்பதால், வேரின் பட்டையை யெடுத்து, அல்குல்வழியாய்ச் செலுத்தி, கருப்பையின் வாயில்வைத்து, கருவை வெளிப்படுத்துவது, நாட்டுஸ்திரீகள் வழக்கம். இப்படிச் செய்வதில் கருப்பை புண்ணுகி மனுஷி இறந்துவிடுவதும் உண்டு. கருவை அழிக்க வேரை அரைத்து, 1-2-விரோகனெடை உள்ளுக்குக் கொடுப்பது மூடப்பெண்கள் வழக்கம். கொடிவேலி சேர்ந்த தயிலங்களை கீல்வாதம், பக்ஷவாதம் இவைகளுக்குப் பூசலாம். வேரு உலர்ந்தால் வேகம் குறையும்; அதை மேகப்புடை, குஷ்டம் இவைகளுக்குக் கொடுப்பது நாட்டுச்சிகிக்சை; இதில் சாக்கிரதை வேண்டியது.

கொடிவேலி.—வெண்கொடி வேலி. తెల్ల చిత్రమూలము. (ப்ளம்பேகோஜி வானிக, Plumbago Zeylanica.) இதின்வேகம் கொஞ்சம் சமனம். வேரின் பட்டையை பாவனத்திரவம் செய்து முறைவியாதி ரோதியாய் கொடுத்துக்கொண்டு வருகிருர்கள்; அதிக வியர்வை பிறக்குமாம்.

புகையிலையினம். (SOLANACEÆ.)

பெல்லெடோனு

பெல்லெடோனு செடி.—Deadly Night shade; Atropa Belladonna.

விவரணம்.—சீமையில் விளைகிற இந்தப்பூண்டின் இலையும், வேரும் உபயோகமாகின்றன. இதின் சத்துக்கு அட்ரோபிய (Atropia) என்று பெயர்,

செய்கை.—சமனகாரி, வேதனுசாந்தகாரி, அங்காகர்ஷண நாசகாரி; முலைப்பாலை வற்றச்செய்யும்; இதை உள்ளுக்குக் கொடுத்தாலும் அல்லது கண் சுற்றிலும் தடவினுலும், கருவிழியிலிருக்கிற துவாரம் (pupil) விரியும்;

மாத்திரை அதிகமானால் கொல்லும். Sedative, anodyne, antispasmodic, lactifuge, dilates the pupil.

உபயோகம்.—கக்கிருமல், சுவாசகாசம், காக்கைவலி இவைகளுக்கு அங்காகர்ஷண நாசகாரியாகவும், நரம்புவேதனை, கீல்வாதம், சூதகவலி இவைகளுக்கு வேதனாசாந்தகாரியாகவும், காசம் முதலிய நேத்திரரோகங்களில் கண்தாரையை விரியச்செய்யவும், உபயோகப்படுத்தப்படும். In hooping cough, asthma, epilepsy, neuralgia, rheumatism, dysmenorrhœa, cataract.

மாத்திரை.—இலையின் சூரணத்தில், 1-2-கிறேன் எடை கொடுக்கலாம். 1-2 grs.

பெல்லேடோனா சத்து.—(Extract of Belladonna; Extractum Belladonnæ.) மாத்திரை.—$\frac{1}{4}$-1 கிறேன். கண்ணோவுக்கு, கண்ணிலிட மெத்த உபயோகம். $\frac{1}{4}$-1 gr.

பெல்லேடோனா களிம்பு.—ஆயின்ட்மென்ட் ஆவ் பெல்லெடோனா. (Ointment of Belladonna; Unguentum Belladonnæ.) செய்முறை.—பெல்லெடோனாசத்து, 80-கிறேன்; சுத்திசெய்த பன்றிநெய் 1-ஔன்ஸ். சத்தைமுதல் இளகலாக்கிக்கொண்டு, பிறகு நெய்யைவிட்டு பிஸ்ரமித்துக்கொள்ளவும். உபயோகம்.—கீல்வாதம், நரம்புவேதனை, கார்டி என்னும் வேதனை, மூலம், மூத்திரப்பையின் வியாதிகள் ஆகிய இவைகளுக்கு இதை மேலுக்குப் போடலாம்.

அட்ரோபியா.—(Atropia) பெல்லெடோனா செடியின் வேரிலிருந்தெடுக்கிற இந்த உப்பை, உள்ளுக்குக்கொடுத்தால் மெத்தக்கெடுதி செய்யும்; கிஷ்ணமண்டல துவாரத்தை விரிவிக்க, இதை ஜயநீர்செய்து (Solution of Atropia; Liquor Atropiæ.) (அட்ரோபியா உப்பு, 4-கிறேன், ரெக்டிபைட் சாராயம், 1-டிராம்; தீநீர், 7-டிராம்.) அதில்-2-5 துளி கண்ணில் விடலாம்.

ஸல்பேட் ஆவ் அட்ரோபியா.—(Sulphate of Atropia; Atropiæ Sulphas.) இது கொடிய நஞ்சு, உள்ளுக்குக் கொடுக்கலாகாது; இதை ஜயநீர்செய்து, (Solution of the Sulphate of Atropia; Liquor Atropiæ Sulphatis) (மேற்படி உப்பு, 4-கிறேன், தீநீர், 1-ஔன்ஸ். Sulphate of Atropia, grs. 4; Distilled water, f oz. 1.) அதில் 2-துளி கண்ணில்விட்டால் கண்தாரை விரியும். For external application. It is a powerful poison.

ஊமத்தை

ఉమ్మెత్త దుత్తూరము. டரோ, Dhatura; Datura Alba.

விவரணம்.—சீமையில் விளைகிற ஊமத்தனுக்கும்; (Datura Stramonium, Stramonium, Thorn Apple.) நாட்டு ஊமத்தனுக்கும், குணங்களொன்று; சீமை சரக்குக்குப் பதிலாக நமது நாட்டுமூலிகையை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

செய்கை.—சகலருக்குப் பிரசித்தமாய்த் தெரிந்த இந்தப் பூண்டின் இலைக்கும், வித்துக்கும், வேதனாசாந்தகாரி, அங்காகர்ஷணநாசகாரி ஆகிய

இக்குணங்களுண்டு. மாத்திரை அதிகமானல் கொடிய நஞ்சாகும். Anodine and antispasmodic.

உபயோகம்.—பெல்லெடோஞ என்னும் மருந்தைக்கொடுக்கிற ரோகங்களுக்கு இதைக் கொடுக்கலாம். சுவாசகாசத்துக்கு இதின் இலையைப் புகை பிடிக்கச்செய்தால், கஷ்டசுவாசத்தைச் சமனப்படுத்தி, கபத்தையும் வெளிப்படுத்தும்; வெகு ஜாக்கிரதையாய் உபயோகிக்கவேண்டியது. கண்ணுக்குப் போட்டாலும் சரி, அல்லது மாத்திரையில் அதிகரித்துக் கொடுத்தாலும் சரி, கண்தாரை விரியும். கீல்வாதம், எலும்புவீக்கம், வித்திருதி, கட்டிகள் இவைகளுக்கு இலையைவதக்கி ஒத்திடம் போடலாம்; அல்லது விரையை இடித்து எண்ணெயில்போட்டு, தயிலமாகச் செய்து அதைத் தேய்க்கலாம், வேதனைதணியும். Asthma, rheumatic swellings, nodes, boils, tumors.

மாத்திரை.—இலையின் தூளில், 1-3-கிறேன் எடை கொடுக்கலாம். சுருட்டுப்பிடிக்க உலர்ந்த இலையில், 10-30-கிறேன் எடை உபயோகிக்கலாம். ஆரம்பத்தில் கொஞ்சமாய்க்கொடுத்து பிறகு மாத்திரையைப் படிப்படியாய் அதிகரித்துக்கொள்ளுவதே நல்லது. 1-3 grs. For smoking purposes, 10-30 grs.

ஊமத்தன்விரைப் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் டரோ, Tincture of Dhatura; Tinctura Daturæ.) செய்முறை.—சதைத்த ஊமத்தைவிரை, $2\frac{1}{2}$-ஔன்ஸ், புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். மூடி அடிக்கடி குலுக்கி, 7-நாள் ஊறவைத்து, இறுத்து, பிழிந்து, வடிகட்டி, 1-பைன்ட் அளவுக்குத்தேவையான சாராயம்விட்டுக்கொள்ளவும். மாத்திரை.—10-20-30-மினம்வரையில் கொடுக்கலாம். [Dhatura Seeds, $2\frac{1}{2}$ oz; Proof spirit, pint 1.] Dose.—10-20 or 30 minims. (அபனிக்குப் பதிலாய் இதை ஜாக்கிரதையாய்க் கொடுக்கலாம்; நயத்தசரக்கு. 20-துளி, 1-கிறேன் அபினிக்குச் சமானமானது.)

[ஊமத்தன் இலையும், இளசான கிளைகளையும், 112-பவுன் எடுத்து உரலில் இடித்து, ரசம்பிழிந்து, அதை 130-டிக்கிரி உஷ்ணப்படும்படி சீறுதீயிட்டு காய்ச்சி, துணியில் வடிகட்டி, பச்சைநிறமான ஏட்டை நீக்கி, வடித்த ரசத்தை, 200-டிக்கிரி உஷ்ணப்படும்படி காய்ச்சி உறையச்செய்து, மறுபடியும் வடிகட்டி, வடித்தரசத்தை ஜலயந்திரத்தில் வைத்து, பாகுபதமாக்கி, பிறகு முன் வேறுபடுத்திய ஏட்டை, இதனோடுசேர்த்துக் கலக்கி, 140-டிக்கிரிக்கு அதிகப்படாத உஷ்ணம்படும்படி காய்ச்சி, மெழுகுபதமாக்கிக்கொள்ளவேண்டியது. இதை மாத்திரையில் கொஞ்சங் கூடிக் கொடுத்தால், பெல்லெடோஞவுக்குச் சமனய் குணத்தைத் தரும். பரீக்ஷித்தது.]

ஊமத்தையிலே போல்டீஸ்.—(டரோ போவ்டீஸ், Dhatura Poultice; Cataplasma Daturæ.) செய்முறை.—ஊமத்தையிலையை இடித்து, அதற்குச் சமன் அரிசிமாவு சேர்த்து, கொஞ்சம் ஜலம்விட்டு களிபதமாக்கிக் கொள்ளவும். இதை எலும்புவீக்கம், மூட்டுவீக்கங்கள், வேதனைக்கட்டிகள், வெளிமூலம் ஆகிய இவைகளுக்குப் போடலாம்; காயம், ரணம் இவைகளுக்குப் போடலாகாது, துற்குணம் செய்யும். To nodes, enlargement of joints, painful tumours, external piles.

கருவூமத்தை.—నల్ల ఉమ్మెత్త చెట్టు. (Datura fastuosa.) இதுவும் வெள்ளையினத்தின் குணத்துக் கொற்றிருக்கும்; ஆனால் கருப்புக்கு வீரியம் அதிகமென்று சொல்லுவதுண்டு. மராட்டி மொக்து. மதனப்பூ. మదనకామేశ్వరం. (Young unexpanded flowers of Dhatura.).—இதுவும் போதையைத்தரும்; நாட்டுவைத்தியத்தில், மெத்த உபயோகம். பரீக்ஷையால் ஊமத்தை மொக்குகளென்று கண்டுகொள்ளப்பட்டது.

குரோசனியோமம்

ஷை பூண்டு.—Hyoscyamus Niger; Hyoscyamus; Common Henbane.

குரோசானியோமப்பத்திரி.—Hyoscyami Folia.

விவரணம்.—இது சீமைப்பூண்டு; இவ்விடத்திலும் பயிரிடுவதுண்டு. சுரசத்தைக் கண்ணிலிட்டால், கண்தாரை விரியும். செய்கை.—சமனகாரி, வேதனைசாந்தகாரி, அங்காகர்ஷணநாசகாரி. உபயோகம்.—வேதனை, விகாரம், நித்திராபங்கம், இருதயத்துடிப்பு ஆகிய இவைகளுக்குக் கொடுக்கலாம்; நேத்திரரோகங்களில் கண்தாரைவிரிய மேலுக்குப்போடலாம். மாத்திரை.—சூரணத்தில், 5-10-கிறேன் எடை கொடுக்கலாம். Sedative, anodyne, antispasmodic. Use.—In nervous irritability, mental excitement, sleeplessness, palpitation, &c. Dose.— 5-10 grs.

சூரோசானியோமப் பாவனத்திரவம்.-(டிங்சர் ஆவ் ஸஹயாசியாமஸ், Tincture of Hyoscyamus; Tinctura Hyoscyami.) செய்முறை.—குரோசானி யோமப்பத்திரி, $2\frac{1}{2}$-ஔன்ஸ்; புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். ஊறவைத்து, பெர்க்கொலேடரில் வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—20-60-மினிம். (Hoyscyamus leaves, $2\frac{1}{2}$ oz. ; Proof spirit, 1-pint.) Dose.—20-60. min.

குரோசானியோமச்சத்து.—(எகிஸ்ட்ராக்ட் ஆவ் ஹையாசியாமஸ்,Extract of Hyoscyamus; Extractum Hyoscyami.) மாத்திரை.—5-10-கிறேன். வேதனைகளுக்கு இதை மேலுக்குத் தடவலாம். இதை ஜலத்தில் கரைத்து கண்ணில் வீட்டாலும் சரி, அல்லது புருவத்தின்மேல் போட்டாலும்சரி, கண்தாரை விரியும். 5-10-grs. குரோசானியோமமென்னும் விரை, (Henbane seeds.) டர்க்கிதேசத்திலிருந்து வருகிறதென்று சொல்லுகிறார்கள். இது நமது நாட்டில் உபயோகமாகிறது.

புகையிலை

புகையிலைப்பூண்டு.—Nicotiana Tabacum. புகையிலை. டொபாக்கோ லீவ்ஸ். Tobacco leaves; Tabici folia.

செய்கை.—சமனகாரி, அங்காகர்ஷணநாசகாரி; பிரமாணம் அதிகமானால் கொல்லும். உபயோகம்.—இசிவுரோகங்களுக்கு, இதை உபயோகிப்பதுண்டு; ஆனால் உள்ளுக்குக் கொடுக்கத்தகாது. எரிச்சலும் வேதனையும் தணிக்க கட்டி, வீக்கம் இவைகளுக்கு மேலே போடலாம். சுவாசகாசம், இருமல், வேதனை, நித்திராபங்கம் இவைகளுக்குச் சுருட்டுபிடிக்கச் செய்வதுமுண்டு. இதை வெந்நீர்கஷாயமிட்டு (இலை, 20-கிறேன்; வெந்நீர், 8-ஔன்ஸ்;

Enema of Tobacco) இறுகிக்கொண்ட குடலிறக்கம், நீரடைப்பு இவைகளுக்கு ஆசனத்தில் பிரயோகிக்கலாம் ஆனால் அதிகஜாக்கிரதைவேண்டியது. நமது வீட்டுகளில் புகையிலைக்காம்பை குழந்தைகளுக்கு ஆசனத்தில் வைத்து, மலம் இறங்கும்படிச் செய்கிறவழக்கம் கெட்டது. Powerful sedative, antispasmodic. In tetanus, strangulated hernia, dislocations, &c. Externally in pain, rheumatic swellings, nodes, &c., smoking in asthma, spasmodic coughs, sleeplessness.

சீமை முளகாய்

ஷை முளகாய்ச்செடி, Capsicum Fastigiatum; Capsicum Annum. சீமைமுளகாய், காந்தாரிமுளகாய் సీమమిరపకాయ. காப்சிகம், Capsicum Fruit ; Capsici Fructus.

செய்கை.—வீரிய உஷ்ணகாரி, ஷோணகாரி. உபயோகம்.—குன்மம், அஜீரணபேதி, பித்தசுரத்தில் காணுகிற வாந்தி இவைகளுக்குக் கொடுக்கலாம்; சயித்தியக்கட்டி, தொண்டைக்கம்மல் இவைகளுக்குக் கொப்புளிக்கிற ஜலத்தோடு உபயோகிக்கலாம். முளகாயை அரைத்து போல்டீஸ் செய்துப்போட்டால், சருமம் சிவந்து, எரிச்சலெடுக்கும். கடுகோடு சேர்த்துப்போட்டால் வீரியம் அதிகப்படும். மாத்திரை.—1-4-கிறேன் ; தனியாய்க்கொடுப்பது அரிது. Acrid stimulant; rubefacient. Use.—In dyspepsia, diarrhœa, as an adjunct to gargles for cynanche and hoarsenss; added to sinapism to increase its activity. Dose.—1-4.grs.

சீமைமுளகாய் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் காப்சிகம், Tincture of Capsicum; Tinctura Capsici.) செய்முறை.—சீமை முளகாய்த்தூள், $\frac{3}{4}$-ஔன்ஸ் ; ரெக்டிபைட் சாராயம், 1-பைன்ட். ஊறவைத்து, பெர்க்கொலேடரில்விட்டு வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—10-20-மினிம். 6-ஔன்ஸ், சிங்கோனகஷாயம், 1-டிராம் முளகாய்ப் பாவனத்திரவம் ; இவைகளைச் சேர்த்து கண்டேஷமாகச் செய்துகொள்ளவும். (Capsicum $\frac{3}{4}$ oz.; Rectified spirit, pint 1.) Dose.—10-20 minims.

(NON-OFFICINAL.)

கண்டங்கத்திரி.—వాకుడు; నేలములక. (Solanum Jacquini.) இதற்கு கபஹாரி, மூத்திரவர்த்தனி இச்செய்கைகளுண்டென்று இருமல், சுரம், சுவாசகாசம், க்ஷயம் இவைகளுக்குக் கொடுக்கும்படி கண்டிருக்கின்றது.

கருப்புமணத்தக்காளி.—నల్లకాంచిచెట్టు, (Solanum Nigrum.) இதில் கருப்பு, சிவப்பு என 2-சாதிகளுண்டு; மணத்தக்காளி வத்தல் பத்தியத்துக்குதவும். இலையின் ரசத்தைச் சாப்பிட்டால் வாய்ரணம் ஆறும்; வாயிலிட்டுமென்று விழுங்குவதுமுண்டு. இதற்கு ஜலம் ஜலமாய் பேதியாக்குகிறகுணமும், மூத்திரத்தை அதிகப்படுத்துகிற குணமுமுண்டு; யகுர்திகண்ட வீக்கங்களுக்கும், அதனோடுச்சேர்ந்த நீர்ப்பாண்டுவுக்கும்,(Dropsy)யூனானிவைத்தியர்கள், அதிகமாய்க் கொடுப்பதுண்டு. இலையின் ரசத்தை, 10-15-கிமிஷம், அல்லது பச்சைநிறம் மாறி கருக்கிறவரையில் சுடவைத்து, இறக்கி குளிர்ந்தபிறகு வடிகட்டி 6-8-ஔன்ஸ் அளவுக்கு பிரதிதினம் காலையில் கொடுத்தால் பேதியாகும், மூத்திரம் அதிகப்படும். அந்தரசத்தை வெந்நீரிலாவது, சுட்ட

மணலிலாவது வைத்து சுண்டவைத்து, மெழுகுபதமானபிறகு எடுத்துக் கொண்டு அதில், 1-திராம் எடை தினத்துக்கு 2-3-ஆவர்த்தி கொடுத்தால், மூத்திரமிறங்கும், மலம் உதையும்; இது யகுர்த்திகண்ட ரோகங்களுக்குக் கொடுக்க நல்லமருந்து.

தூதுவளை.—ముళ్లముష్టి.(Solanum Trilobatum.) இதைக் கஷாயமிட்டு இருமலுக்குக் கொடுக்கப்படும்: இலையை லேகியமாகவும், துவையலாகவும் செய்துகொடுப்பதுண்டு.—சுண்டக்காய். மலைச்சுண்டை. ఉస్తికాయ. (Solanum Verbascifolium.) இது முக்கியமாய் சமையலுக்குதவும் பதார்த்தம். மார்ச்சளி கிருமிரோகம் இவைகளையும் கேழ்க்குமாம்.—அனைச்சுண்டை.—(Solanum Ferox.) இதின் வேரைக் கஷாயமிட்டு வாதசுரங்களுக்குக் கொடுக்கப்படும்.

அமுக்குற.—పెన్నేరుగడ్డ. Withania (Puneeria) Coagulans, W. (Physalis) Somnifera. Winter Cherry. சோபாநாசகாரி. இதைச் சுக்குடன் அரைத்து வீக்கங்களுக்குப் பூசலாம்.

கத்தரி. வழுதலை.—వంకాయ. (Solanum Melongena. The Brinjal or Egg-plant.) இதில் அநேகஜாதிகளுண்டு. கத்தரியிலை, மூத்திர பேதி கஷாயங்களில், தமிழ்வைத்தியர் சேர்ப்பதுண்டு; கத்தரிப்பிஞ்சு பத்தியத்துக்குதவும்

ஸ்கோல் விரையினம். (PLANTAGINEÆ.)

ஸ்கோல்வித்துச்செடி.—Plantago Ispaghula; Ispaghul. ஸ்கோல் வித்து, Ispaghul seeds, Ispaghulæ semina. விவரணம். பெர்ஷியா வில் விளைகிற இந்தவிதையை ஜலத்தில்போட்டால், குழகுழப்புண்டாகும். செய்கை. ஸினிக்தகாரி, லகுசங்கோசனி. Demulcent, mildly astringent. உபயோகம். சுரம், இருமல், மூத்திர எரிச்சல் இவைகளைச் சவுக்கியப்படுத்துகிற குணம் இருந்தபோதிலும் பேதி, சீதபேதி இவைகளுக்கு முக்கியமாய் உபயோகப் படுத்தலாம். விதையை ஜலம்விட்டரைத்துக்கொண்டால், நல்ல போல்டீஸ் ஆகும். In fever, cough, renal affections, diarrhœa and dysentery. மாத்திரை. 2-3-டிராம். 2-3 drs.

இஸ்கோல்விரையின் கஷாயம்.-(Decoction of Ispaghul; Decoctum Ispaghulæ.) செய்முறை. இடித்தஸ்கோல்விரை, 2-டிராம்; ஜலம், 1-பைன்ட். மூடி 10 - நிமிஷம் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—2-4-ஔன்ஸ் அளவுக்கு, தினம் 3-4-ஆவர்த்தி இருமலுக்கும், நீர்ச்சுருக்குக்கும் கொடுக்கலாம். (The seeds, 2 drs.; Water, pint 1.) Dose.—2-4 oz. (பெரியவர்களுக்கு $2\frac{1}{2}$-டிராம் விரையுடன், $\frac{1}{2}$-டிராம் கற்கண்டு சேர்த்து சீதபேதி, பேதி இவைகளுக்குக் கொடுத்தால், விரையானது குடலிலிறங்கிப்போகும்போது, ஊறி, பெருத்து, குழகுழப்பாகி, குடலின் கொதிப்பைத் தணிக்கும்.)

கீரையினம். (AMARANTACEÆ.)

(NON-OFFICINAL.)

முள்ளுக்கீரை.—ముళ్ల తోటకూర (Amarantus spinosus.) இதில் பல சாதிகளுண்டு; ஸினிக்தகாரிகுண மிருப்பதால், போல்டீஸ்செய்து கட்டி

களுக்கும், ரணங்களுக்கும், உபயோகிக்கலாம். இதின் வேரைச் சுட்டுச் சாம்பலை யெடுத்து கட்டிகளுக்கு வைத்தால், முகம்வைத்து சீக்கிரத்தில் சீழ் வெளிப்படும். சிலவிடங்களில், இதின் இலையையும், வேரையும் கஷாயமிட்டு, நீரை அதிகப்படுத்தக் கொடுப்பதும் உண்டு.

நாயுருவி.—ఉత్తరేణి. (Achyranthes aspera.) சங்கோசன, மூத்திர வர்த்தனகாரி குணங்களிதற்குண்டென்று, பெரும்பாடு, பேதி இவைகளுக்கு, நாட்டுவைத்தியர்கள் உபயோகிப்பதுண்டு. நாயுருவி சமூலத்தில் 2-ஔன்ஸ், ஜலம், 1½-பைண்ட். 1-பைண்ட்டுக்குச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, இதில், 2-ஔன்ஸ் வீதம், நீர்க்கோவையில்; மூத்திரமதிகமாகிறவரையில் கொடுக்கவேண்டியது; நல்ல மருந்து. இந்தப் பூண்டின் சாம்பலில், பொடாஷ் அதிகமாய் இருக்கிறது; அதை நீர்க்கோவைக்கு, சுக்கு கஷாயத்துடன் கொடுக்கலாம். நாயுரிவிபூண்டின் கதிர்களை, தேள்கொட்டல் முதலிய கீடங்களின் கடிகளுக்கு, சிலவிடங்களில் உபயோகிப்பதுண்டு; தேள்கொட்டலுக்குத் தேய்த்து, நற்குணம் கண்டதாய் தெரியவருகின்றது.

சிறுகீரை.—చిరుకూర. (Amarantus campestris.) சமைத்துச் சாப்பிடுகிற இதின் வேரைக் கஷாயமிட்டு மூத்திரக் கடுப்புக்குக் கொடுப்பதுண்டு.

அறைக்கீரை.—కొయ్యకూర. (A. Tristis.) இது பத்தியத்துக்குதவும்.

சிறுபீளை.—పిండికూర. (Ærna lanata.) இதின்வேரைக் கஷாயமிட்டு, மூத்திரக் கிருச்சிரத்துக்குக் கொடுப்பதுண்டு.

பத்திராக்ஷசெடி யினம். (NYCTAGINACEÆ.)

(NON-OFFICINAL.)

பத்திராக்ஷ செடி.—భద్రాక్షీ చంద్రమల్లి. (Mirabilis Jalapa.) இதின் கிழங்குக்கு விரேசனகுணம் மெத்தக்கொஞ்சமுண்டு, உபயோகமில்லை. கட்டிகள் பழுத்துடைய இலைபை வதக்கிப்போடுவது நாட்டுவழக்கம்.

மூக்குரட்டை.—అటికమామిడి. (Boerhavia diffusa, spreading hog weed.) இதற்குக் கபஹாரிகுணமுண்டென்று, சுவாசத்துக்குக் கொடுத்து நற்குணம் கண்டதுண்டு. வேரின் தூளையாவது, கஷாயமாவது கொடுக்கலாம்; மாத்திரை அதிகமானல் வாந்தியாகும்.

ரேவல்சின்னி யினம். (POLYGONACEÆ.)

இரேவல் சின்னி

மஞ்சள்சீனக் கிழங்கு. வரியாத்துக்கிழங்கு; பேதிகந்தம்; பேதிக்கிழங்கு.—రేవల్ చిన్ని. పసుపుచీనగడ్డ. Rheum. ரூபார்ப் ரூட். Rhubarb root; Rhei Radix.

விவரணம்.—சீனராஜியத்தில் திபேட், டார்டெரி என்னும் பிரதேசங்களிலிருந்து சீமைக்கிக் கொண்டுபோகிற இந்தச் சரக்கு, உருண்டாவது, தட்டையாயாவது இருக்கும், ஒருதுவாரம் இருப்பதும் உண்டு; வெளிக்கு மஞ்சளாயும், உள்ளே வரிவரியாயும், மென்றால் மணலைப்போல் நறநறவென்றும் இருக்கும்; கொஞ்சம் துவர்ப்பாய்க் கசக்கும், ஒருவித வாசனையுண்டு; சொத்தை விழுந்திராது.

செய்கை.—முதல் சாந்தமான பேதியை யுண்டாக்கும், பிறகு, துவர்ப்பு குணத்தைக்காட்டும்; குறைந்த அளவில் கொடுத்தால், தீபனத்தை வர்த்திப் பிக்கும். Cathartic; in small doses, stomachic, and astringent

உபயோகம்.—உபத்திரவமில்லாமல் பேதியை யுண்டாக்கிறபடியால், மலபந்தமுடைய குழைந்தைகளுக்கும், பாண்டுரோகமுடைய ஸ்திரீகளுக்கும், கருப்பிணிகளுக்கும் முக்கியமாய் இதைக் கொடுப்பதுண்டு; அதிசார பேதியில், கெட்டமலத்தை வெளிப்படுத்த இதைக் கொடுக்கலாம். அக்கினி மந்தரோகத்துக்கு, இதைத் தனியாவது, வேறு மருந்துகளோடுச் சேர்த்தாவது கொடுத்தால், வியாதியைக் கண்டிக்கும், In the constipation of children, anæmia and pregnant females; diarrhœa and dyspepsia.

மாத்திரை.—20-40 கிறேன் தேனில் கலந்துகொடுத்தால் பேதியாகும். 3-8 கிறேன் மாத்திரைச்செய்து கொடுத்தால், தீபனத்தை வர்த்திப் பிக்கும். 20-40 grs. as a cathartic; 3-8 grs. as a stomachic

ரேவல்சின்னிப் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் ரூபார்ப், Tincture of Rhubarb; Tincturæ Rhei.) செய்முறை.—ரேவல்சின்னித்தூள், 2-ஔன்ஸ்; சதைத்த எலரிசி, சதைத்த கொத்துமலி, குங்குமப்பூ, வகைக்கு-$\frac{1}{4}$-ஔன்ஸ் புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். இவைகளை ஊறவைத்து, பெர்க்கொலேடரில் வடிகட்டிக் கொள்ளவேண்டியது. மாத்திரை.—1-2 திராம் அளவுக்குக்கொடுத்தால், தீபனத்தை அதிகப்படுத்தும்; இதை பேதிமருந்துகளோடுச் சேர்த்துக்கொள்ளலாம். (Rhubarb, 2 ozs.; Cardamon, Coriander, Saffron, of each $\frac{1}{4}$. oz.; Proof spirit, 1 pint.) Dose.—1-2 fdrs. as a stomachic.

ரேவல்சின்னிக் கலவை மெழுகு.—(கம்பௌன்ட் ரூபார்ப்பில், Compound Rhubarb Pill; Pilula Rhei Composita.) செய்முறை.—ரேவல்சின்னித்தூள், 3-ஔன்ஸ், சேகொட்ரையின் தேசத்து, மூஷாம்பரத்தூள், $2\frac{1}{4}$-ஔன்ஸ்; வெள்ளாத்திப் போளத்தூள், கட்டி சவுக்காரம், வகை 1-க்கு, $1\frac{1}{2}$-ஔன்ஸ்; பெப்பர்மின்ட்தைலம், $1\frac{1}{2}$-திராம்; வெல்லப்பாகு நிறையில் 4-ஔன்ஸ். சூரணங்களைத் தயிலத்தில மிஸ்ரமித்து, பிறகு பாகைச் சேர்த்து, செவ்வையாய் மிஸ்ரமிக்கும்படி இடித்துக் கொள்ளவேண்டியது. மாத்திரை.—5-10 கிறேன் கொடுக்கலாம். இதை இரவில் சாப்பிட்டுப் படுத்துக்கொண்டால், காலையில் தாராளமாக மலம இறங்கும். (Rhubarb 3 ozs.; Socotrine Aloes, $2\frac{1}{4}$ ozs; Myrrh, Hard soap, of each $1\frac{1}{2}$ oz. Oil of Peppermint, $1\frac{1}{2}$ fdrs; Treacle by weight, 4 ozs.)Dose.-5-10-grs.

ரேவல்சின்னிக் கலவை சூரணம்.—(கிரிகோரிஸ் பவுடர். Gregory's Powder. கம்பவுன்ட் பவுடர் ஆவ் ரூபார்ப், Compound Powder of Rhubarb ; Pulvis Rhei Composita.) செய்முறை.—ரேவல்சின்னிச் சூரணம் 2-ஔன்ஸ்; காந்தமண்பஸ்மம், 6-ஔன்ஸ்; சுக்குத்தூள், 1-ஔன்ஸ். இவைகளைச்சேர்த்து, வஸ்திரகாயம் செய்துகொள்ளவேண்டியது. மாத்திரை.-பெரியவர்களுக்கு, 20-60-கிறேன் வீதமும்; குழந்தைகளுக்கு, 5-10, கிறேன் வீதமும், தேனிலாவது, ஜலத்திலாவது கலந்துகொடுத்தால், உபத்திரவமில்லாமல் பேதியாகும். (Rhubarb, 2 ozs ; Light Magnesia, 6 ozs; Ginger, 1 oz.) Dose.—20-60 grs.; for children, 5-10 grs.

(NON-OFFICINAL.)

நாட்டுரேவல்சின்னி.—(Rheum Emodi ; R. Moorcroftianum; R. Webbianum.) ஹிமோத்கிரிபருவதப்பிரதேசங்களில் விளைந்துவருகிற நமது நாட்டு சேவல்சின்னியை, இங்கிலீஷ் வைத்தியர்கள் பரிசைசெய்து, சீனதேசத்துச் சரக்குக்குத் தாழ்ச்சியென்றும், சாக்கிரதையாய்ப் பயிரிட்டால், டர்க்கி தேசத்துச் சரக்குக் கொற்றவருமென்றும், குறித்திருக்கிறார்கள்.

சாதிக்காய்ச்செடி யினம். (MYRISTICEÆ.)

ஜாதிக்காய்

ஜாதிக்காய்ச்செடி.—Myristica Officinalis; Officinal Nutmeg Tree.

ஜாதிக்காய்.—ஜாஜிகாய. நட்மெக், Nutmeg; Myristica.

செய்கை,—உஷ்ணகாரி, கருப்பவாதஹாரி; அதிகமானால் நித்திரையையுண்டாக்கும். Stimulant and carminative; in larger doses narcotic.

உபயோகம்.—இதை அதிசாரபேதி, வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அக்கினிமந்தம் ஆகிய இவைகளுக்குக் கொடுத்து குணம் கண்டதுண்டு, ஆனால் முக்கியமாய்க் கூட்டுமருந்து செய்முறைகளில் சேர்க்கப்படுகின்றது, கறிமசாலையோடும், தாம்பூலத்துடனும் சேர்ப்பது வழக்கம். போர்ட் ஒயினோடுச் சேர்த்துக்கொடுத்தால், உஷ்ணம் செய்து வாயுவைக் கண்டிக்கும். In diarrhœa, flatulence and dyspepsia.

மாத்திரை.—10-20-கிறேன். 10-20 grs.

ஜாதிக்காய்த் தயிலம்.-(வாலெடைல் ஆயல் ஆவ் நட்மெக், Volatile Oil of Nutmeg; Oleum Myristicæ.) ஜாதிக்காய்த்தூளை ஜலத்தில்போட்டு; வாலையிலிட்டு வடித்தெடுக்கிற எண்ணெயில், 1-5 மினிம் கொடுக்கலாம், பல்வலிக்கும் போடலாம். Dose.—1-5 min.

ஜாதிக்காய்மது-(ஸ்பிரிட் ஆவ் நட்மெக், Spirit of Nutmeg; Spiritus Myristicæ.) செய்முறை.—சாதிக்காய் தயிலம், 1-அவுன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 49-அவுன்ஸ். இவைகளைச் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—30-60 மினிம் கொடுக்கலாம். (Oil of Nutmeg, 1 foz. Rectified Spirit, 49 fozs.) Dose.—30-60 min.

ஜாதிபத்திரி.—(மேஸ், Mace.) காயின்மேல் மூடிக்கொண்டிருக்கிற இதற்கும், காயின் குணமேயுண்டு. இதை வாலையிலிட்டு வடித்தெடுக்கிற தயிலத்துக்கும், ஜாதிக்காயின் தயிலத்தின் குணமேயுண்டு; அதைப்போலவே இதையும் உபயோகிக்கலாம். ஜாதிபத்திரி சம்பாரவர்க்கங்களோடு சேர்க்கப்படுகின்றது.

(NON-OFFICINAL.)

நாட்டுச்சாதிக்காய்ச்செடி.—(Myristica Malabarica.) மலையாளம், திருவிதாங்கோடு இப்பிரதேசங்களில் விளையும் செடியிலிருந்துண்டாகிற நாட்சாதிகாய்க்கு (Malabar Nutmeg) வாசனை அற்பமா இருக்கும்; அதை இடித்து வேகவைத்தால், உறைந்த தயிலமிறங்கும்; அதை ஆறுதவிரணங்

களுக்குப்போட்டால் வேதனையைத்தணித்து துஷ்டுகளை நீக்கி, செம்புண்ணுக்கிவிடுமென்று சொல்லுகிறார்கள். எண்ணெயில் கலந்து உபயோகிக்க வேண்டியதாய் இருக்கும். இதை வாதநோய்களுக்குப் பூசலாம்.

சன்னலவங்கப்பட்டைச் செடியினம். (LAURACEÆ.)

கருப்பூரம்

கருப்பூரச்செடி.--Cinnamomum Camphora. Camphora Officinarum.

கருப்பூரம்.—சூடன். కర్పూరము. காம்பர், Camphor, Camphora.

விவரணம்.—சீனு, ஜெபான் முதலிய தேசங்களில் விளைகிற செடியின் கட்டையைப் பதங்கித்து எடுக்கிறசூடனுனது, வெள்ளைக்கட்டிகளாய், நொய்போலொற்ற அணுக்களாய் இருக்கும்; மெத்தவாசனையுண்டு. வாயிலிட்டால் விறுவிறுப்புண்டாகி பிறகு குளிர்ச்சியாயிருக்கும். ஜலத்தில் மிதக்கும்; காற்றுபட்டால் பறந்துவிடும்; ஜலத்தில் வெகுகொஞ்சமாயும், சாராயம் எண்ணெய் இவைகளில் சீக்கிரமாயும் கரையும்; அழுந்தும்; தூளாகுவது கஷ்டம்; பிரகாச ஜுவாலையோடெரியும்; எரித்தால், எல்லாம் பதங்கித்துவிடும்.

செய்கை.—கருப்பூரத்துக்கு முதல், உஷ்ணித்து, பிறகு வியர்வையைப் பிறப்பிக்கிற குணமுண்டு; சமன், வேதனுசாந்த, அங்காகர்ஷண நாசகாரி குணங்கள் கருப்பூரத்துக்குண்டு; அதிகமானுல் விஷமிக்கும். Stimulant, diaphoretic, sedative, anodyne, antispasmodic

உபயோகம்.—துற்பல சுரங்கள், தாபனங்கள், பிரசவ உன்மாதம், இரைப்பு, மாரடைப்பு, கக்கிருமல், மார்த்துடிப்பு, சூதகச்சூலை, ஸ்திரீகளுக்குக் காணுகிற காமவெறி, சொப்பனஸ்கலிதம், பிளவை, சூதகச்சூலை, பிரமேகத்தில் ஆண்குறியில் காணுகிற வலி, சொட்டுமூத்திரம், சூதகசந்நி, சீல்வாதம், அழிவிரணம், கணுவாதம் இவை முதலிய இன்னம் அநேக ரோகங்களுக்குக் கருப்பூரத்தை உபயோகிப்பதுண்டு. எட்டிக்கொட்டையின் சத்தைச் சாப்பிட்டு விஷமித்ததற்கு, சூடனை முறிவுக்குக் கொடுத்ததுண்டு. வேதனை, சுளுக்கு, படுக்கைவிரணம், நமைச்சல் முதலியவைகளுக்கு, இதை மேலுக் குபயோகிக்கலாம். சூடனை ஆக்கிராணித்தால், ஜலதோஷமும், இருமலும், குணமாகும். கருப்பூரத்தைக்கொளுத்தி வேதுபிடித்தால், வியர்வை பிறக்கும். வாந்திபேதிக்கு இதை அளவில் கூட்டிக் கொடுக்கவேண்டியது. In low fevers, inflammations, puerperal mania, asthma, angina pectoris, hooping cough, dysmenorrhœa, nymphomania, spermatorrhœa, cancer, chordee, incontinence of urine, hysterai, rheumatism, gangrene, gout, &c.

மாத்திரை.—1-5 கிறேன்; ஆவசியமிருந்தால், இந்த எடைய இரட்டித்துக் கொடுக்கலாம். 1-5 grs.

கருப்பூரசலம் --(காம்பர்வாடர், Camphor Water ; Aqua Camphoræ ; Mistura Camphoræ.) செய்முறை.—பொடித்த கருப்பூரம், ½-அவுன்ஸ்; தீநீர், 1-காலன். பூரத்தை ஒரு சல்லாத்துணிப்பையில் போட்டு, கண்ணுடிகம்பியின் ஒரு முனையில்கட்டி, குப்பியில்வைத்து ஜலம் விடவேண்

டியது. கம்பியின் மேல் முனையானது, அடைப்புக்குத் தாழ்ந்திருக்கவேண்டியது. இவ்விதமாகச்செய்து, இரண்டுநாள் ஊறினபிறகு, ஜலத்தை இறுத்து உபயோகிக்கலாம். மாத்திரை,—1-2 அவுன்ஸ் கொடுக்கலாம். முக்கியமாய் மருந்துகளுக் கனுபானமாகிறது. (Camphor, ½ oz. ; Water, 1 gallon.) Dose.—1-2 fozs.

கருப்பூரமது.—(ஸ்பிரிட் ஆவ் காம்பர், Spirit of Camphor; Spirtus Camphoræ.) செய்முறை —சூடன், 1-அவுன்ஸ் ; ரெக்டிபைட் சாராயம், 9-அவுன்ஸ். இவைகளைக் கரைத்துக்கொள்ளவும். மாத்திரை.—10-30, மினம் அளவுக்கு, விளாம்பிசினி விட்டுக் கலந்த ஜலத்தில் சேர்த்துக் கொடுக்கலாம், (Camphor, 1 oz.; Rectified Spirit, 9 fozs) Dose.—10-30 minims.

கருப்பூரக்கலவைப் பாவனத்திரவம்.—(காம்பவுன்டிங்சர் ஆவ் காம்பர், Compound Tincture of Camphor ; Tinctura Camboræ Composita ; Tinctura Comphoræ cum Opio ; Tinctura Opil Camphorata.) செய்முறை.—அபினித்தூள், 40-கிறேன் ; சாம்பிராணிபதங்கம் 40-கிறேன் ; கருப்பூரம் 30-கிறேன் ; சோம்புத்தயிலம், ½-திராம் ; புரூவ்ஸ்பிரிட் சாராயம், 1-பைன்ட் இவைகளைச் சேர்த்து, மூடி, 7-நாள் அடிக்கடி குலுக்கி ஊறவைத்து, பிறகு கடுதாடுசியில் வடிகட்டி, பிறகு 1-பயின்ட் அளவுக்குத் தேவையான சாராயம் விட்டுக்கொள்ள வேண்டியது. மாத்திரை —15-மினம்முதல், 2-திராம் அளவுக்கு அதிகமாயும் கொடுக்கலாம். 1-திராம், திரவத்தில், ¼ கிறேன் அபினி இருக்கின்றது. பெரிகாரிக், அல்லது பெரிகாரிக் இலெக்சியர், (Paregoric or Paregoric Elixir) என்று இங்லீஷ்வைத்தியர்கள் உபயோகிப்பது இதுதான் ; இருமலுக்குச் செய்கிற மருந்தில் இது சேருகிறது. (Opium, Benzoic Acid, of each 40 grs.; Camphor, 30 grs.; Oil of Anise, ½ fdr. Proof Spirit, 1 pint.) Dose.—15 minims to 2 fdrs. or more.

கருப்பூர பூசுந் தயிலம்.—(லினிமென்ட் ஆவ் காம்பர், Liniment of Camphor; Linimentum Camphoræ.) செய்முறை.—கருப்பூரம், 1-ஔன்ஸ்; ஆலிவ் ஆயல், 4-ஔன்ஸ் பூரத்தை எண்ணெயில் கரைத்துக் கொள்ளவேண்டியது. இதை வாதநோய் முதலிய வேதனையுள்ளவிடத்தில் பூசலாம். (Camphor, 1 oz.; Olive Oil, 4 fozs.)

சன்ன லவங்கப்பட்டை

சன்ன லவங்கப்பட்டைச் செடி, Cinnamomum Zeylanicum; Ceylon Cinnamon Tree

சன்ன லவங்கப்பட்டை. கருவாப்பட்டை. సన్నలవంగపట్టు. லின்னமன்மார்க், Cinnamon Bark; Cinnamomi Cortex.

செய்கை.—உஷ்ணகாரி, கர்ப்பவாதஹாரி. Stimulant, carminative.

உபயோகம்.—வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அதிசாரபேதி, வாந்தி ஆகிய இவைகளை இது கண்டிக்கும் கருப்பையைச் சுருங்கச் செய்கிற குணமுண்டென்று பெரும்பாடு, மந்தப் பிரசவவேதனை இவைகளுக்குக் கொடுத்ததுண்டு. கறிமசாலைக்கூட்டில் இது பிரதானமானது. In flatulence, diarrhœa and vomiting.

மாத்திரை.—இதின் சூரணத்தில், 5-20-கிறேன் எடைக்குக் கொடுக்கலாம்; தனியாய்க் கொடுப்பதரிது. 5-20 grs.

சன்னலவங்கப்பட்டைத் தைலம்.—(ஆயல் ஆவ் ஸின்னமன், Oil of Cinnamon; Oleum Cinnamomi.) பட்டையை வாலையிலிட்டுவடுத்து எடுக்கிற இந்தத்தைலமானது, புதுசாய் இருந்தால், மஞ்சள்நிறமாய் இருக்கும்; நாள்பட்டால், மெதுவில் சிவந்துவிடும்; சலத்தில்விட்டால் அடியில் இறங்கிவிடும். இதில் 2-5 மினம் வரையில் கொடுக்கலாம். பழகின சுரங்களுக்குக் கொடுக்கிற உஷ்ணமருந்துகளோடு, இதைச் சேர்த்துக்கொடுத்தால் நன்மைசெய்யும். சொத்தைப்பல்லில் இந்த தயிலத்தில் 1-2 துளிவிட்டால், பல்வலியை எடுக்கும்; தலைவலிக்கு, கன்னப்பொறியில் தடவலாம். Dose.—2-5 minims.

சன்னலவங்கப்பட்டைப் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் ஸின்னமன், Tincture of Cinnamon; டிங்சூராஸின்னமோமை, Tinctura Cinnamomi.) செய்முறை.—சதைத்த சன்னலவங்கப்பட்டை, $2\frac{1}{2}$-அவுன்ஸ்; புரூவ்ஸ்பிரிட் சாராயம், 1-பைன்ட். ஊறவைத்து, பெர்க்கொலேடரில் வடிகட்டிக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—1-2 திராம் கொடுக்கலாம். (Cinnamon Bark, $2\frac{1}{2}$ ozs.; Proof Spirit, 1 pint.) Dose.—1-2 fdrs.

சன்னலவங்கப்பட்டைக் கலவைச்சூரணம்.—(காம்பவுன்ட் ஸின்னமன்பவுடர், Compound Cinnamon Powder; Pulvis Cinnamomi Compositus; Pulvis Aromaticus.) செய்முறை.—பட்டை, ஏலரிசி, சுக்கு இவைகளின் சூரணம் வகை 1-க்கு 1-ஔன்ஸ். இவைகளைச்செவ்வையாய் மிஸ்ரமித்து, வஸ்திரகாயம்செய்து முடிவில், கலுவத்திலிட்டு மெதுவில் அரைத்துக்கொள்ள வேண்டியது. மாத்திரை.—3-10-கிறேன் எடைக்கிக் கொடுக்கலாம். (Cinnamon, Cardamom, Ginger of each 1 oz;) Dose.—3-10 grs.

(NON-OFFICINAL.)

பெருலவங்கப்பட்டை.—மொத்து லவங்கப்பட்டை; கருவாப்பட்டை. (Cinnamomum Aromaticum; Casia Bark.) இது சீனதேசத்திலிருந்து வருகிற சரக்கு; மலையாளம், திருவிதாங்கோடு இப்பிரதேசங்களிலும் அகப்படும்போல் காணப்படுகிறது. இந்தப்பட்டைத் தடித்திருக்கும். இலங்கையிலிருந்து வருகிற சரக்குக்கு இது குணத்தில் தாழ்ச்சி.

லவங்கப்பத்திரி.—(Cinnamomum Tamala, and C. Eucalyptoides; (C. nitidum.) Folia Malabathri, Tamalpathri or Indian leaf.) இந்தச்செடி நமதுதேசத்தில் விளைகிறது; லவங்கப் பத்திரிக்கு, கருவாப்பட்டையின் குணமும், வாசனையுமுண்டு; நமது நாட்டில் எண்ணியிருக்கிற அவ்வளவு சிரேஷ்டகுணமில்லை.

சந்தனமரத்தினம். (SANTALACEÆ.)

(NON-OFFICINAL.)

சந்தனமரம்.—చందనవృక్షము గంధపుమాను. (Sandal Tree, Santalum Album.) வாசனைக்காக அரைத்துப் பூசிக்கொள்ளுகிற சந்தனக்கட்டை

யைக் கஷாயமிட்டுச் சுரங்கள், அக்கினிமந்தம், மார்த்துடிப்பு ஆகிய இவை முதலிய ரோகங்களுக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம். கட்டையை எலுமிச்சம்பழரசம் விட்டரைத்து அக்கி, வீக்கம், சொறி, தேமல், நமைச்சல் ஆகிய இவைகளுக்குப் பூசலாம்; சுரத் தலைவலிக்கு, நெற்றியிலிடலாம். சீதசுரத்துக்கு, சந்தனக்கட்டையைக் கஷாயமிட்டு, ஒருவர்கொடுத்தில், வியர்வைகண்டு நாடி நடையின் தீவிரம் சமனப்பட்டதாய்க் கண்டிருக்கிறது. வாலையில் வடித்தெடுத்து, வாசனைகளுக்கு உபயோகிக்கிற சந்தனத் தைலத்தை, ஒருவைத்தியர், பிரமேகத்துக்குக் (gonorrhœa) கொடுத்து அநேகர் சொஸ்தமடைந்ததாய்ச் சொல்லுகிறார். 30-40 துளிவீதம், 90-120 துளி ரெக்டிபைட் சாராயம் விட்டுக்கரைத்து, கருவாப்பட்டைத் தைலம்விட்டு மணமேற்றி, தினத்துக்கு 3-முறை கொடுத்துக்கொண்டுவந்ததாய்த் தெரியவருகிறது. சிலருக்கு இரண்டு நாளைக்குள்ளவே சவுக்கியகுணம் கண்டதாய்ச் சொல்லுகிறார். சாதாரணமாய்க் கொடுக்கிற வால்மிளகு, குங்கிலியத் தயிலம் ஆகிய இவைகளைக் கொடுத்து, ஒரு குணமும் அகப்படாமலிருந்தபோது, இதைக் கொடுத்ததில் சவுக்கியமுண்டானதாய்த் தெரியவருகிறது. குங்கிலியத் தைலத்திலிருக்கிற துர்வாசனையும், அருசியும் இதிலில்லாததால் இஷ்டமாய்ச் சாப்பிடலாம். நமது நாட்டில் இது அதிகமாய் அகப்படுமாதலால், சிகிச்சைகர் செவ்வையாய்ப் பரீக்ஷித்துப் பார்க்கலாம்.

ஆடுதீண்டாப்பாளையினம். (ARISTOLOCHIACEÆ.)

(NON-OFFICINAL)

பெருமருந்து.—ஈசுரமூலி. பெருங்கிழங்கு. దూలగోవెల. ఈశ్వరవేరు (Aristolochia Indica; Indian Birthwort.) இதின்வேர் கசக்கும்; அதற்கு உஷ்ண, தாருட்டிய, ருதுவர்த்தனகாரி குணங்களுண்டென்று நாட்டு வைத்தியர்களுக்கு எண்ணம்; நமது நாட்டில், இதைக் குளிர்க்காச்சல் முதலிய வியாதிகளுக்கு உபயோகிப்பதுண்டு. கசப்புகுணமிருப்பதால், அக்கினிமந்தம், பேதி இவைகளுக்கு இதை உபயோகித்துப் பார்க்கலாம். இங்கிலீஷ் வைத்தியர்களுக்கு இதில் இன்னம் நம்பிக்கையுண்டாகவில்லை. சருப்பக்கடிக்கு, விஷம்முறிய இதைக்கொடுத்துப் பேரெடுத்ததுண்டு; இலையும், இலையின் ரசத்தையும், கொடுக்கலாமென்று ஒருவர் நம்பிக்கையாய்ச் சொல்லுகிறார்; ஆனால் சருப்பவிஷமுறிவுக்கு மூலிகைகளில் இதுவரையில் ஒன்றும் நிச்சயப்படவில்லை; நவட்சாரவாயு ஜயநீரே (Liquor Ammoniæ) சிரேஷ்டமானதாய்க் காணப்படுகிறது.

ஆடுதீண்டாப்பாளை.—గాడిదగడపర ఆకు మేషశృంగి (Aristolochia Bracteata; Worm killer.) இந்தக் கசப்புப் பூண்டுக்கு, கிருமிக்கினிகுணமுண்டென்று யோசனை. உலர்ந்த இலையை வெந்நீர்க்கஷாயமிட்டு, 2-ஆழாக்கு அளவுக்குக்கொடுத்தால், கிருமிகள் சாகுமாம். இலையின் ரசத்துடன் எண்ணெயைச்சேர்த்துக் கரப்பான், கருங்குஷ்டம் இவைகளுக்குப் பூசுவதுண்டு. சிலவிடங்களில் இதைக் குளிர்க்காச்சலுக்கும், இதின்வேரின் சூரணத்தில், $1\frac{1}{2}$-திராம்வீதம் தனியாயாவது, வெந்நீர்க் கஷாயமிட்டாவது, பிரசவவேதனையை அதிகப்படுத்தக் கொடுப்பதுண்டு.

நேர்வாள இனம். (EUPHORBIACEÆ.)

நேர்வாளம்

நேர்வாளச்செடி. Croton Tiglium. The Purging Croton.

நேர்வாளவித்து. வாளம், கீழ்நோக்கி. జేపాళవిత్తు Croton Seeds; Crotonis Semina.

விவரணம்.—இந்தவித்தானது, சற்றேறக்குறைய, ஆமணக்கு முத்துப் போலிருக்கும்; பருப்பில் தைலமுண்டு; அதிகமாய்ச் சுத்திசெய்தால் தைலம் போய்விடும். பருப்பிலிருக்கிற முளையை யெடுக்காமல் உபயோகித்தால், வயிறுகடி அதிகமாகி, வாந்தியும் உண்டாகும். இதை வெகு சாக்கிரதையாய் அரைக்கவேண்டியது; இல்லாவிட்டால் முகம் வீங்கும், சரீரசுகம் கெடும்.

செய்கை.—உபத்திரவவிரேசனி, அதிகமானால் விஷமிக்கும்; மேலுக்குப் போட்டால் உஷ்ணிக்கும், தோலைச்சிவப்பிக்கும். Drastic purgative; externally stimulant, rubefacient.

உபயோகம்.—மலச்சிக்கல், நீர்க்கோவை, அசதிஜந்நி, ஸ்தம்பவாத ரோகம், உன்மாதம் இவ்வித ரோகங்களுக்கு இதைக்கொடுக்கலாம். நாட்டு வைத்தியர்கள் இதைத்தான் சாதாரணமாய்க் கையாடுகிறார்கள். துர்ப்பல முடையவர்களுக்கும், வயது சென்றவர்களுக்கும், கெர்ப்பிணிகளுக்கும் இதைக் கொடுக்கலாகாது.

மாத்திரை.—1-கிறேன், அல்லது-½-பருப்பு. பருப்புக்குள்ளிருக்கிற முளையையெடுத்து சுத்திசெய்த வாளத்தோடு,சமனெடை காசுக்கட்டித்தூள் சேர்த்து, பழரசம் விட்டரைத்து, மிளகு பரிமாணமாய் மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு, 1-2-மாத்திரை தூள்செய்து, வெல்லத்திலாவது, நெல் லித்துவையலிலாவது புதைத்துக் கொடுத்தால், சாடித்து பேதியாகும். அதிகபேதியானால் எலுமிச்சம்பழ ரசமாவது, காடியாவது, கஞ்சி அல்லது மோர்விட்டுக் கரைத்த சாதமாவது கொடுத்தால். பேதி நின்றுவிடும்.

நேர்வாளத்தைலம்:—(குரோடன் ஆயல், Croton Oil; Oleum Crotonis). வித்தைப் பிழிந்தெடுக்கிற தைலம், பழுப்புநிறமாயிருக்கும்; கர கரப்புண்டு; மணம் வெகுட்டலைத்தரும். இதைச்சாப்பிட்டால் ஜலம்ஜல மாய் பேதியாகும். உடம்புமேல் தேய்த்தால், சருமம் சிவந்து கொப்புளங்க ளுண்டாகும். நல்ல பேதியை யுண்டாக்கவேண்டியபோ தெல்லாம், இதைக் கொடுக்கலாம். மாத்திரை.—½-2-3 துளி வீதம் ரொட்டிச்சதைச் சேர்த்து மாத்திரைசெய்து கொடுக்கலாம். போதக்ஷயமிருக்கும்போது, சருக்கரையோடு நேர்வாள தைலத்தைச்சேர்த்து நாக்கின்மேல் வைத்துவிட் டால் உள்ளுக்கிறங்கிவிடும்.

1-கிராம், நேர்வாளவித்து பாவனத்திரவத்தில்(இடித்தவாளம்,1-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 4-ஔன்ஸ்.) 1-ஔன்ஸ், ஸ்பிரிட்ஸ் ஆவ் ரோஸ்மெரி 3-ஔன்ஸ் பன்னீர் இவைகளைச்சேர்த்துக் சருமரோகங்களுக்குப் பூசலாம்.

சிற்றாமணக்கெண்ணெய்

முத்துக்கொட்டைச்செடி. The Castor Oil Plant; Ricinus Communis.

செய்கை. உபயோகம்.—விரேசனிகாரி; அதிகமானால் விஷமிக்கும். முத்தைத் துவையல்செய்துச் சாப்பிட்டால் மலம் இளகும்; அரைத்து சிறிய பருக்களுக்கு வைத்துக்கட்டினால், பழுத்து சீக்கிரம் உடையும்.

சிற்றமணக்கெண்ணெய்.—ஆமணக்குநெய். ஆமணங்கெண்ணெய். முத்துக்கொட்டை எண்ணெய். చిట్టాముదము. (காஸ்டர் ஆயல், Castor Oil; Oleum Ricini.) அவித்தெடுக்கிற எண்ணெயைப்பார்க்கிலும், ஆட்டி எடுக்கிற பச்சை எண்ணெய் சிரேஷ்டமானது. இதைக்கொடுத்தால் உபத்திரவமில்லாமல் நன்ருய் பேதியாகும்; குழந்தைகளுக்கும், பிரசவித்தவர்களுக்கும், மூலரோகிகளுக்கும், சீதபேதி யுடையவர்களுக்கும், பேதிக்கிக் கொடுக்க நல்லஔஷதம். அக்கினிமந்தம், வயிற்றுவலி இவைகளில் இதைச் கொடுத்தால் சாந்தமாய்ப் பேதியாகும். மாத்திரை.—பெரியவர்களுக்கு-6-10-திராம் அளவுக்கும், குழந்தைகளுக்கு, 1-2-திராம் அளவுக்கும் கொடுக்கலாம்.

ஆமணக்கிலையின் கஷாயமாவது அல்லது சுரசமாவது, உள்ளுக்குக் கொடுத்து, ஸ்தனங்களுக்கு ஷை இலையைப் போட்டுக்காய்ச்சின வெந்நீர் ஒற்றிடமிட்டு, ஷை இலையையே வேகவைத்து போல்டீஸ் செய்து கட்டிக் கொண்டுவந்தால் பால்சுரக்கும். இலையை வதக்கிக்கட்டுவதும் ஒருமுறை.

(NON-OFFICINAL.)

நாட்டு அக்ரோட்டு கொட்டை.—నాటుఅక్రోటువిత్తు. (Aleurites Triloba Belgaum or Indian Walnut.) இதிலிருந்து எடுக்கிற எண்ணெய்க்குக் குமட்டலில்லை; வயிற்றுவேதனை யில்லாமல் சாந்தமாய் பேதியை யுண்டாக்குகிற குணமிருப்பதால், ஆமணக்கெண்ணெயைப் பார்க்கிலும் இது நல்லது. 1-2-ஔன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

காட்டாமணக்கு.—అడవిఆముదం. నేపాళం. (Jatropha Curcas; English Physic Nut.) காட்டாமணக்கெண்ணெய்க்கு; விரேசன குணமுண்டு ஆனால் உள்ளுக்குக் கொடுப்பதில்லை. விதையை அதிகமாய்ச் சாப்பிட்டால், விஷமிக்கும். தைலத்தோடு எண்ணெய்சேர்த்து வாதரோகங்களுக்குப் பூசுவதுண்டு. ஒருதீவில் இதின் இலையைக் கஷாயமிட்டாவது, போல்டீஸ் செய்தாவது, பால்சுரக்க, ஸ்தனங்களுக்கு வைத்துக்கட்டுவது வழக்கம்.

சீமை ஆமணக்கு.—(Jatropha Multifida; French Physic Nut.) இதற்கும் விரேசனகுணமுண்டு, ஆனால் வீரியம் அதிகம். ஒருவன், 3-விதைத் தின்று வாந்தியும் பேதியும், குலைவயிற்றில் வேதனையும் எரிச்சலும் அதிக துர்பலமும் கண்டதாய் அதற்குப் பழரசமும், உஷ்ணமருந்துகளுங் கொடுத்ததில் சவுக்கியபட்டதாய்க் கண்டிருக்கிறது.

ஊநளை.—నేలఆముదము. (Jatropha Glandulifera.) இதின்வித்திலிருந்தெடுக்கிற தயிலத்தை, வாதநோய், ஸ்தம்பவாதம் ஆகிய இவைகளுக்குப் பூசுவது நாட்டுவழக்கம்.

சதுரக்கள்ளி.—బొంతజెముడు. (Euphorbia Antiquorum; Triangular Spurge. கள்ளி, జెముడు. E. Tirucalli; Milk hedge.) இவ்விரண்டு கள்ளிகளின் பாலுக்கு, விரேசனகுணமுண்டு. கள்ளிப்பாலைப் புளியில் கறந்து பேதிக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்: சிலருக்கு அதிகபேதியாகி, துர்க்குணம் செய்கின்றது; மேலேதடவினால் புண்ணாகும், பாலுண்ணிகரைய தடவுகிறதுண்டு; மூட்டு வீக்கத்துக்குத் தடவி, வேரின் மண்ணையே அதின் மேல் போடுவது நாட்டுவழக்கம். பட்டையை நரம்புச்சிலந்திக்கிக் கட்ட உதவுமாம். இதின் உறைந்தபாலில் 5-கிறேன்வீதம், தினத்துக் கிரண்டு

முறை, மேகரோகங்களுக்குக் கொடுத்தால் சவுக்கிய முண்டாகுமென்று கண்டிருக்கிறது.

இலைக்கள்ளி.—ఆకుజెముడు. (Euphorbia Neriifolia; E. Nivulia.) இதின் இலையை வதக்கி ரசமெடுத்து, சிறுகுழந்தைகளுக்குப் பேதிக்குக் கொடுக்கிற நாட்டுவழக்கம் கெட்டது. இலையின் ரசத்தை வேப்பெண்ணெயில் கலந்து, வாதநோய்களுக்குப் போடுவதுண்டு; தனிரசத்தைச் சுவாசகாசத்துக்குக் கொடுத்து, சுகுணங்கண்டதாய்த் தெரியவருகிறது; சுடவைத்து காதுவலிக்கிக் காதில்விடலாமென்றும், மந்த பார்வைக்குப் புருவத்தின்மேல் போடலாமென்றும், மூத்திரக்கட்டுக்கு இலையை வதக்கி, வயிற்றின் மேலிடலாமென்றும், நாட்டோர்ச் சொல்லுவதுண்டு.

நெல்லிமரம்.—నెల్లిచెట్టు. ఉసిరిచెట్టు. (Phyllanthus Emblica.) நெல்லிக்கனி. ఆంలం. (Emblic Myrobalans.) நெல்லித்துவையல் அரோசகத்தை நீக்கும். நெல்லிவற்றலில் புளிப்பும், துவர்ப்புமுண்டு; இதில் காலிக் ஆஸிட் என்னும் துவர்ப்பு இருப்பதால் பேதி, சீதபேதி இவைகளுக்குக் கொடுத்து சௌக்கியம் கண்டதுண்டு. நெல்லிவிரையாவது, வற்றிலையாவது கஷாயமிட்டுக் கொடுத்தால் சூடுதணியும், பித்தமயக்கம் நீங்கும், தாகமடங்கும், ஔக்காளம் நிற்கும்; பட்டையிலும், வேரிலும், துவர்ப்புகுணமுண்டு. கொழுந்தை அரைத்து மோரில்கலந்து, சீதபேதிக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்.

கீழாநெல்லி.—கீழ்வாய் நெல்லி. నేలఉసిరిక. (Phyllanthus Niruri; சிவப்பு நெல்லி P. Urinaria.) இவ்விரண்டு பூண்டுக்கும் பித்தசமன, மூத்திரவர்த்தன குணங்கண்டு. சமூலத்தை அரைத்து, ½-பலம் வீதம், 1—ஆழாக்குப்பாலில் கலந்து, தினத்துக்கு இரண்டுவேளை கொடுத்துக்கொண்டுவர, மஞ்சள்காமாலை நீங்கிவிடும். சூரணமாகவும், கஷாயரூபமாகவும் பிரயோகிப்பதுண்டு. நீர்க்கோவை, பிரமேகம் முதலிய ரோகங்களுக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம். தைலமுறைகளிலும் சேருகின்றது.

குப்பைமேனி.—அரிமஞ்சரி, பூனைவணங்கி, மேனி. కుప్పంటాకు. (Acalypha Indica.) இதின் இலைரசத்துக்கு வமனகாரி குணமிருப்பதால்; குழந்தைகளுக்குக் கொடுப்பதுண்டு; ஒருவேளைக்கு ஒரு உத்திரணி அளவுக்குக்கொடுத்தால், பேதி அதிக ஆயாசம் இவைகளில்லாமல், இபிகாக் என்னும் சூரணத்தைப்போல், கபம் வெளிப்படும்படி சாந்தமாய் வாந்தியாகும். உலர்ந்த இலையைக் கஷாயமிட்டும், அல்லது சுரசத்தை மெழுகாக்கியும் கொடுக்கலாம். குழந்தைகளுக்குக் காணுகிற இருமலுக்கு, இதைக்கொடுத்து சவுக்கியம்கண்டதாயும் தெரியவருகிறது. இலையை அரைத்து, மேகவிரணங்களுக்கும், விஷக்கடிகளுக்கும் போட்டால் சவுக்கியம் உண்டாகுமென்று இங்கிலீஷ் வைத்தியர் ஒருவர் சொல்லுகிறார். இலைரசத்துடன், வேப்பெண்ணெய்ச்சேர்த்து, குழந்தைகளுக்கு நாக்கில் விரலால் தடவிக்கொண்டுவந்தால், குமட்டலுடன் கபம் வெளிப்படும். ஷை ரசத்தில் உப்பு சேர்த்து சொறி சிரங்குக்குப் பூசுவது நாட்டுவழக்கம். இதின்வேருக்கு விரேசன குணமுண்டென்று கேழ்வி.

மரவள்ளி.—மரச்சீனி, ஆள்வள்ளி. మానుపెండలము, కఱ్ఱపెండలము. (Jatropha Janipa Manihot; Bitter Cassava.) இந்தக் கிழங்கிலிருக்கிற

விஷத்தைப்போக்கிய மாவுக்கு, டாபியோகா (Tapioca) என்றுபேர். இதைக் கஞ்சிகாய்ச்சி, சருக்கரையும் பாலும்விட்டு இனிப்பேற்றி, பிணியாளர்களுக்கும், குழந்தைகளுக்குப் பாலை மறக்கடிக்கிறபோதும் கொடுக்கலாம்.

அருநெல்லி.—అరునెల్లి. (Cicca Discicha; Country Gooseberry.) இதின் இலைக்குச் சுவேதகாரி குணமுண்டென்று யோசனை; புளிக்கிற அருநெல்லிக்கனிக்கு, குளிர்ச்சிசெய்து சுகத்தைத் தருகிறகுணமுண்டு. வித்துக்கு விரேசனகுணமுண்டாம்.

சின்ன அம்மாம்பச்சரிசி.—சித்திரபல்லாதி. చిత్రపాలదియ్యం. (Euphorbia Thymifolio.) இதின் பாலை நகக்சுற்றுக்கு, சீழ்வந்த பிறகு, வைப்பது நாட்டுவெழக்கம். இலையில் துவர்ப்பு குணமுண்டு.

காஞ்சொரி.—దూలగొండి. (Tragia Involucrata.) சிறுகாஞ்சொரி. (T. Cannabina.) இவ்விரண்டிலொன்றின் வேரைக் கஷாயமிட்டு சுரம், மேகவியாதிகள் இவைகளுக்குக் கொடுப்பதுண்டு. வியாதாபேத, சுவேதகாரி குணங்களிருக்கிறதாய்த் தெரியவருகின்றது.

மிளகுக் கொடியினம். (PIPERACEÆ.)

மிளகு

மிளகுக்கொடி. Piper Nigrum; Black Pepper Vine.

மிளகு. మిరియాలు. பிளாக்பெப்பர். Black Pepper; Piper Nigrum.

விவரணம்.—தோலை நீக்கியமிளகுக்கு வெள்ளை மிளகென்று பேர். மிளகு நல்லவாசனையுள்ளதாய், காரமாய் இருக்கும்.

செய்கை —உஷ்ணகாரி, கருப்பவாதஹாரி, முறைவியாதிரோதி; மேலுக்குப் போட்டால் சருமம் சிவக்கும். Stimulant, carminative, antiperiodic, rubefacient.

உபயோகம்.—மூலவியாதி, சீதசுரங்கள், வாந்திபேதி, பிரமேசம் இவைகளுக்கு மிளகுக்கொடுத்தால், சவுக்கியமுண்டாகும்; தொண்டை விரணத்துக்கு மிளகுக்கஷாயம் கொப்புளிக்கவும். In piles, ague, Cholera, gonorrhœa, &c.

மாத்திரை.—10-15, கிறேனுக்கு அதிகமாயும் கொடுக்கலாம். பைபிரீன் (Peperine) என்னும் மிளகுச் சத்தத்தைக் குவைஞவுக்குப்பதில், சீதசுரங்களுக்கு 6-10-கிறேன் வீதம் கொடுக்கலாம். Dose.—10-15-grs.

மிளகுலேகியம்.—(கன்பெக்ஷன் ஆவ் பெப்பர், Confection of Pepper; Confectio Piperis.) செய்முறை.—மிலகுத்தூள், 2-ஔன்ஸ்; சேக்விதைத்தூள், 3-ஔன்ஸ்; முறித்ததேன், 15-ஔன்ஸ். இவைகளை கலுவத்திலிட்டு செவ்வையாய் அரைத்துக்கொள்ள வேண்டியது. மாத்திரை.—1-2-திராம் வீதம்தினத்துக்கு 2-3-முறை கொடுக்கலாம். இதைத்துற்பலமுடைய மூலரோகிகளுக்கும், குதப்பிரம்சரோகத்துக்கும் கொடுக்க உதவும். (Pepper, 2 ozs.; Caraway, 3 ozs.; Clarified Honey, 15 ozs.) Dose.—1-2-drs.

வால்மிளகு

வால்மிளகுக்கொடி. Cubeba Officinalis; Officinal Cubebs.

வாய்மிளகு. தக்கோலம்.—చలువమిరియాలు. கியூபெப்ஸ். Cubebs, Cubeba.

விவரணம்.—ஜாவாமுதலிய பிரதேசங்களில் விளைகிற இந்தக்காய் மிளகைப்போல், அடியில் காம்பு ஒட்டிக்கொண்டு நல்லவாசனையாய், காரமாய், ருசியாயிருக்கும்.

செய்கை.—உஷ்ணகாரி. முக்கியமாய் நீர்த்தாரை சவ்வில்போய் குணத்தைக்காட்டும். Stimulant.

உபயோகம்.—இதைப் பிரமேகத்துக்கே கொடுப்பது வழக்கம்; ஸ்திரீகளுக்குக் காணுகிற பிரமேகத்துக்கும், மஜ்ஜாமூத்திரம், மூலவியாதி, கபரோகங்கள் ஆகிய இவைகளுக்கும், உபயோகித்து, சுகுணம் கண்டதுண்டு. In gonorrhœa, leucorrhœa, cystirrhœa, hæmorrhoids, chronic bronchitis, &c.

மாத்திரை.—½-2-திராம் வீதம், தினத்துக்கு 3-முறை வீதம் பால், ஜலம், தேன் இவைகளி லெதிலாவது சேர்த்துக் கொடுக்கலாம். ½-2 drs.

வால்மிளகுத்தயிலம்.—(ஆயல் ஆவ் கியூபெப்ஸ், Oil of Cubebs; Oleum Cubebæ.) வால்மிளகை வாலையிலிட்டு வடித்தெடுக்கிற இந்தத் தைலத்தில், ஒருவேளைக்கு, 5-20-மினம்வரையில் கொடுக்கலாம். Dose.—5-20 minims.

வால்மிளகுப் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் கியூபெப்ஸ். Tincture of Cubebs, Tinctura Cubebæ.) செய்முறை.—வால்மிளகுத்தூள், 2½-அவுன்ஸ் ரெக்டிபைட் சாராயம், 1-பைன்ட். ஊறவைத்து பெர்க்கொலேடரில் விட்டு வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—½-2-திராம். (Cubebs, 2½ ozs.; Rectified Spirit, 1 pint.) Dose.—½-2 fdrs.

(NON-OFFICINAL.)

திப்பிலிக்கொடி.—(Chavica Roxburghii.) திப்பிலி. పిప్పళ్లు. (லாங் பெப்பர், Long Pipper, Piper Longum.) இது உஷ்ணகாரி, கர்ப்பவாதஹரகாரி. மிளகைப்பார்க்கிலும் இதற்கு வீரியம் அதிகம். யூனானி, தமிழ் வைத்தியமுறைகளில், இதை அதிகமாய்ச் சேர்ப்பதுண்டு. 1-திராம் வீதம், தினத்துக்கு 2-3-முறை கொடுக்கலாம். திப்பிலிமூலம்.—திப்பிலிக்கட்டை, நறுக்குமூலம், தேசாவரம்; (Piper dichotomum.) இதற்கு தீபனத்தை வர்த்திப்பிக்கிற குணமுண்டென்று, அக்கினி மந்தத்துக்குக் கொடுப்பது நாட்டு வழக்கம். காயைப்பார்க்கிலும் இதற்கு வீரியம் குறைவு.

வெற்றிலைக்கொடி.—తమలపాకుతీగె. (Chavica Betle; piper Betle.) இதற்கு தீபனவர்த்தன, திரவகாரி குணங்களுண்டு. சுகத்துக்கும் துக்கத்துக்கும் உபயோகமாகிற இந்த இலையைவதக்கி, கபரோகத்தில், இருமலும் மூச்சுமுட்டலும் தணிய மார்பிலும், பால்வற்ற ஸ்தனங்களிலும், வீக்கங் கரைய கட்டிகள்மேலும் அடுக்காய்ப் போடுவதுண்டு. சுரம், கபம் இவைக

ளுக்குக்கொடுக்கிற மருந்துகளோடு இதின் ரசத்தைச்சேர்ப்பது நாட்டு வழக்கம்.

மாசக்காய்ச் செடி யினம். (CUPULIFERÆ.)

மாசக்காய்

மாசக்காய்ச்செடி.—Quercus Infectoria. The Gall or Dyers' Oak.

மாசக்காய். మాసకాయ. Galls, Galla.

விவரணம்.—முட்டையிட ஒருசாதிவண்டு துளிரைத் துளைக்கும்; அதிலிருந்து வருகிறபால் உரைந்துக் காய்போலாகின்றது. இதில் டானிக், காலிக் ஆவிட்ஸ் என்னும் சத்துகளுண்டு.

செய்கை.—சங்கோசனி, தாருட்டியகாரி, முறை வியாதிரோதி. Astringent, tonic, antiperiodic.

உபயோகம்.—அதிசாரபேதி, கிரகணி, சீதசுரம் இவைகளுக்குக் கொடுக்க நல்லதென்று எண்ணம். அபினி, நாபி ஆகிய இவைகளை விஷமிக்கும்படிச் சாப்பிட்டவர்களுக்கு, முறிவுக்காக, இதைக் கஷாயமிட்டுக் கொடுக்கலாம். வாந்தி உப்பின் முறிவுக்கும் கொடுக்கச்சொல்லி கண்டிருக்கிறது. In diarrhœa, dysentery, ague, and as an antidote in poisoning by opium, aconite or tartar emetic.

மாத்திரை.—10-20 கிறேன் எடை தினத்துக்கு 3-4-ஆவர்த்திக் கொடுக்கலாம். 10-20 grs.

மாசக்காய் கஷாயம்.—(டிகாக்ஷன் ஆவ் கால்ஸ், Decoction of Galls; Decoctum Gallæ.) செய்முறை.—மாசக்காய்த்தூள் $1\frac{1}{4}$-ஔன்ஸ்; ஜலம் 1-பையின்ட், 10-நிமிஷம்காய்ச்சி. வடிகட்டி, 1-பையின்ட் அளவுக்குத் தேவையான ஜலத்தை வடித்துணியில்விட் டெடுத்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—1-2-ஔன்ஸ் வீதம் கொடுக்கலாம்; ஆனால் முக்கியமாய், வாய்ரணத்துக்குக் கொப்புளிக்கவும்; பேதிகளுக்கு வஸ்திசெய்யவும், பிரமேகத்துக்கு நீர்த்தாரையில் பீச்சவும், ரணங்களுக்குக் கழுவவும் உபயோகமாகிறது. மேல்கண்ட மருந்துகளின் முறிவுக்கும் உபயோகிக்கலாம். (Galls. $1\frac{1}{4}$ ozs ; Water, 1 pint.) Dose.—1-2 fozs.

மாசக்காய்ப் பாவனத்திரவம்.-(டிங்சர் ஆவ் கால்ஸ், Tincture of Galls; Tinctura Gallæ.) செய்முறை.—மாசக்காய்த்தூள், $2\frac{1}{2}$-ஔன்ஸ், புருவ் ஸ்பிரிட் சாராயம், 1-பையின்ட். ஊறவைத்து, பெர்க்கொலேஷன் முறையாய்ச் செய்துகொள்ளவேண்டியது. மாத்திரை.—$\frac{1}{2}$-2-திராம் கொடுக்கலாம். ஜலத்தில் கலந்து, துவாலையாகவும் உபயோகிக்கலாம். (Galls, $2\frac{1}{2}$ ozs.; Proof Spirit, 1 pint.) Dose.—$\frac{1}{2}$-2 fdrs.

மாசக்காய்க் களிம்பு.—(ஆயின்ட்மென்ட் ஆவ் கால்ஸ், Ointment of Galls; Unguentum Gallæ.) செய்முறை.-சன்னமாய்ச்செய்த மாசக்காய்த்தூள், 80-கிறேன் ; மெழுகுகளிம்பு, 1-ஔன்ஸ் ; மிஸ்ரமித்துக்கொள்ளவேண்டியது. (Gall powder, 80grs.; Benzoated Lard or Simple Ointment, 1 oz.)

அபினிசேர்ந்த மாசக்காய்க் களிம்பு.—(ஆயின்ட்மென்ட் ஆவ் கால்ஸ் உத் பியம். Ointment of Galls with Opium ; Unguentum Gallæ cum Opio.) செய்முறை.—மாசக்காய்க்களிம்பு, 1-ஔன்ஸ் ; அபினித்தூள், 32-கிறேன். மிஸ்ரமித்துக்கொள்ளவும். இவ்விரண்டும் மூலத்துக்குப் போட நல்ல களிம்புகள் (Ointment of galls, 1 oz.; Opium, 32 grs.)

டானிக் ஆஸிட்

மாசக்காய் உப்பு.—(Tannic Acid ; Acidum Tannicum.) இந்த உப்பு அதிக துவர்ப்பாயிருக்கும் ; ஜலத்திலும் சாராயத்திலும் கரையும் ; அன்னபேதிசேர்த்தால் கறுக்கும். செய்கை.—சங்கோசனகாரி. உபயோகம்.—ரத்தகாசம், ரத்தவமனம், ரத்தமூத்திரம், பெரும்பாடு ஆகிய இவைகளுக்கு உள்ளுக்குக்கொடுத்தால் சௌக்கியமுண்டாகும். ஈறு, மூலம், மூக்கு இவைகளிலிருந்து வருகிற ரத்தத்துக்கு, அவ்வவ்விடங்களில் போடலாம். அக்கினிமந்தம், அதிசாரபேதி, அதிகசுபம்வெளிப்படுதல், க்ஷயத்தில் காணுகிற அதிவியர்வை, பேதி, நாள்பட்டகக்கிருமல், கருப்பப்பிரமேகம், சீதசுரம் இவைகளுக்கும் உள்ளுக்குக்கொடுத்து, சவுக்கியம் கண்டதுண்டு. மாத்திரை —2-10-கிறேன் வீதம், தினத்துக்கு, 3-4-முறை, சூரணமாயாவது, மாத்திரை ரூபமாயாவது, ஜலரூபமாயாவது கொடுக்கலாம். Dose.—2-10 grs.

காலிக் ஆஸிட் என்னும் மாசக்காய் உப்பு.—(Gallic Acid ; Acidum Gallicum.) இதின்செய்கையும், உபயோகமும், டானிக் ஆஸிட் என்னும் உப்புக்கொற்றிருக்கும்.

ஆலமர இனம். (URTICEÆ.)

சீமை அத்திப்பழம்

சீமை அத்திச்செடி.—Ficus Carica. The Common Fig.

சீமை அத்திப்பழம்.—సీమఅత్తిపండు. பிக், Fig; Ficus.

இதற்குச் சினிக்த, மல, போஷணகாரி குணங்களுண்டு, மருந்தாகத் தனிப்பட உபயோகிக்கிறதில்லே. நிலவாகை லேகியத்தில் சேருகிறது.

கஞ்சா

கஞ்சாசெடி.—Cannabis Sativa. Indian Hemp.

கஞ்சா.—பங்கி. கோரக்கர்மூலிகை. గంజా. இன்டியன் ஹெம்ப். Indian Hemp. Gunjah.

செய்கை.—சசலருக்கும் பிரசித்தமாய்த் தெரிந்த இந்தச் சரக்கு முதல் உஷ்ணகாரி, பிறகு வேதனை சாந்திகாரி, சமனகாரி, அங்காகர்ஷண நாசகாரி குணங்களைத் தரும்; இவைகளல்லாமல், நித்திராகாரி, மூத்திரவர்த்தனி, பிரசவகாரி ஆகிய இக்குணங்களும் உண்டென்று கண்டிருக்கிறது. Primarily stimulant; secondarily anodyne, sedative, and antispasmodic. Narcotic, diuretic, and parturifacient properties have been assigned to it.

உபயோகம்.—விரணசன்னி, மதுபானவெறி, பால இசிவு, பலவித சூலைகள், பலவித நரம்புவேதனை ஆகிய இவைகளுக்குக் கொடுத்துச் சவுக்கியம் கண்டதுண்டு. வாந்திபேதி, பெரும்பாடு, கீல்வாதம், சுவாசகாசம், மந்தப்பிரசவம் ஆகிய இவைகளுக்கும் கொடுப்பதுண்டு. கஞ்சாசாப்பிட்டால், ஆனந்த களிப்பையுண்டாக்கி, மாயைகளைக் கண்களுக்குத் தோற்றும்படிச்செய்து, பரலோகத்துக் கெழுந்தருளுவதுபோலிருக்கும்; அதிக பசியுண்டாகும். In tetanus, infantile convulsions, neuralgia, cholera, menorrhagia, rheumatism, asthma, protracted labours, &c.

கஞ்சாசத்து.—(எக்ஸ்ட்ராக்ட் ஆவ் இன்டியன் ஹெம்ப், Extract of Indian Hemp; Extractum Cannabis Indicæ.) செய்முறை.—சதைத்த கஞ்சா, 1-பவுன்; ரெக்டிபைட் சாராயம், 4-பைன்ட். கஞ்சாவை சாராயத்திலிட்டு, 7-நாள் ஊறவைத்துப் பிழிந்துகொண்டு; ஏகதேசம் சாராயமெல்லாம் வற்றும்படி வாலையிலிட்டெரித்து வடித்து, பிறகு ஜலயந்திரத்தில் சுண்டவைத்து மெழுகுபதமாக்கிக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—½-2-கிறேன், அல்லது இன்னம் கூட்டியும்கொடுக்கலாம். (Hemp, 1 Pound; Rectified Spirit, 4 pints.) Dose.—½-2 grs. or more.

கஞ்சா பாவனந்திரவம்.—டிங்சர் ஆவ் இன்டியன் ஹெம்ப், Tincture of Indian Hemp; Tinctura Cannabis Indicæ.) செய்முறை.—கஞ்சா சத்து, 1-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 1-பைன்ட். சத்தைச் சாராயத்தில் கரைத்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—5-20-மினம் வீதம் கொடுக்கலாம். (Extract of Indian Hemp, 1 oz.; Rectified Spirit, 1 pint.) Dose.—5-20 minims.

(NON-OFFICINAL.)

ஆலமரம்.—வடவிருக்ஷம். మఱ్ఱిచెట్టు. (Ficus Bengalensis; Ficus Indica, (Banyan tree.) இதின் பாலுக்குத் துவர்ப்பு குணமுண்டு. நாக்கு விரணத்துக்கு இதை உள்ளுக்குச் சாப்பிடுவதும், கால் வெடிப்புக்கு மேலே தடவுவதும் நாட்டுவழக்கம்.

பேயத்தி.—బొమ్మమేడి. (Ficus oppositifolia.) சிறிய பேயத்தி; చిన్న బొమ్మమేడి. (F. Polycarpa.) இவைகளின் பழம், விதை, பட்டை ஆகிய இவைகளுக்கு வமனகாரிகுணம் இருக்கிறதென்று கேழ்வி. பழத்தின் விதையைக் கொடுத்தால் நல்லவாந்தியாகும். ஒருவேளைக்கு, 1-டிராம் கொடுக்கலாமென்றும், அது 4-6 பழத்துக்குச் சமானமென்றும், பட்டை வமன விரேசனி என்றும், அதின் தூளின், 40-60 கிறேன் கொடுக்கலாமென்றும், கண்டிருக்கிறது.

அத்தி.—మేడి. (Ficus Racemosa, Country Fig tree.) இதின்பாலுக்குத் துவர்ப்புகுணமுண்டு; அதை வெண்ணெயில் கலந்து, நீரிழிவு, ரத்தபேதி இவைகளுக்கும், பட்டையைக் கஷாயமிட்டு, பெரும்பாடு, சீதபேதி, ரத்தமூத்திரம் இவைகளுக்கும் கொடுப்பது நாட்டுவைத்தியம். அத்திப்பிஞ்சு பத்தியத்துக்குதவும். அத்திக்கள்ளை, தாருட்டிய வியதாபேதகாரியாக், மேகம், பித்தமயக்கம் ஆகிய இவைகளுக்குக் கொடுப்பது வழக்கம்.

சவுக்குமா இனம். (MYRICEÆ.)

(NON-OFFICINAL.)

மருதம்பட்டை.—కైడర్యము. (Myrica sapida.) இந்தப் பட்டையின் தூளோடெ சுக்குத்தூள்சேர்த்து, வாந்திபேதியில் கைகால்களுக்குத் தேய்த்தால் உஷ்ணம் பிறக்குமென்று கண்டிருக்கிறது. தோலை சிவப்பிக்கிற குணமுண்டு. நவியத்துக்கும் உபயோகிக்கிறார்கள்.

சவுக்குமரம்—చవుకు_మాను. (Casuarina muricata.) இதின் பட்டைக்குத் துவர்ப்புகுண முள்ளதாயும் பேதி, சீதபேதி இவைகளுக்குக் கொடுக்கலாமென்றும் கண்டிக்கிறது.

தேவதாருமரயினம். (CONIFERÆ.)

பர்க்கெண்டி பிச் என்னும் ரோஜனம்

ஷை ரோசனச்செடி, Abies Excelsa; The Spruce Fir.

பர்கண்டிபிச்.—Burgundy Pitch. Pix Burgundica.

விவரணம்.—சீமையில் விளைகிற ஷை செடியிலிருந்து வடிகிறரோசனத்துக்கு ஏபையிடஸ் ரிஸைனு. (Abietis Resina) என்று பேர்; அதை உருக்கி, வடிகட்டினதற்கு, பர்கெண்டி பிச் என்று பேர்.

செய்கை, உபயோகம்.—இது உஷ்ணகாரி, ஷோணகாரி. இதைப் பிளாஸ்திரிசெய்து (Pitch Plaster; Emplastrum Picis) கபரோகங்களுக்கு மார்பில் போடுவதுண்டு.

ஆயல் ஆவ் டர்பன்டைன்

கர்ப்பூரதைலம்.—Oil of Turpentine, Oleum Terebinthinae.

விவரணம்.—பைனஸ் பெல்ஸ்ட்ரிஸ். (Pinus palustris) பைனஸ் டீடா (P. Tæda) பைனஸ் பினஸ்டர். (P. Pinaster) இவ்விதச் செடிகளிலிருந்து, தைலம்போல் சேகரிக்கிற டர்பன்டைன் என்னும் (Turpentine) ரோஜனத்தை வடித்து இந்தத்தயில மெடுக்கப்படுகின்றது.

செய்கை.—மூதல் மூத்திரவர்த்தனி, 2-வது, சமனகாரி, அங்காகர்ஷணநாசனி, சங்கோசனி, மாத்திரை அதிகமானல் பேதியையுண்டாக்கும், கிருமிகளைப்போக்கும். வெளிக்கு உபயோகித்தால், சருமம் சிவக்கும். Diuretic, sedative, antispasmodic and astringent; in large doses purgative and anthelmintic; locally rubefacient.

உபயோகம்.—விஷ சுரங்களுக்கு உஷ்ணகாரியாகவும், ரத்தகாசம் முதலிய ரத்தபித்தரோகங்களுக்குச் சங்கோசனியாகவும், சூதகசந்நி, வயிற்றுவலி முதலிய வாதரோகங்களுக்கு, அங்காகர்ஷண நாசகாரியாகவும், உபயோகிப்பதுண்டு. நாள்பட்ட சீதபேதி, பிரமேகம், கருப்பமேகம், நீர்க்கோவை, வாந்திபேதி இவைமுதலிய வியாதிகளுக்கும்கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அக்கினிவிரணம், அழிப்புண்முதலிய துஷ்டவிரணங்கள், புராதன கீல்வாதம், வாதசூலை, சுவாசகாசம், குருமாந்தம், மூட்டுவீக்கம்,

பல் பிடிங்கினபிறகு காணுகிற ரத்தப்பெருக்கு ஆகிய இவைகளுக்கு மேலுக்குப் போடலாம். In typhus and typhoid fevers, passive hæmorrhages, spasmodic affections, chronic dysentery, gonorrhœa, leucorrhœa, dropsy and cholera. Externally, in burns, gangrenous and indolent ulcerations, chronic rheumatism, neuralgia, asthma, croup, enlargements of the joints and local hæmorrhage.

மாத்திரை.—8-30-மினிம், மூத்திரவர்த்தன, சங்கோசனகாரி குணங்களையும், ½–1-திராம், உஷ்ணகாரி, அங்காகர்ஷண நாசகாரி குணங்களையும், ½-1-ஔன்ஸ், விரேசன கிருமிக்கினி குணங்களையும் தரும். துண்டுச்சீலையைத் தைலத்தில் நனைத்து தேகத்தின்மேல்போட்டு, அதின்மேல் ரோகி சகிக்கும்படி உஷ்ண கம்பளிவைத்து மெதுவாய் அழுத்தினால் வெகு தீவிரத்தில் தோல் சிவந்துவிடும். 8-30, minims, as diuretic and astringent ; ½-1 fdr. as stimulant and antispasmodic ; ½-1 foz. as purgative and anthelmintic.

டர்பன்டைன்வஸ்தி.—(இனிமா ஆவ் டர்பைன்டைன், Enema of Turpentine ; Enema Terebinthinæ.) செய்முறை.—டர்பன்டைன் தயிலம், 1-ஔன்ஸ் ; அரிசிமாவு கஞ்சி, 15-ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும். தயிலத்தை வாயால் உள்ளுக்கிறக்கக்கூடாதபோது இதை வஸ்தி செய்யலாம். திமிர்பூச்சிகளைப் போக்கிவிடும். (Oil of Turpentine, 1, foz.; Mucilage of Starch, 15 fozs.)

டர்பன்டைன் பூசுந்தயிலம்.—(லினிமென்ட் ஆவ் டர்பன்டைன், Liniment of Turpentine; Linimentum Terebinthinæ.) செய்முறை. இளகிய சவுக்காரம், 2-ஔன்ஸ் ; சூடன், 1-ஔன்ஸ் ; டர்பன்டையின் தயிலம், 16-ஔன்ஸ். சூடனைத் தயிலத்தில் கரைத்து, பிறகு சவுக்காரத்தைச் சேர்த்துச் செவ்வையாக மிஸ்ரிக்கும்படி அரைத்துக்கொள்ளவேண்டியது. கீல்வாதம், வாதசூலை, வேதனைகள் ஆகிய இவைகளுக்குத் தேய்க்க திவ்விய மருந்து. (Soft Soap, 2 ozs. ; Camphor, 1 oz. ; Oil of Turpentine, 16 fozs.)

டர்பன்டைன் களிம்பு.—(ஆயின்ட்மென்ட் ஆவ் டர்பன்டைன், Ointment of Turpentine; Unguentum Terebinthinæ.) செய்முறை.—டர்பன்டைன் தைலம், 1-ஔன்ஸ்; ரோசனம், 60-கிறேன்; மஞ்சள் மெழுகு, சுத்திசெய்த பன்றிநெய், வகை 1-க்கு, ½-ஔன்ஸ். சரக்குகளை ஜலயந்திரத்தில் வைத்து உருக்கினபிறகு, கீழிறக்கி குளிர்ந்து வரும்போது இடைவிடாமல் துழவிக்கொண்டிருக்கவேண்டியது. துஷ்ட விரணங்களுக்குப்போட இது நல்ல களிம்பு. Oil of Turpentine, 1 foz.; Resin, 60 grs.; Yellow Wax and Prepared Lard of each, ½ oz.)

ரோசனம்.—குங்கிலியம், டாமர். సజ్జారసము. రోజనము గుగ్గిలము. ரிஸின் (Resin; Resina), பைனஸ், எபீஸ் என்னும் மரங்களிலிருந்து எடுக்கிற டர்பன்டைன் (Turpentine) என்னும் குங்கிலியத்தை வாலையிலிட்டு வடித்து, எண்ணெயை எடுத்துக்கொண்டபிறகு, அடியில் நிற்கிற சரக்குக்கு ரோஜனம் என்று பேர்; இது உஷ்ணகாரி, களிம்புகளுக்கு உபயோகமாகிறது.

ரோஜனப் பிளாஸ்திரி.—(ஸ்டிகிங் பிளாஸ்டர், Sticking Plaster; ரிஸீன் பிளாஸ்டர், Resin Plaster; Emplastrum Resinæ.) செய்முறை.—ரோஜனம், ½-பவுன்; வங்கபிளாஸ்திரி, 3-பவுன். இவைகளைப் பிரத்தேகமாய் உருக்கிக்கொண்டு, பிறகு ஒன்றாய்ச்சேர்த்து மிஸ்ரமித்துக்கொள்ளவும். வெட்டு காயங்களுக்குத் துணியில் தடவிப்போட்டால், உதடுகள் ஒட்டிக்கொண்டு காயம் உலர்ந்துவிடும். (Resin, ½ pound; Lead Plaster, 3 pounds.)

ரோஜனக்களிம்பு.—(ஆயின்ட்மென்ட் ஆவ் ரிஸின், Ointment of Resin; Unguentum Resinæ.) செய்முறை.—ரோஜனம், 8-ஔன்ஸ்; மஞ்சள்மெழுகு 4-ஔன்ஸ்; மெழுகு களிம்பு 16- ஔன்ஸ்; இவைகளை இளஞ்சூடுபட உருக்கி, கம்பளியில் வடிகட்டி, குளிரும்போது, இடைவிடாமல் துழவிக்கொண் டிருக்கவேண்டியது. ஆதார விரணங்களுக்குப் போட இது நல்ல களிம்பு கொப்பளமாக்கினவிடத்தில் போட்டால் ரணத்தை சீக்கிரம் ஆற்றமாட்டாது. (Resin, 8 ozs.; Yellow Wax, 4 ozs.; Simple Ointment, 16 ozs.)

தார்

தார் மரம்.—Pinus Sylvestris; Wild Pine or Scotch Fir.

தார்,—கீலு. Pix Liquida; Liquid or Wood Tar.

விவரணம்.—சீமையில் பயிராகிற இந்த மரத்தின் விரகை, குழித்தைல முறையாக எரித்தெடுக்கிற தாரானது, தடித்து கறுத்திருக்கும், ஒருவித வாசனையுண்டு.

செய்கை. உபயோகம்.—உஷ்ணகாரி, சருமரோகங்களுக்கு இதை உள்ளுக்கும், வெளிக்கும் உபயோகிக்கலாம். விஷச்சுரம், மலபந்தம், இருமல் ஆகிய இவைகளுக்கும் உபயோகிப்பதுண்டு. க்ஷயம், இருமல் இவைகளுக்கு, இதைச் சுடவைத்து ஆவியை ஆக்கிராணிக்கச் செய்யலாம். Stimulant. In cutaneous diseases, typhoid fever, constipation, chronic bronchitis.

மாத்திரை.—½-1-திராம் எடையில், எதாவது மாவுசேர்த்து மாத்திரை செய்து, தினத்துக்கு 3-4 முறை கொடுக்கலாம். ½-1. dr.

தார்களிம்பு.—(ஆயின்ட்மென்ட் ஆவ் டார், Ointment of Tar; Unguentum Picis Liquidæ.) செய்முறை—தார், 5-ஔன்ஸ்; மஞ்சள் மெழுகு, 2-ஔன்ஸ், மெழுகை உருக்கி, தாரைச்சேர்த்து, குளிரும்போது, சீக்கிரமாய்த் துழவிக்கொடுக்கவேண்டியது. உபயோகம்,—எச்சிற்றழும்பு, சொறிசிரங்கு முதலிய சருமரோகங்களுக்கு, இதைப் பூசலாம். (Tar, 5 ozs.; Yellow Wax, 2 ozs.)

கிரியாஸோட்

தார் தயிலம்.—(Creasote; Creasotum.) தாரை வடித்தெடுக்கிற இந்தத் தயிலமானது, துல்லியமாய் அல்லது மஞ்சள்நிறமான திரவமாய் இருக்கும்; ஒருமாதிரி வாசனையுண்டு; ஜலத்தில் கரையாது; சாராயத்தில் கரையும்.

செய்கை.—உஷ்ணகாரி, சமனகாரி. மேலுக்குப்போட்டால், காந்தும், விரணமாகும். நாற்றத்தைப் போக்குகிற குணமுண்டு. Stimulant, sedative, irritant, caustic, anticeptic.

உபயோகம்.—தீனிப்பையில் வேதனை, வாந்தி இவைகளுக்கு எடுத்த மருந்து. பேதி, ரத்தபித்தம், பிரமேகம், கருப்பப் பிரமேகம் ஆகிய இவைகளுக்கும் கொடுப்பதுண்டு மது மூத்திரரோகத்துக்குக் கொடுக்கும்படி சொல்லுகிறார்கள். சொத்தைப்பல்லுக்குப் போட்டால், வலியைப்போக்கும். In gastrodynia, vomiting, diarrhœa, passive hæmorrhage, gonorrhœa, leucorrhoea, diabetes, toothache, &c.

மாத்திரை.—1-3-மினிம் வீதம், மாத்திரை ரூபமாய்க் கொடுக்கலாம். 1-3, minims.

கிரியாஸோட்களிம்பு.—(ஆயின்ட்மென்ட் ஆவ் கிரியாஸோட், Ointment of Creasote; Unguentum Creasoti.) செய்முறை.—கிரியாஸோட், 1-திராம்; மெழுகு களிம்பு, 1-ஔன்ஸ்; இவைகளைச் செவ்வையாக மிஸ்ரமித்துக்கொள்ள வேண்டியது. உபயோகம்.—சருமவியாதிகளுக்கும், ரணங்களுக்கும் உபயோகிக்கலாம் (Creasote, 1 fdr.; Simple Ointment, I oz.

(NON-OFFICINAL.)

தேவதாருமரம்—దేవదారుచెట్టు. (Pinus Deodara) இதில் ஒருவித தயிலம் வடிக்கிறதுண்டு, அதை விரணம், சருமவியாதி, குஷ்டம் ஆகிய இவைகளுக்குக் கொடுப்பது நாட்டுவைத்தியம்.

நாட்டுப்பரங்கிச்சக்கையினம். (SMILACAÆ.)

சீமை நன்னாரி

சீமை நன்னாரிச்செடி.—Smilax Officinalis; Jamaica Sarsaparilla.

சீமை நன்னாரிவேர்.—సీమసుగంధ పాల వేరు. ஸார்ஸ்பெரில்லா. Sarsaparilla; Sarsæ Radix.

செய்கை.—அமெரிகா தேசத்திலிருந்து வருகிற இந்தவேருக்கு வியதாபேத தாருட்டியகாரி குணமுண்டு. Alterative tonic.

உபயோகம்.—மேகம், நாள்சென்ற கீல்வாதம் இந்த ரோகங்களுக்கு இது எடுத்தமருந்து; யகிர்தகண்ட ரோகம், நாள்பட்ட சருமரோகம் ஆகிய இவைகளுக்கும் கொடுப்பதுண்டு. In syphilis, chronic rheumatism, skin diseases, chronic liver affections.

மாத்திரை.—வேரின் தூளில், $\frac{1}{2}$-1-திராம் வீதம் கொடுக்கலாம். Dose.—$\frac{1}{2}$-1 dr.

சீமை நன்னாரிவேர் கஷாயம்.—(டிகாக்ஷன் ஆவ் சார்ஸெபெரில்லா, Decoction of Sarsaparilla; Decoctum Sarsae.) செய்முறை.—ஷைவேர், $2\frac{1}{2}$-ஔன்ஸ்; வெந்நீர், $1\frac{1}{2}$-பைன்ட். வேரை 1-மணிநேரம் வெந்நீரில் ஊறவைத்து, பிறகு பாத்திரத்தை மூடி 10-நிமிஷம் வரையில் காய்ச்சி

குளிர்ந்தபிறகு, வடிகட்டி, 1-பைன்ட் அளவுக்குத் தேவையான ஜலம் விட்டுக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—2-4-ஔன்ஸ் வீதம், தினத்துக்கு, 3-4-முறை கொடுக்கலாம். (Sarsaparilla, $2\frac{1}{2}$ ozs.; Boiling Water, $1\frac{1}{2}$ pints.) Dose.—2-4 fozs.

சீமைநன்னாரிவேரின் கலவைக்கஷாயம்.—(காம்பவுண் டிகாக்ஷன் ஆவ் சார்ஸெபெரில்லா, Compound Decoction of Sarsaparilla; Decoctum Sarzæ Compositum.) செய்முறை.—சீமைநன்னாரி, $2\frac{1}{2}$-ஔன்ஸ்; ஸாஸெபெராஸ், $\frac{1}{4}$-ஔன்ஸ்; குவாகம் சக்கை, $\frac{1}{4}$-ஔன்ஸ்; அதிமதுரம் $\frac{1}{4}$-ஔன்ஸ்; மெஸிரியன், 60-கிறேன்; வெந்நீர் $1\frac{1}{2}$-பையின்ட் சரக்குகளை ஜலத்தில், 1-மணிநேரம் ஊறவைத்து, 10-நிமிஷம் காய்ச்சி, குளிர்ந்தபிறகு வடிகட்டி 1-பைன்ட் அளவுக்குத் தேவையான ஜலம் விட்டுக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—2-4-ஔன்ஸ் வீதம் கொடுக்கலாம். மேல்கண்டதைப்பார்க்கிலும், இது விசேஷமானது. (Sarsaparilla, $2\frac{1}{2}$ ozs.; Sassafras, Guaiacum Wood turnings, Fresh Liquorice Root, of each $\frac{1}{4}$ oz.; Mezereon Bark, 60 grs.; Boiling Water, $1\frac{1}{2}$ pint.) Dose.—2-4 fozs.

சீமை நன்னாரிவேரின் திரவச்சத்து.—(லிக்விட் எக்ஸ்ட்ராக்ட் ஆவ் சார்ஸெபெரில்லா, Liquid Extract of Sarsaprilla; Extractum Sarzæ Liquidum.) சார்ஸெபெரில்லா, 1-பவுன்; ஜலம், 14-பைன்ட்; ரெக்டிபைட் சாராயம், 1-ஔன்ஸ். வேரை, பாதி ஜலத்தில் 6-மணிநேரம் ஊறவைத்து, ஜலத்தை இறுத்துக்கொண்டு, திப்பியில் மிதி ஜலத்தைவிட்டு, 6-மணிநேரம் ஊறவைத்து, வேரைப் பிழிந்தெடுத்துவிட்டு, இரண்டையும் கலந்து வடிகட்டி, ஜலயந்திரத்தில் வைத்து, 7-ஔன்ஸ் அளவுக்குச் சுண்டக் காய்ச்சிக்கொள்ளவேண்டியது. குளிர்ந்தபிறகு சாராயம் சேர்த்துக்கொள்ளவும். மாத்திரை.—2-4-திராம் அளவுக்குக் கொடுக்கலாம். உள்ளுக்குக் கொடுக்க இது விசேஷமுறை. (Sarsaparilla, 1 ℔., Water, 14 pints, Rectified Spirit, 7 oz.) Dose.—2-4 fdrs.

(NON-OFFICINAL.)

பறங்கிச்சக்கை.—பறங்கிப்பட்டை. పరంగిచెక్క. (Smilax China, China Root. நாட்டுப் பறங்கிச்சக்கை, Smilax Glabra; S. Lanceæfolia, S. Ovalifolia.) சீனதேசத்திலிருந்து வருவதுபோல், நமது நாட்டிலும் இது விளைவதுண்டு; இவைகளுக்கெல்லாம், வியதாபேத தாருட்டியகாரி குணங்களுண்டென்று, கஷாயமிட்டு பிரமேகம், கீல்வாதம் இவைகளுக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்.

சாலாமிஸிரி.—సాలామిసరి. (ஸேலப். Salep. The dried root of Orchis Mascula.) பெர்ஷியாதேசத்தில் விளைகிற இதை மகமதியர்கள் விசேஷித்து வீரியவிர்த்தி மருந்துகளோடு உபயோகப்படுத்துகிறார்கள். இதை மாவாக்கி, 1-ஔன்ஸ்க்கு, 1-பைன்ட் ஜலம்விட்டு, கஞ்சி காய்ச்சி கொடுக்கலாம், பலம்வரும். இது சீதஜலத்தில் கரையாது.

இஞ்சிச்செடி இனம். (SCITAMINEÆ.)

சுக்கு

இஞ்சிச்செடி.—Zingiber Officinale; Officinal Ginger.

சுக்கு.—நாகரம். ശുംഠി. ஜிஞ்சர்; Ginger; Zingiberis Radix.

விவரணம்.—சுக்கு காரமாயும், வாசனையாயுமிருக்கும்; அளுத்தமாயும், பளுவாயுமிருப்பது நல்லச்சரக்கு.

செய்கை.—உஷ்ணகாரி, தீபனவர்த்தனி, கருப்பவாதஹாரி, Stimulant, stomachic, carminative.

உபயோகம்.—வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, நாள்பட்ட கீல்வாதம் ஆகிய இவைகளுக்கு உபயோகித்து சவுக்கியம் கண்டதுண்டு. களியாகச் செய்து தலைவலிக்கு நெற்றிமேலும், தொண்டை வேதனைக்குக், கழுத்தின் மேலும், கிட்டப்பார்வைக்குப் புருவங்கள்மேலும் போட்டுச் சிகிச்சை செய்வதுண்டு. பல்வலிக்குச் சுக்கை மெல்லலாம். In flatulence, colic, chronic rheumatism, headache, toothache and shortness of sight.

சுக்குப் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் ஜிஞ்சர், Tincture of Ginger; Tinctura Zingiberis.) செய்முறை.—சுக்குத்தூள், 2½-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 1-பைன்ட். பெர்க்கொலேஷன் முறையாய், செய்துகொள்ளவேண்டியது. மாத்திரை.—¼-முதல், 1-திராம், (Ginger, 2½ oz. Rectified Spirit, 1 pint.) Dose.—15 minims, to 1 fdr.

விரிய சுக்குப் பாவனத்திரவம்.—(ஸ்ட்ராங் டிங்சர் ஆவ் ஜிஞ்சர், Strong Tincture of Ginger; Tinctura Zingiberis fortior, Essence of Ginger.) செய்முறை.—சுக்குத்தூள், 10-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், தேவையானது. சுக்கை பெர்க்கொலேடரில் அழுத்திப்போட்டு, அதின் மேல், ½-பைன்ட் சாராயம் விட்டு, 2-மணிநேரம் சென்றபிறகு, கொஞ்ச சாராயம் மேலும் விட்டு, 1-பைன்ட் திரவம் சேகரித்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—5-20-மினிம் கொடுக்கலாம். (Ginger, 10 ozs.; Rectified Spirit, 1 pint.) Dose.—5-20 minims.

சுக்குப்பாணிதம்.—(ஸிரப் ஆவ் ஜிஞ்சர், Syrup of Ginger; Syrupus Zingiberis.) செய்முறை.—வீரிய சுக்குப்பாவனத்திரவம், 6-திராம்; சருக்கரைப்பாகு, 19-ஔன்ஸ். இவ்விரண்டையும் சேர்த்துக் குலுக்கிக் கொள்ளவேண்டியது. மாத்திரை.—1-2-திராம் கொடுக்கலாம். (Strong Tincture of Ginger, 6 fdrs; Syrup, 19 fozs.) Dose.—1-2 fdrs.

சுக்கு வெந்நீர்க் கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் ஜிஞ்சர், Infusion of Ginger; infusum Zingiberis.) செய்முறை.—சுக்குத்தூள், ½-ஔன்ஸ்; வெந்நீர், 10-ஔன்ஸ். பாத்திரத்தை மூடி, 1-மணிநேரம் ஊறவைத்து, வடிகட்டிக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—1-2-ஔன்ஸ் கொடுக்கலாம். (Ginger, ½ oz.; Boiling Water, 10 fozs.) Dose.—1-2 fozs.

ஏலரிசி

ஏலரிசிச்செடி.—Elettaria Cardamomum; Officinal or Malabar Cardamom Plant.

ஏலரிசி.—ഏലത്തരി. கார்டமம்ஸ், Cardamoms; Cardamomum.

விவரணம்.—ஏலத்துக்குக், காரமும், வாசனையுமுண்டு; தேவையான போது; காயிலிருக்கிற விதையை எடுத்துக்கொள்வதே நல்லது.

செய்கை.—உஷ்ணகாரி, கருப்பவாதஹாரி. Stimulant, carminative. உபயோகம்.—அக்கினிமந்தம், வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, தளர்ச்சி ஆகிய இவைகளுக்கு உபயோகமாகும். இதின் சூரணத்தில், 10-20 கிறேன் கொடுக்கலாம். Dyspepsia flatulency, nervous depression.

ஏலரிசி மிஸ்ரம பாவனத்திரவம்.—(கம்பவுண் டிங்சர் ஆவ் கார்டெமம்ஸ், Compound Tincture of Cardamoms; Tinctura Cardamomi Composita.) செய்முறை.—ஏலரிசிப்பொடி, $\frac{1}{4}$-ஔன்ஸ்; கேக்விதை, $\frac{1}{4}$, ஔன்ஸ்; திராக்ஷபழம், 2-ஔன்ஸ்; கருவாப்பட்டைத்தூள் $\frac{1}{2}$-ஔன்ஸ்; இந்திரகோபம், 60-கிறேன், புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். பெர்கொலேஷன் முறையாய் வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-2 திராம் கொடுக்கலாம். (Cardamoms, $\frac{1}{4}$ oz.; Caraway, $\frac{1}{4}$ oz.; Raisins, 2 ozs.; Cinnamon, $\frac{1}{2}$ oz. Cochineal, 60 grs.; Proof Spirit, 1 pint.) Dose.—$\frac{1}{2}$-2 fdrs.

மஞ்சள்.—குளவிந்தம். పసుపు. (டர்மரிக், (Turmeric; Curcuma.) மஞ்சள்செடி, Curcuma Longa; Turmeric plant.) உபயோகம்.—கருப்பவாதஹாரி. கிறிமசாலையில் சேர்க்கிற இதைப் பாவனத்திரவம் செய்து, அதில் கடுதாசியைத் துவைத்து, அந்த மஞ்சள் கடுதாசியை மூத்திரப் பரீக்ஷைக்கு உபயோகப்படுத்துகிறார்கள். மூத்திரத்தில் உப்புகளிருந்தால் கடுதாசி சிவந்துவிடும். சலுப்புக்கு, மஞ்சளைச் சுட்டுப் புகையைப்பிடிப்பதும், கண்ணோவுக்கு மஞ்சள் கஷாயத்தால் கண்களைக் கழுவுவதும், விரணங்களுக்கு மஞ்சள் மாவைத் தூவுவதும், கட்டிகளுக்கு மஞ்சளும் சாதமும் அரைத்துக் கட்டுவதும், நாட்டுவழக்கம்.

(NON-OFFICINAL.)

கஸ்தூரி மஞ்சள்.—కస్తూరిపసుపు. (Curcuma Aromatica; C; Zedoaria; Round Zedoary.) கர்ப்பவாதஹாரி, பலகாரி ஆகிய இக்குணங்கள் இந்த மஞ்சளுக்குண்டென்று நாட்டோர் சொல்வதுண்டு. வாசனைதிரவியங்களோடு சேர்க்கப்படும்.

கிச்சிலிக்கிழங்கு.—பூலாங்கிழங்கு. కిచ్చిలిగడ్డ. (Curcuma Zedoaria C. Zerumbet; Long Zedoary.) இதை வாசனைத்திரவியங்களோடும், அபீர் என்னும் தூளோடும் சேர்ப்பதுண்டு.

మామిడిఅల్లం. (Curcuma Amada; Mango Ginger.) இதற்கு கருப்பவாதஹாரி, தீபனகாரி ஆகிய இக்குணங்களுண்டென்று நாட்டோருக்கு எண்ணமுண்டு.

கூவமாவுசேடி.—కొట్టారాకూవ. (Curcuma Angustifolia; C, Rubescens.) கூவமாவு, அரொருட்மாவு, ఆరోరూట్ పిండి. (Arrowroot) எல்லோருக்கும் பிரசித்தமாய்த்தெரிந்த இந்த மாவைக்குறித்து அநேகக்குற்றங்கள் நமது நாட்டுக் கிழப்பிணங்கள் சொல்வதுண்டு. 1-கரண்டிமாவில், சுமார் $2\frac{1}{2}$-ஆழாக்கு ஜலம் விட்டுக்கரைத்து கொதிக்கவைத்தால் கஞ்சிபோலாகும், அதில் பாலும் சருக்கரையும் சேர்த்து ரோகிகளுக்கும், குழந்தைகளுக்கும் கொடுத்தால் சீக்கிரத்தில் சீரணமாகும், தேகத்துக்கும் போஷணையுண்டாகும்.

‖ பேராத்தை.-దుంపరాష్ట్రకం. (Alpinia Galanga; The Greater Glangal.

சிற்றரத்தை.—సన్న రాష్ట్రకం. (Alpinia Chinensis; The Lesser Galangal.) இவ்விரண்டுக்கும் குணம் ஒன்று. கபஹாரி, சுரஹாகாரி, ஜாடராக்கினி வர்த்தனி. வெந்நீர்க்கஷாயமிட்டு சுரம், இருமல், அக்கினிமந்தம் ஆகிய இவைகளுக்குக் கொடுக்கலாம். வேரைச் சாராயத்தில் ஊறவைத்து, வாத நோய்களுக்குப் பூச குணமுண்டாகும். இவைகளின் தூளில், 1-விராகனெடைவீதம் கொடுக்கலாம்.

வாழையினம். (MUSACEÆ.)

(NON- OFFICINAL.)

வாழை. கதலி—అంటిచెట్టు. (The Plantain Tree; The Banana. Musa Sapientum.)—வாழையிலையைப் பிளிஷ்டர்போட்டு ரணமாக்கினதற்கும், அக்கினிவிரணம், வெந்நீர்விரணம் ஆகிய இவைகளுக்கும், வைத்துக் கட்டினால், ரணம் சீக்கிரத்தில் உலர்ந்துவிடும். இலையின் மேற்புறத்தை இரண்டுநாள் வைத்துக்கட்டி பிறகு, அடிப்புறத்தைவைத்துக் கட்டவேண்டியது. உலர்ந்துவருகிற ரணங்களுக்கு, ஈரத்துணியை மடித்து மேலேபோட்டு, வாழயிலையைவைத்துக் கட்டிக்கொண்டுவந்தால், துணி ஈரமாகவே இருக்கும், ரணமும் சீக்கிரத்தில் உலர்ந்துவிடும். வாழையிலைக்கு ஆமணக்கெண்ணெய் தடவி உபயோகிக்கலாம். கண்ணோவுக்கு இந்த இலையைக் கண்மறைவுக்கு வைத்துக்கட்டினால் குளிர்ச்சியாயும் வெளிச்சத்துக்கு மறைவாயுமிருக்கும். வாழைக்காயும், வாழைப்பிஞ்சும், பத்தியத்துக் குதவும். வாழைத்தண்டு வேரின் ரசம், அல்லது நீருக்கு மூத்திரத்தை யதிகப்படுத்துகிற குணமிருப்பதால், அதனோடு பொட்டிலுப்பாவது, வெங்காரமாவது சேர்த்துக் கொடுத்தால், மூத்திர எரிவு; ரத்தக்கிரிச்சிரம் ஆகிய இவைகள் சவுக்கியமடையும். வாழப்பழத்துக்கு மலத்தை இளகச்செய்கிறகுணமும், தேகபோஷணை குணமுமுண்டு. கதலியாதி கிருதத்தில் செவ்வாழைப்பழமும், சலவை எண்ணெயில் பேயன்வாழைப்பழமும் சேருகின்றன.

யானைக்கற்றாழையினம். (AMARYLLIDACEÆ.)

விஷமூங்கில்

விஷமூங்கில் செடி.—Crinum Asiaticum, var. Toxicarium.

விஷமூங்கில் வேர்.—విషమూంగిలవేరుఅక్కు నారాయణచెట్టువేరు. కేసర చెట్టువేరు. Crini Radix.

செய்கை.—வமனகாரி. குறைந்த அளவில் கொடுத்தால், குமட்டலுண்டாகும், வியர்வை பிறக்கும். Emetic, nauseant, diaphoretic.

உபயோகம்.—நரிவெங்காயத்தைப்போலவே இதை உபயோகிக்கலாம்.

‖ விஷமூங்கில்வேரின் ரசம்.—(Juice of Crinum; Succus Crini) ½-ஔன்ஸ் பச்சைவேரில், 2-ஔன்ஸ் குளிர்ந்த ஜலம்விட்டு, உரலிலிடித்துத் துணியில் பிழிந்துகொள்ளவும். மாத்திரை.—2-4-டிராம் வீதம், 20-நிமிஷத்துக்கொருதரம், வாந்தியாகியறவரையில் கொடுக்கவேண்டியது. உலர்

ந்தவேரில், இரண்டத்தனைக் கூட்டிக்கொடுக்கவேண்டியது. Dose.—2-4 fdrs.

விஷமூங்கில் ஷர்பத்.—(ஸிரப் ஆவ் கிரைனம், Syrup of Crinum; Syrupus Crini.) இடித்த விஷமூங்கில் பச்சைவேர், 8-ஔன்ஸ்; வெந்நீர், 1-பைன்ட்; பஞ்சதாரை, 1-பவுண்ட். வேரை ஜலத்திலிட்டு, 2-மணிநேரம் ஊறவைத்து, உறலிலிடித்து, துணியில் பிழிந்து, பஞ்சதாரையைச்சேர்த்து, இளஞ்சூடுபட கரைத்துக்கொள்ள வேண்டியது.

மாத்திரை.—2-திராம் வீதம் இஷ்டப்படி கொடுக்கலாம். குழந்தைகளுக்கு, இருமலுக்கும், வாந்தியாகவும் கொப்பதுண்டு. (Fresh root of Crinum, 8 ozs.; Boiling Water, 1 pint; Refined Sugar, 1 ℔.) Dose.-2 fdrs.

(NON-OFFICINAL.)

யானைக்கற்றாழை.—రాకాశిమట్ట. (Agave Americana.)—இதன் வேரைக் கஷாயமிட்டு (வேர், 4-ஔன்ஸ், ஜலம், 1-பைன்ட்) மேகப்புடைகளுக்குக் கொடுத்து சவுக்கியம் கண்டதாய்த் தெரியவருகின்றது.

நிலப்பனைக்கிழங்கினம். (HEPOXIDEÆ.)

(NON-OFFICINAL.)

நிலப்பனங்கிழங்கு.—నేలతాటి. (Curcligo Orchioides.) மருந்தாக உபயோகிக்கிற இந்தக் கிழங்கைக்குறித்து இங்கிலீஷ் வைத்தியர்கள் பரீட்சைசெய்து யாதொன்றும் எழுதவில்லை. நாட்டுவைத்தியர்கள், பிரமேகம், மூத்திரத்தரிப்பு, பெரும்பாடுமுதலிய வியாதிகளுக்கு உபயோகிப்பதுண்டு.

குங்குமப்பூ இனம். (IRIDEÆ.)

குங்குமப்பூ

குங்குமப்பூச்செடி. Crocus Sativus; The Saffron Crocus.

குங்குமப்பூ.—కుంకుమపువ్వు. ஸாப்ரன், Saffron; Crocus.

செய்கை. உபயோகம்.—அங்காகர்ஷண நாசகாரி, ருதுவர்த்தனகாரி ஆகிய இக்குணங்கள் இதற்குண்டென்று முன்பு யோசனை; ஆனால் இப்போது, இதை வாசனைக்காகவும், நிறத்துக்காகவும், சேர்ப்பதுண்டு.

மாத்திரை.—10-40-கிறேன் வீதம், வெந்நீர் ஊறல் கஷாயமாயாவது அல்லது தூளாயாவது கொடுக்கலாம்.

குங்குமப்பூ பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் ஸாப்ரன், Tincture of Saffron; Tinctura Croci.) செய்முறை.—குங்குமப்பூ, 1-ஔன்ஸ்; புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். பெர்க்கொலேடர் முறையாய் வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—½-2-டிராம் வீதம் கொடுக்கலாம். (Saffron, 1 oz.; Proof Spirit, 1 Pint.) Dose.—½-2 fdrs.

வெங்காயயினம். LILIACEÆ.

ஸொகொட்ரைன் தேசத்து மூஷாம்பரம்

மூஷாம்பரம்.—கறியபோளம், சந்நிநாயகம். ముసాంబరము. Socotrine Aloes; Aloe Socotrina.

செய்கை.—குறைந்த அளவில்கொடுத்தால், தீபனத்தை வர்த்திப்பித்து, பலம் கொடுக்கும்; மாத்திரையில் கூட்டிக்கொடுத்தால் பேதியாகும், சூதகத்தைக் கிரமப்படுத்தும்.

உபயோகம்.—மலபந்தத்துக்குக் கொடுக்க இது உயர்ந்தமருந்து. அக்கினிமந்தம், மஞ்சள்காமாலை, சூதகக்கட்டு, சூதகப்பாண்டு ஆகிய இவைகளுக்கும் கொடுத்து சவுக்கியம் கண்டதுண்டு. சருமரோகங்களையும் கேழ்ப்பதால், மேலுக்குப் போடுகிறார்கள். In constipation ; dyspepsia, jaundice, amenorrhœa and chlorosis.

மாத்திரை.—2-3-கிறேன் வீதம், 2-3-தினத்துக்கொருமுறை கொடுத்தால், தீபனதாருட்டிகாரியாகும் ; 5-10, கிறேன் கொடுத்தால், விரேசனகாரியாகும். சாதாரணமாய் இதை வேறு மருந்துகளோடு சேர்த்துக்கொடுக்கப்படுகின்றது. Dose.—2-3. grs. as a stomachic tonic; 5-10 grs. purgative.

மூஷாம்பரச்சத்து.—(எக்ஸ்ட்ராக்ட் ஆவ் ஸோகொட்ரைன் ஆலோஸ். Extract of Socotrine Aloes ; Extractum Aloes Socotrinæ.) இதின் ஒருவேளைக்கு 2-6-கிறேன் வீதம் கொடுக்கலாம். Dose.—2-6-grs.

மூஷாம்பர மாத்திரை.—(பில் ஆவ் ஸொகொட்ரைன் ஆலோஸ், Pill of Socotrine Aloes ; Pilula Aloes Socotrinæ.) செய்முறை.—மூஷாம்பரச்சூரணம், 2-ஔன்ஸ் ; கட்டி சவுக்காரத்தூள், 1-ஔன்ஸ் ; சாதிக்காய்த் தயிலம், 1-திராம் ; குல்கந்து, 1-ஔன்ஸ். செவ்வையாக மிஸ்ரமிக்கும்படி இடித்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை —5-10-கிறேன். (Socotrine Aloes, 2 ozs.; Hard Soap, 1 oz.; Volatile Oil of Nutmeg, 1 fdr.; Confection of Roses, 1 oz.) Dose.—5-10 grs.

மர்சேர்ந்த மூஷாம்பர மாத்திரை.—(பில் ஆவ் ஆலோஸ் அன்ட்மர், Pill of Aloes and Myrrh ; Pilula Aloes et Myrrhæ) செய்முறை.—மூஷாம்பரம், 2-ஔன்ஸ் ; மர், 1-ஔன்ஸ் ; உலர்ந்த குங்குமப்பூ, ½-ஔன்ஸ் ; குல்கந்து, 2½ ஔன்ஸ். முதல் 3-சரக்குகளை அரைத்து வஸ்திரகாயம்செய்து, பிறகு குல்கந்தைச் சேர்த்துச் செவ்வையாக மிஸ்ரமிக்கும்படி இடித்துக் கொள்ளவேண்டியது. மாத்திரை.—5-10-கிறேன் கொடுத்தால் பேதியாகும், சூதகத்தைக் கிரமப்படுத்தும். (Aloes, 2 ozs., Myrrh, 1 oz.; Saffron, ½ oz.; Confection of Roses, 2½ oz.) Dose.—5-10 grs.

பெருங்காயஞ்சேர்ந்த மூஷாம்பரமாத்திரை.—பில் ஆவ் ஆலோஸ் அன்ட் அஸ்ஸெபெடீடா, Pill of Aloes and Assafœtida; Pilula Aloes et Assafœtida.) செய்முறை.—மூஷாம்பரத்தூள், பெருங்காயம், கட்டிச் சவுக்காரம், குல்கந்து, வகை 1-க்கு ஒரு ஔன்ஸ். இவைகளை இடித்து மிஸ்ரமித்துக்கொள்ளவும். மாத்திரை.—5-10-கிறேன். சூதகசந்நியில் வயிற்று

வலி நின்று பேதியாகும்படிச்செய்ய இதைக் கொடுக்கலாம். (Socotrine Aloes; Assafætida, Hard Soap, Confection of Roses, of each 1 oz.) Dose.—5-10 grs.

மூஷாம்பர பாவனத்திரவம் —(டிங்சர் ஆவ் ஆலோஸ், Tincture of Aloes; Tinctura Aloes.) செய்முறை.—மூஷாம்பரத்தூள், ½-ஔன்ஸ்; அதிமதுரச்சத்து. 1½-ஔன்ஸ்; புரூவ் ஸ்பிரிட் சாராயம், தேவையானது. சரக்குகளை, 15-ஔன்ஸ் சாராயத்தில், 7-நாள் அடிக்கடி குலுக்கி ஊற வைத்து, பிறகு வடிகட்டி, 1-பைன்ட்டுக்குத் தேவையான சாராயத்தை விட்டுக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—1-2-திராம் வீதம் கொடுக்கலாம். (Socotrine Aloes, ½ oz ; Extract of Liquorice, 1½ oz.; Proof Spirit, 1 pint.) Dose.—1-2 fdrs.

பார்பெடோஸ் தேசத்து மூஷாம்பரம்

ஷை மூஷாம்பரச் செடி. Aloe Vulgares, Common Aloe.

பார்பெடோஸ் தேசத்து மூஷாம்பரம்.—Barbadoes Aloes, Aloe Barbadensis.

ஸோகொட்ரைன்தேசத்து மூஷாம்பரத்துக்குப் பதிலாக, அதேமாத்திரையில், அதைக்கொடுக்கிற ரோகங்களுக்கு இதைக்கொடுக்கலாம்

அயம்சேர்ந்த மூஷாம்பர மாத்திரை.—(பில் ஆவ் ஆலோஸ் அன்ட் ஐரன், Pill of Aloes and Iron ; Pilula Aloes et Ferri.)செய்முறை.—அன்னபேதி, 1½-ஔன்ஸ் ; பார்பெடோஸ்தேசத்து மூஷாம்பரச் சூரணம், 2-ஔன்ஸ் ; கருவாப்பட்டைக் கலவைக் சூரணம், 3-ஔன்ஸ் ; குல்கந்து, 4-ஔன்ஸ். அன்னபேதியைத் தூள்செய்து, மற்ற இரண்டுச் சரக்குகளுடன் சேர்த்து அரைத்து, குல்கந்தைச்சேர்த்து, மெழுகுபத மாக்கிக்கொள்ள வேண்டியது. மாத்திரை.—5-10-கிறேன் கொடுக்கலாம். (Sulphate of Iron, 1½ oz.; Barbadoes Aloes, 2 ozs.; Compound Powder of Cinnamon, 3 ozs.; Confection of Roses, 4 ozs.) Dose.—5-10 grs.

சீமை நரிவெங்காயம்

சீமை நரிவெங்காயச்செடி.—Urginea Scilla, Officinal Squill.

சீமை நரிவெங்காயம்.—சீமைப்பேயுள்ளி, சீமைக்காட்டுள்ளி.ஸ்குவில், Squill ; Scilla.

செய்கை.—இதற்குக் கபஹாரி, மூத்திரவர்த்தனி ஆகிய இக்குணங்களுண்டு ; அதிகமானல் வாந்தியையும், பேதியையும் உண்டாக்கும். மிதத்துக் கதிகமானல் நஞ்சாகும். Expectorant and diuretic in small doses; emetic and cathartic in large doses.

உபயோகம்.—நீர்க்கோவை, நாள்பட்டஇருமல், சுவாஸகாசம் ஆகிய இவைகளுக்குக் கொடுத்தால் நன்மைசெய்யும். குறுமாந்தம், கக்கிருமல் ஆகிய இவைகளுக்கு வாந்திக்குக் கொடுக்கலாமென்றும் சொல்லுகிறார்கள். In dropsy, chronic bronchitis, asthma, catarrhal affections, &c.

மாத்திரை.—கபத்தைக் கண்டிக்கவும், நீரை அதிகப்படுத்தவும் சூரணத்தில், 1-3-கிறேன் கொடுக்கலாம். 10-15-கிறேன் கொடுத்தால் வாந்

தியாகும். 1-3 grs. cf the powered bulb as an expectorant and diuretic; 10-15 grs. as an emetic.

சீமை நரிவெங்காயப் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் ஸ்குவில், Tincture of squill; Tinctura Scillæ.) செய்முறை.—சதைத்த நரிவெங்காயம், 2½-ஔன்ஸ்; புரூவ்ஸ்பிரிட், 1-பைன்ட். பெர்கொலேஷன் முறையாகச் செய்துகொள்ள வேண்டியது. மாத்திரை,—10-30, துளிகொடுக்கலாம். (Squill, 2½ oz. Proof Spirit, 1 pint.) Dose.—10-30 drops.

சீமை நரிவெங்காயமிஸ்ரமமெழுகு.—(காம்பவுண்ட் ஸ்குவில்பில், Compound squill Pill; Pilula Scillæ Composita.) செய்முறை.—சீமை நரிவெங்காயச்சூரணம், 1¼-ஔன்ஸ்; சுக்குத்தூள், 1-ஔன்ஸ்; அமோனியாகம், 1-ஔன்ஸ்; கட்டிசவுக்காரம், 1-ஔன்ஸ்; வெல்லம், 1-ஔன்ஸ், அல்லது தேவையானது. சூரணங்களைக்கூட்டி, வெல்லப்பாகைச் சேர்த்து, இடித்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—5-10-கிறேன். (Squill, 1¼ oz.; Ginger, 1 oz.; Ammoniacum, 1 oz.; Hard Soap 1 oz.; Treacle, 2 ozs.) Dose.—5-10 grs.

(NON-OFFICINAL.)

காட்டுள்ளி.—நரிவெங்காயம். నక్క_వుల్లిగడ్డ. (Indian Squill, Scilla Indica, Urginea Indica.)—இந்தச் சரக்குக்கு மூத்திரத்தை அதிகப்படுத்துகிற குணமும், கபத்தை வெளிப்படுத்துகிற குணமுமிருப்பதால், நீரேற்றம், இருமல் ரோகங்கள் ஆகிய இவைகளுக்குக் கொடுக்கலாமென்றும், ஒரு வேளைக்கு, 10-15-அல்லது, 20-கிறேன் எடைக்குக் கொடுக்கலாமென்றும் கண்டிருக்கிறது. இளசாய் சிறுத்திருக்கிற உள்ளிக்கு வேகம் அதிகமாம்; இதைக் கஷாயமிட்டு, நீர்க்கோவைக்குக் கொடுத்தால், மூத்திரத்தை அதிகப்படுத்தும்.

கற்றாழை.—குமரி, కలబంద (Indian Aloes, Aloe Indica. A. Perfoliata.) சிறுகற்றாழை. చిన్న కలబంద. (Aloe Litoralis.) இந்த இரண்டு சாதி கற்றாழைமடலிலிருந்தெடுக்கிற மூஷாம்பரத்துக்கு, பேதியையுண்டாக்குகிற குணமுண்டு. இதைச் செவ்வையாகச் சேகரித்து வைத்துக்கொண்டால், சீமைச்சரக்குக்குப் பதில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம், விலையும் அற்பமாய் இருக்கும். கற்றாழைச்சோற்றை எடுத்து, பால்போக நன்றாய்க் கழுவி, சல்லாத்துணியில்போட்டு, சீனக்காரம், அல்லது மாசக்காய், அல்லது கடுக்காயின் துளைத்தூவி, கண்ணோவு, வீக்கம் முதலியவைகளுக்குக் கட்டலாம், தணிப்பாயிருக்கும், சிகப்பை மாற்றிவிடும். கற்றாழையின் சோற்றோடு கற்கண்டுசேர்த்து, தேகச்சூடு தணிய சாப்பிடுவது நாட்டு வழக்கம்.

கார்த்திகைக்கிழங்கு.—கலைப்பைக் கிழங்கு. வேந்தோன்றிக் கிழங்கு,—అడవినాభి. పొత్తిదుంప. అగ్నిశిఖ. కలగడ్డ. (Gloriosa Superba.)—இந்தக்கொடிக்கு, விஷகுணமுண்டென்று சொல்லுவர்; ஆனால் பரீட்சையால் இதுவரையில் யாரும் கண்டுகொள்ளவில்லை. கிழங்கை இடித்து, தண்ணீரிலிட்டு அடிக்கடி கழுவி எடுக்கிறமாவை பிரமேகத்துக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்.

தண்ணீர்விட்டான் கிழங்கு.—சதாவேரிகிழங்கு. சதாமூலம். చల్లగడ్డలు. సతావరి. (Asparagus Sarmentosus.) தமிழ்முறையில் உபயோகிக்கிற இந்தக் கிழங்கை இங்கிலீஷ் வைத்தியர்கள் பரிக்ஷித்து, அப்பிரயோஜன பதார்த்தமென்று சொல்லுகிறார்கள்.

வெள்ளுள்ளி.—பூண்டு. வெள்ளைப்பூண்டு. తెల్లగడ్డ. (Garlic. Allium Sativum.)—இதற்குச் சருமத்தைச் சிவப்பிக்கிறகுணமும், உஷ்ணப்படுத்துகிற குணமும், கபத்தைக் கண்டிக்கிறகுணமும், மூத்திரத்தை அதிகப்படுத்துகிற குணமும், கிருமிகளைப்போக்குகிற குணமுமுண்டு. வெங்காயத்தைப்பார்க்கிலும் இதற்கு காரம் அதிகம். இதைக் குழம்புசெய்து சாப்பிட்டால் தேகத்துக்குச் சவுக்கியம். இதின் ரசத்தைச் செவிடுக்குக் காதில்விட்டுக்கொண்டுவந்தால், சவுக்கியமுண்டாகும். இதையரைத்துச் சிறியகட்டிகளுக்குப் போட்டால் கரைந்துவிடும். மாசாலைக்கூட்டில் சேருகிறது. நாள்பட்ட இருமல், சுவாசகாசம், கிருமிரோகம் ஆகிய இவைகளுக்கு உபயோகித்தால், நன்மைசெய்யும். பூண்டில் ஒருவேளைக்கு, ½-2-திராம் எடைகொடுக்கலாம். வெள்ளுள்ளி ரசத்தை, 20-30-துளி சருக்கரையில் விட்டும், கஷாயமாகச்செய்து (பூண்டு, ½-ஔன்ஸ், வெந்நீர், 6-ஔன்ஸ்,) தினத்துக்கு, 2-3-ஆவர்த்தி கொடுக்கலாம். பாலிலிட்டு ஊறவைத்துக் கொடுப்பதும் ஒரு முறை.

வெங்காயம்.—ஈருள்ளி. உள்ளி. ఉల్లిగడ్డ. (Onion; Allium Sepa) இதற்கும், பூண்டின்குணமே யுண்டு. வெங்காயப்பச்சடி வெகு மதுரமாயிருக்கும். தேகத்துக்கு ஆரோக்கியமுண்டு.

மருள்.—చాగ. (Sansesnera Zeylanica) இதிலிருந்து நாரையெடுத்து, அநேக காரியங்களுக்கு உபயோகிப்பதுண்டு. மடலை வதக்கி, காதுவலிக்கிப் பிழிவது நாட்டுவழக்கம்.

——— (MELANTHACEÆ.)

கால்சிகம்

கால்சிகம்புண்டு.—Colchicum Autumnale ; Officinal Colchicum or Meadow Saffron.

கால்சிகம் கிழங்கு.—Colchici Carmus

கால்சிகம் விதை.—Colchici Semina.

செய்கை.—சீமையில் விளைகிற இந்தப் பூண்டின் கிழங்குக்கும், விதைக்கும் விரேசன, வமன, மூத்திரவார்தன, சமன ஆகிய இக்குணங்களுண்டு; அதிகமானால் விஷமிக்கும். Cathartic; emetic; diuretic and sedative.

உபயோகம்.—கீல்வாதரோகத்துக்குக் கொடுக்க இது நல்லமருந்து; ஆனால் சாக்கிரதையாயும், மிதமாயும் கொடுக்கவேண்டியது. நீர்க்கொவை, பிரமேகம், மஞ்சள்காமாலை, மலபந்தம், காசரோகம், கக்கிருமல், ரோகம், அக்கி ஆகிய இவைமுதலிய வியாதிகளுக்கும் கொடுத்துக்கொண்டு வருவதுண்டு. In gout, rheumatism, gonorrhæa, Jaundice, constipation, chronic bronchitis, hooping cough, erysipelas, &c.

மாத்திரை.—கிழங்கின் சூரணத்தில் 2-8 கிறேன் வீதம் தினத்துக்கு 3-முறை, வாசனைப் பொடிகளோடு சேர்த்துக் கொடுக்கலாம். Dose.—2-8 grs.

காலசிகம் சத்து.—(எகிஸ்டிராக்ட் ஆவ் கால்சிகம், Extract of Colchicum; Extractum Colchici.) கிழங்கின்ரசத்தைச் சுண்டவைத்தெடுக்கிற, இதில், ½-2 கிறேன் வீதம், 4-6 மணிக்கொருதரம் கொடுக்கலாம். Dose.—½-2 grs. every 4-6 hours.

கால்சிகம் ஒயின்.—(ஒயின் ஆவ்கால்சிகம், Wine of Colchicum, Vinum Colchici.) 4-ஔன்ஸ் கால்சிகம் கிழங்கை, 1-பைன்ட் ஷெரி ஒயின் என்னும் சாராயத்தில் 7-நாள் ஊறவைத்து வடிகட்டி யெடுத்துக் கொள்ளுகிற இதில், 10-30, மினிம், திரிகாலக்கிரமமாய்க் கொடுக்கலாம். Dose.—10-30 minims.

கால்சிகம் விதை பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் கால்சிகம் ஸீட்ஸ், Tincture of Colchicum Seeds; Tinctura Colchici Seminum.) செய்முறை.—இடித்த கால்சிகம் விதை, 2½-ஔன்ஸ்; புரூவ்ஸ்பிரிட் சாராயம், 1-பைன்ட் பெர்க்கொலேஷன் முறையாகச் செய்துகொள்ளவேண்டியது. மாத்திரை.—10-30 மினிம் வீதம் திரிகாலக் கிரமமாய்க் கொடுக்கலாம். (Colchicum Seeds, 2½ ozs.; Proof Spirit, 1 pint.) Dose.—10-30 minims

தென்னமரத்தினம்—(PALMACEÆ.)

(NON-OFFICINAL.)

தெங்கு.—தென்னமரம். తెంకాయచెట్టు. (Cocos nucifra, Cocoanut Tree.)—இது மெத்த உபயோகமான மரம்; நீக்கிவிடும்படியான பொருள். இதிலொன்றுமில்லை. தெங்கில் பலசாதிகளுண்டு. தேங்காயின் பிரயோசனம் சகலருக்கும் பிரசித்தமாய்த் தெரியுமாதலால், இவ்விடத்திலுரைப்பது அனுவசியமாகும். போஜனத்துக் குபயோகமாகிற தேங்காயையாட்டி எடுக்கிற தேங்காயெண்ணெயானது (Cocoanut Oil) புதுசாயிருந்தால், தெளிவாய், இளமஞ்சள் நிறமாய், வாசனையில்லாமலிருக்கும்; கொஞ்சநாட்சென்றால், பழுப்பேறி காரலெடுத்துவிடும். சீதகாலத்தில், தேங்காய் எண்ணெயுறைந்து கட்டியாகிவிடும். எள்ளெண்ணெய், வேர்க்கடலையெண்ணெய் ஆகிய இவைகளைப் பார்க்கிலும், இந்த எண்ணெயானது, குணத்தில் தாழ்ச்சியானபோதிலும், சீமை எண்ணெய்க்குப்பதில், தைலங்களுக்கும், களிம்புகளுக்கும், ரணங்களுக்கும், உபயோகிக்கலாம். இதற்கு ரோமத்தை வளர்க்கிற குணமிருக்கிறதாய் யோசனை. சுரம் முதலிய வியாதிகளில் சிரோரோமம் விழுந்துவிடுவதற்கு, தெங்கின் எண்ணெயைத் தலைக்குத் தடவிக்கொண்டு வருவதுண்டு. இந்த யெண்ணெயிலிருக்கிற சத்து உரையும். இங்கிலீஷ் வைத்தியர்கள் மீன் எண்ணெய்க்குப்பதில் இதை க்ஷயரோகத்துக்குக் கொடுத்துப் பரீக்ஷித்ததுண்டு. 53-ரோகிகளுக்குக் கொடுத்துப்பார்த்ததில், 34-பேருக்கு மெத்த சவுக்கியமுண்டானதாயும் 8-பேருக்கு அந்த வியாதி ஏற்றக் குறைச்சலில்லாமல், ஒரு ஸ்திதியிலிருந்ததாயும், மற்ற 11-பேருக்கு, அதிக்கிரமித்ததாயும் கண்டிக்கிறது. மீனெண்ணெயைப்போல் இதுவும் தேகபளுவை அதிகப்படுத்துகிறதாம். வயிற்றின் சுகத்தைக் கெடுத்து, பேதியை யுண்டாக்குவதே இதிலிருக்கிற துற்

குணம். தேங்காய்ப்பாலில், 4-அல்லது, 8-ஔன்ஸ் அளவுக்குத் தினம் 2 - 3 - ஆவர்த்தி, தூர்ப்பலம், க்ஷயரோக ஆரம்பம், மேககாங்கை ஆகிய இவைகளுக்குக் கொடுத்து, சவுக்கியம் கண்டதுண்டு. காபிஜலத்தில் விடுகிற பாலுக்குப் பதில், தேங்காய்ப்பாலை விட்டுச் சாப்பிடலாம். குழந்தைகளுக்குக் கொடுக்க இது நல்லமுறை. தேங்காய்ப்பாலை அதிகமாய்ச் சாப்பிட்டால் வயிறிளகும், அல்லது பேதியாகும். சிற்றாமணக் கெண்ணெய்க்குப் பதில், இதைக் கொடுக்கலாமென்று ஒருவர் சொல்லுகிறார். வாய்ரணத்துக்கு, தேங்காய்ப்பாலைக் கொப்புளித்தால், சவுக்கியம் பிறக்கும். தெங்கின் மதுவை (கள்ளு- Toddy) அதிகாலையில் சாப்பிட்டால், வயிறிளகும், ஆரோக்கியமுண்டாகும். புளித்தக் கள்ளை அரிசிமாவில் விட்டு வேகவைத்துக் களிசெய்து, ரணங்களுக்குக் கட்டினால், தூர்வாசனை போய்விடும். கள்ளை வடித்துச் சாராயமும், புளிக்கவைத்துக் காடியும், காய்ச்சி வெல்லமும், (jaggery) உண்டாக்குவதுண்டு. இளநீருக்கு, மூத்திரத்தை யதிகப்படுத்துகிற குணமும் தாகம், பைத்திய சோபம், வமனம் ஆகிய இவைகளைச் சமனப்படுத்துகிற குணமும், தேக உஷ்ணத்தை மாற்றுகிற குணமுமுண்டு. செவ்விளநீர் சிரேஷ்டமானது. தென்னம்பூவில் துவர்ப்பு குணமுண்டு. பெரும்பாடு, ரத்தபித்தம், மேகம், சீதபேதி ஆகிய இவைகளுக்குக் கொடுக்கலாமென்று, தமிழ்நூற்களில் கண்டிருக்கிறது. தென்னம்பஞ்சை வெட்டுகாயம், அட்டைக்கடி ஆகிய இவைகளுக்குப் போட்டால் ரத்தம் நிற்கும்

பனை.—பனைமரம்.—తాటిచెట్టు. (Palmyra Palm ; Borassus flabelliformis.) கற்பகவிருக்ஷத்துக் கொப்பாகிய, பனைமரத்தின் பிரயோசனம், சகலருக்கும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இனிப்பாயிருக்கிற பனையின் மதுவை (பனங்கள்) (Toddy) பிரதிதினமும் அதிகாலையில் சாப்பிட்டால், விடாய்த் தணியும், மலம் இளகும் ; ஆனால் தெங்கின் மதுவுக்கு குணத்தில் இது தாழ்ச்சி. வெய்யிலேறினால், கள்ளு புளித்து அதிகவெறியைத் தரும். பனங்கள்ளை வாலையிலிட்டு வடித்தால், புரூவ் ஸ்பிரிட் என்னும் சாராயத்துக்குச் சமனாகும் ; அதைப் பாவனத்திரவங்கள் செய்முறையில் உபயோகிக்கலாம்; அரிசிமாவில் இந்தக் கள்ளைவிட்டுக் கிளறி, போல்டீஸ்செய்து அழிரணம், ராசபிளவை, ஆராதவிரணம் ஆகிய இவைகளுக்குக் கட்டினால், சவுக்கியம் உண்டாகும். கள்ளிறங்குகிற குடுவைக்குச் சுண்ணாம்பு தடவினால், கள்ளுக்குப் புளிப்பேறாது ; அதனைப் பதனி, அல்லது பனஞ்சாறு என்று சொல்லுவர். பனஞ்சாற்றுக்குப் பிரமேகம் வசப்படும். பனங்கள்ளைக் காய்ச்சி, உலர்த்தி யெடுக்கிற வெல்லம், லேகியங்களுக்கும், மருந்துகள் அனுபானத்துக்கும் உதவும். பனாற்கற்கண்டுக்கு, தாகம், வெப்பம், நீர்ச்சுருக்கு, மேகம் ஆகிய இவைகள் போமென்று தமிழ்நூற்களில் காணலாம். பனம்பழம், பனங்கிழங்கு ஆகிய இவைகள் தேக சவுக்கியத்தைக் கெடுக்கும். பனைநுங்கு தேகத்துக்குக் குளிர்ச்சி. பனம்பஞ்சை காயங்களுக்குப் போட்டால், ரத்தம் நிற்கும்.

கூந்தற்பனை.—(Caryota urens; Bastard Sago Tree.)—கூந்தற்பனையிலிருந்தெடுக்கிற கள்ளும், வெல்லமும், உபயோகமாகிறது. கள்ளை வடித்தெடுக்கிற சாராயத்தை மருந்துகள் செய்ய உபயோகிக்கலாம். மரத்துக்குள்ளிருக்கிற சோற்றை, ஒருவித சவ்வரசிசெய்கிறார்கள். காலையில் இந்தக் கள்ளில் ஒரு மொந்தை குடித்தால், மலம் இளகும்.

கமுகு.—பாக்குமரம். ಪೋಕ ಚೆಟ್ಟು. (Betel Nut or Areca Palm; Areca Catechu.) நமது தேசத்து ஜனங்கள் தாம்பூலத்துடன் உபயோகிக்கிற பாக்கில் துவர்ப்பு சத்துகளுண்டு. (Tannic and Gallic Acids) பாக்கை வேகவைத்து எடுக்கிற பதார்த்தத்துக்கு, கத்தக்காம்பு என்றுபேர், (The Betel Nut Catechu) அதைக் காசுக்கட்டிக்குப் பதிலாய் அதிசார பேதிக்குக் கொடுக்கலாம். கொட்டைப்பாக்கைக் சுட்டுச் கரிசெய்து தூளாக்கி பல்துலக்கினால் நல்லது. கொட்டைப்பாக்குத்தூளில், 10-15 கோதுமை எடைக்கு, 3-4 மணி நேரத்துக் கொருதரம் கொடுத்துக்கொண்டு வந்தால், துர்ப்பலத்தாலெடுத்த பேதி சவுக்கியப்படுமென்று கண்டிருக்கிறது. பாக்குப்பட்டையை எலும்பு முறிவுக்கு, ஒன்றும் அகப்படாதபோது வைத்துக்கட்டலாம்.

வசம்பு இனம் (AROIDEÆ,)

(NON-OFFICINAL.)

வசம்பு.—ವಸ. (Sweet Flag; Acorus calamus.) நமது நாட்டில் சாதாரணமாய் உபயோகிக்கிற ஒருவித வேரின் தண்டாகிய இந்த திவ்விய சரக்குக்கு, ஜாடராக்கினி, தேகதாருட்டியம் இவைகளை வர்த்திப்பிக்கிற குணம் இருக்கின்றது. வயிறு வீரத்து உபத்திரவம் செய்கிற மந்தாக்கினி, விஷ-சிரோகம்போல் காணுகிற மந்தபேதி, சூலை ஆகிய இவைகளுக்குக் கொடுத்தால் சவுக்கியம் உண்டாகும். முறைக்காச்சலுக்கு, வசம்பைக் களிச்சிப்பரும்பு, நிலவேம்பு இவைகளுடன் சேர்த்துக் கொடுத்துப் பிரயோஜனம் கண்டதுண்டு. க்ஷீணசுரங்களுக்குக் கொடுக்கிற மருந்துகளோடு இதையும் சேர்த்துக்கொடுக்கலாம். உஷ்ணித்து வியர்வையைப் பிறப்பிக்கிற குணமுமுண்டு. வாதநோய்களுக்கு, வசம்பைச் சாராயம் விட்டரைத்துப் பூசச் சவுக்கியம் உண்டாகும்; எண்ணெயில் கலந்து சொறி சிரங்குகளுக்குப் பூசலாம். குன்மம், வாய்நாற்றம், காசம், கிருமி இவைகளுக்குங் கொடுக்க நல்ல மருந்தென்று, தமிழ்நூலில் கண்டிருக்கின்றது. வசம்பு சூரணத்தில், ஒரு வேளைக்கு, 20-40-கிறேன் எடையாவது, அல்லது இன்னம் அதிகமாயாவது கொடுக்கலாம்; ஆனால் வெந்நீர் ஊறல் கஷாயம் செய்துகொடுப்பதே நல்லமுறை. அதற்கு, 10-ஔன்ஸ் வெந்நீரில், 1-ஔன்ஸ் வசம்பை இடித்துப்போட்டு ஊறவைத்து வடிக்கட்டிக் கொள்ளவேண்டியது.

யானைத்திப்பிலி.—அத்தித்திப்பிலி. ಪಿಡುಗಪಿಪ್ಪಳಿ, ಗಜಪಿಪ್ಪಳಿ. (Scindapsus (Pothos) officinalis.) இந்தச் சரக்குக்கு உஷ்ணிக்கிற குணமும், வியர்வையைப் பிறப்பிக்கிற குணமும், கிருமியைப் போக்குகிற குணமுமுண்டென்று, செப்பியிருக்கின்றது. வாதம், கரப்பான், சுரம், நீர்ப்பீநசம், இரைப்பு ஆகிய இவைகளுக்குக் கொடுக்கலாமென்று, சிந்தாமணியில் காணலாம்.

சேமை.—சேம்பு. சேம்பை. ಚಾಮಗಡ್ಡೆ. (Colocasia antiquorum.) சாதாரணமாய்ப் புசிக்கிற சேப்பன்தண்டு அல்லது மட்டையின் ரசத்துக்கு, ரத்தைத்தை நிறுத்துகிற குணம் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். காயங்களுக்குப்போட்டால் உதடுகள் ஒட்டிக்கொண்டு, சீக்கிரத்தில் உலர்ந்துவிடுமாம். சேப்பங்கிழங்குக்கு, குழகுழப்பு இருப்பதால், வீக்கங்களுக்கும், கட்டிகளுக்கும் வைத்துக்கட்டலாம்.

கருணைக்கிழங்கு.—కంద గడ్డ. Typhonium orixense. காரலுடைய இந்தக் கிழங்கைச் சதைத்து கட்டிகள் கரை கட்டுவதுண்டு.

காட்டுக்கருணை.—కానకంద. (Dracontium polyphyllum.) இதற்கும், இந்த இனத்தைச்சார்ந்த கிழங்குகளுக்கும் பச்சையில் காரகாரப்புண்டு; மேலுக்குப்போட்டால் உஷ்ணிக்கும், தோல் சிவக்கும்; இது முளைமூலத்தைப் போக்குமென்று சிந்தாமணி சொல்லுகின்றது.

கோரையினம் (CYPERACEÆ.)

(NON-OFFICINAL)

கோரை.—முத்தக்காசு, பாதாளமூலம். బద్రతుంగ. (Cyperus rotundus.) இதன் கிழங்குக்கு, உஷ்ணிக்கிறகுணமும், வியர்வையைப் பிறப்பிக்கிற குணமும், மூத்திரத்தை அதிகப்படுத்துகிற குணமும், துவர்ப்பு குணமும், கிருமியைப் போக்குகிற குணமும், தேகதாருட்டியம் கொடுக்கிற குணமுமுண்டென்று கண்டிருக்கின்றது. சீதசுரத்துக்கு இதைக் கஷாயமிட்டுக்கொடுத்தால், வியர்வை பிறக்குமென்றும், மந்தாக்கினி, பேதி, சீதபேதி ஆகிய இவைகளுக்கு நமது நாட்டோர் கொடுப்பது வழக்கமென்றும் கண்டிருக்கின்றது. கொட்டிக்கிழங்குக்கும், சுவேத மூத்திரவர்த்தன குணங்களுண்டென்று யோசனை; ஆனல் இவ்விரண்டும் அற்பச்சரக்குகள்.

தான்னிய இனம். (GRAMINEÆ.)

எர்கட்

ஷை தானியம் விளைகிற பயிர்.—Common Rye; Secale Cereale.

எர்கட் என்னும் தான்னியம்.—ఎర్గట్. Ergot; Ergota.

விவரணம்.—இந்த அரிசியானது கோதுமைப்போல், கபிலை நிறமாய் இருக்கும்; தூள் செய்தால் வாசனை அதிகமாகும்; காற்றுப்பட்டால், பூரணம் கொள்ளும்; அரிசியில் சிறு பூச்சிகள் உண்டாகி, மத்தியத்திலிருக்கிற பதார்த்தத்தை அரித்துவிடும்; அதனோடு ஒளஷதகுணம் போய்விடும். இந்த மருந்தைக் கல்லடைப்புள்ள குப்பியில்வைத்து சாக்கிரதையாய்ச்சூக்ஷிக்கவேண்டியது.

செய்கை.—பிரசவகாரி, ருதுவர்த்தனி; சங்கோசனகுணமுண்டென்றும் கண்டிருக்கின்றது. இந்தமருந்தை விடாமல் சாப்பிட்டால், தேகத்தைக்கெடுத்து அழிரணம், இசிவு, சன்னி இவைகளைப் பிறப்பிக்கும். Parturifacient, emmenagogue, astringent.

உபயோகம்.—இந்த மருந்துக்குக் கருப்பையைச் சுருங்கச்செய்கிற குணம் இருக்கிறதினல், பிள்ளைப்பேறில், பிரசவவேதனை மந்தமாகி, சிசுவாவது அல்லது நஞ்சாவது வெளிப்பட தாமசிக்கும்போது, இதைக்கொடுத்து வெளிப்படும்படிச்செய்வது, இங்கிலீஷ்வைத்தியத்தில் வழக்கமாகிவிட்டது; இதைக்கொடுத்தால் வேதனையைப் பிரபலப்படுத்தி, கருப்பாசயத்துக்குள்ளிருப்பதைச் சீக்கிரத்தில் வெளிப்படுத்திவிடும். இதைக் கொடுக்கும்போதெல்லாம், குழந்தை இறந்து ஜனிப்பது வழக்கம். இது வேதனையைப்

பிறப்பிக்காது, மந்தவேதனையைப் பிரபலப்படுத்தும். ஸ்திரீ பிரஸவவேதனைப்படும்போது காணுகிற பெரும்பாடுக்கு, இதைக் கொடுக்க உதவும். சூதகக்கட்டு, வெள்ளைவிழுதல், சூதகப்பாண்டு, கருப்பை தடித்துப்போகுதல், மூத்திரப்பையின் பலம் குறைந்தாவது அல்லது மூத்திரப்பை ஸ்தம்பித்தாவது காணுகிற நீரடைப்பு, சொட்டுமூத்திரம், பிரமேகம், தந்திமேகம், சொப்பனஸ்கலிதம் ஆகிய இவைகட்குக், கொடுத்துப் பிரயோஜனம் கண்டதுண்டு.—In lingering labours and retention of placenta; it has also been employed with benefit in amenorrhœa, leucorrhœa, chlorosis, atonic menorrhagia, hypertrophy of the uterus, retention of urine, incontinence of urine, gonorrhœa, gleet and spermatorrhæa

மாத்திரை.—பிரசவவேதனை அதிகப்பட புதுசாய்ச்செய்த தூளில், 20-30-கிறேன் கொடுக்கலாம்; ஒருவேளை தேவையிருந்தால் 20-30-நிமிஷம் சென்றபிறகு, 1-2-ஆவர்த்தி மறுபடியும் கொடுக்கலாம். மற்ற ரோகங்களுக்கு, 4-6-கிறேன் எடைக்கு, தினத்துக்கு 2-3-தடவை கொடுக்கவேண்டியது. 20-30-grs. as a parturifacient; 4-5-grs. twice or thrice daily, as an emmenagogue and astringent.

எர்கட் என்னும் தானியத்தின் ஊறல் கஷாயம்.—(இன்பியூஷன் ஆவ் எர்கட். (Infusion of Ergot; Infusum Ergotæ.) செய்முறை.—சதைத்த எர்கட் என்னும் அரிசி, $\frac{1}{4}$-ஔன்ஸ்; வெந்நீர், 10-ஔன்ஸ். மூடி $\frac{1}{2}$-மணிநேரம் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-2-ஔன்ஸ் வீதம், தூளுக்குச் சொன்னபிரகாரம் கொடுக்கலாம். அவசியமானபோது இந்தக் கஷாயம் செய்துகொள்ளவேண்டியது. (Ergot $\frac{1}{4}$ oz.; Boiling Water 10 fozs.) Dose.—1-2-fozs.

எர்கட் என்னும் தானியத்தின் பாவனத்திரவம்.—(டிங்சர் ஆவ் எர்கட். (Tincture of Ergot; Tinctura Ergotæ.) செய்முறை.—சதைத்த எர்கட் என்னும் தானியம், 5-ஔன்ஸ்; புரூவ் ஸ்பிரிட் என்னும் சாராயம், 1-பயின்ட்; பெர்கொலேஷன் முறையாய்ச் செய்துகொள்ளவேண்டியது; மாத்திரை.—10-மினிம் முதல், 1-திராம். (Ergot, 5 ozs.; Proof Spirit, 1 pint.) Dose.—10-minims to 1 fdr.

பார்லி, கோதுமை, அரிசி ஆகிய இவைகளிலும் சொத்தை தானியம் காண்பதுண்டு. சொத்தை விழுந்த பார்லி அரசியைத் தின்றால் விஷமிக்குமென்றும், சொத்தை விழுந்த கோதுமைக்கு, பிரசவகாரி செய்கை அதிகமென்றும், கண்டிருக்கின்றது. மந்தப் பிரஸவவேதனைக்கு, சொத்தை அரிசியைக்கொடுத்துப் பரீக்ஷிக்கலாம்; ஒருவேளை பிரசவகாரி குணம் இருந்தாலுமிருக்கும்.

பஞ்சதாரை

கரும்பு.—చెరకు. Saccharum officinarum; The Sugar cane.

பஞ்சதாரை.—சருக்கரை. పంచదార. கேன் சுகர், Pure Cane Sugar; Saccharum Purificatum. Refined Sugar.

வெல்லம்.—బెల్లము. ட்ரீகில், Treacle; Theriaca; Molasses.

உபயோகம்.—வினிக்த, போஷன ஆகிய இக்குணங்களுண்டு; வெகுட்டலுடைய மருந்துகளோடு இதைச் சேர்த்து இனிப்புண்டாக்கப்படும்.

பாணிதம் அல்லது பாகு, லேகியங்கள், பில்லைகள் ஆகிய இவைகள் செய்முறைகளில் சேறுகிறது. மெழுகு பதமாகச் செய்கிற மருந்து முறைகளுக்கு, வெல்லம் சேர்ப்பதால், மாத்திரைசெய்யப் பதமாகி இளகலாகவே இருக்கும். பூரணம் பிடியாது; சிலதில் மருந்துகள் முறியாமற்செய்யும் பஞ்சதாரைக்கும, வெல்லத்துக்கும், அற்பமருந்து குணமுண்டு.

ஷர்பத். ரஸாயனம். பாணிதம், சருக்கரைப்பாகு, (ஸிரப், Syrup; Syrupus.) செய்முறை.—பஞ்சதாரை, 5-பவுன், ஜலம், 2-பைன்ட். அக்கினியில்வைத்து பஞ்சதாரையைக் கரைத்துக்கொண்டு, குளிர்ந்தபிறகு, $7\frac{1}{2}$-பவுன் எடைக்குத் தேவையான ஜலம் விட்டுக்கொள்ளவும். முக்கியமாய் இனிப்புக்கு, இதைமருந்துகளோடு சேர்க்கப்படும். (Refined Sugar 5 ℔.; Water 2 pints)

பார்லி அரிசி

பார்லிபயிர்.—Common or Long Eared Barley; Hordeum Distichon.

பார்லிஅரிசி.—ಬಾರ್ಲಿಬಿಯ್ಯಮು. பெரல் பார்லி. Pearl Barley; Hordeum decorticatum.

செய்கை. உபயோகம்.—ஸினிக்தகாரி. ரோகிகளுக்கு இதைக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கப்படுகின்றது.

பார்லி கஷாயம், அல்லது கஞ்சி.—(டிகாக்ஷன் அவ் பார்லி, Decoction of Barley, Decoctum Hordei.) செய்முறை.—பார்லி அரிசி, 2-ஔன்ஸ்; ஜலம், $1\frac{1}{2}$-பைன்ட். அரிசியை ஜலத்தில் கழுவி நீரை யிறுத்தி விட்டு, கழுவிய அரிசியை ஜலத்திலிட்டு மூடி, 20-நிமிஷம் காய்ச்சி, வடித்துக்கொள்ளவேண்டியது. உபயோகம்.—இந்த சலத்தை, சுரத்தில் தாகத்தைத் தணிக்கவும், இருமலை சமனப்படுத்தவும், பிரமேகத்தில் மூத்திரத்தரிப்பைக் கண்டிக்கவும் உபயோகப்படுத்தலாம். பளுவான சூரணங்களை இதில் கலக்கிக்கொடுக்கலாம். தேவையானவரையில் இந்தநீரைக் குடிக்கலாம். (Barley, 2 ozs.; Water $1\frac{1}{2}$ pint.)

கோதுமை

கோதுமை.—గోధుమ. காமன் வீட் Common Wheat; Triticum Vulgare.

கோதுமை மாவு.—గోధుమపిండి. விடன பளவர் Wheaten; Flour Tritici Farina.

செய்கை. உபயோகம்.—ஸினிக்தகாரி, போஷணி. அக்கி, தாபிதம், நெருப்புபட்டவிடம், பீத்தோல் உரிந்துபோனவிடம் ஆகிய இவ்விடங்களில் கோதுமைமாவை பூசினால், எரிச்சல் தணியும். ரசம், தாம்பிரம், நாகம், வெள்ளி, தகரம் முதலியவைகளில் உண்டாகிற மருந்துகள், ஐயோடைன் ஆகிய இவைகளை விஷமிக்கும்படிச் சாப்பிட்டதற்கு கோதுமை மாவை ஜலத்தில் கரைத்துக்கொடுத்தால், முறித்துவிடும். கோதுமை மாவைக் களிசெய்து கட்டிகளுக்கு வைத்துக் கட்டலாம். கோதுமை

ரொட்டி மாத்திரை செய்வதற்கு உபயோகமாகிறது. அதை பாலிலாவது, ஜலத்திலாவது ஊறவைத்துப் பிசைந்தால் நல்ல போல்டீஸ் ஆகும். Demulcent nutritive.

கோதுமைப்பசை.—(மியூசிலேஜ் ஆவ் ஸ்டார்ச், Mucilage of Starch; Mucilago Amyli.) (செய்முறை.—சோதுமைமாவு, 2-டிராம்; ஜலம், 10-ஔன்ஸ். மாவில் ஜலத்தைக் கொஞ்சங்கொஞ்சமாய் விட்டு அரைத்து, பிறகு துழவிக்கொடுத்து கொதிக்கவைக்கவேண்டியது. உபயோகம்.—வினிக்தகாரி, சீதபேதி முதலிய ரோகங்களுக்கு, வஸ்திசெய்ய இது நல்லது.

அரிசி

நெற்பயிர்.—Oryza Sativa; Common Rice.

அரிசி.—బియ్యము. ரைஸ், Rice; Oryza.

அரிசிமாவு.—బియ్యపుపిండి. ரைஸ் பிளவர். Rice flour, Oryza Farina.

செய்கை. உபயோகம்.—கோதுமை மாவுக்குச் சொன்னதே இதற்கும் உண்டு நமது நாட்டில் இது எளுப்பத்தி லகப்படுகிறபடியால், இதை உபயோகித்துக்கொள்ளலாம்.

கஞ்சிதண்ணீர்.—(டிகாக்ஷன் ஆவ் ரைஸ், Decoction of Rice; Decoctum Oryzæ.) செய்முறை.—அரிசி, 1-ஔன்ஸ்; ஜலம், 2-பைன்ட். 40-நிமிஷம் காச்சி, வடித்துக்கொள்ளவேண்டியது. உபயோகம்.—சுரம், தாபிதம், நீர்க்கடுப்பு முதலிய வியாதிகளுக்கு, உஷ்ணத்தைத் தணிப்பிக்க இதைக் கொடுக்கலாம்; எலுமிச்சம்பழரசமும், சருக்கரையும் சேர்த்துக் கொண்டால், வெகு இஷ்டமா யிருக்கும். (Rice, 1 oz.; Water, 2 pints.)

அரிசிமாவுக்களி. போல்டீஸ். (Poultice of Rice; Cataplasma Oryzæ.) செய்முறை.—தேவையான அரிசிமாவை, எடுத்துக்கொண்டு சட்டியிலிட்டு அடுப்புமேலேற்றி கொஞ்சமாக ஜலம்விட்டு அடிக்கடி கிளறிக் கொடுத்து, பதத்துக்கு வேகவைத்துக் கொள்ளவேண்டியது. உபயோகம். இங்கிலீஷ் வைத்தியத்தில் உபயோகிக்கிற, லின்ஸிட்மாவின் போல்டீஸ்க்குப் பதிலாக இதைக் கட்டிகளுக்கும், ரணங்களுக்கும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

சுக்குநார்ப்புல்லு

சுக்குநார்ப்புல்லு. சம்பாரப்புல்லு. வாசனைப்புல்லு. Andropogon (Cymbopogon) Citratum; Lemon Grass.

சுக்குநார்ப்புல்தயிலம். నిమ్మగడ్డినూనె. லெமன்கிராஸ் ஆயல். Lemon Grass Oil; Oleum Andropogi Citrati. Oil of Verbena.

செய்கை. உபயோகம்.—பச்சைப் புல்லை வாலையிலிட்டு வடித்தெடுக்கிற தயிலத்துக்கு உஷ்ணகாரி, கர்ப்பவாதஹாரி, அங்காகர்ஷண நாஸகாரி, சுவேதகாரி ஆகிய இக்குணங்களுண்டு; மேலுக்குப்போட்டால் சூடுண்டாகும். Stimulant, carminative, antispasmodic and diaphoretic; locally applied rubefacient.

உபயோகம்.—வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, வாந்தி இவைகளுக்கு இது எடுத்த மருந்து. வாந்திபேதிக்குக் கொடுத்தால், வாந்தியை நிறுத்தும், சூட்டைப் பிறபிக்கும். நாள்பட்ட கீல்வாதம், வாதநோய், சுளுக்கு முதலிய வேதனைகளுக்கு இதைப் பூசித்தேய்க்கலாம். In flatulency, vomiting and cholera; externally, in chronic rheumatism, neuralgia, sprains, &c.

மாத்திரை.—3-6-துளி சருக்கரையில் விட்டுக்கொடுக்கலாம். 1-பங்குக்கு, 2-பங்கு தெங்கெண்ணெயைச் சேர்த்து, தயிலமாக்கிப், பூசலாம். Dose.—3-6 drops.

காமாக்ஷிப் புல்லு

காமாட்சிப்புல்லு காவட்டம்புல்லு. కామాక్షికసువు. Andropogon (Cymbopogon) Nardus, Citronelle.

௸ புல்லின் தயிலம். (Oil of Citronelle.)

இந்தத் தயிலத்துக்கும், மேற்சொன்ன தயிலத்தின் குணங்களுண்டு; அதைக் கொடுக்கிற ரோகங்களுக்கு இதைக் கொடுக்கலாம்.

(NON-OFFICINAL.)

வெட்டி. விலாமிச்சு. இலாமிச்சு. వెట్టివేరు. కురువేరు.(Andrapogon muricatus; Kus-kus grass.)—பரிமளமுடைய வெட்டிவேருக்கு வாதரோகங்களைக் கண்டிக்கிற குணமும், வியர்வையைப் பிறப்பிக்கிற குணமும், மூத்திரத்தை வர்த்திப்பிக்கிற குணமும்,சூதகத்தைக் கிரமப்படுத்துகிறகுணமும் உண்டென்று நமது நாட்டில் புகழுகிறதுண்டு, ஆனால் அற்ப உஷ்ணசுவேதகாரி குணத்துக்கு மிஞ்சின குணம் யாதொன்றும் காணப்படவில்லை. வெட்டிவேர்ச்சூரணத்தில் 20-கிரேன் எடை, ஒரு வேளைக்குக் கொடுக்கலாம்; அல்லது வேரை வெந்நீர் ஊறல்கஷாயமாகச்செய்து (வேர், 2-திராம்; வெந்நீர், 10-ஔன்ஸ்) 1-2 ஔன்ஸ் வீதம் கொடுப்பதுண்டு. சுரத்துக்குக் கொடுத்தால், தாகமடங்கி சவுக்கியமுண்டாகும்; வாதரோகத்துக்கும் கொடுக்கலாம். இந்த வேருக்கு மேற்கண்டபிரகாரம் ரோகங்களைக் கண்டிக்கிற செய்கை இருக்கிறதென்று யோசிக்கலாகாது. முடித்தயில முறைகளில் வெட்டிவேர் சேருகிறது. வெட்டிவேறை அரைத்துப் பாலிற் குழப்பிச் சொறிசிறங்கு, நமைச்சல் முதலிய சருமரோகங்களுக்குப் பூசலாம்.

மூங்கில். వెదురు. (Bambusa arundinacea; Bamboo.).—லோகரக்ஷகர் மனிதனுக்கு அளித்திருக்கும் வஸ்துக்களில், அற்பப்பொருளாகிய மூங்கிலைப்போல் வேறொன்றும் நமக் குபயோகப்படுகிறதில்லை. மூங்கில் இலைக்கு கருவை யழிக்கிறகுணமும், சூதகத்தை வெளிப்படுத்துகிற குணமும் உண்டென்று நமது நாட்டோருக்கு எண்ணம்; மருந்தின் குணம் இந்த இலைக்கு ஒன்றுமில்லை. குதிரை வைத்தியர்கள், இதை அதிகமாய்க் கையாடுகிறதுண்டு. எலும்பு முறிவுக்கு, மூங்கிலை மனதுக்கேற்றபடி பத்தைகளாக்கிவைத்துக் கட்டலாம், லேசாயிருக்கும்; மூங்கிலுப்பு—వెదురుప్పు. త్వక్షీర. (Tabashir or Tabasheer).—மூங்கிலின் கணுக்களில் உண்டாகிற இந்த உப்புக்கு, உஷ்ணிக்கிற குணமும், வீரயவர்த்

தன குணமும் உண்டென்று நமது நாட்டுவைத்தியர்கள் சொல்வதுண்டு. இங்கிலீஷ் வைத்தியர்கள் பரீக்ஷைசெய்து, இது அப்பிரயோஜன வஸ்துவென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

சோளம். జొన్నలు. (Sorghum Vulgare; Great millet.)—அரிசிமாவுக்குப்பதில் இதின் மாவையும், கஞ்சியையும், ரோகச் சிகிச்சையில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

கேழ்வரகு. கேவுரு. తైదలు, రాగులు. (E?eusine coracana.) தரித்திராம்சையி லுள்ளவர்களுக்கு, மெத்த உபகாரமாகிற கேழ்வரகு மாவின் களியைக் கட்டிகளுக்கு வைத்துக் கட்டலாம்.

கம்பு కంబులు. సొజ్జ. సొజ్జలు. (Eleusine stricta.).—கம்பங்கூழில், பசுவின் தயிராவது, அல்லது மோராவது சேர்த்துக்கரைத்துக் காலையில் குடித்துக்கொண்டுவந்தால், குலையெரிவு தணிந்துவிடும். காபி, தேயிலைத் தண்ணீர் இவைகள் செய்கிற குணத்தைப்பார்க்கிலும் என்மணங்கு அதிக குணம் இதில் காணலாம்.

தெனை కొర్రలు. (Panicum Italicum; Italian millet.) தெனையரிசியைக் கஞ்சிகாய்ச்சி அதில் பால்விட்டு, நேயுற் றெழுந்தோர்களுக்குக் கொடுத்தால் இனிப்பாயும், லேசான ஆகாரமாயும் இருக்கும்,

அறுகம்புல். గరిక. (Cynondon dactylon.) அறுகம்வேரைக் கஷாயமிட்டு, தணிப்புக்குக் கொடுப்பதுண்டு.

கல்பாசியினம். (LICHENES)

(NON-OFFICINAL.)

கல்பாசி.—రాతిపాచి. (Parmelia perlata, and P. perforata; Lichen rotundatus).—கல்வின்மேல் படருகிற பாசிக்கு, மூத்திரத்தை அதிகப்படுத்துகிற குணமுண்டென்று யோசனை; நீர்க்கோவைக்கு, கற்பாசியை முதல் ஜலத்தில் வேகவைத்து, உரலில் இடித்து, போல்டீஸ் செய்து, இடுப்பில் வைத்துக்கட்டி சிகிச்சை செய்ததுண்டு; அதனால் மூத்திரம் அதிகமானதாயும், அநேகருக்குச் சவுக்கியம் உண்டானதாயும் கண்டிருக்கின்றது. இப்படிச்செய்து பிரயோசனமொன்று மடையவில்லையென்று ஒரு வைத்தியர் எழுதியிருக்கிறார். எதற்கும் இடுப்புக்கு வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, மேற்படி பாசியை வைத்துக்கட்டி பரீக்ஷை செய்துகொண்டு வரலாம்.

கடற்பாசியினம் (ALGÆ.)

கடற்பாசி

సముద్రపుపాచి. ஸிலோன் மாஸ், Ceylon Moss; Gracilaria Lichenoides and G. Confervoides.

செய்கை. உபயோகம்.—இலங்கை, இந்தியா இவைகளைச் சார்ந்த சமுத்திர தீரங்களில் அகப்படுகிற பாசிக்கு, வினிக்தகுணமும், தேகத்

தைப் போஷிக்கிற குணமுமுண்டு. இதைக் கஞ்சிசெய்து (அரைத்துச் சன்னமாய்த் தூள்செய்த கடற்பாசி, ¼-ஔன்ஸ்; ஜலம், 2-பைன்ட். 20-நிமிஷம் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும்.) நோயுற்றெழுந்தோருக்கும், குழந்தைகளுக்கும், அடிக்கடி கொடுக்கலாம்; சீக்கிரத்தில் ஜீரணமாகும்; சீதபேதி முதலிய வயிற்றுக்கடுப்புள்ள ரோகங்களுக்குக் கொடுக்க உதவும். ஜலத்துக்குப் பதில் பால் சேர்த்துக்கொண்டால், அதிக போஷணைக் கொடுப்பதுமன்றியில் வாய்க் கினிப்பாயுமிருக்கும். சன்ன லவங்கப்பட்டை முதலிய பரிமளவர்க்கங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். பாசித்தூளில் ½-ஔன்ஸ் பிரமாணம் சேர்த்துக் கஞ்சிசெய்து வடிக்கட்டிக் குளிர்ந்தால் மூக்குச்சளிபோல் இறுகிவிடும், அதில் ஒயின் சராயமும், சருக்கரையும், பரிமளதிரவியங்களும் சேர்த்து ரோகிகளுக்கும், குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்.

புளிக்கவைத்தும், வாலையிலிட்டு வடித்தும் எடுக்கிற பதார்த்தங்கள்.

Products of Fermentation and Distillation.

ஷெரி ஒயின்

షెరిఒయిన్. Sherry ; Vinum Xericum.

செய்கை. உபயோகம்.—ஸ்பெயின்தேசத்தில், கொடிமுந்திரி பழரசத்தைப் புளிக்கவைத்துச் செய்கிற இந்தச் சாராயத்துக்கு, உஷ்ணகாரி குணமுண்டு. தூர்பலம், க்ஷீணம் ஆகிய இவைகளுக்குக் கொடுக்கலாம்; மருந்து முறைகளிலும் சேருகின்றது.

பிராந்தி

బ్రాండి. Brandy; Spiritus Vini Gallici; spirit of French Wine.

செய்கை உபயோகம்.—பிரஞ்சு ஒயின் என்னும் சாராயத்தை வடித்தெடுக்கிற பிராந்தியின் குணம் உஷ்ணகாரி. மூர்ச்சை, தூர்ப்பலம் முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். Powerful, diffusible, stimulant.

பிராந்தி மிக்சர். (Mixture of the Spirit of French Wine; Mistura Spiritus, Vini Gallici.) செய்முறை.—பிராந்தி, கருவாப்பட்டை ஜலம், வகை-1-க்கு, 4-ஔன்ஸ்; 2-முட்டையின் மஞ்சள்கரு; சருக்கரை, ½-ஔன்ஸ். கருவை சருக்கரையோடரைத்து, பிறகு ஜலத்தையும் பிராந்தியையும் சேர்த்துக்கொள்ளவும் மாத்திரை.—1-2-ஔன்ஸ் கொடுக்கலாம். சுரத்தில் காணுகிற தூர்ப்பலத்துக்கும், ரத்தபித்தத்தில் காணுகிற தளர்ச்சிக்கும், இன்னும் தேகபலம் அதிகமாய்க்குறைந்துவிடுகிற ஸ்திதிகளுக்கும், கொடுக்க இது நல்லமுறை. (Brandy, Cinnamon Water, of each 4 fozs.; the Yolks of two Eggs; Sugar, ½ oz.) Dose.—1-2 fozs.

ஆல்கோஹல் என்னும் சாராயம்

ఆల్కొహాల్. Alcohol; Absolute Alcohol.

ரெக்டிபைட் ஸ்பிரிட் என்னும் சாராயத்துடன் சுண்ணம்பு சேர்த்து. வடித்தெடுக்கிற இந்தச் சாராயத்தின் தத்கனம், 0-795, ஆய் இருக்கும்

உஷ்ணத்தினால் எல்லாம் பறந்துவிடும் ; ஜலம் சேர்ந்தால் கலங்கலாகாது. மருந்து பரீக்ஷைக்குமாத்திரம் உபயோகப்படுத்தப்படுகிறது.

ரெக்டிபைட் ஸ்பிரிட் என்னும் சாராயம்

రెక్టిఫైడ్ స్పిరిట్. Rectified spirit; Spritus Rectificatus.

இதில், 100-க்கு, 16-பங்கு ஆல்கோஹால் உண்டு. புளித்த மதுரத் திரவங்களை வடித்து எடுக்கப்படுகின்றது. இதின் தத்கனம், 0-838, ஆய் இருக்கும். நீர் விட்டால் துல்லியமாயிருக்கும். டிங்சர் என்னும் பாவனத் திரவங்களை, இதனால் செய்துகொள்ளப்படுகின்றன.

புரூவ் ஸ்பிரிட் என்னும் சாராயம்

ప్రూఫ్ స్పిరిట్. Proof Spirit; Spiritus Tenuior. செய்முறை — ரெக்டிபைட் சாராயம், 5-பைன்ட்; நீர், 3-பைன்ட்; மிஸ்ரமித்துக்கொள்ளவும். இதின் தத்கனம், 0·920, ஆய் இருக்கும். செய்கை. உபயோகம்.— உஷ்ணகாரி; அதிகமானால் விஷமிக்கும்; 1-க்கு, 6-8-பங்கு ஜலம் சேர்த்து, துவாலையாக சுரம், தாபனம் முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். இதை உள்ளுக்குக் கொடுக்கிறதில்லை; பாவனத்திரவங்கள் செய்முறையில் சேருகிறது. தென்னங்கள்ளு, பனங்கள்ளு, பட்டைசாராயம் ஆகிய இவைகளிலிருந்து, ரெக்டிபைட் சாராயமும், புரூவ் ஸ்பிரிட் சாராயமும், சேகரித்துக்கொள்ளலாம் துர்வாசனையாய் இருப்பதால், இலுப்பைப்பூ சாராயம் உதவாது.

ஈதர்

ఈథర్. Ether; Æther; Sulphuric Ether; Æther Sulphuricus.

செய்கை.—ஆல்கோஹால் என்னும் சாராயத்திலிருந் தெடுக்கிற ஈதர் என்னும் திரவத்துக்கு, சர்வாங்க உஷ்ணகாரிகுணமும், அங்காகர்ஷண நாசகாரி குணமுமுண்டு. இதின் ஆவியை ஆக்ராணித்தால் சுமார்க்கமில்லாமல் போய்விடும். மேலுக்குப் போட்டுவைத்தால், தோல் சிவக்கும். Powerful, diffusible, stimulant, antispasmodic, anæsthetic, rubefacient.

உபயோகம்.—சுவாசகாசம், வயிற்றுவலி, வாந்திபேதியில் காணுகிற க்ஷீணம், நாள்பட்டசுரங்கள், இவைமுதலிய பலம் குறைவாகிற ரோகங்களுக்கெல்லாம் கொடுக்கலாம். குளோரோபாரம் என்னும் மருந்தைப்போல் இதை உபயோகித்தால் சுமாரகம் இல்லாமல் செய்யும். In asthma, spasmodic affections of the bowels, flatulent, colic, cholera, fevers, &c.

மாத்திரை.—20-60-மினிம் வீதம் ஜலத்தில் கலந்துகொடுக்கலாம். 20-60 minims.

ஸ்பிரிட் ஆவ் ஈதர். (Spirit of Ether ; Spiritus Ætheris.)—செய்முறை.—ஈதர், 10-ஔன்ஸ் ; ரெக்டிபைட் சாராயம், 1-பைன்ட் ; மிஸ்ரமித்துக்கொள்ளவும். மாத்திரை.—$\frac{1}{2}$-$1\frac{1}{2}$-டிராம் கொடுக்கலாம். Dose.—$\frac{1}{2}$ to $1\frac{1}{2}$ fdrs.

ஸ்பிரிட் ஆவ் நைட்ரஸ ஈதர்

స్పిరిట్ ఆఫ్ నైట్రస్ ఈథర్, Spirit of Nitrous Ether; Spiritus Ætheri Nitrosi; Spiritus Etheris Nitrici.

செய்கை.—இந்த திரவமருந்துக்கு உஷ்ண, சுவேத, மூத்திரவர்த்தன, அங்காகர்ஷண நாஸன ஆகிய இக்குணங்களுண்டு. Stimulant, diaphoretic, diuretic and antispasmodic.

உபயோகம்.—அற்பசுரம், கபரோகங்கள், சலதோஷம், மூத்திரத்தரிப்பு, நீர்க்கோவை ஆகிய இவைகளுக்குக் கொடுக்கலாம். முக்கியமாய்த் தகுதியான மருந்துகளோடுச்சேர்த்துக்கொடுப்பது வழக்கம் குமட்டலையும், வயிற்றுப்பொருமலையும் கண்டிக்கும். In fever, catarrh, coryza, dysuria, dropsy.

மாத்திரை.—½-2-டிராம் கொடுக்கலாம். ½-2-fdrs.

குளோரோபாரம்

క్లోరోఫారం Chloroform. Chloroformum.

செய்கை.—இதின் ஆவியை ஆக்கிராணித்தால், சுமாரகமில்லாமற் போகும்; உள்ளுக்குக் கொடுத்தால், நித்திராகாரி, சமனகாரி, அங்காகர்ஷண நாசகாரி ஆகிய இக்குணங்களைத்தரும்; தனியாய் மேலுக் குபயோகித்தால், தோல் சிவக்கும், எரிச்சலுண்டாக்கும்; ஏதாவது கலந்து தேய்த்தால், வேதனையைத் தணிக்கும். Anæsthetic; internally, narcotic, sedative, antispasmodic; externally, rubefacient; counter-irritant and anodyne.

உபயோகம்.—சஸ்திரவேலையில் வேதனைதெரியாமலிருக்கவும், பிரசவவேதனையைச் சமனப்படுத்தவும், அல்லது நிறுத்தவும், முட்டுவிலக்கலைத் தள்ளும்போதுச் சதைகளை தளர்ச்சிக்கவும், எலும்புமுறிவைச் சரிப்படுத்தும் போதும், நீரடைப்பில் சிலாக்கைவிடும்போதும், குளோரோபாரத்தை ஆக்கிராணிப்பிக்கலாம். இதை முகரவைக்கிற வியாதிகள் இன்னும் அனந்தமுண்டு. குமட்டல், வாந்தி, வயிற்றுவலி, இருமல் இவைமுதலியவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கலாம். கீல்வாதம், வேதனைகள், தேள்கொட்டல், சுளுக்கு ஆகிய இவைகளுக்கு, தயிலமாகச்செய்து மேலுக் குபயோகிக்கலாம். In surgical operations, &c.

மாத்திரை—3-10-மினிம் அளவுக்கு, விளாம்பிசினிப்பாகு, முட்டையின் மஞ்சட்கரு, சருக்கரைப்பாகு ஆகிய இவைகளில் எதிலாவது கலந்து கொடுக்கலாம். ஆக்கிராணிப்பிக்க, முதல் குறைந்த அளவில் ஆரம்பிக்க வேண்டியது. சுமார், 1-டிராமிருக்கலாம்; ஆவியோடு காற்றுச் செவ்வையாய் மிஸ்ரமமாகும்படிச்செய்து வெகு சாக்கிரதையோடும், அபாயம் நேரிடாமலும் முகரவைக்கவேண்டியது. எனது பதார்த்தகுண ரத்நாகரத்தில் இதைக்குறித்து விபரமாய்க் காணலாம். 3-10 min.

ஸ்பிரிட் ஆவ் குளோரோபாரம்.—(Spirit of Chloroform; Spiritus Chloroformi) செய்முறை.—குளோரபாரம், 1-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 19-ஔன்ஸ்; மிஸ்ரமித்துக்கொள்ளவும். மாத்திரை.—20-60-மினிம் கொடுக்கலாம். இதைக் குளோரிக் ஈதர் Chloric Ethor; என்று தப்பித

மாய்ச் சொல்லுவதுண்டு. இதற்கு உஷ்ணகாரி, வேதனை சாந்தகாரி, அங்காகர்ஷண நாசகாரி ஆகிய இக்குணங்களுண்டு. (Chloroform, 1 foz. ; Rectified Spirit, 19 fozs.) ; Dose.—20-60 minims.

குளோரோபாரத்தயிலம். (லினிமெண்ட் ஆவ் குளோரோபாரம், Liniment of Chloroform ; Linimentum Chloroformi.) செய்முறை.—குளோரோபாரம், சூடன்பூசுத்தயிலம், வகை 1-க்கு, 2-ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும். வேதனை, மூரட்டுவியாதிகள், கட்டிகள் முதலியவைகளுக்குப் போட இது திவ்விய ஔஷதம். (Chloroform and Liniment of Camphor, of each, 2 fozs.)

சீமைக்காடி

సిర్కా. కాడి. Vinegar Acetum Britanicum.

விவரணம்.—பார்லி அரிசியை ஜலத்திலிட்டு ஊறவைத்து, காடியாகப் புளிக்கச்செய்து பக்குவப்படுத்திக்கொள்ளுகிற காடியில், அஸிடிக் ஆசிட் என்னும் புளிப்புண்டு.

செய்கை.—சீதளகாரி, சமனகாரி, பூதிநாசகாரி. Refrigerant, sedative, antiseptic.

உபயோகம்.—ஜலத்தில் காடிவிட்டு கலந்து, சுரத்துக்கு உடம்புமேல் பூசலாம்; வீக்கங்களுக்கு துணியில் நனைத்திடலாம். வெந்நீர்விரணம், அக்கினிவிரணம், மார்ச்சிலந்தி, காயம், சுளுக்கு முதலியவைகளுக்கும் உபயோகிக்கலாம். ஆல்கெலீஸ் என்னும் காரங்களைத் தின்றுவிட்டால், இதை முறிவுக்குக் கொடுக்கலாம். மூலிகைகளின் விஷத்துக்கு, வாந்திக்குக் கொடுத்து அதை வெளிப்படுத்திவிட்டு காடியைக் கொடுக்கலாமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அபினிக்குமாத்திரம் உதவாது. தொண்டைவிரணத்துக்கு காடியை வெந்நீரில்விட்டு ஆவியை ஆக்கிராணிக்கலாம். In fever, inflammation, burn, scalds, bruises, sprains, poisoning by the alkalies, sore throat, &c.

மாத்திரை.—1-2 திராம், கொடுக்கலாம். ஒரு புட்டி ஜலத்தில், 1-2-ஔன்ஸ் காடியைவிட்டு இனிப்பேற்றி, சுரங்களில் தணிப்புக்குக் கொடுக்கலாம். கிலேதத்துக்கு, 1-க்கு இரண்டுபங்கு ஜலம்விட்டுக் கொள்ளவேண்டியது.—நமது தேசத்தில் தென்னங்கள்ளு, பனங்கள்ளு, கருப்புரசம் இவைகளிலிருந்து காடி சேகரிக்கப்படுகின்றது 1-2 fdrs.

அஸிடிக் ஆஸீட் என்னும் காடி

అసిటిక్ అసిడ్. Acetic Acid; Acidum Aceticum.

விவரணம்.—மரத்தைக் குழித்தயில முறையாய் எரித்து, இந்தக் காடியைச் சேகரிக்கப்படுகின்றது.

செய்கை. உபயோகம்.—காடிக்குடையதே இதற்குமுண்டு.

மாத்திரை.—5-15 துளி, ஜலத்தில் கலந்து கொடுக்கலாம். 5-15 drops.

விளாவின அஸிடிக் ஆஸிட்.—(டிலியூட் அஸிடிக் ஆஸிட், Dilute; Acetic Acid; Acidum Aceticum Dilutum.) செய்முறை.—அசிடிக் ஆசிட், 1-பைன்ட்; தீநீர், 8-பைன்ட். மிஸ்ரமித்துக்கொள்ளவும். மாத்திரை.—1-2 டிராம் கொடுக்கலாம். (Acetic Acid 1 pint; Distilled water, 7 pints.) Dose.—1-2 fdrs.

கார்போலிக் ஆசிட்

కార్బాలిక్ ఆసిడ్. Carbolic Acid; Acidum Carbolicum; Phenic Acid.

விவரணம்.—தாரின் தயிலத்திலிருந்து (Coal-tar Oil) எடுக்கிற இந்தப் பதார்த்தம், ஊசிக்கப்பிகளாய் வெளுத்திருக்கும்; சூடுபட்டால் காற்றிலிருக்கிற ஜலத்தைக் கிரகித்து எண்ணெய்போல் திரவமாகிவிடும். கிரியாசோட் என்னும் மருந்துக்குடைய வாசனையும், ருசியும், குணங்களும் இதற்குண்டு. ஜலத்தில் அற்பமாய் கரையும்; சாராயத்திலும், தேனிலும், கிளிசரீன் என்பதிலும், உடனே கரைந்துவிடும்.

செய்கை.—விரணஉஷ்ணகாரி; பூதி கந்த சாங்கிராமிக ரோகநிவர்த்தனகாரி குணங்களுமுண்டு. Escharotic stimulant, rubefacient, deodorizer and disinfectant.

உபயோகம்.—வாந்திநிற்க உள்ளுக்குக் கொடுக்கலாம். துஷ்டவிரணங்களுக்கும், நாள்பட்ட சருமரோகங்களுக்கும், சிரா பீனசத்தைப்போல் துர்வாசனையுடைய சீழ்வடிந்து கொண்டிருக்கிற ரணங்களுக்கும், இதை உபயோகிக்கலாம். In vomiting; locally in bad ulcerations, skin diseases, ozœna, &c.

மாத்திரை.—1-3 கிறேன் வீதம் அதிக ஜலத்தில் கலந்து உபயோகிக்க வேண்டியது. 1-3 grs.

(NON-OFFICINAL.)

மண்தயிலம். மண்ணெண்ணெய்.—మంటినూనె. (பீட்ரோலியம், Petroleum. Rock Oil.) பூமியிலிருந்து ஜனித்து ரங்கூன் முதலிய பிரதேசத்து ஏரிகளில் மிதக்கிறதைச் சேகரித்தெடுக்கிற இந்த தயிலம், கறுத்து வெல்லப்பாகைப்போல் ஓர்வித வாசனையோடிருக்கும்; இதற்கு குங்கிலியத்துக்கொத்த உஷ்ணகுணமுண்டு. 1-டிராம் வீதம், பிசினி கலந்த ஜலத்தில், கீல்வாதம், பிரமேகம் இவைகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மூத்திரவர்த்தனி குணமுண்டென்றும் தெரியவருகிறது. சருமரோகங்களுக்கு மேலுக்குத் தேய்க்க இது நல்லமருந்து, உள்ளுக்கும் கொடுக்கலாம். In rheumatism, gonorrhœa and skin diseases. Dose.—½ fdr.

ஜிவவர்க்க பதார்த்தங்கள்.

Animal Materia Medica

(in Tamtl)

அட்டை.

ஜலூ. லீச், LEEH ; ஹைருடோ, HYRUDO.

செய்கை. உபயோகம்.—எல்லோருக்கும் பிரசித்தமாய்த் தெரிந்த இந்த சீவனை தேகத்தின்மேற் கடிக்கவிட்டால், ரத்தத்தை உறிஞ்சிக்கொள்ளும் வீக்கங்களுக்கும், உள்வேதனைகளுக்கும், இதைக் கடிக்கவிட்டால், அந்த விடத்திலிருக்கிற அதிக ரத்தத்தை உருஞ்சிக்கொள்ளும். கையில் குத்தி ரத்தமெடுக்க உதவாதபோதெல்லாம், இதை உபயோகிக்கலாம். குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் காணுகிற தாபன வியாதிகளுக்கு, இது வெகு முக்கியமானது.—வியாதிக்குத் தக்கபடி கணக்கிட்டு அட்டை விடவேண்டியது. ஒரு அட்டை சுமார் 1½-2-டிராம் ரத்தம் குடிக்கும் ; அட்டை கடித்து விட்டபிறகு, சுமார் அவ்வளவு ரத்தம் வெளிப்படும். நமது தேசத்து அட்டை தன் சொந்த கனத்துக்கு, 4-5 அத்தனை அதிக ரத்தம் உறிஞ்சிவிடும். கடித்த வாயிலிருந்து அதிக ரத்தம் வடிந்தால், அழுத்துவதினாலும் படிக்காரம், காடிக்காரம் முதலிய ரக்தஸ்தம்பனிகளைப் போடுவதிலும், ரத்தம் நிற்கும் In inffammatory afiections.

சீமை எரிவண்டு.

கெந்தாரிடிஸ், CANTHARIDES ; கெந்தாரிஸ், CANTHARIS.

செய்கை.—ஐரோப்பிய தேசத்தில் பிடிக்கிற இந்த வண்டுக்கு, உஷ்ண, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு ; அதிகமானால் கொல்லும். மேலுக்குப் போட்டால், எரிச்சலுண்டாகும்; கொப்புளம் காணும். Internally stimulant diuretic ; externally counter-irritant and vesicant.

உபயோகம்.—இதை உள்ளுக்குக் கொடுத்துச் சவுக்கியமுண்டான வியாதிகளாவன.—சொட்டுமூத்திரம், கற்பப் பிரமேகம், சூதகக்கட்டு, மஜ்ஜா மூத்திரம், நீர்க்கேவை, நாள்சென்ற கக்கிருமல், குஷ்டம், சொறி முதலிய சில சருமரோகங்கள் ஆகிய இவைகளாம். புண்ணாக்க வெளிக்குப் போடப்பட்ட வியாதிகள் அனந்தம், அவைகளாவன—நாட்சென்ற வீக்கங்கள், உள்வேதனை, நரம்புகளைப்பற்றிய ஸ்தம்பவாதம், காக்கைவலி வியாதிகள், இருதயம், மார்பு, முழங்கால் ஆகிய இவைகளில் காணுகிற நீர், கண் வியாதிகள், காதுவியாதிகள், மூட்டுவீக்கங்கள் ஆகிய இவைகளாம். வியாதிக்குத் தக்கபடி உபயோகிக்கவேண்டியது. Internally in enuresis, leucorrhœa, amenorrhœa, dropsy, hooping cough, lepra, psoriasis, &c., externally in the form of blister, in inflammations, paralysis, neuralgia,

hydropericardium, hydrothorax, hydarthrosis, diseases of the eye and ear, &c.

மாத்திரை.—இதின் சூரணத்தில் 1-2-கிறேன் எடைக்கு மாத்திரை செய்து கொடுக்கலாம்; பாவனத்திரவம் கொடுப்பது நல்லது.

சீமை எரிவண்டு பாவனத்திரம். (டிங்சர் ஆவ் கெந்தாரிடிஸ், Tincture of Cantharides; டிங்சூரா கெந்தாரிடிஸ், Tinctura Cantharidis). செய்முறை.—எரிவண்டு பொடி, $\frac{1}{4}$-ஔன்ஸ்; புருவ்ஸ்பிரிட் சாராயம், 1-பைன்ட் மூடி 7-நாள் அடிக்கடி குலுக்கி ஊறவைத்து, இறுத்து, பிழிந்து, கடுதாசியில் வடிகட்டி, 1-பைன்ட் அளவுக்குத் தேவையான சாராயத்தை விட்டுக் கொள்ளவும். மாத்திரை.—5-20-மினிம் வீதம் தினத்துக்கு 2-3-தரம் கொடுக்கவாம். (Cantharides, $\frac{1}{4}$ oz. Proof Spirit, 1 pint.) Dose.—5-20 minims.

சீமை எரிவண்டுக் காடி. (வினிகர் ஆவ் கெந்தாரிடெஸ் Vinegar of Cantharide; அஸீடம் கெந்தாடிஸ், Acetum Cantharidis.) ரண மாக்க மாத்திரம் இதை மேலுக்குத் தேய்க்கப்படுகிறது. Employed only externally as a vesicant.

சீமை எரிவண்டு பிளாஸ்திரி அக்கினிபிளாஸ்திரி. (பிளாஸ்டர் ஆவ். கெந்தாரிடெஸ், Plaster of Cantharides; எம்பிளாஸ்ட்ரம் கெந்தாரிடிஸ், Emplastrum Cantharidis). செய்முறை.—சீமை எரிவண்டுதூள், 12-ஔன்ஸ்; மஞ்சள் மெழுகு, சுத்திசெய்த ஆட்டுக்கொழுப்பு, வகை 1-க்கு $7\frac{1}{2}$-அவுன்ஸ்; சுத்திசெய்த பன்றிநெய், 6-ஔன்ஸ்; ரோஜனம், 3-ஔன்ஸ். மெழுகு, கொழுப்பு, நெய் இவைகளை ஜலயந்திரத்தில் வைத்து உருக்கி, ரோஜனத்தை இளக்கி அதில்விட்டு, பிறகு வண்டின் பொடியைச் சேர்த்து, செவ்வையாக மிஸ்ரமித்து, பிறகு குளிர்ச்சியாகிறவரையில் துழவிக்கொண்டிருக்கவேண்டியது. உபயோகம்.—தேகத்தின்மேல் புண்ணுக்க இதைத்தான் போடுவது வழக்கம்.

நாட்டு எரிவண்டு (மைலாபிரிஸ்ஸை கோரியை, Mylabris cichorii. Telinni Fly). நமது நாட்டில் அநேக சாதி எரிவண்டுகளுண்டு. இதின் குணமும் உபயோகமும் சீமை வண்டுக்கொற்றிருக்கும்; விரணமாக்க அதற்குப்பதில் இதைச் சேர்த்துச்கொள்ளலாம், ஆனல் இது வீரியத்தில் கூடியிருப்பதால் உள்ளுக்கு உபயோகிக்கலாகாது.

தேன்.

ஹனி, HONEY; மெல், MEL.

விவரணம்.—தேன்கூட்டில் ஈக்களால் சேர்க்கப்படுகிற இந்த மதுர பதார்த்தம், கூட்டிலிருந்தெடுக்கும்போது தெளிவாய் இளமஞ்சள் நிறமாய் இருக்கும்; பிறகு படிப்படியாய் உறைந்து, மங்கலாகிவிடும் (1) மஞ்சள் மெழுகு, (எல்லோவாக்ஸ், Yellow Wax ஸீராபிளேவா, Cera Flava).—தேன் கூட்டையழித்துப் பக்குவப்படுத்துகிற மெழுகு மஞ்சளாயிருக்கும். (2) வெள்ளைமெழுகு. (ஒயிட்வாக்ஸ், White Wax; ஸீரா ஆல்ரா, Cera Alba.)—மஞ்சள் மெழுகை ஈரம், காற்று, வெளிச்சம் ஆகிய இவைகள் படும்படி வெளியில் வைத்தால் நிறம் மாறி வெளுத்துவிடும்.

செய்கை. உபயோகம்.—தேனுக்கு, ஸினிக்த அற்பவிரேசன குணங்களுண்டு; இருமல் மருந்துகள், வாய்க் கொப்புளிக்கிற ஜலங்கள் ஆகிய இவைகளோடு மதுரத்துக்காக இதைச் சேர்க்கப்படுகின்றது. மெழு

குக்கும் லீனிக்த குணமுண்டு ; சீதபேதி, பேதி, இருமல் ஆகிய இவைகளுக்கு ஒவ்வொருவேளை உபயோகித்ததுண்டு ; ஆனால் முக்கியமாய் களிம்புகளோடும், ஆசன குளிகைகளோடும் இது சேருகின்றது. Emollient.

முறித்ததேன். [கிளாரிபைட்ஹனி, Clarified Honey, மெல்டிபியூரேடம், Mel Depuratum]. செய்முறை.—5-பௌவுன் தேனை ஜலயந்திரத்தில் வைத்து, உருக்கி, சூடாயிருக்கும்போதே, ஈரக்கம்பளித்துணியில் விட்டு, வடிகட்டிக்கொள்ளவேண்டியது. நமது வீடுகளில் ஓட்டைச் சுட்டு, தேனில் போட்டு முறிப்பது வழக்கம்

மெழுகுக் களிம்பு. (ஸிம்பில் ஆயின்ட்மென்ட், Simple ointment; அன்குவண்டம் ஸிம்பிளெக்ஸ், Unguentum Simplex.) செய்முறை.—வெள்ளை மெழுகு, 8- ஔன்ஸ்; சுத்திசெய்த பன்றிநெய், 3-ஔன்ஸ்; வாதுமை நெய், 3-ஔன்ஸ். எண்ணெயில், மெழுகையும், நெய்யையும் உருக்கி எடுத்துக்கொண்டு, குளிருகிறவரையில் துழவிக்கொண்டிருக்கவும். உபயோகம்.—விரணங்களை ஆற்ற இது நல்ல களிம்பு. வேறு களிம்பு முறைகளிலும் இது சேருகிறது. (White wax, 2 oz; Prepared Lard, 3 oz.; Almond Oil, 3 foz.) For ulcers.

தேன் களிம்பு. [ஸீரோமெல், Ceromel,.] செய்முறை.—மஞ்சள் மெழுகு 1-ஔன்ஸ்; முறித்ததேன், 4-ஔன்ஸ். சிறுதீயிலிட்டு உருக்கி, வடிகட்டிக்கொள்ளவும். உபயோகம்.—துஷ்ட விரணங்களுக்குப்போட, இது நல்ல களிம்பு. கொழுப்பு, நெய் இவைகளைப்போல் இது கெடாது. (Yellow wax, 1. oz.; Clarified Honey, 4 oz.) For indolent and other ulcers.

மீன் வச்சிரம்

చేపవజ్రము. ஐஸிங்கிளாஸ், ISINGLASS; ICTHYOCOLLA.

விவரணம்.—மீனின் பையிலிருந்துசேகரிக்கிற இந்தப் பதார்த்தம் நாறுநாறாய், வெளுத்து வாசனையும், ருசியுமில்லாமலிருக்கும் ; குளிர்ந்த ஜலத்தில் கரையாது ; கொதிக்கிற ஜலத்திலிட்டால் கரைந்து, ஜலம் குளிர்ந்தபிறகு கஞ்சிபோலாகிவிடும். 1-ஔன்ஸ் ஜலத்துக்கு, 15-கிறேன் வச்சிரம் போதுமானது. கடைச்சரக்கில் பலவிதங்களுண்டு ; இதிலிருக்கிற பசைக்கு ஜிலேடீன் (Gelatine) என்று பேர்.

செய்கை. உபயோகம்.—ஸினிக்தகாரி, போஷணகாரி, ரோகிகளுக்கு கஞ்சிசெய்து கொடுக்க மெத்த உபயோகமாகிறது. டானிக் ஆசிட் (Tannic acid) என்னும் புளிப்போடு சேர்த்தால், இளமஞ்சள் நிறமான வண்டல் படியும் ; காலிக் ஆஸிட் (Gallic acid) என்கிற உப்போடு சேர்த்தால் ஒன்றுமிராது.

மீன் எண்ணெய்

చేప నెయ్యి. காட்லிவர் ஆயல், COD LIVER OIL ; ஓலியம் மர்ரூஈ

OLEUM MORRHUÆ.

விவரணம்.—நார்வே, புரான்ஸ், பிரிடன், ஐர்லான்ட், நியூபவுண்ட்லான்ட் ஆகிய இப்பிரதேச சமுத்திரங்களில் வசிக்கிற காட் (Cod) என்னும் மீனின்யகிர்த்கண்டத்தைச் சூடேத்தி எடுக்கிற இந்த எண்ணெயானது, பலநிரமாய், மீனின் வாசனையும் ருசியுமுள்ளதாய் இருக்கும் ; இதில் பித்தநீரி

லிருக்கிற பதார்த்தங்களோடுகூட ஐயோடன் புரோமின், குரோரீன், பாஸ்பரன் முதலிய பதார்த்தங்கள் வெகுகொஞ்சமாய் இருக்கின்றன.

செய்கை.—வியதாபேதகாரி, போஷணகாரி, Alterative and nutritive.

உபயோகம்.—கண்டமாலை சம்பந்த ரோகங்களுக்குக் கொடுக்க இது திவ்விய ஔஷதம் க்ஷயம், கணை, கண்நோவு, கண்டமாலை சம்பந்தமான துற்பலம் இவைகளுக்கும் கொடுத்துச் சவுக்கியம் கண்டதுண்டு; பாண்டு, சருமரோகங்கள், நாள்பட்ட கீல்வாதம், மதுமூத்திரம், காக்கைவலி, அக்னிமந்தம் ஆகிய இவைகளுக்கும் கொடுத்து குணம் கண்டதுண்டு. In scrofula, phthisis, tabes mesenterica, ophthalmia; anaemia, skin diseases, chronic rheumatism, diabetes, epilepsy, dyspepsia, &c.

மாத்திரை.—1-திராகம் வீதம், தினத்துக்கு 2-3 தரம் கொடுக்கலாம்; ரோகி தாளுகிற சக்தியின் பிரகாரம்,அளவை கூட்டிக் கொடுக்கவேண்டியது. வாயால் கொடுக்க உதவாதபோது, வஸ்தி ஆசனசெய்து வழியாகவாவது, அல்லதுஉடம்பில் தேய்த்தாவது உபயோகிக்கலாம் சாப்பிட்ட உடனே கொடுப்பது நல்ல தருணம். 1-dr,

சுறாமீன்நெய். சிராநெய். திருவதாங்கோட்டு நெய்; மங்கார நெய். (ஷார்க்லிவர் ஆயல், Shark liver oil; Oleum Squalæ.) சுறாமீனின் யகிர்த்கண்டத்தைச் சூடேத்தியெடுக்கிற இந்தநெய்யானது, சாராயநிறமாய், மற்ற குணங்களில், காட்லிவர் ஆயல் என்னும் நேய்யைப்போலவே இருக்கும், ஆனால் வாடை அதிகமாய், குடிக்க மனம்வராது.

முட்டை

గుడ్డు. தி எக், THE EGG; OVUM.

செய்கை, உபயோகம்.—ஸினித்த, போஷணகாரி குணங்கள் முட்டைக்குண்டு. வெள்ளைக்கருவை, (ஆல்பியூமன், Albumen) சவ்வீரம், மயில்துத்தம், பால்துத்தம், கிரியாசோட் இவை முதலிய விஷ பதார்த்தங்களைச் சாப்பிட்டவர்களுக்கு, விஷத்தை முறிக்கக்கொடுக்கலாம்.—மஞ்சள்கருவை (தி யோக், The Yolk) ரோகிகளுக்குக் கொடுத்தால், தேகபோஷணையுண்டாகும். எண்ணெய், குங்கிலியத் தயிலங்கள், ரோசனங்கள் ஆகிய இவைகளை உள்ளுக்குக் கொடுக்கும்போது, இதனோடு சேர்த்துக் குழம்பாகச் செய்து கொடுக்கப்படுகிறது.

மீன்கொழுப்பு

చేపకొవ్వు. ஸ்பெர்மெஸிடி, SPEREMACETI; ஸிடேஸியம், CETACEUM

செய்கை, உபயோகம்.—திமிங்கல மீன் (மகரமீன்) சிரசெண்ணெயிலிருந்தெடுக்கிற இந்தக் கொழுப்புக்கு ஸினிக்த குணமுண்டு; களிம்புசெய்து உபயோகப் படுத்தப்படுகிறது.

கஸ்தூரி

కస్తూరి. மஸ்க், MUSK; மாஸ்கஸ், MOSCHUS.

செய்கை.—உஷ்ணகாரி அங்காகர்ஷண நாஸகாரி. Stimulant, antispasmodic.

உபயோகம். சந்நிபாத சுரங்கள், துர்பலத்தைத் தருகிற மற்றவியாதிகள் ஆகிய இவைகளுக்கு, இதைக் கொடுத்தால் உஷ்ணகாரியாகும்; சுவாஸகாசம், கக்கிருமல், பாலமாந்த வலி, காக்கை வலி, குதகச்சந்நி, நித்திராபங்கம் இவை முதலியவைகளுக்குக் கொடுத்து, சவுக்கியம் கண்டதுண்டு. இதை இப்போது உபயோகிப்பது அபூர்வம். In typhus and typhoid fevers, asthma, hooping cough, infantile convulsions, epilepsy hysteria, &c.

மாத்திரை.—5-10-கிறேன் எடை மாத்திரை செய்தாவது பிசின்சேர்த்து ஜலத்தில் கலந்தாவது, கொடுக்கலாம். 5-10 grs.

ஆட்டுக் கொழுப்பு

మేకకొవ్వు. ஆட்டின் வயத்திலிருந்து எடுத்து சுத்திசெய்த கொழுப்புக்கு. [prepared suet ; sevum preparatum] வினிக்த குணமுண்டு, தேகபோஷணைக்கு ஒவ்வொருவேளை கொடுக்கப்படும்.

பசும்பால்

పాలు. மில்க், MILK. லாக், LACK.

செய்கை, உபயோகம்.—இதற்குத் தேகபோஷணை, வினிகத்தை ஆகிய இக்குணங்களுண்டு; ரோகிகளுக்குக் கொடுக்க நல்ல வஸ்துவு. சவ்வீரமுதலிய விஷங்களை முறிக்க இதைக் கொடுக்கலாம்.

பன்றிநெய்

పందినెయ్యి. கொழுப்பையெடுத்து உறுக்கி சுத்திசெய்த பன்றிநெய்க்கு [பிரிபேர்ட் லார்ட், prepared Lard; Adeps præparatus] வினிக்த குணமுண்டு; கணைக்கும் மூலத்துக்கும் பன்றிநெய்யையும், கரியையும் உள்ளுக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்; அக்கி முதலிய சில அம்மைகளுக்கும், காயம், சுளுக்கு இவைகளுக்கும், பன்றிநெய் பூசுவதுண்டு. அநேக களிம்புகளில் இது சேருகிறது.

நீர்நாய்விரை

நீர்நாய் சவ்வாது. జవ్వాజి, నీరుకుక్కబీజం. காஸ்டர், CASTOR; காஸ்டோரியம், CASTORIUM.

செய்கை.—உஷ்ணகாரி, அங்காகர்ஷண நாசகாரி, Mild stimulant and antispasmodic

உபயோகம்.—சூதகசந்நி முதலிய இசிவு வியாதிகளுக்குக் கொடுக்கிற வீரியமுள்ள மருந்துகளோடு இதைச் சேர்த்துக்கொடுக்கலாம். தனிப்படக் கொடுத்தால், மேற்படி குணங்கள் உண்டோ இல்லையோ சந்தேகம். Histerical and spasmodic affections.

மாத்திரை.-5-10-கிறேன் எடைக்கு அதிகரித்தும், மாத்திரைச்செய்து கொடுக்கலாம். 5-10 grs.

நீர்நாய் சவ்வாது பாவனத்திரவம். [டிங்சர் ஆவ் காஸ்டர், Tincture of castor; Tinctura castorai.] செய்முறை.—மேற்படி சவ்வாது 1-ஔன்ஸ்; ரெக்டிபைட் சாராயம், 1-பைன்ட் மூடி, அடிக்கடி குலுக்கி, 7 நாள் ஊறவைத்து, இறுத்து, பிசைந்து வடிகட்டி, 1-பைன்ட்டுக்கு வேண்

டியச ாராயத்தை விட்டுக்கொள்ளவும். மாத்திரை.—1-2-டிராம் கொடுக்கலாம். (Castor, 1-oz; Rectified Spirit, 1 pint.] Dose.—1-2 fdrs.

(Non-officinal.)

புழுகு. పునుగు (Viverra Zibetha; The Zibeth, or Zibeth Civet Cat). வாசனைக்கு உபயோகப்படுத்துகிற இந்த வஸ்துவுக்கு, உஷ்ண, வீரிய வர்த்தன குணங்களுண்டென்று கேழ்வி, ஆனால் சந்தேகம். முகப்பருவுக்குத் தடவுகிறதும், வாசனைக்காக, சந்தனம் முதலியவைகளோடு சேர்த்துப் பூசிக்கொள்வதும் நாட்டு வழக்கம்.—புழுகு சட்டம், சவ்வாது இவைகளையும் பரிமளத்துக்குச் சேர்ப்பதுண்டு.

கோரோசனை. గోరోజన. (Biliary Calculus of a cow or an ox.) பதார்த்தகுண ரத்நாகரத்தில் பார்வையிடவும்.

தாதுவர்க்க பதார்த்தங்கள்

INORGANIC MATERIA MEDICA,

ஜலம்

నీళ్లు. வாடர், WATER; ஆகுவா, AQUA.

செய்கை, உபயோகம்.—ஜலவர்த்தனம், சீதளம் ஆகிய இக்குணங்கள் ஜலத்துக்குண்டு. எனது பதார்த்தகுண ரத்நாகரத்தில் விவரமாகக் காணலாம். Diluent, and refrigerant.

அடுப்புக்கரி

கட்டைக்கரி. బొగ్గు. உட்சார்கோல், WOOD CHARCOAL; CARBO LIGNI.

செய்கை, உபயோகம்.—துர்வாசனையைப் போக்குகிற குணமும், ஒட்டு வியாதிகள் அனுசரிக்காமல் செய்கிற குணமும் அடுப்புக்கரிக் குண்டு. உள்ளுக்கு மெத்த உபயோகிக்கிறதில்லை போல்டீஸ் செய்வதற்கும், தந்த சூரணங்களுக்கும், முக்கிய உபயோகம். மாத்திரை.—20-60-கிறேன் எடைக்கு அதிகயாயும் கொடுக்கலாம். Antiseptic, deodorizing, disinfectant. Dose.—20-60 grs.

கரித்தூள் போல்டீஸ். [சார்கோல் போல்டீஸ், Charcoal Poultice; Cataplasma Carbonis.] செய்முறை.—கரித்தூள் ½-ஔன்ஸ்; ரொட்டிச்சதை 2-ஔன்ஸ். அலிவிவிதை மாவு, அல்லது அரிசிமாவு 1½-ஔன்ஸ்; வெந்நீர், 10-ஔன்ஸ் ரொட்டியை ஜலத்தில் விட்டு அனல்பட 10-நிமிஷம் ஊறவைத்து, பிறகு மிஸ்ரமித்து, மாவைச்சேர்த்து, பதத்துக்குக் கிளரிக் கொண்டு கரித்தூளில் பாதிசேர்த்து மற்றதைப் போல்டீஸ்மேல் தூவிக்கொள்ள வேண்டியது.—இதை துஷ்ட அழிவிரணங்களுக்குப் போட்டால் துற்வாசனையைப் போக்கி, ஆறுகிற பக்குவத்தில் கொண்டுவரும். (Charcoal powder, ½ ox ; Crumb of Bread, 2 ox; Linseed Meal or Rice Flour, 1½ oz ; Boiling Water, 10 fox.) To foul and gangrenous ulcers.

கந்தகம்

கந்தி, கெந்தகம். గంధకము. ஸல்பர், SULPHUR.

கந்தகப்பதங்கம், பூக்கந்தகம் ; கந்தகபஸ்பம் ; புடமிட்ட கந்தகம்

பதங்கித்த கந்தகம், ஸல்பர் ஸப்லிமேடம், Snlpher Sublimatum ; ஸப்லே மட் ஸல்பர், Sublimed Sulphur.

கந்தகம் பிறவிச்சரக்கு ; ஸிஸலி முதலிய தேசங்களில், அக்கினிமலையடிவாரத்தில் அகப்படும். லோகங்களோடு விஸ்தாரமாய்ச் சேர்ந்திருக்கும் நெல்லி கந்தக முதலிய தோஷமுடைய சரக்கைப் பதங்கித் தெரிக்கிற கந்தக பஸ்மம், தூளாய், மஞ்சள் நிறமாய், சூடுபடாதபோது வாசனையும், சுவையும் இல்லாமலிருக்கும், நீலநிறத்தோடெரிந்து, புகையுண்டாகும்.

செய்கை.—கொஞ்சமாய்ச் சாப்பிட்டால் வியதாபேத, சுவேதகாரி குணங்களுண்டு ; அதிகமானல் மலகாரியாகும். Alterative and diaphoretic in small, and mildly aperient in larger doses.

உபயோகம்.—சொறிசிரங்கு முதலிய சருமரோகங்களுக்கு, உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகிக்க இது நல்லமருந்து ; நாள்பட்ட கீல்வாதம், சுவாசகாசம், மாரடைப்பு, நாள்பட்ட கக்கிருமல், நாள்பட்ட இருமல், கண்டமாலை இவை முதலிய ரோகங்களுக்குக் கொடுத்து, சவுக்கியம் கண்டதுண்டு. மூலவியாதி, குதப்பிரம்சம், நாள்பட்ட சீதபோதி ஆகிய இவைகளுக்கு, மலமிளகக் கொடுக்க இது தகுதியானது. In scabies, chronic rheumatism, asthma, angina pectoris, hooping cough, chronic bronchitis, scrofulo. piles, prolapsus of the rectum, chronic dysentry, &c.

மாத்திரை.—10-30-கிறேன் கொடுத்தால், நாள்பட்ட வியாதிகளைக் கண்டிக்கும், வியர்வை பிறக்கும். 1, 3, டிராம் கொடுத்தால் மலமிறங்கும். கந்தகப்புகையும் வியாதிகளைக் கேழ்க்கும். 10-30-grs. 1—3 drs. as an aperient.

கந்தகலேகியம் [கன்பெக்‌ஷன் ஆப் ஸல்பர், Confection of Sulphur; confectio Sulphuris.] செய்முறை.—கந்தகப் பதங்கம் 4-அவுன்ஸ்; திராக்ஷ உப்புப்பொடி, 1-ஔன்ஸ் ; ஆரஞ்சித்தோல் பாணிதம், 4-ஔன்ஸ் இவைகளைச் செவ்வையாய் அரைத்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை.—1-2-டிராம் வீதம் தினத்துக்கு 1-2-தடவை கொடுக்கலாம். மூலரோகத்துக்குக் காலையில் சாப்பிட்டுக்கொண்டு வரலாம். (Sublimed Sulphur, 4 oz; Acid Tartrate of pottash I oz, Syrup of Orange Peel, 3 fox.) dose.—1-2 drs.

கந்தகக்களிம்பு. [ஆயின்ட்மென்ட் ஆவ் ஸல்பர்;Ointment of Sulphur Unguentum Sulphuris.] செய்முறை.—கந்தகப்பந்தகம், 1-ஔன்ஸ்; சுத்திசெய்த பன்றிநெய், 4-ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும், உபயோகம்.—சொறிசிரங்குக்குப் பூச இது எடுத்த மருந்து ; இரண்டுநாள் விடாமல், இரண்டுவேளையும் தேய்த்து, மூன்றும் நான் வெந்நீரில் ஸ்நானம் செய்துவிட்டால், சவுக்கியப்பட்டு விடும். மூன்றும் நாள் தேய்ப்புஒவ்வொருவேளை ஆவசியமாகும்.

கந்தகத்திராவகம்

அக்கினிதிராவகம். గంధకద్రావకము. ஸல்பியூரிக் ஆஸிட் SULPHURIC ACID ; அஸிடம் ஸல்பியூரிகம், ACIDUM SULPHURICUM.

கந்தகத்தை எரித்து அதிலுண்டாகிற புகையுடன் வெடியுப்புப் புகையைச் சேர்த்துண்டாகிற இந்த திராவகம், வெள்ளையாய் எண்ணெயைப்போ

லிருக்கும் ; அதிகப்புளிப்பும். தேகத்தைப் புண்ணாக்குகிற குணமுமுண்டு.

செய்கை, உபயோகம்.—உக்கிர விரணகாரி. பட்ட இடம் முதல் வெளுத்து பிறகு கறுத்துவிடும் ; உள்ளுக்குச் சாப்பிட்டால் கொடிய நஞ்சாகும் ; உள்ளுக்குக் கொடுக்கவே உதவாது. Powerful escharotic, and is wholly unfitted for internal use.

விளாவின கந்தகத்திராவகம். [டிலியூடெட் ஸல்பியூரிக் ஆசிட்-Diluted Sulphuric Acid ; Acidum Sulphuricum Dilutum.] செய்முறை.—கந்தகத்திராவகம், 7-ஔன்ஸ் ; தீநீர் தேவையானது. திராவகத்தில் 77-ஔன்ஸ் ஜலம்விட்டு, 60-டிக்கிரிக்குக்குளிர்ந்த பிறகு, $83\frac{1}{2}$-ஔன்ஸ், அளவுக்குவேண்டிய ஜலத்தை விட்டுக்கொள்ளவும், செய்கை.—சீதள, சங்கோசன, தாருட்டியகாரி குணங்களுண்டு. உபயோக.—ரத்தவமனம், ரக்தகாரம். ரத்தமூத்திரம், பெரும்பாடு, ஆகிய இவைகளுக்கு, காலிக் ஆசிட் என்னும் மருந்தோடு சேர்த்துக்கொடுக்கவும். பேதி, க்ஷயத்தில் காணுகிற வியர்வை, அம்மைகள் விடாக்காச்சலின் அந்தியம், சில சருமரோகங்கள், மேகவியாதிகள் ஆகிய இவைகளுக்குக் கொடுத்து பிரயோசனம் கண்டதுண்டு. வாய் ரணத்துககுக் கொப்பளிக்கிற நீர்களோடு இதைச் சேர்த்துக்கொள்ளலாம். மாத்திரை —5-30 மினிம் விகிதம் அதிக ஜலத்தில், தினத்துக்குப் பலதரம் கொடுக்கலாம். [Sulphuric Acid, 7 fox ; Distilled Water, a sufficiency.] Dose. 5-30 minims.

கறியுப்புத்திராவகம்

உப்புத்திராவகம். లవణద్రావకం,శంఖద్రావకం. ஹைட்ரோ குளோரிக் ஆசிட், HYDROCHLORIC ACID ; அசீ டும் ஹைட்ரோ களோரிகம், ACIDUM HYDROCHLORICUM, ACIDUM MURIATICUM PURUM.

இது ஜலத்தைப்போல் மெத்த புளிப்புள்ளதாய் இருக்கும் ; வெள்ளைப் புகை எழும்பும் ; வாசனை நெடியுள்ளது.

செய்கை, உபயோகம்.— விரணமாக்கிற நஞ்சு ; விரணங்களிலிருக்கிற துற்மாமிசம், புத்து, மறு இவைகளுக்குச் சிலவேளைப் போடுவதுண்டு. விளாவினது மாத்திரம் உள்ளுக்குக் கொடுக்கலாம். Powerful escharotic and corrosive poison.

விதிபவின கறியுப்புத் திராவகம். [டிலயூடெட் ஹைட்ரோகுளோரிக் ஆசிட், Diluted Hydrochloric Acid; Acidum Hydrochloricum Dilutum] செய்முறை,—கறியுப்புந் திராவகம், 8-ஔன்ஸ ; ஜலம் தேவையானது. திராவகத்தில், 16-அவுன்ஸ் ஜலம் விட்டு, 60-டிக்கிரி உஷ்ணத்துத்துக்குக் குளிர்ந்த பிறகு, $26\frac{1}{2}$.ஔன்ஸ்க்கு வேண்டிய ஜலம் விட்டுக் கொள்ளவும். செய்கை.—உப்புகளை முறித்துவிடும், உஷ்ண தாருட்டியகாரி. உபயோகம்.—சந்நிபாதசுரம், குழந்தைகளுக்குக் காணுகிற விடாக்காச்சல், ரத்தம் சூரிகை, அக்கினிமந்தம், அஸ்மரீரோகம், மேகப்புண், கக்கிருமல், ஆகிய இவைகளுக்குக் கொடுத்து சவுக்கியம் கண்டதுண்டு ; க்ஷயத்துக்குக் கொடுக்கிறவைகளோடு இதையும் கொடுக்கலாம் ; வாய் ரணங்களுக்கு; கொப்புளிக்கிற ஜலமாகச்செய்து உபயோகிக்கலாம். இதைக் குடிக்கும்போதெல்லாம், பல்லுக்குக் கெடுதிநேரிடாமல், வாயை ஜலத்தால் கொப்புளித்துவிட வேண்டியது. மாத்திரை.—10-30 மினம், ஜலத்தில் விட்டுக்கொடுக்

கலாம். Antalkaline, Stimulant, tonic. In typhus and typhoid, fevers, dyspepsia, calulus affections, syphilis, hooing cough &c. Dose.—10-30 minims.

ஐயோடைன்

ஐயோடைன். ஐயோடைன் IODINE ; ஐயோடம், IODUM.

கடற்பாசி சாம்பலிலிருந்து (Ashes of sea-weeds) எடுக்கிற இந்தச் சரக்கானது, தகடுகளாய், ஒருவித வாசனையோடு, கறுத்து மினுமினுப்போடிருக்கும் ; எரித்தால் ஊதாநிறமான புகையுண்டாகும் ; சாராயம், ஈதர், ஐயோடைட் ஆவ் பொடாஸியம் கலந்திருக்கிற ஜலம், ஆகிய இவைகளில், சீக்கிரத்தில் கரைந்து விடும் ; வடிகஞ்சியுடன் சேர்த்தால், கஞ்சி நீலநிறமாகிவிடும்.

செய்கை.—கொஞ்சமாய்க் கொடுத்தால், வியாதபேத தாருட்டியகாரியாகும், அதிகமானல் குடலைப் புண்ணாக்கிக்கொல்லும் நாள்பட்டச் சாப்பிட்டால் துற்குணங்கள் பிறக்கும், அதற்கு ஐயோடிசம் என்றுபேர். சருமத்தின்மேலே உபயோகித்தால் உஷ்ணித்து, ரணமாக்கும். Alterative tonic.

உபயோகம்.—கண்டமாலை சம்பந்தமான வியாதிகளும், அந்த ரோகிகளுக்குக் காணுகிற, கட்டிகள், வித்திருதிகள், ரணங்கள், கண்ணோவு, அஸ்திவிரணம், மூட்டுவீக்கம் ஆகிய இவைகளுக்கு வெளிக்கும் உள்ளுக்கும் உபயோகிக்க உயர்ந்த மருந்து. க்ஷயத்துக்கு இதின் புகையை ஆக்கிராணித்தால் நல்லதென்று எண்ணம். புரைச்குழல், சூதகச்சூலை, நீர் அண்டம், யகிர்த்கண்டரோகம், பிளீகரோகம், மூட்டுவியாதி, அக்கி, மேகப்புடை, விரணங்கள், சருமரோகங்கள் ஆகிய இவைமுதலியரோகங்களுக்குக் கொடுத்து பிரயோசனம் கண்டதுண்டு. In scrofulous affections, &c.

மாத்திரை.—$\frac{1}{8}$-முதல் $\frac{1}{4}$-கிறேன். படிப்படியாய் அதிகரித்து 1-கிறேன் எடைக்கும், ஜலத்தில் கரைத்துச் கொடுக்கலாம், ஆனல் தனியாய்க் கொடுப்பது அரிது. $\frac{1}{8}$—$\frac{1}{4}$ gr.

ஐயோடைன் பாவனத்திரவம். (டிங்சர் ஆவ் ஐயோடைன், Tincture og Iodine Tinctura Iodi) செய்முறை—ஐயோடைன், $\frac{1}{2}$-ஔன்ஸ், ஐயோடைட் ஆவ் பொடாசியம், $\frac{1}{4}$-ஔன்ஸ், ரெக்டிபைட்சாராயம் 1. பைண்ட். சரக்குகளைச் சாராயத்தில் கலந்துகொள்ளவும் மாத்திரை.—5-20 மினிம் வீதம் தினத்துக்கு 2-3 தடவை கொடுக்கலாம். 40, மினதில், 1, கிறேன் ஐயோடைனும், $\frac{1}{2}$, கிறேன் ஐயோடைட் ஆவ் பொடாசியமும் இருக்கின்றன. Iodine, $\frac{1}{2}$ oz. ; Iodide of potassium, $\frac{1}{4}$ oz. Rectified Spirit, 1 pint.) *Dose.*—5-20. Minims.

ஐயோடைன் பூசுத்தயிலம். (லினிமென்ட் ஆவ் ஐயோடைன், Linfment of Iodine ; Linimentum Iodi.) செய்முறை.—ஐயோடைன், $1\frac{1}{4}$-ஔன்ஸ் ; ஐயோடைட் ஆவ் பொடாஸியம், $\frac{1}{2}$-ஔன்ஸ் ; சூடன் $\frac{1}{4}$-ஔன்ஸ், ரெக்டிபைட் சாராயம், 10-ஔன்ஸ். சரக்குகளைச் சாராயத்தில் கரைத்துக் கொள்ளவும். உபயோகம்.—இதைப் புரைக்குழல், கட்டிகள் இவைகளுக்கு மேலுக்கு மாத்திரம் போடப்படும் ; போட்டவிடம் கொப்பிளித்துப் புண்ணாகும். (Iodine, $1\frac{1}{4}$ oz ; Iodide of Potassium, $\frac{1}{2}$ oz. ; Campher, $\frac{1}{4}$ oz. ; Rectified Spirit, 10 foz.)

ஐயோடைன் களிப்பு. (ஆயின்ட்மென்ட் ஆவ் ஐயோடைன், Liniment

of Iodine ; Unguentum Iodi.) செய்முறை.—ஐயோடைன் ஐயோடைட் ஆவ் பொடாவியம் வகைக்கு-32 கிறேன் ; புரூவ்ஸபிரிட் 1-டிராம் ; சுத்திசெய்த பன்றிநெய், 2-ஔன்ஸ். உப்புகளைக் கண்ணாடி கலுவத்திலிட்டு, சாராயம் விட்டரைத்து, நெய்யைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு, செவ்வையாகமிஸ்ரமித்துக் கொள்ளவும். உபயோகம்.—மேற்சொன்ன கட்டிகளுக்கு இதைத் தேய்க்கலாம். (Iodine, Iodide of Potassium, of each 32 grs; Proof Spirit, 1 fdr; Prepared Lard, 2 oz.)

வெடியுப்புத்திராவகம்.

பொட்டிலுப்புத் திராவகம். సూరాకారద్రావకం, మహాద్రావకం. நைட்ரிங் ஆசிட், NITRIC ACID ; ஆஸீடம் நைட்ரிகம், ACI-DUM NITRICUM.

வெடியுப்போடு கந்தகத்திராவகமும், ஜலமும் சேர்த்து வாலையிலிட்டு வடித்தெடுக்கிற இந்த திராவகமானது, துல்லியமாய். ஜலத்துக்கும் பளுவாயிருக்கும் ; காற்றுவாடை பட்டால். காரமான புகை உண்டாகும்.

செய்கை.—விரணகாரி, பட்டவிடம் மஞ்சள்நிறமாகும், அதை ஆல்கேலீஸ் அதிகப்படுத்தும். ஜலத்தில் சேர்க்காமல் குடித்தால், புண்ணாக்கிக் கொல்லும். Escharotic, caustic.

உபயோகம்.—அழிவிரணம், மூலமுளைகள், மேகப்புண்ணின் ஆரம்பம், மறு, புத்து விரணம், ஆகிய இவைகளுக்குத் தனித்திராவகத்தைத் தடவினால் வியாதியைப்போக்கி, ஆறுகிற ஸ்திதியில் கொண்டுவரும். இந்தவிஷயத்தில், மற்ற திராவகங்களைப் பார்க்கிலும் இது சிரேஷ்டமானது. In phagedenic ulcerations, hæmorrhoidal tumours, primary chancres, wart, &c.

விளாவின வெடியுப்புத்திராவகம். (டில்யூட்டெட் நைட்ரிக் ஆஸிட், Diluted Nitric Acid ; Acidum Nitricum Dilutum.) செய்முறை.—வெடியுப்புத் திராவகம், 6-ஔன்ஸ்; தீநீர் தேவையானது. திராவகத்தில் 24-ஔன்ஸ் ஜலம்விட்டு, 60-டிக்கிரி பிரமாணத்துக்குக் குளிர்ந்த பிறகு, 31-ஔன்ஸ் அளவிருக்கும்படி அதிக ஜலம் விட்டுக்கொள்ளவும். செய்கை.—உப்புகளை முறிக்கும், தாருட்டிய, வியதாபேத, சீதளகாரி குணங்களுண்டு ; மேலுக்குபயோகித்தால் உஷ்ணகாரியாகும். உபயோகம்.—மேகப்புண், மேகவியாதிகள், ரஸப்பிடிப்பு, நாள்பட்ட யகிர்த்கண்டரோகம், பீலீகரோகம், அஸ்மரீரோகங்கள், மூத்திரப்பை தாபனரோகங்கள் ஆகிய இவைகளுக்குக் கொடுக்க நல்ல மருந்து; நீர்க்கோவை, மதுமூத்திரம், கக்கிருமல், வாந்திபேதி, வாந்திபேதிமாதிரியானபேதி. குலைஎரிவு, நாள்பட்ட கீல்வாதம் ஆகிய இவைகளுக்கும் கொடுத்து குணம் கண்டதுண்டு. மெத்த ஜலம்விட்டுக் கலந்து கிலேதமாகச்செய்து, நாள்பட்ட விரணங்கள் அஸ்தி விரணங்கள், தீராத சருமவியாதிகள் ஆகிய இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை.—10-30-மினிம்வீதம் செவ்வையாய் ஜலம்விட்டு தினத்துக்கு 2-3 தடவை கொடுக்கலாம். இதை குடித்தபிறகு, பல்லுத்குக் கெடுதி வராமல் ஆல்கெலீஸ் ஜலத்தால் வாயைக் கொப்புளித்துவிடவேண்டியது. கிலேதத்துக்கு, 1-பைண்ட் ஜலத்துக்கு, 2-4 திராம்வீதம் திராவகம் விட்டுக் கொள்ளலாம், Antalkaline tonic, alterative, and refrigerant. Externally stimulant. In syphilis, mercurial cachexia, chronic diseses of the skin and spleen, chronic stage of hooping cough,cholera,

choleriac diarrhœa, cardialgia. and chornic rheumatism. Dose.— 10-30 minims.

விளாவினசுவர்ணபேதி திராவகம்,[டில்யூடெட்நைட்ரோ ஹைட்ரோ குளோரிக் ஆசிட், Diluted Nitro-hydrochloric Acid; அஸீடம் நைட்ரோ ஹைட்ரோ குளோரிகம் டில் —ம், Acidum Nitro-hydrochloricum Dilutum]. செய்முறை.—வெடியுப்புத் திராவகம், 3-ஔன்ஸ் ; கறியுப்புத் திராவகம், 4-ஔன்ஸ் : தீநீர், 25-ஔன்ஸ். திராவகங்களைச் சேர்த்து குப்பியின்வாயைத் தளர்ச்சியாய்மூடி, 24-மணி நேரம்வைத்து பிறகு, குலுக்கிக் குலுக்கி கொஞ்சம் கொஞ்சமாய் ஜலம் விட்டுக்கொள்ளவும். இதைக் கல்லடைப்புள்ள குப்பியில்வைத்து பத்திரப்படுத்திக்கொள்ளவும். செய்கை.—விளாவின கந்தகத்திராவகத்துக்குடையது இதற்குமுண்டு. உபயோகம்.—நாள்பட்ட யகிர்த்கண்ட வியாதிகள், அதனால் உண்டாகும், இரத்தபேதி, பித்தப்பாண்டு, நீர்க்கோவை ஆகிய இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுத்து, வெளிக்கும் தடவிக்கொண்டுவந்தால், நன்மைசெய்யும். அஸ்மரீரோகங்களுக்கும் நாள்பட்ட இருமலுக்கும், விஷசுரங்களுக்கும், மேகப்புடைகளுக்கும் கொடுக்கலாம். மாத்திரை.—5-20 மினிம்வீதம் மெத்த ஜலம்விட்டு விளாவி தினத்துக்கு 2-3-தடவை கொடுக்கலாம், 1-காலன் ஜலத்துக்கு 6-8-ஔன்ஸ் திராவகம்விட்டுக் கலந்து, வெளிக்கு உபயோகிக்கலாம். (Nitric Acid, 3 foz. ; Hydrochloric Acid, 4 foz ; Distilled Water, 25 foz Dose. 5-20 minims.

காரமுள்ள நாவாக்ஷார வாயு ஜயநீர்

కారముకలిగిన నవక్షారవాయ్వుజయనీరు, ஸ்ட்ராங் சொலூஷன் ஆவ் அம்மோனியா, STRONG SOLUTION OF AMMONIA ; லைகர் அம்மோனியி பார்டியார், LIQUOR AMMONIÆ FORIOR.

அம்மோனியா என்னும் நவாக்ஷார வாயுகலந்திருக்கிற ஜலமானது துல்லியமாய், மெத்த நெடியுள்ளதாய் காரத்துக்குடைய குணங்களைப் பெற்றிருக்கும்.

செய்கை. உபயோகம்.—உஷ்ணகாரி, எரிச்சலைத்தரும் ; மேலே தடவினால் விரணமாகும், கொப்புளிக்கும். இதின் ஆவிக்கும், கொடிய உஷ்ணகுணமுண்டு. அடியில் கண்ட மருந்தைப்போலவே இதையும் உபயோகப்படுத்தலாம் ; அதிகமானால் விஷமிக்கும். Powerful stimulant and irritant ; caustic and vesicant ; vapour also powerfully stimulant.

மாத்திரை.—3-10-மினிம், அதிக ஜலம்விட்டு விளாவிக்கொடுக்கவேண்டியது. 3-10-minims.

நவாக்ஷாரஜய நீர். நவாக்ஷாரவாயுசம்யுக்தஜலம். (ஸொலூஷன் ஆவ் அம்மோனியா, Solution of Ammonia ; லைகர் அம்மோனியி, Liquor Ammoniæ.) செய்முறை.—காரமுள்ள நவாக்ஷாரஜயநீர், 1-பைன்ட்; தீநீர் 2-பைன்ட், மிஸ்ரமித்து, கல்கார்க்குடைய புட்டியில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். செய்கை.—உஷ்ணகாரி, உபயோகம், சுரம், தாபனம் இவைகளில் காணுகிற துற்பலத்துக்குக் கொடுக்கலாம். வாந்திபேதியில் அதிகக்ஷீணமடைந்திருக்கும்போது இதை வேறு உஷ்ணமருந்துகளோடு கொடுத்தால், வெகு நன்மைசெய்யும். சர்ப்பவிஷம், புழுக்கடிகள் ஆகிய இவைகளுக்கு, வேறு மருந்துகளைப் பார்க்கிலும் இதில் நம்பிக்கைவைத்து, உள்ளுக்கும், கடித்த இடத்திலும் உபயோகிக்கலாம். மூர்ச்சை போதக்ஷயம்

ஆகிய இவைகளுக்கு, இதன் ஆவியை முகரவைக்கலாம். மாத்திரை.—10-30 துளி, ஜலத்தில் கலந்துகொடுக்கலாம்.(Strong solution of Ammonia 1 *pint*; Distilled Water, 2 pints, Stimulant. In fevers, cholera, bites of snakes and insects, syncope, asphyxia. Dose.—10-30 drops.

நவக்ஷார வாயு ஜயநீர்கலந்த பூசுந்தைலம். (லினிமென்ட் ஆவ் அம்மோனியா, Liniment of Ammonia ; லினிமென்டம் அம்மோனியி, Linimentum Ammoniæ) செய்முறை —நவக்ஷார வாயுஜயநீர், 1-ஔன்ஸ் ஆலீவ் ஆயல் என்னும் எண்ணெய், 3-ஔன்ஸ். மிஸ்ரமித்துக் குலிக்கிக் கொள்ளவும். இருமலுக்கு மார்பிலும், தொண்டையிலும், வாதங்களுக்கு மூட்டுகளிலும் பூச நல்லதைலம். (Solution of Ammonia 1 foz ; Olive oil, = Olive oil 3 foz.) Stimulant rubefa ent.

ஆக்கிராண உப்பு

முகருகிற உப்பு ; நவாக்ஷார உப்பு. ఘ్రాణఉప్పు. கார்பொனேட் ஆவ் அம்மோனியா, CARBONATE OF AMMONIA, அம்மோனியீ கார்போனஸ், AMMONIÆ CARBONUS ; AMMONIÆ SESQUICARBONAS.

நவக்ஷாரத்துடன் சீமைசுண்ணும்பு சேர்த்துப் பதங்கித்து எடுக்கிற இந்த உப்பானது, கட்டிகளாய், நெடியுள்ள வாசனையுடையதாய், காரத்துக்குடைய குணங்களுண்டு ; குளிர்ந்த ஜலத்தில் கரையும் ; சாராயத்தில் செவ்வையாய்க் கரையமாட்டாது ; எரித்தால் எல்லாம் பரந்துவிடும் ; புளிப்புகளைச் சேர்தால், நுரைத்துக் கரைந்துவிடும்.

செய்கை.—ஆம்லநாஸ, உஷ்ண சுவேத, கபஹார குணங்களுண்டு ; அதிகமாய்க் கொடுத்தால், வாந்தியாகும் ; அளவுக்கு மிஞ்சினல் விஷமிக்கும், Antacid, stimulant diaphoretic expectorant, emetic.

உபயோகம்.—குலையெரிவு, ஈரக்குழியில் வேதனை,இவைகளை உடனே தணிக்கும் ; அக்கி, பித்தத்தழும்பு முக்கியமாய் குஷ்டம், சொறிசிரங்கு முதலிய சருமவியாதிகள் ஆகிய இவைகளுக்கு எடுத்தமருந்து. நாள்பட்ட இருமலுக்குக் கொடுக்க உதவும் ; சூதகச்சந்நி, காக்கைவலி, பிரஸவபயித்தியம், ஸ்தம்பவாதம், தொடைவாழை, இரைப்பு இவை முதலிய வியாதிகளுக்கு உபயோகித்து, சவுக்கியம் கண்டதுண்டு. மதுமூத்திரத்துக்கு கொடுக்கச் சொல்லுகிறுர்கள். சலதோஷம்,மூர்ச்சை,போதக்ஷயம் ஆகிய இவைகளுக்கு இதை முகரவைக்கலாம். In cardialgia, gastrodynia, erysipelas, urticaria, lepra, psoriasis, expectorant, hysteria, epilepsy, puerperal mania, paralysis, diabetes, syncope, &c.

மாத்திரை.—5-15 கிறேன் எடை ஜலத்தில் கலந்து கொடுக்கலாம் ; 30-கிறேன் தொடுத்தால் வாந்தியாகும். 5-15 grs ; 30 grs. emetic.

ஆரோமாடிக் ஸ்பிரிட் ஆவ் அம்மோனியா.(Aromatic Spirit of Ammonia; ஸ்பிரிடஸ் அம்மோனியி ஆரோமாடிகஸ், Spirtus Ammoniæ Aromaticus.) செய்முறை.—அக்கிராண உப்பு, 8-ஔன்ஸ் ; காரமுள்ள நவக்ஷார ஜயநீர். 4-ஔன்ஸ் ; சாதிக்காய்த் தயிலம், 4-திராம் ; எலுமிச்சம்பழத்தயிலம், 6-திராம் ; ரெக்டிபைட் சாராயம் 6-பைன்ட் ; ஜலம் 3-பைன்ட். மிஸ்ரமித்து, வாலையிலிட்டு, 7-பைன்டுக்கு வடித்து எடுத்துக்கொள்ளவும். செய்கை, உபயோகம்.—ஸ்பிரிட் ஆவ் சால்வலாடிலி, (Spirit of Salvalatile) என்னும் வெகுநாளாய் உபயோகப்படுத்துக்கொண்டுவருகிற இந்த திவ்

வியமருந்தை, உஷ்ணகாரியாக மூர்ச்சை, சந்நி, தளர்ச்சி, வயிற்றுவலி முதலிய ரோகங்களுக்குக் கொடுக்கலாம். இதற்கு நல்ல வாசனையும், ருசியும் இருப்பதினால், லைகர் அம்மோனியாவுக்குப் பதிலாக உபயோகப்படுத்துகிறார்கள், ஆனால் அதற்கிது வேகத்தில் குறைவு, குணத்தில் ஒன்று. மாத்திரை.—30-60 மினிம் வீதம் ஜலத்தில் கலந்து கொடுக்கலாம். (Carbonate of Ammonia, 8 oz.; Strong solution of Ammonia, 4 foz.; Volatile Oil of Nutmeg, 4 fdrs.; Oil of Lemon, 6 fdrs; Rectified Spirit, 6 pints; Water, 3 pints.) In syncope, hysteria nervous debility, flatulant colic, &c. *Dose.*—30-60 minims.

பிடிட் ஸ்பிரிட் ஆவ் அம்மோனியா. (Fetid Spirit of Ammonia; Spiritus Ammoniæ Fetidus.) இதற்கு உஷ்ண, அங்காகர்ஷண நாஸகாரி குணங்களுண்டு. மாத்திரை.—$\frac{1}{2}$-1 டிராம் வீதம் கொடுக்கலாம். Stimulant, antispasmodic. *Dose.*—$\frac{1}{2}$-1 fdr.

லைகர் அம்மோனியீ அஸிடேடிஸ். (Liquor Ammoniæ Acetatis - ஸொலூஷன் ஆவ் தி அஸிடேட் ஆவ் அம்மோனியா, Solution of the Acetate of Ammonia.) செய்முறை.—அஸிடிக் ஆசிட், 10-ஔன்ஸ்; கார்பொனேட் ஆவ் அம்மோனியா, $3\frac{1}{4}$-ஔன்ஸ், அல்லது தேவையானது; தீநீர் $2\frac{1}{2}$-பைன்ட். ஆக்கிராண உப்பைப் பொடித்து, காடியோடு கொஞ்சங் கொஞ்சமாக, நியூட்ரல் ஆகிறவரையில் சேர்த்து பிறகு ஜலத்தை விட்டுக்கொள்ளவும். செய்கை.—சீதளகாரி, சுவேதகாரி. உபயோகம்.—சுரம், தாபனம், இருமல் இவைகளுக்குக் கொடுக்கிற சீதள, சுவேத மருந்துகளோடு சேர்த்துக்கொடுக்க திவ்விய மருத்து. ஜலத்தில் கலந்து கிலேதமாக, தாபனம், கண்ணோவு இவைகளுக்குப் போடலாம். மாத்திரை.—2-6 டிராம் வீதம் ஜலத்தில் கலந்து, 3-4 மணிக்கொரு தடவை கொடுக்கலாம். (Aceti Acid, 10 foz.; Carbonate of Ammonia, $3\frac{1}{4}$ ox. or a sufficiency; Distilled Water, $2\frac{1}{2}$ pints.) *Dose.*—2-6 fdrs.

நவாச்சாரம்

నవాసారము. அம்மோனியிகுளோரிடம், AMMONIÆ CHLORIDUM, CHLORIDE OF AMMONIUM; AMMONIÆ HYDROCHLORAS; AMMONIÆ MURIAS; ஸால் அம்மோனியாக், SALAMMONIAC.

கடைச்சரக்கில் தோஷங்களுண்டு; அதை வெந்நீரில் கரைத்து, நார் துணியில் வடிகட்டி, ஜலத்தைச் சுண்டவைத்தால், உப்பு கட்டிவிடும். இந்தச் சரக்கு வெள்ளையாய், வாசனையில்லாமல், நார்நாராய், தூள்செய்யக் கடினமாய், ஜலத்திலும் ரெக்டிபைட் சாராயத்திலும் கரையத்தக்கதாய் இருக்கும்.

செய்கை.—கொஞ்சமாய், விடாமல் கொடுத்தால் வியதாபேதகாரியாகும்; மாத்திரையைக் கூட்டிக்கொடுத்தால் உஷ்ணகாரியாகும், முக்கியமாய் நிணநரம்புகள், மாமிஸகிரந்திகள் இவைகளின்மேல் தன் வேகத்தைச் செலுத்தும் Alterative stimulant.

உபயோகம்.—நுரையீரல், யகிர்த்கண்டம், பிலீகம் ஆகிய இவைகளின் நாள்பட்ட வியாதிகள், நீர்க்கோவை, ரத்தகாசம், முகசந்நி, சூரியாவர்த்தவாதம், சூதகக்கட்டு, கக்கிருமல், முறைக்காச்சல், விடாக்காச்சல் ஆகிய இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுத்து சவுக்கியம் கண்டதுண்டு. இதை ஜலத்தில் கரைத்து, ஊமைக்கட்டிகள், மாம்ஸகிரந்தி வீக்கங்கள், ஸ்தனவித்திருதி, நீர்அண்டம், காயங்கள், சுளுக்குகள் ஆகிய இவைகளுக்குமேலே

போட்டுக்கொண்டு வருவதுண்டு. In chronic affections of the lungs, liver and spleen, dropsy, hæmoptysis, neuralgia and rheumatic affections of the face, nervous headaches, amenorrhœa, hooping cough, intermittent and continued fevers. Externally to tumours enlarged glands, mammary abscess, hydrocele, bruises, sprains, skin diseases.

மாத்திரை.—5-15 கிறேன் வீதம், ஜலத்தில் கரைத்து, தினம் 2-3 தடவை நாள்பட்ட வியாதிகளுக்குக் கொடுக்கலாம்; வாதரோவுகளை நிறுத்த, ½-டிராம் வீதம் 3-4-மணிக்கொருதவணை, 2-திராம் ஆகிற வரையில் கொடுக்கலாம். 10-ஔன்ஸ் ஜலத்துக்கு, ½-1 ஔன்ஸ் நவாச்சாரம் சேர்த்து, கிலோதம் செய்துகொள்ளலாம். நவச்சாரம், 5-ஔன்ஸ்; ஜலம், 19-ஔன்ஸ். இவைகளைச் சேர்த்துக்கொண்டால் மெத்தக் குளிர்ச்சியானதாய் இருக்கும்; பனிக்கட்டி அகப்படாதபோது, இதை வெளிக்கு உபயோகிக்கலாம்.

மர உப்புக்காரம்

మాని ఉప్పుకారం காஸ்டிக் பொடாஷ். CAUSTIC POTASH ; POTASSA CAUSTICA ; HYDRATE OF POTASSIUM.

மர உப்பு ஐயநீரை (Liquor Potassæ.) வெள்ளி அல்லது இரும்புபாத்திரத்தில் ஊற்றி, எண்ணெய் பதத்துக்குக் காய்ச்சி அச்சிலூத்தியெடுக்கிற இந்தச் சரக்கு, வெள்ளைப்பென்சல் மாதிரியாய் இருக்கும், காற்றில் வெகு சீக்கிரத்தில் கரைந்துவிடும் ; புண்ணுக்குகிற குணமுண்டு. செய்கை.—விரணகாரி ; உள்ளுக் கெடுத்துக்கொண்டால், வயிற்றைப் புண்ணுக்கிக்கொல்லும். உபயோகம்.— சீழ்க்கட்டிகளுக்குத் தடவினல், முகம்வைத்து, சீழ் வெளிக்கு வந்துவிடும் ; மறுவுக்கும் தடவலாம். Caustic and escharotic.

மரஉப்பு ஐயநீர்

ஸொலூஷன் ஆவ் பொடாஷ், Solution of Potash ; லைகர்பொடாஸி, Liquor Potassæ.

ஜலரூபமான இந்த மருந்துக்கு, ஆம்லநாச, வியதாபேத, மூத்திரவர்த்தன குணங்களுண்டு ; அதிகமானல் கொல்லும். குலே எரிவு, நாள்பட்ட கீல்வாதம், க்ஷயம், சருமரோகங்கள் இவை முதலிய ரோகங்களுக்குக் கொடுத்து சவுக்கியம் கண்டதுண்டு. மாத்திரை.—15-60-மினிம், ஜலத்தில் கலந்து கொடுக்கலாம். Dose.—15-60 minims.

மரஉப்பு

சாம்பலுப்பு ; கட்டைச்சாம்பல் ; காரம். మాని ఉప్పు, బూడిదేఉప్పు கார்பொனேட் ஆவ் பொடாஷ், CARBONATE OF POTASH ; POTASSÆ CARBONAS

பேரல் ஆஷ் (Pearl ash) என்னும் சாம்பலிலிருந்து எடுக்கிற இந்த உப்பானது, வெளுத்துப் பொடியாய், விறுவிறுப்பாய் இருக்கும், வெகு சீக்கிரத்தில் நீராகிவிடும் ; ஜலத்தில் வெகுசீக்கிரத்தில் கரையும் ; சாராயத்தில் கரையாது.

செய்கை, உபயோகம்.—லைகர் பொடாஸியம் என்னும் ஜலத்துக்கு இது ஒத்திருக்கும். ஆனால் சக்தி குறைவு நாள்படக் கொடுக்கலாம். 1-பைன்ட் ஜலத்தில், ½-டிராம் மேற்படி உப்புபோட்டுக் கரைத்து, சருமரோகங்களுக்குத் தடவலாம்.

மாத்திரை.—10-30-கிறேன் வீதம் ஜலத்தில் கொடுக்கலாம். புளிப்பு சேர்த்து பொங்கு ஜலமாகவும் செய்துகொள்ளலாம். Dose.—10-30-grs.

நமது தேசத்தில்,பனையோலை,வாழைச்சரகு இவைகளைச் சுட்டெடுக்கிற சாம்பலும், தோஷமுள்ள மரஉப்புதான் ; அந்த தோஷஸ்திதியில் உள்ளுக்குக் கொடுக்கலாகாது நாயுருவிப்பூண்டில் மெத்த மரஉப்புண்டு.

பைகார்போனேட் ஆவ் பொடாஷ். (Bicarbonate of Potash ; Potassæ Bicarbonas). இது வெள்ளைக் கட்டிகளாய் இருக்கும்; நீராகாது, உப்புகரிக்கும், புண்ணாக்காது. செய்கை, உபயோகம்.—மர உப்புக்கொத்திருக்கும், ஆனால் வீரியம் குறைவு. மாத்திரை.—10-40-கிறேன் கொடுக்கலாம். பொங்குநீருக்கு, 20-கிறேன் உப்புக்கு, 14-கிறேன் சிட்ரிக் ஆசிட் அல்லது 15-கிறேன் டார்டாரிக் ஆசிட் வேண்டியதாகும். Dose.—10-40-grt.

ஸல்பேட் ஆவ் பொடாஷ். సల్ఫేటు ఆవ్ పొటాష్. SULPHATE OF POTASH ; POTASSÆ SULPHAS. வெள்ளைக்கட்டிகளாய் இருக்கிற இந்த உப்புக்கு,மலகாரிகுணமுண்டு; குன்மம், பித்தப்பாண்டு முதலிய வியாதிகளுக்கு சுகபேதியாக இதைக் கொடுப்பதுமுண்டு. Aparient in dyspepsia, jaundice, &c. மாத்திரை.—10. 60-கிறேன் வீதம்,ரூபார்ப்பினோடு கொடுக்கலாம். 10-60-grs.

குளோரேட் ஆவ் பொடாஷ். క్లోరేటు ఆవ్ పొటాష్. (Chlorate of Potash; Potassæ Cloras.)வெள்ளைத் தகடுகளாய் இருக்கிற இந்த உப்புக்கு, உவர்ப்பு குணமுண்டு ; ஜலத்தில் அதிகமாய்க் கரையாது ; கந்தகத்தோடு அரைத்தால் வெடிக்கும். செய்கை.— சீதள, மூத்திரவர்த்தன, வியதாபேதகாரி குணங்களுண்டு. Refrigerant, diuretic, alterative. உபயோகம்.—விஷசுரத்துக்குக் கொடுக்க திவ்வியமருந்து. நாள்பட்ட இருமல், க்ஷயம், பித்தபாண்டு முதலிய வியாதிகளுக்குக் கொடுத்து பிரயோசனம் கண்டதுண்டு. In typhoid fever, chronic bronchitis, phthisis jaundisce, &c. மாத்திரை.—10, 20-கிறேன் வீதம் ஜலத்தில் கலந்து கொடுக்கலாம். 10-20-grs.

வெடியுப்பு

பொட்டிலுப்பு. சம்பி உப்பு, யவக்ஷாரம். సూరాకారం పొట్లుప్పు
ஸால்ட்பீடர், SALTPETRE ; நைட்ரேட் ஆவ்
பொடாஷ், NATRATE OF POTASH ; பொடாஸி
நைட்ரஸ், POTASSÆ NITRAS.

இது பிறவிச்சரக்கு சுத்தி செய்துகொள்ளப்படுகின்றது. சுத்திசெய்த வெடியுப்பானது, வெள்ளைப்பளிங்கு கம்பிகளாய் வாயிலிட்டால் குளிர்ச்சியான உவர்ப்பாயிருக்கும் ; நெருப்பிலிட்டால் பொரியும். தோஷங்களுடைய கடைச்சரக்கை, வெந்நீரில் கரைத்து, நுரையை எடுத்துவிட்டு, தெளியவைத்து, நார்துணியில் வடிகட்டி அசையாமல் வைத்துவிட்டால், உப்பு கட்டும்.

செய்கை.—சீதள, மூத்திரவர்த்தன, சுவேத குணங்களுண்டு. மெத்த ஜலத்தில் கரைத்துக் கொடுக்கவேண்டியது. கட்டியாய் சாப்பிட்டால் எரிச்சலைத் தரும்; மிதத்துக்கதிகமானால் கொல்லும். மேலே போட்டால், குளிர்ச்சியைத்தரும்; Refrigerant, diuretic, diaphoretic.

உபயோகம்.—முக்கியமாய் சுரம், தாபனம், கீல்வாதம், ரத்தபித்தம் நீர்க்கோவை, சூதகச்சூலை, பிரமேகம், கருமபமேகம், குன்மம் ஆகிய இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கப்படுகின்றது. ஜலத்தில் கலந்து கண்ணுக்குக் கிலேதம் போடலாம்; தொண்டை விரணத்துக்குக் கொப்புளிக்கலாம்; இதற்குச் சமன் நவக்ஷாரம் சேர்த்து, கிலேதம் செய்து வீக்கங்களுக்கு உபயோகிக்கலாம். ஊறுகிற கடுதாசியை வெடியுப்பு ஜலத்தில் கரைத்து, உலரவைத்து, சுருட்டி கொளுத்தி அதின் புகையை, சுவாசகாசம் முதலிய இசிவு இருமல்களுக்கு ஆக்கிராணிக்கலாம். In fevers, inflammations, rheumatism, dropsies, dysmenorrhœa, gonorrhœa, ophthalmia, asthma.

மாத்திரை.—10-30 கிறேன்வீதம் ஜலத்தில் கரைத்துக் கொடுக்கலாம். 10-30-grs.

டார்ட்ரேட் அவ் பொடாஷ். Tartrate of Potash; பொடாஸி டார்ட்ரஸ், Potassæ Tartras. இந்த வெள்ளை உப்பை, 40-கிறேன் முதல், $1\frac{1}{2}$-டிராம் அளவில் கொடுத்தால், மூத்திரம் அதிகமாகும்; 2-4 டிராம் அல்லது இன்னம் அள ல் கூட்டிக்கொடுத்தால், பேதியாகும், Diuretic, purgative. 40 grs. to $1\frac{1}{2}$ drs ; 2-4 drs. purgative.

திராக்ஷ உப்பு

ద్రాక్షుప్పు. ஆஸிட்டார்ட்ரேட் ஆவ் பொடாஷ், Acid Tartrate of Potash; Potassæ Tartras Acida; Potassæ Bitartras Potassæ Bitartrate of Potash; கிரீம் ஆவ் டார்டர், Cream of Tartar.

திராட்ச சாராயம் புளிக்கும்போது, அடியில் படிகிற உப்பிலிருந்து (Argal) எடுக்கிற இந்த உப்பானது வெளுத்து, நறநறவென்று, புளிப்புள்ளதாயிருக்கும்; ஜலத்தில் கரைவது கஷ்டம், சாராயத்தில் சுத்தமாய்க் கரையாது.—(Rock salt) இந்துப்பு, கல்லுப்பு. ఇందుప్పు, సైంధలవణము. நமது கடைகளில் விற்கும் இந்த உப்பு, திராக்ஷ உப்பைப் பார்க்கிலும், வீரியம் அதிகம்; திராக்ஷ உப்புக்குப் பதிலாய், ஜாலப் முதலியவைகளோடு இதைச் சேர்த்துக்கொள்ளலாம்.

செய்கை.—சீதள, மூத்திரவர்த்தன, மலகாரி, குணங்களுண்டு; மாத்திரையில் கூட்டிக்கொடுத்தால், ஜலவிரேசனியாகும். Refrigerant, diuretic, laxative, hydragogue-cathartic.

உபயோகம்.—சுரம், தாபனம் இவைகளுக்கு, ஒரு குப்பி ஜலத்தில் சுமார் $1\frac{1}{2}$-டிராம் திராக்ஷ உப்போடு, இனிப்பேற்றி, தணுப்புண்டாக்கக் கொடுக்கலாம். விரேசன மூத்திரவர்த்தனிகளோடு சேர்த்து, நீர்க்கோவைக்குக் கொடுக்கலாம். In fevers, inflammations, dropsies.

மாத்திரை.—20-40-கிறேன் வீதம் ஜலத்தில் கலந்து கொடுத்தால், சீதள, மூத்திர வர்த்தனகாரிகளாகும்; 1-2-டிராம் கொடுத்தால் மலமிளகும் 3-4-டிராம் கொடுத்தால், தண்ணீராய்ப் பேதியாகும். 20-40 grs. refrigerant, and diuretic; 1-2 drs. aperient; 3-6 drs. hydragogue-cathartic.

அசிடேட் ஆவ் போடாஷ். (Acetate of Potash; பொடாஷி அஸிடஸ், Potassæ Acetas.) இந்த வெள்ளை உப்பு வெகு சீக்கிரத்தில் ஜலமாகிவிடும். செய்கை.—வியதாபேத மூத்திரவர்த்தனி குணங்களுண்டு; மாத்திரையில் கூட்டிக்கொடுத்தால், பேதியாகும். உபயோகம்.—நீர்க்கோவை, உக்கிர கீல்வாதம், நாள்பட்ட சருமரோகங்கள், பிரமேகம் ஆகிய இவை முதலியவைகளுக்குக் கொடுத்து, சவுக்கியம் கண்டதுண்டு. மாத்திரை.—20-40-கிறேன் வீதம் தினத்துக்கு, 3, 4 தடவை, மூத்திரவர்த்தன வியதாபேதகாரியாயும்,—2-3-டிராம் வீதம் பேதியாகவும் கொடுக்கலாம். Alterative, diuretic. In dropsy, acute rheumatism, chronic diseases of the skin, gonorrhœa, &c. Dose.—20-40 grs.; 2-3 drs. purgative.

ஐயோடைட் ஆவ் பொடாசியம்

ஐயோடைன் கலந்த மரஉப்பு ఐయొడిడ్ ఆఫ్ పొటాసియం. Iodide of Potassium; Potash Iodidum.

இந்த உப்பு வெள்ளையாய், மங்கலாய் கறியுப்புப்போல், கட்டிகளாய், ஜலத்தில் சீக்கிரத்தில் கரையத்தக்கதா யிருக்கும்; சாராயத்தில் மெத்தக் கரையாது. இது கரைந்திருக்கிற ஜலத்தை கஞ்சித்தண்ணீரில் கலந்து, கொஞ்சம் வெடியுப்புத் திராவகம் சேர்த்தால் நீலநிறமாகிவிடும்.

செய்கை.—வியதாபேத, மூத்திரவர்த்தன குணங்களுண்டு. நிணநரம்புகளை உஷ்ணிக்கும்; மேலே தடவினால் எரிச்சலுண்டாகும். Alterative, stimulant of the absorbent system, diuretic; locally irritant.

உபயோகம்.—ஐயோடைன் குணமே இதற்குமுண்டு. மேகவியாதிகள், கண்டமாலை ரோகங்கள் ஆகிய இவைகளுக்குக் கொடுக்க திவ்விய மருந்து. யகிர்த்கண்ட வீக்கம், பிலீக வீக்கம், நீர்க்கோவை, மூட்டுகளில் காணுகிற நீர்க்கோவை, கணுவாதம், கீல்வாதம், நாள்பட்ட இருமல், கணை, ரஸமூறிவு, மேகவேதனைகள் ஆகிய இவைகளுக்கும் கொடுத்தால் நன்மை செய்யும். சருமரோகங்களுக்கு மேலுக்குத் தடவினால், உள்ளுக்குக் கொடுப்பதோடு இதுவும் சகாயப்படுத்தும். In secondary syphilis, scrofula, enlargement of the liver and spleen, gout, rheumatism, &c.

மாத்திரை.—2-10-கிறேன் வீதம், தினத்துக்கு 2-3 தரம் ஜலத்தில் கொடுக்கலாம். 2-10 grs.

பூநீறுப்பு

பூநீறு, உழமண், உழமண் உப்பு, உவர்மண் உப்பு, சவட்டுமண் உப்பு, காரம். చవుట్టిమన్ను ఉప్పు. கர்போனேட் ஆவ் சோடா, Carbonate of Soda; ஸோடி கார்போனஸ், Sodæ Carbonas.

கடல் பூண்டுகளின் சாம்பலிலிருந்தாவது, அல்லது சல்பேட் ஆவ் ஸோடா என்னும் உப்பை முறித்தாவது எடுக்கிற இந்தச் சரக்கு வெள்ளையாய், உவர்ப்பாய் இருக்கும்; ஜலத்தில் கரையும் சாராயத்தில் கரையாது.—பூநீறும் மண்ணும் கலந்திருப்பதற்கு, உழமண்ணென்று பேர்; உழமண்ணில் தோஷங்கள் மெத்த உண்டு. பூநீரானது லேசாய் வெளுத்திருக்கும்; அதில் கார்பொனேட் ஆவ் ஸோடா அதிகமாய் இருக்கும்; ஹிந்து வைத்தியர்கள், உவர்மண்ணிலும், பூநீரிலும் இருந்து, கார்பொனேட் ஆவ் ஸோடாவை எடுக்கிறார்கள். வளையலுப்பு என்பதும் கார்பொனேட் ஆவ் ஸோடாதான்;

வளையல் செய்வதில் இந்த உப்பை உபயோகிப்பதினால், வளையல் உப்பு என்று பேர் பெற்றது. பூநீறை ஸோடாவென்று சொல்லுவது வழக்கம்.—நமது தேசத்தில், 2-3 சாதி பூண்டுகளைச் சுட்டும், இந்த உப்பு எடுக்கிறார்கள்; அதற்கும், உழமண்ணுக்கும் வித்தியாசமுண்டு.

செய்கை, உபயோகம்.—பைகார்பொனேட் ஆவ் ஸோடா என்னும் உப்புக்கொற்றிருக்கும்.

மாத்திரை.—5-30 கிறேன் வீதம் ஜலத்தில் கரைத்துக் கொடுக்கலாம். பொங்குநீர் செய்வதற்கு, 20-கிறேன் ஸோடாவுக்கு, சுமார் $9\frac{3}{4}$-கிறேன் ஸிட்ரிக் ஆஸிட், $10\frac{1}{2}$-கிறேன் டார்டாரிக் ஆஸிட், அல்லது $2\frac{1}{2}$-டிராம் எலுமிச்சம்பழரசம் சேர்த்துக் கொள்ளவேண்டியது. 5-30 grs.

உலர்த்திய பூநீறுப்பு, (ட்ரைட்கார்பொனேட் ஆவ் ஸோடா, Dried Carbonate of Soda; Sodœ Carbonas Exsiccata.) உப்பை வாலுகாயந்திரத்தில் வைத்து, நீரைப்போக்கி, தூள்செய்து வைத்துக்கொண்டதில், 3-10 கிறேன் வீதம் கொடுக்கலாம். 3-10 grs.

பைகார் பொனேட் ஆவ் ஸோடா, బైకార్ బొనేట్ ఆవ్ సోడా. (Bicarbonate of Soda; ஸோடபைகார்போனஸ், Sodæ Bicar bonas.) செய்கை.—இந்த வளுத்த உவர் உப்புக்கு, ஆம்லநாச, வியதாபேதகாரி குணங்களுண்டு. Antacid, alterative. உபயோகம்.—வயிற்றுப்புளிப்பு, குலை எரிவு, பேதி, வயிறுப்பிசம், மந்தவாந்தி ஆகிய இவைகளுக்கு எடுத்த மருந்து; கீல்வாதத்துக்கும், சிலசருமரோகங்களுக்கும் உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகித்து, சவுக்கியம் கண்டதுண்டு. In acidity, cardialgia, diarrhœa, flatulence, vomiting, rheumatism, chronic skin diseases, &c. மாத்திரை.—15-40 கிறேன் எடை ஜலத்தில் கலந்து கொடுக்கலாம் 15-40 grs.

வெங்காரம்

பொரிகாரம். వెలిగారము. போராக்ஸ், Borax; Biborate of Soda; Sodæ Biboras.

திபெட் முதலிய இடங்களிலிருக்கும் ஏரிகளின் ஜலம் வற்றி, இந்த உப்பு உண்டாகிறது; ஆனால் அதில் தோஷங்களுண்டு, பூநீரோடு, பொராசிக் ஆஸிட் என்னும் புளிப்பைச் செய்வதும் உண்டு. கடைச்சரக்குமேல் தூள்படிந்திருக்கும்; சாராயத்தில் கரையாத, தேவையிருந்தால், சுத்திசெய்து கொள்ளலாம். 1-ராத்தல், வெங்காரத்தை, 3-பைன்ட் ஜலத்திலிட்டு, 1-டிராம் சுண்ணாம்பு சேர்த்து காச்சி துணியில் வடிகட்டி, உப்பு கட்டும்படி சுண்டவைத்துக் கொள்ளவும்.

செய்கை.—சீதள, மூத்திரவர்த்தன, ருதுவர்த்தன, பிரசவ, ஹஸ்மரீஹர காரிகுணங்களுண்டு; மேலே போட்டால் உஷ்ணிக்கும், Refrigerant, diuretic, emmenagogue, parturifacient? lithontriptic; *locally* stimulant.

உபயோகம்.—சூதகப்பாண்டு, சூதகக்கட்டு, சூதகச்சூலை, பெரும்பாடு இவைகளுக்குக் கொடுத்து சவுக்கியம் கண்டதாய்த் தெரியவருகின்றது; நீர்க்கோவை, பிரஸவ அதிசாரம், மந்தப் பிரஸவவேதனையில் கருப்பையைச் சுருங்கச்செய்யவும், உள்ளுக்குக் கொடுத்திருப்பதுண்டு, ஆனால் வேறு வீரியமுள்ள மருந்துகளோடு சேர்த்துக் கொடுத்தபடியால் இதின் குணத்தை நிஷ்சயப்படுத்துவது கடினமாகிறது. வாய்ரணம், முலைக்காம்பு விரணம்

சருமரோகங்கள் இவைகளுக்கு மேலுக்குபயோகித்தால் நல்லகுணம் செய்யும். In chlorosis, amenorrhœa, dysmenorrhœa, uterine hæmorrhage, dropsical affections, puerperal diarrhœa, tedious labours, aphthæ, sore nipples, skin diseases, &c.

மாத்திரை.—10-20 கிறேன் கொடுக்கலாம். 10-30 grs.

வெங்காரமது. (போராக்ஸ் ஹனி, Borax Honey; மெல்பொரேஸிஸ், Melboracis). செய்முறை.—வெங்காரத்தூள், 64-கிறேன்; முறித்ததேன், 1-ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும் வாய் ரணங்கள், அக்ஷரம் இவைகளுக்குத் தடவ இது நல்லமருந்து. Borax, 64 grs.; clarified Honey, 1 oz.

கறியுப்பு

சோற்றுப்பு, கடலுப்பு, சமுத்திர உப்பு, ఉప్పు, లవణము. காமன் சால்ட். Common Salt; குளோரைட் ஆவ் ஸோடியம், Chloride of Sodium; Sodii Chloridum.

இது சமுத்திர ஜலத்தில் விஸ்தாரமுண்டு; கல்லுப்பில் (Rock Salt) இதையும், கந்தக அயமும் காணலாம். சில விடங்களில் கருப்புப்பை(ನಲ, ಕಉಪ್ಪು)செய்வதுண்டு; அதை நமது ஜனங்கள் வெகு சிலாக்கித்துப் பேசுகிறார்கள். பீலிகம், யகிர்த்கண்ட வியாதிகளுக்குக் கொடுத்துச் சவுக்கியமுண்டானதாய்த் தெரியவருகின்றது.

செய்கை.—கொஞ்சமாய்க் கொடுத்துக்கொண்டு வந்தால், தீபனம் அதிகமாகும், சீரணம் செவ்வையாகும்படிச் செய்யும்; மாத்திரையைக் கூட்டிக்கொடுத்தால், வமன விரேசன குணத்தைக்காட்டும். கிருமிநாசகாரி, மேலே போட்டால் சோணகாரியாகும். Peptic, emetic, purgative, anthelmintic, rubefacient.

உபயோகம்.—குன்மம், பாலபேதி, முறைக்காச்சல், ரத்தவாந்தி, க்ஷயம் இவைகளுக்கு உப்பைக்கொடுத்து சவுக்கியம் கண்டதாய்ச் சொல்லுகிறார்கள்; காடிக்கார முறிவுக்கு இதைக் கொடுக்கலாம். வீக்கம், மூட்டு வியாதிகள் இவைகளுக்கு உப்பை வறுத்து ஒற்றிடம் கொடுப்பதில் சவுக்கியம் கண்டதுண்டு. In dyspepsia, infantile diarrhœa, ague, hæmoptysis, phthisis; an antidote for nitrate of silver; as epithem in scrofulous glandular enlargements, and diseases of the joints.

மாத்திரை.—10-20 கிறேன் எடைக்கு அதிகமாய், தீபனவர்த்தனத்துக்குக்கொடுக்கலாம். ½-1-ஔன்ஸ், பேதியாகும்; 1½-2-ஔன்ஸ் வெந்நீர் கலந்து கொடுத்தால், வாந்தியாகும்; சமுத்திரஸ்தானத்திக்குப் பதிலாய், 1-ராத்தல் உப்புக்கு, 3-காலன் ஜலம்விட்டுக் கரைத்து, உபயோகப்படுத்திக் கொள்ளலாம். 10-20 grs. Peptic; ½-1 oz. purgative; 1½-2 oz. emetic.

சொலூஷன் ஆவ் குளோரிநேடெட் ஸோடா. (Solution of Chlorinated Soda; லிகர்ஸோடி குளோரேடி, Liquor Sodæ Chloratæ.) செய்கை.—இந்த திரவத்துக்கு, உஷ்ண, தாருட்டிய காரிகுணங்களும், வெளிக்கு உபயோகித்தால், உஷ்ண, சங்கோசன, பூதிநாசகாரி குணங்களும் உண்டு. Stimulant, tonic, and antiseptic; *externally* stimulant, astringent and deodorizing. உபயோகம்.—விஷசுரங்கள், ஸ்போடகசுரங்கள் இவைகளுக்குக் கொடுக்க நல்லமருந்து. வாய், ஈறு இவைகளின் ரணம், காது

முதலியவைகளிலிருந்து வடிகிற துர்கந்த நீர்கள், மேகச்சொறி, அழிவிரணம் ஆகிய இவைகளுக்கு உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகித்தால், சவுக்கியம் உண்டாகும்; இவைகளில் நாற்றத்தைப் போக்கி, ஆறுகிற பதத்துக்குக் கொண்டுவருகின்றது. In typhus and typhoid fevers, exanthemata, sore throat and gums, fetid discharges, from the vagina and ears, skin diseases, gangrene &c. மாத்திரை.—10-30 மினிம் ஜலத்தில் கலந்து கொடுக்கலாம. வாய் கொப்புளிக்க, 1-க்கு 15 பங்கும், ரணங்கள் முதலியவைகள் கழுவ, 1-க்கு 10-15 பங்குமாக ஜலம் விட்டுக்கொள்ளவேண்டியது. 10-30 minims.

ஸல்பேட் ஆவ் ஸோடா

SULPHATE OF SODA; ஸோடி சல்பஸ், SODÆ SULPHAS; குளோபர்ஸ் சால்ட், GLAUBER'S SALT.

இந்த உப்பு வெள்ளையாய், உவர்ப்பும் கசப்புமுள்ளதாய் இருக்கும்; காற்றுப்பட்டால், மேலே தூள்போல்படியும், ஜலத்தில் கரையும் சாராயத்தில் கரையாது. அயோத்தியா முதலிய இடங்களில் இந்த உப்பு பூமியில் விஸ்தாரமாக விளைகிறது, சடையில் கட்டிகளாய் விற்பதுண்டு; அதற்கு காரிமாட்டி என்று துலுக்குப் பேர்

செய்கை. உபயோகம்.—விரேசனி, ஸல்பேட் ஆவ் மாக்நீஷியா என்னும் உப்புக்கொற்றிருக்கும் Purgative.

மாத்திரை.—½-1-ஔன்ஸ் வீதம் ஜலத்தில் கலந்து கொடுக்கலாம்; நீர் வற்றி தூளாய் இருப்பதில் இதற்குப் பாதி கொடுத்தால் போதும். ½-1 oz.

டார்டெரேடெட் ஸோடா

TARTARATED SODA; ஸோடா டார்டெரேடா, SODA TARTARATA; SODÆET POTASSÆ TARTRAS; POTASSIO-TARTRATE OF SODA. ரோசெல் ஸால்ட்; ROCHELLE SALT.

திராக்ஷ உப்புடன், பூநீருப்பைச் சேர்த்து எடுக்கிற இந்த உப்பானது வெளுத்து, கறி உப்புப்போல் உவர்ப்பாய் இருக்கும்.

செய்கை.—குறைந்த பிரமாணத்தில் கொடுத்தால் மூத்திரவர்த்தனியாகவும், அதிகமாய்க் கொடுத்தால், விரேசனியாகவும், குணத்தைக் காட்டும். Diuretic, purgative.

உபயோகம்.—சுரம், தாபனங்கள், பிரசவித்த பெண்களுக்குக் காணுகிற மலபந்தம் இவைகளுக்கு இதைக் கொடுத்தால், சாந்தமாய் பேதியாகும். கணுவாதம், கீல்வாதம், அஸ்மரிரோகம் ஆகிய இவைகளுக்குக் கொடுத்தால் மூத்திரத்தின் புளிப்பைக் கண்டிக்கும் In fevers, inflammations, puerperal state, gout, &c.

மாத்திரை.—20-40-கிறேன் கொடுத்தால் மூத்திரம் அதிகப்படும்; 2-8 டிராம், பேதியாகும். ஜலத்தில் கலந்து கொடுக்கலாம். 2-டிராம். டார்டெரேடெட் ஸோடா; 40-கிறேன், பைகார்பொனேட் ஆவ் ஸோடா, இவைகளைச் சேர்த்தால் செட்லிட் பவுடர் (Seidlitz powders.) என்னும் உப்பாகிறது. அதை-½-பைன்ட் ஜலத்தில் கலந்து, ½-டிராம் டார்டாரிக் ஆஸிட் என்னும் புளிப்பைச் சேர்த்தால் பொங்கும்; அப்போதே குடித்துவிடவேண்டியது. சவுக்கியமாய் உபத்திரவமில்லாமல் பேதியாகும்.

சுண்ணும்பு ஜலம்

சுண்ணும்பித்தண்ணீர், సున్నపునీళ్లు. லைம் வாடர், LIME WATER; SOLUTION OF LIME; LIQUOR CALCIS.

செய்முறை.—தாளித்த சுண்ணும்பு 2-ஔன்ஸ்; ஜலம், 1-காலன். ஒரு கல்லடைப்புள்ள குப்பியில் ஜலத்தைவிட்டு சுண்ணும்பைப்போட்டு, 2-3 நிமிஷம்வரையில் செவ்வையாகக் குலுக்கி, 12-மணிநேரம் சென்ற பிறகு, தெளிந்தஜலத்தை இறுத்துக்கொண்டு, பச்சைபுட்டியில் விட்டு, காற்றுபுகாம லடைத்துக்கொள்ளவேண்டியது.

செய்கை.—ஆம்லநாஸ், வியதாபேத, சங்கோசனகாரி குணங்களுண்டு. Antacid, alterative, astringent.

உபயோகம்.—வயிற்றில் புளிப்பு, அக்கினிமந்தம், அதனுல் காணுகிற பேதி ஆகிய இவைகளுக்குக் கொடுக்க நல்லமருந்து. திராவகங்கள் முறி வுக்கு இது கொடுக்க உதவும். ரணங்களுக்கும், சருமரோகங்களுக்கும் போடலாம். In acidity of the primæ viæ, dyspepsia, diarrhœa, antidote for mineral acids, &c.

மாத்திரை.—1-4-ஔன்ஸ் வீதம் தினத்துக்கு 1-3 தடவை கொடுக்க லாம். பால் சேர்த்துக்கொடுப்பது நல்லது. 1-4 foz.

நீர்வெண்ணெய். சுண்ணும்பு ஜலத்தயிலம், (லினிமெண்ட் ஆவ் லைம், Liniment of Lime, லினிமெண்டம் கால்ஸிஸ், Linimentum Calcis; சாரன் ஆயல், Carron oil.) செய்முறை.—சுண்ணும்பு ஜலம், 2-ஔன்ஸ்; தேங்காயெண்ணெய் (Olive oil) 2-ஔன்ஸ் சேர்த்து குலுக்கிக்கொள்ள வும். உபயோகம்.—நெருப்பு, வெந்நீர் இவைகள் பட்டு உண்டாகிற விர ணங்களுக்குப்போட திவ்விய ஔஷதம்.

சுத்திசெய்த சீமைச்சுண்ணும்பு

సుద్ధిఅయిన సీమసున్నము. பிரிபேர்ட்சாக், PREPARED CHALK; கிரீடா பிரிபெரேடா, CRETA PRÆPARATA.

கடைச்சரக்கை ஜலம் விட்டரைத்து, பிறகு ஜலத்தில் கலக்கி, தெளிய வைத்து, அடியில் படிகிறதை எடுத்து உலர்த்திக்கொள்ளுகிற இந்த சன்ன சூரணமானது வெளுத்து நீறுபோலிருக்கும், திராவகம்விட்டால் பொங் கும்.

செய்கை.—ஆம்லநாஸ, சங்கோசனகாரி குணங்களுண்டு; ரணங்களின் சீழை வறட்டும். Antacid, astringent, absorbent.

உபயோகம்.—மந்தபேதி, இருமல் ரோகத்தில் கடசியில் காணுகிற அதிசாரம் இவைகளுக்கு அடியில்வருகிற குழம்பைக் கொடுக்கலாம். ரணங் களுக்கு இதின் சன்னப்பொடியைத் தூவினுல், சீழைக்கிரகித்து ரணம் வியாபிக்காமல் செய்யும், அதின்மேல் போல்டீஸ் போடவேண்டியது. In diarrhœa, ulcers, burns, &c.

சீமைச்சுண்ணும்புக்குழம்பு. (சாக்மிக்ஸ்சர், Chalk Mixture; மிஸ்டியூ ராகிரிடீ, Mistura Cretæ.) செய்முறை.—சுத்திசெய்த சீமைச் சுண்ணும்பு, $\frac{1}{4}$-ஔன்ஸ; விளாம்பிசினித்தூள், $\frac{1}{4}$-ஔன்ஸ் · சருக்கரைப்பாகு, $\frac{1}{2}$-ஔன்ஸ், கருவாப்பட்டை ஜலம் $7\frac{1}{2}$-ஔன்ஸ். சுண்ணும்பு, பிசினி இவைகளை மேற்படி ஜலம்விட்டு அறைத்துக்கொண்டு, பிறகு பாகுசேர்த்து, மிஸ்ரமித்துக்கொள்.

ளவும், மாத்திரை.—1-2. ஔன்ஸ் கொடுக்கலாம். (Prepared Chalk, Gum Acacia of each $\frac{1}{4}$ oz.; Syrup $\frac{1}{2}$ foz.; Cinnamon Water $7\frac{1}{2}$ oz.;) Dose.—1-2 foz.

பரிமள சீமைச்சுண்ணம்புசூரணம். (ஆரோமாடிக் சாக் பவுடர், Aromatic Chalk Powder; புல்விஸ்கிரீடி ஆரோமாடிக்ஸ், Pulvis Cretæ Aromaticus; Contectio Aromaticus.) செய்முறை.—சன்ன லவங்கப்பட்டைத்தூள், 4-ஔன்ஸ், சாதிக்காய்த்தூள்; குங்குமப்பூத்தூள், வகை 1-க்கு 3-ஔன்ஸ்; கிராம்புத்தூள், $1\frac{1}{2}$-ஔன்ஸ்; ஏலரிசித்தூள், 1-ஔன்ஸ்; பஞ்சதாரை, 25-ஔன்ஸ், சுத்திசெய்த சீமைச்சுண்ணம்பு, 11-ஔன்ஸ்; இவைகளைக் கலந்து வஸ்திரசாயஞ்செய்து, பிறகு கலுவத்திலிட்டரைத்துக்கொள்ளவும். மாத்திரை.—10-60 கிறேன் வீதம் கொடுக்கலாம் குழந்தைகளுக்கு 5-10 கிறேன் வீதம் கொடுக்கலாம். (Cinnamon, 4 oz; Nutmeg, Saffron, of each 3 oz.; Cloves, $1\frac{1}{2}$ oz.; Cardamom, 1 oz.; Sugar, 25 oz.; Chalk, 11 oz.) Dose.—10-60 grs. for children, 5-10 grs.

அபினிகலந்த பரிமள சீமை சுண்ணம்புச் சூரணம்.—(ஆரோமாடிக் சாக் பவுடர் உத் ஓபியம், Aromatic Chalk Powder with Opium; புல்விஸ் கிரீடி, ஆரோமாடிகஸ் கம் ஓபியோ, Pulvis Cretæ Aromaticus cum Opio.) செய்முறை.—பரிமள சீமை சுண்ணம்புச் சூரணம், $9\frac{3}{4}$-ஔன்ஸ்; அபினித்தூள், $\frac{1}{4}$-ஔன்ஸ். இவைகளைக் கலந்து வஸ்திரகாயஞ்செய்து முடிவில் கலுவத்திலிட்டு லேசாய் அரைத்துக்கொள்ளவேண்டியது. மாத்திரை.-5-40 கிறேன். தேவையான அபினிக்குத்தக்கபடி, எடையைக் கிரமப்படுத்திக்கொள்ளவும், 40-கிறேன் சூரணத்தில், 1-கிறேன் அபினியுண்டு. (Aromatic Chalk Powder, $9\frac{3}{4}$, oz.; Opium, $\frac{1}{4}$ oz.) Dose.—5-40 grs.

குளோரைட் ஆவ் லைம். [Chloride of Lime; கால்க்ஸ் குளோரேடா, Calx Chlorata; Chlorinated Lime. Bleaching powder.] உபயோகம், இந்தச் சுண்ணம்பை ஜலத்தில் கரைத்து, தெளித்தால் துர்வாசனை போய்விடும்; ரணங்களைக் கழுவலாம்; வாய்கொப்புளிக்கலாம்.

காந்தமண்பஸ்மம். கார்பொனேட் ஆவ் மாக்னிஷியா, (Carbonate of Magnesia; மாக்னிஷியீகார்போனஸ், Magnesiæ Carbonas.) இது லேசாய் வெளுத்து மிருதுவாய், வாசனையில்லாமலிருக்கும்; ஜலத்தில் கரையாது. செய்கை.—ஆமலநாஸ, மலகாரி குணங்களுண்டு. Antacid Laxative. உபயோகம்.—புளிப்புமந்தம், குலை எரிவு, வாந்தி இவைகளுக்குக் கொடுக்க நல்ல மருந்து. குழந்தைகளுக்குக் காணுகிற மந்தபேதி, குன்மம் இவைகளையும் கேழ்க்கும், திராவகங்கள் முறிவுக்கு இதைக் கொடுக்கலாம். In acidity, cardialgia, gastric irritation, diarrhœa of children, dyspepsia. மாத்திரை.—5-20 கிறேன் கொடுக்கலாம். 20-60 கிறேன் கொடுத்தால் மலம் இளகும். இதனோடு சிட்ரிக் ஆசிட் சேர்த்தால் பொங்கும்; நாள்பட சேவித்தால் வயிற்றில் சேர்ந்து கல்லாகிவிடுவதும் உண்டு. 5-20 grs.; 20-60 grs. laxative.

சீமை இந்துப்பு

సీమఇందుఉప్పు. எப்சம் சால்ட்ஸ், EPSOM SALTS, ஸல்பேட் ஆவ் மாக்னீஷியா, SULPHATE OF MAGNESIA; மாக்னீஷியி ஸல்பஸ், MAGNESÆI SULPHAS,

சமுத்திர ஜலத்திலிருந்து கறியுப்பை யெடுத்துக்கொண்டபிறகு, நிற்கிறஜலத்தைச் சுண்டக்காச்சி இந்தஉப்பை எடுக்கப்படும்; அல்லது காந்தச்சுண்ணும்போடு கந்தகத்திராவகம் சேர்த்து எடுப்பதும் ஒருமுறை. இந்த உப்பு நீண்டு ஊசிக்கம்பிகளாய் வெளுத்து, உவர்ப்பும், கசப்பும் உள்ளதாய் இருக்கும்; ஜலத்தில் கரையும், சாராயத்தில் கரையாது. அக்சாலிக் ஆஸிட் என்கிற உப்பும் (Oxalic Acid) நாக உப்பும் (Sulphate of zinc) இதைப் போலிருக்கும்; அவைகள் கொடிய நஞ்சு, ஆகையால் அபத்தம் நேரிடாமல், வெகு சாக்கிரதையாய் சூக்ஷித்துக்கொள்ளவேண்டியது.

செய்கை.—விரேசன, சீதள, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு. Purgative, refrigerant, diuretic.

உபயோகம்.—சுரம், தாபிதம், உஷ்ண மலபந்தம் ஆகிய இவைகளுக்குக்கொடுத்தால், உஷ்ணிக்காமல் பேதியாகும். In fevers, inflammations, constipation in persons of plethoric habit.

மாத்திரை.—2-8 திராம், வீதம் பேதியாக நிலாவரைக் கஷாயத்திலாவது, ரோஜாபூ கஷாயத்திலாவது கொடுக்கலாம்.

சீனக்கராம்

படிக்காரம். పటికారము. ஆலம், ALUM ; ALUMEN ; AMMONIA-ALUM.

இது பிறவிச்சரக்கு; வைப்புச்சரக்குமுண்டு. வெளுத்து கட்டிகளாய் புளிப்பு இனிப்பு துவர்ப்புக்கூடிய சுவையுள்ளதாயிருக்கும். காற்றுப் படவைத்தால், ஜலம் நீங்கி கட்டிகள்மேல் தூள்போல் படியும்; பொரித்தால் பொங்கி, ஜலம் நீங்கி, எடைகுறையும். நமது கடைச்சரக்கில், தோஷங்கள் அதிகமுண்டு; ஆகையால் ஜலத்தில் கரைத்து, சுண்டவைத்துக் கட்டிகளாக்கி, உபயோகித்துக்கொள்ளலாம். சிலாசத்து.—நேபாளதேசத்திலகப்படுகிற ஒருவித படிக்காரமண், இதில் அயச்சிந்தூரமும் கலந்திருக்கும். (Iron-alum.)

செய்கை.—சங்கோசன, ரக்தஸ்தம்பனகாரிகுணங்களுண்டு. Astringent, styptic.

உபயோகம்.—ரத்தபித்தம், ரத்தப்பெருக்கு, அதிசாரம், குழந்தைகளுக்குக் காணுகிற வாந்திபேதி, கக்கிருமல், கபம் விழுதல் ஆகிய இவைகளுக்கு உபயோகித்து சுகுணம் கண்டதுண்டு. கண்ணோவுக்குப் படிக்காரஜலம் போடுவதுண்டு; தொண்டைவிரணம், ஈறுவிரணம் இவைகளுக்கு இந்த ஜலத்தைப் பீச்சலாம். அதிக சீழ்வடிகிற ரணம், அதிக மாம்சவளர்த்தி இவைகளுக்கு, படிக்கார ஜலத்தையாவது, தூளையாவது போடலாம் In hæmorrhages, diarrhœa, hooping cough; ophthalmia, ulceration of gums, leucorrhœa, gonorrhœa, menorrhagia, ulcers with much discharge, &c.

மாத்திரை.—10-20-கிறேன் எடை கொடுக்கலாம். 1-ஔன்ஸ் ஜலத்துக்கு 4-10-கிறேன் படிக்காரம் சேர்த்துக்கொள்ளலாம். 10-20-grs.

பொரித்த படிக்காரம். (ட்ரையிட் ஆலம், Dried Alum; அலூமன் எக்சிகேடம், Alumen exsiccatum.) 4-ஔன்ஸ்; படிக்காரமெடுத்துப், பீங்கான் அல்லது மண்பாண்டத்திலிட்டு எரித்தால் உருகும், ஜலமெல்லாம்போகிறவரையில் சூட்டை அதிகரித்து பிறகு அடியில்நிற்பதை சூரணித்து வைத்துக்கொள்ளவேண்டியது. இதற்கு வேகம் கூடியிருக்கும்; அற்பகாரகுணமுமுண்டு. மாத்திரை.—5-15 கிறேன் கொடுக்கலாம். Dose.—5-15 grs.

பாஷாணம்

పాషాణము, ஆர்ஸினிக், ARSENIC, ஆர்ஸினிகம், ARSENICUM.

பாஷாணமானது கந்தகத்தோடு கலந்து, மஞ்சளாய் இருப்பதற்கு, தாளகம், அரிதாரம், பொன்னரிதாரம், గౌరిపాషాణము, తాళకము, హరిదాళము. దొడ్డిపాషాణము, (Orpiment, Yellow Arsenic, Yellow Sulphuret of arsenic) என்றும்—சிவந்திருப்பதற்கு, மனோசிலை. మణిశిల Realgar, Red Arsenic, Red Sulphuret of Arsenic) என்றும் பேர்.

வெள்ளைப்பாஷாணம்

எலிப்பாஷாணம் శంఖపాషాణము, తెల్లపాషాణము ఛల్లిపాషాణము. ஒயிட் ஆர்ஸனிக், WHITE ARSENIC ; ஆர்ஸினியஸ் ஆசிட்; ARSENIOUS ACID ; ACIDUM ARSENIOSUM.

பாஷாணம்கலந்த லோகங்களை வருத்தெடுத்து, சுத்தியாக்க பதங்கித்துக்கொள்ளுகிற இந்தச்சரக்கு வெள்ளைத் தூளாயாவது, பதங்கித்த கட்டிகளாயாவது இருக்கும்; ஜலத்தில் கரைவது கடினம், கட்டை நெருப்பின் மேல் தெளித்தால் வெள்ளைப்பூண்டுவாசனை வீசும்.

செய்கை.—வியதாபேத, தாருட்டியகாரி குணங்களுண்டு ; முறைவியாதிகளையும் கண்டிக்கும், அதிகமானால் கொடிய நஞ்சாகும். Alterative tonic, antiperiodic.

உபயோகம்.— சுரம், வாதசூலைகள், முகசந்நி, சூரியாவர்த்தவாதம், கக்கிருமல், சுவாஸகாசம், பெருவியாதி, சருமரோகங்கள் ஆகிய இவைகளுக்குக் கொடுத்து நன்மை கண்டதுண்டு. நாள்பட்ட கீல்வாதம், பெரும்பாடு, சர்ப்பக்கடி, நாள்பட்ட இருமல், அதிதூலரோகம் ஆகிய இவைகளுக்கும் உபயோகித்துப் பார்த்து சவுக்கியம் கண்டதுண்டு. ரணங்களுக்குப் போடுகிற வழக்கத்தைத் தடுக்கவேண்டியது, ஏனென்றால், ரத்தத்தில் கலந்து துற்குணம் செய்யும். In ague neuralgeia, tic douloureux, hemicrania, hooping cough, asthma, leprosy, snake-bites, chronic cough, &c.

மாத்திரை.—1/20 to 1/12 கிறேன் கொடுத்தால், வியாதாபேதகாரியாகும்; 1/12 முதல் $\frac{1}{8}$-கிறேன் கொடுத்தால், முறைவியாதி விரோதியாகும்; எப்போதும் குறைந்த அளவில் ஆரம்பித்து படிப்படியாய் அதிகரிப்பதே உத்தமம். ஜலத்தில் கலந்திருப்பதைக் கொடுப்பதே சுலபமாகும். 1/20 to 1/12 gr. alterative. 1/12 to $\frac{1}{8}$ gr. antiperiodic.

வெள்ளைப்பாஷாண ஜயநீர். (ஆர்ஸிநிகல் ஸொலூஷன், arsenical solution ; லைகர் ஆர்ஸினிகேலிஸ், Liquor arsenicalis; லைகர்பொடாஸி ஆர்ஸினிடிஸ்,Lipuor potassæ arsenitis.-பௌலர்ஸ் ஸொலூஷன் Fowler's solution.) செய்முறை.—வெள்ளைப்பாஷாணம், 80-கிறேன் ; கார்போனேட் ஆவ் பொடாஷ், 80-கிறேன்; கம்பவுண்டிங்சர் ஆவ் லவண்டர், 5-டிராம் ; தீ நீர் போதுமானது. 10-ஔன்ஸ் ஜலத்தை ஒரு பாத்திரத்தில் விட்டு அதில் பாஷாணத்தையும், உப்பையும் போட்டு, ஜலம் தெளிவாகிற வரையில் காய்ச்சிக் குளிர்ந்தபிறகு,அதில் கம்பவுண்டிங்சர் ஆவ் லவண்டரை விட்டு, 1-பைண்ட் அளவுக்குத் தேவையானஜலம் விட்டுக்கொள்ள வேண்டியது. இது சிவந்து லவண்டர்வாசனை வீசும். செய்கை. உபயோகம் — வெள்ளைப்பாஷாணத்துக்குச் சொன்னதே இதற்குமுண்டு. மாத்திரை —

5-துளி வீதம், தினத்துக்கு 3-தவணை ஜலத்தில்விட்டுப் போஜனம்செய்யப் போகும்போதாவது, அல்லது செய்தபிறகாவது, கொடுக்கலாம். பாஷாணம் கொடுக்கிறதற்கு இதுதான் நல்லமுறை. 1-டிராம் ஜயநீரில் ½-கிறேன், பாஷாணமுண்டு. (Arsenious Acid, 80 grs.; carbonate of potash, 80 grs.; compound Tincture of lavender, 5 fdrs.; Distilled Water, 1. point.) Dose.—5 drops.

அஞ்சனக்கல்

నీలాంజనము సురుమా, కాటుకరాయి, பிளாக் ஆன்ட்மோனி, Black-Antimony Antimonium Nigrum; Prepared Sulphuret of Antimony. இந்தக் கறுத்த சரக்கை கண்களுக்கு பெண்கள், மையிடுவது வழக்கம்; நமது ஜனங்கள் உள்ளுக்கு உபயோகபடுத்துகிற சங்கதியொன்றுந் தெரியவில்லை. அஞ்சனக்கல் சிந்தூரம் செய்வதற்கு உபயோகமாகிறது.

அஞ்சனக்கல் பஸ்மம்.

నీలాంజన భస్మము; ஆக்ஸைட் ஆவ் ஆன்டிமோனி, OXIDE OF ANTIMONY ; ANTI ONII OXIDUM

இது வெளுத்துத் தூளாயிருக்கும்; ஜலத்தில் கரையாது. செய்கை.—வமன, விரேசன, சுவேத, கபஹார குணங்களுண்டு. Emetic, laxative, diaphoretic expectorant.

உபயோகம்.—சுரம்; தாபனம், இருமல், நாள்பட்ட சருமரோகம், இவைகளுக்கு உபயோகித்தால், சவுக்கியம்உண்டாகும். In fever, inflammations, cough, skin diseases.

மாத்திரை-—1-4 கிறேன் வீதம் கொடுக்கலாம். 1-4 grs.

அஞ்சனக்கல் சுண்ணம నీలాంజన భస్మము (ஆண்டிமோனியல் பவுடர் Antimonial Powder; புல்விஸ் ஆண்டிமேனியலிஸ், pulvisAntimonialis. செய்முறை.—அஞ்சனக்கல் பஸ்மம் 1-ஔன்ஸ்; பாஸ்பேட் ஆவ் லைம், 2-ஔன்ஸ் செவ்வையாய் மிஸ்ரமித்துக்கொள்ளவும். செய்கை.—உபயோகம்.—அஞ்சனக்கல்பஸ்பத்துக்குச் சொன்னதே இதற்குமுண்டு. மாத்திரை.—3-10 கிறேன் கொடுக்கலாம். (Oxide of Antimony, 1 oz.; Phosphate of Lime, 2 oz.) Dose.—3-10 grs.

அஞ்சனக்கல் சிந்தூரம். నీలాంజన సింధూరము. (ஸல்பியுரெடெட் ஆன்டிமொனி, Sulphurated Antimony ; ஆன்டிமோனியம் ஸல்பி யூரேடம், Antimonium Sulphuratum ; Amtimonii Oxysulphuretum ; Antimonii sulphuretum aureum ; Antimonii Sulphuretum præcipitatum.) இதுச்சிவந்த சூரணமாய் இருக்கும். செய்கை.—வியதாபேத, சுவேத, வமனகாரி குணங்களுண்டு. Alterative, diaphoretic, emetic. உபயோகம்.—நாள்பட்ட சருமரோகங்கள், கட்டிகள், மேகப்புடை, நாள்பட்ட கீல்வாதம் இவைகளுக்கு உபயோகிப்பதுண்டு. In skin diseases, glandular swellings, secondary syphilis, chronic rheumatism. மாத்திரை.—1-5 கிறேன்; 10-20 கிறேன் கொடுத்தால் வாந்தியாகும். 1-5 grs.; 10-20 grs. as an emetic.

வாந்தி உப்பு

వాంతిఉప్పు. டார்டர்மெடிக், TARTAR EMETIC ; டார்டெடரேடெட் ஆன் டிமோனி. TARTARATED ANTIMONY; ஆன்டிமோனியம் டார்டெரேடம், ANTIMONIUM TARTARATUM; ஆன்டிமோனியை பொடாஸியோடார்ட்ஸ், ANTIMONI POTASSIO-TARTRAS.

அஞ்சனக்கல் பஸ்மத்தோடு, திராக்ஷ உப்பைச் சேர்த்துச் செய்கிற இந்த வெள்ளைஉப்பு, ஜலத்தில் கரையும் ; சுடவைத்தால், பொரிந்து கறுத்துவிடும்

செய்கை.—வமன, சுவேத, கபஹார குணங்களுண்டு. குறைந்த அளவில் கொடுத்தால், வியதாபேத காரியாகும், மாத்திரை அதிகமானல் கொல்லும், மேலுக்குப் போட்டால் தோல் சிவந்து கொப்புளம்காணும், Emetic, diaphoretic, expectorant alterative, counter-irritant.

உபயோகம்.—சுரம், தாபனங்கள் இவைகளுக்குக் கொடுத்தால், ரக்தக் கொதிப்பு அடங்கும். புப்புஸதானம், இருமல், ஜலுப்பு உக்கிற கீல்வாதம், சீழ், கண்ணோவு இவைமுதலியவைகளுக்கும் கொடுக்கலாம். வயிற்றிலிருக்கிறதை வெளிப்படுத்த இதை வாந்திக்குக் கொடுக்கலாம், In ferbile and inflammatory affections ; as an emetic in overloaded stomach.

மாத்திரை.—வீசம் முதல், $\frac{1}{8}$-கிறேன் எடை கொடுத்தால், வியதாபேத காரியாகும்; $\frac{1}{8}$-முதல், $\frac{1}{4}$-கிறேன் கொடுத்தால் சுவேத, கபஹார குணங்களாகும் ; 1-4-கிறேன் ஜலத்தில் கலந்து கொடுத்தால் வாந்தியாகும். 1/16 to $\frac{1}{8}$ gr. alterative ; $\frac{1}{8}$ to $\frac{1}{4}$ gr. diaphoretic and expectorant ; 1 to 4 grs. emetic.

வாந்தி உப்புக்கலந்து சாராயம். (ஆண்டிமோனியல் ஒயின்,Antimonial Wine ; வைனம் ஆன்டிமோனியேலிஸ், Vinum Antimoniale). செய்முறை.-வாந்தி உப்பு 40-கிறேன் ; ஷெரி ஒயின், 1-பைன்ட் கறைத்துக் கொள்ளவும். மாத்திரை.—10-30 துளி சுதேவ கபஹாரியாகும் ; 1-2 டிராம் கொடுத்தால், குமட்டலுண்டாகும் ; $\frac{1}{2}$-ஔன்ஸ் ஆவது அல்லது, 2-டிராம் வீதம், 10-நிமிஷத்துக்கொருதரம், குணம் காட்டுகிறவரையில் கொடுத்தால் வாந்தியாகும். குழந்தைகளுக்கு வாந்திக்கு 30-60 துளி கொடுக்கவேண்டியது. ஆனல் மெத்த சிறு குழந்தைகளுக்கு, இபிகாக் சூரணமே நல்லது. 1-ஔன்ஸில் 2-கிறேன், வாந்தி உப்பு உண்டு. Dose.—10-30 drops, diaphoretic,expectorant. 1-2 fdrs. nauseant ; $\frac{1}{2}$ oz. emetic; as an emetic for children, 30-60 drops.

நிமிளைபஸ்மம்

నిమిళబస్మము. ஸப்நைட்ரேட் ஆவ் பிஸ்மத், SUBNITRATE OF BISMUTH; பிஸ்முதை ஸப்நைட்ரஸ், BISMUTHI SUBNITRAS; BISMUTHUM ALBUM; BISMUTHI NITRAS.

செய்கை.—பளுவான இந்த வெளுத்தபொடிக்கு, சங்கோசன, சமன வியதாபேதகாரி குணங்களுண்டு. Astringent, sedative, alterative.

உபயோகம்.—குன்மம், சூலை எரிவு, பேதி, கிரகணி இவைகளுக்குக் கொடுக்க மெத்த உபயோகமானது. சருமரோகம், முலைக்காம்பு உதடு இவைகளின் வெடிப்பு இவைகளுக்கும் மேலுக்குப் போட்டு அடிக்கடி சவுக்

இயம் கண்டதுண்டு. In dyspepsia, diarrhœa, dysentery, cutaneous affections, fissuers of the nipples or lips, &c.

மாத்திரை.—5-20 கிறேன் வீதம் தினத்துக்கு 2-3 தடவை கொடுக்கலாம். 5-20 grs.

நாகபஸ்மம். నాగబస్మము. (ஆக்ஸைட் ஆவ் ஜிங்க், Oxide of Zinc; ஜிங்சை ஆக்ஸிடம், Zinci Oxidum.) இது மிருதுமான வெள்ளைச்சூரணமாய் வாசனையும், ருசியுமில்லாமலிருக்கும், எரித்தால் இளமஞ்சள் நிறமாகிவிடும். செய்கை.—தாருட்டிய, சமன, அங்காகர்ஷண நாசகாரி குணங்களுண்டு, மாத்திரை அதிகமானால், வாந்தியும், பேதியும் ஆகும். மேலுக்குப் போட்டால் சங்கோன குணத்தைக் காட்டும். Tonic, sedativc, antispasmodic ; in large doses, emetic pargative. உபயோகம்,—பால்துத்தத்தின் உபயோகமே இதற்குமுண்டு. வெள்ளை, சொப்பனஸ்கலிதம், கருப்பமேகம், மூலம் இவைகளுக்கு நாட்டுவைத்தியர்கள் கொடுப்பதுமுண்டு. மாத்திரை.— 2-4-கிறேன் படிப்படியாய் அதிகரித்து, 10-கிறேனுக்கு அதிகமாயும் கொடுக்கலாம். 2-4 grs.

பால் துத்தம்

வெள்ளைத்துத்தம், வெள்ளிய உப்பு, நாகஉப்பு துத்தம், நாக உப்பு. నాగవుప్పు. ஒயிட்விட்ரியல், WHITE VITRIAL; ஸல்பேட் ஆவ் சிங்க், SULPHATE OF ZINC ; சிங்சை சல்பஸ், ZINCI SULPHAS.

வெள்ளீயப்பொடியில் வினாவின கந்தகத்திராவகம் சேர்த்து, சுண்டவைத்து எடுக்கிற இந்த உப்பு வெள்ளையாய், துவர்ப்பாய் இருக்கும்; வாசனை இராது; காற்றுப்பட்டால் தூளாகிவிடும்; ஜலத்தில் கரையும்.

செய்கை.—தாருட்டிய, சங்கோசன, அங்காகர்ஷண நாச, வமனகாரி குணங்களுண்டு. மாத்திரை அதிகப்பட்டால் விஷமிக்கும். மேலுக்குப்போட்டால், சங்கோசன, உஷ்ணகுணம் செய்யும் ; நீரில்லாததற்கு காரணமுண்டு. Tonic, astringent, antispasmodic, emetic ; in dried state caustic.

உபயோகம்.—காக்கைவலி, சுவாசகாசம், கக்கிருமல், சீதசுரம், நாள்பட்டபேதி, சீதபேதி, பெருப்பாடு ஆகிய இவைகளுக்கு உபயோகித்து நல்ல குணம் கண்டதுண்டு. பிரமேகம், கருப்பப்பிரமேகம் இவைகளுக்கு இதின் ஜலத்தைப் பீச்சலாம் ; கண்ணோவுக்கும் விரணங்களுக்கும், நாள்பட்ட சருமரோகங்களுக்கும், உபயோகிக்கலாம். In epilepsy, asthma, hooping cough, ague, chronic dysentery and diarrhœa, menorrhagia, gonorrhœa, leucorrhœa, ophthalmia, ulcers, chronic skin diseases.

மாத்திரை.—1-2 கிறேன், படிப்படியாய் அதிகரித்து 5-கிறேனுக்கு அதிகமாகவும் கொடுத்தால் பலத்தைத் தரும். இசிவுகளைக் கண்டிக்கும். 10-30 கிறேன் கொடுத்தால் வாந்தியாகும். நஞ்சுண்டோருக்கு இதை வாந்திக்குக் கொடுத்தால், ஆயாசமில்லாமல் அதித்துரையில் வாந்தியாகும். 1-2-5 grs. 10-30 grs. as an emetic.

மிருதாரசிங்கி. మురుదారుసింగి. (விதார்ஜ், Litharge ; ஆக்ஸைட் ஆவ் லெட், Oxide of Lead ; பிளம்பை அக்சிடம், Plumbi Oxidum.) இது மஞ்சள்வர்ணமாய், பளுவாய் இருக்கும் ; ஜலத்தில் கரையாது ; குணமும் செவ்வையாகத் தெரியவில்லை ; இதின் புகையை ஆக்கிராணித்துக்கொண்டி

ருந்தால் விரோதிக்கும். உள்ளுக்குக் கொடுக்கிறதில்லை, பிளாஸ்திரிக்கு உபயோகமாகிறது.

மிருதாரசிங்கி பிளாஸ்திரி. (லெட்பிளாஸ்டர், Lead Plaster; எம்பிளாஸ்ட்ரம் பிளம்பை, Emplastrum Plumbi.) செய்முறை.—மிருதாரசிங்கித்தூள். 4-பவுன்; ஆலீவ் ஆயல் என்னும் எண்ணெய், 1-காலன்; ஜலம், 3½-பைன்ட் இவைகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு செம்பு பாத்திரத்திலிட்டு, வெந்நீர் ஆவியில் 4-5 மணி நேரம்வரையில் மெதுவாய்க் கொதிக்கவைத்து, பிளாஸ்திரி பதத்துக்கு வருகிறவரையில் துழவிக்கொண்டிருக்கவேண்டியது. தேவையானல் அதிக ஜலம் விட்டுக்கொள்ளவும். இதை (டையாகிலன் பிளாஸ்டர், Diachylon Plaster) என்பர். வெட்டுக்காயத்தினிரண்டு உதடுகளை சேர்த்துவைக்க இதை உபயோகிப்பதுண்டு. குங்கிலியம் முதலிய பிளாஸ்திரி முறைகளில் சேருகிறது. (Oxide of lead, 4 lb.; Olive Oil, 1 Gallon; Water, 3½ pints.

ஈயச்சிந்தூரம். சிந்தூரம். வங்கச்சிந்தூரம். సింధూరము. (ரெட்லெட், Red Lead; Plumbi Oxidam Rabrum; Rad Oxide of Lead.) நமது நாட்டில் இதைக் கருப்புப் பிளாஸ்திரி செய்து, உபயோகிப்பது வழக்கம். அதை மிருதாரசிங்கிப் பிளாஸ்திரி செய்வதுபோல் செய்துக்கொண்டு, பிறகு குங்கிலியத்தை உருக்கிச் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

வங்க உப்பு.

సంగవుప్పు. அஸிடேட் ஆவ் லெட். ACETATE OF LEAD; PLUMBI ACETAS; சுகர் ஆவ் லெட், SUGAR OF LEAD.

மிருதாரசிங்கியுடன், அசிடிக் ஆசிட் என்னும் காடியைச் சேர்த்து எரித்து எடுக்கிற இந்த உப்பு, வெள்ளையாய், காடிவாசனையுடையதாய், இனிப்பும் துவர்ப்புமுடைய சுவையுள்ளதாய் இருக்கும்.

செய்கை.—சங்கோசன, சமனகாரி குணங்களுண்டு; மாத்திரை அதிகமானல் விஷமிக்கும். Astringent, Sedative.

உபயோகம்.—ரக்தகாசம், ரக்தவமனம், ரத்தமூத்திரம், பெரும்பாடு முதலிய ரக்தபித்த ரோகங்களுக்குக் கொடுக்க இது நல்ல மருந்து. பேதி முக்கியமாய் வாந்திபேதி, நாள்பட்ட சீதபேதி இவைகளுக்கும் கொடுக்கலாம். ஜலத்தில் கரைத்து வீக்கங்களுக்கும், கருமரோகங்களுக்கும், சிலகண்ணோவுகளுக்கும் போடலாம்; பிரமேகம், தந்திமேகம், கருப்பமேகம் இவைகளுக்கு இதின் நீரைப் பீச்சலாம். In hæmorrhages, cholera, dysentery, ophthalmia, gonorrhœa, gleet, leucorrhœa.

மாத்திரை.—1-5 கிறேன் எடைக்கு அதிகமாயும் மாத்திரை செய்து கொடுக்கலாம். 1-5 grs.

வங்க உப்பு மாத்திரை. (பில் ஆவ் லெட் அண்ட் ஒபியம்; pill of Lead and Opium) செய்முறை.—வங்க உப்பு 36-கிறேன்; அபினித்தூள், 6-கிறேன்; குல்கந்து, 6-கிறேன். மெழுகு பதத்துக்கு இடித்துக்கொள்ளவும். மாத்திரை—4-8 கிறேன் 8-கிறேன். எடையில், 1-கிறேன் அபினியுண்டு. (Acetate of Lead, 36 grs.; Opium, 6 grs.; Confection of Roses, 6 grs.)

வங்க உப்பு ஜயநீர். (ஸொலூஷன் ஆவ் சப் அசிடேட் ஆவ் லெட், Solution of Sub acetate of Lead; Plumbi Sub acetatis Liquor.) இதை

ஜலத்தில் விட்டுக் கலந்து, கண்ணோவு, ரணம், தாபிதம் இவைகளுக்கு உப யோகிக்கலாம்.

அயச்சிந்தூரம்.

லோகச்சிந்தூரம். అయఃసిందూరము. ஹைட்ரேடெட் பெர் ஆக்சைட் ஆவ் ஐயரன், Hydrated Peroxide of Iron; பெர்ரை பெர் ஆச்சிடம் ஹைட்ரேடம், Ferri Peroxidum Hydratum; Ferri Peroxidum; Ferri Sesquioxidum; Ferri Oxidum Rubrum, Ferrugo.

இது சிவந்த தூளாயிருக்கும், ஜலத்தில் கரையாது; காந்தம் கிரகிக் காது—இது செய்ய தமிழ் முறைகள், அநேகமுண்டு, அவைகளெல்லாம் இங்கிலீஷ் சரக்குக்குத் தாழ்ச்சி; தோஷங்கள் மெத்தவுண்டு. ஆனல் தாரு ட்டியகாரி குணமிருக்காமல் போகாது.

செய்கை.—தாருட்டிய, ருதுவர்த்தன, கிருமி நாசகாரி குணங்களுண்டு. Tonic, emmenagogue, anthelmintic.

உபயோகம்.—பாண்டு ரோகத்துக்குக் கொடுக்க திவ்வியமருந்து. ரத்த அணுக்களை யதிகப்படுத்தி, சிவப்பாக்கும்; மலம் கறுத்திறங்கும்; துர்ப்ப லம், வாதசூலைகள், நாள்பட்ட கக்கிருமல், சுவாசகாசம், சூதகக்கட்டு ஆகிய இவைகளுக்கும் கொடுத்து நன்மை கண்டதுண்டு. In anæmia, debility, neuralgia, hooping cough, asthma, amenorrhæa.

மாத்திரை.—5-30 கிறேன் எடைக்கு அதிகமாக்கியும் கொடுக்கலாம். 5-30 grs.

அன்னபேதி

துத்தம். తుత్తము, అన్నభేది. ஸல்பேட் ஆவ் ஐரன், SULPHATE OF IRON; பெர்ரை ஸல்பஸ், FERRI SULPHAS. கிறீன் வீட்ரியல், GREEN VITRIOL.

இரும்பு தந்தியோடு, கந்தகத்திராவகம் விட்டுச்செய்கிற இந்தச் சரக் கானது, கட்டிகளாய், பச்சை நிறமாய், துவர்ப்பாயிருக்கும்; சாராயத்தில் கரையாது, ஜலத்தில் கரையும்; காற்றுப்பட்டால், மேல்புறம் வெள்ளைத்தூ ளாகிவிடும்; பொரித்தால் ஈரம்போய் வெள்ளைத்தூளாகிவிடும்.—நமது கடைச் சரக்கில் தோஷங்களுண்டு, ஆகையால் அதை ஜலத்தில் கரைத்து கொஞ் சம் கந்தகத் திராவகம்விட்டு, வடிகட்டி, கட்டிகளாகும்படி சுண்டக்காச்சிக் கொள்ளவும். இப்படிச்செய்து உள்ளுக்கு உபயோகிக்கலாம்.

செய்கை.—தாருட்டிய, ஸங்கோஸன, ருதுவர்த்தன, கிருமி நாசகாரி குணங்களுண்டு; முறைவியாதிகளையும் தடுக்கும்; அதிகமானல் விஷமிக் கும்; மேலுக்குப் போட்டால், சங்கோசன, உஷ்ணகுணங்களைக் காட்டும். Tonic, astringent emmenagogue, antiperiodic, anthelmintic. Locally astringent, stimulant.

உபயோகம்.—பாண்டு, ரக்தக்ஷீணம், சூதகப்பாண்டு, சூதகக்கட்டு, கருப்பப்பிரமேகம், பிலீகசோபை, முறைக்காச்சல், சூரியாவர்த்ததலைவலி, மருந்து பயித்தியம், நாள்பட்ட கக்கிருமல், தட்டைக்கிருமி இவைகளுக்கு முக்கியமாய் உள்ளுக்குக் கொடுக்கப்படுகிறது. அக்கி, மேகவிரணம், சீழ் மூலம், குதப்பிரம்சம், கருப்பப்புத்து இவைகளுக்கு வெளிக்குபயோகிக்க

லாம். Anæmia, chlorosis, amenorrhoæ, leucorrhæa, splenic enlargement, ague, hemicrania; hypochondriasis, hooping cough, tænia; locally to erysipelatous surfaces, chancres, piles, prolapsus of the rectum, cancer of the uterus.

மாத்திரை.—1-5 கிறேனுக்கு அதிகமாயும் கூட்டி, 2-3 தடவை கொடுக்கலாம். 1-5 grs.

பொரித்த அன்னபேதி. (Dried Sulphate of Iron; Ferri Sulphas Exsiccata) இரும்புப் பாத்திரத்திலிட்டு வருத்து, நீரைப்போக்கி சூரணமாக்கிக்கொள்ளுகிற, இந்தச்சரக்கில், ½-2 கிறேன் வீதம் மாத்திரை செய்துகொடுக்கலாம். 3-கிறேன் சூரணம், 4-9/10 கிறேன் உப்பின் எடைக்குச் சமானம். Dose.—½-2 grs.

அயப்பாவனத்திரவம்

అయఃద్రావకము. டிங்சர் ஆவ் பெர்குளோரைட் ஆவ் ஐரன், Tincture of Perchloride of Iron; Tinctura Ferri Perchloridi; ஸ்டீல் ; டிராப்ஸ், steel drops.

செய்முறை.—புதுமுறையாய் செய்வது நமது நாட்டில் கெட்டுப் போகிறபடியால், பழைய முறையாகவே செய்து உபயோகித்தால் மெத்தவுத்தமம். அயச்சிந்தூரம், 6-ஔன்ஸ் ; கறி உப்புத் திராவகம், 1-பைண்ட் ; ரெக்டிபைட் சாராயம், 3-பைன்ட், சிந்தூரத்தை திராவகத்துடன் சேர்த்து, வாலுகாயந்திரத்தில் வைத்து, அடிக்கடி கலக்கிக்கொடுத்து, அவித்து, முடிவில் குளிர்ந்தபிறகு சாராயத்தைச் சேர்த்து, வடிகட்டிக்கொள்ளவும். Sesquioxide (Hydrated Peroxide) of Iron, 6 ox.; Hydrochloric Acid, 1 pint; Rectified spirit, 3 pints.

செய்கை.—தாருட்டிய, மூத்திரவர்த்தனகாரி குணங்களுண்டு Tonic diuretic.

உபயோகம்.—ரத்தபித்தம், அதிமூத்திரம், சொட்டுமூத்திரம், நீரடைப்பு, மஜ்ஜாமூத்திரம், அக்கி, க்ஷயத்தில் காணுகிற அதிவியர்வை இவைகளுக்குக் கொடுத்து சவுக்கியம் கண்டதுண்டு. ரத்தம் நிறுத்தவும், ரணங்களைச் சிவப்பிக்கவும், மேலுக்கு உபயோகிப்பதுண்டு, In hæmorrhages, diabetes, enuresis, retention of urine from spasmodic stricture of the urethra, albuminuria, erysipelas, &c.

மாத்திரை.—10-30 மினிம் அளவுக்கு அதிகரித்தும் கொடுக்கலாம். 10-30 minims.

ஸைட்ரேட் ஆவ் ஐரன் அன்ட் அம்மோனிய. (Citrate of Iron and Ammmonia; Ferri et Ammoniæ Citras; Ferri Ammonio Citas) இது சிவந்ததகடுகளாய் இருக்கும் ; கொஞ்சம் இனிப்போடுகூடிய துவர்ப்பாயிருக்கும் ; ஜலத்தில் கரையும், சாராயத்தில் கரையாது, அயத்துக்குடைய குணங்களே இதற்குமுண்டு, ஆனல் சாந்தமானது. மாத்திரை - 5-10 கிறேன் வீதம் தினத்துக்கு, 2-3 தடவை கொடுக்கலாம். 5-10 grs.

ஸைட்ரேட் ஆவ் ஐரன் அன்ட் குவைனேன். Citrate of Iron and Quinine; Ferri et Quiniæ Citras.) இது சொர்னநிறமான தகடுகளாய் இருக்கும் ; இளகிப்போகும், ஜலத்தில் கரைந்துவிடும். தாருட்டியகாரி ;

முக்கியமாய் பிலிகசோபைக்குக் கொடுக்க உதவும். மாத்திரை.—5-10 கிறேன் வீதம் தினத்துக்கு 2-தடவை கொடுக்கலாம். 5-10 grs.

அயப்பாவன ஒயின். (ஸ்டீல் ஒயின், Steel Wine; ஒயின் ஆவ் ஐரன்; வைனம் பெர்ரை, Vinum Ferri.) செய்முறை.—மெல்லிய இரும்புத்தந்தி, 1-ஒளன்ஸ்; ஷெரி ஒயின், 1-பைன்ட், கம்பிகள் கொஞ்சம் வெளியில் தெரியும்படியாய் வைத்துப் பாத்திரத்தை மூடி, அடிக்கடி குலுக்கி, 30-நாள் ஊறவைத்து, பிறகு வடிகட்டிக்கொள்ளவும். மாத்திரை.—1-4 டிராம் அளவுக்குக் கொடுக்கலாம். இது குழந்தைகளுக்கும், ஸ்த்ரீகளுக்கும் கொடுக்க நல்லமருந்து. சாந்தியாய் குணத்தைத்தரும். (Iron wire, 1 oz.; sherry, 1 Pint.) Dose.—1-4 fdrs.

துரிசு

மயில்துத்தம். ముయిలతుత్తము. ஸல்பேட் ஆப் காபர், Sulphate of Copper; Cupri Sulphas; புளூவிட்ரியல், Blue Vitrial; புளூஸ்டோன், Blue Stone.

கந்தகத் திராவகத்துடன், தாமிரம் சேர்த்து காய்ச்சி, எடுக்கிற உப்பானது நீலவர்ணமாய் இருக்கும், ஜலத்தில் கரையும், வாசனையிராது. நமது நாட்டில் தாமிரத்துடன் புளி, எலுமிச்சம்பழம், அல்லது ஏதாவது பூண்டின் புளிப்பைச் சேர்த்து செய்கிற தாமிரபஸ்மமென்கிற சரக்கை மெந்தப் புகழ்ந்துப் பேசுகிறதுண்டு; எதிலும் மெத்த நம்பிக்கை வைக்க இடமில்லை. கடைச்சரக்கு சுமாராய் இருந்தபோதிலும், அதை ஜலத்தில் கரைத்து வடிகட்டி, சுண்டக்காய்ச்சி உப்பை எடுத்துக்கொண்டால், மெத்த பரிசுத்தமாய் இருக்கும்.

செய்கை.—தாருட்டிய, சங்கோசன, வமனகாரி குணங்களிதற்குண்டு; அதிகமானல் கொல்லும். ரணங்களுக்குப் போட்டால், அதைத் தின்னுகிற குணமும், ரத்தத்தை வரட்டுகிற குணமுமுண்டு. Tonic, astringent emetic. caustic, styptic.

உபயோகம்.—நாள்பட்ட சீதபேதி, பேதி இவைகளுக்கு இது எடுத்த மருந்து. நடுக்குவாதம், காக்கைவலி, சூதகசந்நி இவைகளுக்கும் கொடுத்து சவுக்கியம் கண்டதுண்டு. துரிசுகரைத்த நீரைப் பிரமேகம், கருப்பமேகம், சீழ்க் கண்ணேவு, நாள்பட்ட சருமரோகங்கள், ஆராத விரணங்கள், ரத்த ஒழுக்கு இவைகளுக்கு உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். கன்னப்புத்து, துர்மாமிச வளர்த்தி, அமரம் இவைகளுக்கு இதை வைத்துத் தேய்ப்பதுண்டு. துணியைத் துரிசுநீரில் நனைத்து உலர்த்தி, புரை விரணங்களுக்குக் காரம்வைப்பது நாட்டுவழக்கம். In chronic dysentery, diarrhœa, chorea, epilepsy, hysteria, gonorrhœa, leucorrhœea, ophthalmia, chronic skin diseases, indolent ulcers, hæmorrhage, exuberant granulations, granular conjuntiva.

மாத்திரை.—$\frac{1}{4}$-2-கிறேன் கொடுத்தால், பலகாரி, ஸங்கோசனகாரி குணங்களைத்தரும்; 4-12-கிறேன் கொடுத்தால் வாந்தியாகும். கிலேதம், பீச்சிடுநீர் இவைகள் செய்ய வியாதிக்குத் தக்கபடி, 1-ஒளன்ஸ் ஜலத்துக்கு, 2-10-கிறேன் வீதம் சேர்த்துக்கொள்ளலாம்.

ரஸம்

சூதம். పాదరసము. மெர்க்கியுரி, Mercury; Hydrargyrum.

இது பிறவிச்சரக்கு; ஆனால் முக்கியமாய் கந்தகத்தோடு கலந்திருக்கும் அதற்கு லிங்கம், లింగము. జాదిలింగము, ఇంగిలీకము. (ஸின்னபார், Cinnabar Vermillion.) என்று பேர். லோகங்களுக்குள் ரசந்தான் நீராயிருக்கிற சரக்கு; தளதளப்புண்டு, பதங்கிக்கலாம். பொட்டிலுப்பு திராவகத்திலும், கந்தகத் திராவகத்திலும், கரையும்.

செய்கை.—வியதாபேத, பித்த, விரேசன, திரவகாரி குணங்களுண்டு. தனிரசம் ஒன்றும் செய்கிறதில்லைபோல் காணப்படுகிறது; ஆனால் குடலிலிருக்கிற நீர்களோடு சேர்ந்து வீரியத்தைக் காண்பிக்கும். ரசப்புகைக்குச் சம்பந்தப்பட்டிருப்பவர்களுக்கு ஒருவித வாதரோகம் காணும், அது சில வேளை கொல்லுவதும் உண்டு. தேகத்தின்மேல் ரசத்தைத் தேய்த்தாலும் சரி, அல்லது ரசமருந்துகளை உள்ளுக்குக் கொடுத்தாலும் சரி, அதின் வேகத்தைத் தேகத்தில் காட்டும். அதாவது ஈறு வீங்கி, ரணமாகும்; உமிழ் நீர் அதிகமாய் வடியும்; ஒருவித வாசனை வாயிலிருந்து உண்டாகும்; இவைகளுக்கு வாய்ப்பிடித்தல் (Mercurial ptyalism) என்று பேர்.

லிங்கம். జాదిలింగము. (சின்னபார், Cinnabar.) இது பிறவிச் சரக்கு, வைப்புச் சரக்குமுண்டு. இதை உள்ளுக் குபயோகிப்பதில்லை; ஆனால், தமிழ் வைத்தியர்கள், சுரம் முதலிய ரோகங்களுக்கு, இதைத் தேனில் இழைத்துக்கொடுப்பது வழக்கம். இது அப்பிரயோஜனச் சரக்கு.

ரசமெழுகு, சூதமெழுகு. (புளூ பில், Blue Pill, Mercurial Pill; பிலூலா ஹைட்ரார்ஜிரி, Pilula Hydrargyri) செய்முறை.—ரசம் 2-ஔன்ஸ்; குல்கந்து, 3-ஔன்ஸ்; அதிமதுரத்தூள், 1-ஔன்ஸ். ரசத்தை குல்கந்தோடு சேர்த்து, ரசம் மறையும்படி அரைத்து, பிறகு அதிமதுரத்தைச் சேர்த்து செவ்வையாக மிஸ்ரமித்துக் கொள்ளவேண்டியது. 3-கிறேன் மெழுக்கில், 1-கிறேன் ரசமுண்டு. செய்கை.—வியதாபேத, பித்த, மலகாரி குணங்களுண்டு. உபயோகம்.—மேகவிரணம், மேகரோகங்கள், தாபன ரோகங்கள் இவைகளுக்கு ரசம் கொடுக்க இதுதான் தகுதியான மருந்து. பேதிமருந்துகளுக்கு இது உதவிசெய்து, பித்தநீரையும் தாராளப்படுத்தும். மாத்திரை.—2-3-கிறேன் வீதம் தினத்துக்கு 2-3 தடவைக் கொடுத்தால் வியாதபேதகாரியாகும்; 5-8-கிறேன் கொடுத்தால், பேதியாகும். (Mercury, 2 oz.; Confection of Roses, 3 oz.; Liquorice Root, 1 oz). Dose.—2-3 grs. alterative; 5-8 grs purgative.

ரசச்சுண்ணம். (கிரே பவுடர், Grey powder; மெர்க்கியுரி உத் சாக், Mercury with chalk; ஹைட்ரார்ஜிரம் கம்கிரீடா, Hydrargyrum cum creta). செய்முறை.—ரசம், 1-ஔன்ஸ்; சுத்திசெய்த சீமைசுண்ணாம்பு, 2-ஔன்ஸ். இவைகளைப் பீங்கான் கலுவத்திலிட்டு, ரசம் மறையும்படி அரைத்துக்கொள்ளவும். 3-கிறேன் சூரணத்தில், 1-கிறேன் ரசமுண்டு. செய்கை. உபயோகம்.—ரசமெழுகு குணங்களே இதற்குமுண்டு, ஆனால் சாந்தமானது. குழந்தைகளுக்கு ரசம் கொடுக்கவேண்டியபோது, இதைக் கொடுக்கலாம். மாத்திரை.—5-15-கிறேன் பெரியவர்களுக்கும், 2-4-கிறேன் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். இதை வேறு மருந்துகளோடு

சேர்த்துக்கொடுப்பது வழக்கம். (Mercury, 1 oz.; Prepared chalk 2 oz.) Dose.—5-15 grs.; 2-4 grs. for children.

ரசக்களிம்பு.--(மெர்க்கியூரியல் ஆயின்ட்மென்ட், Mercurial Ointment; Oin!ment of Mercury; அன்குவன்டம் ஹைட்ராஜிரை, Unguennum Hydrargyri.) செய்முறை.—ரசம், 1-பவுன்; சுத்திசெய்த பன்றிநெய் 1-பவுன்; சுத்திசெய்த ஆட்டுக்கொழுப்பு, 1-ஔன்ஸ். இவைகளைச்சேர்த்து ரசம் மறையும்படி அரைத்துக்கொள்ளவேண்டியது. செய்கை. உபயோகம்.—ரசமெழுகு குணங்களே இதற்குமுண்டு. ரசம் வாயால் கொடுக்கக்கூடாதபோது, இதைத் தொடைசசந்திலாவது, அக்குளின் கீழாவது, $\frac{1}{2}$-1-டிராம் பிரமாணம் தேய்த்தால், ரசம் உடம்பில் பற்றும். மேக விரணங்கள், மூட்டுவீக்கங்கள், கட்டிகள், இவைகளுக்கு உபயோகிக்கலாம். Mercury, 1 ℔.; Lard, 1 ℔.; Suet, 1 oz.)

மிஸ்ரமரசக்களிம்பு. (கம்பவுன்ட் ஆயின்ட்மென்ட் ஆவ் மெர்க்குயுரி, Compound Ointment of Mercury; Unguentum Hydrargyri compositum.) செய்முறை.—ரசக்களிம்பு, 6-ஔன்ஸ்; மஞ்சள்மெழுகு, ஆலீவ் ஆயல் என்னும் எண்ணெய், வகைக்கு 3-ஔன்ஸ்; சூடன், $1\frac{1}{2}$-ஔன்ஸ். மெழுகை சிறுதீயிட்டுருக்கி, எண்ணெயைச்சேர்த்து, குளிர்ந்தபிறகு, சூடனைப் பொடித்தும் நடக்களிம்பையும் சேர்த்து, செவ்வையாய் மிஸ்ரமித்துக்கொள்ளவேண்டியது. (Ointment of Mercury, 6 oz.; Yellow wax, Olive oil, of each, 3 oz.; Camphor, $1\frac{1}{2}$ oz.)

ரசப்பூசுந்தயிலம். (லினிமென்ட் ஆவ் மெர்க்குயுரி, Liniment of Mercury, Mercurial Liniment; Linimentum Hydrargyri.) செய்முறை.—ரசக்களிம்பு, 1-ஔன்ஸ்; நவக்ஷார ஜயநீர், 1-ஔன்ஸ்; சூடன் பூசுந்தயிலம், 1-ஔன்ஸ்; ரசக்களிம்பை சூடன் தயிலத்தில் சேர்த்து, சிறுதீயிட்டுருக்கி, பிறகு ஜயநீரைச் சேர்த்துக்கொண்டு குலுக்கிக் கலந்துக்கொள்ளவும். செய்கை. உபயோகம். ரசக்களிம்புக்கொற்றதே இதற்குமுண்டு, ஆனால் அதிக உஷ்ண குணமுடையது. (Ointment of Mercury, 1-oz; Solution of Ammonia, 1-foz.; Liniment of Comphor, 1-foz.)

ரசப்பிளாஸ்திரி. (மெர்க்யூரியல் பிளாஸ்டர், Mercurial Plaster; எம்பிளாஸ்ட்ரம் ஹைட்ரார்ஜிரை; Emplastrum Hydrargyri.) செய்முறை ரசம், 3-ஔன்ஸ்; ஆலீவ் ஆயல் எண்ணெய், 1-டிராம்; கந்தகப்பதங்கம், 8-கிறேன்; மிருதாரசிங்கி பிளாஸ்திரி, 6-ஔன்ஸ். எண்ணெய்க் காய்ச்சி, கந்தகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து, அவைகள் மிஸ்ரமிக்கிற வரையில் துழவி, அதனுடன் ரசத்தைவிட்டு, அது மறைய அரைத்து, பிறகு பிளாஸ்திரியை உருக்கிச் சேர்த்து, மிஸ்ரமித்துக்கொள்ளவும். உபயோகம்-மூட்டுவீக்கம், அரையாப்புக்கட்டி, கட்டிகள், மேகக் கீல்வாதம் ஆகிய இவைகளுக்குப் போடலாம் (Mercury, 3 oz.; Oilve Oil, fdr.; Sulphur 8 grs; Lead Plaster, 6 oz) In hydrarthrosis, buboes, tumours, syphilitic rheumatism.

ரசக்காரச்சிந்தூரம். (ரெட்பிரிசிபிடேட், Red Precipitate; ரெட் ஆக்ஸைட் ஆவ்மெர்க்குயுரி, Red Oxide of Mercury; ஹைட்ரார்ஜிரை ஆக்ஸிடம் ரூபிரம், Hydrargyri Oxidum rubrum; Hydrargyri Nitrico Oxidum.) இந்தச் சிந்தூரத்துக்கு, காரகுணமுண்டு. ரணங்களுக்குத் தூவினால் துர்மாமிசத்தைக் கரைத்து, சீக்கிரத்தில் உலரும்படிச்செய்யும். உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது. Irritant, escharotic.

ரசக்காரச் சிந்தூரத்தின் இளகியகளிம்பு.(Ointment of Red Oxide of Mercury ; Unguentum Hydrargyri Oxicdi Rubri Unguentum Hydrargyri Nitico-Oxidi. Red Precipitate Ointmeni.) செய்முறை.—ரசக்காரச் சிந்தூரம், 62-கிறேன் ; மஞ்சள்மெழுகு, $\frac{1}{4}$-ஔன்ஸ் ; வாதுமை எண்ணெய், $\frac{3}{4}$-ஔன்ஸ். மெழுகைச் சிறுதீயிலுருக்கி, எண்ணெயைச் சேர்த்து, குளிர்ந்துவரும்போது, சிந்தூரத்தைச்சேர்த்து மிஸ்ரமித்துக்கொள்ளவும். ஆறாத மேகவிரணங்களுக்கும், சருமரோகங்களுக்கும்,கண்புழுவெட்டுக்கும், நாள்பட்ட கண்ணோவுக்கும், இதை மேலுக்குப் போடலாம் (Red Oxide of Mercury, 62 grs. ; Yellow wax, $\frac{1}{4}$ oz. ; Oil of A!monds, $\frac{3}{4}$ oz.) To syphiltic ulcerations, obstinate skin diseases, ophthulmia arsi, chronic conjunctivitis.

ரசபஷ்மம்.

ரசகருப்பூரம் ; பூரம் ; ரசப்பதங்கம். రసభస్మము రసకర్పూరము, పూరము ஸப் குளோரைட் ஆவ் மெர்க்கியுரி, Subchloride of Mercury ; ஹைட்ராஜிரை ஸப் குளோரிடம், Hydrargyri Subcoloridum; Hydrargyri Chloridu m ; Calomelas ; காலொமல், Calomel.

ஸல்பேட் ஆவ் மெர்க்கியுரி, ரசம், கறியுப்பு இவைகளைச் சேர்த்துப் பதங்கித்து எடுக்கிற இந்தப் பஸ்பமானது, வெள்ளையாய், பளுவாய் இருக்கும் ; சுண்ணமபு ஜலம்விட்டால் கறுத்துவிடும். கட்டியாய், கம்பிகளாய், மினுமினுப்பாயிருக்கிற ரசகருப்பூரத்தைப் பூரமென்றும், ரசப்பதங்கமென்றும் சொல்லுவர் ; இதை முலைப்பாலில் சுருக்கேற்றி, தேன்முதலிய அனுபானங்களில் இழைத்து தமிழ் வைத்தியர்கள் கொடுப்பதுண்டு. இதில் தோஷங்களுண்டு; சீமைச் சரக்காகிய ரசபஸ்மத்துக்கும், பூரத்துக்கும் ரூபபேதமேயொழிய, செய்கையில் வித்தியாசமிராது. பூரத்தையரைத்து ஜலத்திலிட்டுக்கழுவி, உலரவைத்துக்கொண்டால், தோஷங்கள் நீங்கிவிடும்.

செய்கை.—உக்கிரரோகசமன, விரேசன, பித்தகாரி குணங்களும், குறைந்த அளவில் கொடுத்தால், வியதாபேத, திரவ, கிருமிநாசகாரி குணங்களுமுண்டு. Antiphlogistic, purgative, cholagogue ; in small doses, alterative, sialagogue, anthelmtntic.

உபயோகம்.—சர்வ உக்கிரதாபன சுரங்களுக்கு, இதை அதிகமாய்க் கொடுத்ததுண்டு ; ஆனல் இப்போது, பேதி செய்கைக்காக இதைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். வாந்திபேதி, மஞ்சட்காமாலை, பித்ததோஷம், சீதபேதி, நீர்க்கோவை, வாதசூலை, விரணசந்நி, அசதிசந்நி, செவிடு, ஆறாத சருமரோகங்கள், அஸ்திரோகம், மேகத்தினலெடுத்த அநேக வியாதிகள் ஆகிய இவைகளுக்குக் கொடுத்து, சவுக்கியம் கண்டதுண்டு. In inflammatory and febrile affections, cholera, jaundice, dysentery, neuralgia, apoplexy, cephalalgia, deafness, obstinate skin diseases, periostitissyphiltiti affections.

மாத்திரை.--1-2 கிறேன் வீதம் அடிக்கடி கொடுத்தால், வியாதாபேதகாரியாகும் ; 2-6 கிறேனுக்கு அதிகமாயும் கொடுத்தால், பேதியாகும். பேதிமருந்துகளோடு சேர்த்துக்கொடுக்கலாம். ரசப்புகைக்கும் உபயோகமாகிறது ; இதற்கு 20-30 கிறேன் போதுமானது. 1-2 grs. alterative ; 2-6 grs. purgative.

ரஸபஸ்மமெழுகு. (பிளமர்ஸ்பில், Plummer's Pill ; Compound Pill of Subchloride of Mercury ; Pilula Hydrargyri Subchloridi composita ; Pilula Calomelanos composita.) செய்முறை.—ரஸபஸ்பம், அஞ்சனக்கல் சிந்தூரம், வகை 1இு 1-ஔன்ஸ்; குவாகம் பிசினித்தூள், 2-ஔன்ஸ் ; ஆமணக்கெண்ணெய், 1-ஔன்ஸ், அல்லது தேவையானது· பஸ்மத்தைச் சிந்தூரத்தோடு அரைத்து, பிறகு பிசின் எண்ணெய் இவைகளைச் சேர்த்து, மெழுகுபதத்துக்கு இடித்துக்கொள்ளவும். மேகம், யகிர்த்கண்டம் முதலிய ரோகங்களுக்குக் கொடுக்க திவ்விய ஔஷதம். 5-10 கிறேன் வீதம் தினமும் கொடுக்கவேண்டியது. (Subchloride of Mercury, Sulphurated Antimony, of each, 1 oz ; Guaiacum Resin, 2 oz.; Castor oil, 1 foz. or a sufficiency) Dose.—5-10 grs.

ரஸபஸ்மக்களிம்பு, ஆயின்ட்மெண்ட் ஆவ் ஸப்குளோரைட் ஆவ் மெர்க்கியுரி, Ointment of Subchloride of Mercury ; அன்குவண்டம் ஹைட்ரார்ஜிரை ஸப்குளோரிடை, Unguentum Hydrargyri Subchloridi; Ung Calomelanos.) செய்முறை—ரஸபஸ்மம், 80-கிறேன் ; சுத்திசெய்த பன்றி நெய் 1-ஔன்ஸ் மிஸ்ரமித்துக்கொள்ளவும். மேக சம்பந்தமுடைய ரணங்களுக்கு இது வெகு நல்லது (Subchloride of Mercuy, 80 grs.; Prepared Lard, 1oz.)

பூரக்கிலேதம். (பிளாக்வாஷ், Black wash. பிளாக்மெர்க்குயூரியல் லோஷன், Black Mercurial Lotion ; லோஷியோஹைட்ரார்ஜிரை நைகிரா Lotio Hydrargyri nigra.) செய்முறை.—ரஸபஸ்மம், 30-கிறேன் ; சுண்ணும்பு ஜலம், 10 ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும். குய்யரணம் முதலிய மேக விரணங்களுக்கு உபயோகமாகும். Subchloride of Mercury, 30-grs. ; Solution of Lime, 10 oz.)

வீரம்

சவ்வீரம், சரக்குச்சுண்ணம், பரங்கிப்பாஷாணம். వీరము, సవ్వీరము. கரோசீவ் சப்ளிமேட், Corrosive sublimate. பெர்க்குளோரைட் ஆவ் மெர்க்குயுரி, Perchloride of Mercury ; ஹைட்ரார்ஜிரை பெர்க்குளோரிடம் ; Hydrargyri Perchloridum; Hydrargyri Bichloridum ; Hydrargyri Corrosivum sublimatum; Sublimatus corrosivus.

ஸல்பேட் ஆவ் மெர்க்குயுரி, கறியுப்பு, பிளாக் ஆக்ஸைட் ஆவ் மாங்கநீஸ் ஆகிய இவைகளைச்சேர்த்து, வடித்தெடுக்கிற இந்தச்சரக்கு பளுவாய், வெள்ளையாய் இருக்கும் ; ஜலத்தில் கரையும் ; சுண்ணும்பு ஜலம் சேர்த்தால் மஞ்சள் நிறமாகும் ; ஐயோடைட் ஆவ் பொடாஷியம், சேர்த்தால், மஞ்சள் நிறமான வண்டல் உண்டாகி, பிறகு அது மெத்த சிவப்பாகிவிடும்.

செய்கை.—குறைந்த மாத்திரையில் நாள்படக் கொடுத்தால் வியதாபேதகாரியாகும் ; மூத்திரம், வியர்வை, உமிழ்நீர் இவைகளையும் அதிகப்படுத்தும். மாத்திரை அதிகமானல் கொல்லும், தனியாய் மேலுக்குப் போட்டால், காரமாகும் ; ஜலத்தில் கரைத்துப்போட்டால், உஷ்ணகுணம் தரும், Alterative, caustic, simulant.

உபயோகம்.—மேகப்புடை, கண்ணேவு, மூட்டுவீக்கம் முதலிய மேகசாட்டியங்கள் இவைகளுக்கு இது வெகுநல்ல மருந்து. பிரமேகம், தந்திமேகம், கருப்பமேகம் இவைகளுக்கு ஜலத்தில் கரைத்துப் பீச்சுகிறதும்,

கண்ணோவுக்கும், சருமரோகங்களுக்கும் கிலேதமாகவும், உபயோகிப்பதுண்டு. நமது தமிழ்முறையிலிருக்கிற இந்தக்கொடியவிஷம் சேர்ந்தபேதி மருந்துகளையும், இன்னும் பல மெழுகுகளையும் கொடுக்கிற வழக்கத்தைத் தக்ஷணமே நீக்கிவிடவேண்டியது, அதனால் ஜனங்கள் விருதாவில் துன்பமடைகிறார்கள். இதற்கு முறிவு, முட்டையின் வெள்ளைக்கரு. In syphilitic affections,gonorrhœa, leucorrhœa, &c.

மாத்திரை.—வீசம் முதல் ⅛-கிறேன் வீதம் தினத்துக்கு 2-3-தடவை ஜலத்தில் கரைத்துக் கொடுக்கலாம். 1-ஔன்ஸ் சுத்த ஜலத்துக்கு, ½-2-3 கிறேன் வீரம் சேர்த்து வெளிக்குபயோகிக்கலாம். 1/16 to ⅛ gr.

வீரஜயநீர். [ஸொலூஷன் ஆவ் பெர்க்குளோரைட் ஆவ் மெர்க்குயுரி, Solution of Perchloride of Mercury; லைகர்ஹைட்ரார்ஜிரை பெர்க்குளோரிடை, Liquor Hydrargyri Perchloridi] செய்முறை.—வீரம், நவாச்சாரம், வகை 1-இ-10-கிறேன்; ஆவிநீர், 1-பைன்ட் கரைத்துக்கொள்ளவும். மாத்திரை.—½-1-டிராம் அளவுக்குக்கெடுக்கலாம். 1-ஔன்ஸ் நீரில் ½-கிறேன் வீரமுண்டு. [Perchloride of Mercury, Chloride of Ammonium, each 10-grs.; Distilled Water, 1 pint.]Dose.—½-1-fdr.

வீரக்கிலேதம்.—(எல்லோ வாஷ், Yellow Wash ; எல்லோ மெர்க்குயூரியல் லோஷன், Yellow Mercurial Lotion ; லோஷியோ ஹைட்ரார்ஜிரை கிளேவா, Lotio Hydrargyri Flava.) செய்முறை.—வீரம், 18-கிறேன் ; சுண்ணாம்பு ஜலம், 10-ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும். இதைமேகவிரணங்களுக்குப் போடலாம். (Perchloride of Mercury, 18 grs ; Solution ofLime, 10 foz.)

வீரபஸ்மம்.—(அம்மோனிஎடெட் மெர்க்யுரி,Ammoniated Mercury Hydrargyrum Ammoniatum ; Hydrargyri Ammonio- Chloridum ; Hydrargyri Præcipitatum Album.) வீரத்தை ஜலத்தில் கரைத்து, நவாக்ஷாரவாயுவை விட்டுக் சேகரிக்கிற,வீரபஸ்பமானது வெளுத்திருக்கும்;ஜலத்திலும், சாராயத்திலும் கரையாது. செய்கை. உபயோகம்.—உஷ்ணகாரி. உள்ளுக்கு உபயோகிப்பதில்லை, களிம்புசெய்து மேலுக்குபயோகிப்பதுண்டு-மாத்திரை அதிகமானால் விஷமிக்கும்.

வீரபஸ்மக்களிம்பு.-(ஒயிட்பிரிசிபிடேட் ஆன்ட்மென்ட்,White preci. ptate Ointment; Ointment of Ammoniated Mercury ; Unguentum Hydrargyri Ammoniati; Ung. Præcipitati Albi.) செய்முறை.—வீரபஸ்மம், 62-கிறேன் ; மெழுகுகளிம்பு, 1-ஔன்ஸ். மிஸ்ரமித்துக்கொள்ளவும். சொறிசிரங்கு முதலிய சருமரோகங்களுக்கும், கண்ரெப்பையின் புழுவெட்டுக்கும், புராதன கண்ணோவுக்கும் உபயோகப்படுத்த இது மெத்த நல்ல மருந்து பேனையும் கொல்லும். (Ammoniated Mercury, 62 grs. ; Simple Ointment, 1 oz)

ஸிட்ரன் ஆயின்ட்மென்ட்

సిట్రన్ ఆయింటుమెంటు.Citrine ointment; ஆயின்ட்மென்ட் ஆவ் நைட்ரேட் ஆவ் மெர்கியுரி, Ointment of Nitrate of Mercury ; அன்குவண்டம் ஹைட்ரார்ஜிரைநைட்ரேடிஸ், Unguentum Hydraagyri Nitratis ;Unguentum Citrinum.

செய்முறை.—ரசம் (எடையாய்) 4-ஔன்ஸ்; வெடியுப்புத்திராவகம், 12-ஔன்ஸ் சுத்திசெய்த பன்றிநெய், 15-ஔன்ஸ்; ஆலீவ் எண்ணெய் 32-ஔன்ஸ். சிறுதீயிட்டெரித்து ரசத்தைத் திராவகத்தில் கரைத்துக் கொண்டு, சரக்குகளின் மிதத்துக்கு, 16-பங்கு அதிகமாய்க் கொள்ளும்படி ஒரு பீங்கான் பாத்திரத்தில், நெய்யும் எண்ணெயும் சேர்த்து, ஜலயந்திரம், அல்லது டோலா யந்திரத்தில் வைத்து கரைத்து, அது சூடாயிருக்கும்போதே, மேற்படி சூட்டுத் திராவகத்தைச் சேர்த்து, செவ்வையாய் மிஸ்ரமித்துக் கொள்ளவேண்டியது. இது நுரைக்காவிட்டால், நுரைக்கிறவரையில் தீயில் வைக்கவும். குளிர்ச்சியாகிறவரையில் துழவிக்கொடுக்க வேண்டியது. (Mercury,4 ox ; Nitric Acid, 12 foz.; Prepared Lard, 15 oz.; Olive oil, 32 foz.)

உபயோகம்.—நாள்பட்ட சருமரோகம், ஆறாத விரணங்கள், அழிவிரணங்கள், கண்ணின் புழுவெட்டு, குழந்தை முதலிய மெலிந்த தேகப் பிரகிருதி யுடையவர்களுக்குக் காணுகிற சருமவியாதிகள், இவைகளுக்குப்போட இது நல்ல களிம்பு. In chronic skin diseases, foul indolent and phagedenic ulcers, ophthalmia tarsi, &c.

மைல்டர் ஆயின்ட்மென்ட் ஆவ் நைட்ரேட் ஆவ் மெர்க்குயுரி, (Milder Ointment of Nitrate of Mercury; Unguentum Hydrargyri Nitratis Mitius.] செய்முறை.—விட்ரன் ஆயின்ட்மென்ட், 1-ஔன்ஸ்; பன்றிநெய், 7-ஔன்ஸ்; மிஸ்ரமித்துக்கொள்ளவும். Ointment of Nitrate of Mercury, 1 oz Lard, 7 oz.

காடிக்காரம்

కాడిక్కారము. நைட்ரேட் ஆவ் சில்வர், Nitrate of Silver ; அர்ஜென்டைநைட்ரஸ், Argenti Nitras ; லூனர் காஸ்டிக், Lunar Caustic.

சொக்க வெள்ளியோடு, வெடியுப்பைச் சேர்த்துச் செய்கிற இந்தச் சரக்கு, நீண்ட கம்பிகளாயாவது, தகடுகளாயாவது இருக்கும்; நிறம் வெள்ளை; துணியிலும் தேகத்திலும் பட்டால், கறுத்துவிடும்.

செய்கை.—தாருட்டிய, சமனகாரி குணங்களுண்டு; மாத்திரை அதிகமானல் கொடிய நஞ்சாகும்; மேலே தேய்த்தால் விரணமாகும. காடிக்காரம் கரைந்திருக்கிற நீருக்கு உஷ்ணகுணமுண்டு. Tonic, sedative, caustic, escharotic, stimulant.

உபயோகம்.—நாள்பட்ட சீதபேதி, பேதி, குன்மம், காக்கைவலி, கக்கிருமல், சுவாசகாசம், சூதக அக்கிரமத்தினல் காணுகிற தலைவலி, ரசப்பிடிப்பு ஆகிய இவைகளுக்கு கொடுத்துக்கொண்டு வந்ததில் நன்மை கண்டதுண்டு. மூட்டுவீக்கம், அக்கி, மேகவிரணம், ஆறாத அழிவிரணங்கள் ஆகிய இவைகளுக்கு மேலே தடவலாம். பிரமேகம், தந்திமேகம், கருப்பப் பிரமேகம், வாய்ரணம்,தொண்டைக்கம்மல், தீராத சருமவியாதிகள்,கண்ணோவு இவைகளுக்கு இதின்நீரை உபயோகிக்கலாம் நீர்க்கட்டில், சதையடைப்புக்கும், பள்ளம்விழாமல் பெரியம்மை முத்துகளுக்கும் போடலாம். விஷகாயங்கள், பேய்க்கொண்ட மிருகக்கடிகள், பாம்புக்கடி, தேள்கொட்டல் முதலியவைகளுக்குப் போட்டுப் புண்ணக்கினல், விஷகுணங்களுண்டாகாமல் தடுக்கும். In dysentery, diarrhœa, dyspepsia, epilepsy, hooping cough, asthma, hysterical headache, mercurial palsy, disea-

sed joints, ery sipelas, chancres, indolent ulcers, gonorrhœa, gleet, leucorrhœa, aphthæ, cynanche maligna, aphonia, obstinate skin diseases, stricture, small pox, ophthalmia, poisoned wounds, bites of rabid animals, snake bite, &c.

மாத்திரை.—ஒருகிறேனில் ஆறில் ஒண்ணுமுதல், மூன்றில் ஒரு பங்கு வீதம், பொடித்து மாத்திரையாக்கிக் கொடுக்கலாம். 1-ஔன்ஸ் சுத்த சலத்துக்கு 2-10 கிறேன் எடை காடிக்காரம் சேர்த்து, மேலுக்குபயோகிக்கலாம்; $\frac{1}{6}$-$\frac{1}{3}$ grs.

வெள்ளி பஸ்மம்

ரஜதபஸ்மம், ರಜತಭಸ್ಮಮು. ஆக்ஸை ஆவ் ஸில்வர். Oxide of Silver; அர்ஜென்டை ஆக்ஸிடம், Argenti Oxidum.

செய்கை.—காடிக்காரத்தைச் சுண்ணும்பு ஜலத்தில் சேர்த்துச் செய்கிற ஊதாநிறமான இந்த வெள்ளி பஸ்மத்துக்கு, காடிக்காரத்தின் குணமேயுண்டு; ஆனல் சாந்தமானது; இதை நாள்படக் கொடுக்கலாம். சருமம் கறுக்காது. கிருமி நாசகாரி. Tonic, antispasmodic, sedative.

உபயோகம்.—குன்மம், எரிகுன்மம், சூலைகுன்மம், சர்த்திகுன்மம், அன்னசய ரணம், ரக்தவாந்தி இவைகளுக்குக் கொடுத்து நன்மை கண்டதுண்டு. ரத்தபித்தம், பெரும்பாடு இவைகளுக்கும் கொடுக்கலாம். மேகவிரணம், ஆறுதவிரணம், கண்ரெப்பையின் புழுவெட்டு இவைமுதலியவைகளுக்கு வெளிக்கு உபயோகிக்கலாம். In dyspepsia, gastralgia, gastrodynia, pyrosis, ulceration of the stomach hæmatemesis, hæmorrhages, menorrhages, syphilis, obstinate ulcers, ulcer of the cornia, ophthalmia, tarsi, &c.

மாத்திரை.—$\frac{1}{2}$-2 கிறேன் வீதம் மாத்திரைசெய்து தினத்துக்கு 2-3 தடவை கொடுக்கலாம். 1-ஔன்ஸ் மெழுகு களிம்புக்கு 30-40 கிறேன் வெள்ளிபஸ்மம் சேர்த்து மெழுகுசெய்து, வெளிக்கு உபயோகிக்கலாம். $\frac{1}{2}$-2 grs.

4-வது புஸ்தகம்

BOOK IV

ஔஷதவைத்தியம்

பிராக்டீஸ் ஆவ் மெடிஸன்,

Practice of Medicine

(in Tamil)

பொது வசனம்

சாரீரம், சாரீரவியாபாரம், குணபாடம் ஆகிய இம்மூன்று சாஸ்திரங்களை வாசித்து, பொருள்களைச் செவ்வையாய்த் தெரிந்துகொண்டபிறகு, ஔஷதவைத்தியம், சஸ்திரீகம் முதலியவைத்திய கிரந்தங்களை வாசிப்பது இங்கிலீஷ் வைத்தியகிரமம், முதல்கண்ட சாஸ்திரங்களில் கியானமில்லாவிட்டால், மற்றவைகளைத் தெரிந்துகொள்வது பிரயாசை.

மானிடசரீரத்தை யனுசரிக்கிற ரோகங்கள் அனந்தம், 4448-என்று ஆயுள்வேதத்தில் ஒருபரியாய சங்கியயைக் காணலாம். சில ரோகங்களை, ஔஷதங்கள் கொடுத்தும், சிலரோகங்களை சஸ்திரம், காரம், க்ஷாரம் முதலிய ராக்ஷஸ சிகிச்சைசெய்தும், சவுக்கியபடுத்தவேண்டியதாய் இருக்கிறபடியால், ஆயுள்வேதியர், ரோகங்களை ஔஷதசாத்திய ரோகங்கள் (மெடிகல் டிசீஸெஸ் Medical diseases) என்றும், சஸ்திர சாத்தியரோகங்கள் (ஸர்ஜிகல் டிஸீஸெஸ் Surgical diseases) என்றும், இரண்டுபிரிவுகள் செய்திருக்கிறார்கள். ஔஷத சாஸ்திய ரோகங்களை விவரிக்கிற சாஸ்திரத்துக்கு, ஔஷதவைத்தியம் (பிராக்டீஸ் ஆள் மெடிஸன் Practice of Medicine) என்றும்— சஸ்திர சாத்தியரோகங்களை விவரிக்கிற சாஸ்திரத்துக்கு, சஸ்திரீகம் (ஸர்ஜிரி Surgery) என்றும் சொல்லப்படும். சிகிச்சைகளிலும், ஔஷதச் சிகிச்சை, சஸ்திரச்சிகிச்சை என இரண்டுவிதங்களுண்டு. ஔஷதச்சிகிச்சையை யனுசரித்தவனுக்கு, ஔஷதவைத்தியன் (பிஸிஷன் Physician) என்றும்—சஸ்திர சிகிச்சையை யனுசரித்தவனுக்கு சஸ்திரவைத்தியன், அல்லது சஸ்திரீகன் (ஸர்ஜன் Surgeon) என்றும் கூறுவர்.

பிரதிரோகத்துக்கும், லக்ஷணங்கள், காரணங்கள், சிகிச்சை ஆகிய இவைகளை முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியது. இக்கிரந்தத்தில் அவைகளைச் சங்கிரஹமாய்த் தெரிவித்திருக்கும்; வைத்தியன் அனுபோகத்தினால், விசேஷித்து தெரிந்துகொள்ளவேண்டியது.

சவுக்கியம்.—(ஹெல்த், Health). சரீரத்திலுள்ள உறுப்புகளின் தொழில் கிரமத்தில் நடந்து, தேகத்துச்கு வேதனையில்லாமல் இருப்பதே சவுக்கியமாம்.

ரோகம். அசவுக்கியம், வியாதி, பிணி, நோய், தீனம்.-(டிசீஸ், Disease) உறுப்பு அல்லது உறுப்புகளின் தொழில் அக்கிரமப்பட்டு, தேகத்தில் உண்டாகிற அசவுக்கியத்துக்கு, ரோகம் என்று பேர்.

ஸ்தூலம்.—(ஹைபர்ட்ரொபி, Hypertrophy). உறுப்புகளுக்குப்போஷணை அதிகமானால், ஸதூலரோகம் பிறக்கும். யகிர்தகண்டம், பிளீகம், இருதயம், மாமிஸம், கோளக்கள் ஆகிய இவைகள் ஸ்தூலித்துப்போகும்.

சுஷ்கம்.—(அட்ரொபி, Atrophy). உறுப்புகளுக்குப் போஷணைக்குறைந்தால், சுஷ்க்கித்துவிடும்.

கனப்பு.—(இன்டியூரேஷன், Induration). ஏதாவது ஒரு உறுப்பு, கல்லைப்போல் தடித்துப்போகுதலுக்கு, கனப்பு என்று பேர்.

மிருதுவு.—(ஸாப்ட்னிங், Softening.) தாபன சேஷ்டையாலும், போஷணைக்குறைவாலும், மாமிஸம், எலும்பு, மூளை முதலியவைகள் மிருதுவாகிவிடும்.

விகல்பம்.—(டிஜெனரேஷன், Degeneration). ஏதாவது ஒருதாது சுவாபீககுணம் மாறி, வேறு தாதுவாயப் போகுதலுக்கு விகல்பம் என்று பேர்.

காரணம் — (காஸ், Cause). ரோகத்தை யுண்டாக்கிற ஏதுவைக்கு, காரணம் என்றபேர். ரோகக்காரணங்கள் இரண்டுவிதங்களுண்டு; ரோகத்துக்கு இடங்கொடுக்கிற காரணத்துக்கு, ஆதிகாரணம் (பிரிடிஸ்போஸிங்காஸ், Predisposing cause) என்றும், ரோகத்தைப் பிறப்பிக்கிற காரணத்துக்கு, விளைவிக்கிறகாரணம், (எக்ஸைடிங் காஸ், Exciting Cause) என்றும், சொல்லப்படும். திருஷ்டாந்தம்.—ஒருவன் அப்பியங்கஸ்நானம் செய்து, மழையில் நனைந்தபிறகு, அவனுக்கு சுரம்கண்டால், ஸ்நானம் ஆதிகாரணமாகும்; மழை, விளைவித்த காரணமாகும்; சுரம், வியாதியாகும், அதற்கு பிராக்சிமேட்காஸ் (Proximate Cause) என்றுபேர். ரோகங்களுக்கு முக்கிய காரணங்களாவன.—வாயு, போஜனம், ஜலபானம், நித்திரை, மனோபீடை, பாரம்பரிய ஸ்திதி, உஷ்ணம், சீதளம் ஆகிய இவை முதலியவைகளாம்.

ரோகநிதானம்.—(டையக்னோஸிஸ், Diagnosis). ரோகபேதங்கள் தெரிந்துகொள்வதற்கு, ரோகநிதானம் என்று பேர்.

சாத்திய அசாத்திய நிதானம்.—(பிராக்னோஸிஸ், Prognosis). ரோகம் என்னமாய் முடியுமென்றாவது, அல்லது சாத்தியப்படும், அல்லது படாது என்பதையாவது தெரிந்துகொள்வதற்கு, சாத்திய அசாத்திய நிதானம் என்று பேர்.

லக்ஷணங்கள், குறிகள்.—(ஸிம்டம்ஸ், Symptoms). வியாதிகளுக்கு லக்ஷணங்களுண்டு: அந்தலக்ஷணங்களில் வைத்தியன் கண்டுகொள்கிறவைகளுக்கு, தரிசனலக்ஷணங்கள் (ஆப்ஜெக்டிவ் ஸிம்டம்ஸ், Objective symptoms) என்றும்—ரோகி உணர்ந்து சொல்லுகிறவைகளுக்கு, ஸ்பரிஸலக்ஷணங்கள்: ஸப்ஜெக்டிவ் ஸிம்டம்ஸ், Subjective symptoms) என்றும்—ரோகம் காண்கிறதற்கு முன்காணுகிற சில லக்ஷணங்களுக்கு, பூர்வரூபங்கள் (பிராக்ரூபங்கள்) பிரிமானிடொரி ஸிம்டம்ஸ், Premonitory symptoms) என்றும், சொல்லப்படும்.

ஜன்மவியாதி.—(கஞ்ஜெனிடல் டிசீஸ், Congenital disease). ஜனிக்கும்போதே இருந்து இருக்கிற ரோகத்துக்கு, ஜன்மவியாதி யென்றுபேர்.

பாம்பரியரோகம்.—(ஹெரிடிடெரி டிசீஸ், Hereditary disease). தாய், தந்தை அல்லது குடும்பத்தில் யாருக்காவது இருந்து, வம்ஸாவளியாய் காணுகிற ரோகத்துக்கு, பாரம்பரியரோகமென்று பேர்.

தீவிரரோகம். தீக்ஷணரோகம், உக்கிரரோகம், அதிகோபரோகம்.—(அக்கியூட் டிசீஸ், Acute disease). தீவிர ஆரம்பம், பிரபலசேஷ்டை, சீக்கிரபாகம் ஆகிய இவைகளையுடைய வியாதிக்கு, தீவிரரோகமென்று பேர்.

தீர்க்ககாலரோகம். நாட்சென்ற வியாதி, பழகியவியாதி, சாவதானரோகம்.—(கிரானிக் டிசீஸ், Chronic disease). தாமிஸ உத்பத்தி, ஸமனசேஷ்டை, தீர்க்ககால ஸ்தாபிதம் ஆகிய இவைகளையுடைய வியாதிக்கு, தீர்க்ககாலரோகமென்று பேர்.

சாங்கிராமிகரோகங்கள்.—(ஸைமாடிக் டிசீஸெஸ், Zymotic diseases). நமக்குத் தெரியாத சில பிரதான வஸ்துவினாலாவது, அல்லது, போஜனக்குறைவு அல்லது அபக்குவபோஜனத்தினாலாவது, பிறந்து வியாபிக்கிற ரோகங்களுக்கு, சாங்கிராமிகரோகங்கள் என்றுபேர். இவைகளில், தொத்துவியாதி, ஒட்டுவியாதி, கொள்ளைநோய், திக்குவியாதி என சில பிரிவுகளுண்டு:—

தொத்துவியாதி.—(இன்பெக்ஷியஸ் டிசீஸ், Infectious disease). காற்றுமூலமாய் அனுசரிப்பதற்கு, தொத்துவியாதியென்று பேர். அம்மை, விஷபேதி ஆகிய இவைகளாம்.

ஒட்டுவியாதி.—(கன்டேஜியஸ் டிசீஸ், Contagious disease). தொடுகையினால் காணுகிறதற்கு, ஒட்டுவியாதி என்று பேர். சிரங்குமுதலியவைகளாம்.

மஹாமாரிரோகம், கொள்ளைநோய்.—(எபிடெமிக் டிசீஸ், Epidemic disease). ஏககாலத்தில் அநேகருக்குக் காணுகிற வியாதிக்கு, மஹாமாரிரோகமென்று பேர். விஷபேதி, அம்மை முதலியவைகளாம்.

திக்குவியாதி.—(என்டெமிக் டிசீஸ், Endemic disease). ஒரே இடத்தில் பிரதானமாய் இருக்கிற ரோகத்துக்கு, திக்குவியாதி யென்று பேர்.

சிகிச்சை. நிவாரணம், பிரயோகம்.—(ட்ரீட்மென்ட், Treatment). ஔஷதத்தினாலும், சஸ்திரத்தினாலும், ரோகத்தை ஸொஸ்தப்படுத்துகிறதற்கு, சிகிச்சை என்று பேர்.

சிகிச்சாவிதிகள்.—(இன்டிகேஷன்ஸ் ஆவ் ட்ரீட்மென்ட், Indications of Treatment). ரோகத்தை இவ்விதமாய்க் கண்டிக்கவேண்டியதென்று சுட்டிக்காட்டுகிற விதிகளுக்கு, சிகிச்சாவிதிகள் என்று பேர்.

1-ம் அத்தியாயம்

சர்வாங்கவியாபகரோகங்கள்.

ஜெனரல் டிசிஸெஸ், GENERAL DISEASES.

1. ரத்ததூஷியங்கள்.

மார்பிட் ஸ்டேட்ஸ் ஆவ் தி பிளட். MORBID STATES OF THE BLOOD.

1. **ஆரம்பம்.** (Introduction).—ரத்தத்தின் குணங்களும், அதிலிருக்கிற பதார்த்தங்களும் நமக்குத் தெரியாவிட்டால், அநேகரோகங்களைக் கண்டறிவது பிரயாசை. ரத்தமே பிராணத்துக்கு ஆதாரம்; சரீரத்தில் நடந்துவருகிற அர்ப்புதங்களும், தாதுக்களுடைய போஷணையும், ரத்தத்தினாலேயே உண்டாகின்றன. நல்லரத்தம் தேகத்தில் வியாபிக்கிற வரையில், பிராணன் இருக்கும். நாடிகளில் ரத்தமில்லாமல் போனாலும் சரி, அல்லது கெட்டரத்தம் நாடிகளில் வியாபித்தாலும் சரி, மரணம் சம்பவிக்கும். மூளை, இருதயம், புப்புஸம் ஆகிய இவைகளின் தொழிலில் ஏதாவது கெட்டுப்போனால், ஷை ஸ்திதிகளில் ஒன்று பிறக்கும். நாடிகளில் ரத்தம் குறைந்தாலும் சரி, அல்லது இருதயநடை நின்றாலும் சரி, மூர்ச்சை (ஸிங்கொபி, Syncope) காணும்; ஒருவேளை மரணம் சம்பவித்தால், மரணத்துக்குக் காரணம் மூர்ச்சையென்று உணரவேண்டியது. ரத்தப்பெருக்கால், ரத்தம் குறையும். விஷங்கள், அதிவிசனம், பயம், மின்னல், மூளை அதிர்ச்சி, குலேவயிற்றில் அடிபடுதல் ஆகிய இவைகளால் இருதய நடை நின்றுவிடும். ரத்தம்மாத்திரம் குறைந்தால், அனீமியா (Anæmia) என்றும், இருதயநடை க்ஷீணமடைந்தால், ஆஸ்தினியா (Asthenia) என்றும், இங்கிலீஷில் சொல்லுவர். உபவாசம், க்ஷயம், சீதபேதி முதலியவைகளில் ரத்தமுங்குறைந்து, இருதயநடையும் கிரமேண க்ஷீணித்துநின்று, பிராணன்போகின்றது.

சுவாசபந்தம் (ஆஸ்பிக்ஷிய, Asphyxia, ஆப்னியா, Apnœa, ஸப்போகேஷன், Suffocation), போதக்ஷயம் (கோமா, Coma) ஆகிய இவைகளால், கறுத்தரத்தம் நாடிகளில் வியாபிக்கும். ஜலமிருதி, (Drowning), தூக்கிவிடுதல், மென்னியைப் பிசைதல், ரணஜந்நியில் சுவாஸசதைகள் அசைவற்றுப்போகுதல், குரவளையில் தூர்மாமிஸ அடைப்பு, புப்புஸரோகங்கள் ஆகிய இவைகளால் சுவாஸபந்தம் கண்டு, காற்று புப்புஸத்துக்குப் போவது தடைபடும். மூளைவியாதிகளில், போதக்ஷயமுண்டாகி, சுவாஸநடை க்ஷீணப்பட்டு ரத்தம் பரிசுத்தமாகிறதில்லை. மூச்சடைப்பில் முதல் சுவாஸபந்தம், 2-வது, துஷ்டரத்த வியாபாரம், 3-வது, போதக்ஷயம் காணும்—மூளைவியாதியில், முதல் போதக்ஷயம், 2-வது, சுவாஸபந்தம், 3-வது, துஷ்டரத்த வியாபாரம் காணும்.

2. ரத்தமதரோகம்

ரத்த உபரி. ரத்தபுஷ்டி. ரத்தவிருத்தி. ரத்தாதிகம். ரத்தபூரிப்பு. ரத்தகோபம். (பிளதொரா, Plethora, Hyperæmia, or fulness of blood).—இந்த ரோகத்தில் ரத்தமானது அதிகப்படும், அல்லது

ரத்தம் யதாப்பிரகாரமாய் இருந்து, அணுக்கள்மாத்திரம் மதத்து, சங்கியை அதிகப்படும்; ரத்தப்பசையுங்கூட விருத்தியடையும்.

லக்ஷணங்கள்.—தந்துகிகளில் ரத்தம் நிறைந்திரிப்பதால், கன்னங்கள், உதடுகள், சிவந்திருக்கும்; நாடிபெருத்து திரடமாய் நடக்கும்; நாளங்கள் விம்மியிருக்கும்; கொழுப்பு விருத்தியடைவதும் உண்டு, ஆனால் இது ரோகத்துக்குடைய குறியல்ல. ரத்தமதரோகிக்கு, ரத்தபித்தரோகங்கள், தாபனரோகங்கள் உஷ்ணசந்நி இவை முதலியரோகங்கள் அனுசரிப்பது வழக்கம்.

காரணங்கள்.—குருத்துவபோஜனம். சஞ்சரிக்காமல் உட்கார்ந்து கொண்டே இருக்குதல், அதிநித்திரை ஆகிய இவை முதலியவைகளால், இந்தரோகம் பிறக்கும்.

சிகிச்சை.-இதில் ரத்தத்தைக்குறைக்கவேண்டியது; ஆகையால்குருத்துவமில்லாத போஜனம், மதுபான நிவர்த்தி, பரிசுத்தசாற்றுள்ள ஸ்தலத்தில உல்லாஸ சஞ்சரிப்பு, பிராதகாலத்தில் படுக்கையைவிட்டு எழுந்திருக்குதல், இடைக்கிடை உப்புபேதிக்குக் கொடுக்குதல் ஆகிய இவைமுதலியவைகளைக் கொண்டு, இதைவசப்படுத்தவேண்டியது. ரத்தம் அபரிமிதமாய் இருந்தால் கொஞ்சம் குத்தியெடுத்துவிடவேண்டியதாயும் நேரிடும். தேகத்தில் கொழுப்பு அதிகரித்திருந்தால் (அதிதூலரோகம்) (கார்பியுலென்ஸி, Corpulency), லைகர்பொடாவி என்னும் மருந்தில் 30-துளி வீதம் கொடுத்துகொண்டு வந்தால், சுகுணம் பிறக்கும். வயிறு உள்ளடங்கும்படி, வஸ்திரம் பிகுவாய்க் கட்டிக்கொள்ளும்படி செய்யவேண்டியது

3. பாண்டுரோகம்

ரத்த க்ஷீணரோகம் (அனீமியா, Anæmia, poverty of blood.)—இது தேகத்தை வெள்ளை நிறமாக்குவதால் பாண்டுரோகம் எனப் பேர்பெற்றது. இந்த ரோகம், அபக்குவபோஜனத்தினாலும், வியாதிகள்சண்டு நாள்பட இருப்பதனாலும் ரத்தமூலரோகம், பெரும்பாடு, கர்ப்பக்கிரந்தி இவை முதலியவைகளில் ரத்தம் அதிகமாய்போகுவதினாலும், காணும்; ரத்தத்தைப் பரிசோதித்து பார்வையிட்டால், அணுக்கள் சங்கியையில் குறையும். சவுக்கிய ஸ்திதியில் 1000-க்கு 130-சங்கியையாய் இருப்பது, 80-அல்லது 60-வீதம் குறைந்துவிடும். வியாதி அதிகப் பிரபலப்பட்டிருந்தால், 30-ஆகக் குறைந்துவிடுவதும் உண்டு. ரத்தப்பசையும் குறையும்.

சில கன்னிகைகளுக்கு பிரவிடையாகிறவயதில், ஒருஜாதி பாண்டுரோகம் காண்பதுண்டு, அதற்கு சூதகப்பாண்டு (குளோரோஸிஸ், Chlorosis) என்றுபேர் அவர்களுக்கு மாதாந்திர ருதுக்கிரமம் விகற்பமடைந்து, அந்த வியாதி பிறக்கின்றது.

லக்ஷணங்கள்.—பாண்டுரோகத்தில் முகம், கண்கள், உதடுகள், நாக்கு, வாய், ஈறு, தேகம் இவைகள் வெளுத்திருக்கும்; கால்கள் தணித்திருக்கும்; நாடி சிறுத்துமெதுவாய் நடக்கும்; தீபனம் மந்தப்பட்டிருக்கும்; கண்விழிகள் பெரிதாய்த்தோற்றும்; அசக்தி, ஆயாஸம் இவைகளும் உண்டு; அற்பநடையால் தளர்ச்சி, மூர்ச்சை, பெருமூச்சு, மார்த்துடிப்பு ஆகிய இவைகளும் காணும்; கணுக்கால்கள் சிலருக்கு வீங்கியிருக்கும்; சப்தஸோதன வேணுவை

(ஸ்டிதஸ்கோப், Stethescope) இருதய ஸ்தானத்தின்மேல் வைத்துக் கேட்டால், துருத்திசப்தம் கேழ்விப்படும்.

சிகிச்சை.—இந்த ரோகத்துக்கு, அயஞ்சேர்ந்த மருந்துகளும், மூஷாம்பரம் சேர்ந்த பேதிகளும், அவைகளோடு அயத்தைச் சேர்த்தும் அல்லது சேர்க்காமலும், குருத்வபோஜனமும், கொடுத்து, வசப்படுத்தவேண்டியது. ஆயாஸமில்லாமல், உல்லாசமாய்ச் சஞ்சரிக்கச் செய்யலாம். பரிசுத்தகாற்றுள்ள விடத்தில் ரோகியிருப்பதில் மெத்த சவுக்கியமுண்டு. குளிர்ந்த ஜலஸ்நானம், ஸமுத்திரஸ்நானம் இவைகளையும் செய்துவைக்கலாம். மேல் கண்டவைகளை கிரமமாய் நடத்திவந்தால், இந்த துஷ்டரோகத்துக்குடைய அபாயகுணங்களெல்லாம் மாறிவிடும்: ஆனால், ரத்த அணுக்கள் மறுபடியும் உண்டாக நாட்செல்லுமாகையால், சிலநாள்வரையில் ஔஷதங்களை விடலாகாது. மனோபீடையால் பாண்டுரோகம் பிறந்தால், பாஸ்பேட் ஆவ் அரன் (Phosphate of Iron) என்னும் மருந்தை, குவாஷியா கஷாயத்துடன் கலந்துகொடுக்கலாம். மீன்எண்ணெயையும் சேர்த்துகொள்வது நல்லது. மனோவியாபாரத்தை நீக்கிவிடுவதனாலும், குருத்துவபோஜனத்தினாலும், கொழுப்புள்ள பதார்த்தங்களினாலும், அயம் சேர்ந்த மருந்துகளினாலும், சவுக்கியம் உண்டாகும். அதிகவேலை நாட்படசெய்தல், போஷணைக்குறைவு ஆகிய இவைகளால், ரத்தம் எவ்விதமாய்க் கெட்டுப்போகிறதோ, அதேபிரமாரமாய் அதிகவாசிப்பு, அதிககவனம் முதலியவைகளாலும் ரத்தம் கெடும்.

அயச்சிந்தூரம், காந்தச்சிந்தூரம் இவைகளை நீர்பேதிமருந்துகளோடுசேர்த்து, இந்த ரோகத்துக்குக் கொடுப்பது ஹிந்துசிகிச்சை, மண்டூரசிந்தூரமும் கையாடுகிறார்கள்; ஆனால், அந்தச்சிட்டக்கல்லில், அயம் அணுவளவிருக்கும். ஒருகாசு அன்னபேதிசெய்கிற அற்புதவேலையைப்போல் பேரிற்சிறந்த மண்டூரச்சிந்தூரம், ஒருபோதிலும் செய்யமாட்டாது.

2. பேய்நாய்க்கடி சந்நிரோகம்

ஹைட்ரொபோபியா. HYDROPHOBIA. ரேபீஸ், RABICS.

பிரதிபதம்.—ஜலபயரோகம்.

இது மெத்த வேதனையையும், பயங்கரத்தையும் தரும்; வியாதி தீர்ந்து பிழைப்பது அரிது. நாய்களுக்கு வெறி தற்செயலாய்க் காணுகிறதென்று சொல்லப்படுகின்றது; அது பூனைக்கும் காணலாகும். வெறிநாய்க் கடித்து அதனுடைய வாய் நீர்காயத்திலிறங்கி, ரத்தத்திற்சென்று இந்த துஷ்டரோகம் பிறக்கின்றது.

லக்ஷணங்கள்:—இந்த வியாதிகளுடைய குறிகளாவன.—தொண்டை, மார்பு இவைகளுக்கு கொறுக்கைவலி, ஈரல்தாங்கி சதைக்குவலி, ஜலரூபமானவைகளுக்கெல்லாம் பயம், கஷ்டஜலபானம், அறட்டல், புறட்டல், யேக்கம், விகாரம், தளர்ச்சி, முடிவில் மரணம் ஆகிய இவைகளாம். பேய்நாய்கடித்து சிலநாட்சென்றபிறகு காணுகிற குறிகளாவன.—மனக்கலக்கம், குளிர்ச்சி, ஆலாஸம் ஆகிய இவைகள் ஆரம்பித்து, நித்திராபங்கம், மந்தாக்கினி, தலைவலி இவைகளும் அனுசரிக்கும்; சிலவேளை கடித்தவாயில் திமிராயாவது, அல்லது அதிக வேதனையாவது இருக்கும். இந்த பூர்வரூபக்குறிகள் 2-3-நாள் இருந்தபிறகு, நிஜக்குறிகள் தொடரும். பெருமூச்சு,

குமட்டல், சுரம் ஆரம்பிக்கும், கழுத்தில் பிகுவுதோணும், மூச்சுமுட்டல், விழுங்குவதில் பிரயாஸை, ஜலபதார்த்தங்களுக்கு பயம், சுவாஸபந்தம், உமிழ்நீர் அதிகமாய்ச் சுரந்து காறித்துப்பல் ஆகிய இவைகள் காணும்; சர்வாங்க இசிவு பிறக்கும், அது ஜலத்தைக் கண்டாலும், அல்லது ஜலம் விழுகிற சப்தம்கேட்டாலும், அல்லது ஜலம்விழுங்கும்போதும் கண்டு உபத்திரவப்படுத்தும்.

இரண்டாம்நாளில், ஷை லக்ஷணங்களெல்லாம் பிரபலப்படும், தாகம் அதிகரிக்கும்; குலைவயிற்றில் வேதனையிருக்கும்; வயிற்றுப்பொருமல் காணும்; முகம் ஆவல் கொள்ளும்; பிராணபயம் காணும்; நெற்றியில் பிசுபிசும்பான வியர்வையிருக்கும்; புத்தி சரியாய் இருந்தபோதிலும், மனசுவியாகூலமடையும். மரணகாலம் சமீபித்துவரும்போது, சுவாசபந்தம் அதிகரிக்கும்; இசிவு அடிக்கடி காணும்; காதில் சப்தம் விழக்கூடாமலும், வெளிச்சத்தைப் பார்க்கக்கூடாமலும் நேரிடும்; எச்சிலை வெளிப்படுத்த அதிகபிரயாஸையில் வரும்; அடிக்கடி நீர் இறங்கும்; முடிவில், விகாரம் கண்டு, சர்வசேஷ்டையும் ஒடுங்கி பிராணன் கூண்டைவிட்டு பிரிந்துவிடும்.

நாய் கடித்தபிறகு சந்நிகாணுகிறகாலம் பேதப்படும்; 40-நாள் முதல் 18-20-மாதம் என்று கண்டிக்கிறது. விஷத்தினுடைய வீரியத்தின்மேலும். தேகபிரகிர்தியை யனுசரித்தும், சீக்கிரமாயாவது, தாமஸப்பட்டாவது வியாதிபிறக்கும். 8-நாளையிலும், 4-வருஷம், ஒருவனில், 12-வருஷம் சென்றபிறகும், சந்நிகண்டதாய், தெரியவருகின்றது.

இந்த நோய்கண்டால் சாதாரணமாய் 2-4-6-நாள் இருக்கும். பேய் நாய்க்கடியால் எல்லோருக்கும் சந்நி காணாது, சிலருக்குமாத்திரம் காணும். பேய்க்கொண்டதோண்டான் விஷம் அதிக கொரேமுள்ளது.

சிகிச்சை.—இது அசாத்திய வியாதி, ஔஷதத்துக்கு வசப்படுவது பிரயாசை. சந்நி காணாமல் தடுப்பதே பிரதானச் சிகிச்சை. கடித்தவுடன் காயத்தை, ஜலம் தாரையாய்விட்டு சுத்திசெய்து, காடிக்காரத்தை வைத்து செவ்வையாய்த் தேய்க்கவேண்டியது. காயத்தை சீக்கிரமாய் உலர்த்த வேண்டியதென்று சிலர், உலர்த்தக்கூடாதென்று சிலர், சொல்லுகிறார்கள். வியாதி கண்டிருக்கிறபோது, குளோரபாரத்தை ஆக்கிராணம் செய்து வைக்கலாம். அபினி, புரூஸிக் ஆஸிட், கஞ்சா இவைகளைக் கொடுத்து பரிசோதிக்கலாம். வேதனையைத்தணிப்பதே முக்கிய பிரயத்தினம். சிலர் சொல்லுவது நிஜமாயிருந்தால், கடித்தவாயைக் கீறி கீழ்வடியும்படிச் செய்யலாம். ரோகியின் எசசில் அடுத்திருக்கிறவர்களுடைய காயத்தில் படாமல் ஜாக்ஷித்துகொள்வது ஒரு முக்கியகாரணம். எருக்கம்பால் அல்லது கள்ளிப்பால் தடவுகிறதும், காயத்தின்மேல் பைசாவை வைத்து பாதரக்ஷையால் அடித்து, பிரண்டையுடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து, காயத்துக்கு கட்டுவதும் நாட்டுவழக்கம். கடித்த நாயின் தலையை தக்ஷணமே அறுத்து கடிபட்டவன் சிரஸின்மேல் வைத்து 101-குடம் பச்சை ஜலம் விடுவது, மலையாளச்சிகிச்சை. இந்த அசாத்திய ரோகத்துக்கு, நாயுருவி முனைகளைச் சருக்கரைச்சேர்த்து பிசைந்து கொடுத்தால், சவுக்கியப்படுமென்று, வெகுசுலபமாய் நமது ஆயுர்வேதம் கூறுகின்றது. சந்நிகண்ட பிறகு மருந்துகொடுத்து சவுக்கியமடைந்தால், அந்த ஔஷதத்தை நம்பலாம். நாய் கடித்தவுடனே கொடுக்கிற மருந்துகளையும், நாய்க்கடி சந்நியை ஸொஸ்தப்படுத்துகிறேனென்கிற சிகிச்சைகளையும் நம்பலாகாது.

3. ரத்த பித்த ரோகம்

ஹெமொரேஜ். HÆMORRHAGE.

ரத்த நரம்புகளிலிருக்கிற திரவம் வெளிப்படுதலுக்கு, ரத்த பித்தரோக மென்று ஒரு பொதுப்பேர். ரத்தமானது நரம்புகளிலிருந்து வியர்வை போல் கசிந்து வெளிப்படுகிறதென்று, வெகுநாளாய் எண்ணம்; ஆனால் ரத்தஅணுக்கள், அவ்விதமாகவருவது சந்தேகம். நாடி, நாளம் தந்துகி கள் ஒன்றும் கிழியாமல், வெளிப்படாதென்று இப்போது யோசனை. நரம்பு காயப்பட்டு வருவதற்கு, ட்ரோமாடிக் (traumatic) என்றும்—தேக அசவுக்கியத்தினால் காண்பதற்கு, ஸ்பான்டேனியஸ் (spontaneous) என்றும்—இதர வியாதிநிமித்தமாய்க் கண்டால், ஸிம்டொமாடிக் (symptomatic) என்றும்—வியாதி இல்லாமல் கண்டால், இடியோபாதிக் (idiopathic) என்றும்—தாபிதத்தினால் கண்டால், ஆக்டிவ் (active) என்றும்—துர்ப்பல ரத்தக்ஷீணங்களினால் கண்டால், பாசிவ் (passive) என்றும்—தேக சவுக்கியத்துக்காக இடைக்கிடைகண்டால், (அரிசீஸ்), கான்ஸ்டிடியூஷனல் (constitutional) என்றும்—ஓரிடத்தில் காணுகிறதற்கு பதிலாய் மற்றொ ரிடத்தில் கண்டால், வைகேரியஸ் (vicarious) என்றும்—ஒரு வியாதி யிருக்கும்போது, நன்மைக்கோ துன்மைக்கோ கண்டால், கிரிடிகல் (critical) என்றும்—பேர்பெறும்.

காரணங்கள்.—உஷ்ணம், பயம், கெட்டவாயு ஆக்கிராணம் ஆகிய இவைகளால் இந்த ரோகம் பிறக்கும். சிலருக்கு ஸஹஜமாய் இருப்பது முண்டு; அதற்கு ரத்தபித்தப் பிரகிர்தி (ஹெமோரேஜிக் டையாதிஸிஸ், hæmorrhagic diathesis) என்று பேர். இருதயம், யகிர்த்கண்டம், பிலீக்ம் ஆகிய இவைகளின் ரோகத்திலும், ரத்தாதிகம், பாண்டு, இவைகளிலும் ரத்தம் பிரவாகம் காணும். சிறுவயதில் மூக்கிலிருந்தும், நடுவயதில் சுவாச உறுப்புகளிலிருந்தும், தளர்ந்தவயதில் சிரசு, மூத்திர உறுப்பு, கருப்பை, குதம் ஆகிய இவைகளிலிருந்தும் வெளிப்படும்.

லக்ஷணங்கள்.—நாடி ஒடுங்கும்; தேகம் வெளுக்கும்; கைகால்கள் தணுக்கும்; எழுந்து உட்கார்ந்தால், மூர்ச்சை, விகாரம் ஆகிய இவைகள் ரத்தப்பெருக்குக் குறிகளாகும். உறுப்புகளிலாவது, சிரசு சவ்வுக் குள்ளாவது ரத்தப்பெருக்குகண்டால், துர்குணத்துக்கு இடமாகும்; மற்ற இடங்களாகில், நற்குணமாம்; மரணமுண்டாவ தரிது.

சிகிச்சை.—ரத்தவடிதலை நிருத்தவேண்டியதுவிதி; ஆனால், வழக்கப் பட்டரத்தவடிதலை நிறுத்தினால், அபாயமென்று சிலர் சொல்லுகிறார்கள். ரத்தமூலத்தில் அதிகமாய் வடிந்தால், அதைத் தடுக்காமல் எப்படி விட்டுவிடு கிறது; அதை நிறுத்தும்போது, உறுப்புகளெதிலாகிலும் வியாதி கொள்ளாமல், பத்தியம்வைத்து, விரேசனம் செய்விக்கவேண்டியது. ரத்த புஷ்டியுள்ளவர்களுக்கு, சுகுணத்துக்குக் காணுகிற ரத்தபீனசத்தை நிறுத்தினால், அபத்தம் நேரிடும். சூதகம் நின்று வேறுவிடத்தில் கண்டால், அதற்கு சூதகம் கிரமத்தில் வரும்படியான முயற்சி தேடவேண்டியது. ரோகியை அசையாமல் வைத்து, இருப்பிடத்தை குளிர்ச்சிசெய்து, காரமில்லாத லகு அசனம் கொடுத்து, ரத்தம் காணுகிற இடத்துக்கு அதிக ரத்தம் போகவொட்டாமல் செய்யவேண்டியது. பிறகு ஸங்கோசனகாரிகளை யுபயோகித்து, ரத்தத்தை நிறுத்தவேண்டியது. குளிர்ந்தஜலம், மாசக்காய்

உப்பு, (gallic acid), கந்தகத்திராவகம் ஆகிய இவைகள் நல்ல சங்கோசனிகள். இபிகாக்சூரணத்தில், 1-கிறேன் வீதம், ½-1-மணிக்கொருதரம் கொடுப்பதில் சுகுணம் பிறக்கும்; ரத்தகாசம், ரத்தவமனம் இவைகளுக்கு உதவாது. பிரஸவமானபிறகு காணுகிற பெரும்பாட்டுக்குக் கொடுத்து நன்மைகண்டதுண்டு. வங்க உப்பைப்பார்க்கிலும், மாசக்காய் விசேஷம். டர்ப்பன்டைன் தயிலத்தில்-10-20-மினம்வீதம், விளாம்பிசின் பாகில்கலந்து, 2-3-மணிக்கொருதடவை, ரத்தவமனம், ரத்தகாசம், ரத்தமூத்திரம் ஆகிய இவைகளுக்கு கொடுக்க உதவும். தீராதவியாதிக்கு, வீரத்தைக்கொடுத்து பார்க்கலாம். அதிகரத்தம் கண்டு, க்ஷீணம் அதிகரித்தால், அபினி கொடுக்கலாம். இதில் ரத்தம் குத்திவாங்கலாகாது. எதற்கும் ரோகம் வசப்படாமலிருந்தால், அன்னியரத்தப்பிரவேசம் (Transfusion) செய்துவைக்கலாம். Remedies.—Cold; gallic acid; diluted sulphuric acid; acetate of lead; oil of turpentine; opium; transfusion.

1. ரத்தபீனஸரோகம்

(இபிஸ்டாக்ஸிஸ் Epistaxis; bleeding from the nose).—பாடசாலையில் வாசிக்கிற சிறுவர்களுக்கு மூக்கிலிருந்து ரத்தம் காண்பதும், அதற்கு நமது பாட்டிமார்கள் செய்கிற சிகிச்சையும், யாவருக்கும் பிரசித்தமாய் தெரிந்த விஷயம். கக்கிருமல் முதலிய ரோகங்களோடு இது தொந்தித்திருக்காமலிருந்தால், உபத்திரவமிராது. வயது சென்றவர்களுக்கும் அசதிஜந்நி ரோகத்திலும், இருதய ரோகத்திலும் கண்டால், அது சுகுணத்துக்கிடமுண்டாகும். சுரம், யகிர்த்கண்டரோகம் முதலியவைகளில் காண்பது வழக்கம். இதில் இரண்டுநாசியிலும் காண்கிற வழக்கமில்லை. ரத்தம் விடாமல் வடியும்; அல்லது நின்று மறுபடியும் காணும் அல்லது காலக்கிரமமாய்க் காணும். நாஸியின் முன்புறமாய் வருவது வழக்கமானபோதிலும், வாய், தொண்டை இவைகளுக்குப் போவதும் உண்டு. ஸ்திரீகளைப்பார்க்கிலும் புருஷாகளுக்கு அதிகமாய்க் காணும்.

சிகிச்சை.—இந்த வியாதியில் ரத்தத்தை நிறுத்தவேண்டியதென்று நிச்சயித்தபிறகு, ரோகியைக் குளிர்ச்சியான ஸ்தலத்தில் உட்காரவைக்கவேண்டியது. ஒன்று அது இரண்டு கைகளையும் தலைக்குமேல் நீட்டி கொஞ்சநேரம் வைத்துக்கொண்டிருக்கச்செய்தால், ரத்தம் நின்றுவிடுமென்று ஒருவர் சொல்லுகிறார். இதில் நிற்காவிட்டால், குளிர்ந்த ஜலத்தை கழுத்துமேலும் முதுகுமேலும் போடலாம்; அல்லது, மூக்குமேலும் நெற்றிமேலும் போடலாம். ரத்தம் அதிகமாய் வடிந்தால், படிக்காரஜலத்தை யாவது அல்லது அயப்பாவனத்திரவத்தில் ஜலம்விட்டு கலந்தாவது நாசியில் பீச்சலாம். ஸ்பஞ்சியை துவர்ப்புஜலத்தில் நனைத்து நாசியில்வைத்தடைக்கலாம். இவைகளில் ஒன்றும் பலிக்காவிட்டால், நாசியின் பின்துவாரத்தை அடைத்தால் ரத்தம் நின்றுவிடும். உள்ளுக்கு படிகாரம், அயத்திராவகம், மாசக்காய்ச்சத்து, டர்பன்டையின் இவைகளில் ஒன்றைக் கொடுக்க உதவும். லகுவிரேசனம் கொடுத்தால், சிலவேளை குணந்தரும். Remedies.—Sitting upright; raise arms; cold to nape of neck, nose or forehead; injection of alum, tincture of perchloride of iron or sulphate of iron. Internally, alum; steel drops; gallic acid; oil of turpentine.

வறட்டிப்பொடியை ஆக்கிராணிக்கச்செய்வது இல்லறச் சிகிச்சை. 2-வது—கொப்புரைத்தேங்காயைத் திருவி, அதில் புளியங்கொட்டைத்

தோல் தூளைச்சேர்த்து, ஜலம்விட்டுப் பிசைந்து, பிழிந்து, எண்ணெயை எடுத்து அதில்துத்தம், துரிசு, வெள்ளைக்குந்திரிகம், ½-விராகனெடை வீதம் போட்டு காய்ச்சி, மூக்கிலிடுவது மலையாளச் சிகிச்சை. உருக்கெண்ணெயைப்பார்க்கிலும் (வெந்ததேங்காயெண்ணெய்) இது சிரேஷ்டமாம். ரத்தபீனசம், சத்தகாசம், ரத்தவமனம் ஆகிய இவைகள் கண்டால், பேய் பிசாசு அறைந்ததென்று, கப்படம்கட்டி, பிரார்த்தனை செய்துகொள்வது, பேதைப்பெண்கள் வழக்கம்.

ரத்த ஆவிய ரோகம்.—ஆவியரத்தரோகம் (ஸ்டொமெடொரேஜியா, Stomatorrhagia, bleeding from the mouth.) வாயிலிருந்து ரத்தம் வடிதலுக்கு, ரத்தஆவியரோகமென்று பேர். இது மெத்தஉபத்திரவப்படுத்தாது, ஆனல் வேறு ரோகத்தில் கண்டால், கெடுதி சம்பவிக்கும். ஊகிகள் பல்லைக்குத்தி ரத்தம்வரும்படி செய்து, ரோகமென்று பாசாங்கு செய்வதும் உண்டு; அதை க்ஷணத்தில் கண்டறியலாம்.

சிகிச்சை.—படிகாரம் முதலிய துவர்ப்புமருந்துகள் சேர்ந்த கண்ஷேங்களை இதற்கு உபயோகித்தும் பிரயோசனமில்லாவிட்டால், உள்ளுக்கு மருந்து கொடுக்கவேண்டியது. Remedies.—Astringent gargles

ரத்தகாசரோகம்.—ரத்தம் கக்கல். (ஹிமாப்டிஸிஸ், Hæmoptysis, spitting of blood).—குரல்வளை, சுவாசக்குழல், புப்புஸம் இந்த ஸ்தானங்களிலிருந்து வாய்வழியாய் வருகிற ரத்தத்துக்கு, ரத்தகாசமென்றுபேர். சிலவேளை வெளியில் காணமல், ரத்தம் புப்பிஸத்துக்குள்ளவே தங்கியிருக்கும்; அதற்கு, பல்மொனெரி ஆபொபிளெக்ஸி (Pulmonary apoplexy) என்று கூறுவர். க்ஷயத்தில், இது ஒரு குறி. இருதயத்தின் இடதுபக்க ரோகத்தில், புப்புஸத்திலிருந்து ரத்தம் வருவது தடைபட்டும், சூதக அக்கிரமத்தினலும், இந்த ரோகம் பிறக்கும். இந்த ரோகத்துக்கு உட்பட்டிருந்தால், அதிக இருமல், பருவதங்களின்மேல் ஏறுதல் முதலியவைகளால், ரோகம் காணும்.

லக்ஷணங்கள்.—ரத்தகாச ரோகத்தில் பூர்வ ரூபங்கள் சில உண்டு; அவைகளாவன:—மார்பு வேதனை அல்லது அ[illegible]ப்பு, மார்பெலும்புக்குக் கீழ் உஷ்ணம், வேதனை, ஆயாசம், மனக்கிலேசம், முகம் சிவப்பு, வாயில் உப்புக்கரித்தல், வறக்ஷியிருமல், கஷ்டசுவாசம், இருதயத்துடிப்பு ஆகிய இவைகளாம். சிலவேளை, இக்குறிகள் காணுகிறதில்லை. விழுகிற ரத்தம் கபத்தில் கீற்றுயாவது, அல்லது 1-2 துளி கட்டியாயாவது, அல்லது ஆழாக்கு அல்லது படிக்கணக்காயாவது இருக்கும்; ரத்தம் நுரைத்து, சிவந்து, இருமித் துப்பும்போது வெளிப்படும். அதிகமாயிருந்தால், வாந்தியால் வெளிப்படும்.

சிகிச்சை.—சீக்கிரத்தில் ரத்தத்தை நிறுத்தவேண்டியது. ரோகியை அசையாமல் படுக்கவைத்து, சிரசையும் புஜத்தையும் உயர்த்திவைக்கவேண்டியது. இதற்கு மாசக்காய்ச்சததே பிரதானம். 10-15 கிறேன் வீதம், 2-3-4-மணிக்கொருதரம், ரோகத்துக்குத் தகுந்தபடி கொடுக்கலாம். ரோகியைக் குளிர்காற்றுள்ளவிடத்தில் வைக்கவேண்டியது. ஒரு உத்தரணி அளவுக்கு, உப்பை ஜலத்தில் கரைத்தாவது அல்லது சரைக்காமலாவது சாப்பிட்டால், ரத்தம் நிற்குமென்று சில சிகிச்சைகர் சொல்லுகிறார்கள். டர்பன்டைனும் கொடுக்கலாம். மார்புக்கு குடுவைப்பரியும் டர்பண்டைன் ஒத்திடமும் இடலாமென்று சிலரும், நாளத்தின் ரத்தத்தைத் தடுக்க கரசர

ணங்களைக்கட்டி நாளங்களில் ஓடுகிற ரத்தத்தைத் தடுக்கலாமென்று சிலரும் சொல்லுகிறார்கள். அதிக இருமலை, அபினிஉப்பு கொடுத்து சமனப்படுத்தவேண்டியது. மலவிசர்க்கத்துக்கு சித்தாமணக்கெண்ணெய் நல்லது. பிறகு சரீரசவுக்கியமும் உண்டாகும்படி ஔஷதம் கொடுக்கவேண்டியது.

பத்தியம்.—காரமில்லாத பத்திய போஜனம் செய்விக்கவேண்டியது. Remedeis.—Rest; tannic acid; common salt; turpentine; dry cupping, or turpentine stupes, or mustard poultice to the chest; ligature round the limbs; morphia; low diet; cold drinks; diluted sulphuric acid; catechu; saltpetre.

ரத்தவமனரோகம்.—ரத்தவாந்தி. (ஹிமெடமீஸெஸ், Hæmatemes is; vomiting of blood.) அன்னாசயத்திலிருந்து வெளிப்படுகிற ரத்தத்திற்கு, ரத்தவமனமென்றுபேர். இதில் ரத்தம் பிரபலமாய்க் காணும், நுரைத்திராது; சாடராக்கினியில் புளிப்பு இருப்பதால், (புளிப்புரத்தத்தை கறுப்பிக்கும்) கறுத்திருக்கும். ரத்தகாசத்தில், இருமல், மூச்சடைப்பு, தொண்டையில் குத்தல், மார்பில் சங்கடம் ஆகிய இவைகள் கண்டு ரத்தம் காணும். இருமலுண்டாகி வாய்நிறைய ரத்தம் வெளிப்படும்; மெத்த சிவந்திருக்கும்; சிலேத்துமத்தோடு கலந்திருக்கும்.

காரணங்கள்.—இது தற்செயலாய் காண்பதும் உண்டு. சூதகம் நின்றவர்களுக்கு இப்படிக்காண்பது வழக்கம். இருதயரோகம், யகிர்த்கண்டரோகம் ஆகிய இவைகளிலும், மேற்படி வியாதிபிறக்கும். வாந்தி மிதமாயிருந்தால், காப்பிக்கொட்டைத்தூளைப்போல் கறுத்திருக்கும். வாந்தியாகிறதற்குமுன், குலைவயிற்றில் பிடிப்பு, பளுவு, அற்பவேதனை காணும்; ஏக்கமும் மூர்ச்சையுமுண்டு. ரத்தத்தைப்பார்த்து ரோகி பிரமித்துப்போகிறதும் உண்டு.

இதில், ரத்தம் சிலவேளை கீழ்நோக்கி குதம்வழியாய் வெளுப்படும். கொஞ்சம் வாயாலும் கொஞ்சம் குதத்தாலும் வெளிப்படுவதும் உண்டு. அன்னாசயத்திலிருந்தாவது, குடலிலிருந்தாவது, குதம் வழியாக வெளிப்படுகிற எல்லாரத்தத்துக்கும், ரத்த விரேசனம் (மிலீனா, Mœlena) என்றுபேர். இதில் ரத்தம் கறுத்து, சிலவேளை தாறுபோலிருக்கும்; ஆனால், ரத்தம் குடலிலிருக்கிற நீரோடு சேராமலிருந்தால், அப்படியிராது. யகிர்த்கண்டரோகம், குடல்தாபனம், சீதபேதி முதலிய காரணங்களினால் இது, பிறக்கும். இதனை மூலமென்று யோசித்தால், அபத்தம் நேரிடும்.

சிகிச்சை.—இதற்கு ஆளைச் சுத்தலங்கணமாய், படுத்தபடுக்கையில் அசையாமல் வைக்கவேண்டியது. எலுமிச்சம்பழரசம் முதலிய புளிப்பு சேர்ந்த ஜலங்களை குளிர்ச்சியாய்க் கொடுக்கவேண்டியது. மாசக்காய் உப்பும் நல்லது. டர்பன்டைன் தயிலமும் முக்கியமென்று யோசனை. அயப்பாவனத்திரவமும் கொடுக்கலாம். ஈரர்க்குழிக்கு, ஈரத்துணியைப்போட்டு வைப்பதிலும் சுகுணம் பிறக்கும். துர்ப்பலம் மேலிட்டிருந்தால், மாமிஸரசம், போர்ட்ஒயின், அல்லது பிராந்தி அபினியோடு சேர்த்து, ஆஸனவஸ்திசெய்தால், நன்மைசெய்யும். ரத்த விரேசனத்துக்கு, அன்னாசயத்தில் வியாதி இல்லாமலிருந்தால், ரஸபஸ்பம் கொடுத்து, எண்ணெய், கடுக்காய் இவைகளால் விரேசனம் செய்துவைக்கவேண்டியது. Remedies.—Abstinence from food; rest; cold acidulous drinks; gallic acid; oil of turpentine; diluted sulphuric acid; cold to epigastrium.

ரத்தமூத்திரம்.—ரத்தப்பிரமேகம். (ஹிமெடியூரியா, Hæmaturia. பிளடியூரன், Bloody urine.) மூத்திரத்தில் ரத்தம் கலந்திருப்பதற்கு ரத்த மூத்திரமென்று பேர்; அந்த ரத்தம் மூத்திரகுண்டிக்காய், மூத்திரப்பை அல்லது நீர்த்தாரையிலிருந்து வடியும்.

காரணங்கள்.—மூத்திரகுண்டிக்காய் வியாதி, மூத்திரப்பை வியாதி, மூத்திரகுண்டிக்காயிலாவது, மூத்திரக் குழலிலாவது, மூத்திரப்பையிலாவது கல்லு இருக்குதல், இடுப்புமேல் அடிபடுதல், டர்பன்டயின், எரிவண்டுதிராவகம் முதலிய தீக்ஷணமருந்துகள் ஆகிய இவைகளால், இந்தரோகம் பிறக்கும். ஸ்திரீகளுக்கு வீட்டுவிலக்கமாகும்போது, அந்த ரத்தம் மூத்திரத்தோடு கலந்திருக்கும், அதை வேறுவியாதிகளென்று யோசிக்கலாகாது.

லக்ஷணங்கள்—ரத்தம் மிஸ்ரமித்திருக்கிற மூத்திரம், கலங்கலாய் அல்லது கறுத்து, ஆல்புயூமன் பலை சேர்ந்திருக்கும். குண்டிக்காயிலிருந்துவந்தால், மூத்திரத்தோடு மிஸ்ரமித்திருக்கும்; பையிலிருந்து வந்தால், முதல் மூத்திரம் தெளிவாய் இறங்கி, கடைசியில் ரத்தம் விழும், மூத்திரத்தில் சிலேத்துமபூயமும் கலந்திருக்கும். நீர்த்தாரையிலிருந்து ரத்தம் துளித்துளியாயாவது தாரையாயாவது, மூத்திரத்தில் மிஸ்ரமமாகாமல் வரும்.

சிகிச்சை.—இந்த ரோகத்தைக் காரணமறிந்து சிகிச்சை செய்யவேண்டியது. உறப்பு வியாதியினாலும் அஸ்மரியினாலும் பிறந்தால், அயப்பாலனத்திரவம், மாசக்காய் உப்பு, விளாவின கந்தகத்திராவகம் இவைமுதலிய துவர்ப்பு மருந்துகளைக் கொடுக்கலாம். டர்பன்டைன் கொடுக்கலாகாது. ரத்ததூஷியத்தினாலும், மூத்திரக்குண்டிக்காய் வியாதியினாலும் கண்டால், வெந்நீர்வேது, வெந்நீர் கண்டஸ்நானம், விரேசனம் இவைகளால் நீரை வெளிப்படுத்தி, குண்டிக்காயின் வியாபாரத்தை குறைக்கவேண்டியது. நீர்த்தாரையிலிருந்து வருகிற ரத்தத்துக்கு, ஈரத்துணியை குறியில் சுத்தி வைத்தால், ரத்தம் நிற்கும். பெரிய மெழுகுதிரியை நீர்த்தாரையில் விட்டு, கொஞ்சநேரம் வைத்திருக்கச் செய்யலாம். மூத்திரம் பையிலிருந்து வருவதற்கு, படிக்கார ஜலமாவது, மாசக்காய் உப்பு கலந்த ஜலமாவது, மேற்படி பைக்குள் பீச்சலாம். Remedies.—Steel drops; gallic acid; diluted sulphuric acid; warm baths; purgatives; cold to urethra; bougie; alum or tannic acid injection.

பெரும்பாடு.—சூதகம் அதிகம். சூதகப்பெருக்கு. (மெனரேஜியா, Menorrhagia, immoderate flow of menses.) கருப்பையிலிருந்து வடிகிற ரத்தத்துக்கு, பெரும்பாடு என்றுபேர். இது அநேக ரோகங்களுக்கு ஒரு குறி. சூதகம்அதிகமாய்க் கண்டாலும்சரி, அல்லது கிரமத்தில் நிற்காமல், சிலநாள்வரையில் வடிந்துகொண டிருந்தாலும்சரி, பெரும்பாடென்று சொல்லப்படும். மாதக்கிரமத்தில் காணுகிறதன்றியில், கருப்பையிலிருந்து வெளிப்படுகிற ரத்தத்துக்கெல்லாம், இந்த நாமமே, கொள்ளும்.

காரணங்கள்.—கண்டமாலை, மூத்திரகுண்டிக்காய் ரோகம், பிலீகரோகம், நாள்பட பால் சுரப்பதினால் காணுகிறபாண்டு, இவைகளால் பிறக்கிற ரத்ததோஷம், சினைப்பைக்கும் கருப்பைக்கும் அதிகரத்தம் ஏறுதல், சூதகம் வெளிப்படப்போகிற காலங்களில் கருப்பை அழலைகொள்ளல்; அதிக சம்யோகம், புத்தி, கட்டிகள் ஆகிய இவைகள், பெரும்பாடுக்குக் காரணங்க

ளாம். அழிகர்ப்பத்தில், ரத்தம் முதல்காணுமென்றும் அறிந்திருக்கவேண்டியது.

சிகிச்சை.—இதற்குக் கொடுக்கிற துவர்ப்புமருந்துகளில், மாசக்காய் உப்பே நல்லது. எர்கட் ஆவரை. பாண்டுக்குறிகளிருந்தால், அன்னபேதி, இவைகளையும் கொடுக்கலாம். ரோகம் நிரோதுவையும், ஔஷதங்களுக்கு வசப்படாமலும் இருந்தால், வீரம் கொடுக்கலாம். இனி தஸ்தானக் சிகிச்சையாவது, ஸ்திரீயை மல்லாக்கப் படுக்கவைத்து அசையாமல் இருக்கச் செய்வது, ஈரத்துணியை அடிவயிறு, அல்குல், இவைகளில் போட்டு, மாசக்காய் முதலிய துவர்ப்புள்ளவைகள் சேர்ந்த ஜலத்தை வஸ்திசெய்து, மாமிஸக்ஷீணமிருந்தால், மின்தாதுப்பிரயோகம் செய்வித்து, ஸ்பஞ்சியை காடியில் துவைத்து, யோனிக்குள்ளடைத்து, எண்ணெய்க்கொடுத்துமலபந்தத்தை நீக்கி, எலுமிச்சம்பழரசம் சேர்ந்த புளிப்பு ரசாயனங்களைக் குடிக்கச்செய்து ரோகத்தை வசப்படுத்தவேண்டியது. மாசக்காய்ச் சூரணமும் அபினியும் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கலாம். அயம், திராக்ஷரசம், நல்லபோஜனம் இவைகளால் தேகதாருட்டியம் வருப்படிச் செய்யவேண்டியது. Remedies.—Gallic acid; ergot; iron; perchloride of mercury. Locally, cold to pubes, tannic acid injections; galvanism; plug.

நீர்க்கோர்வை

டிராப்ஸி. DROPSY.

பிரதிபதங்கள்.—சோபை, சோகை, சோவை, உதகம், நீராம்பல், நீரேற்றம், வீக்கம், அதைப்பு, நீராமயம், ஊதல், சுரப்பு.

தாபிதக்குறிகள் இல்லாமல், சீரஸ்மெம்பிரேன் என்னும் சவ்வுகளிலாவது, அல்லது சருமத்துக் கடியிலிருக்கிற செல்லுளர் டிஸ்யூ என்னும் சவ்விலாவது, ரத்தநீர் சேர்ந்திருப்பதற்கு, நீர்க்கோவை என்று பெதுப்பேர். ஸ்தானபேதத்தினல், பேரும் பேதப்படும். சிரசில் கண்டால், ஜலமஸ்தகம் (ஹைட்ரொகிபலஸ், Hydrocephalus) என்றும்—மார்பில்கண்டால், உரோஜலரோகம் (ஹைட்ரோதோராக்ஸ், Hydrothorax) என்றும்—இருதய கோசத்தில் கண்டால், இருதயகோஸஜலரோகம் (ஹைட்ரோபெரிகார்டியம் Hydropericardium) என்றும்—வயிற்றிற்கண்டால், மகோதரம் (அஸ்ஸைடீஸ், Ascites) என்றும்—பீஜத்தில் கண்டால், நீர் அண்டம் (ஹைட்ரோஸீல், Hydrocele) என்றும்—ஓரிடத்தில் மாத்திரம் இருந்தால், சோபை (இடிமா, Œdema) என்றும்—சர்வாங்கமும் இருந்தால், நீர்க்கோவை (அனஸர்க்கா, Anasarca) என்றும்—சர்வாங்கத்துடன் 1-2-பிரத்தியங்கத்திலும் இருந்தால், ஜெனரல் டிராப்ஸி (General dropsy) என்றும் சொல்லப்படும்.

தேகத்தில் நீர்க்கோர்ப்பது எப்படியெனில்—சவுக்கியத்தில், இடைவிடாமல் நீர்க்கசிவும் நீர்க்கிரகிப்பும் சமரசமாயிருக்கும். அப்படியிருந்தால், சரீரம் ஈரமாயிருக்கும். இதில் யாதேனும் விகற்பமடைந்து கிரகிப்பு குறைந்தாலும்சரி, அல்லது சுரப்பு அதிகமானுலும்சரி, நீர்க்கோர்வை காணும். நிணநரம்புகள், ரஸாயனிகள், நாளங்கள் ஆகிய இவைகளால் கிரகிப்பு உண்டாகின்றது. நிணநரம்புகள் அப்பிரயோஜன பதார்த்தங்களையும், ரஸாயனிகள் அன்னரசத்தையும், நாளங்கள் ஸிரஸ் சவ்வுமேல் படிகிற நீரையும் கிரகிக்கின்றன. நீர்க்கோர்வையில் நாளங்கள் சாதாரண

மாய் விகற்பப்படுகின்றன. அவைகளில் ரத்தம் அதிகமாய்ச் சேர்ந்தால், தொழில் கெடுவதுமன்றி அவைகளிலிருந்து நீரும் வெளிப்படும். கிரகிப்பு குறைந்து கண்டால், காலிகநீர்க்கோர்வை (கிரானிக், Chronic or passive) என்றும்—அதிக நீர் வடிந்து கண்டால், (ஆக்டிவ், Active or acute) என்றும், சொல்லப்படும்.

லக்ஷணங்கள் —இந்த ரோகம் தீவிரமாயாவது, அல்லது தாமஸத்திலாவது காண்பதுண்டு. நாடி தீவிரகதியாயாவது மந்தகதியாயாவது நடக்கும்; மூத்திரமும் வியர்வையும் குறையும்; தாகமிருக்கும்; மலசோதனையில் பிடித்துவமுண்டு. சிலவேளை, அதிகவியர்வை, அதிகமூத்திரம், அதிகபேதி இவைகளில் ஒன்றுகண்டு, தற்செயலாய் சொஸ்தப்படுவதும் உண்டு. சிரசுக்குள் நீர்க்கோர்த்தால் இசிவு, போதக்ஷயம், கரசரணங்களின் ஸ்தம்பனம், அசதிசந்நி ஆகிய இவைகள்காணும். மார்புக்குள் நீர்க்கோர்த்தால் இருதயம், நுரையீரல் இவைகளின் கதி ஆடங்கமாகும். நீர் இருக்கிறவிடத்தை அழுத்தினால், பள்ளம்விழுந்து மறுபடியும் மறையும். காலில் வருகிற நீர், தாபனத்தையாவது அல்லது அழுகலையாவது உண்டாக்கும். நீர்க்கோர்வையில் மரணம், சாதாரணமாய், ஸ்தானங்களில் காணுகிற ரோகத்தினால், சம்பவிக்கின்றது.

காரணங்கள்.—குளிர்ச்சி, சொறிசிரங்கு முதலிய சருமரோகங்கள் உள்ளடங்கிப்போகுதல், கீல்வாதம், தாதுக்களை க்ஷீணப்படுத்துகிற அல்லது ரத்தத்தைத் தூஷியப்படுத்துகிறவைகளாகிய போஜனஹீனம், ரத்தப்பெருக்கு, துர்ப்பலத்தையுண்டாக்குகிற ரோகங்கள், விஷக்காற்று, ரத்த ஓட்டத்தைத் தடுத்து நாளங்களில் ரத்தம் கன்றிப்போகும்படிச் செய்கிறவைகளாகிய நாளத்தில் அடைப்பு, வயிற்றுக்கட்டிகள், இருதயம், புப்புஸம், யகிர்த்கண்டம், பிலீகம், மூத்திரக்குண்டிக்காய், நிணநரம்புகள் இவைகளின் ரோகங்கள் ஆகிய இவைகளால் நீர்க்கோவைரோகம் பிறக்கும். சேங்கொட்டை பூனைக்காஞ்சொறி, ரஸகந்த பாஷாணவருக்கங்கள், பூச்சிகடி ஆகிய இவைகளாலும் பிறப்பதுண்டு. மாதர்களுக்குச் சூதகக்கட்டால், காலில் நீர் காண்பதும் வழக்கம்.

சிகிச்சை.—இந்த துஷ்டரோகத்தை நீர்பேதி, விரேசனி, சுவேதகாரி, வமனகாரி முதலிய மருந்துகளால் வசப்படுத்தவேண்டியது. கோர்த்திருக்கிற நீரை ஊசியால் குத்தி வெளிப்படுத்தவேண்டியது. மூத்திரத்தை அதிகப்படுத்த திராக்ஷஉப்பு, அஸிடேட் ஆவ் பொடாஷ் என்னும் உப்பும், பேதியாக ஜாலப், சிவதைவேர், இலவுரியம், நேர்வாளம், மக்கி முதலிய பேதி மருந்துகளும் கொடுக்கலாம். காலில் நீர் அதிகமாகி வேதனையுண்டானால், மேலாகக் கீறிவிடலாம், பாதம், கால்கள் இவைகளிலிருக்கிற நீருக்கு, தழைசளைப்போட்டு காச்சின வெந்நீர்விட்டு உருவி, பிறகு, துணியால் சுத்திக்கட்டி காலையெடுப்பாகவைத்தால், வீக்கம் போய்விடும். கடுகு, சுக்கு, வாதநாராயண இலைரசம், முருங்கைவேர்ரசம், பெருங்காயம், இவைகளைக் கூட்டி காலுக்குப் பூசுவதிலும், சுகுணம் பிறக்கும்; பேதிக்குங் கொடுக்கலாம். சோபைரோகத்துக்கு, அடைகஷாயம், ஆட்டுமூத்திரம், அயச்சிந்தூரம், மண்டூரச்சிந்தூரம் கொடுப்பது நாட்டுச்சிகிச்சை. Remedies.—Diuretics; purgatives; diaphoretics; emetics; tapping; acupuncture.

நமது.—தேசத்தில் ஒரு சாதி நீர்க்கோர்வை ரோகம் காணுகின்றது, அதற்கு பெரி பெரி (Beriberi) என்று பேர். அதின் லக்ஷ

ணங்களாவன.—அதிக பலவீனமுண்டு; கால்கள் வீங்கி பிகுவாயிருக்கும்; பிறகு தேகமும் முகமும் வீங்கும்; சுவாஸமுட்டல்காணும்; கரசரணங்கள் ஸ்தம்பனமடையும்; வாந்தியும் உண்டு; மூத்திரசுரப்பு குறையும்; தாகம் மேலிடும்; நாடிநடை அக்கிரமப்படும்; பிறகு இருதயத்துடிப்பும், மூச்சுமுட்டலும், க்ஷீணமும் காணும். வியாதி பிறந்து 2-3 வாரங்களுக்குள் மரணம் சம்பவிக்கும். இதற்குச் சிகிச்சை.—நாடிக்ஷீணமடையாமலிருந்தால், பேதிக்குக் கொடுத்து நீர்பேதி மருந்துகளை யுபயோகிக்கவேண்டியது. வேதுபிடிப்பதிலும் நலந்தரும். உஷ்ணகாரிகள் ஆவலியம் வேண்டியது.

புச்சாவர்த்தவாதரோகம்

(புச்சம் விரல்கள் ஆவர்த்தம், சூழல்.)

கவுட், GOUT. பொடேகிரா, PODAGRA.

பிரதிபதங்கள்.—குவாதம், விரல் முழிவாதம், வாதசூலை, அங்குஷ்டவாதம்.

கை, கால், பெருவிரல்களில் காணுகிற ஒரு ஜாதி பிரதானவாதம்; ரத்ததூஷியத்தினால் காணுகின்றது. இதில் சுரம் அனுசரித்து, சீரண உறுப்புகள் கெட்டிருக்கும் இடைக்கிடை காணுகிற தன்மையுமுண்டு.

லக்ஷணங்கள்.—இந்த துஷ்டரோகம் பிறப்பதற்குமுன், சில குறிகள் கண்டு, 2-3-நாள்வரையில் சரீர சுகமில்லாமல் இருந்து, பிறகு, ரோகத்தின் லக்ஷணங்கள் காண்பதுண்டு; ஆனால் அவைகள் பிரசன்னமாகாமல், நிரேதுவாய்க் காண்பதும் வழக்கம். இராத்திரியில் சயனத்துக்குப் போகும்போது, சவுக்கியமாயிருந்து, 2 மணி சுமாருக்கு, கால் பெருவிரலின் முழி, அல்லது குதிக்கால், அல்லது புறங்கால், அல்லது அங்குஷ்டம் ஆகிய இவைகளில் எதிலாவது, எரிச்சலும், குத்தலும், வேதனையும் காணும்; குளிர்கண்டு சுரம்காணும், வேதனை சகிக்கக்கூடாமையாயிருந்து, உதயகாலத்தில் தணிந்து நித்திரைபிறக்கும். நித்திரை தெளிந்து எழுந்தபோது, ரோகஸ்தானம் சிவந்து வீங்கி, வேதனையோடு சுரம் இருக்கும்; படுக்கப்பொருத்தாது; முன்கோபம், தளர்ச்சியும் காணும்; நாக்கு மாவுபடிந்திருக்கும்; மலசோதனை இராது; மூத்திரம் சிவந்து ஆமலமாய், யூரிக்காஸிட் (uric acid,) அல்லது பாஸ்பேட்ஸ் என்னும் உப்புகள் சேர்ந்திருக்கும்; கொஞ்சம் ஆல்பியூமன் என்கிற பசையும் இருக்கும். மறுநாள் இராத்திரிக்கும், வேதனை பிரபல மடையும். இவ்விதமாயிருந்து, சில நாள் பிறகு, ரோகம் தணியும்; வீக்கம் கரையும்; தேல் உரியும்; பலம் யதாப்பிரகாரமாய் வந்துவிடும்; பூர்வ ஸ்திதியைப்பார்க்கிலும் அதிகசவுக்கியமாயிருப்பதாய்த் தோற்றும். 2-3 வருஷம் இல்லாமலிருந்து, பிறகு தொடர்ந்து தொடர்ந்து வரும். வசந்தருதுவில்மாத்திரம் இல்லாமல், பிறகு அடிக்கடி கண்டு, உபத்திரவப்படுத்தும். முதல் ஒரு கீலில்மாத்திரம் காண்பது வழக்கம்; பிறகு, கால்கைகளின் பல கீல்களில் காணும். மூட்டைச்சுத்திலும், வெளியில், சுண்ணும்பு கல்லுகள் உண்டாகிறதுண்டு (சாக்ஸ்டோன், chalk stones.). அது யூரேட் ஆவ் ஸோடா என்கிற உப்பு. இந்த ரோகம் அடிக்கடிகண்டு, தேகம் மெலிந்துபோகுதலுக்கு, காலிக அங்குஷ்ட வாதரோகம் (கிரானிக் கவுட், chronic gout) என்று பேர். அதில், வேதனை குறையும்; ஆனால், விரலை அசைக்கக்கூடாமல் முரடுகட்டிப்போவதும்

உண்டு; ஜீரண உறுப்புகளும் கெடும்; மூத்திரம் விகற்பப்படும். ரோகம் அற்பமாயிருந்தபோதிலும், துஷ்க்கிருத்தியங்கள் அதிகமாய்க் காணலாம். இப்படி இருப்பது சிலவேளைச் சீழ்கொண்டு, ரணமாகி, வடிகிற சீழோடு யூரேட் ஆவ் ஸோடா உப்பு கலந்த வெளிப்பட்டுவிடும். இவ்விதமாய் வந்துவிட்டால், சவுக்கியமுண்டாகும். இதில், ஸ்தானத்தைவிட்டு மற்றொரு ஸ்தானத்துக்குப் பாய்கிற குணமுமுண்டு; அதற்கு, ரிட்ரோஸீடென்ட்கவுட் (retrocedent gout) என்று பேர். ரோகம் அன்னாசயத்தை அனுசரித்தால், வாந்தி, ரத்தவாந்தி, ஈரற்குழியில் அதிவேதனை, ஏக்கம் ஆகிய இவைகள்காணும். மூளையில் வியாபித்தால் தலைவலி, மந்தபுத்தி, அஸதிசந்நி, ஸ்தலபவாதம் ஆகிய இவைகள் காணும். இருதயத்துக்குச் சென்றால், குன்மசூலை, மூர்ச்சையாகிய இவைகள் உண்டாகும்.

Diagnose.—இந்த வியாதிக்கும் கீல்வாத ரோகத்துக்குமிருக்கிற வித்தியாசத்தைக் கண்டுகொள்ளுவது எப்படியெனில்—அங்குஷ்டவாத ரோகத்தில், ரத்தத்தில் யூரிகாஸிட் இருக்கும்; வியாதிகண்ட ஸ்தானத்தில் யூரேட் ஆவ் ஸோடா உப்பு ஜனித்து நிற்கும்; புருஷாளுக்குமாத்திரம் காணும்; கால்பெருவிரல் முழியில் முதல்காணும். கீல்வாதரோகத்தில், ரத்தங்கெடாது; உப்பு உண்டாகாது; ஸ்திரீபுருஷஜாதிகளுக்குப் பேதமின்றி காணும்; முழங்கால் முதலிய பெரிய மூட்டுகளை அனுசரித்திருக்கும்.

காரணங்கள்.—இது புருஷஜாதியில் மிகுதி, 30-40-வயதில் தொடருகிறது. பாரம்பரையாய் காண்பதும் உண்டு. நல்ல போஜனம்செய்து உட்கார்ந்துகொண்டே காலம் கழிப்பவர்களுக்கு முக்கியமாய்க் காணும்; அதிமனோவியாபாரம், கவலை இவைகளும் ரோகத்தை விளைவிக்கும்; போர்ட் ஒயின், பீர் இவைகளும் மேற்படி வியாதியை உண்டாக்குமென்று கேழ்வி. ஈயவேலை, அச்சடிவேலை செய்கிறவர்களுக்கு இந்தப்பிணி அனுசரிப்பது வழக்கம்.

சிகிச்சை.—வியாதிகண்டிருக்கிற தருணத்தில் செய்யவேண்டிய சிகிச்சை.—ரத்தம் வாங்குவதில் பிரயோஜனமில்லை; லகுவிரேசனிகள் கொடுத்து மலத்தைப் போக்கவேண்டியது; வெடியுப்பு முதலிய மூத்திர சுவேதகாரிகளைக் கொடுக்கலாம்; அபினியும் கொடுக்க உதவும்; வேதுபிடிக்கவைக்கலாம்; கால்சிகம் என்னும் மருந்து இதற்கு பிரதானமாகையால், அதை முதல் குறித்த மருந்துகளோடு சேர்த்துகொடுக்கலாம்; முதல் மலத்தைப் போக்கிக்கொண்டு, பிறகு அதைக் கொடுக்கவேண்டியது. வயிற்றுகடுப்பு பேதி, இவைகள் உண்டாகாமல், குறைந்த அளவில், 10-15-மினிம் வீதம் கொடுக்கலாம். வேதனையுள்ள இடத்தில், பஞ்சுவைத்து, சூடாயிருக்கும்படி, கட்டிவைக்கவேண்டியது. அபினியாவது பெல்லடோனாவாவது போல்டீஸில் சேர்த்துகட்டலாம். ஊமத்தன் இலையை வதக்கிக்கட்டினால், வேதனை தணியும்: நாட்ட வியாதிக்கு பிளிஸ்டர் போடலாம்; குளிர்ந்த ஜலத்தில், காலையாவது, கையையாவது வைக்கலாகாது. ஆரம்பத்தில் பத்தியம்—லகு அசனம், பால், ஆரோரூட், டீ முதலியவைகளைக் கொடுக்கலாம்; ஜலவர்த்தனிகளை அதிகமாய்ச் சாப்பிடலாம்; சுரம் தணிந்தபிறகு, மாம்ஸரஸம், மச்சியம், கோழிக்குஞ்சுரசம் முதலியவைகளைக் கிரமேணயும், ஷெரி ஒயினோடு ஜலம்விட்டு கலந்தும் கொடுக்கலாம்.

இனிரோகம் வராமல் தடுப்பதற்கு, போசனக்கிரமத்தை அனுசரித்து, சோம்பலை நீக்கி, நித்ராக்கிரமத்தை யனுசரித்து,ஸ்திரீ விஷயத்திலும்,மனோ

வியாபாரத்திலும் அதிகமாய் மனதைச்செலுத்தாமல், தகுதியான ஔஷதங்களைச் சேவிக்கவேண்டியது. கடும்பத்தியம் வியாதியைச் சொஸ்தப்படுத்தாது. ஜீரணசக்திக்குத் தகுந்த பக்ஷணே செய்யவேண்டியது. அடிக்கடி லகுவிரேசனிகள் கொடுத்து, பொடாஷ் என்னும் உப்பைக் கொடுக்கலாம்.

காவிகரோகத்துக்கு—போஜனம், மலம், வியர்வை இவைகளைக் கிரமப்படுத்தி கால்சிசம், ஸோடா, பொடாஷ், ஐயோடைட் ஆவ் பொடாஷியம், குவையாகம் ஆகிய இவைகளைக் கொடுக்கவேண்டியது. தேகபலம் க்ஷீணித்திருந்தால் குவைநா, அயம் முதலிய பலகாரிகள் கொடுக்க உதவும். மூட்டுகளில் சேர்ந்திருக்கிற சுண்ணும்புக் கட்டிகளை அறுத்தெடுக்கலாகாது. ஐயோடைட் ஆவ் பொடாஷியம் அதைக் கரைத்துவிடும்; ஐயோடைன் மேலுக்குத் தடவலாம். வியாதி தொலைந்தபிறகு, இடம்விட்டுமாறி, சௌக்கியதீரங்களில் போய்க் கொஞ்சநாள் காலம் கழிப்பது, புத்திமான்களுடைய கடமை. Remedies.—Laxatives; carbonate, acetate, citrate, or nitrate of potash; opium; vapour bath; colchicum; farinaceous first, nourishing diet afterwards. For chronic gout, colchicum; alkalies; iodide of potassium; quinine; guaiacum, iron. Locally—cotton wool; flannel; warm foot bath; opium; datura; lotion or foot-bath of carbonate of soda; blister above joint.

கீல்வாத ரோகம்

ரூமெடிஸம், RHEUMATISM.

பிரதிபதங்கள்.—வாதரோகம்; வாயுரோகம்; முடக்குவாயு; முடக்குவாதம்; சந்திக சிலேஷ்மரோகம்; கைகால்பிடிப்பு; ரசவாதம்; சூலைக்கட்டு; சந்திவாதம்; சந்திவாயு; சந்துவாதம்; வாதச்சூலை.

இது சாதாரணவியாதி; ரத்ததூஷியத்தினல் காணுகிறது. முழங்கால் முதலிய பெரிய கீல்களைச் சுத்தியிருக்கிற பைபிரஸ் ஜவ்வின் தாபிதமே இந்த ரோகம். இதில் தீவிரம், சமனம் என 2-ஜாதிகளுண்டு.

தீக்ஷணகீல்வாத ரோகம், தீவிர கீல்வாதம்.—(அக்கியூட் ரூமெடிஸம், Acute rheumatism. ரூமாடிக் பீவர், Rheumatic fever.) இது மெத்த துஷ்டவியாதி. மூட்டிலிருந்து இருதயத்துக்குப் போவதும் உண்டு.

லக்ஷணங்கள்.—கைகால்களில் கொஞ்சம் வேதனையோடு பிறந்து, பிறகு அதிகரித்து, பெரியமூட்டுகள் வீங்கி, பச்சைப் புண்ணுய் வேதனையெடுக்கும்; தீக்ஷணசுரம் காயும்; அறட்டல் புறட்டலும் காணும்; கைகால்களை அசைக்கக்கூடாமையாயிருக்கும்; வீக்கத்தின்மேல் துணிசமேதம் படக்கூடாத அவ்வளவு வேதனையாயிருக்கும்; துர்வாஸனையும், கற்றாழைநாற்றமுமுடைய வியர்வை காணும்; நாடி பூரணமாய் தீவிரகதியிலிருக்கும்; மலசோதனை மட்டிடும்; நாக்கு ஈரமாய் மாவு படிந்திருக்கும்; உமிழ் நீர் புளிப்பாயிருக்கும்; மூத்திரம் குறைந்து, சிவந்து, புளிப்பு அதிகரித்து; யூரிக்காஸிட் என்னும் பதார்த்தம் கலந்திருக்கும்; அது சுண்ணும்பு, பொடாஷ், சோடா இவைகளோடு சேர்ந்து, உப்புகளாயிருப்பது வழக்கம். இந்த வியாதியில் இடம்விட்டு இடம் மாறுதல் விசேஷதன்மை. அது எப்படியெனில் ஒரு மூட்டிலிருக்கிற தாபிதம், நிமிஷத்தில், அதைவிட்டு மற்றெருரு மூட்டை அனுசரிக்கும்; பிறகு பூர்வஸ்தானத்துக்கேவருவதுமுண்டு.

மூட்டிலிருக்கிற வாயு, இருதயத்துக்கு ஓடுவதும் வழக்கம்; அது மெத்த கெட்டது. இந்த தன்மைக்கு ஓடுவாதம், (மிடாஸ்டெஸிஸ், Metastasis) என்று பேர்.

காரணங்கள்.—ஈரம், குளிர்ச்சி இவைகளால் இந்த ரோகம் ஜனிக்கின்றது. இதில் லாக்டிக் ஆஸிட் (Lactic acid) என்கிற பதார்த்தம், ரத்தத்தில் அதிகமாய்ச் சேர்ந்திருக்கும்.

சிகிச்சை.—தீக்ஷண கீல்வாதரோகத்தை நீக்க, அநேக மார்க்கங்களுண்டு. சிராச்சேதம் செய்வது அயுக்தம். உப்பினங்களைக்கொடுத்து, பேதியாகும்படிச் செய்வதில், நலந்தரும். வேதனை, தேகஅழலை இவைகளை நீக்க, அபினியைக் கொடுக்கலாம். டோவர்ஸ் பவுடரில் 5-கிறேன்வீதம் 4-மணிக்கொருதரம் கொடுக்க உதவும்; அதில் சேருகிற சல்லேட் ஆவ்பொடாஷ் என்னும் உப்புக்குப்பதிலாய் பொட்டிலுப்பு சேர்த்துக்கொண்டால், மிகவும் சிரேஷ்டம். குவைனைவை அதிகமாய்க் கொடுப்பதும் உண்டு. எலுமிச்சம்பழ ரசத்தில், 2-3 ஔன்ஸ்வீதம் தினத்துக்கு 3-4 ஆவர்த்தி கொடுக்கும்படி, டாக்டர் ரீஸ் (Dr. O. Rees) என்பவர் சொல்லியிருக்கிறார்; அவர் சொற்பிரகாரம் கொடுத்து, அப்பிரயோஜனமாய்க் கண்டதும் உண்டு. பொடாஷ் அல்லது ஸோடா என்கிற உப்பில், 40-60 கிறேன் வீதம், 3-4 மணிக்கொருதரம் கொடுத்துக்கொண்டுவந்தால், சவுக்கியம் பிறக்குமென்று, டாக்டர் கேராட் (Dr. Garrod) என்பவர் சொல்லுகின்றார். அதை வேதனை சுரம் தணிந்து, நாடியொடுங்கி மூத்திரம் உப்பாகிறவரையில், கொடுக்கவேண்டியது. ரோகி ஸ்தூலித்து மூத்திரம் புளிப்பாய் இருந்தால், காலிசிகம் என்னும் மருந்தை, மேற்படி உப்பினங்களோடு சேர்த்துக்கொடுக்கலாம். வியர்வை குறைந்திருந்தால், வேதுபிடிக்கச் செய்யலாம். வியாதி நீங்கி தூர்ப்பலம் மாத்திரமிருக்கும்போது பார்க்பவுடர், அம்மோனியார், அயம் இவைகளைக் கொடுத்தால், மெத்த நன்மைசெய்யும்.

பத்தியம்.—முதல், கஞ்சியினங்களாகிய லகு அசனமும், தூர்ப்பலம் காணும்போது பால், சூப்பு முதலிய போஷணகரிகளும் கொடுக்கவேண்டியது. ஆவசியமிருந்தால், ஸோடாவாட்டரில், ஷெரி ஒயின் சேர்த்தும், தாகமிருந்தால், போஞ்சுசெய்தும் கொடுக்கலாம். அக்கினிமந்தம், அங்குஷ்டவாதம், கீல்வாதம் இந்த ரோகங்களுக்கு சருக்கரையைச் சேர்க்கலாகாது, விரோதம்செய்யும். ரோகியைப் படுத்தபடுக்கையில் வைத்து, சந்தோஷவிஷயங்களில் மனதைச் செலுத்தும்படி செய்யவேண்டியது.

வேதனையுள்ள விடத்துக்கு, பஞ்சைவைத்து கட்டிவைக்கலாம்; வெந்நீர், நொச்சி, செம்பை முதலியவைகளில் ஒன்றை ஒற்றிடம்போட்டு, அந்த இலையையேவைத்துக் கட்டினால், வேதனை சமனப்படும். வீக்கமும், கொதிப்பும், கொஞ்சம் தணிந்தபிறகு, சிறிதாய் ஒரு பிளிஸ்டர் போடலாம்; ஐயோடின்தடவி, பஞ்சுவைத்துக் கட்டுவதிலும், அனுகூலமுண்டு.

வியாதி இருதயத்தை யனுசரித்தால், அதின்நடை வேகமாயும், அக்கிரமமாயும் இருக்கும்; அவ்விடத்தில் வேதனையுண்டு; சப்த விகற்பமும் காணும்; சுவாசமுட்டலும் சுரமும் பிறக்கும். அதற்கு சிகிச்சை செய்வதில், அட்டை விடாமலிருப்பதே உத்தமம். அபினி கொடுத்து வேது செய்விக்கலாம். சரீரபோஷணைக்குடைய பதார்த்தங்களைக் கொடுக்க மறக்க

லாகாது. இருதயகோசத்தில் ஜலம் சேர்ந்துவிட்டால், அடிக்கடி பிளிஸ்டர் போட்டு, மூத்திரவர்த்தனிகளைக் கொடுப்பதில் பிரயோசனமுண்டு.—Remedies.—No bleeding; saline purgatives; opiates, quinine; lime-juice; carbonate of potash or soda; colchicum; vapour baths tonic during convalescence. Locally cotton wool; fomentations; blisters; Iodine. Heart Affection. Opium; vapour bath; tonics.

காலிககீல்வாதரோகம். (கிராணிக் ரூமெடிஸம், Chronic Rheumatism.) இது தீக்ஷ்ண ஜாதியை அனுசரித்தாவது, அல்லது தற்செயலாயாவதுக்ணும்; ஆனால், சாதாரணமாய் யாதொரு சம்பந்தமுமில்லாமல் காண்பதுவழக்கம். பிரமேகரோகத்தை யனுசரித்துவருவதும் உண்டு; அதற்குப் பிரமேகவாதரோகம். (Gonorrhœal rheumatism) என்று பேர். இந்த தணிந்த கீல்வாதரோகத்தில், சுரம் அற்பமாயிருக்கும்; ஆனால் வேதனை மாத்திரம் ராத்திரிகாலங்களில் பிரபலமாகி, நித்திரையைக் கெடுத்து உபத்திரவப்படுத்தும். சிலருக்கு, பிரமேகத்தால் கண்டால், உஷ்ணம் இதவிராமலும், தணிப்பினால் கண்டால், அது, இதவாயுமிருக்கும்

காலிக, கீல்வாதரோகத்தில், 2-3-ஜாதிகளுண்டு. இடுப்பில் கண்டால் இடுப்புவலி, (ஜகனுவர்த்தவாதரோகம். ஜகனம், இடுப்பு—லம்பேகோ Lumbago) என்று பேர். இதில் இடுப்பில் ஒரு பக்கத்திலாவது, அல்லது இரண்டுபக்கத்திலாவது, இருக்கிற சதைகள் வேதனைகொள்ளும். வியாதி பிரபலமாய் இருந்தால், ரோகியைக் கொஞ்சமேனும் அசையாமல் படுத்த படுக்கையில்தானே இருக்கும்படிசெய்யும். தொடையின் பின்புறத்தில் ஆண்டால், சுருத்திரசிவாதரோகம் (கிருத்திரசி, தொடைநரம்பு—ஆட்டியவாதம்—ஸையாடிகா, sciatica) என்றுபேர். மார்பு சதைகளாவது, அல்லது அவடத்திய பைரஸ்ஜவ்வாது உபத்திரவமடைந்தால், உரோவாதரோகம் (மூச்சுப்பிடிப்பு-ப்ளூரோடீனியா, pleurodynia) என்றுபேர்.

தேகம் மெத்த அலுத்து, சதைகள் பச்சைப்புண்ணாய்க் காணுகிற உபத்திரவம், வாதரோகத்தில் சம்பந்தப்படாது. அதற்கு மாமிஸசூலை (பாகியாயாமவாதம் -பாகியம் - வெளி - ஆயாமம் - ஸஞ்சரித்தல்; மையால்ஜியா, myalgia-muscular painfs.) என்றுபேர். அதிக துர்ப்பலமுடையவர்கள், மெத்த வேலைசெய்தாலும் நடந்தாலும், மேற்படி உபத்திரவம் அணுகும். இதில் மாமிஸங்களில் மத்தியபாகமாவது, அல்லது அந்தியங்களாவது, வேதனைகொள்ளும்; இது வராத இடமில்லை. சரீரமெல்லாம் சிலவேளை உபத்திரவமெடுக்கும். (ஆயுள் வேதமுறையாய் இருக்கிற வாதரோகம் 80-ஜாதிகளையும், ஜீவரக்ஷாமிர்தத்தில் காணலாம்.) இங்கிலீஷ் முறையாய், 4-ஜாதிகள்தான் உண்டு; இடுப்புவலி, மூச்சுப்பிடிப்பு, கழுக்துச்சுளுக்கு, தொடைவலி ஆகிய இவைகளாம். இவ்வித்தியாசங்களைத் தெரிந்துகொண்டு, துர்ப்பலம் நீங்க அயம், குருத்துவபோஜனம் இவைகளைப் பிரயோகிக்காவிட்டால், வியாதி வசப்படாது.

சிகிச்சை.—காலிக கீல்வாதரோகத்துக்கு, சரீரசவுக்கியம் வரும்படி செய்தால், வியாதி தானாய் ஓடிவிடும். இதைச் சவுக்கியப்படுத்த பிரயோகிக்கிற ஔஷதங்கள் அநேகம்; அவைகளில், ஐயோடைட் ஆப் பொடாஸியம் என்பது சிரேஷ்டம். மூத்திரம் அதிக புளிப்பாய் இருந்தால், லைகர் பொடாஸி என்னும் மருந்தைச் சேர்த்துக்கொள்ளலாம். குவையாகம், மீன் எண்ணெய், சிங்கோனா, டார்பன்டைன், கால்சிகம்,

நன்னாரி, கந்தகம், நவக்ஷாரம் ஆகிய இவைகளெல்லாம் பிரயோசனப் படும். வேது, கந்தகப்புகை இவைகளும் குணந்தரும். உபத்திரவ மிருக்கிற இடத்துக்கு பிளிஸ்டர் போடலாம். ஐயோடன் அல்லது அபினி பூசுத்தயிலத்தைக் தடவலாம்.—இடுப்புவலிக்கு,குடுவைப் பரிசெய்து வைக்க லாம்; ஊமத்தை இலையைப் போல்டீஸ்செய்து கட்டினல், வேதனை தணி யும். அபினி பூசுத்தயிலமும் நல்லது; போஸ்தக்காய் காய்ப்பிடமும் வேத னையை விலக்கும். கீல்வாத வியாதியையுடைய ரோகிகள், கம்பளிசொக் காயைப்போட்டுக்கொண்டு, ஈரமும், சீதமும் அணுகாமல் செய்துகொள்ள வேண்டியது. பத்தியக்கிரமம் அனுசரித்து, சாராரத்தை நீக்கவேண்டியது. தகன உறுப்புகள் விகற்பப்பட்டால், இந்த துஷ்டவியதி அடிக்கடி வந்து உபத்திரவப்படுத்தும்.—Remedies.-Iodide of potassium; liquor potassæ; guaiacum; codliver oil; cinchona; turpentine; colchicum; sarsaparilla; sulphur; sal ammoniac; vapour bath. Sulphur bath Locally. blister; iodine; liniment of opium. Lumbago. dry cupping; datura leaves; liniment of opium; poppyhead fomentations.

2. அத்தியாயம்

சுரரோகங்கள்.

(காச்சல்.) பீவர்ஸ் FEVERS.

பிரதமையில் ஆயாசம், துர்ப்பலம், மந்தாக்கினி, குளிர் அல்லது நடுக்கல், பிறகு உஷ்ணம், தீவிரநாடி, தளர்ச்சி, மலஜலாதி, அக்கிர மம் ஆகிய இவைகளை லக்ஷணங்களாக உடைய ரோகத்துக்கு, சுரம் என்று பேர். இந்தச்சுரம் ரணம், இருமல், வீக்கம, காயம் முதலிய வியாதிக ளில் அனுசரித்திருந்தால், அதற்கு உபத்திரவசுரம் (நிமித்தியகசுரம், காரணசுரம் விம்டோமாடிக் பீவர், (Symptomatic fever) என்றும், சரீரத் தில் யாதொரு ரோகமில்லாமல், காரணமின்றி காணுகிற சுரத்துக்கு, ஆகந் துகசுரம் (தனிச்சுரம், இடியோபாதிக் பீவர், Idiopathic fever) என்றும் பேர். சுரங்களை ஒவ்வொருத்தர் ஒவ்வொருமார்க்கமாய்ப் பிரித்திருக்கிறார் கள். சுரரோகத்தில், 276 சாதிகளுண்டென்று தமிழ்நூல்கள் கூறுகின் றன. ஆகந்துக சுரங்களைச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளும்பொருட்டு, 4-சாதிகளாகப் பிரித்திருக்கின்றன ; அவைகளாவன.—சததசுரம்—சீதசசு ரம்—சந்ததசுரம்—ஸ்போடகசுரம் ஆம். ஒவ்வொரு சாதியில், பலபிரிவுக ளுண்டு; அவைகளைத் தெளிவாய் உணரும்பொருட்டு, இதனடியில் ஒரு அட் டவணையாய்க் கூறப்படும்.

1. சததசுரங்கள்.—(கன்டினியுட் பீவர், Continued fever)
   1. அற்பசுரம்.—(விம்பில் பீவர்.Simple fever.)
   2. சந்நிபாதசுரம் —(டைபஸ் பீவர், Typhus fever.)
   3. அதிசார சந்நிபாதசுரம்.-(டைபாய்ட் பீவர், Typhoid fever.)
   4. புனர்சுரம்.—(ரிலாப்கிங் பீவர், Relapsing fever.)
2. சீதசுரங்கள், கம்பச்சுரங்கள்.—(இன்டர்மினெட் பீவர்ஸ், Intermittent fevers ; Ague.)
   1. ஏகாயிசுரம்.—(கோடிடியன், Quotidian.)
   2. திரியாகிக சுரம்.—(டெர்ஷன், Tertion.)

3. சாதுர்க்கிக சுரம்.—(குவார்டன், Quorton.)
3. சந்ததசுரம் —(ரிமிடென்ட் பீவர், Remittent fever.)
1 சந்தத சுரம்

4. ஸ்போடகசுரங்கள்.—(இரப்டிவ் பீவர்ஸ், Eruptive fevers.)

1. பெரியம்மை,—(சுமால்பாக்ஸ், Small-pox.)
2. கோமசூரிகை.—(கௌபாக்ஸ், Cow-pox.)
3. சின்னம்மை.—(சிகின்பாக்ஸ், Chicken-pox.)
4. தட்டம்மை.—(மீஸெலஸ், Measles)
5. ரத்தம்மை.—(ஸ்கார்லெட்பீவர், scarlet fever.)
6. அக்கி.—(இரிஸிபெல்ஸ், Erysipelas.)

ஸததசுரம்

கண்டினியுட் பீவர். CONTINUED FEVER.

பிரதிபதங்கள்.—நிரந்தரசுரம்.—விடாக்காச்சல்

அல்லும்பகலும் மாருமல், மேலெங்கும் ஒரேமிதமாய்க் காய்கிற சுரத்துக்கு ஸததசுரம் என்றுபேர். இதில் அற்பசுரம், சந்நிபாதசுரம், அதிசார சந்நிபாதசுரம், புனர்ச்சுரம் ஆகிய 4-சாதிகளுண்டு. விஷக்காற்றிலிருக்கிற ஏதோ ஒரு கெட்டபதார்த்தம், ரத்தத்தில் கலந்து, ரத்தம்கெட்டு இந்தச் சுரங்கள் பிறக்கின்றன. ஸ்பரிஸநரம்புகளின் வியாபாரம் விகற்பப்படுதல், துர்பலம், விகாரம், அன்னத்துவேஷம், சரீரசுஷ்கம் ஆகிய இவைகள், இந்தச் சுரங்களுக்கு பிரதான லக்ஷணங்களாகின்றன.

அல்பசுரம்

ஒருநாள் காச்சல். சொல்பசுரம் (சிம்பில் பீவர், simple fever—எபிமரல் பீவர் Ephemeral fever, Febricula.)—அன்று பிறந்து அன்றே தணித்துவிடுகிறதற்கு, அல்பசுரமென்றுபேர். இதில், வேறுரோகங்கள் அனுசரிக்காது. அல்பசுரமானது, 1-10-நாள்வரையில் இருப்பதுமுண்டு. லக்ஷணங்கள்.—நிரேதுவையாய் ஆயாசம், சரீரபிரயாசையிலும் மனோவியாபாரத்திலும் இச்சையின்மை, அன்னத்துவேஷம், ஒக்காளம், தலைவலி, முதுகிலும் கரசரணங்களிலும் நறுக்கித் துவைத்ததுபோல் வேதனை, தேகசீதளம் (முக்கியமாய் முதுகு), நடுக்கல் ஆகிய இவைகள் பிறந்து, கொஞ்சநேர மிருந்தபிறகு, குளிர்மாறி, சர்வாங்கம் உஷ்ணம் பிறக்கும். நாடி திரடமாயாவது, அல்லது, பருத்தாவது, அல்லது சிறுத்து தந்திபோல் தீவிரமாய் 100-120-130 சங்கியயாயாவது நடக்கும்; அதிக சிரோவேதனையும், நித்திராபங்கமும், இருக்கும்; நாவுலர்ந்து, மேலே மாவுபடிந்திருக்கும்; அதிதாகமுண்டு; மலசோதனையிராது; மூத்திரம் குறைந்து சிவந்திறங்கும்; கரசரணங்களில் உபத்திரவமும், சரீரம் பச்சப்புண்ணும் இருக்கும். தேகம் வெகு சீக்கிரத்தில் சுஷ்கித்து, முகம் வெளுத்து வாடிவிடும்; அற்பவிகாரமும் காண்பதுண்டு; பார்க்கிரவர்களுக்கு, மெத்த மெலிந்தவனைப்போல் காணப்படும். எப்போதும் மாலையில் சுரம் பிரபலமடைந்து, காலையில் தணிந்து, நித்திரைவரும். இந்த லக்ஷணங்கள். 3-4-5-6-நாள் இருந்தபிறகு, நாக்கில் ஈரமுண்டாகும்; உஷ்ணம் தணியும்; கரசரணங்களின் வேதனை சமனப்படும்; பிறகு அதிகவியர்வை ஜனித்து, ரோகம் சொஸ்தமடையும்; ஆனல், துர்ப்பலமாத்திரம் இருக்கும்;

நாடி யதாஸ்திதிக்கு வந்துவிடும்; சுரம் இராது; படிப்படியாய் தேகசவுக்கியம் வர்த்திக்கும; பூர்வதாருட்டியமும் சவுந்தர்யமும் வரச் சிலநாட்செல்லும். அல்பசுரத்தில் துற்குணங்களிராது; வியாபிக்கிற குணமுமில்லை. இதில் விவகாரமிருந்தால், பிரலாபசுரமென்றும், இருமலிருந்தால், காசசுரமென்றும் வாந்தியிருந்தால் பித்த சுரமென்றும், வயிற்றுப்பொருமல் இருந்தால், மாந்தசுரமென்றும் வீணில் பலநாமங்களிட்டு, விஷயத்தைப் பிரமிக்கும்படி செய்கிறுர்கள்.

காரணங்கள்.—சீதவாயு, அபக்குவபோஜனம், மலபந்தம், அதிக சரீரப்பிரயாசை, மிதமில்லாத அன்னபானபக்ஷணே, வெயிலில் திரிதல் ஆகிய இவைகள் அல்பசுரத்துக்குக் காரணங்களாகின்றன.

சிகிச்சை.—சகல சுரங்களையும், தாந்திரீகத்தினல் கண்டிக்காமல், சுவாதீனத்தில் விட்டுவிட்டால், அவைகள் ஒருமார்க்கமாய் வியாபித்து முடிவில் தொலேந்துவிடும். இதரரோகங்களைக் கண்டிப்பதுபோல், சுரங்களையும் கண்டிக்க சில கிரமங்களுண்டு; அவைகளுக்கு, சிகிச்சாவிதிகள் (இன்டிகேஷன் ஆவ் க்யூர், Indication of cure) என்றுபேர். சுரசிகிச்சா விதிகளாவன.—1-வது,—ரத்தக்கொதிப்பை, உப்புபேதிகலும், நித்திரையினுலும், லகு அசனத்தினுலும், குறைக்கவேண்டியது, 2-வது,—பலம் க்ஷீணமடையும்போது, தாருட்டியகாரிகளைக் கொடுத்து, பலத்தை அதிகரிக்கவேண்டியது 3-வது,—பிரதி அக்கங்களில் எதிலாவது, தாபனம் கண்டால், அதைத் தணிக்கவேண்டியது. 4-வது,—துர்க்குணங்கள் எவையாவது கண்டால், அவைகளை நீக்கிவிடவேண்டியது. சுரத்தின் மார்க்கத்தை நாம் அனுசரிக்கலாம்; சுரத்தைக் கண்டிக்க நமக்கு வல்லமையில்லை. பெருங்காற்றைத் தணிப்பேனென்பவனை நாம் என்ன நினைக்கவேண்டியது. பிசல் அடிக்கும்போது, கடலோடி கப்பலைத் தன்ஞல் கூடியவரையில் காற்றை அனுசரித்து, கப்பலுக்கு அபாயம் வாராமல் எப்படி கரைசேர்க்கிருனே, அவ்விதமாய் சுரத்தின் கதியை யனுசரித்து, ஔஷதங்களைப் பிரயோகித்து, ரோகத்தை வசப்படுத்துவது, நமது கடமை.

இந்தசுரம், அல்பசிகிச்சையால் நீங்கிவிடும். பிரதமையில், துர்மலாதிகளை நீக்க, வமன விரேசனங்கள் கொடுக்கவேண்டியது. ஒருவேளை இதனுலேயே சுரம் துலைந்துவிடும். ரோகியை தாராளமாய், வாயுசஞ்சரிக்கிற ஸ்தானத்தில் வைக்கவேண்டியது. தாகசமனத்துக்கு, பார்லிஅரிசித் தண்ணீர், கஞ்சித்தண்ணீர், கஷாய இனங்கள் கொடுக்கலாம். சுவேதகாரிகளைக் கொடுத்து, வியர்வையை ஜனிப்பிக்கவேண்டியது. ரசபஸ்மத்துடன் அஞ்சனக்கல்பஸ்மம சேர்த்து, ராத்திரியில் கொடுத்தால், காலேயில் மலம் தாராளமாய் உதையும். பூரத்தை தேனிலிழைத்து கொடுத்தாலும் மலமிறங்கும். கொஞ்சநேரம் வெந்நீரில் கால்களைவைத்திருந்து, துடைத்துவிட்டு, மேற்படி பஸ்மம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால், சுவேதம் தாராளமாய் பிறக்கும். $\frac{1}{4}$-பலம் பொட்டிலுப்பை, 1-புட்டி தெளிந்த கஞ்சி ஜலத்தில் கரைத்து, தேன் அல்லது கற்கண்டு சேர்த்து, இனிப்பேற்றி, தேவையானவரையில் ரோகியைத் தாராளமாய்க்குடிக்கச் செய்தால் சுரம் தணியும், வியர்வைகாணும், மூத்திரம் அதிகமிறங்கும். பத்தியம்.—ஒருநாள் சுத்தலங்கணத்தில், இது தொலேவதும் உண்டு. கஞ்சியினங்கள் கொடுப்பிக்கலாம்.—புளி, உப்பு நீக்கிவைப்பதில், துர்ப்பலம் வர்த்திக்கும்; ஆகையால், அந்த புராதனஅப்பியாசங்களை தக்ஷணமே நீக்கிவிடவேண்டிய தவசியும் Remedies —

Emetics; purgatives; dilulents; calomel and antimony; foot-bath; nitre.

சந்நிபாதசுரம்

அஸ்திசுரம், எலும்புரிக்கிசுரம், உட்காய்ச்சல் விஷசுரம், (டைபஸ் பீவர், Typhus Fever.) இது தொற்றுவியாதி; ஒருவேளை எங்கும் பரவும்போது, பெரிவாரிக்காய்ச்சல் (எபிடெமிக் பீவர், Epidemic fever) என்று சொல்லுவார். தரித்திராம்சையில் இருப்பவர்களையும், காற்று அடைபட்டிருக்கிற ஸ்தானங்களில் இருக்கிறவர்களையும், இந்தசுரம் அனுசரிக்கும்.

லக்ஷணங்கள்,—விஷக்காற்று சரீரத்தில் அனுசரித்தபிறகு, சில நாள்வரையில், சுரம் உள்ளடங்கியிருக்கும்; அப்போது குளிர், குமட்டல், பசியின்மை, தாகம், ஆயாஸம், தலைவலி ஆகிய இவைகள் காணும். சுரம் வெளிபட்ட பிறகு, தேகம் உஷ்ணத்தோடு வரக்ஷியாகும்; தாகம் எடுக்கும்; மலம் பிடித்தமாகும்; நாடி தீவிரமாய் நடக்கும்; நாவுலரும்; ஆயாஸமும் சர்வாங்கவேதனையும் உண்டு. பிரதிதினம், சாயரக்ஷையில சுரம் அதிக்கிரமித்து, படுக்க சுகமில்லாமல், நித்திரைவராது. (கோபகாலம், மேய்ச்சல்காலம்) (எக்ஸாஸர்பேஷன், Exacerbation.) இந்த சுரத்தில் ஒரு முக்கிய குறியுண்டு. அதாவது—கொசுக்கடிபோல் சரீரத்தில் தழும்புகாணுதல் (டைபஸ் ராஷ், Typhus rash, morbilliform eruption.) சுரம் கண்ட 5-ம் நாள் முதல் 8-நாளைக்குள் அதைக் காணலாம். அதை விரலால் அழுத்தினல், மறையும் சிறிதாய் சரீரத்தில் அங்குமிங்குமாவது, அல்லது பெரிதாய் அநேகவிடங்களிலாவது, இருககும். சுரவேகத்துக்குத் தக்கபடி, தழும்புகள் அதிகமாயும் குறைந்துமிருக்கும்; முக்கியமாய் மார்பிலும், வயிற்றிலும் காணும்; பிறகு கரசரணங்களில் பிறக்கும். சுரம் இருக்கிறவரையில், தழும்புகளும் இருக்கும். பெரியவர்களுக்கு எப்போதும் காண்பது வழக்கம் குழந்தைகளுக்கு ஒருவேளையிராது. சுரங்கண்டு ஒருவாரம்வரையில், தலைவேதனை அதிகமாயிருக்கும்; அரோசகம் உண்டு; கந்தஸ்பரிசம் குறையும்; பசியிராது; பேதியும், வாந்தியுமிராது; நாக்கு கறுத்து, வரக்ஷியாயிருக்கும்; ஜாட்டியம் பிரபலமானல், அதிகமாய்க் கறுத்து, வாயில் துர்க்கந்தம் பிறக்கும்; பற்களில் ஊத்தைப் படிந்திருக்கும், மூத்திரத்தில் விகற்பமிராது; ரோகி பலிஷ்டனாய் இருந்தபோதிலும், தாருட்யகுறைவால், படுக்கையில் புறள சக்தியில்லாதனுகி விடுகிறான். முகம் மெத்தவாடிவிடும்; முகத்திலும், கைகளிலும் கொறுக்கைவலிகாணும்; விக்கலுமுண்டு; ஒருவாரத்துக்குள் விகாரம் பிறப்பது அரிது; ரோகிபிதற்றிக்கொண்டிருந்து மெய்மறந்து போவதுவழக்கம். ரோகம் சாத்தியத்துக்கு வரும்படியிருந்தால், 3-4-தினத்துக்குள் விகாரம் நின்றுவிடும்; நாடி தீவிரமாயாவது, மெதுவாயாவது நடக்கும். இருதயநடைக் குறைந்தால், மூர்ச்சையும், பெருமூச்சும், கண்டு நாடி மந்தகதியடையும். சுரம் தொந்தப்பட்டால் புப்புஸ வியாதிகண்டு, இருமல் பிறக்கும்.

சுரம், சாத்தியத்துக்கு வரும்போது, விகாரம் குறையும்; தழும்புகள் மறையும்; நாக்கு சுத்தியாகும்; நாளுக்குநாள் பலம் வர்த்திக்கும்; நாடி சமனப்படும்; போஜனத்தில் இஷ்டம் பிறக்கும்; ராத்திரியில் நித்திரை உண்டாகும். இந்தச் சுகுணக்குறிகள், 10-முதல், 16-தினத்துக்குள் காண்பது வழக்கம். நல்ல நித்திரையாவது, அதி வியர்வையாவது, பேதியாவது, அதி மூத்திரமாவது முதல்கண்டு, பிறகு, மேற்படி சாத்தியு

லக்ஷணங்கள் காணுகிறதுண்டு.—ரோகம் அசாத்தியமாகிவிட்டால், 12-20 தினத்துக்குள் மரணம் சம்பவிக்கும். அதிக்ஷீணம், மூத்திரஅடைப்பு, படுக்கையில் தெரியாமல் மலம் இறங்குதல், படுக்கைத்துணிகள் உரைந்து ரணம் காணுதல், நாடிக்ஷீணம், கொறுக்கைவலி, பிரேதமுகம், தீவ்ரசுவாசம், உறக்கம், போதக்ஷயம் ஆகிய இவைகள், அசாத்திய லக்ஷணங்களென்று எண்ணவேண்டியது.

ரோகநிதானம்.—சந்நிபாத சுரத்துக்கும், அதிசாரசந்நிபாதசுரத்துக்கும், சில வித்தியாசங்களுண்டு; அவைகள் தமக்குத் தெரிந்திருக்கவேண்டியது — சந்நிபாத சுரத்தில் காணுகிற தழும்புகள், கம்பளிபூச்சிப்பழ நிறமுடையதாய் இருக்கும். அவைகள், 6-முதல், 8-நாளைக்குள் கண்டு, சுரம் விடுகிறவரையிலிருக்கும்; பேதி காண்பது அரிது; ரத்தபேதி காணுகிறதேயில்லை; குடலில் ரணம் உண்டாகாது; எந்த வயதிலும் காணும்; சுரம்விட்டு மறுபடியும் வராது. 14-முதல் 21-நாள்வரையில் சுரம் இருக்கும். அதிசார சந்நிபாதசுரத்தில் காணுகிற தழும்புகள், ரோஜாபுஷ்பநிறப்புள்ளிகளாய் இருக்கும். 7-முதல் 14-நாள்களுக்குள் மார்பிலும், முதுகிலும், வயிற்றிலும் காணும். அங்குமிங்குமிருக்கும், ஒருவேளை அகப்படுவதும் பிரயாசை; 2-3-நாளையில் மறைந்து, பிறகு வேறுவிடத்தில் காணும்; பேதி அனுசரிப்பது வழக்கம்; ரத்தபேதி காண்பதும் உண்டு; சிறுகுடலில் (Ilium) இருக்கிற பெயர்ஸ் கிளாண்ட்ஸ் (Peyers patches) என்கிற கோளங்கள் ரணமாகிவிடுகின்றன. பெருங்குடல் சமீபத்தில் ரணங்கள் அதிகமாய் இருக்கும். 40-வயசுக்குமேல் காணாது. எவ்வளபருவத்தில் காண்பதுவழக்கம்; முன்சுரத்தைப் பார்க்கிலும், இது மெத்ததுஷ்டன்; சுரம்விட்டு மறுபடியும் காண்பதும் உண்டு; 30-நாள் வரையிலிருக்கும்.

சிகிச்சை.—சாதாரண சுரச்சிகிச்சை இதற்கு உதவாது ரோகியை, விசாலமாய் நல்ல காற்றுள்ளவிடத்தில் வைக்கவேண்டியது. அவ்விடத்தில் சாமான்களும் துணிகளும், அடைந்திருக்கலாகாது. துர்வாசனை நீங்க, சுண்ணம்புநீர் தெளிக்கவேண்டியது. ரோகியினிடத்தில், ஜனக்கூட்டமும், அதிக வார்த்தையும் இல்லாமல்செய்து, உதவிக்காக-1-2 ஆட்களைமாத்திரம் வைத்து, ரோகியை ஜாக்கிரதையாப் பார்க்கும்படி செய்யவேண்டியது.

இந்ததுஷ்ட சுரத்துக்கு அதிகமருந்து கொடுக்கலாகாது; சுரத்தை சொஸ்தப்படுத்த நம்மால் கூடாது. பெரியம்மைமுதலிய ஸ்போடக சுரங்களை அவைகள் போகும்வழி எப்படி விட்டுவிடுகிறமோ, அப்படியே இதையும் விட்டுவிடவேண்டியது. ஆனால், சரீரத்திலிருக்கிற சுரவிஷம் நீங்குகிறவரையில், ரோகியை பிராணனோடு வைத்திருப்பதே நமது முக்கிய பிரயத்தினம். 10-கிறேன் குயைனவில், விளாவின கந்தகத்திராவகம் விட்டு, கரைத்து, 2-மணிக்கொரு ஆவர்த்தி கொடுத்ததில், அநேகருக்கு சௌக்கியம் பிறந்ததாய்த் தெரியவருகின்றது. 3-நாளைக்காவது, அல்லது, சுரம் தணிகிறவரையிலாவது, அல்லது காதிவிரைச்சல் காணுகிறவரையிலாவது, இந்த திவ்ய ஔஷதத்தைக் கொடுக்கவேண்டியது. பேதியாவது, ரத்தபேதியாவது கண்டிருக்கிற காலத்திலும், இதைக் கொடுக்கலாம். இது ஸ்பரிசநரம்புகளின் பலத்தைக் குறைப்பதால் மாம்ஸரஸம், ஒயின், பிராந்தி இவைகளைக் கொடுத்து, பலக்ஷீணமாகாமல், செய்யவேண்டியது குயைனவுக்கு பதிலாய், வேப்பன்பட்டைத்தூளில் 1-விராகனெடைக் கொடுக்கலாம். பிராந்திக்குப் பதில், நாட்டுச் சாராயத்தைக் கூட்டிக்கொள்ளலாம். ரோக ஆரம்பத்தில், இபிகாக் ஒயின், என்பதைக் கொடுத்து, வாந்தியாகச்

செய்தால் நல்லது. தூர்மலத்தைப் போக்க ஒரு பேதிக்குக் கொடுப்பதிலும் பிரயோஜனமுண்டு. மற்ற ஔஷதங்களை நீக்கிவைக்க வேண்டியது. வெந்நீரைச் சரீரத்தின்மேல் தடவிக்கொண்டிருந்தால், ரோகிக்கு ஆரோக்கியமுண்டு. தாகசமனத்துக்கு, ரொட்டிச் சுட்டுப்போட்ட ஜலம், பார்லிஜலம், கஞ்சிஜலம், இரும்பு சுட்டுப்போட்ட ஜலம், நெல்லுப்பொரிஜலம், மணல்வறுத்துத் தண்ணீர்விட்டு காச்சினஜலம் இவைகளில் ஒன்றைக் கொடுக்கலாம். பத்தியம்.—பால், கஞ்சியினங்கள், சூப்பு இவைகளைக் கொடுத்து, ஆதரிக்கவேண்டியது ; சுத்தலங்கணம் உதவாது.

தூர்ப்பலம் அதிகரித்து, நாக்கு கறுத்து, நாடி ஒடுங்கி யிருந்தால், உஷ்ணகாரிகளைக் கொடுக்கவேண்டியது. கோழிக்குஞ்சுரஸம், ஒயின், ஜின், பிராந்தி இவைகள் தகுயானவைகள். ஒரு உச்சிக்கரண்டி பிராந்தியில் ஜலமாவது, சூப்பாவதுவிட்டு கலந்து 2 - 1 - ½ - மணிக்கொருதரம் கொடுக்கவேண்டியது. அதிகமாய்ச் சுரம் இருந்தபோதிலும் பயமில்லை. ஆனால் சாராயத்தின் சேஷ்டையை, பத்திரமாய் அறியவேண்டியது. நித்திரையில் ரோகி இருந்தபோதிலும், எழுப்பிக் கொடுக்கலாம் ; இல்லாவிட்டால், மோஹாலவஸியம் காணும். நித்திராபங்கத்துக்கு அபினி ½-கிறேன் வீதம், 3-மணிக்கொருதரம் கொடுக்கலாம்; தலைவலி, கண்சிவப்பு, விகாரம் இவைகளிலிருந்தால், அபினியோடு, இபிகாக் அல்லது வாந்திஉப்பு சேர்த்துக் கொடுக்கலாம். நெற்றிமேல் துணியைப்போட்டு, ஜலம் அல்லது பால் விட்டு நனைத்துக்கொண்டிருந்தால் நல்லது. கழுத்தில் புண்ணுக்கினல், விகாரம் சமனமாகும். இருமல் இருந்தால், கடுகையாவது, டர்பன்டைன் என்பதையாவது, மார்புக்கு உபயோகிக்கலாம். இருமல் இருந்தபோதிலும், சாராயம் கொடுக்கத் தடையில்லை. இடுப்பை அடிக்கடி பார்வையிட்டு, ஒருவேளை அவ்விடத்தில் சிவந்து ரணம் உண்டாகிறதாய் இருந்தால், உடனே மருந்திட்டுத் தடுக்கவேண்டியது. மூத்திரம் இறங்காதிருந்தால், சிலாக்கை விட்டு அதை வெளிப்படுத்தவேண்டியது. நாட்டுச் சிகிச்சையில் உபயோகிக்கிற ரஸ, கந்தி, பாஷாணங்கள் இந்த விஷசுரத்துக்கு உதவாது.

இவ்விதமாய் உபசரணை செய்துகொண்டுவந்தால், சிலநாள்வரையில் ரோகிநம்பிக்கையில்லாத ஸ்திதியிலிருந்து பிறகு மெதுவில் ஸௌக்கியமடைவான். சுரம் நின்றபிறகு, நிலவேம்புக்கஷாயம் கொடுத்துக்கொண்டுவந்தால், தூர்ப்பலம் விலகி, சரீரம் சவுக்கியம் உண்டாகும். Remedies.—quinine; wine; brandy; support.

அதிசார சந்நிபாதசுரம்

(டைபாயிட் பீவர், Typhoid fever. Enteric fever). இந்த சுரத்துக்கு தொற்றுகிறகுணம் கொஞ்சமுண்டு; புரட்டாசி, ஐப்பிசி, கார்த்திகை மாசங்களில், அழுகிப்போகிற மாமிஸ பதார்த்தங்களிலிருந்தும், சாக்கடைகளிலிருந்தும், ஜனிக்கிற வாயுவால் இந்தரோகம்பிறந்து வியாபிக்கும். பேதமில்லாமல், தனவானையும், தரித்திரரையும் அனுசரிக்கும்; யவ்வனவயத்தில் காண்பது வழக்கம். இந்தக் கொடிய சுரத்துக்கு,இன்னம் பலநாமங்களுண்டு; எதுவும் ஸ்திரப்படவில்லை.

லக்ஷணங்கள்.—இந்தசுரம் மெதுவில் காணும். முதல், சரீரம் ஆயாசத்தோடு ஒருவிதமாய் இருக்கும்; இன்னவிதமென்று சொல்ல ரோகிக்கும் தெரியாது. இவ்விதமாய், 1-2-நாள் இருந்து, சிலுசிலுப்பு, தலைவலி, வெளிச்சம் சகிக்கக்கூடாமை தாகம், பசியின்மை, கைகால்களில் வலி ஆகிய இவை

கள் பிறந்து, பிறகு தொடர்ச்சியாகவே துர்ப்பலம், தீவிரநாடி, பேதி மயக்கம், உட்கார மனவேஷ்டை ஆகிய இவைகள் காணும். ராத்திரியில், உடம்பு மெத்த காயும்; தூக்கம் இராது; அடங்காத தாகமெடுக்கும்; முகக்களை மாறிவிடும்; வியாகூலம் அதிகமாகும்; நாக்கு உலர்ந்து அழுக்கடைந்தும், வயிறு கொஞ்சம் புண்ணுயுமிருக்கும். இக்குறிகள் மெதுவில் வர்த்தித்து, இரண்டாம்வாரம் ஆரம்பத்தில், (8-12 நாள்) இந்த சுரத்துக்குடைய பிரதான லக்ஷணமாகிய கொசுக்கடி தழும்பு பிறக்கும். ரோஜாபுஷ்ப நிறமான சிறிய புள்ளிகள் மார்பிலும், வயிற்றிலும், காணும்; விஸ்தாரமாய் இராது, வட்டமாயிருக்கும்; அழுத்தினுல், கொஞ்சநேரம் மறைந்திருக்கும்; அவைகள் 2-3-நாளையில் மங்கலாகி, நூதனதழும்புகள் ஜனிக்கும்; சுரம் நிற்கிறவரையில், இவ்விதமாய்க்கண்டு மறைந்துகொண்டிருக்கும்; ஒருவேளை, ஒருதழும்பும் அகப்பட்டால், சுரம் அதின் மார்க்கமாய் வியாபிக்கிறதும் உண்டு. இரண்டாம்வாரம் முடிவில் வியர்க்குருதன்மையான பொறிகள் கழுத்து, மார்பு, வயிறு தொடைக்கவுட்டி ஆகிய இவ்விடங்களில் ஓரிடத்தில் காணும். அப்போது, சரீரம் உஷ்ணமாயும், ஒவ்வொருவேளை வியர்வை பிறப்பதாயு மிருக்கும். இதன்றியும், விகாரம், கைகால்களில் இசிவு, விக்கல், காதிரைச்சல், செவிடு, சர்வாங்கவேதனை, பலஹீனம், வயிற்றப் பொருமல், அடிவயிற்றில் வலதுபக்கம் கவுட்டிமேல் அழுத்தினுல் உபத்திரவம் ஆகிய இவைகள் காணும். ரோகம் அதிக்கிரமித்தால், குடலில் வாயுசேர்ந்து, வயிறு வீர்த்துக்கொள்ளும்; ஒவ்வொருவேளை குமட்டலும், வாந்தியும் இருக்கும்; இந்த விஷசுரத்தில் பேதியில்லாமல் இருப்பது அரிது. 2-ம் வாரம் அந்தியத்தில் பேதி அதிகரிக்கும்; ரத்தமும் ஒருவேளை காண்பதுண்டு; சிலருக்கு ரத்தக்கழிச்சல் பிரபலமாய்இருக்கும்; மூர்ச்சை யடையும் படியான அவ்வளவு ரத்தம் வெளிப்படுவதும் உண்டு; குடலில் காணுகிற ரணத்திலிருந்து, அந்த ரத்தம் வெளிப்படுகின்றது. ரணம் வியாபித்து, குடலில் துவாரம் காண்பதும் உண்டு; பேதியில் நிரேதுவையாய் வேதனைபிறந்து, முகக்களை விகாரமடைந்து, கொஞ்சநேரம் சென்றபிறகாவது, அல்லது உடனேயாவது, குமட்டல், வாந்தி இவைகள் கண்டால், குடலில் துவாரம் கண்டதென்று நாம் நிச்சயிக்கவேண்டியது. இந்த சுரத்தில், மூளையிலும், புப்புஸத்திலும், வியாதிகண்டு, ஆளைமோசப்படுத்துவதும் உண்டு; இந்தசுரம், 30-(23) நாள்வரையில் நீடிக்கிறதுண்டு. ஒருவேளை போனசுரம் மறுபடியும் காணும்; இந்தசுரத்தின் விஷம், சிறுகுடலைப் புண்ணுகுவதே முக்கிய சேஷ்டை.

சிகிச்சை.—சந்நிபாதசுரத்துக்கு செய்கிற சிகிச்சையே, அதிசார சந்நிபாதசுரத்துக்கும் செய்து வசப்படுத்தவேண்டியது; ஆனுல், 2-3-காரியங்களில் வித்தியாசப்படும். வியாதி ஆரம்பத்தில், லகுவமனம் செய்துவைக்கலாம், பேதி தற்செயலாய் உண்டாகிறபடியால், நாம் விரேயனம்செய்துவைக்க அவசியமிராது. பேதியை நிறுத்த, துவர்ப்பு மருந்துகளோடு, அபினியைச் சேர்த்துக் கொடுத்தால், வெகுசீக்கிரத்தில் ரோகத்தைக் கண்டிருக்கும். 10-15 கிறேன் காசுக்கட்டித்தூளுடன் 8-10 கிறேன் சன்னலவங்கப்பட்டைத்தூளும், ½-கிறேன் அபினியும் சேர்த்து தேனிலாவது, வெல்லத்திலாவது மிஸ்ரமித்துக்கொண்டுவந்தால், பேதிநிற்கும். 15-கிறேன் மாசக்காய்சூரணத்தில் ½-கிறேன் அபினியைச்சேர்த்து, தேனில் கலந்து கொடுக்கலாம். இவைகளை 1-2 ஆவர்த்திகொடுத்து பேதிநிற்கவில்லையென்று, நிறுத்திவிடலாகாது; நன்றுய்ப் பரீஷித்து, சுகுணம் காணவிட்டால், பிறகு

அவைகளை நிறுத்தி, வேறுமருந்துகளை உபயோகிக்கவேண்டியது ரத்த விரேசனம் கண்டிருந்தால் வயிற்றுமேல் ஈரத்துணியைப்போட்டு உள்ளுக்கு மாசக்காயும், அபினியும்கொடுக்கலாம். இந்தசுரத்தை வைத்தியன்வெகுசாக்கிரதையாய்ப் பார்வையிட்டு திராக்ஷரசமாவது, பிராந்திளாவது, சரீரரப்பிகிர்த்திகுத் தக்கபடி கொடுக்கவேண்டியது. காலமறிந்து, ஔஷதங்களைப் பிரயோகித்து, ரோகத்தை வசப்படுத்தித் தன் சாமார்த்தியத்தைக் காண்பிப்பவனே வைத்தியன். ரோகியினிடத்திலிருந்து, லக்ஷணங்களைக் கவனிக்காமல், தன் சாவகாசமறிந்து, அனுப்பிய வாகனத்தில் ஏறி, ரோகியிடத்தில் சென்று, இரண்டொரு காரியங்களை விசாரித்து, தனக்குத் தோணுகிற தெதையாவது, கடனுக்குச் சொல்லிவந்துவிடுகிறதையும், அல்லது மருந்துசெய்ய தாமஸப்படுத்துகிறதையும், இந்த துஷ்ட சுரச்சிகிச்சையில் நீக்கிவிடவேண்டியது. வேறு சுரங்களைப்போல் இதை யோசிக்கலாகாது. சுரம்விட்டு உடம்பு தேறிவருகிறகாலத்தில், கிகிச்சைகள் அதிக சாக்கிரதையாய் இருக்கவேண்டியது ; ஏனெனில், குடலில் இருக்கிற ரணம் உலர்ந்து பக்குகட்டிவருகிற சமையத்தில், அபத்தியம் ஏதாவது நடந்தால், வியாதி மறுபடியும் கண்டு குடலில் துவாரம்விழும். சுரம் விட்டபிறகு, பலகாரியங்களைக் கொடுத்து துர்ப்பலத்தை நீக்கவேண்டியது. பார்க்பவுடர், வேப்பன் பட்டை தூள், நிலவேம்பு கஷாயம் இவைகளில் எதையாவது கொடுக்கலாம். பத்தியம்—கஞ்சியினங்களை முதல் கொடுத்து, பிறகு சாதம் சாப்பிடும்படியான பக்குவத்துக்குக் கொண்டுவர வேண்டியது. சுந்த லங்கணத்தை சொப்பனத்திலும் நினைக்கலாகாது. சரீரம் சவுக்கியமடைகிறவரையில், ரோகியைப் படுத்த படுக்கையில் வைத்து, உபசரணை செய்துகொண்டுவர வேண்டியது.—Remedies—Quinine ; for diarrhœa, astringents with opium cautiously ; for hæmorrhage, cold to abdomen ; gallic acid and opium ; wine ; support.

புனராவர்த்தகசுரம். மக்களிக்கிற சுரம். (ரிலாப்ஸிங் பீவர், Relapsing fever. ரிக்கர்ரென்ட் பீவர், Recurrent fever.)—சுரம்விட்டு, உடம்பு தேறுதலாகிவருகிற சமயத்தில், நியமகமான நாளில், மறுபடியும் சுரம் காணும். இந்த ஜாதிக்கு, புனராவர்த்தகசுரமென்று பேர். இது ஒவ்வொருகாலத்தில் (பஞ்சநாட்களில்) பிறந்து, வியாபிக்கும்.

லக்ஷணங்கள்.—இந்த சுரம் நிரேதுவையாய் காணும் குளிர், தலைவலி, சரீரவேதனை இவைகள் கண்டு சுரம் பிறக்கும்; அப்போது, அத்தியுஷ்ணம், ஏக்கம், வெளிச்சமும், சப்தமும், சகிக்கக்கூடாமை, வெளுத்த நாக்கு, தீவ்ரநாடி, அடங்காததாகம், குலைவயிற்றில் வேதனை, பித்தவாந்தி ஆகிய இவைகள் தொடர்ந்திருக்கும். இரவில் சுரம் அதிகப்படும்; நித்திரையிராது. வியாதி வர்த்தனையில், மலபந்தம், குறைந்து சிவந்த மூத்திரம், ஒவ்வொருவேளை மஞ்சள்காமாலை, அதிக தளர்ச்சி ஆகிய இவைகளும் அனுசரிக்கும். இவ்விதமாய், நம்பிக்கையற்று கஷ்ட ஸ்திதியிலிருக்கிற சமையத்தில், 5-நாளைக்குமேலும், 7-நாளைக்குள்ளாகவும், சர்வாங்க வியர்வை கண்டு சுரம்விட்டுவிடும்; ஆனால், க்ஷீணம்மாத்திர மிருக்கும்; சுரம் தொலைந்தது, இனிமேல் பலம் வருவதற்கு மருந்துகளும், நல்ல போஜனமும் எடுத்துக்கொண்டால், சரீரசவுக்கியம் வருமென்று நோயாளி எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறபோது, சுரம்கண்ட 14-ம் நாள் அல்லது, சுரம்விட்ட 7-ம் நாளில் மறுபடியும், சுரம் முன்கண்ட குறிகளோடு காணும். 3-4-நாளில் வியர்வை பிறக்கும். இவ்விதமாய்ச் சிலரில் 2-3-4-அல்லது 5- ஆவர்த்தி காண்பதும்

உண்டு. இதில், தூர்ப்பலம், காலிலும் பாதத்திலும் வீக்கம், கட்டிகள், கண் நோய்ஆகிய இவைகளும் சம்பந்தமாய் வருவதுண்டு. அவ்விதமாய் தொந்தப் பட்டால், சுரம்விட நாட்செல்லும். இந்த சுரம், ஆளைக்கொல்வது அரிது; ஆனல், மூர்ச்சையால் மரணம் சம்பவிக்கும். யகிர்த்கண்டமும், பிலீகமும், பருத்துவிடுவதும் உண்டு.

சிகிச்சை.—புனராவர்த்தக சுரத்தை சொல்பச் சிகிச்சையால் வசப்படுத் தலாம். முதல், தூர்மலத்தை நிக்க லகுவிரேனமும், பிறகு உஷ்ணம் தணிய சீத ஜலபானங்களும், பத்தியத்துக்கு கஞ்சியினங்களும் கொடுத்து, படுக்கையில் வைக்கவேண்டியது. நித்திராபங்க உபத்திரவத்தை அபினி தீர்த்துவிடும். ஒயின் சாராயமும், நல்ல ஊட்டமும் கொடுத்து தூர்பலத்தை நீக்கி, தலைவலிக்கு கழுத்துமேல் குடுவைப்பயிரிட்டு, காபிஜலம் தாராள மாய் குடிக்கச்செய்தால், அது நீக்கிவிடும். சுரத்தைத்தடுக்க, குவைனைக் கொடுப்பது வழக்கம்; ஆனல், அது அவ்வளவு குணத்தைச் செய்கிறதாய்க் காணப்படவில்லை. Treatment, the same as ague.

சீதசுரம்

இன்டர்மிடென்ட் பீவர்.—INTERMITTENT FEVER.—எகியு, Ague. Paludal or Periodic fever.

பிரதிபதங்கள்.—ஆஹிகசுரம், முறைக்காய்ச்சல், மாறல்காய்ச்சல், விடு ங்காய்ச்சல், நளிர்சுரம், குளிர்சுரம், குளிர்காய்ச்சல், கம்பசுரம்.

விஷக்காற்ருல் பிறந்து குளிரும், நடுக்கலும்கண்டு, பிறகு உஷ்ணம் பிறந்து, கொஞ்சநேரமிருந்து, வியர்வைகண்டு, சுரம்விட்டு மறுபடியும் காலக் கிரமமாய்வந்து போராடுகிற சுரத்துக்கு, சீதசுரமென்று பேர். சுரமில்லாத போது, சரீரம் சவுக்கியமாய் இருக்கும்.

சாதிகள்.—சீதசுரத்தில், 3-சாதிகளுண்டு; ஏகாஹிகசுரம்—திரியா ஹிகசுரம்—சாத்துர்த்திகசுரம்—ஆம். இவ்விடத்தில் ஏகாஹிகமும், சீமை யில் திரியாஹிகமும், இடைக்கிடைக்காணலாம். நாள்தோறும் காலக்கிரம மாய்வருகிற சுரத்துக்கு ஏகாஹிகசுரம், (தினசுரம், தினக்காய்ச்சல், பிரதி யாஹிகசுரம், அந்நியேத்தியு சுரம்—கொடிடியன் பீவர், Quotidian fever) என்றுபேர். அதெப்படியெனில், இன்று காலையில், 10-மணிக்கு சுரம் கண்டால், மறுபடியும் நாளைக்கு 10-மணிக்கேகா ணும்; இவ்விதமாய் பிரதிதினமும் 10-மணிக்கு வந்துகொண்டி ருக்கும். 24-மணி நேரத்துக்கொரு ஆவர்த்திவருகிற சுரம்—ஒன்று விட்டொருநாள் காணுகிறதற்கு, திரியாஹிகசுரம் (மூன்ரும் முறைக் காச்சல்). (திரிதீயகசுரம், டெர்ஷியன் பீவர், Tertian fever) என்று பேர். 48-மணிநேரத்துக்கொரு ஆவர்த்தி வருகிறசுரம்—இரண்டு நாள்விட்டு மூன்ரும்நாள் காணுகிறதற்கு, சாதுர்த்திகசுரம் (நாலமுறைக்காச்சல், நாலாம்நாள்மாறல், சாதுரியகசுரம்) (குவார்டன், Quartan fever) என்று பேர். 72-மணிநேரத்துக்கொரு ஆவர்த்திவருகிற சுரம். அன்றியும், ஒவ்வொருவரில், காலவித்தியாசமாய் சுரம் வருவதைக் காணலாம்; எப்படி யெனில்.—ஓர்தினத்துக்கு, 2-முறை சுரம் காணும். ஒரு தினத்துக்கு, 2-முறைகண்டு, மறுநாள் ஒருமுறை காணும். ஒருவேளை 5-6-7-8-9-10-தினத் துக்கொருமுறை, 1 மாஸத்துக்கொருமுறை, 1-வருஷத்துக்கொருமுறை காண்பதும் உண்டு; அவைகளுக்கு, எர்ராடிக் (Erratic) என்று பேர். மேற்

கண்ட, 3-முக்கிய சுரங்களுக்கு செய்கிற சிகிச்சையே, இவைகளுக்கும் செய்து, வசப்படுத்தவேண்டியது.

காரணங்கள்.—சரீரமுயற்சி, வழிநடப்பு, நித்திராபங்கம், மனோபீடை, அபக்குவபோஜனம், அதிகமதுபானம், ராத்திரியில் காற்றுகொள்ளும்படி திரிதல், முதல் விளைவித்தகாரணம் ஆகிய இவைகள் சுரத்துக்கு இடம்கொடுக்கிற காரணங்களாகின்றன. தழை, புல் முதலியவைகள் ஈரத்திலிருந்து அழுகி, ஓர்வித விஷக்காற்று ஜனித்து, இந்த சுரத்தை விளைவிக்கின்றது. அதற்கு, (மெலேரியா, Malaria, marsh miasma) என்றுபேர். சுரப்பிரதேசங்களில் இராக்காற்றுபட வெளியில்போய்ச் சஞ்சரிக்கலாகாது. அது எப்போதும் பூமியே கதியாயிருக்கும்; அது பவானதென்று இன்னமும் விபரமாய்த் தெரியவில்லை. அழுகலுற்ற பதார்த்தங்களிலிருந்து ஜனிக்கிறதென்று, சர்வஜன அபிப்பிராயம்.

லக்ஷணங்கள்.—இந்த சுரம் ஜடிதியிலாவது, அல்லது சர்வாங்கக்ஷீணத்துடன் மெதுவிலாவது காணும். சீதசுர ஆவேஸத்தில் (அவதாரம், அக்கிரமம், பெராக்ஸிஸம், Paroxysm, fit.) சீதம், உஷ்ணம், சுவேதம் என 3-சமயங்களுண்டு; (ஸ்டேஜெஸ், Stages) **சீதசமயலக்ஷணங்கள்.** (கோல்ட் ஸ்டேஜ், Cold stage.) இதில், முதல் ஆயாசம், நெட்டுயிர்ப்பு, கொட்டாவி, திமிர், ஈரக்குழியில் பிசைவதுபோலிருக்குதல், வாடினமுகம் ஆகிய இக்குணங்கள் கண்டு, பிறகு முதுகில் குளிர்ந்தஜலம் தாரையாய் இறங்குதல்போல் உணர்ச்சியுண்டாகி, பற்கள் விடவிடென்று அடித்துக்கொண்டு நடுக்கல்காணும்; தேகம் சுறசுறப்பு உண்டாகும்; கரசரணங்கள் உதறும்; சிரசு, முதுகு, இடுப்பு இவைகளில் வேதனையிருக்கும்; நகங்கள், நீலநிறமாகும்; மூத்திரம் அதிகரித்து தெளிவாய் இறங்கும்; நாடி சிறுத்து படபடவென்று நடக்கும்; சுவாஸம் தீவிரமாய் தடையுற்றிருக்கும்; இக்குணங்களோடு, தேகத்தைக் குலுக்கிக்குலுக்கி விட்டுவிடும். **உஷ்ணசமைய லக்ஷணங்கள்.** (ஹாட் ஸ்டேஜ், Hot stage).—மேற்படி குணங்கள் கொஞ்சநேரமாவது நெடுநேரமாவது இருந்து, பிறகு உஷ்ணம் குபீல் குபீலென்று இருந்திருந்து பிறந்து சர்வாங்கமும் வியாபித்து, சரீரம் உஷ்ணமாகி சிவக்கும்; போர்வையில் இஷ்டமிராது; முகம் மினிமினித்தும், கண்கள் சிவந்துமிருக்கும்; சிரசில் பளுவோடு அதிகவேதனையிருக்கும்; நாடி பெருத்து தீவிரமாய் நடக்கும்; தாகம் அதிகமாயிருக்கும்; மூத்திரம் சிவந்து கொஞ்சமாய் இறங்கும்; பித்தல் பிதற்றல் காணும்.—**சுவேத சமயலக்ஷணங்கள்.** (ஸ்வெட்டிங் ஸ்டேஜ், Sweating stage).—மேற்படி குணங்கள் கொஞ்சநேரமாவது, நெடுநேரமாவது இருந்து, பிறகு வியர்வைகாணும். முதல் முகத்திலும், கழுத்திலும் பிறந்து, பிறகு சர்வாங்கமும் வியர்க்கும். உஷ்ணம் நீங்கி, சரீரம் சுவாபீக ஸ்திதியில் வந்துவிடும். நாடி யதாப்பிரகாரம் மெதுவாய நடக்கும்; சுவாஸமும் மெதுவுற்று தாராளமாய் ஓடும்; மூத்திரத்தில் புளிப்பு காணும்; மறுபடியும் சுரம் காணுகிறவரையில், ரோகி சுவுக்கிய மடைந்திருப்பான். சுர ஆவேஸம் பிறந்ததுமுதல், மற்றொரு ஆவேஸம் வருகிறவரையில் செல்லுகிற காலத்துக்கு, மத்தியகாலம் (இன்டர்வல், Interval) என்றும் சுர ஆவேசம் நின்றதுமுதல், மற்றொரு ஆவேஸம் காணுகிறவரையில் செல்லுகிறகாலத்துக்கு, விடுதலைகாலம் (இடைநேரம் (இன்டர்மிஷன், Intermission) என்று பேர். தின சுரத்தில், காலையிலும், மூன்றாம்முறையில் மத்தியானத்திலும், நான்காமுறையில் சாயரக்ஷையிலும், சுர ஆவேஸம் காண்பது வழக்கம்.

Effects.—சீதசுரத்தில், பிலீகம் பெருத்து ஒவ்வொருவேளை திரடமாய்ப் போவதும் உண்டு, அதற்கு, காய்ச்சக்கட்டி (எகியூகேக், aguecake) என்று சொல்லுவார். குளிர்சமையத்தில், சருமத்தின் ரத்தம் முக்கியமாய் பிலீகத்துக்குப் போய், அதைப் பெரிதாக்குகிறதென்று அநேகருடைய அபிப்பிராயம்.

சிகிச்சை.—இதில், குளிர்ச்சிக்கு உஷ்ணமும், உஷ்ணத்துக்கு சுவேதமும் கொடுத்து, அந்த சமயங்களை சீக்கிரத்தில் போக்கடிப்பது நமது பிரதானமுயற்சி. குளிர்சமையத்தில், ரோகியைக் கம்பளியால் மூடி, கைகால்களைத் தேய்த்து, சூடுபிறக்கச் செய்யவேண்டியது. மணல், தவிடு, சாம்பல், உப்பு இவைகளில் ஒன்றை வறுத்து, ஒற்றிடம் கொடுக்கலாம்; சுடசுட காப்பி ஜலத்தையாவது, சாராயத்தில் ஜலம் விட்டாவது, மிளகுநீராவது கொடுக்கலாம். வெந்நீர் புட்டிகளையாவது, சுட்ட செங்கல்களையாவது, பாதங்களுக்கும், அக்குள்களுக்கும் வைத்தால், சூடு சீக்கிரத்தில் பிறக்கும். சீதசமையத்துக்குமுன் அபினி ஒருவேளைக்குக் கொடுப்பதிலும் பிரயோசனமுண்டு. சுரமிருக்கும்போது, குளிர்ந்தஜலம் கொடுத்து, வெந்நீரை சரீரத்தின்மேல் துவட்டினால், சூடு தணியும். சுரம் அடங்கி வியர்வை காணுகிற சமையத்தில், உஷ்ண ஜலபானம் செய்வித்தால், வியர்வை அதிக்கிரமிருக்கும். வியர்வை செவ்வையாய்க் கண்டபிறகு, அதைத் துடைத்துவிட்டு, ஈரத்துணிகளை நீக்கி, வேறுவஸ்திரங்களை அணியச்செய்து, பிறகு ரோகியை நித்திரைசெய்யும்படி விட்டுவிடவேண்டியது.

பிரதமையில், பேதிக்குக் கொடுத்து, வயிற்றிலிருக்கிற துர்மலத்தைப் போக்கி, பிறகு சுரஹாரிகளைக் கொடுத்து, சுரத்தை சாவதானப்படுத்தவேண்டியது. வாந்திக்குக் கொடுப்பதிலும் சுகுணமுண்டு. சுரம்விட்டிருக்கும்போது குவைனா, பார்க்பவுடர், பாஷாணம் இவைகளில் ஒன்றைக்கொடுக்கலாம்; சிலர் குவைனாவை 5-10-கிறேன் எடைக்கு, ஒரேதவணையாய் சுர ஆவேசம் வருவதற்கு முன்னாவது, அல்லது சிலர்-1-2-கிறேன் அளவுக்கு, சுரம் விடுதலையான காலத்தில், மணிக்கொருதரமாவது, கொடுப்பது வழக்கம். சுரம் நிஸேஷம், சவாதனமாகிறவரையில், இதை ஜாக்கிரதையாய்க் கொடுக்கவேண்டியது. க்ஷீணம் அதிகரித்திருக்கும்போது கொடுத்தால், அபாயம் சம்பவிக்கும். காய்ச்சக்கட்டி வந்திருந்தால், குவைனாவோடு அன்னபேதியைச் சேர்த்துக்கொடுத்தால், ஆஸ்வாசம் பிறக்கும். குவைனா, பார்க்கு இவைகள் அகப்படாதபோது மிளகு, வேப்பன்பட்டைத்தூள், நிலவேம்பு, விஷ்ணுக்கிராந்தி, வில்வவேர்பட்டை இவைகளிலொன்றைப் பக்குவப்படுத்திக்கொடுக்கலாம்; ரசபஸ்பமாவது, பூராமாவது, தேனில் இழைத்துக் கொடுத்தால், மலம் உதையும்; சுரமும் சாவதானப்படும். பாஷாணம் சேர்ந்த ஔஷதங்களை வெகுஜாக்கிரதையாய்க் கொடுக்கவேண்டியது, அது துஷ்டமருந்து. வாந்தியால் மருந்துமுதலியவைகள் வயிற்றில் தங்காத சமையத்தில், ஈரற்குழியில் கடுகு அரைத்துப்போடலாம். சுரவிஷவாயு வியாபிக்கிற பிரதேசங்களிலிருக்கிறவர்கள், குருத்வமுள்ள போஜனஞ்செய்து, உஷ்ணவஸ்திரம் தரித்து, சுகநித்திரையை மிதமாய் அனுசரித்துக்கொண்டுவந்தால், குவைனாமுதலிய மருந்துகளைப்பார்க்கிலும், அதிக நன்மைசெய்து, சுரம்வராமல் தடுக்கும். Remedies.—In cold gtaue, warm drinks, external warmth-In hot stage, cooling drinks, tepid or cold water sponging of the body—In sweating stage, tepid .drinks—During the intermission purgatives, quinine, arsenic.

சந்ததசுரம்

ரிமிடென்ட் பீவர். REMITTENT FEVER.

பிரதிபதங்கள்—தணிவுசுரம்.

இந்த சாதிசுரத்தில், உஷ்ணம் தணிகிறதும், அதிக்கிரமிக்கிரதுமாய் இருக்கிறபடியால், சந்ததசுரம் என்றுபேர் இடலாயிற்று. சீதசுரக்காரணங்களை இதையும் பிறப்பிக்கின்றன. சீதசுரலக்ஷணங்களை இதற்குமுண்டு ஆனால், சீதசுரத்தில், இடைநேரத்தில் சுத்தமாய் சுரமிராது; இதில் சுரம் தணிந்திருக்கும், நிஷேதமாய் விட்டுப்போகிறதில்லை. 6-12-14-மணி வரையில் தணிந்திருந்து, பிறகு குளிர்கண்டு சுரம் அதிக்கிரமிக்கும். உஷ்ண தேசங்களில் இது உக்கிரமாய்க்கண்டு, பிரஜைகளை வதைத்துக் கொல்லுகின்றது. இதனை மலைச்சுரம், ஆரண்ணியசுரம், மானந்தவாடிசுரம், நீலகிரிசுரம் என பலபேர்கள் இட்டழைப்பதும் உண்டு.

லக்ஷணங்கள்.—இதில் சாதாரணமாய் முதல் குளிர்கண்டு பிறகு சுரம் காணும்; சரீரம் அத்தியுஷ்ணமாயிருக்கும்; சிரோவேதனையும், மயக்கமும், பிரலாபமும் உண்டு; நாடிபெருத்து படபடத்து நடக்கும்; நாவுலர்ந்து மாவு படிந்திருக்கும்; குமட்டலோடு வாந்தியுமிருக்கும்; ஈரற்குழியில் நோவெடுக்கும், அழுத்தினால் அது அதிகப்படும்; சுவாசம் குமட்டல் காணும்; மார்பு அடைப்பதுபோலிருக்கும்; இருமலுமுண்டு; முகம் சிவந்திருக்கும்; மூத்திரம் சிவந்து கொஞ்சமாய் இறங்கும்; அதில் உப்புகள் அதிகமாய் இருக்கும்; ஆனால், சுரம் தணியும்போது விஸ்தாரமாய் இறங்கும்; இதில் சாதாரணமாய்க் காலையில் சுரம் தணிந்து, 10-12-மணிக்காலவரையிலிருந்து, பிறகு மாலையில் அதிக்கிரமித்து, ராத்திரியில் வெகுநேரம் வரையிலிருக்கும். ஒவ்வொருவேளை பேதி அனுசரிப்பதும் உண்டு. இதில் பித்தச்சேஷ்டையே மீறி, வாந்தியின் உபத்திரவமே அதிகமாயிருக்கும். இந்த சுரத்துக்குத் தகுதியான சிகிசசை செய்யாவிட்டால், 14-15-தினம்வரையில் போராடும். 4-5-வாரம்வரையில் சுரம் வளருவதுமுண்டு; முடிவில் திடீலென்று வியர்வைகண்டு சுரம் விட்டுவிடும்; அல்லது, உள்ளடங்கிக்ஷீணித்து காய்வதுமுண்டு. சுரம் விட்டபிறகு, சரீரம் வெகு சீக்கிரத்தில் தேறிவிடும்; ஒருவேளை உள் உறுப்புகளில் ஏதாவது வியாதிகண்டு சொந்தித்திருந்தால், கொஞ்சநாள் செல்லும்; அப்போது, இராவியர்வை, நித்திராபங்கம், அன்னத்துவேஷம், சரீரவேதனை, மஞ்சட்காமலை, நீர்க்கோர்வை இவை முதலிய துஷ்டகுணங்கள் விளைந்து க்ஷீணம் வர்த்திக்கும்; ஒருவேளை சிகிச்சைக்குட்படாமல் அசாத்தியப்படுவதும் உண்டு.

சிகிச்சை.—சீதசுரசிகிச்சையே இதற்கும் செய்யவேண்டியது. மலபந்தமிருந்தால், விரேசனத்துக்குக் கொடுத்து, பிறகு சுவேதகாரிகளால் வியர்வையை துவளையில் பிறக்கும்படி செய்யவேண்டியது. ஸோடாவாட்டர், வாந்தியை நிறுத்தும்; கஞ்சிஜலங்கள் தாகத்தை அடக்கும்; குமட்டல் மாத்திரமிருந்தால், ஒருலகு வமனத்துக்குக் கொடுக்கலாம். வெந்நீரை சரீரத்தின்மேல் தடவினால் சூடுதணியும்; சுரம் ஆஸ்வாஸமான உடன், குயைனு அல்லது, சுரஹாரிகளைக் கொடுத்துகொண்டுவந்து, சுரம் கண்டவுடனே நிறுத்திவிடவேண்டியது. பேதியையும், நித்திராபங்கததையும், அபினி கேழ்க்கும்; முலைப்பால் நெற்றிமேல் விட்டுக்கொண்டிருந்தால், தலைவலிசமனப்படும். கடுகை அரைத்து பிடரியின்மேல் போட்டால், உறக்கம்

நீங்கும்; அதிக துர்பலத்தை, பக்குவ போஜனத்தினாலும், உஷ்ணகாரிகளாலும், நீக்கவேண்டியது. பித்தவாந்தி அதிக்கிரமித்திருந்தால், கடுகை ஈரற்குழியில்போட்டு, குளிர்ந்த ஜலபானம் செய்யச்சொன்னால் வாந்தி நிற்கும். சிகிச்சைக்கு வசப்படாத சுரத்தை, ஸ்தலம்மாத்தல் செய்துவைத்து, கண்டிக்கவேண்டியது.

இந்த சுரத்துக்கு சுத்தலங்கணம் உதவாது; ரோகத்தின் குறிகளையறிந்து பத்தியம் சொல்லவேண்டியது. சிலர், சகலத்துக்கும் தோஷம் சொல்லி, ஜலம் சமேதம் பிணியாளனுக்குக் கொடுக்காமல், வீணில் வதைத்துக் கொல்லுகிறார்கள்.

நமது நாட்டுவைத்தியர், சுரரோகத்தை, நானாவித மாத்திரைகள், கஷாயங்கள், சிந்தூரங்கள், பஸ்மங்கள், சுரசங்கள், லேகியங்கள், நவலியங்கள், கலிக்கங்கள், வேதுகள் முதலியவைகளைக்கொண்டு வசப்படுத்துகிறார்கள். சுரமாத்திரைகளில் அநேகவிதமிருக்கின்றன. பாஷாணம், வீரம் இவைகள் சேர்ந்த மாத்திரைகளைத் தள்ளி,மற்றவைகளை உபயோகித்தால், சகலத்துக்கும் நன்மையுண்டு. ஒருமாத்திரை செய்கின்ற முறையைமாத்திரம் இதனடியில் காண்பிக்கிறேன்:—

சச்சுதானந்த பைரவி.—ரசம், கந்தகம், நாபி இவைகள் சமஎடை, சாதிக்காய் 3-பங்கு, மிளகு சமபாகம். இவைகளை இஞ்சிரசம்விட்டு 3-நாள் அரைத்து குன்றுமணி பரிமாணம் மாத்திரைகளாக்கி, ஒரு மாத்திரையை தேனில் இழைத்துக் கொடுக்கவும். சகல சுரங்களும் நிவிர்த்தியாகும் பத்தியமில்லை (மூலிகசங்கலிதம்.)

சுரக்கஷாயங்களில் அநேகம்; ஒவ்வொரு கஷாயத்தில் சேருகிற மருந்துகளும் அநேகம், நமது மனதுக்கேற்றபடி, 2-3-யுக்தமான மூலிகைகளைச் சேர்த்துக் கஷாயமிட்டு கொடுக்கலாம். கஷாயங்களை அதிக சூடுபடக்காய்ச்சி சுண்டவைப்பதில், மூலிகைகளின் சத்து கெட்டுப்போகும்; ஆகையால்; கொதிக்கிற வெந்நீரில்போட்டு ஊறவைத்து, வெந்நீர்க்கஷாயமாகச் செய்துகொண்டால் கெடாது, மிளகு. நிலவேம்பு முதலிய நல்லமருந்துகளைச் சுட்டு சாம்பலாக்கிவிடுவதில் என்ன பலன்? சுக்கு திப்பிலி, சீரகம், ஓமம், வசம்பு இப்பேர்ப்பட்ட திவ்விய ஔஷதங்களை மெத்தச்சுடவைத்து, நமது வீட்டுப்பெண்கள் கெடுத்துவிடுகிறார்கள். அடைக்கஷாயத்தில் பலம் இருப்பதும், இல்லாததும், புத்திமான்கள் அறிந்துகொள்ளவேண்டியது, நமது வழக்கங்கள் எப்படி மாறுபட்டு வருகின்றனவோ, அப்படியே புராதன வைத்தியமுறைகள் மாறி நூதனவழிக்கு வருமாகில், இங்கிலீஷ் மருந்துகளும், அவர்களுடைய உதவியும் நமக்கு மெத்த தேவையிராது. இதனடியில் சில சுரக்கஷாயங்கள் கூறப்படும்.

நிலவேம்பு, வேப்பன் ஈர்க்கு, விஷ்ணுக்கிராந்தி. வகை-1-இ பலம் $\frac{1}{2}$; மிளகு, சுக்கு, சீரகம் வகை-1-இ பலம் வ. இவைகளை சதைத்து, $\frac{1}{2}$-படி கொதிக்கக் காய்ந்த வெந்நீரில் போட்டு, 7-மணிநேரம் ஊறவைத்து, வடிக்கட்டிக்கொள்ளவேண்டியது. அதில் 4-ஆழாக்கு வீதம் சுரம் இல்லாத காலத்தில், 2-3-மணி நேரத்துக்கொருதடவைக் கொடுக்கலாம்.

தாகத்துக்குக் கஷாயம்.—நெல்லிவற்றல், அதிமதுரம், சந்தனம், கோரைக்கிழங்கு வகை 1-இ பலம்-$\frac{1}{4}$. இவைகளைச் சதைத்து $\frac{1}{2}$-படி வெந்

றில் போட்டு, 3-மணிநேரம் ஊறவைத்து வடிகட்டி, $\frac{1}{4}$-ஆழாக்கு வீதம் அடிக்கடி சொடுக்கலாம்.

சுரத்தில் காணுகிற பித்தவாந்திக்கு.—$\frac{1}{2}$-பலம் புதுப்புளியை, $\frac{1}{2}$-படி பாலில் போட்டுக்காச்சி வடிகட்டிக்கொடுத்தால், தாகமடங்கும்; வாந்தி நிற்கும்.

இஞ்சி, அரத்தை, துளசி, தும்பை, வெற்றிலை, நொச்சி, கஞ்சாங் கோரை, விஷ்ணுக்கிராந்தி இவைகளின் தனிக்சுரசத்தில் ஓமம், குங்கும ப்பூ, கோரோசனம், சுரமாத்திரை, இவைகளில் எதையாவது கலந்து கொடுத்தால், அற்ப சுரம் நீங்கிவிடும்.

இலுப்பைப்பிண்ணாக்கை முலைப்பாலில் நனைத்து நசியமிட்டால் தலைவலி நீங்கும். தும்பை இலை ரசத்தையும் நசியமிடலாம்.

சுரங்களில் கலிக்கமிட்டு அநேகருக்கு கண் குருடாய்விட்டதுண்டு. கலிக்கமிட விரும்புவோர்கள், துவரம்பருப்பை முலைப்பாலில் இழைத்துக் கண்களுக்குப் போடலாம். கிராம்பு, மிளகு சுக்கு, முதலிய காரமுள்ளவை களைப் போடலாகாது.

வெந்நீரில் செங்கல்லைச் சுட்டுப்போட்டாவது, நொச்சி,வேப்பிலைகளைப் போட்டுக்காச்சின தண்ணீரின் ஆவியையாவது, சாம்பிராணி, கர்ப்பூரம் இவைகளின் புகையையாவது, வேது பிடிக்கவைத்தால், வியர்வை பிறந்து சவுக்கியம் தரும்.

சில சண்டிசுரங்களுக்கு, அரக்குசந்தனாதி முதலிய தைலங்கள் தலைக் குத்தேய்த்து ஸ்நானம் செய்துவைத்தால்,நீங்கிப்போகும்.

ஸ்போடக சுரங்கள்

இரப்ட்டிவ் பீவர்ஸ்.—ERUPTIVE FEVERS.

பிரதிபதங்கள்.—மசூரிகை சுரங்கள், (கடலை) வசூரி, அல்லது வைசூரி சுரங்கள், அம்மை சுரங்கள்.

அம்மையில் முக்கியமாய் 5-சாதிகளிருக்கின்றன:—பெரியம்மை, கோமாரி, சின்னம்மை, தட்டம்மை, ரத்தம்மை ஆகிய இவைகளாம்.

இந்த சுரங்களுக்கு சில முக்கிய குறிகளுண்டு, அவைகளாவன:—அம்மைவிஷம் தேகத்தில் அனுசரித்து அம்மை காண சிலநாள் செல்லும்; அந்த காலத்துக்கு, அவயகாலம் (Period of incubation) என்று பேர்—சுரமானது, கொப்புளங்களோடு அனுசரித்திருக்கும், அந்த கொப்புளங்கள் கிரமமாய் விகாரப்படும் — பிராணமுள்ளவரையில் எவருக்கும் ஒரேதடவை காணும், மானிடஜனங்களெல்லோரும் இந்த வியாதிகளுக்கு உட்பட்டு இருக்கிறார்கள்—இவைகள் ஒட்டிக்கொள்ளுகிற ஒருவித காரணத்தால் பிறக்கின்றன.

(1.) பெரியம்மை.—மாரியம்மை-முத்தம்மை (ஸ்மால் பாக்ஸ், Small pox Variola).—அம்மை வியாதிகளை ஒருவித மாரியம்மனென்று நமது ஹிந்துக்கள் எண்ணியிருக்கிறார்கள். அந்ததேவிக்கு, பலி முதலிய பூஜைகள் நடப்பிப்பது சகலருக்கும் பிரசித்தமாய் தெரிந்திருக்கிறது. இந்தக்கொடிய

வியாதியால் அநேகர் மரணமடைகிறார்கள்; அநேகர் அந்தகராகிறார்கள்; அநேகர் மூடவராயும், குரூபிகளாயும், ஆகிறார்கள்.

கொள்ளைநோய்களில் பெரியம்மையைப்பார்க்கிலும் கெட்டது ஒன்று மில்லை; ஒருதடவைக்கண்டு தப்பித்துக்கொண்டால் மறுபடியும் அணுகாது. அம்மை குத்தாதவர்களுக்கு பெரியம்மை கண்டால், 3-ல்-1-ஆக நஷ்டப் படுத்திவிடுகின்றது. அம்மைகுத்தினபிறகு, பெரியம்மைக்காண்கிறதில்லை. சுருமேவலைகண்டால், மெத்தஉபத்திரவப்படுத்தாமல் சுலபமாய் இறங்கிவிடும் பெரியம்மையின்பாலை எடுத்துக்குத்தினால், சாந்தமான அம்மைகண்டு, முத்துகள் தேகமெங்கும் ஜனிக்கும், அது காற்றுமூலமாய், குத்தினவனிடத்திலிருந்து மற்றொருவனுக்குத் தொத்திக்கொண்டு ஊரெங்கும் பரவிவிடும். பெரியம்மையின் பாலை எடுத்துக்குத்துகிறவழக்கம் சீமையில் முன்னிருந்தது; மேற்படி துர்க்குணம் இருப்பதால், இப்போது அவ்வழக்கத்தை நிறுத்திவிட்டார்கள். அம்மைக்குத்தல் ஆரம்பமானபிறகு, பெரியம்மை அதிகமாய்க் காணுகிறதில்லை. சிலவிடங்களில், அம்மைக்குத்தல் ஆரம்பிக்காததற்கு முன் 1000-கணக்காய் இறந்ததுண்டு; இப்போது அவ்விடங்களில் பெரியம்மையால் பிராணசேதமாகிறவர்கள் மெத்தவும் குறையும்.

லக்ஷணங்கள்.—பெரியம்மையின் விஷம், ரத்தத்தில் தங்கி வியாதி பிறக்கின்றது. தேகத்தில் விஷம்பத்திய, 12-ம் நாள் சுரம் ஆரம்பிக்கும். முதல் முதல் ஆயாசம், தலைவலி, வாந்தி, முதுகுவலி இவை முதலியவைகள் கண்டு, பிறகு சுரம் பிறக்கும். சுரம் கண்ட 3-ம் நாள், சிவந்த ஸ்போடகங்கள் காணும். அவைகள் ஒருவாரத்துக்குள் தாபனம்கொண்டு சீழ்க்கொள்ளும். முதல், முகம், கழுத்து, மணிக்கட்டு இவைகளிலும், பிறகு உடம்பிலும், முடிவில் கால்களிலும் காணும். முத்துகள் அதிகமிருந்தால், வியாதி கடினமாயும், குறைந்திருந்தால், தணிந்துமிருக்கும் ஸ்போடகங்கள் குறைந்திருக்கும்போது, முத்துகள் செவ்வையாய் எழும்பி தூரதூரமாய் இருக்கும்; அதிகரித்திருந்தால், ஒன்றோடொன்று சேர்ந்து முத்துக்குடைய உருண்ட ரூபம் போய்விடும். ஆகையால் பிரத்தியேக முத்துக்களுடைய பெரியம்மை, சங்கமித்த முத்துகளுடைய பெரியம்மை, என இரண்டுவகைப்படும். முதல்கண்டதில் மெத்தக் கெடுதியிராது; இரண்டாவதில் ஏதாவது துர்க்குணம் சம்பவிக்கும்.

பிரத்தியேக முத்துக்களுடைய பெரியம்மை. வியுக்தஸ்போடகம்.—(டிஸ்டிங்ட் ஸ்மால்பாக்ஸ்.—Distinct small-box.) இதில், முதல் சிவந்த சிறிய தழும்புகளாய் (pimple) பிறக்கும். 3-ம் நாள், அவைகள் நீர்க்கொப்புளங்களாகும், (Vesicle, வெஸிகில்) ஒவ்வொரு கொப்புளத்தின்மேல் பள்ளம் விழுந்திருக்கும்; கொப்புளங்களில் தெளிவான நெய் இருக்கும்; கொப்புளத்தைச் சுற்றிலும் சிவந்த வட்டமொன்று காணப்படும் (எரிஓலா, Areola) முத்துகண்ட 5-ம்நாள் அல்லது, சுரம் பிறந்த 8-ம் நாள், முத்தின்நடுப்பள்ளம் மறைந்து, விம்மல்கொண்டு, உருண்டையாகி சீழ்கேற்றிருக்கும்; நோயாளிமேல் ஓர்விதவாசனை வீசும். அதனாலேயே அம்மையென்று தெரிந்து கொள்ளலாம். சுமார் 8-அல்லது 9-ம் நாள் பிரதி முத்தின்மேல் கறுத்த புள்ளி ஒன்றுகண்டு, உடைந்து, நெய்வடிந்து, உலர்ந்து முத்து பக்குகட்டிவிடும். சுமார் 10-நாளையில், பக்குகள் அநேகம் உதிர்ந்து சிவந்தவடுவாய் காணப்படும். முத்துக்கள் ஆழமாய் இரங்கியிருந்தால், ரூபம்கெட்டு அம்மைவடு மெத்தபள்ளமாய்தோற்றும். 8-நாள் வரையில் சுரம்இருக்கும். ஒவ்வொரு முத்தில் 5—6-அறைகள்உண்டு; அவைகளில் இருந்து அம்மைப்பால்சுரக்கும்.

சங்கமித்த முத்துகளுடைய பெரியம்மை. சம்யுக்தஸ்போடகம்.—கான்புளூஎன்ட் சுமால்பாக்ஸ். Confluent small-pox.—இந்த சாதிபெரியம்மை அதி உக்கிரகாத்தோடு பிறக்கின்றது; விஸ்போடகங்கள் சீக்கிரத்தில் காணும்; கண்ணிமைகள் வீங்கி, கண் திறக்கக்கூடாமையாய் இருக்கும்; அதிக எச்சில்வடியும்; குழந்தைகளுக்கு பேதிகாணுகிறதுமுண்டு; கைகால்வீங்கும்; முகத்தில் முத்துகள் ஒன்றோடொன்று சேர்ந்து குழம்பி, கறுத்த நீர் கொண்டிருக்கும்; பிறகு பக்கள் கறுத்து பெரிதாகிவிடும்; அதிக துர்வாசனை வீசும்; நாடி வேகமாய் நடக்கும்; அதிக துர்பலமுண்டு; அறட்டல் புறட்டல் காணும்; மூக்கு, வாய், குரல்வளை, சுவாசக்குழல், நாக்கு, அண்ணம் இவைகளிலும் முத்துக்கள் கண்டு இருக்கும்; தொண்டை புண்ணாய், எதையும் விழுங்கக்கூடாததாய் கம்மல்கொண்டிருக்கும்; கஷ்டசுவாசம், இருமலும் உண்டு; குரல்வளை அதிகமாய் வீங்கினால், மூச்சடைப்புகாணும்; பித்தல் பிதற்றல் அடிக்கடி காணுகிறதும் உண்டு. கெட்டகுணங்கள் கண்டு அதிக நாற்றமெடுத்துவிட்டால், அம்மை சீறிக்கொண்டதென்று சொல்லுவது வழக்கம். இதற்கு கோபாம்ஸபெரியம்மை. (மெலிக்னன்ட் சுமால் பாக்ஸ், Malignant Small-pox) என்று பெயர்.

மேற்குறித்த இரண்டுசாதி அம்மைகளுக்கு அதிகபேதம், பின்னிட்டு காணுகிற சுரத்திலிருக்கின்றது. (ஸெகன்டெரி பீவர், Secondary fever.) முதல்குறித்த சாதியில் சுரம் அற்பமாயும், இரண்டாவதில் அதிக கோபாமஸத்தோடும் இருக்கும். இந்த சுரம் வியாதிகண்ட, 11 - ம் நாள் அல்லது முத்துக்கள் வெளிக்கண்ட 8 - ம் நாள் பிறந்து, ஒருமிக்க ஆளைக்கொன்றுவிடும். இந்த சுரம் கண்டிருக்கிறபோது அநேக கெட்டவியாதிகள் காணும்; அரை, அக்குள் இவைகளில் கட்டிகள் எழும்புதல், இருமல்ரோகம் காணுதல், கண் கருவிழியில் ரணம்பிறக்குதல், காதில் சீழ்வடிதல் இவை முதலியவைகளாம். ஒட்டுவியாதிகளுள் பெரியம்மை நிச்சயமானது. ஒருமுறை கண்டால், மறுபடியும் வராமல்போவது ஒரு நிபந்தனை. அம்மை குத்தாதவர்களுக்குக் கண்டால், 3-ல் 1-மரணமடையும் பெரியம்மைபாலைக் குத்தினால் அம்மை தணிந்து காணும்; ஆனால் இப்போது அப்படிக் குத்தக்கூடாதென்று சட்டம் பிறந்திருக்கின்றது.

சிகிச்சை.—பெரியம்மையில் மருந்துகள் கொஞ்சமாய் பிரயோகிப்பதே நல்லது; இந்த வியாதி சிகிச்சைக்குள்பட்டு நிற்காது; முத்துகள் எழும்ப ஒட்டாமல் தடுக்கிறமருந்துகளும் இல்லை. ஆரம்பத்தில், நோயாளியை படுக்கையில் வைத்து, யாதொரு உபத்திரவமில்லாமலும், படுக்கை அறையில் தாராளமாய் காற்று பரவும்படியாயும் செய்யவேண்டியது. பத்தியத்துக்கு அரொரூட்முதலிய லகு அசனமாகிய கஞ்சிகளும், பழங்களும், எலுமிச்சப்பழசர்பத், பார்லித் தண்ணீர், அல்லது வெறும் ஜலம் இவைகளைத் தாராளமாய்க் கொடுக்கலாம். கஞ்சித்தண்ணீரில் பழரசமும், சருக்கரையும் சேர்த்துக்கொடுத்தால் இனிப்பாய் இருக்கும். தேகம் மெத்த சூடாயிருந்தால் வெந்நீராவது, பாலும் ஜலமும் கலந்தாவது, மேல்தடவினால், இதவாயிருக்கும்; கஞ்சித்தண்ணீரில் பொட்டிடுலுப்பு கலந்து, சருக்கரை, புளி அல்லது பழரசம் சேர்த்துக் கொடுத்தால், சூடு தணியும். ஒருவேளை மலபந்தமிருந்தால், லேசான பேதிக்குக் கொடுக்கலாம் சீமை இந்துப்பு, ரேவல்சின்னிக் கிழங்கு, சிற்றாமணக்கெண்ணெய் முதலியவைகள் தகுதியானவைகள், நித்திரையில்லாமல் மெத்த தொந்தரவு நேரிட்டால், அபினி அல்லது குரோசானி ஓமத்தை இராத்திரியில் கொடுத்தால் அயர்ந்த நித்திரை வரும்.

முத்துகளில் நெய்கோர்க்க தாமஸப்பட்டால் சூப்பு, ஒயின் சாராயமுதலிய நல்ல ஊட்டம் கொடுத்தால், சீக்கிரத்தில் முத்துகள் பழுக்கும் ; கர்ப்பூரம் கொடுத்தால், முத்துகள் ஜலுதியில் வெளிப்படும் ; பின்னிட்டுக்காணுகிற சுரத்துக்கு லகுவிரேசனங்கள், சீதனகாரிகள் இவை முதலியவைகளைக் கொடுக்கவேண்டியது ; நித்திரைவர ஒளஷதம் கொடுக்கவேண்டியதாயுமி ருக்கும் ; சீக்கிரத்தில் ஜீரணமாகிற பதார்த்தங்கள் சூப்பு, பால், முட்டை இவை முதலிய நல்ல ஊட்டம் கொடுத்து, தேகத்தைக் காப்பாற்றவேண்டி யது அம்மை இறக்கத்தில் பலவீனமும், பித்தல் பிதற்றலும் இருந்தால், கர்ப்பூரம், கஸ்தூரி அல்லது பெருங்காயம், வகை 1-று 1½-குன்றிமணி எடை, மாத்திரைசெய்து 3-நாழிகைக்கு ஒருதடவைக் கொடுத்துக்கொண் டுவந்தால் நலந்தரும். முதுகிலும், பிட்டத்திலும், (சகனம்) ரணம் காணா மல் சூக்ஷிக்கவேண்டியது. அழிரணங்கள் உண்டானால், மெத்த சாராய மும், நல்ல ஊட்டமும் கொடுத்து பலம்வரும்படிச் செய்தால், அவைகள் ஸொஸ்தமாகும். அதிக தினவெடுத்தால், வெண்ணெயாவது அல்லது தேங்காய் எண்ணெயும் சுண்ணாம்பு தண்ணீரும் கலந்து, முத்துக்கள்மேல் தடவினால், நமைச்சல் அடங்கும். முத்துகள் உடைந்தபிறகு, அரிசிமா வைத் தெளித்தால் நெய்யை வறட்டிவிடும் ; பள்ளங்கள் விழாமல் செய்தா லும் செய்யும். ஸ்நானம் செய்துவைத்தபிறகு, துர்ப்பலம் மேலிட்டிருந்தால் நிலவேம்பு, வேப்பம்பட்டை, மரமஞ்கள் முதலிய பலம்வருகிற மருந்துகள் கொடுக்கவேண்டியது

நமது ஜனங்களுள், அம்மை கண்டு மெத்த வருத்தம் நேரிட்டால், மேற்கண்ட உபசரணைகள் செய்கிறவழக்கம் இல்லை; கூழ்வார்க்கிறதும், கும்பம்போடுகிறதும், அம்மனை வர்ணிக்கிறதும், இவ்விதமான முயற்சிகளால் நோயாளிக்கு உச்சாகம் எற்றி, வியாதியை வசப்படுத்துகிறார்கள். வேப்பிலை அரைத்து, ரணங்களுக்குத் தடவுகிற வழக்கமும் நல்லது, சீக்கிரத்தில்ரணங்கள் உலரும்; அதனால்உலராவிட்டால், வெண்ணெய்ப்பிளாஸ்திரி போடலாம். அம்மை இறங்கினபிறகு, நோயாளியை வீட்டுக்கு வீடு அழைத்துக்கொண்டுபோய், பிச்சை எடுத்து அம்மனுக்கு கூழ்வார்க்கிற வழக்கம் அநேக சிறிய கிராமங்களில் உண்டு; அப்படிச்செய்வதில் வியாதி அநேகருக்குத் தொற்றிக்கொள்ளுகிறது. இந்த புராதன வழக்கம் எப்போது நிவர்த்தியாகுமோ தெரியாது.

2. கோமசூரிகை

கோடாரி அம்மை—கோவைசூரி (வாக்ஸினியா, Vaccinia, கௌபாக்ஸ், Cow-pox.) பசுக்களுக்குக் காணுகிற அம்மைக்குக் கோமாரிஅம்மையென்றுபேர். இதற்கும், பெரியம்மைக்கும், பேதமில்லை. பசுவின் மடியில் அம்மை கண்டிருக்கிறபோது, பால் கறக்கிறவர்களுக்கு அந்த முத்தின்பால் கையில் ஒட்டிக்கொண்டு, முத்துக்கள் எழும்பி, உபத்திரவப்படுத்தாமல் உலர்ந்துவிடும் இவ்விதமாய்க் கண்டால் அவர்களுக்கு பெரியம்மை வாராதென்று, ஒருஊரில் சகலரும் சொல்லிக்கொண்டு இருந்ததை (Dr. Jenner) என்கிற ஒரு இங்கிலீஷ்வைத்தியர் கேழ்விப்பட்டு, பசுக்களுக்குக் காணுகிற அம்மையின்பாலை எடுத்து மனிதருக்குக் குத்திவைத்து, பரீக்ஷைசெய்து, ஜனவதந்தி நிச்சயமென்று அவருக்கு ஸ்திரப்பட்டது. பிறகு அந்தவிஷயத்தைச் சகலருக்கும் தெரிவித்து, எல்லோரையும் அம்மை குத்திக்கொள்ள முயற்சிசெய்ததில், அநேகர் ஆஷேபித்தார்கள், அநேகர் அவரை தூஷித்

தார்கள், அநேகர் அவருக்கு விரோதமாய் பத்திரிகைகள் எழுதினார்கள். இப்போது நமது தேசத்தில் துரைத்தனத்தார் உபகாரார்த்தமாய் வெகு பணவ் விரயனஞ்செய்தும், அம்மை குத்திக்கொள்ளவிருப்பமில்லாமல்ஜனங்கள் எவ்வளவு முறையிட்டு, தூஷித்து, பயந்து, கவலைகொண்டிருக்கிறார்களோ, அதில் எண்மணங்கு அதிகமாய் அப்போதிருந்தும், ஜென்னர் என்பவர், சலிக்காமலும், தன் முயற்சியைத் தளரவிடாமலும், தீரத்துடன் 23 வருஷம் உழைத்து முடிவில், தன்காரியத்தை வெற்றிகொண்டு, சகலரும் அங்கீகரிக்கும்படிச் செய்துவைத்தார், சீமையில் குழந்தைபிறந்து 4-மாதத்துக்குள் அம்மை குத்திவைக்க வேண்டியதென்று, இப்போது ராஜாங்கநிபந்தனை ஒன்று பிறந்திருக்கிறது. முதல் கனவான்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு அம்மை இடுவாராகில், ஏழை பரதேசிகள் வெகு சுலபத்தில் உட்படுவார்கள். இந்த நன்மையான செய்கைக்கு புருஷாள் ஒருவிதமாய் உள்பட்டபோதிலும், ஸ்திரீகள், சம்மதிப்பது வெகுகடினம். இனிமேல் வரவர இந்தப் பிடிவாதம் நீங்கிவிடுவதற்கு யாதொரு சந்தேகமில்லை.

கோமாரி அம்மையிட்டால், கொடிய நோயாகிய பெரியம்மை வராது. அதற்குத் திருஷ்டாந்தம்.—கோமாரி அம்மை குத்தியிருக்கிறபோது, பெரியம்மையின்பாலை எடுத்துக் குத்தினால், முத்துகள் எழும்பாது கோமாரி அம்மை இட்டுச் செவ்வையாய் முத்துகள் எழும்பாவிட்டால், பெரியம்மை ஒருவேளை கண்டாலும் காணும்; அப்படிக் கண்டபோதிலும் உபத்திரவம் செய்யாமல் சுலபமாய் இறங்கிவிடும். அம்மை இட ஆரம்பித்தபிறகு, பெரியம்மைபால் மரணமடைகிறவர்களும், குரூபியாகிறவர்களும் மெத்தகொஞ்சம். பெரியம்மை கண்டால், அந்த அம்மை மருபடியும் வராமல் யிருக்க தேகம் எப்படி விகற்பமாகிவிடுகின்றதோ, அவ்விதமாய் கோமாரி அம்மையின்பா லிட்டபிறகு, பெரியம்மைக்கு, தேகம் இடங்கொடுக்கிறதில்லை

அம்மை வைக்கப்போகிற குழந்தை யாதொரு வியாதியில்லாமல் சவுக்கியஸ்திதியில் இருந்தால், முத்துகள் செவ்வையாய் எழும்பும். பல் முளைக்கிறகாலத்திலும், உடம்பில் சிரங்கு கண்டிருக்கிறபோதும், அம்மை இடலாகாது. புஜத்தை இடதுகையால், தோல் பிகியும்படி சற்றே இறுகப்பிடித்து, கொஞ்சம் உள்பக்கமாய், அம்மை இடுகிற கத்திமுனையில் அம்மையின்பாலைத் தொட்டுக்கொண்டு, 2-அல்லது 3-ஸ்தானங்களில் மேலாகக்குத்திப்பாலை பதியவைக்கவேண்டியது. ஒவ்வொரு காயம், $\frac{1}{2}$—$\frac{3}{4}$-அங்குலம் தூரத்தில் ஒற்றியிருக்கவேண்டியது. கத்திமுனையைச் சாய்ப்பாய் வைத்து, உட்தோலில் பால்போய் இறங்கும்படி செய்யவேண்டியது. ரத்தம் அதிகமாய் வடியும்படி காயத்தை யுண்டாக்கலாகாது: அதிக ரத்தம் வந்தால், அம்மைப்பால் வெளிபட்டுவிடும். 2-ம் நாள, அம்மை பாலிட்ட இடம், மேடாய் விரலுக்குத் தட்டுபடும்; கொஞ்சம் சிவந்திருக்கும். 5-ம் நாள் நீர்க கொப்புளம் காணும்; அந்த கொப்புளம், மத்தியில் பள்ளமாயும், சுற்றிலும் மேடாயும் இருக்கும். 8-ம் நாளில் கொப்புளம் முத்துநிறமாகி, தெளிவான லிம்ப் (Lymph) என்னும் பால் கோர்த்துக்கொண்டிருக்கும். ஒவ்வொரு முத்தில், அநேக அறைகள் உண்டு. முத்தைச் சுற்றிலும், தோல் சிவந்து வட்டமாய்க் காணப்படும்; அது இரண்டுநாள்வரையில் விருத்தியாகி, சுமார் 11-ம் நாள் மறைந்துவிடும். முத்து உடைந்து, கருத்து மெதுவில் சுருங்கி, இரண்டாங்கிழமைக்கடைசியில் சிரங்கு பக்குவாகி, அது சுமார், 1-ம் நாள் உதிர்ந்துவிடும். முத்தின்வடுவில், பள்ளங்களும், கீற்றுகளும் அகப்

படும்; அந்த வடு பிராணனுள்ளவரையில் மறையாது. ஒருதரம் இடுகிற அம்மை 10-வருஷம்வரையில் தேகத்தை ஆதரிக்கும்; ஆனால் அதற்குமேலிட்டு ஆதரிப்பதும் உண்டு; ஆனால் எழுச்கும் கொஞ்சநாள்பிறகு, மறுபடியும் அம்மை வைத்துக்கொள்ளுகிறதே (புனர் கோவைசூரிப்பிரயோகம் Revaccination) நல்லது. அம்மைகுத்தினபிறகு, பெரியம்மைக் காண்பதும் உண்டு; ஆனால்,அது சாந்த லக்ஷணங்களோடிருந்து சீக்கிரத்தில் இறங்கிவிடும். அதில் புனர்ச்சுரம் காணாது. அதனைச் சவும்யஸ்போடகம் (வேரியோலாயிட், Varioloid, அல்லதுமாடிபைட் சுமால்பாக்ஸ், Modified Small pox) என்று சொல்லப்படும்.

5-முதல், 9-நாட்குள் முத்திலிருந்து பாலை எடுத்து வேறொருவருக்கு வைக்கலாம், ஆனால் 8-வது நாளின்பால் மெத்தவும் சிரேஷ்டம். இந்த அம்மையில் சுரம் மெத்த இராது. அம்மை முத்துகள் நசுங்காமலிருக்க முயற்சி செய்வதே இதற்குப் பிரதானச் சிகிச்சையாகின்றது.

3. சின்னம்மை.

கொத்துமல்லி அம்மை. சிச்சிலுப்பை. பயிரி. (சிக்கின்பார்ச்ஸ், Chicken-pox)—இது மெத்த அல்பரோகம்; சாதாரணமாய்க் கைக்குழந்தைகளுக்கும், பிள்ளைகளுக்கும் காணுகின்றது. இந்த அம்மை கண்ட 6-அல்லது 8-நாளைக்குள் இறங்கிவிடும். முதல் பொரிப்பொரியாயிருக்கும்; 2-ம் நாள் வேர்க்குருமாதிரியாகி நீர்க்கொப்புளங்களாகும்; சுற்றிலும் சற்றே சிவசிவென்று இருக்கும்; தோள்களிலும், முதுகிலும் கண்டு, பிறகு உச்சிக்கேறும்; ஆனால், முகத்தில் மாத்திரம் அதிகமாய்க் காணுகிறதில்லை. 4-வது நாளில் முத்துகள் சிறிய பக்குகளாய் ஏற்பட்டு, சீக்கிரத்தில் உதிர்ந்துவிடும்; தேகம் மெத்த அசவுக்கியப்படாது; இதில் காணுகிற சுரமும் வெகு அல்பமானது. இந்த அம்மை ஒருவருக்கு ஒரேதடவை காணும்; இதற்கு தொத்திக்கொள்ளுகிற குணமுண்டு. மலக்கிரமம், இச்சாபத்தியம் இவைகளை அனுசரிப்பது தவிர, இதற்கு விசேஷ சிகிச்சை யாதொன்றும் தேவையிராது.

4. தட்டம்மை.

விளையாட்டம்மை. பனையேரி. ராமக்கம். (மீஸெல்ஸ், Measels.)—இந்த அம்மை சாந்தமாயாவது, சிலருக்கு உக்கிரமாயாவது காணுகின்றது. முதல் இருமல்கண்டு சுரம் காணும்; சுவாஸ உறுப்புகள், அம்மையோடு தொடர்ச்சியாயாவது, அல்லது அம்மை இறங்கினபிறகாவது, ரணமாகிவிடுவதுண்டு.

லக்ஷணங்கள்.—தட்டம்மையில் முதல்முதல் காணுகிற குறிகளாவன.—உடம்பு நறுக்கி துவைத்ததுபோல் இருக்கும்; நடுக்கலோடு சுரம் காணும், இருமலும் தொடரும்; கண், மூக்கு, தொண்டை, குரல்வளை, சுவாசக்குழல் இவைகளெல்லாம் மெத்தவும் வியாதிகொள்ளும் கண்ணிமைகள் வீங்கிவிடும்; கண்கள் சிவந்து, நீர் வடியும்; வெளிச்சத்தைப்பார்க்ககூடாமையாய் இருக்கும்; தும்பல் காணும்; வறட்டிருமலும் உண்டு; தொண்டை கம்மலோடு, சுவாசம்விட மெத்தக் கஷ்டமாய் இருக்கும்; உறக்கம் காணும்; தேகம் அதிக சூடாயிருக்கும்; நாடி படபடத்து நடக்கும், விரல்களுக்கு அழுந்தாது. 10 - 15 - நாள்வரையில், உள்ளாகே அடங்கியிருந்து பிறகு வியாதி வெளிப்பட்டு, 4 - ம் நாள் அம்மைகாணும். 4 - நாளைக்கு உட்படு

கிறது அரிது, ஆனால், மேல்படுகிறதுண்டு. இந்த அம்மை கொசுக்கடிபோல் வட்டப்புள்ளிகளாய் இருக்கும்; அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து படைப்போல் ஏற்படும், கம்பளிப்பூச்சிப்பழநிறமாய் இருக்கும். சிலவேளைபிறைபோல் வளைந்த தழும்பாய் எழும்பி இருக்கும்; புடைகள் முதல் நெற்றியிலும், முகத்திலும் பிறந்து, பிறகு படிப்படியாய் மற்றவிடங்களில் காணும்; கண்டப்பிரகாரமே 7-ம் நாள் மறைந்துவிடும். அம்மை இறங்கிவிட்டபிறகு, கொஞ்சம் தோல் உரியும்; நமைச்சலும் உண்டு. இந்த அம்மை பார்வைக்கு சொல்பமாய் இருந்தபோதிலும், மெத்த அபாயமானது. வியாதி இருமலோடு தொந்தப்பட்டால், கெட்டகுணமென்று யோசிக்கவேண்டியது. சுவாசக்குழல், நுரையீரல் இவைகளில் வியாதி சம்பவித்து சிறுவர்கள் இறந்துவிடுவார்கள். அம்மை இறக்கத்தில் அதிசாரபேதி காணும், அதனால் துர்க்குணம் நேரிடாது.

சிகிச்சை.—இந்த அம்மைக்கு மருந்துகள் மெத்த ஏற்றலாகாது. குளிர்காற்று தேகத்தில் படாமல் தடுக்கவேண்டியது, கொஞ்சம் உஷ்ணமாய் இருக்கிற ஒரு அறைவீட்டில் நோயாளியை வைத்து, படுக்கைவிட்டு அசையாமல் செய்யவேண்டியது. பிரதிதினம் சாயரக்ஷையில், பாதங்களை வெந்நீரில் வைத்துக்கொண்டுவந்தால், மெத்த நலந்தரும். பத்தியத்துக்கு காரமானவகைளும், மாமிசவகைகளும் சேர்க்காமல் அரரூட், நொய், நெல்பொரி முதலிய கஞ்சிகளில், பால்விட்டுக் கொடுக்கவேண்டியது. சுரம் அதிகமாய் இருந்தால், வியர்வை பிறப்பிக்கிற மருந்துகளைக் கொடுத்து, சுரத்தை நிறுத்தவேண்டியது. இதில் வழக்கமாய்க் காணுகிற பேதியில்லாமல் மலபந்தம் தொடர்ந்திருந்தால் சீமை இந்துப்பு, ரேவல் சின்னி முதலிய சாந்தமான பேதிமருந்துகளைக் கொடுத்து, மலத்தைக் கழித்துவிடவேண்டியது. பொட்டிலுப்பைக் கஞ்சித்தண்ணீரில் கலந்து அடிக்கடி கொடுத்துக்கொண்டுவந்தால் வியர்வை பிறக்கும்; கஷாயங்கள் கொடுத்தும், வியர்வையைப் பிறப்பிக்கலாம். நுரையீரலில் வியாதி கண்டால, வாந்தி உப்பு முதலிய மருந்துகளைக்கொடுத்து குமட்டலுண்டாகும்படிச் செய்து, மார்புக்கு வெந்நீர் ஒற்றிடமாவது, வெற்றிலைமேல் எண்ணெய்தடவி அனல்காட்டி சுடசுடவாவது போடலாம், குரல் கம்மல், இருமல், தொண்டைரணம் இவைகளுக்கு பார்லி தண்ணீர், கஞ்சித்தண்ணீர், வெண்டைவிரைப்போட்டுக் காச்சின தண்ணீர், விளாம்பிசினி கரைத்த ஜலம் இவை முதலிய குழகுழப்பான ஜலங்களில் ஏதாவது கொடுத்துத் தணிக்கவேண்டியது; எலுமிச்சம்பழரசம் விட்டால், இனிப்பாய் இருக்கும். வெந்நீர் ஆவியை உறியும்படிச் செய்தால், சுகுணமுண்டு. ராத்திரிகளில் டோவர்ஸ் பவுடர் (Dover's powder) என்னும் சூரணமாவது, குரோசானி ஓமக்கஷாயமாவது கொடுத்துக்கொண்டுவந்தால், நித்திரை வரும். அதிசாரபேதி கண்டால், கட்டுவாதிமாத்திரை, மாசக்காய், சாசுக்கட்டி முதலிய துவர்ப்பு மருந்துகளைக்கொடுத்து, பேதியை மெதுவில் சொஸ்தப்படுத்தவேண்டியது. வியாதி சவுக்கியப்பட்டபிறகும், நோயாளியை சிலநாள் வீட்டுக்குள்தானே வைத்திருக்கவேண்டியது.

5. ரத்தமசூரிகை

(ஸ்கார்லெட் பீவர், Scarlet fever. ஸ்கார்லெடைனா, Scarlatina).—சுரத்தோடுகாணுகிற இந்த சாங்கிராமிக ரோகத்தில், சருமமும், தொண்டையும், ரத்தம்போல் சிவந்திருக்கும்; சுரம் கண்ட 2-ம் நாளில் சிவப்புகண்டு

சுமார், 5 - ம் நாளில் தணிந்துவிடும். ஒவ்வொருவேளை தொண்டையும், தாடையுட்கோளமும் தாபனம்கொள்ளும். தட்டம்மையைப்போல் இதுவும் குழந்தைகளுக்கே காணும், ஆனால், மெத்ததுஷ்டவியாதி. பிராணனுள்ளவரையில், ஒருத்தருக்கு ஒரேமுறைகாணும், ஆனால் மறுபடியும் கண்டால், சிவந்த புடையும், தொண்டைரணமும் காணாமல், சுலபத்தில் இறங்கிவிடும். இந்த அம்மை இறங்கின உடனே தோல் உரியும், மூத்திரகுண்டிக்காயின் வியாதிகாண்பது உண்டு; சிலருக்கு நீரேத்தம் காண்பதும் வழக்கம். இதில் 3 - சாதிகளுண்டு.—(1) கேவலரத்தமசூரிகை. இதில் சருமமாத்திரம் வியாதிகொள்ளும் (ஸ்கார்லெடைனா ஸிம்பிளெக்ஸ், Scarlatina Simplex)—(2) கண்டரோக தொந்தரத்தமசூரிகை. இதில் சருமத்தோடு தொண்டரணமும் தொந்தப்பட்டிருக்கும் (ஸ்கார்லெடைனா ஆஞ்சினோஸா, Scarlatina Anginosa)—(3) அத்தியுக்கிர ரத்தமசூரிகை. இதில் தொண்டையில் அழிரணம்கண்டு, ரோகம், அதிககோபம்கொண்டிருக்கும். (ஸ்கார்லெடைனா மெலிக்னா, Scarlatina Maligna.) இந்த அம்மையானது, குழந்தையின் சரீரசௌக்கியத்தைக் கெடுத்து, நீர்க்கோவை, துஷ்டரணங்கள், கண்ணோய், கழுத்தில் கட்டிகள், கரப்பான், சீழ்க்காது, கீல்வாதம் முதலிய அசாத்திய வியாதிகளைப் பிறப்பிப்பது வழக்கம்.

சிகிச்சை.—இந்த ரோகத்தின் அற்பசாதிக்கு, ரோகியை படுத்தப் படுக்கையில்வைத்து, கம்பளி ஆடைகள் தரிக்கச்செய்து இச்சாபத்தியமாய் வைத்து, மலக்கிரமத்தை யனுசரிப்பதைவிட விஸேஷமாய் சிகிச்சையொன்றும் ஆவஸியமாகாது. மற்ற இரண்டு சாதிகளுக்கு, ரோகியின் நிலைமையயறிந்து சிகிச்சை செய்யவேண்டியது. க்ஷீணம் அதிக்கிரமித்திருந்தால், நல்ல ஊட்டம் கொடுத்து பிராந்தி, ஒயின், பலகாரி முதலிய மருந்துகள் கொடுத்து பிராணனை ரக்ஷிக்கவேண்டியது. சரீரத்தில் நீர்க்கொண்டிருந்தால், ஜலவிரேசனிகளைக் கொடுத்து, உடனே அயம், மீன்நெய் முதலியவைகளைப் பிரயோகித்து, அந்த துர்நீரை மாற்றவேண்டியது.

3-ம் அத்தியாயம்

நரம்புமண்டல ரோகங்கள்

டிஸீஸெஸ் ஆவ் ஸ்தி நர்வஸ்ஸிஸடம், DISEASES OF THE NERVOUS SYSTEM.

1. மூளைதாபனரோகம்

இன்பிளமேஷன் ஆவ் தி பிரேயின், INFLAMMATION OF THE BRAIN.

மூளைதாபனத்துக்கும் அதின் சவ்வுகளின் தாபனத்துக்கும் இருக்கிற பேதத்தைக் கண்டுகொள்வது பிரயாசை; ஆனால் தனிப்பட காண்பது குறைவும். இதில் உக்கிரம், சாவதானம் என இரண்டு சாதிகளுண்டு.

1. உக்கிர மூளைதாபனரோகம்

(Acute Inflammation of the Brain.) மூளைக்கும், மூளையின் ஜவ்வுகளுக்கும் காணுகிற தாபனத்தின் (என்கிபலைடிஸ், Encephalitis.) லக்ஷணங்கள்.—சுரம், குமட்டல், வாந்தி, சிரசில் அதிகவேதனை, தீவ்விர அக்கிரமநாடி, மலபந்தம், வெளிச்சத்துக்கும் சப்தத்துக்கும் சகிக்ககூடாமை, நித்திராபங்கம், குரூரதிஷ்டி, சிவந்தநேத்திரங்கள், கலவரம் அல்லது விகாரம் ஆகிய இவைகள் முக்கியமாய் பிரதமையில் காணப்படும். 12-மணிநேரம் முதல், 2-தினத்துக்குள் வியாதிக்குடைய இரண்டாம் பாதக்குறி வெளிப்படும்—அதாவது தளர்ச்சி; அதில் ரோகிக்கு மயக்கம் காணும், வார்த்தை சொல்வது பிரயாசை, அல்லது ஸ்பஷ்டமில்லாமலிருக்கும்; பார்வைக்கும், கேழ்விக்கும் மந்ததையுண்டாகும்; முதல் மெத்த சிறுத்திருந்த கண்தாரையானது, இப்போது விரிந்துவிடும்; ஓரானைக்கண்ணும், கண்ரெப்பைகளின் அசைவைற்றுப்போகுதலும் உண்டு; கொறக்கைவலியும் காணும்; பிரேதமுகமாகிவிடும்; ஈறுகளிலும், பற்களிலும் ஊற்றை அடைந்திருக்கும்; சரீரம் வாழைத்தண்டுபோல் சில்லிட்டு வியர்வையால் மூழ்கியிருக்கும்; மலஜலங்கள் தானாய் வெளிப்படும்; காசரணங்களில் இசிவு நின்று நின்று கண்டு, கைகால் ஸ்தம்பித்து, போதக்ஷயம் கண்டு, மரணம் சம்பவிக்கும். குமட்டலும் வாந்தியும் முதல்கண்டால், தாபனம் மூளையிலிருந்து ஆரம்பமென்றும் இசிவு முதல்கண்டால், ஜவ்வுகளிலிருந்து ஆரம்பமென்றும் நாம் தெரிந்துகொள்ளவேண்டியதென்று, ஒரு பிரபல வைத்தியர் கண்டியிருக்கிறார். இந்த ரோகம் மெத்த அபாயமானது; ஆனால், காண்பது அபூர்வம். இதில் மரணம் வெகுசீக்கிரத்திலாவது, அல்லது. 2-3-வாரம் சென்றாவது சம்பவிக்கும்.

காரணங்கள்.—ஒவ்வொருவேளை இந்த ரோகத்தின் காரணங்களைக் கண்டுகொள்ளுவது பிரயாசை, யாதொரு காரணமின்றி காணும். விடாகாச்சல், தட்டம்மை இவைகளில் ஒருவேளை காண்பதும் உண்டு. காயம், அடிபடுதல், காதெலும்புகளின் வியாதி இவை முதலியவைகளாலும் மூளைக்குத் தாபனம் காணும்.

சிகிச்சை.—இந்த கொடிய ரோகத்தை, ரத்தமெடுத்து, சுத்தலங்கணமாய் வைத்து, வாந்தி உப்பு, உபத்திரவபேதிகள், ரஸம் இவைகள் உள்ளுக்குக்கொடுத்து, கழுத்துக்குப் பிளிஷ்டர்செய்து கால்களை வெந்நீர்த் தொட்டியில் வைத்து, சிரோரோமங்களை நீக்கி, ஈரத்துணியைப் போட்டுவைத்து வசப்படுத்தவேண்டியதென்று கண்டிருக்கின்றது. ரத்தமெடுக்கிற வழக்கத்தை விட்டுவிடுவதே உத்தமம். நேர்வாளம் முதலிய நல்ல பேதிமருந்துகளைக் கொடுத்து, மலத்தை வெளிப்படுத்திவிடவேண்டியது சிரசை ஈரமாகவே வைத்துவைப்பதில் மெத்தவும் சுகுர்தமுண்டு. வியாதியைச் சமனப்படுத்த, ஐயோடைட் ஆவ் பொடாஸியம் என்னும் மருந்துதவிர வேறொன்றுமில்லையென்று, ஒருவர் கண்டிருக்கிறார். போதக்ஷயமும், அதிகதளர்ச்சியும் உண்டானால், உஷ்ணகாரிமருந்துகளைக் கொடுக்கவேண்டியது. அம்மோனியா, ஈதர், மாம்ஸரஸம், ஒயின், பிராந்தி இவைகளில் ஒன்றை கொடுக்க உதவும். சிகிச்சையை நடத்திக்கொண்டுவரும்போது, ரோகியை கண்ணுண்டாய்ப் பார்வையிட்டு, மூத்திரவிசர்க்கத்தை, அடிக்கடி விசாரித்துக் கொண்டு வரவேண்டியது. தெய்வானுகூலமாய், வியாதியானது, சிகிச்சைக்குட்பட்டால், பிறகு ரோகியை பத்தியத்தில்வைத்து, மதுபானம் கொள்ளாமல் செய்யவேண்டியது; இல்லாவிட்டால், வியாதி மறுபடியும் காணும்.

2. காலிகமூளை தாபனரோகம்

(கிரானிக் இன்பிளமேஷன் ஆவ் திபிரேயின், Chronic Inflammation of the Brain.)—இந்த ஜாதியானது, மூளைஜவ்வுகளின் தாபிதத்தினலாவது, அல்லதுயாதொரு சம்பந்தமில்லாமலாவது, பிறக்கும். இதின் லக்ஷணங்கள் பல வகைப்படும்; ஆனால், உன்மாதரோகத்துக் குடையவைகளாய் இருக்கும். மனது அழலை கொண்டாவது, அல்லது தளர்ந்தாவது இருக்கும். ரோகி, குபேரசம்பத்தையடைகிற எண்ணத்தையாவது, அல்லது தரித்திராம்ஸை யைக் கொள்ளப்போகிற எண்ணத்தையாவது, கொண்டிருப்பான். சாதாரண லக்ஷணங்களாவன.—வார்த்தையில் படபடப்பு, அல்லது சொஞ்சம் தெத்துவாய், மாமிஸ பிடித்தம், அற்ப தலைநோய், பசி அடக்கம், மலபந்தம், அக்கிரமநாடி ஆகிய இவைகள் விசேஷித்திருக்கும். வியாதிகிரமேணய் வர்த்தனை ஆக ஆக, கியாபகசக்தி குறையும், புலன்களின் சேஷ்டை மந்தப் படும்; கைகால்களில் ஸ்தம்பனம் காணும்; சரீரசவுக்கியம் பூரணமாய்த் தளர்ந்துவிடும். மூளையின் தாபனத்தினல், மூளை மிருதுவாகி விடுவதுண்டு; அதற்கு அக்கியூட்ராமொலிஸ்ஸிம் (Acute ramollissement, or red softening of the brain) என்றுபேர். இது முக்கியமாய உக்கிறதாபனத்தில் காண்பதுண்டு. ஓரிடத்தில் காண்பது வழக்கம்; கண்டால் அந்த இடத்து மூளையானது பசையைப்போலாகி, முடிவில் பாலெடைப்போல் இளகலாகி விடும். இசுவோடு கைகால்கள் ஸ்தம்பித்துவிட்டாலும் சரி, அல்லது காலாவது, கையாவது அல்லது இரண்டுமாவது முடக்கிக்கொண்டாலும் சரி, மேற்படி வியாதிகண்டதென்று நிச்சயிக்கவேண்டியது. ஒவ்வொருவேளை, மூளையில் சீழ்க்கட்டி காண்பதும் உண்டு. மூளைக்கு ரத்தஓட்டம் குறைந்து, மிருதுத்துவம் கண்டால், அது வெள்ளைநிறமாய் இருக்கும். இது வயதுசென்றவர்களுக்குக் காண்பதுண்டு. மூளைக்குத் தாபனம் காண்பதால், கொஞ்சமாய் ஓரிடத்தில் கல்லுபோல் கட்டியாகி (இன்டியூரேஷன், Induration) விடுவதும் உண்டு; அந்தஸ்தானம் வெள்ளைமெழுகுபோலாவது அல்லது வேகவைத்த முட்டையின் வெள்ளைக் கருவைப்போலாவது இருக்கும். கட்டிகளும், மாமிஸகிரந்திகளும், ஜலப்பைகளும் மூளையில் காண்பதுண்டு.

2. ஜலமஸ்தகம்

ஹைட்ரோகிபலஸ், HYDROCEPHALUS.

மூளையில் ஜலம் சேர்ந்துகொள்ளுகிற வியாதிக்கு, ஜலமஸ்தகமென்று பேர். இது குழந்தைகளுக்கு எந்த வயதிலும் காணும். ஜன்மவியாதியாய் இருந்தால், மூளை கிரமமாய் ஏற்பட்டிராது. மூளை ஜவ்வின் தாபனத்தினல் பிறந்தால், தீவிர ஜலமஸ்தகம் (அக்கியூட் ஹைட்ரோகிபலஸ், Acute Hydrocephalus) என்றும், ஜன்மிக்கும்போதே இருந்தாலும் சரி, அல்லது தேக அசவுக்கியத்தினல் மெதுவில் கண்டாலும் சரி, காலிக ஜலமஸ்தகம் (க்ரானிக் ஹைட்ரோகிபலஸ், Chronic Hydrocephalus) என்றும் சொல்லுவர். இந்த ரோகத்தில், ஜலத்தினுடைய பிருவால் கபாலரேகைகள் விசாலமாகி, சிரசு பிர்மாண்டமாகி விடுகின்றது. ஒருவேளை ஒருபக்கத்து சிரசுமாத்திரம் பெரிதாகி விடுவதும்உண்டு. ஜலமானது மூளையின் பக்கத்துப் பள்ளங்களிலாவது, அல்லது அரெக்நாயிட் ஜவ்வுக்குள்ளாவது அடங்கியிருக்கும். $\frac{1}{2}$-$\frac{3}{4}$ ஆழாக்கு முதல், படிக்கணக்குச்சு ஜலம் இருப்பதும்உண்டு; இதில் தேகசவுக்கியம் சாதாரணமாய் கொஞ்சம் கெடும், அல்லதுயாதொரு கெடுதியும் சம்பவிக்காது. ஜலமஸ்தகக் குறிகள் யாதொன்றும் இல்லாம

விருந்து, இறந்தபிறகு சிரசை சேதித்துப் பார்த்ததில், அதிக ஜலம் சேர்ந்திருந்ததைக் கண்டதுண்டு.

லக்ஷணங்கள்.—ஜன்மிக்கிறபோது இந்த வியாதி இல்லாமலிருந்து பிறகு காணுமாகில், குழந்தைக்கு 6-மாதம் ஆகிறதற்குமுன் காண்பது வழக்கம். குழந்தையானது ஆவலோடு ஆகாரம் சாப்பிட்டபோதிலும், சதைப்பிடியாமல் உணங்கிப்போகும். சரீரம் சுஷ்கமாகி விடுவதால், சிரசு, காத்திரமாய் அகப்படும். புஸ்தகத்தில் எழுதியிருப்பதை வாசித்துத் தெரிந்துகொள்வதைவிட, ரோகிக்குடைய சிறியமுகமும், முன்னுக்குப் பிதுங்கி விசாலமாயிருக்கிற நெற்றியும், கீழ்நோக்கி உருண்டு இருக்கிற கண்களும், விசாலமுற்றிருக்கிற கபாலரேகைகளும், உச்சித்துவாரங்களும் ஆகிய இவைகளைப் பார்வையிட்டால், மனதில் ஸ்திரமாய் தரித்துவிடும், ஒருபோதிலும் ஞாபகம் பிசகாது. புத்தியில் விகல்பம் இல்லாதபோதிலும், அது துர்ப்பலமாகிவிடுவதை அடிக்கடி காண்பதுண்டு. காக்கைவலி, ஆயாசம், கண்ணை ஒருவிதமாய்ச சுழற்றல், ஓரக்கண் ஆகிய இக்குறிகளையும் இதில் அடிக்கடி காணலாம். சிரசு பளுவாய் இருப்பதால் ஒருபக்கமாய்ச் சாய்ந்திருக்கும்.

காரணங்கள்.—இந்த ரோகத்தை விளைவிக்கிற காரணங்களைத் தெரிந்துகொள்வது பிரயாசை. அதிகமாய்க் குடிக்கிறவர்களுக்கும், கண்டமாலை சம்பந்தமான ரோகிகளுக்கும், மேகவியாதி யுடையவர்களுக்கும், பிறக்கிற குழந்தைகள் இந்த வியாதிக்கு அதிகமாய் உட்படுவார்கள். சீதகாற்று, போஷணைக்குறைவு, கெட்டவாயுவை ஆக்கிராணிப்பு, தலைமேல் அடிப்படுதல், சொறிசிரங்கு, திடீலென்று உள்ளடங்கிப்போகுதல், பல்முளைதல், மலக்கிருமி உபத்திரவம், மூளையின் சவ்வுமேல் கட்டிகள் காணுதல், உட்காதிலிருந்து தாபனம் உள்ளுக்குப்போகுதல் ஆகிய இவை முதலிய காரணங்கள் இந்த ரோகத்தை விளைவிக்குமென்று யுத்தேசிக்கலாம்.

சிகிச்சை.—இந்த கொடிய வியாதிக்கு அநேகவித சிகிச்சைகளுண்டு; எதிலாவது நன்மையுண்டானால், நமது பாக்கியம். இதற்கு உபயோகிக்க, பேதிமருந்துகள், ரத்தமெடுக்குதல், பொள்ளிக்குதல், வாய் ரணமாகும்படி ரஸபஸ்பம் கொடுக்குதல் ஆகிய இவைகள் இஷ்டமானவைகள். பேதிமருந்துகள், போஷணை ஆகாரம், மீனெண்ணெய், ஐயோடைட் ஆவ் பொடாஷியம், ஐயோடைட் ஆவ் ஐரன் ஆகிய இவைகளின்மேல் ஒரு வைத்தியர் பூரண நம்பிக்கை வைத்ததுண்டு. $\frac{1}{4}$-$\frac{1}{2}$-கிறேன் வீதம், ரஸபஸ்பத்தைக் கொடுத்து, 1-2-டிராம் ரஸக்களிம்பை, க்ஷவரம் செய்த சிரசின்மேல் தினத்துக்கு ஒருதடவை தேய்த்து, கம்பளிக்குல்லாவை யிட்டு, ஒருவர் சிகிச்சை செய்தார். இதில் 6-8-வாரத்தில் சுகுணம் காணவிட்டால், நீர்பேதி மருந்துகளைக் கொடுக்கவேண்டிய தென்கிறார்கள். வியாதி சமனமடைந்து உடம்புக்கு பலம் வரும்போது, குவைனுவில் $\frac{1}{4}$-கிறேன்வீதம் தினத்துக்கு 3-4-தடவை கொடுக்கவேண்டியதாம். தலையை அழுத்திக் கட்டும்படியாயும், குத்திநீரை வெளிப்படுத்தும்படியாயும், சிலர் சொல்லுகிறார்கள். சீலையினாலாவது, ஒட்டு பிளாஸ்திரியின் துண்டுகளாலாவது, சிரசை அழுத்திக்கட்டலாம். சிறிய ஊசியைக்கொண்டு, கரோனல் சூஷர் என்னும் ரேகையில், உச்சி முனதுவாரத்துக்கு சுமார் $1\frac{1}{2}$-அங்குலம் ஒற்றி, குத்தவேண்டியது. சிரோமத்திய நாளத்தில் குத்தலாகாது. ஒவ்வொரு தவணையில் ஜலம் கொஞ்சமாய் எடுக்கவேண்டியது. ஜலம் வடியும்போது மெதுவாய் அழுத்திப் பிடித்துக்கொண்டிருக்கவேண்டியது;

பிறகு சிலநாள்வரையில் தலையை அழுத்திக்கட்டிவைக்கவேண்டியது. சகல மருந்துகளும் கொடுத்து யாதொரு பலமில்லாமல் போனபோது, இந்த சஸ்திரவேலை செய்ய யோசிக்கவேண்டியது. அதிபால்லிய குழந்தைகளுக்கு, இவ்விதமாய்ச்செய்து, ஒவ்வொருவேளை சவுக்கியப்பட்டதுண்டு.

3. அசதி சந்நிரோகம்

ஆபோபிளக்ஸி. APOPLEXY.

பிரதிபதங்கள்.—உஷ்ணசந்நி. உபசிதரோகம்.

ரத்த சிரஸ்த்தாப ரோகம்.

சடுதியில் உணர்ச்சிகளெல்லாம் அற்று போதக்ஷயம் காணுவதால், அசதிசந்நிரோகமென்று பேர் உண்டாயிற்று உணர்ச்சி, புத்தி, அசைவு ஆகிய இவைகள் கெட்டு சுவாஸம், இருதயம் ஆகிய இவைகளின் நடையும் ஒருவிதமாய் விகல்பப்பட்டிருக்கும். மூளையானது அழுந்தலுற்று, போதக்ஷயம் காணுகின்றது (கோமா, Coma.) இதில் காணுகிற போதக்ஷயமானது, 3-விதமாய் முடியும்; அவைகளாவன:—படிப்படியாய் அது தணிந்து சொஸ்தமாகிவிடும்—அல்லது பூர்த்தியாக நிவர்த்தியாகாமல், புத்திக்குச் சபலமுண்டாகி கால், கை இவைகளில் எதிலாவது, ஸ்தம்பவாதம்காணும்—அல்லது மரணம் சம்பவிக்கும். மூளையை அறுத்துப் பரீக்ஷித்தால், ஒருவேளை ஒன்றும் அகப்படாமலிருக்கும்; ஒருவேளை ரத்தமாவது, அல்லது ரத்தநீராவது, பக்கப்பள்ளங்களிலாவது, அல்லது அரக்நாயிட் ஜவ்வுக்கடியிலாவது காணப்படும். இவைகளினால், அசதிசந்நியை மூன்று சாதிகளாய்ப் பிறிந்திருக்கின்றது.சிம்பில், Simple—ஸான்கிவீனியஸ், Sanguineous (Cerebral hæmorrhage)— ஸீரஸ், Serous ஆகிய இவைகளாம். பிராணனுள்ளவரையில், பலான சாதியென்று கண்டுகொள்வது பிரயாசை. இந்த கொடிய ரோகமானது, முதல் சில பூர்வ ரூபக்குறிகளைப் பிறப்பிக்காமல் காண்பது அரிது.-தலைவலி, மயக்கம், தலையில் கனம், காதிரைச்சல், காதடைப்பு, பார்வை மந்தம் அல்லது ஒருவஸ்துவு இரண்டாகத் தோற்றுதல், ஒருவேளை ரத்த பீனசம், திமிர், கியாபகமறதி, அசிருத்தை, ஓயாதவார்த்தை, உறக்கம், வார்த்தைக்குளறல், எந்த விடத்திலாவது ஸ்தம்பவாதம் காணுதல், (முகம், இமை) ஆகிய இவைகளாம். இந்த கொடிய வியாதி மூன்று மார்க்கமாய்ப் பிறக்கும்—(1) திடீலென்று ஆள்விழுந்து, உணர்ச்சியும், அசைவும் இல்லாமல், நல்ல நித்திரையில் இருப்பவனைப்போ லிருப்பான். (2) சடுதியில் தலைவலி கண்டு, தேகம் வெளுத்து, குமட்டலுண்டாகி, மூர்ச்சைகண்டு, சிலவேளை வாந்தியும் காணும்; கொஞ்சநேரம் இவைகள் இருந்தபிறகு, ரோகிக்கு போதக்ஷயம் படிப்படியாய் அதிக்கிரமித்துவிடும்; அதிலிருந்து சொஸ்தமாகிறது பிரயாசை. மூளையில் உறைந்த ரத்தக்கட்டி யிருப்பது வழக்கம். (3) ஒருபக்கம் பக்ஷவாதமாய்க் கண்டு, வாக்கு இழந்துபோகும்; ஆனால், அறிவுகெடாது. பக்ஷவாதமானது மெதுவாய் அசதி ஜந்நியில் கொண்டுவந்துவிட்டுவிடும். சவுக்கியப்படும்படியாய் இருந்தால், அது மெதுவாய் சமனமடைந்து ரோகிக்குச் சவுக்கியம் பிறக்கும்.

லக்ஷணங்கள்.—ஜந்நிகண்டு இருக்கும்போது காணப்படுகிற குறிகளென்னவெனில்.—ஜந்நி, 2-3-மணி நேரமாவது, அல்லது நாள் கணக்காய

வது இருக்கும்; உணர்ச்சி சுத்தமாய் இராது; நாடி பெருத்து திரடமாய் மெதுவுற்று, அல்லது அக்கிரமமாய் நடக்கும்; சுவாஸம் மெதுவுற்று கஷ்டமாயும், ஒவ்வொருவேளை குறட்டையும் இருக்கும்; வாயில் நுரை வெளிப்படும்; வியாதி அசாத்தியத்திலிருந்தால், சரீரமெங்கும் சில்லிட்டு பிசுபிசுப்பான வியர்வை காணும்; முகம் வெளுத்திருக்கும்; கண்கள் மந்தமடைந்து பளபளப்பாய், கண்தாரை விரிந்திருக்கும்; பற்கள் கிட்டிக்கொண்டு, ஜலசமேதம் உள்ளுக்கிறங்காது, ஒருவேளை யிறங்கினால், அது வெகு கஷ்டத்திலிருக்கும்; மலம் பிடித்திருக்கும், ஒருவேளை தனக்குந்தெரியாமல் இறங்குவதும் உண்டு; மூத்திரமும் இறங்காது; மூத்திரப்பை நிறைந்துவிட்டால், துளித்துளியாய் இறங்கும். ரோகிக்கு கொஞ்சம் ஆஸ்வாசம் பிறந்தால், கைகால்களில் பக்ஷவாதம், அற்பமாயாவது, பிரபலமாயாவது இருந்துவிடுகிறது வழக்கம்.

காரணங்கள்.—அதிகதிரிச்சல், குனிந்து சட்டென்று நிமிர்தல், மலஜலவிசர்கத்தில் முக்கல், அதிகசந்தோஷம், அதிகவிசனம், அதிக கோபம், தீக்ஷண வெயிலில் நடக்குதல், நேரப்பட குனிந்திருக்குதல், கழுத்தில் பிகுவாய் கட்டுண்டிருக்குதல், அதிக ஸ்திரீசஞ்சாரம், பெருந்திண்டி ஆகிய இக்காரணங்களால் இந்த துஷ்டரோகம் பிறக்கும். ஸ்நானஞ்செய்து கிரீடித்து, இந்த ரோகம் கண்டால், அதற்கு சுகஜந்நியென்று சாதாரணமாய்ச் சொல்வதுண்டு.

சிகிச்சை.—ரோகத்தை தடுக்கப்பட்ட சிகிச்சை ஒன்று, ஜந்நி கண்டிருக்கும்போது செய்கிற சிகிச்சை ஒன்று ஆகிய இரண்டுவித சிகிச்சைகள் இதற்குண்டு. இந்த வியாதிக்கு உள்பட்டவனெவனோ அவன், ஆயாச முண்டாகும்படியான வேலையில் பிரவேசிக்கலாகாது; ஸ்திரீவிஷயத்தில் அதிகமாய் மனதைச் செலுத்தலாகாது. மதுபானத்தை விரும்பலாகாது; அதிக மனோசலனங்கள் வரவொட்டாமல் செய்துகொள்ளவேண்டியது; தீக்ஷண வெயிலில் நடக்கலாகாது; மலமிறங்கும்போது முக்கலாகாது; நேரப்படக் குனிந்துகொண்டிருக்கலாகாது; நித்திரையில் அதிகப்பிரீதி வைக்கலாகாது; சில்லிட்ட போஜனபதார்த்தங்களை மிதமாய் பக்ஷித்து, மயக்கமுண்டாக்குகிற மஸ்துள்ள பதார்த்தங்களை நீக்கி, நல்லகாற்றுள்ள வெற்றுவெளியிற்சென்று உலாத்திக்கொண்டுவந்து, மலக்கிரமத்தைச் செவ்வையாய் சூக்ஷித்து, குளிர்ந்த ஜலசிரஸ்நானம் பிரதிதினமும் செய்துகொண்டு வந்தால், பெரும்பான்மை ரோகத்தைத் தடுக்கும். மயக்கம், தலைவலி, சிரசு நாடிகள் வேகமாய் அடித்துக்கொள்ளல் ஆகிய இவைகள் இருந்தால், நல்ல பேதியாகும்படி மருந்துகள் கொடுப்பதில் சுகுணம் பிறக்கும்.

இவ்விதமாக சூக்ஷித்துக்கொண்டுவந்தும், ரோகம் மீறிவிட்டால் அதற்கு ரத்தத்தை வாங்குவது புராதன வழக்கம். அவ்விதமாய்ச் செய்த சிகிச்சையால் கொஞ்சம் பேரும், ரத்தமெடுக்காமல் செய்த சிகிச்சையால் அதிகஜனங்களும் சொஸ்தப்பட்டிருக்கிறபடியால், ரத்தமெடுக்காமல் சிகிச்சை செய்வதே உத்தமம். ஆனால், அதிக ரத்தம் சிரசுக்கேறியிருக்கிற குறிகளிருந்தால், அப்போது ரத்தமெடுக்கலாம்; மூர்ச்சையடைந்து, நாடி சிறுத்து க்ஷீணித்து, தேகம் சில்லிட்டிருக்கும்போது, அந்த ராக்ஷஸ சிகிச்சைசெய்தால், சீக்கிரத்தில் யமலோகப் பிராப்தி சம்பவிக்கும். ரோகியை நல்லகாற்றுள்ள ஸ்தானத்தில், சிரசு எடுப்பாய் இருக்கும்படிப் படுக்கவைத்து, ஆடையாபரணங்களைத் தளர்ச்சிசெய்து, சிரோரோமத்தை

நீக்கி, ஈரத்துணியைப்போட்டு பாதங்களை வெந்நீரில் வைக்கவேண்டியது. கடுகுகளியைக் கால்களுக்கு வைத்துகட்டலாம்; நல்ல பேதியாகும்படி, மருந்துகள் கொடுப்பதில் நலமுண்டு. ரோகி எதையும் விழுங்காத ஸ்திதியிலிருக்கும்போது, நேர்வாளதயிலத்தில், 3-4-துளி, ரஸபஸ்மத்துடன்சேர்த்து, பஞ்சதாரை கலந்து, நாக்கின்மேல் வைத்துவிட்டால், உள்ளுக் கிறங்கிவிடும். ஜலரூப பதார்த்தங்களை ஜாக்கிரதையாய்க் கொடுக்காவிட்டால், சுவாஸக்குழலிறங்கி, சுவாஸபந்தம் ஜனிக்கும். உஷ்ண வஸ்திகள் ஆசனத்தில் பிரயோகிக்கலாம்; கழுத்தின்மேல் பிளிஸ்டராவது, அல்லது கடுகுகளியையாவது போடலாம். சில சிகிச்சைகர், வாந்திக்குக் கொடுப்பதுண்டு; வாந்தியெடுக்கும்போது, சிரசுக்கு அதிக ரத்தம் போகுமாகையால், அதை நீக்கிவைப்பதே உத்தமம். ஒருவேளை இந்தரோகம், போஜனம் செய்த உடனே கண்டு, வயிற்றில் துர்மலமிருப்பதாய்த் தெரிந்தால், அப்போது வாந்திக்கிக் கொடுக்கலாம்.

ரோகி, தெய்வானுகூலமாய், வியாதியிலிருந்து தப்பித்துக்கொண்டால், மறுபடியும் அந்தரோக முணுகாமல், பத்திரமாய்ச் சூஷித்துக்கொள்ள வேண்டியது. வேகமுள்ள மருந்துகளும், கோபம்கொள்ளுகிறதும், அதிக மனோவியாபாரமும், உதவாது. போஜனம், லகுத்துவமாயும், போஷணைக்குடையதாயுமிருக்கவேண்டியது. தாராளமாய்ப் பாலைச்சாப்பிடலாம். Remedies.—Bleeding; cool place; head raised; cold to the head; croton oil, foot-bath, blister stalpentine (enema); emetic

4. சூரிய இடி

ஸன்ஸ்ட்ரோக், SUN-STROKE—கொடிஸொலீல்

Coup de soleil; insolation; heat apoplexy.

பிரதிபதங்கள்.—உஷ்ண ஜந்நி.

இந்த ரோகமானது அற்ப அசதி சந்நிரோகத்துக்கு ஒத்திருக்கும்; உஷ்ணதேசத்தில், ஐரோப்பியர்களுக்கு மிகுதியாய்க் காணுகின்றது. மதுபான பிரீதியுடையவர், மத்தியானகாலத்தில் வெயில்படும்படி சஞ்சரித்தாலிந்தவியாதி காண்பதுண்டு; இதற்கு, துஷ்ட கிரகங்கள் அறைந்துவிட்டதென்று சாதாரண ஜனங்கள் சொல்வது வழக்கம்.

லக்ஷணங்கள்.—இந்த வியாதியின் ஆரம்பத்தில் தலைவலி, தேக உஷ்ணம், ஆயாசம் ஆகிய இவைகள் காணும்; மார்பைச்சுற்றிக் கட்டியிருப்பது போல் இருக்கிறதென்று சிலர் சொல்லுவார்கள்; நாடி பெருத்து தீவிரமாயாவது, அல்லது விரல்களுக்கு அகப்படாமல், அவ்வளவு க்ஷீணமாயாவது நடக்கும்; வியாதி அதிக்கிரமித்தால், இருதயநடை தீவிரப்படும்; ரோகிக்கு மந்ததை யுண்டாகும், எழுப்பக்கூடாமையாய் இருக்கும்; முகம் வெளுத்து ஒவ்வொருவேளை வாந்தியுண்டாகி போதக்ஷயம் காணும்; அறிவில்லாமல் ரோகியிருக்கும்போது, தேகம் உஷ்ணமாய் இருக்கும்; சுவாசம் கஷ்டமாய் நடக்கும்; கண்தாரை சுருங்கியிருக்கும்; கண்கள் சிவந்திருக்கும்; இருதயம் அக்கிரமமாய் நடக்கும்; வைகுண்டப் பிராப்தியடைவதற்குமுன் கண்தாரை விருந்து; மேல் சுவாஸமெடுத்து, ஒருவேளை வாந்தியும் உண்டாகும். இந்த ரோகம் வெகு தீவிரத்தில் காண்பதும், தீவிரத்தில் கொல்லுவதும் உண்டு. ரோகம் ஸொஸ்தமாகிறதாய் இருந்தால், காலாவது, கையாவது ஸ்தம்பித்து, அதிக்ஷீணமுண்டாகி, ஆளைச் சிலநாள்வரையில், படுத்தப்

படுக்கையில்தானே வைத்திருக்கும்; தேக உஷ்ணம் தணிகிறவரையில், ரோகிக்கு அபாயமில்லையென்று நம்பலாகாது. மூளையும், முள்ளந்தண்டுக் கொடியும், ஒற்றுணர்வுள்ள நரம்புகளும், சேர்ந்து இந்த வியாதி காணுகின்றது.

சிகிச்சை.—இது மெத்த கொடிய ரோகம், அதிசீக்கிரத்தில் ஆளை யமபுரத்துக்கு அனுப்பிவிடும்; ஆகையால், வெகு பத்திரமாய்ச் சிகிச்சை செய்ய வேண்டியது. இதற்கு ரத்தமெடுத்து, சிரசில் ஈரத்துணியைப்போட்டு, கழுத்தின்மேல் பிளிஸ்டர் போடுவது புராதன வழக்கம். அவ்வித சிகிச்சையால், அநேகர் இறந்துபோகிறார்கள். இனி அந்த வழியை அனுசரிக்கலாகாது. ரத்தமெடுப்பதில் பிரயோஜனமில்லை; சிரசில் ஈரத்துணியைப் போட்டு, உஷ்ணமருந்துகளை அடிக்கடி கொடுப்பதில் மெத்த சவுக்கியம் பிறக்கும்; ரோகியைப் படுக்கவைத்து, குளிர்ந்தஜலத்தைத் தாரையாய்ச் சிரசின்மேலும், மார்பின்மேலும் விட்டு, பிறகு, ஜலத்தில் சாராயம் கலந்து அதில் துணியை நனைத்து சிரசின்மேல் போட்டுவைக்கலாம். நாடி க்ஷீணித்து, சரீரம் குளிர்ச்சியாய் இருந்தால், குளிர்ந்தஜலம் ஊற்றலாகாது. உள்ளுக்கு பிராந்தி, நாட்டுச்சாராயம், ஆரோமாடிக் ஸ்பிரிட்ஸ் ஆவ் அம்மோனியா என்னும் மருந்து இவை முதலிய உஷ்ணகாரிகளில் ஒன்றைக் கொடுத்தால், தெளிவு பிறக்கும். நவக்ஷாரம், காடி, சாராயம், ஜலம் இவைகளைச் சேர்த்து, கிலேதம் செய்து, சிரசில் போடலாம். தேகதளர்ச்சிக்குத் தக்கபடி உஷ்ணமருந்துகளைக் கொடுக்கவேண்டியது. கடுகு களியைக் கால்களுக்குவைத்துக் கட்டலாம்; நவியங்களையும் பிரயோகிக்கலாம்; நமது நாட்டில், இதற்கு உபயோகிக்கிற கலிக்கங்கள், மெத்தக் காரமுள்ளதாய் இருந்தால், கண்ணைக் கெடுத்துவிடும். அந்தச் சிகிச்சையில் பிரயோஜனமில்லாதபோதிலும், ஏதாவது, கண்களுக்குப் போட்டாலொழிய, நமது வீட்டுப் பெண்களுக்கு திருப்தியிராது; ஆகையால், தும்பைப்பூ ரசத்தையொத்த குளிர்ந்தவஸ்துவிலெதையாவது, கண்களுக்கு உபயோகிக்கலாம்; ஆரம்பத்திலிருந்து இந்த ரோகத்தில் நரம்புகளின் திடம் க்ஷீணமடைவதால், அதைப் பலப்படுத்துவதே நமது முக்கிய பிரயத்தினம். இதில் ரோகி மெத்த ஆயாசமுற்று பிராணனை விடுகின்றான்.—Remedies.—Cold to the head; stimulants

5. உன்மாதம்

இன்ஸானிடி, INSANITY.

பிரதிபதங்கள்.—உன்மத்தம், பைத்தியம், வெறி, மதம், பித்தம், மதிமயக்கம், சித்தப்பிரமம்.

சர்வேஸ்வரருக்கும், தன்னைச் சார்ந்தோருக்கும், தன் சொந்தத்துக்கும் வேண்டிய கடமைகளை, நடத்திக்கொள்ளக் கூடாமல்போகிற மனசின் ஸ்திதிக்கு, உன்மாதமென்று பேர். இதில் சில பூர்வரூபங்களுண்டு. அவைகளாவன:—தலைவலி, மயக்கம், கலவரம், அடிக்கடி கோபம், சுவகாரியத்தில் வேஷ்டை, பூலோகவாழ்க்கையில் வெறுப்பு, நித்திராபங்கம், சோம்பல், மறதி, ஸ்பஷ்டமில்லாதவார்க்கு மந்தபார்வை, ஸ்திரமில்லாதபுத்தி ஆகிய இவைகளாம். தன்னுடைய அசவுக்கியம் ரோகி தெரிந்துகொண்டபோதிலும், வைத்தியனிடத்தில் சொல்லிக்கொள்ள இஷ்டமிராது. பூர்வ சிநேகிதர்களைத் திரஸ்கரிக்கும்படியான புத்தியும், நேரிடும்;

துஷ்ட எண்ணங்கள் பிறக்கும்; பயங்கரமான சொப்பனங்கள் காணும்; மந்தாக்கினி சேஷ்டையும் அனுசரித்திருக்கும். உன்மாதத்தில் சர்வாங்க வாதமாவது, காக்கைவலியாவது, அனுசரித்திருந்தால் கெட்டது, சிகிச்சைக்கு வசப்படாது.

உன்மாதரோகசாதிகள்.—இந்த ரோகத்தை ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாய் பிரித்திருக்கிறார்கள். சுலபமாயும், தெளிவாயுமிருப்பதை இவ்விடத்தில் குறிக்கப்படும்; அவைகளாவன:—மூர்க்க உன்மாதம், ஏகவிஷய உன்மாதம், சாபல்லியம், பிறவி பைத்தியம் ஆகிய இவைகளாம்.

1. மூர்க்க உன்மாதம்

(மேனியா, Mania or raving madness).—இதில் கிரமாக்கிரமங்களைத் தெரிந்துகொள்ளுகிற தன்மை முழுதும் போகாதபக்ஷத்தில், மனம் கலக்கமுற்று, தாறுமாறாகிவிடும்; எண்ணமும், அநேக அபத்த கெட்ட விஷயங்களில் அலைந்து மனதுக்கு வசப்படாமலும், நடத்தைகள் பலவந்தமுள்ளதாய், அதிக்கிரமித்து, சில்மிஷ சேஷ்டைகளில் பிரவேசித்தும் இருக்கும். ஆரம்பத்திலிருந்து அதிக விகாரமும், மூர்க்கமும் இருக்கும்; அதனால் தனக்குத் தெரியாமலாவது, தெரிந்தாவது, அல்லது அகஸ்மாத்தாயாவது பிராணத்தியாகம் செய்துகொள்ளுவான். உன்மாதரோகக்குறிகளை விவரித்துக் காட்டுவது பிரயாசை. ஒரே ரோகியில் உன்மாதக்குறிகளெல்லாம் கண்டதாய் எவரும் சொல்லமாட்டார்கள். சாதாரணமாய் பித்தம் கொண்டவன் துர்ப்பலமடைந்து க்ஷீணித்துப்போகின்றான். தனக்குச் சக்தியுள்ளவரையில் செய்கிற பலவந்தமும், கூப்பாடும், நகைப்பும், ஓயாத வார்த்தைகளும், நித்திராபங்கமும், ஆட்ட ஓட்டமும் போய், எத்தனை பலசாலியாயிருந்தாலும், சீக்கிரத்தில் தளர்ச்சியடைந்துவிடுவான். தளர்ச்சியுண்டான போதிலும், நித்திரை வாராது, போஜனத்திலும் இஷ்டமிராது. ரோகம் சொஸ்தப்படுகிற ஸ்திதியிலிருந்தால், நித்திரையுண்டாகி, பசியெடுத்து, விகாரமும், திரிச்சலும், மெதுவில் சமனமடைந்துவிடும்.

2. ஏகவிஷய உன்மாதம்

ஞானப்பைத்தியம் (மோனோமேனியா, Monomania).—இந்தசாதியில் புத்தி கொஞ்சமாய் விகல்பப்பட்டாவது, அல்லது ஒரு பிரதான தப்பு அபிப்பிராயத்தில் பிரவேசித்தாவது இருக்கும், திடமனதுண்டு ; எண்ணமானது, தப்பிதமாய் சிலவிஷயங்களின்மேல் நாடி அடக்கக்கூடாமையாய் இருக்கும் ; எண்ணத்தின் பிரகாரமே நடத்தைகளுமுண்டு, புத்தியானது ஒரே விஷயத்திலாவது, அல்லது சில பிரதான விஷயங்களிலாவது நாடி இருக்கும் ; அதெப்படியெனில் :—ரோகியானவன், தன் சரீரம் கண்ணாடியால் செய்திருக்கிறதென்று நிச்சையித்து பத்திரமாய் ரக்ஷிக்காவிட்டால் உடைந்துபோகுமென்று தகுமான திருஷ்டாந்தங்கள் சொல்லி தன்மேல் அடிபடாமல் நடந்துகொள்வான். மற்றொருவன், தன்னிடத்தில் செல்லாத பணமிருக்கிறதென்று நம்பி, சமீபத்திலிருப்பவர்களுக்குத் தெரிவித்து, தனக்கானாலும் சரி, அல்லது யாராவதுவந்து கேட்டபோதிலும், அதற்குச் சில்லரைக் கொடுக்கவேண்டாமென்று சொல்லுவான். வேறொருவன், தன்னைத் துஷ்டக்கிரகங்கள் அனுசரித்திருக்கிறதென்றாவது, அல்லது தானே தெய்வமென்றெண்ணி, தனக்கும் பரமபதத்துக்கும் சம்பந்தமுண்டென்றாவது அபிப்பிராயம் கொண்டிருப்பான். ஒவ்வொருவன், சர்வேஸ்வரர் பகையைத் தீர்க்கும்படித் தன்னை அனுப்பிவைத்திருக்கிறாரென்று நினை

த்து, பிராணஹிம்சை செய்வான். இவ்விதமாய் வேறுபட்டிருக்கும். இந்த வியாதியுடைய ரோகியானவன், களிப்புடன், சந்தோஷவார்த்தைகளாடிக் கொண்டிருப்பதுண்டு; ஆனால், அவனை அடக்கும்படி பிரயத்தினம் செய்தால், நரசிம்ஹ அவதாரம்போல் அவனுக்கு உக்கிரம் பிறக்கும்.

இந்த பைத்தியத்தில், தனக்கு மேகரோகம் கண்டிருப்பதாய் தப்புஅபிப்பிராயம் பிறந்து, ஔஷதம் சாப்பிடும்படியான எண்ணமும் கொள்ளும். ஒரு ஸ்திரீக்கு உன்மத்தம் கண்டிருந்தபோது, தனக்கு மேகவியாதி கண்டிருப்பதாய் வைத்தியரிடத்தில் தெரிவித்து, அவர் என்ன சமாதானம் சொல்லியும் கேளாமல், சாதத்தை உருட்டி மாத்திரைசெய்து கொடுத்தபோது, அவள் அதை ரசமாத்திரைகளென்று எண்ணி சாப்பிட்டு, வாய் ரணமானதாய் யோசித்து, அதிக உமிழ்நீரைச் சிலநாள்வரையில் துப்பிக்கொண்டிருந்தாள். பிறகு வைத்தியர் மாத்திரைகளை நிறுத்திவிட்டபின்பு, அந்த உமிழ்நீர் அடங்கிவிட்டதாகவும் கண்டிருக்கின்றது. பைத்தியக்காரர்களெல்லோருக்கும் பஞ்சேந்திரியங்களில், 1-2-விறகப்பட்டு இருப்பது வழக்கம். மனத்துக்குத் தோற்றப்பட்ட பொருள்கள் கண்களுக்கு அகப்படும். அவைகளோடு வார்த்தையாடுவான். பார்ப்பதும், கேட்பதும், மாய்கை சேஷ்டையென்று (இல்லூஷன், Illusion) தனக்குள் நிச்சயமாகும்போது, அதற்கு புத்தி தடுமாறல் (ஹல்லூஸினேஷன், Hallucination) என்று சொல்லப்படும். அந்த அபத்த உணர்ச்சிகளை எப்போது மெய்யென்று நம்புகிறானோ அப்போது தடுமாறலாய் இருந்தபுத்தி, மோசபுத்தி. (டிலூஷன், Delusion) ஆகிவிடுகின்றது. சுபுத்தியிலும், கண்களும், காதுகளும், மோசம்போகுவதுண்டு; அதை நியாயங்களால் நீக்கிக்கொள்ளப்படும். சிலவேளை இந்த வியாதியின் லக்ஷணங்கள் செவ்வையாய் அகப்படாது. நடத்தை, முகக்குறி, ஆகிய இவைகளால் மதிமயக்கமென்று யோசிக்கவேண்டியதாய் வரும்; வார்த்தையில் வித்தியாசமிராது.

ஏகவிஷய உன்மாதத்தில் பயம், மூசுண்டுக்குணம், நிராதவிசனம் ஆகிய இவைகள் இருந்தால், அதற்கு துக்க உன்மாதம்—(விசனம், சஞ்சலம், பிரமை) (மிலான்கோலியா, Melan-cholia, or Lypemania) என்று சொல்லப்படும். துக்க உன்மத்தர்களுக்கு திரியவும், பேசவும், போஜனம் செய்யவும் மனதிராது. அசையாமல் ஒரே நிலையிலாவது, பேசாமலாவது ஒரு நாளெல்லாம் இருப்பார்கள். தனியாய் இருப்பதற்கு பயமுண்டு; நித்திரை அற்பமாய் இருக்கும்; சிலவேளை இனி தண்டனைவருமென்று உத்தேசித்து துயரத்தில் மூழ்கி யிருப்பார்கள். ஒருவேளை பிராணத்தியாகம் செய்துகொள்ள வழிதேடிக்கொண்டு இருப்பதும் உண்டு.—அதற்கு ஆத்மக்காத உன்மாதம் (ஸூயிஸைடல் மேனியா Suicidal mania or autophomania) என்றுபேர். அந்த விகற்ப புத்தி உடனே வருவதில்லை; சிலநாள் எண்ணமிட்டிருந்து, பிறகு அந்த துஷ்டக்கிருத்தியத்தைச் செய்துகொள்வார்கள்; அப்படி செய்துகொள்வார்களென்று யோசித்து, காவலில் வைத்தபோதிலும், நற்குணத்தைச் சிலநாள் காண்பித்து, சந்தேகநிவர்த்தி செய்துகொண்டு, பின்பு சமயம் நேரிட்டபிறகு தங்கள் எண்ணத்தை முடித்துக்கொள்வார்கள். நமது நாட்டில், ஜலத்தில் விழுந்து இறப்பதும், சீமையில் நாணுகொள்ளுவதும் வழக்கம். ஞானபைத்தியத்தில்வேறொரு ஜாதியுண்டு, அதற்கு சன்மார்க்க உன்மாதம் (மாரல்இன்ஸானிடி, Moral insanity)என்று பேர். அதில் சுவாபீக அறிவும், ஆசாபாசங்களும், குணமும் அப்பியாசங்களும், நன்னெறிமார்க்கங்களும்விகற்பப்பட்டிருக்கும்; லோகாசாரவழக்கத்து

க்கு விரோதமான நடவடிக்கைகளும், குற்றம்செய்வதற்கு உச்சாகமும், துன்மார்க்க நடத்தைகளில் விருப்பமும் ஆகிய இவைகள் இருக்கும். இவ்விதகுணமுடைய உன்மத்தர்களுக்கு, சிலவேளை கொலைசெய்யும்படியாய் மனம் நேரிட்டால், அதற்கு; கொலைபாதகபைத்தியம் (ஹோமிஸைடல் மேனியா, Homicidal mania or androphomania) என்றும்—வீடுகளை அக்கினிக்கிரைகொடுக்க எண்ணமிருந்தால், அதற்கு, அக்கினிபைத்தியம் (பைரோமேனியா, Pyromania) என்றும்—திருடுவதில் மனம் நாடியிருந்தால், அதற்கு, சோர உன்மாதம் (கிளிப்டோமேனியா, Kleptomania) என்றும் சொல்லப்படும்.

3. சாபல்லியம்

(டிமென்ஷியா, Dementia, incoherence). அபாயத்தினலாவது, தளர்ந்த வயசினலாவது பிறந்து, புத்தி பலவீனப்பட்டுப்போவதற்கு, சாபல்லியமென்று பேர். இதில் மனது துர்ப்பல மடைந்து, எண்ணங்கள் குழம்பி, மயங்கி, வியர்த்தமானதாய், வேறுபட்டதாய், ஸ்திரமில்லாததாய், ஞாபக சக்தி கெட்டு இருக்கும்; காலவித்தியாசம் இடம், பிரமாணம், பொருள் இவை முதலியவைகளைத் தெரிந்து கொள்ளக்கூடாமையாய் இருக்கும்; பார்ப்பதையும், கேழ்ப்பதையும், வெகுசீக்கிரத்தில் மறந்துவிடும்; நடத்தைகள் ஸ்திரமில்லாமல், பாலசேஷ்டையாய், விவேகமற்றதாய் இருக்கும்; வார்த்தைகள் மத்தியில் விகற்பப்படும், அருத்தமில்லாதவைகளாயு மிருக்கும்; பக்ஷபாதம், வெறுப்பு, குரோதம், ஊக்கம் ஆகிய இவைகள் இராது; பந்து மித்திரர்களிடத்தில், வாஞ்சையும் விட்டுப்புரியும்போது, விசனமுமிராது; சதாகாலமும், எதையாவது தேடுவதைப்போல் ஒருவேளை மெதுவாய்த் திரிந்துகொண்டும், ஒவ்வொருவேளை விக்கினேஸ்வரரைப்போல் ஓரிடத்தில் அசையாமல், உட்கார்ந்துகொண்டு மிருப்பார்கள். மூர்க்க உன்மாதமும், ஏகவிஷய உன்மாதமும், முடிவில், சாபல்லியத்தில் வந்துவிடும். சொஸ்தமாகிறது அபூர்வம். கடைசியில், ஸ்தம்பவாதம் காணும்; பெரியமூளை சுஷ்க்கித்து, இந்தவியாதி பிறக்கின்றது.

4. பிறவிப்பைத்தியம்

மூடதை. (இடியோஸி, Idiocy.) இதில் புத்தி சுத்தமாயிராது, சிலருக்கு கொஞ்சமாய் இருப்பதும் உண்டு. ஜனனத்திலிருந்தாவது, அல்லது பால்லியத்திலிருந்தாவது, இந்த ரோகம் அனுசரித்திருக்கும்; புத்திஏற்படுகிறதில்லை, எண்ணங்களுமிரா, ஒருவேளையிருந்தால், சில எண்ணங்கள் மாத்திரமிருக்கும்; பால்லிய நடத்தைகளுண்டு; சாதாரணமாய் பெரியவர்களுக்கிருக்கிற மூளை சுமார் 50-ஔன்ஸ், அல்லது 3- ராத்தலுக்கு மேல்பட்டிருக்கும்; பிறவிப்பைத்தியக்காரருக்கு, மூளையின் கனம், சுமார்-21-22-ஔன்ஸுக்கு அதிகப்படுவது அரிது.

காரணங்கள்.—உன்மத்தரோகத்துக்குக் காரணங்களைக் கண்டுகொள்வது பிரயாசை. பாரம்பரையாய் காண்பதும் உண்டு; நெருங்கிய பாந்தவிய விவாகத்தினலும் பிறக்கின்றது. தாய் தந்தைகளுக்கு மேகவியாதி இருக்குதல், சிரசின்மேல் அடிபடுதல், சாராயம் முதலிய லாகிரிபதார்த்தங்களை அதிகமாய்ச் சாப்பிடுதல், சிற்றின்பத்தில் அதிகப் பிரீதிவைக்குதல், பலவந்தமாய் இந்திரிய ஸ்கலிதமாக்கிக்கொள்ளுதல், சுரம் ஆகிய இக்காரணங்கள், பைத்தியத்தை விளைவிக்கும்; நிராசை, மதப்பிரஷ்டை, அதிக விசனம், நீடித்த ஏக்கம் அல்லது மனவருத்தம், அதிக வாசிப்பு, அல்லது மனோவியாபாரம், பொருள் நஷ்டம் ஆகிய இவைகளாலும் மேற்படி ரோ

கம் சம்பவிக்கும். நாகரீகம் அதிகமாயுள்ள ஜனங்களுக்குள், பைத்தியரோகம் அதிகமாய்க் காணலாமென்று ஒருவர் கண்டிருக்கிறார். மூளைக்குப் போஷாப்புக்குறைதல், நித்திராபங்கம் ஆகிய இவைகளும் உன்மாதத்துக்குக் காரணங்களாகும்

சிகிச்சை.—உன்மாதரோக ஆரம்பத்தில், நல்ல நித்திரை வரும்படிச் செய்யவேண்டியது, அதற்கு அபினியே நல்லமருந்து. கஞ்சா, குரோசானி யோமம், குளோரோபாரம், இவைகளையும் உபயோகிக்கலாம். சரீரசவுக்கியம் விகற்பமடைந்து, அதிக தூர்ப்பலமிருந்தால், அயம் முதலிய பலகாரி ஔஷதங்களும், நல்ல ஊட்டமும் கொடுத்து, சௌக்கியத்தைப் பிறப்பிக்க வேண்டியது. ரோகியை ஊரைவிட்டு வேறூருக்கு அனுப்புவதில் பிரயோஜனமுண்டு. ரோகியை கம்பளி ஆடைகள் தரிக்கும்படி செய்ய வேண்டியது. காற்றோட்டமாய்க் கொண்டுபோய் உலாத்தச்செய்வதில் சுகுணம் பிறக்கும்; பிரதிதினமும், தாராளமாய் மலம் இறங்கும்படிச் செய்யவேண்டியது. சித்தப்பிரமையுடையவர்களைக் கட்டிவைத்து, ஹிம்சைப் படுத்தாமல், பிரியவசனங்களால் அவர்களுக்குச் சம்பவித்திருக்கிற கிரஹசாரத்தைக்குறித்து, நாமும் துக்கிக்கிறவர்களைப்போல் உபசரணைசெய்து, ரோகியை உல்லாசப்படுத்தி வைக்கவேண்டியது. பிரதிதினமும், காலையில் எலுமிச்சம்பழரசமாவது, அகத்தியிலை ரசமாவது, தலைக்குத்தேய்த்து, 10-20-குடம் குளிர்ந்த ஜலம் தாரையாய்விட்டு, ஸ்நானம் செய்துவைப்பதில், பித்தசமனமடையும். ஸஹஸ்திரதாராமச்சனம் செய்துவைத்தால்மெத்தவும் சிரேஷ்டம். பைத்தியக்காரரைக் கட்டிவைத்து மொட்டை அடித்து, இருளடைந்தவீட்டில் அடைந்துவைத்து ஹிம்ஸைப்படுத்துகிற வழக்கம் இந்நாட்களில் தொலைந்துவிட்டதைக்குறித்து யாவரும் சந்தோஷத்தையடைய வேண்டியது. Remedies.—Could doudhe; shower bath; quiet, purgatives; opium; Indian hemp; tonics; nourishing diet; change of air and scene.

6. தலைவலி

ஹெட் எக், HEAD ACHE கிபலால் ஜியா, CEPHALALGIA.

பிரதிபதங்கள்.—தலைநோய், சிரஸ்தாபரோகம், சிரசுநோய், மண்டை இடி, கபாலவாயு, கபாலகுத்து, கபாலச்சூலை.

அநேக வியாதிகளில் தலைநோய் ஓர் குறி, தனிப்படவும் காணும். தலைவலியில் அனேகஜாதிகளுண்டு— 1-வது தலைச்சதைகளைப்பற்றிய தலைநோய்—2-வது, எலும்புமேல் மூடிக்கொண்டிருக்கிற ஜவ்வைப் பற்றிய தலைநோய்—3, வது ஸ்பரிச நரம்புகளைப்பற்றிய தலைநோய்—4-வது ரத்தம் மூளையில் சேர்ந்து, காணுகிற தலைநோய்—5-வது, அக்னிமந்தத்தால் காணுகிற தலைநோய்—6-வது, மூளையின் வியாதியால் காணுகிற தலைநோய் ஆகிய இவைகளாம்.

(1) சதைகளைப்பற்றி காணுகிற தலைவலியில், வேதனை சிரசு முற்றிலும் வியாபித்திருக்கும்; தணிந்து தணிந்து காணும்; புருவங்களையும், தாழ்வாய்க்கட்டையையும் அசைப்பதினாலும், சதைகளை அழுத்துவதினாலும், அல்லது விரலால் தட்டுவதினாலும், நோய் அதிகரிக்கும்; முகம், பிடரி, தோள் முதலிய இன்னம் பல இடங்களில் நோய்த் தொடர்ந்திருப்பதும் உண்டு; இது உண்டாவதற்கு சீதளமே காரணம்.

சிகிச்சை.—வாதரோகத்துக்குச் சொல்லி இருக்கிற சிகிச்சையே இதற்கும் செய்ய உதவும்.

(2) தலை எலும்புமேல் மூடிக்கொண்டிருக்கிற ஜவ்வைப்பற்றிக் காணுகிற தலைவலியில், நோய் ஒரே இடத்தில் தங்கியிருக்கும்; அழுத்தினால், நோய் அதிகரிக்கும்; ஆனால், சதைகளை அசைத்தால் நோய் அதிகரிக்காது. காலெலும்பு, மார்பெலும்பு இவைகளிலும் நோய் வியாபிக்கிறதுண்டு; நோய் ஒரே இடத்தில் இருந்தால், கொஞ்சம் வீக்கம் அகப்படும். இந்தவியாதி மனக்கவலையாலும், சீதளத்தாலும் பிறக்கின்றது. மேக சம்பந்தத்தாலும் காணுவதுண்டு; அப்போது, மேகரோகக்குறிகள் வேறுவிடங்களில் அகப்படும்.

சிகிச்சை.—இதற்கு இராத்திரிகளில், (டோவர்ஸ் பவுடர், Dover's powder) என்னும் சூரணத்தைக் கொடுக்கலாம். விரேசனமருந்துகளைக் கொடுத்து, அடிக்கடி துர்மலத்தை வெளிப்படுத்திவிடவேண்டியது. மேகரோகசம்பந்தமாய் இருந்தால், நன்னாரிவேர்க் கஷாயத்தோடு, ஐயோடைட் ஆவ் பொடாசியம் (Iodide of Potassium) என்னும் உப்பைச் சேர்த்துக் கொடுத்தால், சொஸ்தமாகும்.

(3) ஸ்பரிச நரம்புகளைப்பற்றிய தலைவலியில், புருவத்திலும், நாசியின் பக்கமாகவும், வேதனைகாணும்; அல்லது ஒருபக்கத்துச் சிரசும், முகமும் வியாதிக் குள்பட்டிருக்கும்; இதில் வேதனையானது; சீதசுரத்தைப் போல் விட்டுவிட்டு காலக்கிரமமாய் நாள்தோறும் தவறாமல் வரும்; அல்லது, ஒரு நிறையில்லாமல் சிலநாள் விட்டிருந்து மறுபடியும் காணும். சிலரில் நோய் தணிந்து தணிந்து அடிக்கடி வருவதும் உண்டு; இதனை ஒற்றைத் தலைநோயென்று சொல்லுவர்; அர்த்தபேதரோகமென்று சீவரக்ஷாமிர்தத்தில் பேரிட்டிருக்கிறது. சூரிய உதயகாலத்தில் கண்டால், சூரியாவர்த்தரோகம் என்றும், மாலைக்காலத்தில் கண்டால் சந்திராவர்த்தம் என்றும் பேர். இந்தவியாதி சீதளத்தாலும், விஷக்காற்றாலும் காணுகின்றது.

சிகிச்சை.—இதற்கு குயினா, பாஷாணம் இவைகளை விதிப்படிக் கொடுத்துக்கொண்டுவந்தால், ரோகம் வசப்படும்; தேகசவுக்கியத்தையும் ரக்ஷிக்கவேண்டியது.

(4) ரத்தம் மூளையில் சேர்ந்து காணுகிற தலைவலியில், வேதனை முக்கியமாய் நெற்றி, பிடரிஇவைகளில் இருக்கும்; தேகத்தில் ரத்தம், பூரித்தும், முகம்ஊதலாயும், கண்கள் சிவந்து விம்மல்கொண்டும், நாடி பருத்தும், முகக்களை சோர்ந்தும் இருக்கும்.

சிகிச்சை.—கன்னப்பொறிகளில் அட்டைவிட்டு ரத்தமெடுத்தால், நன்மைக் கிடந்தரும். அடிக்கடி பேதிக்குக் கொடுத்து, கடும்பத்தியம்வைத்து, தேகத்திலிருக்கிற ரத்தம் குறையும்படிசெய்தால், இந்தரோகம் வசப்படும்.

(5) அக்கினி மந்தத்தால் காணுகிற தலைவலியில், வழக்கமாய் இடதுபக்கத்துக் கன்னப்பொறியிலாவது, அல்லது வலது கண்மேலாவது, நெற்றிமேலாவது வேதனையிருக்கும்; நோயாளி காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கிற நேரத்தில் காண்பதுவழக்கம். வியாதி அல்பமாய் இருந்தால், போஜனம் செய்தபிறகு வேதனை நீங்கிவிடும். பலப்பட்டிருந்தால், ஒரேஸ்தானத்தில் வேதனை நின்றிருந்து குமட்டல், வாந்தி இவைகளையுண்டாக்கும். இதில் புத்தி பலவிஷயங்களின்மேல் வியாபிக்கும்; பார்வை மந்தப்படும்; காதில் இரைச்சலுண்டு; ஒவ்வொருவேளை பித்தநீர் வாந்தியான உடனே வேதனை நீங்கிவிடும். வயிற்றில் வாயு அதிக்கிரமித்து உபத்திரவப்படுத்துகிறதும் உண்டு; இந்தச்சாதி தலைவலி மந்தத்தினாலும், அடிக்கடி பேதிக்கு எடுத்துக்கொண்டு குடலை பலவீனப்படுத்துவதனாலும் பிறக்கின்றது.

(6) மூளையின் வியாதியால் காணுகிற தலைநோயில், வேதனை தலைக்குள்ளிருக்கும்; தலையை அசைக்குதல், சந்தடி, சிந்தனை இவைமுதலியவைகளால்நோய் அதிகப்படும். இந்த வியாதி முடிவில், பாரிசவாதம். இசிவு முதலிய சன்னி இவைகள் சிலவேளை சம்பவிக்கும்.

சிகிச்சை.—மூளையில் அதிக ரத்தம் இருக்கிற குறிகள்காணப்பட்டால், அட்டைவிட்டு ரத்தம் எடுத்து, பேதிமருந்துகளை அடிக்கடிப் பிரயோகித்து பிடரியில் பிளிஸ்டர் (Blister) போட்டுப் புண்ணாக்கி, விஷநீரை வெளிப்படுத்திவிடவேண்டியது. சரீரம் இருக்கிற ஸ்திதியை அறிந்து, பத்தியம் முதலியவைகளை நடப்பிக்கவேண்டுபது.

அநேககாரணங்களால் தலைவலி பிறப்பதினால், உற்பத்திக்குக் காரணம் இன்னதென்று தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்த சிகிச்சையை நடப்பிக்க வேண்டியது. அநேகரில் காரணங்களை தெரிந்துகொள்ளுவது வெகு பிரயாசையாய் இருக்கும்; சுரம், க்ஷயம், காதுவலி, பல்வலி இவைமுதலிய வியாதிகளில் தலைவலி தொடர்ந்திருப்பதும் உண்டு; தகுந்த ஔஷதம் கொடுத்து ரோகத்தை கண்டித்தால், தலைவலி தானாய் நீங்கிவிடும். தலைக்குமாத்திரம் சிகிச்சைசெய்தால், பிரயோஜனமிராது.

சூதக அக்கிரமத்தால் காணுகிற தலைவலிக்கு, அயம் கொடுத்தால் சுகுணம்பிறக்கும். அதிகாலையில் காணுகிற தலைவலிக்கு, கைகளைத் தலைக்குமேல் நீட்டிவைத்துக் கொண்டிருந்தால், சவுக்கிய முண்டாகுமென்று கண்டிருக்கின்றது. மேல் விவரித்த சிகிச்சையோடு, இதற்கடியில் கண்டிருக்கிறவைகளையும், தலைநோவுக்கு பரீக்ஷிக்கலாம்:—குளிர்ந்த ஜலமாவது, பாலாவது தலைக்குப் போடலாம்; யுடிக்கலாம் (Eau de cologne) என்கிற மருந்தையும் தடவலாம்; பிடரிமேல் குடுவைப்பரி (Dry Cupping) யிடலாம்; கடுகையாவது, சுக்கையாவது அரைத்துத் துணியில் தடவிப் போடலாம்; போஜனம்செய்து வயிறு நிறைந்திருக்கும்போது, தலைவலி கண்டால், லேசான வாந்திக்குக் கொடுத்து, வயிற்றிலிருப்பதை வெளிப்படுத்திவிடவேண்டியது. மலபந்தத்தால், கண்டால் விரேசனத்துக்குக் கொடுக்கவேண்டியது. வேப்பிலை, நொச்சிலை, தும்பையிலை இவைகளைத் தண்ணீரிலிட்டு, வேகவைத்து, இறக்கி, ஆவியை வேதுபிடிக்கச்செய்யலாம்; ஆவி அடங்கிவிட்டால், செங்கல்லைப் பழுக்கக் காய்ச்சி அதில் போட்டால், ஆவி மறுபடியும் பிறக்கும். மாவிலங்கப்பட்டையை இடித்து, வறுத்து, சிரசிலும் பிடரியிலும், ஒற்றிடஞ் செய்யலாம். சுக்கு, திப்பிலி, மஞ்சள், சதகுப்பை, மிளகு, கர்ப்பூரம் இவைகளை ஓர் நிறையாய் எடுத்து, குன்றிமணிஇலை ரசம்விட்டு மைபோல் அரைத்து, துணியில்தடவி, உருட்டி, கொளுத்தி, புகையை ஆக்கிராணிக்கச் செய்யலாம். தயிலங்களையும், இலைரஸங்களையும், நசியமிடுவது நாட்டுவழக்கம் அபினி, சுக்கு, சாம்பிராணி, கஸ்தூரிமஞ்சள் இவைகளைச் சேர்த்து, அரைத்து, தலைக்குப் பத்துபோடலாம்; மிளகை, முலைப்பால்விட்டு அரைத்துக் கொதிக்கவைத்து, நோயிருக்கிற ஸ்தானத்தில் பூசுவதும் உண்டு. அரக்கு சந்தனாதிமுதலிய தைலங்களில் எதையாவது, காலையில் தலைக்குத் தேய்த்து, ஸ்நானம் செய்துவைக்கலாம். இந்தவியாதி, ஔஷதங்களுக்கு வசப்படாவிட்டால், நல்லகாற்றும் ஜலமும் உள்ள ஊர்களுக்கு நோயாளியை அனுப்பி, அவ்விடத்தில் சிலநாள் வாசம் செய்யும்படி செய்தால், ரோகம் நிவர்த்தியாகும்.

7. ஸ்தம்ப ரோகம்.

பொராலிஸிஸ், PARALYSIS.—பால்ஸி, PALSY.

பிரதிபதங்கள்.—வாதரோகம். கைகால் அசைவற்றுப்போகுதல்.

ஓரிடத்திலாவது அல்லது பலவிடங்களிலாவது, ஸ்பரிசமாவது, சலனமாவது அல்லது இரண்டுமாவது இல்லாமல் போவதற்கு, ஸ்தம்பரோகமென்று பேர். ஸ்பரிசமும், சலனமும், கெட்டிருந்தால், பூரணம் (பெர்பெக்ட், Perfect) என்றும், ஒன்றுமாத்திரம் கெட்டுப்போனால் அபூரணம் (இம்பெர்பெக்ட், Imperfect) என்றும், சொல்லப்படும். அசைவுமாத்திரம் இல்லாமல் போகுதலுக்கு, (அஸினிஸியா, Acinesia) என்றும், ஸ்பரிசமில்லாமல்போகுதலுக்கு. திமிர் (அனிஸ்தீஸியா, Anæsthesia) என்றும் பேர். இந்த ரோகம் சர்வாங்கத்திலாவது, அல்லது ஏகாங்கத்திலாவது, காண்பதுண்டு. ஒருபக்கமாத்திரம் கண்டால், பாரிசவாதம் (ஹெமிபிளீஜியா, Hemiplegia) என்றும்—கால்கள் சுவாதீன மில்லாவிட்டால், அதோ அங்கவாதம் (பாரெபிளீஜியா, Paraplegia) என்றும் பேர் முகம், கால் அல்லது பாதம் இவைகளில் எதிலாவது கண்டால், (லோகல் பொராலிஸெஸ், (Local paralysis) என்று பேர். அசைவற்ற சதைகள் க்ஷீணித்துவிட்டால், அதற்கு, க்ஷீணவாதம், (வேஸ்டிங் பால்ஸி, Wasting palsy) என்ற பேர். நேத்திரநரம்புக்கு வாதம் கண்டு, பார்வை தெரியாமல் போவதற்கு, விழிகண் குருடு (அமரோஸெஸ், Amaurosis) என்றும்—இமைகளுக்குக் கண்டால், நேத்திரவாயு (டோஸிஸ், Ptosis) என்றும்—கேழ்வி நரம்புகளுக்குக் கண்டால், செவிடு (டெவ்னெஸ், Deafness, cophosis) என்றும்—வாசனை நரம்புகளுக்குக் கண்டால், கந்தநாசம் (லாஸ் ஆவ் சுமெல், Loss of smell, aenosmia) என்றும், ருசிநரம்புகளுக்குக்கண்டால், ரஸநாசம் (லாஸ் ஆவ் டேஸ்ட், Loss of taste, ageustia என்றும், சொல்லப்படும். இவைகளன்றியில், சில ரோகங்களால் வாதரோகம்காணும்; ரசத்தினால் கண்டால், ரஸவாதரோகம் (மெர்க்கியூரியல் பால்ஸி Mercurial palsy) என்றும்—வங்கத்தினால் கண்டால், வங்கவாதரோகம் (லெட் பால்ஸி, Lead palsy or saturuine palsy) என்றும் பேர். கம்பவாதம் (பொராலிஸிஸ் அஜிடான்ஸ், Paralysis agitans) என்றும் ஒருசாதி வாதரோகமுண்டு.

காரணங்கள்.—இந்த துஷ்டரோகத்துக்குக் காரணங்கள் அநேகமுண்டு; அசதிசந்நி, மூளையில் வித்திருதிகட்டி காணுதல், மூளை மிருதுவாயாவது, திரடமாயாவது போகுதல், மூத்திரக்குண்டிக்காயின் வியாதி, காக்கைவலி, மேகரோகம், முள்ளந்தண்டுக்கொடியின் வியாதி, ஸ்பரிசநரம்பில் அழுத்தம் காணுதல் மாமிஸவியாதி, சூதகவாயு, ரசம் வங்கம் இவைகளின் விஷங்கள், ஆகிய இவைகள் வாதரோகங்களுக்குக் காரணங்களாகின்றன.

1. சர்வாங்கவாதரோகம்

(ஜெனரல் பொராலிஸெஸ், general paralysis). சர்வாங்கத்திலும் உணர்ச்சியும், அசைவும் இல்லாமல் போகுதலுக்கு, சர்வாங்கவாதரோகமென்று பேர்; இந்த சாதிவாதம் கண்டால், உடனே மரணம் சம்பவிப்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. கரசரணங்கள்மாத்திரம், ஸ்தம்பித்துவிடுவதற்கு, இந்தப்பேர் இடப்படும். உன்மத்தர்களுக்குக் காணுகிற சர்வாங்கவாதத்தை இதனோடு சேர்க்கலாகாது.

2. பாரிசவாதம்.—அர்த்தாங்கவாதம், பக்ஷவாதம், பக்வாதம். (ஹெமிபிளீஜியா, Hemiplegia). இதில் பாதிசரீரம் ஸ்தம்பித்து, காலும், கையும், சுவாதீனத்துக்கு வாராமல்போய்விடும். ஸ்தம்பரோகங்களில், இந்த ஜாதிதான் சாதாரணமாய்க் காணுகின்றது. வலதுபக்கத்தைப் பார்க்கிலும்,இடதுபக்கத்தி லதிகமாகக் காண்பது வழக்கம். கைமாத்திரம் அசைவற்றுப்போவதுமுண்டு; ஒவ்வொருவேளை,ஒருபக்கத்துக்கையும், மற்றொருபக்கத்துக்காலும், விழுந்துவிடுகிறதாயும் தெரியவருகின்றது. வாயின் ஓரம் வியாதிகாணுதபக்கமாய் இழுத்துக்கொண்டிருக்கும். நாக்கை நீட்டச்செய்தால், நாக்கின் முனையானது, வியாதிகண்டிருக்கிற பக்கமாய்த் திரும்பியிருக்கும்; வார்த்தைடுளரும்; கண்ணிமைகள் அசைவற்று கண்ணை மூடிக்கொள்ளும்; கிஷ்ணமண்டலத்துவாரம் விரிந்திருக்கும்; கொஞ்சம் கெருடபார்வை இருப்பதுமுண்டு; ஒவ்வொருவருக்கு ஸ்பரிசம் கெடும்; புத்தி விகற்பப்படுவது வழக்கம். ஆனால், பேதப்படாமல் இருப்பதும் காணலாம்; ஞாபகசத்தி குறையும்; கண்ணீர்வடிவதும் அற்பவிஷயத்துக்கெல்லாம் விசனமடைகிற தன்மையுமுண்டு. பேசும்போது வார்த்தைகள் மனதுக்கேறுவது பிரயாசையாய் இருக்கும். ஒருவேளை வசதம்கொண்ட கையாவது, காலாவது, முடங்கிப்போவதுண்டு. வியாதி சாத்தியத்துக்கு வரும்படியாய் இருந்தால், பிரதமையில் காலில் சுகுணம் காணப்படும்; அசாத்தியத்தில் விழுந்துவிட்டால், கரசரணங்கள் சுஷ்கித்துவிடும். வியாதிகண்டபக்கம் சில்லிட்டிருப்பது வழக்கம். மூளைமிருதுவாகிவிட்டால், வியாதிகொண்ட கையாவது, காலாவது, இழுத்துக்கொண்டு பிகிவுற்றிருக்கும்.

காரணங்கள்.—பக்கவாதமானது மூளைவியாதியால் காணுகின்றது இதில் ஒரு கிரமமுண்டு; அதென்னவெனில், வலதுபக்கத்து மூளைக்கு வியாதிகண்டால் இடதுகாலும், கையும்—இடதுபக்கத்து மூளைக்கு வியாதிகண்டால் வலதுகாலும், கையும், விழுந்துவிடும். முள்ளந்தண்டுக்கொடியில் ஒருபக்கம் வியாதிகண்டு இந்தரோகம் காண்பதும் உண்டு; அப்போது வியாதி கண்டபக்கமாய் இருக்கிற காலும், கையும், அசைவற்றுப்போகும். ஆகையால், பக்கவாதத்தில், மூளையைச்சார்ந்தது ஒன்று (cerebral paralysis)—முள்ளந்தண்டுக்கொடியைச் சார்ந்ததுஒன்று (spinal paralysis) ஆக இரண்டுசாதிகளுண்டு. ஸ்தம்பவாதத்தில் சலனமே இல்லாமல்போவது பிரதானலக்ஷணம். ஸ்பரிசம் ஒவ்வொருவேளைமாத்திரம் கெட்டுப்போவதுண்டு. இதில் கையையும், காலையும் அசைக்கக்கூடாதவனாய் இருந்தபோதிலும், இறகால் பாதத்தைச் சீண்டினால், கரசரணங்களில் சலனம் பிறக்கும், அதனால் ரோகிக்கு சந்தோஷம் உண்டாகாமல் போகாது.

சிகிச்சை.—பக்ஷவாதத்துக்கு இரத்த மெடுப்பதில் பிரயோஜனம் இல்லை. நல்ல பேதியாகும்படி ஜாலப், நேர்வாளம், சிவதைவேர், ரஸபஸ்பம் முதலியவைகளைக் கொடுப்பதில் அனுகூலமுண்டு. சில சிகிச்சைகர், சிரசிலும், கழுத்திலும், ரணமாக்குவதும், (ஸீடன், Seton) என்னும் நூல்திரியை கழுத்தில் கோர்க்கிறதும் உண்டு; இதற்கு சிகிச்சை செய்யும்போது, வைத்தியன் ரோகியுடைய கையையும், காலையும், முடக்கிப்பார்த்து, சதைகள் ஏதாவது பிகிவுற்றிருப்பதும், இல்லாததும் கண்டறிந்து, அசைவற்றுப்போன கைகால்களின் சதைகள் தளர்ந்து இருந்தால், மூளை க்ஷீணமடைந்திருக்கிறதென்று நிச்சயிக்கவேண்டியது. மூளைக்குத் தகுதியான ரத்தம் போகாமல், மூளை வெளுத்து மிருதுவாகிவிடும்; ஆகையால், அதைக் கண்டறிந்து, ஒயின் சாராயமும், நல்ல ஊட்

டமும், அம்மோனியா முதலிய ஔஷதங்களும் கொடுத்து உஷ்ணப் படுத்தி, தாருட்டியம் வரும்படிசெய்து ரோகத்தை வசப்படுத்தவேண்டியது. காலையும், கையையும் முடக்கிப் பார்க்கும்போது, சதைகளுக்கு ஒருவேளை பிகிவுகண்டிருந்தால், ரத்தபிந்து உறைந்து மூளையில்தங்கி அதிர்ச்சிகண்டிருக்கும்; அதற்கு, பேதிமருந்துகளும், பிளிஷ்டரும், ஐயோடைட் ஆவ் பொடாஷியமும், உபயோகிக்கவேண்டியது. ஸ்தம்பவாதம் கண்டு நாட்சென்றுவிட்டால், எட்டிக்கொட்டையின் உப்பை கொடுக்கலாம்; மூளையில் வியாதியில்லையென்று நமக்கு நிச்சயமாய்த் தெரிந்தபோது, எட்டிக்கொட்டை உப்பில் (ஸ்டிரிக்னியா, Strychnia) அரைவீசம் கிறேன் வீதம் சாக்கிரதையாயக் கொடுத்துப் பார்க்கலாம். (ஒரு கிறேன் உப்பை 20-30-பாகமாய்ச் செய்துகொள்ளவும்). இந்த மருந்து உடம்பில் பற்றினால், அசைவில்லாத சதைகளில் அசைவுகாணும்; அப்போது, மருந்தைத் தாமசித்துக் கொடுக்கவேண்டியது. காலையும், கையையும், கைகொண்டு தேய்ப்பதினால் சுகுணம்பிறக்கும். கர்ப்பூரத்தைலம், நேர்வாளப்பூசுத்தைலம், விஷமுட்டித் தைலம் முதலிய பூசுத்தைலங்களில் ஏதாவது தேய்த்துக்கொண்டுவரலாம். சர்வசிராகம்ப யந்திரத்தையும் (Galvanism) உபயோகிப்பதுண்டு; ஆனால், மூளையில் வியாதிகண்டிருக்கும்போது, அதை உபயோகிக்கலாகாது. வெட்டிவேரையாவது, பேய்மிரட்டி இலையையாவது, ஜலத்திலிட்டுக் காய்ச்சி, கண்டஸ்நானம் செய்துவைக்கலாம். கடுகுபற்றை நடுமுதுகுக்குப் போடலாம்; தேகதாருட்டியத்தைக் குறைத்து, சிகிச்சைசெய்யவேண்டிய தருணங்களில், வாதாதி எண்ணெய்களைக் கொடுத்துப் பரிகரிக்கலாம்.

Remedies.—Rest; saline purgatives; nux vomica; strychnia; electricity; friction of tincture of nux vomica, mustard, turpentine, cantharides, &c.

3. அதோ அங்கவாதம்.—அரைவாதம், இளம்பிள்ளை வாதம். (பாரெபிளீஜியா, Paraplegia).—கால்கள் மாத்திரம் அசைவற்றுப் போகுதலுக்கு, அதோ அங்கவாதமென்று பேர். இந்தசாதி ரோகத்தைக் குழந்தைகளில் மிகுதியாய்க் காணலாம். இது மெதுவாய் ஆரம்பிப்பது வழக்கம். முதல் கால்களுகக்கும், பாதங்களுக்கும் க்ஷீணமும், திமிருங் கண்டு, பிறகு மேற்படி ரோகம் காண்பதுண்டு; எறும்பு நகருதல்போல் உணர்ச்சி (Formication) (வேதனையில்லாமல்) காண்பது வழக்கம். படிப்படியாய் க்ஷீணம் வர்த்தித்து, சலனமும், ஸ்பரிசமும், கால்களுக்கு இல்லாமல், மூத்திரப்பை, குதம் இவைகளுடைய அசைவும் அற்றுப்போகும். ரோகி மல்லாக்கவே படுத்துக்கொண்டு இருக்கவேண்டியதாய் இருப்பதால் பிரட்டங்களில் ரணங்கள் காணும்; அவைகளால், சீக்கிரம். பரமபதமடைவான். மூத்திரம் இறங்காமல், தாமசித்திருந்தால், நார்போல் ஆகி, அதில் துர்வாசனையும், நெடியும் உண்டாகும். இராத்திரி நித்திரைகாலங்களில், சதைகளுக்குத் துடிப்புகண்டு, ரோகியை மெத்த அலட்டிவிடும். முள்ளந்தண்டு கொடிக்காவது, அல்லது அதின் சவ்வுகளுக்காவது, வியாதிகண்டு இந்தரோகம் பிறக்கின்றது. அவைகளுக்கு காயம் படுவதினாலும் மேற்படி ரோகம் காணும்.

சிகிச்சை.—இந்த வியாதிக்குச் சிகிச்சை செய்வதில், கொடிக்காவது, அதின் சவ்வுகளுக்காவது, தாபனக்குறிகள் இருப்பதும் இல்லாததும் கண்டறியவேண்டியது. சதைகளுக்குப்போகிற நரம்புகளுக்கு அதிக

ரத்தத்தால் அதிர்ச்சிகண்டால், இசிவு, கொறுக்கைவலி, படபடவென்று சதைகள் அடித்துக்கொள்ளல், ஆண்குறி விம்மல்கொள்ளல் ஆகிய இவைகள் காணும். ஸ்பரிசநரம்புகளுக்கு அதிர்ச்சிகண்டால், நமைச்சல், முள்கள்போல் சொறிதல், சூடாய் ஆவது, குளிர்ச்சியாய் ஆவது இருப்பதுபோல் உணர்ச்சி, மாம்சக்ஷீணம், படுக்கைவிரணம், மூத்திரத்தில் நெடியுண்டாகுதல் ஆகிய இவைகள் பிறக்கும். இதில் ரத்தம் அதிகமாயப் பிரவேசிக்காமல் செய்யவேண்டிய தாகையால், அர்க்கட் ஆவ்ரை, பெல்லெடோனு இவைகளைக் கொடுக்கலாம். இம்மருந்துகளுக்கு மிஞ்சின ஔஷதங்கள் ஒன்றுமில்லை. அர்க்கட்டில்5-6-கிறேன் விதம், தினத்துக்கு 2-ஆவர்த்திகொடுத்து, பெல்லெடோனுவை (ஊமத்தை) முள்ளந்தண்டின்மேல் பற்றுப்போடலாம். இவைகளால் கொஞ்ச நாளைக்குள் சுகுணம்பிறக்காவிட்டால், ஐயொடைட் ஆவ் பொடாஸியம், மீன்எண்ணெய் இவைகளில் எதையாவது கொடுக்கலாம். நித்திராபங்கத்துக்கு, அபினி கொடுக்கலாகாது; கஞ்சா, குரோசானிவோமம், கோனியம் இவைகளைக் கொடுக்கலாம், நல்லபோஜனம், பீர், ஒயின் முதலிய மதுவினங்கள் இவைகளும நன்மைசெய்யும். கால்களுக்கு மின்தாது யந்திரப்பிரயோகம், உஷ்ண பூசுத்தயிலத்தேய்ப்பு, பிடிப்பு இவைகள் செய்துவைக்கலாம். முள்ளந்தண்டுக்கொடிக்கு போஷணைகுறைந்து இந்த வாதரோகம் கண்டால், மருந்து, போஜனம் இவைகளால் ரத்தவிருத்தி செய்துவைக்கவேண்டியது. எட்டிக்கொட்டையின் உப்பைக்கொடுக்கலாம்; அயமும், குவைனுவும் நன்மைசெய்யும். சிரசும் கால்களும் எடுப்பாய்வைத்து, மல்லாக்கச் சயனித்திருக்கும்படி ரோகியைச் செய்யவேண்டியது. வயிற்றுக் கிருமிகளைப்போக்குவதிலும், மூத்திர விகற்பங்களை நீக்குவதிலும், சொறிசிறங்கு கரப்பான் முதலிய சருமரோகங்களை சொஸ்தப்படுத்துவதிலும், இளம்பிள்ளை வாதம் ஒவ்வொரு வேளை நீங்கிவிடுவதும் உண்டு.

4. அர்த்திதவாதரோகம்.—அர்த்தமுகவாதம். (Paralysis of the face).-சிலருக்கு முகத்தில் பாதிவியாதிகொண்டு, முகலக்ஷணமே இல்லாமல் போய்விடும்; (போர்ஷியோடியூரா, portiodura) என்னும் நரம்புக்கு வியாதியுண்டாகி இந்தரோகம் பிறக்கின்றது. இதில் கண்ணிமைகளை மூடப்பிரயாசையாய் இருக்கும். கன்னம் தளர்ந்து தொங்கலிடும்; வாய் ஓரம் கீழ்க்கிறங்கி இருக்கும்; இது அபாயத்தை உண்டாக்காது. குளிர்ச்சி, சொத்தைப்பல், குழந்தைகளுக்கு காது விரணம் ஆகிய இவைகளால் மேற்படிவியாதி சம்பவிக்கும். விரேசனம் பலகாரிமருந்துகள், ஜெயாடைட் ஆவ் பொடாஷியம், கால்வெனிசம் ஆகிய இவைகளைக்கொண்டு, இதை வசப்படுத்தவேண்டியது. Remedies. Aperients; touics; iodide of potassium; galvanism.

5. கம்பவாதம்.—நடுக்குவாதம். (பெராலிஸெஸ் அஜிடான்ட்ஸ், Paralysis Agitants. ஷேகிங்பால்ஸி, shaking Palsy).—இந்த ரோகத்தில், நடுக்கல் விடாமலிருக்கும். பிரதமையில், விரல்களிலாவது, சிரசிலாவது பிறந்து, பிறகு மெதுவில் சர்வாங்கம் வியாபிக்கும். இது அசாத்திய ரோகம்; ஸ்பரிச நரம்புகளுக்கு வியாதிகண்டு, இந்த ரோகம் பிறக்கின்றது.

சிகிச்சை.—சரீரம் நல்ல ஸ்திதியிலிருந்து, தகுதியான சிகிச்சைசெய்தால், ரோகம் ஒருவிதமாய் வசத்துக்குவந்தாலும் வரும்; அயமும், நல்ல ஊட்டமும் கொடுப்பதில், பிரயோஜனமுண்டு.

8. காக்கைவலி

பிரதிபதங்கள்.—அபஸ்மாரரோகம்.

எபிலெப்ஸி, EPILEPSY.

லக்ஷணங்கள்.—அசுப்பில் இந்த வலிகாணும்; காண்பதற்குமுன், கீச்சக்குரலிட்டு உரக்கக் கூவிக்கொண்டே சுமார்க்கமில்லாமல் பூமியில் மேல் விழுந்துவிடுவான். பிறகு உதறலும், மூச்சுதிணாறலும் காணும்; முகம் விம்மி நீலநிறமாகி, புருவங்கள் நெருங்கி விகாரமாய்க் காணப்படும்; வாயிலிருந்து நுரை வெளிப்படும்; தொண்டை அடைத்திருப்பது போல் சப்தம் கேழ்விப்படும்; கண்கள் உற்றுப்பார்வையாய் அசையாமலிருக்கும்; அல்லது, மேலுக்குருண்டு வெள்விழிமாத்திரம் காணப்படும்; விரல்கள் முடங்கியிருக்கும்; கைகள் புரளும்; பற்கள் கிட்டிக்கொண்டிருக்கும்; மேலுதடாவது, நாக்காவது,பற்கள் சந்தில் சிக்கிக்கொண்டு காயப்படுவதுமுண்டு; ரோகியை பார்த்தால், பிராணனை விடுகிறவனைப்போல் காணப்படுவான். மேற்கண்ட குறிகளெல்லாம், சீக்கிரத்தில் படிப்படியாய்க் குறைந்து, தணிந்து, அயர்ந்து நித்திரைப்பிறந்து, பிறகு சவுக்கியமாய் எழுந்திருந்து தன் அலுவலைப்பார்ப்பான். வலியானது, சுவார் 5-8- நிமிஷம்வரையில் இருப்பது வழக்கம்; ஆனால், $\frac{1}{2}$-மனிநேரம் இருப்பதும் உண்டு. இந்த ரோகக்குறிகள் சிலருக்கு அற்பமாயும் சிலருக்கு உக்கிரமாயும் காணப்படும்.

காரணங்கள்.—இந்த துஷ்டவியாதி பாரம்பரையாய்ச் சிலருக்குக் காணும்; மாதவிடாய் அக்கிரமத்தால், ஸ்திரீகளுக்குக் காணுகின்றது. அதிக சம்போகம், அதிக மதுபானம், அஸ்தப்பிரயோகத்தினல் இந்திரியத்தை ஸ்கலிதப்படுத்திக்கொள்ளுகிற துஷ்டக்கிருத்தியம் ஆகிய இவைகளும் மேற்படி ரோகத்துக்குக் காரணங்களாகும். பயம், சிரசில் அடிபடுதல், உன்மாதம், பல்வேதனை ஆகிய இவைகளாலும், மேற்படி ரோகம்பிறக்கும். இந்த வியாதியோடு அஜீரணம், மலபந்தம், நித்திராபங்கம், ஸ்திரீகளுக்குக் கருப்பமேகம், சொப்பனஸ்கலிதம் ஆகிய இவைகளில் ஒன்று ஒவ்வொருவேளை தொடர்ந்திருப்பதும் உண்டு.

ரோகநிதானம்.—சூதகசந்நிக்கும், அசதிசந்நிக்கும், காக்கை வலிக்கும் இருக்கிற வித்தியாசங்களை நாம் கண்டுகொள்ளவேண்டியது. காக்கை வலியில், அறிவு சுத்தமாய் இல்லாமலிருக்கும்; ஒருவித கூச்சலோடு வலி ஆரம்பிக்கும்; அது நின்றபிறகு, அயர்ந்த நித்திரை பிறக்கும்; வாயிலிருந்து நுரைவெளிப்படும்; முகம் குரூபமடைந்திருக்கும். சூதகஜந்நியில், மேல்கண்ட லக்ஷணங்களிராதுகள். அசதிசந்நி ரோகத்தில் வியாதி தாமசித்து, குறட்டைச் சுவாசம் கண்டு, கைகால்கள் அசையாமலிருக்கும்.

சிகிச்சை.—வலி கண்டிருக்கும்போது செய்யவேண்டிய சிகிச்சையாவது.—ஆளை அகல பஞ்சணையின்மேல் படுக்கவைத்து, தலையை உயர்த்தி, ஆடையாபரணங்களைத் தளர்த்தி, காயம்படாமல் பக்கத்திலிருப்பவர்கள் பிடித்துக்கொண்டு, பற்சந்தில் துணியாவது, கொம்பாவது வைத்து, நாக்குக் காயம்படாமல் செய்து, சிரசின்மேல் ஈரத்துணியைப்போட்டு வைக்கவேண்டியது. வலி காண்பதற்குமுன் எறும்பு நகருதல்போல் காலிலாவது, கையிலாவது காண்பது வழக்கம். அது காணும்போது அந்த இடத்துக்கு

ஊர்த்தமுகமாய் இறுகக்கட்டிவைத்தால், வலிவராமல் நின்றுவிடுமென்று கண்டிருக்கின்றது. இனி இடையில் செய்யவேண்டிய சிகிச்சையாவது, ரோகியுடைய தேகத்தைத் தேற்றி, நரம்புகளுக்கு தாரூட்டியம் வரும்படி யாய்ச் செய்யவேண்டியது; சரீரபலத்தைக் குறைத்தால் கெடுதி சம்பவிக்கும்; அயம், நாகம், ரஜிதம் இவைகள் கொடுக்கவுதவும். ஒரு ஆக்ஷேபனை யும் இல்லாவிட்டால் சகஸ்திரதாராமஞ்சனம் செய்துவைக்கலாம். நித்திரைவரும்படிச் செய்வதில், சுகுணமுண்டு. போஜனம் அற்பமாயும், போஷணையுள்ளதாயும் இருக்கவேண்டியது; சாராயஇனங்கள்உதவாது. துஷ்டநடத்தைகளை விலக்கவேண்டியது. காலையில் காற்றோட்டமாய் உலாத்தச்செய்தால் சுகுணமுண்டு. மலஜலாதிகளைக் கிரமத்தில் வைப்பது ஒரு முக்கிய விஷயம். இந்த அசாத்திய வியாதிக்கு அநேக ஔஷதங்கள் கொடுத்து பரீக்ஷித்ததுண்டு, பூர்த்தியாய் எதிலும் நீங்கினதில்லை.

9. சூதகசந்நி

ஹிஸ்டீரியா, HYSTERIA.—ஹிஸ்டிரிக் பிட், HYSTERIC FIT.

இது நரம்பைப்பற்றின வியாதி; விட்டுவிட்டுவரும்; சந்நிவரும்போது மூத்திரம் தெளிவாய் இறங்கும்; இடதுபக்கமாய் அடிவயிற்றில் வேதனையும் இரைச்சலும்காணும்; உருண்டையாய் மேலுக்கேறி தொண்டையை அடைப்பதுபோல் தோற்றும் (Globus hystericus); சிலவேளை வலிகாணும். ஸ்திரீகளுக்கு முக்கியமாய்க் காணுகிற இந்த ரோகமானது, சூதக ஆரம்பமுதல் அது நிற்கிற காலம்வரையில் அவர்களை உபத்திரவிக்கும்.

லக்ஷணங்கள்.—இந்த வியாதிக்குடைய குறிகளாவன:—கைகால்களில் இசிவு, விரல்களை முடக்கிக்கொண்டு மார்பில் அடித்துக்கொள்ளல், சிரோரோமத்தைப் பிச்சிக்கொள்ளல், மார்பில் உருண்டையாய் ஏறி அடைப்பது போலிருக்குதல், வலி தணியும்போது கண்ணீர்வடிதல், அழுதல், அல்லது நகைக்குதல், சிலவேளை விடாதவிக்கல் காணுதல்,ஒவ்வொருவேளை பிரக்ஞையில்லால் அயர்ந்து விழுந்துவிடுதல், ஆகிய இவைகளாம். இவ்விதமாய்க் கொஞ்சநேரமிருந்து தெளிவு பிறக்கும்; வலி நின்றஉடனே நீர் தெளிவாயும், அதிகமாயுமிறங்கும்; சிலருக்கு வலியிருக்கும்போது, தெரியாமல் நீர் இறங்கிவிடுவதுமுண்டு.

இத்தியாதிகுணங்களை ரூபமாகப் பெற்றிருக்கிற இந்த வியாதியை, பிசாசு. சூனியம், ஏவல், சேஷ்டை என்று சொல்லி, மந்திரதந்திர பூஜை முதலியவைகளைச்செய்து, அம்மனுஷியை வீணில்உபத்திரவப்படுத்துகிறது வீட்டுவழக்கம். இவ்வித உபத்திரவத்தால், ஒருவேளை மனதுக்கு உச்சாகம் பிறந்து, வியாதி ஒருசுகுணமார்க்கமாய் வருவதும் உண்டு; ஆனல், தரித்திராம்சையிலிருக்கிற சிலமாதர்கள், மனமிரக்கமில்லாத பூசாரிகள் கையிலகப்பட்டுக்கொண்டு வீணில் ஹிம்சைப்படுகிறார்கள்.

சிகிச்சை.—சந்நி கண்டிருக்கும்போது, வஸ்திராபரணங்களைத் தளர்ச்சி செய்து, காயம்படாமல் மனுஷியை பிடித்துக்கொண்டு, நல்ல காற்றுள்ள இடத்தில் படுக்கவைக்கவேண்டியது. ஆக்கிராண வுப்பையாவது, திரிப்புகையையாவது முகரவைக்கலாம்; குளிர்ந்தஜலத்தை சிரசிலும், மார்பிலும் ஊற்றவேண்டியது. ஏதாவது பதார்த்தங்களை விழுங்கும்படியான பிரக்ஞை இருந்தால், பெருங்காயம், சடாமஞ்சி இவைகளின் பாவனதிரவத்தில்

எதையாவது கொடுக்கலாம். சந்நி நின்றபிறகு, வியாதி மறுபடியும் வராமல் தடுப்பதற்கு, மலச்சிக்கலை நீக்கி, பலகாரி மருந்துகளைக்கொடுத்து, தேகதாருட்டியத்தை விருத்திப்படுத்தவேண்டியது. ஸ்தூல சரீரப்பிரகிருதியுடையவர்களுக்கு, போஜனத்தைக் குறைக்கவேண்டியது. ரத்தம் குறைந்து தேகம் வெளுத்திருந்தால், அயம் கொடுக்கலாம். சூதகம் கிரமமில்லாமலிருந்தால், அதற்குத்தகுந்த மருந்துகளைக் கொடுத்து, அதைக் கிரமத்தில் கொண்டுவரவேண்டியது. இவ்விதிகளை அனுசரித்து சிகிச்சைசெய்தால் ரோகம் வசப்படுவதும் உண்டு இதில் ஸ்திரீயை நிர்விசாரமாய் வைப்பதே பிரதான சிகிச்சை. Remedies.—Cool air; ammonia to nostrils; valerian; Assafœtida; cold water; aperients; shower bath; iron; aloes.

10. சூலை

பிரதிபதங்கள்.—குத்தல்; குடைச்சல்; நோய்; வாதநோய்; வலி; வேதனை.

நியூரால்ஜியா, NEURALGIA.—பெயின், PAIN.

ஸ்பரிச நரம்புகளைப்பற்றிக் காணுகிற அதிக வேதனைக்கு சூலையென்று பேர். இதில் 80-சாதிகளுண்டென்று ஜீவரக்ஷாமிர்தத்தில் கண்டிருக்கின்றது. வேதனை ராத்திரிகாலங்களில் பிரபலமாய்க்காண்பது வழக்கம். இதில் வேதனை, வியாதிகண்ட ஸ்தானத்திலாவது, அல்லது வேறு ஸ்தானங்களிலாவது, நரம்பின் மூலத்திலாவது, அல்லது அதின் கிளைகளிலாவது இருக்கும். வேதனை விட்டுவிட்டு கிரமமாயாவது, அல்லது அக்கிரமமாயாவது வந்து உபத்திரவபடுத்தும். சூலையில் பலஜாதிகளுண்டு;—முகத்து நரம்புகளுக்கு வியாதிகண்டால், முகசந்நி என்றும்—சிரசுநரம்புக்கு வியாதிகண்டால், சூரியாவர்த்தவாதமென்றும்--பிரட்டத்து நரம்புக்கு வியாதிகண்டால், கிருத்திரசிவாதமென்றும்—இருதய நரம்புகளுக்கு வியாதிகண்டால், மார் அடைப்பு என்றும்—அன்னசய நரம்புகளுக்கு வியாதிகண்டால், குன்மம் என்றும் சொல்லப்படும்.

1. முகஜந்நி—(பேஷியல் நியூரால்ஜியா, Facial neuralgia; டிக்டலிரு Tic douloureux.)—மூளையிலிருந்து ஜநிக்கிற 5-வது ஸ்பரிச நரம்பின் வியாதிக்கு, முகசந்நி என்றுபேர். இந்நரம்புக்கு மூன்று கிளைகளுண்டு; முதல்கிளை நெற்றிக்கும்போகிறது; அதற்குவியாதிகண்டால், நெற்றியில் குற்றலும் குடைச்சலும் காணும். 2-வது கன்னத்துக்குப் போகின்றது; அதில் வியாதிகண்டால், கன்னம் கண்கீழ்ரப்பை நாசியின், பக்கம், மேலுதடு இந்த ஸ்தானங்களில், சகிக்கக்கூடாத வேதனைபிறக்கும். முகரைக்குப்போகிற 3-வது கிளைக்கு வியாதிகண்டால், கீழுதடு, ஈறு, பற்கள். மோவாய்க்கட்டை, நாக்கின்பக்கம், இவ்விடங்களில் குடைச்சல் காணும். முகசந்நியில் ஒரேபக்கத்தில் வேதனையிருப்பது வழக்கம்; வலதுபக்கமே சாதாரணமாய்க் காணுகின்றது. வியாதி ஆரம்பத்தில், முகத்தில் விருவிருப்பமாய் இருக்கும்; பிறகு எரிச்சலுடன், குற்றலும் குடைச்சலுமாய் மாறிவிடும். இந்த வியாதியால் நித்திரை பிடியாது அயர்ந்த நித்திரைப் பிறந்தால், வேதனை ஓட்டம் பிடிக்கும்.

காரணங்கள்.—அநேக காரணங்களால், முகசந்நியுண்டாகின்றது. முகத்தெலும்புகளின் வியாதி, மூளைவியாதி, விஷக்காற்று, சூதகஜந்நி, ஜீரண

உறுப்புகளின் தொழில் அக்கிரமப்படுதல் ஆகிய இவை முதலியவைகளாம். ஒவ்வொருவேளை காரணத்தைக் கண்டுகொள்வது பிரயாசை. இந்த ரோக முடையவருக்குக் கொஞ்சம் காற்றுவாடை பட்டபோதிலும், அல்லது சடு தியில் உடம்பு குலுங்கினபோதிலும், அல்லது தனவியாதியை ஞாபகத்துக் குக் கொண்டுவருகிற எந்த விஷயமானபோதிலும் வியாதி பிறக்கும்.

2. கிருத்திரசிவாதரோகம்.—(ஸையாடிகா. Sciatica)—தொடைநரம் புகளின் வியாதிக்கு, கிருத்திர சிவாதமென்று பேர். இதில், வேதனை பிரட்டத்திலிருந்து, தொடையின் பின்புறமாய் முழங்கால் மடிப்புவரையிலி றங்கி இருக்கும்; சிலரில் கால்நரம் புகளைப்பற்றி, பாதம்வரையில் ஓடுகிறது முண்டு; தொடைநரம்புகள் அழுந்தி இந்த வியாதி பிறக்கின்றது. மலபந் தம், அதிகநடை, சீதகாற்று, உடம்பில் ஈரம்படுதல் ஆகிய இக்காரணங்க ளாலும், இந்த வியாதி ஜனிக்கின்றது வாதரோகமுடைய மாதர்களுக்கு, பிரஸவித்தபிறகு, தொடையில் குடைச்சல் காண்பது வழக்கம். வியாதி களுக்கு ராத்திரி மேச்சல் காலமானபடியால், நோய் அதிக்கிரமித்து, நித் திராபங்கத்தால் ரோகிக்கு துர்ப்பலம் பிறக்கும். ஒருகாலில் காண்பது வழ க்கம்; இரண்டிலும் காண்பது அரிது. சதைகள் பிகிவுற்றிருப்பதால், நோ யாளி நொண்டிநடப்பான். இந்தப்பிணி சாவதானத்தில் ஸொஸ்தப்படும்.

சிகிச்சை.—வாதரோகத்துக்கு, முக்கியமாய் விளைவித்த காரணத் தை நீக்கினுல், வேதனை தணிந்துவிடும். ரத்தமதமுடையவர்களுக்கு, அடிக் கடி பேதிக்குக் கொடுத்து, பத்தியம்வைத்து, சரீரம் சுஷ்கமாகும்படி செய் யவேண்டியது. ரத்தக்ஷீணமும் துர்ப்பலமும் உடையவர்களுக்கு அயக் சிந்தூரமுதலிய பலகாரி ஔஷதங்களும், நல்ல ஊட்டமும், ஒயின் சாராய மும் கொடுத்து உடம்பைத் தேற்றினுல், நரம்பைப்பற்றிய வேதனைதற்செய லாய் ஓடிவிடும். இந்த வியாதி கீல்வாதரோகத்தோடு அனுசரித்திருந்தால், ஐயோடைட் ஆவ் பொடாஸியம், குவையாகம், கால்சிகம், கர்ப்பூரதைலம் இவை முதலியவைகளைக் கொடுத்து, வியாதியை வசப்படுத்தவேண்டியது. வேதனை விட்டுவிட்டு முறையாய் வருகிறதாய் இருந்தால் குவைனு, பார்க்ப வுடர், பாஷாணம் இவைகளில் ஒன்றை வேதனை வருவதற்குமுன் கொடுத் தால் அதைத் தடுக்கும். வெலரியநேட் ஆவ் அம்மோனியா என்னும் உப்பையும் கொடுக்கலாம், $\frac{1}{2}$-திராம் நவஷாரத்தை, $1\frac{1}{2}$-ஔன்ஸ் ஜலத்தில் கரைத்து, வேதனையிருக்கும்போது, மணிக்கு ஒருதரம் கொடுத்துக்கொண் டுவந்தால் சுகுணத்தைத்தரும். சகிக்கக்கூடாத வேதனையிருந்தால், குளோ ரோபாரம் முகரவைக்கலாம். கிருத்திரசிவாதரோகத்தை, பேதிமருந்துகள் குடுவைப்பரி, தேய்ப்பு, வெந்நீர் முதலிய ஒற்றிடம் இவைமுதலியவைகளால் வசப்படுத்த வேண்டியது.

வேதனைகளுக்கு, அபினித்தைலம் தேய்க்கலாம்; பிளிஸ்டர்போட்டுப் புண்ணாக்கி அதில்மேல் மார்பியா என்னும் மருந்தோடு, சருக்கரை கலந்து போட்டால், வேதனைதணியும். கால்வானிக் மெஷின் (Galvanic Machine) என்னும் யநதிரப்பிரயோகமும் செய்யலாம்; கர்ப்பூரத்தைலத் தேய்ப்பு, லேப னங்கள், அஸ்வகந்தி சூரணம், வச்சிர பீஜக் குடித்தைலம், விஷமுட்டித் தைலம், நாபி ஆகிய இவைகளுக்கும் வியாதி வசப்படும்.

3. சூரியாவர்த்தவாதம் —ஹெமிகிரேனியா, Hemicrania—sun pain). இதில் ஒருபக்கத்துக்கு, புருவமும், நெற்றியும் வேதனையெடுக்கும்; குமட்டலும் தொடர்ந்திருப்பதுண்டு; துர்ப்பலத்தினுல் பிறப்பது வழக்கம்.

பிரதிதினமும் சூரியஉதயத்தில் கண்டு, மத்தியானம்வரைவில் அதிக்கிரமித்து, பிறகு வெயில்தாழும்போது வேதனையும் அடங்கிவிடுகிற தன்மையிருப்பதால், சூரியவர்த்தவாதமென்று பெயர்பெற்றது; இதற்கும் மேற்குறித்த சிகிச்சையேசெய்து, ரோகத்தை வசப்படுத்த வேண்டியது.

திமிர்:—(அனிஸ்தீஷிசியா, Anæsthesia—நம்னெஸ், Numbness.) இதனைத் திமிர்ப்புடை, மேகப்புடை, திமிர்வாதம், பிரசுபதிரோகம் என்றும் சொல்லுவர். சருமநரம்புகளின் உணர்ச்சி கெடுவதே திமிர்வாதமாம் பஞ்சேந்திரிய நரம்புகளும் கெடுவதுண்டு; எதற்காவது ரோகமுண்டானால் அந்தப்புலனின் தொழில்கெட்டுப்போகும். திமிர்ப்புடை சவுக்கியமடைவது பிரயாசை. இதற்கு விஷமுட்டித் தைலத்தை மேலுக்குப் பூசலாம்; சரீரபிரகிருதியை அறிந்து, உள்ளுக்கு மருந்து கொடுக்கவேண்டியது.

4-ம் அத்தியாயம்

சுவாஸஉறுப்பு, இருதயம் ஆகிய இவைகளுக்குக் காணுகிற ரோகங்கள். டிஸீஸெஸ் ஆவ் தி ஆர்கன்ஸ் ஆவ் ரெஸ்பரேஷன், அன்ட் சர்க்குலேஷன்.

DISEASES OF THE ORGANS OF RESPIRATION AND CIRCULATION.

1· ஜலதோஷம்

கடொர், CATARRH—கோல்ட், COLD.

பிரதிபதங்கள்.—ஜலுப்பு.—நீர்ப்பீனஸம்.

நாசி,சுவாசக்குழல் இவைகளிலிருக்கிற, சிலேஷ்மஜவ்வுக்கு உக்கிரதாபனம் கண்டால், அதற்கு ஜலதோஷமென்றுபேர். சளியூறும் ஜவ்வுக்கு வெப்பங்கண்டால்,ஜலதோஷமென்றும் (கொரைஜா,Coryza)—நாசிகாபீடத்துக்குள் வேதனையிருந்தால், கிராவிடோ (Gravedo) என்றும்—சுவாஸக்குழலுக்கும்அதின் கிளைகளுக்கும்கண்டால், இருமல், (பிரான்கிடிஸ், Bronchitis) என்றும் சொல்லுவர். இது சாதாரணரோகம். குளிர்ச்சி, காற்றின் வித்தியாசம், ஈரத்தில நடத்தல் ஆகிய இவைகளால் பிறக்கின்றது.

லக்ஷணங்கள்.—ஆயாசம்,கரசரணங்களில் வேதனை, முதுகில்வேதனை நெற்றியைப் பிகுவாய்க் கட்டிருப்பதுபோல் உணர்ச்சி, நாஸியிலும், நேத்திரத்திலுமிருந்து நீர்வடிதல், குரல் கம்மல், தொண்டையில் புண்போல் வேதனை, நாக்குமேல் மாவுபடிந்திருக்குதல், சரீரத்தில் அத்தியுஷ்ணம், அல்லது சுரம், தாகம், அன்னத்துவேஷம், தீவிரநாடி என்னும் இக்குணங்களை ஜலதோஷமானது ரூபங்களாய்ப் பெற்றிருக்கின்றது. இதில் உதடுகள் விரணமாகிவிடுவதும் உண்டு; மேற்படி லக்ஷணங்கள் 1-2-நாள்வரையிலிருந்து போய்விடும்; அல்லது கஷ்டரோகக்களுக் கிடங்கொடுக்கும்.

சிகிச்சை.—இந்த அற்பரோகத்துக்கு வைத்தியனுக் கையைக் காட்டாமல், ரோகியே பரிகாரம் செய்துகொள்வது வழக்கம்.—சுத்த லங்கணம், ஜலுப்பு மாத்திரை இவைகளால் அற்ப ஜலதோஷம் நீங்கி

விடும். இராத்திரியில், பாதங்களை வெந்நீர்த்தொட்டியில் கொஞ்ச நேரம் வைத்திருந்து, துடைத்துவிட்டு, பிறகு காரமாய்ச் செய்த மிளகுநீர் விட்டுக்கொண்டு போஜனம் செய்து, கம்பளிப்போர்வையிட்டு படுத்துக்கொண்டால், வியர்வைபிறந்து ஜலதோஷம் காணுதோடும். ஜேம்ஸ் பவுடர் இரவில் கொடுப்பதும் உண்டு. காரை, கச்சை என்னும் உலர்ந்த மச்சங்களை ரசஞ்செய்து சாப்பிடுவது வீட்டுச்சிகிச்சை. சுகபேதிக்கொருதரம் சாப்பிடுவதிலும் சுகுணமுண்டு; வேதுபிடிப்பதும் நல்லது. சாராய இனங்களில் எதையாவது இரவில் கொடுத்தபோதிலும் நன்மை செய்யும். சுக்கு, மிளகு, அரத்தை, அதிமதுரம் இவைகளைச் சேர்த்துச் செய்த கஷாயமும் கொடுக்க உதவும். மஞ்சள், மிளகு இவைகளில் எதையாவது சுட்டு அதின் புகையை ஆக்கிராணிக்கவும் செய்யலாம்; ஆக்கிராண உப்பின் வாயுவும் உபயோகித்தால் சுகுணத்தைத் தரும்.

2. பீனஸம்.—நாள்பட்ட ஜலதோஷம். (ஒஸீன, Ozæna, rhinorrhœa; chronic inflammation of the nostrils.) காரணங்கள்.—அடிக்கடி ஜலதோஷம்காணுவதினாலும், ஒருவித தேகப்பிரகிருதியினாலும், மேக ரோகத்தினாலும், இந்த வியாதி பிறக்கின்றது.

லக்ஷணங்கள்.—ஜலதோஷமாதிரியாய் இந்த ரோகம் பிறப்பது வழக்கம். சளியூறும் ஜவ்வானது தடித்துப்போகுவதால், மூக்கடைப்பு காணும். நாசியை பரீக்ஷித்தால் சதைப்பீனசம்போல் முதல் காணப்படும். நெற்றியில் வேதனை, இருமல், துர்ப்பலம், அதிக மனோவேஷ்டை ஆகிய இவைகளிருக்கும். சளி அதிக்கிரமித்து, துர்வாசனையோடு சீழும் கலந்து, எந்நேரமும் மூக்கைச் சிந்தும்படியான உபத்திரவமும் இருக்கும்; சளியானது சீழைப்போல் மாறிவிழுவதும் உண்டு. சிலேஷம் ஜவ்வு ரணமாகிவிட்டால், சளியில் ரத்தம் காணும்; சளி உறைந்து, அடிக்கடி விழுவது வழக்கம். துர்வாசனை அதிகமாய் இருப்பதால், அன்னியரிடத்திற்சென்று வார்த்தையாட ரோகிக்கு இஷ்டமிராது. தனக்குள்ளே அசங்கிதம் பிறக்கும். ஔஷதங்களால் குணம் ஒன்றும் காணாவிட்டால் ரோகிக்கு விரக்தி பிறக்கும். போஜனத்தில் இஷ்டமில்லாமையும், தேகச்சடைவும், துர்ப்பலமும், நித்திராபங்கமும், இருக்கும். ரோகம் கண்டு பழகி சரீரத்தில் மேகநீரும் இருந்தால், மூக்குத்தண்டில் துவாரம்விழும்; மூக்கிலிருக்கிற சன்ன எலும்புகளுக்கும் ரணம் கண்டு, கெட்டு துண்டு துண்டுகளாய் வெளிப்படும்; அதற்கு சிராபீசஸம் என்பது வழக்கம். இந்த ரோகம் அற்பமாய் இருந்தால் மூக்கடைத்து, சிலநாள்வரையில் அதிக நீர் வடிந்து கொண்டிருந்து, பிறகு உபத்திரவகுணங்களெல்லாம் வெளிப்படும்.

சிகிச்சை.—இதற்கு உள்ளுக்கும் வெளிக்கும் சிகிச்சைசெய்யவேண்டியது. துர்க்கந்த சளியை, பீச்சாங்குழலில் வெந்நீர்விட்டுப் பீச்சியெடுத்துவிட்டு, நாசியை அடிக்கடி செவ்வையாய்ச் சுத்திசெய்து விடவேண்டியது. பிறகு துர்வாசனையைப்போக்க எதையாவது விடலாம்; உள்ளிலிருக்கிற துஷ்டுக்களை நீக்கிவிடாவிட்டால், ரோகத்துக்கு ஆஸ்வாசம் பிறக்காது, நாசியைச் சுத்திசெய்தபிறகு, ஸிட்ரன் ஆயின்ட்மென்ட் என்னும் களிம்பை, வீரியத்தைக் குறைத்து, இறகால் தடவிக்கொண்டு வரவேண்டியது. ரணத்துக்கு இவ்வித சிகிச்சைசெய்து, உள்ளுக்கு குவைனை, நிலவேம்புமுதலிய பலகாரி மருந்துகளைக் கொடுத்து, சரீரசவுக்கியத்தைப் பிறப்பிக்கவேண்டியது. மேகவியாதியும் அனுசரித்திருந்தால் மீன் எண்ணெய், ஐயோடைட் ஆவ்

பொடாசியம் இவைகளில் ஒன்றைக் கொடுக்கலாம். டர்பன்டைன், கிரியா ஸோட் என்னும் தயிலங்களில் ஒன்றை, வெந்நீரில்விட்டு, ஆவியை ஆக்கிராணிக்கச்செய்தால், சவுக்கியம் உண்டாகும். இதில் எதிலும் சவுக்கியம் காணவிட்டால், வாஸஸ்தலத்தை மாற்றிவைப்பதில் பிரயோஜனம் உண்டாகும்.

3. குருமாந்த ரோகம்

குரூப், CROUP; ட்ரேகியைடிஸ், TRACHEITIS; ஸினன்கி ட்ரேகியேலிஸ், CYNANCHE TRACHEALIS.

இது சுவாஸக்குழலின் தாபனரோகம், ஒருவேளை குரல்வளைக்கும் வியாபிப்பதுண்டு. தாபனம் கண்ட இடத்தில், நூதனமாய் சவ்வு உற்பத்தியாகின்றது. பால்லியவயதில் காணுகிற வியாதி, இரண்டாம்வயதில் காண்பது வழக்கம். இந்தவியாதி பிறந்த இடத்தில்தானே இருக்கிறதில்லை. சுவாஸக்குழலின் கிளைகளுக்கும், புப்புசத்துக்கும் தொந்தப்படுவதுண்டு. தளர்ச்சி, மூச்சடைப்பு, இருதயத்தில் ரத்தம் உறைந்துபோகுதல் ஆகிய இவைகளால் மரணம் சம்பவிக்கின்றது.

லக்ஷணங்கள்.—முதல் ஜலுப்பு, அற்பசுரம், இருமல், குரல் கம்மல், உறக்கம், கண்சிவப்பு, மூக்கிலிருந்து ஜலம் வடிதல் ஆகிய இவைகள் காணும் இவ்விதமாய் 2-3-நாள் இருந்தபிறகு, ரோகத்தின் பிரதான குணங்களெல்லாம் பிறக்கும்; இருமும்போது வெங்கலசப்தத்தொனி கேழ்விப்படும்; சுவாஸம் உள்ளுக்கு வாங்கும்போது, ஒருவிதமான கூவுசப்தம் கேழ்விப்படும், அதனாலேயே இன்னவியாதியென்று தெரிந்துகொள்ளலாம் வாயைத் திறக்கச்செய்து பார்வையிட்டால், டான்ஸில்ஸ் என்னும் கோளங்கள் வீங்கி சிவந்து, உண்ணாக்கும், வீங்கியிருக்கும்; வியாதிவளர சுரமும் விருத்தியடையும். சுவாஸம் அதிக்கிரமித்து, விடுவதில் கஷ்டமாகும்; இருமலும் அடிக்கடி காணும்; நாடி க்ஷீணித்து அக்கிரமமாய் நடக்கும்; தேகதாருட்டியம் அதிகமாய்க்குறைந்திருக்கும்; தாகம் அதிகமாய் எடுக்கும்; குழந்தை எந்நேரமும் அழுது கொண்டிருக்கும், தூங்கமாட்டாது. முகத்தைப் பார்வையிட்டால் பயந்து வருத்தத்தை யடைந்திருப்பதுபோ லிருக்கும்; கழுத்தைப் பிசைந்துகொள்ளும், அல்லது விரலை வாயிலிட்டு தள்ளிக்கொள்ளும். இந்த உபத்திரவங்களெல்லாம் இராத்திரியில் அதிக்கிரமித்து, காலையில் சமனமடையும். ரோகம் சாத்தியமாகும்படியாய் இருந்தால், இருமலில் பேதம் பிறக்கும்; உட்சுவாசத்தில் கேழ்விப்பட்ட அந்த குறுகுறு சப்தமானது, பெரும்பாலும் நீங்கிவிடும். வியாதி ஒருவேளை அசாத்தியமாகிவிட்டால், அதிக உறக்கம்காணும், அலறிக்கொண்டு தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும்; மூச்சடைப்பு காணும்; சரீரம் சில்லிட்டு வியர்வை பிறக்கும்; பிறகு போதக்ஷயமும், இசிவும் கண்டு குழந்தை இறந்துவிடும். இந்தவியாதி 4-10-நாள் வரையில் இருப்பது வழக்கம்; ஆனால், சிலவேளை அதித்துரையில் வளர்ந்துவிடும்; ஓரிடத்தில், 4 - வயதுடைய குழந்தைக்கு சடுதியில் இந்தவியாதி கண்டு, 14 - மணி நேரத்துக்குள் இறந்துபோனதாயும் கண்டிருக்கின்றது.

சிகிச்சை.—இந்த ரோகத்துக்கு தாமசிக்காமல் யோசித்து தகுந்த சிகிச்சை செய்யவேண்டியது. ரத்தமெடுத்து, டார்டர் மெடிக் என்னும், வாந்தி உப்பும், ரஸமும் கொடுக்கும்படியாய் கிரந்தங்களில் கண்டிருந்த போதிலும், அந்த ராக்ஷஸ சிகிச்சையால் ரோகத்துக்கு சவுக்கியம் வருவது

அரிது; ஆகையால், அதைமாற்றி வேறுவிதமாய்ச் செய்வதில் சுகுணம் வராமல் போகமாட்டாது. வியாதி ஆரம்பத்தில், தொண்டைக்கு வெந்நீர் ஒற்றிடம் கொடுப்பத்தில் சவுக்கியம் பிறக்கும். அதில் சீக்கிரத்தில் சுகுணம் அகப்படாவிட்டால், வாந்திக்குக்கொடுக்கலாம். சுரம் தணியும்படி முயற்சி செய்யவேண்டியது. இவைகளால் பிரயோஜனம் காணுவிட்டால், ஐயோடைட் ஆவ் பொட்டாஸியமும், பெருங்காயமும் சேர்த்து கொடுக்கும்படி ஒரு வைத்தியர் குறித்திருக்கிறுர். ரசக்களிம்பு தேய்த்தால், சுவாஸக்குழலில் நூதனசவ்வு உண்டாகாதென்று கண்டிருக்கிறது. ஆரம்பத்தில், பேதியாகும்படி ரஸபஸ்பம் கொடுக்கலாம், ஆனல் வாய் ரணமாகும்படி கொடுப்பதில் கெடுதி நேரிடும். வியாதி ஒடுக்கத்தில், காணுகிற துர்ப்பலத்துக்கு, மாமிஸ ரஸம், சாராயம், ஒயின், அம்மோனியா முதலிய தாருட்டிய காரிகளைக் கொடுக்கவேண்டியது. சுவாசக்குழலைச் சேதிக்கும்படி (ட்ரேகியாடொமி, Tracheotomy) ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கின்றது. சிகிச்சை செய்கிறவர்கள், அதனுடைய பிரயோஜன அப்பிரயோஜனங்களை அறிந்து, அந்த கொரே கிருத்தியத்தை நடப்பிக்கவேண்டியது; இதனுல்தான் வியாதிக்கு ஆசுவாஸம் பிறக்கவேண்டியது.

4. குரல்வளைத் தாபனரோகம்

லெரிஞ்ஜைடிஸ், LARYNGITIS.

இந்த ரோகம் அபூர்வமாய்க் காண்பது ஜனங்கள்செய்த பாக்கியம், ஒருவேளை கண்டால், அதிலிருந்து தேருவது பிரயாசை. ஈரம், குளிர்ச்சி இவைகளால் இந்த துஷ்டரோகம் பிறக்கின்றது இந்த வியாதி பெரியவர்களுக்கே காணும்.

லக்ஷணங்கள்.—சுரம், இருமல், கண்டத்தில் வேதனை, மூச்சுமுட்டல், எதையும் விழுங்குவது கஷ்டமாகுதல், கவலை, குரல்கம்மல் அல்லது துவனியில்லாமல் போகுதல், உட்சுவாசத்தில் ஒருவித சப்தம், முகம் ஊதல், கண்கள் பிதுங்கியிருக்குதல், உதடுகள் வீக்கம், நாடி திரடமாய் நடக்குதல் ஆகிய இவைகளை இந்தரோகம், ரூபங்களாகப் பெற்றிருக்கின்றது. வியாதியைச் சீக்கிரத்தில் சமனப்படுத்தாவிட்டால், துர்க்குணங்கள் பிறக்கும்; குரல்வளையும், சுவாசக்குழலும் வேகமாய் மேலுக்கும் கீழுக்கும் ஓடிக்கொண்டிருக்கும். விலா எலும்புகள் எடுத்தெடுத்து அடித்துக்கொள்ளும்; ரோகி காற்றுள்ள விடத்தில் போய் ஆவலாய் காற்றை அனுசரிப்பான். பிறகு உறக்கமும் விகாரமும் சீக்கிரத்தில் கண்டு, மூச்சுமுட்டல் பிறந்து, பிராணன் போய் விடும். கண்டத்திலிருக்கும் சிலேஷ்மஜவ்வு தடித்துபோகுவதால், துவாரம் அடைபட்டு, சுவாசம்போக வழியில்லாமல் போகின்றது.

சிகிச்சை.—இந்த கொடிய ரோகத்திக்கு ஆலஸியம் செய்யாமல், சுவாசக்குழலைச் சேதித்துவிடுவதே பிரதான சிகிச்சை. அப்படிச் செய்வதில், புப்புசத்தில் வியாதிகொள்ள இடமிராது. தாபனத்தைச் சமனப்படுத்த அட்டைவிடுவதிலும், பிளிஸ்டர்போடுவதிலும், வீணில் காலதாமசமாகும், வியாதிக்குச் சமனம் வருகிறதில்லை. ஆரம்பத்தில் தானே சேதித்துவிட்டால் நல்லது. போஷணைக்குடைய பதார்த்தங்களைக் கொடுத்து ஆதரிக்கவேண்டியது.

கிருகவாயில் தடிப்பு.—(இடிமா ஆவ் தி கிளாடிஸ், Œdema of the glottis). தாபனம், வெந்நீர், திராவகம் இவைமுதலிய காரணங்களால் குரல்

வளைக்குள்ளிருக்கிற ஜவ்வு தடித்து, சுவாசதாரை சிறுத்துவிடுவதுண்டு. இந்த கொடியவியாதிக்கும், சுவாசக்குழலைச் சேதிக்கவேண்டியது.

குரல்வளைக் காணுகிற வியாதிகள் இன்னம் சில உண்டு; க்ஷயத்திலும், மேகவியாதியிலும், குரல்வளையின் ஜவ்வு தடித்துப்போகுவதும், அல்லது ரணமாகிவிடுவதும் உண்டு; அதில் தூர்மாமிசவளர்த்தியும்காணும்; ஒருவேளை மணி விதை முதலியவைகளில் எதாவது தெரியாமல்போய் அடைத்துக் கொண்டால், அதற்கு சுவாஸக்குழலைச் சேதித்து, அதன்வழியாக வரும்படிச் செய்யவேண்டியது. இது தவிர வேறொரு உபாயமும் தெரியவில்லை. ஆளை தலைகீழாகச்செய்தால், ஒருவேளை வெளிக்குவந்தாலும் வரும்.

5. மாந்த இரைப்பு,—(லெஞ்சிஸ்மஸ் ஸ்ட்ரிடியுலஸ், Laryngismus stridulus; infantile laryngismus, or child crowing.) இது குழந்தைகளுக்குக்காணுகிற, ஒருவித மாந்தரோகம். பல்முளைகிற வயதில் காணும்; குரல்வளை துவாரத்துக்கு இசிவுகண்டு இந்த பயங்கரமான வியாதிகாணுகிறது; கண்டால், அதிலிருக்கிறதுவாரம், ஏகதேசம் சிறுத்து புப்புசத்துக்குக் காற்றுப்போகுவது தடைபடும்.

லக்ஷணங்கள்.—இந்த ரோகத்தில் சுரம் இராது. முக்கியமாய்க் கஷ்டசுவாஸமே இருக்கும்; குழந்தைக்கு திடீலென்று மூச்சுமுட்டல் கண்டு உதைத்துக்கொள்ளும்; மூச்சு உள்ளுக்குப்போகாமல், மூச்சடைப்பால் பிராணன்போவதுபோல் அகப்படும். இவ்விதமாய் கொஞ்சநேரமிருந்து, குரல்வளையிலிருக்கிற பிகிவுநீங்கி, சுவாஸம்தடையில்லாமல்நடக்கும்: இவ்விதகஷ்டசுவாஸம் அடிக்கடியாவது, அல்லது தாமஸித்தாவது, அல்லது வெகுநாட்சென்றாவது கண்டு, உபத்திரவப்படுத்தும். குரல்வளைக்குப்போகிற ஸ்பரிசநரம்புகளுக்கு வியாதிகணடு இந்த கஷ்டரோகம் ஜனிக்கிறதென்று அபிப்பிராயம்.

சிகிச்சை.—பேச்சுமூச்சில்லாமல் ஜனிக்கிற குழந்தைக்குச் செய்கிற பக்குவமே இதற்கும் செய்து பிராணனை ரக்ஷிக்கவேண்டியது. கால்களை வெந்நீரில் வைத்து, முகத்தில் குளிர்ந்த ஜலத்தை அறைந்து, மார்பிலும், பிரஷ்டத்திலும் தட்டி, குளிர்ந்த காற்றுவாடையில் வைத்து, தேவையிருந்தால் குழந்தையைப் புரட்டி சுவாசத்தைப் பிறப்பிக்கவேண்டியது. நவச்சாரவாயுவை ஆக்கிராணிக்கச்செய்யலாம்; இவைகளினாலும் சுகுணமில்லாவிட்டால், சுவாஸக்குழலைச் சேதிக்கவேண்டியது. பிறகு கொடுக்கவேண்டிய மருந்துகளாவன:—பேதிக்குக்கொடுத்து, பிறகு இசிவைத் தணிக்கிறவைகளையும், பலம் கொடுக்கிறவைகளையும் கொடுக்க வேண்டியது இவைகளுக்கெல்லாம் இடத்தை மாற்றிவைப்பதே பிரதானம். ஆகாரம் மெத்த அற்பமாய் இருக்கவேண்டியது. தாயார்களுடைய அவிவேகத்தினால், குழந்தைகளுக்கு அநேக வியாதிகள் சம்பவிக்கின்றன. அவைகளுக்குக் கண்டதைக் கொடுத்தாலொழிய, மனதுக்குத் திருப்தியாகமாட்டாது

6. காசரோகம்

பிரான்கீடிஸ், BRONCHITIS.

பிரதிபதங்கள்.—மார்ச்சளி, இருமல்.

சுவாஸக்குழல் கிளைகளின் தாபனரோகத்துக்கு, காசரோகம் என்று பேர். புப்புஸவியாதிகளுக்குள், இதை அடிக்கடி காணலாம்; இதில் தீவிரம்,

சாத்மீகம் என இரண்டு ஜாதிகளுண்டு; ஒருபக்கத்து புப்புஸமாவது, அல்லது இரண்டு புப்புஸங்களாவது, அல்லது புப்புஸத்தில் ஓரிடத்தில் மாத்திரமாவது வியாதிகொள்ளும்; புப்புஸ மேல்புறத்தில் காண்பது வழக்கம்.

(1) தீவிரகாசரோகம்.—(அக்கியூட் பிராங்கிடிஸ், Acute Bronchitis).—இந்த துஷ்டரோகத்தில் காணுகிற லக்ஷணங்களாவன:—சுரம், மார்பில் பிடித்தம், கர்குர் என்கிற சப்தத்தோடுகூடிய மேல் சுவாஸம், ஓயாதஇருமல், கபம்விழுதல், (அது ஆரம்பத்தில் நார்போல் சிலேஷ்ம நீராய் இருந்து, பிறகு சீழாகிவிடும்.) துர்ப்பலத்தோடுகூடிய தீவிரநாடி, அழுக்கடைந்த நாக்கு, தலைவலி, ஆயாசம், குமட்டல், எக்கம் ஆகிய இவைகளாம். சுவாஸக்குழலின் பெரியகிளைக்குக் கண்டால், அதிக வருத்தமிராது; சிறிய குழல்களுக்கானால், அபாயம் மெத்த உண்டு; குழந்தைகளுக்கும், வயதுசென்றவர்களுக்கும் சிறுகுழல்களில் வியாதி முக்கியமாய்க் காணும்; வாலிபருக்குக் காண்பது அரிது. கஷ்டசுவாசம், மூச்சடைப்பு, சரீரம் நீலநிறமாகுதல், ஓயாத இருமல், அறட்டல் புறட்டல் ஆகிய இவைகள் உண்டு; ரோகிக்கு படுக்க இடங்கொடாது, எழுந்து உட்கார்ந்து கொண்டிருப்பான். மூத்திரம் குறைந்து, சிவந்து, அதில் உப்புகள் அதிகரித்திருக்கும்; நாடி துர்ப்பலமடைந்து தீவிரகதியாய் நடக்கும்; துர்ப்பலம் சீக்கிரத்தில் அதிக்கிரமித்து, பாதங்களிலும், கால்களிலும், வீக்கம்காணும்; அசாத்திய வியாதியில், உறக்கம், பித்தம் பிதற்றல், போதக்ஷயம் இவைகள் கண்டு, பிராணன் போய்விடும். வியாதி ஆரம்பத்தில் சப்தசோதனைக்குழலால் (ஸ்டெதஸ்கோப், stethoscope) மார்பைப் பரீக்ஷித்தால், இரண்டுவித வரக்ஷிசப்தங்கள் (dry sounds) கேழ்விப்படும். பெரிய குழல்களில் பிறப்பதற்கு, ராங்கஸ் (Rhonchus) என்றும், சிறிய குழல்களில் பிறப்பதற்கு, ஸிபிலஸ் (Sibilus) என்றும், இங்கிலீஷில் சொல்லுவர். ராங்கஸ் சப்தத்தில் பயமில்லை. ஸிபிலஸ் சப்தமானால் அபாயத்துக் கிடங்கொடுக்கும். வியாதிகண்டு சிலநாட்சென்றபிறகு, குழலுக்குள்ளிருக்கிற சிலேஷ்ம ஜவ்விலிருந்து திரவம் ஜனிக்கும்; அது வியாதிக்கு இரண்டாம் ஸ்திதி. அப்போது, மேற்கண்ட இரண்டு சப்தங்களுக்குப் பதிலாக, வேறு இரண்டு ஸினிக்த சப்தங்கள் (Moist sounds) கேழ்விப்படும். அவைகளில் பெரிய குழல்களில் பிறப்பதற்கு, லார்ஜ் கிரிபிடேஷன் (Large crepitation) என்றும், சிறியகுழல்களில் பிறப்பதற்கு, ஸ்மால் கிரிபிடேஷன் (Small crepitation) என்றும் இங்கிலீஷில் சொல்லுவர். குழல்களில் சுவாஸம் ஓடும்போது, அதிலிருக்கிற சிலேஷ்ம நீரோடு காற்றுசேர்ந்து, குமிழ்கள்உண்டாகிறதும், உடைகிறதுமாய்இருப்பதால், மேற்படி ஸினிக்தசப்தம் கேழ்விப்படுகின்றது. அது பெரிய குழல்களில், பெருத்தும், சிறிய குழல்களில் சிறுத்தும், கேழ்விப்படும். மார்பை தாடனம் (பெர்க்கஷன், Percussion) செய்து, பரீக்ஷை செய்தால், மார்புக்குடைய சாதாரணசப்தமே அன்னியில் விகல்பசப்தம்கேழ்விப்படாது. ஆனால், ஒருவேளை காற்று அதிகமாய்ச சேர்ந்திருந்தால், ஸ்பஷ்டசப்தமும் (கிளியர் ஸவுன்ட், clear sound)—குழல்களில் சளி அடைத்துக்கொண்டு, துவாரம் மூடி, காற்றுப்புகஇடமில்லாமல் இருந்தால், மந்தசப்தமும், (டல் ஸவுன்ட், dull sound) கேழ்விப்படும்.

சிகிச்சை.—பிரதமையில், நல்லபேதிக்கொருதாம் கொடுத்து, உப்பு இனங்களோடு இபிகாக், அல்லது ஸ்குவில் என்றும் மருந்தைச சேர்த்துக் கொடுக்கலாம்; ஒருவேளை க்ஷீணம் அதிகமாய் இருந்தால், உஷ்ணகபஹாரிகளைக் கொடுக்கவேண்டியது. மார்புக்கு வெற்றுக் குடுவைப்பரியாவது,

டர்பன்டைன் தயிலப்பூச்சாவது, அல்லது கடுகுபற்றுவது போடலாம்; கபம் வெளிப்படாமலிருந்தால், வாந்திக்குக் கொடுத்து அதை வெளிபடுத்தி; விடவேண்டியது. தரித்திராம்சையி லிருப்பவர்களுக்குக் காணுகிற தீவிர காசரோகத்துக்கு, உஷ்ணகபஹாரிகளே நல்லது. மாம்ஸரஸமும், வெந்நீர் ஆவி ஆக்கிராணிப்பும் நன்மைசெய்யும். ஒருவேளை அபினி கொடுக்க வேண்டியதாய் இருந்தால், வெகு சாக்கிரதையாய்க் கொடுக்கவேண்டியது. ரத்தம் பரிசுத்தமாகுவதில் தடையுண்டாகி, முகம் நீலநிறமாய் இருந்தால் அதைக் கொடுக்கலாகாது.

". சாத்மீக காஸரோகம்

(கிரானிக் பிரான்கீடிஸ், Chronic Bronchitis).—இந்த காசரோக சாதியானது முக்கியமாய் வயதுசென்றவர்களுக்குக் காணுகின்றது. ரோகம் அற்பமாய் இருந்தால், இருமல் சாதாரணமாகிவிடும்; மூச்சுமுட்டல் அற்பமாய் இருக்கும்; கபம் அதிகமாய்க்காணும். இந்த லக்ஷணங்கள், குளிர்ச்சியாலும், ஈரத்தினலும் பிறபலப்படும்; மழைகாலத்தில் சாதாரணமாய் வார்த்தீபர்களுக்குக்காணுகிற இருமல் இதுதான். இநதவியாதிதற்செயலாயாவது, அல்லது தீவிரகாஸரோகத்தை அனுசரித்தாவது, பிறக்கின்றது.

சிகிச்சை.—இதற்கு ரோகியின் தேகப்பிரகிருதியை யறிந்து,சிகிச்சை செய்யவேண்டியது. உஷ்ணகபஹாரிகள் நல்ல குணம்செய்யும். தாருட்டியகாரிகள், மீன்நெய், நல்லஊட்டம், ஒயின்முதலிய உஷ்ணகாரிகள் ஆகிய இவைகளைக் கொடுக்கலாம்; மேகவியாதியால் கண்டால், ஐயோடைட் ஆவ் பொடாஸியம் கொடுக்கலாம். கபம் வெளிபடக் கஷ்டத்திலிருந்தால், அம்மோனியா, ஸ்குவில், குளோரிக் ஈதர், சல்பியூரிக் ஈதர், நைட்ரிக் ஈதர் ஆகிய இவைகளைக் கொடுக்கலாம். வெந்நீர் ஆவியை ஆக்கிராணிக்கச்செய்வது நல்லது, மார்புக்கு,கடுகு பற்றுபோடலாம்; டர்பன்டைன் பூசுதைலத்தைத் தேய்ப்பதிலும் வியாதிசமனப்படும். பிளிஸ்டர் போடுவதில் சிலவேளை நன்மையைத்தரும். இபிகாக் சூரணமும் ரோகத்தை வசப்படுத்தும். ரோகி கம்பளிச்சொக்காய் தரித்துகொண்டிருப்பது உத்தமம். மார்பியாலாஸென்ஜெஸ், கீடிங்ஸ்லாஸென்ஜெஸ், இபிகாக்லாஸென்ஜெஸ், ஜுஜுப்ஸ், விளாம்பிசினி, கற்கண்டு, அதிமதுரம், அரத்தை ஆகிய இவைகளில் ஒன்றை வாயிலிட்டடக்கி, ரஸத்தை உட்கொண்டால், இருமல் தணிந்து ரோகம் வசப்படும். தேகம் அத்தியுஷ்ணமாகி புகைந்து புகைந்து காணுகிற வரட்டிருமலுக்கு, அரிசியும் மிளகும் சேர்த்து வாயிலிட்டடக்கி, ரஸத்தை விழுங்குவது நாட்டுவழக்கம். அதிமதுர ஷர்பத்தைக் கொடுக்குதல், சிறுவேரை கியாழமிட்டுக்குடிக்குதல், பூனைக்காலிவேரை பாலிலிட்டுக்காய்ச்சி சாப்பிடுதல், அரத்தைப்பொடியில் தேன்விட்டுக் கலந்து நாக்கில் தடவிக்கொண்டுவருதல், ஆடாதோடை, கண்டங்கத்திரி, துளசி இவைகளின் ரசத்தில், திப்பிலித்தூள் சேர்த்துக்கொடுக்குதல், வெண்டைவிரைக்கஞ்சி பிரயோகித்தல், வசம்புக்கியாழம் சாப்பிடுதல் ஆகிய இவை முதலியவைகள், ஹிந்துச்சிகிச்சை. ஜலுப்புக்குக் கொடுக்கிற மருந்துகளும், இந்த வியாதிக்குக்கொடுக்க உதவும்.

7. கக்கிருமல் ரோகம்

ஹூபிங்காப், HOOPING COUGH.

பிரதிபதங்கள்.—கக்குவான்; கக்குவாய்; முப்பிறைச்சுமை.

இது ஒட்டுவியாதி; ஒரு ஆவர்த்திக்குமேல் காண்பது அரிது. அற்ப சுரமும், வாந்தியும் அனுசரிப்பதுண்டு. ஆரம்பத்தில் ஜலதோஷமாதிரி

யாகக் கண்டு, பிறகு ஒருவித இருமல் காணும்; அந்த இருமல் விட்டுவிட்டு வந்து உபத்திரவப்படுத்தும். இந்தவியாதி, 2 - 3 - வாரம், அல்லது 2 - 3- மாதம் வரையிலிருந்து, உபத்திரவப்படுத்தும். இது குழந்தைகளுக்குக் காணுகிற ரோகம்.

லக்ஷணங்கள்.—பார்வேகம் என்கிற நரம்பைப்பற்றி, இந்த வியாதி காணுகிறதென்று, வைத்தியருடைய எண்ணம். பிரதமையில், 8 - 10 - 20 - நாள்வரையில், சுரமும், இருமலும் கொஞ்சமிருக்கும்; ஜலதோஷம், மூச்சடைப்பு, தேகஉஷ்ணம் ஆகிய இவைகளால்; குழந்தை உபத்திரவ மடைந்து, படுக்கையிலிருக்காது. சுமார் 10 - நாள் சென்றபிறகு, சுரம் கொஞ்சம் தணியும்; அப்போது குழந்தை ஒருவிதமாய் வலித்துக்கொண்டு இருமும்; அந்த இருமல் இந்த வியாதிக்கே முக்கியமானது (Shrill sound or hoop). இருமல் வருவதற்குமுன், குழந்தைக்குத் தெரியவரும்; அப்போது அது தாயாரிடத்தில் ஓடி கட்டிக்கொள்ளும்; மூச்சுத்திணரலோடு ஓயாமல் இருமல் காணும்போது கண்கள் பிதுங்கிவருவதுபோல் அகப்படும்; இருமும்போது, சுவாசத்துவாரம் சிறுக்கிறபடியால், சுவாஸம் உள்ளுக்குப் போகும்போது, இழுப்புமாதிரியாய் ஒருவித சப்தம் உண்டாகும் (ஏங்கல்), அந்த சப்தமே இந்த வியாதிக்குப் பிரதானகுறி; அது மேல்விவரித்த மாந்த இரைப்பைப்போலவே இருக்கும் (Laryngismus stridulus), இருமல்கண்டு குழந்தையை மெத்த உபத்திரவப்படுத்தி நின்றவுடனே, குழந்தைக்கு தயிரியம் பிறக்கும்; சவுக்கியமாய் இருப்பதுபோல் காணப்படும்; உடனே விளையாட ஓடிப்போகும். ஒருவேளை இருமல் நிற்கும்போது வாந்திகாண்பதும் உண்டு; அப்படிக் கண்டபோதிலும், ஏதாவது பக்ஷணேவேண்டுமென்று அபேக்ஷிக்கும். இருமல் வருகிறகிரமம் வித்தியாசப்படும். ஒரு தினத்துக்கு 2-3-ஆவர்த்தியாயாவது, அல்லது ஒரு நாழிகைக்குள் அநேக ஆவர்த்தியாயாவது, வந்துவந்து உபத்திரவப்படுத்தும். கக்கிருமல் கண்டால், சிலருக்கு 2-3-வாரத்தில் சவுக்கியமடைந்துவிடும். ஒவ்வொருவேளை மாதக்கணக்காய் இருப்பதும் உண்டு; மழைகாலத்தில் கண்டால், சீக்கிரம் போகாது இந்த வியாதியோடு வேறு வியாதிகள் தொந்தமாய் வருவதும் உண்டு.

சிகிச்சை.—ரோகம் அற்பமாயிருந்தால், ஔஷதம் ஆவஸியமிராது. குழந்தைக்குக் கம்பளிஆடைகளைத்தரிப்பித்து,குளிர்காற்று வாடையில் வைக்காமல், வீட்டு அரைக்குள்ளவே வைக்கவேண்டியது. போஷணைக்குடைய ஊட்டமும், ஸினிக்ததையுடைய ஜலபானமும் கொடுக்கவேண்டியது. பிரதி தினமும் இரவில் அபினிப் பூசுத்தைலத்தையாவது, அல்லது கர்ப்பூரத் தைலத்தையாவது, நடுமுதுகில் தேய்த்துக்கொண்டுவந்தால், ரோகத்துக்கு ஆஸ்வாஸம் பிறக்கும். ரோகம் உக்கிரகதியை யடைந்துவிட்டால், வாந்திக்கிக்கொடுத்து, உடனே கபஹாரிகளைக் கொடுத்தால், நன்மைசெய்யும். பெரிகாரிக், பெருங்காயம், கர்ப்பூரம், குரோசாணியோமம், மார்பியா, பெல்லடோனு ஆகிய இவைகளில், ஒன்றைக் கொடுக்கலாம்; கொடுப்பதில் வெகு சாக்கிரதையும், யுத்தியும், ஆலோசனையும் வேண்டியது; கொடுத்தபிறகும் அவைகளுடைய செய்கையை வெகு சாக்கிரதையாய்க் கண்டறியவேண்டியது.மார்புக்கும், முதுகுக்கும், கடுகுகளியைப் போடலாம். படிக்காரத்தூளில், 3-கிறேன் வீதம், தேனில் கலந்து, தினத்துக்கு, 2-3 - ஆவர்த்தி கொடுக்கலாம். இந்த வியாதிக்குக் கண்டங்கத்திரி ரசாயனம் கொடுப்பது தமிழ் முறை. தூதுளைச்சாறு $\frac{1}{8}$-ஆழாக்கு பசுவின்நெய் ஆழாக்கு, $\frac{1}{8}$; சோஷ்டம்

விராகனெடை, 1 - இவைகளைக் காச்சிவைத்துக்கொண்டு, விரலில் தொட்டு நாக்கின்மேல் அடிக்கடி தடவிக்கொண்டுவந்தால், ரோகத்தின் உக்கிரம் சமனமடையும். தூரிஞ்சல்சதை, நத்தைச்சதை, முதலைச்சதை இவைகளில் ஒன்றை நெய்யிலிட்டு காய்ச்சி, அந்த நெய்யைக் கொடுப்பதும், நாட்டுவழக்கம். இந்த உபத்திரவ வியாதி அணுகாமல், மாட்டுத்தோல், புங்கங்காய், நாய்ருபமிட்டடித்த தட்டு, குளிசம் ஆகிய இவைகளில் ஒன்றை, குழந்தை இடுப்பில் கட்டிவைப்பது பெண்கள் வழக்கம். இதற்குச்செய்கிற சிகிச்சை இன்னமும் அனந்தமுண்டு, என்னசெய்தபோதிலும், வியாதியின் முடிவு காலம் வாராமல் வசப்படாது.

8. இரைப்பு

ஆஸ்த்மா, ASTHMA.

பிரதிபதங்கள்.—சுவாசகாசரோகம்; மந்தாரகாசம்; உப்புசம்; காசு காச சுவாசம்.

இந்த ரோகம், ஸ்பரிசநரம்பைப்பற்றிக் காணுகிறது. சுவாசக்குழற்கிளைகளின் சிறிய கிளைகள் பிகுவாய்ச்சுருங்கி, இந்த வியாதி பிறக்கின்றது.

லக்ஷணங்கள்.— கஷ்டசுவாசம் காண்பதற்குமுன் தலைவலி, நித்திராபங்கம் முதலியவைகள் காணும். அவைகள் காணமல் வியாதி பிறப்பதும் உண்டு: இராத்திரியில் சுமார் 2-3-மணிநேரத்தில், அயர்ந்தநித்திரையிலிருக்கும்போது, திடீலென்று மூச்சடைப்பு, அல்லது மார்பில் பளுவுகண்டு ரோகி எழுந்து உட்கார்ந்து கொள்ளுவான்: பிறகு கிரமேணஅதிக்கிரமித்து, சுவாசம்விட, மெத்தகஷ்டமாய் இருக்கும். தனக்கு அஸ்வாஸம் பிறக்கும்படியான நிலையில், ரோகி இருந்திருந்து பார்த்து, சுவாசத்தை லகுவாக்கிக்கொள்ளுவான். நின்றுகொண்டாவது, அல்லது, கவிழ்ந்து தலையை, முடக்கிய கைகளின்மேல் வைத்துக்கொண்டாவது, அல்லது காற்றுள்ளவிடத்தில் போய் வாயைத்திறந்துகொண்டாவது, இருப்பான்: மார்பானது அதிகமாய் விரிந்திருக்கும். காற்று வியாபிக்கிறவழி அடைந்து, சுவாசம்விட கஷ்டமாய்இருக்கும். சப்த சோதனைசெய்தால் (ஆஸ்கள்டேஷன், Auscultation), சுவாசசப்தம் (Respiratory murmur) கேழ்விப்படாது; ஆனால், வாத்திய சப்தங்கள்போல், கர், குர் என்று கேழ்விப்படும். நாடி சிறுத்து க்ஷீணித்து நடக்கும்; கண்கள் உற்றுப்பார்ப்பதுபோ லிருக்கும்; முகம் கவலைகொண்டிருக்கும்; தேகம் தணுத்திருக்கும்; ஒருவேளை ஆயாசத்தினல் வியர்வை காண்பதும் உண்டு; ரோகி மரண அவஸ்தையிலிருப்பவனைப்போல் காணப்படுவான். தன் வருத்தத்தினல் கோபத்தன்மையையுடையவனய் இருப்பான், அல்லது தன் வருத்தத்தை நீக்கும்படி அருகிலிருப்பவர்களை வேண்டிக்கொள்ளுவான். கொஞ்சநேரம் சென்றபிறகு, வியாதிக்கு ஆஸ்வாஸம பிறக்கும்: இருமல்கண்டு, கபம்வெளிப்பட்டு, வியாதியின் உக்கிரம்போய்விடும்; அப்போது ரோகிக்கு அயர்ந்தநித்திரைவரும். இரைப்பு நின்றுஇருக்கும்போது, ரோகிசவுக்கியமாய் இருப்பான்; சுவாஸமும் எப்போதும் போல் நடக்கும்; சரீர பிரகிருதிக்குத்தக்கபடி, வியாதி விட்டுவிட்டு வந்துபோராடும்; தினசரியாவது, வாரத்துக்கொருதரமாவது, மாதத்துக் கொருதரமாவது, அல்லது வருஷத்துக்கொருதரமாவது, காலக்கிரமமாய் வரும். வியாதி விட்டிருக்கும்போது, ஒவ்வொருவேளை கொஞ்சம் கஷ்டசுவாஸம் இருப்பதும உண்டு. ஸ்திரீகளைப்பார்க்கிலும், புருஷர்களுக்கு மிகுதி

யாய்க் காணுகிறது. இந்தரோகம் பாரம்பரையாய் வருவதும் உண்டு; வய துக்கிரமமில்லாமல் வந்தபோதிலும், யவ்வனபருவத்தில் காண்பது வழக்கம். இந்தவியாதியோடு வேறு வியாதிகள் தொந்தித்திருப்பதும் உண்டு ; சுவாச காசம், சிலரில் அசாத்தியமாய் இருந்தபோதிலும், அதனால் பிராணன்போ வது அரிது; வேறுரோகங்கள் கண்டு, மனிதன் இறந்துவிடுவான்.

சிகிச்சை.—இரைப்பு கண்டிருக்கும்போது, அது தணியமுயற்சி செய்ய வேண்டியது. அதற்கு முதல் வாந்திக்குக்கொடுத்து, வயிற்று துர்மலத்தை நீக்கிவிட்டால் நல்லது. பிறகு சுவாஸக்குழலிலிருக்கிற வலியைப் போக்க வேண்டியது; அதற்கு புகையிலைச் சுருட்டுபிடிக்கச் செய்யலாம்; குமட்டலும் ஆயாசமும் பிறந்தால், இரைப்புஉடனே தணிந்துவிடும். குளோரோபாரம், ஈதர் ஆகிய இவைகள் சிலருக்கு நன்மையும், சிலருக்கு துன்மையும், செய் கின்றன. ஊமத்தையிலையின் புகைப்பிடிப்பதில், உடனே ஆஸ்வாஸம் பிறப்பதும் உண்டு; இலையைச் சுருட்டுசெய்தாவது, சுங்காணியில் போட் டாவது கொளுத்தி, புகை பிடிக்கலாம்; இலை நல்லதாய் இருக்கவேண்டியது. இலையைப்பார்க்கிலும், வித்தில் அதிக வீரியமுண்டு. பொட்டிலுப்பு ஜலத்தில் நனைத்துக் காயவைத்த கடுதாசியையும் கொளுத்திப் புகைபிடித்தால், இரை ப்புக்குச் சமனம்வரும். பெருங்காயம், கர்ப்பூரம், வெள்ளுள்ளிரசம், அபினி, சாராயம், காரமாய்ச்செய்த காப்பித்தண்ணீர், வசம்புகஷாயம், ஆடா தோடை இலைக்கஷாயம் ஆகிய இவைகளில் ஒன்றை கொடுத்தபோதிலும், இறைப்பு தணியும். உபத்திரவப்படுத்துகிற இரைப்பு நின்றபிறகு, மறுபடி யும் வராமல் தடுக்கவேண்டியது. அதற்கு பலகாரி மருந்துகளைக் கொடுத்து, போஜன முதலியவைகளில் கிரமத்தை யனுசரிக்கச்செய்து குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம்செய்யச்சொல்லி, லகுவிரேசனங்களால் மல பந்தத்தை நீக்கச்செய்து, தேகசவுக்கியம் உண்டாகும்படி சிகிச்சைசெய்துக் கொண்டுவந்தால், இந்த துஷ்டரோகம் ஒருவிதமாய் சாத்தியத்துக்கு வரும்.

மார்புஜவ்வு தாபனரோகம்

பிளுரிஸி, PLEURISY. பிளுரைடிஸ், PLEURITIS

மார்பையும் புப்புசத்தையும் மூடிக்கொண்டிருக்கிறசவ்வின்தாபனத்தில், தீவிரம், சாத்மீகம் என இரண்டு சாதிகளுண்டு. ஒரு பக்கத்து சவ்வுக்கு சாதாரணமாய் வியாதி காண்கிறபோதிலும், இரண்டு பக்கத்து சவ்வுகளுக் கும் ஒரேகாலத்தில் தாபனம் காண்பதும் உண்டு.

லக்ஷணங்கள்.—இந்த வியாதி காண்பதற்குமுன், குளிர்கண்டு சுரம் காணும்; விலாவில் ஊசியால்குத்துகிறதுபோல் வேதனையெடுக்கும், அதற்கு புடிப்பு (Stich) என்று சொல்லுவர்; அந்தவேதனை முலைக்குக் கீழாக இருப் பதுவழக்கம். சுவாசம் உள்ளெடுக்கும்போதும, இருமும்போது, வியாதி இருக்கிற பக்கமாய் படுத்துக்கொள்ளும்போதும், விரலால் அழுத தும்போதும், வேதனை அதிக்கிரமிக்கும். இருமல் அற்பமாய் இருக்கும்; உடம்பு கொஞ்சம் உஷ்ணமாயும், கன்னங்கள் விம்மியும், நாடி திரடமுற்று தீவிரகதியாயும் இருக்கும்; ஏக்கமும், அரட்டல் புரட்டலும் உண்டு; மூத்திரம் குறைந்து சிவந்திறங்கும். இந்த ஸ்திதியில் சப்த சோதனக் குழலை மார்பில் வைத்துக்கேட்டால், ஜவ்வுகளிரண்டும் உரைந் துகொள்வது கேழ்விப்படும் (பிரிக்ஷன் சவுன்ட், Friction sound), அல் லது அந்த விடத்தில் கையைவைத்துப் பார்த்தால், உரைகிற சப்தத்தை யுணரலாம். இந்த சப்தம் சீக்கிரத்தில் அடங்கிவிட்டால், சவ்விலிருக்கிற

கொதிப்பு அடங்கி, யதாஸ்தீயில் வந்துவிடும், அல்லது, இரண்டு சவ்வுகளும் ஒட்டிக்கொள்ளும். ஒருவேளை ரத்தநீர் (Serum) சுரந்து, இரண்டு சவ்வுகளையும் பிரத்யேகப்படுத்திவிடும்;அதற்கு உரோஜலரோகம் (ஹைட்ரோதோராக்ஸ், Hydrothorax) என்று பேர். கொதிப்பு அதிகமாய் இருந்தால், ரத்தநீரும் மிகுதியாய் சுரந்து,பிளூரா சவ்வு பைக்குள் அடைந்து, புப்புசத்தை அழுத்தி அதை விரியவொட்டாமல் செய்யும், ரத்தாசயத்தையும், ஸ்தானபேதமாக்கிவிடும். விலா எலும்புகளையும் தூரப்படுத்தும். இந்த வியாதியில் சீழ் ஜனிப்பதும் உண்டு; அதற்கு எம்பையிமா (Empyema) என்று பேர்.

சிகிச்சை.—இதற்கு, தாபனத்தை முதல் சமனப்படுத்தவேண்டியது.—நீர்சேர்ந்துவிட்டால், அது வற்றும்படி முயர்ச்சி செய்யவேண்டியது. தேகத்தை யெவ்வளவு க்ஷீணப்படுத்துகிறமோ, அவ்வளவுக்கும் கொதிப்பு அதிக்கிரமிக்கும்; ஆகையால், இந்த வியாதிக்கு ரத்தமெடுக்கிற வழக்கத்தை விட்டுவிடுவதே உத்தமம். ஒருவேளை உபத்திரவம் அதிகமிருந்து, ரத்தமெடுக்க ஆவசியமிருந்தால்,அட்டைவிடலாம். அட்டைவிடுவதற்கு முன் வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, ஊமத்தையிலை ரசத்தைத்தேய்த்துப் பார்த்து, எதிலும் குணம் அகப்படாவிட்டால், பிறகு அட்டை விடவேண்டியது தாபனத்தைச் சமனப்படுத்த ரஸபஸ்மத்தோடு அபினி சேர்த்துக்கொடுப்பதும் உண்டு; மலபந்தமிருந்தால் பேதிக்குக் கொடுக்க வேண்டியது. பத்தியம்.—கஞ்சி, பால், மாம்ஸரஸம் இவைகளைச் சாப்பிடச் செய்யலாம். இவ்வித உபசாரணை செய்தும் ரோகத்துக்கு ஆசுவாசமில்லாமல் நீர் சேர்ந்துக்கொண்டால், அந்த நீர் வற்றும்படி முயர்ச்சி சேய்யவேண்டியது. அதற்கு ரோகியை இச்சாபத்தியத்தில் வைத்து, உஷ்ணபதார்த்தங்களை நீக்கும்படிச்செய்து, வியாதியுள்ளவிடத்தில் பிளிஷ்டர்போட்டு, அடிக்கடி ரணமாக்கி, பேதிமருந்துகளும், மூத்திரபேதி மருந்துகளும் கொடுத்துக்கொண்டுவரவேண்டியது. ஐயோடைட் ஆவ் பொடாஸியம் என்னும் உப்பையும் கொடுக்கலாம். ரசம் சேர்ந்த மருந்துகளை நினைக்கவேலாகாது, அவைகள் துர்க்குணம் செய்யும். ரோகம் பழகிவிட்டால், ஐயோடைன், அயம், மீன் நெய் முதலியவைகளை உபயோகித்துப் பார்க்கவேண்டியது. எந்த சிகிச்சையிலும் நீர் வற்றாவிட்டால், ஊசியால் குத்தி அதை வெளிப்படுத்திவிடவேண்டியது. இவ்விதமாய்ச்செய்து ரோகத்துக்கு ஆசுவாசம் பிறந்திருக்க, அப்படிசெய்யக்கூடாதென்று சொல்லுகிற கக்ஷிக்காரரும் உண்டு. மருந்துகள் பிரயோகம் செய்து, எதிலும் நீர் போகாமல், அதிகமாகிறதாய் இருந்து குத்தி நீரையெடுத்துவிட நிச்சயித்தபோது, முதல் பள்ளக்கீற்றுள்ள ஊசியைவிட்டு grooved needle) சோதித்துப்பார்த்து, ஜலம் வடிந்தால், வெள்ளிக்குழலோடிருக்கும் ஊசியால் (Trocar and canula) குத்தி நீரையெடுத்துவிடவேண்டியது. 5-6-வது பழுவெலும்புகளுக்கு மத்தியில், முள்ளந்தண்டுக்குக் கொஞ்சம் ஒற்றி, பழுவெலும்பின் வளைவுக்குக் கொஞ்சம் பின்புறமாக, ஊசியைப் பிரவேசிக்கவேண்டியது. அந்த ஸ்தானத்தில், புப்புசம் இருப்பதும் இல்லாததும் முதல் தெரிந்துகொள்ளவேண்டிய தவசியம். ஜலத்தையெல்லாம் எடுத்துவிடுவதே நல்லது, ஸீரம் என்கிற நீர் வடிந்தால், காயத்தின் வாயைமூடி ஆறும்படிச்செய்துவிடலாம்.ஒருவேளை சீழ்வடிந்தால் துவாரத்தை விசாலமாக்கி, காதிடர் என்னும் கருவியை அதில் வைத்துவைக்க வேண்டியது. குழலின் வழியாய்காற்று உள்ளுக்கு பிரவேசித்தபோதிலும்

தோஷமில்லை அது சீக்கிரத்தில் தற்செயலாய் மறைந்துவிடும். Remedies.—Leeching ; diaphoretics ; opium ; fomentation ; ext. of belladonna to the affected part ; calomel ; tartar emetic ; purgatives. Diet.—Grul ; arrowroot, milk, and broths. With effusion—Blisters; purgatives ; diureties; iodide of patassium ; squill ; digitalis ; pod-liver oil ; tapping ; quinine ; wine and support.

புப்புஸதாபனரோகம்

நியூமோனியா, PNEUMONIA

இது கெட்டவியாதி. முதல் சரீரம் சூடாயிருக்கும் ; 1 - 2 - 3 - நாள் சென்றபிறகு குளிர்கண்டு, குமட்டல், இருமல், பக்கத்தில் வேதனை, மூச்சு முட்டல், நாடிதீவிரகதியாய் ஓடுதல், சரீரத்தில் அத்தியுஷ்ணம், தாகம், அன்னத்துவேஷம், க்ஷீணம், தலைவலி, ஒவ்வொருவேளை கொஞ்சம் விகாரம் ஆகிய இவைகள் காணும். புப்புஸ தாபனத்தில் 3 - சமயங்களுண்டு.—முதல், புப்புஸத்தில் ரத்தம் அதிக்கிரமித்திருக்குதல்—2 - வது, புப்புஸம் தடித்துப்போகுதல்—3 - வது சீழ்கொள்ளுதல் ஆகிய இவைகளாம்.

1 - வது. ரத்தம் அதிக்கிரமித்திருக்குதல். (என்கார்ஜ்மென்ட், Engorgement).-இந்த ஸ்திதியில்,புப்புஸம் கறுத்தசிறமாய் இருக்கும்; சோதித்துப் பார்த்தால் சிவந்த ரத்தநீர் நுரைத்து வெளிப்படும், பிலீகத்தைப்போலிருக்கும்; மார்பின்மேல் சப்தவேணுவை வைத்து பரீக்ஷித்தால், நறநறசப்தம் (Minute crepitation, or crepitant rhonchus) கேழ்விப்படும்; அது, காதருகில் ரோமத்தைப் பிடித்து விரல்களால் நிமிட்டும்போ லுண்டாகிற சப்தம் போலிருக்கும் ; விரல்களால் மார்பைத்தட்டிப்பார்த்தால், வியாதி ஆரம்பத்தில் சப்தம் யதாப்பிரகாரமாய் இருக்கும், பிறகு மந்தமாகிவிடும்.

2-வது தடித்துப்போகுதல் (ஹிபாடிஸேஷன், (Hepatization.) இதில் புப்புஸமானது, கல்லீரலைப்போல் தடித்து இருக்கும்; மார்பில் காதை வைத்துக்கேட்டால், முன்கண்ட சப்தம் மறைந்து, வேறு சப்தம் கேழ்விப்படும்; அதற்கு இங்கிலீஷில் பிராங்காபொனி (Bronchophony) என்று சொல்லுவர். தாடனத்தில் மந்தசப்தம் கேழ்விப்படும்.

3-வது. சீழ்க்கொல்லுதல். புப்புஸ தாபனமானது மென்மேலும் வர்த்தித்தால் அதில் சீழ்க்கொள்ளும். (பியூரிலென்ட் இன்பில்ட்ரேஷன், Purulent infiltratoin). இதைத் தெரிந்துகொள்ளும்படியான சப்தம் ஒன்றுமில்லை; ஆனால் புப்புசதாதுக்கள் நைந்து, சீழுடன் கலந்து இருமும்போது வெளிக்கு வந்துவிடும்; அப்போது களகளவென்று சப்தம் (large gurgling crepitation) கேழ்விப்படும். க்ஷீணதேகத்தில் இந்த வியாதிகண்டால், ஒவ்வொருவேளை புப்புஸம் அழுகிப்போவதும் உண்டு; அப்போது சுவாசத்தில் துர்க்கந்தவாசனை வீசும்; மூச்சு முட்டலும், அதிக க்ஷீணமும் இருக்கும்; இதில் மிருத்தியுவு சம்பவிப்பதற்கு யாதொரு சமுசயமுமில்லை. ஒரு புப்புசத்துக்காவது, அல்லது இரண்டு புப்புசங்களுக்காவது தாபனம் காணும்; வலது புப்புசத்துக்குக் காண்பது வழக்கம். மேற்புறத்தைப் பார்க்கிலும் அடிப்புறமே வியாதிகொள்ளும் தொந்தப்படாமலிருந்தால், வியாதி சுமார் 14-நாளைக்குள் சவுக்கியமாகும்; ஒருவேளை தொந்தப்பட்டால், சுமார், 21-நாள்வரையில் போராடும். அசாத்திய ரோகத்தில், 6-முதல் 20-நாள்களுக்குள் மிருத்தியுவு சம்பவிக்கும்.

சிகிச்சை.—இந்த ரோகத்துக்கு ரத்தமெடுத்து, வாந்தி உப்பும் ரஸமும் கொடுக்கச்சொல்லி நமக்குப் படிப்பித்ததுண்டு. அதை யனுசரித்து இந்நாட்களில் சிகிச்சை செய்தால், அபத்தம் சம்பவிக்கும். பாட புஸ்தகங்களில் சொல்லியிருப்பது சரிதான்; ரத்தமெடுத்து சிகிச்சை செய்வதைப் பார்க்கிலும், ரத்தமெடுக்காமல் சிகிச்சை செய்ததில் அநேகர் சொஸ்தப்பட்டதாய் தெரியவருகின்றது. முதல் பேதிக்குச் சிற்றுமணக்கெண்ணெய் கொடுத்து வயிற்று துஷ்டிகளை நீக்கிவிட்டு, ரோகியைப் படுத்தப்படுக்கையில் நிம்மதியாய் வைக்கவேண்டியது. லிகர் அம்மோனியா அஸிடேடிஸ் என்னும் மருந்தில் 6 - 8 – திராம்வீதம், தேக உஷ்ணத்துக்குத் தக்கபடி, 2 - 3 - 4 - மணி நேரத்துக்கொருதரம் தனியாயாவது, அல்லது கால்சிகம் என்னும் மருந்தைச் சேர்த்தாவது கொடுக்கலாம். வேதனையும் நித்திராபங்கமுமிருந்தால், கொஞ்சம் அபினி கொடுக்கவேண்டியது. குளோரோபாரத்தை ஆக்கிராணிக்கச்செய்தால், இருமலும் மூச்சுமுட்டலும் சமனமடையும். வேதனையிருக்கிற இடத்துக்கு, போஸ்தக்காய்ப் போட்டுக்காய்ச்சின வெந்நீர் ஒற்றிடம் கொடுக்கும்படி திட்டப்படுத்தவேண்டியது; அல்லது, டர்பன்டைன் என்னும் தயிலத்தைத் தடவி, அந்தி சந்தி இரண்டுநேரமும் ஒற்றிட மிடலாம். பத்தியம்.—லகு அசனம் கொடுத்து, குளிர்ந்த ஜலபானம் செய்யச்சொல்லி, மாமிஸரஸம், ஒயின் இவைகளைக்கொடுத்து தாருட்டியம் வரும்படிச் செய்யவேண்டியது. ரோகத்தின் கோபந் தணிந்து சவுக்கியமாகிறவழிக்கு வரும்போது, வியர்வை அல்லது பேதிகாணும்; அதை அவஸியமில்லாமல் தடுக்கலாகாது. ரோகம் தொலைந்து பலயீன மிருக்கும்போது, அம்மோனியா, பார்க்முதலியதாருட்டியகாரிகளைக்கொடுக்கவேண்டியது. புப்புஸத்தில் கொதிப்பு மீறி, தாதுக்கள் அழுகிப்போனல், உஷ்ணகாரி, பலகாரி இவைகளைக் கொடுக்கவேண்டியது. சுவாசத்தில் துர்வாசனை இருந்தால், வெந்நீரில் டர்ப்பன்டையின் என்னும் தயிலத்தைவிட்டு, அதின் ஆவியை, $\frac{1}{4}$-மணிநேரம் ஆக்கிராணிக்கச் செய்யலாம், அவ்விதமாய், 2-3-மணிக்கொருதரம் செய்வித்தால்நல்லது. பிராந்தியும் நல்ல ஊட்டமும் தாராளமாய் உள்ளுக்கேற்றவேண்டியது. Remedies.—Castor oil ; rest ; liquor ammonia acetatis; poppy-head fomentation ; turpentine stupes ; light diet. In low cases, mutton broth; wine ; ammonia. In gangrene.—stimulants ; tonics.

க்ஷயரோகம்

தைஸெஸ், PHTHISIS. கன்சம்ஷன், CONSUMPTION.

பிரதிபதங்கள்.—ஈளைவியாதி. யக்ஷ்மரோகம். ரோகராஜம்.

இது தேகத்தை நாளுக்குநாள் க்ஷீணபடுத்துவதால், க்ஷயரோகமெனப் பேற்பெற்றது. இது தேகத்திலெடுத்த வியாதி; ரத்தத்திலிருந்து ஜனிக்கிற சிறிய கிரந்திகள் சுவாஸப்பையின் கண்ணறைகளுக்கு மத்தியிலும், கண்ணறைகளிலும், சிறியசுவாஸக்குழல் கிளைகளிலும் அமைந்துஇந்த துஷ்டரோகம் பிறக்கின்றது. அந்தக்கிரந்திகள் நாளுக்குநாள் பெரிதாகும்; ஆரம்பத்தில் உறுதியாய் இருக்கும், (குரூட்டியூபர்கில், crude tubercle; சிலநாட்சென்றபிறகு, கிரந்திகளைச் சுற்றிலும் புப்புசத்தில் தாபனம் கண்டு சீழ்க்கொள்ளும்; சீழ்க்கொண்டபிறகு, கிரந்திகள் மிருதுவாகி, உடைந்து, சுவாஸக்குழல் கிளைகளுக்குள் சென்று கபத்துடன் வெளிபட்டுவிடும்; அப்போது கிரந்திகள் இருந்தவிடத்தில் சிறிய குழிகள் உண்டாகும். அக்குழிகள் தெய்

வாதீனமாய் அடைந்து உலர்ந்து போவதும் உண்டு; ஆனால்குழிகளைச்சுற்றிலும் நூதனக்கிரந்திகள் உண்டாகி, அதைப் பெரிதாக்குவது வழக்கம். இவ்விதமாய் புப்புஸத்தில் பலஸ்தானங்களில் கிரந்திகள் ஜனித்து, முடிவில் பிராணரக்ஷணைக்கு புப்புஸத்தை உதவாமல் செய்துவிடுகின்றன.

குறிகள்.—இந்த அசாத்திய வியாதியில் காணுகிற சாதாரணக்குறிகளென்னவெனில் இருமல், ரத்தகாசம், க்ஷீணம், கபம்விழுதல், அக்கினிமந்தம், தீவிரநாடி, சுரம், கொஞ்சம் கஷ்டசுவாசம், தேகச்சடைப்பு, குரல் கம்மல், வியர்வை, பேதி ஆகிய இவைகளாம். ஈறுகளின் ஓரம் கொஞ்சம் சிவந்து, பார்வைக்கு புஷ்பமாலையைப்போல் காண்பது வழக்கம். புருஷர்களில், இத்தரோக ஆரம்பத்தில், குதந்திரவியாதி காண்பதும் உண்டு. இந்த ரோகமானது, உஷ்ணத்தால் வரக்ஷியோடு புகைந்து புகைந்து காணுகிற இருமல் மாதிரியாய்ப் பிறக்கின்றது. வேறு குறிகள் காணப்படாமல், அவ்விதமாகவே சிலநாள்வரையில் இருப்பதும் உண்டு; இருமலில் ஒவ்வொருவேளை ரத்தம் காணும்; விட்டுவிட்டு கண்டு, க்ஷயரோகம் நிக்ஷயமாய் பிறக்கப்போகுதென்று ரோகிக்கு முன்னதாய்த் தெரியப்படுத்துகின்றது. ரத்தம் விஸ்தாரமாக காண்பதும் உண்டு; கண்டால் சுவாசக்குழலை அடைத்துக்கொண்டு மூச்சு தடைபடுவதினாலாவது, அல்லது ஆயாசத்தினாலாவது மரணம் சம்பவிக்கும். இந்த ரோகம் ஸ்திரீகளுக்குக் கண்டால், சூதக அக்கிரமம் காண்பது வழக்கம். யகிர்த்தகண்டத்தில் வேதனையிருப்பதும் உண்டு; இருமலும், கபமும் நாளுக்குநாள் அதிகப்படும். சில நாள் சென்றபிறகு, க்ஷீணசுரம் பிறக்கும், பலவீனம் அதிகப்படும், முகத்தில் மினுமினுப்பு காணும், சாயங்காலங்களில் குளிர்பிறக்கும்; காலையில் படுக்கை விட்டெழுந்திருக்கும்போது, சரீரம் வியர்வையால் முழுகியிருக்கும்; பசி மந்தப்படும்; அதிக தாகமெடுக்கும்; ஸ்திரீயில் சூதகம் பூர்த்தியாய் நின்றுவிடும்; ரோகியின் தேகம் வெகு சீக்கிரத்தில் இளைத்து, பேதியுண்டாகும்; அந்த பேதி, இலியம், கோலன் என்னும் குடல்களில் ரணம் கண்டாவது, அல்லது, துர் நீர்களின் சுரப்புனாலாவது காணுகின்றது. பேதியால் க்ஷீணம் அதிகப்படும். மூத்திரத்தில் ஆல்பியூமன் என்னும் பசையும், ஒவ்வொரு வேளை கொஞ்சஞ் சருக்கரையும் காணப்படும். கால்களில் குடைச்சல் கண்டு நீரேற்றம் காணும்; பிறகு ஆளை இவ்வுலகவாழ்க்கையிலிருந்து சீக்கிரத்தில் பரலோகத்துக்கு அனுப்பிவிடும். சாகக் கொஞ்சநேரம் வரையில் புத்திக்கு விகல்ப்பம் நேரிடாது.

ரோகநிதானம்.—இந்த ரோகத்தைக் கண்டுக்கொள்ள சில முக்கிய குறிகள் உண்டு:—அவைகளென்னவெனில்—தோளில் கிளாவிகில் என்னும் எலும்புக்குமேலும் கீழும் இருக்கிற ஸ்தானங்கள் பள்ளம் விருந்திருக்கும். விரல்களால் தட்டிப்பார்த்தால், கெட்டியான சப்தம் கேழ்விப்படும்; சப்தசோதனைக்குழலை வைத்துக் கேட்டால், ரோக ஆரம்பத்தில், சுவாஸ சப்தம் பலமாயும் (bronchial respiration), சிடசிட என்றும் சப்தமும் (large crepitation) கேழ்விப்படும். ரோகம் மீறி நுரையீரலில் இருக்கிற கிரந்திகள் மெதுவுற்று ரந்திரம் செய்துகொண்டு வெளிக்குவந்தபிறகு, அவ்விடத்தில் பள்ளங்கள் ஏற்படும்; அப்போது குடுகுடு சப்தம் (gurgling) கேழ்விப்படும்; பள்ளங்களில் இருக்கும் சீழ் அல்லது கபத்தில் காற்று பிரவேசித்து நுரைத்து முட்டைகள் உடையும்போது மேற்படி சப்தம் கேழ்விப்படும். பள்ளங்களில் திரவமில்லாவிட்டால், குப்பியை ஊதும்போது பிறக்கிற சப்தம்போலுருக்கும் (cavernous respiration). க்ஷயரோகி நிசு

வாசிக்கும்போது வெளிப்படுகிற காற்றுப்படிபடியாய் குறையும், ஏனெனில் புப்புசமானது வியாதியால், காற்றைக் கொஞ்சமாய்க்கொள்ளுகின்றது. க்ஷய ரோகிக்கு இன்னமொரு பிரதான விஷபமும் காணப்படும், அது என்னவெனில், சரீரம் எடையில் குறைவு காணுதலாம்.

க்ஷயரோகமானது பாரம்பரையாய் காண்பதுண்டு; சிலர் இடையில் சம்பாதித்துக்குக்கொள்ளுகிறார்கள். இது ஒட்டு வியாதியல்ல. வலதைப் பார்க்கிலும், இடதுபக்கமே மிகுதியாய் வியாதிகொள்ளும்; மற்றவிடத்தைப் பார்க்கிலும், புப்புசத்தின் சிகரத்தில் கிரந்திகள் அடைவது வழக்கம்; எந்த வயதிலும் இந்த வியாதிகாணும். அபக்குவபோஜனம், கெட்டகாற்று, அதிக ஸ்திரீபோகம் ஆகிய இவைகளாலும்; இந்த கொடிய வியாதி பிறக்கின்றது. இந்தவியாதி 6-முதல் 24-மாதம்வரையில் போராடும்; 3-மாதத்துக்குள் ஆளைக்கொள்ளுவது அபூர்வம்.

சிகிச்சை:—இந்த பலத்தரோகத்துக்கு வெகு பத்திரமாய் சிகிச்சை செய்யவேண்டியது. கண்டவியாதி அதிகரிக்காமல் செய்யலாமேயொழிய சொஸ்தப்படுத்த ஒருவராலும் முடியாது. வியாதி தேகத்தில் அனுசரித்து, நுரையீரலில் சட்டிகள் ஜனித்துவிட்டால், தேக போஷணைக் குடைய மார்க்கத்தை யனுசரிக்கவேண்டியது; அதற்கு நல்ல ஊட்டம் கொடுத்து, நல்ல பிரதேசத்தில் இருக்கச்செய்து, மைதானத்தில் கேளிவிலாசமாய் உலாற்றச்சொல்லி, கெட்ட காற்றில் உட்காராமலும், நித்திரைசெய்யாமலும் திட்டப்படுத்தி, கம்பளிச்சொக்காய் தரித்துக்கொள்ளசெய்து, மீன் நெய்யை உள்ளுக்குக் கொடுக்கவேண்டியது. ரோகியின் பலத்தைக் குறைக்கவே ஆகாது. பத்தியத்துக்கு, மாம்ஸ இனங்களும், பால், பாலேடு, முட்டை இவைகளும் பிராந்தி, ஒயின், பீர் இந்த சாராயங்களில் ஒன்று மிதமாகவும் சாப்பிடச்செய்யலாம். தாமசித்து போஜனம் செய்யசொல்லலாகாது. ரோகி இருக்கிற இடத்தைவிட்டு, உஷ்ணகாற்றும் பார்வைக்கு இன்பமாயுமுள்ள மற்றோரிடத்தில் போய் இருக்கச்செய்வது பிரதான சிகிச்சை. சிகிச்சையில் இது ஒரு அம்சம், இதையே நம்பி மருந்தைத் தள்ளிவிடலாகாது. மேலும் வியாதி பூரணமாகி விட்டபிறகு ரோகியை வேறிடத்தில் அனுப்புவதும் நல்லதல்ல. இதற்குக்கொடுக்கிற மருந்துகளில் மீன்நெய்யே சிரேஷ்டம், அது தேகத்தைப் போஷிக்கும்; இருமல், கபம், இராவியர்வை இவைகளைச் சமனப்படுத்தும்; நூதன கட்டிகள், நுரையீரலில் உண்டாகாமல் செய்யுமென்றும் நம்பலாம். ஆரம்பத்தில் அந்த நெய்யில் (cod-liver oil) ஒரு உத்திரணி வீதம், தினத்துக்கு 2-3-ஆவர்த்தி கொடுத்தபிறகு, $\frac{1}{2}$-ஒளன்ஸ் அளவுக்குக் கிரமேணய் அதிகரித்து, தினத்துக்கு 4-5-தடவை கொடுக்கலாம். போஜனம் செய்தபிறகு இதை எடுத்துக்கொண்டால், சுலபமாய் ஜீரணமாகும். வயிற்றில் புளிப்பிருந்தால், நெய்யோடு லைகர்பொடாஷி என்னும் மருந்தைச் சேர்த்துக்கொடுத்தால் நன்மைசெய்யும். ஒருவேளை அந்த நெய் குமட்டலை யுண்டாக்கினால், ஒரு துளி கிரியாஸோட் என்னும் மருந்தைச் சேர்த்துக்கொடுக்கலாம். ஒருவேளை வயிற்றில் அந்த நெய் தங்குவது பிரயாசையாகில், அதையே உடம்புமேல் தேய்க்கலாம், அல்லது, துணியை அதில் நனைத்து, மார்பின்மேல் போடலாம். தேங்காயெண்ணெய்க்கும், இந்த வியாதி தடைபடுமென்று கண்டிருக்கின்றது. ரத்தவாந்தியில்லாமல் இருக்கும்போது, அயத்தைச்சார்ந்த மருந்துகளைக் கொடுக்கலாம். ஐயோடைட் ஆவ் பொடாஷியம், ஐயோடைட் ஆவ்ஜரன் ஆகிய இவைகளைக்குறித்து அதிகமாய்புகழ்ந்திருக்கின்றது.

சிங்கோனுபார்க் என்னும் பட்டையின் சூரணம் கொடுத்தால் சரீரத்துக்குத் தாருட்டியம் வரும். அதிக இருமலுக்கு அபினி, அல்லது பார்பியா கொடுத்தால் அது தணியும்; இருமும்போது ரத்தம் கண்டு உபத்திரவப்படுத்தினல், டர்பன்டைன் என்னும் தயிலத்தில் 10-துளிவீதம், ஒவ்வொரு மணிக்கொரு தரம் கொடுத்துக்கொண்டு வரலாம்; காலிக் ஆசிட் என்னும் மருந்தையாவது, அல்லது மாசக்காய்த் தூள் அல்லது கஷாயமாவது கொடுக்கலாம். இரா வியர்வையால் துர்பலம் அதிகப்பட்டால், மாசக்காயாவது, அல்லது கந்தகத்திராவகத்தை பார்க்கஷாயத்திலாவது கலந்து கொடுத்தால் நன்மை செய்யும். பேதி விசேஷமாய்க் கண்டால், காசுக்கட்டி, வர்த்தங்கிசக்கை, பலாசம்பிசின், இவை முதலிய துவர்ப்பு மருந்துகளைக்கொடுத்து, அதை கண்டிக்கவேண்டியது. மார்புக்கு வெற்றுக்குடுவைப் பறியிடுதல், அல்லது நேர்வாளத்தயிலத்தேய்ப்பு, அல்லது அடிக்கடி பிளிஸ்டர்போடுதல், அல்லது அடிக்கடி கடுகை அரைத்துப் பற்றுப்போடுதல், அல்லது டர்பன்டைன் ஒற்றிடம், இவைகளால் சவுக்கியம் பிறக்கும். ஐயொடைன் மார்பின்மேல் தடவுகிறதும் உண்டு. நாட்டுச்சிகிச்சையில் உபயோகிக்கிற தாளக பஸ்பம், கடலைப்புளிப்பு, பவழபஸ்மம், ரசம், முதலிய இன்னம் சிலமருந்துகளை சொப்பனத்திலும் நினைக்கலாகாது. Remedies.—Nutritious diet; change of air; cod-liver oil; iron; idodine; bark; lequor potassæ; opium or morphia; oil of turpentine; gallic acid mineral acid with bark. For diarrhæa, catechu, kino. Counter-irritation to the chest.

1. இருதயகோசதாபனரோகம்

பெரிகார்டைடிஸ், PERICARDITIS.

லக்ஷணங்கள்.—ரத்தாசயத்தைச் சூழ்ந்துக்கொண்டிருக்கிற பைக்குத் தாபனம், ரத்ததூஷியத்தினல் காணுகின்றது. இதில் காணப்படுகிற பிரதான குறிகள் என்னவெனில்,—சுரம், இடதுபக்கம் ரத்தாசய ஸ்தானத்தில் வேதனை, ரத்தாசயத் துடிப்பு, அக்கிரமநாடி, பெருமூச்சு, இடது பக்கமாய்ப் படுக்க இடங்கொடாமை, கண்ட நாடிகள் வேகமாய்த்துடித்து அடித்துக்கொள்ளல், ஏக்கங்கொண்ட முகம், விழுங்க கஷ்டமாயிருக்குதல், காதிரைச்சல், மயக்கம், மூக்கில் ரத்தம் வடிதல் ஆகிய இவைகளாம், வியாதி பிரபலப்படும்போது அதிக தளர்ச்சி, இருமல் அடிக்கடி மூச்சடைப்பு, மோஹாலசியம், முகத்திலும் கால்களிலும் நீரேத்தம் ஆகியஇக்குறிகள் காணும்; இருதயநடை பலஹீனமடைந்து அக்கிரமமாய் நடுக்கலோடு அடித்துக்கொள்ளும்; சப்தங்களும் பலவீனமடைந்து விகல்பப்படும். ரோகம் அதிக கோபமடைந்திருக்கும்போது நித்திராபங்கம், குரூபமுகம், வலி, பித்த விகாரம் ஆகிய இவைகளும் உண்டாகும். மேற்படி குறிகள் சரீரப்பிரகிருதிக்குத் தக்கபடி வித்தியாசப்படும்; ஆகையால், சப்தசோதனக்குழல் பரீக்ஷையில் வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியது. ரோக ஆரம்பத்தில். ஒருவித தேய்ப்புமாதிரியான சப்தம் (alternate rubbing or to-and-fro sound) கேழ்விப்படும்; அது சிலநாளிருந்து, பிறகு கேழ்விப்படாது.

இந்த வியாதியில் தாபனம் ஒருவேளை கரைந்துவிடும்; கரையாவிட்டால், ரத்தநீர் (Serum) சுரந்து பையில் சேர்ந்துக்கொள்ளும். லிம்ப் (lymph) என்னும் பசை உற்பத்தியாகி ரத்தாசயத்தையும், அதின் பையையும் மூடிக்கொள்வதுண்டு. மெலிந்த தேகத்தில் இந்த வியாதிகண்டால், சீழ் ஒருவேளை ஜனித்து, ஆளை எவ்விதத்திலும் கொல்லும்.

காரணங்கள்.—உக்கிரகீல் வாதரோகத்தில் இந்த துஷ்டவியாதி காண்பது வழக்கம். மூத்திரகுண்டிக்காய் ரோகத்தில் ரத்தம் கெட்டு மேற்படி வியாதிகாண்பதும் உண்டு. ஈரம், குளிர்ச்சி இவைகளாலும், அடிபடுவதினாலும் இந்த வியாதி உண்டாகின்றது.

சிகிச்சை.—இந்தவியாதிக்கு, கையில் குத்தி ரத்தமெடுத்து, பிறகு ரசமருந்து கொடுத்து வாயைப் புண்ணுக்குவது வழக்கம்; அவ்வித புராதன சிகிச்சையால் அபாயம் சம்பவிக்குமே யொழிய, ரோகம் செப்படுவது அபூர்வம். இப்போது இதற்குச் செய்துவருகிற முறை யாதெனில், பைகார்போனேட ஆவ் போடாஷ், அபுனி, வேதுபிடிப்பித்தல் ஆகிய இம்மூன்று பிரதான மருந்துகளைப் பிரயோகப்படுத்தலாம். மேற்படி போடாஷ் உப்பில், ½-திராம்வீதம் 2- 3- மணிக்கொருதடவைக் கொடுக்கலாம். அபினியில் 1- கிறேன் எடைக்கு 3- 4- மணிக்கொரு தவணை கொடுத்துக்கொண்டுவந்தால் வேதனை தணிந்து நல்ல நித்திரை வரும். இவைகள் பலவீனத்தையுண்டாக்காமல் ரோகிக்கு சவுக்கியத்தைத் தரும். உப்பு பேதிக்குக்கொடுத்து,மலத்தை வெளிப்படுத்திவிடவேண்டியது. ரோக ஆரம்பத்தில் பத்தியத்துக்குக் கஞ்சியினங்கள், பால், மாம்ச ரசம் ஆகியஇவைகள் கொடுக்கஉதவும். துர்பலமுண்டாகும்போது நல்ல ஊட்டமும், ஒயின் சாராயமும் கொடுத்து காப்பாத்தவேண்டியது. ரோகியை நிம்மதிஸ்திதியில் வைப்பது பிரதானச் சிகிச்சை. ரத்தாசயப் பையில் நீர் அதிகமாய் சுரந்துவிட்டால் (hydropericardium) பிளிஷ்டர் போட்டு, அடிக்கடி புண்ணுக்கவேண்டியது. ஐயோடைட் ஆவ் பொடாஷியம் என்னும் உப்பைக் கொடுத்து, நீரைவற்றச் செய்வதும் ஒரு முறை. எதற்கும் நீர் வடியா திருந்தால், மெல்லிய ஊசி விட்டு நீரைப்போக்கி, ஐயோடைன் என்னும் மருந்து கலந்தநீரைஉள்ளுக்கு அடித்து சிகிச்சை செய்ததாய்க் கண்டிக்கிறது) Remedies.—Bicrabonate of potash ; opium ; vapour bath ; blister.

2. இருதயசோபாரோகம்

ஹைபர்ட்ரோபி ஆவ்தி ஹார்ட், HYPERTROPHY OF THE HEART

லக்ஷணங்கள்.—இருதயமானது சுமார் 8-முதல், 10-அவுன்ஸ் எடையுள்ளதாய் இருக்கும். அதிலிருக்கிற பள்ளங்களுக்கு யாதொரு குறைவு வராமல்,சுற்றிலுமிருக்கிற சதைமாத்திரம்தடித்துப்போகும் (Simple hypertrophy)—அல்லது சதை தடித்து, அறைகளும் பருத்து விடுவது வழக்கம் (Eccentric hypertrophy, or hypertrophy with dilatation)—இப்படியாகாவிட்டால், சதை தடிப்போடு, அறைகளின் காத்திரமும் குறைந்துபோவதுண்டு (Concentric hyhertrophy); இந்த பேதம் ஜன்மத்திலிருந்தஇருக்கும் வியாதியால் உண்டாகிறதில்லை என்று யோசனை. இருதய ரத்தவோட்டத்திலாவது, அல்லது, இருதய சலனத்திலாவது ஏதோ தடையுண்டாகி, இந்த வியாதி ஜனிகின்றது. வலத்தைப்பார்க்கிலும், இடதுபக்கத்தின் ஜடரமே தடித்துப்போவது வழக்கம்.

இதில் இருதயதுடிப்புண்டு, மூச்சு முட்டலிருக்கும், தீவிரமாய் நடக்க இடங்கொடாது; இடதுபக்கம் ரத்தாசயஸ்தானத்தில் வேதனையோடு ஒருவித உணர்ச்சியாய் இருக்கும்; சிரசில் வேதனையுண்டு; அடிக்கடி மயக்கம் சம்பவிக்கும். காதுவைத்துக்கேட்டால், இருதய சருக்க சப்தம் (Systolic sound) செவ்வையாய் கேழ்விப்படாது. கையைவைத்துப் பார்த்

தால், இருதயத்துடிப்பு பலமாயும், வெகுதூரம்வரையில் பரவியும் தட்டு படும்.

கிரிச்சை.—இதற்கு ரோகியை படுத்தப்படுக்கையில்வைத்து, காணுகிற குறிகளுக்குத்தக்கபடி மருந்துகள் கொடுக்கவேண்டியது. பலவீனம் அதிக மாய் இருந்தால் அயம், நிலவேம்பு, பார்க்கு, திராவகங்கள் ஆகிய இவைக ளும்,—அதிக இருதயத்துடிப்பிருந்தால், நாபி, டிஜிடேலிஸ் இவைகளை வெகுபத்திரமாயும்—மூச்சுமுட்டல் உபத்திரவித்தால், அம்மோனியா, ஈதர் முதலிய உஷ்ணகாரிகளும் உபயோகித்து வியாதியை சமனப்படுத்தவேண் டியது. Remedies.—Rest; for debility, steel; bark, &c , for palpitation, aconite and digitalis; for difficulty of breathing, ammonia and other stimulants.

இருதயம் கிழிந்துபோகுதல்

ரப்ஷர் ஆவ் தி ஹார்ட், RUPTURE OF THE HEART.

வியாதியினலாவது அல்லது அபாயத்தினலாவது, ரத்தாசயம் கிழிந்து விடும். வியாதியினல் இடதுபக்கத்திலும், அபாயத்தினல் வலது பக் கத்திலும் கிழிவுகாணும். முக்கல் அல்லது பயம், சந்தோஷம் இவை கள் கிழிவுக்குக் காரணங்களாகின்றன. ஸ்திரீகளைப்பார்க்கிலும், புரு ஷாளுக்கும், 50 - 60 - வயதுக்கு மேல்பட்டவர்களுக்கும், இது காணும். உடனே மரணம் சம்பவிக்காவிட்டால், மூச்சுமூட்டல், அதிக தளர் ச்சி, மோஹாலசியம், வலி ஆகிய இக்குறிகள் காணப்படும். இரு தயம் கிழிந்த உடனே மனிதன் இறந்துபோவதால், சிகிச்சைகளுக்கு யா தொரு வேலையுமில்லை

மார் அடைப்பு

ஆஞ்சைன பெக்டோரிஸ், ANGINA PECTORIS. BREAST-PANG.

பிரதிபதங்கள்.—தமரகவாதம்; சமரகவாயு; மார்புநோவு; இருதய ரோகம்; தமர்வாதம்; உருத்திரவாதம்; அபதந்திரகவாதம்.

இருதயத்தைப்பற்றிக் காணுகிற இந்த ரோகம் வெகு கொடியது; விட்டு விட்டு காணும். நடக்கும்போதும், சாப்பிடும் போதும் உட்கார்ந்திருக்கும் போதும், திடீலென்று மாரடைத்து, பேச்சுமூச்சில்லாமல் இருந்து, பாகதி யடைவதற்குக் காரணம் இந்த ரோகமேயாம்.

லக்ஷணங்கள்.—இந்த வியாதியில் காணுகிற குறிகளென்னவெனில் ரத்தாசய ஸ்தானத்தில் நின்று நின்று வேதனையெடுக்கும்; மூச்சுமுட்டலும், இறந்துவிடுவோமென்று ஒரு பயமும் சம்பவிக்கும்; மார்பில் காணுகிற வேதனை பலவிதமாய் சொல்லுவார்கள்; சிலர் குத்தல் என்பார்கள்; சிலர் எரிவு என்பார்கள்; சிலர் பிடித்தமென்பார்கள்; நடு மார்பிலிருந்து, கழுத்துக் காவது, முதுகுக்காவது, இடது தோளுக்கும் புஜத்துக்குமாவது ஓடுகிறதாய் இருக்கும். நடக்கும்போது வியாதி கண்டால், உடனே படுத்துக்கொள் ளும்படியாய் நேரிடும்; நாடி மெதுவாயும், பலவீனமாயும் நடக்கும்; சுவாசம் பிடித்தமாயும், வேகமாயும் ஓடும்; முகம் வெளுத்து, திகிலடைந்ததாய்க் காணப்படும்; தேகம் சில்லிட்டு, பிசுபிசுத்த வியர்வைகொள்ளும்; புத்திக்கு விகல்ப்பமிராது. வேதனை நீங்கின உடனே, ரோகிக்குஒன்றுமிராது.

வேதனையானது, கொஞ்சநேரமிருந்து பிறகு தணிந்துவிடுவது வழக்கம்; சிலபோது ½-1 மணிநேரத்துக்கதிகமாய் இருப்பதும் உண்டு; இந்த உபத்திரவம், சிலருக்கு வாரக்கணக்காயும், சிலருக்கு மாதக்கணக்காயும், வியாதி பலப்பட்டுவிட்டால், அடுத்தடுத்தும்காணும்; காண்பதற்கு ஒரு ஸ்திரமிராது. நடக்கும்போது, படுக்கையிலிருக்கும்போதும் கண்டு ஆளை வருத்தப்படுத்தும். இதில் காணுகிற வேதனை சித்திரவதையாய், பிராணன்போகிறது போல் இருக்கும்; சிலருக்கு வந்தால், மரணமே நிஷ்சயம். இது வெகுகெட்ட ரோகம். முதல் அல்லது, இரண்டாவது ஆவர்த்தியில் மரணம் சம்பவிக்காவிட்டால், பின்னிட்டு காணும்போது எப்படியும் ஆளை பரலோகப்பிராப்தியடையும்படிச் செய்வது நிச்சயம். இந்தவியாதி, வயதுசென்றவர்களில் மிகுதியாயும், ஸ்திரீகளைப்பார்க்கிலும், புருஷாளில் அதிகமாயும் காணலாம்.

சிகிச்சை.—இந்தகொடிய வியாதி கண்டிருக்கும்போது, அம்மோனியா, ஒயின், பிராந்தி முதலிய உஷ்ணகாரிகளும், ஈதர், அபினி, குளோரோபாரம், கஸ்தூரிமுதலிய அங்காகர்ஷண நாசகாரிகளும், கொடுக்கவேண்டியது. அபினியுடன், கஸ்தூரியைச் சேர்த்துக்கொடுக்கலாம். இந்த வியாதியையுடையவர்கள், ஏதாவது தகுதியான மருந்தைக் கிட்டவே வைத்திருந்து, வியாதியின் குறிகள் ஆரம்பிக்கும்போதே சாப்பிட்டுவிட்டால், உடனே வேதனை நீங்கிவிடும். மார்புக்கு வெந்நீர் ஒற்றிடமாவது, கடுகு பற்றுவது போடலாம்; மான் கொம்பு, சுக்கு, பெருங்காயம், செம்மரம் ஆகிய இவைகளில் ஒன்றை, சாராயத்தில் உரைத்து பற்றுப்போடுவது நாட்டுவழக்கம். இவ்விதமாய் வியாதியை நீக்கினபிறகு, மறுபடியும் வரவொட்டாமல் தடுக்க முயற்சிசெய்யவேண்டியது. அதற்கு, வாயுவையுண்டாக்கிற பதார்த்தங்களை நீக்கிவிடவேண்டியது; போஜனத்தில் வெகு கிரமம்வைக்கவேண்டியது; தேகபலம் உண்டாக்கிற மருந்துகளை அடிக்கடி எடுத்துக்கொள்ளுவதில் சுகுணந்தரும். சாராய இனங்களை நீக்கிவிடவேண்டியது; பிரயாசமான வேலைசெய்யலாகாது; போஜனம் செய்தவுடனே, நடக்குதலை நீக்கிவிடவேண்டியது; மனக்கொதிப்புண்டாக்கிற விஷயங்களில் பிரவேசிக்கலாகாது. பெல்லடோனா அல்லது, ஊமத்தன் சத்தை தோலில் தடவி, இருதயஸ்தானத்தின்மேல் எப்போதும் போட்டுக்கொண்டிருப்பதில் மெத்த பிரயோசனமுண்டு. Remedies—Ammonia; wine; brandy; ether; opium; chloroform; sinapism; turpentine stupes; hot fomentations. To improve health, tonics; nourishing diet; belladonna plaster to the chest.

5-ம் அத்தியாயம்

ஜீரண உறுப்புகளை யனுசரிக்கிற ரோகங்கள்

DISEASES OF THE ORGANS OF DIGESTION.

1. நாக்குதாபிதம்

இன்பிளமேஷன் ஆவ் திடங், INFLAMMATION OF THE TONGUE. கிளாசைடிஸ், GLOSSITSI

பிரதிபதங்கள்.—ஜிக்வாதாபிதரோகம்.

வேறுவியாதியால் அல்லது தர்ச்செயலாய் நாக்குக்குத் தாபிதம்காணும். இதில் சுரம் இருக்கும்; மனத்தளர்ச்சி காணும்; துர்ப்பலம் உண்டாகும்;

நாக்கு வீங்கி சிவந்து நோவெடுக்கும், உஷ்ணமாயிருக்கும்; ஒவ்வொரு வேளை அதிகமாய் வீங்கி, வாய்க்குள் அடங்காமல் வெளிக்கு பிதுங்கி விடும். இவ்வித லக்ஷணங்கள் வெகு சீக்கிரத்தில் பிறந்து, மூச்சடைப் புகாணும்; அப்போது தாமசிக்காமல், சிகிச்சை செய்யவேண்டியது. ஆசன மூலமாய் மருந்தையேற்றி, வயிற்றையிளக்கி, வெந்நீர் ஆவி நாக்கில் படும்படிச்செய்து, காடிக்காரத்தை நாக்கில் தடவினல், வீக்கம் கரையும். கத்தியால் கீறிவிட்டால், அதிகரத்தம் வெளியில் வந்துவிடும்; சீழ்க்கோர்த்துக்கொண்டபோதிலும் கீறிவிடவேண்டியது. அடிநாக்கு தடித்து, மூச்சடைப்புகண்டால், சுவாசக்குழலைச் சேதித்துவிடவேண்டியது.

ஜிக்வாலஜகரோகங்.—நாக்கில் பலவிதரணங்கள் (Ulcers of the tongue) காண்பதுண்டு; கண்டால், சிலது சீக்கிரத்தில் உலராமல், அதிக வேதனையைத் தரும். தாபனங்கண்டு காணுகிற ரணங்கள் சிறுதாய், மேலாக பலரூபங்களாய் இருக்கும், அதிக வேதனையைத் தரும், நாக்கின் முனையிலும், ஓரங்களிலும் பிரீனம் என்னும் ஜவ்வின் மடிப்புக் கருகாமையிலும் இருக்கும் அதற்கு, லகு அசனம் சாப்பிடும்படிச் செய்து, பேதிக்குக்கொடுத்து, வயிற்றை யிளக்கி, மயில்துத்தத்தைப் போட்டுச் சவுக்கியப்படுத்தவேண்டியது. பற்காறை ஏதாவது இருந்து உபத்திரவித்தால், அதை எடுத்துவிடலாம். ரசம் சாப்பிட்டுக்காணுகிற ரணங்களை யறியும் விதமாவது, ஈறுதடித்து வாய் நாற்றமிருக்கும்; அவைகளுக்கு உப்பு பேதிக்குக் கொடுத்து, மயில்துத்த நீர் (2-கிறேன் துத்தம், 1-ஔன்ஸ் ஜலம்), கொப்புளிக்கச்செய்து வசப்படுத்தவேண்டியது.—மேகரோகத்தால் நாக்கில் ரணங்கள் கண்டால், தேகத்திலு மேகரோகக்குறிகள் காணப்படும். அதற்கு ரசத்தோடு, அபினி சேர்த்துக்கொடுத்து, காடிக்காரத்தை ரணத்துக்குத் தேய்க்கவேண்டியது. உள்ளுக்கு, ஐயோடைட் ஆவ் பொடாசியம் என்னும் உப்பைக்கொடுத்து, பொட்டிலுப்புத் திராவகநீரால் வாய்க்கொப்பளிக்கச்செய்தால், சவுக்கியம் உண்டாகும்.

நாக்குவெடிப்பு.—அக்ஷரம். பித்தஜிக்வாகண்டக ரோகம். கந்ததாளி ரோகம். கிராக்கெட்டங், (Cracked tongue).—சிலருக்கு இது கண்டால் மெத்த உபத்திரவப்படுத்தும், சீக்கிரத்தில் உலராது, சாப்பிடவும் பேசவும் கஷ்டமாகும், பிரபல வேதனையைத்தரும். தேகத்தில் ஒரு தூஷியமில்லாமலும், வயிற்றுச் சுகம்கெடாமலுமிருந்தால், வெண்காரத்தைத் தேனில் கலந்து தடவிக்கொண்டுவரும்படிச் செய்யலாம். இதில் சீக்கிரம் வசப்படாவிட்டால், உள்ளுக்கு, ஐயோடைட் ஆவ் பொடாஸியம், அயம், அல்லது நன்னாரிவேர் கொடுத்துச் சவுக்கியப்படுத்தவேண்டியது. ஆலம்பால், 3-நாள் குடித்து, உப்பில்லாத பத்தியம் இருந்தால் ரோகம் வெகு சீக்கிரத்தில் ஓட்டம் பிடிக்கும். மேற்படி பாலை கொப்பளித்தபோதிலும், நல்லது. அக்ஷரம் சிலருக்கு அற்பமாயும், சிலருக்கு நாக்கெல்லாம் வெடித்திருக்கும்.

சிலரில், மேகவியாதியால் நாக்கின்மேல் சில விடங்களில் தோல் படையாய் உரிந்துவிடும்; அதற்கு சவ்வீரம் நாள்படக்கொடுத்து ரோகத்தைக் கண்டிக்கவேண்டியது.

2. துத்திரோகம்

ஆப்தி ஆவ்திமவுத், APHTHÆ OF THE MOUTH ; THE THRUSH.
பிரதிபதங்கள்.—வாய்க்கிரந்தி. தாளுரோகம்.

குழந்தைகளுக்குச் சாதாரணமாய் நாக்கிலும், வாயிலும், சிறிய வெளுத்தப்புள்ளி அல்லது புடைகளைப்போல் காணுகிற ரோகத்துக்கு

துத்திரோகமென்று சொல்வது வழக்கம். அந்த விரணங்களுக்கு வெண்காரத்தூளைத் தேனில் கலந்து, வாயில் தடவிக்கொண்டுவந்தால் வியாதி சவுக்கியமடையும். காசுக்கட்டி, மாசக்காய், கடுக்காய் ஆகிய இவைகளில் ஒன்றை உரைத்து தடவிக்கொண்டும் வரலாம். தேகதாருட்டியம் வரும்படி, உள்ளுக்கு நல்ல ஔஷதங்கள் கொடுக்கவேண்டியது.

3. புட்டாலம்மை

மம்ப்ஸ், THE MUMPS. INFLAMMATION OF THE PAROTID CYNANCHE PAROTIDAEA. PAROTITIS.

பிரதிபதங்கள்.—பொன்னுக்குவீங்கி.

காதுசமீபத்திலிருக்கிற காதடிக்கோளமென்னும் உறுப்பு வீங்கி நோவெடுப்பதற்கு சாதாரணமாய் ஜனங்கள், புட்டாலம்மையென்று சொல்லுவது வழக்கம். உமிழ்நீர் சுரப்பிக்கிற கோளங்களும் வீங்குகிறதுண்டு. வீக்கம் ஒருபக்கமாவது, அல்லது இரண்டுபக்கமாவது, காணப்படும். முதல் சுரம் காண்பது வழக்கம். வீக்கமானது, காதுக்கடியிலிருந்து கழுத்துக்கிறங்கி மோவாய்க்கட்டை வரையில் வியாபித்திருக்கும். இந்தவியாதி 4-நாள் வரையில் அதிக்கிரமித்து பிறகு தணிந்துவிடும். சிலவேளை வியாதியின் உக்கிரம் தணியும்போதாவது, அல்லது வியாதி சொஸ்தப்பட்டப் பிறகாவது, பீஜம், ஸ்திரீகளில் முலை, வீங்குவதுண்டு. இந்த அற்பரோகம் தற்செயலாய்ப் போய்விடும், ஒருவேளை சிகிச்சை தேவையிருந்தால், பேதிக்குக்கொடுத்து, கொஞ்சம் வியர்வை பிடிக்கும்படியான மருந்துகள் கொடுக்கவேண்டியது. வீக்கத்துக்கு, வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, கம்பளித்துணியைக் கழுத்தில் சுற்றிவைக்கவேண்டியது. இந்த வியாதிக்குப் பொன்மணியைக் கழுத்தில் கட்டிவைத்து, பயறு, புட்டு முதலியவைகளின் ஆவி வீக்கத்துக்குப் படும்படிசெய்து, அம்மைக்குப் படையல்போட்டு, உபசரணைச் செய்வது வீட்டு வழக்கம். Remedies.—Laxatives; diaphoretics; hot fomentations; flannel to the throat

4. சயித்திய கட்டி

டான்சிலைடிஸ், TONSILLITIS. INFLAMMATION OF THE TONSILS. CYNANCHE TONSILLARIS. QUINSY

பிரதிபதங்கள்.—கண்டக்கிறந்தி.

வாயிக்குள் காணுகிற இந்தவியாதியானது கடினசுரத்தோடு ஆரம்பித்து, தொண்டையில் வீக்கமும் வேதனையும் காணும்; தொண்டையின் இரண்டு பக்கங்களிலிருக்கிற மாமிச கிரந்திகள் வீங்கி வேதனையெடுக்கும்; எதையும் விழுங்க கஷ்டமாகும்; வியாதி கடினஸ்திதியிலிருந்தால், வேதனைகாதுவரையில் வியாபித்திருக்கும்; மூச்சடைப்பு காண்பது அரிது. சாதாரணமாய் இந்த வியாதி சிலநாள் வரையில் இருந்து பிறகு கட்டி கரைந்து, கிரந்திகளில் வீக்கமாத்திரமிருக்கும்; ஒருவேளை வியாதி கொஞ்சங் கோபித்திருந்தால், கட்டி பழுத்து உடையும்; சீழ் வெளிப்படுகிறவரையில் வேதனை உக்கிரமாய் இருக்கும். இந்த வியாதிக்கு முக்கியகாரணம், குளிர்ச்சியேயாம்.

சிகிச்சை.—இந்தவியாதிக்கு விசேஷ சிகிச்சை யொன்றும் ஆவசியமிராது. பேதிக்குக்கொடுத்து, தொண்டைக்கு வெந்நீர் ஒற்றிட

மிட்டு, வெண்டைக்காயின் போல்டீஸ் கட்டிக்கொண்டுவந்தால், வியாதி சவுக்கியமடையும். போஸ்தக்காயை ஜலத்திலிட்டுக் காய்ச்சி, அதின் ஆவியை வாயில் படும்படிச்செய்தால், வேதனை தணியும்; அபினி கரைத்த ஜலத்தையும் கொப்புளிக்கச்செய்யலாம். பெல்லடோனு அல்லது ஊமத்தைரசம் இவைகளில் ஒன்றை தொண்டையின்மேல் தடவி, போல்டீஸ் வைத்துக்கட்டுவதில் நயமுண்டு. ஒருவேளை கட்டியில் சீழ் சேர்ந்துவிட்டால், கீறி அதை வெளிப்படுத்திவிடவேண்டியது. கட்டியை உட்புறவாட்டமாய், கீறினுல் நாடிநரம்புக்குக் காயம்படாது; ஒருவேளை காயம்பட்டு அந்த நரம்பிலிருந்து அதிக ரத்தம் வடிந்தால், அயத்திராவகத்தைக் காயத்தின்மேல் செவ்வையாகப் பூசிவிட்டால், ரத்தம் நின்றுவிடும். ஒருவேளை இதற்கும் நிற்காவிட்டால், கழுத்தில் கீறி, நரம்பின் அடியைக் கட்டவேண்டியதாகவரும். Remedies.—Purgatives, hot fomentations; opiate gargles; belladonna and poultice to the throat; open if pus formed.

5. அஜீரணரோகம்

டிஸ்பெப்ஷியா, DYSPEPSIV. இன்டிஜெஸ்ஷன், INDIGESTION.

பிரதிபதங்கள்.—அக்கினிமந்தம்; பித்தவாயு; உஷ்ணவாயு; குன்மம்; மந்தாக்கினி; குன்மச்சூலை.

இந்த வியாதியுடையோரை அடிக்கடி நாம் காணலாம். ஜீரணத் தொழிலை எதாவது விகற்பப்படுத்தினுல், இந்த வியாதி காணும். புசிக்கப்பட்ட அன்னபானுதிகள், அன்னுசயத்திலும், சிறு குடலிலும் ஜீரணமாகின்றன. அன்னுசயத்தில் தகனமாக, சுமார் 2 - 3 - மணிநேரம் செல்லும். அவ்விடத்தில் பதார்த்தங்கள், ஜடராக்கினி (Gastric Juice) என்னும் திரவத்தோடு மிஸ்ரமமாகும். அந்த ஜடராக்கினியில், ஜலம், கறியுப்பு திராவகம் (Hydrochloric acid), லாட்டிக் ஆசிட் (Lactic acid) என்னும் புளிப்பு, ரத்தநீரிலிருக்கிற சில உப்புகள், பெப்சீன் (Pepsine) என்னும் பதார்த்தம் ஆகிய இவைகளிருக்கின்றன. இவைகளன்றியில், உமிழ்நீரும் பதார்த்தங்களோடு சேர்ந்திருக்கும், ஜடராக்கினியின் பிரயோஜனமென்னவெனில், தீனிப்பையில்போகிற ஆல்பியூமன் (albumen), பைபிரின் (fibrin) கேசீன் (casein) முதலிய பதார்த்தங்களைத் தகித்து குணத்தை மாற்றி ஒருவித நூதன வஸ்துவாய்ச் செய்கின்றது; அதற்கு பெப்டோன் (peptone) என்று பேர். அந்தப் பெப்டோன் என்னும் வஸ்துவில் கொஞ்சம் அன்னுசயம் கிரகித்துக்கொள்ளுவதும் உண்டு; மற்றது, போஜனபதார்த்தங்களிலிருக்கிற கொழுப்போடு கலந்து, துணைக்குக்ஷி (duodenum) யில் இறங்கி, சிறு குடலுக்கு வந்துவிடும். துணைக்குக்ஷி வழியாக வரும்போது, பித்தநீர் (bile), கணையநீர் (pancreatic juice), சிறு குடலிலுண்டாகிற நீர் ஆகிய இவைகளோடு சம்பந்தப்படும். பதார்த்தங்கள் தீனிப்பையில் தகனமாகாமல் ஒருவேளை துணைக்குக்ஷியி லிறங்கிவிட்டால், அவ்விடத்தில் கணையநீரானது அவைகளைத் தகித்துவிடும். ஒருதினத்தில் கணையநீர் சுமார் 7-8-ஔனஸ் அளவுக்குச் சுரக்குமென்று எண்ணம். அது ஜடராக்கினி என்னும் நீருக்குக் குறைந்திருந்தபோதிலும், வேகத்தில் அதிகமாயிருக்குமாம். தீனிப்பையில் ஓர் தகனமும், துணைக்குக்ஷியில் ஓர் தகனமுமிருப்பதால், தீனிப்பையைச் சார்ந்த அஜீரணம் என்றும், துணைக்குக்ஷியைச் சார்ந்த அஜீரணம் என்றும் ஆகிய இரண்டுவித அஜீரணரோகங்கள் இருக்கவேண்டியது.

காரணங்கள்.—இந்த துஷ்டவியாதியைப் பிறப்பிக்கிற காரணங்கள் அனந்தம். மிதத்துக்கதிகமாய்ச் சாப்பிடுதல், அபக்குவ பதார்த்தங்கள், பதார்த்தங்களைச் செவ்வையாகமென்று புசிக்காமல் போகுதல், மதுபானம், சரீரப்பிரயாசை யில்லாமல் சோம்பலாய் இருக்குதல், அதிக சரீரப்பிரயாசை, அதிகவாசிப்பு, அதிகயோசனை, மனக்கவலை, துர்ப்பலம், சுருட்டும் தூளும் அதிகமாய் உபயோகப்படுத்துதல், தீனிப்பை, யகிர்த்கண்டம், கணையம் இவைகளின் வியாதி ஆகிய இக்காரணங்களால் இந்த உபத்திரவ வியாதி அனுசரிக்கும். புசித்த அன்னம் தகனமாகாமுன் சாப்பிடுவதும் தப்பிதம். பக்ஷித்து, குறைந்தது 6-மணிநேரம் சென்றபிறகு மறு பக்ஷணை செய்வது உத்தமம்; அப்போது, இரப்பையானது தன்னுடைய வேலையைச் செய்துவிட்டு, கொஞ்சம் ஆஸ்வாசத்தை யடையும். மூளை, நுரையீரல், யகிர்த்கண்டம், கருப்பை ஆகிய இவைகளில் ஒன்றுக்கு விகல்பம் நேரிட்டபோதிலும், அக்கினிமந்தத்தைப் பிறப்பித்து, வாந்தியையும் உண்டுபண்ணும். சுரம், வாந்திபேதி இவை முதலிய வியாதிகளால் ரத்ததூஷியம் பிறந்து, அதனால் அஜீரணரோகம் பிறப்பதும் உண்டு.

லக்ஷணங்கள்.—அக்கினிமந்தரோகத்தில் காணுகிற குறிகள்வெகுசாய், குணத்திலும் உக்கிரத்திலும் வித்தியாசப்படுவதுண்டு; ஆனால், பொதுவான லக்ஷணங்களென்னவெனில் மந்தப்பசி, மேல்வயிற்றுபள்ளத்தில் வேதனை, பளுவுடன் வயிற்றில் வாயுவுசேர்ந்து இரைதல், அபானவாயுபரிதல், குமட்டல், வாந்தி, மலபந்தமும் பேதியும் மாறி மாறி காணுதல், நாக்கின்மேல், மாவுபோல் அழுக்குப்படிந்திருக்குதல், வாய்நாற்றம், இருதயதுடிப்பு, இடுப்பு வலி, கைகால்களில் வேதனை, சிரோபாரம், பிரமை, குலை எரிவு (Gastralgia, cardialgia, or heart burn), தீனிப்பையில் ஒருவிதமுறுக்கு (Gastrodynia or cramp in the stomach), பித்தநீர் வாந்தி (Pyrosis or water-brash), புளி ஏப்பம் ஆகிய இவைகளாம்.

ஜடராக்கினி குறைந்து தகனம் மெதுவிலானால், போஜனம் செய்த பிறகு மேல்வயிற்றில் இடதுபக்கமும் குலைவயிற்றிலும் புடைத்திருக்கும்; வயிற்றில் வாயுவுகொள்ளும்; துர்வாசனையோடு புளியேப்பம் வரும். மலம் பிடித்தமாகும்; நாக்கில் அழுக்குபடியும்; பசி மந்தமாகும்; மார்துடிப்பு காணும்; நாடி அக்கிரமித்து நடக்கும்; தலைவலியும், மந்தபார்வையும் உண்டாகும்; மனசு தத்தளித்து எக்கம் கொள்ளும்; தீனிப்பையில் அதிகமாய் வாயுவுசேர்ந்தால், சுவாச முட்டல் காணும். இதில் உண்டாகிற மனத்துயரம் சிலருக்கு கொஞ்சமாயிருக்கும்; சிலர் அத்தியந்த விசனத்தில் மூழ்கினவர்களாய் இருப்பார்கள். பிராணத்தியாகம் செய்துகொள்ளவும் துணிவு காணும். இந்த வியாதியுடைய ரோகி, சிநேகவாஞ்சல்லியத்தை வெறுத்து, அணுவை மலையாக்கிக் கொள்ளுவான்.

Diagnosis.—அஜீரணரோகத்தைக் கண்டுகொள்ளுவது சிலவேளை கஷ்டமாகும். அஜீரணரோகத்துக்குடைய லக்ஷணங்களே, அன்னாசயத்துக்குக் காணுகிற வேறு வியாதிகளிலுமுண்டு; பிளவை, ரணம், சிலேஷ்மசவ்வுக்குத் தாபிதம் ஆகிய இவைகள் அன்னாசயத்துக்குக் காணும்போது, குலைவயிற்றில் வேதனையோடு புண்ணாயிருக்கும், அவைகளை அஜீரணமென்று சொல்லலாகாது. மேலும் க்ஷயம், கருப்பவியாதிகள் முதலிய இதர ரோகங்களிலும் வமனம்காண்பதுண்டு. தீனிப்பையில் வியாதிகண்டிருந்தால், போஜனம் செய்த உடனே வேதனை அதிகப்படும். அதின் தொழில்

விகற்பப்பட்டால், போஜனத்தினல் வேதனைதணியும். இந்த விஷயம் மனதிலிருந்தால், ரோகநிதானத்தைக் கொஞ்சம் சீக்கிரத்தில் அறியலாம். ரணத்தினலுண்டாகிற வேதனை விடாமல் என்னேரமும் இருக்கும்; ஆகாரம் உள்ளுக்குச் சென்றால் அதிகப்படும்.

சிகிச்சை.—போஜனக்கிரமத்தை யனுசரிப்போர், இவ்வுலகத்தில் மிகவும் குறையும். ஆயாசந்தீர்த்துக்கொள்ளல், கஷ்டவேலை, நிர்பந்த ஜீவனத்தொழில் ஆகிய இவைகளிலிருந்து கொஞ்சம் விடுதலைக்கொள்ளல், திக்கு மாறி இருக்குதல், சமுத்திரஸ்நானம், குதிரையேற்றம், புகையிலை, சாராயம் ஆகிய இவைகளில் விருப்பம் குறைக்குதல், இத்தியாதி காரியங்களால் சரீர சவுக்கியமுண்டாகுமென்று நமக்குச் செவ்வையாய்த் தெரிந்திருக்கின்றது. இந்த உபத்திரவத்தில், போஜனக்கிரமத்தை யனுசரிப்பதினலேயே சிலருக்கு வியாதி போய்விடுகின்றது. முதல் போஜனத்தின் பிரமாணத்திலும் குணத்திலும் கியாபகம், ரோகியை வைக்கச்செய்யாவிட்டால் நமது பிரயத்தினம் நிஷ்பலமாகிவிடும். குருத்துவ பதார்த்தங்களைத்தள்ளி சீக்கிரத்தில ஜீரணமாகும்படியானவைகளை மிதமாய்ச் சாப்பிடச் செய்யவேண்டியது; அதற்கு பால், சேகோ, அரோரூட், நொய்க்கஞ்சி இந்தியாதி லகு அசனங்களைச் சேர்த்துகொள்ளலாம். தகனசக்தி கொஞ்சம் அனுகூலமானபிறகு மச்சியம், மாமிசம், பாவைகளின் இறைச்சி ஆகிய இவைகளைச் சாப்பிடச் செய்வதில் தூர்க்குணமிராது. கீரையினங்கள், மந்தப்படுத்துகிற பதார்த்தங்கள், தோசை, பணியாரம் முதலிய அப்பவர்க்கங்கள், பீர், ஒயின் சாராய முதலிய மஸ்துள்ள திரவங்கள் ஆகிய இவைகளை நீக்கச்செய்யவேண்டியது. வெறும் வயிற்றில் காபிஜலம் சாப்பிடசசெய்யலாம், போஜனம்செய்தபிறகு அதைச் சாப்பிட்டால் விரோதிக்கும். குன்மரோகி முக்கியமாய் கவனிக்கவேண்டிய தென்னவெனில், சாப்பிட்டபிறகு சற்றுநேரம் சும்மாயிருக்கவேண்டியது, அப்போது நரம்புகளுடைய சக்தி எக்கும் வியாபிக்காமல் தீனிப்பையில்தானே நின்று தகனம் சரியாயாகும்.

இந்த வியாதிக்குக் கொடுக்க அநேக மருந்துகளுண்டு; இங்கிலீஷ் வைத்தியத்தில் பெப்ஸீன் (pepsine) என்னும் மருந்தைக் கொடுப்பது வழக்கம். வேதனை அதிகமிருந்தால், மார்பியா (morphia) என்னும் அபினிசத்தைக் கொடுப்பதுண்டு; அதற்குபதில் நாட்டு அபினிகொடுக்கலாம். தூர்ப்பலம் அதிகமாயிருந்தால், ஸ்டிரிக்நியா (strychnia) என்னும் எட்டிக்கொட்டையின் உப்பை உபயோகிக்கிருர்கள். ஸ்வர்னபேதி திராவகம் (nitro-muriatic acid), ரேவல்சின்னி, இபிகாக், சுக்கு ஆகிய இவைகள் ஜடராக்கினியை வர்த்திக்கும். ஒருவேளை அது அதிகமாய்ச் சுரந்தால், கந்தகத்திராவகம், பிஸ்மத், கோனியம், அபினி, ஹைட்ரோசையானிக் ஆசிட் ஆகிய இவைகளிலொன்றைக் கொடுத்து, அதை மிதப்படுத்தவேண்டியது. வேதனையையும், வாந்தியையும் நிறுத்தவேண்டியபொழுது மார்பியா, ஸோடாவாடர் இவைகளும், புளிப்பு அதிகப்பட்டிருந்தால் பூநீர்உப்பு, சுண்ணும்பு ஜலம் இவைகளும் கொடுத்து சிகிச்சை செய்யவேண்டியது. வயிற்றில் புளிப்பு சேர்ந்து அதிகவேதனை யெடுக்கும்போது, வெந்நீர் கொடுத்தாவது, வாயில் விரலைவிட்டாவது வாந்தியைப் பிறப்பித்து, உள்ளிருப்பதை வெளிப்படுத்திவிட்டு சோடா, அபினி கொடுக்கலாம். ஸோடா முதலிய உப்புகளை அதிகமாய்க் கொடுக்கலாகாது. வாந்தியில்லாம லிருக்கும்போது நிலவேம்பு, வேப்பன்பட்டை, கலம்பா, குவாசியா, குவைஞ முதலிய துவர்ப்பு மருந்துகளைக்கொடுத்து, வியாதியைக் கண்டிக்கவேண்டி

யது. மலபந்தமிருந்தால், ரேவல்சின்னி, ஆமணக்கெண்ணெய், நிலவாகை முதலிய லகுவான பேதிக்குக்கொடுத்து மலத்தை வெளிப்படுத்திவிடவேண்டியது. இவைகளால் வியாதியை வசப்படுத்தினபிறகு மறுபடியும் அது தலைகாட்டாமல் அயம், குவைனு, இபிகாக் ஆகிய இவைகளில் ஒன்றைக் கொடுக்கலாம் ; பஞ்சதீபாக்கினி சூரணத்தில், அக்கினிமந்த ரோகத்துக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்.

குன்மவியாதியில் வேதனை 4 - விதங்களாய்க் காண்பதுண்டு :— 1-வது, வெறும்வயிற்றில் நோவெடுத்தால், அதற்கு உடனே எதாவது பக்ஷணசெய்தால் நின்றுவிடும். 2-வது, சாப்பிட்ட உடனே வேதனை பிறந்து, ஜீரணமாகிறவரையி லிருப்பதுண்டு, அல்லது வாந்தியாகி தணிந்துவிடும். இந்தசாதி ரோகத்துக்கு இபிகாக், ரேவல்சின்னி, உப்பு, கடுகு, மிளகு, முளகாய் ஆகிய இவைகளிலொன்றை விதிப்படி போஜனம் செய்வதற்குமுன் கொடுத்துக்கொண்டுவந்தால், வியாதி சொஸ்தமாகும். 3-வது, சாப்பிட்டு 2-4-மணிநேரம் சென்றபிறகு வேதனை ஆரம்பித்து, கொஞ்சநேரம் வரையிலிருக்கும். இந்த ஜாதி குன்மத்தை அன்னபேதி, மூஷாம்பரம், திரிகடுகு சூரணம் ஆகிய இவைகளைக்கொடுத்து சவுக்கியப்படுத்த வேண்டியது. நிமிளை, ரேவல்சின்னி இவைகளைச் சேர்த்துக்கொடுப்பதிலும் ரோகம் வசப்படும். 4-வது வேதனை ஒரு நிதானமில்லாமல் காலபேதமாகி காணும்; அடிவயிற்றைச் சுருட்டிப் பிடிப்பதுபோலிருக்கும். இந்த சாதி குன்மத்தை ஸ்திரீகளில் மிகுதியாய்க் காணலாம். இதற்கு கடுகை அறைத்து வயிற்றுக்குப்போட்டு அபினி, சாராயம், பஞ்சதீபாக்கினி சூரணம் ஆகிய இவைகளி லொன்றைப் பிரயோகப்படுத்திக்கொண்டு வந்தால், சவுக்கியமுண்டாகும். முளகாய்த்தூள் 1-விராகனிடை, ரேவல்சின்னி சூரணம் 2-விராகனிடை இவைகளைச் சேர்த்து, கோதுமை ரொட்டிச்சதையைக் கலந்து மிஸ்ரமித்து, 30-மாத்திரைகளாக்கி 1-2-மாத்திரைவீதம், போஜனம் செய்வதற்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$-மணிநேரத்துக்குமுன் சாப்பிட்டுக்கொண்டு வந்தால், ரோகம் சவுக்கியமடையும்.

குலை எரிவு. எரிகுன்மம். (Heart-burn).—அக்கினிமந்தத்தில் காணுகிற குலை எரிவுக்கு, சுண்ணும்பு ஜலத்தில் பால் சேர்த்து, திரிகாலக்கிரமமாயாவது அல்லது இஞ்சி, ஆரஞ்சிப்பழத்தோல் இவைகளை வெந்நீர் கஷாயமிட்டாவது கொடுக்கலாம்.

தாகம். (Thirst).—தேகத்தில் நீர் குறைந்து காணுகிறதாகம், தனி ரோகமல்ல ; சுரம், நீரிழிவு, வாந்திபேதி முதலிய ரோகங்களில் இது ஓர் குறி. இதற்கு நமது நாட்டோர் ஒன்றும் கொடுக்காமல் ரோகிகளை வியர்த்தமாய்க் கொல்லுகிறார்கள். மேலும் விளா இலை முதலிய உஷ்ண மருந்துகளைக் கஷாயமிட்டுக் கொடுப்பதுண்டு ; அவைகளால் தாகம் மேன்மேலும் வர்த்திக்குமேயொழிய, சமனமாகாது. ஆற்றுமணலை சிவக்கவறுத்து, அதில் ஜலம்விட்டுக் காச்சிவைத்துக்கொண்டு, தாராளமாய் இஷ்டமானபடி ரோகி குடித்துக்கொண்டு வரலாம், எல்லாவியாதிகளுக்கும் நல்லது. கஞ்சித்தண்ணீர், பார்லி அரிசி கஞ்சித்தண்ணீர், நெற்பொரித்தண்ணீர், ரொட்டியைக் கறுக்கச்சுட்டுப்போட்டு ஊறவைத்த ஜலம், திராக்ஷ உப்பு, எலுமிச்சம்பழரசம், சருக்கரை இவைகளைக் கூட்டிச்செய்த குடிநீர், இத்தியாதிகளையும் குடிக்கச்செய்யலாம்.

தேகசவுக்கியத்தையே சதாகாலம் சிந்தித்து ஏக்கங்கொண்டிருப்பவர்களை (Hypochondriacs), பிரிய வசனங்களால் மனதைத்தேற்றி, வியாதியைச் சுகுணப்படுத்துகிறேனென்று ஸ்திரஞ்சொல்லி, வேப்பம்பட்டை, நிலவேம்பு, அயச்சிந்தூரம் முதலிய தாருட்டிய மருந்துகளைக் கொடுத்து, மலபந்தமிருந்தால் நிலவாகை கியாழத்தால் போக்கி, யாத்திரை செய்யும்படியான பிரயத்தினமும் தேடவேண்டியது.

அத்தியுஷ்ணத்துக்கு, நன்னாரிவேர் ஷர்பத், மாதுளம்பழ ஷர்பத், கொத்துமல்லிவிதை டீ, சருக்கரையும் வெண்ணெயும் சேர்ந்த கொதிநீர், எலுமிச்சம்பழ பாணிதம் ஆகிய இவைகளைச் சாப்பிடலாம்.

அன்னத்துவேஷம். அரோசகம். இதற்கு கியாழம், லேகியம் முதலியவைகளைக் கொடுத்து சிகிச்சை செய்வதைப் பார்க்கிலும், துவையல், ஊறுகாய், பழவர்க்கங்கள் முதலியவைகளைக் கொண்டு அதை நீக்குவதே நல்லது. புதியஞ, கொத்துமல்லி, மரியங்கொழுந்து, புளியாரை, கறிவேப்பிலை, இஞ்சி, கடுக்காய், நெல்லிவடை, இலந்தம்பழம் இவைகளின் துவையல்களும், பழய எலுமிச்சன், நாரத்தன், மாங்காய்ப்பிஞ்சு, மரியங்காய் இவைமுதலிய ஊறுகாய்களும்—திராக்ஷை, ஆல்பகோரா, ஜெரீஷ், மாதுளன், கிச்சிலி இவைமுதலிய பழவர்க்கங்களும் அரோசகத்துக்குக் கொடுக்க உதவும்.

புளியேப்பம். (Sour-belching).—சாப்பிட்ட பதார்த்தங்கள் ஜீர்ணமாகாமல், அழுகி, வாயு ஜனித்து, அந்த வாயு ஊர்த்தமுகமாய் வெளிப்படுவதற்கு, புளியேப்பம் என்று பேர். வயிற்றில் புளிப்புசேர்ந்து காணுகிறதென்று சாதாரணஜனங்களுடைய எண்ணம். இதற்கு சுக்கு, சோம்பு, சீரகம், மிளகு, ஓமம், வசம்பு, பெப்பர்மின்ட் இவைகளில் ஒன்றை விதிப்படி பிரயோகித்தால், சவுக்கியந்தரும். பிராந்தி, பூரணதி லேகியம், சோடா என்னும் உப்பு, மாக்னீஷியா என்னும் காந்தமண் பஸ்மம் இவைகளும் இந்த ரோகத்துக்கு எடுத்த ஔஷதங்களாம்.

வாந்தி. (Vomiting).—அநேக வியாதிகளைப்பற்றி, தீனிப்பையிலிருக்கிற வஸ்துக்கள் வாயால் வெளிப்படும். இது ரோகங்களுக்கு ஓர் குறி, தனிரோகமல்ல. தீனிப்பை கொதிப்பு, சுரம், மூளை அதிர்ச்சி, அசதிஜன்னி ரோகம் முதலிய வியாதிகளிலும், கர்ப்பிணிகளுக்கும், வாந்தி தொடர்ந்திருக்கும். வாந்தியில் சாதம், கோழை, புளித்த ஜலம், பித்தநீர் இவைகளில் ஏதாவது வெளிப்படும். விளைவித்த வியாதி தொலைந்தால், இந்த உபத்திரவம் தானய் நின்றுவிடும். இதற்கு சோடா, அபினி இவைகளைக் கொடுக்கலாம்; கடுகுபோல்டீஸ் ஈரற்குழியில் போடலாம்.

விக்கல். (Hiccup).—ஈரல்தாங்கி என்னும் சதைக்கும், தீனிப்பைக்கும் வலிகண்டு, விக்கல்காணும். சாதாரணமாய் வேறு வியாதிகளை அனுசரித்து இது வருகின்றது; சிலவேளை தனியாய் காண்பதும் உண்டு; அபக்குவபோஜனம், தீனிப்பையில் புளிப்புசேருதல் ஆகிய இக்காரணங்களால் விக்கல் பிறக்கின்றது. தற்செயலாய் காண்பதில் அபாயமில்லை. சுலபத்தில் நீங்கிவிடும். வியாதிகளை அனுசரித்துக் கண்டால் மரணக்குறி என்று தீர்மானிக்கவேண்டியது. சிகிச்சை.—சாதாரணவிக்கலுக்கு, குளிர்ந்தஜலம் அடிக்கடி கொஞ்சம் குடிப்பதாலும், சுவாஸத்தை உள்ளுக்கிழுத்துப் பிடிப்பதாலும், உலர்ந்த ரொட்டியைச் சாப்பிடுவதாலும், ஜடுதியில் பயமுறுத்துதல் அல்லது ஆச்சரியமான சங்கதிகளைச் சொல்லுவதாலும், விக்கல்

நீங்கிவிடும். இவைகளால் நீங்காவிட்டால் ஈதர், அபினி, கஸ்தூரி இவைகளில் ஒன்றைக்கொடுக்கலாம். கொஞ்சம் காடியையாவது, பழரசமாவது,பெப்பர்மின்ட்ஜலத்தில் கந்தகத்திராவகத்தைச் சேர்ந்தாவது கொடுத்தால், வியாதி வசப்படும். ஈரற்குழியில் கடுகுபோல் உஸ்போடலாம். குழந்தைகளுக்கு புளிப்புசேர்ந்துகண்டால், மாக்னீஷியா (magnesia) என்னும் பஸ்பத்தை, சோம்புஜலத்தில் கலந்து கொடுக்கத்தீரும். பிராணந்தியத்தில் காண்பதற்கு சிகிச்சை இல்லை.

வயிறு உப்பசம். வயிற்றுப்பொருமல். வாயு. (Flatulency).—முக்கியமாய் பெருங் குடலில் வாயுசேர்ந்து, இந்தவியாதி பிறக்கின்றது. இதில் ஊர்த்தமுகமாயும் அதோமுகமாயும் காற்று பறியும். வயிற்றில் நோவோடு இரைச்சலுண்டு; வயிறு விரிந்துபோவதுபோல் உப்பி பிகுவாய் இருக்கும்; மலபந்தமும் காணும். அபக்குவபோஜனத்தாலும், குடலுக்கு வலிவு குறைந்தும் இந்தரோகம் பிறக்கின்றது.

சிகிச்சை.—பெருங்காயம், சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, பெப்பர்மின்ட், ஓமம், சோம்பு, ஏலம் இவைகளில் ஒன்றைக்கொடுக்கிற விதிப்படி கொடுத்தால், வாயு கலைந்துவிடும். வாயுவை கண்டிக்கிற பேதிக்கு கொடுத்து, வயிற்றின்மேல் உஷ்ணத் தயிலங்களையாது, கடுகுபற்றையாவது போட்டால் குணமுண்டாகும். வயிற்றுக்குத் துணியைச் சுற்றிவைப்பதிலும் நன்மை பிறக்கும். ஆஸனத்தில் குழலைப் பிரயோகித்தால், வாயு வெளிப்பட்டுவிடும். வியாதி அல்பமாய் இருந்தால், பிராந்தி அல்லது சாராயத்தில் சுக்குத்தூள்போட்டு, சுட சுட வெந்நீர்விட்டுக் கலந்து குடிப்பது வீட்டு வைத்தியம். ஹிந்து சிகிச்சைகர், பஞ்சதீபாக்கினி சூரணம் கொடுத்து, இந்த உபத்திரவரோகத்தை வசப்படுத்துகிறார்கள். குழந்தைகளுக்கு இந்த விராதிகண்டால் பெருங்காயம், ஓமம், சதகுப்பை, சோம்பு இகைளால் நீங்கிவிடும். வியாதி மறுபடியும் வராமல் இருக்க, பலகாரி மருந்துகள் கொடுக்க வேண்டியது.

6. அன்னாசயதாபிதம்

காஸ்ரைடிஸ், GASTRITIS.

(1) இதில் உக்கிரம், காலிகமென இரண்டு சாதிகளுண்டு; உக்கிர அன்னாசயதாபித ரோகத்தின்

லக்ஷணங்கள்.—இது தற்செயலாய்க் காண்பதில்லை; விஷபதார்த்தங்களாகிய திராவகங்கள், சில காரங்கள், பாஷாணம் ஆகிய இவைகளைத் தின்றும், சிலவேளை அதிக சூடான வெந்நீர் குடித்தும் இந்த வியாதி காணுகின்றது. வாந்தி மருந்துகளாகிய கடுகு, டார்டர்மெடிக், இவைகள் அளவுக்கு அதிகமானபோதிலும், இந்த ரோகத்தைப் பிறப்பிக்கும். விஷம் தின்று அன்னாசயம் தாபிதம் கொண்டால், மேல்வயிற்றில் எரிச்சலும் வேதனையும் இருக்கும்; அழுத்தினால், அந்த வேதனை அதிகப்படும்; குமட்டலுடன் வாந்தியுமுண்டு; நாடியும் சுவாசமும் தீவிரமாய் நடக்கும்; தாகமுண்டு; குளிர்ந்த ஜலத்தில் அதிக விருப்பமிருக்கும்; குடித்தால் உடனே வெளிக்கு வந்துவிடும்; தளர்ச்சி, ஆயாசம், மூர்ச்சை, க்ஷீணநாடி, தேகவெளுப்பு, கைகால்கள் தணுப்பு,ஏக்கம் ஆகிய இவைகள் வெகுசீக்கிரத்தில் உண்டாகும்; தாபிதம் கண்டு நேரஞ்சென்றால், நாக்கு சிவந்து பளபளவென்றிருக்கும்; மலம் இறுகலாகும், மூத்திரம் சிவந்து குறைந்திறங்கும்; அரட்டல் புறட்டல்

விக்கல் இவைகள் கண்டு தளர்ச்சி அதிகமாகி மரணம் சம்பவிக்கும். எல்லோருக்கும் இந்த குறிகளிராது, அற்பமாய் இருப்பதுமுண்டு.

சிகிச்சை.—இந்தரோகம் எவ்விதமாய் பிறந்தபோதிலும், ஒரேவித சிகிச்சைகொள்ளும். முதல் ஆஸனவஸ்தி செய்து மலத்தைப் போக்கிவிட வேண்டியது; பிறகு அபினியைக்கொடுத்து, பனிக்கட்டியைச் சப்பிவிழுங்கிக் கொண்டிருக்கும்படி செய்யவேண்டியது. இவைகள் வாந்தியை நிறுத்தி, தாபிதத்தைக் குறைக்கும். கஞ்சித்தண்ணீர், பார்லி அரிசித்தண்ணீர், பால், அரொரூட் கஞ்சி, நொய்க்கஞ்சி இவைகளைக் கொடுத்து ஆதரிக்கவேண்டியது; எதுவும் குளிர்ச்சியானதாய் இருக்கவேண்டியது; வாயினுல் கொடுப்பதைப் பார்க்கிலும், மாம்சரசங்களை ஆசன வழியாய்ச் செலுத்துவதே உத்தமம். குலைவயிற்றுக்கு வெந்நீர் ஒற்றிடம் கொடுப்பதிலும் சுகுணம் பிறக்கும். விரணமாக்கிற நஞ்சைத்தின்றால், வாந்தி தற்செயலாயுண்டாகிறபடியால், நாம் வாந்திக்குக்கொடுத்து உபத்திரவப்படுத்த ஆவசியமிராது. துர்க்குணங்கள் நீங்கி உடம்பு சவுக்கியப்பட்டு வரும்போது, போஜனத்தில் வெகு சாக்கிரதையாய் இருக்கச் செய்யவேண்டியது. கஞ்சி, மாம்சரசம் இவைகளை மாத்திரம் கொஞ்சமாய் அடிக்கடி சாப்பிடச் செய்யலாம்.—Remedies.—Purgative enema; opium; ice; barley-water; milk; cold; arrowroot; fomentation; &c.

(2) காலிக அன்னசயதாபிதம்.—(கிரானிக் காஸ்ட்ரைடிஸ், Chronic Gastritis). இந்த சாதிதான் சாதாரணமாய்க் காணுகிறது; சாவதானரோகம்; ஆனல் நாட்சென்றால், அன்னசய சவ்வுகள் தடித்து கல்லுபோலாகிவிடும்; அல்லது பைலோரிஸ் என்னும் துவாரமானது சிறுத்துவிடும், அல்லது ரணமாகி துவாரம் விழுவதும் உண்டு.

இந்த ரோகத்துச்குக் காரணங்களநேகமுண்டு; பெருந்திண்டி, அதிககுடி, நாள்பட உபவாஸம், சுரம், பாஷாணம், (எவ்விதமாய்க் கொஞ்சம் சாப்பிட்டாலும் சரி) கணுவாதரோகம், சிறு குடலுக்கு ஆகாரம் தாராளமாய்ப் போக வழியில்லாமல் அன்னசயத்துவாரம் சுருங்கிக்கொள்ளுதல் ஆகிய இவைகளால் இந்தவியாதி பிறக்கும்.

லக்ஷணங்கள்.—அன்னத்துவேஷம், குலைவயிற்றில் தொடக்கூடாத வேதனை, புசித்தபிறகு வேதனையும் வாந்தியும் காணுதல், மாந்ததகனம், வயிற்றில் முறுக்கல், புளித்ததிரவமாவது அல்லது சுத்த ஜலமாவது வாந்தி, மல அக்கிரமம், நாக்கில் மாவுபடிதல் ஆகிய இவைகள் மேற்படி ரோகத்துக்கு முக்கிய லக்ஷணங்களாகும். ஸ்திரீகளில், கருப்பைவியாதி தொந்தித்திருப்பதும் உண்டு.

சிகிச்சை.—அஜீரணத்துக்குச் சொன்ன விதிகளை இதற்கும் அனுசரிக்கவேண்டியது. விளைவித்த காரணத்தை நீக்கி, லகு அசனம் கொடுத்து, குளிர்ந்த ஜலபானம் கொள்ளும்படிச்செய்தால் ரோகம் பூரணமாய் நிவர்த்தியாகிவிடும்.

7. குடல்தாபிதம்

என்டிரைடிஸ், ENTERITIS.

சிறு குடலுக்குக்காணுகிற தாபிதம், சிலருக்கு அற்பமாயும், சிலருக்கு உக்கிரமாயுமிருக்கும்; வெகு சீக்கிரத்தில் ஆளை மோசப்படுத்துவதும் உண்டு.

குடல்முழுதும் வியாதி கொள்வது அரிது; குடலில் இன்னவிடத்தில் வியாதிகண்டிருக்கிறதென்று சொல்வதற்கு குறிகள் ஒன்றுமில்லை. குடலின் புரைகளெல்லாமாவது, அல்லது சிலேத்மபுரைமாத்திரமாவது வியாதிகொள்ளும்; குழந்தைகளுக்குப் பல் முளையும்போது, சிலேத்ம ஜவ்வை தாபிதம் அனுசரிப்பது வழக்கம்.

லக்ஷணங்கள்.—வியாதி காண்பதற்குமுன் குளிர் கண்டு, சுரம் காணும்; வயிற்றில், முக்கியமாய் தொப்புளைச்சுற்றி அதிகவேதனையாயும், குமட்டலும் வாந்தியுமிருக்கும்; மல்லாக்கப்படுத்து, வயிற்றின் சதைகள் தளரும்படிமுழங்கால்களை முடக்கி வைத்துக்கொண்டிருப்பான். பின்னிட்டு அரட்டல்புரட்டலும், உக்கிர சுரமும், துற்பலமும், எக்கமும், அதிகமலபந்தமும், விகாரமும் காணும்; வயிற்றை விரல்களால் அழுத்தினால், வேதனை அதிகமாகும், வாதத்தால் காணுகிற வேதனை சமனப்படும்; வாந்தியில் வெளிப்படுகிற வஸ்துக்கள் எப்போதும் துர்வாசனையாய் இருக்கும், சிலவேளை மலமாய் இருப்பதுமுண்டு. நாடியானது, முதல் பெருத்து திரடமாயும், பிறகு தந்திபோல் சிறுத்து விரல்களுக்கு தட்டுப்படாமலும் போவதுண்டு. 6-8-மாதக்குழந்தைகளில் குடலின் உட்சவ்வுக்குத் தாபிதம் சிலவேளை காணும்; அப்போது குழந்தைக்கு உடம்பு சூடாய், குழந்தை கையில் நிற்காமல் அழுதுகொண்டிருக்கும்; தாகக்குறிகளும், நாக்கு உலர்ந்தும் காணப்படும்; நாக்கின்மேல் கறுத்தமாவு படிந்திருப்பதும் உண்டு. சிசுவு கதறிக்கதறி அழும், தூங்கமாட்டாது; வாந்தி எடுக்கும்; வயிற்றில் வேதனையிருக்கும், அழுத்தினால் அது அதிகப்படும்; மலம் இறுகலாகும், சில குழந்தைகளில் பேதி காணும்; மலம் பச்சைநிறமாய் துர்க்கந்த வாசனையோடிருக்கும்; விசையாய் வெளிப்படுவதும் உண்டு; சாதாரணபேதிக்கும், இதற்கும் மெத்த வித்தியாசமிராது. அப்போது சுரம் சீக்கிரத்தில் அதிகரிக்கும்; தாகம், வாந்தி, நாவரக்ஷி தண்ணீராய் பேதி ஆகிய இவைகள் பிரபலமாகும்; உடனே க்ஷீணம் அல்லது போதக்ஷயம் தொடரும்; தேகம் வெளுத்தநிறமாகும்; பவனவாய் சுற்றிலும் சிவப்பாய்க்காண்பதும் உண்டு.

சிகிச்சை.—இந்த வியாதிக்கு அபினியே எடுத்த மருந்து; வயிற்றுக்கு சூடாய் ஒற்றிடம் கொடுப்பதில் சவுக்கியம் பிறக்கும்; ரோகியை படுக்கையில் அசையாமலிருக்கச் செய்யவேண்டியது. பேதிக்குக் கொடுக்கவேலாகாது; வெந்நீரால் ஆசனவஸ்திசெய்து, ஆசனத்திலிருக்கிற மலம் வெளிப்படும்படி பிரயத்தினம் செய்யலாம். தாபிதம் அடங்கினபிறகு, எண்ணெய் பேதி பிரயோகிக்கலாம்; பிறகு சிங்கோனுபார்க்கு முதலியவைகள்கொடுத்து, தாருட்டியம் பிறக்கும்படிச் செய்யவேண்டியது; மேகரோகமுடையவர்களுக்கு மீன்நெய், அயங்கலந்த ஒயின் முதலியவைகள் கொடுத்தால் வெகு நன்மைசெய்யும். பத்தியம் லகுவான பதார்த்தங்களாய் இருக்கவேண்டியது; முக்கியமாய் குழகுழப்புள்ள நீர்கள் தாகத்துக்கு நல்லது, மாம்சரசம், அரொரூட், சேகோமுதலிய கஞ்சிகளில், பால்விட்டு கொடுக்கலாம் குளிர்ந்த ஜலம் தாராளமாய் குடிப்பிக்கலாம்; மூர்ச்சைக்கு இடமிருந்தால், உஷ்ணகாரிகள் கொடுக்கவேண்டியது. குழந்தைகளுக்கும் இதேபிரகாரமாய் சிகிச்சை செய்யலாம்; ஆனால் அபினியைமாத்திரம் வெகு சாக்கிரதையாய் கொடுக்கவேண்டியது. வெந்நீரில் குளிப்பாட்டலாம்; சூடான ஒற்றிடமாவது, அல்லது மாவுக்களியாவது வயிற்றுக்கு வைத்துக்கட்டினால், ஆசுவாசம் பிறக்கும். முலைகுடிக்கிற குழந்தைக்கு வேறொன்றும் கொடுக்கலாகாது. அப்படிக்கொடுக்க வேண்டியதானால், பாலில் இனிப்பேற்றிக் கொடுக்கலாம்

குழந்தைகளுக்கு தாபிதரோகங்கள் கண்டால், கிரே பவுடர் கொடுப்பதுண்டு, சீதம் விழுகிற வயிற்றுளைச்சலுக்கு, அதைக் கொடுத்தபோதெல்லாம்; வியாதி அதிக்கிரமித்ததாய் ஒருவர் சொல்லுகிறார். Remedies.—Opium; fomentations; quiet; simple enema; tonic; castor oil; cod-liver oil; steel-wine; simple diet; demulcent drinks.

8. சீதபேதி

பிரதிபதங்கள்.—சீதரத்தக்கழிச்சல்; ஆமாத்தபேதி; ஆமபேதி;

சீதக்கடுப்பு; கிரகணி; கிராணி; ரத்தக்கடுப்பு; சீதக்கிரகணி;

வயர் கொட்டல்; மூலக்கிரகணி.

டிஸென்ட்டிரி, DYSENTERY.

நாள்பட்ட சீதபேதிக்கு, கிரகணி யென்று பேர். பெருங்குடல், மலக்குடல் ஆகிய இவைகளின் கிலேத்தும சவ்வுக்கு கொதிப்புறல் ரணமுண்டாகி இந்த வியாதி பிறக்கின்றது; மற்ற சவ்வுகளுக்கும் வியாதி வியாபிப்பதும் உண்டு. வியாதி பிரபலமாகிவிட்டால், குடலில் துவாரம்விழுந்து அசாத்தியமாகிவிடும்; இதில் சுரம் அனுசரித்திருக்கும்; சீக்கிரத்தில் தேக தளர்ச்சிகாணும்; பெருங்குடலி லிருக்கிற ரணம், சிறுகுடலுக்கு வியாபிப்பதும் உண்டு.

காரணங்கள்.—ஈரம், குளிர்ச்சி, விஷக்காற்று, அசுத்தஜலம், கெட்ட அல்லது உப்பு அதிகமானபோசனம், ஜன நெருக்கம், வஸ்திரஹீனம், படுக்கை தரித்திரம், மலபந்தம், வேகமானபேதிகள் ஆகிய இவைகளால் சீதபேதி ஜனிக்கிறதென்று சொல்லுகிறார்கள். விஷசுரம் எவ்விடங்களில் வியாபிக்கிறதோ, அவ்விடங்களில் இந்த ரோகமும் வியாபிக்கிறதுண்டு. சீதசுரம் அல்லது தணிவு சுரத்தோடு இது தொந்தப்படுவதுமுண்டு; சுரத்தையுண்டாக்கிற விஷக்காற்று, இதையும் உண்டாக்குகிறதோ என்னமோ, சந்தேகம்.

லக்ஷணங்கள்.—ஆரம்பத்தில், வயிற்றில் ஒருமாதிரியாயும், குடலை முறுக்குவதுபோல் வேதனையும் இருக்கும்; அடிக்கடி மலபாதைக்குப் போகும்படியான தன்மையும்,போனவுடன் வேதனைக்குத் தணிவும் காணும்; வியாதி ஸ்திரப்பட்டவுடன், குடலில் ரணம் உண்டாக ஆரம்பித்து, பேதி அடிக்கடி காணும்; பேதியானவுடன் ஆசுவாசமும் மெத்த இராது; மலத்தில் சீதமும் ரத்தமுங்கலந்திருக்கும்; மலம் தீஞ்சிஆட்டுப்புழுக்கைபோல் உருண்டைக்கட்டி (scybala) இருக்கும், கொஞ்சங்கொஞ்சமாய் மலம் இறங்கும்போது, வெகு உபத்திரவத்தைத்தரும், சவுக்கியம் உண்டாகாது. கடுப்பு (டார்மினா, Tormina, griping), முக்கல் (டினெஸ்மஸ், Tenesmus, straining) இவைகளால் ரோகி வெகு வேதனைப்படுவான். மலத்தில் துர்வாசனையுண்டாகும்; அதில் கறுத்து கீற்றுகீற்றான பசை கலந்திருக்கும்; மூத்திரப்பையும் கொதிப்புகொண்டு, மூத்திரம் சிவந்து அடிக்கடி இறங்கும்; தரிப்புமுண்டு; நீர்ச்சுருக்கு ஒவ்வொருவருக்கு காண்பது வழக்கம். இந்த ரோகத்தில் ஏற்றக்குறைச்சலாய் சுரம் இருக்கும்; நாக்கில் மாவு படிந்து, முள்ளுகளும் எடுப்பாயிருக்கும்; நாடி தீவிரகதியுடையதாய் சிறுத்திருக்கும்; சருமம் சொறசொறப்போடு, உஷ்ணமாய் உலர்ந்திருக்கும்;தாகம் அதிகமாயிருக்கும், பசியிராது; மூச்சு பிடித்தம், அதிக துர்ப்பலம் ஆகிய இவைகளும் உண்டு.

அஸாத்திய ஸ்திதியில், வயிறு வீரித்து அழுத்தினல் நோவெடுக்கும்; நாடி க்ஷீணப்பட்டு வரும்; நாக்கு உலர்ந்து, சிவந்து மினுமினுப்பாய், ரணமாயிருக்கும்; நித்திரையிராது, ஒருவேளை இருந்தால், கோழித்தூக்கம்போலிருக்கும்; மலம் நீராய் வெகு துர்க்கந்தத்தைத் தரும்; தேகம் இளைத்து ஆயாசத்தோடு விக்கல்காணும், பிறகு மரணம் சீக்கிரம் சம்பவிக்கும்.

சீதபேதி உக்கிரத்தோடு கண்டால், குடலில் துவாரங்கண்டு, குடல்சவ்வுக்கு தாபிதம் காணும்; யகிர்தகண்டத்தில், சீழ்க்கட்டி காண்பதும் உண்டு; ரணங்கள் உலர்ந்து, குடல் சுருங்கி தீராதமலபந்தம் காண்பதுமுண்டு; சிலேத்தும சவ்வு அழுகிப்போனல், சோர்ப்புகண்டு இறந்துவிடுவான். வியாதி பழகிவிட்டால், சீக்கிரத்தில் சிகிச்சைக்கு வசப்படாது; குடலின் சவ்வு சுஷ்கித்து, அதிலிருக்கிற கிளான்ட்ஸ் என்னும் கிரந்திகள் வியாதிகொள்ளும்; தேகம் இளைக்கும்; சருமம் உலர்ந்து தோலுரியும்; ஒருநாள் சவுக்கியமாய் காணப்படும், மறுநாள் பழயபடி ஆகிவிடும்; நாக்கு சிவந்து, மினுமினுப்பாயிருக்கும். மலம் துர்வாசனையாய், அதிக கஷ்டத்திலிறங்கும்; ஆனை வெகு துர்ப்பலப்படுத்தி, இருப்பதைப்பார்க்கிலும் இறப்பதே நல்லதென்று எண்ணும்படி, அவ்வளவு வேஷ்டையை யுண்டாக்கிவிடும்.

சிகிச்சை.—இந்த வியாதிக்கு வயிற்றில் அட்டைவிடுவதுண்டு, அட்டைவிடப்பட்ட ரோகத்தை நாம் காண்பது அரிது. ஆரம்பத்தில், கொதிப்புண்டாயிருக்கிற குலைத்தணித்து, அதை உபத்திரவிக்கிற பதார்த்தங்களை வெளிப்படுத்தி விடவேண்டியது; குழகுழப்பான ஜலங்களைத்தாராளமாய் கொடுக்கவேண்டியது; காரமில்லாத கஞ்சியினங்கள் பால், மாமிசரசம் இவைகள்பத்தியத்துக்கெடுத்தவைகள். வெந்நீர்கண்டஸ்நானம் செய்வித்தால், ஆரோக்கியம் பிறக்கும். வயிற்றுக்கு ஈரத்துணி மடித்துப்போட்டுக் கட்டிவைப்பதிலும் வெந்நீர் ஒற்றிடம் போடுவதிலும், சூடானசளிவைத்து கட்டுவதிலும், ஆசுவாசம் பிறக்கும். மலமானது ஆட்டுபுழுக்கைபோல் கட்டியிறங்கினல், ஆமணக்கெண்ணெயாவது, கடுக்காய் சூரணம், அல்லது கஷாயமாவது கொடுத்து, அதை வெளிப்படுத்திவிட்டு பிறகு, இபிகாக் என்னும் மருந்தைக் கொடுத்தால் நல்லது; இதைப்போல் வேறொன்றும் குணம் செய்வதில்லை. சீதபேதிக்கு இதைக்கொடுத்தால், குமட்டலும், வாந்தியும் ஆகாது; ஆனல் சிலேத்மத்தை அதிகப்படுத்தி, குடலின் நரம்புகளை யதாப்பிரகாரத்தில் கொண்டுவந்து விடும். 3-6-கிறேன் வீதம், 4-6-8-மணிக்கொரு ஆவர்த்தி, சுகுணம் பிறக்கிறவரையில் கொடுத்துக்கொண்டு வரலாம். வேதனை அதிகமாய்இருந்தால், இதனேடுஅபினி சேர்த்துக்கொடுக்கவேண்டியது; ஒருவேளை அதைச்சேர்க்க அனுகூலப்படாவிட்டால், பிளுபில் என்னும் சூதமெழுகைச் சேர்த்துக்கொள்ளலாம். அபினியானது, வேதனையைத் தணித்து பேதியை நிறுத்தும், ஆனல் மலத்தை இறுகச்செய்கிற ஒரு துர்க்குணமுண்டு; மலம் இறுகலானல், சிற்றாமணக்கெண்ணெய் கொடுத்து வயிற்றை இளக்கிவிடவேண்டியது.

இதில் ரோகம் வளர்ந்து, குடல் தாதுக்கள் கெட்டு, ரணம் உண்டாகிவிட்டால், ரோகிக்கு பலம் வரும்படியாயும், பேதி நிற்கும்படியாயும் முயற்சிசெய்யவேண்டியது; ரோகி க்ஷீணமாயும், ரத்தம் சரீரத்தில் குறைந்துமிருந்தால் குவைனு, பார்க், அயம் ஆகிய இவைகள் கொடுக்கவேண்டியது மலம் அதிகமாய், நுரையோடு ரத்தமும் கலந்திருந்தால், காலிக் ஆசிட், மாசக்காய், மாதுளம்பழத்தோல், கைநோ, செம்மரம், துரிசு ஆகிய இவைகளை நாம் உப

யோகிக்கவேண்டியது. அபினி உள்ளுக்குக் கொடுத்து, ஆசனத்திலும் பிரயோகிக்கலாம். பத்தியம் கொஞ்சங் குருத்துவமுள்ளதாய் இருக்கவேண்டியது; பால், முட்டை, மாம்சம், திராக்ஷப்பழம் இவைகள் நல்லது; போர்ட் ஒயின் சாராயமும் கொடுக்க உதவும். நாள்பட்ட சீதபேதிக்கு, மார்பியாவை, ஆரோமாடிக் ஸ்பிரிட்ஸ் ஆவ் அம்மோனியாவோடு சேர்த்துக்கொடுக்கும்படி கண்டிருக்கிறது.

சீதபேதி ரோகத்துக்கு, வைத்தியர்களைப் பார்க்கிலும், மாதர்கள் செய்கிற உபசரணை அதிகமுண்டு.—புளித்ததயிரை சுடுசாதத்தில் விட்டு ஊட்டுவதும், வெங்காயத்தை நெய்யில் வறுத்து சாதத்திலிட்டுக் கொடுப்பதும்,நெல்லிவற்றல் - மாதுளன்பழத்தோல்-மாங்காய்ப்பருப்பு-சுண்டக்காய் வற்றல், கருவேப்பிலை, வெந்தயம் ஆகிய இவைகளைச் சமனிடையாய்க் கூட்டியரைத்து, கொட்டைப்பாக்கு பிரமாணம் திரிகாலக்கிரமமாய் கொடுப்பதும், அத்திப்பிஞ்சு, வாழைப்பிஞ்சு, மாங்கொட்டைப்பருப்பு, துத்தியிலை,ஆட்டுத்தோஞ்சை இவை முதலியவைகளைச் சமைத்து சாப்பிடச்செய்வதும், கசகசாலேகியம் கொடுப்பதும் வீட்டுவைத்தியம். வியாதி ஆரம்பத்தில் இவைகள் ரோகத்தைக் கண்டிக்கும், வியாதி பிரபலமாகிவிட்டால், வேறு மருந்துகள் பிரயோகித்தாலொழிய வசப்படாது. ஒரு சட்டியில் வெந்நீர்விட்டு, ஆவி ஆசனத்துக்குப் படும்படி, அதின்மேல் உட்காரச்செய்தால், கடுப்பும் முக்கலும் தீரும். வில்வப்பழச்சதை, 2-பலமெடுத்து, $\frac{3}{4}$-ஆழாக்கு ஜலத்தில் மிஸ்ரமித்து, கொஞ்சஞ் சருக்கரைசேர்த்து இனிப்புண்டாகி, தினத்துக்கு 2-3-தடவை கொடுத்துக்கொண்டுவந்தால் ரோகம் சவுக்கியமடையும்; குழந்தைகளுக்கு வயதுக்குத் தக்கபடி, அளவை நிறுக்கிட்டு கொடுக்கலாம். 3-4-கிறேன் அபினியோடு, கொஞ்சம் சவுக்காரஞ் சேர்த்து குளிகைசெய்து, இரவில் ஆசனத்தில் வைத்துக்கொண்டுவந்தால், வேதனைக்கு சவுக்கியமுண்டாகும். அத்திப்பாலை வெண்ணெயில் கலந்து கொடுக்கலாம்; அந்தரத்தாமரையிலையை யறுத்து, தேங்காய்ப்பாலில் சேர்த்துங் கொடுப்பது ஒருவித சிகிச்சை. Remedies.—Demulcent drinks; farinaceous food; milk; fomentations; castor oil; ipecacuanha; opium; morphia; Dover's powder enema or suppository of opium; gallic acid;kino;logwood; sulphate of copper; acetate of lead.

9. பேதி

பிரதிபதங்கள்.—அதிசாரம், அஜீரணபேதி, உஷ்ணபேதி,

கழிச்சல், நீராம அதிசாரம், சாம அதிசாரம், சாம அஜீரணம்.

டையரியா, DIARRHŒA.

வைத்தியநூல்களில் பேதியை அநேக வகுப்புகளாய்ப் பிரித்திருக்கிறது; மலபேதி, பித்தபேதி, ஆமபேதி, ரத்தபேதி எனவாம். இப்பிரிவுகளால் உபயோகமில்லை; தாபிதகுணங்க ளில்லாதவைகளைப் பொதுவில் "பேதி" என்று சொல்லுவது நல்லது.

காரணங்கள்.—பேதி, அநேக காரணங்களால் பிறக்கின்றது; பெருந்திண்டி, அபக்குவபோஜனம், அசுத்தஜலபானம், துர்வாசனை ஆக்கிராணம், பயம், ஈரமும் குளிரும் தேகத்தில்படும்படி செய்துகொள்ளல், அத்தியுஷ்ணத்தில் சஞ்சரிப்பு ஆகிய இவைகள் முக்கிய காரணங்களாகும். வசந்த

காலத்தில் காணுகிற பேதிக்கு உஷ்ணமே காரணமாகும். க்ஷயம், விஷசுரம் ஆகிய இவைகளிலும் பேதி யனுசரிப்பதுண்டு.

லக்ஷணங்கள்.—பேதியோடு, குமட்டல், நாக்கில் மாவுபடிதல், வாய் நாற்றம், வயிற்றிரைச்சல் வயிற்றுளைச்சல் அல்லது புடுங்கல், புளியேப்பம், முக்கல் ஆகிய இவைகள் இருக்கும். மலம் சுபாவந்தப்பி, குழம்பாயாவது, அல்லது மலமும் சீதமும் கலந்த நீராயாவது, அல்லது நுரைத்த ஜலமாயாவது, அல்லது மாவுகரைத்த ஜலமாயாவது, பலவிதமாய் இருக்கும்; வசந்த காலத்தில் காணுகிற பேதியில் முக்கியமாய் பித்தமிருக்கும்; வயிற்றில் வேதனை அதிகமுண்டு; கால்களில் குறட்டுவலி எடுக்கும்; க்ஷீணமும் பிரபலமாய் இருக்கும்; பேதியில் ஒவ்வொருவேளை ரத்தம் காண்பதுண்டு; நுரையீரல், இருதயம், கல்லீரல் ஆகிய இவைகளின் வியாதி, துஷ்டவிரணங்கள், அன்னாசய வியாதி, விஷசுரத்தில் காணுகிற குடல் கிரந்திகளின் வியாதி, க்ஷயம், பெருங்குடல் விரணம், குதத்தில் விரணம், சீதபேதி, உள்மூலம் ஆகிய இவைகளில் ரத்தம் காணும்.

சிகிச்சை.—மந்தபதார்த்தங்களால் பேதிகண்டால், லகுவிரேசனம் கொடுத்து அவைகளை வெளிப்படுத்திவிட்டு, பிறகு துவர்ப்பு மருந்துகள் கொடுக்கவேண்டியது. காசுக்கட்டித்தூள் 10-15-கிறேன்; கருவாப்பட்டைத் தூள், 10-கிறேன்; அபினி, ½-கிறேன்; இவைகளைச் சேர்த்து, தேன் அல்லது வெல்லத்தில் கலந்து, தினத்துக்கு 3-முறை கொடுத்துக்கொண்டுவர, பேதிநிற்கும். அபினியும் மாசக்காய்த்தூளும் சேர்த்து கொடுக்கலாம். மாதுளம்பழத்தோல்கஷாயம், வில்வப்பழ ஷர்பத் இவைகளும் கொடுக்க உதவும். பஞ்சதீபாக்கினி சூரணத்தோடு, சீமை சுண்ணாம்பு சேர்த்துக் கொடுத்தால் வெகு நன்மைசெய்யும். வெள்ளுள்ளிமேல் உப்பாவது மஞ்சளாவது கவசமிட்டு சுட்டு, கொடுப்பது நாட்டுவழக்கம். வெள்ளுள்ளியை நெய்யில் வருத்தாவது, பாலில் வேகவைத்தாவது, கடைந்து, நெய்யும் சருக்கரையும் சேர்த்து, கொட்டைப்பாக்குப் பிரமாணம் கொடுக்கலாம். படிக்காரம், 10-கிறேன்; காசுக்கட்டி 10-கிறேன்; கருவாப்பட்டைத்தூள், 8-கிறேன்; இவைகளைச்சேர்த்து, தேனில் மிஸ்ரமித்துக் கொடுத்துக்கொண்டுவர பேதிகட்டும். கந்தகத்திராவகம், லாடனம் இவைகளைச் சேர்த்தும் கொடுக்கலாம். கட்டுவாதிமாத்திரை (கவாடமாத்திரை), பூரணாதிலேகியம், இவைகளுக்கும் பேதிநிற்கும். சிறுநாவல்பூ, போஸ்தக்காய், அதிவிடையம் கடுக்காய்ப்பூ, ஜடாமாஞ்சி, மரமஞ்சள், வகைக்கு, பலம் ¼; இவைகளை ½-படி ஜலத்தில் கஷாயமிட்டு, தினத்துக்கு 3-முறை கொடுக்கலாம். பேதி நின்றபிறகு, நிலவேம்பு கஷாயம் கொடுத்துக்கொண்டுவந்தால், தாருட்டியம் வரும். வசம்பு கஷாயம், வில்வப்பழச்சதை கஷாயம் இவைகளும் கொடுக்க உதவும். குளோரோடீன், அபினி, அபினிகலந்த சீமைசுண்ணாம்பு கலவைச்சூரணம், செம்மரக்கஷாயம், கைனோ, டோவர்ஸ் பவுடர் ஆகிய இவை முதலியவைகளைக் கொடுப்பது, இங்கிலீஷ் சிகிச்சை. குழந்தைகளுக்குக் காணுகிற பேதிக்கு, இபிகாக்கொடுத்தால் வெகு நன்மைசெய்யும். இந்த ரோகத்துக்குப் பத்தியத்தில் சாக்கிரதையாய் இருக்கவேண்டியது; சீக்கிரம் சீரணமாகிற சேகோ, ஆரொரூட் முதலிய கஞ்சியினங்களைக் கொடுக்கவேண்டியது. Remedies.—Castor oil; rhubarb; chalk powder with opium; logwood; sulphuric acid; kino; Dover's powder; catchu; galls; gallic acid; alum; sulphate of copper; quina; ipecacuanah; liquid nourishment.

10. வாந்திபேதி

பிரதிபதங்கள்.—விஷூசிகரோகம்; விஷபேதி;

நடப்பு வியாதி; நீர்க்கொம்பு.

காலரா, CHOLERA.

இந்தக் கொள்ளைவியாதி, ஊழிக்காற்முல் பிறந்து, பரவி, பேதி வாந்தியையுண்டாக்கி, அதி சீக்கிரத்தில் சீதளத்தைப் பிறப்பிக்கின்றது. உச்சினிநகரம் ஐரோப்பிய துரைத்தனத்தாருக்கு கைவசமானபோது, அந்த ஊரிலிருந்த காளிமுதலிய துஷ்ட தேவதைகள், இந்த கொடிய வியாதியைப் பிறப்பித்ததாய், சிலஹிந்துக்கள் சொல்லிக்கொள்ளுகிருர்கள். சாமளாதேவி என்கிற அம்மனுடைய கோபத்தால், இந்த கொடியவியாதி பிறக்கிறதென்று பொங்கலிட்டு, பெலிகொடுத்து, தூபதீபனைவேத்தியம் முதலிய ஆராதனைகள் நடப்பித்து, கோபத்தைத் தணிப்பது நாட்டுவழக்கம்.

வாந்திபேதி மனுஷரைக் கொல்லுகிற ரோகம். இங்கிலீஷில், இதனை மெலிக்னெட் (Malignant)—எஷியாடிக் (Asiatic)—ஆல்ஜியிட் (Algide) காலரா (cholera) என்று பலவிதமாய்ச் சொல்லுவதுண்டு; ஆல்ஜியிட் என்முல் உஷ்ணகுறைவென்றுபேர். இந்த கொடியரோகம் நமது தேசத்தில் 1817-ம் வருஷம் முதல் பிறந்ததென்றும், 1837-ம் வருஷம், இங்கிலாண்டு தேசத்தில் உண்டானதென்றும், இங்கிலீஷ்காரருடைய அபிப்பிராயம். இந்தவியாதி பிறப்பதற்குக் காரணமும், ஒவ்வொருகாலத்தில் பிறந்து வியாபித்து சிலவருஷம் இல்லாமலிருப்பதற்குக் காரணமும், நமக்கு இன்னம் தெரியவில்லை; அவாளவாள் மனதுக்கேற்றபடி சொல்லிக்கொள்ளுகிருர்கள்; இந்த ரோகம் ஓர்வித விஷக்காற்றென்று சகலரும் ஒப்பிக்கொள்ள இடமுண்டு. அனுபோகத்தால் இந்த வியாதியைக்குறித்து நமக்குத் தெரிவது என்னவென்முல், தனவான்களைப் பார்க்கிலும், தரித்திரர்களை அதிகமாய் அனுசரிக்கின்றது; தரித்திரம், குப்பை, நரகல், கெட்டகாற்று முதலியவைகளால் வாந்திபேதியின் உக்கிரம் அதிகப்படுகின்றது; அவைகளை நீக்கினல், வியாதியின் உக்கிரம் போய்விடுகின்றது. சிறைச்சாலை முதலிய ஜனநெருக்கமுள்ள விடத்தில், இது பிரவேசித்து அநேகரைக் கொண்டுபோய் விடுகின்றது.

லக்ஷணங்கள்.—இந்த ரோகத்தில் 3-ஸ்திதிகள் காணலாம். 1-வதில்—பேதியும் வாந்தியுமிருக்கும்; ரத்தத்திலும், தேகத்திலுமிருக்கிற விஷம் வெளிப்படுவதற்கு தெய்வச்செயலாய் உண்டாகிறதென்று ஒருவருடைய அபிப்பிராயம். 2-வதில்—வாந்திபேதியோடு குறடைவலி, இசிவு, சீரகுளிர்ச்சி, க்ஷீணநாடி ஆகிய இவைகள் தொடரும். 3-வதில் அந்தியத்தில், தளர்ச்சி காணும்.

இதில் காணுகிற வாந்தியும் பேதியும், ஒருவித கஞ்சி ஜலம்போலிருக்கும்; கால்களிலும், வயிற்றிலும், சதைகளுக்கு வலிகண்டு பிகுவாகிவிடும்; மூத்திரம் சுத்தமாய் இறங்காது; தாகம் பிரபலமாய் இருக்கும்; நாடிநடையும், சுவாசநடையும் குறைந்து, அதிக தளர்ச்சி யுண்டாகி, தேகம், நாக்கு, சுவாசம் இவைகள் சில்லிட்டுவிடும்; விரல்கள் சிலுத்து, உதடுகளும் சீரமும் நீலநிறமாகிவிடும்; தொனிமாறி ஹீனமாகிவிடும்; முகமும் தேகமும் வாடிவிடும் தேகச்சூடு குறைவுபட்டபோதிலும், ரோகிக்கு போர்வையில் இஷ்டமிராது;

கண்கள் குழி விழுந்துவிடும். பிறகு சம்பவிக்கிறதென்னவெனில், சுவாசம் மெதுவாகி நாடி இல்லாமல், கடைசியில் ரத்தவோட்டம் நின்றுவிடுகின்றது. எல்லோருக்கும், பிராணன் போகிறவரையில், புத்தி தெளிவாய் இருக்கும். ரோகிக்கு ஒருவேளை பிழைப்போமென்று நம்பிக்கையும், ஒருவேளை இறப்போமென்று நிச்சயமும் உண்டாயிருக்கும். இதில் சதாரணமாய், 3-18-மணிநேரத்துக்குள் மரணம் சம்பவிக்கின்றது; இதற்குமேல் பட்டால், சுகுணங்கள் பிறப்பதற்கு இடமுண்டு; வெகு சீக்கிரத்தில் சிலருக்கு உடம்பு சவுக்கியப்பட்டுவிடும்; ஒவ்வொருவேளை கொஞ்சம் சுகுணம் கண்டபோதிலும் மூத்திரம் சுத்தமாய் இறங்காமல் அது ரத்தத்தில் தங்கி, விஷமித்து ஆளை பரமபதமடையும்படி செய்கின்றது. அதில் தலைவலி, உறக்கம், இசிவு, வாந்தி, நெஞ்சில் கபம், போதக்ஷயம் ஆகிய இவைகள் இருக்கும்; சிலரில் அற்பசுரம் கண்டு பிறகு தணிந்து சீக்கிரம் உடம்பு சௌக்கியத்துக்கு வந்துவிடும்; ஒவ்வொருவருக்கு, சுரம் அதிக்கிரமித்து அதிக க்ஷீணமுண்டாகி, நல்ல சிகிச்சையால் ரோகி மெதுவில் சவுக்கியமடைவான். ஒவ்வொருவேளை முதல் பேதிகண்டு பிறகு இந்த ரோகம் காணும்; ஆனல் நிர்நிமித்தமாய் காண்பது வழக்கம். மலத்தைப் பரீக்ஷித்துப் பார்த்தால் அதிக நீரும், உப்புகளும், கறியுப்பு மிகுதியாயும் இருக்கும்.

Patholegy. வாந்திபேதியின் காரணம் சொல்ல நமக்சொன்றுண்டு; அது என்னவெனில், வாந்திபேதி ஒருவித விஷபதார்த்தத்தால் உண்டாகின்றது; அந்த விஷபதார்த்தத்தின் இருப்புக்கும், அதிக்கிரமத்துக்கும் சக்திக்கும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகும்படிச் செய்வதற்கும் காரணம் காற்றின் ஒருவித ஸ்திதியேயாம்; அதிக உஷ்ணமும், ஒருவேளை இதனோடு சம்பந்தப்படுவதுண்டு; இந்த விஷயத்தினுடைய செய்கையை சகலருக்கு அசுசிகள் பலப்படுத்துகிறதென்று சந்தேகமறச் சொல்லலாம். இந்த வியாதிக்கு ஒட்டிக்கொள்ளுகிறதன்மை இருக்கிறதென்றும்,இல்லையென்றுஞ் சொல்லுவது பிரயாசை; ஆனல் மனுஷர் போக்குவரவு வியாதியின் வியாபித்தலை ஒருவிதமாய் அனுகூலப்படுத்துகிறதென்று சொல்லலாம்.ஒட்டு வியாதிகள் தகுந்த தேகத்தில் மாத்திரம் எப்படி அனுசரிக்கிறதோ அப்படியே ரோகத்துக்குள்பட்ட தேகமுடையவனில் மாத்திரம் வாந்திபேதி அனுசரிக்கும்; தகுதியானவிடத்தில் வேரூன்றி வித்து முளைக்குமேயொழிய தகாதவிடத்தில் முளையாது; அதுபோல், சாங்கிராமிக ரோகங்களை ஒரு வித்துக்குச் சமனாய் சொல்லலாம்.

வாந்திபேதி வியாதியின் விஷம், (cholerine) சருமத்தின் வழியாயோ, அல்லது சுவாசப்பையின் வழியாயோ அல்லது குடலின் வழியாயோ சென்று ரத்தத்தில் கலந்துவிடுகிறது; உள்ளுக்குப்போகிறவழி இன்னதென்று திருப்திகரமாய்ச் சொல்லக்கூடவில்லை. சுவாசத்தால் உள்ளுக்குப் போகிறதென்று வெகுசாய் நம்பலாம்.

வாந்திபேதி ரோகம் வியாபிக்கும்போது, அதற்குட்படுத்த சில காரணங்களுண்டு; (Predisposing causes) அவைகளாவன:—கெட்ட மச்சமாம்ச காய் யினங்களையும், பழுக்காத கனிகளையும் பக்ஷிக்குதல், அசுத்த ஜலபானம், சாக்கடை நாற்றம், கெட்டவஸ்துக்கள் விக்கிரயம், குப்பை முதலிய துர்க்கந்தம், மதுபானம், அசுசி, கெட்ட ஈரக்காற்று, தேகபலத்தைக்குறைத்து அதிக ஆயாசத்தைப் பிறப்பிக்கிற வேலைகள்; நேரப்பட்ட

போசனம் செய்யாமல் இருக்குதல், பேதி ஆகிய இவைகள் தேகத்தை, வாந்திபேதிரோகத்துக்குக் காட்டிக்கொடுக்கின்றன. ஆகையால், வாந்திபேதி வியாபிக்கிறநாள்களில், நல்ல காற்றுள்ள வீட்டில் குடியிருக்கவேண்டியது ; அந்தவீடு, மேடுள்ள விடமாயும், தாராளமாய் காற்று வியாபிக்கும்படியானதாயும், உலர்ந்த விடத்திலும் இருக்கவேண்டியது ; விதிப்படி நடந்துகொள்ளவேண்டியது ; பேதிக்கு சாப்பிடுவதை நீக்கிவைக்கவேண்டியது ; பேதிக்கு கொஞ்சமாகிலும் இடங்கொடாமல், சந்தேகமாய் மலம் இறங்கின உடனே, படுத்த படுக்கையிலிருந்து அபினி, ஓமம், சுக்கு முதலியவைகளைச் சாப்பிட்டு, அதைக் கண்டிக்கவேண்டியது ; இல்லாவிட்டால் அந்தபேதி, வாந்திபேதியின் விஷத்துக்கு இடங்கொடுக்கும் ; இவ்விதமாய்ச் சொல்லி இருந்தபோதிலும், சாதாரணபேதி,வாந்திபேதியை விளைவிக்குமென்று நம்பலாகாது; வாந்திபேதி, பெரியம்மையாயாவது, சின்னம்மையாவது பிறப்பிக்குமா ?

சிகிச்சை.—விஷபேதி ரோகத்துக்குக் கொடுத்துப் பரீக்ஷிக்காத மருந்தொன்றுமில்லை ; ஒருவருக்குதவியது மற்றொருவருக் குதவாமல் போகின்றது. ரோகஆரம்பத்தில் தகுதியான ஔஷதம் எடுத்துக்கொண்டால், சுகுணம் பிறக்கும், காலதாமசமாய்விட்டால், ஒன்றுக்கும் வசப்படாது, ரக்ஷகருக்கொப்பித்துவிடவேண்டியது.

மனிதரைக் கொல்லுகிற இந்தரோகத்துக்கு, இதைக் கொடுக்கலாமென்று நிச்சயிக்க எனக்கு வல்லமையில்லை ; ஆகையால், பலர் கொடுத்துப் பிரயோஜனப்பட்ட சில மருந்துகளை இதனடியில் விவரிக்கப்படும் ; அவைகளில் சிகிச்சைகருக்கிஷ்டமானதெதுவோ அதை உபயோகப்படுத்திக்கொள்ளலாம் ; ஒரு சிகிச்சைகன் கொடுப்பதை மற்றொரு சிகிச்சைகன் நம்புவது பிரயாசை.

வங்க உப்பு (sugar of lead), 2-கிறேன் ; ரஸபஸ்மம், (calomel) 3-கிறேன் ; சூடன், 2-கிறேன் ; அபினி, 1-கிறேன் ; திரிகடுகு சூரணம் கொஞ்சம். இவைகளைச் சேர்த்து 2-மாத்திரைகளாக்கி, பெரியவர்களுக் கிவ்விரண்டும், 15-வயதுள்ளவர்களுக்கு, 1-ம், 10-வயதுள்ளவர்களுக்கு $\frac{1}{2}$-மாத்திரையுமாக 2-3-மணிக்கொருதடவை, சுகுணம் பிறக்கிறவரையில் கொடுக்கவேண்டியது. இதனோடு ஓமத்தண்ணீரும் கொடுத்துகொண்டுவரலாம். Dr. Paterson's cholera pills.

மிளகு, பெருங்காயம், அபினி, வகை-1-க்கு, 12-கிறேன் ; இவைகளை மிஸ்ரமித்து, 12-மாத்திரைகளாக்கி, ஒரு மாத்திரை, $\frac{1}{2}$-1-மணிநேரத்துக்கொருதடவை, ரோகம் தணிக்கிறவரையில் கொடுக்கலாம் ; 7-14-வயதுடைய குழந்தைகளுக்கு, $\frac{1}{2}$-மாத்திரை கொடுக்கலாம்.

கற்பூரம், 5-கிறேன் ; அபினி, $\frac{1}{2}$-கிறேன். இவைகளைச் சேர்த்து மாத்திரைசெய்து, 1-2-நாழிகைக்கொருதடவை கொடுத்துக்கொண்டு வரலாம். ரோக ஆரம்பத்தில், ஓமத்தை அரைத்தாவது, அல்லது ஓமத்தீநீரையாவது கொடுத்தால், நன்மைசெய்யும். சுக்கு, மிளகு, போஸ்தக்காய், சிறுநாவல்பூ, அதிவிடையம், கடுக்காய்ப்பூ, சடாமாஞ்சி, மரமஞ்சள் இவைகளைச் சேர்த்து கஷாயமிட்டு கொடுத்தால் பேதிகட்டும். குளோரோடீன் (chlorodyne) கொடுப்பது இங்கிலீஷ்முறை. பூரணதிலேகியத்துக்கு வியாதி வெகுசாய் வசப்படுகிறது, கைகண்டமருந்து, வெகு நம்பிக்கையோடு கொடுக்கலாம்.

சுக்கு, கிராம்பு, கருவாப்பட்டை, சாதிக்காய், ஏலம், மிளகாய், வசம்பு, வகை 1-க்கு, 4-விராகனெடை இடித்து, 1-புட்டி நல்ல சாராயம், அல்லது பிராந்தியில் போட்டுக் குலுக்கிக்குலுக்கி, 12-மணிநேரம் ஊறினபிறகு அதை உபயோகிக்கலாம். வியாதிகண்ட உடனே, இதில் 2-4-உத்திரணி அளவுக்கெடுத்து, கொஞ்சம் வெந்நீரில்விட்டு, இனிப்புக்குச் சருக்கரை சேர்த்து குடித்துவிடவேண்டியது. இதைக்குடித்து 1-மணிக்குள் சுகுணம் காணுவிட்டால், மறுபடியும், மருந்தை எடுத்துக்கொள்ளவேண்டியது; ரோகி, கம்பளி போர்வையிட்டுக்கொண்டு நிம்மதியாய் படுத்துக்கொண்டிருக்கவேண்டியது.

மேல்கண்ட மருந்துகளில் ஒன்றைக் கொடுத்துக்கொண்டு வருகிறபோது, மத்தியில் ரோகிக்குச் செய்யவேண்டிய உபசரணை யென்னவெனில், தாகமடங்க, கஞ்சிசலம், கஞ்சியைக்கரைத்திருத்த ஜலம், குளிர்ந்த ஜலம், சோடாவாட்டர் இவைகளில் ஒன்றை தாராளமாய் கொடுத்துக்கொண்டு வரவேண்டியது; வாந்தி எடுத்தபோதிலும், நிமித்தமில்லை, தாகத்தை மாத்திரம் அடக்கச் செய்யலாகாது. குளுமை காணுமென்று, தீர்த்தமே கண்களுக்குக் காட்டாமலிருக்கிற நமது வீட்டுவழக்கத்தைத் தக்ஷணமே தொலைத்துவிட்டால் ரோகிகள் சுகமடைவதற்கு யாதொரு சந்தேகமில்லை. வெந்நீர்விட்டு கடுகை அரைத்து, துணியில் தடவி, ஈரற்குழிமேல் போட்டு வைத்தால், வாந்தி நிற்கும். கொள்ளுமாவில் கற்பூரம் சேர்த்து, அதை கால்கள்மேல் தூவி, சூடுபிறக்க இடைவிடாமல் தேய்த்துக்கொண்டு வரவேண்டியது. கற்பூரதயிலம் கால்களுக்குத் தேய்ப்பது இங்கிலீஷ் சிகிச்சை. மணல், சாம்பல், தவுடு இவைகளில் ஒன்றை வறுத்து, மேலுக்கு ஒற்றிடம் கொடுக்கலாம், சூடுபிறக்கும் வலியும் நிற்கும்.

நொய்க்கஞ்சியில் அதிகமாய்ப் உப்புசேர்த்து, அடிக்கடி தாகமடங்க கொடுத்துக்கொண்டு வரவேண்டியது. அரரூட், சேகோ, கோதுமை இவைகளின் கஞ்சியைக் கொடுக்கச்செய்வது டாக்டர்களுடைய உபசரணை.

விஷூசிரோக வியாபககாலத்தில், அடியில்கண்ட சில விதிகளை அனுசரித்தால், பெரும்பாலும் நம்மை ரோகமணுகாது, எல்லோரும் கவனிக்கத் தக்க விஷயம்:—

1-வது.—சாராய இனங்கள் அதிகமாய் அபேக்ஷிக்காமல், கிரமத்திலிருக்கவேண்டியது.

2-வது.—சீரசவுக்கிய முண்டாகிற விதிகளை முக்கியமாய் அனுசரிக்கவேண்டியது.

3-வது.-பத்தியத்துக் குதவியகாய்கறிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டியது. பழவர்க்கங்களை மிதமாய் சாப்பிடவேண்டியது.

4-வது.—பேதிகண்டவுடனே, ஆலசியம் செய்யாமல், ஔஷதம் சாப்பிட்டு, அதை நிறுத்திக்கொள்ளவேண்டியது. இந்தக் கொள்ளைவியாதி, பெரும்பான்மை இரவில் காணுகிறபடியால், அ சமயம் வைத்தியரைத்தேட அனுகூலப்படாமல், பொழுதுவிடிகிறவரையில் தாமசித்து, பிறகு வைத்தியரைத் தேடி அழைத்துக்கொண்டுவந்து, காட்டி ஔஷதம் பிரயோகம் செய்வதற்குமுன், ரோகம் அசாத்தியமாகி விடுகின்றது. ஆகையால் வீடுதவருமல் ஏதாவது மருந்து கையிருப்பாய் வைத்துக்கொண்டிருப்பது அவசியம்.

5-வது.—அனுகூலப்பட்டால், வாந்திபேதி இருக்கிற இடத்தைவிட்டு, வேறிடத்தில்போய் இருந்து, வியாதி தணிந்தபிறகு வந்துவிட்டால் நல்லது.

6-வது.—வாந்திபேதி கண்டிருக்கிற இடத்துக்கு அன்னியர் போகாமலிருப்பது நல்லது.

7-வது.—வீட்டுச் சுவர்களுக்குச் சுண்ணாம்பு அடித்து, தரைக்கும் சுண்ணாம்பு தெளித்து, குப்பை முதலிய அசுசிகளை வீட்டில் சேர்க்காமல் அப்போதைக்கப்போது வெளிப்படுத்தி, தாங்களும் சுசியாய் இருக்கவேண்டியது.

8-வது.—விஷபேதிகண்ட ரோகியின் மல வமனாதிகளையும், அசுத்த வஸ்திரங்களையும், அப்போதைக்கப்போதே நீக்கி, தூரத்தில்கொண்டுபோய் குழிவெட்டி புதைக்கும்படிச் செய்து, ஸ்தலத்தைச் சுத்திசெய்ய வைத்து சாம்பிராணி, சந்தனம், ஊதுவத்திமுதலிய சுகந்த தூபமிட்டு வைத்தால் நல்லது. ரோகியின் அசுத்தங்களைச் சேர்த்துவைத்தால், அவைகள் அழுகி, விஷபதார்த்தம் ஜனித்து, வீட்டிலுள்ளவர்களையும் வதைக்கும். ஒருகிரகத்தில் 4-5-பேர்களுக்குக் காணுகிற காரணம் இதுதான். ஒருகிரகத்தில் 1-2-3-பேர்களுக்குக் கண்டால், உடனே மற்றவர் அதைவிட்டு வேறோரிடம் போய் இருக்கவேண்டியது.

9-வது.—பதார்த்தங்களில் உப்பை அதிகமாய்ச் சேர்த்து சாப்பிட்டுக் கொண்டுவந்தால், வாந்திபேதி ரோகம் அனுசரிக்காதென்று கண்டிருக்கின்றது. இந்தரோகம் நடப்பிலிருக்கும்போது, வாளம் முதலிய கொடிய பேதி மருந்துகள் சாப்பிடலாகாது. எண்ணெய், உப்பு, கரி இவைகளை விற்கும் வர்த்தகாளுக்கு, விஷபேதி காணுகிறதில்லையென்று கேழ்வி, உண்மையை அறியவேண்டியது.

11. வயிற்றுவலி

பிரதிபதங்கள்.—அலஸரோகம்

காலிக், Colic.

லக்ஷணங்கள்.—விட்டுவிட்டு முக்கியமாய் தொப்புளைச்சுத்தி அடிக்கடி வேதனை யெடுக்கும்; தாபிதக்குறிகளிராது; விரல்களால் அந்த இடத்தை அழுத்தினால், வேதனை சமனப்படும்; மலபந்தமும் ஒவ்வொருவேளை வாந்தியும் அனுசரிப்பதுண்டு; இதில் சுரமிராது, நாடியும் யதாப்பிரகாரமே யிருக்கும்; குடல்தாபிதத்திலிருக்கிற சோர்பு இதிலிராது.

காரணங்கள்.—வாயுவோடு கூடிய அக்கினிமந்தம், மலபந்தம், புளிப்பு, நீர் குடலில் சுரப்பு ஆகிய இவைகளால் இந்தரோகம் பிறக்கின்றது. ஊர்த்தமுகமாயும், அதோமுகமாயும் வாயு வெளிக்குவந்துவிட்டால், வேதனை போய்விடும்.

சிகிச்சை.—வயிற்றில் புளிப்பு சேர்ந்து இந்த உபத்திரவம் பிறந்தால், சாராயத்தில் கொஞ்சம் வெந்நீர்விட்டுக் கலந்துகொடுத்தால், வேதனை தணிந்துவிடும், பிறகு சிற்றாமணக்கெண்ணெய் கொடுத்து மலபந்தத்தை நீக்கவேண்டியது. நரம்பைப்பற்றிய வயிற்றுவலியுமுண்டு; (nervous or spasmodic colic); பயம், குளிர்ச்சி, சூதகவாயு, கணுவாதம் ஆகிய இவை முத

லியவைகளில் இது காணும்; இதற்கு அபினி, குளோரோபாரம் முதலிய அங்காகர்ஷணநாசகாரிகளைக் கொடுத்தால் ரோகம் ஓட்டமெடுக்கும். வயிற்று வலிகளுக்கு நேர்வாளபேதி உதவாது. வயிற்றுக்கு கடுகுபற்று போடலாம்; வெந்நீர் ஒற்றிடமிடலாம்; கிராம்பு, சுக்கு இவைகளின் கஷாயத்திலும் சுகுணம் பிறக்கும். குழந்தைகளுக்குக் காணுகிற வயிற்றுவலிக்கு பெருங்காய சலம் கொடுக்கலாம், வயிற்றுக்கு வெந்நீர் ஒற்றிடமிடலாம்.

12. மலபந்தம்

கன்ஸ்டிபேஷன், CONSTIPATION.

மலபந்த உபத்திரமானது, வேறு வியாதிகளில் கண்டபோதிலும் தனிப்பட காண்பதுமுண்டு; சாதாரணமாய் மல மிறங்குவதில் வித்யாசப்படும். பிரதிதினமும் ஒருதடவை மலமிறங்குவது பதிவு, ஒருநாளையில் சிலருக்கு, இரண்டுதடவை யிறங்கும்; ஒவ்வொருவருக்கு 2-3-நாளைக்கொருதரம் போகுவதுண்டு. இப்படி இருக்கிற கிரமம் தப்பி, மலம் சிக்கிக்கொண்டால், சீர்ண உறுப்புகளின் வியாபகம் கெட்டு, தேகத்தில் துர்க்குணங்கள் பிறக்கும்; புத்திக்கும் சரீரத்துக்கும் ஒருவித மந்தத்தை யுண்டாக்கும்; முகக்களை மாறும்; தேகம் வரக்ஷியாகும்; மூத்திரம் குறையும்; இறங்கப்பட்ட மலம் வெளுத்து, களிமண்ணுபோல், துர்வாசனை வீசும். வியாதி மீறினல், சோம்பல் காணும்; தலைவலி யுண்டாகும்; இருதயத்துடிப்பு பிறக்கும்; உடம்பெல்லாம் குத்தலும் குடைச்சலுமாய் இருக்கும்; ரோகி எந்நேரமும் விசனத்தில் மூழ்கியிருப்பான்.

காரணங்கள்.—பெருங்குடலின் அசைவு மந்தமடைந்து இந்தரோகம் பிறக்கின்றது. வயதுசென்றவர்களுக்கும், வியாதியால் தேகம் மெலிந்தவர்களுக்கும், சூதகப்பாண்டு உடைய ஸ்திரீகளுக்கும், ஐஸ்வரியத்தினல் சோம்பலடைந்திருப்பவர்களுக்கும், மலபாதைக்குக்கிரமமாய் போகாமல், பாராமுகமாய் இருப்பவர்களுக்கும், உளுக்கார்ந்துக்கொண்டே வேலைசெய்கிற தொழிலாளிகளுக்கும், இந்த உபத்திரவம் அனுசரிக்கும். மலபந்தத்தோடு கூட, பசியில்லாமல்போகும், நாக்கு வெளுத்து பற்கள் அழுந்தியபள்ளங்கள் தோற்றும், அபானவாயு பறியும், வாய் நாறும், முகம் வேறுநிறமாகி கண் இவைகளுக்கடியில் கறுப்பவிழும். விசனமும் மிருப்பதுண்டு. மலம் சேர்ந்து இறுகிக்கொண்டு பித்தநீர் வருகிற வழியைஅழுத்திக்கொண்டால், மஞ்சள் காமாலை பிறக்கும்; பெருநாளத்தில் ஓடுகிற ரத்தத்தைத் தடுத்தால் கால்களில் நீர் காணும்.

சிகிச்சை.—வழக்கப்பட்டுப்போன மலபந்தத்தை, கடும்பேதி மருந்துகள் கொடுத்து உபத்திரவிக்கலாகாது; நல்ல பேதிக்கொன்று சாப்பிட்டால் சுகுணமென்று யோசித்து, சாதாரண ஜனங்கள் எடுத்துக்கொள்ளுகிற உபத்திரவ பேதி மருந்துகளை நீக்குவது நல்லது; சிற்றாமணக்கெண்ணெய், ரேவல்சின்னி, இந்துப்பு, ஸல்பேட் ஆவ் ஸோடா, செட்லிட்ஸ் பவுடர், நிலவாகை லேகியம் இவைப்போலொற்ற லகுவிரேசனங்களை அடிக்கடி சாப்பிட்டுகொண்டுவந்தால் நல்லது. ஆஸனவஸ்தி செய்துகொள்ளும்படியாயும் செய்யலாம். குடலுக்கு சக்திவா தாருட்டியகாரி மருந்துகளை, மேற்படி மருந்துகளோடு சேர்த்துக்கொடுக்கலாம். 10-15-நாளைக்கு விரேசன மருந்துகளைக் கொடுத்து, பிறகு படிப்படியாய் நிறுத்தி தாருட்டிய

காரிகளில் மாத்திரம் நம்பிக்கை வைக்கவேண்டியது; அதற்கு குவைஞ, பாற்றுற்றம், சொர்னபேதி திராவகம், எட்டிக்கொட்டைச்சத்து, பெப்சீன், மீன் நெய் ஆகிய இவைகளை கொடுக்க உதவும்.

மருந்துகள் மாத்திரம் சாப்பிட்டு, போசனத்தில் கிரமமில்லாமற்போனல் பலமில்லை. போஜனபதார்த்தங்கள் நல்லதாயும், சீக்கிரத்தில் சீர்ணிக்கிறதாயும் இருக்கவேண்டியது. ருசியான பதார்த்தங்கள் நல்லதல்ல, அதிகமாய்ச் சாப்பிடும்படிச் செய்யும். வாயுசெய்கிற மரக்கறி உதவாது; கீரையினங்கள் நல்லது. கனிவர்க்கங்கள் காலையில் சாப்பிடலாம். கோதுமை தவுடு ரொட்டி சாப்பிடுவதிலும் பிரயோஜனமுண்டு; இவைகளோடு தினக்கிரமம், கால் நடையாய் உலாற்றிக்கொண்டுவருவதும் அல்லது குதிரை சவாரிசெய்துகொண்டுவருவதும், எல்லாவற்றைப்பார்க்கிலும் அதிகசிரேஷ்டம். சோம்பல், அதிக நித்திரை இவைகளை நீக்கிவிடவேண்டியது, அதிகாலையில் எழுந்து நடப்பது நல்லது. இதுவுமல்லாமல், இன்னமும் 1-2-விஷயங்களுண்டு, அவைகளையும் கியாபகத்தில் வைத்தால் பிரயோஜனம் தரும். மலம் வந்தாலும் சரி, வராவிட்டாலும்சரி, தினமும் அந்தநேரத்தில் போய் உளுக்கார்ந்து முயற்சி செய்யவேண்டியது. தினமும் குளிர்ந்த ஜலஸ்நானம் செய்துகொண்டுவந்தால் குடலுக்கு பலம் வரும்.

இராத்திரியில் வெந்நீரில் நனைத்த ஈரத்துணியை மடித்து வயிற்றுக்கு வைத்து, வாழை இலையைப்போட்டு கட்டிக்கொண்டுவந்தால், சிலருக்கு நல்ல குணத்தைக்காட்டும். குழந்தைகளுக்கும், வயதுசென்றவர்களுக்கும் காணுகிற மலபந்தத்துக்கு, வயிற்றை மெதுவாய் பிசைந்தாலும்சரி, அல்லது, வயிற்றின்மேல் எதாவது தேய்த்தாலும்சரி தினமலம் கிரமமாய் இறங்கும். Remedies.—Laxatives; brown bread; exercise; cold bathing; tonics.

13. மலக்கிருமி ரோகம்

ஓரமஸ், Worms.

முக்கியமாய் 3-சாதி கிருமிகள், வயிற்றுக்குள் காணப்படும். இரண்டு சாதி குழலாயிருக்கும், மற்றென்று கட்டியாய் இருக்கும்:—

1. நாகப்பூச்சி. பெரும்பூநாகக்கிருமி (Large round worm, Ascaries lumpricoides). இது உருண்டு, நீண்டு, பூநாகம்போல் (நாக்குழிப்பாம்பு) இருக்கும்; முக்கியமாய் செவ்வையான ஆகாரமில்லாத குழந்தைகளுக்கு, சிறுகுடலில் அகப்படும்; 6-9-அங்குல நீளமிருக்கும்; ஆணைப்பார்க்கிலும் பெண்கிருமி பெரிது. இது சிறு குடலில் சஞ்சரித்தபோதிலும், மேலுக்கேறி அன்னசயத்திலும், கீழுக்கிறங்கி பெருங்குடலிலும், வியாபிப்பதுண்டு; அன்னசயத்துக் கேறினல் வாந்தியாலும், பெருங்குடலுக்கிறங்கினல்,மலத்தோடும் வெளிப்படும். சிலரில் இது அநேகமாய் இருப்பதுண்டு; ஒரு பெண்ணில் 200-க்கு அதிகமாய் விழுந்ததாயும் கண்டிருக்கின்றது.

2. திமிர்பூச்சி. கீரிக்கிருமி. எரிக்கிருமி, (Small thread worm, Ascaries Vermicularis.) இந்த இனம் குத்ததிலும், சிக்மாயிட் பிளக்ஷர் என்னும் பெருங்குடல் வளையிலும், இருக்கும். சிறிதாய் சுமார் $\frac{1}{4}$-அங்குலப்பிரமாணமாய் இருக்கும். ஆணைப்பார்க்கிலும் பெண், நீண்டிருக்கும். ரூபத்தில் சிறிதாய் இருந்தபோதிலும், குகத்திலிருந்துகொண்டு சகிக்கக்கூடாத நமச்சலையும், எரிச்சலையும் உண்டாக்கும், முக்கலும் காணும்.

3. *தட்டைக்கிருமி.* (Tape worm. Tænia Solium.) இந்தச் சாதி நாடாவைப்போல் தட்டையாய், துண்டுகள் ஒட்டிக்கொண்டிருப்பது போல் அகப்படும் நீளத்தில் 5-15-கசமிருக்கும்; சிறு குடலில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். சிரசு சிறுத்து, தட்டையாய் மத்தியில் சிறிய மூளை போல் அகப்படும். இது வயத்திலிருப்பது, ஒரு துண்டு வெளிக்கு வந்த பிறகுதான் நமக்குத தெரியவரும்; ஆகாரத்துக்கு சிலர் அலைவார்கள்; பலவீனம், அன்னசையத்தில் வேதனே, தேகம் உணங்கிப்போகுதல் ஆகிய இவைகளும் காணும்.

லக்ஷணங்கள்.—வயிற்றில் கிருமி இருந்தால், காணுகிற பிரதான குறிகளென்னவெனில், வயிற்றில் வேதனே, வயிறு விம்மல், மூக்கைச் சொரிஞ்சுகொள்ளுதல்; மலக்குடலிலும், குதத்திலும் தினவு, வாய் நாத்தம், பேதி, இராத்திரியில் பல் கடிக்குதல், அதிகபசி ஆகிய இவைகளாம். மலத்தோடு கிருமியாவது, கிருமித்துண்டாவது வெளிப்படுவதே நிச்சயக்குறி, அதற்கு முன்னுதாய் எந்தகுறியிலும் நம்பிக்கை வைக்கலாகாது. இக்கிருமிகள் வயிற்றிலிருந்து அதிகமாய் குத்திக்கொண்டிருந்தால் வலி, காக்கை வலி இவைகளும் காண்பதுண்டு.

சிகிச்சை.—நாகபூச்சிக்கும், தட்டைக்கிருமிக்கும், நம்மிடத்தில் அநேக மருந்துகளுண்டு. சான்டோனீன், கற்பூரதயிலம், மாதுளன்வேர்ப்பட்டை, கிருமிசத்துரு, பூனைக்காலிச்சுனே, புரசன்விதை, வேப்பெண்ணெய், மூக்குராட்டைவேர், மாசிபத்திரி, மாங்காய்பருப்பு, பப்பளிக்காய்பால் ஆகிய இவை முதலியவைகளாம். இவைகளில் ஒன்றை 2-3-நாள் கொடுத்து, பிறகு சிற்றுமணக்கெண்ணெயாவது, அல்லது எந்த பேதிக்காவது கொடுத்தால், கூண்டோடு கிருமிகள் ஒழிந்துவிடும். மறுபடியும் உண்டாகாமலிருக்க, நிலவேம்பு கஷாயத்தில் திராவகம்சேர்த்துக் கொடுக்கவேண்டியது; போஜனத்தில் உப்பு அதிகமாய் கூட்டிக்கொள்ளச் செய்யவேண்டியது; பதார்த்தங்களும் செவ்வையாக வெந்திருக்க வேண்டியது.

திமிர்பூச்சிக்கு குவாசியா, அல்லது நிலவேம்புகஷாயம், உப்பு, சுண்ணம்பு ஜலம், இரும்புதிராவகம், பெருங்காயம் இவைகளில் ஒன்றை ஆஸனத்தில் வஸ்திசெய்து, கிருமிகளை நாசப்படுத்தவேண்டியது. என்ன செய்த போதிலும், சிலருக்கு இது நீங்குவது பிரயாசை. கிருமிகள், தொலைந்ததென்று சிலநாள்வரையில் ரோகி உபத்திரவமில்லாம லிருப்பான்; அதின்பிறகு, அடிக்கடி கிருமிகள் ஜனித்து உபத்திரவித்துக்கொண்டே இருக்கும். முடிவில் ரோகி சலித்து எதையும் சாப்பிட மனதில்லாதவனுகிவிடுகிறுன். Remedies.—Sautonine; mucuna; pomegranate root bark; tonics; enema of salt, assafœtida, infusion of quassia, tincture of iron, lime water.

6-ம் அத்தியாயம்

யகிர்த்கண்டம், பிலீகம் இவைகளின் ரோகங்கள்.

DISEASES OF THE LIVER AND SPLEEN.

1. யகிர்த்கண்டதாபிதம்.

பிரதிபதங்கள்.—பக்கசூலே.

ஹிபைடிஸ், HEPATITIS.

வலதுபக்கம் மேல்வயிற்றிலிருக்கிற யகிர்த்கண்டமென்கிற கல்லீரலுக்கு தாபிதம் கண்டால், பக்கசூலே என்று சொல்லுவது வழக்கம். சீதளதேசத்தி லிருந்து, நமது உஷ்ணநாட்டில் வருகிற ஐரோப்பியர்களுக்கு இந்த வியாதி முக்கியமாய் காணுகின்றது. சாராயக்குடியினுல், இந்த வியாதி பிறக்கும், ஆனுல், சீழ்க்கொள்ளுகிற சாதியாய் இராது.

லக்ஷணங்கள்.—ஆரம்பத்தில் வலதுபக்கத்து மேல்வயிற்றில் வேதனே யெடுக்கும்; ஈரலே மூடிக்கொண்டிருக்கிற சவ்வின் தாபிதமாய் இருந்தால், அந்தவேதனே அதிகமாய் இருக்கும். வியாதி விருத்தியாக ஆக கடின சுரம் காணும், தேகம் சூடாயிருக்கும், தாகம் உண்டு, நீர் குறைந் திறங்கும்; சிலவேளே சுரமானது தோஷகுணத்தில் (typhoid) வருவதும் உண்டு; ஈரல் வீங்கியிருப்பதால், வேதனேயுள்ள இடம் புடைத்திருக்கும். தட்டிப்பார்த்தால் மந்தசப்தம் கேழ்விப்படும். அழுத்துவதினுலும், பெரு மூச்செடுப்பதினுலும், இருமலாலும் வேதனே அதிகப்படும்; இடதுபக்கமாய் படுக்க இடங்கொடாது; ஒவ்வொருவேளே கண்கள் மஞ்கள் நிறமாய்இருப்ப துண்டு, ஆனுல் மஞ்சகாமாலே ரோகமல்ல; கஷ்டசுவாசம், இருமல், வாந் தி, விக்கல் ஆகிய இவைகளும் உண்டு. ஊசியால் குத்துவதுபோல் அதிக நோவிருந்தால், ஈரலே மூடிக்கொண்டிருக்கிற சவ்வின் தாபிதமென்றும், நோவு மந்தமாயும், விரிந்துபோவதுபோலிருந்தால், ஈரலுக்கே தாபிதமென் றும், வைத்தியர் நினேப்பதுண்டு. ஈரலின் குவிந்த மேல்புறத்தில் வியாதி கண்டால், இருமல் பிரபலமாம் இருக்கும் ; குரைவான அடிபுறத்தில் வியா திகண்டால், வாந்தி முதலிய அன்னசையவிகல்பம் அதிகமாம் இருக்கும். ஈரல் வியாதியில் வலது தோளிலும், அவ்விடத்து காரை எலும்பிலும், பிடுங்கிற விதமாய் வேதனேயெடுக்கும், ஈரலின் இடது பாகத்தில் வியாதிகண்டால் இடதுதோளில் வேதனேயெடுக்கும். இந்தவியாதியில், ஈரலில் சீழ்க்கட்டி உண்டாகிறதுண்டு; அது உண்டானுல் குளிர்காணும், பூயசுரம்பிறக்கும, வேதனேயும உண்டு; ஈரல் ஸ்தானத்தில், பளுவாய் இருப்பதுபோல் தோற் றும், வாக்ஷீ இருமலும்காணும். ஈரல் ஸ்தானம்புடைத்து இருக்கும் ; பூய சுரம் அதிகப்பட, ரோகி இளேத்துவிடுவான், க்ஷீணமும் அதிகப்படும்; பேதி யாவது, சீதபேதியாவது, அனுசரிக்கும்.

இதில் காணுகிற தாபிதம் பொய்ரோகம் சவுக்கியபடுவதுண்டு ; அப்படி கரைந்துபோகாவிட்டால், ஈரலில் சீழ்க்கொள்ளும் ; ஈரல் அழிகிப்போவதும் உண்டு. ஈரலில் காணுகிற சீழ்க்கட்டி ஒவ்வொருவேளை மிகவும் பெருத்து அதிக சீழ்க்கொண்டிருக்கும், கட்டியிலிருக்கிற சீழ் வறண்டு, தற்செயலாம் சொஸ்தப்படுவதும் உண்டு. கட்டியான குடல் சவ்வில் உடைந்து சவ்வுக்குத் தாபிதம் கண்டு, ஆளைக்கொல்லும். சிலரில் பித்தக்குழலில் உடைந்து, துணைக்குக்ஷியில் சீழ் இறங்கிவிட்டதாயும் தெரியவருகின்றது. சீழ் ஈரலுக்கு வெளியில் வரும்படி இருந்தால்; அந்தவிடத்திலிருக்கிற சீரஸ் சவ்வானது தாபிதம் கொண்டு பசைவெளிப்பட்டு, அடுத்திருக்கிற உறுப்புகளோடு ஒட்டிக்கொள்ளும்; வயிற்றுச் சதைகளோடாவது, ஈரல் தாங்கியோடாது,அன்னசயத்தோடாவது குடலில்எவ்விடத்திலாவது ஒட்டிக்கொண்டு, சீழ் வெளிக்காவது, நுரையீரலிலாவது, குடலிலாவது,அன்னசயத்திலாவது வந்துவிடும். ஈரலில் காணுகிற தாபிதம் அழுகல் கொள்ளுவது அரிது.

சிகிச்சை.—ஈரலின் தாபிதத்தில் ரத்தமெடுத்து ரசம் உள்ளுக்குக் கொடுத்து, சிகிச்சை செய்வதைப்பார்க்கிலும், ரோகிக்கு பலம் வரும்படிச் செய்வதே நல்ல வழியென்று அநேகர் சொல்லுகிறார்கள். இந்தச் சிகிச்சையை இன்னமும் நமது நாட்டில் இங்கிலீஷ் வைத்தியர்கள் உபயோகிப்பதுண்டு. ஈரலின் தொழில் மந்தப்பட்டிருந்தால், அதை உச்சாகப்படுத்தவும், தாபிதம் கண்டிருந்தால், ரத்த ஓட்டத்தை மிதப்படுத்தி தொழிலைக் குறைக்கவும், ரசத்தைக் கொடுப்பதுண்டு. எதற்கும் பலத்த சிகிச்சையை நீக்கி சாந்தமானதை அனுசரிப்பதே உத்தமம். சீழ்கொண்டபோது, சாந்த சிகிச்சையே செய்யவேண்டியது. ஆரம்பத்தில் பேதிக்குக்கொடுத்தால், ஈரலில் ஓடுகிற ரத்தத்தைக் குறைக்கும், ரோகமும் சமனமடையும். ஈரலில் ஓடுகிற ரத்த ஓட்டத்தில் தடவிருந்து நாக்கின்மேல் மஞ்சள் நிறமான மாவுபடிந்து, மலமும் மூத்திரமும் குறைந்து, தேகம் ஒருவிதநிறமாகி இருந்தால், சூதமெழுகோடு, இபிகாக் சூரணத்தை சேர்த்தாவது, அல்லது டெராக்சிகம் என்னும் மருந்தையாவது உள்ளுக்குக்கொடுத்து, சொர்னபேதி திராவகத்தை வெளிக்குப்போகும்படி ஒரு வைத்தியர் சொல்லுகிறார். அபினியும் அடிக்கடி கொடுக்கும்படியாய் நேரிடும் போஜனத்தில் திட்டப்படுத்தி, ரோகியை படுத்தபடுக்கையில் வைக்கவேண்டியது.

சீழ்க்கட்டி, உண்டாகிவிட்டால், நல்ல ஊட்டமும், குயைனவோடு அயமும், சொர்னபேதி திராவகத்தோடு பார்க்கும் சேர்த்துக் கொடுக்க வேண்டியது. லகுவிரேசனங்கள் கொடுத்து மலத்தைக் கிரமத்தில் வைக்க வேண்டியது. ரோகிக்கிருக்கிற துற்பலத்துக்குத் தக்கபடி, ஒயின் சாராயம் கொடுக்கலாம். கொஞ்சநாள் சென்றபிறகு கட்டியின் வெளிப்புறம் வயிற்றுச் சதைகளோடு ஒட்டிக்கொண்டிருப்பது நமக்குச் செவ்வையாய்த் தெரிந்து, பரீக்ஷை ஊசியால் சீழிருப்பதைக் கண்டுகொண்டால், கத்தியாலாவது, அல்லது ட்ரோகார் என்னும் ஊசியினாலாவது குத்தி சீழை எடுத்துவிடவேண்டியது. தீர்க்க ஆலோசித்து, வெகு சாக்கிரதையாய் இந்தவேலையைச் செய்யாவிட்டால் பழிநேரிடும். கட்டி தற்செயலாய் உடையும்படி விட்டுவிடுவதே எதற்கும் நல்லதென்று ஒரு சிறந்த வைத்தியர் சொல்லுகிறார். Remedies —Purgatives; blue pill with ipecacuanha; taraxacum; opium. Hepatic abscess, nourishing food, tonics; (quinine, iron, nitro-muriatic aicd, bark) rhubarb; wine; open it with the knife or allow it to burst of itself.

2 மஞ்சள்காமாலை.

பிரதிபதங்கள்.—பித்தப்பாண்டு.

ஜான்டீஸ், JAUNDICE ; இக்டரஸ், ICTERUS.

இதைத் தனிரோகமென்று சொல்வதைப்பார்க்கிலும், ஒரு ரோகத்தின் குறியென்று சொல்வதே நல்லது.

காரணங்கள்.—மஞ்சள்காமாலை பிறக்கிறவிதம் எவ்வித மெனில், (1) பித்தம் குடலுக்கு வந்துவிழுவது தடைபட்டு, பித்தப்பையில் தானே சேர்ந்திருக்க, அது கிரகிக்கப்பட்டு ரத்தத்தில்போய்க் கலந்துவிடும். (2) ஈரலின் தொழில் கெட்டு, பித்தநீரைச் சுரப்பிக்காமல் போகுவதால், பித்தம், வெளிப்படாமல், ரத்தத்தில்தானே நின்றுவிடுகின்றது. முதல்சொன்ன கருத்துக்கு ஆக்ஷேபனை யொன்றுமில்லை ; அதுதான் பிரதான காரணமென்று சொல்லலாம் ; ஆனால், இரண்டாவது கருத்தைக்குறித்து அநேக ஆக்ஷேபனைகளுண்டு ; பித்தத்தில் கல்லுண்டாகி, பித்தக்குழலில் வந்து அடைத்துக்கொண்டு, பித்தம் குடலில் விழாமற்செய்வதே மஞ்சள் காமாலைக்கு முக்கிய காரணம். பித்தநீர் இறுகி பித்தக்கல் லுண்டாகின்றது. 3000, கல்லுகள் ஒரேபித்தப்பையில் இருந்ததாயும் தெரியவருகின்றது. நல்ல போஜனம் செய்து, உளுக்கார்ந்துகொண்டு அலுவலைப்பார்க்கும் தொழிலையுடையவர்களுக்கு, இந்த கல்லுகள் உண்டாகும். கல்லு அல்லது கல்லுகள், டியோடீனத்தில் வந்து விழுந்தபிறகு, மலத்தோடு வெளிப்பட்டுவிடும் ; தேகநிறமும் மாறிவிடும். பித்தக்குழல் சுருங்கிவிடுதல், மலபந்தத்தால் குடல் நிறைந்து, பித்தக்குழலை அழுத்திக்கொள்ளல் ஆகிய இவைகளும், பித்தப்பாண்டுவுக்குக் காரணங்களாகும்.

லக்ஷணங்கள்.—சருமம், கண்கள், நகம், மூத்திரம் ஆகிய இவைகள் மஞ்சள்நிறமாய் இருக்கும் ; துணியில்பட்ட மூத்திரகரையும், பசுமை நிறமாய் இருக்கும் ; மலம் வெளுத்து களிமண்ணுபோல் இருக்கும், ஒவ்வொருவேளை தேகத்தில் நமைச்சலும் காணும் ; ஆயாசம், உறக்கம், மயக்கம், கோபகுணம், வாய்கசப்பு, மெதுவுற்றநாடி ஆகிய இவைகளும் உண்டு ; கொழுப்புள்ளவைகளைத் தவிர, மற்றவைகளை தகிப்பிக்கிற சக்தி எப்போதும்போ விருக்கும். கார்னியாவும், கண்ணுக்குள்ளிருக்கிற நீர்களும் மஞ்சள் நிறமாகிவிடுவதும் உண்டு ; அப்போது எல்லா வஸ்துவுகளும் கண்களுக்கு மஞ்சளாய்த் தோற்றும் ரோகம் நாள்பட்டால், மயக்கம், விகாரம் முதலிய மூளையின் விகல்பம் காணலாம்; போஷணை குறைந்து, பலவீனமும் தேகமெலிவும் காணும் ; ரத்தபீனசம், ஈறுவிருந்து ரத்தம் வடிதல் ஆகிய இவைகளும் காண்பதுண்டு. பித்தக்கல் அடைத்திருந்தால், அதிக வேதனைபிறக்கும் ; வேதனை விட்டுவிட்டு காணும் ; வாந்தியும் விக்கலும் எடுக்கும். கல்லானது பித்தக்குழலைவிட்டு பிறியாதிருந்தால், பிராணன் போகும்படியான தளர்ச்சிகாணும்.

சிகிச்சை.—இந்த வியாதியை விளைவித்த காரணத்தை அனுசரித்து, சிகிச்சை செய்யவேண்டியது. பித்தநீர்வருகிற வழி தடைபட்டு கண்டால், பக்கத்துக்குப் போஸ்தக்காய்போட்டுக் காச்சின வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, சுடசுட போல்டீஸ் கட்டி, உப்பு பேதிக்குக்கொடுத்து, பத்தியத்தில் வைக்கவேண்டியது. கல்லு வெளிப்படும்போது, சமனகாரி மருந்

துகள் தேவையிருக்கும். அபினி கொடுக்கவேண்டியதாய் இருந்தால், வெகு சாக்கிரதையாய் கொடுக்கவேண்டியது. வேதனையால் அபினியின் குணம் தெரியாமல், அதிகமாய் கொடுக்கும்படி சம்பவித்து, ஒருவேளை கெடுதி நேரிடும். அதற்கு பதில் குளோரோபாரத்தை முகரவைக்கலாம் மற்றொரு சாதிக்குச் சிகிச்சை செய்யும்போது, நாம் இருட்டிலிருந்து வேலைசெய்வது போலிருக்கிறபடியால், உப்பு பேதிகள், சுவேதகாரிகள், வெந்நீர் ஸ்நானம், படுக்கை, பத்தியபோஜனம் ஆகிய இவைகளைக்கொண்டு வியாதியை கண்டிக்கவேண்டியது.—கீழாநெல்லி, நிலமாரான், காரைகொழுந்து இவைகளில் ஒன்றை உள்ளுக்குக் கொடுத்து நாய்வேளை, எழிலைப்பாலை இவைகளில் ரசத்தை நசியமிடுவது நாட்டுவழக்கம். Remedies.—Fomentations poultices; warm baths ; saline purgatives; &c.

3 சுரக்கட்டி

ஹைபர்ட்ரோபி ஆவ் திஸ்பிளீன், HYPERTROPHY OF THE SPLEEN.

பிலீகம் அநேக ரோகங்களுக்கு உட்பட்டிருக்கின்றது ; ரத்தம் சேர்ந்துக்கொள்ளல், தாபிதம், மிருதுவாகுதல், சீழ்க்கொள்ளல், அழுகிப்போகுதல் ஆகிய இவைகளாம் ; பிலீகத்துக்குள் குழகுழப்பான நீர் அடங்கிய பைகளும் உண்டாகிறதுண்டு. பிலீகம் பெருத்துவிடுகிறது வழக்கம்.

இடதுபக்கம் விலா எலும்பு கீழாகிய பிலீகஸ்தானத்திலிருக்கிற பிலீகமானது பருத்துவிடுகிற வியாதிக்கு, சுரக்கட்டியென்று பேர். அந்த ஸ்தானத்தை விரல்களால் அழுத்திப்பார்த்தால், கட்டி விரல்களுக்ககப்படும். கட்டியின் பிரமாணத்துக்குத் தக்கபடி, வயிறு விம்மி இருக்கும். குளிர்காச்சல் அடிக்கடி காண்பவர்களுக்கு, இந்த ரோகம் தொடர்வது வழக்கம். இந்த ரோகமுடையவர்களுக்கு, தேகம் ஒருவிதமான அசவுக்கியத்தோடிருக்கும். கண்களில் பிரகாசமிராது ; ஈறுகளும், வாயும் வெளுத்திருக்கும் ; தேகத்திலிருந்து ரத்தவடிதலும் காண்பதுண்டு ; அக்னிமந்தம், மலபந்தம், மலத்தில் துர்வாஸனை, க்ஷீணம், அற்பத்துக்கெல்லாம் அழிரணம் காணுதல் ஆகிய இவைகளும் இருக்கும். வியாதி நாள்பட்டிருந்தால், நீரேத்தமும் காண்பதுண்டு.

சிகிச்சை.—இந்த வியாதி குளிர்சுரத்தின்மேல் கண்டால், பேதிமருந்துகளும், குவைனும், பார்க்கும் கொடுக்கவேண்டியது. வேறுகாரணங்களால் பிறந்தால் அயம், புரோமைட் ஆவ் பொடாசியம் இவைகளில் ஒன்று கொடுக்கலாம். ரசத்தையும், ரத்தமெடுப்பதையும் கனவிலும் நினைக்கலாகாது. எப்போதும் நல்ல ஊட்டம் கொடுத்து, தேகத்தை ஆதரித்து, சந்தோஷ வியாபாரத்தில் வைக்கவேண்டியது. நல்ல இடமாய்ப் பார்த்து, ரோகி இருப்பதிலும் சுகுணம் பிறக்கும்.

7-ம் அத்தியாயம்

குடல்சவ்வுக்குக் காணுகிற வியாதிகள்

DISEASES OF THE PERITONEUM, OVARIAN DROPSY, &C.

1.—தீக்ஷண குடல் சவ்வுதாபிதம்

அகியூட் பெரிடோனைடிஸ், ACUTE PERITONITIS.

லக்ஷணங்கள்.—இந்தவியாதியில் முதல் காண்பது நோய். அது ஓரிடத்திலிருந்து, பிறகு வயிறெங்கும் வியாபிக்கும், அழுத்துவதில் வேதனை

அதிகப்படும்; தீக்ஷண சுரமும் அனுசரித்திருக்கும். சுரம் காண்பதற்குமுன், குளிரும் நடுக்கலும், ஆயாசமும், காண்பதுண்டு; சிலரில் இவைகளொன்றும் காணுமல் திடீலென்று சுரமும், அடிவயிற்று மத்தியிலாவது, அல்லது பக்கஙளிலாவது வேதனையும் காணும். இதில் காணுகிற வேதனை வெகு பிரபலமாய் இருக்கும், தளர்ச்சியையும் உண்டாக்கும், வயிற்றுச்சதைகள் கொஞ்சம் அசைந்தாலும் சரி, அல்லது போர்வை முதலிய துணி சமேதம்பட்டாலும் சரி, வேதனை அதிகமாகும். ரோகி மல்லாக்கப்படுத்து முழங்காலை முடக்கிக்கொண்டு அசையாமலிருப்பான். வயிறு வீர்த்து, சூடாய், மத்தளம்போல் சப்திக்கும்; மலம் இறுகிக்கொள்ளும், குமட்டலும் வாந்தியும் காணும்; தேகம் வரண்டு சூடாயிருக்கும்; நாடி மெதுவுற்று, வேகமாய் ஓடும்; சுவாசம் தீவிரமாய் நடக்கும், விக்கலும் காண்பதுண்டு; நாக்கின் மேல் மாவுபடிந்திருக்கும். முகம் ஏக்கமுற்று, உபத்திரப்படுகிற தன்மையாய் இருக்கும். சிலநாள் சென்றபிறகு, வயிற்றின் மத்தளசப்தம் மாறி, நீர் உண்டாகுவதால் கொஞ்சம் விம்மி இருப்பதுபோல் காணப்படும். மரணகாலம் சம்பவிக்கும்போது, வயிறு அதிகமாய் பெருக்கும், நாடி க்ஷீணித்து வேகமாய் நடக்கும்; பிரேதமுகம் காணப்படும்; தேகம் குளிர்ந்து பிசுபிசுப்பான வியர்வை காணும்; க்ஷீணத்தினுல், வியாதிகண்ட 8-10-ம் நாளில் மரணம் சம்பவிக்கும்.

காரணங்கள்.—இந்த ரோகத்துக்குக் காரணங்கள் அநேகமுண்டு; ஈரத்தோடு கூடிய சீதளம், அடிபடுதல், அன்னுசயத்திலாவது, குடலிலாவது துவாரம் விழுதல், ஈரலில் காணுகிற சீழ்க்கட்டி உடைந்து சீழ்சவ்வில் இறங்குதல், குடல்தாபிதம், சினப்பையின் வியாதி, ஜக்கி முதலிய வியாதிகளில் ரத்தம் கெட்டுப்போகுதல் ஆகிய இவைகளாம்.

சிகிச்சை.—இதற்கு முதல் போஜனத்தைக் கிரமப்படுத்த வேண்டியது; நீர் கலந்த பால், அரோரூட், மாம்சரசம், இப்பேர்ப்பட்டவைகளைக் கொடுக்கலாம்; பார்லி அரிசிகஞ்சி, நொய்க்கஞ்சு, தேயிலைத்தண்ணீர் இவைகளைத் தாராளமாய் குடிக்கச்செய்யலாம்; இதற்குக் கொடுக்க அபினியே பிரதான மருந்து; 1-கிறேன்வீதம் 3-4-மணிக்கொருதடவை, நோய் சுத்தமாய் இல்லாமல் போகிறவரையில் கொடுக்கவேண்டியது; இதுவே பிராணனைக் காப்பாற்றப்பட்டதென்று ஒருவர் கண்டிருக்கிறுர். வயிற்றுக்கு, போஸ்தக்காய் ஒத்திடம் அடிக்கடி கொடுத்து, ஊமத்தன் இலையைவதக்கி மேலே போட்டு வைக்கலாம்; நாளத்தைக்குத்தி ரத்தமெடுத்து, அட்டைவிட்டு, வாந்தி உப்பும், ரசமும், கொடுத்து, உபத்திரவஞ்செய்கிற சிகிச்சையை இன்னம் சிலர் அபேக்ஷிக்கிறுர்கள். வயிற்றுக்கு லின்ஸீட் போல்டீஸ் போட்டு வைப்பதிலும் சவுக்கியமுண்டு. பேதிக்குக்கொடுப்பதில் கெடுதிநேரிடும். ஆகையால் ஆஸனவஸ்தி செய்து அடிவயிற்றிலிருக்கிற மலத்தை வெளிப்படுத்திவிடலாம். க்ஷீணம் உண்டான உடனே பிராந்தி, அம்மோனிய, மாம்சரசம் முதலிய நல்ல ஊட்டங்கொடுத்து ஆதரிக்காவிட்டால், அதிக க்ஷீணம் பிறந்து இறந்துவிடுவான். Remedies.—Opium; fomentations; extract of belladonna; enema, brandy, ammonia, support.

தீர்க்க குடல்சவ்வுதாபிதம்

கிரானிக் பெரிடோனைடிஸ், CHRONIC PERITONITIS.

இந்த சாதிரோகம், உக்கிரவியாதியின் காரணத்தினுலாவது, அல்லது தற்செயலாயாவது பிறக்கும். சிறு குழந்தைகளுக்குக் காண்பது (Tubercular peritonitis) வழக்கம்.

லக்ஷணங்கள்.—இந்த வியாதியைக் கண்டுகொள்ளுவது கொஞ்சம் பிரயாசை; வயிற்றுவேதனை வெகு அற்பமாயிருக்கும்; அடிக்கடி, வாயுவால் வயிற்றுவலியும் காணும்; சிலரில்சுரமும், பேதியும் இருக்கும்; வியாதி கொஞ்சநாள் சிகிச்சைக் கடங்கியிருந்து, பிறகு காணும்; அப்போது வயிற்றில் வேதனைபிறக்கும்; சிகிச்சைக்கு வசப்படாதபேதியும், குமட்டலும் காணும்; தேக ஒணக்கலும், பித்தபாண்டுவின் சேஷ்டையும் வெகு சீக்கிரத்தில் உண்டாகும். கொஞ்சநாட்சென்றால், வயிற்றில் நீர்சேர்ந்து, பெருத்து, தத்தளிப்புகண்டு கொள்ளப்படும். டியுடர்க்கியுலர் பெரிடொனைடிஸ் என்னும் ஜாதியோடு மிசென்டிரிக் கிளாண்டிஸ் என்னும் கிரந்திகளும், க்ஷயமும், வேறு ரோகங்களும் அனுசரிப்பதுண்டு.

சிகிச்சை.—இதற்குச் சிகிச்சை செய்யும்போது, முதல், பேதியிருந்தால் அதை நிறுத்த மருந்துகளும், லகுவான போஜனமும், போஷாப்புக்குடைய பதார்த்தங்களாகிய பால், முட்டை, மாம்சரசம், இவைகளும் கொடுக்க வேண்டியது. வயிற்றுக்கு பிளிஸ்டர் போடலாம், அல்லது ஐயோடைன் என்னும் மருந்தைத் தடவலாம். உள்ளுக்கு மீன்நெய், ஐயோடைன், ஐயோடைட் ஆவ ஐரன், இப்பேர்பட்டவைகளை கொடுத்தால் சவுக்கியம் உண்டாகும். இந்த வியாதி சிகிச்சைக்குட்படுவது அபூர்வம். Remedies.—Astringent, nutritious diet, cod-liver oil, iodide of iron. Externally, iodine paint or ointment.

2. மகோதரம்

பிரதிபதங்கள்.—பெருவயிறு

டராப்ஸி ஆவ் பெல்லி, DROPSY OF BELLY.

வயிற்றில் பெரிடினியம் என்கிற குடல்சவ்வில் நீர்சேர்ந்து, வயிறு பெருத்துவிடுகிற ரோகத்துக்கு, மகோதரம் என்று பெயர். இந்த துஷ்ட ரோகம், ஈரல்வியாதிகள், மூத்திரகுண்டிக்காய் வியாதி, இருதயவியாதி, பிலீகவியாதி குடல்சவ்வுவியாதி இவைமுதலிய இன்னம் அற்ப ரோகங்களாலும் பிறக்கும்; அப்படி பிறந்தபோதிலும் ஈரல், மூத்திராசயம் ஆகிய இவைகளின் வியாதிகளாலேயே, இது அடிக்கடி பிறக்கின்றது.

லக்ஷணங்கள்.—இந்த வியாதியுடைய ரோகியை பார்த்தவுடனே, ரோகம் இன்னதென்று தெரிந்துகொள்ளலாம்; சரீர ஊர்த்தமுகம் சுஷ்கித்து, முகம் ஆவலோடு வாடி, வயிறு மிகவும் பெருத்து, தோல் மினுமினிப்பாய் நாளங்களெல்லாம் மேல்பட்டிருக்கும்; மகோதரத்தோடு நீர்க்கோவையும் காண்பதுண்டு; கால்களில் நீர் சுரப்பது வழக்கமானபோதிலும், மூத்திராசய வியாதியில், முகத்திலும் கைகளிலும் நீர் காண்பதுண்டு; நீர் உள்ள விடத்தில் அழுத்தினால் பள்ளம் விழும்; மூத்திரம் குறைந்திறங்கும், அதில் உப்புகள் மெத்தவிருக்கும்; ஈரல் வியாதியால் இந்தரோகம் பிறந்தால், மூத்திரத்தில் பித்தமும், மூத்திரகுண்டிக்காய் வியாதியால் பிறந்தால் ஆல்பியூமென் என்கிற பசையும் இருக்கும்.

சாத்திய அசாத்தியக்குறிகள்.—இந்த ரோகம், உறுப்புகளின் வியாதியால் கண்டால், அசாத்தியமாகவே முடியும்; குளிர்ச்சியால் மூத்திரகுண்டிக்காயில் அதிக ரத்தம் சேர்ந்தாவது, இருதயநடையில் வித்திராசமுண்டாயாவது, அல்லது பித்தப்பாண்டுவினாலாவது கண்டால், சாத்தியத்துக்கு வந்துவிடும்.

ரோகநிதானம்.—உள்ளே சேர்ந்திருக்கிற நீருக்குத் தக்கபடி வயிறு பெருக்கும்; வயிறு எங்கும் சமனாய் இருக்கும்; வயிற்றின் ஒரு பக்கமாய் ஒரு கையைவைத்து, மற்றொரு கைவிரல்களால், அதற்கெதிராய் தட்டினால், ஜலத்தின் தத்தளிப்பு (பிளக்டியுஎஷன், Fluctuation) தட்டுப்படும்; மேல் வயிற்றைத் தட்டிப்பார்த்தால், அவ்விடத்தில் குடல் மிதந்துகொண் டிருப்பதால் மத்தளம்போல் சப்திக்கும். மகோதரத்தில் இருக்கிற நீர், பிரமாணத்தில் வித்தியாசப்படும்; சிலரில், அதிகமாயும், சிலரில் குறைந்துமிருக்கும்; சுமார் 10-படி ஜலம் இருந்ததும் கண்டதுண்டு.

சிகிச்சை.—இந்தரோகத்தில் சேருகிற நீர் வற்றும்படிச் செய்வதே நமது முக்கிய சிகிச்சை; அதற்கு மூத்திரவர்த்தனி, விரேசனி மருந்துகளும், ரசமும் வெகு ஜாக்கிரதையாய் உபயோகிக்கவேண்டியது, நவக்ஷாரம் தனியாயாவது, டொராக்சிகம் என்னும் மருந்தோடு கூட்டியாவது கொடுப்பது ஒரு தேசவழக்கம். மூத்திர குண்டிக்காய் வியாதியால் இந்த ரோகம் பிறந்தால், மூத்திரபேதி மருந்துகளை உபயோகிக்கவே லாகாது; பேதி மருந்துகள் கொடுத்தும், வெந்நீர் வேதுபிடித்தும், ரோகத்தைக் கண்டிக்க வேண்டியது.

வயிறு மெத்த வீர்த்து, வேதனை பிரபலப்பட்டிருந்தால், வயிற்றைக் குத்தி நீரை வெளிப்படுத்தி விடவேண்டியது (டாப்பிங், Tapping). இதைச் செய்கிற விதமாவது—ரோகியைக் கட்டில் ஓரத்தில் இடதுபக்கமாய்படுக்க வைத்து நாபி, மர்மஸ்தான எலும்பு இவைகளுக்கு மத்தியமாய்ட்ரோகார் (Trocar) என்னும் சத்திர ஊசியால்குத்தி, நீரைவெளிப்படுத்தி விடவேண்டியது. ஆளைப் படுக்கவைப்பதில் அநேக காரியங்களுக்கு நல்லது; ரோகிக்கு சுகமாய் இருப்பதும் அன்றியில், வயிற்றை அழுத்தவேண்டிய நிமித்தமிராது, மூர்ச்சையும் உண்டாகமாட்டாது. சஸ்திரம் செய்த பிறகு, 2-3-வாரம்வரையில் வயிற்றைத் துணியால் அழுத்திக்கட்டி வைக்க வேண்டியது. உள்ளுக்கு, ஐயோடைட் ஆவ் பொடாசியமும், ரஸமருந்துகளும் கொடுப்பதில் சுகுணமுண்டு. மறுபடியும் நீர்சுரக்காதிருந்தால், ரோகிக்கு பயமில்லை; மேலும்மேலும் நீர் சுரக்குமாகில், இந்த ரோகம் அசாத்தியமாகவே முடியும். நீர்முள்ளி முதலிய மூத்திர பேதிகளைக் கொடுப்பது நாட்டுச்சிகிச்சை. Remedies.—Purgatives, diureties, vapour baths, iodide of potassium—tapping.

3. கணரோகம்

பிரதிபதங்கள்.—உள்ளுருக்கி, கணை, உடலுருக்கி பாலதோஷம்; மணிக்குடல்ரோகம்.

டேபீஸ் மிஸென்டிரிகா, TABES MESENTERICA.

மணிக்குடலிலிருக்கிற கோளங்களின் வியாதிக்கு கணம் என்று பேர். இதனை உதரக்ஷயம், (abdominal phthisis) என்னும் சொல்லலாம். மணிக்குடலின் கோளங்களில் டியூபர்கில்ஸ் (tupercles) என்னும் கிரந்தி அணுக்கள் ஜனித்து, ரூபத்தைமாற்றி அவைகளைக் கெடுத்துவிடுகின்றன; அப்போது அவைகள்வழியாய்ப் போகிற ரசவாகினிகளை அடைத்துக்கொள்ளுவதால் அன்னரசம் போகத் தடைபடும். கோளங்கள் பலவிதமாய் பெருத்து சிலரில் கல்லுபோலும், சிலரில் மிருதுவாயும், சிலரில் சுண்ணும்புக் கல்லொப்பாயும் ஆகிவிடும். இந்த வியாதி பாலகருக்கும், சிறு குழந்தைகளுக்கும், முக்கியமாய் அனுசரிக்கின்றது.

லக்ஷணங்கள்.—வயிற்றில் வேதனையிருப்பதால், குழந்தைகால்களை முடக்கி வயிற்றோடணைத்துக் கொண்டிருக்கும்; உதடுகள் சிவந்து, வாய் ஓரங்களில் ரணம் உண்டாயிருக்கும்; உதடெல்லாம் வெடிப்பு காண்பதும் உண்டு; மலக்கிரம மிராது, பேதி காண்பது வழக்கம்; மலம் கெட்டு துர் வாசனையாய் இருக்கும்; வயிறு பெருத்து பிதுவாய் இருக்கும்; அன்னரசத் துக்கு தடையுண்டாகுவதால், சரீரம் கிரமத்தில் ஒணங்கிப்போகும்; தேகம் வெளுத்து, க்ஷீணம் பிரபலமாகும்; க்ஷயக்குறிகளும் தொடர்வதுண்டு; இந்தவியாதியால் குழந்தை மெத்த மெலிந்து இறந்துவிடும். கோளங் களுக்கு மெத்த கெடுதி சம்பவிப்பதற்குமுன் தகுதியான சிகிச்சைசெய்தால், ரோகம் ஒருவேளை வசத்துக்கு வருவதும் உண்டு. ஆனால் மெதுவில் சவுக் கியமடையும்; ரோகம் மறுபடியும் அனுசரிக்காமல் ரோகியை வெகு சாக்கிர தையாய் பார்த்துக்கொண்டு வரவேண்டியது.

சிகிச்சை.—குழந்தையின் வயது, தேகபலம் இவைகளுக்குத் தக்கபடி லகுவான ஊட்டம் கொடுக்கவேண்டியது; கழுதைப்பால், ஜலம்விட்டு கலந்தபால், கஞ்சியினங்கள், ஆகிய இவைகள் கொடுக்க உதவும். திராக்ஷ ரசசாராயம், மாமஸரசம் இவைகளும் உபயோகப்படும். மீன் நெய்யோடு, தாருட்டியகாரி மருந்துகளும், ஐயோடைட் ஆவ் பொடாசியம், அம்மோ னியா ஸைட்ரேட் ஆவ் ஐரன், என்னும் உப்பினங்களும் சேர்த்துக் கொடுத்தால், அநேகருக்கு சவுக்கியம் உண்டாகும். கிரே பவுடருடன், டோவர்ஸ் பவுடராவது, அல்லது அபினிகலந்த சீமைச்சண்ணம்பு கலவைச் சூரணமாவது சேர்த்தும் கொடுக்கலாம். பேதியை நிறுத்த துவர்ப்பு மருந்து களும், வயிற்றுவேதனையைநிறுத்த அபினி பூசுத்தயிலமும் உபயோகிக்க லாம். வயிற்றுக்குக் கம்பளித்துணியைச் சுற்றிவைப்பதில், சுகுணமுண்டு. வியாதி ஆரம்பத்தில் தானே சமுத்திரதீரத்தில்போய் இருக்கும்படி திட்டப் படுத்தினால் சவுக்கியம் பிறவாமல் போகமாட்டாது. Remlddies --Nourishing food, cod-liver oil ; iodide of potassium ; iron; grey powder; Dover's powder ; compond chalk powder with opium; astring.nts; opiate liniments; change of air

8-ம் அத்தியாயம்

மூத்திரகுண்டிக்காய், மூத்திரப்பை இவைகளின் வியாதிகள்

DISEASES OF THE KIDNEYS AND BLADDER

1 மூத்திரகுண்டிக்காய் தாபிதம்

நீப்ரைடிஸ், NEPHRITIS, இன்பிளமேஷன் அவ்தி கிட்னி,

INFLAMMATION OF THE KIDNEY.

இந்தவியாதி நீரேதுவையயாவது, அல்லது குளிர், கல் உற்பத்தி, அடிபடுதல் ஆகிய இவைகளாலும் எரிவண்டு கலந்த மருந்துகள், கர்ப்பூரத் தயிலம் இவைகளைச் சாப்பிடுவதினாலும் உண்டாகும். இந்த வியாதி காண் பது அபூர்வம். மற்ற இடங்களில் காணுகிற தாபிதம்போல், இதில் காணு கிற தாபிதமும், கரைந்தாவது போகும், அல்லது சீழாவது கொள்ளும்; சீழ்க்கொண்டால், சிறிதும் பெரிதுமாகிய சீழ்க்கட்டிகள் உண்டாகும்.

லக்ஷணங்கள்.—இந்த வியாதியில், இடுப்பி முக்கியமாய் மூத்திர குண்டிக்காய் ஸ்தானத்தில் வேதனை இருக்கும்: வேதனை மூத்திரக் குழல் வழியாக இறங்கி, மூத்திரப்பையின் கழுத்துக்கு வரும், அல்லது கவுட்டி, பீஜப்பை, பீஜம் இவைகளில் இறங்கும்; அழுத்துவதினாலும், நடப்பதினாலும் வேதனை அதிகப்படும்; தொடையில் திமிர்காண்பதும் உண்டு; புருஷாளில் பீஜம் மேலுக்கேறி, மூத்திரம் அடிக்கடி இறங்கும். மூத்திரகுண்டிக்காயில் கல்லுண்டாகி, மூத்திர குழல்வழியாய் இறங்கி, மூத்திரப்பையில் வந்து விழும்போது காணுகிற நரம்பு வேதனையை, தாபிதவேதனையென்று எண்ணி அபத்தம் நேரிடலாகாது. இந்தச் சர்க்கராமூத்திர சூலை ரோகத்தில் (nephralgia) வேதனை வெகு உக்கிரமாய் இருக்கும். ஆனால், கொஞ்சநேரமிருந்து போய்விடும். மேல்கண்ட குறிகளோடு சுரம், குமட்டல், வாந்தி, தாகம் ஆகிய இவைகளும் காணலாம்; நாடி திடமாய் பெருத்து வேகமாய் நடக்கும்; மலம் பிடித்தமாகும்; வயிறு மத்தளம்போல் சப்திக்கும்; மூத்திரம் குறைந்து சிவந்து, அடிக்கடி இறங்கும்; ரத்தமாவது, சீழாவது ஒவ்வொருவேளை கலந்திருப்பதுண்டு.

சிகிச்சை.—இடுப்புக்கு வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, லகுவிரேசனங்கள் பிரயோகித்து, வேதுபிடிப்பித்து, டோவர்ஸ் பவுடர் முதலிய சுவேதகாரிகளை கொடுப்பிக்கவேண்டியது. இந்த ரோகத்தில், மூத்திர குண்டிக்காயின் தொழிலை சருமம் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்து, மூத்திரசுரப்பைக் குறைக்கவேண்டியது.

2. சர்க்கராஹஸ்மரிரோகம்

பிரதிபதங்கள்.—ஹஸ்மரிரோகம், சிகதாமூத்திரம்;

மூத்திரத்தில் மணல்விழுதல்.

கிராவெல், GRAVEL.

மூத்திரத்தில், நறநறவென்கிற பொடியாவது, மணலாவது, அல்லது சிறிய கல்லாவது வந்து விழுவதற்கு, சர்க்கராஹஸ்மரி என்றுபேர்.

இப்படிவந்து விழும்போது, குண்டிக்காய், மூத்திரக்குழல், மூத்திரப்பை, நீர்தாரை ஆகிய இவ்விடங்களில் எரிச்சலும் வேதனையும் இருக்கும். சிறிய கல்லானது மூத்திரக்குழல் வழியாய் இறங்கிவரும்போது, சகிக்கக்கூடாத வேதனையெடுக்கும்; மூத்திரப்பையில் கல்லிறங்கிவிட்டால், சகலவேதனையும் நீக்கி ரோகிக்கு வெகு சந்தோஷம் பிறக்கும். கல்லானது, மணல் போலாவது, நறநறவென்கிற மாவுபோலாவது, இருந்துமூத்திரத்தில் இறங்கினால், உபத்திரவமிராது.

சர்க்கராஹஸ்மரியில், சதாரணமாய்க் காணுகிற உப்புகள், யூரேட்ஸ் ஆவ் லைம், பொடாஷ் ஆண்ட் ஸோடா, கொஞ்சம் அம்மோனியாவும் இருக்கும். அதை லிதேட் அல்லது யூரட் ஆவ் அம்மோனியா என்று சொல்லப்படும், (the urates of lime, potash, soda, with small quantities of ammonia, called lithate or urate of ammonia.) இரண்டாவது இன உப்புக்கு, லிதிக் அல்லது யூரிக் ஆஸிட் அல்லது ரெட்சாண்ட் (lithic or uric acid or red sand) என்றுபேர். ட்ரிபில்பாஸ்பேட் ஆவ் அம்மோனியா, அண்ட் மாக்நீக்ஷயா (triple phosphate of ammonia and magnesia) என்னும்

எரு சாதி அஸ்மரியும்—ஆக்ஸலேட் ஆவ் லைம் (oxalate of lime) ஸிஸ்டிக் ஆக்ஸைட் (cystic oxide) என்னும் வேறு சில ஹஸ்மரிகளும் உண்டு.

மூத்திரக்கல்லில் பலசாதி உப்புகள் அகப்படும். யூரேட் ஆவ் ஸோடா, அம்மோனியா, லைம், (urate of soda, of amonia, and lime—யூரிக் ஆசிட் (uric acid)—ஸிஸ்டிக் ஆக்ஸைட் அல்லது ஸிஸ்டீன், (cystic oxide or cystine.)—கார்பொனேட் ஆவ் லைம், (corbonate cf lime)—ஆக்ஸெலேட் ஆவ் லைம், (oxalate of lime)—ட்ரிப்பில் பாஸ்பேட் ஆவ் அம்மோனியா அண்ட் மாக்னீசியா (triple phosphate of amonia and magnesia)—பாஸ்பேட் ஆவ் லைம் (phosphate ofl ime)—ஸிலிக, (silica) ஆகிய இவைகளாம்.

சிகிச்சை.—இந்த ரோகத்தில், மூத்திரத்தைப் பரீக்ஷித்து, அஸ்மரியின் சாதியைக் கண்டறிந்து, பிறகு சிகிச்சை செய்யவேண்டியது. லிதி ஆசி என்னும் உப்பை ஜனிப்பிக்கிற தேககூறிருந்தால், மரக்கறி இனம் சாப்பிடச் செய்து, சாராய இனங்களை நீக்கி, ஜலம் அதிகமாய் குடிக்கச்செய்து, மெது வாய் உலாத்திக்கொண்டுவரச்செய்து, மலமும், கிரமத்திலிறங்கும்படிச் செய்யவேண்டியது. சோடா, மாக்னீஷியா இவைகளைக் கொடுப்பதைப் பார்க்கிலும், பைகார்பொனேட் ஆவ் பொடாஷ், (Bicarbonate of potash) என்னும் உப்பையாவது, லைகர்பொடாசி, (Liquor potassæ) என்னும் மருந்தையாவது தாராளமாய்க் கொடுக்கலாம், மெத்த நன்மைசெய்யும். லைகர் பொடாஸி என்னும் மருந்தில், $\frac{1}{2}$-திராம் வீதம், 2-அவுன்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம்.

பாஸ்பேட்ஸ் என்னும் உப்பை ஜனிப்பிக்கிற தேககூறிருந்தால், சாதாரணபோஜனம் செய்யச்சொல்லி, கொஞ்சம் ஒயின் சாராயம் குடிக்கச்செய்யலாம். பார்க் பவுடர், அயம், சொர்னபேதி திராவகம் ஆகிய இவைகளைக் கொடுத்துக்கொண்டுவந்தால், சவுக்கியமுண்டாகும். அபினியும்கொடுக்கலாம்; செய்யும் அலுவலிலிருந்து விடுதலைப்பெற்று கொஞ்சநாள் உல்லாசமாய் இருக்கச் செய்யவேண்டியது.

அக்ஸாலிக் ஆஸிட் என்னும் உப்பை ஜனிப்பிக்கிற தேகப்ரகிருதி இருந்தால், மதுர பதார்த்தங்களை நீக்கும்படிச்செய்து, சொர்னபேதி திராவகம் கொடுக்கவேண்டியது. வெந்நீர் அல்லது குளிர்ந்த ஜலஸ்நானம் செய்துக்கொண்டு வரச்செய்யலாம்; இடம்விட்டு இடம்மாறி இருக்கச்செய்வதிலும் நன்மை பிறக்கும்.

மூத்திரக் குழல்வழியாக, கல்லிறங்கும்போது, உண்டாகிற பிரபலவேதனைக்கு ரோகியை வெந்நீரில் உளுக்காரவைத்து (அர்த்தாங்க அவகாகம்) பார்லி அரிசி கஞ்சித்தண்ணீரிலாவது, அல்லது வெறும் கஞ்சி ஜலத்திலாவது ஸ்பிரிட் ஆவ் நைட்ரிக் ஈதர் (Spirits of nitric aether) என்னும் மருந்தையாவது, பொட்டிலுப்பையாவது சேர்த்து அடிக்கடி தாராளமாய் கொடுத்துகொண்டுவந்தால் வேதனை சமனமடையும். அபினியும் கொடுக்கலாம். கல்லானது மூத்திரப்பையி லிறங்கிவிட்டபிறகு, வெள்ளிச்சிலாக்கைவிட்டு வெந்நீர் உள்ளுக்கடித்தால், வெளிக்கு வரப்பட்டவைகள் சுலபமாய் வந்துவிடும். ஒருவேளை கல்லானது மெத்த பெரிதாய் இருந்து, வெளிக்குவரக்கூடாமையாய் இருந்தால், உடைந்தாவது, சத்திரம் செய்தாவது, கல்லை வெளிக்கெடுத்துவிட வேண்டியது. Remedies.—In lithic acid diathesis, vegetable diet, simple drinks, exercise, laxatives, bicarbo-

nate of potash, liquor pottassae. In phosphatic diathesis, generous diet, wine, bark, iron, nitro-muriatic acid, opium.—In oxalic acid diathesis, nitro-muriatic acid, tepid or cold bathing, change of air, opium to relieve pain, lithotrity or lithotomy.

3. நீரிழிவு

பிரதிபதங்கள்.—மதுமேகரோகம். மதுமூத்திரரோகம்.

டையேபிடெஸ் மெல்லிடஸ், DIABETES MELLITUS.

நீரிழிவில், அதிமூத்திரம், மதுமூத்திரம் என இரண்டு சாதிகளுண்டு, ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் யாதொன்றுமில்லை. அதிமூத்திரரோகத்தில், (வெகு மூத்திரரோகம், மூத்திரஅதிசாரரோகம், நீர்மேகம்,டையேபிடெஸ் இன்ஸிபிடஸ், Diabetes insipidus or chronic diuresis) நீர்மாத்திரம் அதிகமாய் இறங்கும்; அந்தநீர் வெளுத்து, லேசாய்; இருக்கும்; பிரமாணத்தில் நீர் அதிகப்பட்டபோதிலும்; அதிலிருக்கிற உப்பு கள் கிரமத்தில் அதிகமாகிறதில்லை. இந்த ஸ்திதியில், சாதாரணமாய் அதிக தாகமெடுக்கும்; குடிக்கிற நீரெல்லாம், மூத்திரமாகிவிடுகின்றது.

தமது மூத்திரரோகம்.—மதுமேகரோகம். (டையேபீட்ஸ் மெல்லிடஸ் Diabetes mellitus, melituria, or glucosuria.) இது ஒருவித தொந்த ரோகம். இனிப்பான அதிக சிறுநீர் சுரக்கும். மேகசம்பந்தத்தால் காணு கிறதென்று நமது முன்னோருடைய எண்ணம்.

லக்ஷணங்கள்.—இந்த ரோக ஆரம்பத்தில் பிரதான குறிகள் ஒன்றும் அகப்படாது. ஒருவேளை கொஞ்சம் உஷ்ணமாக இருக்கும்; பிறகு ஒரு வித வாசனையுடைய நீர் இறங்குவது தெரியவரும். தேகத்திலிருந்து நீர் இப்படி அதிகமாய்ப் போகுவதால் சரீரம் உலர்ந்து, சொறசொறவென்றிருக் கும்; மலமிருகி, மலபந்தமுண்டாகும். அடங்காத தாகமெடுக்கும்; கொஞ் சநாள்பிறகு சரீர சவுக்கியம் கெடும்; வீரியசக்தி சுத்தமாய் இல்லாமற்போய் விடும் பிறகு இடுப்பில் வேதனையுண்டாகும்; கால்கள் சில்லிட்டிருக்கும்; கைகளிலும் பாதங்களிலும் எரிச்சலுண்டு; தேகம் இளைத்து பலம் குறையும், தேகநிறையும் குறையும்; ஈறு மிருதுவாயிருக்கும்; விசனமுண்டாகும்; குலைவயிற்றில் ஒருவித உணர்ச்சியும், அதிக பசியும் காணும்; இந்த வியாதி, மெதுவில் கள்ளத்தனமாய் வியாபிப்பது வழக்கம். இதில் க்ஷயரோகம் அனுசரிப்பதும் உண்டு; இது அசாத்திய ரோகம், சிகிச்சைக்கு வசப்படுவது அபூர்வம்.—மதுமேகரோகத்தில், கண்ணில் காசம் காண்பது ஒரு விசித் திரம்; இரண்டு கண்களுக்கும் ஒரேகாலத்தில் காணுகின்றது. ராசபிளவை காண்பதும் வழக்கம்.

மதுமூத்திரரோகமானது, தேகத்திலெடுத்த ஒருவித தொந்தவியாதி. ஸ்பஷ்டமாய் இதுவரையில் தெரியவில்லை. ஜீரண உறுபடிகளின் விகல்பத் தொழிலினால் போஜனத்திலிருக்கிற ஸ்டார்ச் (Starch) என்னும் பதார்த்த மும் சருக்கரையும் தேகத்துக்குவேண்டிய பதார்த்தங்களாக மாறாமல், மூத்திரத்தோடு வெளிகண்டுவிடுகிறதென்று, நெடுநாள் கொண்டிருந்த அபிப்பிராயம். பிறகு மற்றொரு பண்டிதர் யோசித்து சொல்லுவதென்ன வெனில், ஒருவேளை மேற்படி விதமாய் கொஞ்சமிருந்தபோதிலும், கல்லீர லில் சுவாபீகமாய் சருக்கரையுண்டாகிறதென்றும், அது புப்புசத்திற் செ

ன்று எறிந்துபோகிறதென்றும், ஒருவேளை சருக்கரை அதிகமாய் உண்டானால், தகனமானதுபோக மற்றது சிறுநீரோடு வெளிக்கு வந்துவிடுகிறதென்றும், ஒருவித உத்தேசம் செய்தார். இவ்விதமாய் ஒவ்வொருவர் ஒவ்வொரு அபிப்பிராயம் சொல்லுகிறபடியால், விஷயம் இன்னம் கஷ்டத்திலிருக்கின்றது. ரத்தத்திலும், வியர்வையிலும், கண்ணீரிலும், உமிழ்நீரிலும், மலத்திலும், சிறுநீரிலும், சருக்கரையைக் கண்டுகொள்ளும்படியாய் இருப்பதால், மதுமூத்திரரோகம், என்னகாரணத்தினல் பிறக்கின்றதோ அது, மனிதனறிவுக்கு இன்னம் எட்டவில்லை.

ரோகநிதானம்—மதுமூத்திரமானது, இனிப்பாய் நல்ல வாசனையாய், சாதாரணமாய் வெளுத்து அளவில் அதிமகாய் இருக்கும். சுவாபீகமாய் 24-மணி நேரத்துக்குள் விடுகிற நீர், 2½-3 பைன்ட் இருக்கும்; இந்த வியாதியில், 15-20-30 பைன்ட் அளவுக்கு இறக்குவது மூண்டு ஜலத்தைப்பார்க்கிலும், அதிக கனமாயிருக்கும்; (1030—1050. Specific gravity) வியாதி மெத்த கோபித்திருந்தால், நிறையும் அதிகப்படும்.

மூத்திரத்திலிருக்கிற சருக்கரையைத் தெரிந்துகொள்ள அநேக பரீக்ஷைகளுண்டு; அவைகளை இதனடியில் விவரிக்கப்படும்:—

Moore's Test.—சோதனை பாத்திரத்தில், (test-tube) கொஞ்சம் மூத்திரத்தைவிட்டு. அதற்கு நேர்பாதி லைகர் பொடாசி என்னும் (liquor potassæ) மருந்தைவிட்டு, கொஞ்சநேரம் மெதுவாய் காச்ச, சருக்கரையிருந்தால், அந்த நீர் கருத்தச் சாயலாகிவிடும்; சுவாபீக மூத்திரமானல், கொஞ்சங் கறுக்கும்.

Trommer's test.—சோதனை பாத்திரத்தில், ரோகியினுடைய சிறுநீரை கொஞ்சம் விட்டு, அதில் 1-2-துளி, துரிசு ஜலம் விட்டால், கொஞ்சம் நீலநிறமாகும். அதில், மூத்திரத்துக்கு நேர்பாதி லைகர் பொடாஷி என்னும் மருந்தை விட்டால், வெளுத்த நீல வண்டலுண்டாகி, சருக்கரை இருந்தால், உடனே கரைந்து மூத்திரம் அதிக நீலநிறமாகிவிடும்; பிறகு நீரைக் கொதிக்கும்படி மெதுவாய்க் காய்ச்சினல், சருக்கரை இருந்தால், மஞ்சளும் கறுப்புங்கலந்த வண்டல் அடியில் படியும்; சருக்கரை இல்லாவிட்டால், வண்டல் கறுப்பாயிருக்கும்.

Fermentation Test.—பரீக்ஷிக்கப்போகிற சிறுநீரில், புளித்த கள்ளை புரைக்குத்தி, அதை ஒரு சோதனைக்குழல் நிறையவிட்டு, அந்தக்குழலை மற்ற சிறுநீரில் கவிழ்த்து, குழலில் காற்றில்லாமல் செய்து ஒரு உஷ்ணவிடத்தில் அசையாமல் வைத்துவிட்டால், சருக்கரையிருந்தால், புளித்து, கார்போனிக் ஆஸிட் என்னும் வாயு ஜனித்து, நுரையுண்டாகும்; அந்த வாயு குழலுக்கு மேலேறி நின்றிருக்கும்; சருக்கரை இல்லாவிட்டால், நுரையுண்டாகாது.

சிறுநீரைக்காச்சி சருக்கரை எடுப்பதும்—அந்த நீரை ஈ, எறும்பு அபேக்ஷிப்பதைப் பார்ப்பதும் நாட்டுப் பரீக்ஷை.

சிகிச்சை.—அதிமூத்திரரோகத்தக்கு.—ஜலபானம் குறைக்கவேண்டியது; நீரை அதிகப்படுத்துகிற பதார்த்தங்களைச் சேர்க்கலாகாது; கந்தகத்திராவகம், அபினி ஆகிய இவைகளை உள்ளுக்குக் கொடுத்தால், சவுக்கியம் உண்டாகும்; வெந்நீர் ஸ்நானமும் சுகுணத்தைத் தரும்; வியர்வை தாராளமாய் பிறக்கும்படி முயற்சி செய்யவேண்டியது. போஜனம் தேகபோஷணைக்

குடையதாய் இருக்கவேண்டியது. ஆவாரன்பூ வெந்நீர்க் கஷாயமாவது, ஆவாரன் விரைத்தூளில் 1-விராகனெடை யெடுத்து சமன் விளாம்பிசினி சேர்த்து நெய்யில் கலந்தாவது, ஆவார இலைச் சூரணத்தோடு சீந்தில் சருக்கரை, வங்கபஸ்மம் இவைகளைச் சேர்த்தாவது, கடுக்காய் கஷாயமாவது கொடுப்பது நாட்டுவழக்கம்.

மது மூத்திரரோகத்துக்கு, இதுவரையில் ஒரு மருந்தும் நிச்சயப்படவில்லை. தகுதியான சிகிச்சையால், வியாதி ஒருவிதமாய்ச் சமனப்படுவதும் உண்டு; முதல், போஜனக்கிரமத்தை ஏற்படுத்தவேண்டியது. ரோகியின் இஷ்டப்படி மாம்சம், கோழி, பரவை இவைகளின் இறைச்சியும் மீனும், முட்டையும் அதிகமாய் சேர்ப்பது நன்று. கோவிசுக்கீரை, முள்ளாங்கி இவைகளையும் சேர்த்துக்கொள்ளலாம். உருளைக்கிழங்கு முதலிய கந்த மூலாதிகள் உதவாது. ரொட்டியை வெதுப்பிச் சாப்பிடவேண்டியது தவிட்டுக்கோதுமை ரொட்டி நல்லது; சாதத்தை மட்டிடவேண்டியது. தாகசாந்திக்கு, ஆட்டிறைச்சி ரஸம் நல்லது; பிராந்தியில் ஜலம்விட்டுச் சாப்பிடலாம். இந்த வியாதிக்கு உள்ளுக்குக் கொடுக்க அபினியே சிரேஷ்டமானது. டோவர்ஸ்பவுடர், மார்பியா இவைகளில் ஒன்றைக்கொடுக்கலாம். அயத்திராவகமும் மெத்த நன்மைசெய்யும். குவைனு, அபினி இவைகளைச் சேர்த்துமாத்திரைசெய்து, தினத்துக்கு 3-தடவை கொடுக்கலாம். மீன், நெய்யும் கொடுத்துப் பார்க்கலாம்; வேது பிடிக்கச்செய்யலாம்; ஆனால் துர்ப்பலமுடையவர்களுக்கு உதவாது. சீனக்காரமும் நீரைவரட்டும். ரோகி கம்பளிச்சொக்காய் தரித்துக்கொள்ளவேண்டியது. கிரியாசோட் என்னும் மருந்துக்கு ரோகம் சமனப்படுவதும் உண்டு. ஒரு வைத்தியர், ½-பவுன் வீதம், தேன், அல்லது சருக்கரைபாகை, 10-பேருக்குக் கொடுத்து பருக்ஷித்ததில், 6-பேருக்கு மெத்த விரோதம் செய்ததாயும் மற்ற 4-பேருக்கு, மூத்திரம்குறைந்து, தேகநிறையும் அதிகமாகி, சவுக்கியமுண்டானதாய்த் தெரியவருகின்றது.

இந்தத் தீராதவியாதிக்கு, நமது நாட்டில் கொடுக்கிற மருந்துகள் அனந்தம். வங்கபஸ்மம், சீந்தில் சருக்கரை, அப்பிரகசிந்தூரம், ஆவாரன்பூ, தேற்றுங்கொட்டை, இவைகளைப்போலொற்றவைகளாம். ரோகி, தகுந்தவர்களிடத்தில் சிகிச்சை செய்துகொள்ளாமல், கண்டவர் சொல்வதை உண்டானல், வெகு சீக்கிரத்தில் தேகம் கெட்டுப்போகும். Remedies—strict diet, opium ; steel ; quinine ; cod-liver oil ; creasote,

4. மூத்திரப்பையின் அழலுகை

இரிடெபிலிடி ஆவ் தி பிளாடர், IRRITABILITY OF THE BLADDER.

அடிக்கடி சிறுநீரிரங்குதற்குக் காரணம் அநேகமுண்டு:—மூத்திர குண்டிக்காய், மூத்திரப்பை, நீர்த்தாரை ஆகிய இவைகளில் எதிலாவது வியாதிகாணுதல், கருப்பிணியில் மூத்திப்பையை கருப்பை அழுத்துதல், மூத்திரப்பையில் எதாவது அன்னிய வஸ்துவு இருக்குதல், மூலரோகத்தின் அழலை ஆகிய இவைகளால் இந்த உபத்திரவம் உண்டாகிறது ; ஆனல், முக்கியமாய் ஜீரண உறுப்புகளின் தொழில் விகற்பப்படுவதினாலும், அத்தியுஷ்ணத்தினாலும், இந்த ரோகம் பிறக்கும்.

லக்ஷணங்கள்.—இந்த உபத்திரவம் திடீலென்று பிறந்து, அடிக்கடி நீர் இறங்கும் ; ஒரு மணிக்குள் 2-3-தடவை போகும்படி நேரிடும் ; அந்த நீரை

அடக்கமுடியாது ; ஒருவேளை அடக்கினபோதிலும், வேதனையும் தொந்திரவும் உண்டாகும் ; பிரமாணத்தில் நீர் அதிகப்படாது ; ஆனால், சூதக ஜந்நியில் காணுகிற இந்தரோகம் சிலநாள் இருந்தால், பிறகு மூத்திரப்பையானது சிறுத்து மூத்திரம் கொஞ்சமாய்க் கொள்ளும். 2-3-ஆழாக்கு நீர் கொண்டபையானது $\frac{1}{4}$-$\frac{1}{2}$-ஆழாக்கு நீர் கொள்வதே பிரயாசையாகிவிடும். எதிலும் சிறுநீரை பரீக்ஷித்து, ரோக காரணத்தைக் கண்டறிவதே பிரதான விஷயம்.

சிகிச்சை.—அற்ப காரணங்களால் காணுகிறதற்கு, போஜனத்தைக் கிரமப்படுத்தி, உஷ்ணபதார்த்தங்களையும், சாராய இனங்களையும் நீக்கி வைத்தால், சவுக்கியமாகிவிடும். சிறுநீரில் உப்பாவது, அல்லது கொஞ்சம் புளிப்பாவது இருந்தால், பெரீரா என்னும் மருந்தோடு சொர்னபேதி திராவகம் விட்டுக் கொடுக்கலாம். புளிப்பு மிதத்துக்கு அதிகமாய் இருந்தால், லைகர்பொடாஷி என்னும் மருந்தை புகு என்னும் மருந்தோடுச் சேர்த்து கொடுக்கலாம். ஆசனத்தில் அபினிமாத்திரை வைத்தால், இராத்திரியில் அயர்ந்த நித்திரை பிறக்கும். துர்ப்பலமிருந்தாலும் சரி, அல்லது சிறுபிராய ஸ்திரீகளுக்கு வீடு தூரமாகிறபோது கண்டாலும் சரி, அயம்கொடுக்க உதவும். சிலரில், டிங்சர் கெந்தாரிடிஸ் என்னும் மருந்தை அயத்திராவகத்தோடு சேர்த்துக்கொடுத்தால், வெகு சவுக்கியமுண்டாகும். Remedies.—Diluted Nitromuriatic acid ; pareira ; buchu ; opium ; steel; cantharides.

5. மூத்திரப்பைக்குக் காணுகிற இசிவு ரோகம்

ஸ்பாஸம் ஆவ் தி பிளாடர், SPASM OF THE BLADDER

லக்ஷணங்கள்.—அடிவயிற்றிலும், சிறு நீர்த்தாரையிலும், ஆண்குறி நுனியிலும், வேதனையிருக்கும். ரோகிக்குத் தெரியாமல் சிறுநீர் போகுவதுண்டு ஆனால், அடைத்துக்கொள்ளுவது வழக்கம் அடிக்கடி சிறுநீர் வருகிறதன்மையாய் இருந்தபோதிலும், பேயசக்தியிராது ; முக்கலிருப்பதும் உண்டு. ஜலப்பைக்கு இசிவுகண்டு விடாமலிருந்தால், மூத்திரச் சுரப்பில்லாதபோது காணுகிற குறிகளெல்லாம் கண்டு, மரணம் சம்பவிக்கும். இந்த ரோகத்தை ஜலப்பையின் தாபிதமென்று தப்பிதமாய் எண்ணலாகாது. ஜலப்பையின் தாபிதத்தில் வேதனை தீக்ஷணமாயும், விடாமலும், ஊசியால் குத்துவதுபோலுமிருக்கும் ; சுரமுமுண்டு.

காரணங்கள்.—இந்த வியாதிக்குக் காரணங்களநேகமுண்டு ; மூத்திப்பையில் கல்லிருக்குதல், மூத்திரப்பை, மூத்திரக்குண்டிக்காய், மலக்குடல், கருப்பாசயம் ஆகிய இவைகளின் ரோகங்கள், எரிதுண்டு, அதிகபோகம் சூதகசந்நி, அசனக்கிருமி ஆகிய இவைமுதலியவைகளால் இந்த ரோகம் பிறக்கும்.

சிகிச்சை.—இதில், முதல் உபத்திரவத்தைத் தணித்து, பிறகுவிளைவித்த காரணத்தை நீக்கவேண்டியது. வெந்நீர் ஒற்றிடங்கொடுத்து, அபினி உள்ளுக்கேற்றி, ஆசனத்திலும் உபயோகித்தால், வேதனை சமனமடையும். விளைவித்தகாரணங்களை நீக்குவது பிரயாசை. மூத்திரத்தில், விலேடஸ் என்னும் உப்புகள் அதிக்கிரமித்திருந்தால், கால்சிகம் கொடுக்கலாம். மூத்திர குண்டிக்காயில் சீழ்க்கட்டி கண்டிருந்தால், குறிகளைச் சமனப்படுத்தி, நல்ல ஊட்டத்தினால் பலம் வரும்படிசெய்து, இருப்பிடத்தை மாற்றிவைக்கவே

ண்டியது. மூத்திரப்பையில் கல்லிருந்தால் அதை வெளிப்படுத்திவிடவே ண்டியது. (அந்த விதத்தை, சஸ்திரீசத்தில் பார்வையிடவும்); இவ்விதமாய் இதரரோகங்களைக் கண்டிக்கவேண்டியது. பத்தியபோஜனமாய்ச் சாப்பி டும்படிச் செய்தபோதிலும், போஷாப்புக்குடையதாய் இருக்கவேண்டியது. சாராய இனங்களும், காரமான பதார்த்தங்களும் நீக்கிவைக்கவேண்டியது. குழகுழப்பான ஜலங்களை மிகுதியாய்க் குடிக்கச்செய்யலாம். கம்பளிச்சொ க்காய்த் தரித்துக்கொள்ளும்படிச் செய்யவேண்டியது. அதிகநடை கூடாது. Remedies.—Relieve spasm by fomentations, opium, &c., remove cause by appropriate remedies.

6. மூத்திரப்பையின் ஸ்தம்பரோகம்

பெராலிஸிஸ் ஆவ் தி பிளாடர், PARALYSIS OF THE BLADDER.

லக்ஷணங்கள்.—குதத்தின் சதைகள் ஸ்தம்பித்துவிட்டால், மலம் தற் செயலாய் இறங்கும். மூத்திரப்பையின் ஸ்தம்பனத்தில், மூத்திரமிரங்கா மல் அடைத்துக்கொள்ளும். பையில் மூத்திரம் நிறைந்துவிட்டால், துளித் துளியாய் வெளியில்வந்து விழும்; அதிக கவுலெடுக்கும்; உப்புகளும் அதிக மாகக் கொண்டிருக்கும்; நாடி படபடத்து, க்ஷீணமடையும்; நாக்கு அழுக் கடைந்திருக்கும்; பசியிராது; தூக்கம் பிடியாது; விசனமும் இருக்கும்; க்ஷீணமும் அதிகப்படும்; ரோகிக்கு உறக்கங்கண்டு, க்ஷீணத்தினால் இறந்து விடுவது வழக்கம்.

காரணங்கள்.—மூத்திரத்தை நேரப்பட அடக்கிக்கொண்டிருப்பதினால் இந்த ரோகம் பிறக்கும். அசதிசந்நிரோகம், தலையில் காயம்படுதல். முள்ளந் தண்டின்மேல் அடிபடுதல் அல்லது அதின் வியாதி ஆகிய இவைகளால் இந்த ரோகம் உண்டாகின்றது. கிழவர்களுக்குக் காணுகிற ரோகங்களில் இதொ ன்று. அதிக புத்திரசந்தானமுடைய ஸ்திரீகளுக்கும், பிரசவத்தில் அதிக வருத்தமடைகிறவர்களுக்கும், மூத்திரமடக்க சக்தி யில்லாமலாவது போ கும்; அல்லது நகைப்பு, இருமல், முக்கல் ஆகிய இவைகளால் மூத்திரம் சட் டென்று வெளிப்படுவதுண்டு.

சிகிச்சை.—அதிக மூத்திரம் சேர்ந்து இந்த ரோகம் பிறந்தால், சிலாக்கைவிட்டு மூத்திரத்தை மெதுவில் எடுத்துவிடவேண்டியது. சீக் கிரமாய் மூத்திரமிரங்கும்படிச் செய்யலாகாது; செய்தால், களைபிறந்து ஆள் இறந்துவிடுவான். வியாதி வசப்படாதிருந்தால், ஆளுக்கு சிலாக்கை விடுகிற விதத்தைக் காண்பித்துக்கொடுத்து, 6-மணிக்கொருதரம் விட்டு, நீர் கொஞ்சமுமில்லாமல் வெளிப்படுத்திவிடும்படி திட்டப்படுத்த வேண் டியது. கொஞ்சம் மூத்திரம் பையிலிருந்தால், அதுகெட்டு, பையின் சவ்வு களையும் கெடுத்துவிடும், நாசப்படாமலிருக்கிற ரோகத்துக்கு, ஸ்டிரிக்னியன் எர்கட் ஆவ் ரை, கால்வெனிசம், முதுகின் அடியில் பிளிஸ்டர்போடுதல், மூஷாம்பிர பேதி ஆகிய இவைகளை உபயோகித்து சவுக்கியம் கண்டது ண்டு. மூளைய அதி அல்லது முள்ளந்தண்டிக்கொடியின் வியாதி, இவைக ளால் இந்தரோகம் உண்டானால், மருந்துகள் கொடுத்து உபத்திரவிப்பதைப் பார்க்கிலும், மூத்திரம் சேரவொட்டாமல் செய்து அப்போதைக்கப்போது காணுகிற உபத்திரவங்களை மாத்திரம் நீங்க வகைதேடவேண்டியது. Re-dies.—strychnine; ergot of rye; glavanism; cold douche; hip-baths; blisters; aloes.

7. மூத்திரப்பை தாபிதரோகம்

இன்பிளமேஷன் ஆவ் தி பிளாடர், INFLAMMATION OF THE BLADDER

இந்த ரோகம் மெத்த உபத்திரவத்தைத் தரும். மூத்திரப்பையில் ஓரிடத்திலாவது, அல்லது பை முழுமையுமாவது தாபிதமிருக்கும். இந்தரோகம் தற்செயலாயாவது அல்லது இடைக்குழியிலிருக்கும் பக்கத்து உறுப்புகளின் வியாதியினுலாவது, அல்லது கல்லிருப்பதினுலாவது பிறக்கும்.

லக்ஷணங்கள்.—இதில் மூத்திரப்பை ஸ்தானத்தில் வேதனையும் நீர்த்தாரையில் எரிச்சலுமிருக்கும்; அடிக்கடி மூத்திரமிறங்கும், மூத்திரங் குறைந்திருக்கும்; அகோர சுரமும், குமட்டலும், கவலையுமுண்டு; அடிவயிற்றைத் தொட்டுப்பார்த்தால், சின்ன கட்டிபோல் அகப்படும்; வேதனை அதிகமாய், பகத்திலும் மூத்திரதாரையிலும் இருக்கும்; அடிவயிற்றை அமுத்தினுலும் சரி, அல்லது, ஆஸனத்தில் விரலைவிட்டு மூத்திரப்பையின் பின்புறத்தைத் தொட்டாலும் சரி, வேதனை அதிகப்படும். மூத்திர மிறங்கினவுடனே வேதனை தணிந்துவிடும்; ஆனல், கொஞ்ச மூத்திரம் சேர்ந்துவிட்டால், வேதனை மறுபடியுமுண்டாகி நீரிறங்கிறதுபோல் அகப்படும். என்ன முயற்சி செய்தபோதிலும் நிற்காமல், போயே தீரவேண்டியதாகும். மூத்திரப்பையிலிருக்கிற கொதிப்பு ஆஸனத்தையும் அனுசரிக்கும், அப்போது முக்கலும் காணும்; வியாதியை 2-3-நாளையில் வசம்படுத்தாவிட்டால், அது அதிகரிக்கும், வேதனையும் சகிக்கக்கூடாமையாகும். சிறுநீர் அடிக்கடி துளித்துளியாய் இறங்கும்; மூத்திரப்பையின் சக்தி குறைந்து மூத்திரம் உள்ளவே நின்றுவிடும். சுரமும் சீக்கிரத்தில் அதிக்கிரமிக்கும்; ஆயாசமும் அதிகப்படும், உடம்பு சில்லிட்டு வியர்வை பிறக்கும், நாடி க்ஷீணப்படும், விகாரம் பிறக்கும், 7-8-நாளையில் மரணம் சம்பவிக்கும். வியாதி அற்பமாயிருந்தால், தாபிதம் போய்விடும்; ஒரு வேளை மூத்திரப்பை மிருதுவாகி, ரணங்கண்டு, வேதனையும் தொந்திரவும் கொடுப்பதுண்டு.

சிகிச்சை.—இந்தக் கொடிய ரோகத்தை அபினி, ஒற்றிடம், உஷ்ண உதக அவகாகம், லகுவிரேசனம் ஆகிய இவைகளைக்கொண்டு வசப்படுத்த வேண்டியது. மூத்திரம் தடைபட்டிருப்பதாய்த் தெரிந்தால்; சிலாக்குவிட்டதை வெளிப்படுத்திவிடவேண்டியது; வீணில் உபயோகித்தால் வேதனை பிரபலமாகும். லகு அசனம் கொடுப்பித்து, தாகத்துக்கு கொஞ்சமாய் ஜலம் சாப்பிடும்படிச் செய்யவேண்டியது. இதில் மூத்திரப்பை சுருங்காமலிருக்கும்படிச் செய்வதே நமது முக்கிய பிரயத்தினம்.

9-ம் அத்தியாயம்

சருமரோகங்கள் அனந்தம்,பழக்கத்தினுல் அறியவேண்டியதேயொழிய, வாசிப்பதினுலேயே தெரிந்துகொள்வது பிரயாசை சருமரோகங்களை, உள்ளுக்கு மருந்துகொடுத்து, மேலுக்கு மருந்துபோட்டு வசப்படுத்தவேண்டியது. உள் மருந்தினுலேயே முக்கியமாய் வியாதி சமனப்படுத்தவேண்டியது. வியாதிக்கு ஆஸ்பதமாகிய துர்நீரை வெளிப்படுத்துவதே நமது முக்கிய பிரயத்தனம். அதற்கு விரேசன மருந்துகளும்,வியர்வையைப் பிறப்பிக்கிற மருந்துகளும் கொடுக்கவேண்டியது பிறகு சரீரவிகற்பத்தை மாற்றி, துர்நீர் உண்டாகாமற் செய்து சரீரம் சவுக்கிய ஸ்திதியில் கொண்டுவருமதற்கு லோகதிராவகங்கள், உப்புகள், கசப்புள்ள மூலிகை, ஓயோடைன், பா

ஷாணம், குவைனேன், அயம்,வீரம், சிங்கோனு முதலியவைகளைக் கொடுக்க வேண்டியது. மேலுக்கு உபயோகிக்கிற மருந்துகளோடு, ஸ்நான வகைக ளும் முக்கியமானது. பத்தியம், போஷாப்புள்ளதாயும், ரோகிக்குப்போது மானதாயும், மிருக்கவேண்டியது. பால், ஷெரி, சோடாவாடர், கிளா ரெட், ஆட்டிறச்சி, கோழிக்குஞ்சு, கவுதாரி, காடை, மரக்கறிகள், ரொட்டி, வெண்ணெய், இப்பேர்ப்பட்டவைகளைச் சாப்பிடச்செய்வதில் யாதொரு ஆக்ஷேபனையில்லை. டீ, காப்பி, பீர், சாராயம், சருக்கரை, உப்பிலிட்டமாமி சங்கள், அஜீரணபழங்கள் ஆகிய இவைகளை நீக்கவைக்கவேண்டியது. ரோ கி கம்பளிசொக்காய் தரித்துக்கொள்ளக்கூடாது. அதிக நமைச்சலிருந் தால், சீக்கிராந்நூளிட்டு தேய்த்து ஸ்நானம் செய்தால் சுகுணமுண்டு. குழந் தைக்குப் பாலூட்டுகிற ஸ்திரீக்கு உடம்பில் எதாவது வியாதிக்கு இடம் கொடுப்பதுபோ லகப்பட்டால், பால்கொடுப்பதை சுத்தமாய் நிறுத்தி விட வேண்டியது. யானைக்கால், மேகப்புடைகள் இவைகளையுடைய ஸ்திரீ குழந்தைக்குப்பால்கொடுக்கவேலாகாது,

சருமரோகங்கள்.—DISEASES of the skin.

பித்தத்தழும்பு

அர்டிகேரியா, URTIGARIA; நெட்டில்ராஷ், NETTLE-RASH.

இதற்கு ஒட்டிக்கொள்ளுகிற குணமில்லை; தழும்புகள், நீண்டாவது, விருத்தமாயாவது, சிவந்தாவது, வெளுத்தாவது இருக்கும், இத்தனை நேர மிருக்குமென்று நிச்சயமாய்ச் சொல்ல இடமிராது. தழும்பு கண்ட ஸ்தா னம் சூடாயிருக்கும்; எரிச்சலுண்டு; ஊசியால் தைப்பதுபோல் குத்தலெ டுக்கும்; அதிக நமைச்சலுமுண்டு. அனேக காரணங்களால் இந்த ரோகம் பிறக்கின்றது. அபக்குவபோஜன பதார்த்தங்களாலும், மனோபீடையி னுலும், அதிக ஆயாசத்தினுலும், பல் முளைதலாலும் இந்தரோகம் பிறக் கின்றது.

சிகிச்சை.—கெட்ட பதார்த்தங்கள் சாப்பிட்டு இந்தவியாதி கண்டால் வாந்திக்கும் பேதிக்கும் கொடுத்து, துர்நீரை வெளிப்படுத்திவிடவேண்டி யது. நாள்பட்டிருக்கிற ரோகத்துக்கு, பத்தியபோஜன மெடுத்துக்கொள் ளும்படிச் செய்து, சாராய இனங்களைத் தள்ளிவைத்து, பேதிமருந்துகளும், சோடா முதலியவைகளும் கொடுத்து, வெந்நீர் ஸ்நானம் செய்துவைத்தால், ரோகம் சொஸ்தமாகும். அயமும் சிலவேளை ரோகத்தைக் கண்டிக்கும். வங்க உப்பாவது சவ்வீரமாவது ஜலத்தில்கலந்து தழும்புகளின்மேல் தடவி னுல், நமைச்சலடங்கும்.

படர்த்தாமரை

பிரதிபதங்கள்.—எச்சிற்றழும்பு.

ஹெர்ப்பீஸ், HERPES; ரிங்வொரம், RINGWORM; TETEER.

தழும்புகள் பலரூபங்களாய்ச் சிவந்து வேதனை யெடுக்கும்; சிறிய கொப்புளங்கள் கும்பலாய்ச்சேர்ந்து, அந்த தழும்பில் அகப்படும். தழும் பானது கிரமேணுய் வளரும், 2-3-வாரங்களுக் கதிகமாகி இருப்பது அரிது. இது மெத்த உபத்திரவப்படுத்துகிற வியாதியல்ல; சுரமுமிராது.

சிகிச்சை.—இதற்கு விசேஷமாய்ச் செய்ய யாதொன்றுமில்லை; பேதிக்குக் கொடுத்து பத்தியமாய் வைக்கவேண்டியது. தழும்புக்கு, வங்க உப்பு களிம்பாவது, அல்லது நாக உப்பு களிம்பாவது போட்டால், நமைச்சலடங்கும். வெங்கார ஜலம், சீமை அகத்தி இலை, மிளகு, தகரச்செடியின் வேர், புரசன்வித்து, எருக்கன்வேர் பட்டை, காடிக்காரம், ஸிட்ரன்ஆயின்ட்மென்ட் என்னும் களிம்பு, அஸிடிக் ஆசிட் என்னும் காடி ஆகிய இவைகளையும் உபயோகப்படுத்துவதுண்டு.

கரப்பான்

பிரதிபதங்கள்.—மண்டைக்கரப்பான். கபாலக்கரப்பான்.

டினியா, TINEA PORRIGO; SCALD-HEAD.

இதில் அநேக சாதிகளுண்டு; எல்லாம் தொத்துவியாதி. மண்டைக் கரப்பானது (Cinea favosa) சிறிய கிண்ணங்கள் ரூபமாய் உலர்ந்த பக்கு சீள் கட்டிக்கொண்டு மஞ்சள்நிறமாய் இருக்கும்; ஒவ்வொன்றில் ஒவ்வொரு ரோமமிருக்கும்; பார்வைக்கு தேன்கூடுபோல் அகப்படும். வியாதி நாள்பட விருந்தால் தலையிலிருப்பது தேகத்திலும் வியாபிக்கும்.

சிகிச்சை.—கரப்பானுக்குப் பொதுச் சிகிச்சை.—ரோமத்தை நீக்கி, போல்டீஸ்போட்டு பக்குகளைப்போக்கி, சுத்திபடுத்தவேண்டியது. தேக சவுக்கிய முண்டாகும்படி உள்ளுக்கு மருந்து கொடுக்கவேண்டியது. விரணத்திலிருக்கும் புழு சாகும்படி கந்தகக் களிம்பாவது, கிரியஸோட் களிம்பாவது, தார் களிம்பாவது, வேப்பெண்ணெயாவது, பூசவேண்டியது. கரப்பான் எண்ணெய் உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிப்பது நாட்டுவழக்கம்.

சிரங்கு

ஸ்கெபீஸ், SCABIES; சோரா, PSORA; தி இட்ச், THE ITCH.

இது உபத்திரவிக்கிற வியாதி, நமைச்சல் மிகுதியாயிருக்கும், உஷ்ணத்தினால் நமைச்சல் அதிகப்படும்: முதல் வியர்க்குருபோல் காணும், அதைச் சொரிந்துவிட்டால், தோலுரிந்து ரணமாகிவிடும். சிரங்கு தேகமெங்கும் கண்டபோதிலும், கைவிரல்களில் முக்கியமாய் காணுகிறது. இந்த வியாதி ஒருவித சிறிய புழுவால் (Acarus scabiei) உண்டாகின்றது; பூதக்கண்ணாடியால் பார்வையிட்டால், கண்களுக் ககப்படும். கந்தகம் பட்டால் செத்துப்போகும்; ஆகையால், கந்தகக்களிம்பு மேலுக்குத்தடவி, கந்தகம் உள்ளுக்குக் கொடுக்கவேண்டியது.

நமட்டுச்சிரங்கு

பிரதிபதங்கள்.—நமைச்சல்; சொறி; கடி புரூரைகோ,

PRURIGO; இச்சிங், ITCHING.

இது சருமத்தைப்பற்றிய வியாதி; சிறிய வியர்க்குருகள்போல் காணப்படும்; அதிக நமைச்சலெடுக்கும்; ரத்தம் வரும்படி சொறிந்துகொண்டபோதிலும், நோயாளிக்கு திருப்தியில்லாமல், வேறு கருவிகளைக்கொண்டு புறண்டிக்கொள்ளுவான். இது சீக்கிரத்தில் போகாது, வருஷக்கணக்காய் இருந்து, ஆளை மெத்த கஷ்டஸ்திதியில் வைத்துக்கொண்டிருக்கும்; சூடு

பட்டால் நமைச்சல் அதிகமாகும்; இதில் 3-சாதிகளுண்டு ; சில விருத்தாபி யர்களுக்குக் கண்டால் கட்டையோடவே ஒழிந்தவிடும்.

மனிததேகத்தில் சீலைப்பேன், தலைப்பேன் முதலிய 4-சாதி பேன்க ளுண்டு. அவைகளுக்கு, ரசக்களிம்பு தடவினாலும் சரி, அல்லது புகையிலை கஷாயத்தினால் கழுவினாலும் சரி பேன் சாகும்.

சிகிச்சை.—குளிர்ந்த ஜலஸ்நானம் நாள்தோறும் செய்யவேண்டியது ; மேலுக்கு, காடியாவது, சுண்ணாம்பு ஜலமாவது, அதிக ஜலம்விட்டு விளா விய வீர ஜயநீராவது, கிரியாஸோட் ஜலமாவது, தார்க்களிம்பாவது, ஸோடா உப்புகரைத்த ஜலமாவது தேய்த்தால், சவுக்கியமுண்டாகும். ஸிட்ரன் ஆயின்மென்ட் என்னும் களிம்புக்கும் வியாதி ஓட்டமெடுக்கும். காரமில்லாத போஜனம் எடுத்துக்கொள்ளவேண்டியது. சாராய இனங்கள் உத வாது. லகுவிரேசன மருந்துகளால் மலசுத்திசெய்து, நன்னாரிவேர் கஷாயம், தாருட்டியகாரி மருந்துகள், பாஷாண ஜயநீர் இவைகளை உள்ளுக்குக் கொடுத்துவந்தால் சவுக்கியமுண்டாகும்.

5-வது புஸ்தகம்

BOOK V

சஸ்திரீகம்

ஸர்ஜரி. Surgery

(in Tamil)

பொதுவசனம்

ஆயுள்வேதத்தில், சஸ்திர வியாதிகளையும், அவைகளுக்குச் செய்கிற சிகிச்சையும் விவரிக்கிற பாகத்துக்கு, சஸ்திரீகம் என்று பேர். இதை சஸ்திரவைத்தியம், இரணவைத்தியம் என்றும் சொல்வதுண்டு. இது மிகவும் விரிந்தநூல்; இதில் அற்பகியானம் நமது நாட்டோருக் குண்டாகும்படி, சங்கிரகமாய் இவ்விடத்தில் விவரிக்கப்படும்.

1-ம் அத்தியாயம்

வியாதியினலாவது, அல்லது அடிப்படுவதினலாவது, ஸ்பரிச நரம்புகளுக்குக் காணுகிற ரோகங்கள்.

பிராஸ்ரேஷன், PROSTRATION. கொலாப்ஸ் COLLAPSE, OR SHOCK OT THE NERVOUS SYSTEM.

பிரதிபதங்கள்.—தளர்சசி, சோர்வு, இளைப்பு, களை, சோகம், அறிவுகெடல், மெய்மறத்தல்.

லக்ஷணங்கள்.—பலத்த அடிபட்டுக் காணுகிற சரீரதளர்ச்சிக்கு போதக்ஷயம் என்று பேர். இதில் சரீரசீதளம், ஸ்மார்க்கவிகல்ப்பம், க்ஷீணநாடி, தீர்க்கசுவாசம் ஆகிய இவைகள் காண்பது வழக்கம். இருதயம் அதிக உபத்திரவமடைந்தால், மூர்ச்சை (Syncope, Fainting) காணும், நாடியும், சுவாசமும் ஒடுங்கிகிடக்கும், ஒருவேளை மூளைக்கு உபத்திரவம் அதிகரித்தால், மதுபானவெறியைப்போல் வார்த்தைகளும், போதக்ஷயமும் பிரமையும் உண்டாகும். மேல்கண்ட குறிகளோடு, குமட்டல், வாந்தி, விக்கல், மூத்திரபந்தம், குழந்தைகளில் இசிவு ஆகிய இக்குறிகள் ஒவ்வொருவேளை காண்பதுண்டு. இக்குணங்கள் சிலருக்கு சீக்கிரத்தில் போய்விடும்; சிலரில் 2-நாள்வரையி லிருப்பதுண்டு. போதக்ஷயம் அற்பமாயிருந்தால் சீக்கிரத்தில் தெளிவுபிறக்கும்; ஒருவேளை அது அதிகமாகி தெளிவுபிறக்காதிருந்

தால், ரோகி இறந்துவிடுவான். ரோகிக்கு போக்ஷயம் நீங்கி சவுக்கியகுறிகள் காண்பதை தெளிவு (ரீயாக்ஷன் reaction, புனர்சேஷ்டை) என்று சொல்வர். Coldness; insensibility, more or less perfect; pulse weak and fluttering; respiration sighing; some times nausea, or vomiting; or convulsions. The symptoms vary accordding as the nervous or the vascular system is the more affected.

காரணங்கள்.—தேகத்தில் பலத்த அடிபடுதல், நிர் நிமித்தியமாய் காணுகிற விசனம், சந்தோஷம் அல்லது பயம், ரத்தப்பிரவாகம், ஜீவாதார உறுப்புகளாகிய மூளை, இரைப்பை, இருதயம் இவைகளுக்கு அடிபடுதல் ஆகிய இக்காரணங்களால் போகக்ஷயம் பிறக்கும்.

சிகிச்சை.—சரீரம் சில்லிட்டு நாடி தளர்ந்து சீதளம் கண்டிருந்தால், பிராந்தி அல்லது சாராயம், மிளகுநீர் முதலிய உஷ்ணப்படுத்துகிற மருந்துகளைக் கொடுக்கவேண்டியது; ஈதர், அம்மோனியா என்னும் மருந்துகளைக் கொடுப்பது இங்கிலீஷ் வைத்தியம். வெந்நீர் கீசாக்களையாவது, சுட்ட செங்கல்களையாவது, வறுத்த மணலையாவது, தொடைகள் மத்தியமாயும், அக்குள்களிலும் அணைத்துவைத்து, உஷ்ணம் பிறந்து நாடி திருடமாகிற வரையில் கம்பளி போர்வையிட்டு வைக்கவேண்டியது. தெளிவுகண்ட பிறகு உஷ்ணமருந்துகள் கொடுக்கலாகாது. கொடுத்தால் சுரம்காணும்; ரத்தப்பிரவாக போதக்ஷயமாய் இருந்தால், அதிகரத்தம் வடியும். வாந்தியிருந்தால், அபினி கொடுத்தால் நிற்கும்; ஈரற்குழியில் கடுகுபத்தும் போடலாம். நாடியோட்டம் திருடப்பட்ட பின்பு, போதக்ஷயமிருந்தால், பேதி மருந்து கொடுத்து, சிரசை சில்லிட்டிருக்கும்படி வைக்கவேண்டியது. Put the patient to bed; warmth to extremities; wine and othe stimulants, as general symptems indicate.

தனுர்வாதம்

டெட்டனஸ், TETANUS

பிரதிபதங்கள்—ஈர்ப்பு.

மனதுக் கயிக்கமான சில பிரதான சதை வளர்ந்து நேரப்பட்டிருக்கிற ஓர்வித ஜன்னிரோகத்துக்கு, தனுர்வாதமென்று சொல்லப்படும். இதில் சதைகளின் பிகிவு விடாமலிருந்தால், டானிக் ஸ்பாசம் (Tonic Spasm) என்றும், தளர்வதும் பிகிவு படுவதுமாய் இருந்தால், கிளானிக் ஸ்பாசம் (Clonic Spasam) என்றும் இங்கிலீஷில் சொல்வதுண்டு.

லக்ஷணங்கள்.—குறிகள் திடீலென்று காண்பது வழக்கம்; கீழ்த்தாடை தொண்டை இவைகளின் சதைகளுக்கு இசிவு முதல் உண்டாகிறதுண்டு. ஜலுப்பு செய்து தொண்டை நோவும், பின் கழுத்து இசிவும் இருக்கிறதாய் சொல்லிக்கொள்ளுவான்; இப்படி இருக்கிற வேதனை சீக்கிரத்தில் அதிகரித்து, நாக்கின் அடிக்குச்சென்று விழுங்குவது கஷ்டமாகும்; பிறகு பல்கிட்டிக்கொள்ளும். (Trismus or locked jaw), வியாதி அதிகரிக்க, முகத்திலும், உடம்பிலும், கடைசியில் கால் கைகளிலும் இசிவுகாணும், இசிவு சுத்தமாய் விடுவதில்லை, தூக்கத்தில் ஒருவேளை விடுவதும் உண்டு. இசிவானது சுமார் $\frac{1}{4}$-மணி நேரத்துக்கொருதரம் கண்டு, கொஞ்சநேரமிருந்து, பிறகு தணிந்துவிடும். முதுகிலுள்ள பலத்த சதைகளுக்கு

இசிவுகண்டால், முதுகை வில்லுபோல்வளைத்து சிரசு, குதிக்கால் இவைகளின்மேல் உடம்பு நிற்கும்படி செய்யும் ; இதற்கு பின்னிசிவு (ஒபிஸ்தாடொனஸ், opisthotonos) என்றும், உடம்புமுன்னுக்கு வளைந்திருந்தால், முன்னிசிவு (எம்பிராஸ்தாடொன்ஸ், emprosthotonos) என்றும், பக்கத்துசதைகளுக்கு இசிவுகண்டு உடம்பு பக்கவாட்டமாய் வளைந்துவிட்டால், பக்கத்திசிவு (பிளிராஸ்தாடொனஸ், pleurosthotonas) என்றும் சொல்லுவர்.

தனுர்வாதரோகத்தில் காணுகிற இசிவைப் பார்ப்பதற்கு பயங்கரமாய் இருக்கும் ; முகம் வெளுத்து புருவங்கள் சுருங்கிவிடும், நெற்றியில் மடிப்புகள் காணும், கண்கள் நிலைவிழியாகி பிதுங்கலாய் காணப்படும், சிலவேளை கண்ணீர் கலங்கி கண்கள் சிவந்துகாணும், நாசியின் இதழ்கள் விரிந்திருக்கும், வாய் ஓரங்கள் பின்னுக்கு இழுத்துகொள்ளும், பற்கள் வெளிக்கப்படும், நகைப்புள்ளதுபோல் முகம் காணப்படும்; சுவாசம் கஷ்டமாயும், வேதனையோடிருப்பதுபோலு மிருக்கும், மார்பில் வேதனையுண்டு, தாகமிருக்கும் ஆனால் ஜலம், விழுங்கும்போது வேதனைபிரபலமாகும், நாடி பலஹீனத்தோடு படபடப்பாய் நடக்கும், சரீரம் வியர்க்கும், நித்திரையிராது ஒரு வேளைவந்தால் கொஞ்சம் உறங்குவான், இத்தனை கஷ்டத்திலிருந்தபோதிலும், புத்திமாத்திரம் விகற்பப்படாது. கடைசியில் ரோகி ஆயாசத்தினாலும் கஷ்டசுவாசத்தினாலும் இறந்துவிடுகிறான்.

ஜனித்த சுமார் இரண்டாம்வாரம் குழைந்தைகளுக்கு ஓர்வித இசிவு காண்பதுண்டு, அது கண்டால் குழந்தை சீவிப்பது அரிது. Stiffness about jaws ; inability to protrude tongue, painful smile on countenance, inability to swallow saliva ; abdominal muscles hard ; profuse perspiration ; at last a violent spasm, by its action on the muscles of respiration, closes the scene.

காரணங்கள்.—தனுர்வாதமானது, சீதளம், ஈரம் இவைகளினாலும், அல்லது காயங்களிலும் காண்பதுண்டு ; சீதளத்தினாலாவது, அல்லது தற்செயலாயாவது கண்டால் அதற்கு, இடியோபாதிக் (idiopa--thic) என்றும், காயங்களினால் பிறந்தால், ட்ரொமாடிக் (traumatic) என்றும் இங்கிலீஷில் சொல்லப்படும். தற்செயலாய்க் காண்பதில் சவுக்கியம் உண்டாகிறதற்கு கொஞ்சம் இடமுண்டு; காயத்தினால் காணுகிறதனுர்வாதரோகமெல்லாம் சவுக்கியப்படுவது அபூர்வம். எட்டிக் கொட்டை சாப்பிட்டு விஷமித்தால், இந்த வியாதிபோலவே காணும்.

சிகிச்சை.—இந்த வியாதிக்குக்கொடுக்கிற மருந்துகளெல்லாம் பரீக்ஷைக்கொப்பானது, எதுவும் உபயோகமில்லை. பெல்லடோனா, குளோரபாரம், குவைனா, ஒயின் இந்நான்கு மருந்துகளில் கொஞ்சம் விசுவாசம் வைக்கலாமென்று ஒருவைத்தியர் சொல்லுகிறார். அபினியில் பிரயோஜனமில்லை; அது முள்ளந்தண்டுக் கொடியில் ரத்தத்தை அதிகமாய் சேர்ப்பதால், அதைக் கொடுக்கக்கூடாதென்று இப்போது சொல்லுகிறார்கள். பெல்லடோனா என்னும் மருந்தையாவது, அல்லது ஊமத்தன் இலை ரஸத்தையாவது, முதுகு முள்ளத்தண்டின்மேல் போடலாம்; ½-1-கிறேன் பெல்லடோனாவோடு, 2-கிறேன் குவைனா சேர்த்து, 4-மணிக்கொருதடவை கொடுத்துக்கொண்டு வரலாம் ; குளோரோபாரம் என்னும் மருந்தை முகரவைத்து, ரோகியை ஸ்மார்கமில்லாமல் வைப்பதிலும் ஒருவேளை நன்மை

புண்டாகும்.நாடிமாத்திரம் க்ஷீணப்படாதிருந்தால், 1-2-நாள்வரையில் இதை யேஉபயோகித்து பார்வையிடலாம்; அதின்வேக மிருக்கும்போது, நாடி தணியும், சுவாசம் தாராளமாகும் மற்றவேதனைகளும் இல்லாமல்போகும். விழுக்க கஷ்டத்திலிருந்தால், ஆசனவஸ்திசெய்யலாம். பேதிக்குக் கொடுக்க வேண்டியது அவசியம். காலமல், ஜாலப் இவைகளைச் சேர்த்துக்கொடுக் கலாம்; பேதியாகாவிட்டால் மறுபடியும் கொடுத்து வயிற்று துஷ்டுகளை வெளிப்படுத்தி விடவேண்டியது. குத்தி ரத்தம் வாங்குதல், ரஸபஸ்மம், பெருங்காயம், டர்பன்டைன், புகையிலை, கஸ்தூரி, அயம், கஞ்சா இவை முதலியவைகளை உபயோகித்ததுண்டு, எதுவும் வியாதியை கேழ்க்கும்படி யானதாய் காணவில்லை. Remove cause; amputation of injured part; seldom does much good, but frequently serious damage; pelfect quiet; support with mutton broth and brandy; inhalation cfchloroform; belladonna; Indlan hemp; quinine.

இசிவு

கன்வல்ஷன்ஸ், CONVULSIOUS

பிரதிபதங்கள்.—வலி, சந்நி.

இசிவானது அநேக ரோகங்களால் பிறக்கின்றது; பல்முளைதல், தீனிப்பையில் கொதிப்பு, கருப்பையின் வியாதி, சிரசில்காயம் படுதல், மூத்திரப்பையில் கல்லிருக்குதல் ஆகிய இவைகளாம். Convulsions arise from injuries, &c.

சிகிச்சை,—இதற்குச் சிகிச்சை செய்யும்பொது,வியாதியை விளைவித்த காரணத்தை முதல் நீக்கவேண்டியது; பேதிக்குக்கொடுத்து மலத்தைப்போக்கவேண்டியது; சிரசைக் குளிர்ச்சிசெய்து, கால்களுக்குக் கடுகு பற்றுப் போட்டு, சிரசிலிருக்கிற ரத்தத்தைக் குறைக்கவேண்டியது; நாடி க்ஷீணமாகி, முகம் வெளுத்து, கண்ணின் கிஷ்ணமண்டலத்துவாரம் விரிந்திருந்தால், பிராந்தி, சாராயம் முதலிய உஷ்ணம் செய்கிற மருந்துகளைக் கொடுக்கவேண்டியது. பத்தியம், போஷணைக்குடைய நல்ல பதார்த்தங்களைக் கொடுக்கவேண்டியது. If pospible remove cause; cold to head; blister to neck, and a calomel purge.

2-ம் அத்தியாயம்

சரீரதாதுக்களில் உண்டாகிற பேதங்கள்

தடிப்பு, கனப்பு. (ஹைபர்ட்ரொபி, Hypertrophy.) எதாவது ஓர் உறுப்பு பரிமாணத்தில் அதிகப்பட்டால், தடித்து போச்சுதென்று சொல்லுவது வழக்கம். இதில் தாதுக்களெல்லாம் விருத்தியடைந்திருக்கும். சிகிச்சை.—ரோக உற்பத்திகாரணத்தைநீங்குவதே பிரதானசிகிச்சை,

உணங்கல். சிறுத்தும்போகுதல்; சுஷ்டம்; வாடல். (அட்ரொபி. Atrophy.) உறுப்புகள் பரிமாணத்தில் சிறுத்துப்போவதற்கு உணங்கல் என்று பேர்.

தாபிதம்

இன்பிளமேஷன், INFLAMMATION.

லக்ஷணங்கள்.—சரீரத்தி லெவ்விடத்திலாவது வேதனை, உஷ்ணம், சிவப்பு, வீக்கம் ஆகிய இக்குறிகள் இருந்தால், அந்த இடம் தாபிதம்கொண் டிருக்கிறதென்று தெரிந்துகொள்ளவேண்டியது ; இதில் சுரமும் அனுசரித் திருக்கும். வேதனை.—இதில் உண்டாகிற வேதனை ஸ்தானத்துக்குத் தக்க படியாய் வித்தியாசப்படும்; சருமத்தில் எரிச்சலாயிருக்கும்; சருமத்தின் கீழிருக்கிற சவ்வில் விருவிருப்பாயிருக்கும் ; மார்புக்குள் ஊசியால் குத்து வதுபோலிருக்கும். வேதனை பிரபலமாகிவிட்டால், அதற்கு டென்டர் னெஸ் (tenderness) என்று இங்கிலீஷில் சொல்வதுண்டு. வியாதி இருக் கிற விடத்தில் வேதனை காணுமல், வேறுவிடத்தில் வேதனை காண்பதும் உண்டு; அதற்கு திருஷ்டாந்தம்—மூத்திரப்பையில் அரிப்புகண்டால், பீசங் களில் வேதனை காணும். உஷ்ணம்.—அதிகரத்தம் சேர்ந்து உஷ்ணம் பிறக்கின்றது. சிவப்பு.—தாபிதங்கண்ட ஸ்தானத்திலுருக்கும் சிறிய ரத் தக்குழல்களில் ரத்தம் அதிகரித்து அவைகள் பருத்துப்போகுவதால், அந்த விடம் சிவப்பாய் காணப்படும். வீக்கம்.—அதிக ரத்தத்தினுலும், துர்நீர் சுரந்து சேருவதினுலும், வீக்கம் உண்டாகின்றது. தாபிதம்கண்ட உறுப்பு அழற்சிகொண்டு தாதுக்கள் மாறுவதால், அதின் தொழிலும் விகற்பப் படும். தாபிதரோகத்தில் காணுகிற சுரத்துக்கு உபத்திரவசுரம் (symptomatic fever) என்றுபேர். சாதாரண சுரத்துக்குடைய குறிகளெல்லாம், இதில் காணலாம்.

தாபிதமானது பலவிதமாய் விகற்பப்படும். மேற்கண்டகுறிகள் படிப் படியாய் தணிந்து, தாபிதம் கண்டவிடம் சுவாபீகஸ்திதிக்குவந்தால், அத ற்கு, "கரைந்துபோகுதல்" என்று சொல்லப்படும். அப்படியாகாவிட்டால், சீழ் சேர்ந்து சீழ்க் கட்டியாகும். ரணமாய் ஆகுவதும் உண்டு. ரத்தத்தி லிருந்து பசைசுரந்து சவ்வுகள் ஒன்ருேடொன்று ஒட்டிக்கொள்ளுவதும் ஒருவித விகற்பம். ஆகையால் தாபிதம்கண்டால், முடிவில் கரைந்துபோகும், (ரிசொலூஷன், resolution).—அல்லது, சீழ்க்கொள்ளும் (சப்பியுரேஷன், suppuration)—அல்லது, ரணமாகும் (அல்சரேஷன், ulceration)—அல் லது, தடித்துப்போகும் (இன்டியுரேஷன், induration)—அல்லது, சவ்வு களாய் இருந்தால் ஒன்ருேடொன்று ஒட்டிக்கொள்ளும் (அட்ஹீஷன், adhesion)—அல்லது, அழிகிப்போகும் (மார்டிபிகேஷன், mortification.) Inflammation is the simultaneous occurrence of pain, heat, redness and swelling. The terminations of inflammation are, resolution; suppuration; ulceration; induration; adhesion; mortification.

தாபிதத்தில் 2-சாதிகளுண்டு ; ஒன்றில் குறிகளெல்லாம் அதிதீக்ஷணமாய் இருக்கும், அதற்கு உக்கிரம் என்று பேர்.—மற் ருென்றில் குறிகள் தணிந்திருக்கும், அதற்கு சாந்தம் என்றுபேர்.

உக்கிரதர்பிதம்

அக்கியூட் இன்பிளமேஷன், ACUTE INFLAMMATION.

பிரதிபதங்கள்.—தீவிரதாபிதம்.

இது நிர்நிமித்தமாய் காணும் ; இதில் குறிகள் தீக்ஷணமாய் இருக்கும்; சீக்கிரத்தில் மேல்கண்ட விகற்பங்களில் ஒன்ருய் மாறுபட்டுவிடும் ; சுரமும் அனுசரித்திருக்கும்.

சிகிச்சை.—தாபிதத்துக்குச் செய்யும் சிகிச்சாவிதி யென்னவெனில: (1) வியாதியின் காரணத்தை நீக்கவேண்டியது ; (2) ரத்தஓட்ட வேகத்தைக் குறைத்து, நோய்கண்ட இடத்துக்குப் போகிற ரத்தத்தைக் குறைக்கவேண்டியது ; (3) ரத்தத்திலிருக்கிற கெட்டபதார்த்தங்கள் நீங்கும்படி செய்து, அதைப் பரிசுத்தப்படுத்தவேண்டியது ; (4) வேதனை தணியும்படி செய்யவேண்டியது ; (5) கெட்டநீர் சேர்ந் துண்டாகிற கனப்பை, கரையும்படிச் செய்யவேண்டியது ; (6) பத்தியக்கிரமம் அனுசரிக்கவேண்டியது.

1-உறுப்பு தாபிதம் கொள்வதற்குமுன், முள்ளு தைத்திருந்தாலாவது, அல்லது இன்னம் எதாவது அன்னியபதார்த்தங்களிருந்தால் அவைகளை நீக்கிவிட்டு, உறுப்பை ரக்ஷிக்கவேண்டியது.

2-சரீரத்திலுள்ள ரத்தத்தில் கொஞ்ச மெடுத்துவிட்டால், அதின் வேகம் குறையும், தாபிதம்கண்ட இடத்துக்கும் அதிகரத்தம் போகாது. அதற்கு, கையின்நாளத்தைக் குத்தியாவது, அல்லது அட்டை விட்டாவது, அல்லது கீறி கொம்புவைத்து உறிஞ்சியாவது, ரத்தமெடுக்கலாம். நமது தேசஜனங்களின் தேகப்பிரகிருதி தளர்ந்திருப்பதால் கையில் ரத்தமெடுக்க உதவாது ; அட்டை விடும்படியான மனிதர்களையும் சாதாரணமாய் காண்பது அரிது ; உக்கிரதாபிதங்களுக்கெல்லாம் யோசனைசெய்யாமல், ரத்தமெடுத்தால் அபத்தம் நேரிடும். பிராணதார உருப்புகளைத் தாபிதம் துர்ப்பலப்படுத்தும்படியானதாய் இருந்தாலும் சரி, தாபிதத்தினால் துர்ப்பலம் உண்டாகும்படியாய் இருந்தாலும் சரி, தாபிதம் சீழ்க்கொள்ளும்படியானதாய் இருந்தாலும் சரி, குழந்தைகளுக்கும் வயது சென்றவர்களுக்கும் காணுகிற தாபிதத்திலும் முகம், உதடு, நாக்கு இவைகள் வெளுத்து, நாடி க்ஷீணமடைந்திருக்கும்போதும், ரத்தமெடுப்பது யுக்தமல்ல. ரோகிக்கு ரத்தபுஷ்டியும், மாமிசபுஷ்டியுமிருந்து, நாடியும் திருடமாயிருந்தால், குத்திரத்தம் வாங்கலாம்.—அட்டை விடும்படியாய் இருந்தால், அட்டையைத்துடைத்து ஈரத்தை போக்கிக்கொண்டு, அட்டை விடப்போகிற ஸ்தானத்தைக் கழுவித்துடைத்து, பிறகு அட்டையை விடவேண்டியது. அட்டை கடிக்காமல்போனால், அந்தவிடத்தில் பால் தடவினாலும் சரி, அல்லது கத்திமுனையால் குத்திவிட்டாலும் சரி, கடித்துக்கொள்ளும். அட்டை விழுந்து விட்டபிறகு, கடித்தவாயைத் துடைத்துவிட்டு, துணிக்கரியைவைத்து அழுத்தினால், ரத்தம் நின்றுவிடும் ; ஒருவேளை நிற்காமல் அதிகமாய் வடிந்தால், காடிக்காரமாவது, படிக்காரம், மாசக்காய்ப்போலொற்ற துவர்ப்பு பதார்த்தங்களையாவது, கடித்தவாயில் வைத்தால் ரத்தம் நின்றுவிடும்.

தாபிதம்கண்ட இடத்தின்மேல் ஈரத்துணியைப் போட்டு அது உலராமல் ஜலம் விட்டுக்கொண்டுவந்தால், உஷ்ணம் குறையும் ; ஒருவேளை ஈரத்தினால் குளிர்கண்டால் வெந்நீர் போடவேண்டியது. ரோகியின் மனதுக்கேற்றபடி, குளிர்ச்சியாவது, சூடாவது உபயோகிக்கவேண்டியது. வெந்நீர் உபயோகிக்கும்படி யிருந்தால், மடித்ததுணியை வெந்நீரில் நனைத்து, கொஞ்சம் ஜலம்போகப் பிழிந்துவிட்டு, தாபிதமிருக்கிற ஸ்தானத்தின்மேல் போட்டு, வாழையிலையால் மூடி கட்டிவிடவேண்டியது.

3. பேதியாகும்படி மருந்துகொடுத்து வியர்வை, மூத்திரம் இவைகள் வெளிப்படும்படி செய்தால், ரத்ததூஷியங்கள் நீங்கி, அது பரிசுத்தமாகி விடும்.

4. குரோசானியோம முதலிய மருந்துகளைக் கொடுத்தால், நோவைத் தணித்து, ரோகிக்கு சுவுக்கியந் தரும். அபினிக்கு நீரைவறட்டி மலத்தை இறுகச்செய்கிற துர்க்குண மிருப்பதால், அதைக்கொடுப்பது நல்லதல்ல. ரத்தமெடுத்தபிறகு ரஸபஸ்மத்துடன் அபினி சேர்த்துக்கொடுத்தால், வேதனையைத் தணித்து, சுரத்தையும் தணிக்கும். துற்பல முடையவர்களுக்கும், ரத்தம் அதிகமாய் கண்டவர்களுக்கும், உக்கிரதாபிதத்திலும், அபினியை எந்த சமயத்திலும் கொடுக்கலாம்.

5. ரஸமருந்து கொடுத்தால், நாடியைத் தணிக்கும்; துர்நீர்சுரந்து காணுகிற வீக்கங்களை வற்றும்படிசெய்யும்; நீர்சுரப்புகளைக் கிரமப்படுத்தும். இதற்கு ரஸபஸ்மமே நல்லது; ரஸ்பஸ்மத்தோடு அபினி சேர்த்துக்கொடுத்தால்சீக்கிரத்தில் உடம்பில் பற்றும். இது கொடுத்துக்கொண்டு வரும்போது, ஈறு கொஞ்சம் விரணமாகி வாயில் உமிழ்நீர் சுரந்தால், உடனே மருந்தை நிறுத்திவிடவேண்டியது. அஞ்சனக்கல் பஸ்மமும், வெடியுப்பும், தாபிதத்தைத் தணிக்கும். தாபிதம் கண்டவிடத்தில் அக்கினி பிளாஸ்திரிபோட்டுப் புண்ணுக்குவதும் உண்டு.

6. பத்தியம். இதற்கு உஷ்ணபதார்த்தங்களை நீக்கி, கஞ்சியினங்கள் கொடுத்து, உடம்பை ஆதரிக்கவேண்டியது. சுத்தலங்கணமும், உப்பில்லாத பத்தியமும் உதவாது.

சாந்தகுணதாபிதம்

கிரானிக் இன்பிளமேஷன், CHRONIC INFLAMMATION

பிரதிபதங்கள்.—காலிகதாபிதம்.

இதில் குறிகள் மெதுவில்காணும்; நாள்பட இருக்கச் செய்யும்; உபத்திரவமும் அதிகமாய் இராது.

சிகிச்சை.—இதற்குமுதல் பேதிக்குக் கொடுக்கவேண்டியது; ரஸமருந்துகள் கொடுப்பதிலும் சுகுணம் பிறக்கும். துற்பலமுடையவர்களுக்கும், கண்டமாலைரோகப் பிரகிருதி யுடையவர்களுக்கும் காணுகிற சாந்தகுணதாபிதத்துக்கு, நல்ல ஊட்டம் கொடுத்து ஒயின், மீன்நெய், பலம்கொடுக்கிற மருந்துகள் இவைமுதலியவைகள் கொடுத்து, சரீரத்தைத் தேற்ற வேண்டியது. அவசியமிருந்தால் தாபிதங்கண்ட இடத்துக்கு அட்டைவிட்டு ரத்தமெடுத்து, படிக்காரஜல முதலிய துவர்ப்புள்ள ஜலத்தைப் போட்டு ரோகத்தைக்கண்டிக்கவேண்டியது. பிளிஸ்டர்போட்டு புண்ணுக்குவதிலும் சுகுணமுண்டு. வீக்கமிருந்தால், துணியை சுற்றிவைத்தால், அது கரைந்துவிடும். Chronic inflammation must be treated according to the condition of the patient. If he be plethoric, lower him; if emaciated, stimulate and support him.

சேர்க்கை

அட்ஹெஷன், ADHESION

காயம்பட்டபிறகு, அவ்விடத்தில் தாபிதம் அற்பமாய்க் கண்டு, லிம்ப் (lmyph) என்னும் நீர்சுரந்து, தாபிதக்குறிகள் போனபிறகு, தாதுக்கள் ஒன்றோடொன்று சேர்ந்துகொள்ளும். கத்திகாயங்களில் இந்த செய்கை

யுண்டாகிறது. சிரஸ்மெம்பிரேன் என்னும் சவ்வுக்கு தாபிதம் கண்டால், புரைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்வது வழக்கம்.

சிகிச்சை.—தாதுக்கள் ஒன்றோடொன்று சேர்ந்து, தடிப்பு கண்டால், அதற்கு ரஸமருந்து கொடுக்கலாம்; தேய்ப்பு, உஷ்ண பூசுத்தயிலங்கள், ரசக்களிம்பு, ஐயோடைன் களிம்பு, பிசையுதல், துணியால் அழுத்திச் சுற்றிக்கட்டுதல், ஈரத்துணி மேலேபோட்டுவைக்குதல், புண்ணுக்குதல் ஆகிய இவைகளால் வீக்கம் கரையும்.

பழுக்குதல்

சுப்பியுரேஷன், SUPPURATION

பிரதிபதங்கள்.—சீழ்க்கொள்ளுதல்; சீழுண்டாதல்

ஓரிடத்தில் தாபிதம் கண்டு, சீழ்க்கொள்ளுதலுக்கு, பழுக்குதல் என்று பேர். பழுத்து சீழ் உண்டாகிவிட்டால், அதற்கு வித்திருதி என்று சொல்லப்படும்; வித்திருதியில் அடங்கியிருக்கிற நீருக்கு சீழ் என்று பேர். பைபிரின் (Fibrine) என்னும் பசையானது கெட்டு மிருதுவாகி சீழாய் மாறிவிடுகின்றது.

வித்திருதி

ஆப்ஸெஸ், ABSCESS

பிரதிபதங்கள்.—சீழ்க்கட்டி; விப்புருதி.

ஓரிடத்தில் சீழ்க்கொள்ளும்போது வித்திருதி யுண்டாகும். இதில் உக்கிரவித்திருதி, சாந்தகுண வித்திருதியென இரண்டு சாதிகளுண்டு.

உக்கிரவித்திருதி.—தீவிரவித்திருதி. தீவிரவிப்புருதி. (அக்கியூட் ஆப்ஸெஸ், acute abscess). இந்த சாதி பிறக்கும்போது, தாபிதசுரத்தோடு காணும். சீழ்கொண்டபிறகு, சுரம் தணிந்துவிடும். சீழ்கொண்டவிடம் பளுவாயும், விரிந்துபோகிறதுபோல் தோற்றும், பிறகுகட்டி மிருதுவாகி, சிவந்த நிறமாறிவிடும். சீழ் அதில்பட்டால், கட்டி மத்தியத்தில் முகம் வைக்கும் (point); விரல்களால் விட்டு விட்டு அழுத்திப்பார்த்தால் சீழின் தத்தளிப்பு (பிளக்டியுஏஷன், fluctuation) விரல்களுக்கு தட்டுப்படும். பிறகு கட்டியானது பெருத்து, முகம்வைத்து, சிவந்து, தோல் நைந்து, பீத்தோல் வெடித்து, சீழ்வெளிப்படும். ஸ்தனம், குதம், உள்ளங்கை, உள்ளங்கால் முதலிய ஸ்தானங்களில் தடித்த சவ்வு இருப்பதால், அந்தசவ்வுக்கடியில் சீழ் கொண்டால் பரவும், முகம்வைக்காது, வேதனையும், சுரமும் பிரபலமாய் இருக்கும். பைப்பரின் (fibrine) என்னும் பசையானது, அணைபோல் சீழைச்சுற்றிக்கொண்டு பள்ளமுண்டாக்கும், அந்தப் பள்ளத்தில் சீழ்அடங்கியிருக்கும் (circumscribed abscess); பைப்பிரின் என்னும் பசையானது, சீழைச் சுற்றிக்கொண்டிராவிட்டால் சீழ் பரவிவிடும் (diffussed abscess). ராஜபிளவை, அக்கி இவைகளில் சீழ் பரவியிருக்கும்.

சீழ் வெளிப்பட்டபிறகு, அது இருந்த அறை சுருங்கி, அதில் சிறிய மாமிச அரும்புகள் விஸ்தாரமாய் உண்டாகும். இவ்விதமாய்ச் சதை வளர்ந்து,

குழி அடைந்து வரும்போது, அக்குழியின் துவாரம் ரணமாகி, அதன் ஓரங்கள் சேர்ந்து ரணம் ஆறிவிடும்.

விருத்திருதியில் கட்டிகளுக்குத்தகுந்தபடி சீழ் வித்தியாசப்படும். துற்குணமில்லாவிட்டால் (healthy pus), அந்தச்சீழ் மஞ்சல்சாயலாய் பாலேடுபோல் தளமாய், துர்வாசனையில்லாம லிருக்கும், ஜலத்தில் கரையாது; பூதக்கண்ணாடியால் பார்வையிட்டால் அணுக்கள் அகப்படும். An abscess is a collection of pus in a part or cavity; and is generally circumscribed; its formation is attended by the occurrence of rigors; a sensation of weight and throbbing in the part; and feeling of fluctuation. It generally points towards the nearest surface.

காரணங்கள்.—சில தருணங்களில், விருத்திருதி நிரேதுவையாய்க் காண்பதுண்டு. சுரம் முதலிய வியாதிகளால் தேகம் வித்தியாசப்பட்டும், அடிபட்டு ரத்தம் கன்றுவதினாலும், முள்ளு முதலியவைகள் தைப்பதினாலும், வித்திருதி காணுகின்றது.

சிகிச்சை.—வெந்நீர், துத்தியிலை, போஸ்தக்காய் இவைகள்போட்டு காச்சின வெந்நீர் ஒற்றிடங்கொடுத்து, அரிசிமாவின் களி கட்டிக்கொண்டு வந்தால், சருமம் தளரும், வேதனை தணியும், சீக்கிரத்தில் பழுத்து முகம் வைக்கச்செய்யும். ரொட்டிச்சதை, வெண்டைக்காய், புளிச்சக்கீரை இவைகளையும் களிசெய்துக் கட்ட உதவும். துணியை வெந்நீரில் நனைத்துவைத்து களிக்குபதிலாயும் கட்டலாம். கட்டியின் அடி பருக்காமல், சீழ் மேலுக்கு வந்து, முகம் ஏற்படுகிறதாய் இருந்தால், தற்செயலாய் உடையும்படி விட்டுவிடலாம்; ஒருவேளை சீழ்ப்பரவுகிறதாய் அகப்பட்டால், கட்டியைக் கீறி சீழை வெளிப்படுத்தி விடவேண்டியது, இல்லாவிட்டால் கெடுதி சம்பவிக்கும். ராஜபிளவை, ஆசனக்கட்டிகள், உள்ளங்கை, உள்ளங்கால், அக்கிள் கீல்சமீபம், ஸ்தனம், வயிறு, பீசம் இந்த ஸ்தானங்களில் காணுகிற கட்டிகள் ஆகிய இவைகளை சீழ்ப்பரவி கெடுதி நேரிடுவதற்குமுன் சீக்கிரத்தில், கீறிவிடவேண்டியது.

சீழ்க்கட்டிகளை, லான்செட் (lancet) அல்லது பிஸ்டிரி (bistoury) என்னும் கத்தியினால் முகம்வைக்கிற இடத்திலாவது, அல்லது சருமம் மெத்த மிருதுவாயும், நைந்துமிருக்கிற இடத்திலாவது குத்தி, உள்ளுக்குச் செலுத்தி, அகலமாய் வாய் ஏற்படும்படி சோதிக்கவேண்டியது; அழுத்தி சீழை வெளிப்படுத்துவதைப் பார்க்கிலும், தற்செயலாய் வெளிப்பட விட்டுவிடுவதே மெத்த உத்தமம். கீறினபிறகு, காயத்தில் திரிவைத்து, உதடுகள் சேர்ந்துகொள்ளாமற் செய்து, களிவைத்து கட்டவேண்டியது. வேதனை நீங்கி பள்ளத்தில் சதை வளர ஆரம்பிக்கிறவரையில் களிவைத்துக் கட்டினால் போதும், நாள்பட கட்டினால், சதைவளர்த்தி குறைந்து, சீக்கிரத்தில் ஆற மாட்டாது. பிறகு மடித்த துணியை வைத்து, கட்டுச்சீலையால் (Bandage) கட்டிவிடவேண்டியது. அதிக சீழ்வடிந்தால், நல்ல ஊட்டங்கொடுத்து, தேகபலம் வரும்படி மருந்துகள் கொடுக்கவேண்டியது. வாசஸ்தானத்தை மாற்றிவைப்பதிலும் பிரயோஜனமுண்டு. கட்டிகளிலிருக்கிற சீழ் தற்செயலாய்க் குறைந்து, கட்டிகள் கரைந்து விடுவதும் உண்டு; அதற்கு, சீக்கிரத்தில் கரையும்படி அழுத்திக்கட்டி, பேதியாகும்படி மருந்து கொடுத்து, பலவீனத்தையும் நீக்கவேண்டியது. நமது தேசத்தில், கட்டியைச் சத்திரம் செய்தபிறகு, நிமித்தமில்லாமல் காரச்சீலை, தைலம் முதலிய வெப்பகுண

முள்ள மருந்துகளைப் பிரயோகித்து, விருதாவில் ரோகியைக் கஷ்டப்படுத்துவது, இந்து ரணவைத்தியருக்குள் வழக்கமாய்விட்டது. Open early if pain or constitutional symptoms be very severe, or the abscess be situated in a position when it is likely to impair the use of the part, or if caused by extravasation of an irritating fiuid, among loose areolar tissue, bound down by fascia, or near a joint: poultices and water dressings; keep the surface moist.

சாந்தகுண வித்திருதி.—காலிகவிப்புருதி (Chronic Abscess.) இந்தச் சாதிகட்டிகள், கண்டமாலைப் பிரகிருதியுடையவர்களுக் காணுகிறது வழக்கம். கட்டி உடைகிற பக்குவமாய் இருக்கும்போது அதைக் கீறவேண்டியது, இல்லாவிட்டால் ரோகிக்கு அதித்துரையில் க்ஷீணம் உண்டாகும். இதற்கு ரோகியின் சரீர சவுக்கியத்தை விருத்திப்படுத்த, நல்ல ஊட்டம், குவைனு, மீன் நெய் இவை முதலியவைகள் கொடுக்கவேண்டியது. Chronic Abscesses are dependentuponthe scrofulous diathsis Treatment. Improve thc general health by good diet, quinine,cod-liver oil, &c..

பூயசம்பவசுரம்

எக்டிக் பீவர், HECTIC FEVER.

பிரதிபதங்கள்—பிரலேபகசுரம்.

நாள்பட்ட ரோகத்தினலாவது, துர்ப்பலத்தினலாவது, அதிக சீழ்வடியுதலினலாவது, இந்தசுரம் பிறக்கின்றது. வித்திருதியிலிருக்கிற சீழானது ரத்தத்துக் கேறிவிடுகின்றது.

லக்ஷணங்கள்—இதில் சரீரம் இளைத்து தாருட்டியம் குறைந்து, மேனி மாறி, கண்கள் குழிவிழுந்து இருக்கும்; பிரதிதினமும் சாயரக்ஷை குளிர்கண்டு சுரம்காணும்; தாகமெடுக்கும்; இது முன்னேரத்தில் நித்திராபங்கம் செய்யும், பிறகு புளிப்பு வியர்வைகண்டு, நித்திரை வரும்; நாக்கு சிவந்திருக்கும்; பேதி அனுசரிப்பதும் உண்டு; நாடி தீவிரகதியாய் நடக்கும். நடுக்கல் காண்பது, சீழ் கொள்ளுவதற்கு ஓர்குறி; சிலரில் குளிர் காணமலே சீழ் கொள்வதுமுண்டு, ஆனல் குளிர்காண்பது, ரத்தத்தில் சீழ்க்கலந்திருப்பதற்கு குறியாகின்றது. Hectic fever occurs in the course of chronic exhausting disorders, and is remittent. Symptoms;emaciation, pulse frequent small and weak;appetite variableor almost gone; e.acerbation in the evening with sleeplessness, heat and thirst; but towards morning patient falls asleep and wakes exhausted and saturated with perspiration.

சிகிச்சை.—முதல் கட்டியிலிருக்கிற சீழை வெளிப்படுத்திவிடவேண்டியது, அல்லது வியாதியுள்ள உறுப்பை அறுத்தெடுத்து விடவேண்டியது. 2-வது—நல்லபோஜனமும், ஒயின் சாராயமும், பாலும், கொடுத்து சரீரத்தைத் தேத்தவேண்டியது. 3-வது—அயம், கிங்கோனு முதலிய தேகத்தைப் பலப்படுத்துகிற மருந்துகள் கொடுக்கவேண்டியது. 4-வது பேதியிருத்தால், அபினியைச் சீமைச்சுண்ணும்பு குழம்போடு சேர்த்து கொடுத்தால் அது நிற்கும். கந்தகத்திராவகமும் பேதியை நிறுத்தும், வியவையும் கண்டிக்கும்.

Remove cause, as scrofulous joint which suppurates profusely, If it be impossible prolong life by good, nourishing, digestible diet, cod-liver oil, quinine ; change of climate.

அக்கி

இரிஸிபிலஸ், ERYSIPELAS, ST. ANTHONEY'S FIRE.

பிரதிபதங்கள்—உதர்த்தம்.

இது சருமத்துக்குக் காணுகிற தாபிதரோகம், பரவுகிற குணமும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் காண்கிற குணமுமுண்டு. தோலுக்கடியிலிருக்கிற சவ்வை அனுசரிப்பதும் வழக்கம். விஷபதார்த்தம் ரத்தத்தில் சேர்ந்து, இந்தரோகம் பிறக்கின்றது. தற்செயலாய்க் கண்டால், இடியோபாதிக் கென்றும் (idiocpathic)—காயங்களால் கண்டால், ட்ரோமாடிக் (traumatfc) என்றும், இங்கிலீஷில் சொல்லப்படும். ரத்ததூஷியத்தினல் முக்கியமாய் முகத்திலும் சிரசிலும் காணும் ; காயத்தினல் எவ்விடத்திலும் காண்பதுண்டு.

லக்ஷணங்கள்.—இந்த ரோகம், முதல் குளிரோடு சுரமும் வேதனையும் விகாரமுங்கண்டு பிறக்கின்றது ; பேதியும் அனுசரிப்பதுண்டு. 2-3-நாள் பிறகு சருமத்தில் சிவப்பும், வீக்கமும் அகப்படும் ; சிரசிலானல், மூக்கிநோரமாய்க் கண்டு முகமெங்கும் பரவும் ; உச்சி, கழுத்து, தோள்கள் இவ்விடங்களிலும் பரவுகிறதுண்டு ; உதடுகள் வீங்கும், கன்னங்கள் பருக்கும், கண்ணிமைகள் தடித்து கண்களை மூடிக்கொள்ளும், முகத்தை விகாரப்படுத்திவிடும் ; வியாதிகண்ட விடத்திலிருக்கிற சிவப்பு விரலால் அழுத்தினல் நிறம் மங்கலாகும் ; அவ்விடத்தில் எரிச்சலுமுண்டு. 3-4-நாள் சென்றபிறகு, சிவந்தநிறம் போய்விடும், வீக்கமும் தணியும், தோல் உரியும், சருமத்தைப்பற்றிய அக்கியானது சுலபமாய்ப் போய்விடும் ; சருமத்தின் கீழிருக்கிற சவ்வை அனுசரித்தால், கீழ்க்காணும், அழிரணமுண்டாகி பிரமாதம் செய்யும். ரோகம் மேலாகவிருந்தால், சிம்பில் (simple) என்றும், சவ்வைப்பற்றி யிருந்தால், பிளக்மொனஸ், (phlegmonous) என்றும் இங்கிலீஷில் சொல்லப்படும். இந்தரோகம் ஆளை மோசப்படுத்தும். வியாதி மூளைக்காவது, அல்லது அதின் சவ்வுகளுக்காவது பரவி, போதக்ஷயமுண்டாக்கியாவது, அல்லது சுவாசக்குழலி விறங்கி, மூச்சைஅடைத்தாவது ஆளைக்கொல்லும் ; இந்தரோகத்தில் காணுகிற துற்பலத்தினலும் மரணம் சம்பவிப்பதுண்டு. இந்தவியாதி பெருவாரியாய் பலருக்கு காண்பதும் உண்டு, அப்போது அற்பகாயம் இந்தரோகத்துக் கிடங்கொடுக்கும். Erysipelas, Two forms ; Erythema is a superficial redness of the skin, disappearing, on pressure, and going on to desquimation. General health very little affected. The symptoms of phlegmonous erysipelas, are fever, pains in back, and sickness ; dusky redness of the skin, not disappearing on pressure ; swelling ; is apt to be followed by suppuration and sloughing or even gangrene.

சிகிச்சை.—இதற்கு வெகுபத்திரமாய் சிகிச்சை செய்யவேண்டியது ; ஆரம்பத்தில் நல்லபேதிக்கொன்று கொடுப்பதில் அனுகூலமுண்டு, பத்தியம் லகு அசனமாய் இருக்கவேண்டியது ; குளிர்ந்த ஜலபானம் தாராளமாய்க் கொடுக்கவேண்டியது ; ரோகியை நல்ல காற்றுள்ள விடத்தில் படுக்கவைக்க

வேண்டியது ; இங்கிலீஷ் வைத்தியத்தில் குத்தி ரத்தம் வாங்கும்படி கண்டிருந்தபோதிலும், நமது ஜனங்களுக்கு அது உதவாது. இந்த வியாதியில் துற்பலமே மேலிட்டிருப்பதால், தேகபலம் வரும்படியான சிகிச்சையே செய்யவேண்டியது ; பால், கஞ்சியினங்கள், ஒயின் இவைகள் கொடுக்க வேண்டியது ; ஆக்கிராண உப்பும் உள்ளுக்குக் கொடுத்தால் நன்மைசெய்யும். இந்தவியாதி சுமார் 8-10-நாள் வரையிலிருக்கும் ; அயத்திராவகம் கொடுத்தால் சீக்கிரம் 3-4-நாளையில் போய்விடுமென்று சில வைத்தியர்களுடைய எண்ணம். மலக்கிரமம் முதலியவைகளை சீர்ப்படுத்திக்கொண்டு, இந்த திரவத்தில், 20-துளிவீதம், 4-மணிநேரத்துக் கொருதரம் கொடுக்கலாமென்று கண்டிருக்கின்றது.

மேலுக்கு போஸ்தக்காய் போட்டுக் காச்சினவெந்நீர் ஒற்றிடம் கொடுப்பதில் சவுக்கியமுண்டு. அரிசிமாவைத் தூவினால் எரிச்சலும் நமைச்சலும் அடங்கும். காலோடியன் (Collodion)என்னும் மருந்தை மேலுக்குப்பூசி, காற்றுப்படாமல் செய்வது இங்கிலீஷ் வைத்தியம். வியாதிகண்ட இடத்தைச்சுற்றிலும், டிங்சர் ஆவ் ஐயோடின் என்னும் மருந்தையாவது, காடிக்காரத்தையாவது தேய்த்தால் வியாதி படராது

வியாதி தோலின் அடிச்சவ்வை அனுசரித்து சீழ்க்கண்டு விட்டால், செவ்வையாய் வாய் ஏற்படும்படி கத்தியால் கீறி அந்த சீழை வெளிப்படுத்தி விடவேண்டியது. இப்பேர்ப்பட்ட ரோகங்களுக்கு அபினி, தேகபலம்வருகிற மருந்துகள், ஒயின் அல்லது பிராந்தி, நல்லபோஜனம் ஆகிய இவைகள் வேண்டியதாய் இருக்கும். இவ்வித சிகிச்சையை யறியாத நமது தேசஜனங்கள், பொற்கொல்லனிடத்தில் போய், முதல்நாள் உப்பும் 2-ம் நாள் மிளகும், 3-ம் நாள் மிளகாயுங் கொடுத்து, செங்காவியால் அக்கியின்மேல் சிங்கத்தைப்போல் ரூபமெழுதிவைத்து, மனதுக்கு நேர்ந்தபடி கஷாயம் முதலிய மருந்துகள் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. Tinct ferri internally and locally; clear bowels; generous diet and stimulants; or locally collodion or warm fomentations. When pus has formed, lay the part freely open.

விரணங்கள்

அல்சர்ஸ், ULCERS.

பிரதிபதங்கள்.—புண், பிளவை, கிரந்தி.

சரும மாமிசாதி தாதுக்கள் கெட்டு அழுகி விழுந்துபோய் பச்சைப்புண்ணாய் காணப்படுகிற இடத்துக்கு, ரணம் என்று பேர். ரணத்தில் ஊறுபுண், அழற்புண், சினப்புண், வெள்ளைப்புண், குழிப்புண், புரைப்புண், அழிப்புண், படர்ப்புண் என பலவிதங்களுண்டு ; அவைகளை இதனடியில் விவரிக்கப்படும்.

உறுபுண்.—ஆரோக்கிய விரணம். (ஹீலிங் ஆர் ஹெல்தி அல்சர் Healing or Healthy Ulcer) இதில் ஊன்கள் (கிரானியுலேஷன், granulation.) அனேகமாய்ச் சிறுத்து சிவந்து கூர்மையாய்இருக்கும் ; சீழ்மிதமாய் வடியும் ; பக்குகட்டி ஆறகிறகுணமுடையதாய்க் காணப்படும். ரணத்தின் ஓரமானது அழுத்தமாய் வெளுத்து தளதளப்பாய் மெல்லிய தோல்தளர்ந்திருக்கும் ; அத்தோல் உள்ளுக்கு வளர்ந்து விரணம் சிறுத்து ஆறிவிடும்.

சிகிச்சை.—ரணத்திலிருந்து அதிக சீழ்வடிந்தால், லின்டு என்னும் சீமைத் துணியையாவது, அல்லது பழந்துணியைப் பிச்சியாவது ரணத்தின்மேல் போட்டு கட்டிக்கொண்டுவந்து, சீழ் அடங்கின உடனே ஈரத்துணியாவது, மெழுகு களிம்பாவது போட்டுக்கொண்டு வந்தால் ஆறிவிடும். சதை அதிகமாய் வளர்ந்துவந்தால், காடிக்காரமாவது, துரிசாவது வைத்துத் தேய்த்தால், கரைந்துவிடும் ; அல்லது ரணத்தைக் கொஞ்சநேரம் காற்றுப்பட விட்டுவைப்பதிலும் சுகுணமுண்டாகும். In this the granulations are small, florid, pointed, and yield a moderate amount of pus. Treatment.—Dry lint if much discharge ; water dressing ; solid caustic passed over.

அழற்புண்.—தாபிதவிரணம் (இன்பிளேம்ட் அல்சர், Inflamed Ulcer). இந்த விரணம் சிவந்து ரத்தம் வடியும் ; சூடும் எரிச்சலுமுண்டு ; சுரமும் அநுசரித்திருக்கும் ; ரணத்திலிருந்து வடிகிற விஷநீர் பட்டவிடம் புண்ணாகும். இந்தசாதி விரணம், கூலிகாரர்களுக்குச் சாதாரணமாய்க் காணுகின்றது. சிகிச்சை.—இதற்கு ஆளை படுத்த படுக்கையில் வைத்து, ரணங்கண்டகாலை உயர்த்தி, பேதிமுதலிய மருந்துகள் கொடுத்து, சுரத்தை நிறுத்திக்கொள்ள வேண்டியது. பிறகு அபினியை ஜலத்தில் கரைத்து, அதில் துணியை நனைத்து ரணத்தின்மேல் போட்டு, வாழ இலையால் மூடி கட்டிக்கொண்டு வந்தால் சவுக்கியமுண்டாகும் ; துணி காயாமல் அடிக்கடி நனைத்துக்கொண் டிருக்கவேண்டியது. இதனால் சுகுணம் பிறக்காவிட்டால், குளிர்ந்த ஜலத்தைப் போட்டுக்கொண்டு வரலாம். அபினியாவது, குரோசானி யோமமாவது கொடுத்து, நல்லநித்திரை யுண்டாகும்படிச் செய்யவேண்டியது. Looks red, bleeds, feels intensely hot and burning ; fever. Treatment. Elevate the part, soothing applications, open bowels, salines.

சினப்புண்.—அழல் விரணம். (இர்ரிடேபில் அல்சர், Iaaitable Ulcer) சினப்புண்ணில் ஊண்கள் மெத்த சிறிதாயிருக்கும், அதிகவேதனை யுண்டு ; ரணத்தில் கைப்பட்ட மாத்திரத்தில் ரத்தம் காணும். சிகிச்சை.—இதற்கு புண்ணிருக்கிற காலை யெடுப்பாய்வைத்து, வேதனைநீங்க மருந்துகள் போட்டு, பேதியாக மருந்துகொடுத்து, நாடி, தேகஸ்திதி இவைகளின் குணமறிந்து உள்ளுக்கு மருந்துகொடுத்து, ரணத்தை வசப்படுத்தவேண்டியது. Granulations very small, very sensitive, bleed easily. Treatment.—Elevate the part ; use soothing applications ; purge. Constitutions treatment, as pulse, &c.—demand.

வெள்ளைப்புண்.—துற்பல விரணம், அபலவிரணம். (வீக்அல்சர், Weak Ulcer.) இந்த ரணத்தில் ஊன்கள் பெரிதாய், வெளுத்து, மிருதுவாய் ரணத்துக்குமேல் அதிகமாய் வளர்ந்திருக்கும் ; பக்குகட்டி ஆறுகிறகுணமிராது. சிகிச்சை.—இதற்கு படிக்காரஜலம் அல்லது வெங்காரஜலம் விட்டு கழுவி, ஸ்டிக்கிங் பிளாஸ்டர் தடவிய சீலையைக் குறுகலாய் நீண்ட வாட்டத்தில் கத்தரித்து ரணத்தின்மேல் போட்டுச் சுத்தி பாண்டேஜ் துணியால் கட்டிவிடவேண்டியது. நல்ல ஊட்டமும் தேகபலம் வரும்படியான ஔஷதங்களும் கொடுத்துக் கொண்டுவந்தால் ரணம் ஆறிவிடும். Large, flabby pale granulations rising above the level of the skin. Treatment.—Lint dipped in astringent lotion ; strap and bandage ; generous diet and tonics.

குழிப்புண்.—ஆறாப்புண், மந்தவிரணம். (இன்டொலென்ட் அல்சர், Indolent Ulcer.) இந்த ரணம் மழமழவென்று பளபளப்பாய் வெளுத்திருக்கும் ; ரணத்தின் ஓரமானது எடுப்பாய்த் தடித்து, வெளுத்து ஸ்பரிஸமில்லாமலிருக்கும் ; ரணத்திலிருந்து ஜலம்போல் வடியும். சிகிச்சை.—இதற்கு ஸ்டிக்கிங் பிளாஸ்டர் தடவிய சீலையைக் குறுகலாய் நீண்ட வாட்டத்தில் கத்தரித்து, ரணத்தின்மேல் போட்டுச் சுத்தி பான்டேஜ் துணியால் கட்டிவைக்கவேண்டியது. பிளாக் வாஷ், அல்லது பொட்டிலுப்பு திராவகம் கலந்த ஜலம் இவைகளிலொன்றை விட்டு ரணத்தைக் கழுவி, போல்டீஸ் வைத்துக் கட்டிக்கொண்டுவந்தாலும் சவுக்கியத்துக்கிடமுண்டு. இந்தச் சிகிச்சையோடு, பலம்வரும்படி உள்ளுக்கு மருந்துகளும், நல்ல ஊட்டமும் கொடுக்கவேண்டியது. வேப்பிலையை அறைத்துக் கட்டுவதிலும் சுகுணமுண்டு. Smooth, glassy, ashy-pale surface ; granulation (if any) weak and flabby ; edges raised and pale. Treatment.—Strap and banadge ; Black wash, or nitric acid lotion ; tonics and good diet.

புரைப்புண்.—ஓடுவிரணம் (பிஸ்டியுலஸ் அல்சர், Fistulous Ulcer.) சிகிச்சை.—புரையோடுகிற ரணத்துக்குள்ளிருக்கிற எலும்பு முதலியவைகளை நீக்கிவிட்டு சீழ்த்தங்காமல் உபாயந்தேடி, கடிக்காரஜலத்தையாவது, அல்லது பொட்டிலுப்புதிராவகம் கலந்த ஜலத்தையாவது, புரைக்குள் அடித்து, ஸ்டிகிங்பிளாஸ்டர் தடவிய சீலத்துண்டுகளை ரணத்தின்மேல் அழுத்திப்போட்டு, பான்டேஜ் துணியால் கட்டிவைக்கவேண்டியது. இவைகளால் அனுகூலமில்லாவிட்டால், புரையைக் கத்தியால் கீறிவகிர்ந்து, ஓரங்கள் கூடிக்கொள்ளாமல் மத்தியில் திரிவைத்து அடைத்து, பக்குவம்செய்துக்கொண்டுவந்தால், அடியிலிருந்து சதைவளர்ந்து ரணம் ஆறிவிடும். First remove any foreign body ; endeavour to excite abhesion by stimulating injections, weak acids, or caustic ; strap and bandage. If this fail, lay the fistula open.

அழிப்புண்.—அழுகுவிரணம் சிலப்பிங் அல்சர், Sloughing Ulcer. இதில் சரும மாமிசாதிகள் அழுகி, துர்மாமிசம் பிறந்திருக்கும். மேல்கண்ட ரணங்களிலெதாவது ஒன்று இந்தக் குணத்தில் வந்துவிடும் ; துர்வாசனையோடு துஷ்டரணமாய்த் தோற்றும் ; சதை வளர்த்தியிராது சிகிச்சை.—இதற்கு போஸ்தக்காய் ஒற்றிடம்கொடுத்து, அரிசிமாவு களியைக்கட்டிக்கொண்டு வரவேண்டியது ; களியோடு கரித்தூளாவது, அல்லது கள்ளாவது சேர்த்துக்கொண்டால், துர்வாசனையில்லாமல் செய்யும். துற்மாமிசம் வந்துவிட்டபிறகு, ரணமிருக்கிற ஸ்திதியையறிந்து சிகிச்சைசெய்யவேண்டியது. Rest in bed ; poultice ; when slough has come away, treat according to the character of the Ulcer.

படர்ப்புண்.—காதனம். (ஸ்பிரடிங் அல்சர், Spreading Ulcer) நல்லசதையைக் கெடுத்து, விருத்தியாகிற விரணத்துக்குப் படர்ப்புண்ணென்று சொல்லுவர். இதில் ரணத்தைச் சுற்றிலுமிருக்கிற ஓரமானது சின்னபின்னமாயும் ரணத்திலிருக்கிற துற்மாமிசம் பலநிறமாயு மிருக்கும் ; ரணத்திலிருந்து ரத்தமாவது நீராவது வடியும் ; துற்கந்தமுண்டு ; அதிக வேதனையெடுக்கும் ; சிலருக்கு சுரமும் அதிக அழற்சியும் காண்பதுண்டு. சிகிச்சை.—இதற்குப் பொட்டிலுப்புத் திராவகம் தடவி, களிவைத்துக் கட்டவேண்டியது. ஒயின், பிராந்தி, அம்மோனியா, பார்க்பவுடர், போஷாப்

புக்குடைய நல்ல போஜனம் ஆகிய இவைகளைக் கொடுத்து, சரீரசவுக்கிய முண்டாக்கி வைக்கவேண்டியது. வேதனை தணிந்து நித்திரைவர, அபினி அல்லது குரோசானியோமம் கொடுக்கலாம். ரோகியிருக்கிற இடத்தில் சுண்ணாம்பு நீர் தெளித்து, நல்ல காற்றுவீசும்படிச் செய்து, சுத்தியாய் வைக்கவேண்டியது. Destroy sloughing surface by nitric acid; support strength by bark and ammonia, wine, brandy, and nutritious diet; opium to ease pain, and procure sleep; charcoal or lime about bed aud room; scrub, whitewash, and ventilate.

அழுகிப்போகுதல்

மார்டிபிகேஷன், MORTIFICATION.

பிரதிபதங்கள்.—பதனழிவு. நைந்துபோகுதல்.

வியாதியினாலாவது, காயத்தினாலாவது, சரீரத்தில் ஓரிடத்திலிருக்கிற தாதுக்களின் சீவன் அற்றுப் போவதற்கு, அழுகிப்போகுதல் என்று பேர். இந்த வியாதியில் பலஜாதிகளுண்டு:—தாதுக்கள் அழுகி, மறுபடியும் பூர்வஸ்திதிக்குவர சக்தியில்லாமல் போவதற்கு, ஸ்பாஸிலஸ் (sphacelus) என்றும்—சவுக்கியமாகிற ஸ்திதியிலிருப்பதற்கு கான்கிரீன் (gangrene) என்றும், இங்கிலீஷில் சொல்லப்படும்.

காரணங்கள்.—இந்த ரோகத்துக்குக் காரணங்களனேகமுண்டு; துற்பலம், நீடித்த ரோகங்கள், குண்டுகாயம், எலும்புமுறிந்து தோலைக் காயப்படுத்துதல், ரத்த ஓட்டத்தில் தடைவுகாணுதல், ஸ்பரிச நரம்பில் காயம்படுதல் அல்லது நரம்பு துண்டித்துப்போகுதல் இவை முதலியவைகளால் இந்த ரோகம் உண்டாகும். தாபிதக்குறிகள் கண்டும், சிலரில் அவைகள் இல்லாமலும் இந்த ரோகம் ஜனிக்கின்றது.

தேகசவுக்கியம் கெடுதலால் காணுகிற அழுகல்.—(Constitutional gangrene.) இதில் வியாதிகண்ட விடமானது, சிவந்து பிறகு வீங்கி, கறுத்து, சில்லிட்டு அழுகிப்போகும். சிகிச்சை.—இந்த சாதிவிரணத்துக்கு, நல்ல போஷாப்பு கொடுத்து தேகத்தைச் சவுக்கியப்படுத்தவேண்டியது; கள்ளுகரித்தூள், பூசினிக்காய் ஆகிய இவைகளிலொன்று சேர்ந்த போல்டீஸ் ரணத்துக்கு வைத்துக் கட்டிக்கொண்டுவர வேண்டியது: அழுகி தொங்குகிற துற்மாமிசத்தைப் பிடித்திழுக்காமல், கத்தரித்து விடவேண்டியது. அதிகவேதனையை அபினிகொடுத்து தணிக்கவேண்டியது; ரணத்துக்கு பரவுகிறகுணம் நின்று, சிவந்தவரி (line of demarcation) ஏற்பட்டு, சஸ்திரக்கிரியையை சகிக்கக்கூடுமான தேகதாருட்டியம் பிறந்தபிறகு, சஸ்திரம் செய்யவேண்டியது. விரணத்துக்குக் கொஞ்சம் ஒத்தி, நல்ல சதை இருக்குமிடத்தைப் பார்த்து அறுக்கவேண்டியது. In consitutional gangrene, the parts become fiery red, then swollen, black, cold, and sloughy. Treatment.--Support the strength, charcoal or toddy poultice; chlorinated lime about the patient; opium to ease the pain. Do not amputate until the gangrene has ceased to spread; and then sufficiently high to make certain that you are in sound structures.

கெட்டரத்த ஓட்டம் தடையுற்று காணுகிற அழுகல்.—இநத சாதி முக்கியமாய் கால்களில் காணும். காணப்போகிற இடம், முதல் சில்லிட்டு,

பிறகு நீர்க்கொப்புளங்கள் கண்டு, பீத்தோல் உரிந்துவிடும்; அழுகலுண்டான விடத்தைச் சுற்றிலும் வீங்கி கன்றி முடிவில் கறுத்து அழுகிவிடும். சிகிச்சை.—ரோகியைப் படுத்தப் படுக்கையில் வைத்து, நல்ல ஊட்டங் கொடுத்து, அபினி கொடுத்து வேதனையைத் தணித்து, மலபந்தத்தை விரேசன மருந்துகளால் நீக்கவேண்டியது. அழுகின இடத்தின்மேல், மெழுகு களிம்பு போட்டு, பாதத்தைப் பஞ்சால் மூடி வாழ இலையைச் சுத்திக் கட்டி விடவேண்டியது. தாபிதகுணங்க ளிருந்தால், ஈரத்துணியைப் போட்டு, பத்திய போஜனம் கொடுத்துக்கொண்டு வரவேண்டியது. பிறகு அழுகின சதை இத்து விழும்படியாய், தாருட்டியகாரி மருந்துகள் கொடுத்து, ரணத்தின்மேல் உஷ்ண மருந்துகள் போட்டுக்கொண்டு வரவேண்டியது. இதற்குக் சேதனம் செய்வதில் பிரயோஜனமிராது.

கண்டமாலை

ஸ்கிராபியுலா, SOROFULA, STRUMA, KING'S EVIL.

பிரதிபதங்கள்.—சயதம்.

சரீரம் விகற்ப்பட்டு, இந்தரோகம் உண்டாகும்போது, வியாதியின் விஷம், உள்ளுறுப்புகளுக்கும், மாமிச கிரந்திகளுக்கும் பற்றி க்ஷீணித தாபித ரோகங்களும், விரணங்களும் பிறக்கும். இதில் இரண்டு சாதிகளுண்டு; 1-வது-ரோகிக்கு சருமம் மிருதுவாய், நாளங்கள் மேலுக் ககப்படும்; கண்கள் நீலநிறமாய், கன்னங்கள் அழகான நிறமாய், முகக்களை அறிவுள்ள தன்மையாய், நெற்றி உயர்ந்து விசாலமுள்ளதாய், புத்திகூர்மையுள்ளதாய் முயற்சியில் விடாததன்மையாய் இருக்கும். 2-வது-ரோகி மந்தபுத்தி, சோம்பல்தன முடையவனும் சருமம் தடித்து மங்கல் நிறமாயும், ரோமம் கறுத்துத் தடித்தும், கண்தாரை விரிந்தும், வயிறுபெறுத்தும், குணம் மெத்த மந்ததையடைந்திருக்கும்.

இவ்விரண்டிலும், சீரணசக்தி விகற்பப்பட்டிருக்கும்; நாக்கு மாவுபடிந்து, ஓரமும், நுனியும் சிவந்திருக்கும்; மேலுதடு தடித்திருக்கும்; போசனத்தில் அதிக பிரியமுண்டு; மலம் இறுகலாகும்; ரத்தம் நீராகியிருக்கும்; மாமிச தாது வெளுத்து, க்ஷீணப்பட்டிருக்கும்; ரத்தாசயம், நாடி, குடல்கள் மெலிந்து துற்பலப்பட்டிருக்கும். முதல் சாதி தேகப்பிரகிருதியுடையவனுக்கு, தேகம் சீக்கிரத்தில் வளரும், நல்ல லக்ஷணமாய் உயர்ந்திருப்பான் மார்பு விசாலமாய் இருக்கும்; சிறுபிராயத்திலேயே போகத்தில் விருப்பம் கொள்ளும். ஸ்திரீகளுக்கே இந்தப் பிரகிருதியுண்டாகுவது வழக்கம். இரண்டாம் சாதி தேகபிரகிருதியுடையவனுக்கு, வளர்ச்சி மந்தப்படும்; மார்பு ஒடுங்கியிருக்கும்; உறுப்புகள் குரூபமடைந்திருக்கும்; இக்குணங்களும் ஸ்திரீகளுக்கே விசேஷித்து காணலாம்.

காரணங்கள்.—கண்டமாலை ரோகப்பிரகிருதி, ஜன்மத்திலிருந்தே இருப்பதே வழக்கம்; ஆனால் மேகநீர் தேகத்தில் ஊறல், தேக அசுத்தி, போஜனம், வஸ்திரம் இவைகளில் ஹீனம், கெட்டகாற்று, அதிக போகம், அதிக வாசிப்பு ஆகிய இவைகளாலும் இந்தப் பிணி உண்டாகும். வேறு வியாதிகளினால் இது காண்பதும் உண்டு. ரத்த தாஷியத்தினால் காணுகிற இது ஒரு வியாதி; ரத்தத்திலிருக்கிற லிம்ப் (lymph) என்னும் பசையானது கெட்டு அங்கங்கே தங்கி இந்த ரோகம் ஜனிக்கின்றது. குழந்தையில் மணிக்குடலையும்—யவ்வனத்தில் மூட்டுகளையும்—நடுப்பிராயத்தில் நுரையீரலையும் இந்த வியாதி அனுசரிக்கும்.

சிகிச்சை.—இதில் முதல் போஜன கிரமத்தை அனுசரிக்கவேண்டியது; அது நல்லதாயும், குருத்துவமில்லாததாயும், போஷணிக்கிற தன்மையுடையதாயும் இருக்கவேண்டியது. மருந்துகளில் குவைனா, மீன் நெய், நன்னாரி, அயம், ஐயோடைன், மரஉப்பு இனங்கள் ஆகிய இவைகளைவிட இந்தரோகத்துக்குக் கொடுக்க வேறொன்றுமில்லை. பிணியாளர் எப்போதும், கம்பளி அரைச்சொக்காய் தரித்துக்கொண்டே இருக்கவேண்டியது. பிரதிதினமும் ஸ்நாநம் செய்து உடம்பை சுத்தியாய் வைத்திருக்கவேண்டியது; பரிசுத்த காற்றுள்ளவிடத்தில் குடியிருக்கவேண்டியது; ஆயாசம் பிறக்காமல், வெளியில் போய் உலாத்திக்கொண்டு வரவேண்டியது; சீதகாலத்தில் நாட்டிலும், வெயில்காலத்தில், சமுத்திர தீரங்களிலும் வாசம் செய்யவேண்டியது; வாசிப்பை குறைக்கவேண்டியது, அல்லது விட்டுவிட்டாலும் நல்லது இவைகளுக்கெல்லாம் மேலான சிகிச்சை, கப்பல் யாத்திரை செய்வதேயாம் Good plain nutritious deit; quinine, cod-liver oil, sarsaparilla, iron, iodine, alkalies; flannel next to skin; keep up action of skin by daily general ablutions; freshair, exercise short of fatigue: town residence in winter, seaside in summer, little or no study or mental excitement; above all, a few sea voyages.

கண்டமாலை சம்பந்தமான சில முக்கிய வியாதிகள்

PARTICULAR STRUMOUS DISEASES.

1.—சருமத்தையனுசரிப்பது. இந்தவியாதி கரப்பனையும் உண்டாக்கும்; செவி முதலிய மிருதுவான ஸ்தானங்களில் சிறிய கொப்புளங்கள் பிறந்து, பிறகு தோலுரிந்து நீராக சீழ்வடியும்; அந்தச் சீழ் உலர்ந்து பக்குகட்டிகொள்ளும். சிகிச்சை —சிரங்கைச் சவுக்காரமிட்டு நன்றாய்க் கழுவி, நாக உப்புக்களிம்பாவது, சிட்ரன் ஆயிட்மெண்ட் என்னும் களிம்பாவது தடவிக்கொண்டுவந்தால் சவுக்கியமடையும். உள்ளுக்குத் தகுதியான ஔஷதம் கொடுத்து, சரீரத்தையும் சவுக்கியப்படுத்தவேண்டியது.

2.—கண்டமாலை சம்பந்தமான நாள்பட்ட வித்திருதிகட்டிகள். (Chronic Strumous Abscesses). இந்தக்கட்டிகள் மெதுவில்வளரும். சிகிசசை.—காரம்வைத்து சீழைவெளிப்படுத்தி, பிறகு ரணத்துக்குச் செய்கிற கிகிச்சையே செய்துகொண்டு வரவேண்டியது.

3.—கண்டமாலை. (சோஷணக்கிரந்தியின் சயதம்.) கழுத்திலுள்ள நெறிகள் வீங்கி மாலைபோல் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருப்பதால், கண்டமாலை என்று பேர்பெற்றது. இந்த நெறிகள் வீங்கி கொஞ்சம் தாபிதம்கொள்ளும். அந்தத்தாபிதம் கரைந்துப்போவதுமுண்டு; அப்படிச் கரையாவிட்டால், நெறிக்கும், சருமத்துக்கும் மத்தியில் சீழ்க்கொண்டு, உடைந்து நெறிகளுக்கு ஒன்றும் சம்பவிக்காமல், புண் ஆறிப்போவதுண்டு; சிலருக்கு நெறியிலும் ரணம் கண்டு, அது அழிந்துப்போய், ரணம் ஆறினபிறகு, சருமம் மடிப்பு மடிப்பாய்க் காணப்படும். சிலருக்கு இந்தசாதி விரணம் ஆறவது பிரயாசை சிகிச்சை.—மேல் விவரித்தபிரகாரம் தேகத்தைச் சவுக்கியப்படுத்தி, வீக்கம் கரைய, உப்புஜலத்தைச் சுடவைத்து ஒற்றிடமிடவேண்டியது. வீக்கத்திலிருக்கிற கொதிப்பு அடங்கினபிறகு ஐயோடைன், ரசப்பிளாஸ்திரி இவைகளில் ஒன்றைத் தடவலாம். சீழ்க்கொண்டுவிட்டால், வித்திருதி கட்டிக்குச் சொன்ன சிகிச்சை செய்யவேண்டியது.

4.—கணை. சிணைத்த. (Tabes Mesenterica.) குடலிலும், தோஞ்சையிலுமிருக்கிற நெறிகள் வியாதிகொண்டு இந்தரோகம் பிறக்கின்றது. கழுத்தில் காண்பதுபோலவே இவைகளுக்கும் காணும். இதில் குழந்தை இளைத்துப்போகும்; அதிக பசியெடுக்கும்; வயிறு பெறுத்து கல்லுபோலிருக்கும்; சருமம் வரகூதியாய் இருக்கும்; கண் சிவந்து, வாய் நாற்றமெடுக்கும்; மலம் வேளைக் கொருவிதமாய்ப் போகும்; சிலபோது வறண்டும், சிலபோது இளகலாயும் போகும். கடைசியில் தோஷசுரம் கண்டு, குழந்தை குரங்குக் கொப்பாய்க் கை கால்கள் உலர்ந்து இறந்துவிடும். சிகிச்சை.—மாமிசரசமுதலிய போஷாப்புச்குடைய ஆகாரமும், சிங்கோனு, சவ்வீரம் முதலிய மருந்துகளுங் கொடுத்து, உப்புஜலம் சுட வைத்து அதில் ஸ்நானம் செய்வித்து, வயிற்றின்மேல் உஷ்ணமான தயிலங்கள் பூசி, நல்ல காற்றுள்ள விடத்தில் கொண்டுபோகவேண்டியது. மீன் நெய்யிலும் சவுக்கியம் பிறக்கும். Strumous enlargement of the mesenteric glands. Symptoms.—The child wastes, and its belly becomes tumid; the intestines inflame and ulcerate; and after a long timg the child dies, presenting the appearance of a skinny, shrivelled monkey. Treatment.—Besides that usually employed give decoct. Cinchon and liq. Hydrarg, perchlor; also use stimulating linements to abdome

கட்டிகள்

பிரதிபதங்கள்.—கழலை, கிரந்தி, பரு, சிலந்தி.

ட்யூமர்ஸ், TUMORS.

சரீரத்தி லெவ்விடத்திலாவது போஷணைபேதம், அல்லது போஷணை அதிகப்படுவதினால், விருத்தமான கட்டிகள் பிறக்கின்றன. கட்டியின் தாது, அது காணுகிற உறுப்பின் தாதுவுக்கு வித்தியாசப்பட்டிருக்கும்; உறுப்புக்குச் சம்பந்தமில்லாமல் இந்தசாதிக் கட்டிகள் பருக்கும். கட்டிகளில் அநேக சாதிகளுண்டு, அவைகளை இதனடியில் விவரிக்கப்படும்—

கொழுப்புக் கட்டி.—நிணக்கழலை, மோதோ கிரந்தி (பாடிடியூமர், Fatty Tumor.) கொழுப்படைந்திருக்கிற சவ்வு வளர்ந்து இந்தசாதி கட்டி பிறக்கின்றது. சரீரத்திலெங்கும் காணும். இதில் ரத்த நரம்புகள் அதிகமாய் இராது; முடிச்சு முடிச்சாய் உருண்டு, மெதுவில் வளரும்; வேதனையிராது; 40-பவுன் பாரமுள்ளதாய், பருத்திருப்பதுமுண்டு சிகிச்சை.—லைகர் பொடாசி (liquor potassæ) என்னும் மருந்தைக் கொடுத்துக்கொண்டு வந்தால், கட்டி கரைந்துவிடும். ஐயோடின் மருந்து தடவிக்கொண்டு வந்தபோதிலும் சுகுணமுண்டு. எதற்கும் நீங்காமல், விகார ரூபமாய்விட்டால், அதை அறுத்தெடுத்து விடவேண்டியது. Fatty tumors are soft. and nodulated, grow slowly, and give no pain. Treatment.—Apply iodine, or remove on acoount of their unsightly appearance.

இழைக்கட்டி.—இழைக்கழலை, தந்துமயக்கட்டி. (பைப்பிரஸ்டியூமர், Fibrous Tumor.) இதை அறுத்துப் பார்வையிட்டால், உள்ளே இழைகளைப் போலும், தொட்டால் கல்லைப்போல் கட்டியாயுமிருக்கும்; மெதுவில் விருத்தியடையும்; தாபிதம் உண்டானலொழிய, வேதனையிராது; சிலருக்கு தேங்காயிலும் பெரிதாகும்; அப்படியானபோதிலும் யாதொரு உபத்திரவ

யின்றி ஜீவிதகாலம்வரையிலு மிருக்கும். சில பருத்து, தாபிதம்கொண்டு, ரணமாகி ஆறாமல் உபத்திரப்படுத்தும். சிகிச்சை.—அறுத்தெடுத்து விடு வதே இதற்குச் சிகிச்சை. மறுபடியும் கட்டி பிறக்காமல் உள்ளுக்கு மருந்து கொடுத்துக்கொண்டு வரவேண்டியது.

முருந்துக்கட்டி.—(கார்டிலேஜ் டியூமர், Cartilage tumor. Enchondroma) இதில் முருந்தைப்போல் பதார்த்தம் உள்ளே இருக்கும். முக்கிய மாய் விரல்களில் காணும். சிகிச்சை.—அறுத்தெடுத்து விடுவதே இதற்குச் சிகிச்சை. இதற்கடியிலிருக்கிற எலும்பு மெத்தக் கெட்டிருந்தால், அதை யும் நீக்கிவிடவேண்டியது.

கோளக்கட்டி.—கிளான்டியுலர் டியூமர் Glandular Tumor.) கோளங் களிலிருக்கிற பதார்த்தமாய், இவ்வித கட்டிக்குள்ளிருக்கும்; ஸ்திரீகளின் ஸ்தனங்களில் இது காண்பது வழக்கம்; வேதனையிராது; கொஞ்சம் மிரு துவாயிருக்கும், ஜிவ்விடம்; உருண்டை உருண்டைகளாயிருக்கும்; தற் செயலாய்க் கரைந்துவிடுகிற தன்மையுமிதற் குண்டு. சிகிச்சை.—ஐயோ டம், அயம் இவைகளைக் கொடுத்தால், கட்டி விருத்தியாகாமல் செய்யும். ஆனால் இதற்குச் சேதனமே ஆவசியம் வேண்டியது. அறுத் தெடுத்தபிறகு, மறுபடி காண்பதும் உண்டு.

கோச ஆகாரக்கட்டி.—கைக்கட்டி, நீர்க்கட்டி. (ஸிஸ்டிக்டி யூமர், Cystic Tumor) இது பையைப்போலிருக்கும், கட்டிக்குள்ளிருக்கிற பதார் த்தம் தடித்தாவது நீராயாவது இருக்கும்; கட்டி மிருதுவாய் அகப்படும்; மெதுவில் வளரும்; வேதனையிராது. சிகிச்சை.—அறுத்தெடுத்து விடுவதே இதற்குச் சிகிச்சை.

கறுப்புற்று.—(மிலனோஸிஸ், Melanosis; Black Cancer.) இந்தச் சாதி பல விடங்களில் கண்டபோதிலும், கண்ணில் காண்பது வழக்கம். கறுத்த பசை இதனுள்ளிருக்கும். இந்த வியாதியுடைய ரோகிகள், 2-வருஷத்துக் கதிகம் ஜீவித்திருப்பது அரிது. சிகிச்சை.—சரீரம் சவுக்கிய ஸ்திதியிலிருந்தால், கட்டிகளை அறுத்துவிடலாம். தேகசவுக்கியம் குறையாம லிருக்க ஔஷதம் கொடுக்கவேண்டியது.

புற்றுரோகம்

பிரதிபதங்கள்.—விரணகிரந்தி.

கான்சர், CANCER.

இது கொடிய வியாதி. தேகத்துக்குக் குரியதல்லாத ஓர் கெட்ட தாதுவால் உண்டாகின்றது. சரீரத்தில் எந்த விடத்திலும் காணும். இந்த ரோகத்துக்குடைய குணங்களாவன: (1) வியாதி கண்டு சில நாட்செ ன்றபிறகு பரவும். (2) இது காணுகிற உறுப்பு கிரமேணுய்க் கெட்டு சுவாபீகத் தன்மையில்லாமல் போகும். (3) நிணநரம்புகள் வழியாய் இதின் விஷம் சென்று, அடுத்திருக்கிற நெறிகளில் வியாபிக்கும். (4) அறுத்தெடுத்த பிறகு, மறுபடியும் அவ்விடத்திலாவது, அல்லது வேறு விடத்திலாவது வியாதி ஜனிக்கும்.

காரணங்கள்.—ரத்ததூஷியத்தினால் சரீரத்தில் விகல்பமுண்டாகி இந்த, துஷ்டரோகம் ஜனிக்கின்றது. இவ்வித சரீர விகல்பம், ஜன்மத்திலிருந்தா

வது, அல்லது வேறு காரணங்களால், ஜன்மித்த பிறகாவது காணும் இதில் 4-சாதிகளுண்டு.

1. கடினப்புற்று.—வன்புற்று (ஸ்கிர்ரஸ், Scirrhus). இந்த சாதி ஆரம்பத்தில்தானே கல்லுபோலிருக்கும்; அடிக்கடி குத்தல் காணும்; பளு வாயிருக்கும். தேக சவுக்கியமிராது; இதில் சிறிய மணிகள்போல் அணுக்கள் காணப்படும், அவைகளுக்கு கான்ஸர் ஸெல்ஸ் (cancer cells) என்றும், புற்றிலிருக்கிற துர்நீருக்கு, கான்ஸர் ஜூஸ் (cancer juice) என்றும் பேர். சிலநாள் சென்றபிறகு உபத்திரவம் அதிகரித்து வியாதி பரவி அடுத்த தாதுக்களோடு சேர்ந்து, சருமத்தையும், அதுக் கடியிலிருக்கிற சவ்வையும் அனுசரித்து, முடிவில் அழுக ஆரம்பிக்கும்; அப்போது கட்டியில் வித்திருதியுண்டாகும்; சருமம் நீங்கி புற்று வெளிப்படும். இவ்விதமாய் ரணம் உண்டாகி, சுற்றிப்பரவும்; ரணத்தின் ஓரம் தடித்து சொறசொறப்பாய், ரணம் செல்லடித்ததுபோலு மிருக்கும். இதிலிருந்து வடிகிற கீழ் ஜலம்போல் நாற்றமெடுக்கும்; புண்ணில் எரிச்சலுண்டு. சிலரில் தெய்வச்செயலாய் ஆறிவிடும், ஆனால் ரணம் அதிகரித்து, அதனோடு சேர்ந்திருக்கிற உறுப்புகளையும் கெடுத்து வேதனையையும் அழற்சியையும் அதிகப்படுத்தி, ரோகியைக் கொல்லுவது வழக்கம். அது அசாத்திய ரோகமாய் இருந்தபோதிலும், தேகசவுக்கியம் மெத்த விகற்பப்படாம லிருந்தால், நெடுநாள் (50-வருஷம்) ஆளைக்கொல்லாமலு மிருக்கும். 30-வயதுக்கு உட்பட்டவர்களில், இந்நோய்க் காண்பது அரிது. கருப்பாசயம், ஸ்தனம், அன்னசயம், கன்னம், முகம் ஆகிய இவ்விடங்களில் இந்தவியாதி சாதாரணமாய் உண்டாகின்றது. புருஷாளில் பார்க்கிலும் பெண்களில் மிகுதியாய்க் காணலாம். Scirrhus composed of fibrous tissue with caudate cancer cells freely dispersed throughout. When cut it grates under the knife, and by squeezing a "cancer juice" may be expressed. it is known by its stony hardness, the stabbing pain, and the patient suffering from the cancerous cachexia. It must commonly affects the mammæ and uterus; and after the age of 70 will remain open of years without destroying life.

சிகிச்சை.—சேதித்து விடுவதே இதற்குப் பிரதான சிகிச்சை. இந்த வியாதி வேரூன்றி, பக்கத்திலிருக்கிற தாதுக்களைப்பற்றி வியாபிக்கிறதற்கு முன், அறுத் தெடுத்துவிட்டால் சிலநாள்வரையில் மறுபடியும் காணமல் இருந்தாலுமிருக்கும்; பக்கத்திலிருக்கிற கோளங்களிலும் வியாதி அனுசரித்துவிட்டால், அறுத்தெடுத்தபோதிலும் பிரயோஜன மிராது. புற்றை அறுத்தெடுத்தால் சிலநாள்வரையில் ரோகி சவுக்கியமாய் இருப்பான், ஆனால் எப்படியும் பிராணவதை செய்யாமல் இருக்கமாட்டாது. இந்தவியாதியில், தேகசவுக்கியம் கெடாமலிருப்பதையும், புற்று தோலுக்கும் சவ்வுக்கும்சம்பந்தப்படாமல் இருப்பதையும், உதடில் காணுகிறதையும் அறுத்தெடுப்பதில் கொஞ்சம் அனுகூலத்துக்கிடமுண்டென்று நம்பலாம்; சருமமும் மற்ற தாதுக்களும் கட்டியோடு ஒட்டிக்கொண்டும், விரணம் அதிகமாய்ப் பரவியும், வியாதி சோஷணைக் கிரந்திகளையும், சரீரத்தில் வேறு வியாதிகள் தொற்றித்தும் இருந்தால், சத்திரமிடத் துணியலாகாது. புற்றைக் காரமிட்டுக் கரைப்பதும் ஒருவிதச் சிகிச்சை குளோரைட் ஆவ்சிங்கு, பாஷாணம் இவைகளிலொன்றைப் போடலாம். தேகசவுக்கிய முண்டாக்கவும், மறுபடியும் புற்றுக் காணமலிருக்கவும், உள்ளுக்கு மருந்து கொடுக்கவேண்டியது; பாஷாணம், ஐயோடைன் இவைகளைவிட நல்ல மருந்து ஒன்று

மில்லை. If removed before it has "taken root," and become fixed to the structures below, it probably will not return for some timef When the neighbouring glands are affected the knife is of no use. Oparation certainly give temporary relief, but it is doubtful whether they prolong life. Some destory the cancerous mass by escharotics. If any medicines administered internally afford relief they are arsenic, iodine, and opium.

மிருதுவானபுற்று.—மென்புற்று. (Encephaloid; Medullary sarcoma; Fungus hæmatodes.) இந்தச்சாதி இளமை வயதில் காணும்; முக்கியமாய் பீஜத்தில் காண்பது வழக்கம். இது சீக்கிரத்தில் வளரும்; தொட்டால் மிருதுவாயும், சிவ்விட்டுமிருக்கும்; நாடிகள் அதிகமாய் இருப்பதால், நாடியின் அடி விரல்களுக்குத் தட்டுப்படும். கட்டியை அறுத்தால், மூளைபோல் இருக்கும்; சருமம் ரணமாகிவிட்டால், அதின் வழியாய்க்கட்டி வெளிப்படும்; ஒருவேளை கட்டியிலிருந்து அதிக ரத்தம் வடிந்தால், ரோகி இறந்துவிடுவாள். This occurs in the young, and most often invades the testes; it grows rapidly, feels soft and elastic, and is so vascular that it frequently has distinct pulsation. A section looks like brain streaked with bloodvessels. When the skin ulcerates through, it fungates rapidly, and eventually destroys life by repeated hæmorrhage.

சிகிச்சை.—இந்தச்சாதி புற்றை அறுத்தெடுத்தால், அதிக ரத்தம் காணும் ஆகையால், ஈரத்துணியை மேலுக்கு போட்டுவைத்து, பிரதானநாடி நரம்புகளைக் கட்டிவிடவேண்டியது. வேதனை தணிய அபினியும் தேகசவுக்கியம் உண்டாக நல்ல ஊட்டமும் கொடுத்துக்கொண்டு வரவேண்டியது. As extirpation would cause frightful hæmorrhage, we must rest satisfied with cold applications, ligature of the principal arteries opium to ease pain and good diet.

யானைக்கால்

பிரதிபதங்கள்.—சிலீபதம்.

எலிபான்டையேசிஸ், ELEPHANTIASIS.

இதில் தோலும், சவ்வும், எலும்பும் பருத்து, அவைகளில் நீர்க்கொண்டிருக்கும். இந்த வியாதி உஷ்ணதேசத்தில் காணுகின்றது; நமது நாட்டில் சிலருக்கு பீசைப்பையை அனுசரித்து, 50-60 பவுன் கனமுள்ளதாய்ப் பருத்துப்போவதும் உண்டு. கொச்சி முதலிய பச்சிம பிரதேசங்களில், யானைக்காலுடையவர்களை அதிகமாய்க் காணலாம். இது ஒருவித தேகப் பிரகிருதியினால் உண்டாகின்றது; பிறக்கும்போது குளிரும் காச்சலும் காணும்; வியாதியுண்டாகிற விடத்தில் வேதனையும் வீக்கமுமிருக்கும்; சோஷணக்கிரந்திகள் வீங்கி நோவெடுக்கும். இக்குறிகள் அடிக்கடி சிலநாள் வரையில்கண்டு முடிவில், வியாதிகொண்ட காலானது யானைக்காலைப்போல் பெருத்து, விரூபமாய்விடும். சருமத்திலிருந்தாவது, ஒருவேளை ரணங்கண்டால் அதிலிருந்தாவது, ஒருவித விஷநீர் வெளிப்படும்.

சிகிச்சை.—வியாதியை அறுத்தொடுத்து விடுவதே இதற்குச் சிகிச்சை.—வியாதியின் ஆரம்பத்தில் விரேசன ஔஷதங்கள் கொடுத்து, பிறகு

தாருட்டியகாரி மருந்துகளை ஏற்றி, காலைத் துணியால் இழுத்துச் சுற்றிக் கட்டிவைத்தால், வியாதி சீக்கிரத்தில் வளரமாட்டாது.

3. அத்தியாயம்

காயங்கள், ஊறுகள்

ஊண்டஸ், WOUNDS.

காயங்களில் வெட்டுக்காயம், குற்றுக்காயம், நசுங்கல், சின்னபின்னமாய்க் கிழிந்த காயம், குண்டுக்காயம் என 5-சாதிகளுண்டு; அவைகளை இதனடியில் விவரிக்கப்படும்.

வெட்டுக் காயம்.—(இன்சைஸ்ட் ஊண்ட். Incised Wound.) கத்தி போலொற்ற கூர்மையான ஆயுதங்களால் உண்டாகிறகாயத்துக்கு வெட்டுக் காயம் என்று பேர். காயத்தின் பிரமாணத்துக்குத் தக்கபடி வேதனையும் ரத்தப்பெருக்கும், இருக்கும். This is inflicted by a sharp instrument.

சிகிச்சை.—இதற்கு முதல் ரத்தப்பெருக்கை நிறுத்தவேண்டியது, பிறகு காயத்திலிருக்கிற மணல் முதலிய துஷ்டுகளை நீக்கிவிட்டு, காயத்தின் ஓரங்களைச் சேர்த்துவைத்துக் கட்டிவிடவேண்டியது. காயத்தின்மேல் ஈரத்துணியைப் போட்டுவைத்தாலும் சரி, அல்லது படிக்கார ஜலம்விட்டாலும்சரி, அல்லது காயத்தை மெதுவாய் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தாலும் சரி, பனம் பஞ்சாவது, தென்னம்பஞ்சாவது, காயத்தில் வைத்துக் கட்டினலும்சரி, ரத்தம் நிற்கும். காயம்பட்ட உறுப்பை உயர்த்தி வைக்கவேண்டியது. ஒருவேளை பெரிய நாடி நரம்பு ஏதாவது அறுந்து ரத்தம் பெருகினல் அதைப் பட்டுக்கயிற்றால் கட்டிவிட வேண்டியது. இவ்விதமாய் ரத்தத்தை நிறுத்திக்கொண்டு, காயத்தின் உதடுகளைச் சேர்த்துவைத்து, ஒட்டுப் பிளாஸ்திரி தடவிய சீலைத்துண்டுகளைக் குறுக்காய்ப்போட்டு துணிமடித்து வைத்து, நீண்ட கட்டுத்துணியால் ஆளுக்கு இதவாய் இருக்கும்படிக் கட்டி, காயம் விரியாமல் செய்யவேண்டியது. காயத்தில் நீர்பட்டால் சீழ்க்கொள்ளுமென்று, நமது ஜனங்கள் பயந்து, கரி முதலியவைகளை வைத்துக் கட்டி, காயத்தை அதிகப்படுத்துவதும் உண்டு. அப்படிப் பயப்படாமல், காயங்களுக்கும், ரணங்களுக்கும் தாராளமாய்ச் சீத ஜலம் உபயோகிப்பார்களாகில், அதினுடைய நற்செய்கை பின்னிட்டு அவர்களுக்குத் தெரியும். பிரபல காயங்களைத் தையலிட்டு உதடுகளைச் சேர்த்து வைக்கவேண்டியது. தாபிதம் கொள்ளும்படியாய் இருந்தால், ஈரத்துணியைப் போட்டு, பத்தியமாய் வைத்து, பேதிமருந்துகள் கொடுத்து அதைக் கண்டிக்கவேண்டியது. Remove foreign bodies, arrest bleeding, appose the sids of the wound, keep them in apposition.

குற்றுக் காயம்—(பங்சர்ட் ஊண்ட், Punctured wound.) ஈட்டி, எழுத்தாணி இவைகளைப்போலொற்ற கருவிகளால் உண்டாகிற காயங்களுக்குக் குற்றுக்காயம் என்று பேர். சீழ்க்கொள்ளுவது வழக்கம், அந்தச் சீழ் வெளிப்பட வழியில்லாமல் அடைபட்டு புரைகள் காணபதுண்டு. ஒருவேளை காயம் ஆழத்திலிறங்கி, ரத்தக்குழல்கள், ஈரல், நுரையீரல் முதலிய உறுப்புகள் காயம்பட்டால், அபாயம் நேரிடும். இதில் வலி காண்பதுமுண்டு, வேதனையும் அதிகமாய் இருக்கும். These wounds involve hidden danger, and are very painful.

சிகிச்சை —காயத்தில் தாபிதம் காணுமலிருக்கப் பத்தியமாய் வைத்து, விரேசனம் செய்வித்து, ஈரத்துணியைக் காயத்தின்மேல் போட்டுவைக்க வேண்டியது. வேதனையும், வீக்கமும், சுரமும் அதிகமிருந்தால், காயத்தைக் கீறி, வித்திருதிக் கட்டிக்குச் செய்கிற முறையாய்ச் செய்து, வசப்படுத்த வேண்டியது. ஊசியாவது, முள்ளாவது, தைத்து முறிந்துவிட்டால், கீறி அதை எடுத்துவிட வேண்டியது ; எடுக்கக்கூடாமையாய் இருந்தபோதிலும் சரி, அல்லது நாட்சென்று விட்டாலும்சரி, தாஞய்ப் பழுத்து வெளிப் படும்படி விட்டுவிடுவதே நல்லது. Convert them into incised wound, and enjoin perfect rest and low diet. Order purgatives and cold lotions.

நசுங்கல்.—சதைவுகாயம். (கண்டியூஷன், Contusion) கல்லு, பிரம்பு முதலியவைகள் தாக்கியும், நெருக்கமுற்றும் காணுகிறகாயத்தில், சிலருக்குச் சன்ன ரத்த நரம்புகள் அருந்து, சருமத்தின் கீழ் ரத்தம் சேர்ந்து கன்றிவிடும் (ecchymosis). அப்போது அந்தவிடம் வீங்கி சிவந்து பிறகு கறுத்துவிடும் ; 3-ம் நாள் ஊதாநிறமாகும் ; சுமார் 5-6-ம் நாளில் பச்சை நிறமாகியும், 7-8-ம் நாளில் மஞ்சள் நிறமாயும் ஆகிவிடும். அடிபட்டவனுடைய தேகப் பிரகிருதிக்குத் தக்கபடி, 10-12 நாளில் படிப்படியாய்க் காயம் மறைந்துவிடும். காயம் சிலரில் சீக்கிரமாயும், சிலரில் தாமசப்பட்டும் மறையும். சுரம், ஸ்கர்வி என்னும் வியாதி, இவைகளில் ரத்தத்தழும்புகள் காண்பதுமுண்டு. This is caused by violent contact with a blunt instrument and are without perforation of the skin.

சிகிச்சை.—இதற்குக் காயம்பட்ட உறுப்பை எடுப்பாக அசையாமல் வைத்து, ஈரத்துணியைப் போட்டு, வீக்கம் வற்றும்படிச் செய்யவேண்டியது ; ஒருவேளை அதிகமாய் வீங்கி, வேதனை பிறந்தால், லகு அசனம் செய்வித்து, விரேசன மருந்துகள் கொடுத்து, தேவையிருந்தால், அட்டை விடலாம் ; தாபிதம் நின்ற பிறகு, தயிலங்கள் பூசித் தேய்த்து, பாண்டேஜால் சுத்திவைக்கலாம். ஒரு வேளை ரத்தம் தோலுக்கடியில் அதிகமாய்ச் சேர்ந்துவிட்டால், கத்திமுனையால் கீறிவிட்டு, ஆவசியமிருந்தால் களிவைத்துக் கட்டவேண்டியது. சருமம் அழுகத்தக்கதாய் நசுங்கிவிட்டால், சீலைகட்டி வெந்நீர் விட்டுக்கொண்டு வரவேண்டியது. விரல்கள் நசுங்கிவிட்டால் திடீலென்று அறுத்துவிடலாகாது ; தாஞய் விழுகிறவரையில் களிகட்டவேண்டியது. If possible elevate the part ; apply cold ; order low diet ; purge. However great the contusion may be do not be in a hurry to amputate ; extraordinary recoveries sometimes take place.

சின்னபின்னமாய்க் கிழிபட்டகாயம் —(லாசிரேஷன், Laceration.) கல், தடி, கொம்பு இவைகளிஞென்றின் அடியினுலும், யந்திர காயங்களினுலும், மிருகங்கள் சீறுவதினுலும், இவ்வித காயம் பிறக்கும். இந்தக்காயத்தின் ஓரங்கள் சின்ன பின்னமாய்க் கிழிந்திருக்கும் ; ரத்தம் அதிகமாய் வடியாது ; மிகுந்த தாபிதம்கொள்ளும் ; காயம்பட்ட சதை அழுகிப்போவதும், தனுர்வாதரோகம் காண்பதும் உண்டு. இவ்வித காயத்தில் துஷ்டுகள் சேர்ந்திருக்கும். As a rule, bleed little, except in the scalp ; but are more dangerous than incised, inasmuch as they are liable to slough and to give rise to tetanus,

சிகிச்சை.—இதற்கு வடிகிற ரத்தத்தை நிறுத்தி, துஷ்டுகளைப்போக்கி, காயத்தின் உதடுகளைச் சேர்த்துவிடவேண்டியது. சிரசில் படுகிற காயத்

துக்குத் தையலிடலாகாது, தையலிட்டால் ஒருவேளை அக்கிரோகம் காணும். சீழ்க்கொண்டால், காயத்திலிருக்கிற தையல்களை நீக்கிவிட்டு, களிவைத்துக் கட்டவேண்டியது. Arrest hæmorrhage, remove foreign bodies, appose the edges. For fear of erysipelas, do not apply sutures to scalp unless compelled. If suppuration takes place, remove stures, and poultice.

துப்பாக்கி குண்டுகாயம் —(கன்ஷாட் ஊண்ட், Gunshot wound) துப்பாக்கிக் குண்டு பாய்ந்தாவது, துப்பாக்கி வெடித்தாவது, துப்பாக்கி மருந்திருக்கிறடப்பி வெடித்தாவது, உண்டாகும் காயங்களுக்கெல்லாம், துப்பாக்கி குண்டு காயமென்றே சொல்லப்படும். இவ்விதக் காயங்கள் சின்னபின்னப்பட்டு நசிந்திருக்கும். குண்டு பிரவேசிக்கிற துவாரம் சிறிதாய், வட்டமாய், ஓரங்கள் உள்ளுக்கு வளைந்திருக்கும்; வெளிப்படுகிற துவாரம், சின்னபின்னலாய், ஓரம் வெளியில் மலர்ந்திருக்கும்; நோவில்லாமல் இருப்பதும் உண்டு; ரத்தம் அதிகமாய் வடியாது; காயத்தின் அதிர்ச்சி சிலருக்கு மிகுதியாய்க் காண்பதுண்டு. The aperture at which the ball enters is small and circular with inverted edges; that of exit is larger, irregular in form, and with everted edges; they sometimes give little or no pain, and cause but slight hæmorrhage. Frequently, however, the shock to the system is very severe.

சிகிச்சை.—குண்டு மேலாகவிருந்தால், அறுத்தெடுத்து விடவேண்டியது; ஒருவேளை ஆழத்திருந்தால், பலவந்தம் செய்து எடுக்க முயற்சிசெய்யலாகாது, அப்படியே விட்டு விட்டால்,சும்மாய் இருந்துவிடும். இதில் தாபிதம் ரத்தப்பெருக்கும் காணுமலிருந்தால் நல்லது. சாதாரணகாயங்களை துஷ்டுகளில்லாமல் சுத்திசெய்து, ரத்தத்தை நிறுத்தி, ஈரத்துணியைப் போட்டு வைக்கவேண்டியது. பிராந்தியோடு அபினிசேர்த்துக் கொடுத்தால், ரோகிக்கிருக்கிற காபரா நீங்கி வேதனையைத் தணித்துவிடும். பிரதான ஸ்தானங்களில் குண்டு காயம்பட்டால், சிலாக்கு விடலாகாது; எலும்பில்போய்த் தங்கியிருக்கிற குண்டைத் துளைத்து எடுத்துவிடாவிட்டால், எலும்பு நஷ்டமாகிவிடும். காயம் பலத்து, எலும்பு சிறிய துண்டுகளாய் நொருங்கி பெரிய ரத்த நரம்புகள் அறுபட்டு, தோலும் சதையும் கெட்டுப்போய்விட்டால் அந்த உறுப்பை அறுத்துவிடலாம். If a ball be near the surface, cut down and remove of, it ; but, if deeply seated, do not make violent attempts to do so, as it may become encysted, and so remain. The great dangers in these causes are inflamation and secondary hæmorrhage. In ordinary cases, cleanse the wound, suppress hæmor rahage, use water dressing. Tremor, confusion and severe pain may be allayed by a stimulating opiate. Be careful to assertian if there be any foreign body in the wound. In unimportant parts, probe may be used. A ball should be removed from a bone by the trephine or gouge, lest it cause carrier of necrosis. Amputation of the limb will depend mainly upon the injury inflicted on the bone and is otherwise dangerously wounded.

அக்கினி விரணம்

பானஸ், BURNS.

அக்கினிச்சுவாலை, நெருப்பு, வெந்நீர் இவைகளில் ஏதாவது தேகத்தில் பட்டால், முதல் கொப்புளங் கண்டு, பிறகு தோலுரிந்து, ரணமுண்டாகும்.

அக்கினியின் வேகத்துக்குத் தக்கபடி, இதில் 3-சாதிகளுண்டு. 1-வது.—தோல்மாத்திரம் சிவந்துவிடும் 2-வது —கொப்புளம் உண்டாகும். 3-வது.—பட்டவிடம் தீய்ந்துவிடும். அக்கினியால் உண்டாகிற விரணம்பிரபலமாய் இருந்தால், போதக்ஷயம் காணும்; தேகம் வெளுத்து, கையும் காலும் சில்லிட்டுப்போகும்; நாடி க்ஷீணித்து தீவிரகதியாய் நடக்கும்; அடிக்கடி உக்கிரமாய்க் குளிர்காணும். அசாத்தியத்தில் விழுந்துவிட்டால், மேல் கண்ட குறிகளெல்லாம் பிரபலமாகி, மேல் சுவாசம் கண்டு, போதக்ஷயம் மேலிட்டு, மரணம் சம்பவிக்கும். Burns are of three kinds : Those causing simple redness of the skin; 2. Causing vesication; 3. Those producing death of the part. In the two latter most frequently there is great collapse.

சிகிச்சை.—இதற்கு வெகு சீக்கிரத்தில் நமது வீட்டோர் மையையாவது, கண்ட இலைகளை அரைத்தாவது, பூசி அல்பமாய் இருக்கிற விரணத்தைப் பிரபலப்படும்படிச் செய்துவிடுகிறார்கள். இதில் உண்டாகிற கொப்புளத்தில், அதிக நீர்ச்சேர்ந்து வேதனையிருந்தால், ஊசியாசேல் குத்திவிட்டு, சுண்ணும்புத் தண்ணீரில் சமனாய் நல்லெண்ணெய் சேர்த்துக் குழப்பி, அதில் துணியை நனைத்து ரத்தத்தின்மேல் போட்டு, துணி காயாமல் மேற்படி தயிலத்தையே விட்டுக்கொண்டுவந்தால் சவுக்கியம் உண்டாகும். சீழ்ச்சேர்ந்து நாற்றமெடுக்காமல், அடிக்கடி துணியை மாற்றிக்கொண்டே இருக்கவேண்டியது தேங்காய் எண்ணெய் தடவி வாழையிலையை வைத்துக் கட்டிக்கொண்டுவந்தால் அல்ப விரணங்கள் சீக்கிரத்தில் உலர்ந்துவிடும். சீழ் அதிகரித்த பெரிய விரணங்களை, தினத்துக்கிரண்டு முறைவெந்நீர் விட்டுக் கழுவி, மெழுகுகழிம்பைத் துணிமேல் தடவிப் போட்டுக்கொண்டுவரவேண்டியது. சோகம் கண்டால், அதற்குரிய மருந்துகளும், நல்ல ஊட்டமும் கொடுத்து தேக தாருட்டியம் பிறக்கும்படிச் செய்யவேண்டியது. அதிக வேதனையிருந்தால் அபினி கொடுக்கலாம்; குழந்தைகளுக்கு அபினி கொடுக்கலாகாது. ரணம் உலர்ந்துவரும்போது, உறுப்புகள் குரூபமடையாமல் செய்யவேண்டியது. விரல்கள் ரணமானல், ஒன்றோடொன்று ஒட்டாமல், மத்தியில் துணிவைத்து பிரத்தேகப்படுத்தி வைக்கவேண்டியது. கால், கால், மடங்கியிருந்தால், பத்தை வைத்துக்கட்டி நேராக்கவேண்டியது. Do not puncture the vesicles unless painfully tense apply carron oil Of the third apply poultice; good diet and stimulants;opiates if necessary; prevent cohesion of parts by interposition of oiled lint (as between the fingures and toes); be careful so to place the limbs as to Prevent after deformities. Burns are dangerous according to the extent surface injured, their depth, and their situatino, those of the chest being most fatal.

வெந்நீர் விரணம்.—(ஸ்கால்ட்ஸ், Scalds.) இதையும் மேற்படி கிரமமாகவே சிகிச்சைசெய்து வசப்படுத்தவேண்டியது. வெந்நீர் விரணத்தில் ரோமம் தீய்ந்துவிடாது. Scalds may be treated on the same principles.They are distinguished from burn by the hair not being burnt off

திராவகங்கள், காரங்கள், கார்ப்பான பூண்டுகள் பட்டுக்காணுகிற உபத்திரவங்கள்

MINERAL and VEGETABLE IRRITANTS.

கந்தகத்திராவம் (Sulphuric Acid) பட்டால், தோல் கறுத்துவிடும்.—வெடியுப்பு திராவகம் Nitric Acid) பட்டால், மஞ்சள் நிறமாகும்.—கறி

யுப்பு திராவகம் Hydrochloric Acid) பட்டால், வெண்மை கொள்ளும்.—தீமுருகல் பாஷாணம் (Phosphorus) பட்டால் வெந்துபோகும். சிகிச்சை.—பட்ட இடத்தை, சவுக்காரம், சாம்பல், அரைப்பு இவைகளிலொன்றை வெந்நீரில் கலந்து அதனுல் கழிவி, பிறகு மெழுகு களிம்பு போடவேண்டியது. களிவைத்தும் கட்டலாம். Wipe or wash off the acid ; neutralize with an alkaline carbonate ; afterwards treat according to circumstances.

புதிதாய்ச் சுட்ட சுண்ணும்பு, நவக்ஷார ஜயநீர் இவைகள் பட்டால் வெந்நீருங் காடியும் கலந்து அதனுல் கழுவி, களிம்பு போடவேண்டியது. சவ்வீரத்துக்கு கோழிமுட்டையின் வெள்ளைக்கருவும், காடிக்காரத்துக்குக் கறியுப்பு ஜலமும் விட்டுக் கழுவி, பிறகு போடவேண்டியதைப் போடலாம். காரப்பான பூண்டுகள் (vegetable irritants) பட்டு காணுகிற எரிச்சலுக்கு, துணியை வெந்நீரில் நனைத்துப் போட்டு, பிறகு களிம்பு இடவேண்டியது. காஞ்சொறி பட்டதற்கு புகையிலை ஜலம்விட்டுக் கழுவினுல் சமனமடையும்.

சில விஷம்

BITES OR STINGS OF INSECTS.

தேனீ, குளவிமுதலிய வண்டுகள் கொட்டுவதினுல் சிலருக்கு வெகு உபத்திரவமுண்டாகும் ; மரணம் சம்பவிப்பதும் உண்டு. சிகிச்சை.—இவைகளுக்கு நவக்ஷார ஜயநீர் தடவினுல் சவுக்கியப்படும் ; இதனுல் அதிக ஆயாசம் பிறந்தால், பிராந்தி நவக்ஷார மது, அபினி இம்மருந்துகளைக் கொடுக்கவேண்டியது. கொட்டினவிடத்தைப் பூதக்கண்ணுடியாற் பார்வையிட்டு, கொடுக்கு ஒடிந்துத் தைத்துக்கொண் டிருந்தால், குறட்டால் பிடுங்கிவிட வேண்டியது. These are generally instantaneously cured by the application of liquor ammon æ ; extract stings.

சர்ப்பக் கடி

ஸ்னேக் பயிட், SNAKE BITE.

இதனை அரவம் தீண்டல், பாம்புக்கடி என்றும் சொல்லுவர். சர்ப்ப விஷயங்களில், நல்லப்பாம்பு விஷமே மிகவும் கரேமானது. விஷம் ரத்தத்திலேறித் தலைக்குச் சென்றுல், க்ஷீணமும் பிரமைபும், மயக்கமும், போதக்ஷயமும் காணும் ; நாடி பேதித்து நடக்கும் ; கடித்தவாய் வீங்கி வேதனையெடுக்கும் ; கடைசியில் மூர்ச்சை கண்டு மரணமுண்டாகும்.

சிகிச்சை —பாம்புகடித்த உடனே விஷம் மேலுக்கேருமல் கயிற்றுல் இறுகக்கட்டி, காயத்தைக் கொஞ்சம் கீறி அதில் வாயாவது ஆட்டுக் கொம்பாவது வைத்து உறிஞ்சி விஷத்தை எடுத்துவிடவேண்டியது. வெந்நீர் ஒற்றிடமிட்டால் அதிக ரத்தம் வடியும். காயத்தில் நவக்ஷார ஜயநீர் பூசலாம். உள்ளுக்கு, சாராயம், நவக்ஷார ஜயநீர் (Ammoiae), யூடிலூஸ் (eau de luce) இவைகளில் ஒன்றை, கடியுண்டவன் நிர்வகிக்கும் படியான அளவுக்குக் கொடுப்பதில் சுகுணம் பிறப்பதுமுண்டு. சில கடுகை அரைத்து, வாந்தியாகும்படி கொடுக்கிறுர்கள். அமெரிக்காதேசத்தில், மதி மயங்கும்படி சாராயம் கொடுப்பது வழக்கம் —இந்தக் கொடியவிஷம் மாந்திரியத்தினுலும், திவ்விய ஔஷதத்தினுலும், நீங்குமென் று கேழ்வி இவைகளைக் கற்ற புண்ணியவான்களில் யாராகிலும் வெளியிட்டால், சகலருக்கும் உபகாரமாய் இருக்கும், ஒருவர் பாம்பு கடித்த விடத்தில், கோழியின் தொ

டையில் அறுத்து வைத்து விஷமிறக்கி ஆளைப் பிழைப்பித்ததாய் பிரசுரஞ் செய்திருக்கின்றார். ஆடுதீண்டாபாளையிலையை ஜலத்தில் கலந்து கொடுப்பதும் நொச்சி, தும்பை, குப்பைமேனி, வேளை இவைகளிஞென்றின் ரசத்தை நசியமிடுவதும், நாட்டுவழக்கம். சிறுபாம்புக்கடிக்கு (மண்ணுளிப்பாம்பு)நல்லெண்ணெயும் கூழும் கலந்து, ஒருவாரம்வரையில் உள்ளுக்குக்கொடுப்பதுண்டு. Administer stimulants ; suck wound ; excite vomiting ; ammonia to prts.

தேள் கொட்டல்

SCORPION-STING.

இதற்குச் செய்கிற சிகிச்சை அனந்தம். நமது நாட்டில் மந்திரப் பிரயோகமும் செய்துவருகிறார்கள். தேள் கொட்டின உடன், நவக்ஷாரஜயநீர், வெடிப்பு திராவகம், காடிக்காரம், இவைகளில் ஒன்றைக் கொட்டின இடத்தில் தடவினல் விஷம் முறிந்துவிடும். விஷம் மேலுக்கேறிவிட்டால், எதுவும் பிரயோஜனமிராது. நாயுருவி கொழுந்தைத் தடவினல் விஷம் தணியுமென்று கேழ்வி. கோழியின் மலப்புகையைக் கொட்டின இடத்தில் கொடுக்கலாமென்றும், வெள்ளை குண்டுமணி வேரை வெந்நீர் விட்டரைத்து, பிழிந்து வடிகட்டி, பஞ்சியில் ஊட்டிக்கொண்டு, இடது பக்கம் கொட்டினல் வலது மூக்கிலும், வலது பக்கம் கொட்டினல் இடது மூக்கிலும் நசியம்பண்ணத் தீருமென்றும், நண்டுவாக்காலி கொட்டலுக்கு, எட்டிமரவரின் பட்டையை அரைத்து பெரிய நெல்லிக்காய்ப் பிரமாணம், ½-ஆழாக்கு வெந்நீரில் கரைத்து உள்ளுக்குக் கொடுத்து, கொட்டின இடத்தில் கத்திரிக்காயைச் சுட்டுக் கட்டும்படியாயும், ஜீவரக்ஷாமிரதத்தில் கண்டிருக்கின்றது. குளோரொபாரமாவது ஈதர் என்னும் மருந்தாவது தடவினல், சில்லிட்டு வேதனை வெகு சீக்கிரத்தில் தணிந்துவிடும், கைகண்டது.

நரம்புச்சிலந்தி

கினி ஒரம், GUINEA WORM.

பிரதிபதங்கள்.—நூல்சிலந்தி ; நாரப்புண்.

நூலிழைபோல் நீண்டு வெளுத்து ஒருவிதப்புழு, தேகத்திலிருந்து வெளிப்படுதலுக்கு, நரம்புச் சிலந்தியென்று பேர். இந்தப் புழு தேகத்தில் உற்பத்தியாகிறதென்று சிலர் சொல்லுகிறார்கள்; சன்னமாய் இருக்கிற புழுமயிர்க்கால் வழியாய் உடம்பிலேறி வளருகிறதென்று சிலருடைய அபிப்பிராயம். புழு அறாமல் வெளிகண்டால் நல்லது, ஒரு வேளை அறுந்துவிட்டால், வேதனையும் வீக்கமும் பிரபலமாகி, ரோகி அதிக உபத்திரவமடைவான். முதல்நமைச்சலெடுத்து, நீர்க்கொப்புளம்போல் காணும் ; அதைக் கீறிவிட்டால் புழு வெளிப்படும் This causes inflammation and most painful abscess.

சிகிச்சை.—புழுவை நாள்தோறும் கொஞ்சங் கொஞ்சமாய் மெதுவாய் இழுத்து, துணியிலாவது, துடப்பச் சுப்பலிலாவது, சுருட்டிவைத்து, களி கட்டிக்கொண்டு வரவேண்டியது. குளிர்ந்தஜலம் விட்டு இரண்டுவேளையும் ரணத்தைச் சுத்திசெய்யவேண்டியது. களியோடு பெருங்காயம் சேர்த்துக் கட்டுவதில், மறுபடியும் நரம்பு உற்பத்தியாகாமல் செய்கிறதென்று கேழ்வி. இந்த வியாதிக்கு வீட்டில் செய்யும் சிகிச்சை அனந்தமிருந்த

போதிலும், மேற்கண்டிருப்பதே நல்லது. ரணத்தில் கொம்பு வைத்து உறிஞ்சி புழு ஆறுமல் எடுப்பதுமுண்டு. Poultice; extract the insect whole.

பேய் நாய்க்கடி சன்னி. Hydrophobia. ஔஷத வைத்தியத்தில் இந்தரோகம் விவரித்திருக்கிறது.

குய்யரோகம்

வினீரியல் டிஸீஸ், VENEREAL DISEASE.

பிரதிபதங்கள்.—மேகரோகம், ஸ்திரீரோகம்.

இது ஒருவித ஒட்டுவியாதி, ரோகஸ்திரீ புணர்ச்சியால் காணுகின்றது. இதில் பிரமேகம், மேகவிரணம் என 2-சாதிகளுண்டு; அவ்விரண்டுக்கும், தற்கால குறிகளும், பின்னிட்டுக் காணுகிற குறிகளுமுண்டு; அவைகளை இதனடியிற் கூறப்படும். This consist in "a specific contagion arising from impure sexual-intercourse." Two forms: GONORRHOOED, and SYPHILIS; both of which have present and remote symptoms.

பிரமேகம்

கனரியா, GONORRHÆA; கிளாப், CLAP; RUNNING.

பிரதிபதங்கள்.—வெள்ளை; பிரமியம்; மேககாங்கை; வெட்டை; சீழ்மேகம்; மேகச்சூடு.

புருஷனில் நீர்த்தாரையிலும், ஸ்திரீயில் ஜனனேந்திரியங்களிலுமிருந்து சீழ்போல் வெளுத்த மேகநீர் வடிதலுக்கு வெள்ளையென்று பேர். வியாதி ஆரம்பத்தில் நீர்த்துவாரத்தில் நமைச்சலெடுத்து, ஜலம் வடியும், அதை உடனே கண்டிக்காவிட்டால், சீழாகிவிடும்; அந்தச் சீழ் வெள்ளை, பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய இந்நிறங்களில் ஒன்ருய் இருக்கும்; கோஜமும், மூத்திரதுவாரத்தின் சளிசவ்வும் வீங்கி, நீரானது சன்னதாரையாய் இரண்டு பிரிவுகளாய், முக்கலுடன், அதிக வேதனையோடிறங்கும்; நீர்த்துவாரத்தில் எரிச்சலுமிருக்கும்; இராத்திரியில் கோஜம் விம்மலுற்று வளைந்து, அதிக நோவெடுத்து நித்திராபங்கமுண்டாகும். (Chordee) ரோகம் நாள்பட்டு விட்டால், குறிகளெல்லாம் தணிந்து வடிகிற நீர் மூக்குச்சளிபோல் மாறிவிடும். அதற்குத் தந்திமேகம் (Gleet) என்று சொல்லுவர். இந்த வியாதியில் மூத்திரதுவாரத்திலிருந்து ரத்தம் வடிந்தால், அதற்கு ரத்தப் பிரமேகமென்றும், அரையில் வீங்கி நெறிகட்டினுல், அதற்கு அறையாப்பென்றும், முழங்கால் முதலிய மூட்டுகள் வீங்கினுல், அதற்கு மேகப்பிடிப்பு என்றும் சொல்லுவர். இதில் கோஜத்தின் தோல் சுருங்கி விடுவதும், சிலருக்கு பீஜம் வீங்கிவிடுவதும் உண்டு. இந்த ரோகம் சிலருக்குக் கண்டால், சீழ்வடியாமல், மூத்திரம் விடும்போது எரிவும் கடுப்பும், மூத்திரதுவாரம் வீங்கி சிவந்து இருக்கும், அதற்கு வறக்ஷிமேகம், (Gonorrhœa Sicca) என்று பேர். வெள்ளை அடிச்கடி கண்டால், நீரடைப்பு காணும். அதிகபோகம், வீடுதூரமான பெண்களையும், வெள்ளை கண்டிருக்கிற பெண்களையும் புணர்தல், வெப்பமுள்ள மருந்துகள் சாப்பிடுதல், சாராயம் குடிக்குதல் இவை முதலியவைகளால் வெள்ளை காண்பதும் உண்டு, அது பிரமேகரோகமல்ல. ரோகஸ்திரீயைப் புணர்ந்து, 4-5 நாளில் பிரமேகரோகம் வெளிப்படும்.

ஸ்திரீகளில் நிதம்பங்கள், யோனி, கருப்பையின் வாய் ஆகிய இவ்விடங்களிலிருந்து மேகநீர் ஜனிக்கும்; அவர்களுக்கு மெத்த உபத்திரவ

மிராது ; நீர் எரிச்சலும், நடந்தால் வேதனையும், உளுக்கார வருத்தமாயும்,
அரையில் நெறிகட்டியும், சன்ன உறப்புகள் வீங்கியுமிருக்கும் ; சீழும் சளி
யும் கலந்த மேகநீர் வடியும். Inflammation of the uretha, accompanied
by a discharge first muco-purulent then greenish-yellow great pain
and scalding in micturition; swelling of penis; pain in surrounding
parts; chordee.

சிகிச்சை.—பரஸ்திரீயைப் புணர்ந்த உடனே, லிங்கத்தை ஜலம் விட்
டுக் கழுவி, பீச்சாங்குழலால் பீச்சி, நீர்த்துவாரத்தைச் சுத்தி செய்துவிட்
டால், ரோகம் பெரும்பாலும் அணுகாது. பிரமேகத்துக்குச் சிகிச்சை 3-
விதப்படும்: 1-ஆண் குறியிலிருக்கிற வெப்பகுணத்தை நீக்கவேண்டியது.
2-நீர்த்துவாரத்தில் போய் பற்றிப் பிடிக்கிறமருந்துகள் கொடுக்கவேண்
டியது. 3-வடிகிற சீழ் நீற்கும்படி, துவர்ப்பு மருந்துகள் உபயோ
கிக்கவேண்டியது. இந்தத் துஷ்டவியாதி கண்ட உடனே சிகிச்சை
க்கு வந்தால், லகுவிரேசன மருந்துகள் கொடுத்து, வால்மிளகு சூர
ணத்துடன் குங்கிலியத் தயிலம் சேர்த்து, தினத்துக்கு 3-4 ஆவர்த்தி
கொடுக்க ரோகம் வசப்படும். ரோகியைத் திரியவொட்டாமல் படுத்த
படுக்கையில்வைத்து, சாராயம், காபி முதலிய உஷ்ண பதார்த்தங்களை
நீக்கச்செய்து, பத்தியபோஜனம் செய்யும்படி திட்டப்படுத்தவேண்டியது.
கோஜத்துக்கு ஈரத்துணி சுத்தி நனைத்துகொண் டிருக்கும்படி செய்தால்
சுகுணமுண்டு ; மலர்மேலிருக்கிற எரிச்சல் சிற்றாமணக்கெண்ணெய் தடவி
னால் நீங்கிவிடும் ; சோடாவாடர், பார்லி அரிசி கஞ்சி, துளசி, சப்ஜா வெண்
டை இஸ்கோல் இவைகளின் விரையிலொன்றை ஊறவைத்த ஜலம், விளாம்
பிசின் சேர்ந்த ஜலம் ; வெடியுப்புசேர்த்த கஞ்சித்தண்ணீர், யானைநெரிஞ்
சில் ஊறவைத்த ஜலம், இவ்வித குழகுழப்புள்ள ஜலங்களை அடிக்கடி குடித்
துக்கொண்டிருந்தால், நீர் எரிச்சல் தணியும். இராத்திரியில் வேதனை அதி
மாய் இருந்தால், மார்பியா, அல்லது குரோசானியோமம் கொடுக்கலாம்.
மிளகு தூளில், 10-குண்டுமணி இடை, தினத்துக்கு 2,3 ஆவர்த்தி கொடுத்
துக்கொண்டு வரலாம். Low diet, avoid all stimulants and irritants,
mucilaginous drinks ; raise penis against abdomen ; purge freely ;
cubebs ; copaiba ;

இராத்திரி காலங்களில் கோசம் விம்மல்கொண்டு, வளைந்து அதிகவே
தனை தருவதற்கு (Chordee), கோசத்துக்கு ஈரத்துணியைச் சுற்றிவைத்து,
கற்பூரத்துடன் அபினி சேர்த்து மாத்திரைசெய்து ராத்திரி படுத்துக்கொள்
ளும்போது உள்ளுக்குக் கொடுத்து, ஆசனத்திலும் அபினி குளிகைவைத்
தால், அந்த உபத்திரவம் நீங்கிவிடும். கோசத்துக்கடியில், ரசக்களிம்பு தட
விக்கொண்டு வரலாம்.

தந்திமேகம், அல்லது நாள்சென்ற பிரமேகத்துக்கு (Gleet)
படிக்கார ஜலமாவது, அபினிஜலமாவது, மூத்திர துவாரத்தில் இரண்டு
நாளைக்கொருதரம் பீச்சிக்கொண்டு வந்தால், ரோகம் வசப்படும். நீர்
பீச்சும்போது, மூத்திரப் பையிலிறங்காமல், பீஜத்துக் கடியிலிருக்கிற
தண்டை அழுத்தி பிடித்துக் கொள்ளவேண்டியது ; அதில் நீர் இறங்கினால்,
வெப்பங்கொண்டு வேதனையுண்டாகும். இது துஷ்டரோகம், சிகிச்சைக்
குட்படுவது கஷ்டசாத்தியம், நாள்பட மருந்தையேற்றி வசப்படுத்தவேண்
டியது. ஸ்திரீசஞ்சாரம் எவ்வளவு குறையுமோ அவ்வளவுக்கும் ரோகம்
சுகுணத்துக்கு வரும். குங்கிலியத்தயிலம், வால்மிளகு இவைகளை உள்ளுக்

குக் கொடுக்கவேண்டியது. பூஜி (Bougie) என்னும் மெழுகுதுணி சிலாக்கு மேல் குங்கிலியதயிலத்தைப் பூசி, நீர் துவாரத்தில் விட்டுக்கொண்டு வரலாம். பரஸ்திரீகளோடு வியாபாரஞ் செய்து தேகம் மெலிவுற்றதற்கு அயம், நன்னாரி முதலிய மருந்துகள் கொடுத்து, சத்துள்ள போஜனம் செய்யச் சொல்லி, சமுத்திரக்காற்றில் உலாத்தச் செய்தால், சவுக்கியம் பிறக்கும். Gleet may be treated by tonics and astringents and astringent injections,

மேகவாய்வு.—(Gonorrhœal Rheumatism.) இதற்குப்பேதி, பழரசம், டோவர்ஸ் பவுடர், நன்னாரிவேர் கஷாயம், ஐயோடைட் ஆவ் பொடாசியம், வெந்நீர் ஸ்நானம் இவை முதலியவைகளை உபயோகப்படுத்தி வியாதியைச் சவுக்கியப்படுத்தவேண்டியது. Treat with potass Iodid ; and ipecaco. with hydrar. cum cret. every night.

ஸ்திரீகளுக்குக் காணுகிற வெள்ளைக்கு (Gonorrhœa in the female), ரோகஸ்திரீயைப் படுக்கையில் வைத்து, அல்குலுக்குப் போஸ்தக்காய் போட்டுக் காச்சின வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, அதை அடிக்கடிக் கழுவிச் சுத்தி செய்து, பன்றிநெய் தடவிக்கொண்டு வரவேண்டியது. துணியைப் படிக்கார ஜலத்தில் நனைத்து, நிதம்பங்களின் மத்தியில் வைத்துக்கொண்டு வருவதிலும் சுகுணமுண்டு. லகுவிரேசன மருந்து கொடுத்து மலத்தைப் போக்க வேண்டியது. மேல்கண்ட சிகிச்சையால், அல்குலிலிருக்கிற சூடு, எரிச்சல், வேதனைமுதலிய துற்குணங்கள் நீங்கின பிறகு, வேப்பம்பட்டையின் கஷாயத்தை அல்குலில் பீச்சிக்கொண்டு வந்தால், நலந்தரும்; குங்கிலியத்தயிலமும் உபயோகிப்பதுண்டு. நாள்பட்ட வியாதிக்கு அயம் கொடுக்கலாம். This is to be treated as in the male.

மேகவிரணம்

ஸீபிலிஸ், SYPHILIS ; ஷாங்கர், CHANCRE.

பிரதிபதங்கள்.—மேகப்புண் ; கொருக்கு ; குய்யவிரணம் ;

அலசிரோகம் ; பரங்கிப்புண், உபதம்சரோகம்.

குறிகள்.—ரோகஸ்திரீயைப் புணர்ந்து ஆண்குறிமேல் காணுகிற ரணத்துக்கு மேகரணம் என்று பேர். இந்த ரணம் மலரின்மேலாவது, மலருக்கடியிலிருக்கும் சவ்வு மடிப்பிலாவது, மலரை மூடிக்கொண்டிருக்கும் தோலுக்குள்ளாவது, காண்பது வழக்கம். சையோகிக்கும்போது, உபஸ்தத்திலிருக்கிற மேகவிரண விஷநீர், கோஜத்தின்மேல் எவ்விடத்தில் படுகின்றதோ அந்த ஸ்தானத்தில், ரணம் பிறக்கும். புணர்ந்து 3-முதல் 10-நாளைக்குள், ரணம் வெளிப்படும். மேகரணத்தில் 4-சாதிகளுண்டு.—ஒரு சாதியில், ரணத்துக்கடியில் கட்டியாய்க் கல்லுபோலிருக்கும் ; மற்றொரு சாதி ரணம், மிருதுவாய் இருக்கும் ; வேறொரு சாதி விரணம் வெகு சீக்கிரத்தில் பரவிவிடும். 4-வது, சாதி விரணம், அழுகி துற்மாமிசம் உண்டாகும். ஸ்திரீகளுக்கு மேகவிரணம் மெத்த உபத்திரவபடுத்தாது ; அதின்மேல் மூத்திரநீர் அடிக்கடிப்படுவதால், உலர தாமிசப்படுகின்றது. யோனிக்குள் வெகுதூரத்தில் விரணமிருந்தால், கண்ணுக்ககப்படாது, அவர்களுக்கும் யாதொருஅசவுக்கியமிராது. மேகவிரணம் பிறந்து 5-நாளைக்குள் அதைக் காரம்வைத்து விஷத்தை முறிக்காவிட்டால், விஷநீர் உடம்பிலேறி, தேகத்தில் மேகப்புடை

மேகச்சொறி, மேக ஊரல் முதலியபலவித சாட்டியங்கள் ஜனிக்கும். அடிக்கடி மேகரணம் கண்டு, மேகநீரில் ஊறியிருக்கிற தேகத்தில், மறுபடியும் மேகவிரணம் கண்டால், ஆரம்பத்திலிருந்த அவ்வளவு துற்குணமிராது. ஆண்குறிமேல், சாதாரண ரணம் காண்பதுமுண்டு; ஆகையால் அந்தஸ்தானத்தில் காணுகிற எல்லா ரணங்களையும் மேகவிரணமென்று தீர்மானிக்கலாகாது. சந்தேகமுடைய ஸ்திரீயைப் புணர்ந்து ரணம் கண்டால், அது மேகரணமாய் இருக்குமாகில், விருத்தமாய், அடியானது கல்லைப்போல் கட்டியாய், ஓரம் எடுப்பாய் இருக்கும்; சாதாரண ரணங்களைப்போல் சொல்ப மருந்துகளால் குணமாகமாட்டாது. இத்தாதி குணங்களுடைய ரணத்தை மேகவிரணமென்று நிச்சயிக்கவேண்டியது. Primary syphilis occurs in the form of chancres on the genitals. Three kinds. *Nonindurated* or *simple*.—Small itching pimple which bursts in to a yellowish sore, and after a time is covered by a light brown scab; finally it heals usually leaving a cicatriz. *Indurated* or *Hunterian*.—First a pimple next a pustule from which the head falls, leaving it " a cup of cartilage. Sloughing Chancres.—Spread widely, but usually not deeply,

சிகிச்சை.—ரணத்திலிருக்கிற விஷநீரை முறித்து, சீக்கிரத்தில் ரணம் உலரும்படிச் செய்து, மேகப்புடை முதலியவைகள் விளையாமல் செய்வது, சிகிச்சைகளுடைய கடமை. வியாதி ஆரம்பத்தில் வைத்தியத்துக்கு வந்தால், ரணத்தில் பொட்டிலுப்புத்திராவகம் விட்டாவது, காடிக்காரத்தைத் தடவியாவது விஷத்தை முறித்துவிடவேண்டியது ; மயில்துத்தப் பொடியை உபயோகிக்கலாம். நல்ல பேதிக்கு கொடுத்து, ஆளைத் திரிய வொட்டாமல், பத்தியத்தில் வைக்கவேண்டியது. கோஜத்தைத் துணியால் சுத்தி வெந்நீர்விட்டு நனைத்துக்கொண்டிருக்கச் செய்வதில் சுகுணமுண்டு. ஒருவாரம் சென்றபிறகும், காரம் வைக்கலாம் ; ஆனால் அவ்வளவு நன்மையிராது. சுரம், கோஜம் வீக்கம், அரையில் வீக்கத்தோடு நோவு இவைகளிருந்தால், காரம் வைக்கலாகாது. ரசபஸ்மத்துடன், சுண்ணாம்புஜலம் சேர்த்து செய்கிற பிளாக்வாஷ் (Black wash) என்கிற நீரை ரணத்துக்குப் போட்டுக்கொண்டுவந்தால் சவுக்கிய முண்டாகும். ரணத்தில் எரிச்சலும் வேதனையு மிருந்தால், களிவைத்துக் கட்டி, ரோகியை நடக்கவொட்டாமல் செய்யவேண்டியது. விரணத்தில் அடியானது கனத்து கல்லுபோலிருந்தால், ரசபஸ்மத்துடன், மெழுகு களிம்பு சேர்த்து, அதைப் போட்டுக்கொண்டு வரலாம். சதை வளர்ந்து ஆறத் தாமசப்பட்டால், துருசுவைத்துக் கரைக்கவேண்டியது. இதற்கு, முன்னே ரசம்கொடுத்து சிகிச்சை செய்ததுண்டு, இப்போது அந்த வழக்கமில்லை, ரசமருந்துகள் கொடுக்காமலே, ரணத்தைச் சவுக்கியப்படுத்தலாம். விரணத்துக்கு ரசப்புகை கொடுத்து, உட்தொடையில் ரசக்களிம்பு தேய்த்துக்கொண்டுவருவதிலும் நன்மையுண்டு. இந்த ரோகத்துக்குக் கடும்பத்தியம் உதவாது. ஆனால் பத்திய பதார்த்தங்களைக் கூட்டிக்கொள்ளும்படி செய்யவேண்டியது.

SECONDARY SYPHILIS.—மேக விஷநீர் ரத்தத்திற் சென்று, தேகத்திலூரினால், மேலெங்கும் சொறி, சிறங்கு, புடை முதலிய பல சாதி சரும ரோகங்களும், எலும்பு வியாதிகளும் பிறக்கும். அதற்குச் சிகிச்சை.—நன்னாரிவேர்க் கஷாயத்திலாவது, வேப்பம்பட்டை கஷாயத்திலாவது, சவ்வீரம் சேர்த்துக் கொடுத்துக்கொண்டுவந்தால் சவுக்கியம் பிறக்கும். ஐயோடைட் ஆவ் பொடாஸியம் என்னும் உப்பு, வெடியுப்பு திராவகம், இவைகளும் நன்மைசெய்யும். ஒரு மருந்தில் அனுகூலமில்லாவிட்டால்,

வேறுமருந்து உபயோகப்படுத்திப் பார்க்கவேண்டியது ; கை கண்டதென்று ஒரே ஒளஷதத்தை நம்பலாகாது. ரச மருந்துகள் இந்த வியாதிகளுக்கு உதவாது. துற்பலப்படுத்துகிற சிகிச்சையை இதற்கு நீக்கி வைக்கவேண்டியது. மேலே காண்கிற புடைகளுக்கு, நாள்தோறும் வெந்நீர் ஸ்நானம் செய்துவைத்து, சிட்ரன் ஆயின்ட்மென்ட் (citrone ointment) அல்லது ரசக்காரச் சிந்தூரக் களிம்பு (red precipitate ointment) போட்டுக்கொண்டு வரலாம் ; கந்தகப் புகையும், ரணங்களுக்கு, ரசபஸ்பம் கலந்த சுண்ணும்பு நீரும், சவுக்கியமுண்டாக்கும். மேகவியாதியால் தொண்டையில் ரணம் கண்டால், அதற்கு 1-விராகனிடை வெங்காரம் ; 1-பலம் தேன் ; 1-பலம் பந்நீர்; 1-ஆழாக்கு ஜலம். இவைகளை மிஸ்ரமித்து வாய் கொப்புளித்துக்கொண்டு வரும்படிச்செய்தால் நல்லது. மார்பியாவாவது, குரோசானி யோமமாவது கொடுத்து, நல்ல நித்திரை வரும்படிச் செய்வது, சிகிச்சைகள் கடமை. வல்லாரைச் சூரணம் இந்த ரோகத்தைக் கண்டிக்கும். இந்த வியாதிக்கு நல்ல ஊட்டங்கொடுத்து பலம் வரும்படிச் செய்யவேண்டியது

புருஷனுடைய மேகவியாதி பெண்சாதிக்குத் தொடர்ந்திருக்கும் போது, அவளுக்குக் கருதரித்தால், அக்கருவுக்கும் இந்த துஷ்டரோகம் அனுசரித்து, சுமார் 4-5-ம் மாதம் வயிற்றில் மரித்து, பிண்டம் வெளிப்பட்டுப் போவது முண்டு. இவ்வியாதியுடைய மாதர்களுக்கு, அடிக்கடி கரு வழிந்துப்போவது வழக்கம் ; ஒருவேளை குழந்தை சீவித்திருந்தால், அது துர்ப்பலமாயும் தேகம் மெலிவுற்றுமிருக்கும்; ஆசனம், அல்குல் ஆகிய இவ்விடங்களில், தாம்பிரநிறமான ரணங்களும், வாயில் துத்திரோகமும் காணப்படும். குழந்தை சவுக்கியமாய்ப் பிறந்தால், ஒருமாதம் பிறகு மேற்கண்ட ரோகங்கள் காண்பதுமுண்டு. தாயாருக்கு அல்குலில் மேகரணமிருந்தால், சிசுவு பிரசவமாகும்போது, அந்த விரணத்தின் விஷநீர் அதுக்கும் பட்டு மேகரோகம் பிறக்கும். இவ்விஷயத்தில், சதிபுருஷர்இருவரும் மருந்துண்ண வேண்டியது. எந்த ஸ்திரீக்காவது, 5-முதல், 7-மாதத்தில் கருவழிந்து, பிரசவித்துக்கொண்டு, மேகவியாதி உடம்பிலிருக்கிற சாடை அகப்பட்டால், சாந்தமாய் ரசத்தைக்கொடுத்து,அந்ததுற்குணத்தைக் கண்டிக்கவேண்டியது மேக வியாதியுடைய குழந்தைக்கு, 20-நெல்லெடை வீதம் ரசக்களிம்பை அக்குளிலும், பாதங்களிலும், இரவில் தேய்த்துக்கொண்டுவந்தால், வியாதி வசப்படும். பால் கொடுக்கிறதாதிக்கும், குழந்தைமூலமாய் வியாதி தொடர்ந்து, முலைக்காம்பில் ரணம்காணும்; பிறகு தேகமெங்கும் மேகச்சிரங்கும், புடைகளும் காணும்;இதற்கும் மேல்கண்ட சிகிச்சையே செய்யவேண்டியது.

இந்தத் துஷ்டரோகத்துக்கு, ஹிந்துக்கள் செய்கிற சிகிச்சை அனந்தம். சிலர் ரசத்தை அபரிமிதமாய் ஏற்றி, ரோகத்தைப் பிரபலப்படுத்தி விடுகிறார்கள். மேகாரி எண்ணெய்களைக் கொடுத்து, உப்பில்லாத பத்தியம் வைப்பதில், சிலருக்கு நன்மையும்,பெரும்பாலும் துன்மையும் உண்டாகின்றது ; தேக நிலையை அறிந்து கொடுக்கிற வழக்கமில்லை ; எல்லோருக்கும் வித்தியாசமின்றி, சமனாய்க் கொடுத்து விடுகிறார்கள். ரத்தபுஷ்டியுள்ளவர்களுக்குக் கொடுத்து, பத்தியம் வைக்கலாம். மெலிந்த தேகிகளுக்கும், ரோகத்தில் அடிபட்டு தளர்வுற்றவர்களுக்கும், கொடுப்பது யுக்தமல்ல. சிலர் ரணத்துக்கே தைலம் முதலியவைகளைப் போட்டு, உள்ளுக்கு மருந்தொன்றும் கொடுக்காமல் சிகிச்சை செய்கிறார்கள். உள்ளுக்கும் தகுதியான மருந்து கொடுத்துக்கொண்டு வந்தால், ரணம் சீக்கிரத்தில் ஆறிவிடும். தரித்திராம்சையி விருப்பவனுக்கு குய்யரணம் கண்டால், பிரமதண்டுப்பால் முதலியவைகளைப் போடுவது வழக்கம்.

அரையாப்புக்கட்டி

பியூபோ, BUBO.

அரையில் காணுகிற கட்டி இரண்டு விதப்படும்: அரையின் மடிப்புக்கு மேல் மேகக்கட்டி காணும்; அது ஒரே நெறியை மாத்திரம் பற்றியிருக்கும்; அந்த மடிப்புக்குக் கீழ் இரண்டு மூன்று மாமிச கிரந்திகள் வீங்கி நோவெடுத்தால், நெறியென்று சொல்லப்படும். நெறிக்கும், துஷ்ட வியாபாரத்தினால் காணுகிற அரையாப்புக்கட்டிக்குமிருக்கிற வித்தியாசமிதுதான்; அதைக் கண்டறிந்து நாம் சிகிச்சை செய்யவேண்டியது. அரையாப்பில் சிலருக்கு உக்கிற குறிகள் காணும், சிலரில் மெதுவில் கிரமேணுய்ப் பெருத்து, உடைந்து பெரிய ரணமாகி, சீக்கிரத்தில் ஆறமாட்டாது. Inflammation of glands of groins above Poupart's ligaments.

சிகிச்சை.—ஆரம்பத்தில், கட்டியைக் கரைத்து உள்ளடங்கும்படிசெய்ய வேண்டியது; அதற்கு ரோகியை நடக்காமல் செய்து, விரேசன மருந்துகள் கொடுத்து கடும்பத்தியமாய் வைக்கவேண்டியது. கட்டிக்கு அட்டை விடுகிறார்கள். வெந்நீர் முதலிய ஒற்றிடங்கள் கொடுப்பதில் சுகுண மூண்டாகும். வேதனை தணிந்தபிறகு, துணியை மடித்தாவது, ஈயப்பில்லை அல்லது ஒட்டுப்பில்லையை வைத்தாவது இறுகக்கட்டலாம்; ஐயோடின் என்னும் மருந்தைத் தடவலாம்; ரசப்பிளாஸ்திரியைத் தோலின்மேற் றடவிப் போடலாம்; அக்கினிப் பிளாஸ்திரி அல்லது காடிக்காரம்போட்டு புண்ணுக்குவது இங்கிலீஷ்முறை; சித்திரமூல வேரின் பட்டையை யிடித்துக் கட்டுவது நாட்டுச் சிகிச்சை. இலுப்பைக் கட்டியோடு வெள்ளுள்ளி சேர்த்தும், மாவிலங்கைப்பட்டையை இடித்தும், விலாரியிலையை வதக்கியும் கட்டுவதும், சேங்கொட்டைப் பால் தடவுகிறதும் தமிழ்முறை. கட்டி பழுத்து சீழ்க்கொண்டுவிட்டால், மாவுகளி கட்டி நன்றாய்ப் பழுத்தபிறகு, கத்தியால் கீறி சீழை வெளிப்படுத்திவிட்டு, களியையே கட்டிக்கொண்டு வரவேண்டியது. சிலருக்கு ரணம் ஆற நாட்செல்லும்; அதற்கு நிலவேம்பு, நன்னாரி முதலிய தாருட்டியகாரி மருந்துகள் உள்ளுக்குக் கொடுத்து, சிலத்தயிலம், மெழுகு களிம்பு முதலியவைகள் ரணத்துக்குப் போட்டு, ரோகத்தை வசப்படுத்தவேண்டியது. லிங்கம், மிருதாரசிங்கி, ரசகற்பூரம், வெள்ளைக் குங்கிலியம், கடுக்காய், மாசக்காய,காசுக்கட்டி, தான்றிக்காய் இவைகளைச் சமனெடையாய் எடுத்து, சன்னமாய்ப் பொடிசெய்து ஒன்றாய்ச் சேர்த்து, பசும் வெண்ணெயில் அரைத்து, துணிமேற் தடவி ரணத்துக்குப் போட்டுக்கொண்டுவந்தால், சீக்கிரம் உலரும். Keep back by blisters and blue ointment; when pus has once formed, open freely and poultice.

4-ம் அத்தியாயம்

சருமத்திலுண்டாகும் சஸ்திரீகரோகங்கள்.

SURGICAL DISEASES OF THE SKIN.

1. சருமசோபாரோகம். நிபோஷம். (HYPERTROPHY OF THE SKIN.) சருமமானது வளர்ந்து தடித்துத் தொங்கலுற்றிருந்தால், தகுந்த ஸ்தானமாகில், அதைக் கத்தியால், சேதித்துவிடலாம்; பக்குவப்படாத பக்ஷத்தில் விட்டுவிடவேண்டியது.

2. மறு. பாலுண்ணி, கிணம். (வார்ட்ஸ், warts.) சருமத்திலிருக்கும் சிறிய பருக்கள் நீண்டு இந்த ரோகம் பிறக்கின்றது. இது வெளியிலிருந்தால், வரண்டு கட்டியாய்ச் சுவரணையற்றதாய் இருக்கும்; தோலின் மடிப்புக்குள் ளிருந்தால், இதிலிருந்து ஓர்வித ஜலம் வடியும், அந்த ஜலம் பட்ட விடமெல்லாம் மறுக்கள் உண்டாகும். சிலருக்குத் தற்செயலாய் ஒழிந்துவிடும்; சிலருக்கு சிகிச்சைக் கடங்காமல், வந்து வந்து உபத்திரவிக்கும் வெள்ளை, கிரந்தி இவைகளை யுடையவர்களுக்கு, வியாதியின் விஷ நீர்ப்பட்டு, அழற்சி கண்டு, மறுக்க ளுண்டாகின்றன. சிகிச்சை.—பட்டுக் கயிற்றுலாவது, ரோமத்தாலாவது, மறுவுக்கடியில் பிகிவாய்க் கட்டிவைத்தால், ரத்த ஓட்டம் நின்று, மறு விழுந்துவிடும்; கத்தியால் அறுத்தும் விடலாம்; கத்தரித்து விடுவதுமுண்டு. மயில்துத்தம், காடிக்காரம், அசிடிக் காசிட் என்னும் காடி, பொட்டிலுப்பு திராவகம் இவைகளிலொன்றை நாள் தோறும் தடவிக்கொண்டு வந்தால், மறு கரைந்துவிடும். முந்திரிக்கொட்டையின் பாலைப் பூசுவது நாட்டுவழக்கம். Elongated papillæ of cutis covered with cuticle. *Treatment.*—Apply nitric acid or ligature.

3. சிறுபரு. சிலந்தி, கட்டி. (பாயல், Boil Furunculus).—சருமத்தில் தாபிதங்கொண்டு கட்டியுண்டாகின்றது. இதில் வேதனை அதிகமாய் இருக்கும்; பழுத்து உடைந்து சீழ்வடியும்; மத்தியில் சிறிய இழைபோல் துர்மாமிச மிருக்கும், அதற்கு முளையென்று (Core) சொல்லுவர். ரத்ததூஷியத்தினல், அபக்குவ போஜனத்தினுலும், காற்றில் ஏதோ ஒருவிஷமிருப்பதினுலும், தேகதாருட்டியம் குறைவதினுலும், சிருபரு காணுகின்றது. இதில் இரண்டு சாதிகளுண்டு.—ஒன்றில் அதிக வேதனையும் வீக்கமும், சரமுமிருக்கும் (acute); மற்றென்றில் வேதனை மெத்த இராது, கல்லுபோலிருக்கும், மெதுவில் சீழ்க்கொள்ளும் (chronic); ஒவ்வொருவரில் ஒன்றுபோக மற்றென்று முளைத்துக்கொண்டேயிருக்கும். சிகிச்சை —ஆரம்பத்தில் வெங்காயம், வெள்ளைப்பூண்டு, அத்திப்பால், ஆலம்பால், காடிக்காரம், செம்மண், சுண்ணும்பு, பனவெல்லம் அல்லது தேன்கலந்த பத்து, எருக்கம்பாலும் சுண்ணும்பும் சேர்ந்த பத்து, சுண்ணும்பும் மஞ்சளும்கலந்த பத்து, அமுக்கிராங்கிழங்கும் சுக்குங்கலந்தபத்து, முட்டையின் வெள்ளை அம்புலிரும், சுண்ணும்பும் கலந்த பத்து இவைகளிலொன்றைக் கட்டிக்குப்போட்டால் கரைந்துவிடும். விலாரி இலை, பாவட்டம் இலை, துத்தியிலை, தழுதாழையிலை, வாதநாராயணயிலை, பத்திராட்சயிலை, செம்பயிலை, ஊமத்தயிலை, காட்டமணக்கிலை இவைகளில் எதையாவது, வதக்கிக் கட்டுவதுமுண்டு. அதிக நோயும் எரிச்சலுமிருந்தால், சுத்த வெந்நீர் அல்லது போஸ்தக்காய், துத்தியிலை இவைகளைப் போட்டுக் காய்ச்சின வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, வெந்தயம், கற்றாழை, அரிசிமாவு, கோதுமைமாவு, ரொட்டி, காடிச்சாதம், முள்ளுக்கீரை, அலிசிவிரை, வெண்டக்காய், புளிச்சக்கீரை, பசலைக்கீரை, இவைகளில் எதையாவது போல்டீசாகச் செய்துவைத்துக் கட்டினல் வேதனை தணித்து கட்டி சீக்கிரத்தில் பழுக்கும். கட்டிமேல் அபினியை உரைத்துத் தடவினல், நோயும் எரிச்சலும் மட்டிடும். கட்டியில், சீழ்க்கொண்டு மிருதுவான தட்சணமே காலதாமசம் செய்யாமல், கத்தியால் கீறிச் சீழைவெளிப்படுத்திவிட்டு, களிகட்டிக்கொண்டே வரவேண்டியது. சீழ் நின்றபிறகு, மெழுகுகளிம்பாவது, கறுப்பு பிளாஸ்திரியாவது, சீலைமேற் றடவி போட்டுக்கொண்டுவந்தால், சீக்கிரத்தில் கட்டி உலர்ந்துவிடும். கத்திக்குப் பயப்படுகிறவர்களுக்கு, காடிக்காரத்தைக் கட்டிமேல் வைத்துப் புண்ணக்கினல் தோல் நைந்து, துவாரம் விழுந்து சீழ் வெளிப்படும்; கட்டியைக் கீறி சீழைச் சீக்கி

ரத்தில் வெளிப்படுத்தாவிட்டால், அது வியாபித்து உபத்திரவம் அதிகரிக்கும்; முக்கியமாய் உள்ளங்கை, உள்ளங்கால், அக்குள் முதலிய உறுதியான சவ்வுள்ள ஸ்தானங்களில் காணுகிற கட்டிகளைச் சீக்கிரத்தில் கீறி சீழை வெளிப்படுத்தி விடவேண்டியது. A Boil is a circumsribed collection of matter containing a large slough, and an *abcess* is the same with a small core only. *Treatment*.—Free incisions, poultice. Constitutional treatment according to indications. ஊமைக்கட்டிகளுக்கு, டிங்சர் ஆவ் ஐயோடைன் தடவலாம். எதாகிலும் எண்ணெய் கொடுத்து நல்ல பேதியாகும்படி செய்வதிலும் நன்மையுண்டு. அடிக்கடி கட்டிகள் கிளைத்துக் கொண்டே இருந்தால், லைகள் பொட்டாசி, வேப்பம்பட்டை, சிங்கோனைப் பட்டை, நிலவேம்பு, நன்னாரி இவைகளிலொன்றைக் கொடுத்துக்கொண்டே வந்தால் சவுக்கியமுண்டாகும். இடத்தை மாற்றி, பரிசுத்தக் காற்றும் ஜலமுமுள்ள இடத்தில் சிலநாள் ரோகியை வாசம் செய்யும்படி வைத்தால், ஔஷதத்துக்கு வசப்படாத ரோகமும், வசப்படும்.

4. **ராஜபிளவை.** ராஜவிரணம், பக்கப்பிளவை, ஆமையோட்டுக் கட்டி (கார்பங்கில், CARBUNCLE; Anthrax).—இது மகாகெட்டரோகம், சீக்கிரத்தில் தகுதியான சிகிச்சை செய்யாவிட்டால், ஆளைக்கொல்லும்; மதுமூத்திர ரோகிகளுக்கு இந்தரோகம் காண்பது வழக்கம்; தேகத்தில் பலவிடத்தில் கண்டபோதிலும், முதுகின்மேல் மேற்புரத்தில்சாதாரணமாய்க் காணுகின்றது; ஆமையின் முதுகுபோல் வீங்கிமேடாய் இருப்பதால், ஆமையோட்டுக் கட்டியென்று பேர் பெற்றது. பிரமாணத்தால் பேதப்படும்; சருமத்தில் லீம்ப் என்னும் பசை கெட்டுச் சேர்ந்து, கல்லுபோல் வீக்கங் காணும்; தொடக்கூடாத அவ்வளவு வேதனையிருக்கும். இப்படி இருப்பது கிரமத்தில் பெருத்து மிருதுவாகி சீழ்க்கொள்ளும்; சீழின் தத்தளிப்பு நன்றாய் அகப்படாது; பிறகு சருமம் ரணமாகி, சல்லடைக்கண்கள்போல் கட்டியின்மேல் அநேக விருத்தமான துவாரங்கள் கண்டு, அவைகளிலிருந்து துர்நீர் வடிந்துகொண்டிருக்கும்; கட்டியை அழுத்தினால், தயிர்போல் உரைந்த நீர் வெளிப்படும், கட்டியை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டால், துவாரங்கள் பெருத்து ஒன்றோடொன்று சேர்ந்து, சீழும் சவ்வும் வெளிப்பட்டு, பிறகு மெதுவில் ரணத்தில் சதைவளர்ந்து ஆறிவிடும். கட்டியின் அடி பரவி, புரையோடுகிறதன்மை இருப்பதால், எப்போதும் இதை அபாயரோகமென்றே யோசிக்கவேண்டியது. ரத்ததூஷியத்தினாலும், கெட்டகாற்றினாலும், இந்தரோகம் காணுகின்றது; இதில் கொடியசுரமும், மெத்த அசக்தியும் பிறக்கும். சிகிச்சை.—வெந்நீர் ஒற்றிடம்கொடுத்து, களிவைத்துக் கட்டிக் கொண்டு வந்தால் சீக்கிரத்தில் பழுக்கும், பழுத்தபிறகு, கத்தியால் நெடுக்கவும், குறுக்கவும் கீறிவிட்டால், பத்தலாய் விரிந்து சீழும் கெட்டுப்போன சவ்வும் வெளிக்கு வந்துவிடும்; பிறகு, கீறினவாயில் குங்கிலியக்களிம்புவைத்து, களிகட்டிக்கொண்டு வரவேண்டியது. தினத்துக்கிரண்டு ஆவர்த்தி, வெந்நீர்விட்டுச் சுத்திசெய்து, களிகட்டினால் நல்லது. கட்டியை அழுத்தி சீழை எடுப்பதைப்பார்க்கிலும், குழைவைத்து உறுஞ்சியெடுத்தால் மெத்த அனுகூலமுண்டு குடுவைப்பரியாலும் சீழைவெளிப்படுத்திவிடலாம்; கட்டியில் சீழ்த்தங்காமலெடுத்துவிடுவதே பிரதான சிகிச்சை. அபினியாவது மார்பியாவாவது இராத்திரியில் கொடுத்துக்கொண்டு வந்தால், அயர்ந்த நித்திரை பிறக்கும். சீழ்நின்று பக்குவத்துக்கு வந்தபிறகு, மெழுகு களிம்பு போடலாம். இந்தப் பயங்கரமான விரணம் இருக்கிறவரையில், பத்தியம் வைக்கலாகாது; நல்ல ஊட்டம் கொடுத்து சாராயம்,

சிங்கோனு, வேப்பம்பட்டை இவைகளை ஏற்றி தேக தாருட்டியம் குறையாமல் செய்தால், ரணம் சீக்கிரம் சிகிச்சைக்கு வசப்படும், Inflammation and death of circumscribed portion of areolar tissue or fascia. It is at first small and hard, but may grow to any size, and is known by the pustules being small and numerous like holeson the top of a pepper box. Treatment.—Free crucial incision ; poultice ; opium; purgatives; liberal support and stimulants; barkand ammonia.

மாமிசம், தசைநார், நித்தகம், ஆகிய இவைகளுக் குண்டாகும்

ரோகங்களும், காயங்களும்.

DISEASES AND INJURiES OF MUSCLES, TENTONS, AND BURSÆ

1. மாமிச சுஷ்கரோகம்.—பேசி அபோஷம். (Atrophy of muscels), மாமிசங்களுக்கு அசைவு கொடுக்காமலிருந்தால் இந்தரோமம் காண்பதுண்டு ; சுரம் கண்டபிறகும், காயம், வேறுரோகம் இவைகளாலும்பிறக்கும் ஸ்பரிசநரம்பு வியாதியால், ஒரு கை, அல்லது ஒருகால், அல்லது இரண்டு காலும்சூம்பிவிடும். சூம்பல்கொண்ட உறப்பு எப்போதும் சில்லிட்டு திமிராமிருக்கும் ; போஷணை குறைவுபடும் ; காத்திரத்தில் உணங்கியிருக்கும் சிறுவயதில் கண்டால், மற்ற உறப்புகளைப்போல வளராது. சிகிச்சை.—அயம், குவைனு, மீன்நெய் முதலிய தாருட்டியகாரிகளைக் கொடுத்து, கம்பளி ஆடைகள் தரிக்கும்படிச் செய்து, நல்ல ஊட்டமும் கொடுத்து, உஷ்ண பூசுத்தயிலங்களிட்டுத் தேய்த்து, மெதுவாய் ஆட்டம் கொடுக்கச்செய்து, பிசைந்து, மின்தாது யந்திரத்தில் சதைகளின் இழைகளுக்கு அசைவுகொடுத்து, இந்தரோகத்தை வசப்படுத்தவேண்டியது.

2. ரத்ததூஷியமுடையவர்கள் சீதகாலத்தில் திரிந்து கழுத்து சதைகளுக்கு வியாதிகொண்டு, கழுத்தை அசைக்கக் கூடாமல் செய்வத்திற்கு, சாதாரணமாய் சுளுக்கு (stiffneck ; inflammatory spasm) என்று சொல்லுவர். இதை சதைகளுக்குக் காணுகிற உக்கிறவாதரோகம். சிகிச்சை.—இதற்கு ஒரு பேதிக்கிக்கொடுத்து, ஒற்றிடமிட்டால் சவுக்கியமாகிவிடும்.

3. சுளுக்கு. உளுக்கு. (ஸ்பிரெயின், Sprain) —எந்த மூட்டாவது சடுதியில் பிசகினுல், எலும்பு முனைகளைச் சேர்த்து நழுவவொட்டாமல் கட்டி வைத்திருக்கிற பலனுள்ள சந்திபந்தனம், உளறணி, சவ்வு இவைகளிலெதாவது மெத்த பிகிவுத்து நோவெடுப்பதற்கு, சுளுக்கென்றுபேர். ஒரு வேளை அவைகளின் இழைகளற்றும் அருமலும் போவதுண்டு. இதில் உடனே அதிக வேதனைபிறக்கும். மூர்ச்சை காண்பதுமுண்டு. மூட்டு அதிகமாய் வீங்கி சிவக்கும், பிறகு அந்த மூட்டில் தள்ர்ச்சியும், பிகிவும் உண்டாகும். சுளுக்குகொண்ட மூட்டை அசையாமல் வைக்காவிட்டாலும்சரி, அல்லது தேகத்தில் ரத்ததூஷிய மிருந்தாலும்சரி, முழங்கால் முழங்கை முதலிய பெரியமூட்டுகள் சுளுக்கினுலும் சரி, வேதனை, வீக்கம், சுரம் பிரபலமடைந்து, கெடுதி சம்பவிக்கும், சிகிச்சை.—இதில் மூட்டை அசையாமல் வைப்பதே முக்கிய விஷயம் ; வெந்நீர் ஒற்றிடம் கொடுப்பதில் வேதனை தணியும். அட்டையும் விடுகிறுர்கள், பேதிக்கிக்கொடுத்து இரண்டொரு நாள் லகு அசனம் செய்யச் சொல்வதிலும் உபயோகமுண்டு. பிறகு நாள்தோறும் குளிர்ந்தஜலம் மூட்டின்மேல் விட்டு, தயிலம் தடவி, அசையாமல் துணிசுத்திவைக்க வேண்டியது. சுளுக்கிக்கொண்ட மூட்டில் அடிக்

கடி வீங்கித் தாபிதம் கொண்டால், ஐயோடைட் ஆவ் பொடாசியம் கொடுத்துச் சவுக்கியப்படுத்த வேண்டியது. சுளுக்குக்கு மந்தரிப்பதும், சிறு குழந்தையின் காலால் தடவுகிறதும் வீட்டுவழக்கம். This is a voilent stretching of ligament or tendon with (probably) rupture of some of the fibres. It causes great pain and generally swelling and ecchemosis. Treatment.—Perfect rest; warm fomentations; purgatives; opitat-es, Liniments or stream of cold, or cold and salt water, when the inflammation has subsided.

எலும்புக்குக் காணுகிற ரோகங்களும், காயங்களும்.

DISEASE AND INJURIES OF THE BONES.

1. ஹஸ்திசோபாரோகம். (Hypertrophy of the bone), எலும்பானது, அதின் தாதுகெடாமல், காத்திரத்தில் பெருத்துப்போவதற்கு, அஸ்திசோபா ரோகமென்று பேர். இதை ஔஷதத்தினால் தடுப்பது கஷ்டம், ஒருவேளை மருந்து கொடுக்கவேணுமென்கிறபோது, ஐயோடைட் ஆவ் பொடாசியம் என்னும் உப்புக்கு மேலானது ஒன்றுமில்லை. General ehlargement of bone. *Treatment,*—Iodine locally, Iodide of potassium internally.

3. ஹஸ்தியின் உக்கிரதாபிதம். (Acute inflammation OF bone.) சீதளத்தினால் பால்லியவயதில், தொடையெலும்பிலாவது, காலெலும்பிலாவது, உக்கிரதாபித முண்டாகும். எலும்பின் மத்தியத்தில் காணுமேயொழிய, முனைகளில் காணுகிறதில்லை. குறிகள்—இதில் குளிரோடு சுரம்காணும்; வேதனையுடைய உறுப்பு அதிகமாய் வீங்கி உள்ளே நோவெடுக்கும்; சருமம் அக்கினியாதிபோல் சிவப்பாயிருக்கும்; வெகு சீக்கிரத்தில் சீழ்கொண்டு, அந்தச் சீழ் சதைகளின் வழியாய்ப் பரவி, பல விடங்களில் முகம்வைக்கும்; இந்த வியாதியைப் பிறப்பித்த காரணத்தினாலாவது அல்லது இந்தவியாதியில் வடிகிற அதிக சீழாலாவது ரோகிக்கு மிருத்தியு சம்பவிக்கும். தெய்வானுகூலத்தினால் பிழைத்துக்கொண்டால், எலும்பு அழுகிப்போகும். சிகிச்சை—பேதிக்கி கொடுக்கவும்; சுர ஆரிமருந்துகள் கொடுத்து, அட்டைவிட்டு, ஒற்றிடமுமிட வேண்டியது; சீழின் தத்தளிப்பு கண்டவுடனே கீறிவிடுவது நல்லது; மறுபடியும் சீழ்க்கொள்ளாமலிருக்க துணி, சுத்திவைக்கலாம்; நல்ல ஊட்டமும், பிராந்தியும் பலம் தருகிற மருந்துகளும் கொடுத்து, எதிலும் வியாதி வசப்படாமல் அதிக சீழ்வடிந்து ரோகியை துற்பலப்படுத்தினால், உறுப்பைச் சேதித்துவிட வேண்டியது. Intense pain, and great redness and swelling in the limb; high fever; after a time profuse suppuration, under which the patient frequenly sinks. Very often terminates in necrosis. *Treatment.*—Ordinary antiphlogistic; support.

3. ஹஸ்தியின் சாத்மீகதாபிதம். காலிகதாபிதம். (Chronic inflammation of Bone). தேக அசவுக்கியத்தினால் இந்த ரோகம் காணுகின்றது; பல வெலும்புகளை அனுசரித்திருக்கும்: வியாதியுள்ள எலும்பு கிரமேணாய் வீங்கும்; அழுத்தினால் வேதனையெடுக்கும்; பளுவாய் தோற்றப்படும்; இரவில் அதிக வேதனை யெடுக்கும். காயத்தினால் இது உண்டானால், எலும்பு சொத்தையாகி விடுவதுண்டு; ஆனால் எலும்பின் ரூபமாத்திரம் கெடுவதே வழக்கம்.

4. பரியஸ்தியத்தின் தாபிதம்—(Inflammation of the Periosteum. Periostitis.) கை காலிலுள்ள நீண்ட எலும்புகள், காரை எலும்பு, சிரசு எலும்பு ஆகிய இவைகளில் இந்த வியாதி அனுசரிப்பது வழக்கம். ஆரம்பத்தில், எலும்பை மூடிக்கொண்டிருக்கிற சவ்வின் உரையிலாவது அல்லது சவ்வுக்கும் எலும்புக்கும் மத்தியிலாவது, ஒருவித நீர்ச்சுரந்து, அண்டவடிவான வீக்கம் காணும் (நோட், Node), அதில் நோவும், இரவில் அதிக வேதனையுமிருக்கும்; வியாதி உக்கிரமாகில், சவ்வானது தடித்துமிருதுவாகி, ரத்தஞ்சேர்ந்து, எலும்பைவிட்டுப் பிறிந்துவிடும்; சாந்தகுணமுடையதானல், சவ்வும் எலும்பும் தடித்துவிடும். சிலருக்குஇதில் சீழ் உண்டாகி எலும்பு நைந்துப்போவதுமுண்டு. மேகரோகமே இதற்குக் காரணமானபோதிலும், வாத ரோகம் கண்டமாலே சம்பந்தமான ரோகங்கள் ஆகிய இவைகளாலும் இந்நோய் பிறப்பதுமுண்டு. சிகிச்சை.—வியாதி உக்கிரசாதியாய் இருந்தால் அட்டைவிட்டு, வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து ரசபஸ்மத்துடன் அபினிசேர்த்துக் கொடுத்தால், கொதிப்பு தணிந்து ஆரோக்கியமுண்டாகும். தியாதி சாந்த குணசாதியாகில், ஐயோடைட் ஆவ் பொடாசியம் என்னும் உப்பைக் கொடுத்துக்கொண்டு வந்தால், வீக்கம் கரைந்து, இராவேதனையும் நீங்கிவிடும், பிளிஸ்டர்போட்டு புண்ணுக்குவதிலும் உபயோகமுண்டு. சவ்வுக்கும் எலும்புக்கும் மத்தியில் சீழ் சேர்ந்துவிட்டால், கீறிவிடவேண்டியது. Acute Periostitis.—Causes; Scrofula, Rheumatism, Syphilis. Scrofula.—In children: little pain, general enlargement. Rheumatism.—Great pain, general enlargement. Syphilis.—Oval nodes. *Treatment*.—Leeches, purgatives, diaphoretics, iodide of potasium, opium. For the chronc,—Iodide of potassium, blisters, opium.

5. நீர்க்ரோஸிஸ். NECROSIS. எலும்பு தாபிதங்கொண்டு சீவனற்று, மக்குதலுக்கு, இங்கிலீஷில் நீக்குரோஸிஸ் என்று பேர். எலும்பை மூடிக்கொண்டிருக்கிற சவ்வும், அடுத்திருக்கிற தாதுக்களும் கெடாமலிருந்தால், விம் என்னும் பசை சுரந்து, சீக்கிரத்தில் எலும்பாக்கி, ஒட்டைப்போல் மூடி, மேலும் கீழும், கெடாமலிருக்கிற எலும்பில் ஒட்டிக்கொண்டிருக்கும். சீவனற்றுப் பிரத்தேகப்பட்டுப்போன எலும்பின் துண்டுக்கு, சிக்குவஸ்டிரம் (Sequestrum) என்று பேர். அதின் உட்புறம் செல்லடித்ததுபோலிருக்கும். மூட்டு சமீபத்திலிருக்கிற எலும்பில் காண்பது அபூர்வம். எலும்பின் நைந்த துண்டை எடுத்து சிலநாள் சென்றபிறகு, புது எலும்பு சுருங்கி பள்ளம் அடங்கி, பூர்வீக எலும்புரூப மடைந்துவிடும்.

குறிகள்.—உக்கிரதாபிதக் குறிகள் கண்டபிறகு, எலும்பின் வீக்கம் கரையாமலேயிருக்கும். சீழ் வெளிப்படுவதற்கு உண்டாகிற துவாரங்கள் புரைபோலாகிவிடும்; அதிலிருந்து சதை வளரும் சருமத்திலிருக்கிற துவாரங்கள், புது எலும்பிலிருக்கும் துவாரங்களோடு (cloacæ) ஏக தேசம் சம்பந்தப்பட்டிருக்கும். துவாரத்தில் சிலாக்கைவிட்டு சோதித்தால், அந்தரமாய் இருக்கிற துண்டெலும்பாவது, அல்லது பிரத்தேகப்படப்போகிற எலும்பாவது தட்டுப்படும்.

சிகிச்சை.—பிரத்தேகப்பட்ட எலும்புத்துண்டை எடுத்துவிடுவதே இதற்கு முக்கிய சிகிச்சை. அது சின்னதாய் இருந்தால் வருத்தமில்லாமல் எடுத்துவிடலாம்; பெரிதானல் அறுத்தெடுக்கவேண்டியது. Necrosis, death of a bone; the dead portfon is called *Sequestrum*. The peri-

osteum, &c., effuse lymph, which soon becomes converted into bone; the holes in the shell of new bone are called *Cloacæ*. *Treat. ment.*—When the now bone is firm and strong, the sequestrum, if loose, may be removed by operation. Liberal support through out on account of the profuse suppurati on.

6. எலும்பு சைத்து. வெளிப்பக்கம் படையாய் உதிர்ந்துபோவதற்கு, எகிஸ்போலியேஷன் (Exfoliation) என்றுபேர். இதில் புதிதாய் எலும்பு உண்டாகி, செத்த எலும்பை மூடிக்கொள்ளுகிறதில்லை. காயத்தினால் எலும் பின்மேல் மூடியிருக்கிற சவ்வு கழன்றுவிட்டால், எலும்பு செத்துபடையாய்ப் பேர்ந்துவிடும். இதற்கு வெடியுப்பு கலந்த ஜலத்தை மேலுக்குப்போடலாம். பேர்த்துக்கொண்ட எலும்பின் சிராவைச் சீக்கிரத்தில் எடுத்துவிடவேண்டி யது. Exfoliation is caused by death of a thin layer of bone.

7. ஹஸ்திவிரணம், (கேரீஸ், CARIES.) தாபிதத்தினால் எலும்பின் பதா ர்த்தம் கரைந்துகொண்டு போவதற்கு ஹஸ்திவிரணமென்றுபேர். இதற்கும் நீங்குரோசெஸ் என்னும் வியாதிக்கும்; பார்வைக்கு உறுப்பின் ரூபத்தில் பேதமிராது. எலும்பு பெருத்திருப்பதுபோல் காணப்படும்; இரண்டொரு புரை ரணம் உண்டாகும்; புரையில் சிலாக்குவிட்டுச் சோதனை செய்தால், எலும்பின் மிருதுவான பதார்த்தம் உடனே உடைந்துபோய், நறநறம்புத் தட்டுப்படும். முள்ளந்தண்டு எலும்புகள், உருண்டை எலும்புகள், தட்டை எலும்புகள் இவைகளில் இந்த வியாதி அடிக்கடி காணலாம். மேக ரோகத்தினால் சரீரம் கெட்டு இவ்வித ரணம் பிறக்கின்றது.

சிகிச்சை.—இதற்கு உடம்பிலிருக்கிற வியாதி அறும்படி உள்ளுக்கு மருந்து கொடுத்து, ரணம் ஆறும்படி வெளிக்கும் மருந்திடவேண்டி யது. இருக்குமிடத்தை மாற்றி, பலம் வரும்படி மருந்து கொடுக்கவேண் டியது. சமுத்திரக் காற்றும், ஜலமும் சுகுணமுண்டாகும். பக்குவமாய் இருந்தால் வாளால் அருத்தாவது காக் (gague)என்னும் கருவியால் தோண் டியாவது, வியாதிகொண்ட எலும்பை முற்றிலும் எடுத்துவிடவேண்டியது. இது செய்யப் பக்குவப்படாத பட்சத்தில், பொட்டிலுப்புத் திராவகம் கலந்த ஜலத்தை ரணத்துக்குப் போடலாம். புரைகளின் மத்தியமாய், ஸ்டிகிங் பிளாஸ்திரி தடவிய சீலையைப்போட்டு அழுந்தும்படிச் செய்வதி லும் சுகுணமுண்டு. தாஜாவாய் இருக்கிற இடத்துக்கு, ஐயோடைன் தடவ லாம். Caries is softening, producing molecular death and ulceration.

ஹஸ்திபங்கம்

பிரதிபதங்கள்.—எலும்பு முறிவு.

பிராக்ஷர், FRACTURE.

எலும்புகள் முறியும்போது, சில முறிந்த இடத்தில் இருக்கும், வெளியில் காயமிராது, (simple); சில முறிந்த இடத்தில் காயம் கண்டு, அக்காயமும் முறிவும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கும், (compound); சில எலும்புகள் குறுக்காயும், (transverse), சில சாய்ப்பாயும், (oblique), சில நொறுங்கித் துண்டுகளாய் முறிந்துமிருக்கும். பலத்த அடிப்படுவதினாலும், சதைகளின் வலிப்பினாலும் எலும்பு முறியும். ஒரு காயம் எவ்வகையாய்

ஆறுகின்றதோ, அவ்வகையாகவே முறிந்த எலும்பும் கூடிச்சவுக்கியப்படும். எலும்பு முறிந்தபிறகு, அந்த முறிவைச் சுற்றிலும் ரத்தம் ஒழுகி சூழ்ந்து கொள்ளும்; அது கிரமேணுய் வற்றிவிட்டபிறகு விம்ப் என்னும் பசையானது, ஒடிந்த எலும்பின் முனைகளுக்கு மத்தியிலும், சுற்றிலும் சுரந்து சூழ்ந்து கொள்ளும்; இப்படிச் சூழ்ந்துகொண்டபிறகு அந்தப் பசையானது உறுதியடைந்து (fibrous) கடைசியில் எலும்பாகிவிடும். இப்படி உண்டாகச் சுமார் 4-முதல் 10-வாரங்கள் செல்லும். இளவயதும் நல்ல சவுக்கிய ஸ்திதியுமுடையவர்களுக்கும் எலும்பைச் செவ்வையாய் அசையாமல் கூட்டிவைத்தபோதும், அதிசீக்கிரத்தில் இந்தவிதமாகிவிடும். பிறகு முடிவில் ஆவசியமில்லாத எலும்பு கிரமேணுய்க் கரைந்து, எலும்பு மத்தியிலிருக்கும் துவாரம் எப்போதும்போல் ஏற்பட்டுவிடும். இவ்விதமாக 6-முதல் 12-மாதங்கள் செல்லும். ஒடிந்த எலும்பைக் சேர்த்துவைக்கிற பதார்த்தத்துக்கு பூணென்று (மொக்கு, callus) சொல்லப்படும். Fractures are *Simple*, when the fractured ends have not protruded through the skin; *Compound*, when they have; *comminuted*, when the bones are broken into several pieces. They may be compound and comminuted. According to the direction they may be either *Transverse* or *Oblique*. Repair by the effusion and ossification of lymph; thematerial is called *Callus*.

குறிகள்.—எலும்பு முறிவில் முக்கியமாய் 3-குறிகளுண்டு; விரூபம், deformity—அதிசலனம் அல்லது சுபாவந்தப்பி அசைதல் preternatural mobility—நறநற சப்தம், crepitus ஆகிய இவைகளாம். இவைகளன்றி, வேதனை, வீக்கம் முதலியவைகளும் கண்டிருக்கும். ஒடிந்த உறுப்பு வளைந்து, அல்லது குறுகி, அல்லது முறுக்கிக்கொண்டிருப்பதற்கு, விரூபமென்று பேர். ஒடிந்த எலும்பின் மேல்பாகத்தை அசையாமல் பிடித்துக்கொண்டு, கீழ்ப்பாகத்தை அசைத்தால், அதுமாத்திரம் அசையும். ஒடிந்த இரண்டு முனைகளை ஒன்றோடொன்று சேர்த்துவைத்து அசைத்தால், நறநற சப்தம் கேழ்விப்படும். அந்த முனைகள் பிரத்தேகப்பட்டிருந்தால், இழுத்து அவைகளைப் பொருந்தவைத்தாலொழிய, இந்தச் சப்தம் கேழ்விப்படாது.

சிகிச்சை.—எலும்பு முறிவுக்குப் பொதுச் சிகிச்சை யென்னவெனில், எலும்பு முனைகளை எப்போதும்போல் வைத்து, அவைகள் கூடுகிறவரையில் அசையாமல் செய்து வைக்கவேண்டியது. காலில் முறிவுகண்டால், கால்களைச் சேர்த்துவைத்து, முழங்காலண்டையும், கணுக்காலண்டையும் கட்டிவிட்டு, ஒரு ஏணியில் ஆளைவைத்து வீட்டுக்காவது, வைத்தியசாலைக்காவது கொண்டுபோகவேண்டியது. 2-வது, எலும்பை மேல்புரத்தில் ஒரு ஆளைப் பிடித்துக்கொள்ளும்படியாயும், கீழ்ப்பாகத்தை மற்றொரு ஆள் இழுத்து யதாப்பிரகாரமாய்க் கொண்டுவரும்படியாயும் செய்து சிகிச்சைகன், ஒடிந்த முனைகளைப் பொருந்தச் செய்யவேண்டியது, (reduce or set); சகலமும் தயார்செய்து வைத்துக்கொண்டு இதைச் செய்யவேண்டியது. எலும்பின் முனைகளை இழுத்துச் சரிப்படுத்தினபிறகு, அசையாமவிருக்க பத்தைகள் வைத்துக் கட்டவேண்டியது. பத்தை உறுத்தாமல் துணி, கம்பளி முதலியவைகளை மடித்தாவது அல்லது பஞ்சாவது வைத்து ரூக்ஷிக்கவேண்டியது. வைத்தியசாலைகளில் வைத்துக் கட்டுகிற பத்தைகள் அநேக விதங்களுண்டு, மூங்கில், தென்னம்பட்டை, பனம்பட்டை, பாக்குப்பட்டை இவைகளைவிட நமக்கு மேலானது ஒன்றுமில்லை.

பைதைத்து வைக்கோலை அடைத்து, பத்தைக்குப் பதிலாய்வைத்துக் கட்டலாம். இவ்விதமாய்ச் செய்தபிறகு, ஆளுக்கிருக்கிற தளர்ச்சி நீங்கும்படி சாராயம் கொடுக்கவேண்டியது ; ஒருவேளை மூத்திரஅடைப்பு கண்டால், சிலாக்குவிட்டு மூத்திரத்தை வெளிப்படுத்தி விடவேண்டியது ; மலபந்தமிருந்தால் பேதிக்கிக் கொடுக்கவேண்டியது ; எலும்பு முறிந்தவிடத்தில் சூடாயிருந்தால், ஈரத்துணி போட்டுவைக்கவேண்டியது ; பிறகு 1-கிரேன் அபின் தினத்துக்கு 2-3-ஆவர்த்தி கொடுத்துக்கொண்டுவந்தால், வேதனையைத் தணித்து, படுத்தப்படுக்கையி லிருக்கவேண்டிய ஹிம்சையை சகிக்கும்படியாகச் செய்யும் ; ஆற்றுத்தும்மட்டிக்காயின் சத்தைச் சேர்த்துக்கொண்டால் மலம் இறுகாது. வீக்கம் கண்டால், கட்டை அவிழ்த்து, பிறகு ஆளுக்கு ஹிதவாய் இருக்கும்படிகட்டி, பத்தைகள் சதையில் உறுத்தாமலும் ஒடிந்த எலும்பின் முனைகள் நழுகாமலும் செய்து வைக்கவேண்டியது. ஒடிந்த எலும்புக்கு பத்தைவைத்துக் கட்டி 6-மணி நேரஞ்சென்றபிறகு, சோதித்து, விரல்கள் நீலநிறமானாலும் சரி, அல்லது திமிரேறினாலும் சரி, அழுகலுக்கிடம் உண்டாகிறதென்று தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்த சிகிச்சை செய்யவேண்டியது. கட்டை இழுத்துக் கட்டினால், ரத்த ஓட்டம் தடைபட்டு, கட்டுண்டவிடம் அழிகிப்போகும், ஆகையால் ரத்த ஓட்டம் தடைபடாமலிருக்கும்படி கட்டவேண்டியது கட்டை அவிழ்த்துவிட்டபிறகு ஒருவேளை வீக்கமிருந்தால், கொஞ்சநேரம் பிரதிதினம் கையால் தேய்த்து, துணியைச் சுத்திக்கொண்டுவந்தால், வீக்கம் கரைந்துவிடும். அதற்கு படியைவைத்து அழுத்தி உருட்டுவது நமது பெண்கள் வழக்கம், அப்படிச் செய்வதில் கூடியிருக்கிற எலும்பு ஒடிந்துபோவதும் உண்டு. எலும்பு முறிவுக்கு, இலைகளைக்கட்டுகிற, தயிலங்களைப் பூசுகிற நாட்டுவழக்கம் அப்பிரயோசனமானது; ஒடிந்த எலும்பு அசையாமல்செய்து, நேராய் வைப்பதே பிரதான சிகிச்சை. *Treatment of fractures generally*: Appose the fractured ends as exactly as possible ; keep them so by relaxation of muscles and mechanical appliances.

காயத்தோடு எலும்பு முறிந்திருந்தால், (Compound fracture) அது சவுக்கியபட நாட்செல்லுவது மன்றி, அதனால் பிறக்கிற சோகம், தாபிதம், சுரம் இவைகளால், பிராணசேத முண்டாகுவதுமுண்டு ; ஆகையால் காயம்பட்ட உறுப்பைச் சேதிக்கவேண்டியதோ, அல்லது காயம் சவுக்கியப்பட்டுவிடுவதாய் இருந்தால் சும்மாய்விட்டு விடவேண்டியதோ அதை ஆரம்பத்தில் தானே யோசித்துத் தீர்மானித்துக் கொள்ளவேண்டியது. எலும்பு நொறுங்கிவிட்டாலும், முறிவு மூட்டோடு சம்பந்தப்பட்டிருந்தாலும், மாமிசமும், சருமமும் அதிகமாய் நசுங்கிவிட்டாலும், காயம்பட்டவன் விருத்தாப்பியனுயிருந்தாலும், காயத்திலுண்டான சோகம் அதிகமானதும், தெளிவுபிறக்காமலிருந்தாலும், அங்கசேதனஞ் செய்யவேண்டிவரும். இவ்வித குணங்களொன்று மில்லாமலும், சிறுவயதும், தேகசௌக்கியமு முள்ளவனுயிருந்தால் காயம்பட்ட உறுப்பைக் காற்றுக்கொள்வதற்குவேண்டிய முயற்சி செய்யவேண்டியது. ஒருவேளை கால் கை அறுக்கும்படியாய் நேறிட்டால், சுரமும், தாபிதமும் உண்டாகமுன் செய்யவேண்டியது In compound fracture amputation will be called for if the reparative powers are very low, the bone or surrounding soft part extensively injured; if the fracture goes into a joint, or the great vessels are sufficiently damaged to be likely to cause mortification or secondary hæmorrhage. It must be primary.

சிகிச்சை —முறியுண்ட உறுப்பை சுட்சிக்கும்படி பிரயத்தினம் செய்தால், அதைக் கிரமஸ்திதியில்வைத்து, ஒடிந்த முனைகள் பொருந்தும்படிச் செய்யவேண்டியது. கூர்மையான எலும்புமுனை பிதுங்கியிருந்தாலும் சரி அல்லது அதைப் பொருந்தும்படிச் செய்வது பிரயாசையாய்இருந்தாலும்சரி, அல்லது எலும்பின்மேலிருக்கும் சவ்வு கழன்றுவிட்டாலும்சரி, அதைவாளால்அறுத்துவிடவேண்டியது. எலும்புத்துண்டுகள் ஏதாகிலுமிருந்தால் அதையும் நீக்கிவிடவேண்டியது, நீக்காவிட்டால் தாபிதத்துக்கும் விரணசந்நிக்குமிடங்கொடுக்கும், நீராதசனும்பு வியாதியும் சம்பவிக்கும்: ஆவசியமிருந்தால் காயத்தைப் பெருக்கச் செய்துகொள்ளலாம் எலும்பின் முனைகளைப் பொருந்தச் செய்தபிறகு, காயம் ஆறும்படி மூடிபற்றிசெய்யவேண்டியது ; அதற்குத் துண்டுத்துணியை ரத்தம் அல்லது கல்லோடியன் (collodion) அல்லது கம்பவுன்டிங்சர் ஆவ் பென்ஜாயின் (Compound Tincture of benzion இவைகளிலொன்றில் தோய்த்து காயத்தின்மேல்போட்டு, பத்தைவைத்து வடிகிற சீழ் தங்காமல் வெளிப்படும்படி கட்டிவிடவேண்டியது, அடிக்கடி கட்டை அவிழ்க்காமல், ரணத்தைச் சுத்திசெய்துபிளாஸ்திரியிடும்படியாய், பத்தையில் துவாரம் செய்துவைப்பதில் பிரயோஜனமுண்டு; வீக்கங்கண்டால், கட்டை தளர்ச்சிசெய்து, ஈரத்துணியைப்போட்டுவைக்கவேண்டியது; வேதனை நித்திராபங்கமிருந்தால் அபினி கொடுக்கலாம்; ஜலம் கொடுத்து தாகத்தை அடக்கவேண்டியது; வருத்தமில்லாமல் மலமிறங்கும்படிச் செய்யவேண்டியது. மூத்திரஅடைப்பு கண்டால், சிலாக்கு விடவும். ரணத்தைச் சுத்திசெய்துகளிம்பிடும்போதெல்லாம், சீழைச் செவ்வையாய் வெளிப்படுத்திவிட்டு, நாகபஸ்மம் அல்லது கார்போலிக் ஆசிட் சேர்ந்த ஜலத்தைப் பீச்சி, சீழ் தங்காமல் துணி மடித்து வைத்துக் கட்டி சீழ் வெளிக்குவர வழியம்விட்டு கட்டிக்கொண்டு வரவேண்டியது. பலம் வரும்படி மருந்துகளும், சாராயமும், நல்ல ஊட்டமுங்கொடுத்து எதற்கும் வசப்படாமல், ரோகி க்ஷீணமடைவானுகில், உறுப்பை அறுத்துவிடுவதே முடிவான பிரயத்தினம். To save the limb.—Remove all foreign bodies from the wound; oppose the ends of the bones; if necessary sawing off bits for the purpose keep the limb at perfect rest; close the wound with lint soaked in blood. Narcoties.

1. நாசி எலும்பு, (கன்னத்தெலும்பு, மேல்தாடை எலும்பு.) முறிவு (Fracture of Nasal Bones). குப்புற விழுவதினுலும், அடியினுலும், இவ்வெலும்புகள் முறியும். சிகிச்சை.—கால தாமசம் செய்யாமல், ஏதாவது கருவியை நாசிக்குள் விட்டு, அழிந்தியிருக்கிற எலும்பை மேலுக்கெடுத்துவிட்டு, ஈரத்துணியை மேலே போட்டுவைக்க வேண்டியது சிலாக்கு, ஸ்திரீகளுக்கு உபயோகிக்கிற மூத்திரக்குழல், குரடு இவைகளைக்கொண்டு எலும்பை மேலுக் கெடுப்பது ஆஸ்பத்திரி வழக்கம். ஒருவேளை நாசியிலிருந்து அதிக ரத்தம் வடிந்தால், துணி வைத்து அடைக்க நின்றுவிடும். Place left thumb and first finger outside nose, raise the depressed bones by a strong intrument introduced into the nostrils. cold lotions,

2. கீழ்த்தாடை யெலும்பு முறிவு. (Fracture of the lower Jaw.) பலத்த அடியினுல் இந்த எலும்பு முறியும் ; கோரைப்பல்லிடத்தில் ஒடிந்து போவதே வழக்கம். குறிகள்.—வேதனை வீக்கமிருக்கும், தாடையை அசைக்கக்கூடாமையாகும்; பற்களின் வரிசை சரியாய் இராது. முகரையை அசை

த்தால், நறநற சப்தம் கேழ்விப்படும்; ஈறு அறுந்து ரத்தம்வரும்; ஒடிந்த விடத்திலிருக்கிற பல் அசையும். சிகிச்சை.—கடுதாசி அட்டையை நனைத்து கீழ்த்தாடை எலும்பின்மேல் வைத்து, அதின் வடிவாய்க்கத்தரித்துவிட்டு, 4-முனையுள்ள கட்டுத்துணியால் கட்டிவிடவேண்டியது. அகல பாண்டேஜ் சுருளையெடுத்து, $1\frac{1}{2}$-கஜம் நீளத்தில் கிழித்து, மத்தியில் ஒரு கிழிவும், சுமார் 8-அங்குல மிருக்கும்படி இரண்டு முனைகளையும் நீண்டவாட்டத்தில் கிழித்து, விடவை முகரையில் வைத்து, கீழ்த்தாடை எலும்பு, மேல்தாடை எலும் போடு பொருந்தும்படி இரண்டு முனைகளை உச்சிமேலாகவும், மற்றவிரண்டை பின்னந்தலைமேலாகவும் முடிபோட்டு விடவேண்டியது. இரண்டுவாரம் வரையில், ரோகி கஞ்சி இனங்களையே குடித்துக்கொண்டு வரவேண்டியது. இது சவுக்கிய பட 5-6-வாரங்கள் செல்லும். Irregularity of teeth, inability to open the mouth; crepitus. *Treatment.*—Silver wire round teeth on each side of fracture; close the mouth; accuratelymould a paste board splint to jaw; four-tailed bandage. Feed on spoon diet;chlorinated lime gargle for fætor of breath.

3. காறை எலும்பு முறிவு. (Fracture of the Clavicle.) இதில் எலும்பின் மத்தியமாய் முறிவு இருப்பது வழக்கம்; விழும்போது கையை ஊன்றுவதினாலும், அல்லது புஜம் தரையில் ஊன்றும்படி விழுவதினாலும், அல்லது எலும்பின்மேல் நேராய் அடிப்படுவதினாலும், இந்த எலும்பு முறிந்துவிடும். குறிகள்.—இதில் கையை எடுக்க அசக்தியுள்ளவனாய், முழங்கையைத் தாங்கிக்கொண்டிருப்பான்; புஜமானது தாழ்ந்து முன்னுக்கும் உள்ளுக்கும் வந்திருக்கும்; புஜத்தின் நீளம் குறுகலாகும்; மார்பெலும்போடு சேர்ந்திருக்கிற ஒடிந்த எலும்பின் முனை எடுப்பாய் இருக்கும்; மற்றத்துண்டு தாழ்ந்துப்போகுவதால், இந்தபேதம் அகப்படுகின்றது. சிகிச்சை.—புஜத்தை உயர்த்தி, அது மேலுக்கும் பின்னுக்கும், வெளிக்கும் வரும்படிசெய்து, முழங்காலைத் தோள்பட்டை எலும்புகளுக்கு மத்தியமாய் முதுகின்மேல் வைத்துத் தோளைப் பின்னுக்கிழுத்தாவது, அல்லது முழங்கையைப் பக்கத்தில் அணைத்துக் கொஞ்சம் முன்னுக்கு வைத்து மேலுக்குத் தள்ளியாவது, ஒடிந்த எலும்பைக்கூட்டிக் கட்டிவைக்கவேண்டியது ஆப்புபோல் ஒரு மெத்தைசெய்து, அக்குளில்வைத்து பிறகு நீண்ட பட்டைச்சீலையால் தோள்மூட்டுகளை (ஃ) இவ்விதமாய்ப் பின்னிக்கட்டி, பிறகு கையை உடம்போடணைத்து 2-3-தரம் சீலையால் சுற்றி, முடிவில் முழங்கை உயரும்படியாயும், கைக்கு ஆதரவாயும் ஒரு குட்டையை மூலைவாட்டமாய் மடித்துவைத்துக் கழுத்தில் தூக்கிவிடவேண்டியது இதற்குக் கட்ட இன்னம் பல விதங்களுண்டு. சாதாரணமான எலும்புமுறிவுக்கு ரோகியை 10-7 நாளில் எழுந்து நடக்கும்படிச் செய்யலாம்; 4-5 வாரங்களில் சவுக்கியப்பட்டுவிடும். கொஞ்சம் பின்னமிருக்குமென்று ரோகிக்குத் தெரியப்படுத்தவேண்டியது. Dropping and narrowing of shoulder, crepitus, inability to use arm. *Treatment.*—Draw shoulders well back, pad of wadding in each axilla. Figure of 8 bandage to shoulders; sling arm.

4. புஜத்தெலும்பு முறிவு. (Fracture of the Humerus.) இந்த எலும்பு மத்தியில் முறிந்துவிட்டால், பார்த்த உடனே கண்டு கொள்ளலாம்; கையானது குரூபமாயும், குறுகியும், சுவாதீனத்துக் குட்படாமலும், இருக்கும்; கையைவைத்துப் பார்த்தால் நறநறசப்தம் கேழ்விப்படும். சிகி

ச்சை.—வீக்கம் உண்டாகாமல் கைமுழுதும் சமனாய்த் துணியைச் சுற்றி, தோளை அசையாமல் பிடித்துக்கொண்டு, முழங்கையைப் பிடித்து கீழுக்கிழுத்து ஒடிந்த முனைகளைச் சேர்த்துவைத்து, பிறகு குடைவாயிருக்கிற பத்தைக்கு மெத்தையிட்டு, கையின் உட்பக்கமாய், அக்குளுக்குள்ளிலும், முழங்கையிலிருக்கிற பிதுக்கெலும்பிலும் செவ்வையாய் முட்டும்படிவைத்து, மற்றொரு பத்தையை வெளிப்பக்கமாய் அவ்விதமாகவே வைத்து, முன்னுக்கும் பின்னுக்கும் கடுதாசி அட்டையின் பத்தைகளைவைத்து, நாடாக்களாற் கட்டிவிட்டு, பின்பு கையைப் பக்கத்தில் அணைத்துக்கட்டி, முன்கைக்கு எந்தானம்போட்டு முழங்கையை உயர்த்தாமற் தூக்கி கழுத்தில் கட்டித் தொங்கும்படிச் செய்யவேண்டியது. Limb shortened and useless, crepitus. *Treatment* —Well padded hollow splint placed inside limb; slight extension ; three more splints round humerus ; bandage ; dont, raise the elbow.

5. புயவெலும்பின் கீழ்முனைமுறிவு. (Fracture of the lower extremity of the Humerus.) இதில் பலபேதங்களுண்டு ; (1) குழந்தைகளில் கணுக்களுக்கு மேற்புறமாய் ஒடிவது வழக்கம் ; ஒடிந்தால் முன்னங்கையின் இரண்டெலும்புகளுக்கும் கீழ்த்துண்டோடு புயத்துக்குப் பின்புறமாய் மேலுக்கிழுத்துக்கொண்டு, மூட்டுவிலகினது போல் காணப்படும். கையை நீட்டியிழுத்தால் யதாப்பிரகார மாகிவிடும். (2) கணுக்களொன்றில் முறிவு காணும், அம்முறிவு மூட்டுவரையில் வியாபித்தும், வியாபிக்காமலுமிருக்கும். (3). கணுக்களுக்கு மத்தியில் முறிவுகாணும் ; கணுக்கள் எலும்பிலிருந்து வேறுபட்டு விடுவதும் உண்டு. முழங்கை அடிப்பட விழுவதினால் இவ்வித முறிவுகள் உண்டாகும். முழங்கையின் அசைவுகெடாமல், முறிந்தஎலும்பு மாத்திரம் அசைந்துகொண்டிருந்தால், முழங்கை மூட்டுவிலக்கம் உண்டாகவில்லை என்று நிச்சயிக்கவேண்டியது. சிகிச்சை.—முன்னங்கைக்குத் துணியைச்சுற்றி, கடுதாசி அட்டையை நனைத்து முழங்கை முடக்கிய ஸ்திதியில் பொருந்தும்படி டகரவடிவாய்க் கத்தரித்து மெத்தையிட்டு உள்ளும் புறமுமாய் வைத்து பாண்டேஜால் சுற்றி கட்டிவைக்கவேண்டியது. இம்மூன்றுவித முறிவுகளுக்கும் ஒரேவித சிகிச்சை. கையை மடக்கித் தலையணைமேல்வைத்து வீக்கம் வாடுகிறவரையில் அட்டைவிட்டு ஈரத்துணியைப் போட்டுவைக்கவேண்டியது. தாபிதந்தணிந்த உடன் பத்தை வைத்துக் கட்டவும். இரண்டு மூன்றுவாரம் சென்ற பிறகு, மூட்டுக்கு அசைவு கொடுக்கவேண்டியது. Shortening of humerus ; projection of radious and ulna backwards. Easily reduced, with great difficulty kept in place. Treatment.—Place limb on splint at an angle of 45°, and othor splints opposite to it, when inflammation has subsided.

6. ஒலிக்கிரேனன் என்னும் பிதுக்கமுறிவு. (Fracture of the Olecranon.) குறிகள்.—இதில் முழங்கையை மடக்கக்கூடும், ஆனால் நீட்டுவதற்குக் கூடாமையாயும், அதிக வேதனையுமிருக்கும். ஒடிந்த எலும்பின் துண்டானது மேலுக் கிழுத்துக்கொள்ளுகிறபடியால், முழங்கையின் பின்புறத்தில் ஒரு பள்ளம் அகப்படும். சந்திபந்தனங்கள் அறாதிருந்தால் அந்தப்பள்ளம் அதிகமாய்க் காணப்படாது, ஒருவேளை யில்லாமற்போவதுமுண்டு. சிகிச்சை.—வீக்கம் வேதனை தணிகிறவரையில், கையை நீட்டிவைத்து, ஈரத்துணியைப் போட்டுவைக்கவேண்டியது. பிறகு முன்கைக்குச் சீலைசுற்றி, முழங்கை வரையில் வந்தவுடன், ஒடிந்த எலும்புத்துண்டை

இருப்பிடத்துக்குக் கொண்டுவந்து, அதன்மேல் (8) இவ்விதமாய் முழங்கை மூட்டின்மேல் சுற்றி, பிறகு புயத்தின் பின்புறமாயிருக்கும் மாமிசங்கள் சுருங்காமலிருக்கும்படி அதற்கும் சுற்றி, அதன்மேல் முழங்கை மடங்காமல் நீண்ட ஸ்திதியிலிருக்கும்படி அதன்முன்புறத்தில் ஒரு பத்தைவைத்துக் கட்டவேண்டியது. மூன்றுவாரம் சென்றபிறகு, கைக்கு மெதுவாய் ஆட்டங்கொடுக்கவேண்டியது. Great difficulty in eztending arm, depres sion between olecranon and shaft of ulna. *Treatment.*—Bandage, a straight splint against whole length of back of arm, beginning at fingers ends and ending at shoulder.

7. ஆரை, இரத்தினி எலும்புகளின் மத்திய முறிவு. (Fracture of the shafts of the Radius and Ulna). முன்கையிலுள்ள எலும்புகளிரண்டுமாவது, அல்லது ஒன்றாவது மத்தியில் ஒடிந்துவிடும். இரண்டெலும்புகளும் ஒருமிக்க முறிந்தால், முன் கை குறுகி வளர்ந்திருக்கும்; முறிந்த எலும்பின் மேல்துண்டைப் பிடித்துக்கொண்டு கீழ்த்துண்டைத் திருப்பினால், நறநற சப்தம் கேழ்விப்படும்; ஒன்றுமாத்திரம் முறிந்தால், அதைக் கண்டுகொள்வது பிரயாசை. சிகிச்சை.—முழங்கை யண்டையில் பிடித்துக்கொண்டு, மணிக்கட்டைப் பிடித்திழுத்து ஒடிந்த முனைகள் ஒன்றாய்ப் பொருந்தச் செய்து, அகல பத்தையொன்றின்மேல், இரண்டெலும்புக்கும் மத்தியிலிருக்கிற சந்தில் அழுத்தும்படி மெத்தையிட்டு, முழங்கை கணுவிலிருந்து விரல்களுக்கடியில் நிற்கும்படி உட்புறமாயொன்றும், முழங்கை கணுவிலிருந்து கணுக்கையில் நிற்கும்படி வெளிப்புறத்திலொன்றும் வைத்துக் கட்டிவிடவேண்டியது. பெருவிரல் மேற்புறமாய்வைத்து முன் கையும் அஸ்தமும் ஒரு நேராயிருக்கும்படிச் செய்யவேண்டியது விரல்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளாமல், பிரதிதினமும் அசைத்துக்கொண்டு வரவேண்டியது. 4-5 வாரங்களில் எலும்புகூடிவிடும். எலும்புகள் நெருங்கும்படி அழுத்தி துணியைச்சுற்றலாகாது. *Of Radius.*—On placing left thumb and first finger on head of radius, and rotating hand, no motion is felt. Crepitus determines the spot, hand looks as if it were bent back. It is most common in lower third, *Treatment.* Place fore-arm midway between pronation and supination on a splint, then fix another splint at the back; bend hand downwarbs; sling the limb. This and fractured clavicle generally occur from falls and the hand.

8. விரல்முறிவு. (Fracture of the Phalanges.) விரல் எலும்பு முறிந்தால் எளிதில் கண்டுகொள்ளலாம். விரலை அசைக்கக்கூடாது; நறநற சப்தம் கேழ்விப்படும். சிகிச்சை.—இதற்கு மணிக்கட்டிலிருந்து விரல் முனைக்கு வரும்படியாய் குறுகலான பத்தை இரண்டுபுறமும் வைத்துக் கட்டி விடவேண்டியது. எலும்புகளின் உட்புறம் குடைவாய் இருக்கிறபடியால், பத்தைக்குமேல் கொஞ்சம் மெத்தை வைத்துக் கட்டாவிட்டால், குரூபமாய் கூடிவிடும். Inability to move finger; crepitus. *Treatment.*—Splint to finger.

9. விலாஎலும்பு முறிவு. (Fracture of the Ribs.) பலத்த அடியினாலும், கும்பலில் நெருக்கத்தினாலும், விலாஎலும்பு முறிந்துவிடும். முறிந்த முனை சுவாசப்பை, ஈரல் முதலிய உறுப்புகளில் தைத்துக் காயப்படுத்தி, அதனால் ரத்தப் பெருக்கும், தாபிதமும் உண்டாகுவதுண்டு. குறிகள்—ஊசியால் குற்றுவதுபோல் வேதனையிருக்கும்; மூக்செடுக்கும்போதும், இருமும்

போதும், அசையும்போதும் அந்த வேதனைப் பிரபலப்படும்; அப்போது ஒடிவந்தவிடத்தில் கையையாவது, சப்தசோதனைக் குழலையாவது வைத்துக்கேட்டால், நறநறசப்தம் கேழ்விப்படும். முறிவு முள்ளெலும்புக்குச் சமீபத்திலிருந்தாலும், ரோகி தூலசரீரமானவனாய் இருந்தாலும், இந்தமுறிவைக் கண்டுகொள்வது பிரயாசை. மார்பின்மேல் அடிபட்டு உட்சுவாசமெடுக்கும்போது, வேதனையிருக்கும்போதெல்லாம் செய்கிற சிகிச்சை ஒன்றே. சிகிச்சை.—புழுக்கள் அசையாமல் அகலதுணியால் இழுத்துச் சுற்றிவைக்கவேண்டியது; அது கீழுக்கு நழுகவொட்டாமல் நாடாவால் தோள்மேல் கட்டிவிடலாம்; கை அசையாமல் பக்கத்தில் அணைத்துக் கட்டிவிட வேண்டியது. துணிசுற்றிக் கட்டுவதைச் சிலர் சகியார்கள்: அவர்களை அசையாமல் படுக்கையிலிருக்கும்படிச் செய்தால் சவுக்கியப்பட்டுவிடும். ஆளைப் படுக்கையில்வைத்து லகு அசனமும் பேதிமருந்துகளும் கொடுத்து, தாபிதம் பிறக்காமல் செய்ய வேண்டியது. இருமல் தணிந்து, நித்திரையுண்டாக அபினிசேர்ந்த மருந்துகள் கொடுக்கலாம். Great pain on inspiration ; crepitus at spot on coughing. *Treatment.*—Broad bandage accurately applied, that respiration may be disphragmatic. Low diet ; purge.

10. நெஞ்செலும்பு முறிவு. (Fracture of the Sternum) இதில் உசுவாசத்திலும் அசையும்போதும், நறநறசப்தம் கேழ்விப்படும். விலா எலும்பு முறிவுக்குச் செய்கிற சிகிச்சையே இதற்கும் ஏற்கும். Pain on inspiration ; crepitus. *Treatment.*—Broad bandage, salines, purgatives. &c.

11. தொடை எலும்பு முறிவு. (Fracture of the Femur). இந்த எலும்பு பலஸ்தானங்களில் ஒடிந்துவிடும். எலும்பின்மேல் முனையின் கழுத்து, கணுக்களின்கீழ், நடுமையம், கீழ்முனை ஆகிய இவ்விடங்களில் எவ்விடத்திலாவது முறியும்.

1. எலும்பின்மேல் முனையின் கழுத்து முறிவு.—கால் சறக்குவதினாலும், தொடைச் சந்தின்மேல் அடிபட விழுவதினாலும், அல்லது அதின்மேல் அடிபடுவதினாலும், தொடை எலும்பை இழுத்து வைத்திருக்கும் சந்திபந்தனத்துக்குள் முறிந்துவிடும். 50-வயதுக்குள்பட்டவர்களில் இது சம்பவிப்பது அபூர்வம்; வயதுசென்ற பெண்களில் இதைச் சாதாரணமாய்க் காணலாம். விழுந்தவுடனேயாவது அடிபட்ட உடனேயாவது, நிற்கக்கூடாமையாகும்; அதிக வேதனையெடுக்கும்; அசைவுனால் வேதனை பிரபலப்படும். அந்தவேதனை தொடைச்சந்தில் முக்கியமாய் இருக்கும். ஒடிந்தகால் மற்றதைப் பார்க்கிலும் குறுகியிருக்கும்; பாதமானது வெளிக்குப் புறண்டிருக்கும; குதிக்கால் மற்ற கணுக்காலுக்குப் பின்புறமாக நிற்கும்; காலை யதாப்பிரகாரமிருக்கும்படி இழுத்து வைத்துக் கையைப் புட்டத்தின் சப்பைமேல் வைத்துக் காலை உருட்டினால், நறநறசப்தம் கேழ்விப்படும்: இழுத்துப் பிடித்தலை விட்டுவிட்டால் கால் மறுபடியும் குறுகிவிடும். புட்டத்துச் சப்பையின் முழியானது, மற்றதைப் பார்க்கிலும், உள்ளடங்கியிருக்கும்; பாதத்தைப் பிடித்து உருட்டும்படிச் செய்தால், அதில் அதிக ஆட்டமிராது. காலைவிரித்து அசைத்தால் யாதொரு ஆடங்கமில்லாமல் அசையும், ஆனால் வேதனை அதிகமாயிருக்கும்; நோயாளி தன்னிஷ்டப்படிக்கு காலை எடுக்கமாட்டான். சிகிச்சை.—நோயாளி வயதில் அதிகப்பட்டு துர்ப்பல முடையவனாயுமிருந்தால், அதற்கு வேதனை தணிகிறவரையில் இரண்டொரு வாரம் ஆளைப் படுக்கையில்வைத்து, காலுக்

கிரண்டுபக்கமும் பளுவான மணல் பைகள் வைத்து, மற்றொரு மணல்பையைக் கணுக்காலில் கட்டி, மஞ்சத்தின் கால்மாட்டில் தொங்கும்படிச்செய்ய வேண்டியது ; பிறகு எழுந்து உயர்ந்த நார்க்காலியின்மேல் உட்க்காரச்செய்யலாம் ; அதின்பிறகு தாங்குத்தடி வைத்துக்கொண்டு மெதுவாய் உலாற்றம்படி செய்துகொண்டுவந்தால், சில நாளைக்குள் சுமாராய் நடக்கும்படி ஆகிவிடும். ஆளை நாள்படப் படுக்கையில் வைத்தால், சரீர சவுக்கியமும் தாருட்டியமும் குறைவதன்றி, புட்டங்கள் உரைந்துக்கொண்டு, விரணங்களுண்டாகும் Fracture of femur internal to the caposule.—Common in the aged. Leg short, foot everted. Extend limb to bring fractured surfaces in contact, rotate the leg outwards, and crepitus will be felt if left hand be placed on trochanter ; heel rests between heel and inner maleolus of opposite foot. *Treatment.*—Bed for about 2 weeks, with a heavy sand bag on each side of the limb, and another tied round the ankle and hanging over the foot of the bed ; then let patient walk about with crutches, lest bed-sores form.

2. மேற்சொன்ன சந்தி பந்தனத்துக்கு வெளிபுறமாய்த் தொடையெலும்பின் கழுத்து, நேராய் அடிபட்டு ஒடிந்துவிட்டால், எலும்பின் கழுத்து, ட்ரோகான்டர் என்னும் முழியில் புதைந்திருக்கும் ; அம்முழியிலும் விடைவுகண்டிருக்கும். கழுந்து பிதுவாய் புதைந்திருந்தால், நறநறசம்தமிராது,கால் குறிகியிருக்கும்; எவ்விதமாய் இழுத்தபோதிலும், நீளத்தில், யதாபிரகாரமாய் வராது, காலை உள்ளுக்குத் திருப்பலாம், ஆனால் வெளிப்புறம் திருப்புவதற்குக் கொஞ்சம் கடினமாகும். எலும்பின் கழுத்து, எலும்பில் புதையாதிருந்தால், குறுகலும் திருப்பமும், செவ்வையாய் அகப்படும்; காலை இழுத்து உருட்டுவதில் நறநற சப்தம் கேழ்விப்படும். *Impacted fracture.*—Slight shortening and eversion, no crepitus, small loss of power.

3 தொடையெலும்பு நடுவில் முறிவு. (Fracture of the shaft of the Femur). இதில் கால் குறிகி, வெளிபுறமாய்ப் புரண்டிருக்கும்; நறநற சப்தம் சுலபமாய்க் கேழ்விப்படும். வீக்கம் அதிகமாய்க் காணும்; காலைஅசைக்கச் சுவாதீனமிராது சிகிச்சை.—இதற்குச் செய்கிற சிகிச்சை பலவிதம். (1.) காலுக்கு நீண்ட பத்தை (Liston's long spolint) வைத்துக் கட்டவேண்டியது. அது நீளத்தில், அக்குளிலிருந்து, பாதத்துக்கு 4-5- அங்குலம் உயர்ந்திருக்கவேண்டியது. மேல்முனை அருகாமையில் இரண்டு துவாரங்களும், கீழ்முனையில் இரண்டு விடைவுகளும், கணுக்காலின் வெளிமுழி தங்கியிருக்க ஒரு துவாரமும் இருக்கவேண்டியது. பத்தையானது சதையில் உறுத்தாமல், பத்தையின்மேல் மெத்தவைத்து, கணுக்காலுக்குத் துணிசுற்றி தொடைச்சந்தில் மூலவாட்டாய் மடித்த உருமாலையை வைத்து, பிறகு பாதம், கணுக்கால் இவைகளுக்குச் சீலைசுற்றி பத்தையின் கீழ்முனையிலிருக்கிற கவ்வில் இழுத்துக்கட்டி, அந்தச் சீலையாலேயே பத்தை காலோடணையும்படி மேலுக்குச் சுற்றிவிடவேண்டியது. கடைசியில் பாதத்தையும் பத்தையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு, தொடைச்சந்தில் வைத்திருக்கும் உருமாலையின் இரண்டு முனைகளைப் பத்தைதகளிலிருக்கிற இரண்டு துவாரங்களிலும் விட்டு, ஒருவனைப் பிடித்துக்கொள்ளச் செய்து, மேலுக்கும் கீழுக்குமாய் இழுத்து, சரிப்படுத்தி உருமாலை முனைகளை முடிபோட்டுவிடவேண்டியது Motion impossible; crepitus; shortening; generally over-

sion. *Treatment.*—Pad of wadding round foot; long straight splint bandanged tightly thereto; crutch pad; extension to make both limbs same length.

4. தொடையெலும்பின் கீழ்முனை முறிவு. ((Fracture of the condyle into the knee joint.) விருத்தர்களுக்கு இது முக்கியமாய் சம்பவிக்கும், பிராணசேதம் உண்டாகிறதும் உண்டு. கீலானது முறடுகட்டிப் போவதற்கு இடமிருப்பதால், காலை நீட்டிவைப்பதே நல்லது.

12. முழந்தாச்சில்லி முறிவு. (Fracture of the Patella) சதைகளின் பிகுவானால் இந்த எலும்பு குறுக்காய் முறிந்துவிடும். குறிகள்.—இதில் காலை நீட்ட சுவாதீனமிராது; ஒடிந்த துண்டுகளுக்கு மத்தியமாய் ஒரு பள்ளம் அகப்படும், அதில் விரலைவைத்து அழுத்தலாம்; முழங்காலை மடக்கினால் அந்தவிடைவு விசாலப்படும். அடிபட்டு இந்தஎலும்பு முறிந்தால், நீண்ட வாட்டமாயாவது, சின்ன பின்னப்பட்டாவது ஒடியும்; அப்போது நறநற சப்தம் கேழ்விப்படும்; முழங்கால் அதிகமாய் வீங்கிவிடும். இந்தஎலும்பு குறுக்காய் முறிந்துவிட்டால், எலும்பால் மறுபடியும்கூடுவது அரிது. எலும்பு நீண்ட வாட்டமாய் ஒடிந்தால், துண்டுகள் விலகிப்போகாதிருப்பதினால், முறிவுக்கிடையில் எலும்பு வளர்ந்து கூடிவிடும். சிகிச்சை — நோயாளியைச சார்ந்த வாட்டமாய் இருக்கச்செய்து, காலை நீட்டிவைத்து, முழந்தாள் அசையாமல் தொடைக்கும் காலுக்கும், பின்புறத்தில் செவ்வையாய் மெத்தையிட்ட, பத்தையைவைத்துக் கட்டி, வேதனையும் வீக்கமும் தணியும்படி அட்டைவிட்டு, ஈரத்துணி மேலே போட்டுவைக்கவேண்டியது. வேதனையும் வீக்கமும் சமனமடைந்தபிறகு, முறிந்த எலும்புக்கு மேலும் கீழும் சீலையால் சுற்றி, முறிந்த துண்டுகள் நெருங்கும்படி முன் சுற்றின சீலைகளில் வேறுசீலை கோர்த்து, நேராய், இழுத்துக் கூட்டிக் கட்டிவிடவேண்டியது, 6-வாரம் சென்றபிறகு நோயாளி நடக்கும்படி செய்யலாம்; நடக்கும்போது முழங்கால் மடங்காமல் அதின் பின்புறத்தில் ஒருதோல் பத்தை வைத்துக்கட்டிக் கொள்ளவேண்டியது. 3-மாதம் வரையில் முழந்தாளை மடக்கவேலாகாது. *Transverse fracture.* Inability to raise limb Pit between fractured portions. *Treatment.*—Straight splint or inclined plane; semi erect posture. Union by ligament. *Longitudinal.* Longi tudinal pit, crepitus. *Treatment.*—Pasteboard splints, bandage.

13. கால்முறிவுகள். (Fractures of the Leg-) காலிலுள்ள எலும்புகளிரண்டில், டிபியா என்னும் பெரிய எலும்பே ஒடிவது வழக்கம்; இரண்டெலும்புகளும் முறிந்துவிட்டால் முறிந்தஇடத்தில் கால் ஆடுவதினாலும், நறநற சப்தம் உண்டாகுவதினாலும், சுலபமாய் அறிந்து கொள்ளலாம்; ஆனால் எலும்புகளொன்றுமாத்திரம் முறிந்தால், அதைத் தெரிந்துக்கொள்வது பிரயாசை. சிகிச்சை.—கால்முறிவுக்குச் செய்கிற சிகிச்சை பலவிதம்; முறிந்த விடத்தில் வீக்கமிருந்தால், மக்கின்டையர் (Macintyre's Leg-splint) என்பவரால் உண்டாக்கிய பத்தையை வைத்துக் கட்டுவது வழக்கம். எலும்பு சாய்ப்பாய் முறிந்து முனைகள் ஒன்றின் மேலொன்று ஏறிக்கொண்டால் மேற்படி பத்தை கட்ட உதவாது. அதற்குத் தொடையை மடக்கி வயிற்றோடணைத்து, காலை மடக்கித் தொடையோடணைத்துக்கொண்டு, உறுப்பை வெளிப்புறமாய்ச் சாய்த்து, காலுக்குக் கட்டும் மரப்பத்தையில் வைத்து கட்டிவைக்க, எலும்பு யதாப்பிரகாரமாய் வந்துவிடும்.—ஒடிந்த காலைப் புறட்டிவைத்து முழங்காலிலும், கணுக்காலி

லும் பிடித்திழுத்து, முறிவைப் பொருந்தச்செய்து, பிறகு முழங்காலிலிருந்து நேராய் பாதத்தைச் சுற்றிப் பின்பு கணைக்காலில், மூன்றிலொரு பங்கை மூடத்தக்க நீளங்கொண்ட ஒரு சீலைத்துண்டை வைத்து, அதற்குக் குறுக்காக வேறு துண்டுகள் ஒன்றையொன்று மூன்றிலொரு பங்கை மூடியிருக்கவும், காலை ஒன்றரைச் சுற்றுச் சுற்றவும் தக்கதாய் அடுக்கி இரண்டையும் கூட்டித் தைத்து, காலுக்கு வெளிப்புறமாகவும், உட்புறமாகவும் ஒவ்வொரு பத்தை மெத்தையிட்டணைத்து வைத்துக் கட்டிவிடவேண்டியது. வெளிப்புறமாய் வைக்கிறபத்தையில் பாதம் உதையும்படியாக ஒரு பலகை சேர்த்து, பாதம் பக்கவாட்டமாய் அசையாமல்படிக்கு, அதற்கு மெத்தையிட்டுக் கொள்ளவேண்டியது. *Symptoms.* Inability to raise the limb; crepitus at seat of fracture. *Trevtment.*—Place limb on well-padded back splint wiih foot to it, two side splints strapped and buckled on ; sling with tape to iron cradle ; elevate or depress foot so as to oppose fractured ends of bones ; great toe in line with inner edge of patella ; strach bandage at end of 3 weeks.

14. Fracture of the lower end of the Fibula (Pott's, fracture). காலெலும்புகளில் சரவெலும்பென்னும் சிறிய எலும்பின் கீழ்முனை 3-அங்குலத்துக்கு மேலாக ஒடிந்துவிடுவது வழக்கம். பாதம் முறுக்கப்படுவதினாலும், நேராய் அடிபடுவதினாலும், மேடு பள்ளமுள்ள ஸ்தானத்தில் குதிப்பதினாலும், இந்தவிபத்து நேரிடும். கீழ்பாகத்தை அசைத்தால் மேல்பாகம் அசையாமலிருக்கும். சிகிச்சை.—ஈரத்துணியைப்போட்டு வீக்கத்தை வாடவைத்து, காலின் உள்பக்கமாய் பாதம் தாங்கும்படி பத்தைவைத்துக் கட்டிவிடவேண்டியது. When lower portion is moved, upper part is motionless. *Treatment.*—Splint to inside of leg and foot ; rest.

மூட்டுகளில் உண்டாகும் ரோகங்களும், காயங்களும்

DISEASES AND INJURIES OF THE JOINTS.

1. கீல் சவ்வின் தீவிர தாபிதம். (Acute Inflammation of the Synovial Membrane. *Synovitis*). காயம், சுளுக்கு, குளிர்ச்சி, வாதம். மேகம் இவை முதலியவைகளாலும், இரசம் அதிகமாய் தின்பதினாலும், கீல் சவ்வில் தீவிரதாபித முண்டாகும். பாலியருக்கு உண்டாகிறதரிது, முழங்காலுக்கே காண்பது வழக்கம். லக்ஷணங்கள், கீலில் வேதனையுண்டு, அசைத்தால் நோவெடுக்கும், கீல்வீங்கி, சூடாகி, சிவந்து இருக்கும், பிரபல சுரமும் அனுசரித்திருக்கும், கீல் சவ்வில் நீர் உண்டாகிறதால், வீக்கம் காணுகிறது, வெளிப்புறம் வீக்கங்கண்டால் நீரின் தத்தளிப்பு அகப்படும் ; முழங்காலுக்கு இந்நோய்க் கண்டால், முழங்கால் சிப்பியானது முன்னுக்குப் பிதுங்கி, அதினிருபக்கமும் புடைத்திருக்கும். சிகிச்சை.—காயத்தினால் இந்நோய்க்கண்டால், மூட்டை பத்தைவைத்து அசையாமல் கட்டி, அட்டைவிட்டாவது, கொம்புவைத்தாவது இரத்தமெடுத்து, ஈரத்துணியாவது வெந்நீர் வொற்றிடமாவது போட்டு, இலகுவான பேதிக்கொன்று கொடுக்கவேண்டியது. ஈரத்துணியைப் போடுவதைப் பார்க்கிலும், துத்தியிலையை வதக்கியாவது, சாமந்திப்புஷ்பத்தை வேகவைத்தாவது, கட்டிக்கொண்டு வரலாம். உக்கிரகுறிகள் சமனமடைகிறவரையில் பிளிஷ்டர் போடலாகாது. Most common in knee. Pain, heat, redness-

great swelling at each side of patella ; fever, &c. *Treatment.*—Leeches, blisters, cold lotions ; raised position ; salines, purgatives, low diet ; perfect rest

சீல் சவ்வின் காலிகதாபிதம். (Chronic inflamation of the Synovial Membrane.) இதில் வீக்கம், உளைச்சல் இவைகளுண்டு ; இரவில் வேதனை இருக்கும். நோய் கண்டு சிலநாள் சென்றபிறகு வீக்கமும், தத்தளிப்பும் காணும். தாபிதகுறிகள் அடங்கினால் வீக்கம்மாத்திரம் சிலருக்குண்டாகும். வியாதி நீடித்தால், சவ்வும், அதைச் சூழ்ந்திருக்கிற தாதுக்களும் தடித்துக் கடினமாகிவிடும், அப்போது மிருதுத்துவமும், தத்தளிப்பும் போய்விடும். இவ்விதமாய் இருந்து சீலிலிருக்கிற குருத்தெலும்பு விரணமாகி, சீல்கெட்டுப் போகும். சிகிச்சை.—வாதரோகத்தினால் இந்த வியாதி பிறந்தால், கால்சிகம், ஐயோடைட் ஆவ் பொடாசியம் முதலிய மருந்துகள் கொடுக்கவேண்டியது. மேகரோகத்தினால் கண்டால், நல்ல ஊட்டமும், நன்னாரி முதலிய மருந்துகளும் கொடுத்து, வெந்நீர் ஸ்நானம் செய்யவைத்து, இடம்விட் டிடத்தை மாற்றவேண்டியது. காயத்தினாலுண்டாகி, இராத்திரி காலங்களில் வேதனை பிரபலப்பட்டு, தாபிதங் கொஞ்சம் விசேஷித்திருந்தால், அவ்வுறுப்புக்குப் பத்தைவைத்துக் கட்டி, ஈரத்துணி போட்டு, அட்டைவிட்டாவது, கொம்புவைத்து உறிஞ்சாவது, ரத்தமெடுத்து பார்க்பவுடர் கொடுப்பதில் சுகுணமுண்டு. பிளிஷ்டர் போடுவதில், நீரும் வற்றும், வீக்கமும் போகும். பிறகு பூசுத்தயிலங்களிட்டுத் தேய்த்துக்கொண்டு வரலாம், தைலங்களால் உஷ்ணமும் வேதனையும் அதிகமானால், அவைகளை நிறுத்திவிடவேண்டியது. தாபிதக்குறிகள் தணிந்தபிறகு மூட்டு முரடுகட்டிக்கொண்டால், அதைக் கொஞ்சம்கொஞ்சமாய்த் தாபிதம் உண்டாகாமல் நீட்டிவரவேண்டியது. Swelling of joint ; dull aching pain ; swelling, thickenning of the tissues. *Treatment*.—Blisters, iodide of potassium, iodine, ung, hydrarg. ; bandage for support and gentle prissure.

2 மூட்டசைவு கெடல் (கனதை) ஆன்கிலோஸிஸ், ANCHYLOSIS. மூட்டில் கூடியிருக்கிற எலும்புகளின் முனைகள், ஒன்றோடொன்று சேர்ந்து அசைவுயில்லாமல் போகுவதற்கு, ஆன்கிலோஸெஸ் என்று இங்கிலீஷில் சொல்லப்படும். மூட்டு வியாதிகளாலும், பலத்த சாயங்களினாலும், இவ்வித விகற்பம் உண்டாகும். இதில் 3-சாதிகளுண்டு:—

போலிக்கனதை. (False anchylosis.) மூட்டிலுள்ள நித்தாசில்லியும், விசிகளுந் தடித்துப்போவதினாலும், அதைச் சூழ்ந்திருக்கும் சதைகள் பிகிவுபடுவதினாலும், மூட்டின் ஆட்டங்கெடும் ; மூட்டைநீட்டும் சதைகளுக்கு உஷ்ண தயிலங்கள் தேய்த்து, வேதனையில்லாமல் பிரதிதினமும் கொஞ்சங்கொஞ்சமாய் நீட்ட முடக்க ஆட்டங்கொடுத்துக்கொண்டுவருவதே இதற்குச் சிகிச்சை,—ஒரு வேளை இதற்கும் வசப்படாமல், முரடுகட்டிப் போகிறதாயிருந்தால், அந்தக் காலையாவது, கையையாவது, பிறகு மெத்த உபயோகத்துக்கு வருகிற ஸ்திதியில் கட்டிவைக்கவேண்டியது. This may sometimes be prevented by frequent passive motion. When it must inevitably occur so fix the limb that it may be most useful faterwards.

விசிக்கனதை. (Ligamentus anchylosis). மூட்டிலிருக்கிற முருந்து புண்படுவதினாலும், எலும்பு கூடுகிறவிடத்தில் முறிந்து பூட்டுவி

லகுவதினாலும், எலும்புகூடுகிற தலைக்கு மத்தியில் விசிச்சவ்வு வளர்ந்து, எலும்பு பொருந்துவதாலும் மூட்டு முறடுகொள்ளும். மூட்டைக் கொஞ்சங் கொஞ்சமாய் அசைத்துக்கொண்டு வருவதே இதற்குச் சிகிச்சை.

3. எலும்புக்கனதை. (Bony anchylosis.) மூட்டிலிருக்கும் முருந்து விரணவாகி எலும்பின முனைகள் ஒன்றோடொன்று சேர்ந்து கூடிக்கொள்வதினால், மூட்டு முறடுகட்டி அசைவற்றுப்போகும். இது சிகிச்சைக்குச் சாத்தியப்படுவது அரிது. மூட்டைக் கீறிப் பிளந்து, அதிற் சேர்ந்த எலும்பின் முனைகளை அரிந்து, ஆப்பு வடிவமுள்ள ஓர் துண்டையெடுத்து, பிறகு மூட்டைப்பிரதிதினமும் அசைத்துக்கொண்டுவந்ததினால், சிலருக்குச் சவுக்கியம் பிறந்ததுண்டு. This can only be remedied by sawing through the bones and by frequent motion, preventing reunion.

4. தொடைசந்தில் காணுகிறரோகம். (Diseases of the Hip jofnt or norbus coxæ) இந்தவியாதி கண்டமாலை சம்பந்ததேகமுடையவர்களுக்குக் காண்பதுவழக்கம். பெரியவர்களில், மூட்டிலிருக்கும் முருந்தில் ஆரம்பித்து, பிறகு எலும்புக்குப் பரவும். குழந்தைகளில், தொடையெலும்பின் சிரசில் ஆரம்பித்து, அது உளுத்துப்போகும். எவ்விடத்தில் ஆரம்பித்தாலும்சரி, முடிவில் உண்டாகிற சின்னங்கள் ஒரேதன்மையாய் இருக்கும்.

லக்ஷணங்கள் ஆரம்பத்தில் மூட்டில் அடிக்கடி நோய் காணும்; கொஞ்சம் பிகுவாயும். அசைந்துப்போகுவதாயுமிருக்கும்; பாதம் வெளிக்குப் புரண்டு நொண்டி நடக்கும்படி நேரிடும். வியாதி பலப்பட வேதனையும் அதிக்கிரமிக்கும்; அந்தவேதனை முக்கியமாய் முன்காலிலிருக்கும், வைத்தியன் தொடையின் மூட்டு முழிக்கு முன்புறமாயாவது, பின்புறமாயாவது அழுத்துவதினாலும், அல்லது அந்த முழியின் மேலாவது, குதிக்காலின் மேலாவது சட்டென்று தட்டுவதினாலும் தொடை மூட்டில் வேதனை பிறக்கும்; முழங்காலிலுள்ள வேதனையும் அதிகமாகும். இக்குணங்கள் நாளுக்குநாள் அதிகப்பட புட்டங்கள் சிறுக்கும், காலும் அசதியாகும்; வியாதிகொண்ட காலானது மற்றக் காலைப்பார்க்கிலும் நீண்டதாய் அகப்படும். இவ்வித ஸ்திதியிலிருக்கும் வியாதி பிரபலப்பட்டால் தொடையெலும்பின் சிரசும், கழுத்தும் குறைந்தாவது, விரணப்பட்டாவது அல்லது, தொடையெலும்பு தங்குகிற பள்ளத்தின் மேலோரமும், சந்திபந்தனமும் கெட்டு, மூட்டு மேலுக்கு விலகியாவது, போகும்; அப்போது கால் குறுகிவிடும். கால் சிலரில் வெளிக்குப்புரண்டும், சிலரில் உள்ளுக்குப் புரண்டுமிருக்கும். இந்த விசற்பத்தினால் வேதனையும் பிரபலப்படும்; ரோகம் இவ்விதமாய் வளர்ந்து சீழ்க்கொள்ளுவதும் உண்டு; சீழ்க்கொண்டால், புட்டத்திலாவது, கவுட்டியிலாவது, தொடையிலாவது, உடையும்; இடைக்குழியில் சீழ் இறங்கி, ஆசனம்வழியாய் வருவதுமுண்டு. இந்த ஸ்திதிக்கு ரோகம் வந்துவிட்டால், பெரியவர்கள் அதிலிருந்து தேருவது கஷ்டம்; ஆனால் குழந்தைகள், சரீரசவுக்கியம் கெடாமலிருந்தால், மூட்டு முறடுகட்டிக்கொண்டு, வியாதியிலிருந்து பிழைத்துக்கொள்வதுமுண்டு. இந்தரோகம் 2-3 மாதம் முதல் வருஷக்கணக்காய் நீடிப்பதுமுண்டு. Pain referred to knee; great local and knee pain it the femur be struck against the acitabulum; nates become wasted and flabby, limb apparently lengthened, then real shortening from absorption; formation and discharge of pus, followed by one or more fistulous openings; at last knee rests on opposite thigh, or legs cross.

சிகிச்சை.—இதர மூட்டு வியாதிகளுக்குச் செய்கிற சிகிச்சையே இதற்கும் செய்யவேண்டியது. வியாதி ஆரம்பத்திலேயே சிகிச்சைக்கு வந்தால் காலைநீட்டி அசையாமல் பத்தைகளால் கட்டிவிடவேண்டியது; வெளிப்புறமாய் இருப்பது அக்குள்தரையில் வரவேண்டியது. கால் குரூபமான பிறகு சிகிச்சைக்குவந்தால் புட்டம், தொடை அடங்கும்படி தோல் பத்தை வைத்துக்கட்டி, ரோகியை வியாதிகொள்ளாத பக்கமாய் அடிக்கடி படுக்க ஒட்டாமல் செய்யவேண்டியது. வேதனை பிரபலமாய் இருந்து, தேகதாருட்டியமும் சகிக்கும்படியிருந்தால், அட்டைவிட்டாவது, கொம்புவைத்து உருஞ்சியாவது, ரத்தமெடுப்பதில் சவுக்கியம்பிறக்கும். ஆனால், மீன்னெய்யினாலும், தாருட்டியகாரி மருந்துகளினாலும் சவுக்கியம் உண்டாகவேண்டியது. பிளிஸ்டர்போட்டுப் புண்ணாக்குவதிலும் சுகுணமுண்டு. சீழ் உண்டாகிவிட்டால், சீக்கிரம் கீறிவிடவேண்டியது. உள்மருந்துகளாலும், வெளிச்சிகிச்சையினாலும், யாதொரு குணமும் காணாமல், எலும்பில் விரணம் கண்டு சீழ் வடிந்துகொண்டு அதிக உபத்திரவம் கொடுத்துக்கொண்டிருந்தால் தொடையெலும்பின் சிரசைத் துண்டித்துவிட்டால் சவுக்கியம் பிறக்கும்; ஆனால் அப்படிச் செய்வதற்கு வேறுரோகங்கள் அனுசரித்திருக்கலாகாது. இந்தச் சத்திரவேலைப் பிரயாசையல்ல; ட்ரோரொகான்டர் என்னும் முழியின்மேல் 5-அங்குலம் நீளத்தில் நெடுகிலும், அதற்கு நேராய் குறுக்கிலும், கீறி, சதை முதலியவைகளை நீக்கிவிட்டு, ட்ரோகான்டர் என்னும் முழிக்கு அடியில் வாளைவைத்து அருத்து, துண்டை நீக்கிவிடவேண்டியது. அசிடாபியுலம் என்னும் பள்ளம் வியாதிகொண்டிருந்தால், அதையும் கூடியவரையில் எடுத்துவிடவேண்டியது. சத்திரக் கிருத்தியம் முடிந்த உடனே, காலைநீட்டி, மணற்பைகளால் அசையாமல் வைத்துவைக்கவேண்டியது. எல்லாம் அனுகூலமாய் இருந்தால், கூடியவரையில் ஒருவிதமாய்க் காலை அசைத்து நடக்கும்படியான ஸ்திதியில் வந்து சவுக்கியப்பட்டுவிடும். குதிக்கால் உயர்ந்திருக்கிற சோடுபோட்டுக்கொண்டால், சுலபமாய் நடக்கக் கூடுமானதாகும். At first rest, counter irritants; good support, change of air; potassium, cod-liver oil. Afterwards poultices; same treatment; pillow between nees, When hectic supervenes remove head of femur or gogue the diseased acetabulum as required.

5. மூட்டுகாயம். WOUNDS OF JOINTS,

லக்ஷணங்கள். மூட்டில் படுகிற காயம் உள்ளுக்கு இறங்கியிருந்தால், அதிலிருந்து சந்திக சிலேஷ்மம் வெளிப்படும்; பிறகு அதி உக்கிரதாபனக் குறிகள் பிறக்கும். சிகிச்சை.—காயம் சிறுத்து வேறு உபத்திரவங்கள் நேரிடாதென்று தெரிந்தபோது, உறுப்பை அறுக்கவேண்டிய நிமித்தமிராது. பெரிய காயம்பட்டு, தோல் எடுபட்டு, மூட்டு வெளிக்குத் தெரிந்தாலும் சரி, அல்லது காயத்தோடு எலும்பு துண்டு துண்டுகளாய் முறிந்துவிட்டாலும்சரி, மூட்டைத் துண்டித்துவிடவேண்டிவரும் (excision.) ஒருவேளை பெரிய நாடிநரம்பு அறுபட்டுவிட்டால், உறுப்பை அறுத்துவிடவேண்டியது. காயத்தைப் பத்திரமாய் மூடி, ஒரு துண்டுதுணியை ரத்தத்தில் துவைத்து அதின் மேல்போட்டு, மூட்டு அசையாமல் பத்தைகள் வைத்துக் கட்டிவிடவேண்டியது. வேதனையும் வீக்கமும் தணிய ஈரத்துணிக்கு மிஞ்சினது ஒன்றுமில்லை. ஒற்றிடமிட்டால் சீழ்கொள்ளுவதுமன்றி, ரோகிக்கும் இதமாய் இருக்காது. Escape of synova, followed by acute inflammation. *Treatment.*—Perfect rest and the ordinary antiphlogistic treatment.

6. மூட்டுவிலகல்.—டிஸ்லோகேஷன், DISLOCATION.

எலும்பின் நுனி தன் ஸ்தானத்தைவிட்டு நழுகிப்போகுதலுக்கு மூட்டுவிலகல் என்று பேர். லக்ஷணங்கள்.—முழிபுரண்டு விட்டால், மூட்டு விரூபமடையும், ஒருபக்கம் பள்ளமாயும், ஒருபக்கம் மேடாயும் காணப்படும்; சுவாபீக சலனம் அற்றுப்போகும்; உறுப்பு நீண்டுவிடும், அல்லது குறுகலாகும். காரணம்.—அடியினாலும், சதைகளுடைய வலிவினாலும் மூட்டு விலகிப்போகும். முழி புரளும்போது, அதைச் சுற்றியிருக்கிற சந்திபந்தனங்கள் கிழிந்துவிடும்; அப்படிக் கிழிபட்டபோதிலும், அவைகள் சீக்கிரம் கூடி ஆறிவிடும். புரண்டமுழியை அப்படியே விட்டுவிட்டால், விம்ப் என்னும் பசை எலும்பின் சிரசு சுற்றிலும் சுறந்து, விக்மென்டு ஆகி, பள்ளமேற்பட்டு, அந்தப் பள்ளத்தை ஓர்வித பதார்த்தத்தால் கவசமிடப்பட்டு, மூட்டு அசையும்படியாகிவிடும். பழையபள்ளம் மூடிக்கொள்ளும். மூட்டு விலகலில் நறநற சப்தம் இராது; ஆட்டமிராது; எலும்பு நீளத்தில் குறுகலாகாது; இழுத்து எப்போதும்போல் வைத்தால், அப்படியே நின்றுவிடும். சிகிச்சை.—பிகிவுற்றிருக்கிற சதைகள் தளரும்படி எலும்பைப் பக்குவமாய் இழுத்து, புரட்டி, அசைத்து, உண்டையை யதாஸ்தானத்தில் தள்ளிவிட்டு, கீல் அசையாமல் கட்டிவைத்து, ஒற்றிடம், குளிர்ந்த ஜலம், இவைகளைக்கொண்டு வீக்கத்தைத் தணிக்கவேண்டியது. விலகியமுழியைத் தாமதிக்காமல் உடனே தள்ளிவிடவேண்டியது; நாள் சென்றால் சதைகள் பிகிவுற்றுவிடும், அப்போது தள்ளுவது பிரயாசையாகும். குளோரோபாரம் என்னும் மருந்தை, ஆக்கிராணிக்கச்செய்து, சுமாரகமில்லாமல் இருக்கும்போது மூட்டைத் தள்ளினால், ரோகிக்கு உபத்திரவமில்லாமல் இருக்கும். Dislocation causes deformity and loss of mobility. There is no crepitus, and the parts are with great difficulty restored to, but easily retained in, their natural position. *Treatment.*—Reduce as soon as possible before spasm comes on.

DISLOCATION AND FRACTURE. கை எலும்பாவது, தொடை எலும்பாவது மூட்டு விலகி, ஒடிந்துமிருந்தால், ஒடிந்த எலும்புக்குப் பத்தைவைத்துக் கட்டி, பிறகு தாமதிக்காமல், மூட்டுப் பிரண்டிருப்பதைச் சரிப்படுத்தவேண்டியது. எலும்பு கூடுகிறவரையில், மூட்டைத் தள்ளாமலிருந்தால், நாட்சென்ற பிறகு அதைத் தள்ளுவது பிரயாசையாகும், மேலும் பலமாக இழுக்கும்போது மறுபடியும் எலும்பு ஒருவேளை ஒடிந்துவிடும். Set fracture well and firmly, and reduce dislocation at once.

பிரதான மூட்டுவிலகுகள். PARTICULAR DISLOCATIONS.

முகக்கட்டை எலும்பு விலகல். (Dislocation of the Jaw.) லக்ஷணங்கள்.—தாடைக் கீல் விலகிவிட்டால், வாய்திறந்திருக்கும், மூட சாத்தியமிராது; பேசவும், எதையாவது விழுங்கவும் சுவாதீனமிராது. உமிழ்நீர் வடியும்; முகரை முன்னுக்குப் பிதுங்கி இருக்கும், ஒருப்பக்கத்து மூட்டுமாத்திரம் விலகிப்போனால், முகரை மற்றொருபக்கமாய்ச் சாய்ந்திருக்கும்; மூட்டின்முடி பிதுங்கி, காதடியில் பள்ளம் அகப்படும். சிகிச்சை.—இவ்வித உபத்திரவ ஸ்திதியிலிருப்பவனுக்கு, மந்தரித்து, காதுக்குப் பின்புறம் எண்ணெய் தடவுகிறதும் துஷ்டக் கிரகங்களின் சேஷ்டையால் வாய் இழுத்துக்கொண்டதென்று, மந்திரம், படையல் முதலிய உபசரணைகள் செய்கிறதும், பாமரவைத்தியர்களின் சிகிச்சை. இதற்கு ரோகியின் சிரசை செவிற்றோட

ணைத்துக்கொண்டு, இரண்டு கைப்பெருவிரல்களுக்கும் துணிசுற்றி, அவைக ளைக் கடைவாய்ப் பற்கள்மேல் வைத்து, கீழுக்கழுத்திப் பின்னுக்கு நெட்டித் தள்ளி, விரல்களால் முகரையைத் தூக்கிவிட்டால், எலும்புயதாஸ்தானத்தில் போய் விழுந்துவிடும்; முழியைத் தள்ளிவிட்டபிறகு, இரண்டொருவாரம் வரையில், முகரை அசையாமல் குட்டையால் கட்டிவைக்க வேண்டியது. May be on one or both sides. Mouth open, can't close it. *Treatment.*—Fix the head against a wall; wrap your thumbs well up; with them press firmly on lower malar teeth; and with fingers raise front of jaw. It will suddenly slip into its place. Four-tailed bandage.

காறைஎலும்பு விலகல். (Dislocation of the Clavicle) தோள்மேல் அடிப்படுவதினால் காறை எலும்பின் உள்முனை முன்னுக்கு நழுகிவிடும்; சிலரில் வெளிமுனை மேலுக்காவது, கீழுக்காவது விலகிப்போவதுண்டு. விரல்களால் தொட்டுப் பார்ப்பதினால், இவ்விகற்பங்கள் நன்றாய்த் தெரியவரும், சிகிச்சை.—தோள்களைப் பின்னுக்கிழுத்து, வைத்து, எலும்பு ஒடிந்துப் போனதற்குக் கட்டுவதுபோல் இதற்கும் (ங) இவ்விதமாய்க் கட்டிவிட வேண்டியது. Sternal end forwards, or acromial upwards or downwards. All known by the feel. *Treatment.*—Shoulders back; figure of 8 bandage.

தோள்மூட்டு விலகல். (Dislocation of the Shoulder-joint.) இதில் 3-சாதிகளுண்டு: முழி கீழுக்காவது, அல்லது முன்னுக்காவது, அல்லது பின்னுக்காவது சரிந்துவிடும்.—

எலும்பின் சிரசு கீழுக்குச் சரிந்து, அக்குளில் வந்திருந்தால், அதற்குக் குறிகள்.—கை நீண்டிருக்கும், தோளில் பள்ளம் அகப்படும், தோளில் உருண்ட வடிவம்மாறி சப்பட்டையாகிவிடும்; முழங்கையானது நட்டுக்கொண்டிருக்கும், பக்கத்துக்கணைக்க வசப்படாது; கையை உயர்த்தினால் முளி அக்குளில் அகப்படும்; உயர்த்தும்போது அதிகவேதனை தரும், திமிருண்டாகும். Of Humerus into axilla. Prominent and flattened acromion; limb fixed yelbow away from side, head of humerus felt in axilla.

முளி முன்னுக்குப் புரண்டிருந்தால், காறையெலும்பின் கீழ்முளி அகப்படும்; கைகொஞ்சம் குறுகியிருக்கும்; முழங்கை பின்னுக்கு நட்டுக்கொண்டிருக்கும்; முளி அது இருந்த இடத்தில் அகப்படாது. In dislocation forwards, head of humerus is not felt in axilla.

முளி பின்னுக்குப் புரண்டிருந்தால், அது தோள்பட்டை யெலும்பின் மேல் தட்டுப்படும்; முழங்கை முன்னுக்கு நட்டுக்கொண்டிருக்கும்; தோள் பின்புறத்தில் உபுக்கலும், வெளிப்புறத்தில் பள்ளமும் காணப்படும். In dislocation backwards, head ot humerus is felt on dorsum scapulæ,

சிகிச்சை.—முளி கீழுக்கிறங்கிவிட்டால், அதைத் தள்ள 5-மார்க்கங்களுண்டு.—(1) தோள்பட்டையைத் ஸ்திரப்படுத்தத் தக்கதாகத் தோள் மூட்டுக்கு மேலும் கீழும் நெஞ்சை வளையச் சீலையால் சுற்றி இழுத்துப் பிடித்துக்கொண்டு, முழங்கைக்கு வேறொரு சீலையால் தூக்குக் கயிறுபோல், சுருக்குமுடிபோட்டு (Clove-hitch) பிகிந்து ஆளைத் தரையிலாவது, நாற்காலியின்மேலாவது உளுக்காற்றி, சதைகள் தளரும்

படி முழங்கையை முடக்கி, கையை உயர்த்தி, முழங்கைக்குமேல் முடிந்த துணியால் கொஞ்சநேரம் இழுத்து, சிகிச்சைகன் மெதுவாய் உருட்டி, அசைத்து, பிறகு அவன் முழங்காலால் எலும்பின் சிரசைத் தூக்கினால், அது நிலையில் வந்து விழுந்துவிடும். (2) மேல்கண்ட விதமாகவே செய்து, கப்பிகளால் இழுத்து மூட்டைத் தள்ளிவிடலாம். (3) ஆளைக் கட்டிலின்மேல் படுக்கவைத்து, அவன் ஓரமாய் வைத்தியன் உளுக்கார்ந்துகொண்டு கையை மணிக்கட்டண்டைப்பிடித்துக் கீழுக்கிழுத்து, குதிக்காலை அக்குளில் கொடுத்து, முளி மேலுக்கும் வெளிப்புறமாய் நழுகும்படித் தள்ளினால், நிலையில் வந்துவிடும். (4) ஆளை நாற்காலியின்மேல் உளுக்காற்றி, வைத்தியன் தன்காலை அதின்மேல் வைத்து, முழங்காலை அக்குளில் கொடுத்து, ஒரு கையால் தோளை ஸ்திரப்படுத்திக்கொண்டு, மற்றொரு கையால் முழங்கையைப் பிடித்துத் தாழ்த்தினால், நிலையில் வந்துவிடும். (5) ஆளைத் தரையில் படுக்கவைத்து, வைத்தியன் பின்புறமாய் உளுக்கார்ந்து, தோளை அசையாமல் ஒரு கையால் அழுத்திக்கொண்டு, மற்றொருகையால், நோயாளியின் கையைப்பற்றி வெளிக்கிழுத்துத் தலைமேல் கொண்டுவந்தால், நிலையில் வந்துவிடும். முளி முன்னுக்கு நழுகிவிட்டதற்கு, கை தாழும்படி பின்னுக்கிருக்க வேண்டியது.—முளி பின்னுக்கு நழுகிவிட்டதற்கு, கையை முன்னுக்கிழுக்க வேண்டியது.

எலும்பை நிலையில் கொண்டுவந்த பிறகு, துணியை மடித்து அக்குளில் வைத்து, கையைப் பக்கத்தில் வளைத்து, முன்னங்கையைக் குட்டையில் விட்டுத் தொங்கும்படிச் சிலநாள் கட்டிவைக்கவேண்டியது. வீக்கமும், வேதனையும் தணிய ஒற்றிடமிடவும்; பிறகு தேய்ப்பதில் சுகுணமுண்டு. Place your knee in axilla, force elbow to side. Bandage arm to body. Also by extension with a towel round arm, or by heel in axilla, the patient lying on his back, or by raising the arm from the side, and drawing straight up by the head.

முழங்கை மூட்டுவிலகல். (Dislocation of the elbow.) இந்த மூட்டு பலவிதங்களாய் விலகிவிடும். (1) முன்னங்கையின் இரண்டு எலும்புகளும் பின்னுக்கு நழுகிவிட்டால், முழங்கை முடங்கி, அசைக்கக்கூடாமலாகி விடும்; பின்புறம் எலும்பு பிதுங்கியிருக்கும்; முன்புறத்திலும் எலும்பின் முளி தட்டுப்படும். (2) இரண்டெலும்புகளும் வெளிப்புறமாய் பின்னுக்கு நழுகிவிட்டால், மேற்படி குறிகளோடு, ரேடியஸ் என்னும் எலும்பின் சிரசு வெளிப்புறமாய் நன்றாய் அகப்படும். (3) இரண்டெலும்புகளும் உட்புறமாய்ப் பின்னுக்கு நழுகிவிட்டால், புஜமெலும்பின் முளிவெளியில் நன்றாய் அகப்படும். (4) அல்னை என்னும் எலும்புமாத்திரம், பின்னுக்கு நழுகிவிட்டால், முழங்கையில் பின்புறமாய்ப் பிதுக்கம் காணப்படும்; முழங்கை முடங்கி அசைக்கக்கூடாது; முன் கை உள்ளுக்குப் புரண்டிருக்கும். BOTH bones backward.—Prominence of radius and ulna backwards, forearm shortened, limb immovable, condyles of humerus felt in front. Backwarda and out wards or Backwards and inwards. Prominence behind, condyle of humerus outside or inside. Olecranon only backwards. Promnence of olecranon backwards, forearm fixed and much twisted.

சிகிச்சை.—இந்நான்குக்கும் செய்யும் சிகிச்சை ஒருவிதம். புரண்ட முளியை அநேகவிதமாய்த் தள்ளிவிடலாம். (1) புஜமெலும்பின் கீழ்முனை

யைப் பிடித்துக்கொண்டு, முன்னங் கையை முன்னுக்கிழுத்தால், நிலையில் வந்துவிடும். (2) வைத்தியன் தன் முழங்காலின்மேல், மூளிபுரண்ட முழங் கையை வைத்து அழுத்தி முடக்கினால் நிலையில் வந்துவிடும். (3) வைத்தியன் கையைப் பலமாய் நீட்டுவதால், சதைகளின் நாணி எலும்பைத் தள்ளி நிலையில் விட்டுவிடும். மூளி தள்ளிவிட்டபிறகு, ஒற்றிடம் கொடுத்து, முன்னங்கையை கழுத்தில் தொங்கவிடவேண்டியது. Fix humerus, draw forearm forwards; or flex the limb forcibly over knee; or straight the arm forcibly, Fomentation; sling.

கணுக்கைவிலகல். (Dislocation of the wrist.) இதில் கையின் விகாரரூபத்தினாலேயே தெரிந்துக்கொள்ளலாம். சிகிச்சை—அஸ்தத்தைப் பிடித்திழுத்தால் புரண்ட மூளி நிலைக்கு வந்துவிடும். பிறகு பத்தைவைத்துக் கட்டி, ஒற்றிடமிடவேண்டியது. Self-evident by the deformity. *Treatment*.—Reduction by extension; fix on splint; fomentations.

கை கால் விரல்கள் மூட்டு விலகிவிட்டால், அவைகள் ரூபத்தில் சிறுத்திருப்பதால் நிலைக்குக் கொண்டுவருவது அதிக பிரயாசை. தோலின்மேல் ஒட்டுப்பிளாஸ்திரி தடவி, பலத்த நாடாவால், தூக்குக் கயிறு முடியாய்ச் சுருக்குமுடியிட்டு (Clove-hitch) உள்ளங்கை மார்க்கமாய் இழுக்கவேண்டியது. Dislocations of the *thumb*, *fingers* and toes, are self-evident by the deformity, and are difficult of reduction. *Treatment*.--Reduce by extension with Clove-hitch or if necessary dividing ligeaments.

இடுப்பு மூட்டு விலகல். (Dislocation of the Hip joint.) இது பெரியவர்களுக்குக் காண்பது வழக்கமானபோதிலும் சிறுவர்களுக்கும் சம்பவிப்பதுண்டு. இடுப்பு மூட்டு முக்கியமாய் 4-விதமாய் விலகிப் போகும். (1) தொடை எலும்பின் சிரசு, மேலுக்கேறிவிடும் (2) அது பின்னுக்கு நழுகிவிடும். (3) கீழுக்கிறங்கிவிடும். (4) முன்னுக்கு வந்துவிடும்.

1.—இடுப்பு மூட்டு மேலுக்கேறிவிடுதல். (Dislocation upwards on the dorsum ilii.) மேல்கண்ட 4-சாதிகளில், இதுதான் அடிக்கடி காண்பதுண்டு. லக்ஷணங்கள்.—இதில் கால் $1\frac{1}{2}$-$2\frac{1}{2}$ அங்குலம் நீளம் குறைந்திருக்கும்; கால்விரல் மற்றொருகாலின் படத்தின்மேல் படிந்திருக்கும்; முழங்கால் உள்ளுக்குத் திரும்பி, கொஞ்சம் மேலுக்கேறியிருக்கும்; காலை மற்ற காலுக்குக் குறுக்காய் வளைக்கலாம்; ஆனால் வெளிக்குப் புரட்டக்கூடாது; ட்ரோகாண்டர் என்னும்முழி யதாப்பிரகாரமாய் அவ்வளவு முன்னுக்கு வந்திராது; ஆள்சடைத்து, வீக்கம் அதிகமாய் இராதிருந்தால், எலும்பின் சிரசை நழுகின ஸ்தானத்தில் கண்டுகொள்ளலாம். சிகிச்சை.—(1) இதற்கு முழங்காலை முடக்கிக்கொண்டு, தொடையை முடக்கி வயிற்றோடணைத்து, வைத்தியன் ஒரு கையால் முழங்காலையும், மற்றொரு கையால் கணுக்காலையும் பற்றிப் பிடித்துக்கொண்டு, தொடையை உருட்டினால், புரண்டமூளி நிலையில் வந்துவிடும். (2) ஆள் வயது சென்றவனாய் சதைகள் தளர்ந்திருந்தால் சரி, அல்லது சிறுபிராயமாய் இருந்தாலும் சரி, அவனைப் படுக்கவைத்து, சிகிச்சைகள் உளுக்கார்ந்து தன் காலை "பெரினியம்" என்னும் பகத்தில் வைத்து அழுத்திக்கொண்டு, தன்கைகளாலும், மற்றொருவனாலும் காலைப்பற்றிப்பிடித்து உருட்டினால் மூளிநிலைக்கு வந்துவிடும். (3) இவைகளால் முடியாதபக்ஷத்தில், ஆளுக்கு குளோரோபாரத்தை முகரவைத்து, பிரக்ஞையில்லாமல் செய்து, தரைமேல்பாயைப்போட்டு கா

யம்படாத பக்கமாய்ப் படுக்கவைத்து, பகத்தைத் தாங்கும்படி கவட்டிக்கு ஒரு உரப்பான துணியைக் கொடுத்து, புட்டத்துக்கு உயராமல் ஒரு தூணிலாவது, மற்றெதிலாவது கட்டிவிடவேண்டியது. பிறகு தொடைக்கு ஊர்த்தமுகமாய் ஒரு துணியைச்சுற்றி, அதன்மேற் கப்பிகளின் வாரையாவது, அல்லது உரப்பான கயிற்றைத் தூக்குக் கயிறுபோல் சுறுக்கு முடிபோட்டாவது, முன்கட்டினதற்குக் கொஞ்சம் உயர்ந்திருக்கும்படி எதிராய்க்கட்டி, இந்தத்தொடை மற்றத்தொடையின் முழந்தாளுக்குக் கொஞ்சம் மேலாக குறுக்காய் வரத்தக்கதாய்க் கொஞ்சநேரமிழுத்து, சிகிச்சைகன் காலை மெதுவாய் உருட்டினுலும் சரி, அல்லது தொடையை உயர்த்தினுலும் சரி, முளி அசிடாபியுலம் என்னும் பள்ளத்தில்வந்து நிலைத்துவிடும்; பிறகு தொடைக ளிரண்டையுங் கூட்டிக் கட்டிப் படுக்கவைக்கவேண்டியது. Head of the bone felt on dorsum ilii; limb inverted and fixed; ball of great toe on dorsum of opposite foot. *Treatm.nt.*—Chloroform. Flex thigh on pelvis, rotate it outwards, backwards, and upwards, and suddenly extend it, when the head, of the femur will slip in. Bandage thighs together.

2–தொடை எலும்பு பின்னுக்கு நழுகிவிடுதல். (Dislocation backwards; into sciatic notch.) லக்ஷணங்கள்.—கால் $\frac{1}{2}$ முதல் 1-அங்குலம் குறைந்திருக்கும்; கால்விரல்கள் மற்றக்காலின் பெருவிரலின்மேல் படிந்திருக்கும்; முழங்கால் மேலுக்கேறி உட்புறமாய் திரும்பியிருக்கும்; ட்ரொகான்டர் என்னும் முழி கொஞ்சம் பின்னுக்கு ஒதுங்கியதாப் பிரகாரமாய் யிருக்கிற அவ்வளவு எடுப்பாய் இராது; எலும்பின் சிரசு தட்டப்படுவது கஷ்டம். சிகிச்சை.—ஆளை காயப்படாத பக்கமாய் ஒருக்களித்துப் படுக்கவைத்து, காலை மற்றத்தொடையின் மத்தியமாய் குறுக்காய் கொஞ்சநேரம் இழுத்து பிறகு, தொடைக்கடியில் ஒரு உருமாலையைக் கொடுத்துத் தூக்கி, தொடையை உருட்டினல், முழி அஸிடாபியுலம் என்னும் பள்ளத்தின் ஓரத்தைவிட்டு உயர்ந்துநிலைக்கு வந்துவிடும். Shortening; great toe rests on great toe of opposite foot; head of femur can scarcely be felt. *Treatment.*—Lay patient on sound side; make extension across *middle* of sound thigh. Lift head of bone out of sciatic notch by means of a round towel placed under upper part of thigh and over shoulders of an assistant. Bind knees together afterwards.

3.—தொடை எலும்பு கீழுக்கு நழுகிவிடுதல். (Dislocation downwards into Thyroid Foramen.) லக்ஷணங்கள்.—காலானது, 1-2 அங்குலம் நீண்டிருக்கும்; மற்றக்காலைவிட்டுப் பிரிந்திருக்கும்; கால்விரல்கள் முன்னிட்டுக் கீழ்நோக்கித் தரையை ஊன்றிகொண்டிருக்கும்; உடம்பு முன்னுக்கு வளைந்திருக்கும். சிகிச்சை.—கட்டிலின்கால் தொடைகள் மத்தியமாய் பகத்தைத்தாங்கும்படி ஆளைக்கட்டிலின்மேல்மல்லாக்கப்படுக்கவைத்து, பிறகு அந்தக் கட்டிலின்கால் ஒரு முட்டுகோல்போல் அந்தத் தொடையெலும்பின் சிரசைப் புரட்டித் தள்ளிவிடும்படியாய், பாதத்தைப் பிடித்து உயர்த்தாமல், உட்புறமாய் இழுத்தால், முளிநிலையில்வந்து விழுந்துவிடும். Limb lengthened; drawn away from other; toes point downwards and forwards; body bent. *Treatment.*—Lay patient on his back, with one of the bedposts between his thighs, and close up to the perinæum; then carry foot inwards across the mesial line.

4. தொடை எலும்பு முன்னுக்கு நழுகிவிடுதல். (Dislocation forwards, on the pubes.) லக்ஷணங்கள்.—இதில் காலானது ஒரு அங்குலம் குறைந்திருக்கும்; அசைக்கலாம்; மற்றக்காலை விட்டுப் பிரிந்திருக்கும் பாதம் நேராய் கீழ்நோக்கி இருக்கும்; எலும்பின் சிரசு அரையில் அகப்படும். சிகிச்சை.—காலை முடக்கி உள்ளுக்கழுத்திப் பரீக்ஷிக்கலாம். ஆளைக் காயம்படாத பக்கமாய் ஒருக்களித்துப் படுக்கவைத்து, முளி புரண்ட காலை வெளிப்புறமாய் பின்னுக்குக் கொஞ்சநேரமிழுத்து, பிறகு ஒரு குட்டையை தொடைக்கடியில் கொடுத்துத் தூக்கினால் முளி நிலைக்கு வந்துவிழுந்துவிடும் Limb shortened, drawn away from other, and everted ; head of bone felt above Poupart's ligament. *Treatment.*—Flexion combined with adduction may be tried. Lay patient on sound side ; extend limb backwards and outwards ; lift head of bone over edge of acetabulum by means of napkin.

முழங்கால் முழிவிலகல் (Dislocation of the knee.) இந்த அபாயம் சம்பவிப்பது அரிது, ஒருவேளை சம்பவித்தால், கொஞ்சம் சரிந்துவிடும். இதைப் பார்வையினாலும் ஸ்பரிசத்தினாலும் சுலபமாய் தெரிந்துக்கொள்ளலாம். சிகிச்சை.—காலையிழுத்து நிலைக்குக் கொண்டுவந்து பத்தைவைத்து அசையாமல் கட்டி, வீக்கத்தை வற்றடிக்கவேண்டியது. Easily diagnosed by eye and hand. *Treatment*,—After reduction by extension perfect rest.

முழங்கால் சிப்பிவிலகல். (Dislocation of the Patella.) இந்த எலும்பு வெளிப்புறமாய் நழுகிவிடுவது வழக்கமானபோதிலும், உட்புறமாய் நழுகிவிடுவதும் உண்டு. லக்ஷணங்கள்.—முழங்கால் வளைக்கக்கூடாது, எலும்பு நழுகினஸ்தானத்தில் அகப்படும். சிகிச்சை.—முழங்கால் நீண்டு, கால் உயர்ந்திருந்தால், இதை விரல்களால் பிடித்துத் தள்ளுவதில் பிரயாசையிராது. Outwards ; or inwards easily diagnosed by eye and hand. *Treatment.*-Straighten knee ; flex thigh on body, reduce dislocation by finger and thumb.

கணுக்கால் விலகல். (Dislocation of the ankle.) இதில் 4-சாதிகளுண்டு; எதிலும் டிபியா, பிபியுலா என்னும் எலும்புகளில் ஒன்றாவது, அல்லது இரண்டுமாவது ஒடிந்து இருப்பது வழக்கம். (1) டிபியா என்னும் எலும்பு உள்ளுக்கு நழுகிவிடுவதாவது, அல்லது பாதம் வெளிக்குப் புரண்டுவிடுவதாவது வழக்கம். இதில் சுமார் 3-அங்குலம் உயரத்தில் பிபியுலா என்னும் எலும்பு ஒடிந்து விடுவதுண்டு. அதற்குப் "பாட்ஸ் பிராக்ஷர்" (pot'ts fracture) என்று பேர். லக்ஷணங்கள்.—பாதம் வெளிக்குத்திரும்பி, உட்புறம் கீழ்நோக்கி, கணுக்கால் உள்முழி மெத்த வெளிக்கு வந்திருக்கும். (2) பாதம் உள்ளுக்கு நழுகிவிடுதலில், கணுக்கால் உள்முழி ஒடிந்து காணுவதுண்டு; இதில் அரைக்கால் உட்புறமாய் வளைந்திருக்கும். (3) பாதம் முன்னுக்கு நழுகிவிடுவதில், அது குறுகிவிடும்; குதிக்கால் நீண்டு கால்விரல்கள் கீழ்நோக்கி யிருக்கும். (4) பாதம் பின்னுக்கு நழுகிவிடும் என்று கண்டிருக்கிறது ஆனால் அது அபூர்வம். சிகிச்சை.—இது நாநாவிதமாய்ச் சம்பவிப்பதால், ஒவ்வொன்றுக்கும் சிகிச்சையை குறிப்பிட்டுச்சொல்லுவது பிரயாசை, ஆனால் எல்லாவற்றிற்கும் செய்வது ஒரே சிகிச்சை. விலகிய மூட்டை நிலைக்குக் கொண்டுவருவதில் தாமசிக்கலாகாது. ஆளை மல்லாக்கவாவது,

ஒருக்களித்தாவது படுக்கவைத்து, தொடையையும், முழங்காலையும் முடக்கி, ஒருத்தன் முழங்காலைப் பிடித்துக்கொள்ள, வைத்தியன் ஒருகையால் காலின் பாடத்தையும், மற்றொருகையால் குதிக்காலையும் பிடித்துக்கொண்டு, யதாஸ்தானத்துக்கு வரும்படி இழுத்து, பிறகு இருபுறமும் பத்தைகளைவைத்துக் கட்டிவிட்டு,காலைத்தொங்கவிடவேண்டியது. பெருவிரல் மாத்திரம் முழங்கால் சிப்பிக்குநேராய் இருக்கும்படி வைக்கவேண்டியது. வீக்கம் தணிந்தபிறகு, பசைபோட்ட சீலையால் சுத்திவிடுவது நல்லது. மூட்டை சுலபத்தில் நிலைக்குக்கொண்டுவர,குளோரோபாரத்தைமுகரவைப்பதில் நன்மையுண்டு. பிறகு அபினிகொடுத்தால் வலியும்,முருக்கும் காணாது. These are known by the direction in which the sole of the foot looks. *Treatment*—Flex leg, reduce dislocation by extension; perfect rest, &c.

நாடிகளிலுண்டாகும் காயங்களும், ரோகங்களும்.

INJURIES AND DISEASES OF ARTERIES.

நாடிகளின் காயம், WOUNDS OF ARTERIES.

லக்ஷணங்கள்.—நாடி காயம்பட்டால், சிவந்த ரத்தம், பிச்சாங்குழலிலிருந்து வெளிப்படுவதுபோல் பீரிட்டுவரும். நாடி நரம்பின் புரைகளுக்கு சுருங்குகிற தன்மையில்லாதபடியினாலும், இரத்தாசயத்திலிருந்து ரத்தம் விசையாய் வருவதினாலும், அதிகரத்தம் வருவதற்குக் காரணமாகின்றது. சன்ன நரம்புகளிலிருந்து வருகிற ரத்தம் சீக்கிரம் நின்றுவிடும். பெரிய நாடி நரம்பு அறுபட்டால், ரத்தம் பிரபலமாய்க்கண்டு, வெகுசீக்கிரத்தில் பிராண அபாயம் நேரிடும். சன்னநாடி நரம்பு பூர்த்தியாய் அறுந்துபோனால், முதல் வேகமாய் ரத்தம்கண்டு பிறகு நின்றுவிடும். நாடி சிறுத்து உரைக்குட் சென்று காயத்தில் ரத்தம் உரைந்துவிடுவதால், ரத்தம் நின்றுவிடுகின்றது. இதில் மூர்ச்சை யுண்டாகி இருதயநடை குறைவதால், மேற்கண்டவைகளுக்கு அதுவும் உதவியாகும். அறுந்த நாடி பெரியதானால், ரத்தம் அதிகமாய்க் கண்டு ஆள் உடனே இறந்துவிடுவான். நாடியில் பட்டகாயம் சிறுத்திருந்தால், மூர்ச்சை காணும்போது, அது பசையால் அடைபட்டு, கிரமமாய்ச் சிகிச்சைசெய்தால், ஆள் பிழைத்துக் கொள்ளுவான். நாடியில் படுகிற குத்துகாயம் வெகு உபத்திரவத்தைத் தரும். யந்திரங்களினாலும், குண்டுகளினாலும் சம்பவிக்கிற காயத்தில், நாடிக் கிழிந்துபோவதால், அது உடனே சுருங்கி வழியில்லாமல் அடைத்துக்கொண்டு, ரத்தம் வடியாது. பசு முதலிய மிருகங்கள் பிரசவித்தபோது தாய் தொப்புள் கொடியைக் கடித்து விடுவதால், ரத்த ஒழுக்கு இல்லாமல் போகிறது. Blood is bright red and ejected by leaps. The artery contracts and retreats, and faintness occurs.

சிகிச்சை.—ரத்த ஒழுக்கை தாமசிக்காமல் நிறுத்தவேண்டியது. காயத்தில் விரலை வைத்து, எலும்போடணைத்துப் பிடித்தாலும் சரி, அல்லது நாடியின் வாயைக் கிள்ளிப் பிடித்தாலும் சரி, ரத்தம் நின்றுவிடும். காயத்துக்குமேல் நாடியை பெருவிரலினாலாவது, விரல்களாலாவது, எலும்போடணைத்துப் பிகிவாயப் பிடித்தால், ரத்தம் நின்றுவிடும். டர்னிகுட் (Tourniquet) என்னும் கருவியால் அழுத்தி நிறுத்துவது இங்கிலீஷ் முறை; அது இல்லாத பக்ஷத்தில், ஒருகுட்டையில் கல்லைச்சுற்றி,

அதை நாடியின்மேல் அழுந்தும்படிக் கட்டி, ஒரு குச்சியை நுழைத்து முறுக்கினால், ரத்தம் நின்றுவிடும். இவ்விதமாய் ரத்தத்தைத் தற்கால சமனம் செய்துகொண்டு, பிறகுரத்தம் பூர்த்தியாய் நிற்கிற வழிதேட வேண்டியது அதற்கு அநேக மார்க்கங்களுண்டு. (1) பட்டுச்சரடால் கட்டி விடுதல்;—கட்டுகிறவிதம் வெகு சுலபம். குறடால் நாடியின்வாயைப்பிடித்து வெளிக்கிழுத்துக்கொண்டால், மற்றொருவனைக் கொண்டு சரடால் அதைக் கெட்டிமுடிபோடும்படிச் செய்யவேண்டியது. நாடி இரண்டு துண்டாய்த் துண்டித்துப்போனால், அதின் இரண்டுவாய்களையும் முடிபோட்டுவிடவேண்டியது. அப்படி துண்டித்துப்போகாமல், காயம் மாத்திரம் பட்டிருந்தால், காயத்துக்கு மேலும் கீழுமாய்ச் சரடைவிட்டு முடியிடவேண்டியது. நாடியைக் காயம்பட்டஸ்தானத்தில் கட்டிவிடவேண்டியதே விதி. ஒற்றிக்கட்டுவதில் அபத்தம் சம்பவிப்பதும் உண்டு. காயம் சிறுத்து நாடி கண்களுக்கு அகப்படாதிருந்தால், காயத்தை விசாலப்படுத்திக்கொள்ளலாம். (2) நீண்ட ஊசியை, காயத்தின் ஒரு உதட்டில் நூலோட்டுவதுபோல், அறுந்த நாடி அழுந்தும்படிதைத்துவிடலாம் (Acupressure). (3) முறுக்கிவிடுதல். ஒருகுறடால் அறுந்த நாடியை சுமார் $\frac{1}{4}$-அங்குலம் ஒற்றிப் பிடித்திழுத்துக்கொண்டு மற்றொரு குறடால் முனையைப் பிடித்துக்கொண்டு முறுக்குதளராமல் முறுக்கிவிட்டால் ரத்தம் நின்றுவிடும். (4) அழுத்தல் காயத்தின்மேல் துணியை அடுக்கடுக்காய் மடித்துவைத்து கட்டினால், சிறிய நாடிகளிலிருந்து வடிகிற ரத்தம் நின்றுவிடும், ஆசனம், யோனி, நாசித்துவாரம், இவ்விடங்களிலிருந்து வருகிற ரத்தத்தை, கடற்காளானாவது, துணியாவது வைத்து அழுத்தினால் ரத்தம் நின்றுவிடும் (5) குளிர்ந்தஜலத்தில் துணியை நனைத்து, காயத்தின்மேல் போட்டு, துணி காயாமல் ஜலம் விட்டுக்கொண்டிருந்தால் ரத்தம் நிற்கும். (6) துவர்ப்பு மருந்திடுதல். படிக்கார ஜலம், டர்பன்டயின், கிரியாசோட், காடிக்காரம், அயத்திராவகம், மாசக்காய் கஷாயம் இவைகளில் எதையாவது போட்டால் ரத்தம் நின்றுவிடும். பனம்பஞ்சு, தென்னம்பஞ்சு, இவைகளும் ரத்தத்தை நிறுத்தும். கரிமஞ்சள் சுண்ணம்பு முதலியவைகளைப் போடுகிற நமது வீட்டுவழக்கம் கெட்டது. (7) ஔஷதச் சிகிச்சை. மேற்கண்ட ரணச்சிகிச்சையால் ரத்தம் நிற்காவிட்டால், ஆளை படுத்தப்படுக்கையில் வைத்து, இருதய நடை தணியும்படி அபினி கொடுக்கவேண்டியது. காரமில்லாமல் பால்முதலிய போஷாபுக்குடைய ஆகாரம் கொடுப்பதில் சவுக்கியமுண்டு. *Tempoarry*. Local pressure with finger, tourniquet on artery above. *Permanent* Pressure, cold, styptics, tortion ligature. Pressure very useful when there is bone beneath the artey, and when the vessel lies deep COLD to an oozing surface ; S*typtics*, as iron, alum, turpentine creosote, caustic, when the vessel cannot be got at. TORTION is useful to small vessels, and consists in twisting the end freely with forceps. LIGATURE. Pick up the artery with forceps and apply adouble ligature round themouth of it; or tf it have retracted for,pass a needle and ligature through the mass of flesh above. A wounded artery must be ligatured above and below at the wounded part. The|tourniquet must be applied above the wound and in the course of the artery. When death from hæmorrhage is imminen, ransfuse.

பின்பட்டுக்காணுகிற ரத்தப்பிரவாகம். (Secondary hæmorrhage.) காயத்தைக் கட்டி கொஞ்சநேரம் சென்று சரீரத்தில் காங்கை பிறந்த பிறகு

சிறு நாடிகளிலிருந்து ரத்தம் பெருகும். இதற்குக் கட்டை அவிழ்த்துவிட்டு, கட்டவேண்டிய நாடிகளிருந்தால், அவைகளைக்கட்டி, ஈரத்துணியால் ஒற்றி, கொஞ்சநேரம் காற்றுறும்படி விட்டுவிட வேண்டியது. Remove all dressings, and treat according to the principles laid down.

அன்னியுரிசம். ANEURYSM.

பிரதிபதங்கள்.—நாடிச் சுபாதி, நாடிக்கட்டி.

நாடியோடு சம்பந்தப்பட்டு, ரத்தமடங்கிப் பைபோலிருக்கிற கட்டிக்கு, அன்னியுரிசம் என்றுபேர். நாடியின் புரைகள் கிழிந்தாவது, அல்லது அவைகள் விரிந்தாவது இவ்வித கட்டிகள் பிறக்கும். இதில் 2-சாதிகளுண்டு; ஒன்று, நாடியின் புரைகளின் வியாதியால் காணும்; அதற்கு, ட்ரூ அன்னியுரிசம், (True or Idiopathic) என்றுபேர். மற்றொன்று நாடி காயம்பட்டு காணும்; அதற்குப்பால்ஸ் அன்னியுரிசம், (False or Traumatic) என்று சொல்லுவர்.

லக்ஷணங்கள்.—நாடிமார்க்கமாய்க்கட்டி ஏற்பட்டிருக்கும்; அதில் நாடி நடையிருக்கும்; காது வைத்துக்கேட்டால், ஊதுகிற தன்மையாய் கேழ்விப்படும்; வேதனையுண்டு; கட்டியின் ஊர்த்தமுகமாய் நாடியை அழுத்தினால் கட்டி சிறுத்துவிடும். இது கெட்டரோகம்; தற்செயலாய் சொஸ்தப்படுவதுமுண்டு; அப்படியாகாவிட்டால், சிரமேணுய்ப் பெருத்து புரைகள் கிழிந்துவிடும். இந்தக் கட்டியிலிருக்கிற ரத்தம் உரைந்துபோனால், தற்செயலாய்க் கட்டி கரைந்துவிடும். கட்டி உடைந்து போனால், ரோகி இறந்துவிடுவான். Is a tumor connected with an artery and containing blood. Two kinds.—*True* or *Idiopathic*, arising from disease of the arterial tunics, most probably atheromatous deposit: and *False* or *Traumatic*, *diffuse*, arrising from a wound in the artery. Terminations are 2; spontaneous cure rupture Syontaneous cure occurs by coagulation of blood in the sac. Rupture frequently proves fatal first time it occurs. May be diagnosed from enlarged gland or tumor over an artery thus.—Enlarged gland beats only in line of artery; cannot be emptied; no alteration by compressing artery above

சிகிச்சை.—இந்த ரோகத்துக்கு, கட்டிக்குள் ரத்தம் போகாமல் செய்வதும், கட்டிக்குள்ளிருக்கிற ரத்தம் உறையும்படி பண்ணுவதும், முக்கிய சிகிச்சை. நாடியை அழுத்துவதாலும், அதைக் கட்டிவிடுவதாலும், உள்ளுக்கு ஔஷதம் கொடுப்பதினாலும், நமது எண்ணம் அனுகூலப்படும்.

அழுத்தல். (Compression). கட்டிக்குள் ரத்தம் சேராமல் கட்டியை அழுத்தி சிலர் பரீக்ஷித்தார்கள்; அப்பரீக்ஷையால் பிரதிகூலமாகி, துற்குணங்கள் சம்பவித்ததினால், வேறு சிலர் மறுபடியும் சோதனைசெய்து அபாயமும், வேதனையும், இல்லாமல் சீக்கிரம் சவுக்கியம் பிறப்பிக்கும்படியான ஒரு உபாயம் கண்டுகொண்டார்கள்: அதாவது, கட்டிக்குள் ரத்தம்போகாமல் தடுக்க, நாடியை ஊர்த்தமுகமாய் அழுத்துவதேயாம். அதற்கு, டர்னிகுவெட் (Tourniquet) என்னும் 2, 3, வித கருவிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்விதயந்திரத்தினால், உருப்பின் இரண்டு ஸ்தானத்தில் மாத்திரம் பிடிப்பு உண்டாகும். ஒருவேளை அந்த யந்திரத்தினால் ரோகிக்கு வருத்தமுண்டானால், அதை மேலுக்காவது கீழுக்காவது நகத்திவிடலாம். நாடியில்

சுத்தமாய் ரத்தவோட்டம் இல்லாமல், அவ்வளவு பிருவாய் அழுத்தாமல், கொஞ்சராத்தம் பரவத்தக்கதாய் கருவியைப் பூட்டிவைத்தால், சிலநாளில் கட்டியிலிருக்கிற ரத்தம் உறைந்து கல்லுபோலாகிவிடும். இவ்வித விகற்பமுண்டாக 5-6, நாளாவது, அல்லது 5-6 வாரமாவது செல்லும். இவ்விதமான பிறகு, கட்டிகிரமேணுய் சிறுத்து உறுப்பு சுபாவஸ்திதியில் வந்துவிடும். ஒரு வேளை நாடியை அழுத்த அனுகூலப்படாத பக்ஷத்தில், வெகு சாக்கிரதையாய் கட்டியின் மேலாவது, அல்லது கட்டிக்குக் கீழிருக்கும் அந்த நாடி மேலாவது, யந்திரத்தைப் பூட்டி விடவேண்டியது. Pressure by tourniquet constantly applied in some situation, the exact spot being frequently changed to avoid the formation of a slough; for remember, interrupted pressure causes hypertrophy, but constant pressure atrophy.

நூலால் கட்டுதல். (Ligature). மேற்கண்ட விதமாய்ச் சிகிச்சைசெய்ய அனுகூலப்படாத பக்ஷத்தில், அந்நாடியை ஊர்த்தமுகமாய் நூலால் கட்டிவிடவேண்டியது. இதற்கு, அன்டீரியன் (Hunterian method) முறை என்று சொல்லுவார். வியாதிகொண்டநாடி கட்டிக்குள் உட்படும்படியாய் அவ்வளவு நெருக்கியாவது, அல்லது நாடியின் கிளைகள்வழியாய் ரத்தம் கட்டிக்கு ஓடும்படியாய் அவ்வளவு ஒற்றியாவது, கட்டலாகாது. நாடியைக் கட்டினபிறகு உறுப்பின் சூடு கொஞ்சங்குறையும், பிறகு கொஞ்சநேரம் சென்று சிறுநாடிகளில் ரத்தம் பரவ ஆரம்பித்தால், சூடு மற்றக் காலுக்கதிகமாகும்; அதின்பிறகு சுபாவஸ்திதிக்குக் குறைந்துவிடும். ஆகையால் ஆளை படுக்கையில் வைத்து காலுக்கு உபத்திரவமில்லாமற் செய்து, கம்பளியாற் சுற்றி சூடு குறையாமற் செய்யவேண்டியது. உறுப்பு வீங்காது, ஒருவேளை வீங்கினபோதிலும், குளிர்ந்தஜலம் உபயோகிக்கலாகாது. சஸ்திரம் செய்தபிறகு உறுப்பு அழுகிப்போவது முண்டு; விரல்கள் வரையில் பரவிவிட்டால், தாமசிக்காமல் உறுப்பை அறுத்துவிடவேண்டியது. கட்டியின் ஊர்த்த முகமாய் நாடியைக்கட்ட அனுகூலப்படாதபோது, அதோமுகமாய்க்கட்டும்படி ஒருவிதியுண்டு; அதற்கு பிராஸ்டோர்ஸ்ஆபரேஷன் (Brasdor's operation) என்றுபேர்.

பிசைதல்.—(Fergusson's treatment by manipulation.) ஸ்ரீ பெர்கஸன் என்னும் வைத்தியர், வலதுதோளில் கண்ட இவ்வித இரண்டு கட்டிகளை, பெருவிரலால் அழுத்தி ரத்தமில்லாமல் செய்து, பிறகு மெதுவாய்ப் பிசைந்து, சவ்வுகள் சேர தேய்த்துவிட்டதில், பைபிரன் என்னும் பசை நாடியில்சென்று அடைத்துக்கொண்டு, அவைகள் கரைந்துவிட்டதாய்க் கண்டிருக்கிறது.

ஔஷதச் சிகிச்சை.—(Medical treatment.) சஸ்திரம்செய்ய அனுகூலப்படாதபோதும், ஏதாவது ஒன்று செய்வதற்கு முன்னும், அழுத்தி சிகிச்சை செய்யும் முறைக்கு உதவியாகவும், அடியில்கண்ட விதிகளை அனுசரித்து நடப்பதில் பிரயோஜனமுண்டு. ஆளை படுத்த படுக்கையில்வைத்து, பத்தியமாய்க் குறைந்த போஜனம் செய்யச்சொல்லி, அபினி கொடுக்கவேண்டியது. புகையிலை உதவும். கொஞ்சரத்தம் ஜாக்கிரதையாய் எடுக்கலாமென்றும் கண்டிருக்கிறது. அயத்திராவகமும் கொடுக்கலாம். கஷ்டவேலைசெய்ய ஒட்டாமல், மனதுக்கும் வேஷ்டையில்லாமல் செய்துவைக்கவேண்டியது. டிஜிடேலிஸ், வங்க உப்பு, ஐயோடைட் ஆவ்பொடாசியம், ஆகிய இவைகளையும் உபயோகிப்பதுண்டு. உபத்திரவ விரேசன மருந்துகள் கொடுக்க நினைக்கவேலாகாது. Bleeding, low diet, acetute of lead or gallic acid; digitalis.

நாளங்களிலுண்டாகும் காயங்களும் ரோகங்களும்
INJURIES AND DISEASES OF THE VEINS.

நாளகாயம். (Wounds of veins.) காயம்பட்ட நாளத்தி விருந்து ரத்தம் வடிந்தால், அதற்கு மெத்த பிரமாதமிராது. சிகிச்சை.—நாளத்தை அழுத்தி, உறுப்பை உயர்த்திவைத்தால், ரத்தம் நின்றுவிடும். ஒரு வேளை நிறுத்தப் பிரயாசையாய் இருந்தால், ஊசியால் குத்தியாவது, சரடால் கட்டியாவது, அல்லது, விடாமல் அழுத்திப் பிடித்தாவது ரத்தத்தை நிறுத்த வேண்டியதாய் வரும்.

நாளதாபிதம்.—(Phlebitis) இதில் இரண்டு சாதிகளுண்டு. ஒரேயிடத்தில் இருந்தால் (limited), அதில் வேதனையுண்டு; முக்கியமாய் காலில் காணும்; ரோகஸ்தானத்துக்கு அதோமுகமாய் வீக்கங்காணும், அற்பசுரமுண்டு. சிகிச்சை.—உறுப்பை அசையாமல் எடுப்பாய் வைத்து, அட்டை விட்டு, ஒற்றிடமிட்டு, பேதிமருந்துகள் கொடுக்கவேண்டியது. Pain and tenderness at the spot, usually in the leg; œdema of limb below, very little constitutional irritation. *Treatment.*—Rest, elevate limb; leeches, fomentation, purgatives.

பரவிக் காணுகிற நாளதாபிதத்தில் (diffused) குளிர் இருக்கும், ஏக்கமுகம் காணப்படும், களை பிறக்கும், நாக்கு கறுத்து உலர்ந்திருக்கும், உடம்பெங்கும் சீழ்க்கட்டிகள் உண்டாகும். சிகிச்சை.—பேதிக்கி மருந்துகளும், நல்ல ஊட்டமும், நித்திரைக்கு மருந்துகளுங் கொடுத்து இதை வசப்படுத்த வேண்டியது. இதிலிருந்து ஆள் பிழைப்பது அபூர்வம். Shivering, anxiety of countenance, faintings; tongue becomes brown, and dry; small abscesses everywhere. *Treatment.*—Clear bowls, liberal support; anodynes and narcotics. Almost alway fatal.

நாளச்சுருட்டு.—நரம்புச் சுருட்டு, நாளவிவாரம். (Varix). முக்கியமாய் இந்தரோகம் கால்களில் காணும், கண்டால், நாளங்கள் பெருத்து கிருமிகள்போல் சுருண்டு, முடிச்சு முடிச்சாய் இருக்கும். நடக்கவருத்தமாகும். Veins of legs feel enlarged, tortuous, and knotty; inability to take exercise.

சிகிச்சை.—ரசப்பூசுத்தயிலம், காலைத் துணியால் சுற்றிவைக்குதல், கூடியவரையில் நடக்காமல் செய்தல், காலை உயர்த்திவைக்குதல், பேதிமருந்துகள் கொடுக்குதல், ஆகிய இவைகளால், இந்தரோகம், சமனப்படும். வியாதிபற்றறும்படி செய்வதற்கு.—நாளத்துக்கடியில் ஊசிகளைவிட்டு, பட்டுச்சரடால் கத்திரிப் பூட்டுமாதிரியாய்ப் பின்னி (8) வைக்கவும். இவ்விதமாய் 6-அங்குலத்துக் கொருமுடிச்சு இடவேண்டியது. இப்படிச் செய்தால் ரோகம் வசப்படும். *Palliative.*—Linim, hydrargyri, strap and bandage, or order elastic stocking, as much rest as possible; raise limb, keep lower bowels clear. *Curative.*—Pass needle below the vein at intervals of about 6-inches, and apply a figure of 8 suture to each.

ஸ்பரிசநரம்புகளிலுண்டாகும் காயங்களும் ரோகங்களும்.
INJURIES AND DISEASES OF THE NERVES.

Complete Division of a Nerve. ஸ்பரிசநரம்பு பூர்த்தியாய் அறுந்துவிட்டால், அந்தநரம்பு போயிருக்கிற உறுப்பின் ஸ்பரிசமும், சலனமும் அற்றுப்போகும். வேறுதாதுகள் கூடுவதுபோல் அதுவும் கூடி, ஸ்பரிசமும் சலனமும் யதாப்பிரகாரமாய் வந்துவிடும்.

Partial Division of a Nerve. ஸ்பரிசநரம்பு இழுபட்டு முற்றிலும் அறுமல் கொஞ்சம் காயம்பட்டிருந்தால், அதிக வேதனைத் தரும்; வலியும் காண்பதுண்டு. சிகிச்சை இதற்குஅந்த நரம்பைப் பூர்த்தியாய்த் துண்டித்து விடவேண்டியது Causes great pain, or even convulsion. *Treatment.*—Cut it entirely through.

நரம்புகளின் கழலைகள் (Neuroma) ஸ்பரிச நரம்புகளின் உரையில் தினை, அரிசி, முதல் தேங்காய்ப் பிரமாணமுள்ள கட்டிகள் காணும். முள்ளந்தண்டுக்கொடியிலிருந்து உண்டாகிற நரம்புகளில் காண்பதே வழக்கம். இடைக்கிடை அவைகளில் பிரபலவேதனை பிறக்கும். சிகிச்சை.—ஐயோடீன் பூசிக்கொண்டுவந்தால், கரைந்துவிடும். அப்படிக் கரையாதிருந்தால், அறுத்து எடுத்துவிடவேண்டியது. Tumor in a nerve.

சிரசிலுண்டாகும் காயங்கள்

INJURIES OF THE HEAD.

உச்சந்தலைத்தோலின் காயம் (Wounds of the scalp).இது எவ்வளவு அற்பமாய் இருந்தபோதிலும் அசட்டைசெய்யாமல் வெகுஜாக்கிரதையாய்ப் பார்க்காவிட்டால், அக்கி, தாபிதம் இவைகள் காணும்; தோலுக்கடியிலாவது மண்டைக்குள்ளாவது, சீழ்க்கண்டு பிராணஅபாயம் நேரிடுவதும் உண்டு. சிகிச்சை.-காயத்தில் துஷ்டுகளில்லாமற் செவ்வையாய்க்கழுவி சுத்திசெய்து, காயத்தைச் சேர்த்து சீக்கிரம் மூடிவிடவேண்டியது. தோல் எவ்விதமாய்க் கிழிந்து இருந்தபோதிலும் அறுத்துவிடலாகாது, கூடியவரையில் தையலிடாமல், ஒட்டுப்பிளாஸ்திரி தடவியசீலையால், உதடுகளைச் சேர்த்துவைத்து, காயத்தைக்கட்டிவிடவேண்டியது பிறகு ஆளைபடுத்தபடுக்கையில்வைத்து,பேதி மருந்துகள் கொடுத்து, பத்தியத்தில் கொஞ்சம் கியாபகம் வைக்கவேண்டியது. சிறிய நரம்புகளிலிருந்து வருகிற ரத்தம், காயம் கட்டின உடனே நின்றுவிடும்; ஒருவேளை பெரியநரம்பு அறுந்துவிட்டால், அதைக் கட்டிவிடவேண்டியது. சீழ்க்கண்டு அதுக்குடைய குறிகள் அகப்பட்டால், காயத்தைப் பிரித்து, தோலுக்கடியிலிருக்கிற சீழைக் கீறி வெளிப்படுத்திவிடவேண்டியது.

மூளை அதிர்ச்சி. CONCUSSION OF THE BRAIN. Stunning.—சிரசில் அடிபட்டு மூளை குலுங்கினல் அதின் தொழிலுக்கு சட்டென்று விகற்பம் நேரிடும். லக்ஷணங்கள்.—இதில் இரண்டு ஸ்திதிகளுண்டு. (1) சாதாரணமான அற்ப அதிர்ச்சியில், ரோகி கைகால் அசைக்காமல் போதக்ஷயமாய் இருப்பான்; கண்தாரை சுருங்கியிருக்கும், வெளிச்சம் படவொட்டாமல் திரும்பிக்கொள்ளுவான்; எழுப்பி ஏதாகிலும் கேட்டால் அவசரமாய்ப் பிரத்தியுத்திரம் கொடுத்து மறுபடியும், பிரக்ஞையில்லாத ஸ்திதியில் இருப்பான். கொஞ்சநேர மிவ்வித ஸ்திதியிலிருந்து, நித்திரைவாராமல் தத்தளிப்பதுபோல் கைகால்களை அசைத்து வாந்தி எடுப்பான்; எடுத்த உடன் தெளிவு பிறப்பதும் உண்டு; பிறந்தும் மயக்கம், புத்தி கலவரம், உறக்கம் ஆகிய இவைகள் கொஞ்சநேரமிருப்பது வழக்கம். (2) பலத்த அடியால் மூளை மெத்தக் குலுங்கிவிட்டால், ஆளுக்கு சுத்தமாய்ப் பிரக்ஞையில்லாமல் போய்விடும்; உடம்பும் கைகால்களும் வெளுத்து சில்லிட்டிருக்கும்;எக்கமும் காணும்; நாடி விட்டு விட்டு ஈனத்துவமாய் விரைவாய் நடக்கும், அல்லது விழுந்துவிடும்; சுவாசம் மெதுவுற்றோடும், அல்லது இருந்து இருந்து மெதுவாய் பெருமூச்சுபோல் காணும். மூளை அதிர்ச்சி அற்பமானலும் சரி, பிர

பலமானாலும் சரி, வாந்தி உண்டாகாது. வாந்தியானால், சுகுணமார்க்கத்துக்கு வருமென்று யோசிக்கவேண்டியது. மூளை மெத்த அதிர்ந்துவிட்டால், உடனே மரணம் சம்பவிக்கும். Pulse small and weak ; pupil contracted ; features ghastly ; breathing *not* stertorous ; insensible but rousable.

சிகிச்சை.—அடியுண்டவன் சுமார்க்கமில்லாம விருக்கும்போது, தேகத்தில் சூடுபிறக்க கையால் தேய்த்து, பாதங்களுக்கு வெந்நீர் புட்டிகளாவது சுட்ட செங்கல்களாவது வைத்து, கெண்டைக் கால்களின்மேல், கடுகுபற்று போடவேண்டியது. உஷ்ணகாரிகளைப் பிரயோகிக்கலாம். தற்செயலாய்த் தெளிவு பிறக்கும்படி ஆளை விட்டுவிடுவதே உத்தமம்: ஏனெனில் பிரக்ஞை தப்பி இருக்கும்போது ஜலரூப ஔஷதங்களேதாவது கொடுத்தால் புரைக்கேறி பிராணபயம் நேரிடும் ; எதையாவது ஆக்கிராணிக்கச் செய்தபோதிலும், இனிமேல் பிறக்கப்போகிற துற்குணங்களோடு, நாசித்துவாரங்களையும் தொண்டையையும் விரணமாக்கிவிடும். போதக்ஷயமிருக்கும்போதே ஆளைச் செவ்வையாய்ப் பரீக்ஷித்து, காயங்களைக் கட்டி, ஏதாவது எலும்பு விலகியிருந்தால் அதைத் தள்ளிவிடவேண்டியது.—ஆளுக்குத் தெளிவு பிறந்தபிறகு மலமுதையும்படி பேதிமருந்து கொடுத்து, இருட்டுவீட்டில் நெம்மதியாய் வைத்து, தூங்கும்படிச் செய்யவேண்டியது. பத்தியத்துக்குக் காரமில்லாத போஜனம் நல்லது. ஒருவேளை நாடியோட்டம் படபடத்து, தலைவலியோடு முகம் சிவந்து, விகாரகுணம், போதக்ஷயம் முதலிய மூளைதாபனக் குறிகள் கண்டால், சிரச்சவரம் செய்துவைத்து, ஈரத்துணிபோட்டுச் சிரசைக் குளிர்ச்சியாய் வைத்து, அடிக்கடி விரேசன மருந்துகள் கொடுக்கவேண்டியது. ரத்தமெடுத்தும், உக்கிர விகாரக் குறிகள் கண்டால், மார்பியா கொடுக்கலாம். சிரசின்மேல் அடியுண்டவன், $1\text{-}1\frac{1}{2}$ மாதம் வரையில், ஆயாசமான வேலை யாதொன்றும் செய்யாமலும், மதுபான அபேக்ஷையைக்காமலும், மனக்கொதிப்புக் கிடங்கொடுக்காமலும் இருக்க வேண்டியது.—ஒவ்வொருவருக்கு தலைவலி, செவிடு, மயக்கம், கருடபார்வை, மறதி, காதிரைச்சல் ஆகிய இவைகளில் ஏதாவது காணுவதுண்டு; அதற்குக் கொஞ்சம் ஈறுகட்டும்படி ரசம்கொடுத்து, பிடரிமேல் புணுக்கி, ஸஹஸ்திர தாராமஞ்சனம் (Shower-bath) செய்வித்து, பரதேசவாசம் செய்யச் சொல்லி, போஜனக் கிரமத்தை ஏற்படுத்தி, ரோகத்தை வசப்படுத்தவேண்டியது. Rest in bed ; cold to head; perhaps calomel internally. Lookout for bad symptoms. Vomiting is a favorable one. Concussion generally ends in recovery or compression.

மூளை அமுக்கம். COMPRESSION OF THE BRAIN. லக்ஷணங்கள்.—அபோபிளக்சியென்னும் ரோகத்துக்குடைய குறிகளை இதற்குமுண்டு; போதக்ஷயம், ஸ்தம்பவாதம், அசைவற்று விரிந்த கண்தாரை, மெதுவுற்ற நாடி, சூடோடு வியர்க்கும் தேகம், மூத்திர அடைப்பு, மலம் தற்செயலாய் வெளிப்படுதல், குறட்டைச் சுவாசம், வாயில் பவ் என்ற சப்தம் ஆகிய இவைகளாம். கண்களின் தாரை சுருங்கி இருப்பதும், ஒவ்வொருவருக்கு, ஒன்று சுருங்கி, மற்றொன்று விரிந்தும், ஒவ்வொருவருக்குக் கருடபார்வையும், கண்மேலுக் குருண்டு வெள்ளைவிழிமாத்திரம் காண்பதுமுண்டு. அடிபட்ட பக்கம் விட்டு மற்றப்பக்கத்தில் ஸ்தம்பவாதம் காணும்; அது அற்பமாயாவது பிரபலமாயாவது இருக்கும். காரணங்கள்.—ரத்தநரம்புகள் அறுந்து பெருகும் ரத்தத்தினாலும், மண்டையோடுடைந்து பதிந்துபோவதினாலும், சிரசுக்குள் சீழ்கொள்வதினாலும், மூளையில் அமுக்க முண்டாகும். ரத்தம் தோய்ந்து,

இக்குறிகள் கண்டால், மூளை அதிர்ச்சியின் குறிகள் முதல்கண்டு, தெளிவு பிறந்தபிறகு இந்தலக்ஷணங்கள் காணும். ரத்தம் திடீரென்று விஸ்தாரமாய்க்கண்டால், மூளை அதிர்ச்சியினால் மயங்கின அறிவு தெளிவதற்குமுன், மூளை அமுக்கத்தின் குறிகள் உண்டாகும். பெருகின ரத்தம் எலும்புக்கும், சவ்வுக்கும் மத்தியிலாவது, மூளையை மூடிக்கொண்டிருக்கிற சவ்வுகளுக்கு மத்தியிலாவது, மூளைக்குள்ளாவது, அடங்கியிருக்கும். முந்தின ரோகத்துக்கும் இதற்கும் உள்ள வித்தியாசம் நமக்குத் தெரிந்திருக்கவேண்டியது. (1) மூளை அதிர்ச்சியில், குறிகள் காயம்பட்ட உடனே காணும்; மூளை அமுக்கத்தில் குறிகள், கொஞ்சநேரம் சென்றபிறகு உண்டாகும். (2) மூளை அதிர்ச்சியில், நாடி திடுக்கிட்டு விட்டு விட்டு நடக்கும், சரீரம் வெளுத்து, சுவாசம் ஒடுங்கியிருக்கும்; மூளை அமுக்கத்தில், சூடு பிறக்கும்போது, நாடி பெருத்து மந்தகதியாயும், சரீரம் வியர்வையோடு உஷ்ணமாயும் இருக்கும். (3) குறட்டைச் சுவாசமும், ஸ்தம்பவாதமும் மூளை அதிர்ச்சியில் காண்பது அபூர்வம், ஆனால் மூளை அமுக்கத்தில் காண்பது வழக்கம். (4) கண்தாரை மூளை அதிர்ச்சியில் பலவிதமாய் இருக்கும்; மூளை அமுக்கத்தில் எப்போதும் விரிந்து அசைவற்றிருப்பதைக் காணலாம். Compression is caused by 1. depression of bone; 2. effusion of blood; 3. formation of an abscess. *Symptoms.*—Perfectly insensible, not rousable; pulse slow and laboring, stertorous breathing, pupil dilated, paralysis generally.

சிகிச்சை.— சிரச்சவரம் செய்து வைத்து, செவ்வையாய்ச் சோதித்து, காயம்பட்ட ஸ்தானம் கண்களுக்ககப்படா விட்டால், அசதிசந்நி ரோகத்துக்குச் (Apoplexy) செய்கிற சிகிச்சையே இதற்கும் செய்யவேண்டியது. சிரசுக்கு ஈரத்துணிபோட்டு, பேதிமருந்துகள் கொடுக்கவேண்டியது. இவைகளால் சுகுண முண்டாகாமல், போதக்ஷயம் இருந்து மார்பில் கபம்தங்கி, சுருட்டுப்பிடித்து புகைவிடுவதுபோல் வாயிலிருந்து சுவாசம் வெளிப்பட்டு, குளுமைநாதன் மேலிட்டிருக்கும்போது, இஷ்டமில்லாத பயங்கரவேலையைச் செய்தே முடிக்கவேண்டியதாகின்றது. அதற்கு ட்ரிபைனிங் (trephining) என்றுபேர். காயங் கண்டவிடத்தில் எலும்பைச் சட்டித்தமரால் (trephine) துளைத்து, எலும்பை மேலுக் குயர்த்தி மூளையை அழுத்தும் நீரை வெளிப்படுத்திவிடவேண்டியது. Shave and examine head. If the seat of injury cannot befound treat as apoplexy; if it can, remove spiculæ, raise depressed bone or trephine.

சிரசெலும்பு முறிவு. (Fracture of the skull) பலத்த அடியினாலும், தலைகீழாய் விழுவதினாலும், துப்பாக்கிக் குண்டு படுவதினாலும், சிரசெலும்பு முறியும். தடியைப்போலொற்றவைகளாற் சிரசில் அடிபட்டாலும் சரி அல்லது தலைகீழாய் விழுந்தாலும் சரி, சிரசின் அடிப்புறத்திலாவது, உச்சியிலாவது விசாலமான முறிவு கண்டு, நாடியும் நாளங்களும் கிழிந்துவிடும். கூர்மையான ஆயுதங்களால் அடிப்பட்டால், அது பட்டவிடத்தில் மாத்திரம் எலும்பு மலர்வடிவாய்ப் பிளந்திருக்கும். அடியின் வேகத்துக்குத் தக்கபடி குறிகள் கண்டு தாபித குணங்களும் பிறக்கும். (Simple fracture with depression). எலும்பு ஒடிந்து அழுந்தியிருந்தால், சிரச்சவரம் செய்துவைத்து, பரீக்ஷித்துப் பார்வையிட்டால், ஒருபக்கம் பள்ளமும் அதைச்சுற்றி மேடும் அகப்படும். சிகிச்சை.—இதற்கு மூளை அமுக்கத்தின் குறிகள் இல்லாமல், புத்தி தெளிவாய் அறிவு கெடாம லிருந்தால், பத்திய போஜனத்தில்

வைத்து, சிரசை உயர்த்தி படுக்கவைத்து, சிரசுக்கு ஈரத்துணிபோட்டு, பேதிமருந்துகள் கொடுத்து சிகிச்சை செய்யவேண்டியது. குழந்தைகளின் எலும்புகள் மிருதுவாயும், மெல்லியதாயும் இருப்பதால்,உடையாமல் பதிந்து போகும். அதற்குத் தாபிதத்தை விலக்கக்கூடிய பிரயத்தினங்கள் செய்துக் கொண்டுவந்தால், எலும்பு தானாய் யதாஸ்திதிக்கு வந்துவிடும். If with spmptoms of compression trephine; if not treat as lacerated scalp. as it is probably of outer table only.

Fracture of the base of the skull. தலைக்கீழாய் விழுந்து சிரசின் அடிப்புறத்தில் விடைவுகண்டால், மூளை அமுக்கலுக்குடைய குறிகள் இருக்கும், காதிலிருந்து ரத்தம் வடியும். சிகிச்சை —ஆளை நீட்டிப் படுக்கவைத்து, சிரச்சவரம் செய்வித்து, ஈரத்துணியைப் போட்டு, கால்களுக்கு சூடேற்றவேண்டியது. இந்த அபாயம் ஆளை எவ்விதத்திலும் கொல்லும். Caused by a fall on to the head, symptoms of compression with bleeding from ears. *Trcatment.*—Prop up in bed ; shave head ; cold lotions; warmth to extremities. Invariably die.

மூளையிலுண்டாகும் காயம். WOUNDS OF THE BRAIN.

Wounds of the duramater. மூளையை மூடும் சவ்வு காயப்பட்டால், தாபிதத்தினாலும், மூளை அந்தகாயத்தின் வழியாய் வெளிக்குப் பிதுங்க எதுவாய் இருப்பதினாலும், பிராணபயமுண்டாகும்.

மூளையிலுண்டாகுங்காயம் (Wounds of the brain) இது எவ்விதமாய் இருந்தபோதிலும் துற்குணங்கள் உண்டாகாமல், குணமாகுவதுண்டு ; ஒருவேளை விகற்பங்களுண்டானால், பிராணபயம் நேரிடும். தாபிதமுண்டாகாமலும், மூளைபிதுங்காமலும் செய்து காயத்தைச் சவுக்கியப்படுத்துவதே, இதற்குச் செய்யவேண்டிய சிகிச்சை.

மூளைப்பிதுக்கம்.—(Hernia Cerebri.) சிரசெலும்பில் ஒருதுண்டு எடுபட்டால், அந்தவழியாக, மூளை பிதுங்கிவிடும். அது கிரமேணாய் அதிகரித்து, கோழிமுட்டைப் பிரமாணமாவது அல்லது இன்னம் பெருத்தாவது இருக்கும். இதில் பிரமையும், மூளைதாபிதமும் காணும். சிகிச்சை.— நாணைய சீலைத்துண்டைச் சுண்ணாம்பு ஜலத்தில் துவைத்து வெகு சாக்கிரதையாய், மூளைபிதுங்காமற் துவாரத்தில் வைத்து அடைக்கவேண்டியது. மெத்தப் பிதுங்கிவிட்டால், மூளையின் மட்டத்துக்குச்சீவிவிட்டு,பிறகு துணியைமடித்து உபாயமாய் அழுந்தும்படி கட்டி, காயத்தை ஆற்றிவிட வேண்டியது, Occurs after a portion of the skull has been removed. *Treatment.*—Endevour to prevent, it by a plug of lint steeped in lime water, carefully applied If very large shave it off, then apply gentle pressure.

துளைத்தல். TREPHINING. மண்டையோடு உடைந்து அழிந்திப் போகுதல், அல்லது எலும்புகளுக்குக்கீழ் ரத்தமாவது, சீழாவது சேர்ந்துவிடுதல், ஆகிய இவ்வித காரணங்களுக்கு, மண்டையோட்டை துளைக்கும்படி நேரிடும். எலும்புநொறுங்கி பதிந்தால் துளை சிறுத்தும், சீழ்க்கண்டாவது, ரத்தம் உறைந்தாவது இருந்தால், துளைபெருத்தும் இருக்கவேண்டியது. இந்தவேலைக்கு வேண்டிய ஆயுதங்கள் சட்டித்தமர் (trephine), Hey's saw என்னும் வாளுகள், மிண்டி, (elevator)—சாவணங்கள், (forceps)—ஸ்கால்பெல் (scalpel) என்னும் கத்திகள், சஸ்திரீகள் தன் சோபியில்

எப்போதும் வைத்திருக்கும் மற்ற ஆயுதங்கள் ஆகிய இவைகளாம். தமரிடுகிற மார்க்கம்.—சிரச்சவரம் செய்துவைத்து, அந்தஸ்தானத்தின் சருமத்தை, V. H. T. இப்படி ஒருவிதமாய்க் கீறியாவது, அல்லது முன்னமே காயம்கண்டிருந்தால் அதை விசாலப்படுத்தியாவது, எலும்பு தெரியச் செய்து, சட்டித்தமரின் குத்தூசியை வெளிக்கிழுத்து, எலும்பில், அந்த ஆயுதத்தின் பற்கள் பொருந்தும்படி ஊசியை ஊன்றிக்கொண்டு பிறகு உருட்டித்திருப்பி, எலும்புஅறுந்தபிறகு, ஊசியைமேலுக்கிழுத்துவிட்டு, மூளையின் சவ்வில் தாங்காமல், ஜாக்கிரதையாய் துத்துளை அந்தச் சவ்வில் தாங்கின உடன், ஆயுதத்தை யெடுத்துவிட்டு, மின்டியைக்கொடுத்து அரிந்தபில்லையை கிளப்பி யெடுத்து, உள்ளிருக்கிற சீழ் அல்லது ரத்தத்தை நீக்கி,பிறகு தோலை மூடி அணைத்து, பிளாஸ்திரிபோட்டு ஈரத்துணியைப்போட்டுவைக்க வேண்டியது. பெரிய நாளங்களும், கபாலரேகைகளும், நெற்றி எலும்பு, பிடரெலும்பு, இவைகளின் கீழ்ப்புறங்களிலும் தொளைக்கலாகாது. இதில் பிராணசேதம் உண்டாகுவது வழக்கம். Reflect integuments; have central pin of trephine rather long, but remove it as soon as the bone is well grooved. Frequently examine, and when the dura-mater is reached, raise the piece of bone with the elevator. If the cause of the compression is not now discovered, make a little "nick" in the dura mater. Wet lint to part; keep in bed. Cases generally end fatally.

சிரசைக் குத்தி நீரெடுக்குதல். (Paracentesis Capitis.) குழந்தை சிரசில் நீர்கோர்த்து, பெருத்து ஔஷதங்களால் யாதொரு சுகுணமும் காணாத பக்ஷத்தில், குத்தி நீரையெடுக்க வேண்டியதாகிறது. குத்துகிற மார்க்கம்.—ட்ரொகார் (trocar) என்னும் சிறிய ஆயுதத்தாலாவது, grooved needle என்னும் ஊசியினாலாவது, உச்சிப்பள்ளத்தில் நாளத்தில் படாமல் ஒத்தி, குத்தல், $\frac{1}{4}$-$\frac{1}{2}$ஆழாக்கு நீர் வெளிகண்டவுடன், வாயைமூடி,சிரசைத் துணியால் அழுத்திக் கட்டிவைக்க வேண்டியது. குழந்தைக்கு மயக்கம் கண்டால், படுக்கையில் வைத்து, அம்மோனியா என்னும் மருந்தைக் கொடுக்கவேண்டியது. 2-3-வாரம் சென்றபிறகு, மறுபடியும் நீரை யெடுத்துவிட வேண்டியது.

நேத்திர காயங்களும், ரோகங்களும்

INJURIES AND DISEASES OF THE EYE

Wounds of the Eyelids or Eyebrows. கண்ரெப்பையிலாவது, புருவத்திலாவது காயம்பட்டு, தோல் கிழிந்துப்போனால், காயத்தைச் சேர்த்து இரண்டு உதடுகளும் கூடும்படி மெல்லிய சரடால் தையலிட்டு, மேலுக்கு ஈரத்துணியைப் போட்டுவைக்க வேண்டியது. காயம் ஆறிவருகிற தருணத்தில் பிளாஸ்திரியிடலாம். மஞ்சள், கரி முதலிய கொதிப்பிக்கிறவைகளைப் போடலாகாது. கண் ரெப்பைமேல் படுகிற காயத்தை மெத்த ஜாக்கிரதையாய் ஆற்றவேண்டியது; ஏனெனில், ரெப்பையில் சுருக்கங் கொடுத்து, கண்ணை மூடக் கூடாமையாய் விடும்.

கண்ணில் அடிபட்டால் (Blows on the eye) ரத்தம்கன்றி அதிக வீக்கமுண்டாகும். கண்விழியில் அடிப்பட்டால் உள்விழி கலங்கிப் பார்வை அற்றுப்போகுவதுமுண்டு. சிகிச்சை.—ஈரத்துணியைக் கண்மேல்போட்டுவைத்து தாபிதம் அடங்கும்படி உபாயம் செய்தால், சௌக்கியமாகிவிடும்.

பிணியாளனை எதையும் பார்க்காமலிருக்கும்படிச் செய்யவேண்டியது. Sometimes causes concussion of retina and permanent blindness. *Treatment.*—Rest and counter irritation

கண்ணில் எதாகிலும் விழுந்தால்,(Foreign bodies.) முதல் கார்னியாவையும், பிறகு கீழ் ரெப்பையை வெளிக்கிழுத்து மேலே பார்க்கும்படிச் செய்து கீழ்ரெப்பைக்குள்ளும் கீழ்ப்புறத்து விழியையும் பரீக்ஷித்து, எதுவும் இல்லாவிட்டால், கீழே பார்க்கும்படிச் செய்து மேலிமையைப் பிடித்து ரெப்பையை சிலாக்கால் அழித்துப் புரட்டி பரீக்ஷிக்கவேண்டியது. கருவிழியில் எதாவது பற்றியிருந்து சோதனிக்கம்பியால் எடுக்கக்கூடாத பக்ஷத்தில் ப்ல் குத்தும் வெள்ளிக்கம்பியாலாவது, இரகின் முருந்தினலாவது, ஊசியால் கிளப்பியாவது, எடுத்துவிடவேண்டியது. எதிலும் அனுகூலப்படாத பக்ஷத்தில், பட்டவிடம் ரணமாகி, அது தானைக் கழலும்படி விட்டுவிடுவதே நல்லது. கண்ணில் விழுந்ததை யெடுத்துவிட்டபிறகு கண்ணைக் கொஞ்சநேரம் மூடிவைத்தால் நல்லது; கண் சிவப்புகண்டால், ஈரத்துணியைப் போட்டுவைக்கவேண்டியது. சுண்ணும்பு கண்ணில் விழுந்தால், ரெப்பையைப் புரட்டி காடிகலந்த ஜலத்தினலாவது, எண்ணெயாலாவது, சுத்த ஜலத்தாலாவது, பீச்சி எடுத்துவிடவேண்டியது. திராவகங்களாவது, ஆல்கெலீஸ் என்னும் காரங்களாவது பட்டால், ஜலத்தினல் பீச்சுவதே நல்லது, கருவிழி உராய்ஞ்சுக்கொண்டு போனல், ஒருதுளி சிற்றுமணக்கெண்ணெய் விட்டால் அற்புத வேலை செய்யும். Seen on raising lids. *Treatment.*—Remove by a piece of lint folded to a point, point of needle, prob or scoop, drop in castor oil.

ஐரிஸ் என்னும் வருணிச்சவ்வு பிதுங்கல். (Prolapse of the Iris.) கருவிழியில் குற்றுக்காயம்பட்டு, கிஷ்ணமண்டல சவ்வு வெளியில் பிதுங்கிவிட்டால், கண்ணை மூடச்செய்து, கண்ரெப்பை கருவிழிமேல்தாங்க மெதுவாய் அழுத்தித் தேய்த்து, பிரகாசமான வெளிச்சத்தைப் பார்க்கச்செய்தால், பியூபில் சுருங்கி உள்ளுக்குப் போய்விடும்; அந்த சவ்வு வெளியில் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, ஊமத்தை ரசமாவது, பெல்டோனவாவது கண்ணைச்சுற்றிலும் பூசினல் நல்லது. இவ்வித சிகிச்சைகளால், அந்தச் சவ்வு உள்ளுக்குப் போகாதிருந்தால், கத்தரிக்கும்படிச் சொல்லுகிருர்கள்; எதற்கும் சும்மாய் விட்டுவிட்டால் நல்லதாம். கண்ணை மூடி, தாபிதம் கொள்ளாமல் செய்யவேண்டியது. *Treatment.*—When recent, endeavour to return it by causing alternate dilatation and contraction of pupil by weak and strong light. Try belladonna. If not recent, snip off prolapsed portion.

கண்ரெப்பையின் ரோகங்கள் DISEASES OF THE EYELIDS.

கண்கட்டி. (Hordeolum, sty.) கண்ணிமை ஓரத்தில் காணுகிற சிறுச்சிலந்திக்குச் சிகிச்சைத் தெரியாதவர்கள் நமது தேசத்தில் யாருமில்லை. கருங்கல்லின்மேல் கறிவேப்பிலைவைத்து சங்கால் இழைத்து, அந்தச் சாந்தைப் பூசுவது வீட்டு வழக்கம். வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, போல்டீஸ் கட்டுவதில் சுகுணமுண்டு. ஸிட்ரன் ஆயின்ட்மென்ட் தடவினல் வீக்கம் கரையும். சரீர சவுக்கிய விகற்பமிருந்தால், உள்ளுக்கும் மருந்து கொடுக்கவேண்டியது. Poultices ; fomentations ; ung, hydrarg, nitrat, dib ; tonics ; alteratives.

புழுக்கடி. புழுவெட்டு, புல்லன்கடி. (Ophthamiaal. Tarsi) கண்ணிமை வரம்பின் வியாதிக்கு புழுக்கடியென்று பேர். தூக்கத்தில் பீளைசுரந்து, இமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு, கண் திறக்கச் சுவாதீனமிராது. ரோகம் உக்கிரஸ்திதியிலிருந்தால், வேதனையும் எரிச்சலும் அதிகமாய் இருக்கும்; ஆனால் சண்டி வியாதியாய்க் கண்டு, நமைச்சலோடிருப்பது வழக்கம்; சரீர சவுக்கியம் விகற்பப்பட்டவர்களுக்கே உண்டாகும். இமையின் ஓரம் ரணமாகி, ரோமக்கால்கள் நைந்து உதிர்ந்துவிடும். சிலருக்கு வரம்பு வீங்கி, உள்ளுக்குச் சுருட்டிக்கொள்வதுமுண்டு.

சிகிச்சை.—இதற்கு முதல் பேதிமருந்து கொடுத்து, பிறகு வீரம், பாஷாணம், நன்னாரி, நிலவேம்பு, அயம், வேப்பம்பட்டை இவைகளில் எதையாவது உள்ளுக்குக் கொடுத்து சரீர சவுக்கியத்தை விருத்திசெய்ய வேண்டியது. போஸ்தக்காய் கஷாயத்தால் நேத்திர சுத்திசெய்து, இரவில் தூங்கும்போது, பன்றிநெய்யை இமைகளுக்குப் பூசிக்கொண்டுவந்தால் ஒட்டிக்கொள்ளாது. பகலில் நாக உப்பு, படிகாரம், பிராந்தி இவைகளில் ஒன்றுகலந்த ஜலத்தைத் துவாலையிட்டு,சிட்ரன் ஆயின்ட்மென்ட் என்னும் களிம்பை இரவில் இமைகளுக்கு மையிட்டுக்கொண்டு வந்தால் வசத்துக்குவரும். ரோமக்கால்களில் ரணமிருந்தால், ரோமத்தைப் பிடுங்கிவிட்டாலும் சரி,அல்லது கத்திரித்து விட்டாலும் சரி,மருந்துகள் சுலபமாயிடலாம். *Treatment.*—Alteratives; tonics; anodyne collyrium; lard, and ung, hydrarg, nitrat, dil, to edges of lids.

ட்ரிகை ஏஸிஸ். (Trichiasis.) இமையின் ரோகங்கள் உள்ளுக்கு வளர்ந்திருந்தால், கண்ணை அரித்து என்னேரமும் நீர் வடியச்செய்யும்; நாள்பட்டால், கருவிழி மங்கலாகி, பார்வை மந்தப்படும். சிகிச்சை.—இதற்கு அந்த ரோமங்களைப் பிடுங்கிவிட்டால், துர்குணங்கள் நீங்கிவிடும்; அதற்கும் நீங்காவிடில், அதன் வேரை மெல்லிய கத்தியாற் கீறி எடுத்தாவது, காடிக்காரத்தால் கருக்கியாவது விடவேண்டியது.

என்ட்ரோபியன், (Entropion.) கண்ணிமையின் மடிதலுக்கு என்ட்ரோபியன் என்று இங்கிலீஷில் பேர். இதற்கு அநேக காரணங்களுண்டு. இமையின் ஓரம் சுருக்கம், கண்மடலின் உட்சவ்வு தடிப்பு, இமையின் முருந்து சுருக்கம், இமையின் சருமம் அதிகவளர்த்தி ஆகிய இவைகளாம். சிகிச்சை.—இமையின் ஓரம் சுருக்கத்தினால் கண்டால்,கண்மடலை அதன், மூலைகளிரண்டிலும் குறுக்காய்க் கத்தரித்தாவது, மடல் ஓரத்தை இமையின் ரோமங்களோடு சீவி எடுத்தாவது விடவேண்டியது.—கண்மடலின் உட்சவ்வு தடித்து கண்டால், ரத்தம்வரக் கீறி துவர்ப்பு மருந்து கண்ணுக்கிட்டால் சுகுணம் பிறக்கும். விருத்தாப்பியத்தில், கன்னத்தின் தோல் மடிப்பு விழுந்து இந்தரோகம் பிறந்தால், கண்மடலிலுள்ள தோலில் ஒரு துண்டை அறுத் துரித்தெடுத்துவிட்டு, ஓரங்களிரண்டையும் கூட்டி தையலிடவேண்டியது.

இளிச்சக்கண். எக்ட்ரோபியன். (Ectropion) கண்ணிமை வெளிக்குத் திரும்பிவிடுதலுக்கு இளிச்சக்கண்ணென்று பேர். கண்சவ்வு தடித்து இது கண்டால், காடிக்கார ஜலமாவது, ரசச்செந்தூரக்களிம்பாவது போட்டால் வசப்படும்; அவைகளுக்கு வசப்படாவிட்டால், சவ்வை இமையின் ஓரத்தில் கொஞ்சம் அறுத்து உரித்தெடுத்து விடவேண்டியது. கன்னத்தின் மேல் வடுவுகண்டு இந்தரோகம் பிறந்தால், அந்தவடுவை அறுத்துப் பிரி

த்துவிடவேண்டியது ; அல்லது அந்த வடுவைச் சீவி, அவ்விடத்தை அதின் பக்கத்துத் தோலில் ஒரு துண்டைச் சீவியெடுத்து மூடிவிடவேண்டியது.

அரைக்கண்.—(Lagophthalmos ; hare-eye.) கண்ணை மூடஒட்டாமல் செய்கிற ரோகத்துக்கு, அரைக்கண்ணென்று பேர். வியாதியினாலும், காயத்தினாலும் காணுகிற இந்த ரோகத்தை, தகுந்த சிகிச்சைகள் செய்து வசப்படுத்தவேண்டியது.

நேத்திரவாயு. (Ptosis.) கண்ரெப்பையின் அசைவு அற்று, கண்ணை மூடிக்கொண்டு திறக்கக் கூடாமல் செய்கிற ரோகத்துக்கு, நேத்திரவாயு என்றுபேர். சிலருக்குச் சன்னிதோஷ முண்டாகப் பூர்வரூபமாய்த் தலைநோய், கிறுகிறுப்பு முதலான குறிகளோடு உண்டாகும் இதற்கு ரத்தமெடுத்து விரேசனம் செய்வித்து, ரசம்கொடுத்து, புண்ணுக்கவேண்டியது.

அடைக்கண். (Ankyloblepharon.) கண்ணிமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுகிறதற்கு அடைக்கண்ணென்று பேர், இது ஜன்மவியாதியாய் இருந்தால், கீறி இமைகளைப் பிரித்துவிடவேண்டியது. ரணம் ஆறின தழும்பினால் இரண்டிமைகளும் ஒருமூலையில் மாத்திரம் ஒட்டிக்கொண்டிருந்தால், அது அசாத்தியம்.

சிம்பிளிபெரன். (Symblepharon) இமை, விழியோடு ஒட்டிக்கொள்வதற்கு இந்தப்பேர். இமையும் விழியும் ஏககாலத்தில் ரணமாகி, ஒட்டிக்கொண்டு இந்த விபத்துநேரிடும். மெத்த ஒட்டிக்கொண் டிருந்தால் அசாத்தியம் ; கொஞ்சமாயிருந்தால் சேதித்து விடவும்.

கண்ணீர் உருப்புகளின் ரோகங்கள்

DISEASES OF THE LACHRYMAL APPARATUS.

கண்வரக்ஷி. (Xerophthalmia.) கண்ணிர் சுறப்பில்லாமல், கண்ணுலர்ந்துப்போவதற்கு, கிளிசரீன், (Glycerine) அல்லது சிற்றாமணக்கெண்ணெயாவது, அடிக்கடி கண்ணில் விட்டுக்கொண்டுவந்தால், சவுக்கியமுண்டாகும்

கண்ணீர் பெருக்கம். (Epiphora.) கண்ணீர் அதிக்கிரமித்து, கன்னத்தின்மேல் வடிந்துக்கொண்டே யிருப்பதற்கு, கண்ணைச் செவ்வையாய்ப் பார்த்துவிட்டு, எதாவது ரோமம் குற்றிக்கொண்டிருந்தால் அதைப் பிடிங்கிவிட வேண்டியது. சரீர விகற்பத்தால் இது காண்பது வழக்கமாதலால் அயம், ஸோடா, நிலவேம்பு முதலிய மருந்துகள் கொடுத்து, தேக அசவுக்கியத்தை நீக்கவேண்டியது. நந்தியாவட்டப் பூரசம், முருங்கைப்பூ ரசம், முலைப்பால், ஆவின் நெய், வகைக்குப் பலம் $\frac{1}{4}$; சந்தனம், மரமஞ்சள், வகைக்கு விராகனெடை 1 இவைகளைப் பதமாய்க்காச்சி, வடித்துவைத்துக்கொண்டு, கண்ணில் விட்டுத் தலை முழுகிக்கொண்டுவந்தால், சவுக்கியம் உண்டாகும். சிலருக்கு, கண்ணுக்கும், நாசிக்கும் இருக்கிற துவாரமடைந்து கண்ணீர்ப் பெருகும், அதைச் சஸ்திரச் சிகிச்சையால் வசப்படுத்த வேண்டியது.

பங்டா என்னும் ரந்திர அடைப்பு. (Closure of the puncta Lachrymalia.) இது பிறவிரோகம், தாபிதத்தால் காண்பது முண்டு. இதில் கண்ணீர்க் கன்னத்தின் மேல் வடிந்துக்கொண்டே இருக்கும். ஜன்மவியாதியாயிருந்தால், வசப்படாது ; தாபிதத்தினாற் பிறந்தால், சிறுத்த தங்க ஊசியால் ரந்திரத்தை விசாலமாக்கி, அதன் வழியாய்ச் சோதனியைக் கண்ணீர்ப்போகிற குழலுள் அடிக்கடி விட்டுக்கொண்டு வரவேண்டியது.

சோதனியை விடும்போது, மேற்துவாரத்துக்குமேலே நேராயும், கீழ்த்து வாரத்துக்குக் கீழுக்கு நேராயும் விட்டு, பிறகு உட்பக்கமாய்ப் போகும்படி வளைத்து, கொண்டுபோகவேண்டியது.

நாசிக்குச் செல்லும் கண்ணீர்க்குழல் அடைப்பு, (Obstruction of the nasal duct.) இந்தக் குழலின் சவ்வு தடித்து, இந்தரோகம் பிறக்கின்றது. தேக அசவுக்கியமே இதற்குக் காரணமாகும், இதில் கண்கூச்சலுண்டு; எப்போதும் கண்ணீர் வடிந்துகொண்டே இருக்கும்; அந்தப் பக்கத்து நாசித்துவாரம் உலர்ந்திருக்கும்; மூக்கடியிலிருக்கிற லாக்கிரமல் சாக் என்னும் பையில் நீர்ச்சேர்ந்துப் புடைத்துக்கட்டியாய்க் காணப்படும், அதை அழுத்தினால் நீரும் சீழும் பங்டா என்னும் இரந்திரவழியாய் வெளிப்படும், அல்லதுகீழுக்கிறங்கி நாசித்துவாரத்தில் சென்றுவிடும் இந்தரோகம் இவ்விதமிருந்துமுடிவில்புரைவைக்கும், அதற்கு பிஸ்டியுலலாக்கிரிமேலிஸ் (Fistulalachrymalis) என்றுபேர். இந்தச் சஸ்திர சிகிச்சையால் கண்டிக்கவேண்டியது.

கஞ்சங்டைவா என்னும் யோகினிச் சவ்வின் ரோகங்கள்

DISEASES OF THE CONJUNCTIVA

சாதாரணஜலதோஷகண்ணோய். Common or catarrhal ophthalmia.) கண்ணிமையின் உட்பக்கத்திலும், கண்விழியின் முன்பக்கத்திலும்மூடியிருக்கிறகஞ்சங்டைவாஎன்னும் சளிச்சவ்வின் தாபிதத்துக்குச்சாதாரண கண்ணோய் என்றுபெயர். லக்ஷணங்கள்.—கண்ணில்காந்தலும், சூடும், வரக்ஷியுமிருக்கும்; தூம்பு விழுந்ததுபோல் அரிக்கும், ரத்தம்போல் கண் சிவந்திருக்கும். அந்தச் சிவப்பு மேலாக இருப்பதால், சவ்வைப்பிடித்து அசைத்தால், சுருண்டிருக்கிற ரத்தநரம்புகள் அசையும், வெளிச்சத்தைப் பார்க்க கூடாமையாய் நீர் வடிந்துகொண்டே யிருக்கும்; அது தண்ணி சீழ்ப்போல் இருந்து, வியாதி கோபித்தால், தளமாகி, ஒட்டிக்கொள்ளுகிற குணமிருப்பதாய் அகப்படும். காரணம்.—கண்ணில் எதாவது விழுதல், ஜீரண உருப்புகளின் விகற்பம், குளுங்காற்று ஆகிய இவைகளால் இந்தரோகம் பிறக்கின்றது. Sensation as of sand in eye. Intolerance of light. Vesselss superficial, moveable, tortuous, bright scarlet.

சிகிச்சை,— கண்ணோவுக்கு நமது வீட்டோர் செய்கிற கரேச் சிகிச்சையால், பார்வைக்கு மந்ததை யுண்டாக்குவது வழக்கம், கண்ணுக்கு வெப்பமருந்துகள் போட நினைக்கவேலாகாது. விரேசனம் செய்து வைத்து, போஸ்தகாய்க் கஷாயத்தாலாவது, அல்லது ரோகியின் இதவுக் கேற்றபடி உஷ்ண, சீதோ உதகத்தாலாவது, கண்ணைக்கழுவி, இராத்திரி காலங்களில், இமைகளின் ஓரங்களுக்கு, சிற்றுமணக்கெண்ணெயாவது, சிட்ரன் ஆயின்மென்ட் என்னும் களிம்பாவது தடவிக்கொண்டு வரவேண்டியது. கண்கூச்சல் அதிகமாயிருந்தால், வெளிச்சம் படவொட்டாமல், வாழையிலையையாவது, பச்சைத் துணியையாவது கண்ணுக்கு மரவுகட்டிவைக்கலாம். ரோகம் கோபித்திருந்தால், காடிக்கார ஜலத்தில் (1-கிறேன், ஜலம் 1-ஔன்ஸ். ஒரு துளி இரண்டி வேளையும் கண்ணில் விட்டுக்கொண்டு வரலாம். ரோகி, ரத்தப் பிரகிருதியுள்ள தேகமுடையவனாயும், சுரமும், சிரோ வேதனையும் பிரபலமாயும் இருந்தால், அடிக்கடி விரேசனம் செய்விப்பதில் சுகுணமுண்டாகும்; ஆனால் தேகப்பிரகிருதி மெலிருந்தால், க்ஷீணச் சிகிச்சை செய்வது தப்பிதம். விரோசனம் செய்வித்தபிறகு, நல்ல போசனம் கொடுத்து. அதிக வெளிச்சத்தில் வராமல் செய்து, படிக்காரஜலத்துவாலே (2-கிறேன்,

1-ஔன்ஸ் ஜலம்) கண்ணுக் கிட்டுக்கொண்டுவந்தால், அட்டைவிட்டு, பேதி மருந்து கொடுத்து, சிகிச்சை செய்வதைப் பார்க்கிலும் அதிக பிரயோஜனமுண்டு. படிக்காரத்தை இரும்புத்தகட்டின்மேல் பொரித்து, பழரசம் விட்டரைத்து, அதைக் கண்ணுக்குப் பற்றுப்போடலாம், ஆனால் கண்ணில் விழாமல் சூக்ஷித்துக்கொள்ள வேண்டியது. எரிச்சலுண்டாக்கிற மருந்துகளைக் கண்ணுக்குப் போட்டால் ரோகம் உக்கிரமடையும்; கற்றாழை சோற்றில், படிக்காரப்பொடித் தூவி, கண்ணுக் கொற்றிடமிடலாம். துணியை மடித்து, வெந்நீரில் நனைத்து, ஒருபுறம் சிற்றாமணக்கெண்ணெய் தடவி இரவில் கண்ணுக்குக் கட்டிக்கொண்டுவந்தால், ரோகிக்கு உபத்திரவமிராது. Blister, purge, leech; astringent collyrium.

நாட்பட்ட கண்ணோவுக்கு, (Chronic inflammation of the Conjunctiva.) உடம்புதேறும்படியாய் உள்ளுக்கு ஔஷதங்கள் கொடுக்கவேண்டியது. காதுக்குப்பின் பிளிஸ்டர் போடுவதிலும் சுகுணமுண்டு. பிரதிதினமும் இராக்காலத்தில் ஸிட்ரன் ஆயின்ட்மென்ட் என்னும் களிம்பை இமைகளுக்குத் தடவிக்கொண்டு வரவேண்டியது.

சீழ்ப்பற்றிய கண்ணோவு. (Purulent Ophthalmia.) இது பலத்த வியாதி. இதில் கண்ணீர் சீழ்ப்போல் வடியும். சிசுவுக்கு இந்த வியாதி காண்பதுண்டு. ஜநித்த 4-5-நாளையில் காணும். தாயாருக்கு வெள்ளை விழுகிற வியாதி இருந்தாலும் சரி, அல்லது, தந்தைக்குப் பிரமேகம் இருந்தாலும் சரி, அந்த விஷநீர் கண்களுக்குப்பட்டுஇந்த வியாதி பிறக்கின்றது. இதில், இமைகள் தடித்து கண் மூடியிருக்கும். கன்ஜங்டைவா என்னும் கண் ஜவ்வு தடித்து, அதிகமாய் சிவந்திருக்கும்; கண்ணீர் சீழ்ப்போல் வடியும்; சுரம் அநுசரித்திருக்கும்; நித்திரையிராது. இந்தவியாதியை, ஜாக்கிரதையாய் சூக்ஷிக்காவிட்டால், கார்னிய என்னும் ஜவ்வு மங்கலாகிவிடும்; அல்லது அதில் விரணம் காணும்; அல்லது, அது அழுகிப்போகும், உடனே தகுதியான சிகிச்சைசெய்தால் ரோமம் வசப்படும்.

சிகிச்சை.—கண்களைக் கழுவி சுத்தியாய் வைக்கவேண்டியது; படிக்கார ஜலம் [4-கிரேன்; 1-ஔன்ஸ் ஜலம்] கண்களுக்குப் பீச்சலாம். இமைகள் ஒட்டிக்கொள்ளாமல் எண்ணெய்த் தடவிக்கொண்டு வரவேண்டியது. இமைகளை வெகு ஜாக்கிரதையாய் நீக்கவேண்டியது. மலபந்தத்தை, லகு விரேசன மருந்துகள் கொடுத்து, கண்டிக்கவேண்டியது. தாருட்டியகாரி மருந்துகள் கொடுத்துக்கொண்டு வந்தால் மெத்த நன்மைசெய்யும், பெரியவர்களுக்கு இந்த வியாதிகண்டால் (Purulent Ophthalmia in adults) கான்ஜங்டைவா என்னும் ஜவ்வானது மெத்த சிவந்து தடித்திருக்கும். கண்ணீரில் சீழ்க்கலந்திருக்கும். தடித்த ஜவ்வுக்கு, கீமோஸிஸ், (Chemosis) (விழியூந்தல்) என்றுபேர். கண்ணில் எரிச்சலுடன் வேதனையும், தலைவலியும், சுரமும் துர்ப்பலமு மிருக்கும்; இமை தடித்து, பிகுவாயிருக்கும்; கண்ணைத் திறக்கச் சக்தியிராது. இதை ஜாக்கிரதையுடன் சிகிச்சை செய்யாவிட்டால், கார்னிய என்னும் ஜவ்வு ரணமாகிவிடும்; அல்லது அழுகிப்போகும். கண்ணுக்குள் தாபிதம் காண்பதுமுண்டு. சிகிச்சை.—நேத்திரத்து வாலைகளால் பீச்சி கண்ணைச் சுத்திசெய்து, காடிக்கார ஜலம், கண்ணில் விட்டுக்கொண்டு வரவேண்டியது. கீமோஸிஸ் குறைந்து வருகையில் துவாலையின் வேகத்தைக் குறைக்கவேண்டியது. நல்ல ஊட்டம்கொடுத்து, கண்ணிமைகளின் ஓரத்தில், ரசக்காரச்சிந்தூரக் களிம்பை இரவில் தடவிக்

கொண்டு வரவேண்டியது. துர்ப்பலத்துக்குத் தாருட்டியகாரி மருந்துகள் கொடுக்கவேண்டியது.

பிரமேஹ கண்ணோய். (Gonorrhœal Ophthalmia.) பிரமேகச் சீழ் கண்ணில்பட்டு இந்தவியாதி பிறக்கின்றது. இது மெத்த உக்கிர வியாதி, கீமோஸிஸ் பிரபலமாயிருக்கும், கண்ணீர்த் தடித்து அதிகமாய் வடியும், பிரபலசுர மனுசரித்திருக்கும். இது அசாத்திய வியாதி; பார்வை யிழந்துபோகும், அல்லது அதற்கு விகற்பமுண்டாகும். Great swelling of conjunctiva, causing 'chemosis', great pain and discharge; causes ulceration, or opacity, or sloughing of cornia.

சிகிச்சை.—ரோகியை இருட்டு வீட்டில் வைக்கவேண்டியது. தாருட்டியம் குறைகிற சிகிச்சை யிதற்குச் செய்யலாகாது. போஷணைக்குடைய போஜனமும், குவைனீன் முதலிய பலகாரி மருந்துகளும் கொடுப்பதில் சுகுணம் பிறக்கும். கீமோஸிஸ் அதிகரித்திருந்தால் அந்த ஜவ்வை நெடுக்கில் கீறிவிட்டு, வெந்நீர் ஒற்றிடம் கொடுக்கவேண்டியது. கண்ணை அடிக்கடி ஜலம் விட்டுக்கழுவி சுத்தியாய் வைக்கவேண்டியது. படிக்கார ஜலத்தால் (3-கிறேன் ; ஜலம் 1-ஔன்ஸ்) பீச்சி சுத்திசெய்து, காடிக்கார ஜலத்துளி விட்டுக்கொண்டு வருவதில் சுகுணமுண்டு.

எழுச்சிக் கண்ணோவு. (Scrofulous Ophthalmia.) கண்டமாலைச் சம்பந்த ரோகிகளுக்கு இந்தவியாதி காணும். 8-வயசுக்குட்பட்டக் குழந்தைகளுக்குக் காண்பது வழக்கம்; ஆனால் பெரியவர்களுக்கும் காணாமல் போகிறதில்லை. இதில் கண் மெத்தக் கூசும். வெளிச்சத்தைச் சுத்தமாய்ப் பார்க்க இடங்கொடாது. இமைகள் கெட்டியாய்ச் சுறங்கிக்கொண்டிருக்கும். கான்ஜங்டைவா என்னும் ஜவ்வில் அதிக சிவப்பிராது. கார்னிய என்னும் ஜவ்வினோரத்தில் வேர்க்குருபோல் சிறிய கொப்புளம் காணும். இந்தவியாதி வசப்பட நாட்செல்லும். Great intolerance of light; small opaque pimple at margin of cornia.

சிகிச்சை —நல்லபோஜனம், லகுவிரேசனம், தாருட்டியகாரிகள், மீன்நெய், குவைனீன், அயம், பரிசுத்தக்காற்று ஆகிய இவைகளைக்கொண்டு இந்தவியாதியை வசப்படுத்தவேண்டியது. கண் கூச்சலுக்குக் குளிர்ந்த ஜலம், பெல்லடோனா முதலியவைகள் போடலாம். இரண்டு கண்களுக்கும் பச்சிலைவைத்து, மறைவு கட்டிவைக்கவேண்டியது. நாள்பட்ட வியாதிக்கு, வைனம் ஓபை, அல்லது காடிக்காரஜலம் (1-கிறேன் ; ஜலம் 1-ஔன்ஸ்) விடலாம். இரவில் டில்யூடு சிட்ரன் ஆயின்ட்மென்ட் என்னும் களிம்பு இமைகளுக்குத் தடவிக்கொண்டு வருவதில் சுகுணமுண்டு. Good diet ; quinine ; Cod-liver oil ; blisters, astringent collyrium ; cover eyes.

அமரம். இமை எழுச்சி.—(Granular Conjunctiva.)—கண்ரெப்பையின் உட்புறம் சிவந்து, தடித்து, சதை வளர்ந்ததுபோல் இருப்பதற்கு அமரம் என்று பெயர். இந்தவியாதி நாள்பட விருந்தால், கருவிழி மங்கலாகி விடும். இந்தரோகத்துக்கு நமது ஜனங்கள் குரூரச் சிகிச்சை செய்து கண்ணைக் குருடாக்கி விடுவதுண்டு. முசுமுசுக்குயிலையைத் தேய்த்து, குங்குமத்தைவைத்து அழுத்துவது வீட்டுவழக்கம் ; அதனால் ரணம் அதிகமாகி பார்வை இழந்துப்போனவர்கள் அநேகர். இந்தவியாதி நாள்பட்ட கண்ணோவிலும், தீக்ஷண மருந்துகள் கண்ணோவுக்கு உபயோகப்படுத்துவதிலும் உண்டாகும். இது அதிக வேதனையைத் தரும். கண்ணை அசைப்பதில்

வருத்தமிருக்கும். சிகிச்சை.—இதற்குத் துரிசை நாள்தோறும், சதைவளர்ச்சிமேல் தேய்த்து, எரிச்சலடங்க, சிற்றாமணக்கெண்ணெய் தடவிக்கொண்டுவந்தால், நாள் பட்டு வசப்படும்; கண் ரெப்பையின்மேல், டிங்சர் ஆவ் ஐயோடைன் என்னும் திரவத்தைத் தடவிக்கொண்டு வரலாம். வேதனையுண்டாக்குகிற மருந்துகளை, கண்ணுக்குள் போடாமலிருப்பதே உத்தமம். உள்ளுக்குப் பலகாரி மருந்துகள் கொடுக்கவேண்டியது. இடம் விட்டு இடம் மாற்றுவதிலும் வெகு சுகுணம் பிறக்கும்.

சதைப்படர்த்தி. மாம்சப்படர்த்தி. பருவணிரோகம். நேத்திர மாம்சவிருத்திரோகம். சதை வளாத்தல், கறுதம். (Pterygium.) கடைக்கண் பக்கங்களிலிருக்கிற கண்ஜவ்வானது தடித்து, சிவந்து, சதைபோல்வளர்ந்து, மூலை கருவிழியோரமாய் விருத்தியாகிக்கொண்டுபோகிற வியாதிக்குச் சதைப்படர்த்தி என்றுபெயர். இது உபத்திரவ வியாதியல்ல, ஆனால், ஜவ்வு கருவிழிமேல் படர்ந்துவிட்டால், பார்வைக்கு மந்தமுண்டாகும். இதில் கருவிழிமேல் துர்மாம்சம் வளர்ந்து வராமலிருக்கிறவரையில் பயமில்லை, சிகிச்சையும் ஆவசியமிராது. ஒருவேளை பார்வையை மறைத்துக்கொள்ளும்படியாய் மாம்சம்வளர்ந்து வருமாகில், சதையை மத்தியில் துண்டித்துவிடவேண்டியது; அல்லது அந்தச் சதை கரையும்படியாய், காடிக்காரமாவது, துருசாவது வைத்துத் தேய்க்கலாம். இவைகளால் சிலவேளை பிரயோஜனமுண்டானபோதிலும், சிலவேளை அப்பிரயோஜனமாகி விடுவதுமுண்டு.

கார்னிய என்னும் ஜவ்விலுண்டாகிற ரோகங்கள்.

DISEASES OF THE CORNEA.

ஆணிஜவ்வின்தாபிதம். (Corneitis).—கார்னிய என்கிற கட்டிஜவ்வில் தாபிதம் கண்டால், கருவிழி சிவந்து மங்கலாகிவிடும்; சுற்றிலுமிருக்கிற வெள்விழியாகிய ஸ்க்ளிராடிக்கோட் ஜவ்வில் ரத்த நரம்புகள் பெருத்து பரவியிருக்கும். கார்னிய என்னும் ஜவ்வின் புரைகளின் மத்தியில் சீழ்க்கொள்வதுமுண்டு; அல்லது, கார்னியாவில் ரணம் பிறப்பதும் வழக்கம். சிகிச்சை.—அட்டைவிட்டு, ரசம் உள்ளுக்குக் கொடுத்து, கண்ணுக்குஒற்றிடமிட்டு இந்த வியாதியை வசப்படுத்தவேண்டியது. உஷ்ணகாரி மருந்துகளைக் கண்ணில் விடலாகாது. டர்பன்டைன் உள்ளுக்குக் கொடுக்கும்படி கண்டிருக்கிறது.

கண்பூ (Opacity of the Cornea.) இதில் இரண்டு ஜாதிகளுண்டு; 1-வது.—ஆணி ஜவ்வின் புரைகளின் மத்தியமாய்ப் பசைச் சுரந்து, அந்தப் புரைகள் ஒட்டிக்கொண்டு இந்தரோகம் காணுகின்றது. இதில் கருவழியில் காணுகிற மங்கலானது அல்பமாயும், பரவியுமிருந்தால், நீர்ப்படலம், (nebula) என்றும், மங்கலானது, தடித்து, உருதியாயிருந்தால், சுக்கிலபடலம், (Albugo) என்றும் சொல்லப்படும். சிலவேளை, மேற்படி படலத்தில் ரத்த நரம்புகள் படர்ந்து, கார்னியா சிவந்து, சதைபோலாகிவிடும், அதற்குச் சதைப்படலம், (Pannus) என்று பேர். 2-வது. கார்னியாவில் ரணங்கண்டு, சொஸ்தமாகி வடுவு காணுகிறதற்கு, ஆணிப்பூ (Leucoma) என்று பேர். பெரியம்மையில், முத்து கண்ணில் கண்டால், இந்தரோகம் பிறக்கும். சிகிச்சை.—முதல் ஜாதி கஷ்டசாத்தியம், சிகிச்சைக்கு வசப்படுவதுமுண்டு. மற்றொன்று அசாத்தியம் கண்ணில் பூபடுவதற்கு உடம்பு தோ உள்ளுக்கு நன்னாரிவேர், அயம் முதலிய மருந்துகள் கொடுத்து, கண்ணில் வைனம் ஒபையென்னும் திரவத்தில் 1-துளி விட்டுக்கொண்டு வரவும். காதுக்குப்பின் பிளிஸ்டர் போட்டு ரணமாக்குவதிலும் சௌக்கியமுண்டாகும். சிற்றாமணக்கு முத்தை, முலைப்பாலிலிழைத்து, கண்ணிலிட்டுக்கொண்டு

வர புகைச்சல் மாறும் நந்தியாவட்டப்பூ ரசம், கிளாப்பூ ரசம் ஆகிய இவைகளையும் கண்ணில் விட்டுப் பார்க்கலாம். கண்ணில் ரஸபஸ்மத்தை ஊதிக்கொண்டுவருவதிலும் சுகுணம் பிறக்கும்.

ஒனிக்ஸ் (Onyx.)—கார்னிய ஜவ்வு புரைகளின் மத்தியில் சீழ்க் காண்பதற்கு ஒனிக்ஸ் என்றுபேர். இது சாதாரண சிகிச்சையால் மறைந்துவிடும்.

க்ஷதசுக்கிலம். (Ulcers of the Cornea.) கார்னியாவில் ரணங்கண்டால் அதற்கு க்ஷதசுக்கிலம் என்றுபேர், அதை கண்ணுக்குச் செய்கிற வழக்கமான சிகிச்சைகளைக் கொண்டு வசப்படுத்த வேண்டியது.

குந்தம், (Staphyloma) விழியின் முன்புறம் முன்னுக்குத் தள்ளிவிடுவதற்குக் குந்தம் என்றுபேர், இதற்குச் சிகிச்சையில்லை.

வார்த்தீகசுக்கிலம்.(Arcus Senilis.)கார்னியாவைச்சுற்றிலும் காணுகிற வெள்ளைநிறமான படலத்துக்கு, வார்த்தீக சுக்கிலமென்று பெயர். இது வயது சென்றவர்களுக்குக் காண்பது வழக்கம்.

ஸ்களிராடிக்கோட் என்னும் ஜவ்வின் வியாதிகள்.

Diseases of the Sclerotic.

வெள்விழிதாபிதம். (Sclerotitis.)—இதில் கண்ணில் சிவப்புணடு, வேதனை அதிகம், எலும்புகள் குடையும், சுரமிருக்கும்; சிவந்திருக்கிற ரத்த நரம்புகள் ஆழத்தில் நேராய் கார்னியாவுக்குப் பாய்ந்திருக்கும். Great pain; slight redness; aching of orbital bones; fever.

சிகிச்சை.—இதற்கு அட்டைவிட்டு, பேதிமருந்துகளும், ரஸமும், அபினியும், ஐயோர்டைட் ஆவ் பொடாஷியமும், பாத அவகாகமும், கொடுத்து, சிகிச்சை செய்யவேண்டியது; கண்களுக்கு, ஈரமில்லாத உஷ்ண ஒற்றடம் கொடுக்கலாம். Leech, purge, potas, iodid., cal., and opium; foot-bath; dry warmth locally.

கிஷ்ணமண்டல ஜவ்வின் ரோகங்கள்.

Diseases of the Iris.

கிஷ்ணமண்டல ஜவ்வின் தாபிதம். (Iritis.) இதில் வேதனை அகத்திலிருக்கும்; கிஷ்ணமண்டல ஜவ்வின் நிறம் மாறிவிடும். கிஷ்ணமண்டலத் துவாரம் விருதமாயகப்படும், பார்வை மந்தப்படும். சிகிச்சை.—ரோகியை இருண்டவிடத்தில் வைத்து, பெல்லடோனவைக் கண்சுற்றிலும் தடவவேண்டியது. ரசபஸ்மத்துடன் அபினியைச் சேர்த்துக் கொடுக்கலாம். ஐயோடைட் ஆவ் பொடாஷியம் நல்லது. பிளிஸ்டர் போடுவதிலும் சுகுணம் பிறக்கும். பத்திய போஜனத்தில் வைக்கவேண்டியது.

கிஷ்ணமணியிலுண்டாகும் ரோகங்கள்.

Diseases of the Crystalline Lins.

காசம்.—அந்திரம். வெண்காசம், நேத்திர வெண்படல ரோகம். (Cataract).—கிஷ்ணமணியானது மங்கலாகி வெள்ளையாய்ப் போகிற ரோகத்துக்குக் காசம் என்று பெயர். இதில் பார்வை தெரியாது. இந்த வியாதி மெதுவில் வர்த்திக்கும், ஆரம்பத்தில், கண்தாரைக்குப் பின், நீலவர்ணமாய்க் காணப்படும்; ரோகிக்குக் கண்முன் திரைக்கட்டினதுபோல் அகப்படும். சாயரக்ஷையில் பார்வை கொஞ்சம் செவ்வையாய்த் தெரியும், வியாதி முற்றிப்போனால், மங்கலாயிருக்கிற மணியானது சுத்தவெள்ளை நிறமாகிவிடும்; பார்வை பூர்த்தியாய்த் தெரியாது, பகல், இரவு என்கிற வித்தி

யாச மாத்திரம் தெரிந்துகொள்ளக் கூடும். சிகிச்சை,—இந்த ரோகத்துக்கு மருந்துகளுபயோகப்படுத்துவது விபர்த்தம், ஔஷதங்களால் சாத்தியப்பட மாட்டாது. சஸ்திரச் சிகிச்சைக்கு வசப்படும். இதற்குச் செய்யும்சஸ்திரப் பிரயோகத்தில், காசமெடுக்குதல், தாழ்த்தல், வற்றுவித்தல் என மூன்றுவிதப்படும். அவைகளை, யாழ்ப்பாணத்தில் அச்சிட்ட ரணவைத்திய புஸ்தகத்தில், விபரமாய்க் கண்டிருப்பதை வாசித்துத் தெரிந்து கொள்ளவேண்டியது.

கண் கூசுதல். (Week sight.) கண் முன் மினிமினிப் பூச்சு பறப்பதுபோல் தோற்றுதல், மந்தப்பார்வை, வெளிச்சம் பார்க்கக்கூடாமை, சிறிய எழுத்துகளைப் பார்ப்பதில் கண் கலங்கிச் சிதறுதல் ஆகிய இவைமுதலிய குறிகள் கண்ணின் துர்ப்பலத்தினுல் காணுகின்றன. சுகானுபோகம், உட்கார்ந்து நாட் கழிக்குதல், வெகுநேரம் எழுதுதல், சிறு வஸ்துக்களை என்னேரம் பார்வையிடுதல், இவை முதலிய காரணங்களால் இந்தரோகம் பிறக்கின்றது. வியாதி அற்பமாயிருந்தால், ஒன்றையும் பார்க்காமல், சற்று நேரம் கண்ணை மூடிக்கொண்டிருக்கும்படிச் செய்யவேண்டியது. பால்லிய முதற்கொண்டிருந்தால், உள்ளுக்கு மருந்துகொடுத்து தேகதாருட்டியம் வரும்படிச் செய்தால் ரோகம் நீங்கும். சஹஸ்த்திர தாராமஞ்சனம், இடம் விட்டு இடம் மாற்றுதல், கண்ணுக்குக் குளிர்ந்த ஜலம் தாரையாய் விடுதல் ஆகிய இவைகளாலும் சௌக்கியமுண்டாகும்

விழி கண் குருடு. திமிரம். (Amaurosis) நேத்திர நரம்பாவது, மூளையாவது வியாதிகொண்டு இந்தரோகம் பிறக்கின்றது. திமிரம் என்றால் இருள் என்று பெயர். இருளடைந்துப் போகிற குருடு பார்ப்பவர்களுக்கு நேத்திரம், நன்ருயிருப்பதுபோல் காணப்படும். ரோகியானவன் கண்ணைத் திறந்துகொண்டு, மேல் பார்வையுற்று, ஒன்றின்மேலும் திருஷ்டியை வையாமல் நடப்பான். கண்தாறை விறிந்திருக்கும். இது அசாத்திய வியாதி. அற்ப காரணங்களாற் பிறந்தால் சிகிச்சைக்கு வசப்படும்; சிலருக்கு வியாதியை விளவித்த காரணத்தைக் கண்டறிந்து, சிகிச்சை செய்தபோதிலும், நீங்குவது பிரயாசை. நரம்பு துற்பலத்தால் கண்டால் அயம், குவைனு, நல்ல ஊட்டம், சமுத்திர தீரவாஸம், இவைகளால் சாத்தியப்படும். எட்டிக்கொட்டைச்சத்தை உபயோகித்துப் பார்க்கலாம். காதுக்குப்பின் புண்ணுக்கசசொல்லிக் கண்டிருக்கிறது. அடிக்கடி விரேசனத்துக்குக் கொடுப்பதிலும் நன்மையுண்டு.

மாலைக்கண். இராக்குருடு. (Night blindness). பட்டப்பகலில் கண்தெரிந்து இருளடைந்து வரவரப் பார்வை அடங்கிப் போவதற்கு மாலைக்கண் என்று பெயர். திமிரம் என்கிற ரோகத்துக்குச் சொன்ன சிகிச்சாவிதியை, இதற்கும் செய்ய உதவும்.

கிட்டப்பார்வை. (Short sight) கானிய ஜவ்வானது, கிரமத்துக்கு மிஞ்சி, அதிகமாய் முன்னுக்கு வளைந்திருந்தால், எழுத்துகளைக் கிட்ட வைத்துப் பார்த்தாலொழிய, கண்களுக்குத் தெரியாது. இது ஜன்மவியாதி; சிறுவயதில் எழுத்துக்களைத் தூரமாய்வைத்துப் படிக்கும்படி வழக்கப்படுத்தவேண்டியது இதற்கு இருபுறமும் பள்ளமாயிருக்கிற மூக்குக்கண்ணுடியைப் (Double concave glass.) போட்டுக்கொண்டால் சாதாரண தூரத்திலிருந்து வாசிக்கலாம்.

தூரப்பார்வை. தூரதிருஷ்டி. சாலேசரம். வெள்ளெழுத்து (Long sightedness.) கண்ணில் நீர்வற்றி, கார்னிய உள்ளடங்கி, இந்

தவிபத்து நேரிடுகின்றது. வயது சென்றவர்களுக்கு, ஓர் முதற்குறி. தூர வஸ்துக்கள் கண்களுக்குச் செவ்வையாயகப்படும். இதற்கு இருபுறமுத மேடாயிருக்கிற மூக்குக் கண்ணுடியை (Double convex glass) போட்டுக்கொள்ளவேண்டியது. எழுத்துகள் பெரியதாய்க் காண்பிக்காமல் தம் சுவரூபமாய்க் காண்பிக்கிற சுலோசனம் சிரேஷ்டம்.

கர்ன ரோகங்களும் காயங்களும்

DISEASES AND INJURIOUS OF THE EAR.

Foreign substances in the ear —விளையாட்டுப் பிள்ளைகள், புளியங்கொட்டை, குண்டுமணி முதலியவைகளில் ஏதாவது காதில், போட்டுக்கொண்டால், பீச்சாங்குழலால் வெந்நீர்விட்டுப் பீச்சி எடுத்துவிடவேண்டியது. இப்படிச் செய்தும் ஒருவேளை வாராவிட்டால் சும்மாய் விட்டுவிடவேண்டியது. கொஞ்சநேரம் சென்றபிறகு அது தன்னிச்சையாய் வந்துவிடும்; அல்லது மறுபடியும் பீச்சிப்பார்க்கலாம் Remove by syringing the ear with warm water.

Accumulation of wax.—காதில் அதிகக் குரும்பி அடைந்திருந்தால் செவிடு காணும். அதை பீச்சாங்குழலில் வெந்நீர்விட்டுப் பீச்சி மெதுவாய் வெளிப்படுத்தி விடவேண்டியது. Syringe.

சீழ்க்காது. (Otorrhœa.)—குழந்தைகளுக்குக் காதில் சீழ் வடிதல் சாதாரணம். தேஹசௌக்கியம் குறைந்து இது உண்டாகிறது. கரப்பான், சிரங்கு முதலிய பலஹீனப்படுத்துகிற ஜாட்டியங்களில் சீழ்க்காது தொடர்வது வழக்கம். சிகிச்சை.—இதற்கு வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, போல்டீஸ் போடவேண்டியது. பிரதிதினம் காதைச் செவ்வையாகக் கழுவி, சீழை எடுத்துவிட்டு, படிக்கார ஜலம் காது நிறையவிட்டு, 2-3-நிமிஷம் வரையில் வைத்திருந்து, பிறகு ஊற்றிவிட்டு, பஞ்சியால் காதை அடைத்துவைக்க வேண்டியது. வில்வப்பழச் சதையை நல்லெண்ணெயில் காய்ச்சி, காதுக்கு விட்டுக்கொண்டு வரலாம். உடம்பு தேரஉள்ளுக்கு மருந்து கொடுத்துக்கொண்டு வராவிட்டால் வசப்படாது.

காதெழுச்சி. (Polypus).—காதில் துர்மாம்சம் வளருகிறதற்கு, காதெழுச்சி என்று பெயர், இதில் சீழ் வடிந்துக்கொண்டிருக்கும். இப்படி வளருகிற துர்மாம்சத்தைக் குறடால் பற்றிப் பிடுங்கிவிட்டு, படிக்காரஜலத்தால் காதைக்கழுவி, காடிக்காரத்தை சிலாக்கில் தொட்டுக்கொண்டு, வேரின்மேல் வைத்துத் தேய்த்து, அதை நிர்மூலப்படுத்தி விடவேண்டியது, இல்லாவிடில் அது மறுபடியும் கிளைற்றக்கொண்டே யிருக்கும். Loss of hearing ; a tumor visible in meatus. *Treatment.*—Extract with polypus forceps.

காதின் தீவ்விர தாபிதம். (Acute Otitis).—குளிர்ச்சியினாலும், பலவந்தத்தினாலும், காதுக்குள் தாபிதமெழும்பும். இதில் ஜடுதியில் காதில் குத்தலும், கீங்கார துவனியும் காணும். காது கேழ்வியில் மந்ததையுண்டாகும் ; சுரமனுசரித்திருக்கும். முதல்காது சிவந்து, வீங்கி, வேதனையோடு, உளர்ந்திருக்கும். வியாதி பிரபலப்பட காதுக்குள்சீழ்க்காணும். சிகிச்சை.—அட்டைவிட்டு, வெந்நீர் ஒற்றிடம்கொடுத்து, போல்டீஸ் போட்டு, விரேசனமருந்துகள் கொடுத்து வசப்படுத்தவேண்டியது. இவைகளால் குறிகள் சமனப்படாவிட்டால், காதுக்குப் பின்னிருக்கிற எலும்பைக் கீறி சீழைவெளிப்படுத்தி விடவேண்டியது.

காதுவலி. செவிநோய். (Earache ; Otalgia.) இதில் வேதனையுண்டு ; அந்தவேதனை சிரசுக்கும், முகத்துக்கும் வியாபிக்கும். இதில் சுரமிராது.

இது விட்டு விட்டு வந்து போராடும். சொத்தைப்பல்லினால் இந்தரோகம், காண்பதுமுண்டு. சிகிச்சை.—சொத்தைப்பல்லினாலே உண்டானால் அதைநீங்கிவிடவேண்டியது. விரேசனமருந்துகளும், குவைனென், அயம்இவைகளையும் கொடுத்து ரோகத்தை கண்டிக்கவேண்டியது. நாபிபாவனத்திரவத்தைக் காதுக்குப் பின்னால் பூசலாம். வெள்ளைப்பூண்டுரசம்விடுவதும், தேங்காயெண்ணெயில் அபினியைக் கரைத்துவிடுவதும், சாம்பிராணியை நல்லெண்ணெயில் காய்ச்சிவிடுவதும், சப்ஜாயிலை ரசத்தைப் பிழிவதும், மருளை வதக்கிரசம் பிழிவதும், நாட்டுவழக்கம்.

செவிடு. (Deafnees).—அனேககாரணங்களால் காது கேளாமற்போகும். காதின் உட்ஜவ்வு தடித்துப்போகுதல், அல்லது கிழிந்துப்போகுதல், குறும்பி அதிகமாய்ச் சேர்ந்திருக்குதல், நடுக்காதிலிருந்து தொண்டைக்குப் போகிற குழல், சைத்தியத்தினாலாவது, அல்லது வேறுகாரணத்திலாவது அடைந்துப்போகுதல், மூளை, கேழ்விநரம்பு, நடுக்காது, உட்காது ஆகிய இவைகளில் வியாதிகாணுதல் ஆகிய இவைமுதலியவைகளால் செவிடு பிறக்கும். வியாதியை விளைவித்த காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சைசெய்யவேண்டியது. அற்பகாரணத்தால் உண்டாகில், சாத்தியப்படும். காதுக்குள்ளிருக்கிற தாதுக்கள் கெட்டுகண்டால் அசாத்தியரோகமென்று விட்டுவிடவேண்டியது.

முகத்திலும், மூக்கிலும் காணுகிற ரோகங்களும் காயங்களும்

DISEASES AND INJURIES OF FACE AND NOSE.

கிரஹணதோஷம். (Hare-lip).—சிசு கருப்பையிலிருக்கும்போதே மேலுதடானது செவ்வையாய்க் கூடாமலிந்த ரோகம் பிறக்கின்றது. முசலுத்டைப்போல் பிறிந்திருக்கும். சிலவேளை கண்ணத்தெலும்புகளும் விடைவு பட்டிருப்பதுமுண்டு. சிகிச்சை —விடைவுபட்டிருக்கும் ஸ்தானத்திலிருக்கிற சர்மத்தை இரண்டு பக்கமும் அறுத்துவிட்டு, பிறகு இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து பட்டுக்கயிற்றால் சுற்றிக் கூட்டி வைக்கவேண்டியது. பல் முளையும்போது இந்தச் சஸ்திரச் சிகிக்சை செய்யலாகாது. 3-அல்லது 5-ம்—நாள் ஊசிகளை எடுத்துவிட்டு பிளாஸ்திரியால் உதடுகளைச் சேர்த்து வைக்கவும். Congenital arrest of development and consequent fissure on one or both sides of the septum of the upper lip. Sometimes extends through the hard or even the soft palate into the nose. *Treatment.*—Dissect integument from each side of the fissure ; pass needles through at short distances ; twist silk round them, so as to keep raw surfaces in contact. Draw the cheeks forward, and keep them there with long strips of adhesive or isinglass. plaster, This operation must not be performed during dentition. In cases of double hare-lip, operate on both sides at once, and pass needles through septum. If front teeth and alveolus project so as to render the success of the operation doubtful, remove them withthe bone nippers.

கன்னப்புத்து. (Cancrum Oris.) இந்தநோய் பெரும்பாலும் குழந்தைகளுக்கு உண்டாகும் உதட்டிலாவது, கன்னத்திலாவது, சிறு விரணமாயுண்டாகும். சாம்பல் நிறமாய் ஓரங்கள் கறுத்திறுக்கும். சிலருக்கு ஆரம்பிக்கும்போது ஒருவிதமான நீர் வடியும் ; முகம் வீங்கும் : வாய் நாறும் ; ரத்த

மும் உமிழ்நீரும் சேர்ந்து வாயிலிருந்து வடியும். வியாதி பிரபலப்பட விரணத்திலழுகலுண்டாகும்; பற்கள் விழுந்துவிடும்; ஜந்நி காணும்; துர்ப்பலம் மேலிட்டு மரணம் சம்பவிக்கும். Cancrum Oris occurs most frequently in ill-fed, delicate children, afterdibilitating disease, in the from of a shallow ulcer, with dirty, ash-coloured surface. Symptoms of salivation ; patient soon sinks into a state of typhoid and dies.

சிகிச்சை.—மலக்கிரமத்தை அநுசரித்து, குவைனைன், குளோரேட் ஆவ் பொடாவ்ஷ், நல்ல ஊட்டமும், ஒயின், முதலிவைகள் கொடுக்கவேண்டிடியது. விரணத்தின்மேல், கிரியசோட், துரிசு, கார்போலிக் ஆஸிட், காடிக்காரம் இவைகளிலொன்றைத் தடவிக்கொண்டு வரவேண்டியது. இவைகளால் வியாதிசமனப்படாவிட்டால் நைட்ரிக்ஆஸிட் என்னும் திராவகத்தை வைத்துத்தேய்க்கவேண்டியது. Clear alimentary canal; good diet quinine and iron or chlorate of potash;stimulating lotions,or strong nitric acid.

Foreign bodies.—நாசியில் புளியங்கொட்டை, குன்றுமணி முதலிய ஏதாவது போட்டுக்கொண்டால், சிலாக்கை வளைத்தாவது, குறிம்பியெடுக்கிற கருவியினாலாவது, அதை எடுத்து விடவேண்டியது. ஒருவேளை யெடுக்கப் பிரயாசையாயிருந்தால் தொண்டைக்குள் தள்ளிவிடலாம். Remove by bent prob or small scoop.

நாசா அரிசிஸ். மாம்ச பீனசம். (Nasal Polypus.).—நாசித்துவாரத்தில் காணுகிற துர்மாம்ச வளர்த்திக்கு நாசா அரிசிஸ் என்று பேர். இதில் நாலு ஜாதிகளுண்டு. சாதாரணமாய்க் காணப்படுகிறது நுங்குபோலிருக்கும். இரண்டாவது தண்ணீர் நிறைந்த கொப்புளங்கள் போலிருக்கும். மூன்றாவது, பாலுண்ணியைப்போலிருக்கும். நான்காவது புத்துப்போலிருக்கும். லக்ஷணங்கள்.—மூக்கடைப்பு, ஜலதோஷம் உண்டு. வியாதியில்லாத மூக்கை அடைத்து, வியாதிகொண்ட மூக்கால் சீந்தினால் அந்தத் துர்மாம்சம் வெளிக்குவரும். ஒன்றுக்கு மேல்பட்டு இருப்பதும் வழக்கம். அதைக்கண்டித்து எடுத்துவிட்டால் மறுபடியும் காண்பதுண்டு. சிகிச்சை.—சிலாக்கினால் அடியைக்கண்டு கொண்டு, இடிக்கியை விட்டு, அந்தஸ்தானத்தைப் பிடித்துக்கொண்டு திருகிப் பிடுங்கிவிடவேண்டியது. Cannot breath through the nostril. Tumor visible. *Treatment.*—Extract with polypus forcops.

பீனசம். சிராபீனசம், (Ozæna) நாசியிலிருந்து துர்வாசனையுடைய சீழ்வடிதலுக்கு பீனசம் என்று பேர்; இதில் பலசாதிகளுண்டு. சிகிச்சை.—வெந்நீரினாலாவது குளோரைட்ஆப் ஸோடியம் என்னும்சுண்ணாம்பு கரைத்த ஜலத்தினாலாவது பீச்சாங்குழலால் பீச்சி மூக்கைச் சுத்திசெய்து சிட்ரன் ஆயின்ட்மென்ட் யென்னும் களிம்பை இரகால் நாசிக்குள் நன்றாய்த் தடவிக்கொண்டு வரவேண்டியது; மீன்னெய், ஐயோடைட் ஆப் பொடாஷியம், முதலிய மருந்துகள் கொடுத்து தேக சவுக்கியத்தைப் பிறப்பிக்கவேண்டியது. Fœtid discharge from nose. *Treatment.*—Syringe with warm water or ch loride of lime. Apply citrine ointment. Dark, Iodide of Potassium, Codliver Oil to improve health.

தந்தரோகங்கள்

AFFECTIONS OF THE TEETH.

Lancing of the gums—குழந்தைகளுக்குப் பல்முளையும்போது, ஈறு வீங்கி, அதிக வேதனையைப் பிறப்பித்தால், ஈறைக் கத்தியால் கீறிவிட

வேண்டியது. நெல் முனையால் ஈறை ரத்தம்வரத்தேய்த்துக் காயம்படுத்தி விடுவது வீட்டுவழக்கம்.

சொத்தைப்பல். புழுப்பல். (Caries of teath.) இதில் சகிக்கக்கூடாத வேதனையிருக்கும்; பல்லின்மேல் பதார்த்தமெல்லாம் கரைந்து, நடுவிலிருக்கிற பள்ளம் காணப்படும். இது உடம்பிலெடுத்த வியாதி. சிகிச்சை.—தகுந்த ஆயுதங்களால் சொத்தையெல்லாம் மெதுவில் நீக்கிவிட்டு, சன்ன தங்கரேக்கினலாவது வெள்ளி, தங்கம் இவைகளின் பொடியும், இரசமும் கலந்த பசையினலாவது, பள்ளத்தை அடைத்துவிடவேண்டியது. பல்லுள் நரம்புகளிருக்கும் பள்ளம்வரையில்சொத்தைவியாயித்திருந்தால்,பல்லுணர்ச் அற்றுப்போகும்படி நாம்பில் படக் கடுகளவான பஞ்சுத்திரளை, கிறியாசோட் என்னும் மருந்தில் நனைத்துப் பள்ளத்தில் வைத்து அடைத்து, பிறகு ரூமி மஸ்தகி வார்னீஷில் பஞ்சுத்திரனையை நனைத்து, அதன்மேல் மூடிவிட வேண்டியது. அபினியும் கற்பூரமும் சேர்த்து உண்டைசெய்து சோத்தைப் பல்லில் வைத்தால், வேதனை கொஞ்சம் தணியும்.

தந்தசூலை. பல்வலி. (Toothache.) பல் சொத்தை விழுந்து அதின் பள்ளம் வெளிகண்டு, அதில் ஜலம், காற்று முதலியவைகளில் எதாவது பட்டுத் தாபிதம் கொண்டால், சகிக்கக்கூடாத வேதனை யெடுக்கும்; ஈறு வீங்கி தாபிதம் கொள்ளும்; வியாதி நீடித்தால், பல்லின் வேரில் சீழ்க்கொண்டு, கட்டி யுண்டாகும். சிகிச்சை.—பல் உபயோகமற்றதாய் இருந்தால் அதைப் பிடுங்கிவிடுவதே உத்தமம்; உபயோகத்துக்கு வரும்படியிருந்தால், பள்ளத்தைச் செவ்வையாய்ச் சுத்திசெய்து கிறியாசோட் என்னும் மருந்தை வைக்கவேண்டியது. சுரமிருந்தால் மருந்து கொடுத்து அதைக் கண்டிக்கவேண்டியது. தாடையின்மேல் வெந்நீர் அல்லது உப்பு ஒற்றிடம் கொடுத்து, போல்டீஸ் கட்டினல் சுகுணந்தரும். அபினியைத் தடவலாம். அக்கிரா காரம் அல்லது சுக்கு இவைகளில் ஒன்றை மெல்லலாம். ஈறு கொதிப்பு, ஸ்பரிசநரம்பின் வியாதி, வாதரோகம், பல்லின் வேர் தடித்துப்போகுதல் ஆகிய இக்காரணங்களாலும் பல்வலி பிறக்கும். ஈறு கொதிப்புனல் கண்டால், அதைக் கீறிவிடவேண்டியது. வேலம்பட்டைக் கஷாயத்தை கொப்பளித்து, அக்கிராகாரத்தை வாயிலடிக்கிக்கொண்டால், சுகுணம் பிறக்கும். நரம்பைப் பற்றியதற்கு, குவைனு கொடுக்கவேண்டியது. வாதத்தைப் பற்றியதை, கால்சிகம், நவக்ஷாரம், ஐயோடைட் ஆவ் பொடாசியம், இவைகளைக்கொண்டு வசப்படுத்தவேண்டியது.

பல் பிடுங்கல். (Extraction of teeth.) இதில் கொஞ்சம் பழக்கம் வேண்டியது. இல்லாவிட்டால் அபத்தம் சம்பவிக்கும். நல்ல ஆயுதமிருந்தால், சுலபமாய்ச் செய்துவிடலாம். இதக்கு குறடு, மிண்டி, திருக்கி என்னும் கருவிகளுண்டு. இவைகளுள் குறடே தற்காலத்தில் சாதாரணமாய் உபயோகிக்கப்படுகின்றது.

பல்காறை.—(Tartar.) பல்விற் காறை பிடித்தால், பல்லுக்கு ஊனம், சீக்கிரத்தில் பல் ஆடிவிடும். அதைச் சுறண்டி யெடுத்து விடவேண்டியது. பல்லைச் செவ்வையாய்த் துலக்கிக்கொண்டுவந்தால் காறை பிடியாது.

பல்லரணை. தந்தவித்திருதி. (Gum-Boil.) பல்லின் வேர் அடங்கிய பள்ளத்தில் சீழ்க்கொண்டால், அந்தச் சீழ் ஈறுவழியாக வெளிப்பட்டு விடும்; சிலவேளை கன்னத்தில் புரைவைத்து, அதின் வழியாய்ச் சீழ் வெளிப்படுவதுமுண்டு. இந்தச் சாட்டியத்தைப் பராமுகஞ்செய்து, தகுந்த சிகிச்சை சீக்கிரத்தில் செய்யாவிட்டால், வியாதி பிரபலமாகி, எலும்பைத் துளை

த்துவிடும். சொத்தைப்பல்லால் இந்தரோகம் காண்பது வழக்கம்.—சிகிச்சை.—இதற்கு ஒற்றிடம் கொடுத்து, சீழ்க்கண்ட உடனே, கீறி வெளிப் படுத்திவிடவேண்டியது. பல்லில் சொத்தை அதிகமாய் இருந்தால் அதைப் பிடுங்கி விடவேண்டியது.

தொண்டையில் காணுகிற ரோகங்கள்

DISEASES OF THE FAUCES, TONSILS, AND UVULA.

சயித்தியக்கட்டி (Tonsilitis. Quinsy.) தொண்டையில் இருபுறமுமிருக்கிற சோளமானது வீங்கி தாபிதங் கொண்டால், அதற்குச் சத்தியக் கட்டி என்பது வழக்கம். லக்ஷணங்கள்.—இதில் சுரம், தலைவலி, இருக்கும்; விழுங்குவதில் பிரயாசையுண்டு; கட்டியுண்டாகிற ஸ்தானம் சிவந்து வீங்கி, அதிக வேதனையெடுக்கும். சிகிச்சை.—இதற்கு வெளிக்கும் போல்டீஸ் போடவேண்டியது. மலங்கழியும்படி பேதிக்குக்கொடுக்கவேண்டியது. உஷ்ணகுணமுள்ள நீரால் வாய் கொப்புளிக்கவேண்டியது. கட்டி வளர்ந்து, சுவாசத்துக்குத் தடையுண்டாவதாய் இருந்தால், அதைக் கீறி, சீழிருந்தால் வெளிப்படுத்திவிடவேண்டியது. Fever, enlargement of tonsil, dysphagia. *Treatment.*—Pugatives, salines, low diet, gargles, poultice to front of neck, Perhaps, scarify tonsil,

நாள்பட்ட சயித்தியக்கட்டி. (Chronic Enlargement of the Tonsils. அடிக்கடி தாபிதம் காணுவதினுல், இந்தக்கட்டி வீங்கிவிடும்; அதனுல் விழுங்க பிரயாசையாயும், குரல் கம்மியும், கேழ்வி மந்தமடைந்தும், நித்திரையில் சுவாசம் இரைச்சலுற்றும் இருக்கும். சிகிச்சை.—இதற்குமுதல் அயம், மீன் நெய் முதலியவைகளால் தேகதாருட்டியத்தை வர்த்திப்பித்து, மலசாதிகளைக் கிரமத்தில் வைக்கவேண்டியது. துவர்ப்புள்ள ஜலத்தால் வாய் கொப்புளிக்கச் செய்யவேண்டியது. 40-கிறேன், காடிக்காரத்தை, 1-ஔன்ஸ் ஜலத்தில் கரைத்து, ஸ்பஞ்சிற் தோய்த்து, பிரதிதினமும் வீக்கத்திற் தடவைரவேண்டியது. வெளிக்கு இரசக்களிம்பாவது, ஐயோடைன் தைலமாவது பூசலாம். இவைகளால் அனுகூலமில்லாவிட்டால், கட்டியில் ஒரு துண்டு சீவி எடுத்துவிடவேண்டியது.

உண்ணாக்கு வளர்த்தி. (Enlargement of the Uvula.) உண்ணாக்கு வளர்ந்திருந்தால் அது தொண்டையில் குற்றி, இருமலும், கபமும் உண்டாகும். சிகிச்சை.—சயித்தியக் கட்டிக்குச் சொல்லிய சிகிச்சையே இதற்குஞ் செய்யவேண்டியது. அதில் சுகுணம் அகப்படாவிட்டால், அதின் நுனியை கொஞ்சம் கத்தரித்துவிடவேண்டியது. வெள்ளுள்ளி ரசத்தை மெழுகு கரண்டியில் விட்டு, அதை உண்ணாக்கில் வைத்து எடுப்பது, நாட்டு வழக்கம். Astringent gargles, or caustics or, lastly, snip off the tip with scissors.

Foreign bodies in the Pharynx. தொண்டையிலாவது, குரல்வளையின் வாயிலாவது, இரைக்குழலிலாவது, எதாவது வஸ்துவு பிரவேசித்தால், இருமலும், மூச்சுத்திணறலும் உண்டாகும்; இவைகளை எடுக்காதிருந்தால், குரல்வளையில் வலிகண்டு, சுவாஸபந்தனமுண்டாகி ஆள் இறந்துவிடுவான். சிகிச்சை.—ரோகியை நாற்காலியில் உளுக்காரவைத்து, தலையைப் பின்னுக்குவளைத்து, வாயைச் செவ்வையாய்த் திறக்கச்செய்து, நமது விரலைத் தொண்டைக்குள் விட்டுச் செவ்வையாய்த் துழவிப்பார்க்கவேண்டியது. பொருள் விரலுக்குத் தட்டுப்பட்டால், நகத்தால் எடுத்துவிடவேண்டியது; குறடுவிட்டு எடுப்பதிலும் சுலபமாகும். இரைக்குழலில் அது தங்கியிருந்தாலும் சரி, மீன்முள் முதலான சிறுவஸ்துவாயிருந்தாலும் சரி, சாதத்தைப் பிடி

யாய்ப் பிடித்து விழுங்கச்செய்தால் அது இறங்கிவிடும். Endeavour to extract them with the fingers, or curved forceps.

குரல்வளையிலும், சுவாசக்குழலிலும் உண்டாகும் ரோகங்கள்

SURGICAL AFFECTIONS OF THE LARYNX AND TRACHEA

Foreign bodies in the larynx and trachea. சாப்பிடும்போது பேசிச் சிரிப்பதில், முகஞ் சிவந்து விம்மி, உடனே மரணம் சம்பவிப்பதுண்டு. குரல்வளைக்குள் அன்னியபதார்த்தம் பிரவேசிப்பதினால், இந்த அபாயம் நேரிடுகின்றது. புறை யேறினவுடன் விரலைத் தொண்டைக்குள் விட்டுத், தடக்கை யெடுக்கவேண்டியது அப்படி யெடுக்கூடாதபக்ஷத்தில், குரல்வளையைக் கீறி, அதன்வழியாய்ச் சோதனைக்கம்பியைச் செலுத்தி, பதார்த்தத்தை வாயக்குட் தள்ளிவிடவேண்டியது.

நான்றுகொள்ளல்.—(Hanging) சுவாசக்குழல் அழுந்தி சுவாசம் தடைப்படுத்தினாலும், கழுத்து எலும்புகள் விலகிப்போகுவதினாலும், பெருநாளங்கள் அழுந்தி ஆபோபிளக்சி யுண்டாகுவதினாலும், இதில் மரணம் சம்பவிக்கும். சிகிச்சை.—அடியில் வருகிறமுறையாய், சுவாசத்தை அபிவிருத்திசெய்து, முகம் விம்மியிருந்தால், கழுத்திலுள்ள நாளத்தைக் குற்றி இரத்தம்வாங்கி, முகத்திற்கு நெஞ்சிற்கும் குளிர்ந்த ஜலம் அறைந்து, பிடரியிலிருந்துஈரற்குழிவரையில் மின்சாரமேற்றவேண்டியது. Artificial respiration bleed if face be turgid, dash cold water on.

ஜலமிருத்தியு. ஜலத்தில் விழுந்திறக்குதல். (Drowning.) ஜலத்தில் விழுந்துவிட்டவர்களுக்குச் செய்யவேண்டிய சிகிச்சை.—ஆளைஜலத்திலிருந்து எடுத்த உடனே பூமிமேல் படுக்கவைத்து, சரீரத்தின்மேல் நல்ல காற்று வீசும்படிச் செய்து, ஈரத்துணிகளை நீக்கிவிட்டு, உதடுகளைத் துடைத்து, வாயில் ஒன்றுமில்லாமல் எடுத்துவிட்டு, மெதுவாய் ஆளைக்குப்புறக்கிடைத்தி, நெற்றித்தாங்கும்படி ஒருகையை முடக்கிவைக்கவேண்டியது, அப்போது வாயிலிருக்கிற நீர் வடிந்து, நாக்குவெளிக்கண்டு சுவாஸக்குழல் தாராளமாகிவிடும். ஆளுக்குச் சுவாசமிருந்தால், சொஞ்சநேரம் சாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டியது. சுவாசமில்லாவிட்டாலும் சரி, அல்லது இரண்டொருதடவை மூச்செறிந்து பிறகு அடங்கிவிட்டாலும் சரி, உடனே ஆளைப் பக்கவாட்டமாகப் புரட்டி, மூக்குத்தூளையாவது, நவக்ஷாரத்துடன் சுண்ணாம்பு சேர்த்து, அதின் காரத்தையாவது ஆக்கிராணிக்கச் செய்யவேண்டியது ; அல்லது தொண்டையில், உண்ணாக்கில் படும்படி ஓர் இறகால் தடவவேண்டியது ; அல்லது முகத்தைத் துடைத்து, பிறகு முகத்தில் குளிர்ந்தஜலத்தை அடிக்கவேண்டியது. இவைகளும் பிரயோசனப்படாவிட்டால் ; ஆளைக் குப்புறக்கவிழ்த்தி துணியை மடித்து மார்பின்கீழ் எடுப்பாய் வைத்து, பிறகு பக்கவாட்டமாய் மல்லாக்கப் புரட்டி, மறுபடியும் குப்புறத் திருப்பவேண்டியது. இவ்விதமாய், 4-வினாடிச்கொருதரம், சிலவிசை வலதுபக்கமாகவும், சிலவிசை இடதுபக்கமாகவும், கிரமமாய்ப் புரட்டிக்கொண்டே யிருக்கவேண்டியது. ஆள் குப்புறக் கவிழ்ந்திருக்கிறபோதெல்லாம், முதுகை அழுத்தவேண்டியது ; மல்லாக்காய் இருக்கிறபோது, மார்பை அழுத்தலாகாது. ஆலசியம் செய்யாமல் இவ்விதமாய்ச் செய்தால் சுவாசமுண்டாகி பிராணன் தங்கும். சுவாசம் பிறந்தபிறகு வயிறு, அக்குள், உள்ளங்கால் ஆகிய இவ்விடங்களில் மணலைவறுத்து ஒற்றிடம் கொடுக்கவேண்டியது. தேகத்தில் சூடுபிறக்கும்படியாயக் கால்களைக் கம்பியால்

ஊர்த்தமுகமாயத் தேயததுப் பிடிக்கவேணடியது. ஆளை ஜனங்கள் சூழ்ந்துகொண் டிருக்கலாகாது. ஒருமணி நேரத்துக் கதிகமாய்த் தண்ணீரில் மூழ்கி இராதவனை எடுத்து, மேற்கண்டக் கிரமத்துடன் பிடிவாதமாய்ச் சிகிச்சை செய்தால், பிரேதத்துக்குயிர்வந்து, சிகிச்சைகன் கீர்த்தியடைவதற் கேதுவுண்டு. Artificial respiration ; friction ; hot sand ; irritate nostrils; warm enema.

கழுத்தின் வெளியுறுப்புகளின் ரோகங்கள்

SURGICAL AFFECTIONS OF THE EXTERNAL PARTS OF THE NECK AND THROAT

கழுத்து காயங்கள். (Wounds of the throat.) பிராணத்தியாகம் செய்துகொள்ளும்பொருட்டு கழுத்தை அறத்துக்கொள்வதுண்டு. கழுத்திலிருக்கிற பெரிய ரத்தநரம்புகள் அறுந்துப்போனால், நாம் செய்ய மூடமொன்றிராது. சிகிச்சை.—முதல் நாடிகளைக்கட்டவேண்டியது; நாளங்களை விரலால் அழுத்திப் பிடித்தால், ரத்தம் நின்றுவிடும். ஆளைப் படுக்கவைத்து, ரத்தக்கசிவு நின்றபிறகு, அவன் புஜங்களை தலையணையால் எடுப்பாய் வைத்து, தலையை முன்னுக்கு வளைத்து குல்லாய்ப்போட்டு, அதனோடு தோள்களை உயர்த்திக் கட்டிவைக்கவேண்டியது. பிளாஸ்திரிவாரும், தையலும் உதவாது. ஆசனமார்க்கமாயாவது, வாயில் குழலைவிட்டாவது, ஆகாரம் செலுத்தவேண்டியது. ஆகாரம் போக்ஷணைகருடைய கஞ்சியினமாய் இருக்கவேண்டியது. Throw back the head; remove coagula; pass finger into trachea to cause to expel clots; secure bleeding vessels. Feed with nutrient enemata, or stomach pump if he be unable to swallow. When he has recovered from his faintness, prop him up in bed and keep the wound closed by placing on the head a night cap with long stings to reach waist.

உதரக்ஷதங்கள்

INJURIES OF THE ABDOMEN.

Tapping. மகோதரத்தில் அதிக நீர்ச் சேர்ந்து, வயிறு பெறுகி, மூச்சடைப்புக் காணும்போது, வயிற்றைக்குற்றி நீரை யெடுத்துவிடவேண்டியதாய் இருக்கும். அதைச் செய்முறை.—ரோகியை நாற்காலியின்மேல் உளுக்காரவைத்து, ஒரு வேட்டியால் வயிற்றைச் சுற்றி, முதுகில் அச்சீலை முனைகளை மாறி இரண்டுபேரிடத்தில் கொடுத்து, நீர் வெளிப்படும்போது மெதுவாய் இழுக்கும்படிச் செய்யவேண்டியது; அப்படிச்செய்யாவிட்டால், மூர்ச்சை காணும். பிறகு ரோகிக்குமுன் நின்றுகொண்டு, நாபிக்கு 2-அங்குலம் கீழ் நடுவயிற்றில் கீறி, அதன்வழியாய் 'ட்ரோகார்' என்னும் ஊசியைக் குற்றி, அதில் தொடுத்திருக்கும் 'கனுலா' என்னும் குழலை வயிர்றில் நிற்கும்படிச் செய்து, ஊசியை உருவிக்கொண்டால், நீர் வடியும் நீர் எல்லாம் வடிந்தபிறகு, குழலைப் பிடுங்கிவிட்டு, காயத்துக்குச் சீலை மடித்து வைத்து பிளாஸ்திரி போட்டு, சீலையால் அழுத்திக்கட்டி நோயாளியைப் படுக்கவைக்கவேண்டியது. Place the patient in a chair; pass a broad bandage in which is a hole to fit over the anterior part of the abdomen round the body; give the ends to two assistants to hold and instruct them to pull tight as the fluid escapes; plung a trocar and canula into the linea alba, two inches below the umbilicus;

steady the canulaw ith the left hand, and with the right withdraw the trocar. Close the aperture with lint and plaster; bandage it on tightly. Remove patient to bed.

Voilent blows on the abdomem. வயிற்றின்மேல் பலத்த அடி பட்டால், போதக்ஷயம் கண்டு உடனே மரணம் சம்பவிக்கும்; அல்லது அது மெதுவில் போய்விடும். இவ்விதமாய்ப் படுகிற அடியால், குடலாவது, ஈரலாவது கிழிந்து, ரத்தம் வடியும், ஆளுக்கு தேகமெங்கும் சகிக்கக்கூடாத வேதனையும், வயிறு உப்புசமும், முகம் வெளுப்பும் சிறுத்து படபடத்த நாடியும் உண்டாகும். சிகிச்சை.—ஆளை அசையாமல் படுக்கவைக்க வேண்டியது; உஷ்ணகாரிகளொன்றும் கொடுக்கலாகாது. வேதனையாவது, வாந்தியாவது கண்டால், அபினியை ஆசனத்தில் செலுத்தவேண்டியது. பிறகு அட்டைவிட்டு, ஒற்றிடம் கொடுத்து அபினி கொடுக்கவும். 3-நாள் வரையில் மலமிறங்கும்படிச் செய்யலாகாது. கொஞ்சம் பாலும் ஜலமும் தவிர, மற்றொன்றும் ஆகாரம் கொடுக்கலாகாது. May cause concussion, rupture of some of the viscera, or fatal inflammation. *Treatment.*—Perfect rest in bed, spoon diet. Look out for bad symtoms.

Abscesses between the Abdominal parieties. வயிற்றுச் சதைகளில் சீழ்க்கட்டி கண்டால், சீக்கிரத்தில் கீறிவிட வேண்டியது, இல்லாவிட்டால், ஒருவேளை கட்டி வயிற்றுக்கு உடைந்து கெடுதி நேரிடும்.

Penetrating wounds of the Abdomen. வயிற்றில் குத்துகாயம்பட்டு குடல்வெளிப்படாமலும், அதில் காயம்படாமலுமிருந்தால், விரலைவிட்டு குடல் வெளிப்படாதிருப்பதை அறிந்துகொண்டு, தையலிட்டு காயத்தைச் சேர்த்துவிட வேண்டியது.—வயிற்றில் சிறிய காயம்பட்டு, குடல் வெளிப்படாதிருந்தால், குடலில் காயம் பட்டதும் படாததும் அறிவது பிரயாசை, ஆனால் சிகிச்சை இரண்டுக்கும் ஒன்றே. சிகிச்சை.—குடல் வெளிப்பட்டு, காயப்படாமலிருந்தால், அழுக்கை வெந்நீர்விட்டு போக்கி, அதைஉள்ளுக்குத் தள்ளிவிடவேண்டியது; ரோகியை மல்லாக்க படுக்கவைத்து, தோள்களை உயர்த்தி, கால்களை முடக்கி வைக்கவேண்டியது. தேவையிருந்தால் காபத்தைக்கொஞ்சம் விசாலப்படுத்திக்கொள்ளலாம். பிறகு சிகிச்சைகன் வலதுகை நல்களால் குடலை கொஞ்சங் கொஞ்சமாய் உள்ளுக்குத் தள்ளவேண்டியது. ஒமெண்டம் என்னும் சவ்வுக்குமுன் குடலைத்தள்ளி, பிறகு காயத்தைத் தையலிடவேண்டியது. Protruded bowel must be very carefully washed, cleaned and replaced.

அந்தரவாயு

HERNIA; RUPTURE.

பிரதிபதங்கள். குடலிறக்கம், ஓதம், அண்டவாதம், குடல்வாதம், குமரலண்டம், வளி.

வயிற்றிலிருக்கிற குடலாவது, அல்லது குடலின்மேல் மூடிக்கொண்டிருக்கிற சவ்வாவது, பீஜநரம்புகள் பிறவேசிக்கிற துவாரம்வழியாய் கீழுக்கிறங்கி, பீஜப்பையில் வந்துவிடுகிற ரோகத்துக்கு, அந்தரவாயு என்று பேர். காரணம்.—வயிற்றுச் சதைகளிலிருக்கிற சுபாவரந்திரங்கள் தளர்ச்சிப்பட்டிருக்கும்போது, பளுவான வஸ்துவை எடுப்பதினாலும் முக்குவதினாலும், குதிப்பதினாலும், இருமுவதினாலும், இந்த விபத்து உண்டாகின்றது; குட

லாவது, ஒமென்டம் என்னும் சவ்வாவது இறங்கிவிடும். இவைகளிறங்கும் போது பெரிடினியம் என்னும் சவ்வை முன்னுக்குத் தள்ளிக்கொண்டு வரும், அது பைபோல் இருப்பதால் 'சாக்கென்று' இங்கிலீஷில் சொல்லுவதுண்டு அந்தர வாயுவில் 3-சாதிகளுண்டு.—இறங்கிய குடலை மறுபடியும் வயிற்றுக்குள் சுலபமாய் தள்ளும்படி யிருப்பதற்கு ரிடியூசிபில் (reducible) என்றும், தள்ளக்கூடாமலும் இறுகிக்கொள்ளாமலும் இருப்பதற்கு, இர்ரிடியூசிபில் (Irreducible) என்றும்; இருகலுற்றத்தள்ளிவிடச் சக்கியமில்லாமலும், குடலிலிருக்கிற மலம் நழுகவிடமில்லாலும், ரத்த ஓட்டம் தடைபட்டும் இருப்பத்திற்கு, ஸ்டராங்கியுலேடெட் (strangulated) என்றும் இங்கிலீஷில் பேர் பெறும்.

Reducible Hernia. தள்ளி விடும்படியான குடலிறக்கத்தில், வீக்கம் மிருதுவாயிருக்கும்; எழுந்து நிற்பதினாலும், இருமுவதினாலும், வீக்கம் அதிகப்படும்; படுத்துக்கொள்வதினாலும், கிரமமாய் அழுத்துவதினாலும், அந்த வீக்கம் மறைந்துவிடும். பையில் குடலிருந்தால், வீக்கம் மழ மழவென்று, உருண்டு, சிவ்விட்டிருக்கும், இரைச்சல் சப்தம் கேழ்விப்படும், அழுத்தினால் குட குடவென்கிற சப்தத்தோடு குடல் வயிற்றுக்குள் ளேறிவிடும். பையில் சவ்விருந்தால், வீக்கம் தட்டையாயும், சிவ்விடாமலும், மேடுபள்ளமாயுமிருக்கும்; அழுத்தினால் மெதுவில் சப்தமில்லாமல் மேலுக்கேறிவிடும். சிகிச்சை —இதற்கு, ட்ரஸ் (Truss) என்னும் வில்லைப் போட்டுக்கொள்ளவேண்டியது. A soft tumor, largest in the erect posture, returnable iuto the abbomon, and having an impulse on coughing. *Treatment.*— Reduce the hernia and make the patient wear a truss.

மற்ற இரண்டுசாதி அந்தரவாயுவைக் குறித்து யாழ்ப்பாணத்தில் அச்சிட்ட இரணவைத்தியத்தில் விபரமாய்க் கண்டிருப்பதைப்பார்வையிடலாம்.—இந்த துஷ்ட ரோகத்துக்கு ஹிந்து வைத்தியர்கள் செய்யும் தந்திர உபாயங்கள் அனந்தம்; எண்ணெய்களும் கொடுப்பதுண்டு. இதைச் சொஸ்தப்படுத்த ஔஷதம் ஒன்றுமில்லை; மேலுக்குச் செய்கிற தந்திர உபாயங்களால். மறுபடியும் குடல் இறங்காமல் செய்யலாம். பீஜப்பையில் குடலிறங்கிவிட்டால் (Inguinal hernia.) ரோகியைப் படுக்கவைத்து, முழங்காலை முடக்கி மேலுக்கெடுத்து, பிறகு இடதுகையினால் பீஜப்பையை உயர்த்திக்கொண்டு, வலது கைபெருவிரல் மூன் விரல், இவைகளால் பீஜநரம்பு ஸ்தானத்திலிருக்கிற குடலைப்பிடித்து மெதுவாய நிமிட்டி வயிற்றுக்குள் தள்ளிவிட்டு, வில்லைவைத்துக் கட்டிவிட்டால் குடல் இறங்காது. தகுந்த வில் அகப்படாதபக்ஷத்தில், துணியை மடித்து பீஜநரம்பு துவாரத்தின்மேல்வைத்துக் கட்டலாம். சிறுவர்களுக்கு இவ்விதமாய்க் கட்டிக்கொண்டுவந்தால், துவாரமடைந்து குடல் இறங்காமற் போவதுமுண்டு; ஆனால் வயது சென்றவர்கள், சீவிதகாலம் வரையில் வில்லைத்தரித்துக்கொண்டு இருக்கவேண்டியது.

குதத்திலுண்டாகிற ரோகங்கள்

DISEASES AND INJURIES OF THE RECTOM AND ANAS

மூலரோகம்.—அரிசிஸ். (Piles.) ஆசனத்து ஓரமாய்முளைகளைப்போல் காணுகிற ரோகத்துக்கு மூலமென்று பேர். இதில் சாளமென்றும் ரத்த நரம்பு பெருத்து, அதை சளி சவ்வு மூடிக்கொண்டிருக்கும். வெளிமூலம் உருண்டு கட்டியாய் ஆசனத்தின் ஓரமாய் இருக்கும்; அல்லது நீண்டமேடாய்ஆசனத்

துக்குவெளியில் காணப்படும். இவைகளுக்கு ப்ளைண்டு பைல்ஸ் (Blind Piles) என்று இங்கிலீஷில் சொல்லுவர். லக்ஷணங்கள்.—மூலத்தில், இன்டொலென்ட் என்னும் இன்பிளேமட் என்னும் இரண்டுவிதப்படும் இண்டோலென்ட் என்பதில், மூலத்தின் காத்திரத்துக்குத் தக்கபடி சங்கடமும், மலமிறங்கும்போது வேதனையும் தரும்; வெளிக்குவரும்; பருவாய் தோற்றும், இன்பிளேமட் என்பதில், வேதனை, உஷ்ணம, நமைச்சல் அடைப்பு, குத்தல் ஆகிய இவைகளிருக்கும். ஆசனத்தில் ஏதோ ஒருவஸ்துவு இருப்பது போலிருக்கும்; மலமிறங்கும்போது வேதனையும் முக்கலு முண்டு. காரணங்கள்.—மலபந்தம், முக்கல், மூஷாம்பரம்போலொற்ற உபத்திரவ பேதி மருந்து எடுத்துக்கொள்ளல் ஆகிய இவைகளால் மூலரோகம் காணப்படும். உளுக்கார்ந்துகொண்டே காலத்தைக் கழிப்பவர்களுக்கு, இந்த வியாதி முக்கியமாய் அனுசரிக்கின்றது.

சிகிச்சை.—ரோகி தடித்து சோம்பலாளியாய் இருந்தால், போஜனத்தைக் குறைத்து, வெளியில்போய் நடக்கச் செய்யவேண்டியது. திராக்ஷை உப்பு, நிலவாகை, சிற்றாமணக் கெண்ணை முதலிய லகுவிரேசன மருந்துகள் கொடுத்து, மலம் பிரதிதினமும் கழியும்படிச் செல்யவேண்டியது. நாள்பட்ட ரோகத்துக்கு, வால்மிளகு, மிளகு லேகியம், முதலியவைகள் கொடுத்தால் சவுக்கியம் உண்டாகும், ரோகி வயது சென்றவனாகி, மூலத்திலிருந்து சீழ் வடிந்துக்கொண்டு வந்தால், குங்கிலியத் தயிலத்தில் 30–40 துளி பாலில்விட்டுக் கொடுக்கலாம்.—மூலம் தாபிதம்கொண் டிருந்தால், ரவபஸ்பமும் அபினியும் சேர்த்து இரவில் கொடுத்து, காலையில் எண்ணையை கொடுக்கவும். பத்தியபோஜனம் செய்யசசொல்லி, மூலத்துக்கு ஒற்றிடம் கொடுத்து, போல்டீஸ் போடவும்.—இனி மூலத்துக்குச் செய்யவேண்டிய தென்னவெனில், ஆசனத்தைச செவ்வையாய்க் கழுவிச் சுத்தி செய்யவேண்டியது; படிக்காரம், மாசக்காய் முதலியவைகள் சேர்ந்த துவர்ப்புஜலத்தை, மலபாதையானபிறகு ஆசனத்தில் அடிக்கலாம்; பொட்டிலுப்பு திராவகம் தடவுவதிலும் சவுக்கியம் உண்டாகும். இவைகளால் வியாதி நீங்காவிட்டால், கயிற்றைக்கட்டி மூலத்தைத் துண்டித்து விடுவதே உத்தமம். அதற்கு முதல் பேதிக்கிக் கொடுத்து மலசுத்தி செய்தபிறகு, முளையைக் குரடால் பற்றிப்பிடித்து, வெளிக்கிழுத்து, வேர் அடங்கும்படி நார் இழையால் பிகிவாய்க் கட்டிவிடவேண்டியது. மூலம் உள்ளடங்கியிருந்தால், ஸக்கி வெளிக்கு வரும்படிச் செய்யவேண்டியது. வெந்நீர் ஆவி படும்படி உளுக்காரவைத்தால், மூலம் சுலபமாய வெளிக்குவரும். கடைசிமுடிபோடுவதற்கு முன் மூலத்தைக் குற்றி கொஞ்சம் ரத்தம் வரும்படிச் செய்யவேண்டியது. மூலத்தைக் கட்டினபிற்கு கயிற்றை ஒட்டக் கத்தரித்து, முளையை உள்ளுக் தள்ளிவிடவேண்டியது. பிறகு ரோகியைப் படுக்கவைத்து, 2-நாள்மலமிறங்காமல் செய்யவேண்டியது வேதனைப்பிரபலமாயிருந்தால், அபினி கொடுக்கவும். மூலத்தை அடிக்கடிப் பார்வையிட்டு, கட்டு ஒருவேளை அவிழ்ந்து, போனால், மறுபடியும் கட்டிவிடவேண்டியது. மூலரோகத்துக்கு மகம்மதியர்கள், பாஷாணம் வைத்து, புண்ணாக்கிற சிகிசசை மெத்தக் கரோமானது, அதனால் நூதன உபத்திரவங்கள் சம்பவிக்கும். Varicose condition of hæmorrhoidal vessels. Two kinds; External or venous, Internal or arterial. *Treatment.*—Keep the liver and rectum always clear; perfect cleanliness. Ung. gallæ, or tie or excise the external.

உள்மூலம். ரத்தமூலம். (Hæmorrhage from the rectum.) உள்மூலத்திலிருந்து வருகிற ரத்தம், நாளத்திலிருந்தாவது, நாடியிலிருந்தாவது

வரும். சிகிச்சை.—ரத்தம் மிதமாய், வழக்கமாய்க் கண்டாலும் சரி, துர்பலப்படுத்தாமலிருந்தாலும் சரி, அதனால் தலைவலி முதலியவை ஏதாவது சமனமடைந்தாலும் சரி, ரத்தத்தை நிறுத்தாமல், உலாற்றம்படியாயும், மிதபோஜனம் சாப்பிடும்படியாயும் செய்து லகுவிரேசனமருந்துகள் கொடுக்கவேண்டியது. ஒருவேளை ரோகியினைத்து துர்ப்பலமடைந்து, உதடுகள் வெளுத்து நாடி ஹீனத்துவமாய் நடந்தால், ரத்தத்தை உடனே நிறுத்தவேண்டியது. அதற்கு மூலம் அகப்பட்டால் அதைக்கட்டிவிடவேண்டியது: மாசக்காய்க் கஷாயத்தை, ஆசனத்தில் வடிக்கலாம்; சிங்கோனாவுடன் கந்தகத்திராவகம் சேர்த்துக்கொடுக்கலாம். குங்கிலியத்தயிலமும் நன்மை செய்யும். துணியை துவர்ப்புள்ள ஜலங்களில் ஏதிலாவது துவைத்து, ஆசனத்தில் தள்ளி அடைத்தால், பிரபலமாய் வருகிற ரத்தம் நின்றுவிடும். மாங்கொட்டைப்பருப்பை அரைத்து உள்ளுக்குக் கொடுப்பது நாட்டுவழக்கம்.

குதந்திரம்.—(Fistula in Ano.) ஆசனத்து ஓரமாய்க் காணுகிற புரை ஓடுகிற விரணத்துக்கு, குதந்திரம் என்று பேர். ஆசனம் என்னேரம் அசைத்துக் கொண்டிருப்பதால், அந்தஸ்தானத்தில் காணுகிற கட்டி சீக்கிரத்தில் ஆறுகிறதில்லை. அவ்விடத்தில் சவ்வு அதிகமாய் இருப்பதால் புரையோட இடந்தருகின்றது. சிலருக்குப் புரையானது குடலை உருவியிருக்கும்; அப்போது காற்றும், மலமும், அந்தவழியாக வெளிப்படும். சிலருக்குக் குடலை உருவியிராது. சிலருக்குக் குடலை உருவி ஆசனத்து ஓரமாய், கட்டியாய் அகப்படும், துவாரம் இராது. குதத்துக்கு ஓரமாகக்காணுகிற கட்டியால் இந்தரோகம் பிறக்கிறது. சிகிசசை. முதல் சிற்றாமணக்கெண்ணெய் கொடுத்து வயிற்றை இளக்கி, 2-3 நாள் மல மிறங்காதிருக்கும்படிச் செய்யவேண்டியது. ஆளை மல்லாக்கவாவது, முழங்கால் மேல் குனியவைத்தாவது இருக்கச்செய்து ஆசனத்தில் இடதுகை முன் விரலைவிட்டு வைத்துக்கொண்டு, புரையில் சிலாக்குவிட்டு, அதின்மார்க்கவாய் பிஸ்டரி என்னும் கத்தியைச் செலுத்தி குடலின் புரைகளை உருவச்செய்து, கத்திமுனைமேல் விரலை வைத்துக்கொண்டு, ஆசனத்துச் சதையை வகிர்ந்து விடவேண்டியது பிறகு அந்தப்பிளப்பில் துணியைவைத்து, வாய்க்கூடாமல் செய்தால், அடியிலிருந்து சதை வளர்ந்து, ரணம் ஆறிவிடும். பிரதிதினம் ரணத்தைக் கழுவிச் சுத்தியாய் வைக்கவேண்டியது. ரோகிக்கிச் சத்திரம் செய்துக்கொள்ள இஷ்டமில்லாதிருந்தாலும் சரி, அல்லது வயது தளர்ந்து க்ஷயமுதலிய ரோகங்கள் தொந்தபபட்டிருந்தாலும் சரி, சாந்தமான சிகிச்சையை நடப்பிக்கவேண்டியது. ரணத்துக்கு சிலத்தைலம் விட்டு, உள்ளுக்கு மிளகு லேகியம், குங்கிலியத் தைலம் கொடுத்து, ரோகத்தை வசப்படுத்தவும். ரோகி கத்திக்கிப் பயப்பட்டால், பட்டுக் கயிற்றால் புரைக்குள் செலுத்தி, குடலுக்குள்ளேற்றி, அந்த முனையை ஆசனவழியாய் வெளிப்படுத்தி; இறுகும்படி இரண்டு முனைகளையும் சேர்த்து முடிபோட்டு விடவேண்டியது. அதை நாள்தோறும் பிகிந்துக்கொண்டுவந்தால், சதை அறுந்துவிடும். ரணத்துக்குச் சாம்பிராணிதூபம் காட்டுவது மெத்த நல்லது. A sinus by side of rectum. 3 kinds, 1 Perfect. 2. Blind external, *i-e* having no opeing into the bowel 3. Blind internal, *i-e* having no opening through the skin. *Treatment.*—Place the patient on his knees; oil and introduce the left fore-finger into rectum. Pass curved probe-pointed bistoury up the fistula until it reaches the finger, then divide all that intervenes between the fistula and the rectum.

குதப்பிரம்சரோகம்.—ஆசனம் வெளிப்படுதல். அடியிறங்குதல். ஆசனருடி. (Prolapsus ani.) மலக்குடல் ஆசனம் வழியாய் வெளிக்கு வந்துவிடுவதற்கு, குதப்பிரம்சமென்று பேர். குழந்தைகளுக்கும் வயது சென்றவர்களுக்கும் இந்த ரோகத்தை விசேஷித்துக் காணலாம். குதத்தின் தாதுக்கள் தளர்ந்தாவது மலபந்தம், மூலம், கல்லடைப்பு, மூத்திர அடைப்பு ஆகிய இவைகளால் காணுகிற முக்கலினாலாவது, இது பிறக்கும். சிகிச்சை.—வெளிபட்ட குடலைக் கழுவிசசுத்திசெய்து, கையால் அழுத்தித் தள்ளிவிடவேண்டியது. இதில் பிரதிகூலப்பட்டால், முன்விரலுக்கு எண்ணெயிட்டு ஆசனத்தில் செலுத்தினால், அது உள்ளுக்கேறிவிடும். குழந்தைகளில், இரண்டு புட்டங்களையும் நெருக்கிக்கட்டி வைப்பதில் மெத்த அனுகூலமுண்டு. Oil the fingers, and carefully return the bowel. Laxatives, astringents ; rest.

மூத்திரேந்திரிய ரோகங்கள்

DISEASES OF THE URINARY ORGANS.

நீர் அடைப்பு. நீர்க்கட்டு. (Retention of Urine.) மூத்திரபையிலிருக்கிற நீரானது வெளிப்படாமல் அடைபட்டுபோகிற ரோகத்துக்கு, நீர் அடைப்பு என்று பேர் மூத்திரம் சுத்தமாய் சுரக்காமல்போகிற வியாதியும் உண்டு. ஆகையால், இவ்விரண்டுக்குமுடைய வித்தியாசத்தைக் கண்டறியவேண்டியது. நீர் அடைப்பு இரண்டுவிதமாம்க் காணும், ஒன்று, நீர்த்தாரை சவ்வு சுருங்கி விடுவதால், மூத்திரம் அடைப்படும்; மற்றொன்று, நீர்த்தாரையில் துர்மாமிசம் வளர்ந்து, நீர் வருகிற வழியை அடைத்துக் கொள்ளும்.

Spasmodic Stricture. துர்மாமிச அடைப்பு கொஞ்சமிருப்பவர்களிலாவது, அல்லது அடிக்கடி பிரமேகம் காண்பவர்களிலாவது, மூத்திரத்தில் தோஷமிருப்பவர்களிலாவது இந்த ரோகம் காணும். இவ்வித ஸ்திதியில் குளிர்ச்சி ஈரம் இவைகளில்போய்த் திரிந்தாலும் சரி, மதுபானத்தில் பிரீதிகொண்டாலும் சரி, மூத்திர அடைப்பு சம்பவிக்கும். இது இரவில் காண்பது வழக்கம். லக்ஷணங்கள்.—அடிக்கடி முக்கவேண்டியப் பிரயத்தினம் செய்தபோதிலும் நீர் வெளிப்படாமல் ரோகி மெத்த சிரமைப்படுவான்; வெகு சீக்கிரத்தில் மூத்திரப் பையில் நீர் நிறைந்து, அது பெருத்துவிடும்; அடிவயிற்றைத் தொட்டுபார்த்தால் உருண்டக்கட்டிபோல் விரல்களுக்குத் தட்டுப்படும் நீர்த்தாரையின் சுருக்கம் கொஞ்சம் தளரும்போதெல்லாம் துளித்துளியாய் நீர் இறங்கும். கொஞ்சம் ஆஸ்வாஸம் பிறக்காவிட்டால், முகம் ஏக்கங்கொள்ளும், நாடி விரைவாய் நடக்கும்; சரீரம் உஷ்ணமாயிருக்கும். உபத்திரவத்தைத் தணிக்காவிட்டால், மூத்திரப்பை வெடித்து, நீர் வயிற்றுக்குள் இறங்கிவிடும்; அல்லது, சுருக்கத்துக்குப் பின்னால் மூத்திரதாரை விரிந்து, வெடித்துப் பக்கத்தில் மூத்திரம் இறங்கிப் பரவிவிடும்.

சிகிச்சை.—உபத்திரவம் பிரபலமில்லாமலும், குளிர்ச்சியினால் கண்டதாயும், சதையடைப்பு இல்லாததாயும் இருப்பதால், வெந்நீரில் உளுக்கார வைத்து, விடாமற் ஒற்றிடமும் அபினியும் கொடுத்து, பிறகு சிற்றாமணக்கெண்ணெய் பேதிக்கிக் கொடுத்தால், ரோகிக்கு ஆஸ்வாஸம் பிறக்கும். பேதிமருந்து கொடுக்க அவசியமில்லாதபோது, அபினி உள்ளுக்குக்கொடுத்தா

லும்சரி, ஆசனத்தில்புகட்டினாலும்சரி. அல்லது குளோரோபாரம் கொஞ்சம் ஆக்கிராணிக்கச் செய்தாலும்சரி, மூக்கல் அடங்கி, நீர் வெளிப்படும். அயத்திராவகத்தில், 10-துளி, 10-நிமிஷத்துக்கொரு ஆவர்த்தி கொடுத்துக்கொண்டு வருவதுமுண்டு. இவைகளால் அனுகூலமில்லாமல், மூத்திரப்பையில் அதிக நீர் சேர்ந்து கொண்டால், குளோரோபாரம் கொடுத்து பிரக்ஞையில்லாமல் செம்து சிலாக்கு (Catheter) விடவேண்டியது. அதற்கு ஆளைப் படுக்கவைத்தாவது, நிக்கவைத்தாவது சுவரோடு முதுகை அணைத்துக்கொள்ளும்படியாவது, செய்யவேண்டியது. சிகிச்சகன் இடது கையால் கோசத்தை, யெடுத்துப் பிடித்துக்கொண்டு, வலதுகையினால் சிலாக்கை, அதின் குடைவான வளைவு ரோகியின் இடது கவுட்டியைப் பார்க்கும்படியாய் நீர்த்தாரையில் விட்டு, வயிற்றுக்கு நேராய் வரும்படி மெதுவாய் உயர்த்தி, பியுபிஸ் என்னும் எலும்புக்கடியில்போய், மூத்திரப்பையில் பிரவேசிக்கும்படிச்செய்து, ஆயுதத்தின் பிடி கீழுக்கழுத்தி நேராம் வரும்படிச் செய்யவேண்டியது. ஆயுதத்தை லேசாய்ப் பிடித்துக்கொண்டு அது போகிறவழியாய் விடவேண்டியது. தேவையிருந்தால் கோசத்தை முன்னுக்கிழுத்து, நீர்த்தாரை நேராய் வரும்படிச்செய்து கொள்ளலாம். வெள்ளிச் சிலாக்கு பிரவேசிக்க இடமில்லாதிருந்தால், கம் இலாஸ்டிக் காதிடர் என்னும் கருவியை விட்டுப் பரீக்ஷிக்கலாம் இவைகளுக் கெதற்கும் நீர் வெளிப்படாமல், மூத்திரப்பை அதிசமாய் விரிந்துக்கொண்டால் அதைக் குற்றி நீர் எடுக்கவேண்டியது. குத்துகிறமார்க்கமும், சதை அடைப்பைக் குறித்தும், இன்னம் விசேஷ விஷயங்களையும் கிறீன் ஐயர் அவர்களால் இயற்றிய இரணவைத்தியத்கில், தெளிவாய் கண்டுசொள்ளலாம் —இந்த ரோகத்தில் மூத்திரமிறங்க வழியில்லாமல் இருக்கிறபோது, அதிக மூத்திரத்தை யுண்டாகிற பதார்த்தங்களைக் கொடுத்து, ரோகிக்கு உபத்திரவம் பிரபலப் படும்படிசெய்வது, பாமரவைத்தியம். *Spasmodic stricture* occurs by cold and wet, and indulgence in liquor *Treatment.*—Warm bath ; Tinct ferri, and Tinct. opii ; cathetor.

பகந்திர விரணம். (Fistula in Perineo, or Urinary fistula.) பெரினியம் என்னும் பகத்தில் புரைவிரணங் கண்டு நீர்த்தாரைக்குப் பிரவேசித்து, நீர் இறங்கும்போது அதின்வழியாய்த் துளித் துளியாய் இறங்கிற ரோகத்துக்குப் பகந்திர விரணமென்று பேர். நீர்த்தாரையில் சீழ்க்கட்டிக் காண்பதினாலும், நீர்க்கட்டில் மூத்திரம் அந்த ஸ்தானத்து சவ்வி லிறங்கிவிடுவதினாலும், இந்தரோகம் பிரக்கும். சிகிச்சை.—முதல் மூத்திரதாரையை பூஜி என்னும் மெழுகுதிரியை விட்டுத் தாராளப்படுத்திக்கொண்டு, பிறகு காடிக்காரஜலத்தை புரையிலடித்து ரணத்தை ஆற்றவேண்டியது. Fistula between urethra and perinæum. *Treatment.*—Dilate stricture first and then excite thefistula to granulate with arg. nit. or hot wire.

Hæmorrhage from the Urethra.—சிலாக்கு விடுவதினாலும், அடிப்படுவதினாலும், ரத்தநரம்பு அறுபட்டுப்போவதினாலும், ரத்தக்கொதிப்பினாலும், மூத்திரதாரையிலிருந்து ரத்தம் வெளிப்படும். சிகிச்சை.—ரோகியைப் படுக்கவைத்து, குளிர்ந்தஜலம் போட்டுக்கொண்டு வந்தும் ரத்தம் நிற்காவிட்டால், ஒருகார்க்கை நீர்த்தாரையின் கொடி மேல்வைத்து, ரோகியை உருட்டும்படிச் செய்தால், அந்தஸ்தானத்தில் வரும்போது அழுந்துவதால் ரத்தம் நின்றுவிடும். மாசக்காயும் குணம் செய்யும் துவர்ப்புள்ளநீரை மூத்திரதாரையில் அடிக்கலாம்.

சர்க்கார அஸ்மரிரோகம். சிகதா மூத்திரரோகம், மூத்திரத்தில்மணல் விழுதல். (Gravel) ஔஷத வைத்தியத்தில் பார்வையிடவும்.

அஸ்மரிரோகம். (Stone in the bladder.) மூத்திரப்பையில் கல்லிருந்தால், அடிக்கடி மூத்திரமிறங்கும்; மூத்திர மிறங்கும்போது கல்லானது வந்து வந்து தாரைமேல் விழுவதால், தாரையாய் வருகிற நீர் சட்டென்று நின்றுவிடும். முழங்கால் மேல் நடக்கிற பாவனையாய் இருந்தால், மறுபடியும் நீர் இறங்கும்; மூத்திரப்பையின் கழுத்தண்டை அடிக்கடி உபத்திரவம் காணும், அது மூத்திரமிறங்கின உடனே பிரபலப்படும்; லிங்கத்தில் வேதனையிருப்பதால், அதை அடக்கும்பொருட்டு, கோசத் தோலைப் பிடித்திழுப்பதால் அது நீண்டுயிருக்கும்; ஒவ்வொரு வேளை மூத்திரத்தில் ரத்தம் காண்பதுமுண்டு; சவுண்ட் (sound.) என்னும் இரும்புக் கருவியை மூத்திரப்பையில் விட்டு சோதித்தால் கல்லிருக்கிற சப்தம் கேழ்விப்படும், அதுவே சகல குறிகளுக்கும் சிரேஷ்டமானது. சிகிச்சை.—இதற்கு ஔஷதமில்லை; அறுத்துக் கல்லை வெளிக்கெடுத்துவிடுவதே சிகிச்சை ஆயுதங்களால் கல்லை உடைத்துப் பொடியாக்கி விடுவதும் ஒரு முறை. Frequent micturition ; stream suddenly ceasing ; bloody urine after exercise ; great pain referred to end of penis ; elongated prepuce from constant pulling. *Treatment.*—Lithotrity, if soft ; Lithotomy, if hard.

கோசத்திலுண்டாகிற ரோகங்கள்

DISEASES OF THE PENIS.

ருத்தமணி. லிங்கசர்மபு ரோசங்கோச ரோகம். (Phymosis.) சிசினத்தோலின் முகமானது சுருங்கி லிங்கத்தை வெளிப்படுத்தக் கூடாத ஸ்திதிக்கி, ருத்தமணி என்றுபேர். இது சன்மவியாதி; ரணம் கண்டு பக்குக்கட்டி இந்த உபத்திரவம் காண்பதுமுண்டு. விலிங்கமானது மூடியிருப்பதால் அதில் அழுக்கு சேர்ந்து வெள்ளைநீர் வடிந்துகொண்டிருக்கும். மேக வியாதி ஒருவேளை அனுசரித்தால், உபத்திரவம் இரெட்டிக்கும். சிகிச்சை.—ஜன்மவாசியாய் இருப்பதற்கு ஸ்பஞ்டென்ட் (Sponge-tent) என்னும் வத்தியை வைத்துக் கொஞ்சங் கொஞ்சமாய் வாயை விசாலப்படுத்தி சொஸ்தப்படுத்தலாம். இப்படிச் செய்தும் மறுபடியும் கண்டால் சுன்னத்து செய்து விடவேண்டியது. இதற்கு முன் தோலை இழுத்து, இடுக்கியின் மத்தியில் பிடித்துக்கொண்டு, நேராய்த் துண்டித்து விடவேண்டியது; பிறகு கத்திரியால் சளிச்சவ்வை லிங்கத்துக் கடிவரையில், லிங்கம் தெரியும்படி கத்தரித்து விடவேண்டியது. சருமத்தைப் பிளந்து விடுவதும் ஒரு முறை. அதற்குப் பள்ளமுடைய சிலாக்கை, தோலுக்கும் லிங்கத்துக்கும் மத்தியில்விட்டு, வளைவுள்ள கத்தியை சிலாக்கின் பள்ளத்தின் வழி உள்ளுக்கேற்றி தோலைப்பிளந்து விடவேண்டியது. எப்படிசெய்தபோதிலும், வெளித்தோலையும் உட்தோலையும் சேர்த்து 4-5 தையலிட்டுக் கட்டிவிடவேண்டியது. இவைகளுக்கு பதிலாய் 2-3-இடத்தில் $\frac{1}{4}$-அங்குலம் ஆழத்துக்கு முன்தோலைப்பிளந்து விட்டு சவுக்கியப்படுவதும் உண்டு. Constriction of orifice of prepuce, so that it cannot be drawn back over glans. *Treatment.*—Sponge-tents to dilate the orifice; circumcise, or may slit it up ; or make 2 or 3 cuts through the prepuce $\frac{1}{4}$ inch deep.

லிங்கசர்மபஸ்யாத்சங்கோசன ரோகம். (Paraphymosis.) கோசத்தின் தோலானது மேலுக்கேறி சுருங்கி, வீங்கி, கீழுக்கிரங்காமலிருக்கிற ஸ்திதி. சிகிச்சை.—வீக்கம் அதிகமாயிருந்தால் ஊசியால் 5-6 விடங்களில் குற்றி, நீர்வடிந்தபிறகு, இடது கைவிரல்களால் பூவைப்பிடித்து, வலதுகை விரல்களால் அதைக்கொஞ்சநேரம் மெதுவாய் பிசைந்தால் சிறுதாகிவிடும். அப்பொழுது மலரை உள்ளுக்குத் தள்ளி தோலை முன்னுக்கிழுத்துவிடடு, ஈரத்துணி சுற்றிவைத்தால், வீக்கங்களையும். இதில் வசப்படாவிட்டால், பிகிந்திருக்கும் சருமத்தைக்கொஞ்சம் கீறிவிடவேண்டியது. Prepuce constrictedbehind corona glandis and canhot be drawn forwards again. Treatment. —Empty the glands by pressure, and endea our draw prepuce forward; if that be impossible divide constriction freely.

பீஜரோகங்கள்

DISEASES OF THE TESTIS.

விரைநோய்.—பீஜதாபிதம். விரைவாதம். விரைவீக்கம். (Orchitis. Acute Inflammation of the Testis.) அடிப்படுதல், பிரமேகம் ஆகிய இவைகளால் இந்தவியாதி பிறக்கும். லக்ஷணங்கள்.—மூத்திரதாரையிலிருந்து வருகிற நீர்க்குறையும், பீஜத்திலும், பீஜநரம்புகளிலும் வேதனையிருக்கும்; இடுப்பிலும் வேதனையுண்டு; பீஜம் வீங்கிவிடும்; சுவரம் காணும். வாந்தியிருக்கும். சிகிச்சை.—ஆளைப் படுக்கையில் செம்மதியாய் வைத்து, உப்புபேதிக்கிக் கொடுக்கவும். அட்டைவிடுவதும் உண்டு, ஒற்றிடம் கொடுத்து, குட்டையால் பீஜத்தைத் தூக்கிக்கட்டி வைப்பதில், அனுகூலமுண்டு, உக்கிரகுணங்கள் சமனப்பட்டபிறகு நவக்ஷார ஜலம் விட்டுக்கொண்டுவரலாம். தாபிதம் போனபிறகு கொஞ்சம் வீக்கம் இருப்பது வழக்கம். அதற்கு ஒட்டுப் பிளாஸ்திரி த்தடவிய சீலை வாருகளால், வேதனையுண்டாக்காமல், ரோகி சகிக்கும்படிச் சுற்றிவைக்கவேண்டியது. Arises from injury or gonorrhœa. Enlargement; sickening pain on slight pressure; fever, vomiting *Treatment.*—Suspensary bandage, leeches locally; purgatives; salines, low diet.

நாள்பட்ட விரைநோய். (Sarcocle; chronic Inflammation of the Testis.) இதில் விரை கட்டியாய் வீங்கி அடிக்கடி நோவெடுக்கும். சிகிச்சை.—ஆளைப் படுக்கையில்வைத்து, பீஜத்தைக் குட்டையால் உயர்த்திக் கட்டிவைக்க வேண்டியது. ஐயோடைன் தடவலாம்; பிளிஸ்டரும் போடலாம்; பிளாஸ்திரியால் அழுத்திச் சுற்றிவைப்பதிலும் நன்மைக்கிடமுண்டு. மேகவியாதியாற் பிறந்தால், ரசம், வீரம், ஐயோடைன், மீன்நெய், நல்ல ஊட்டம், தாருட்டியகாரிகள் ஆகிய இவைகளைக்கொண்டு ரோகத்தை வசப்படுத்தவேண்டியது. *Treatment.*—Rest in bed; calomel to affec. gums; tinct. iodine; or ung. hydrarg. and strapping locallyt.

நீர் அண்டம்.—(Hydrocele.) பீஜத்தைச சுற்றிக்கொண்டிருக்கிற சவ்வுப்பையில் நீர் சேருகிற ரோகத்துக்கு, நீர் அண்டம் என்று பேர். லக்ஷணங்கள்.—இதில் வீக்கம் தாமரை மொக்குபோல் குவிந்து வெளிப்புறம் மழமழவென்று இருக்கும்; அழுத்தினால் தத்தளிப்புக்காணும்; நோயிராது; பளுவாய் இருப்பதால் கொஞ்சம் சங்கடம் மாத்திரமிருக்கும்; பீஜப்பைக்கடியில் நீர் ஆரம்பித்து மேலுக்கேறும்; மெழுகுவத்தி கொளுத்தி பீஜப்பையின் ஒருபக்கத்தில் வைத்துப் பார்வையிட்டால் வெளிச்சம் அகப்படும். விரை வீங்கியிருந்தால், அதின் பளுவினாலும், கட்டியினாலும், வேதனை

யிருப்பதினாலும், நீரின் தத்தளிப்பு இல்லாதிருப்பதினாலும் கண்டுக்கொள்ளவேண்டியது. நீர் அண்டத்துக்கும், குடலிறக்கத்துக்கும் இருக்கிற வித்தியாசத்தையும் கண்டறியவேண்டியது. சிகிச்சை.—குற்றி நீரை வெளிப்படுத்திவிடுவது ஆஸ்வாசச் சிகிச்சை (palliative cure) அதற்கு குரூவ்ட் நீடில் என்னும் ஊசியாலாவது, ட்ரோகார் என்னும் ஊசியாலாவது, பலவிடங்களில் தையலூசியாலாவது, குற்றி நீரை வெளிப்படுத்தி விடலாம். குழந்தைகளுக்கு ஆஸ்வாசச் சிகிச்சை போதுமானது. நீர் சேராமல் செய்வதற்கு, (radical cure) குற்றி நீரை எடுத்தபிறகு பைக்குள் ஐயோடின் அடிப்பதே யாம் விரையில் வியாதியிருந்தால், இதை அடிக்கலாகாது. நீரெடுக்கிற முறை.—சிகிச்சைகன் பீஜப்பையைப் பின்புறமாய் அழுத்திப் பிடித்துக் கொண்டு, ட்ரோகார் அண்ட் கானுலா, (trocar and canula) என்னும் ஊசியால் குற்றி, ஊசி உள்ளிறங்கினபிறகு, சொஞ்சம் மேலாக உயர்த்தி, பீஜத்தில் படாமல் தள்ளவேண்டியது. பிறகு, ட்ரோகார் என்னும் ஊசியை வெளிக்கிழுத்துவிட்டு, கானுலா வென்னும் உறையை உள்ளுக்குச் செவ்வையாகத் தள்ளினால், நீர் வெளிப்படும் பையிலிருக்கிற நீரெல்லாம் வந்துவிட்ட பிறகு, ஐயோடைன் திரவம் 1-பங்கில், 2-பங்கு ஜலம் விட்டு விளாவிக் கொண்டதில், 1-2 திராம் பீச்சாங்குழலில் விட்டு, கானியுலா வழியாய் பைக்குள் அடித்து உள்ளவே இருக்கும்படிச் செய்யவேண்டியது. இப்படிச் செய்வதில் கொஞ்சம் வேதனையும், தாபிதமும், நீர்ச்சுரப்பும் காணும்; அவைகள் தணிந்தால், பைக்குள் நீர்சுரக்காது; ஒருவேளைச் சுரந்துவிட்டால் மறுபடியும் குற்றி நீரை எடுத்துவிட்டு கொஞ்சம் வீரியமாய்ச் செய்த ஐயோடின் திரவத்தை அடிக்கவேண்டியது. Serum in tunica vaginalis; is transparent and feels elastic. *Treatment.*—Thrust in trocar and canula upwards to avoid testies; or cure radically by injecting portwine, or iodine.

6-வது புஸ்தகம்

BOOK VI

பிரஸவ வைத்தியம்.

மிட்ஒய்ப்பிரி. Midwifery

(in Tamil)

ஆயுள்வேதத்தில் பிரதானமானது மருத்துவ வைத்தியம் ஆயுள் வேதியர்களுக்கு இந்த கிரந்தம் முக்கியமாய்த் தெரிந்திருக்கவேண்டியது ; தெரிந்துகொண்டால், பிரஸவகாலத்தில் ஸ்திரீகளுக்குச் சில தருணங்களில் சம்பவிக்கிற அநேக பிரயாசங்களைத் தீர்த்து, அநேக ஜீவன்களை ரக்ஷித்து லோகோபகாரியென்று கிருதார்த்ததையை அடைவார்கள்.

1-ம் பாகம்.

I. கருவளர்த்தி.

(யூடிரோஜெஸ்டேஷன், UTERO–GESTATION).

விந்துக்கிருமிகள் நாதத்தோடு சேர்ந்து, அதைச் சினைப்பிக்கும் ; நாதம் சினைப்பட்டால் கருதரித்தென்று சொல்லுவது வழக்கம். கருதரித்து, அது கருக்குழியில் வந்திறங்கினபிறகு, கருவளர்த்தியோடு கருப்பையும் வர்த்திக்கும். அதின் ரத்தநரம்புகளும், ஸ்பரிஸநரம்புகளும் பெருக்கும். கருப்பையின் மேற்புறம் முதல் பெருக்கும், பிறகு மத்தியபாகமும், கடைசியில் கழுத்தும் ஸ்தூலிக்கும்.

கருதரித்து, 4-மாதம் வரையில் இடைக்குழியில் தானே கருப்பை அடங்கியிருக்கும், பிறகு மர்மஸ்தான எலும்புக்கு மேலாக வரும், ஸ்திரீயின் தேகம் உணங்கலாயிருந்தால், அது விரல்களுக்கு அகப்படும். 5-ம் மாதம், ஷை எலும்புக்கும், நாபிக்கும் மத்தியஸ்தானம் வரையில் வரும், அப்போது அடிவயிறு கனக்கும். 6-ம் மாதம், தொப்புளுக்கு நேராய் வரும், அப்போது தொப்புள் பிதுங்கும். 7-ம் மாதம், தொப்புளுக்கும் ஈரல்குழிக்கும் மத்தியமாய் வரும். 8-ம் மாதம், ஈரல்குழி வரையில் உயர்ந்து வயிற்றை

நிரப்பிக்கொள்ளும். குடல், கருப்பாசயத்துக்கு மேலும் பின்புறமாகவும் இருக்கும். 9-ம் மாதம், கருப்பையானது வளர்த்தியி லிருந்தபோதிலும், வயிற்றுச் சதைகள் தளர்ச்சியாகிறபடியால், அது கொஞ்சம் தாழ்ந்துவிடும்.

கர்ப்பாசயம் விருத்தியடைவதில், கருப்பையின் கழுத்து ரூபத்தில் விகாரப்படும்; அது பெருத்து மிருதுவாகும். கருப்பையின் வாயும் ரூபபேதமடைந்து, அதை விரிக்கக்கூடுமானதாகும். கருப்பையின் கழுத்திலிருக்கிற துவாரம், ஸ்லீனிக்தபதார்த்தத்தால் அடைந்திருக்கும். முதல் 3-மாதம் வரையில் கருப்பையின் வாய் யதாஸ்தானத்தைவிட்டுக் கொஞ்சம் தாழ்ந்து முன்னுக்கு வந்திருக்கும்; ஆனல் கருப்பையானது இடைக்குழியைவிட்டு மேலுக்குப் போகப் போக, பின்னிட்டுவிடும். 5-மாதம், கழுத்து குறையும், 6-ம் மாதம், $\frac{1}{4}$—7-ம் மாதம், $\frac{1}{2}$—8-ம் மாதம், $\frac{3}{4}$—9- மாதம், முழுமையும் குறைந்துவிடுமென்று சாஸ்திரங்களில் கண்டிருக்கிறது.

கருப்பையின் ஸ்லேஷ்ம சவ்வும் (Mucous membrane) ரத்தாதிக்கத்தினல் ஸ்தூலித்து, அதின்மேல் சதையைப்போலொத்த பதார்த்தம் படிந்திருக்கும், அதற்கு டெஸிடியுஅ (decidua) என்று பேர்.

கருவானது கருக்குழிக்கு வரும்போது, 2-சவ்வுகளால் ஏற்பட்ட ஒரு பைக்குள்ளிருக்கும்; அந்தப் பையில் ஜலம் உண்டு; அந்த ஜலத்தில் கரு மிதந்துகொண்டிருக்கும். பைக்கு வெளிபுறத்திலிருக்கிற ஜவ்வுக்கு, கோரியன் (chorion) என்றும்—உட்புறத்திலிருக்கிற ஜவ்வுக்கு, ஆம்னியன் (amnion) என்றும்—உள்ளிருக்கிற ஜலத்துக்கு உதயஜலம் (லிகர் ஆம்னியை, (Liqour amnii) என்றும்—ஜலத்தில் மிதந்துகொண்டிருக்கிற வஸ்துவுக்கு கரு (எம்பிரயோ, embryo) என்றும் சொல்லப்படும். கோரியன் என்கிற ஜவ்வானது, கோழி முட்டைக்குள்ளிருக்கிற ஜவ்வைபோலொத்தது. வெளிப்புறம் சிலும்பலாயிருக்கும்.

நஞ்சு. மாவு. மாயை. (பிளஸென்டா, Placenta).—கோரியன் என்கிற ஜவ்வானது, கருப்பையோடுஅணைந்திருக்கிறஸ்தானத்தில், டிஜவ்விலிருந்தே நஞ்சு உண்டாகின்றது. ஸ்பஞ்சுபோல் மிருதுவாய் ரத்தநரம்புகளால் ஏற்பட்டு,கருப்பாசயத்துக்கு உட்புறத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும். நஞ்சானது, கருவுக்கு புப்புஸத்துக்குச் சமானம். கருப்பையிலிருக்கிற ரத்தம், நஞ்சுக்கு வருகிற விதத்தைக்குறித்து, அநேகர் அநேகவிதமாய்ச் செல்லுவதுண்டு. கருப்பையிலிருக்கிற ரத்தம் நேராக நஞ்சின் நரம்புகளுக்கு இறங்குகிறதென்கிற எண்ணம் இப்போதில்லை; நஞ்சிலிருக்கிற நரம்புகளின் குஞ்சம் கருப்பையின் நரம்புகளுக்கு மத்தியமாய்ச் சென்று, ரத்தத்தைக் கிரஹிக்கிறதென்கிற ஒரு அபிப்பிராயம் பிறந்திருக்கின்றது. நஞ்சு ஒட்டிக்கொண்டிருக்கிற ஸ்தானம் மாறுபடும். பிரஸவத்துக்கு முன்னுதாய்ச சப்தவேணு (stethoscope) வால், அந்த இடத்தைத் தெரிந்துகொள்ளலாம். இடது பக்கமாய் ஒட்டிக்கொண்டிருப்பது வழக்கம். நஞ்சுக்கு, அநேக வியாதிகள் சம்பவிக்கும், அவைகளால் பிண்டம் பின்னப்படுவதுமுண்டு.

நாபிக்கோடி. நஞ்சுக்கோடி. தொப்புள்கோடி. பியூனிஸ், Funis; அம்பிலிகல் கார்ட், Umbilical cord; நேவல்ஸ் ஸ்டிரிங், Navel string).—இந்தக்கொடியானது, சிசுவுக்கும், நஞ்சுக்கும் சம்பந்தப்பட்டிருக்கும். நஞ்சின் மத்தியத்தில் ஒட்டிக்கொண்டிருப்பது வழக்கம் ஆனால், ஒருவேளை ஓரத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதுமுண்டு; அதற்கு பாடில்டோர் பிளஸெண்டா (Battledore placenta) என்று பேர். கொடியின் நீளம் வித்தியாசப்படும். 18-அங்குல நீளமிருப்பது வழக்கம். 12-அங்குலத்துக்குக் குறைந்தும். 54-அங்குலத்துக்கு அதிகப்பட்டுமிருக்காது. சிசுவு ஜனித்து 15-20 நிமிஷம் சென்றபிறகு, அதிலிருக்கிற நாடி நடைநின்றுவிடும். தொப்புள் கொடியை துண்டித்தபிறகு, அது உலர்ந்து 5-அல்லது 6-ம் நாளில் விழுந்துவிடும். நாபிக்கொடியானது, ஆம்னியன் என்னும் பைக்குள் குழந்தையின் சிரசுக்கு மேலாகத் தொங்கிக்கொண்டிருக்கும்; சிலவேளை சிசுவின் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருப்பதுமுண்டு; அதனோடு சிசு ஜனித்தால், அனேக குற்றங்கள் பாராட்டுவது வீட்டுவழக்கம். கொடியில் முடிவிழுந்திருப்பதுமுண்டு; சிலவேளை கொடித்தாழ்ந்து சிரசுக்கடியில் வருவதுமுண்டு. இவ்வித விகற்பங்களுக்கு, காரணங்கள்— நீண்ட கொடி— அதிகப்பனிநீர்— ஆகாரத்தில் சிறுத்த குழந்தை ஆகிய இவைகளென்று சொல்வதுண்டு.

உதயஜலம். பனிநீர். (லிகர் ஆம்னியை, Liquor amnii) —ஆம்னியை யென்கிற ஜவ்விலிருந்து பனிநீர் ஜனிக்கின்றது; அதில் ஜலமும், உப்புகளுமுண்டு, குறைந்த மாதங்களில், உப்புகள் அதிகமாயிருக்கும். பனிநீரின் அளவு வித்தியாசப்படும்; சிலருக்கு குறையும், சிலருக்கு அதிகமாயிருக்கும். 1-பவுன் இருப்பது வழக்கம். இதின் உபமோகம்.—(1) கருவளர்த்தி ஆரம்பத்தில், சிசுவின் போஷணைக்கு ஆதாரமாகின்றது. (2) உஷ்ணத்தைச் சமரஸப்படுத்துகின்றது. (3) குழந்தைகளுக்கு அடிமுதலியவைகள் படாமல் தடுக்கின்றது. (4) முக்கிய உபயோகமென்னவெனில், பிரஸவகாலத்தில் சவ்வுகளை முன்னுக்குத்தள்ளி, பைபோலேற்பட்டு, கர்ப்பாசயத்தின் வாயை விசாலப்படுத்துகின்றது, அதைப் பனிக்குடமென்று ஸ்திரீகள் கூறுவர்.

15. பிண்டம். (எம்பிரையோ, Embryo)—கிரீடிப்பதில் தரித்த கருவானது, சிலநாட் சென்றபிறகு, கருப்பாசயத்தில் வந்திறங்கும். அப்போது, பிண்டப்பைக்குள் உருண்ட அணு ஒன்று காணப்படும். அது சுருண்டு ரூபங்களேற்படாமலிருக்கும். சிலநாட்சென்றபிறகு சிரசு, உடல், என்கிற பேதம் காணப்படும். பிரதமையில், முள்ளந்தண்டு ஏற்படும். 2-ம் மாதம் கைகால்களின் சாடை அகப்படும்; கால்களுக்கு மத்தியில் முள்ளந்தண்டானது வால்போல் நீண்டிருக்கும்; அந்தக்காலத்தில், அஸ்தி ஜனிக்க ஆரம்பிக்கும்; சுருண்ட அணுவின் உட்பக்கத்திலிருந்து முகம், இருதயம், புப்புஸம், அன்னசயம் முதலிய உறுப்புகள் கிளைக்கும். நேத்திரம் பிறகு வாய், மூக்கு, செவித்துவாரங்கள், ஏற்படும். 2-அல்லது 3-ம்மாதம், ஜனன உறுப்புகள் காணப்படும். ஆனால் ஸ்திரீ புருஷ பேதக்குறிகள் அகப்படாது. சிசுனத்துக்கும், யோனிலிங்கத்துக்கும் (Clitoris), இருக்கிற வித்தியாஸமும், பீஜங்களுக்கும், சினைப்பைகளுக்கும் இருக்கிற வித்தியாஸமும் தெரியமாட்டாது. 7-8-மாதம் வரையில், பீஜங்கள் வயிற்றுக்குள் இருக்கும். 3-4-மாதங்களில் மூக்கு. உதடுகள், கண்மடல்கள், காதுகள், ஆகிய இவைகளுண்டாகி, வயிற்றின் முன்புறமானது, நாபிக்கொடி ஆரம்பத்தில் சேர்ந்து குடல்களை மூடி உள்ளே அடங்கும்படிச் செய்

யும். கைகால்கள் வளர்ந்து, நுனிகளில் விரல்கள் அகப்படும். 5-ம் மாதம் முடிவில், பிண்ட உறுப்புகளெல்லாம் ஒருவிதமாய் பூரணமடையும்; அது முதல் அவைகள் வர்த்தித்துக்கொண்டே வரும். கண்ணில் கிஷ்ணமண்டல துவாரத்தை, ஒருவித ஜவ்வு அடைத்துக்கொண்டிருக்கும்; அது வரவர மறைந்துவிடும். சிசுவின் ரத்த ஓட்டத்தைக் குறித்து, சரீர வியாபார ஸாஸ்திரத்தில் விவரித்திருப்பதைப் பார்வையிடவும். சிசுவின் சரீரத்தின்மேல் ஓர்வித பசையடைந்திருக்கும். அதற்கு, வெர்னிஸ் கேஸியோஸா (Vernix Caseosa) என்று இங்கிலீஷில் சொல்லப்படும். அது சிசுவின் சரீரத்தைக் காப்பாற்றி, சிசுவு யோனித்துவாரத்தை விட்டிறங்கும்போது, வழிக் ததையைக்கொடுத்து, சுலபமாய் வெளிக்காணும்படி செய்கின்றது. சிசுக்கள் கனத்தில் அதிக வித்தியாஸப்படும். பூரணகர்ப்பமடைந்து ஜனித்த பிள்ளையானது, சுமார் 7-ராத்தலிருக்கும்; அந்த கனம்கூடுவதும், குறைவதும்உண்டு. கருப்பப்பாத்திரத்தில் சிசுவு அமைந்திருக்கிற விதமாவது ;— தலை கீழும், கால்கள் மேலுமாய், கைகள்கட்டி மார்போடணைந்திருக்கும்; முழங்கால்கள் முடங்கி பாதங்கள் ஒன்றின்மேலொன்றாய்ப் பின்னிக்கொண்டிருக்கும்; முதுகும் சிரசும் முன்னுக்கு வளைந்து, மோவாய்க்கட்டை மார்போடணைந்திருக்கும். இந்தப் பிரகாரமாய், உறுப்புகளெல்லாம் ஒடுங்கிக் கருக்குழியில் சிக்கிக்கொண்டிருக்கும்.

பிரஸவவேதனையால் கஷ்டமடைந்து கர்ப்பப்பாத்திரத்தைவிட்டு இவ்வுலகத்தில் வந்தபிறகு, சிசுவு வீறிட்டழுகும்; அத்த ரோதனத்தால், சுவாஸப்பைக்குள் பிராணவாயு சென்று, உஸ்வாஸ நிஸ்வாஸங்களுண்டாகி, ரத்தம் பிரவேசிக்காத புப்புஸத்தில் ரத்தம்சென்று பரவும்; இருதயத்திலிருக்கிற துவாரம் (Foramen ovalæ) கிரமேணயச் சிறுத்து அடைந்துவிடும். குழந்தையிலிருக்கிற சில வித்தியாஸங்களெல்லாம் மாறி, பெரியவர்களுக்கு இருப்பதுபோல் ரத்தஓட்டம் வந்துவிடும். ஆகாரத்தைத் தகிக்க ஜீரண சக்தியும் உண்டாகும்; பித்தச் சுறப்பும் அதிகப்படும்; மலமூத்திராதிகள்போக ஆரம்பிக்கும்; பார்வை, சப்தம், இவைகளுக்கும் உணர்ச்சியுண்டாகும்; ருசி, கந்தம் இவைகளுக்குத் தெரிந்துகொள்ளுகிற தன்மை பிறக்கும்; விவேகமும் அறிவும் பிறக்கச் சிலநாட் செல்லும்: நாளுக்கு நாள் இவைகள் கொஞ்சங்கொஞ்சமாய் விருத்தியடையும். பிரதமையில் மந்தப்பட்டிருந்த மூளையானது, இப்போது பஞ்சேந்திரியங்களுடைய சேஷ்டைகளை உணரும்படியான தன்மையையடைந்து சரீர வியாபாரங்களுக்கு ஒரு நாயகனாய் ஏற்படுகின்றது.

2. கருப்பச் சின்னங்கள்.

(ஸைன்ஸ் ஆவ் பிரக்னன்ஸி, SINS OF PREGNANCY).

கருதரித்தபிறகு ஸ்திரீக்குக் காணுகிற குறிகள் அனேகம்; அவைகளில் சில குறிகளைமாத்திரம் இவ்விடத்தில் விவரிக்கப்படும். ஸ்திரீக்குச் சரீரம் ஸ்தூலிக்கும்; நாடிபெருத்து நடை தீவிரப்படும்; ரத்தாதிக்கமும் காணும்; குணம், நடவடிக்கை இவைகள் மாறும்; தின்பண்டங்களில் அதிக பிரேமை உண்டாகும்; மூத்திரம் விகற்பப்படும்; சரீரமேனிமாறும், இத்தியாதி குணங்கள் கருதரித்தபிறகு கண்டபோதிலும், அடியில் காண்பவைகளே பிரதானமானவைகளாகும்.—

1.—ருது ஸ்தம்பனம் தலைமுழுக்கு நிற்குதல். (ஸெஸ்ஸேஷன் ஆவ் மென்ஸ்டுருயேஷன், Cessation of Menstruation). 2.—பிராதக்காலவமனம். காலைவாந்தி (மார்னிங் ஸிக்னெஸ், Morning Sickness). 3.—திரவ

வர்த்தனம். வாயில் அதிக நீர்சுரப்பு. (ஸாலிவேஷன், Salivation). 4.—ஸ்தனப்பிரமணம், க்ஷீரோத்பத்தி. ஸ்தனங்கள் விம்மிக் கொஞ்சம் வேதனையெடுக்குதல்; முலைக்காம்புக்கடியில் இருக்கிற விருத்தவடிவு அதிகமாய்க் கறுக்குதல், சிலநாட் சென்றபிறகு பாலும் சுரக்குதல். (மாம்மெரி ஸிம்பெதீஸ், Mammary Sympathies). 5.—உதரப்பிரமணம். வயிறு படிப்படியாய்ப் பெரிதாகுதல்; கையால் வயிற்றை அழுத்திப்பார்த்தால், கருப்பை கல்லுப்போல் காணப்படுதல். (என்லார்ஜ்மெண்டு அவ் தி அப்டொமென். Enlargement of the abdomen). 6.—பிண்டசலனம். பிண்டத்தின் அசைவு தாய்க்குத் தெரிதல். (குவிக்கினிங், Quickening). 7.—கர்ப்பதாடனம். யோனிக்குள் விரல்களை விட்டுத் தட்டிப்பார்க்குதல். (பெல்லாட்மெண்ட், Ballottement). 8.—சப்தவித்ஞானம். வயிற்றின்மேல் சப்தவேணுவை வைத்து உற்றுக்கேட்டால் பிண்டத்தின் இருதயநடையும் (பல்சேஷன் ஆவ் தி பீடல் ஹார்ட், Pulsation of the fœtal Heart), நஞ்சில் ரத்த ஓட்ட சப்தமும் (யூட்ரையின் ஸூப்பில், Uterine Souffle) கேழ்க்கப்படும். (ஆஸகல்டேஷன் Auscultation). இவைமுதலியவைகள் கர்ப்பச்சின்னங்களாகும். ஒவ்வொன்றைக்குறித்து விரிவாய்த் தெரிவித்திருப்பதை, வேறு கிரந்தங்களில் காணலாம். இக்குறிகள் சரீரப்பிரகிர்த்திக்குத் தக்கபடி விகற்பப்படும் அவ்விகற்பங்களைத் தீர்க்க விசாரணைசெய்து கர்ப்பத்தை நிச்சயிப்பது ஆயுள்வேதியனுடைய கடமை; ஏனெனில் இவருடைய சாக்ஷியின்மேல் ஒரு ஸ்திரீயின் பாதி விர்த்தியமும், சம்பத்தும், புத்திர வாத்சல்லியமும் அடையவேண்டியதாகின்றன.

3. கர்ப்பகாலப் பிரமாணம்.

(டியுரேஷன் ஆவ் பிரக்நான்ஸி, DURATION OF PREGNANCY.)

கருதரித்து 10-மாதம் அல்லது 40-வாரம், அல்லது 280-நாட்சென்றபிறகு சிசுஜன்மிக்கும்; இந்த காலப்பிரமாணம் சிலருக்கு அதிகப்படும், சிலருக்கு குறையும். நமது தேச ஸ்திரீகள் மாதமுழுக்காகிற கணக்கைக் கிரமமாய் வைப்பது அரிது; ஆகையால், அவர்களில் கர்ப்பகாலப்பிரமாணம் நிதானித்துச் சொல்வது பிரயாசை.

கர்ப்பகாலப் பிரமாணத்தை எளிதில் காண்பிக்கிற ஓர அட்டவணை. Mr. Haden's "Ready Reckoner."

9-அல்லது பஞ்சாங்க மாதக் கணக்கு.			10-மாதம் அல்லது பூர்வ, அமரபக்ஷ கணக்கு	
முதல்.	வரையில்.	நாட்கள்.	வரையில்.	நாட்கள்.
ஜனவரி 1	செப்டம்பர் 30	273	அக்டோபர் 7	280
பிப்ரவரி 1	அக்டோபர் 31	273	நவம்பர்மீ 7	280
மார்ச்சு 1	நவம்பர் 30	275	டிசம்பர்மீ 5	280
ஏப்ரல் 1	டிசம்பர் 31	275	ஜனவரிமீ 5	280
மேமீ 1	ஜனவரி 31	276	பிப்ரவரிமீ 4	280
ஜூன் 1	பிப்ரவரி 28	273	மார்ச்சுமீ 7	280
ஜூலை 1	மார்ச்சு 31	274	ஏப்ரல்மீ 6	280
ஆகஷ்டு 1	ஏப்ரல் 30	273	மேமீ 7	280
செப் 1	மே 31	273	ஜூன்மீ 7	280
அக்டோபர் 1	ஜூன் 30	273	ஜூலைமீ 7	280
நவம்பர் 1	ஜூலை 31	273	ஆகஷ்டுமீ 7	280
டிசம்பர் 1	ஆகஷ் 31	274	செப்டம்பர் 6	280

இதை வாசிக்கிற விதமாவது.—ஒரு ஸ்திரீக்கு ஜூலை மாதம் 1௳ வீடு தூரம் கண்டு, பிறகு நின்றுவிட்டால், 9- மாதக் கணக்குக்கு, மார்ச்சு மாதம் 31௳ ஆவது அல்லது, 10-மாதக் கணக்குக்கு ஏப்ரல் மாதம் 6௳ ஆவது பிரஸவிக்கவேண்டியது. மற்றொரு பெண்ணுக்கு, மே மாதம் 10௳ மாத விடாய் கண்டு; பிறகு நின்றுவிட்டால், 9-மாதக் கணக்குக்கு, ஜனவரி மாதம் 31௳யோடு 10-நாள் கூட்டியாவது, அல்லது 10-மாதக் கணக்குக்கு, பிப்ரவரிமாதம் 4௳யோடு 10-நாள் கூட்டியாவது, பிரசவிக்கவேண்டியது. இவ்விதமாய்க் கண்டுகொள்ளவும்.

பிரஸவகாலத்தை நிர்ணயிக்க வேறொரு விதமுமுண்டு; அது எவ்விதமெனில்: கடைசியில் வீடு தூரமான நாளைக் குறித்துக்கொண்டு, 3-மாதம் பின்னுக்குக் கணக்கிட்டு, அதனோடு 7-நாள் கூட்டிக்கொண்டால்,பிரஸவநாளைக்குறித்து காட்டும் எப்படியெனில், ஜூன்மாதம், 10௳ வீடுதூரமானால், 3-மாதம் பின்னிட்டு கணக்கிட்டால், மார்ச்சுமீ 10௳ஆகும்; அதனோடு, 7-நாள் கூட்டிக்கொண்டால் 17௳ஆகும் ஆகையால் மார்ச்சுமீ 17௳க்கு பிரஸவமாகவேண்டிய தென்றறியவும்.

4. கருவழிவு

(ஏபார்ஷன், ABORTION)

6-மாதத்துக்குள் பிண்டம் வெளிக்கண்டுவிட்டால், அழிகர்ப்பம் என்றும், (ஏபார்ஷன், Abortion) அதற்கு மேல்பட்டு, பூரணகாலத்துக்கு முன் கண்டால், அசாலப் பிரஸவமென்றும், (பிரிமெச்யூர்லேபர், Premature labour) சொல்லுவர். 6-மாதத்துக்குள் ஜனிக்கிற சிசு ஜீவிக்காது. 6-மாதம் சென்றபிறகு ஜனிக்கிற சிசுக்கள் சீவிப்பதுண்டு; ஆகையால் இந்த வித்தியாசம் ஏற்படாது.

நமதுதேசத்தில் ஸ்திரீகளுக்கு புணர்விவாகம் செய்யக்கூடாதென்று இருக்கிற நிபந்தனையால், யவ்வனவிதவைகள், காமவிகாரத்தை அடக்கமாட்டாமல், வரப்போகிற காரணத்தை மறந்து, கள்ளப்புருஷனோடின்பமுற இணைந்து, கருதரித்துவிட்டால், அது பந்துஜனங்களுக்குத் தெரியாதிருக்கும்படி கருவைக் கரைக்கும்பொருட்டு, கள்ளி, சித்திரமூலம், முதலிய வேக மருந்துகளைத் தின்று, தேக சவுக்கியத்தை விருதாவில் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். சித்திரமூலத்தை கருப்பையின் வாயில்வைத்து, புண்ணாக்கி பிண்டத்தை வெளிப்படுத்துவதும் உண்டு. இந்த செய்கை துரைத்தன சட்டத்துக்கு விரோதமாகையால், இதைச் செய்துகொள்ளுகிற ஸ்திரீக்கும், செய்கிறவர்களுக்கும், பலமான தண்டனை கிடைக்கும். அழிகர்ப்பத்தில் அபாயமில்லை; ஆனால் ரத்தம் விஸ்தாரமாய்க் கண்டால், கெடுதி சம்பவிக்கும்.

காரணங்கள்.—இது அனேக காரணங்களால் பிறக்கின்றது; ஒரு தடவை கண்டால், அது வழக்கமாகி விடுவதும் உண்டு. தேக அஸவுக்கியம், கருப்பைவியாதி, துர்ப்பலம், பிண்டத்துக்கு வியாதிகண்டு உள்ளேஇறந்துவிடுதல், மேகவியாதி, பயம் கோபம், சந்தோஷம், விசனம், வயிற்றுமேல் அடிபடுதல், இருமல், வேகமான பேதிக்குச் சாப்பிடுதல், சுரம் சீதபேதி, ஆகிய இவை முதலிய காரணங்களால், கருவழிவு சம்பவிக்கும்.

ரூபங்கள்.—கரு வெளிப்படும்போது, அசவுக்கியமும், ஆயாஸமும் முதுகில் வேதனையும் முதல் கண்டு பிறகு பிரஸவ வேதனைக்குடைய குணங்களெல்லாம் காணும்; ஆள் பிரமிக்கும்படியாய் ரத்தம் வடிவதுண்டு, முதுகில் நோய் பிறந்து இடுப்பைச் சுற்றி வயிற்றுக்கு வந்து தொடைகளுக்கிறங்கிவிடும்; வேதனை நின்று நின்று காணும்;

பிறகு கிரமேணய் அதிகரிக்கத் தீவரப்படும்; வாந்தியும் காண்பதுண்டு; நாடி தீவிரமாய் நடக்கும்; சரீரம் உஷ்ணமாகும்; முக்கலும் கண்டு முடிவில் பிண்டம் வெளிப்படும். கருவழிவு வழக்கத்தில் வந்தவர்களுக்கு, உபத்திரவமில்லாமலே பிண்டம் வெளிப்பட்டுச் சீக்கிரத்தில் உடம்பு சவுக்கியமாகிவிடும். மேல்கண்ட குறிகள் தேகப்பிரகிர்திக்குத் தக்கபடி சிலருக்கு பிரபலமாகவும், சிலருக்கு அற்பமாகவுமிருக்கும்.

சிகிச்சை.—கரு வெளிப்படாமலிருக்கும்படிச் செய்வது, நமது முக்கிய காரணம். இடுப்பு நோவெடுத்துப் பிண்டம் வெளிகாணுகிற குறிகள் கண்டால், ஸ்திரீயைப் படுத்த படுக்கையில் நிம்மதியாய் வைத்து, பத்தியபோஜனம் செய்விக்கவும். அபினியைக் கொடுத்தால், பிரசவநோயைத் தணித்து, வேதனையில்லாமல் செய்யும்; ஈரத்துணியை அல்குல்மேல் போட்டுவைக்கவும். ரத்தப்பெருக்கை நிறுத்துவதே இதில் பிரதானச் சிகிச்சை. அதிக ரத்தம் காணுமல், இடுப்புநோய் அதிகரித்து, பிண்டம் வெளிக்கு வந்துவிட்டால், நாம் செய்யவேண்டிய சிகிச்சை அற்பமாகும். பிண்டம் மாத்திரம், வெளிகண்டு, நஞ்சுவராமல் உள்ளவே நின்று இருந்தால், விரலைவிட்டு அதை நீக்கிவிடவேண்டியது. ஒருவேளை ரத்தம் விஸ்தாரமாய்க் கண்டால், கருவை சீக்கிரத்தில் வெளிப்படுத்தி, ரத்தத்தை நிறுத்துகிற உபாயத்தைத் தேடவேண்டியது. அபினி, கஞ்சாதிராவகம், இவைகளில் ஒன்றைக் கொடுக்க உதவும். ரத்தம் நின்றபிறகு ஸ்திரீயைப் படுக்கையில் வைத்து, செவ்வையாய் அழுக்கு விழும்படி செய்து, (lochia) மலபந்தத்தை நீக்கி, காரமில்லாமல் பத்தியபோஜனம் செய்விக்கவேண்டியது. பிண்டம் கலங்கிப்போகுதல் வழக்கமாகிவிட்டால், ஸ்திரீயை புருஷனிடத்திலிருந்து பிரத்தேகப்படுத்தி சிலநாள் வைத்தால், அந்தத் துர்க்குணம்மாறிவிடும்.

5, கர்ப்ப ஸ்திரீ ரோகங்கள்.

(டிஸீஸெஸ் ஆவ் பிரக்நான்ஸி, DISEASES OF PREGNANCY).

கர்ப்பஸ்திரீகளுக்குக் காணுகிற வியாதிகள் அனந்தம். காலைவாந்தி, நெஞ்செரிவு, மலபந்தம், பேதி, உமிழ்நீர்ப்பெருக்கு, ரத்தபுஷ்டி, தலைவலி, மூலரோகம், மூர்ச்சை, நித்திராபங்கம், ஸ்தனசூலை, மூத்திரக் கிரிச்சரம், அல்குல் நமைச்சல், ஆகிய இவைகளால் உபத்திரவப்படுகிற மாதர்களுக்கு, தகுதியான சிகிச்சைசெய்து, ஷை துர்க்குணங்களைக் கண்டிக்கவேண்டியது. இவைகளுக்கிச் சிகிச்சை முன்னிட்டுத் தெரிவித்திருக்கின்றது.

2-ம் பாகம்

1. பிரஸவம்

(பார்டியூரிஷன், PARTURITION).

கருப்பையிலிருக்கிற சிசு முதலியவைகள் வெளிப்படுகிற கிரியைக்கு. பிரஸவம், அல்லது பிள்ளைப்பேறு என்று சொல்லுவர். பிரஸவத்தில், கருப்பைச் சுருங்கி சிசுவை வெளிப்படுத்தும்; கருப்பை சுருக்கும்போது, வேதனை பிறக்கும், அதற்கு பிரஸவவாயு, பிரஸூதவாயு, பிரஸவவேதனை பிரஸவநோய், இடுப்புவலி, இடுப்புநோவு என்று பலவாறாய்ச் சொல்லுவார்.

Classification of parturition.—பிரஸவத்தில், 4 சாதிகளுண்டு கிரமப்பிரஸவம், கஷ்டப்பிரஸவம், கிரமாதீதப் பிரஸம், விபரீரப் பிரஸவம் ஆகிய இவைகளாம்.

கிரமப் பிரஸவம். (நாடியுரல் லேபர், Natural Labour).—சரிமாதம் சென்று, சிரசு உதயமாகி, இடுப்பு நோவெடுத்து, 90-நாழிகைக்குள் தாய்க்கும், பிள்ளைக்கும் வருத்தமில்லாமல், சிசு உயிரோடு பிறப்பதற்கு, கிரமப்பிரஸவம் என்று பெயர்.

கஷ்டப்பிரஸவம். (டிப்பிகல்ட் லேபர், Difficult Labour).—90-நாழிகைக்கு மேல் படுகிற பிரஸவவேதனைக்கும், சிசுவின் தலை உள்ளே சிக்கிக்கொண்டு, வெளிப்படுவது பிரயாசையாய் இருக்கும்போது, ஆயுதங்களைக் கொண்டு வெளிப்படுத்துவதற்கும், கஷ்டப்பிரஸவம் என்று பேர்.

கிரமாதீதப்பிரஸவம். (பிரிடர்நாடியுரல் லேபர், Preternatural Labour).—சிரசு உதயமாகாமல், பிரஷ்டம், கை, கால் முதலிய வேறு உறுப்புகள் உதயமாகிறதற்கு, கிரமாதீதப் பிரஸவம் என்று பேர்.

விபரீதப் பிரஸவம் (காம்பிளக்ஸ் லேபர், (Complex Labour).—பிரஸவகாலத்தில், பெரும்பாடு காணுதல், வலிகாணுதல், இரட்டப்பிள்ளைப் பேறு ஆகிய இவைகளுக்கு, விபரீதப் பிரஸவம் என்றுபேர்.

உதயம். (பிரஸன்டேஷன், Presentation) —பிரஸவத்தின் முதல் வெளிப்படுகிற, சிசுவின் உறுப்புக்கு, உதயம் என்று பேர். சிரசு வந்தால் சிரசு உதயம்—முகம் வந்தால், முகம் உதயம்—கால் வந்தால், கால் உதயம்—கை வந்தால், கை உதயம் என்று சொல்லப்படும்.

பிரஸவத்தில், கருப்பையின் வாயை, ஆப்பு அடித்ததுபோல விசாலமாக்கிவைக்கிற ஜலப்பைக்கு, பனிக்குடமென்று பேர்.

பிரஸவகால சமயங்கள். (Stages of Labour).—பிரஸவகாலம், 3-சமயங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. பிரஸவநோய் ஆரம்பித்து, கருப்பையின் வாய் பூரணமாய் விரிகிறவரையில், முதல் பாதம் (பர்ட்ஸ்டேஜ், First stage) என்று சொல்லப்படும்—அதுமுதல், பிள்ளை வெளிப்படுகிறவரையில், இரண்டாம் பாதம் (ஸெகண்ட்ஸ்டேஜ், Second stage) என்று கூறுவர்— நஞ்சானது கருப்பையை விட்டுப் பிரிந்து, வெளிப்படுகிறவரையில், மூன்றும் பாதம் (தர்ட்ஸ் டேஜ், Third stage) என்று பேர்பெறும்.

பிரஸவக்கிரியாவித்ஞாநீயம். (மெகானிஜம் ஆப் பார்டியூரிஷன், Mechanism of parturition).—பிரஸவநோய், (பேயின், Pain) என்பது, கருப்பை சுருங்குதலுக்கு அருத்தமாகும்; தாய் படுகிற வேதனையல்ல. கருப்பையிலிருக்கிற சிசுவை உதைத்து வெளிக்குத் தள்ளுகிற கிரியை கருப்பைக்கு முக்கியமாய் இருக்கின்றது. பிரஸவநோய் அல்பமாய் இருந்தால், சிசு வெளிப்பட தாமிஸப்படும்; பிரசூதவேதனை எவ்வளவு பிரபல்யமாய் இருக்கின்றதோ அவ்வளவுக்கும், பிரஸவத்துக்கு அனுகூலம்; ஸ்திரீ ஹிம்ஸைப் படுகிறாளென்று, அதைநாம் குறைக்க முயற்சி தேடலாகாது. ஆரம்பத்தில் நோய், அல்பமாய் இருக்கும்; பிறகு படிப்படியாய் பிரபலப்படும். சரீரபிரகிர்த்திக்குத்தக்கபடி பிரஸவநோய் விகற்பப்படும்; கஷ்டவேலைச் செய்யும் பெண்கள் இலேசாய் பிரஸவிப்பார்கள்; சுகானுபவத்திலிருப்பவர்கள் மெத்த வருத்தப்படுவார்கள்.

உதயமாகிற உறுப்பை நிதானித்துக்கொள்ளுவதேப்படியெனில்;—

சிரசை.—அதின் அழுத்தத்தினுலும், ரேகைகளாலும், உச்சித்துவாரங்களினுலும் தெரிந்து கொள்ளவேண்டியது.

ஆஸனத்தை.—அதின் மிருதுத்வத்தினுலும், பிட்டங்களுக்கு மத்தியில் இருக்கிற விடைவுனுலும், குதம், குயில்மூக்கெலும்பு, பீஜம், பெண்குறி ஆகிய இவைகளினுலும் தெரிந்துகொள்ளவேண்டியது.

முழங்காலே.—அதின் உருண்ட ரூபத்தினுலும், தொடையெலும்பின் குழிகளினுலும், தெரிந்துகொள்ளவேண்டியது.

பாதத்தை.—அதின் நீண்ட ரூபத்தினுலும், ட-காரவடிவினுலும், சமனுகிய விரல்களாலும், குறுகிய குதிகாலாலும், தெரிந்துகொள்ளவேண்டியது.

முழங்கையை.—ஒலிக்கிரேனன் பிராஸெஸ் என்னும் பிதுக்கத்தின் கூர்மையால் கண்டறியவேண்டியது.

அஸ்தத்தை.—அதின் குறுகியரூபத்தினுலும், சிறுத்தும்பெருத்துமிருக்கிற விரல்களாலும், கவ்வைப்போல் பிரத்தேகப்படுத்த கூடுமாகிய பெருவிரலாலும், தெரிந்துகொள்ளவேண்டியது.

பிரசூத வாயுவில் ஒரு கிரமமுண்டு; ஆரம்பத்தில் அது அற்பமாயும், பிறகு கிரமேணுய் வர்த்திக்கிறதாயுமிருக்கும்; கொஞ்சநேரம் உக்கிரமாயிருந்து, சீக்கிரத்தில் தணிந்துவிடும். இவ்விதமாய் விட்டுவிட்டு வரும், பிரஸவகாலம் சமீபமாக ஆக, பிரசூதவேதனையும் தீவிரமாய்க் கண்டு நேரப்பட இருக்கும். பிரசூதவாய்வு கருப்பையின் கழுத்தில் ஆரம்பித்து, ஊர்த்தமுகமாய் வியாபிக்கும். நோய் கண்டிருக்கிறபோது, கருப்பையை ஸ்பரிசித்து பார்வையிட்டால், அது அழுத்தமாய், உருண்டையாய், கொஞ்சம் முன்னுக்கு வந்திருக்கும்; நோய் நின்ற பிறகு மிருதுவாகிவிடும். முதல்பாதத்தில், கருப்பையின் முயற்சியேயுண்டு; இரண்டாம் பாதத்தில், வயிற்றுச் சதைகளும், ஈரல்தாங்கியும் சகாயமாகும், அதுவே முக்கலுக்குக் காரணம். பிரஸவ முடிவில் யோனிச்சதைகள் சுருங்கி, நஞ்சை வெளிப்படுத்திவிடும். பிரசூத வாயுவு மனதுக் கயிக்கியப்படாமல் இருந்தபோதிலும், மனேசலனங்களினல் அது பிறப்பதும் உண்டு. கோபம், பயம், ஆச்சரியம் ஆகிய இவைகளால் வேதனை நின்றுபோவது வழக்கம்.

இடைக்குழியில் சிசுவின் சிரசு 4-விதமாய் அமைந்திருக்கும், அவைகளில் முதல் காண்பிக்கப்போகிற ஸ்திதியிலிருப்பதே வழக்கம்.—

பிரதமஸ்திதி (*1st position*).—இதில், சிசுவின் பிடரியும், உச்சிப்பின் துவாரமும், தாயின் இடதுதொடை பக்கமாயும், முகமும், உச்சிமுன் துவாரமும் வலதுபக்கம் திரிகஸ்தான எலும்பின் ஓரமாயும், மூலவாட்டாய் அமைந்திருக்கும். கருப்பைக்குள் விரலேப் பிரவேசித்தால், சிசுவின் வலது பித்திகை எலும்பின் பிதுக்கத்தின்மேல் உறுத்தும்.

துவிதியஸ்திதி. (*2nd position.*)—இதில், சிசுவின் பிடரியானது தாயின் வலது தொடைப்பக்கமாயும், முகம் இடது பக்கம் திரிகஸ்தான எலும்பின் ஓரமாயும் இருக்கும்.

திரிதியஸ்திதி. (*3rd position*)—இதில், சிசுவின் முகம் தாயின் இடது தொடைப்பக்கமாயும், பிடரி வலது இடுப்பை நோக்கியும், மூலவாட்டமாய் அமைந்திருக்கும். உச்சி முன் துவாரம் இடது தொடைப்பக்கமாய் இருக்கும்.

சதுர்த்தஸ்திதி (*4th position.*)—இதில் சிசுவின் முகம், தாயின் வலது தொடைப்பக்கமாய் அமைந்திருக்கும்.

சிரசு இடைக்குழி வரம்புக்குமேல் பிரதம ஸ்திதியிலிருக்கும்போது, உச்சித்துவாரங்கள் இரண்டும் சமமாய் இருக்கும்; பிறகு அதே ஸ்திதியில் குழிக்குள் இறங்கும்; அல்லது பிடரி, முதல் கொஞ்சம் தாழ்ந்து, பிறகு முகம்தாழும்; இடைக்குழியில் சிரசு இறங்கினபிறகு, பிடரியானது வலது பக்கம் கொஞ்சம் திரும்பி மர்மஸ்தான எலும்பின் வளைவுக்கு அடியிலிறங்கி அதில் ஊன்றிக்கொள்ளும்; முகம் திரிகஸ்தான எலும்பின் வளைவைத் தழுவி, பகத்தை விரித்துக்கொண்டு, வெளிக்கு வந்து, தாயின் வலது தொடைப்பக்கமாய்த் திரும்பிவிடும்: பிறகு தோளும், உடலும், கால்களும் வெளிப்படும்.

8. கிரமப்பிரஸவம்

(நாடியுரல் லேபர், NATURAL LABOUR).

சிரசு உதயமாகி, 24-மணி நேரத்துக்குள், தாயாருக்கும், சிசுவுக்கும் யாதொரு உபத்திரவமில்லாமல், பிரஸவம் முடிந்து நஞ்சும் கிரமமாய் வெளிப்பட்டுவிடுவதே, கிரமப்பிரஸவமாம். தலைச்சன் பிள்ளைப்பேறு எப்போதும் கொஞ்சம் கஷ்டமாயிருக்கும். பிரஸவகால சமீபத்தில் சில குறிகள் காணும்; அவைகள் பூர்வரூபங்களெனப் பேர்பெறும் (Precursory symptoms).—கருப்பை கீழுக்கிறங்கி, வயிறு சற்றே வாடும். (Subsidence of the abdomen)—நீர்கடுத்து அடிக்கடி இறங்கும். (Frequent micturition)—வயிறுகடுப்பு, முக்கல் அல்லது போதி காணும். (Griping, tenesmus, or diarrhœa)—வயிற்றில் பிசைவதுபோல் இருக்கும் வேதனையிராது. (Painless uterine contractions)—யோனியிலிருந்து சிலேத்மநீர் வடியும், அதில் ரத்தக்கீற்றுகள் அகப்படும். (Mucous discharge from the vagina; the shows). இக்குறிகள் கண்டால், பிரஸவகாலம் சமீபமாச்சுது என்று, நிச்சயிக்கவேண்டியது. பிரஸவநோய் காண 24-மணி நேரத்துக்குமுன், ஷை லக்ஷணங்கள் பிறப்பது வழக்கம். சிலருக்கு இவைகளொன்றும் காணமலே, பிரசூதவேதனை ஜனிப்பதும் உண்டு.

பிரஸவ லக்ஷணங்கள். (Symptoms of labour).—கருப்பை சுருங்க ஆரம்பமாவதே பிரஸவத் துக்கம். பிரசூதவேதனையில், மித்தியாவேதனை (பால்ஸ் பெயின்ஸ், Flase pains) என்றும், நிஜவேதனை (ட்ரூ பெயின்ஸ், True pains) என்றும், இரண்டுசாதிகளுண்டு; அதிக ஆயாசம், அஜீரணம், மலபந்தம், குளிர்ச்சி ஆகிய இவைமுதலிய அநேக காரணங்களால் மித்தியாவேதனை பிறக்கும்; அது கிரமமாய் வராது; சிலேத்மநீரும் யோனியிலிருந்து வெளிப்படாது; கருப்பாஸயமுகம் விரியாது; பனிக்குடமும் ஏற்படாது. நிஜமான பிரசூதவேதனையில் நோய் முதல் முதுகில் காணும்; பிறகு படிப்படியாய் இடுப்பைச் சுற்றிக்கொண்டு வயிற்றுக்குவந்து தொடைகளுக்கிறங்கிவிடும். இவ்விதமாக கிரமமாய் நின்று நின்று காணும்; கருப்பை வாயை விசாலப்படுத்தி பனிக்குடம் பிதுங்கச்செய்யும். நோயிருக்கும்போது யோனியில் விரலைவிட்டு உயரத்தில் இருக்கிற கருப்பையின் வாயைத் தொட்டுப்பார்த்தால், அது மெதுவாய் விரிகிற சாடையும் பனிக்குடம் இறங்குகிற விதமும் அகப்படும். முதல் பாதத்தில் பிரஸ்வஸ்திரீ அங்குமிங்கும் திரிந்துகொண்டிருப்பாள், ஏக்கமுற்று பயந்து அழுவாள். சிலர் சந்தோஷமாய் இருப்பதும் உண்டு. சிலருக்கு அத்தருணத்தில் வாந்திகாணும்; கருப்பையைத் தொட்டு பார்த்தால், திடமாய் இருக்கும்; அதின்முகம் பூரணமாய் விரிந்தபிறகு, பனிக்குடம் உடைந்து நீர் வெளிப்படும். முதல் பாதத்தில் பிரஸவநோய் இடுப்பைக் கத்தரிப்பது

போல் (கட்டிங் ஆர் கிரைன்டிங் பெயின்ஸ், Cutting or grindig pains) இருக்கும். அப்போது ஸ்திரீ இரைச்சலோடு கீச்சிட்டழுவள். இரண்டாம் பாதத்தில் வேதனையோடு முக்கல் காணும், (பேரிங்டவுன் ஆர் போர்ஸிங் பெயின்ஸ், (Bearing down or forcing pains) ; சமீபத்திலிருக்கிற எதை பிடித்துக்கொண்டு முக்குவள். நோயும் அடிக்கடி சீக்கிரமாய் வரும், நேரப் பட நிற்கும். மேல்கண்ட இரண்டு சாதி வேதனைகளாலேயே, மருத்துவத் தில் பழகினவர்கள், பிரஸவம் இன்ன சமையமென்று அறிந்துகொள்வர். சிசு ஜனித்தபிறகு, மூன்றும் பாதத்தில் வேதனை நின்றுவிடும். வயிற்று மேல்கையை வைத்துப் பார்த்தால், அது கொஞ்சம் துவண்டும், கருப்பை சிறுத்தும் இருக்கும். கொஞ்சநேரம் நோவில்லாமலிருந்து, மறுபடியும் கருப் பைச் சுருங்க ஆரம்பித்து, பிரசூதவேதனையை உண்டாகும்; அந்த வேதனை யில் நஞ்சு பிறக்கும். சிலவேளை குழந்தையோடு நஞ்சும் ஏககாலத்தில் பிறப் பதும் உண்டு. சுமார் 20-நிமிஷத்தில் நஞ்சு வெளிப்படுவது வழக்கம். ஆனால் 5-10-15-நிமிஷத்துக்குள்ளும், 30-நிமிஷம் சென்றபிறகும் பிறப்ப துண்டு. 1-1½-மணி நேரம் தாமதித்து, நஞ்சு வெளிக்காணுதிருந்தால், ரிடே யின்ட் பிளஸென்டா (Retained placenta) என்று இங்கிலீஷில் சொல்லப் படும்.

கிரமப்பிரஸவநிர்வாகம். (மானேஜ்மென்ட் ஆப் நாடியுரல் லேபர், Management of Natural Labour).—நமது நாட்டில் மருத்துவம்பார்ப் பது ஸ்திரீகளாகையால், அவர்களைக்கொண்டு, பிரஸவகாரியத்தை நடப்பித் துக் கொள்ளவேண்டியது. கிரமப்பிரஸவத்தில் சகலமும் அனுகூலத்தி லிருந்தால், நாம் விசேஷித்து செய்ய ஒன்றுமிராது; கையிட்டு, தொந்திரவு செய்யாமலிருப்பதே முக்கிய விஷயம். மருத்துவ வைத்தியனுடைய கை யிருப்பில் இருக்கவேண்டியவைகள் என்னவெனில்,—மூத்திரமெடுக்குங் குழல்—கத்தரிக்கோல்—லாடனம்—அர்கட் ஆவ்ரை—டார்டர் மெடிக்— குண்டூசிகள்—சன்னநூற்கயிறுகள் அல்லது நாடா—வயிற்றைக்கட்டத் துணி—சாராயம் ஆகிய இவைகளாம்.

பிரஸவ ஸ்திரீயினிடத்துக்குப் போனபிறகு, நாம் முதல், ஸ்திரீயின் தற்சமய ஸ்திதியையும், அவள் பிரஸவவேதனையில் இருப்பதும், அல்லது இல்லாததும், அப்படி இருந்தால், உதயமாகிற உறுப்பையும், குழந்தையின் நிலையையும், பிரஸவத்தின்கிரமத்தையும்,பிரஸவ முடிவின் உத்தேசத்தையும் தெரிந்துகொள்ளவேண்டியது. நாடிநடை, மலக்கிரமம், நான்கு ஆகிய இவைகள் தேகஸ்திதியைக் காண்பிக்கும். அங்குலி பரீக்ஷைசெய்து, மற்ற வைகளைத் தெரிந்துகொள்ளவேண்டியது. ஸ்திரீயை இடதுபக்கமாய்ப் படுக்க வைத்து, முழங்காலை முடக்கி வயிற்றோடணைத்துகொள்ளச்செய்து, நோய் காணுகிறபோது, வலதுகை முன்விரலுக்கு எண்ணெயிட்டு, போனிக்குள் செ த்தி, தழவிப்பார்த்தால் கருப்பையின் முகம் அகப்படும். பிரஸவ வேதனை யில் அதுவிரிந்து, பெரிதாகும்; வெற்றுநோயில், அதற்கசைவிராது. பனிக்கு டம் உடையாமல் இருக்கும்போது, கைப்பழக்கமில்லாதவர்கள், உதயம் இன் னதென்று கண்டுகொள்ளுவது பிரயாசம். அது உடைந்திருந்தால், உதயமா கிற உறுப்பு விரலுக்கு அகப்படும். அவைகளைத் தெரிந்துகொண்டு, யோனி யின் பிரமாணத்தையும், திரிகஸ்தான எலும்பின் பிதுக்கத்தையும் கண்டறி யவேண்டியது ; அந்த எலும்பு, உள்ளுக்கு மெத்த பிதுக்கி இருந்தால், இடை க்குருப்பிரமாணம் சிறுத்து, சிசுவின் தலை இறங்குவது பிரயாசையாகும்; அப்போது நமது நாட்டில் செய்கிற மந்திர முதலிய பிரயத்தனங்கள் ஒன்

றும் பலிதமாகாது ; ஆயுதம் பிரயோகஞ்செய்து, சிசுவை வெளிப்படுத்தா விட்டால், இரண்டு சீவன்களுக்கும் மிருத்தியுநேரிடும். இவ்விதமாய்க் கண்டறிந்து, சகலமும் அனுகூலத்திலிருந்தால், முதல் பாதத்தில் மருத்துவச்சிக்கு வேலையொன்றுமில்லை.

நமது தேசத்தில் காற்று அடக்கமான வீட்டில் வைத்து, கதவு, சன்னல்கள் முதலியவைகளை மூடி, பிரஸவஸ்திரீயை அடைத்துவைப்பது வழக்கம் ; காற்றுப்பட்டால் குளுமை காணுமென்று பயப்படுகிறார்கள். அப்படிச் செய்வதில் சவுக்கியமிராது. நல்ல காற்று வீசும்படியான இடத்தில் ஸ்திரீயை வைத்து, கும்பல் சேர்ந்து சூழ்ந்து கொள்ளாமற்செய்து, சகாயத்துக்கு, 1-2 பேரைமாத்திரம் அருகில் வைத்துக்கொள்ளவேண்டியது.

பிரஸவநோய் ஆரம்பத்தில், ஸ்திரீயை உலாத்தச் செய்யலாம் ; ஆயாசம் நேரிட்டால், படுக்கவைக்கலாம். பிரிய வசனங்களால் மனுஷியை சந்தோஷப் படுத்தவேண்டியது. சகலமும் அனுகூலத்திலிருப்பதால், உபத்திரவமில்லாமல் பிரஸவம் முடியுமென்று தேறுதல்சொல்லி பயத்தைப் போக்கவேண்டியது. நோவு முதல் பாதத்திலிருக்கும்போது, பசி இருந்தால், போஜனம் கொடுக்க யாதொரு தடையுமில்லை. பேதிக்குக் கொடுத்து மலபந்தத்தை நீக்கவேண்டியது. மூத்திர தடங்கலிருந்தால், சிலாக்குவிட்டு எடுத்துவிடவேண்டியது. முதல் பாதத்தில் முக்கச் செய்யலாகாது. சில இடங்களில் ஸ்திரீயைப் படுக்கவைத்து, வேறொருத்தி வயிற்றுமேல் ஏறி அழுத்தி, ஸ்திரீயை முக்கும்படிச் செய்வதும்உண்டு. இச்செய்கையால் பிரஸவஸ்திரீக்கு அதிகவேதனை உண்டாகுமே ஒழிய சுகுணமிராது. சில வேளை கருப்பை கிழிந்து அபாயம் நேரிடுவதும்உண்டு.

பனிக்குடம் உடைந்து, சிரசு இறங்குகிற இரண்டாம்பாதத்தில், ஸ்திரீயை நிருவாணப்படுத்தி, படுக்கவைத்து, துப்பட்டியால் போர்வையிடவேண்டியது. பிரஸவஸ்திரீயை வைப்பது, தேசத்துக்கு தேசம் வித்தியாசப்படும்—சில இடங்களில் உட்காரவைக்கிறார்கள். சீனதேசத்தில், முழங்கால்மேல் நிற்கவைப்பது வழக்கம். பிரான்சுதேசத்தில், மல்லாக்கவைத்து, முழங்காலை முடக்கிவைப்பது வாடிக்கை—இங்கிலீஷ்காரர் ஸ்திரீயை கட்டின்மேல் இடதுபக்கமாய் படுக்கவைத்து, பிரஷ்டத்தைக் கட்டிலின் ஓரமாய் நகர்த்தி, முழங்காலைமுடக்கி வயிற்றோடு அணைத்து, தலையணியை கால்களுக்கு மத்தியில் வைப்பது வழக்கம். இது எல்லாவற்றைப்பார்க்கிலும் மெத்த னல்லது. ஒரு நீண்டதுணியைக் கட்டிலின் காலுக்குகட்டி அதன்முனையையாவது அல்லது அருகிலிருக்கிறவர்களின் கையையாவது, ஸ்திரீக்கு நோய் வரும்போது பிடித்துக்கொள்ளும்படி செய்யலாம். பிரஸவ சமீபகாலத்தில், போஜனம் கொடுக்கலாகாது. ஆனால் வெந்நீர், தேயிலைத்தண்ணீர், கஞ்சித்தண்ணீர், இவைகளில் ஒன்றைக் கொடுக்கவுதவும். கருப்பையின் முகம்செவ்வையாய் விரிந்தபிறகு, பனிக்குடம் உடையாமல், அதனால் பிரஸவம் தாமசப்படும்படியாக இருந்தால், விரலைவிட்டு, குத்தி நீர் மெதுவாய் வெளிப்படும்படி செய்துவிடலாம். சிசுவின் தலைகீழுக்கிறங்கி, பகத்தைமுட்டித் தள்ளும்போது அது கிழியாமலிருக்க, மருத்துவச்சி, தன் இடது உள்ளங்கையை அந்த ஸ்தானத்தின்மேல் வைத்து, பெருவிரலையும், முன்விரலையும் நிதம்பங்களின் ஓரமாய் நீட்டி, மெதுவாய்த் தாங்கிக்கொண்டிருக்க வேண்டியது; மெத்தவும் அழுத்தலாகாது, யோனித்துவாரத்தை விட்டு சிரசு வெளிப்படும்போது, அதை வலது கையால் ஏந்திக்கொண்டு, சிரசு தானாய் திரும்பும்படி செய்ய

வேண்டியது. இடது கைத்தாங்கலை விட்டுவிடலாகாது. சிரசு வெளிகண்ட உடனே கழுத்தைச் சோதிக்கவேண்டியது; சிலவேளை நாபிக்கொடிசுற்றிக் கொண்டிருக்கும்; அப்படியிருந்தால், அது மெதுவாய் வெளிக்கிழுத்து, பின்னலை அவுழ்த்து, தோள்மேல் தள்ளிவிடவேண்டியது. சிரசு பிரஸவமான உடன் வேறே ஒருத்தி, வயிற்றுமேல் கையைவைத்து, கருப்பையை விடாமல் அழுத்தி பிடித்துக்கொண்டு, கீழுக்கு மெதுவாய்த் தள்ளிக்கொண்டே போகவேண்டியது; அப்படிச் செய்வதில், நஞ்சு பிரிந்து சீக்கிரத்தில் வெளிக்கு வந்துவிடும்.

சிரசு வெளிக்குவந்தபிறகு, கொஞ்சநேரம் நோய் நின்று இருந்து மறுபடியும் ஆரம்பித்து, சரீரத்தை வெளிப்படுத்துவது வழக்கம். சிரசு வெளிக்கண்டபிறகு, மற்ற உறுப்புகள் வர தாமசப்பட்டு, பிள்ளை இறந்துபோகிற ஸ்திதியில் இருந்தால், வயிற்றைத் தேய்த்தும், நோயைப் பிறபிக்கவும். அதிலும் நோயை பிறக்காவிட்டால், ஒருத்தியை கருப்பையை அழுத்தி பிடித்துக்கொள்ளச்செய்து, குழந்தைத் தலையை பிடித்துகொண்டு, ஒருவிரலை அக்குளில் செலுத்தி மெதுவாய் இழுத்துசரீரத்தை வெளிப்படுத்தவேண்டியது; சிசுவை தீவிரமாய் இழுத்துவிட்டால், கருப்பை சீக்கிரத்தில் சுருங்காமல், ரத்தம் அதிகமாய் வெளிப்படும்.

குழந்தை வருத்தமில்லாமல் பிறந்த உடன் கைகால்களை உதறிக்கொண்டு அழும். செவ்வையாய் அழுது சுவாசம் பூரணமாய் ஏற்பட்டு, நாபிக்கொடியில் நாடிநடை நின்றபிறகு, அதைத் துண்டித்து, தாயையும், சிசுவையும், வேறுபடுத்தவேண்டியது. இந்தக் கிரமத்தை நமது மருத்துவம்பெண்கள் அனுசரிக்காமல், குழந்தை பிறந்த உடன் நாபிக்கொடியைத் துண்டித்துவிடுவதுண்டு; அதனல் சிசுவுக்கு அபாயங்கள் சம்பவிக்கின்றன. சிசுவை வேறுபடுத்தினபிறகு, தாயின்வயிற்றைப் பரிசோதித்து, இரட்டைப்பிள்ளை இருப்பதும் இல்லாததும், தெரிந்துகொள்ளவேண்டியது. பிறகு வயிற்றைத் துணியால் சுற்றி இழுத்துக் கட்டிவைக்கவும். வயிற்றில் சுற்றுகிற துணி உறுதியாய் அகலத்தில் 2-ஜாணும் நீளத்தில் 3-4-முழமும் இருக்கவேண்டியது. அதின் முனைகளை குண்டு ஊசிகளால், குத்திவைக்கவும். நஞ்சு வெளிகண்டபிறகு, துணியை பிருவுபடித்தி அல்குலின்மேல் ஒரு துண்டு துணியை போட்டுவைக்கவும். படுக்கையிலிருக்கிற அழுக்குத்துணிகளை நீக்கிவிட்டு, தாயை 2-3-மணிநேரம் வரையில், அசையாமலிருக்கச் செய்யவேண்டியது. பிரஸவித்த உடனே, சாராயம் கொஞ்சங் கொடுப்பதும் வழக்கம்; ஆனல் சாதாரணபிரஸவத்துக்கு, ஆவசியமில்லை; ஸ்திரீயை அசையாமல் வைப்பதே பிரதானம். அபினியைக்கொடுக்கிற வழக்கத்தையும் நீக்கவேண்டியது.

இனி குழந்தைக்குச் செய்யவேண்டிய உபசரணைகளாவன:—குழந்தை பிரஸவித்த உடன், அதின்வாயில் விரலைவிட்டு கோழையை நீக்கிவிடவேண்டியது; சிசுவு சுவாஸம் தாராளமாய்விட தாமசப்பட்டால், நாபிக்கொடியில் நாடிநடை நின்றபிறகுதான், அதை துண்டிக்கவேண்டியது, அதற்குமுன் துண்டிக்கலாகாது. நாபிக்கொடியைத் துண்டிக்கிற விதமாவது—குழந்தை தொப்புளுக்கு 2-அங்குலம் விட்டு, சன்னக்கயிற்றால் சுற்றி, இறுக முடிபோடவேண்டியது; பிறகு அந்தமுடிக்கு, 2-3-அங்குலம் ஒற்றி, வேறொரு கயிற்றிட்டு முடிபோட்டு, இவ்விரண்டு முடிகளுக்கும் மத்தியில் கத்தரிக்கோலால் துண்டித்துவிடவேண்டியது. கத்தியால் அறுத்துவிடுவது நமது நாட்டு வழக்கம். பிறகு குழந்தைமேல் இருக்கிற குழகுழப்பு (வெர்னிக்ஸ் கேஸி

யோசா, Vernix casiosa) போகும்படியாய் வெந்நீர்விட்டு கழுவி தொப்புள் கொடியில் ரத்தம் ஒழுகாமல் பார்வையிட்டு, வயிற்றைத் துண்டுத்துணியால் சுற்றிவைக்கவும். ஒருவேளை துண்டித்த வாயிலிருந்து ரத்தம் கசிந்தால், வேறொரு முடியிட்டு, ரத்தம் ஒழுகாமல் செய்யவேண்டியது. தொப்புள் கொடியானது, கிரமெனுய் உலர்ந்து, சுமார் 5-6-ம் நாளில் பேர்ந்து விழுந்துவிடும். சிலவேளை சீக்கிரத்திலும், சிலவேளை நாட்சென்றும் விழுவதுண்டு. அந்த இடம் சுருங்கி உலர்ந்துவிடும்.

பிரஸவத்தை மருத்துவ ஸ்திரீ ஷை கிரமமாய் நடப்பிக்கவேண்டியது. ஆனல் சிலவேளை சிசுவுக்கு விகற்பங்கள் காணுகிறதும் உண்டு. ரத்தம் அதிகமாய் வடிந்தாவது, அல்லது நஞ்சு சீக்கிரத்தில் பிரிந்தாவது, அல்லது போஷணை குறைந்தாவது, சிசுவுக்கு மூர்ச்சையும், சுவாசபந்தகமும் காணும். இதில் குழந்தை துர்ப்பலமடைந்து சுவாஸம் செவ்வையாய்விடாமலும், அழாமலும் இருக்கும், கொடியில் நாடிநடை இராது, இருதயநடையும் ஒடுங்கியிருக்கும். இதற்கு தொப்புள் கொடியைக்கட்டி துண்டித்துவிட்டு, சிசுவை வெந்நீரிலும், குளிர்ந்தஜலத்திலும் மாறிமாறி துவைக்கவேண்டியது. அதிலும் சுகுணம் பிறக்காவிட்டால், கம்பளித்துணியால் உடம்பையும் கால் கைகளையும் சூடுபிறக்க மேலாக சீக்கிரமாய்த் தேய்க்கவேண்டியது. மூக்கிலும், தொண்டையிலும், கோழிஇறகைவிட்டு கூச்சம் உண்டாக்கலாமென்றும் சொல்லுகிறுர்கள். சர்வவிராகம்பயந்திரதையும் பிரயோகிக்கலாம். சிசுவின் பிட்டத்தின்மேல் விரல்களால் சுறுக்குதாங்கும்படி அடித்து அழச்செய்வதிலும் சுகுணமுண்டு. சில சமையங்களில், சிசு கர்ப்பபாத்திரத்தில்தானே மரித்து ஜனிப்பதுண்டு. அதற்குக் காரணம் இன்னதென்று சொல்வது பிரயாசை.

பிரசவகாலம் தாமசித்து சிசுவு ஜனித்தபோது, கோடியில் நாடி க்ஷீணித்து நடக்கும், தேகம் யதாப்பிரகாரமாயிருக்கும், சிரசும் ரூபத்தில் பேதப்படாது. இதில் சுவாஸக்கிரியைச் செவ்வையாக ஸ்தபானம் ஆகிறவரையில் கொடியைச் சேதிக்கலாகாது. கொடியில் ரத்தஓட்டம் கிரமமாய் நடக்கும்படியான ஸ்திதியில் சிசுவைவைத்து கம்பளித் துணியால் சூடு பிறக்கத் தேய்த்து,முன் தெரிவித்தபடி செய்வித்து,சுவாஸத்தடையை நீக்கவேண்டியது. குழந்தைகளுக்குப் பிராணன் செவ்வையாய் வந்தபிறகு, கொடியைக் கட்டி துண்டித்துவிடலாம்.

பிரஸவகாலம் தாமசித்து சிரசு நெருக்கமடைந்து, சிசுஜனித்தால், கொடியில் நாடிநடை க்ஷிணித்து, சரீரம் நீலநிறமாகி, முகம் சிவந்து தலை குரூபமாய் இருக்கும். அதற்கு, கொடியைத் துண்டித்து, கொஞ்சரத்தம் வெளிபடச்செய்து, குழந்தை, சுவாஸம் விட பிரயத்தனப்படும்போது, கொடியைக் கட்டிவிடவேண்டியது. சுவாசம் பிறக்காவிட்டால், குளிர்ந்தஜலம், சிசுவின் மேல் தெளித்து, வெந்நீரில் துவைத்து, சூடுபிறக்க சரீரத்தைக் கம்பளியால் தேய்க்கவேண்டியது. குழந்தைக்குச் செய்யவேண்டிய முயற்சிகளை, அதயிரியப்படாமல் கொஞ்சநேரம் செய்துபார்த்து, எதற்கும் சுகுணம் பிறக்காவிட்டால், அது அசாத்தியமாகவே முடியும், அப்போது, கைவிட்டு விடவேண்டியது.

நெருக்கம் அதிகப்பட்டு சிசுவின் தலையில் வீக்கம் (Cephalæmatoma) காண்பதும் உண்டு. ரத்தநீராவது, ரத்தமாவது, சருமத்துக்கடியில் சேர்ந்து அந்த வீக்கம் காணும். அது தற்செயலாய்க் கரைந்துவிடும் ; கரைய நேரஞ்சென்றால், உஷ்ணக்கிலேதம் போடலாம்.

தொப்புள்கொடியில் ரத்தப்பெருக்கு. இது கொடி விழாதமுன்னும், விழுந்தபிறகும், காணும். பின்னிட்டு கண்டால், நிறுத்துவது பிரயாசை, அதனால் சிசுவு இறந்துவிடுவதும் உண்டு. ரத்தம் வருவதற்கு அநேக காரணங்கள் கண்டிக்கின்றன. இது காணுகிறகாலம், வித்தியாசமாகும் 3-முதல், 18-நாள் என்று கண்டிக்கிறது. சில குழந்தைகளில் ஷை ரத்தப்பிரவாகத்தோடு செவ்வாப்பு (பிடகி, Petechiæ or எக்கிமோஸெஸ், Ecchymosis) காண்பதும் உண்டு. அது அசாத்திய வியாதி. அதற்கு படிக்காரம், மாசக்காய் முதலிய, ரத்தஸதம்பனகாரிகளை உபயோகிக்கலாம். துணி வைத்து அழுத்திக்கட்டலாம்.

சாதாரண பிரஸவத்துக்கு, குளோரோபாரம் என்னும் மருந்தின் ஆக்கிராணம், அவசியமிராது. அதின் குணத்தை, ஸ்துதிப்போர் சிலர், தூஷிப்போர் பலர். ஆயுதம் பிரயோகம், செய்யும்போதெல்லாம் அதை உபயோகித்தால், ஸ்திரீக்கு வேதனைத் தெரியாமலிருக்கும். ஸாதாரண பிரஸவத்தில், தாயின் வேதனை சமனப்படுத்த அதை உபயோகிக்கலாம்.

பிரஸவம் சம்பூரணமானவுடனே, மருத்துவச்சி, தாயைவிட்டு போகலாகாது, சற்றுநேரம் அருகில் இருந்து, கருப்பை செவ்வையாய் சுருங்கினதும், சுருங்காததும், நாடியின் கதியும் கண்டறிந்து, சகலமும் அனுகூலத்திலிருந்தால், பிறகு பிரஸவ ஸ்திரீயை விட்டுப்போகலாம். கருப்பை செவ்வையாய்ச் சுருங்காதிருந்தால் ரத்தப்பெருக்குக்கு இடம் தரும்.

3. கிரமப்பிரஸவம் முடிந்தபிறகு உடம்பு சவுக்கியமடைகிற விதம்.

(CONVALESCENCE AFTER NATURAL LABOUR).

பிரசவித்தபிறகு, ஸ்திரீக்குக் காணுகிற குறிகளும், பரிகரிக்கிற முறையும், மருத்துவர் தெரித்துகொள்ளவேண்டியது. *The nervous shock*, பிரஸவம் கஷ்டமில்லாமல் சுலபமாய் முடிந்தால், தாயாருக்கு தேக தளர்ச்சியும் ஆசாஸம், அதிகமாய் உண்டாகாது, சீக்கிரத்தில் பிரஸவ ஆயாசம் நீங்கிவிடும்; ஸ்திரீயை கொஞ்சநேரம் நிம்மதியாய் நித்திரை செய்யும்படி விட்டுவிடவேண்டியது. பிரஸவித்த பெண்கள் 2-3-நாள் படுக்கையில் எழுந்திருந்து உட்காரலாகாது; உட்கார்ந்தால் கருப்பை கீழுக்கிரங்கிவிடும். 15-16-நாள் சென்றபிறகு, நடந்து உலாத்தலாம். பிரஸவம் கஷ்டமானால் நாடி ஒடிங்கி, ஆயாசமும் களையும் பிறக்கும், மேல்மூச்சு உண்டாகும், முகம் ஏக்கமுற்றிருக்கும்; அப்போது மருத்துவர் தகுதியான சிகிச்சை செய்து, தோஷகுணங்களை நீக்கவேண்டியது; அவைகள் வசத்துக்கு வராவிட்டால், அசாத்தியமாய் முடியும். அதற்கு அபினியே நல்லமருந்து. அதைக் கொடுத்தால், தேகத்தை நிம்மதிப்படுத்தி நித்திரையை பிறப்பித்து, நாடியைத் தணித்து, மேல்மூச்சு எடுப்பதையும் சமனப்படுத்தும். பிராந்தி, ஒயின், இவைகளைக் கொஞ்சமாய்க் கொடுக்கலாம்; அதிகமானால் கெடுத்திசெய்யும். அம்மோனிய, (ammonia) கஸ்தூரி, இவைகளை அபினியோடு சேர்த்து கொடுப்பதிலும் நலந்தரும். பக்தியம் வைக்காமல் கஞ்சி, பால் முதலிய தேகபோஷணை தருகிற பதார்த்தங்களைக் கொடுக்கவேண்டியது. சிலநாள், தாய், குழந்தைக்குப் பால் கொடுக்காமல் செய்யவேண்டியது; சில ஸ்திரீகள் பால்கொடுப்பதை சுத்தமாய் நிறுத்திவிடவேண்டியதாயும் வரும்.

The state of the circulation, and respiration. பிரஸவமானவுடன், நாடி நடை தணியும்; கொஞ்சநேரம் சென்றபிறகு, அது துடித்தோடும்; மறுபடியும் தணிந்து, பால் சுரக்கும்போது, தீவிரமாய் நடக்கும். சகலமும் அனுகூலத்திலிருந்தால், நாடிநடை சுவாபீகத்துக்கு வந்துவிடும். சுதாஸமும் நாடிநடையை ஒத்திருக்கும். ஸ்திரீக்கு களை கண்டிருக்கும்போது, நாடிநடை வேகமாய்ப் படபடத்தோடினால், அது ரத்தப்பெருக்குக்கு குறியாகும்; ஆகையால் அப்போது மருத்துவர் வெகு சாக்கிரதையாய் நிதானித்து, கண்டறிந்து, தகுந்த சிகிச்சை செய்யவேண்டியது.

State of the UterusVagina,&c. சிசுவு வெளிப்பட்டவுடன், கருப்பையானது, ஏறக்குறைய உறுதியாய்ச் சுருங்கி, குழந்தையின் சிரசுக்கொப்பாய் இருக்கும். கருப்பை செவ்வையாய்ச் சுருங்காவிட்டால், ரத்தப்பெருக்கு உண்டாகும்; நஞ்சும் சீக்கிரத்தில் பேர்ந்து வெளிப்படமாட்டாது. பிறகு கர்ப்பாஸயமானது, நாளுக்குநாள் கிரமேணாய்ச் சிறுத்து, 8-அல்லது 10-ம் நாளில் இடைக்குழியில் இறங்கி கொஞ்சமாய் கைக்குத் தட்டுபடும். பின்னும் ஒருவாரம்சென்றால், அது இடைக்குழியில் பூர்த்தியாய் இறங்கி, கைக்குத் தட்டுப்படாது; யோனித்துவாரமும், சீக்கிரத்தில் சுருங்கிவிடும் வயிற்றுச் சருமம் மெதுவில் சுருங்கும்; இடுப்புத்துணியைப் பிகுவாய் இழுத்துக் கட்டினால், அவைகள் மெத்த துவண்டுபோகாது. 2-3·மாதம் சென்றபிறகு. வயிற்றுமேல் நீண்ட வெள்ளைவரிகள் காணப்படும். அவைகளால், ஒரு ஸ்திரீ பிள்ளை பெற்றவளென்றும், பெறாதவளென்றும், குறிப்பிடலாம்.

பிரஸவாந்தியவேதனை, பின்னோக்காடு. (ஆப்பட்ர்பேயின்ஸ், After-pains) பிரஸவித்தபிறகு, கருப்பையிலிருக்கிற அழுக்கு முதலியவைகள் வெளிப்பட உண்டாகிற வேதனைக்கு, பிரஸவாந்தியவேதனை என்று பேர். தலைச்சன், பிள்ளைப்பேறுக்கு இது மெத்த இராது; இந்தநோய் செவ்வையாய் எடுத்தால், நல்லது; அப்போது, கருப்பை செல்வையாய்ச் சுருங்கும், ரத்தமும் அதிகமாய் வடியாது; கருப்பையிலிருக்கிற அழுக்கும் தாராளமாய் வெளிப்படும்; குழந்தைக்கு ஸ்தன்யபானம் செய்விக்கும்போது, இந்த வேதனை காணும்; அல்லது பிரபலப்படும்.

அழுக்கு, (லோகியா, The Lochia. The cleansings).—பிரஸவித்தபிறகு, கருப்பையிலிருந்து யோனிமார்க்கமாய் ரத்தம் வடிந்துகொண்டிருக்கும். அதற்கு, அழுக்கென்று சொல்வது வழக்கம் சிலநாட் சென்றபிறகு, அந்தஅழுக்கு நிறம் மாறி, ஜலரூபமாகிவிடும். 3-4-5-நாள் வரையில், சிவந்திருக்கும்; அதற்கு உறைகிற தன்மையில்லை. பிறகு பச்சை, மஞ்சள் ஆகிய இவ்வன்னங்களாய் மாறி, முடிவில் ஜலம்போலாகிவிடும். அழுக்குக்கு, ஓர் வித கந்தமுண்டு; அந்த கந்தத்தை, ஒப்பிட்டு சொல்வது பிரயாசை; ஆனால் அந்த வாசனையாலேயே, ஸ்திரீ பிரஸவித்தவளென்று தெரிந்துகொள்ளலாம். அழுக்கு தேகபிரகிர்திக்குத்தக்கபடி 2-3-4-வாரம் வரையில், அதிகமாயாவது குறைந்தாவது காணும். கருப்பையினுடைய க்ஷேமத்துக்காக, அழுக்குவிழுகிறபடியால், அது அகாலத்திலேயே நின்றுவிட்டால், துற்குணங்கள் பிறக்கும். அழுக்கு செவ்வையாய்க் காண்பதற்கு, நமது வீடுகளில்கொடுக்கிற காயமருந்து, அத்தியுஷ்ணமானபடியால், அநேக துற்குணங்களை, விளைவிக்கின்றது. ஆவஸியமில்லாத அந்த வழக்கத்தை இப்போதே நீக்கிவிடும்படி செய்வது நமது கடமை. ஆனால் கிழட்டுப்பிணங்கள், நமது சுவாதீனப்படுவது பிரயாசை,

சுவேத, மல, மூத்திரங்கள். (The secretions and excretions).—பிரஸவ வேதனையில் காணுகிற வியர்வை, பிரஸவித்தபிறகு நின்று, சரீரம் சுவாபீக ஸ்திதிக்கு வந்துவிடும். மூத்திரம் சிலருக்கு யதாபிரகாரமாயும், சிலருக்கு, கொஞ்சம் அதிகமாயும் இறங்கும். கஷ்டப் பிரஸவங்களில் நீர் அடைப்பு காண்பது வழக்கம். மலக்கிரமம் வித்தியாசமாகும். சிலருக்கு யாதாபிரகாரமாயும், சிலருக்கு மலபந்தமாயும், சிலருக்கு இளகியும் இருக்கும்.

பால். (The Milk).—கருப்பிணிகளுக்கு சீழ்ப்பால் சுரப்பது வழக்கம். சிலருக்கு பிரஸவவேதனையில் பால் சுரந்து, சிசுவு ஜனித்த உடனே, பால் கொடுக்கும்படியான ஸ்திதியிலிருப்பார்கள். ஒருநாள் சென்றபிறகு ஸ்தனங்கள் பருத்து, வேதனையும் குத்தலும் உண்டாகி 2-3-நாள் வரையிலிருக்கும்; அற்ப சுரமும் காணும்; அப்போது பால் சுரக்க ஆரம்பிக்கும். முதல் 5-6-நாள் வரையில் சுரக்கிற பாலுக்கும், அதின்பிறகு சுரக்கிற பாலுக்கும் வித்தியாச முண்டு. முதல் சுரக்கிற பாலுக்கு கொலாஸ்ட்ரம் (Colcstrum) என்று பேர். அதற்கு பேதியாகிற தன்மையுமுண்டு. க்ஷீரோத்பத்திகாலம் வித்தியாசப்படும்; அதனால் தோஷமில்லை. சிலருக்கு பால் சுரப்பே இராது, அதற்கு தாதியை வைத்து, குழந்தைக்குப் பால் கொடுக்க செய்யவேண்டியது.

பிரஸவித்த ஸ்திரீயை ரக்ஷிக்கிற கிரமம். (Management of women in childbed).—சாதாரணமாய்க் காணுகிற பிரஸவ ஆயாசத்துக்கு, விசேஷமாய்ச் செய்வதொன்றுமில்லை. ஸ்திரீயை அசையாமல் மல்லாக்கப் படுக்கவைத்து, அறைவீட்டைக் கொஞ்சம் இருள் அடையச்செய்து, மருத்துவச்சிமாத்திரம் அருகிலிருந்து, நிஸ்ஸப்த முண்டாக்கி, பயத்தைப் போக்கி, மனசைத் தேற்றி, சந்தோஷ வார்த்தைகளால், நித்திரைபோகும்படிச் செய்ய வேண்டியது. அப்படிச் செய்வித்தால், ஆயாசம் தீர்ந்து, சவுக்கிய முண்டாகும். நாடி நடையின் கிரமத்தைத் தெரிந்துகொள்ளவேண்டியது. அதனால் பின்னிட்டு காணப்போகிற அபாயங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

நஞ்சு வெளிகண்ட உடனே, அல்குலின்மேல் உலர்ந்த துணியைப் போட்டுவைத்து, அதை இடைக்கிடை மாற்றிக்கொண்டு வரவேண்டியது. களைதீர்ந்து அற்பநேரம் சென்றபிறகு, அல்குலை வெந்நீர்விட்டு சுத்திசெய்ய வேண்டியது. தினத்துக்கிரண்டு ஆவர்த்தி அவ்விதமாய்ச் செய்தால், அழுக்கடையாமல் சீக்கிரத்தில் சுவாபீகஸ்திதிக்கு வந்துவிடும்.

மல்லாக்கப் படுக்கச்செய்வதில், ஸ்திரீக்கு சவுக்கியமாய் இருப்பதும் அன்றிக், கருப்பை கீழுக்கிறங்கு, அடி காணாது. உட்காரவைக்கிற வழக்கம் கெட்டது, அதனால் கருப்பை கீழுக்கிறங்கும், ரத்தப்பெருக்குக்கு இடமுந்தரும், மரணம் சம்பவிப்பதும் உண்டு.

பிரஸவாத்திய வேதனைக்கு, செய்யவேண்டிய சிகிச்சை ஒன்றுமில்லை; அது ஒருவேளை பிரபலமாகி, நித்திரையைக்கெடுத்தால், லகுவிரேசனத்தால் விலகிவிடும்; அல்லது அபினி ஒருவேளைக்குக் கொடுக்கலாம்; வெந்நீர் ஒற்றிடத்தாலும் சுகுணம் பிறக்கும்.

படுக்கையின் வஸ்திரங்களை அடிக்கடி மாற்றி, ஈரம் படாமல் சுத்தியாய் வைக்கவேண்டியது; குளிர்ச்சி பட்டால், ஒருவேளை அழுக்கு கட்டிக் கொள்ளும்.

பிரஸவித்து 6-8-நாழிகைப் பிறகாவது, அல்லது, இன்னம் சீக்கிரமாயாவது, நீர் விட்டுக்கொண்டிருக்கும்படி, ஸ்திரீக்குத் திட்டப்படுத்தவேண்டியது. படுத்துக்கொண்டே, நீர்விடச்செய்வது நல்லது. இதன்மேல் ஞாபகம் வைக்காமல் இருந்துவிட்டால், உபத்திரவங்கள் உண்டாகும். நீர்விட கஷ்டமாய் இருந்தால், வயிற்றுக்கும் அல்குலுக்கும் வெந்நீர் ஒற்றிடம்போட வைத்தால் நீர் இறங்கும். அப்படிச்செய்தும் நீர் இறங்காவிட்டால், சிலாக்கைவிட்டு, நீரை எடுத்துவிடவேண்டியது.

மலக்கிரமத்தையும் அடிக்கடி விசாரணை செய்யவேண்டியது; ஒருநாள் வரையில், சும்மாய் விட்டுவிடலாம்; பிறகு மலசோதனைக் கிரமமாய் ஆகாரக் கிரமமாய் ஆகாவிட்டால், சிற்றாமணக்கெண்ணெயாவது, அல்லது நில ஆவாரை இலைக்கஷாயமாவது, கொடுக்கலாம். சிசுவுக்கு முலைகொடுக்காதவர்களுக்கு, உப்புபேதி கொடுக்க உதவும்; அதனால் ஸ்தனவீம்மலும் நீங்கிவிடும்.

பிரஸவித்த ஸ்திரீயை சீதக்காற்று வாடையில் வைக்கலாகாது; போர்வையிட்டு சரீரம் உஷ்ணமாய் இருக்கும்படி செய்துவைக்கவேண்டியது. அறைவீட்டில் நல்லகாற்று வியாபிக்கும்படி, ஜன்னல்களையும், கதவுகளையும் திறந்துவைக்கவேண்டியது.

ஸ்தனங்கள் வீங்கி, நோவெடுத்தால், எண்ணெயைச் சுடவைத்து, தேய்த்து, வெந்நீர் ஒற்றிடமிடும்படிச் செய்யலாம். பேதிக்குக் கொடுப்பதிலும் சவுக்கியமுண்டு. இந்த உபசரணங்களைப் பார்க்கிலும், சிசுவுக்கு, ஸ்தன்னியபானம் கொடுக்கச்செய்வதே உத்தமம். சீக்கிரத்தில், சிசுவுக்குப் பால் கொடுத்தால், பால்சுரப்பு சீக்கிரம் உண்டாகும். பால் கட்டிக்கொண்டால், சுரம் காணும். குழந்தைக்குப் பால்கொடுக்க தாயாருக்கு இஷ்டமில்லாதிருந்தபோதிலும், நாம் முயற்சிசெய்து, பால் கொடுக்கச்செய்வது நல்லது, சவுக்கியமுண்டு

பத்தியம். (டையட், Diet).—5-6-நாள் வரைக்கும், தேயிலைத்தண்ணீர், பால், அரருட் முதலிய கஞ்சி இனங்களும், ரொட்டி, சுட்டரொட்டி, பிஸ்கத்து, பொரிக்கஞ்சி, நொய் வறுத்து காய்ச்சுகிற கஞ்சி, இவைகளில் எதையாவது கொடுக்கலாம். பால் சுரப்புக்காக காணுகிற உஷ்ணம், தணிந்தபிறகு, மாமிஸாதிகளும், ஒயின் சாராயமும், யாதொரு தடையின்றிச் சேர்க்கலாம். மேல்கண்ட அன்னிய பதார்த்தக்களை உபயோகப்படுத்தாதவர்கள், சீக்கிரத்தில் அன்னபக்ஷணைசெய்யலாம்.

பிரஸவித்த ஸ்திரீயின், சரீரம், சவுக்கிய ஸ்திதியிலிருந்தால், 11-ம் நாள், ஸ்நானம் செய்வித்து, வீட்டுக்கழைத்து கொள்ளுவது நமது நாட்டு வழக்கம். சீக்கிரத்தில் ஸ்நானம் செய்வித்து; நல்லஊட்டம் கொடுத்தால் சீக்கிரத்தில் சரீர சவுக்கியம் பிறக்கும். பாமரவைத்தியர், கையைப்பிடித்துப் பார்த்து, சொல்லுகிற அக்ரம உபசாரங்களை, அனுசரித்து, சீக்கிரம், ஸ்நானம் செய்விக்காமலும், அன்னபான பக்ஷணை கொடுக்காமலும், ஸ்திரீயை வதைத்தால், ஒருபோதிலும் உடம்பு சௌக்கியப்படாது.

பிரஸவித்த பெண்களுக்கு, நடப்பிக்கவேண்டிய விதிகள் இப்படி இருக்க, அப்பிரகாரமாய்ச் செய்ய நமது வீட்டு பெண்களுக்கு இஷ்டமிராது. பிரஸவ ஸ்திரீயின் இடத்தில் பெண்கள் அநேகர் கும்பலாய்ச் சேர்ந்து, இரைச்சலிட்டுக்கொண்டு, அவரவர்கள் மனதுக்கேற்றபடி சொல்லி, ஸ்திரீயை பயப்

படுத்துவதும், முக்கச்செய்வதும், நடக்கச்செய்வதும் பிரஸவித்தபிறகு சில நாள் வரையில், தாகமடங்க ஜலசமேதம் கொடாமல் பத்தியத்தில் வைப்பதும், அத்தி உஷ்ணபதார்த்தங்களாகிய, பெருங்காயம், கஸ்தூரி, முதலியவைகள் சேர்த்துசெய்த காயமருந்தைக்கொடுத்தும், பத்தியம் கொடுக்கும்போதெல்லாம், நீர் சிரசுக்குஏறுமென்று யோசித்து ஸ்திரீயை நேரப்பட உட்காரவைப்பதும், சிசுவுக்கு 2-3-நாள் வரையில் தாயின் பாலைக் கொடாமல், சிறுகுழந்தைகளுடைமூத்திரத்தை வார்ப்பதும், கள்ளி இலையை வதக்கிப் பிழிந்து ரஸத்தை ஊற்றுவதும் நமது நாட்டு வழக்கம். இவ்வழக்கச் செய்கைகளை நீக்கிவிட நாம் என்ன சொன்னபோதிலும், அங்கீகரிப்பது பிரயாசம் அவாள் சொல்வதே கிரமம், நாம் சொல்வது அக்கிரமமென்று அவர்கள் புத்தியில் தோன்றுகிறது.

4. கஷ்டப்பிரஸவம்

(டிப்பிகல்ட் லேபர், DIFFICULT LABOUR)

குழந்தையின் சிரசு உதயமாகி, பிரஸவம் முடிய 24-மணி நேரத்துக் கதிகம் சென்றால், அதற்குக் கஷ்டப்பிரஸவம் என்று பேர். இதில் இரண்டு பிரிவுகளுண்டு: 1-வது—பிரஸவகாலம் தாமசித்து, மாதாவுக்கும், சிசுவுக்கும் யாதொரு உபத்திரவமல்லாமல், பிரஸவம் முடிவதற்கு, டீடியஸ் லேபர் (Tedious Labour) என்று பேர். 2-வது—ஆயுதம் பிரயோகம் செய்து, குழந்தையைக் கொல்லாமலாவது அல்லது, சேதித்தாவது வெளிப்படுத்துவதற்கு, லோபாரியஸ் லேபர் (Laborious Labour) என்றுபேர். டீடியஸ் லேபர் என்னும் கஷ்டப் பிரஸவத்துக்குக் காரணங்கள் சிலவுண்டு; அவைகளையும், அவைகளுக்கு நடப்பிக்கவேண்டிய சிகிச்சையும் அடியில் விவரிக்கப்படும். கருப்பை துர்ப்பலமாய்ச் சுருங்குதல்—கருப்பையின் வாய்விரியக் கூடாமல் இருக்குதல்—பனிநீர் அதிகப்பட்டிருக்குதல்—பனிக்குடச்சவ்வு உறுதியாய் இருக்குதல்—பனிக்குடம் ஏற்படாமல் போகுதல்—பனிநீர் பக்குவ காலத்துக்குமுன் வெளிப்பட்டுவிடுதல்—கருப்பை சாய்ந்திருக்குதல்—சன்னி காணுதல்—மஞ்ஞபீடை—ஆகிய இக்காரணங்களால், இடுப்புநோய், நேரப்பட்டிருந்து, பிறகு, சிசுவுஜனிக்கும்.

மந்தப் பிரஸவ வேதனை. (இன்எபிஷெண்ட் ஆக்ஷன் ஆவ் தியூடிரஸ், Inefficient action of the uterus).—இது சுகுமார ஸ்திரீகளுக்குக் காண்பது வழக்கம் துர்ப்பலம், வியாகூலம், ஆகிய இவை முதலியவைகளால், பிரஸவ வேதனை அற்பமாய் இருக்கும்; கொஞ்சநேரப் நோய் இருந்து பிறகு போய்விடும்; பனிக்குடமும் ஏற்படாது; கருப்பையின் வாயும் விசாலமாகாது. வாயுவின் உபத்திரவத்தால், பிரஸவ வேதனை தணிந்திருப்பதும் உண்டு.

சிகிச்சை.—இதற்கு அவசரப்படாமல் கொஞ்சம் நிதானித்தால், தற்செயலாய் சகலமும் கிரமத்தில் வந்துவிடும். ஸ்திரீயின் மனதைத் தேற்றி, சந்தோஷப்படுத்தி, கொஞ்சநேரம் வேதனையைச் சகித்துக்கொள்ளும்படி உற்சாகப்படுத்தி, கூடுமானால் விளையாட்டு விஷயத்தில் காலம் கழிக்கச் செய்யவேண்டியது. மலபந்தமிருந்தால், ஆஸனவஸ்தி செய்துவைக்கலாம். காரமில்லாத போஜனம் கொடுப்பிக்கலாம். ஒருவேளை இடுப்புவலி நேரப்பட இருந்து, நித்திரை வராமல் களையுண்டானால், அபினியைக் கொடுத்து, பிரஸவநோயைக் கொஞ்சநேரம் நிறுத்தி, நித்திரைபோகும்படி செய்யவேண்டி

யது. இவ்வித உபசரணைகள் செய்தும் பிரயோஜனம் இல்லாவிட்டால், அர்கெட் ஆவ் ரை (Ergot of Rye) என்னும் மருந்தைக் கொடுத்து, பிரஸவ வேதனையை அதிகரித்தால் சிசுவு சீக்கிரத்தில் ஜனிக்கும். இந்த மருந்து கொடுப்பது பலவிதம்.—15-20-கிறேன் எடைக்கு எடுத்து, தூள்செய்து $\frac{1}{4}$-ஆழாக்கு வெந்நீரில் போட்டு, மூடிவைத்து, குளிர்ந்தபிறகு, கலக்கிக் கொடுத்துவிடவேண்டியது. இவ்விதமாய் 20-நிமிஷம் விட்டுவிட்டு 2-3-ஆவர்த்தி கொடுக்கவேண்டியது. 60-கிறேனுக்கு அதிகமாய்க் கொடுக்கலாகாது; அந்த எடைக்கதிகப்பட்டால், தலைவலி முதலிய துர்க்குணங்கள் பிறக்கும். இந்த மருந்து சுகுணத்தைப் பிறப்பித்தால், 5-10-நிமிஷத்தில் இடுப்புவேதனை பலமாகி, தீவிரகுண்மடைந்து, கொஞ்சநேரம் நின்று இருக்கும். அர்கட் ஆவ் ரை என்னும் மருந்து கொடுத்தால், சிசுவு பிராணனற்று பிறக்கும என்று வைத்தியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரஸவவேதனை ஆரம்பித்து, அது அற்பமாய் இருக்கிறபோதுதான், இந்த மருந்து கொடுக்கவேண்டியது. இதற்கு பிரஸவவேதனையை ஜனிப்பிக்கிற சக்தியில்லை. கருப்பையின் வாய், திரடமாய் பிகிவுற்றிருக்கும்போதும், உதையமாகிற உறுப்புகள், விரலுக்கு அகப்படாமல் இருக்கும்போதும்,கை,முகம் ஆகிய உறுப்புகள் உதையமாகிற பிரஸவங்களிலும் இடைக்குழியின் எலும்புகள் குரூபமடைந்து, குழி சிறுத்திருக்கிறவர்களுக்கும், யோனித்துவாரம் தடைப்பட்டிருப்பவர்களுக்கும், தலைவலியிலிருக்கும்போதும், இந்த மருந்தை உபயோகிக்கலாகாது. இதனுடன், வெங்காரம் சேர்த்துக்கொடுப்பதும் உண்டு. 20-கிறேன் அர்கட்டின் தூள், 10-கிறேன் வெங்காரத்தூள், $1\frac{1}{2}$-அவுன்ஸ் லவங்கப்பட்டை ஜலம், ஆகிய இவைகளை மிஸ்ரமித்து; ஒரு வேளைக்குக் கொடுக்கலாம். கஞ்சாவுக்கும் கருப்பைச சுருங்கச்செய்கிற தன்மையுண்டு.

கர்ப்பாசய முகம் விசாலம் ஆகாத தன்மை. (Undilatable osut eri).—கருப்பையின் வாய் விரியாமல் பிகுவாய் இருந்தால், பிரஸவகாலம், தாமசமாகும்.

சிகிச்சை.—இதற்கு வாந்தி உப்பு, (Tartar Emetic) குறைந்த மாத்திரையில், குமட்டலுண்டாகும்படி கொடுத்துக்கொண்டு வந்தால், கருப்பையின்வாய் விரிந்து, சீக்கிரம் பிரஸவம் முடியும்; அதனோடு அபினி சேர்த்தும் கொடுக்கலாம். ஔஷதங்கள் கொடுத்தும், கருப்பையின் முகம்விசாலமாகாமல் பிகுவாய் இருந்தால், அதைக் கத்தியால் கீறிவிடவேண்டியதாயும் நேரிடும்.

பனிநீர் அதிக்கம். (எக்ஸெஸ் ஆவ் லிகர் ஆம்னியை, Excss of Livuor Amnii).—பனிநீர் மிதத்துக்கு அதிகமாய்ச் சேர்ந்திருந்தால், கருப்பை அதிகமாய் விரிந்து சுருங்க தாருட்டியமில்லாமல் பிரஸவம் தாமசப்படும்.

சிகிச்சை.—இதைச் செவ்வையாய் கண்டறிந்து நிச்சயமானபிறகு, விரலைவிட்டு நகத்தால் கீறி, பனிக்குடத்தைக் கிழித்து, நீரை வெளிப்படுத்திவிட்டால், பிரஸவம் சீக்கிரத்தில் முடியும். சிலருக்கு பனிநீரைக் கொண்டிருக்கும் சவ்வுகள் உறுதியுள்ளதாய் இருக்கும். சுபாவமாய் கிழியமாட்டாது. அதற்கும் சவ்வைக் கிழித்துவிடவேண்டியது.

பக்குவகாலத்துக்குமுன் பனிநீர் வெளிக்கண்டுவிடுதல். (Premature escape of the Liquor amnii).—கருப்பையின் முகம் செவ்வையாய்

விரிந்து, பக்குவகாலம் வருகிறதற்கு முன்னுதாய் பனிநீர் வெளிக்கண்டு விட்டால், பனிக்குடம் ஏற்படாமல் கருப்பையின் முகம் விரியத் தாமசப் படும். சவ்வுகள் மிருதுவாய் இருந்தால் சீக்கிரம் கிழிந்துவிடும். பலவந்த மாயாவது, அல்லது விரலைவிட்டு அசாக்கிரதையாய் பரீக்ஷிக்கும்போதா வது, சவ்வு கிழிந்துவிடும்.

சிகிச்சை.—இதற்கு நாம் செய்யவேண்டியதொன்றுமில்லை. பக்குவ காலம் வருகிறவரையில், மனம் பொறுத்துக்கொள்ளுவதே பிரதான சிகி ச்சை. ஒருவேளை கருப்பையின் முகம் விரியாமல், பிகுவாய் இருந்தால், அது தளரும்படி சிகிச்சைசெய்து வசப்படுத்தவேண்டியது.

கருப்பை சாய்வு. (Obliquity of the Uterus).—வயிற்றுச்சதைகள் தளர்ந்து இருந்தால், கருப்பையானது பக்கவாட்டமாயாவது, அல்லது முன் னுக்காவது சாய்ந்திருக்கும் அப்படி இருந்தால் பிரஸவமாக தாமசப்படும்.

சிகிச்சை.—இதற்கு ஸ்திரீயை மல்லாக்கப் படுக்கவைத்து, துணியை வயிற்றில் சுற்றிவைக்கவேண்டியது.

மனோபீடை. (Mental despondency).—பிரஸவகாலத்தில், ஸ்தி ரீக்கு மனச்சஞ்சலம் உண்டானல், பிரஸவமாகத் தாமசப்படும்.

சிகிச்சை — இதற்குபிரஸவ ஸ்திரீயின்மனதைத் தேற்றிக், கவலையைப் போக்குவதே பிரதான சிகிச்சை.

லேபோரியஸ் லேபர்ஸ். (Laborious Labours).—மேல் விவரித்த காரணங்களன்றி, வேறு சில காரணங்களால் கஷ்டப்பிரஸவம் உண்டா கும். அவைகளில், சிசுவை யனுசரிப்பது சில, தாயின் இடைக்குழியை யனு சரிப்பது சில. சிசுவால் உண்டாகிற தடைக்குக்காரணங்களாவன:—சிசு வின் சிரசு பிரண்டிருக்குதல்—முகம் உதையமாகுதல்—சிரசு கிரமத்துக்கு மிஞ்சிப் பெரிதாய் இருக்குதல்—சிரசின் எலும்புகள் மெத்த உறுதியாய் இருக்குதல்—ஆண்குழந்தை—ஜலமஸ்தகம்—மகோதரம்—வாயு சேர்ந்து வயிறு விம்மியிருக்குதல்—நாபிக்கொடி குழந்தையைச் சுற்றிக்கொண்டிருக் குதல்—குரூபசிசு—ஆகிய இவைகளாம்.

இனி தாயின் இடைக்குழியைப்பற்றி காணுகிற சில முக்கியகாரண களாவன;—இடைக்குழி குறுகி இருக்குதல்—அது குரூபம் அடைந்திருக் குதல்—மூத்திரப்பையில் நீர் சேர்ந்து, இடைக்குழியை அடைத்துக்கொள் ளல்—காக்ஸிக்ஸ்என்னும் எலும்பு அசையாமல் முறடுகட்டிக்கொண்டிருக்கு தல்—பக்கத்திலிருக்கிற சதைகள் பிகுவுற்றிருக்குதல்—ஆகிய இவைகளாம்.

சிரசு பிரண்டிருக்குதல். (மால்பொஸிஷன் ஆவ் தி ஹெட், Mal-position of the head).—சிசுவின் சிரசு பிரண்டிருந்து, பிரஸவமாகக் கஷ் டத்திலிருந்தால், உத்கருசி (வெக்டிஸ், Vectis) என்னும் ஆயுதத்தைப் பிர யோகித்து, சிரசை கிரமஸ்திதியில் நிமிர்த்திவிடவேண்டியது. அல்லது குறட்டைவிட்டு (பார்ஸெப்ஸ், Forceps) சிரசை இடுக்கி, அதை வெளியில் இழுத்துவிடலாம்.

முகம் உதையம். (Face presentations).—முகம் உதையத்தில், பிர ஸவம் தடங்கல்படுவது அரிது. அதனல் தடங்கலுற்ருல், குறட்டைப் பிர யோகித்து, சிரசை வெளிப்படுத்தவேண்டியது.

பெருத்தும், எலும்புகள் கனத்துமிருக்கிற சிரசு. (Unusually large and ossified head).—சிரசானது கிரமத்துக்குமீறிக் காத்திரத்தில் பெரிதாய் இருந்தாலும் சரி, அல்லது, எலும்புகள் கனத்திருந்தாலும்சரி, அது இடைக்குழியில் இறங்கப் பிரயாசையாய் இருக்கும். இந்தக்காரணங்களால் பிரஸவம் தாமசப்பட்டால், குறடைப் பிரயோகித்து, சிரசை வெளிப்படுத்திவிடவேண்டியது.

ஜலமஸ்தகம்.—(ஹைட்ரொகிபாலிக் ஹெட், Hydrocephlic head) சிரசில் நீர் சேர்ந்து அது காத்திரத்தில் பருத்திருந்தால், பிரஸவகாலம் நீடிக்கும். இதில் தாயாருக்கு அபாயம் நேரிடும். இதற்குச்சிரசைத் துளைத்து, நீரைப் போக்கி, குழந்தையை வெளிப்படுத்தவேண்டியது.

குரூப இடைக்குழி. (டிபார்ம்ட் பெல்விஸ், Deformed Pelvis).—ஸ்திரீக்கு இடைக்குழி குறுகியிருந்தாலும் சரி, அல்லது, குரூபமாய் இருந்தாலும் சரி, சிசுவின் சிரசு அதில் இறங்குவது கஷ்டமாகும். யோனிக்குள் விரலைப் பிரவேசித்து, ஷை விகற்பங்களைக் கண்டுகொள்ள வேண்டியது. மேலும் சிசுவின் சிரசு இடைக்குழியில் சும்மாய்த் தடைபடுவதும். அல்லது பிகுவாய் இறுகிக்கொள்வதும் உண்டு. இவ்விரண்டுக்குமிருக்கிற வித்தியாசங்களை, மருத்துவர் முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியது. சிரசு இடைக்குழியில் தடைப்பட்டிருந்தால் (அர்ரெஸ்ட், Arrest), விரலைவிட்டு அதைத் தள்ளினால், மேலுக்குப் போகும்; சிரசுக்கும் இடைக்குழிக்கும் மத்தியில் இருக்கிற சந்தில் விரல் பிரவேசிக்கும்படியாய் இருக்கும். சிரசு பிகுவாய் இறுகிக்கொண்டால் (இம்பாக்ஷன், Impaction), சிரசைத் தள்ளுவது பிரயாசையாயும், விரல் நுழைய சந்திராமலும் இருக்கும்; அப்போது தாயாருக்கு மெத்த கஷ்டம் நேரிடும்: மிருதுவான உறுப்புகள் நசுங்கி தாபிதங்கொண்டு, அழுகிப்போகும். குழந்தையின் சிரசு பெருத்து, இடைக்குழி சிறுத்து, அவ்விரண்டுக்கும் வித்தியாசம் இருக்கும்போது, அர்கட் ஆவ்ஙா என்னும் மருந்து கொடுத்தால், அபாயம் சம்பவிக்கும். சிரசு மெதுவாய் இறங்கிக்கொண்டிருக்கும்போது, சகலமும் அனுகூலத்திலிருந்தால், நாம் செய்வது ஒன்றுமில்லை, தற்செயலாய் பிரஸவம் முடிந்துவிடும். சிரசு பிகுவாய் இறுகிக்கொண்டு, தாய்க்கு துர்க்குணங்கள் காணும்படியானதாய் இருந்தால், ஆயுதப்பிரயோகம் செய்து, குழந்தையை வெளிப்படுத்திவிடவேண்டியது. குழந்தை உயிரோடிருந்து, குறடுவிட இடமிருந்தால், அதை உபயோகிக்கலாம்; குறடு பிரவேசிக்க இடமில்லாமல், அவ்வளவு நெருக்கமுற்று இருக்கும்போது, பலவந்தமாய் குறட்டைப் பிரயோகித்தால், மிருதுவான உறுப்புகள் கிழிந்துவிடும். சிரசு வெளிப்பட அசாத்தியமாகி, சிசுவும் இறந்து இருந்தால், சிரசைத் துளைத்து, மூளையை நீக்கி, சிரசை சிறிதாக்கி, வெளிக்கு இழுத்துவிடவேண்டியது. இடைக்குழிக்கு அடியில் சிரசு இறங்கிக்கொண்டிருந்தால், உத்கருசியாலாவது (Vectis), குறட்டாலாவது வெளிப்படுத்திவிடலாம்.

புச்ச எலும்பு திரிகஸ்தான எலும்போடு அசையாமல் கூடி முறடு கட்டிக்கொண்டிருந்தால், சிரசு இறங்க தடஸ்தமாகும்; அதற்கு அதை ஒடித்துவிடவேண்டியதாயும் சம்பவிக்கும்.

இவ்வித பிரஸவங்களை பரீக்ஷைசெய்து, நமது சகாயமில்லாமல் சிசுவு ஜனிக்காதென்று தெரிந்துகொண்டபிறகு, அதை சீவனோடாவது, அல்லது

சேதித்தாவது வெளிப்படுத்தவேண்டியது. குறடு பிறவேசிக்க இடமில்லாமல் இருக்கும்போது, சிசுவைத் திருப்பியாவது, (டர்னிங், Turning) அல்லது சிரசை துளைத்தாவது (பெர்பொரேஷன், Perforation) அல்லது உறுப்புகளைத் சேதித்தாவது (இவிஸிரேஷன், Eviceration) வெளிக்கிழுக்க வேண்டியது. மருத்துவ அப்பியாசம் நூதனமாய்ச் செய்கிறவர்கள், சிசுவைச் சேதிக்கவேண்டியதாய் இருக்கும்போது, வழக்கப்பட்டவர்களிடத்தில் முதல் ஆலோசித்து, பிறகு எதொரு காரியமும் செய்யவேண்டியது. ஆயுதப்பிரயோகம் செய்தபிறகு இரண்டு வேளையும் மர்மஸ்தானத்துக்கு வெந்நீர் ஒற்றிடம்செய்து, யோனிக்குள் வெந்நீரை அடித்துக்கொண்டு வர வேண்டியது. போல்டீஸ் போடுவதிலும் சுகுணம் உண்டு நித்திராபங்கத்துக்கு அபினியை கொடுக்கலாம்.

5. பிரஸவக் கிருத்தியங்கள்

(ஆப்ஸ்டிடிரிக் ஆபரேஷன்ஸ், OBSTETRIC OPERATIONS).

பிரஸவக் கிருத்தியங்களில் மூன்று விதங்களுண்டு. 1 வது. தாய்க்கும் சிசுவுக்கும் அபாயம் வராமல் செய்கிற கிருத்தியங்கள், அகாலப்பிரஸவம் ஜனிப்பித்தல்—திருப்புதல்—உத்கருசி உபயோகம்—குறடுஉபயோகம்—ஆகிய இவைகளாம். 2-வது சிசுவைக்கொன்று, தாயாருக்கு அபாயம் வராமல் செய்கிற கிருத்தியம் கபால சேதனம். 3-வது. தாய்க்கும் சிசுவுக்கும் அபாயம் வரும்படி செய்கிற கிருத்தியம், வயிறு கீறல்.

அகாலப்பிரஸவ உற்பத்தி கிரியை, (இன்டக்ஷன் ஆவ் பிரிமெடேர் லேபர், Induction of premature labour).—இடைக்குழி மெத்த சிறுத்திருந்தால், பூரண கர்ப்ப சிசுவு வெளிப்படுவது பிரயாசை. அதற்கு 7-8-மாதத்தில் சிசுவை வெளிப்படுத்திவிட்டால், தாயாருக்கு அபாயமிராது. சிசுவும் ஜீவனோடு பிறக்கும். அந்தக் காலத்தில் சிசுவை வெளிப்படுத்தாமல் பூரண கர்ப்பமாகும்படி விட்டு விட்டால், தாயாருக்கு அபாயம் நேரிடுவதுமன்றி, சிசுவத்திசெய்ய வேண்டியதாயும் நேரிடும். 7-ம் மாதம் ஜனிக்கிற சிசுவு, ஜீவித்திருக்கும். இவ்விதமாகச் செய்து அனேக குழந்தைகள் ஜீவனோடு பிறக்கும்படி செய்துவருகின்றார்கள்.

பிரஸவ வேதனையைப் பிறப்பிக்க அநேக மார்க்கங்களுண்டு, அவைகளானவன;—சுருப்பையை அணைந்திருக்கும் பனிநீர் கொண்டிருக்கிற சவ்வுகளை பிரித்துவிடுதல், (separation of the membranes)—அந்தச் சவ்வுகளைக் கிழித்து நீர் வெளிப்படச்செய்தல், (rupture of the membranes)—கருப்பையின் வாயில் ஸ்பஞ்சை வைத்து விசாலப்படுத்துதல், (dilatation of the means of a piece of sponge—வெந்நீர் தாரை கருப்பையின் வாயில் படும்படி பீச்சாங்குழலால் பீச்சுதல், (continuous stream of warm water upon the osbrmeans of a long tube)—மின்தாதுப் பிரயோகம், (galvanism) ஆகிய இவைகளாம். இவ்விதமாய்ச் செய்தால், பிரஸவவேதனை 1-4 நாளைக்குள் ஜனிக்கும். இவ்வித கிரிச்சை செய்யும்போது, குழந்தைக்குப் பால்கொடுக்க ஒரு தாதியை முதல் சேகரித்துக்கொள்ளவேண்டியது.

கருவை அழிக்க நமது நாட்டில், சித்திரமூலம், கள்ளிப்பால் முதலிய கொடிய பதார்த்தங்கள் உள்ளுக்குக் கொடுப்பதும், திரிசெய்து கருப்பையின் முகத்தில் வைப்பதும் வழக்கம், அது துஷ்ட செய்கை, அதனுல் மர

ணம் சம்பவிப்பதும் உண்டு. அவைகள் வயிற்றையும், கருப்பையும் விரணமாக்கிவிடும். கருவழிக்கிற செய்கை, துரைத்தன சட்டத்துக்கு விரோதம். அதைச் செய்கிறவர்களுக்கும், செய்து கொள்ளுகிறவர்களுக்கும், பலமான தண்டனை விதிக்கப்படும்.

6. சிசுத்திருப்புதல்

(வர்ஷன், ஆர் டர்னிங், VERSION, OR TURNING.)

கருப்பையில் குழந்தைபிசகாய் திரும்பியிருந்தால், சிகிச்சைகர் கைவிட்டுத் திருப்பி சரிப்படுத்தாவிட்டால், தாயாருக்கும் சிசுவுக்கும் அபாயம் நேரிடும். கைஉதயம், பிரஸவசன்னி, பிரஸவபெரும்பாடு (Hæmorrhage), தொப்புள்கொடி முன்வருதல், ஆகிய இவைகளில் சிசுவைத் திருப்பவேண்டியதாய் இருக்கிறது; அதைக் காலமறிந்து செய்யவேண்டியது; பனிக்குடம் உடையாமல், கருப்பையின் வாய் திறந்திருந்தாலும் சரி, அல்லது திறக்கக் கூடுமானதாய் இருந்தாலும் சரி, சிசுவைத்திருப்பலாம். பனிக்குடம் உடைவதற்குமுன் செய்தால், சிசுவைச் சுலபமாய்த் திருப்பலாம்; பனிக்குடம் உடைந்து, நீரில்லாமலும், கருப்பையின் வாய் பிகிவில்லாமலும், மெத்த விரியாமலும், நோய் ஒருவிதமாய் இருந்தால், ஆல்ஷியம் செய்யாமல் கையைக் குவித்து யோனிக்குள் விட்டு, விரல்களால் கருப்பையின் வாயை மெதுவாய் விசாலப்படுத்தி, கருப்பைக்குள் கையை விடவேண்டியது. இச்செய்கையில், விவேகமும், பொறுமையும், சாமர்த்தியமும் வேண்டியது. பனிக்குடம் உடைந்து கொஞ்சநேரஞ் சென்று, குழந்தையைக் கருப்பை மிகுவாய்ச் அணைத்து சுருங்கியும், இடைக்குழிக்குள் மெத்த தாழ்ந்தும். மர்மஸ்தானம் உலர்ந்து, சூடாகி, பச்சைப்புண்ணையும் இருக்கும்போது, கையைக் கருப்பைக்குள் விடலாகாது, கருப்பை கிழிந்துவிடும்; ஸ்திரீ இறந்துவிடுவாள். அவ்வித ஸ்திதியிலிருதால், ஔஷதம் கொடுத்து, கருப்பையை மிருதுவாக்கி, பிரஸவவேதனையை நிறுத்தவேண்டியது. அபினியோடு, வாந்தி உப்பு சேர்த்துகொடுக்க மேற்படி குணம் பிறக்கும் இதில் பொறுமையும், சாந்தமும், காலக்ஷேபமும் செய்து, தெய்வச்செயலுக்கு விட்டுவிட்டால் சகலமும் அனுகூலமாகும். பிரஸவ பெரும்பாடுக்கு, தாமதம் செய்யாமல் சீக்கிரம் வேலையை நிறைவேற்றவேண்டியது, அதில் கருப்பையின் வாய் தளர்ந்திருக்கும் ஸ்திரீக்கு அனுகூலம்.

சிசுவைத் திருப்புகிற கிரமம், (Method of operating).—இந்தக்கிரியை மூன்று பாதங்களாகும்; அவைகளாவன,—பிரவேசம், திரஸ்கிரியை, ஆகர்ஷணம் ஆகிய இவைகளாம், இதில் சிரசைப் பிடித்துத் திருப்புதல் ஒன்று, காலைப் பிடித்துப் திருப்புதல் ஒன்று ஆகிய இரண்டு விதங்களுண்டு.

சிரஸைத் திருப்புதல் (சிபாலிக் வர்ஷன், Cephalic version).—பிரதமையில் மலமூத்திராதிகளை நீக்கி, ஸ்திரீயை சிகிச்சைகளுக்கு வசமாய்படுக்க வைக்கவேண்டியது. சிலவிடங்களில் மல்லாக்கப் படுக்கவைத்தும், சிலவிடங்களில் முழக்கால்கள்மேல் நிறுத்தி குனியவைத்தும், செய்கிறார்கள். இடதுபக்கமாய் வைப்பது இக்கிலீஷ்காரருடைய வழக்கம். ஸ்திரீயை வசமாய்ப் படுக்கவைத்தபிறகு, சிகிச்சைகள் வலதுகை பின்புறத்துக்கு எண்ணெய்இட்டு (உள்ளங்கைக்குத்தடவலாகாது, ஏனெனில்,குழந்தையைபிடிக்கும்போதுகை நழுகும்). விரல்களைக்குவித்து, யோனிக்குள் மெதுவாய், காயம்படாமல் பிர

வேசித்து கருப்பையின் வாயை மெள்ள நீக்கி நீக்கி விரல்களை உள்ளுக்கு விடவேண்டியது. பிரஸவவேதனை நின்று இருக்கிறபோது, கைச்சேஷ்டை செய்து, உண்டாயிருக்கிறபோது, சும்மாய் இருக்கவேண்டியது. கருக்குழிக்குள் ஹஸ்தம் சென்றபிறகு, சிசுவின் சிரசைக் கிரமப்படுத்தவேண்டியதாய் இருந்தால், அதைப்பிடித்துத் திருப்பி மூலவாட்டமாய், முதல் அல்லது இரண்டாவது ஸ்திதியில் வைத்து, கையால் செய்யவேண்டி வைகளைச் செய்துமுடித்து, பிறகு கையை வெளிக்கிழுத்துக்கொண்டு, பிறஸவம் தற்செயலாய் முடியும்படி விட்டுவிடவேண்டியது. இவ்விதமாய்ச் செய்தும், வசத்துக்கு வராவிட்டால், குறட்டைவிட்டுச் சிசுவை வெளிப்படுத்திவிடவேண்டியது.

காலைப்பிடித்துத்திருப்புதல். (Turning by the feet; podalic version).—குழந்தையானது குறுக்கவிழுந்து, கை வெளியில் வந்துவிட்டால் அதற்கு, குழந்தையின் கையையே குறிப்பாக வைத்துக்கொண்டு, அதன் வழியாய், மேற்கண்டவிதம் கையைக் கருப்பைக்குள் பிரயோகித்து, குழந்தையின் முன்புறமாய் மார்புமேலும் வயிற்றின்மேலும் கொண்டுபோய் குழந்தையின் பாதத்தைத் தடவித் தெரிந்துகொண்டு, அதைப் பற்றிப் பிடித்து முன்புறமாகவே இழுத்து வெளிக்குக் கொண்டுவந்துவிடவேண்டியது. சிகிச்சைகன் கை கருப்பைக்குள் இருக்கிறபோது, பிரஸவநோய் கண்டால், அப்போது, அஸ்தத்தை விரித்து சிசுவின் உடம்புமேல் அசையாமல் வைத்துக்கொண்டிருக்கவேண்டியது; அப்படிச் செய்யாவிட்டால், ஒருவேளை கருப்பை கிழிந்துவிடும்; கையும் இறுகிப் பிரபல வேதனை உண்டாகும்,

குழந்தையின் பாதங்களைப் பிடித்து, அதன் முதுகுபக்கமாய்த் திருப்பி இழுக்கலாகாது; அவ்விதமாய் இழுத்தால், மூட்டுவிலகிப்போகும். இரண்டு பாதங்களையும் பிடித்து இழுப்பதேநல்லது. ஆனால் இரண்டும் அகப்படுவது கஷ்டம் அப்படி இரண்டும் அகப்படாவிட்டால் நிமித்தமில்லை, ஒரு பாதத்தைப் பிடித்துந் திருப்பலாம். பாதத்தை இழுப்பதற்குமுன், அது கை என்றும், காலென்றும் செவ்வையாய்ப் பரிசோதித்து, பிறகு இழுக்கவேண்டியது வேதனை இல்லாமல் இருக்கிறபோது, குழந்தையைத் திருப்பவேண்டியது. காலை கீழுக்கு இழுக்க இழுக்க, கையானது மேலுக்கு ஏறிவிடும். குழந்தையைத் திருப்பிக், காலை வெளிக்குக் கொண்டுவந்த பிறகு, நோய் வரும்போது, குழந்தையை இழுக்கவேண்டியது. குழந்தையை பக்குவமான ஸ்திதியில் வைத்து இருப்பது நன்று.

பிரஸவத்தில், கை உதயமானால் நூதன சிகிச்சைகர் கைதேர்ந்து பழகினவர்களோடு, ஆலோசனை செய்யவேண்டியது. இவ்வித பிரஸவங்களில், ஸ்திரீயின் பந்துஜனங்களுக்கு, பிரஸவத்தின் யுக்தாஅயுத்தங்களை முன்னிட்டுத் தெரிவித்து விடுவது நல்லது.

சிகிச்சைகன் கையானது, கருப்பையில் இருக்கும்போது, மருத்துவச்சி, தன் இரண்டு கைகளாலும், கருப்பையை அணைத்துப் பிடித்துத் தாங்கிகொண்டு இருக்கவேண்டியது.

இந்தச் சிகிச்சையில், தாயாருக்கும், குழந்தைக்கும் அபாயமுண்டு. கையைமுரட்டுத்தனமாய் பிரயோகித்தால், கருப்பை கிழிந்துவிடும். களையுண்டாகும், சிலவேளை மரணம் சம்பவிப்பதும் உண்டு. குழந்தைக்கு அபாயம் எப்படி நேரிடுமெனில், நஞ்சுக்கொடி நசுங்கி, ரத்த ஓட்டம் தடைபட்டால், சிசுவு இறந்துவிடும்.

சிகிச்சை முடிந்தபிறகு, அபினி கொடுக்கவேண்டியதாயும் இருக்கும். அபினி ஸ்பிரிட்ஸ் ஆவ் அம்மோனியஃ கர்ப்பூரஜலம் இவைகளைச் சேர்த்து கொடுக்கலாம். தாபித குணங்கள் அனுசரிக்கஒட்டாமல், தகுந்த சிகிச்சைசெய்வேண்டியது. அழுக்குவிழுவதை நாள்தோறும் கேட்டு, தெரிந்துகொண்டு தேவை இருந்தால், பிச்சாங்குழலால், வெந்நீர் அடித்துகொண்டு வரவேண்டியது. ஸ்திரீயை அசையாமல் நித்திரைபோகும்படி செய்யவேண்டியது. குழந்தை உயிரோடிருந்தால், தாயிடத்தில் கொடுத்து தாயை உபத்திரவிக்காமல், கொஞ்சநேரம் பிரத்தேகப்படுத்தி வைக்கவேண்டியது.

7. உற்கருசி. மிண்டி கிளப்பி.

(வெக்டிஸ், VECTIS. லீவர், LEVER.)

பிரஸவத்தில் குழந்தையின் சிரசு பிரண்டு வெளிப்படுவது கஷ்டமாயிருக்கும்போது, சிரசைக் கிளப்பி நிமிர்த்திச், சிசுவைக் கொல்லாமல் எடுக்கிற ஆயுதத்துக்கு உற்கருசி என்று பேர். இது உருக்கால் செய்திருக்கும். சிரசு தடைபட்டு வெளிக்கு வராமல் இருக்கிறபோதும், பிரஸவநோய் அல்பமாய் இருக்கிறபோதும், இந்த ஆயுதத்தைப் பிரயோகிக்கலாம். பிரஸவஸ்திரீயைக் கிரமப்படி கட்டிலின்மேல் படுக்கவைத்து, ஆயுதத்தை வெந்நீரில் போட்டெடுத்து, எண்ணெயிட்டுக்கொள்ளவேண்டியது; பிறகு யோனிக்குள் இடது கையின் இரண்டு விரல்களை முதல் செலுத்தி, அவைகளின் வழியாய் ஆயுதத்தை விட்டுச், சிசுவின் தலைப்பக்கத்திலாவது, முகத்தின்மேலாவது அமையும்படி செய்து, வலது கையாய் பிடியை நழுவாமல் பிடித்துக்கொண்டு, இடது கைமேல் ஆயுதத்தை சுமத்தி, ஸ்திரீக்கு உறுத்தாமல் வெகு சாக்கிரதையாய் தலையைக் கிளப்பிக் கிளப்பி, நோய் எடுக்கிற நேரத்தில் இழுத்து உதவிசெய்யவேண்டியது. கருப்பையின் வாய் விசாலமாய் விரிந்து, பிரஸவநோய் இருக்கும்போது, இந்த ஆயுதத்தைப் பிரயோகிக்கவேண்டியது. இல்லாவிட்டால், பிரயத்தினம் முடியாது; மேலும் சிரசு மெத்த உயரத்திலிருந்தால் இந்த ஆயுதம் விட்டுச் சரிபடுத்த உதவாது; சிரசு இடைக்குழியில் இறங்கி இருக்கவேண்டியது. இந்த ஆயுதம் ஒரு பக்கமாய் விட்டு, மற்றொரு பக்கத்தில் விரல்களைச் செலுத்தி, இவ்விரண்டின் உதவியாலும், தலையை வெளிப்படுத்தி விடலாம்.

இந்த ஆயுதப்பிரயோகம், வழக்கப்பட்டவர்கள் செய்தால், குழந்தைக்கும், தாய்க்கும், அபாயம் நேரிடாது. தெரியாதவரும், அதிக பழக்கமில்லாதவரும் உபயோகித்தால், மெத்த கெடுதி நேரிடும், கருப்பை கிழிந்துபோவதும் அல்லாமல் துளைப்படுவதும் உண்டு. ஸ்த்ரீயின் மிருதுவான ஸ்தானங்கள்மேல் ஆயுதத்தை வைத்து, அழுத்தினால், காயப்படும்.

After treatment. இந்த ஆயுதப் பிரயோகத்தில், பின்னிட்டுச் செய்யவேண்டிய சிகிச்சை மெத்த இராது. ஸ்தானத்தை செவ்வையாய்ப் பார்வையிட்டு, காயப்பட்டிருந்தால், சாராயத்தில் ஜலம் கலந்து, அதைவிட்டு நனைத்துக்கொண்டு இருக்கலாம் சிசுவின் தலையில்காயம்பட்டால், அதற்கும் இதையே உபயோகிக்கலாம்.

8. குறடு சாவணம்

(பார்ஸெப்ஸ், FORCEPS)

கஷ்டப் பிரஸவங்களில், சிசுவை இடுக்கி வெளியில் கொண்டுவருகிற ஆயுதத்துக்கு, குறடு என்று பேர். இதில் இரண்டுவிதம், ஒன்று நீண்

டும், மற்றொன்று குறுகியுமிருக்கும். சிசுவின் தலை இடைக்குழியில் மெத்த உயர்ந்திருக்கும்போது நீண்ட குறட்டை பிரயோகிக்கவேண்டியது. சிரசு இடக்குழியில் இறங்கி சமீபத்தில் இருக்கும்போது, சிறிய குறடு உபயோகமாகும். குறடுகளில் அனேகவிதம்; ஒவ்வொருவர் ஒவ்வொன்றை நிச்சையித்து உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். பிரஸவ தாமதத்தால், ஸ்திரீக்கு உபத்திரவம் பிரபலமாயிருக்கும்போதும் பிரஸவவேதனை அற்பமாய் இருக்கும்போதும், குறடு உபயோகமாகும்; இதனால் சிரசை அழுத்திப் பிடித்து வெளிக்கிழுக்கவேண்டியது; இந்த ஆயுதத்துக்கும் வசப்படாமலிருந்தால், சிரசைத் துளைத்து சிசுவை வெளிப்படுத்தவேண்டியதாய் வரும். இதைச் சுலபமாய் பிரயோகிக்கலாம்; பிராணபயமில்லை; ஆனால், அஜாக்ரதையால் தாயாருக்கும், சிசுவுக்கும் உபத்திரவம் சம்பவிக்கும். சிசுவின் சிரசு இடைக்குழியில் இறுகிக்கொண்டிருக்கும்போது, குறட்டை உபயோகிக்கலாகாது; சிரசுக்கும் எலும்புக்கும் மத்தியில் இடம் இருந்தால் யாதொரு ஆக்ஷேபனையில்லாமல் உபயோகிக்கலாம்.

குறட்டைப் பிரயோகிக்கிற மார்க்கம். (Method of operating).—இந்த ஆயுதம் உபயோகிக்க நிச்சயித்தபிறகு, பிரதமையில் ஸ்திரீக்கு மலஜலாதிகளை விசர்க்கப்படுத்திடவேண்டியது; பிறகு பிட்டம் ஓரமாய் இருக்கும்படி, கட்டிலின்மேல் இடது பக்கமாய் (மல்லாக்கப் படுக்கவைப்பதும் உண்டு) படுக்கவைக்கவேண்டியது. பிறகு குறட்டின் ஒரு அலகை வெந்நீரில் துவைத்துக், கொஞ்சம் உஷ்ணமுண்டாக்கிக்கொண்டு, விளக்கெண்ணெய் இட்டு வழக்கச் செய்துகொள்ளவேண்டியது. பிறகு, சிகிச்சைகன் நோய் இல்லாத சமயத்தில் இடது கையின் 2-3 விரல்களை சிசுவின் தலை மார்க்கமாய் கருப்பையின் வாய்க்குள் விட்டுக்கொண்டு பிறகு மேல் அலகை விரல்களுக்கடியில் வைத்து இடைக்குழி மத்தியமார்க்கமாய் மெதுவில் அசைத்து அசைத்து உள்ளுக்கேற்றி, அலகின் பள்ளம் சிசுவின் தலையில் செவ்வையாய்ப் படியும்படி செய்துகொண்டு, அது நழுகாமல் பத்திரமாய் பிடித்துகொள்ளும்படி, ஒரு ஆளிடத்தில் கொடுத்துவிடவேண்டியது. பிறகு மற்றொரு (கீழ்) அலகுக்கும் வெந்நீர்ச்சூடேற்றிக் கொழுப்பிட்டு, முதல்விட்ட அலகுக்கு நேர் எதிராய் முன் விவரித்தபிரகாரம் செலுத்தி பக்குவப்பட்டபின்பு, இரண்டு அலகின் பிடிகளைச் சேர்த்துப் பூட்டி, கட்டி, சுருக்கு முடிபோட்டு விடவேண்டியது. பிடிகளை பூட்ட ஒருவேளை பிரயாசையாய் இருந்தால், ஓர் அலகை வெளிக்கிழுத்து, மறுபடியும் அகத்தில் விட்டு கிரமப்படுத்திக் கொள்ளவேண்டியது. குறடு தயாரான பிறகு, பிரஸவநோய் எடுக்கிற தருணத்தில், பிடிகளை இரண்டு கைகளாலும் பிடித்து மெதுவாய், அசைத்து அசைத்து இடைக்குழி மத்தியமார்க்கமாய், சிரசை வெளிக்கிழுக்கவேண்டியது. நோய் நிற்கிற நேரத்தில் இழுக்காமல் விட்டுவிடவேண்டியது. இவ்விதமாய் பிரஸவவேதனையை அனுசரித்து, முயற்சிசெய்து வலிக்கவேண்டியது, தாறுமாறாய் இழுக்கலாகாது. குறட்டை இழுப்பதில் இடைக்குழி மத்தியமார்க்கத்தை எப்போதும் அனுசரிக்க வேண்டியது. சிரசு வெளிகண்டபிறகு, மற்ற உறுப்புகள் தற்செயலாய் பிறந்துவிடும்; ஒருவேளை தாமஸம் நேரிட்டால், உடலையும் பிடித்து இழுத்துவிடவேண்டியது.

இந்த ஆயுதப்பிரயோகத்தில், ஸ்திரீக்கு அபாயம் என்னவெனில்,—யோனி கிழிதல்—மிருதுவான உறுப்புகளில் காயம்படுதல்—பகம் (Perine-

um) கிழிதல், ஆகிய இவைகளாம். இனிக் குழந்தைக்குக் கெடுதி என்ன வெனில் ;—சிரசில் காயம்படுதல்—மெத்த நெருக்கமடைதல்—எலும்புகள் முறிதல்—குழந்தை இறந்துவிடுதல் ஆகிய இவைகளாம்.

பின்சிகிச்சை. (*After-treatment*)—இந்தக்காரியத்தில் ஸ்திரீக்கு ஆயாசம் உண்டாகும் ; அதற்கு கொஞ்சம் ஒயின்சாராயத்தில் ஜலம் விட்டு கொடுக்கலாம். அபினியுடன் அம்மோனியாவைச் சேர்த்து கொடுப்பதிலும் சுகுணம் உண்டு. ஆயாசம் பிரபலமாய் இல்லாவிட்டால், ஸ்திரீயை அசையாமல் நித்திரைசெய்யும்படி விட்டுவிட வேண்டியது. பிறகு சாதாரண பிரஸவத்துக்குச் செய்கிற உபசரணைகளை நடப்பித்து, மர்மஸ்தான உட்புறத்தில் பார்வையிட்டு, அது மிருதுவாயும், சிவந்தும் இருந்தால், வெந்நீரை பீச்சாங் குழலால் பீச்சிக்கொண்டு வரவேண்டியது.

9. சித்திரீகர்ணம்.

(கிரேனியாடொமி, CRANIOTOMY. பெர்பொரேஷன், PERFORATION)

பிரதிபதங்கள்.—கபால சேதனம். கபால படானம். சிரசு துளைத்தல்

இந்தச் செய்கை சிசுவத்தி, தயாரை ரக்ஷிக்கும்பொருட்டு, குழந்தையைக் கொல்லவேண்டியதாகின்றது ; இந்த துஷ்ட கிருத்தியம் செய்யாவிட்டால், தாய் பிள்ளை இரண்டும் மரணமடையும். ஸ்திரீயின் இடைக்குழி சிறுத்து, சிசுவின் தலை தற்செயலாய்ப்பிறப்பது அசாத்தியமாயும், குறட்டால் சிரசை இழுக்க வசப்படாமலும் இருக்கும்போது, சிரசைத் துளைத்து, மூளையை வெளிப்படுத்திவிட்டு, கிரசை சிறிதாக்கி. வெளிக்கிழுக்கவேண்டியதாகின்றது. இதில் விதியில்லாமல் சிசுவதைச் செய்யவேண்டியதாய் நேரிடுகின்றது.

இந்த கிரித்தியத்தில் மெத்த உத்தரவாதமுண்டு ; மனதுக்கேற்றபடி, சிசுவாதம் செய்யலாகாது ; சிசுஹத்தி வீணில் செய்ததென்று, ஒருவேளை பழி நேரிடும், அதற்கு சிகிச்சைகன் சமாதனம் சொல்லிப் பழியை நீக்கிக் கொள்ளவேண்டியது. இதில், திரட ஆலோசனை செய்தபிறகு விதியில்மாமல் செய்யவேண்டியதாய் இருக்கிற காரியத்தில், பிரவேசிக்கவேண்டியது.

இந்த மருத்துவ கிருத்தியத்தில் உபயோகிக்கிற ஆயுதங்கள் நான்கு சித்திரீகர்த்திரீ (பெர்பொரேடர்,Perforator) அங்குசம்-கிராசெட், Crotchet)—மொட்டைத்துறடு (பிளண்டு ஹுக், Blunt hook)—கபாலசேதனக்குறடு (கிரேனியாடொமி பார்ஸெப்ஸ், Craniotomy forceps), ஆகிய இவ்வாயுதங்களில், ரூபபேதம் உண்டு. அவரவர்கள் மனதுக்கேற்றதை உபயோகிக்கிறார்கள்.

Cases. இந்தக் கொடிய கிருத்தியம் எப்போது நடப்பிக்கவேண்டியதெனில் ;—

1. சிசுவு இறந்ததென்று நிச்சயமானபிறகு, கஷ்டப்பிரஸவம் நேரிடுகிறபோதும்— 2 கூபகம் குரூபமாகி, அதின் வரம்பின் நேர் அளவு 6-அங்குலத்துக்குக் குறைந்து, சிரசு தற்செயலாய் வர இடமில்லாமலும், குறடும் பிரவேசிக்க சந்தில்லாமலும் இருக்கிறபோதும்— 3 கூபகத்து அடிப்புறம், குழுக்களில் குறுகி, டியூபராஸிடி (Tuberosity) என்னும் முழிகள் மெத்த

நெருங்கி, குறடு பிரவேசிக்க பக்குவப்படாமல் இருக்கிறபோதும்— 4 இடைக்குழியில் ஏதாவது கட்டியுண்டாகி, அசையாமல் பிகிவுற்று குழியை அடைத்துக்கொண்டு, தற்செயலாய் சிரசு இறங்கக்கூடாமையாயும், குறட்டையும் உபயோகிக்கப் பக்குவப்படாமலும் இருக்கிறபோதும்— 5 ஜலமஸ்தகத்தில் சிரசு இடைக்குழியில் இறங்கக்கூடாமையாய் இருக்கிறபோதும்— 6 பிரஸவ வலியில், சீக்கிரத்தில் சிசுவை வெளிப்படுத்தவேண்டியதாய் இருக்கிறபோதும்—7 பூரண கர்ப்பம் ஆகிறதற்கு முன், பெரும்பாடு கண்டு ரத்தப் பிரவாகம் அதிகமாய்க் காணும்போதும், இன்னம் சிலசமயங்களிலும், சிசுவின் சிரசைத் துளைத்து, அங்குசத்தால் சிசுவை வெளிக்கிழுக்கவேண்டியதாய் இருக்கின்றது.

கபாலச்சேதனவிதி. (Mode of Operating—இந்தக் கிருத்தியத்துக்கு, கருப்பையின் வாய்பூரணமாய்விரிந்திருக்கவேண்டியதுஅவசியமில்லை கொஞ்சமாய் விரிந்திருந்தாலும், போதும். பிரஸவ ஸ்திரீக்கு, மலஜலாதிகளை விசர்க்கம்செய்துவைத்து, பிட்டம் ஓரமாய் இருக்கும்படி, கட்டிலின் மேல் இடது பக்கமாய் படுக்கச்செய்து, அவள் வயிற்றை மற்றொருத்தியால் பிடித்துக்கொண்டிருக்கும்படி செய்யவேண்டியது. பிறகு சிகிச்சைகன் தன் இடது கைவிரல்களில் 1-2டை, யோனிக்குள்பிரயோகித்து, துளைக்கப் போகிற ஸ்தானத்தின்மேல் ஊன்றிவைத்துக்கொண்டு, சித்திரீகாதிரீயை உள்ளங் கைமார்க்கமாய் விரல்களுக்கு உட்புறத்தில், தாயாருக்குக் காயம் படாமல்செலுத்தி, எலும்பின்மேல் வைத்துத் திருப்பித்துளைத்து அந்த ஆயுதத்தின் தடைவரையில் எலும்புக்குள்விட்டு பிடிகளைவிரித்து, எலும்புகளை கத்தரித்து, பிரகு அந்தஆயுதத்தைத் திரும்பிக் குறுக்காக வைத்து, முன் செய்தபிரகாரமே செய்தால் எலும்பு குறுக்கும் நெடுக்குமாய் பிளந்துவிடும். அதின்பிறகு, அந்த சித்திரீகர்த்திரீயை கபாலத்துக்குள் பிரயோகித்து மூளையை சின்னபின்னப்படுத்தி, முள்ளந்தண்டுக்கொடியின் சிகரத்தையும் (Medulla oblongata) குறுக்காகத் துண்டித்து, அந்த ஆயுதத்தை வெளிக்கெடுத்துவிட வேண்டியது. கபால ரேகைகள் இருக்கிற ஸ்தானத்தில் (Sutures) துளைக்கலாகாது, எலும்பையேதுளைத்து, கத்தரிக்கவேண்டியது. மறுபடியும் இடது கைவிரல்களை முன் போல்செலுத்தி, அவைகளின் மார்க்கமாய் அங்குசத்தை, கபாலத்துக்குள் விட்டு, மூளையைச் செவ்வையாய்க் கொத்திவிடவேண்டியது. அவ்விதமாய்ச் செய்யாவிட்டால், சிலவேளை குழந்தை உயிரோடு ஜன்மிக்கும், அப்போது சிகிச்சைகனுக்கு மானபங்கம் வருவதுமன்றியில், தாயாருக்கும் பந்துஜனங்களுக்கும் மெத்த விசனமுண்டாகும். பிறகு அங்குசத்தைக் கபாலத்துக்குள்ளாவது, அல்லது வெளியிலாவது, நழுக ஒட்டாமல் மாட்டி, இடைக்குழி மத்தியமாய்ச் சிரசை மெதுவாய் வெளிக்கிழுக்க வேண்டியது; இழுக்கும்போது கையைஎடுத்துவிடலாகாது; சிரசின் சருமத்தால் எலும்புகளை மூடிமெதுவான உறுப்புகளுக்குக் காயம்படாமல் செய்யவேண்டியது. நோய் இருக்கும்போது மெதுவாய் நிதானித்து, சிரசை இழுக்கவேண்டியது சிரசின் பிகுவுக்குத்தக்கபடி பலம்கொடுத்து இழுக்கவேண்டியது. ஒருவேளை சிரசுவர கஷ்டமாயிருந்தால், கபாலசேதனக்குறட்டால், எலும்புகளைத் துண்டித்துவிடவேண்டியது. பகம் (Perineum) கிழியாமல் சூக்ஷிக்கவேண்டியது. சிரசு வெளிப்பட்டால், உடல் கஷ்டமில்லாமல் வந்துவிடும்; அப்படி வராவிட்டால், மார்பையும் வயிற்றையும் பிளந்து உறுப்புகளை நீக்கிவிட வேண்டியது.

பின்சிகிச்சை (After-treatment.)—ஆயாசமிருந்தால், ஸ்திரீயை நிம்மதியாய் அசையாமல் படுக்கையில் வைத்து, அபினி, ஒயின் முதலிய உஷ்ணகாரி மருந்துகளைக் கொடுக்கவேண்டியது. யோனி இருக்கிற ஸ்திதியைப் பார்வையிட்டு வெந்நீரால் அடிக்கடி கழுவிச் சுத்திசெய்யவேண்டியது. தாபிதகுணங்களிருந்தால், அதற்குத்தகுந்த சிகிச்சையும், ஒருவேளை ஒன்றும் இல்லாமலிருந்தால், சாதாரண பிரஸவத்துக்கு நடப்பிக்கிற உபசரணைகளும் செய்து, சவுக்கியப்படுத்துவது, சிகிச்சைகன் தர்மம்.

10. கருப்பாசயச்சேதனம்

(ஸிஸேரியன் ஸெக்ஷன், THE CÆSARIAN SECTION.
ஹிஸ்டிராடொமி, HYSTEROTOMY.)

இது கோரக்கிருத்தியம் தாயாருக்கும், சிசுவுக்கும் மிருதி நேரிட்டிருக்கும்போது, கருப்பையைக் கீறி குழந்தையை வெளிப்படுத்தினால், குழந்தை சீவனோடிருப்பதும் உண்டு. இந்தக் கிருத்தியத்தில் தாயாருக்கும், சிசுவுக்கும் அபாயத்துக்குச் சந்தேகமில்லை. இரண்டில் ஒன்று பிழைப்பது தெய்வாதீனம். இந்தக் கிருத்தியம் செய்து சில குழந்தைகள் ஜீவனோடிருந்ததாய்க் கண்டிருக்கின்றது. சிசுவைக் கரும்பையிலிலிருந்து வெளிப்படுத்த யாதொரு உபாயம் இல்லாமலிருந்து, தாய்க்கும் சிசுவுக்கும் மரணம் நிச்சயமென்று தீர்மானித்தபோது, கருப்பையைச் செதித்து இரண்டிலொரு பிராணியாவது ஜீவிக்கச்கசெய்யலாம்.

Cases suitable for the Operation. இந்தக் கிருத்தியம் எத்தருணத்தில் செய்யவேண்டியதெனில்— (1) இடைக்குழி மெத்த குரூபமடைந்துவரம்பிலும், அடிவசத்திலும், $1\frac{1}{2}$-2-அங்குல அளவு இருந்து சிசுவை எடுக்க அசாத்தியமானபோதும்—(2) எலும்பிலுருந்து கட்டிகள் வளர்ந்து குழியை அடைத்துக் கொண்டிருக்கிறபோதும்—(3) கருப்பை கிழிந்து சாதாரண வழியாய்க் குழந்தை வரக்கூடாமையாய் இருக்கும்போதும்—(4) கருப்பாஸயத்தைவிட்டு வேறு இடத்தில் வளர்ந்த கருவுக்கும்—(5) தாயாருக்குச் சடிதிமரணம் கண்டபோதும், கருப்பைசேதனக் கிருத்தியம் செய்யலாம்.

கருப்பாசயனச் சேதனமுறை. (Method of Operating.)—மலமூத்திராதிகளை விசர்க்கப்படுத்தி, ஸ்திரீயை ஒரு மேசையின்மேல் மல்லாக்கப்படுக்கவைக்கவேண்டியது. பிறகு சப்தசோதன வேணுவால் பரீக்ஷித்து நஞ்சு முன்புறத்தில் ஒட்டிக்கொண்டு இராமல் இருப்பதைத் தெரிந்துகொண்டு, லினியா அல்பா (Linea alba) (சுச்கில் ரேகை) என்னும் வரிக்குமேலாய் நீண்ட வாட்டமாயாவது, அல்லது ரெக்டஸ்மஸில் (rectus muscle) என்னும் சதைக்கு வெளியிலிருந்து மூலவாட்டமாயாவது, அல்லது நாபிக்குக்கீழ்குறுக்காயாவது சருமத்தைக் கீறவேண்டியது. அது .8-10-அங்குல நீளமிருக்கவேண்டியது. நீண்ட வாட்டத்தில் கீறினல், தொப்புளுக்குக் கொஞ்சம் மேலிருந்து ஆரம்பித்து, புயூபிஸ் சமீமம் வரையில் கீறவேண்டியது. கத்தியால் குடல் ஜவ்வுவரையில் சதைகளைத் துண்டித்து, பிறகு ஷை ஜவ்வை வெகு பத்திரமாய்க் குத்தி, அதற்குள் விரலைவிட்டுக் குடல்களில் காயப்படாமல் ஜவ்வைச்சேதித்துவிட்டால், கருப்பை அகப்படும்; ஆகையால்வயிற்றைக் கீறிய நீளத்தில் கீறுமல் சிறுதாய்க் கீறி, ஜவ்வுகள் வரையில் அறுத்துக் கொண்டுபோய், பிறகு ஜவ்வுகளில் சிறிய ரந்திரம் செய்து, பனிநீர் வயிற்றில் விழாமல் கொஞ்சம் எடுத்துவிடவேண்டியது. பனிநீர்க்குடத்தை முன்

னுதாய் உடைத்துவிடும்படி சிலர் சொல்லுகிருர்கள். பிறகு ரந்திரத்தை விசாலப்படுத்தி, குழந்தையை வெளியிலெடுத்துக் கொடியைச்கட்டி, நஞ்சையும், ஜவ்வுகளையும் எடுத்துவிடவேண்டியது. பிறகு கருக்குழியிலிருக்கிற பனிநீரையும் ரத்தத்தையும் நீக்கிவிட்டு, அழுக்கு வெளிப்பட, கருப்பையின் வாய் திறந்திருப்பதைக் கண்டுகொள்ளவேண்டியது. கருப்பைக்குத் தையலிடலாகாது. தற்செயலால்க் கூடி, $1\frac{1}{2}$-2-அங்குல நீளத்தில் காயம் சுருங்கிவிடும். பிறகு வயிற்றில் விழுந்திருக்கிற ரத்தத்தை மெதுவாய்த் துவட்டி எடுத்துவிட்டு, குடலை யதாஸ்தானத்தில் இருக்கும்படிப் பிடித்துக்கொள்ளச் செய்து, வெளிப்புறத்திலிருக்கிற காயத்தை மூடி, காற்று உள்ளுக்கிப் பிரவேசிக்காமல், நெருக்கமாய்த் தையலிட்டு, ஒட்டுப்பிளாஸ்திரியை போட்டு, ஈரத்துணியை மேலேபோட்டு ஸ்திரீயை அசையாமல் வைக்கவேண்டியது. உஷ்ணகாரிகளைக் கொடுக்கவேண்டியதாயும் இருக்கும். அபினியும் கொடுக்க உதவும்.

Dangers. இதில் அபாயங்கள் என்னவெனில்,—ரத்தப்பிரவாகம்—குடலானது காயத்தில் அகப்பட்டுக்கொள்ளுதல்—குடல் ஜவ்வின் தாபிதம் ஆகிய இவைகளாம்.

11. சிரசு உதயத்தில் காணுகிற விகற்பங்கள்

(IRREGULARITIES OF HEAD PRESENTATIONS).

முகம் உதையம். பேஸ் பிரஸன்டேஷன்ஸ்,Face presentations)·—சிரசு உதயத்தில் இது ஒரு விகற்பம். இதற்குக் காரணம் நிச்சயித்துச் சொல்வது பிரயாசை. பலர் பலவிதமாக சொல்லுகிருர்கள். முகம் உதயமாகும்போது, சிரசு பின்னுக்கு வளைந்து, முகம் கூபகத்து வரப்புக்குக் குறுக்காய், அதற்குச் சமனுயிருக்கும். உதயத்தைத் தெரிந்துகொள்வது பிரயாசையாய் இருப்பதும் உண்டு. பழக்கமில்லாதவர்கள், விரலைவிட்டு உபத்திரவம்செய்தால், முகம்வீங்கி, முகத்துக்கும் ஆஸனத்துக்கும் வித்தியாசம் தெரியாமல்போகும். முகம் வீங்காமலிருப்பதற்குமுன், உதயத்தில் கண், மூக்கு, வாய், முகக்கட்டை ஆகிய இவைகளின் அடையாளங்களால், கண்டறியவேண்டியது. வாயை, குதமென்றெண்ணி, ஆஸய உதயம் (Breech presentation) என்று அப்பதம் நேரிட்டதும் உண்டு.

இந்த பிரஸவத்தில், சிரசு இறங்கக் கொஞ்சம் ஆவஸியமாகும்; ஜனித்த உடன், சிசுவின் முகம் அதிகமாய் வீங்கி விகாரமாயும் பயங்கரமாயும் காணப்படும்; பிறகு 1-2தினத்துக்குள், யதாப்பிரகாரமாய் வந்துவிடும். அஜாக்ரதையாயும், முரட்டுத்தனமாயும் சிகிச்சை செய்வோர், மர்மஸ்தானத்துக்குள் விரலைவிட்டு பரீக்ஷை செய்தால் சிசுவின் கண்ணில் காயம்படும்.

சிகிச்சை.—இதில் சகலமும் அனுகூலத்திலிருந்தால், சிகிச்சைகள் செய்கை ஒன்றும் வேண்டியிராது; பிரஸவம் முடிக்கிறவரையில் ஸ்திரீக்கு பிரிய வசனங்களைச் சொல்லி, தயிரியப்படுத்தவேண்டியது. சிரசு இடைக்குழியைப் பார்க்கிலும் கொஞ்சம் பெருத்து, இருக்கும்போதாவது, அல்லது பிரஸவ வேதனை அற்பமானபோதாவது, உதவி வேண்டியதாய் இருக்கும். சிசுவு ஜனனமானபிறகு, அதற்கு சுவாஸபந்தனம் இருந்தால், தொப்புள் கொடியைக் கட்டுவதறகுமுன், கொஞ்சம் ரத்தம் வெளிப்படும்படி செய்யவேண்டியது முக வீக்கத்துக்கு, வெந்நீர் ஒற்றிடம் கொடுத்து, சாராயத்து வாலையிட்டால், கரைந்துவிடும்.

12. கிரமாதீதப்பிரஸவங்கள்

(பிரிடர்நாடியூரல் லேபர்ஸ், PRETERNATURAL LABOURS).

க. ஆஸின உதயம். (Presentation of the Breech).—இதில் சிசுவு இரண்டு விதங்களாய் இருக்கும் ; (க)—சிசுவின் முதுகு முன்னுக்குத்திரும்பி, தாயின் வயிற்றைப் பார்த்துகொண்டிருக்கும், இதுதான் வழக்கம். (2)—சிசுவின் முதுகு பின்னுக்குத் திரும்பி, தாயின் முதுகைப் பார்த்துக் கொண்டிருக்கும். முன்னும், பின்னுமென்று சொன்னதில் சிசுவு நேராய் முன்னும் பின்னுமாய் இராது, மூலவாட்டமாய் அமைந்திருக்கும் இந்த உதயத்தை, உருண்டு மிருதுவாய் இருக்கிற ஆஸனத்தினுலும், பிட்டங்களுக்கு மத்தியிலிருக்கிற விடவுனுலும், குதம், ஜனனேந்திரியங்கள் ஆகிய இவைகளுடைய பிரஸன்னங்களினுலும் தெரிந்துகொள்ளவேண்டியது. முகமென்று அபத்தம் நேரிடுகிறதும் உண்டு. குறிகள்.—சிரசு இறங்கிற தன்மையாகவே ஆஸனமும் இறங்கும்; சிலரில் பிரஸவகாலம் கொஞ்சம் தாமசப்படுவதும் உண்டு;சிசுவின் கை சிரசுக்குமேல்விரிந்திருந்தால்,பிரஸவதாமதம் உண்டாகும். ஆஸன உதயத்தில் தாயாருக்கு துற்குணங்கள் காண்பது அரிது. சிரசைப்போல் ஆஸனம் மர்மஸ்தான மார்க்கத்தைச் செவ்வையாக விசாலப்படுத்தாது, ஆகையால் சிசுவுக்கு அபாயமுண்டு ; தொப்புள்கொடி நசுங்கி சிசுவு இறந்துவிடும்.

சிகிச்சை.—இதில் ஆஸனம் வெளிப்படுகிற வரையில் கையிடலாசாது. பகத்தை மாத்திரம் தாங்கிகொண்டிருக்கவேண்டியது. ஆஸனம் வெளிக்குவந்தபிறகு, சிசுவை வலது கையால் ஏந்திகொண்டிருந்தால், அது தற்செயலாய்த் திரும்பி வெளிப்படும் ; நஞ்சுக்கொடி வெளிப்படுகிறபோதுதான், சிசுவுக்கு அபாயம் ; அதைக் கீழுக்குக் கொஞ்சம் இழுத்து, நசுங்க ஒட்டாமல் பத்திரப்படுத்த வேண்டியது ; அதில் நாடிநடை துடிப்பாய் இருந்தால், சிசுவு மெதுவாய் இறங்கும்படி, விட்டுவிடலாம் ; குறைந்திருந்தால், பிரஸவத்தைத் தீவிரப்படுத்தி, நோயிருக்கும்போது சிசுவை வெளிக்கிழுக்கவேண்டியது. மார்பு வெளிப்படும்போதுகைகள் அதனேடு நெருங்கியிருந்தால், சிகிச்சைகளுக்கு தொந்தரவில்லை ; சிரசை அணைந்திருந்தால், விரலைவிட்டு மெதுவாய் வெளிப்படுத்திவிடவேண்டியது ; பலமாய் இழுத்தால், எலும்பு முறியும், மிருதுவான உறுப்புகளும் காயப்படும். கைகள் வரும்போது கொஞ்சம் தாமஸமாகும். கொடியில்நாடி நடையிருக்கிற வரையில், கையிடலாகாது, சிரசு இடைக்குழியில் இறங்கியிருக்கும்போது, இடதுகையின் இரண்டு விரல்களைச் சிசுவின் வாயில் விட்டு வலது கைவிரல்களை பிடரிமேல் வைத்து, அழுத்தி, முகக்கட்டையை மார்போடணைத்து, தலையை வெளிக்கிழுக்கவேண்டியது. இவ்விதமாய்ச் செய்தால், சிரசின் அளவு குறுகி சுலபமாய் வெளிப்படும். பிரஸவம் முடிகிற வரையில், ஸ்திரீயின் வயிற்றைப் பிடித்து அழுத்திக்கொண்டிருந்தால்; நஞ்சு கிரமமாய் வெளிப்பட்டுவிடும்.

பிரஸவ வேதனை நின்றுவிட்டாலும் சரி, அல்லது, வேறு காரணக்களினுல் சிசுவைத் துவரிதத்தில் வெளிப்படுத்த வேண்டியதாயிருந்தால், விரலைத் தொடைச்சந்தில் விட்டு பிரஸவ வேதனை எடுக்கும்போது இழுத்து உதவி செய்யலாம். நோய் குறைந்திருந்தால், அர்கட் ஆவ் ரை கொடுக்கலாம். குழந்தை இறந்து, பிரஸவிக்கக் கஷ்டமாயிருந்தால், குழந்தையைச் சேதித்து வெளிப்படுத்த யாதொரு ஆக்ஷேபனையில்லை.

முழங்கால். பாதங்கள் பிரசன்னம். (நீ அன்ட் பீட் பிரஸன்டேஷன்ஸ், Knee and feet presentations).—சிலவேளை குழந்தையின் முழங்காலாவது, அல்லது பாதங்களாவது உதயமாகும்; ஆஸன உதயத்தைப் பார்க்கிலும், இவைகள் கொஞ்சம் உபத்திரவத்தைக் கொடுக்கும்; அனுகூலமல்ல.

சிகிச்சை—ஆஸன உதயத்துக்குச் செய்கிற சிகிச்சையே இவைகளுக்கும் செய்து, பிரஸவம் முடியும்படி செய்யவேண்டியது; கையிடாமலும், கால்களைப் பிடித்திழுக்காமலும், சிசுவு தற்செயலாய் ஜனிக்கும்படி விட்டுவிடவேண்டியது; ஆனால் தொப்புள்கொடி நசுங்கி ரத்த ஓட்டம் தடைபட்டிருந்தால், அப்போது அதை விலக்கி, சிசுவுக்கு அபாயம்வராமல் செய்வதே நமது பிரதான முயற்சி.

2. ஹஸ்த உதயம். குருக்கு. (Presentations of the superior Extremities. Trarnverse. Arm Presentations,—இதில் குழந்தை குறுக்காயிருக்கும்; முதல் தோள் வந்து, பிறகு கைவரும். குழந்தை முதுகு முன்புறமாய்த் திரும்பி, தாயின் வயிற்றுப் பக்கமாயாவது, அல்லது, பின்புறமாய்த் திரும்பி, முள்ளதண்டுப் பக்கமாயாவது இருக்கும். இப்படியிருந்தால், சிசுவைத் திருப்பி வெளிக்கிழுக்காமல் விட்டுவிட்டால் சிசுவு தற்செயலாய் ஜனிப்பது அசாத்தியம், ஆனால் சிசுவு மடங்கி, தற்செயலாய்ப் பிறந்ததும் கண்டறிந்ததுண்டு, அபூருவம்; இதற்கு சுவயிச்சா விசாமோசனம் (ஸ்பானடேனியஸ் இவொலூஷன், Spontaneous evolutiou) என்று சொல்லப்படும். ஆனால் சிசுவு இவ்விதமாய் ஜனிக்குமென்று, நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாகாது.

சிசுவின் வலது, அல்லது இடது கையாவது வெளிக்கு வரும். குழந்தையின் உள்ளங்கை, முன்னுக்குத் திரும்பி இருந்தால், குழந்தை முன்புறமாயும், பின்னுக்குத் திரும்பியிருப்பதால், பின்புறமாயும் திரும்பியிருக்கும். பெருவிரலால் வலது இடது கையென்கிற வித்தியாசத்தை தெரிந்துகொள்ளவேண்டியது. குழந்தையின் வலது கையானது சிகிச்சைகன் வலது கையோடும், இடது கையானது இடது கையோடும் பொருந்தும். கைக்கும் காலுக்கும் யிருக்கிற பேதத்தை சிகிச்சைகன் தெரிந்துகொள்ளவேண்டியது, இல்லாவிட்டால் அபத்தம் நேரிடும். கைவிரல்கள் ஏற்றக்குறைச்சலாயும், பெருவிரல் அதிகமாய்ப் பிரத்தேகப்படுத்தக் கூடுமானதாயும் இருக்கும்; கால்விரல்கள் சமனாயிருக்கும். இவ்வித்தியாசங்களால் கையென்றும், காலென்றும், அறியவேண்டியது.

கை வரும்போது, தந்திரயுக்திசெய்து குழந்தையை வெளிக்கு எடுக்காவிட்டால், தாயும் பிள்ளையும் மிருத்தியுவை அடைய யாதொரு சந்தேகமில்லை, நமது நாட்டோருக்கு, இறற்குச் சிகிச்சை தெரியாதபடியால், கையைப் பற்றி இழுத்தால் குழந்தை வெளிக்குவந்துவிடுமென்று யோசித்து, அப்பிரகாரம் செய்து வீணில் ஸ்திரீக்கு சித்திரவதை உண்டாக்குகிறார்கள்; அதுவுமன்றி அவர்கள் செய்கிற பல வதத்தால் கைபிண்டு வந்துவிடுகிறதும் உண்டு. பனிக்குடம் உடையாமுன், கைவருவதைத் தெரிந்துகொள்வது பிரயாசை. கை பிரசன்னமாகும்போது பேதைப் பெண்களுடைய கிருத்தியங்களை அனுசரித்து காலதாமதம் செய்யாமல், மருந்துவச் சிகிச்சை தெரிந்தவர்களிடத்தில் ஸ்திரீயை ஒப்புவித்து விடுவதே உத்தமம்.

சிகிச்சை.—கை பிரசன்னமாகிறதென்று தெரிந்துகொண்ட உடனே, குழந்தையைத் திருப்பி வெளிக்கெடுப்பது சிகிச்சைகன்கடமை. சிசுவைத்திருப்புகிற விதத்தை முன்னமே தெரிவித்திருக்கிறது ; அதே பிரகாரமாய் நடப்பித்து, சிசுவின் ஆபத்தைத்தீர்த்து, இரண்டு பிராணிகளையும் ரக்ஷிக்கவேண்டியது. பிரஸவவேதனை அதிகப் பிரபலமாய் இருக்கிற தருணத்தில், குழந்தையைத் திருப்பலாகாது ; கருப்பைக் கிழிந்துவிடும். அபினி, வாந்திஉப்பு (Tartar Emetic) குளோரோபாரம் ஆகிய இவைகளில் ஒற்றைப் பிரயோகித்து, பிரஸவவேதனையைத் தணித்து, அல்லது நிறுத்திக்கொண்டு, பிறகு கிருத்தியத்தை நடப்பிக்கவேண்டியது. சிசுவைத் திருப்ப கஷ்டமாகி, நமது பிரயத்தினங்களெல்லாம் அப்பிரயோஜனம் அடைந்தால், சிசுவின் மார்பைத் துளைத்து, உறுப்புகளை வெளிப்படுத்தி, அங்குசத்தால் சிசுவை வெளிப்படுத்திவிடவேண்டியது. முன் கண்டிருக்கிற பிரகாரமே, பின்னிட்டு நடப்பிக்கவேண்டியவைகளைச்செய்து, பிராணனை ரக்ஷிக்கவேண்டியது.

மிஸ்ரப் பிரஸவங்கள். Compound presentations.—சிலவேளை சிரசோடு கை பிரசன்னமாவது—படுதங்களோடு, கைகள் பிரசன்னமாவது உண்டு ; அவைகளுக்கொத்தச் சிகிச்சை செய்யவேண்டியது.

13. விபரீதப்பிரஸவங்கள்

(காம்பிளெக்ஸ் லேபர்ஸ், COMPLEX LABOURS).

துவிப் பிரஸவம். இரட்டைப்பிள்ளைப்பேறு. (டுவின், Twin).—இரட்டைப்பிள்ளை வயிற்றிலிருப்பதைத் தெரிந்துகொள்வது பிரயாசை. ஒவ்வொரு குழந்தைக்கு வெவ்வேறான சவ்வுகளும், நஞ்சும் இருக்கும். குழந்தைகள் ரூபத்தில் சிறுத்திருப்பது வழக்கம். சரி மாதத்துக்கு முந்தி, பிரஸவம் நேரிடுகிறதும் உண்டு. சாதாரண பிரஸவக்கிரமமாய் சிசுவு ஜனிப்பது வழக்கம். 3-4-குழந்தைகள் பிறப்பது நாம் அடிக்கடிகேள்விப்படுகின்றோம். இரட்டைப் பிள்ளைப்பெறில், ஒன்றுக்கு சிரசும், மற்றொன்றுக்கு ஆஸனமும் பிரசன்னமாகும். இந்தப் பிரஸவத்தில் ரத்தம் பிரபலமாய்க் காணுவதும் உண்டு. பிள்ளைப்பேறு பார்ப்பவர்கள், முதல் ஜனிக்கிர சிசுவுக்கு, ஒருஅடையாளம் வைக்கவேண்டியது, ஏனெனில் லௌகீகதர்மத்தில் ஏதாவது விகற்பமுண்டானால், முந்தின பிள்ளைக்கும், பிந்தின பிள்ளைக்கும் சுதந்திரத்தை ஏற்படுத்தவேண்டியதாய் இருக்கின்றது. ஆகையால் இந்தப் பிரதான விஷயத்தில் ஞாபகமில்லாவிட்டால், சிகிச்சைகள் பழிப்புக்கு ஆளாகுவான்.

பிரஸவ சமயத்தில் சில குறிகளால், இரட்டைப்பிள்ளை இருப்பது, நாம் தெரிந்துகொள்ளலாம். அவைகளென்னவெனில், வயிறு கொஞ்சம் பெருத்திருக்கும் ; வயிற்றுமேல் காதைவைத்து கேட்டால், இரண்டு இருதய விடை கேள்விப்படும். ஆனால் இவைகளையே நிச்சயக்குறிகளென்று நம்பலாகாது. ஒரு சிசுவு ஜனித்தபிறகுதான், மற்றொன்று வயிற்றிலிருக்கிறதென்று, பரிஷ்காரமாய்த் தெரிந்தபின் சந்தேகங்கள் நீங்கிவிடும்.

பிரதம சிசுவு ஜனித்தபிறகு, கொஞ்சநேரம், பிரஸவ வேதனை இல்லாமலிருக்கும் ; 10-நிமிஷம் சென்றபிறகு, இடுப்புநோய் மறுபடியும் ஆரம்பிக்கும் ; $\frac{1}{2}$-மணிக்குள் காண்பது வழக்கம். முதல் பிள்ளைக்குச் சென்றநேரம், இரண்டாவது பிள்ளைக்குச் செல்லாது ; ஏனெனில், மார்மஸ்தான மார்க்கம் விசாலமடைந்து இருப்பதால், பிந்திவருகிற குழந்தைக்குத் தடையொன்றும் இராது.

சிகிச்சை.—இதற்கு பிரஸவ ஸ்திரீயின் ஸ்திதியை அனுசரித்து காரியத்தை நடப்பிக்கவேண்டியது. முதல் சிசுவுஜனித்தவுடன், அதின் நாபிக்கொடியைக்கட்டி, துண்டித்துவிட்டு, பிறகு தாயாருக்குக் கட்டியிருக்கிற வயிற்றுத் துணியைக்கொஞ்சம்பிருப்படுத்தவேண்டியது ½-மணிக்குள், இரண்டாவது பனிக்குடம் உடையாவிட்டால், அதை உடைத்துவிட வேண்டியது, கெடுதி ஒன்றும்பிராது. பனிக்குடம் உடைந்து 2-மணிநேரம் தாமசிக்க வேண்டியது; அதற்குமேல் நற்குணம் பிறவாவிட்டால், கையைவிட்டு சிசுவைத் திருப்பி வெளிப்படுத்திவிடலாம். இரண்டாவது சிசுவுக்கு சிரசு உதயமாகி, இடைக்குழியின் அடிக்கு இறங்கியிருந்தால், குறட்டை உபயோகிக்கலாம். இதே பிரஸவத்தில், பிரஸவப் பெரும்பாடு, இளைப்பு, வலி ஆகிய இவை முதலிய துஷ்டக் குறிகள் கண்டால், தாமசிக்காமல் சிசுவை வெளிப்படுத்தவேண்டியது.

2. நாபிக்கோடிப் பிரசன்னம். நாபிக்கொடி இறங்கல். (ப்ரொலாப்ஸ் ஆவ் தி ப்யூனிஸ் அம்பிலிகேலிஸ், Prolapse of the funis umbilicalis. Funis Presentations).—சிசுவின் சிரசுக்கு முன் நாபிக்கொடி இறங்கி வந்தால், அதற்கு நாபிக்கொடிப் பிரசன்னம் என்று பேர். அந்தக்கொடி நசுங்கி, ரத்த ஓட்டம் தடைபட்டால, சிசுவு இறந்துவிடும்; ஆனால் தாயாருக்கு அபாயமில்லை. நாபிக்கொடியில், நாடிநடையில்லாமலிருந்தாலும் சரி, அல்லது அது அழுகிப்போய் இருந்தாலும் சரி, குழந்தை இறந்திருப்பதற்குச சந்தேகமில்லை. அப்போது பிரஸவம் தற்செயலாய் முடியும்படி விட்டுவிட வேண்டியது. அதில் நாடிநடை இருக்குமாகில், சிசுவுக்கு அபாயம் வராமல் நாம் முயற்சி செய்யவேண்டியது.

சிகிச்சை.—இதற்குச் செய்கிற சிகிச்சைகள் பலவிதம். எதுவானாலும் சரி, கொடி நசுங்காமல் செய்வதே பிரதானம். பிரஸவவேதனை காணும் போது, ரேசு இடைக்குழியில் இறங்கி செவ்வையாய் அடைத்துக்கொள்ளுகிறவரையில், விரல்களாலாவது, அல்லது ஆயுதத்தினாலாவது, கொடியை மேலுக்குக் கொண்டுபோய் வைத்திருக்கவேண்டியது. கொடியை மேலுக்கேற்றி அது விழவொட்டாமல் ஸ்பஞ்சை வைத்து அடைக்கலாமென்றும் கண்டிருக்கிறது. சிசுவைத் திருப்பும்படி சிலரும், குறட்டை உபயோகிக்கும்படி சிலரும் சொல்லுகிறார்கள். நாபிக்கொடி இருக்கிற ஸ்திதிக்குத் தக்கபடியோசித்து சிகிச்சைசெய்து சிசுவைரக்ஷிப்பதே சிகிச்சைகன் கடமை.

3. நஞ்சு பிடித்தம். (ரிடென்ஷன் ஆவ் தி பிளஸென்டா, Retention of the Placenta.)—சிசுவு ஜனித்தபிறகு ¼-மணி நேரஞ்சென்று, நஞ்சு வெளிப்படுவது வழக்கம்; ஆனால் சிலவேளை காலம் கூடுவதும், குறைவதும் உண்டு. பிரஸவ வேதனையில், வயிற்றை எவ்வளவு அழுத்திக்கட்டுகிறோமோ அவ்வளவு எளிதில் நஞ்சுபுண்டு சீக்கிரத்தில் விழுந்துவிடும். 1-அல்லது 1½-மணிநேரம் தாமதம் ஆகியும், விழாவிட்டால் "நஞ்சு பிடித்தம்" என்கிற பிரிவில் வருகின்றது. ரத்தப்பிரவாகமில்லாமல், தாயாருக்கு மெத்த ஆயாசம் கண்டிருந்தால், 1-1½-மணிநேரம் பொறுத்துப் பார்க்கலாம். களை தீர்ந்தபிறகும், நஞ்சு விழாமலிருந்தால், பிறகு சிகிச்சை செய்யலாம். இதில் ரத்தப்பிரவாகம் கண்டால், க்ஷணமாகிலும் தாமஸிக்காமல், ஜாக்கிரதையாய் அதிதீவிரத்தில் சிகிச்சைசெய்து, நஞ்சை வெளிப்படுத்தி, ரத்தத்தை நிறுத்தவேண்டியது.

மூன்று காரணங்களால் நஞ்சு விழாமற்போவதுண்டு; அவைகளாவன. 1வது—கருப்பைச் சுருங்காமல் நின்றுவிடுதல்; 2-வது—கருப்பை அக்கிரம

மாய்ச் சுருங்குதல்; 3-வது—வியாதியால் நஞ்சு கருப்பையோடு ஒட்டிக் கொள்ளுதல் ஆகிய இவைகளாம்.

கருப்பாசய ஸ்தம்பனம். (வினர்ஷியா ஆவ் தி யூடிரஸ, Inertia of the uterus.)—கருப்பை சுருங்காமல், ரத்தம் அதிகமாய்க்கண்டால், உடனே நஞ்சை வெளிப்படுத்தவேண்டியது, தாமஸித்தால், ஸ்திரீக்கு அபாயம் சம்பவிக்கும், ரத்தப்பிரவாகம் கண்டு இறந்துவிடுவாள். ஒருவேளை பிரபலமாய்ரத்தம் கண்டு ஸ்திரீ சோர்பு அடைந்திருந்தால் கருப்பையில் கையைவிட்டு நஞ்சை எடுக்கலாகாது; கொஞ்சநேரம் நிதானித்து ஸ்திரீக்கு ஆயாஸம் தீர்ந்தபிறகு, எடுத்துவிடலாம். கருப்பை சுருங்காமலிருக்கும்போது நஞ்சை வெளிப்படுத்தினுல் ரக்தஸிராவம் உண்டாகும்; ஆகையால் வயிற்றைத் தேய்த்தாவது, அல்லது அழுத்தியாவது நோயைப் பிறப்பித்து, பிறகு நஞ்சை வெளிப்படுத்தினுல் நல்லது இவ்விதமாய்ச் செய்தும், பிரஸவவேதனை பிறக்காவிட்டால், அர்கட் என்னும் மருந்தைக் கொடுத்தால், நோய் வர்த்தித்து நஞ்சு வெளிப்பட்டு, கருப்பை பிகிவாய்ச் சுருங்கிவிடும்; ரக்தமும் நிற்கும். இந்த ஔஷதம் கொடுத்தும் பிரயோஜனமில்லாவிட்டால், கையைவிட்டு நஞ்சைப் பேர்த்து எடுத்துவிடவேண்டியது. கருப்பைக்குள் கையை விடுவது மாதாவுக்கு அபாயமாய் இருந்தபோதிலும், விதியில்லாமல் அவ்விதமாய்ச் செய்யவேண்டியதாய் இருக்கின்றது. இதைச் சாவதானமாய், யோசித்துச் செய்யவேண்டியது.

நஞ்சுக்கொடியை இடது கையால் பிடித்துக்கொண்டு, வலது கைவிரல்களைக் கூர்ச்சாய்க் குவித்து கொடி வழியாய் யோனிக்குள் செலுத்தி, கருப்பைக்குள் கொண்டுபோய், நஞ்சு அணைந்திருக்கிற இடத்தைத் தடவித் தெரிந்துகொண்டு, அதைப்பிடித்து வேறுபடுத்தி, அல்லது, விரல்களால் பேர்த்து, சுருட்டி இடைக்குழி மத்தியபாகமாய் வெளிக்குக் கொண்டுவந்துவிடவேண்டியது. கருப்பையில் காயம்படாமல் பத்திரமாய் ஷை காரியத்தைச் செய்து முடிப்பதே சிகிச்சைகளுடைய சாமர்த்தியம். நஞ்சைப் பேர்த்தெடுக்கும்போது, சேஷமில்லாமல் எடுத்துவிடவேண்டியது; எதாவது கொஞ்சம் விட்டுவிட்டால் அது அழுகி, கருப்பையைப் புண்ணுக்கிவிடும். நஞ்சை வெளிக்கெடுத்தபிறகு, வயிற்றைத் துணியால் இழுத்துக் கட்டிவிடவேண்டியது.

இந்த காரியம் செய்தபிறகு, ஸ்திரீயிடத்தில் கொஞ்சநேரம் இருந்து, பார்வையிட்டு கருப்பை செவ்வையாய்ச் சுருங்கிவிட்டபிறகு, ஸ்திரீயைவிட்டு பிரியலாம்; இல்லாவிட்டால் சிலவேளை கருப்பை தளர்ந்து மறுபடியும் ரத்தப்பிரவாகம் காணும்.

கர்ப்பாஸய வக்கிர சங்கோசம். (இர்ரெகுலர் கன்ட்ராக்ஷன் ஆவ் தி யூடிரஸ், Irregular contraction of the uterus.)—சிசுவு ஜனித்தபிறகு கருப்பை வக்கிரகதியாய்ச் சுருங்கினுல், நஞ்சு விழாது. இச்சுருக்கம் கருப்பை கழுத்திலாவது, அல்லது மத்தியமாயாவது, அல்லது முழுமையுமாவது, இருக்கும். கருப்பை மத்தியமாய்ச் சுருக்கம் இருந்தால், அது உடுக்கைப் போலிருக்கும்; முழுமையும் சுருங்கியிருந்தால், நீண்ட ரூபமுற்று, ஈரற்குழி வரையில் மேலுக்கேறி நிற்கும்.

சிகிச்சை.—சுருக்கமானது கருப்பையின் கழுத்திலிருந்து நஞ்சு விழாமலிருந்தால், கையைவிடாமலே எடுத்துவிடலாம். கொடியைப்பிடித்து கொஞ்சம் பிகிவாய், கூபகத்து மத்தியமார்க்கமாய் இழுத்துத் தளராமல் பிடித்துக்

கொண்டு, கருப்பையின்மேல் கையை வைத்து கூபகத்துக்குழியில் அழுத்திக்கொண்டிருந்தால், நஞ்சு வெளிக்கு வந்துவிடும். அதற்கும் விழாவிட்டால், 1-2-விரல்களை கருப்பையின் வாயில் விட்டுச் சோதிக்கவேண்டியது. எதற்கும் அனுகூலமில்லாவிட்டால், முன் விவரித்த மார்க்கமாய்க் கையை விட்டு, நஞ்சை வெளியில் எடுத்துவிடலாம். மற்ற இரண்டுசாதி சுருக்கங்களுக்கும் கொஞ்சநேரம் பார்த்து நஞ்சு தானாய் விழாவிட்டால் பிறகு அதை எடுத்துவிடவேண்டியது.

வியாதியால் நஞ்சு கருப்பையோடு ஒட்டிக்கொள்ளல். (மார்பிட் அட்டீஷன் ஆவ் தி பிளாஸன்டா டு தி யூடிரஸ், Morbid adhesion of the placenta to the utures).—வியாதியால் நஞ்சு கருப்பையோடு ஒட்டிக்கொள்ளுவதும் உண்டு; அதற்கு கொஞ்சநேரம் இருந்து பார்வையிட்டு, வெளிப்படாவிட்டால், முன் கண்டபிரகாரம் நஞ்சை எடுத்துவிடவேண்டியது. அழுத்திப் பேர்த்து எடுக்கலாகாது; நஞ்சின் துண்டுகளை உள்ளே விட்டுவிடலாகாது; நம்மால் கூடியவரையில் சாக்கிரதையாய் எடுத்துவிடவேண்டியது. நமது பிரயத்தனத்துக்குக் கூடாமையாய் இருப்பதை விட்டுவிட.லாம்.

4. பிரசவப் பெரும்பாடு.

பிளடிங், FLOODING. ஹெமரேஜ், HÆMORRHAGE.

இது மெத்த கெடுதியான தொந்தப் பிரஸவம்; இதை வெகு சாக்கிரதையாய்ப் பார்க்காவிட்டால், ஸ்திரீக்கு அபாயம் சம்பவிக்கும். ரத்தப்பிரவாகம், பிரஸவத்துக்கு முன்னும், பிரஸவவேதனையிலும், பிரஸவித்த பிறகும் காணும். பிரஸவப் பெரும்பாடில் இரண்டு சாதிகள் உண்டு; ஒன்றுக்கு சுயசம்பவரத்தப்பிரவாகம் என்றும், மற்றொன்றுக்கு, தடுக்கக்கூடாத ரத்தபிரவாகமென்றும், சொல்லப்படும். பிரஸவமானபிறகும், பெரும்பாடு காண்பதுண்டு.

(1) **சுய சம்பவ ரத்தப்பிரவாகம்.** (ஆக்ஸிடெண்டல் ஹெமரேஜ், Accidental Hæmorrhage).—இதில் நஞ்சு யதாஸ்தானத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும். ரத்தம் காணுகிற விதம் எப்படியெனில்—கருப்பையோடு ஒட்டிக்கொண்டிருக்கிற நஞ்சு கொஞ்சம் பிரிந்து, அவ்விடத்திலிருக்கிற ரத்த நரம்புகளிலிருந்து ரத்தம் வடியும். நஞ்சுபிரிந்த இடத்துக்குத் தக்கபடி, கொஞ்சமாயாவது, அதிகமாயாவது, ரத்தம் காணும். முதல் ரத்தம் உள்ளடங்கி இருக்கும், பிறகு வெளிக்குக் காணும்.

காரணங்கள்.—நஞ்சு பிரிவதற்குக் காரணங்கள் அநேகம்:—வயிற்றுமேல் அடிபடுதல், தவறிவிழுதல், அதிகப் பிரயாசை, மலபாதைச் செய்யும்போது முக்குதல், பளுவையெடுக்குதல், நஞ்சின் வியாதி. ரக்தாதிகம் ஆகிய இவை முதலிய காரணங்களினால், நஞ்சு பிரிந்து, ரக்தப்பிரவாகம் உண்டாகும். அதிக நகைப்பால் ரத்தம் கண்டதாகவும் தெரியவருகின்றது.

லக்ஷணங்கள்.—ரத்தப்பிரவாகத்துக்குப் பூர்வ ரூபங்கள்:—வயிற்றில் அல்லது உடம்பில் ஒருவித வேதனை; வயிற்றிலும் முதுகிலும் வேதனை; ரத்தம் உள்ளடங்கி இருந்தால், குளிர், வயிற்றில் பளுவு, விம்மல், மூர்ச்சை ஆகிய இவைகள் காணும். பிரஸவவேதனையில் இருக்கும்போது, ரத்தம் கண்டால், வேதனை மெதுவாய்த் தணியும், அல்லது நின்றுவிடும்; மூர்ச்சை காணும்; ரத்தம் அற்பமாயாவது, அல்லது பிரபலமாயாவது வடியும்.

இதில் மூர்ச்சை கண்டால், ரத்தம் நின்று தெளிவுண்டான பிறகு மறுபடியும் ரத்தம் காணும்; முகம் வாடியிருக்கும், கண்கள் சுற்றிலும் கறுத்திருக்கும்; நாடி சிறுத்து படபடத்துத் தீவிரமாய் நடக்கும். ரத்தம் நிற்காவிட்டால் ஷை குறிகளெல்லாம் அதிக்கிரமித்து, பார்வை வுருண்டு, காதில் ஓசைபிறந்து அடைத்து, அடிக்கடி பெருமூச்சுண்டாகி, படுக்கைக்கிடங்கொடாமல், அரட்டல் புரட்டல் முதலிய மரணாந்திய வேதனை பிறந்து, பிராணன் சரீரத்தை விட்டு பிரிந்துவிடும்; அச்சமயத்தில் மூர்ச்சையாவது, வலியாவது காண்பதுண்டு. தேகப் பிரகிர்திக்குத் தக்கபடி, கொஞ்ச ரத்தப்பிரவாகத்துக்கே அபாயம் நேரிடும்; சிலர் அதிக ரக்தம் கண்டபோதிலும் சகித்துக்கொண்டிருப்பார்கள்.

ரோக நிதானம்.—சுயசம்பவ ரத்தப்பிரவாகத்துக்கும், தடுக்கக்கூடாத ரத்தப் பிரவாகத்துக்கும், இருக்கிற வித்தியாசங்களை நாம் கண்டறிந்துகொள்ளவேண்டியது, ஏனெனில் இவ்விரண்டுக்கும் சிகிச்சை வித்தியாசப்படும். சுயசம்பவ ரத்தப்பிரவாகத்தில், பிரஸவவேதனை எடுத்து, கருப்பை சுருங்கும்போது ரத்தம் நிற்கும்; வேதனை இல்லாதபோது அதிகப்படும். கருப்பை வாயில் விரலைவிட்டு சோதித்தால் பனிக்குடம் அகப்படும். தடுக்கக்கூடாத ரத்தப்பெருக்கில், கருப்பையின் வாயில் நஞ்சு ஒட்டிக்கொண்டிருப்பதால், வேதனை எடுத்து கருப்பைச் சுருங்கி வாய் விரியும்போது, நரம்புகள் துண்டித்துப்போகும், அச்சமையத்தில் ரத்தம் காணும்; வேதனை நின்று இருக்கும்போது ரத்தம் வடியாது. முதல் குறித்த சாதியில், கருப்பையின் முகத்தைச் சவ்வு மூடிக்கொண்டிருப்பதால், கருப்பைக்கழுத்து சன்னமாய் இருக்கும்; இரண்டாவதில், நஞ்சு அடைத்துக் கொண்டிருப்பதால், சவ்வு அகப்படாது. ஒருவேளை நஞ்சானது கருப்பையின் வாய் ஓரமாய் ஒட்டிக்கொண்டிருந்தால், கருப்பையின் கழுத்து தளமாய் இருக்கும். இவ்வித வித்தியாசங்களினால், பலானசாதி ரத்தப்பெருக்கென்று கண்டறியவேண்டியது.

சிகிச்சை.—இந்த ரத்தப்பெருக்கை வெகு ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டியது. கர்ப்பகாலத்தையும், கருப்பையின் வாய் இருக்கிற ஸ்திதியையும், ரத்தப்பிரவாக நிலையையும் கண்டறிந்து, பிறகு தகுந்த சிகிச்சை செய்யவேண்டியது. பிரஸவகாலம் சமீபமாகாமலும், வேதனை இல்லாமலும், கருப்பை வாய் விரியாமலும், அதிகமாய் ரத்தம் காணமலும் இருந்தால் ஸ்திரீக்கு அபாயத்துக்கிடமில்லை. அதற்கு, ஸ்திரீயை படுக்கையில் நிம்மதியாய் வைத்து, இருப்பிடத்தைக் குளிர்ச்சியான ஜலபான முதலியவைகளைக் கொடுத்து, குளிர்ந்த ஜலத்தை வஸ்தி செய்வித்தால், ஒருமிதமாய் ரத்தம் நிற்கும். யோனியில் ஸ்பஞ்சு, அல்லது பட்டுத்துணியை வைத்து அடைப்பதுண்டு; அதை வெகு சாக்கிரதையாய்ச் செய்யவேண்டியது; ஏனெனில் ரத்தம் வெளிக்குக் காணமல் உள்ளவே சேர்ந்திருந்து அபத்தம் ஒருவேளை நேரிடும். ரோஜாப்பூ வெந்நீர்க்கஷாயத்தில், விளாவின கந்தகத்திராவகம் விட்டு, மணிக்கொருதரம் கொடுத்துக்கொண்டு வரலாம். வங்க உப்பை அபினியுடன் சேர்த்துக் கொடுப்பதும் உண்டு. ஸ்திரீயை எழுந்து உட்காராமல் படுத்துக்கொண்டே இருக்கச்செய்யவேண்டியது. மலபந்தத்துக்கு, சீதஜலவஸ்தியைச் செய்வித்து, மலத்தை வெளிப்படுத்தவேண்டியது.

இவ்விதச் சிகிச்சையால் சுகுணம் பிறந்தூ, பிரஸவகாலம் சம்பூரணமாகி, க்ஷேமமாய் பிரஸவிப்பதுண்டு. ஒருவேளை இதற்கு ரோகம் வசப்படாவிட்டால், அதற்கு வேறு சிகிச்சைசெய்து, ஸ்திரீயின் பிராணனை ரக்ஷிக்கவேண்டியது. ரத்தப்பெருக்கு அதிக்கிரமித்து, பிராணபயத்துக்கிடமு

ண்டாயிருந்தால், பனிக்குடத்தை விரலாலாவது, ஸ்திரீகளுக்கு உபயோகிக்கிற மூத்திர கருவியிலாவது உடைத்துவிட்டால், பிறகு உடனே வேதனை அதிக்கிரமித்து, ரத்தப்பெருக்குத் தணிந்து, சீக்கிரத்தில் பிரஸவம் முடியும் கொஞ்சம் தாமஸப்படுத்துவதில் அபாயம் ஒன்றும் நேரிடாதென்று தீர்மானித்தபோது, அர்கட் என்பதைக்கொடுத்துப் பார்க்கலாம். அதற்கும் சுகுணமொன்றும் காணாவிட்டால், கையைவிட்டு சிசுவின் காலைப் பிடித்துத் திருப்பி வெளிக்கிழுத்து, பிரஸவத்தை முடித்து விடவேண்டியது. சிசுவின் கர்ப்பவாசம் பூரணமாகாமலும், கரிப்பையின் வாய்விரியாமலும், அல்லது இன்னம் வேறு காரணங்களினாலாவது, சிசுவைத் திருப்ப யுக்தமில்லாமலிருந்தால் சிரசைத் துளைத்து அங்குசத்தைவிட்டு, சிசுவை வெளிக்கிழுத்துவிடவேண்டியது. இது கஷ்ட கிருத்தியமல்ல; அபாயமில்லை. சிசுவின் சிரசு குறட்டுக்கு எட்டும்போதெல்லாம், அதை உபயோகிக்கப்படுத்தலாம். இவ்வித பிஸரவத்தில் சிசுவு ஜிவித்திருப்பது அரிது.

பிரஸவப் பெருப்பாடுக்கு, சாராயம் முதலிய உஷ்ணகாரிகளை தாராளமாய்க் கொடுக்கலாம்; ஆனால் மிதத்துக்கு மிஞ்சலாகாது. நஞ்சானது குழந்தையோடு வெளிப்படாதிருந்தால், அதை எடுத்துவிட்டு, கருப்பை செவ்வையாய்ச் சுருங்கும்படியான முயற்சியைத் தேடவேண்டியது. பிரஸவித்தபிறகு, மாமிஸரஸம் முதலியவைகளைக் கொடுத்து, தேகதாருட்டியத்தைப் பிறபிக்கவும. அபினியோடு அம்மோனியாவைச் சேர்த்துக் கொடுத்தால், மெத்த சவுக்கியம் உண்டாகும். மறுபடியும் ரத்தப்பெருக்கு உணடாகாமல், பத்திரமாய் பார்வையிட்டுக்கொண்டு வரவேண்டியது.

(2) தடுக்கக்கூடாத ரத்தப் பெருக்கு, நஞ்சு உதயம் நஞ்சு பிரசன்னம். (அன்னெவாய்டெபில் ஹெமரேஜ், Unavoidable Hæmorrhage; பிளஸென்டா பிரீவிய, Placenta prævia.)—நஞ்சானது வழக்கமாய் ஒட்டிக்கொண்டிருக்கிற இடத்தைவிட்டு கருப்பையின் கழுத்து, அல்லது வாயில் ஒட்டிக்கொண்டிருந்தால், அதற்கு நஞ்சு உதயமென்று பெயர் அவ்விதமாய் ஒட்டிக்கொண்டிருக்கும்போது, கருப்பை முகம் விரிந்தால், ரத்த நரம்புகள் அற்று, ரத்த பிரவாகம் நேரிடும். இக்காரணத்தைப்பற்றி, தடுக்கக்கூடாத ரத்தப்பிரவாகம் என்றும் சொல்லுவார். இதில் நஞ்சு ஒரேயிடத்தில் இராது; ஒருவருக்கு கருப்பையின் வாயை அடைத்துக்கொண்டும், மற்றொருவரில், வாயின் ஓரமாய் ஒட்டிக்கொண்டும் இருக்கும்; வாயின் ஓரமிருந்தால் நஞ்சின் ஓரம் மாத்திரம் அகப்படும். 7-8-ம் மாதம் கருப்பையின் கழுத்து விரிய ஆரம்பிக்கிறபடியால், அப்போது ரத்தம் வடியும்; பிறகு இடைக்கிடை ரத்தம் கண்டு, பிரஸவகால சமீபத்திலாவது, அல்லது பிரஸவ வேதனையிலாவது ரத்தம் விபரீதமாய்க் காணும். இதற்குத் தாமஸிக்காமல், உடனே சிகிச்சை செய்யாவிட்டால், மிருத்திவு சம்பவிக்கும்.

லக்ஷணங்கள்.—பிரஸவமாக 2-மாதத்துக்கு முன்னதாகவே, ரத்தம் முதல் காணும். பிரஸவவேதனை யுண்டாகிற சமயந்தோறும், ரத்தம் விபரீதமாக கண்டு, வேதனை நிற்கிற ஸமயங்களில், குறைந்து காணும். சிலரில், சுத்தமாய் நின்றுவிடுவதும் உண்டு. சுயசம்பவ ரத்தப்பிரவாகத்தில், பிரஸவவேதனை உண்டாகிற சமயந்தோறும், கிழிபட்ட நஞ்சானது சிசுவோடணைந்து, நெருக்கமுற்று, ரத்தம் நின்று இருக்கும்; நோய் இல்லாத சமயத்தில், ரத்தம் வடியும். இவ்விரண்டு விஷயங்களால், பலான சாதி ரத்தப்பெருக்கென்று தெரிந்துகொள்ளவேண்டியது. நஞ்சு பிரஸன்

னத்தில், விரலை கருப்பைமுகத்தில் விட்டு பரீக்ஷித்தால், நஞ்சுஒட்டிக்கொண்டிருப்பது அகப்படும். இதற்கு பழக்கமே பிரதானம், புஸ்தகவாசிப்பால் செவ்வையாய்த் தெரியாது.

சிகிச்சை.—கருப்பவதிக்கு 1-2-பிராவஸம் ரத்தம் கண்டு, நாம் சென்று பார்க்கும்போது, ரத்தம் அதிகமாய் வடியாமலும், பேறுகாலம் சமீபமாகாமலும், கருப்பை சுருங்காமலும் இருந்தால், ரத்தத்தைத் தனிக்க வகை தேடவேண்டியது. அதற்கு முன்னிட்டுச் செப்பியிருக்கிற மார்க்கமாய் நடப்பித்து, ரத்தத்தை நிறுத்தவேண்டியது. ஆயாசம் அதிகமாய் இருந்தால், அபினியில் கொஞ்சம் கொடுக்கலாம். மலபந்தமிருந்தால், லகுவிரேசனிகளைக் கொடுத்து அதை நீக்கவேண்டியது.

நஞ்சு உதயத்தில், பிரஸவம் சீக்கிரம் முடியும்படிசெய்து, நஞ்சைப் பூர்த்தியாய்ப் பேர்த்துவிடவேண்டியது. கருப்பையின் முகம் விசாலமாகி, அல்லது விசாலமாக்கக்கூடியதாய் இருந்தால், கையைவிட்டு, சிசுவின் காலை பிடித்து திருப்பி சிசுவை வெளிக்கெடுத்துவிடலாம். கையை வழக்கப்பிரகாரம் குவித்து, யோனிக்குள்விட்டு, நஞ்சுக்கும் கருப்பையின் கழுத்துக்கும் இடையில் செலுத்தி, சவ்வைக்கிழித்து அகத்தில் பிரவேசிக்கச்செய்வது வழக்கம்; ஆனல் சிலர் நஞ்சைத் துளைத்து கையைக் கருக்குழியில் விடும்படி சொல்லுகிறார்கள் இதற்கு ஆக்ஷேபனைக்கக்ஷியும் உண்டு. இதில் சிசுவு சீவிப்பது அரிது. நஞ்சு சிசுவோடு வெளிப்படாவிட்டால், கையைவிட்டு, அதை வெளிக்கு எடுத்துவிடவேண்டியது. பிறகு கருப்பை செவ்வையாய்ச் சுருங்குகிறதற்கு, துணியை மடித்து அதின்மேல் வைத்து, அழுத்திக்கட்டி, ரத்தம் வராமல் செய்வது சிகிச்சையின் கடமை. ரத்தம் அதிகமாய்க் கண்டால், அல்குல் மேல் சீதஜலம் விட்டு, அர்கட் என்னும் மருந்தை, உள்ளுக்குக்கொடுக்கலாம். நஞ்சு உதயத்தில், குழந்தையின் கால் பிரசன்னமானல் அது சிகிச்சைக்கு அனுகூலம்; அப்போது காலைப்பிடித்து இழுத்து வெளிக்கெடுத்துவிடலாம்.

நஞ்சானது கருப்பை வாயின் ஓரமாய் ஒட்டிக்கொண்டிருந்தால், மேற்கண்ட முறையாய் பனிக்குடத்தைஉடைத்துவிட்டால்,பிரஸவவேதனை உண்டாகி, வாய் விரியும்போது, சிரசானது நஞ்சுமேல் பிகுவாய் அழுந்தி, ரத்தத்தை நிறுத்திவிடும். இது வழக்க சிகிச்சை; இவ்விதச் சிகிச்சைக்கும் ரத்தப்பிரவாகம் நிற்காவிட்டால், சிசுவை திருப்பி வெளிப்படுத்திவிடவேண்டியது.

நஞ்சு உதயத்துக்கு நடந்துவருகிற சிகிச்சை இவ்விதமாய்இருக்க, டாக்டர் ஸிம்ஸன் (Dr, Simpson) என்பவர் நஞ்சை முழுமையும் பிரத்தேகப்படுத்தி விடும்படியாய்ச் சொல்லி, தானும் அநேகருக்குச்செய்திருக்கிறார். அநேக திருஷ்டாந்தங்களினல், இச்செய்கை உத்தமமென்று தெரிவித்து, அதை வழக்கத்தில் கொண்டுவர தன்னல் கூடியமுயற்சிசெய்தும், பிராப்தியடையவில்லை; அதற்கு விரோத கக்ஷியில் சேர்ந்தவர்கள் அநேகருண்டு புராதன வழக்கத்தையே அனுசரித்து நாம் நடத்தினல், ஆக்ஷேபத்துக்கு இடமிராது.

ஹஸ்த கிருத்தியங்கள் சகலமும் நடந்தபிறகு, ஆயாசம் நீங்க உஷ்ணகாரிகளையும், தாருட்டியம் வரும்படி நல்லபோஷணகாரிகளையும் கொடுத்து, சரீரத்தை தேற்றவேண்டியது.

(3) பிரஸவ அந்திய ரத்தப்பிரவாகம், (போஸ்ட்பார்ட்டம் ஹெமரேஜ் Postpartum hæmorrhage. Hæmorrhage after delivery)—சிசுவு பிறந்தபிறகு ரத்தப்பிரவாகம் காண்பதுண்டு, அது நஞ்சுவெளிப்படுவதற்கு

முன்னும், அல்லது வெளிபட்ட பிறகும் காணும். நஞ்சுவெளிப்படுவதற்கு முன் காணுகிற ரத்தப்பெருக்கைக்குறித்து, முன்னிட்டு தெரிவித்திருக்கின்றது; இப்போது இவ்விடத்தில், நஞ்சு விழுந்தபிறகு காணுகிற ரத்தப்பெருக்கைக் குறித்து மாத்திரம் விவரிக்கப்படும். சிசுவு பிறந்த பிறகு, சாதாரணமாய் ரத்தம் வடிவது வழக்கம், அது ரத்தப்பெருக்கில் சேர்க்கையல்ல; ஆனால் மாதாவுக்குக் களையுண்டாகி, நாடி க்ஷீணப்படும்படியாய், அவ்வளவு ரத்தம் பெருகினால், அது இந்த பிரிவில் சேரும்; அதற்கு ஜாக்கிரதைசெய்து ரத்தத்தைத் தடுக்கவேண்டியது. கருப்பை செவ்வையாய்ச் சுருங்காமலும், கருப்பையின் வாய் கிழிந்தும், ரத்தம் வடியும்.

சிகிச்சை.—நஞ்சு வெளிப்பட்டபிறகு, பிரபலமாய் ரத்தம் கண்டால் அதற்குப் பிரதமையில், கருப்பை செவ்வையாய் சுருங்கச்செய்யவேண்டியது. கருப்பையை ஒரு கையால் அழுத்தி பிசைந்து பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால், சீதஜலத்தை எடுத்து அல்குல்மேல் அறைந்தால், கருப்பைச் சுருங்கும். அர்கட் என்கிற மருந்தையும் கொடுக்கலாம். சீதஜலவஸ்தியும், குளிர்ந்த ஜலபானமும் செய்துவைத்தால், ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கும்; இவ்வித செய்கைகளுக்கும் வசப்படாவிட்டால், வயிற்றுமேல், சீதஜலத்தைத் தூக்கிவிடலாம், குளிர்ச்சியால் கருப்பை செவ்வையாய் சுருங்கும்; அதற்கும் ரத்தம் நிற்காவிட்டால், கருப்பைக்குள் கையை விடும்படி ஒருவர் சொல்லுகிறார். இச்செய்கையால் கருப்பை சுருங்கி, ரத்தம் நின்றுவிடுகிற தன்மை இருந்தபோதிலும் நமதெண்ணம் முடிவது சந்தேகம்; மேலும் இது மெத்த அபாயமான கிருத்தியம். முன் தெரிவித்திருக்கிற மருந்துகளை, ஸ்திரீயின் தேகநிலையை, அறிந்து பிரயோகித்து, பிராணனை ரக்ஷிக்கவேண்டியது.

5. கருப்பாஸயபங்கம். (ரப்க்ஷர் ஆவ் தி யூடிரஸ், Rupture of the uterus.)—இது வெகு கொடிய அபாயம்; பிரஸவ வேதனையிலும், அதற்கு முன்னிட்டும் காணும். தாபிதம் கண்டு, கருப்பையானது மெத்த விகற்பப்பட்டிருக்குதல், சிசுவை பலவந்தம் செய்துதிருப்புதல், கருப்பையின் முகம் பிகுவாய் இருக்குதல், கருப்பையின்மேல்படுதல், விழுதல், கோபம், இசிவு, சிசுவு அதிகமாய் சலனமாகுதல், கருப்பை அதிகமாய் விசாலப்படுதல், ஆகிய இவை முதலிய காரணங்களால், கருப்பை கிழிந்துவிடும். அந்த கிழிவு ஊர்த்தமுகமாயாவது மத்தியத்திலாவது, அடியிலாவது இருக்கும். கருப்பையின் கழுத்து சமீபமாய் இருப்பதும் உண்டு. ஷை கீறல் கருப்பைக்கு நீண்ட வாட்டமாயாவது, சாய்ந்தாவது அல்லது குருக்கேயாவது இருக்கும்.

லக்ஷணங்கள்.—இதில் சகிக்கக்கூடாத வேதனை திடீர் என்று காணும்; ஏதோ கிழிந்த தன்மையாயும், ஒருவித சப்தம் தனக்குள் தோன்றும்; வேதனை நின்றுவிடும்; சிசுவின் சிரசு மேலுக்கேறிவிடும்; யோனியிலிருந்து ரத்தம் வடியும்; அதி சீக்கிரத்தில் களைகாணும்; வாந்தியுண்டாகும்; முகம் வெளுத்து கவலைகொண்டிருக்கும்; மேலெங்கும் வியர்த்து குளிர்ச்சியாய் இருக்கும்; நாடி சிறுத்து, துர்ப்பலமாயும் தீவிரமாயும் நடக்கும்; சுவாஸம் மேலிட்டு கஷ்டமாயிருக்கும்; ஸ்திரீயை படுக்கையிலிருந்து எடுத்துவிடும்படியான அவ்வளவு துர்ப்பலம் மேலிட்டு இருக்கும்; உதயமாகிற உறுப்பு, அகப்படாது; கருப்பையின் உட்புறம் வரையில் கிழிந்துவிட்டால், குடல் சிக்கிக்கொண்டு, அதற்குடைய லக்ஷணங்களும் காணும்; இந்த அபாயம் கண்டு கொஞ்சநேரம் சென்றபிறகு, தளர்ச்சியினாலாவது, அல்லது சிசுவு

ஜனித்த பிறகாவது மரணம் சம்பவிக்கும். இதற்கும் தப்பித்துக்கொண்டால், குடல் சவ்வின் தாபிதத்தினலாவது, அல்லது வேறு வியாதிகள் கண்டாவது, ஸ்திரீ இறந்துவிடுவாள். கருப்பபை கிழிந்துவிட்டால் ஜீவிப்பது அரிது.

சிகிச்சை.—கருப்பையின் முகத்தை விரிக்கக்கூடாமையாய் இருக்கிற போது, சிசுவை வெளிக்கெடுப்பது அசாத்தியம்: ஆனல் அதை விரிக்கக்கூடு மானதாய் இருக்கும்போது தக்ஷணமே சிசுவை எடுத்துவிடவேண்டியது. கருப்பையின் பங்கத்துக்கு நாம் ஒன்றும் செய்யலாகாது. ஈஸ்வரச்செயலுக்கு விட்டுவிடவேண்டியதென்று ஒருகக்ஷியாருடைய அபிப்பிராயம். சிரசு மேலுக்கேற்ருமல், இடைக்குழியில் தானே இறங்கிஇருந்தால், குறட்டால் எடுத்துவிடலாம்; அதற்குக் கூடாமையாய் இருந்தால், சிசுவு இறந்து இருப்பதால், கிரசை துளைத்து சிசுவை வெளிக்கு எடுத்துவிடவேண்டியது. சிசுவு வயிற்றில் விழுந்திருந்தால், கையை யோனிக்குள் விட்டு, கிழிந்த வழியாய்ச் செலுத்தி, சிசுவின் காலைப்பிடித்து, குடலுக்குக் காயப்படாமல் இழுத்துவிடவேண்டியது; நஞ்சையும் எடுத்துவிட்டு, யோனியைச் சுத்திசெய்து விடவும் கருப்பை பிகுவாய்ச் சுருங்கி கையை விடக்கூடாமையாயும், இடைக்குழி சிறுத்து, குழந்தை வர இடமில்லாமலும் இருந்தால், வயிற்றைகீறி Cæsarian Section) எடுத்துவிடவேண்டியது. சரீர தள்ர்ச்சிக்கு உஷ்ணகாரிகளை சாக்கிரதையாய் கொடுக்கவும். குழந்தையை எடுத்தபிறகு அபினிகொடுக்கலாம் தாபிதம் கண்டால், அதற்குத் தகுந்த சிகிச்சை செய்யவேண்டியது.

(6) கருப்பையின் அகம், புறமாகுதல். (இன்வர்ஷன் ஆவதியூடிர்ஸ் Inversion of the uterus)—இந்த அபாயம் காண்பது அபூர்வம். கண்டால் சகிக்கக்கூடாத உபத்திரவத்தை கொடுக்கும்; மரணமும் சம்பவிப்பதுண்டு. இதில் கருப்பையின் உட்புறமானது, வெளிபுறமாய் திரும்பிவிடும். ஒருவேளை கொஞ்சமாயாவது, ஒருவேளை அதிகமாயாவது, ஒருவேளை முழுமையுமாவது திரும்பிஇருக்கும். இந்த துர்க்குணம், சிசுவு ஜனித்தஉடனேயாவது, அல்லதுசில நாள் சென்ருவது, அல்லது சாவதானமாயாவது உண்டாகும். காரணங்கள்.—இந்த விகற்பம் உண்டாகிறதற்கு காரணங்கள் அநேகம். சிசுவு சீக்கிரத்தில் பிறப்பதில், இது ஒருவேளை காண்பதும்உண்டு. பிரஸவமான பிறகும் கண்டுவருகின்றது. நஞ்சுவராமல் அழுத்தமாய்ஒட்டிக்கொண்டிருக்கிறபோது, கொடியைப் பிடித்திழுப்பது நமது நாட்டுவழக்கம். ஆனல் கருப்பைத் திரும்பிவிடுகிறதற்கு சந்தேகம் இல்லை.

லக்ஷணங்கள்.—கருப்பை அபத்தமாய் திரும்பின உடனே, தளர்ச்சி காணும்; பிரேதமுகமாகி வெறுப்பு கொண்டவளைப்போலிருப்பாள். ஹீனத்தொனியோடுவார்த்தையுமிருக்கும். நாடிதீவிரகதியையடைந்து, சிறுத்து, படபடவென்று நடக்கும். குமட்டலும் வாந்தியுமிருக்கும்; கருப்பையின் புரளல் கொஞ்சமாயிருந்தால், லக்ஷணங்கள் அற்பமாயிருக்கும். ஒவ்வொரு வேளை, ரத்தப்பிரவாகம் காண்பதும் உண்டு. யோனிக்குள் விரலை விட்டுப் பார்த்தால், இடைக்குழியில் கட்டியிருப்பது போல் தட்டுப்படும்; அல்லது, வெளிக்குவந்து தொங்கிக்கொண்டிருக்கும். கட்டியானது, உருண்டு, வேதனையுள்ளதாய், மிருதுவாய், சுறுசுறுப்போடு, ரத்தம் வடிந்துகொண்டிருக்கும்; கருப்பையைச் சரியாக திருப்பக்கூடாத அவ்வளவு பிகுவுற்றிருந்தால், ஒருவேளை தாபனம்கொள்ளும்; ரத்த ஓட்டம் தடைப்பட்டால், அழுகிப் போகும்; நஞ்சு விழாதிருந்தால், எங்கேயாவது ஓரிடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும். இந்தக் கெடுதி நேரிட்டஉடனே, தளர்ச்சியினலாவது, ரத்தப்பி

ரவாகத்தினாலாவது ஸ்திரீ இறந்துவிடுவாள் ; அல்லது நாள் சென்றால், உபத்திரவத்தினாலாவது, இசிவுகண்டாவது, மூர்ச்சையுண்டாகியாவது மரணம் சம்பவிக்கும்.

சிகிச்சை.—புரண்டிருக்கிற கருப்பையை மறுபடியும் யதாப்பிரகாரமாய் திருப்பிவிடுகிறது நமது முக்கிய காரியம். இந்த கெடுதி சம்பவித்த உடனே, சுலபமாய் திருப்பிவிடலாம் ; 4-5 மணிநேரம் தாமசமாகிவிட்டால் அசாத்தியத்தில் வந்துவிடும். கைக்கு எண்ணெயிட்டு, புரண்டிருக்கிற பையை கெட்டியாய்ப் பிடித்து, உள்ளுக்குத் தள்ளி, யோனிக்குள் கையிருக்கும்போது, அதைக்குவித்து கருப்பையின் அடியை மாத்திரம் பிசைய வேண்டியது : கொஞ்சம் விட்டால், ஒருவேளை மறுபடியும் அடியிறங்கிவிடும் ; ஆகையால் பிடித்த பிடியைவிடாமல் முயற்சிசெய்து, மெதுவாய்த் தள்ளினால், யதாப்பிரகாரம் பை மெதுவில் நழுகி திரும்பிவிடும். பைக்குள் விடுகிற கையை நாமாய் எடுத்துவிடலாகாது ; கருப்பைச் சுருங்குவதால், கை தற்செயலாய் வெளிக்கு வந்துவிடும். இப்படிச் செய்தால், ரத்தம் வராமலிருப்பதற்கு நிச்சயம். ஸ்திரீக்கு போதக்ஷயம் உண்டாக்கி, ஷை கிருத்தியத்தைச் செய்யலாம். ஒருவேளை நஞ்சானது கருப்பைக்குள் ஒட்டிக்கொண்டிருந்தால், அதைப் பேர்த்தெடுத்துவிட்டு, பிறகு கருப்பையைத் தள்ளவேண்டுமென்று சிலரும், பேர்க்காமல் தள்ளவேண்டும் என்று சிலரும் சொல்லுகிறார்கள். நஞ்சு ஒட்டிக்கொண்டிருக்கும்போது பையானது காத்திரத்தில் பருத்திருக்கும் ; ஆகையால் உள்ளுக்குத் தள்ளுவது பிரயாசை, பேர்த்துவிட்டு தள்ளுவது சுலபம், ஆனால் ரத்தம் வடியாமல் மாத்திரம் சூக்ஷித்துக்கொள்ள வேண்டியது கருப்பையை உள்ளுக்குத் தள்ளிவிட்ட பிறகு, ஸ்திரீயை அசையாமல் மல்லாக்கப் படுக்கையில் வைத்து, இடுப்பை உயர்த்தி, முழங்கால்களை முடக்கிவைக்கவேண்டியது. அபினியைக் கொடுத்தால் நன்மையைத் தரும். சரீரதளர்ச்சி அதிக்கிரமித்திருந்தால், சாராயம், அம்மோனியா, கர்ப்பூரம் முதலிய உஷ்ணகாரிகளைக் கொடுக்கவேண்டியது.

7. பிரஸவவலி. (கன்வல்ஷன்ஸ் Convulsions.)—பிரஸவ ஸ்திரீகளுக்குக் காணுகிற வலியானது, பார்வைக்கு மெத்த பயங்கரமாயும், சிகிச்சைக்கு வசப்படுவது கஷ்டமாயும் இருக்கும். இதிலிருந்து தேறுவது பிரயாசை. இந்த வலியானது, பிள்ளை உண்டாயிருக்கும்போதும், பிரஸவகாலம் சமீபமாயும், பிரஸவவேதனை கண்டிருக்கிறபோதும், பிரஸவித்தபிறகும், காணும். இதில் 3-சாதிகள் உண்டு. சூதக சந்நிரோகலக்ஷணங்களையுடைய பிரஸவவலி—அபஸ்மார்க்ரோக லக்ஷணங்களையுடைய பிரஸவவலி—உஷ்ண சந்நிரோக லக்ஷணங்களையுடைய பிரஸவவலி, ஆகிய இவைகளாம்.

1. சூதக சந்நிரோக லக்ஷணங்களையுடைய பிரஸவ வலி. (ஹிஸ்டிரிகல் கன்வர்ஷன்ஸ். Hysterical Convulsions.)—இந்த சாதியானது கர்ப்பவதிகளுக்குக் காணுகிறது வழக்கம். நித்திராபங்கம், ஆயாசம், சீரண அக்கிரமம், இவை முதலிய காரணங்களால், இந்த துஷ்டரோகம் ஜனிக்கும். லக்ஷணங்கள்.—வலி காண்பதற்குமுன் தொண்டையில் பிகிவு காணும். தேம்பி அழுதல், அடிக்கடி விழுங்கப் பிரயத்தினம், ஆகிய இவைகளும் உண்டாகும். பிறகு ஸ்திரீமரம்போல் ஸ்தம்பித்து, அசைவு அற்றிருப்பாள் அல்லது புரளுவாள். தொண்டையில் ஏதோ ஒரு வஸ்து அடைத்திருப்பதை எடுக்கிற பாவனைப்போல் அடிக்கடிக்கையை தொண்

யின் மேலும், மார்பின் மேலும் கொண்டுபோவாள். முகம் வெளுத்திருக்கும், ஆனால் குரூபமாகாது; வாயிலிருந்து நுரையும் வராது; கீழ்த்தாடையிலும், முதுகுச் சதைகளிலும் வலி இராது; தன் மனதில் இருப்பதையும். தனது கஷ்டத்தையும் தெரிவிக்க வாய் வராத போதிலும், புத்தி கெடாது, இவ்வித ஸ்திதியில் கொஞ்சநேரம் இருந்த பிறகு, அதிகமாய்த் தேம்பி அழுவாள். அல்லது கீச்சிட்டழுது, கண்களில் ஜலம் விடுவாள். பிறகு வலி நின்று விடும்; மூத்திரம் அதிக்கிரமித்து தெளிவாய் இறங்கும். இவ்வண்ணம் ஒருமுறை கண்டு நின்றுவிடும்; அல்லது, மறுமுறையும் மேற்கண்ட லக்ஷணங்களோடே பிறந்து, ரோகம் பிரபலப்பட்டிருக்கும். கருப்பத்துக்குச் சாதாரணமாய் யாதொரு பின்னம் நேரிடாமலிருந்த போதிலும், அகாலப்பிரஸவம் உண்டாகிறதும் உண்டு. இதற்கும், மற்ற இரண்டு சாதிகளுக்கும் உள்ள வித்தியாசங்கள்.—அபஸ்மாக வலியாய் இருந்தால், தேகத்தில் மெத்த முறுக்கல் காணும். அறிவு கெடும், வாயில் நுரைதள்ளும், நாக் கடித்துக் கொள்ளும், மூச்சு முட்டலும் குறட்டலுமாயிருக்கும்; சந்நி நின்ற உடன் அயர்ந்த நித்திரை உண்டாகும்.—உஷ்ண சந்நியாய் இருந்தால், முதல் அறிவு கெடும் அசைவு இராது, சுவாஸம் குறட்டைபோல் நடக்கும், சீக்கிரத்தில் தெளிவு பிறக்காது.

சிகிச்சை.—இந்த கஷ்டரோகத்தை உஷ்ணகாரி, அங்காகர்ஷண நாஸகாரிகளாகிய, சடாமாஞ்சி, பெருங்காயம், அம்மோனியம், கர்ப்பூரம், மிளகுநீர் முதலியவைகளைக் கொடுத்து கண்டிக்கவேண்டியது. ஆக்கிராண உப்பை முகரவைக்கலாம்; முகத்தில் குளிர்ந்த ஜலத்தை அறையலாம். வலி நின்ற பிறகு, அபினி கொஞ்சம் கொடுத்தால், நித்திரை செவ்வையாய்ப் பிறந்து தெளிந்த உடன், தேகம் ஆரோக்கியமாய் இருக்கும். மலபந்தத்தை நீக்கி, தேகதாருட்டியம் வரும்படி, கசப்பு மருந்துகளைக் கொடுக்கவேண்டியது.

2. அபஸ்மார்க ரோக லக்ஷணங்களையுடைய பிரஸவ வலி. (எபிலெப்டிக் கன்வல்ஷன்ஸ், Epileptic convulsions)—இதில் லக்ஷணங்கள் ஏகதேசம், காக்கைவ்லியில் காண்கிறதுபோலிருக்கும்; அதிலிருக்கிறதில் காணும் எறும்பு ஊருகிற உணர்ச்சி இதில் இருப்பது அரிது; வலி சீக்கிரம் விட்டுவிட்டு காணும்; 5-30 நிமிஷம் வரையில் இருப்பது வழக்கம். கிரமேணய் அந்த குறிகள் தணிந்து, நின்று, ஸ்திரீ அயந்து படுக்கையில் இருப்பாள். வலி நின்று இருக்கிற இடைநேரத்தில், சிலருக்குக் கொஞ்சம் போதம் வரும், சிலருக்கு போதம் சுத்தமாய் இராமலிருக்கும். கொஞ்சநேரம் ($\frac{1}{2}$-1-மணி) வலியிராமலிருந்து, பிறகு மறுபடியும் ஆரம்பிக்கும். 24-மணிக்குள், 18-ஆவர்த்தி கண்டதாயும் குறிப்பிட்டிருக்கின்றது. மூத்திரத்தில் ஆல்பியூமன் (Albumen) பசை அதிகமாய் இருக்கும். இந்தவலி ஆஸ்வாஸப்படுவது, சரீரப்பிரகிர்திக்குத்தக்கபடி வித்தியாசப்படும்; ஒருவேளை கொஞ்சம் மயக்கமும், ஆயாசமும், மாத்திரம் கொஞ்சநேரமாவது, நாள்கணக்காய் ஆவது இருந்து, சாவதானத்தில் சொஸ்தமாகிவிடும். ஒருவேளை, பயித்திய லக்ஷணங்கள் கண்டு சில நாளிருந்து, முடிவில் தெளிந்துவிடும். ஒவ்வொருவேளை உறக்கம் பிறந்து, அசாத்தியத்தில் விழுந்து இறந்துவிடுவாள். சிலருக்கு, செவிடு, குருடு, ஊமை, பாரிஸவாதம், ஆகிய இவைகளில் ஒன்றாக முடிவதும் உண்டு.

கர்ப்பவதிகளுக்கு, போதுகாலத்தில் இசிவு காண்பது வழக்கம்; ஆனால் அதற்கு முன்னிட்டு காண்பதும் உண்டு. இதில் பிரஸவவேதனை ஆரம்பிப்

பது தெரியாது ; வலித்துக்கொண்டிருக்கும்போது, பிரஸவவேதனை கண்டு கிரமமாய் வர்த்திக்கும். சிலரில் வலி கண்டபோது பிரஸவ வேதனையில்லாமல், சில நாட்சென்ற பிறகு பிரஸவவேதனை காணும். இந்த வியாதியில், குழந்தை இறந்து ஜனிப்பது வழக்கம் ; அது ஒருவேளை அழுகியிருப்பதும் உண்டு. வலி காண்பதற்கு முன்னிட்டு குழந்தை இறந்துவிடுகிறதென்றும் அல்லது வலிகண்டபிறகு குழந்தை இறக்குதென்றும், நிச்சயித்துச் சொல்வது பிரயாசை. ஆனால் குழந்தை இறந்த பிறகுதான் இந்த வலி காணுகிறதென்று ஒரு சமுசயம்.

பிரஸவ வேதனையில் இருக்கும்போது, வலி கண்டால், வலியானது, பிரஸவ நோயோடு ஆரம்பமாகும். ஆனால், பிரதிவேதனையிலும் வலி காணுகிறதில்லை. வலியைப் பார்க்கிலும் பிரஸவ வேதனையின் உபத்திரவம் அதிகமாய் இருப்பது, முகசாடையில் நமக்குத் தெரியவரும். வலியின் லக்ஷணங்கள் கொஞ்சம் பிரபலப்பட்டிருக்கும் ; வலியானது, பிரஸவ வேதனையை தடுக்காது ; வலி நின்று பிரஸவம் முடிந்தபிறகு, வயிற்றில், வியாதி கண்டு, துர்க்குணம் சம்பவிக்கும்.

பிரஸவித்த பிறகு, 2-4-மணிநேரம் சென்றாவது, அல்லது, இன்னம் நேரஞ்சென்றாவது, வலிகாணும். மூளைக்கும், நரம்புகளுக்கும், ஏதோ ஓர் வித அதிர்ச்சியுண்டாகி, ஷை வலி காண்பதற்கு யாதொரு சந்தேகமில்லை ; ஆனால், அது பலானதென்று நாம் தெரிந்துகொள்ளுவது பிரயாசை.

சிகிச்சை.—தேகத்தில் ரத்தப்பிரசாதம் குறைந்து, சரீரம் வெளுத்து, துர்ப்பலமும் இருந்தால், முகத்தில் குளிர்ந்த ஜலத்தை அறைந்து, கழுத்தில் பிளிஸ்டர் போட்டு, சிரோரோமங்களை நீக்கி, இரத்துணியைப் போட்டு நனைத்துக் கொண்டிருக்கவேண்டியது. உள்ளுக்கு, ரஸபஸ்பமும். அபினியும் கொடுக்கலாம் ; குளோரோபாரத்தை ஆக்கிராணிக்கச் செய்யலாம் ரத்தம் அதிக்கிரமித்து, சிரசு உஷ்ணமாகி, முகம் சிவந்து. நாடி பெருத்து திரடத்தோடு வேகமாய் நடந்தால், கொஞ்சம் ரக்தத்தைப் போக்கடிக்கலாம். நல்ல பேதிக்கொன்று கொடுத்து, துர்மலங்களை நீக்கிவிடவேண்டியது. இவ்விதமாகச் செய்து ரோகத்துக்குக் கொஞ்சம் ஆஸ்வாஸம் பிறந்தால், அபினி கொடுக்கவேண்டியது ; அபினியோடு, வாந்தி உப்பு சேர்த்துக் கொடுப்பதும் சுகுணமுண்டு நாக்கில் காயம்படாமல், பற்சந்துகளில் எதையாவது வைக்கவேண்டியது. ஸ்திரீக்கு காயம்படாமலும் செய்யவேண்டியது. இந்த சிகிச்சையை, மேற்கூறிய மூன்று சமயங்களில் காணுகிற வலிகளுக்கும் நடப்பிக்க உதவும். குளோரோபாரம் கொடுத்து, உபத்திரவத்தைச் சமனப்படுத்தலாம். இவ்விதமாய் ஸ்திரீக்கு உபசரணை செய்த பிறகு, சிசுவை வெளிப்படுத்துகிறதைக் குறித்து யோசிக்கவேண்டியது. பிரஸவ வேதனை உண்டாவதற்குமுன் நாம் கையிட்டால, ஸ்திரீக்கு அபாயம் நேரிடும். கருப்பவதிகளுக்கு காணுகிற இசிவுக்கு, வெளிச்சிகிச்சையே செய்யவேண்டியது ; கருப்பைக்குள் கையிடலாகாது ; பிரஸவவேதனை ஆரம்பிக்கும்போது, வலி கண்டால், அதற்கும் கையிடலாகாது ; சிசுவைத் திருப்புகிறதும் அபாயம் ; சிசுவு இடைக்குழிக்கிறங்கி, குறட்டுக்கு ஒட்டினால், குறட்டை உபயோகிக்கலாம்.

3. உஷ்ண சந்நிரோக லக்ஷணங்களையுடைய பிரஸவ வலி. (ஆபொபிளக்டிக் கன்வல்ஷன்ஸ் Apoplectic convulsions).—இந்த சாதி

காண்பது அபூர்வம்; பிரஸவம் முடிகிற சமயத்திலாவது, அல்லது, பிரஸவம் முடிந்த பிறகாவது வலி காணும். லக்ஷணங்கள்.—இந்த சாதிவலி காண்பதற்கு முன் கொஞ்சம் தலைவலி காணும்; பிறகு முகம் சிவந்து காணப்படும், கண்கள் சிவந்திருக்கும், வலி அதிகமாக இராது, சரீரம், கரசரணங்கள் கொஞ்சம் நடுங்கும், அல்லது போட்டவிடத்திலேயே அசைவற்றிருந்து போதக்ஷயம் காணும்; முகத்தில் விகாரம் கொஞ்சமாய் இருக்கும், அல்லது ஒருவேளை இல்லாமல் இருப்பதும் உண்டு. வாயில் நுரைதள்ளாது, மாம்ஸக்ஷீணமுண்டு, சுவாஸம் குறட்டைபோல் நடக்கும்; மறுபடியும் சுமார்கம் வராது, வலியும் காணுது. நாடிபெருத்து, மெது உற்று நடக்கும்; கண்தாரை ஒருவேளை சுருங்கியும், ஒருவேளை விரிந்தும் இருக்கும்; வெளிச்சத்துக்கு உணர்ச்சியிராது. இப்பிரகாரமாய் இந்த ஸ்திதியில் மரணம் சம்பவிக்கிற வரையில் ஸதரீ இருப்பாள்.

சிகிச்சை.—இந்த துஷ்ட ரோகத்துக்கு, கன்னப்பொறியில் அட்டையைவிட்டு ரத்தமெடுத்து, கொஞ்சமும் ஆஸ்வாஸம் பிறக்காவிட்டால், அசாத்தியம் என்றே தீர்மானிக்கவேண்டியது. ஆனுல் ஒருவேளை கொஞ்சம் ஆதிவாஸம் பிறந்தால், சிரோரோமத்தைப் போக்கி, ஈரத்துணியை தலைக்கு போட்டுவைத்து, கழுத்துக்கு பிளிஸ்டர் போட்டு புண்ணுக்கி, நல்ல பேதியாக மருந்தைக் கொடுத்து, தூர்மலத்தை நீக்கிவிடவேண்டியது. இந்தச் சாதி வலி, பிரஸவ வேதனையில் கண்டு, நோய் நின்றுவிட்டால், ஆலஸியம் செய்யாமல் சிசுவை வெளிப்படுத்திவிடுவது உத்தமம். சிரசு நெருங்கி இருந்தால், நீண்ட குறட்டைப் பிரயோகித்து சிசுவை புறமாக்கிவிடவேண்டியது.

8.—கருப்பிணிகளுக்கும், பிரஸவித்த ஸ்தீரிகளுக்கும் காணுகிறவாதரோகம். (Paralysis occurring during gestation or in child bed)—ஸ்திரீகள் கருப்பமாய் இருக்கும்போதும், பிரஸவ வேதனையிலிருக்கும்போதும், பிரஸவித்த பிறகும், ஒருசாதி வாதரோகம் காண்பதுண்டு! ஆனுல் இது அபூர்வம். முன்பு இதைக்குறித்து யாரும் யோசித்ததில்லை; இப்போது சீமையில் யாவத்திர வைத்தியர்களாலும, இது கவனிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வாதமானது, பலரூபங்களாய் காணும். பக்ஷவாதமாயாவது, இளம்பிள்ளைவாதமாயாவது, முகசந்நி ரூபமாயாவது, விழிகள் குருடாயாவது, செவிடாயாவது காணும். பிரதமையில் வலிகண்டும், அல்லது காணுமலும், ஷை வாதத்திலொன்று பிறப்பதுண்டு. கருப்பவதிகளுக்கு, இந்த ரோகம் ஜனித்தால், பிரஸவமான பிறகு, சாவதானமாய், அது சொஸ்தமாகி விடுவதாய் கண்டிருக்கிறது இந்த ரோகம் சுலப பிரஸவத்திலும், கஷ்டப்பிரஸவத்திலும் உண்டானதைக் கண்டதுண்டு; மூத்திரத்தில் ஆல்பியூமன் என்னும் பசை அதிக்கிரமித்திருப்பதாயும் தெரியவருகிறது. அதுவே வாதத்துக்கு காரணமென்று சில ஆயுள்வேதியர்கள் யோசிக்கிருர்கள். பக்ஷவாதம் கண்டு, உஷ்ண சந்நியாக முடிந்திருப்பதாய் தெரியவருகிறது; அல்லது சீக்கிரத்திலாவது, தாமஸித்தாவது ஸொஸ்த மடைந்ததாய் குறிப்பிட்டிருக்கிருர்கள். இளம்பிள்ளை வாதமாகிய கால்கள் விழுந்துபோகுதலானது, கொஞ்சநாள்வரையில் இருந்து போய்விடும்; அல்லது சொஸ்தமாகாமல் போவதும் உண்டாம்; விழிகள் குருடு, செவிடு முதலிய பிர்த்தியங்க வாதரோகம், கொஞ்சநாள் வரையில்தான் இருக்குமாம்.

சிகிச்சை. இந்த வியாதிக்கு, பிளிஸ்டர், விரேசனங்கள், ரசம் முதலியவைகளை உபயோகித்து, ரோகத்தை வசப்படுத்தவேண்டியதென்று கண்டி

ருக்கிறது. நல்ல போஜனம், உஷ்ணகாரிகளாகிய அம்மோனியா, கர்ப்பூரம், இவைகளும் கொடுக்க உதவும். சாவதானமடைந்த வாத ரோகத்தை, எட்டிக்கொட்டையின் உப்பு, சர்வவிராகம்ப யந்திரம் (galvanism) முதலியவைகளால் வசப்படுத்தவேண்டியது. மூத்திர விகற்பத்துக்கு, மூத்திர வர்த்தனகாரிகள் உதவாது; இடுப்புக்கு கடுகை அரைத்துப்போட்டு, உஷ்ண தைலங்களைத் தேய்த்து, உள்ளுக்கு சுவேதகாரிகளைக் கொடுத்து கண்டிக்க வேண்டியது. நாள்பட்டதை, மாசக்காய் உப்பு, அயம் இவைகளைக் கொண்டு சிகிச்சை செய்யலாம்.

9. விரணசந்நி (டெடெனஸ், Tetanus).—இந்த அகார ரோகம் பிரஸவ ஸ்திரீகளுக்குக் காண்பது அபூர்வம்; கண்டாலோ பிழைப்பது அரிது. இரணசந்நியானது புருஷர்களுக்கு மிகுதியாயும், ஸ்திரீகளுக்கு குறைந்தும் காணும். இந்த வலியை அகாலப்பிரஸவத்திலும், ரத்தப்பிரவாகத்திலும், காணலாம்; ஆனல் சாதாரண பிரஸவத்தில் காண்பதும் உண்டு. குளிர்ச்சி, காயங்கள், கிரித்தியங்கள், கருக்குழியில் ஏதாவது இருந்து அழுகியிருக்குதல் ஆகிய இக்காரணங்களால் இந்த வியாதி பிறக்கும் லக்ஷணங்கள்.—இரண சந்நிக்குடைய சாதாரணக்குறிகளாகிய தலைவலி, தாடையின் கீல்பிடித்தம், விழுங்க கஷ்டம், கழுத்தச் சலதைகளுக்கும், தாடைசதைகளுக்கும் வேதனை, ஊர்த்த சுவாஸம், விட்டுவிட்டு வந்து உபத்திரவிக்கிற வலி முதலியவைகள் இதில் காணலாம்

சிகிச்சை.—இந்த அசாத்திய ரோகத்துக்கு கஸ்தூரி, சடாமாஞ்சி, பிளிஷ்டர், கர்ப்பூரதைலவள்ளி, அபினி, ஊமத்தை, குரோசாணி ஓமம், கர்ப்பூரம், கஞ்சா முதலிய வலிகளைத் தடுக்கிற ஔஷதங்களை வைத்தியர்கள் உபயோகித்ததுண்டு. இவைகளைப் பார்க்கிலும் குளோரோபாரம், ஈதர் இவைகளை ஆக்கிராணம் செய்துவைப்பதில், அதிக சுகுணத்தைக் காணலாமென்று, ஒருவருடைய அபிப்பிராயம். இவைகளுக்கும் வியாதி வசப்படாமல் போவதும் உண்டு; ஆனல் விடாமுயற்சி செய்து நாள் கணக்காக பிரயோகித்துப் பார்க்கவேண்டியது.

(10) அபமிருத்தியு. (ஸடன்டெத், Sudden death)—பிரஸவத்தில், காரணமின்றி மரணம் சம்பவிப்பதும் உண்டு. பிரஸவம் ஆனபிறகு, விசேஷமாய் யாதொன்றும் சம்பவிக்காமல், திடீரென்று ஸ்திரீ இரந்துவிடுவாள். ஒருவேளை, ஏதாவது குடிக்கும்படியாய் சிரஸை கொஞ்சமாக எடுத்தபோதிலும் சரி அல்லது மலவிசர்க்கமாகும்போது முக்கினுலும் சரி, அறிவு மயங்கி மரணம் உண்டாகும். பிரஸவித்து சிலநாள் சென்றபிறகு சடிதி மரணம் சம்பவிப்பது அரிது. மூர்ச்சை மூச்சடைப்பு, தேசத்துக்கு ஒரு அதிர்ச்சி, இருதயரோகம், நீர்க்கோவை இவைமுதலிய காரணங்களினல் அபமிருத்தியு சம்பவிக்குமாம். இதற்குச் சிகிச்சைசெய்ய சமையம் கிடைக்காது; செத்தபிணத்தைப் பார்வையிட்டு வந்துவிடவேண்டியதாகின்றது.

(11) பிரஸவ சுரம். (பியுஅர்பிரல் பீவர், Puerperal Fever)—இந்த கஷ்ட சாத்திய ரோகமானது, சிலவிடங்களில் பெருவாரியாய் வியாபிக்கும்; இதில் லக்ஷணங்கள் வேளைக்கொருவிதமாய்க் காணப்படுகிறபடியால், கிரந்தகர்த்தர்கள், அவரவர்கள் இஷ்டத்தின்படி நாமத்தைக் கொடுத்து விவரித்திருக்கிறார்கள். (Child-bed fever; peritoneal fever; low fever of child bed) ரோகிகளிருக்கிற சாலைகளில் கண்டால், அதி உக்கிரமாய் வியாபிக்கும்; ஏழைகளுக்குக் காண்பது மிகுதி. சிலர் இதைக் கருப்பைத்

தாபனமென்றும், சிலர் குடல் தாபனமென்றும், சிலர் குடல் சவ்வு தாபனமென்றும், சிலர் ஒருமாதிரி சுரமென்றும், சிலர் தொந்தரோகமென்றும், பல விதமாய் யோசித்து விவரித்ததுண்டு. இந்த கொடியசுரம் காணுகிற விதங்களை, இதனடியில் விவரிக்கப்படும்

1. குடல் சவ்வு தாபிதம். (இன் பிளமேஷன் அவ் தி பெரிடொனியம் Inflammation of the peritoneum)—பிரஸவசுரம் பெருவாரியாய் வியாபிக்கும்போது, இந்தசாதி முக்கியமாய் காண்பதுண்டு. ஆதியில் கருப்பையின்மேல் ஒட்டிக்கொண்டிருக்கும் ஸீரஸ் சவ்வுக்குத் தாபனம் கண்டு, பிறகு பரவி சவ்வு முழுமையும் வியாபிக்கும். இந்தசாதி ரோகம் பிரஸவத்துக்குமுன் வந்தது கண்டிருந்தபோதிலும், பிரஸவித்து 1-3 நாள் பிறகு காண்பது வழக்கம். லக்ஷணங்கள். —இதில் முதல் குளிர்காணும், நோய்பிறக்கும், நாடி வித்தியாசப்படும், உஷ்ணம் பிறக்கும், முகம் சிவந்திருக்கும்; நாடி தீவ்ரகதி அடைந்திருக்கும், சுவாஸம் பெருமூச்சாயும் விரைவாயும் நடக்கும், உஷ்ணம் தணிந்து சுவாபிகமாகும்; குமட்டலும், வாந்தியும், தலைவலியும் உண்டு, கருப்பையிலும், வயிற்றிலும் வேதனையிருக்கும்; அந்த வேதனை முதல் ஈரற்குழியிலாவது, கவுட்டியிலாவது ஆரம்பித்து, பிறகு சவ்வெங்கும் வியாபிக்கும். வேதனை அற்பமாயாவது அல்லது அதிக்கிரமித்தாவது இருக்கும்; சிலரில் விடாமலிருக்கும், சிலரில் விட்டுவிட்டு வரும்; அதிக வேதனையுண்டாகும்போது, வயிற்றுமேல் துணிசமேதம் பட ஒட்டாது; முழங்கால்களை முடக்கி, வயிற்றுச் சதைகளுக்குத் தளர்ச்சிக்கொடுக்க இஷ்டமிருக்கும்; கருப்பையானது பெருத்து, விரல்களுக்குக் காணப்படும்; ரோகமானது செவ்வையாக உடம்பில் பற்றினபிறகு வயிறு கனக்கும்; வாயுகொண்டு பொருமல் உண்டாகும்; நாட்சென்றால், நீர் உண்டாகும்; வாயுவானது சவ்விலாவது, குடலிலாவது சேர்ந்து இருக்கும்; அழுக்கு விழுவது, சிலரில் சாதாரணமாயிருக்கும், சிலரில் குறையும் சிலரில். சுத்தமாய் கட்டிக்கொள்ளும்; பாலும் அவ்விதமாகவே இருக்கும்; நாடி தீவிரகதியடைந்து, சுற்று, தந்திபோல் நடக்கும்; நாக்குமேல் வெள்ளைமாவுபடிந்து, ஓரம் சிவந்து இருக்கும்; அல்லது உலர்ந்து, கருத்து, தாகம் அதிகமாய் இருக்கும்; குமட்டலும் வாந்தியும் இருக்கும்; பேதி காண்பதும் உண்டு; மூத்திரம் குறைந்து, சிவந்து, விடுவது கொஞ்சம் கஷ்டமாய் இருக்கும். சாகும்போது தேகம் குளிர்ந்து, பிசுபிசுப்புகாணும்; புத்திக்கு விகல்பம் காணுவது அபூர்வம்; முகம் மாறிவிடும். பிரஸவசுரத்தின் லக்ஷணங்கள் இதுவென்று முன்னோர் சிலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். ரோகத்தின் வீரியத்துக்குத்தக்கபடி, 1-2-3-சிலரில் 5-முதல் 10 நாளைக்குள் மரணம் சம்பவிக்கும். இந்த வியாதிகண்டால் பிழைப்பது அரிது; கஷ்ட சாத்தியம், பெருவாரியாக வியாபிக்கும்போது, அசாத்திய குணங்களே மேலிட்டிருக்கும்!

சிகிச்சை.—இந்த கொடிய ரோகத்துக்குச் சிகிச்சை, ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமாய் நடப்பிப்பதுண்டு; ஸ்திரமாய் ஒருவழியை அனுசரித்தவர் ஒருவருமில்லை. சரீரம் தாங்கும்படியாய் இருந்தால் ரத்தம் வாங்கும்படி கண்டிருக்கிறது; ஆனால் அந்த ராக்ஷஸசிகிச்சை நமது நாட்டு க்ஷீணப் பெண்களுக்கு ஏற்கமாட்டாது. வயிற்றுக்கு ஒற்றிடமும் போல்டீசும் போட்டால், நலந்தரும். ரஸபஸ்மம் கொடுத்து, வாயைக் கொஞ்சம் ரணமாக்குவதில் குணமாம்; அதனுடன் அபினியைச் சேர்த்து கொடுக்கும்படி சொல்லுகிறார்கள். அபினியை மாத்திரம், 1-கிறேன் வீதம், மணிக்கொருதரம்.

கொடுத்தால், வெகு நன்மை உண்டாகுமென்றும், சிலருடைய அபேக்ஷை. ரஸபூசுத்தயிலம், தேய்ப்பதிலும் நற்குணமுண்டாகும். சிலர் வாந்தி உப்பை குமட்டலுண்டாகிற அளவுக்குக் கொடுக்கும்படி சொல்லுகிறார்கள்; ஆனால் வாந்தியிருந்தால் அதைக் கொடுக்க உதவாது. பேதிக்குக் கொடுக்கும்படி சிலரும், கொடுக்கக்கூடாதென்று சிலரும் சொல்லுகிறார்கள். ஆனால் வஸ்திசெய்து மலபந்தத்தைப் போக்கலாம்; பேதிக்குக் கொடுப்பதை நீக்கி வைப்பதே நல்லது. பேதி உண்டாயிருந்தால், துவர்ப்பு பதார்த்தங்களைக் கொடுத்து, கண்டிக்கவேண்டியது. வாந்திக்கு பூர்வம் கொடுத்ததுண்டு, ஆனால் இப்போது இல்லை; டர்பன்டைன் தயிலத்தை குறைந்த அளவில் சிலர் கொடுத்து நன்மையுண்டானதாயும், சிலர் கொடுத்து, யாதொரு பிரயோஜனம் காணாமல்போனதாயும் கண்டிருக்கிறது. வயிற்றின்மேல் பிளிஸ்டர் போடும்படியாயும் சொல்லுகிறார்கள். அழுக்கு விழுவதில் விகற்பமிருந்தால், யோனியில் வெந்நீர் அடிக்கலாம். வாந்தியிருந்தால், பொங்குநீர் செய்து, லாடனம்விட்டுக் கொடுக்கலாம். வியாதி கண்ட உடனே பார்வையிட்டால், மேற்கண்ட சிகிச்சையில் ஏதாவது ஒன்று பிரயோஜனப்படும்; இந்தரோகம், சிகிச்சைக்கு வசப்படுவது பிரயாசையாய் இருந்த போதிலும், நம்மால் கூடிய பிரயத்தினம் செய்து பார்க்கவேண்டியது.

2. பிரஸவ கருப்பையின் தாபனம். (பியூ அர்பிரல் ஹிஸ்டிரைடிஸ், Puerperal Hysteritis.)—அநேகர் இந்த சாதிரோகத்தை விவரித்திருக்கிறார்கள். இதில் அடிவயிற்றில் நோவு இருக்கும் கருப்பையைத் தொட்டுப் பார்த்தால், பெருத்து கட்டியாய் அகப்படும். வயிற்றிலும் மற்றவிடத்திலும் முதல் வேதனையிராது, தாபிதம் சவ்வுக்கு பரவினால், மத்தளம்போல் சப்திக்கும்; மூத்திரத்தில் தரிப்பு உண்டு; சுரம் அதிகமாய் இருக்கும். இந்த ரோகத்தின் முடிவு—சொஸ்தமாகிவிடுவது சகஜம்; அப்படி ஆகாவிட்டால், சீழ்க்கட்டி காணும்; கண்டால், உள்ளேயாவது, வெளியிலாவது உடைந்துவிடும், மிருதுவாயாவது, அழுகியாவது போவதும் உண்டு. குடல் சவ்வு தாபிதமும் இதனோடு தொந்தித்திருந்தால், ரோகநிதானம் கண்டறிவது பிரயாசை; வியாதி அற்பமாயிருந்தால், சிகிச்சைக்கு வசப்படும்; உக்கிரமமாயிருந்தால், அசாத்தியம்; தோஷசுரம் கண்டு ஸ்திரீ இறந்துவிடுவாள்.

சிகிச்சை.—இதற்கு ரத்தம் வாங்கி, கால்மலும், அபினியும் கொடுத்து, பிளிஸ்டர் போட்டு, மலத்தை விசர்க்கப்படுத்தவேண்டுமென்றும், தோஷசுரம் கண்டால், தாருட்டியகாரிகளைக் கொடுத்து, பிளிஸ்டர் போட்டு, பார்க் ஒயின், அபினி இவைகளைக் கொடுத்து சிகிச்சைசெய்யவேண்டியதென்றும், ஆயுள் வேதியர்களுடைய அபிப்பிராயம்.

3. கருப்பையைச் சம்பந்தித்த உறுப்புகளின் தாபிதம். இம்பிளமேஷன் ஆவ் யூடிரைன் ஆப்பென்டெஜெஸ், Inflammation of uterine appendages.)—இதில் பொரிடினியம் சவ்வு, சினைப்பை, சினைப்பாதை முதலியவைகள் தாபனம் கொள்ளும்: முன் விவரித்த சாதிகளுக்கும், இதற்குமிருக்கிற வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளுவது பிரயாசை. கருப்பையைச் சம்பந்தித்த உறுப்புகளின் தாபனத்தோடு, சவ்வும் தாபனம்கொண்டிருந்தால், அதின் லக்ஷணங்களும் சம்பந்தித்திருக்கும். வேதனைஇரண்டிலொரு சாதியாய்க் காணப்படும்; அது அடிவயற்றுப் பள்ளத்தில் முக்கியமாய் இருக்கும். அவ்விடத்திலிருந்து, தொடைச் சந்துக்கும், தொடைக்கும் பாயும். தொடைச்சந்தில் கல்லுப்போலிருக்கும். சிலவேளை

போபர்ட்ஸ் லிகெமென்ட் (Poupart's ligament) என்னும் உளறுணியின் மேற்புறமாயாவது, அல்வது அரைக்குமேல புறமாயாவது, முதல் ஆரம் பித்து, பிறகு, வயிறு முழுதும் வியாபிக்கும், அல்லது, தொப்புள்வரையிலா வது ஏறும்; அல்லது, அதோமுகமாய் இறங்கி, அரையில் வீங்கும். முதல் கட்டியானது பெருத்து, அசைக்கக்கூடுமானதாய் இருக்கும். கட்டி ஆழத்தி லிருந்தால், பரந்தவடிவாய் அசைக்கக்கூடாமையாய் இருக்கும், வேதனைப் பிரபலித்திருக்கும். யோனியானது சூடால், வேதனை கொண்டிருக்கும்; கல் லைப்போல் கட்டி விரல்களுக்குத் தட்டுப்படும், அதில் வேதனையிருக்கும்; கட் டிஇடைக்குழியிலிருந்தால், முக்கலிருக்கும்; மூத்திரமும் அடிக்கடி இறங்கும்; கட்டி பெரிதாய் இருந்தால், மலமகஷ்டத்திலிறங்கும், மூத்திரத்தரிப்பும் கா ணும். இதிலனுசரித்திருக்கிற சுரம், ரோகநிலைக்குத்தக்கபடி வித்தியாசப் படும். கட்டியில் சீழ்க்கொண்டால், சாயரக்ஷயில் சுரம் பிரபலப்படும்; நாடி தீவிரகதியிலிருக்கும்; நாக்குமேல் அழுக்கு படிந்திருக்கும், தேகத்தில் சூடு ண்டு; தாகம் இருக்கும்; மூத்திரம் அதிகமாய் இறங்கும்; பசியிராது, இவ் வித லக்ஷணங்களையுடைய கட்டியானது, சில நாளிருந்து, கரைந்தாவது போகும், அல்லது சீழாவதுகொள்ளும்; சீழ்க்கொண்டால், கட்டி மிருதுத் துவமடையும், குத்தல் உண்டாகும், குளிரும் பிறக்கும்; முடிவில் வயிறு பக்கமாயாவது, யோனியிலாவது, குடலிலாவது, மூத்திரப்பையிலாவது, பெரிடினியம் சவ்விலாவது உடைந்து, சீழ் வெளிப்படும். ரோகம் தீவிர லக்ஷணங்களை அடைந்திருந்தால், சிகிச்சைக்கு வசப்படாது மரணம் சம்ப விக்கும்.

சிகிச்சை.—இதில் முதல் கட்டி கரையும்படியான முயற்சியைத்தேட வேண்டியது; அப்படிக் கரையாமல் சீழ்க்கொள்ளுவதாய் இருந்தால், சீக்கி ரத்தில் பாகமாகும்படி செய்து, சீழை வெளிப்படுத்திவிடவேண்டியது. கட்டி தற்செயலாய் உடையும்படி விட்டுவிடுவதைப் பார்க்கிலும், கீறிவிடுவ தே சர்வ உத்தமம். வயிற்றுப்பக்கமாய் கீறிவிடுவது நல்லது; யோனிமார்க் கமாயும் கீறிவிடலாம். சீழ் வெளிகண்ட பிறகு, நல்ல ஊட்டமும், ஒயின் முதலிய சாராய இனங்களும் கொடுத்து, தேகத்துக்கு பலம் வரும்படிச் செய்யவேண்டியது.

மேல் விவரித்த சாதிகள் தவிர, வேறுசாதி பிரசவ சுரங்கள் காணப தாயும் நூல்களில் கண்டிருக்கிறது; அவைகளாவன.-கருப்பையின் நாளதாப னம்(Infiammation of the veins of the uterus), அல்லது யூடிரைன் பிளி பைடிஸ் (Uterine Phlebi tis)—கருப்பையின் நிணநரம்புகளின் தாபனம் (Inflammation of ȷhe u'erine Lymphatics)—வமனவிரேசன சுரம், (Gastro-enteric Fever)—அசாத்திய சுரம். (மெலிக்னன்ட் பியுஅரபிரல் பீவர், Malignant Puerperal Fever)—ஆகிய இவைகளாம். இவைகளில் உண்டாகிற லக்ஷணங்களைச் செவ்வையாக உணர்ந்து, தகுந்த சிகிச்சை செய்து, அவைகளைக் கண்டிக்க வேண்டியது.

12. தொடை வாழை. (பிளக்மோஷியா டோலன்ஸ், Phlegmasia Dolens. Crural Phlebitis. Milk Leg. White Leg. Swelled Leg.) லக்ஷணங்கள்.—முதல் அடிவயிற்றில் வேதனை எடுத்து, குளிர், மனத் தளர்ச்சி, தூர்ப்பலம், சிரசுநோய், தாகம் ஆகிய இவைகள் கண்டு, சிலநாள் இருந்தபிறகு, கெண்டைச்சதையில் வேதனை காணும்; அது குதிக்கால் உட் புறமாய் இறங்கும், பிறகு முழங்கால் மடிப்பு மார்க்கமாய் உள்தொடைக் கேறி, அரையில் போகும். ஒருவேளை வாதரோகம்போல் முதுகு இடுப்பு

இவைகளில் வேதனை ஆரம்பித்து தொடைக்கிறங்குமாம். இடைக்குழியி லிருந்து ஆரம்பித்து ; அதேமுகமாய் தொடைக்கிறங்குவதாயும் கண்டிருக் கிறது. இதில் வேதனை, விடாமலாவது அல்லது, விட்டுவிட்டாவது வந்து கொண்டிருக்கும். கவுட்டியில் வீங்கி பிகிவாய்த் தோற்றும். I-2 நாள்பிறகு, தொடையில் வீக்கம் கண்டு, பிகுவாய்க் காணப்படும் ; தொடைவெளுத்து, மினிமினிப்பாய் இருக்கும் ; கால் மெத்த பெருத்துவிடும் ; சூடாய் இருப் பது வழக்கமானபோதிலும், ஒவ்வொரு வேளை குளிர்ச்சியாய் இருப்பதும் கண்டதுண்டு. வியாதி ஆரம்பத்திலும், அந்தியத்திலும், வீக்கத்தை விரலால் அழுத்தினால் அழுந்தும் ; வீக்கம் அதிக்கிரமித்திருந்தால், அழுந்தாதாம். அரையிலிருந்து தொடைவரையிலிருக்கிற நாளத்தைத் தொட்டுப்பார்த்தால், கெட்டியாய் கயிறுபோல் தட்டுப்படும் ; அதிக வேதனை இருக்கும் ; பழுத்து சீழ்க்கொள்ளுவது அபூர்வம். அழுகிப்போனது கண்டதுண்டாம் ; அதை அறுக்காமல் விட்டுவிட்டால், கட்டிகள் காணுமாம். இரண்டிலொரு கால் வியாதிகொள்ளும், ஆனால் இடதுகாலில் காண்பது மிகுதி. வியாதி சாவ தானப்பட்டு வரும்போது, மற்றொரு காலில் காண்பதும் உண்டு. ஒரு பிர ஸவத்துக்குக் கண்டால், மற்றப் பிரஸவத்திலும் காண்பது சகஜம். கால் வீங்கின உடனே அது சுவாதீனமாகாமல், முடக்கவும் நீட்டவும் கஷ்டத்தி லிருக்கும் ; சுரம் அனுசரித்திருக்கும் ; அழுக்கு விழுவது குறைந்துவிடும், அல்லது அதில் விகற்பம் காணும். ரோகம் தீக்ஷணமடைந்திருந்தால், 1-2-3 வாரங்கள் வரையிலிருக்கும், பிறகு துஷ்ட லக்ஷணங்கள் போய்' ரோகி சவுக்கியமாகிவிடுவாள், ஆனால் தொடையில் மாத்திரம் வியாதி இருக் கும். தொடைவாழை ரோகமானது கரைந்துவிடும், அப்படிக் கரையா விட்டால், வீக்கம் மாத்திரம் கொஞ்சம் நாள்பட இருக்கும் ; ரோகமானது அசாத்தியத்தில் விழுந்து மரணம் சம்பவிப்பதும் உண்டு. ஏதோ ஒரு விஷ பதார்த்தம் நாளத்துக்குள் ஒதுங்கி, ரத்தம் உறைந்து, நாளத்தின் துவாரத் தை அடைத்துக்கொண்டு, இந்த துஷ்டரோகம் பிறக்கின்றது. நாளம் தளமாகுவதும், அல்லது உள்ளே சிவப்புநிறமாய் இருப்பதும் உண்டு. தொ டைநாளமாவது, அல்லது இல்லியக் என்னும் நாளமாவது வியாதிகொண்டு இந்தரோகம் பிறக்கின்றது.

சிகிச்சை.—இதில் ரத்தமெடுக்க ஆவசியமிராது. லகுவிரேசனம் கொ டுப்பதில் சுகுணமுண்டாம். சிலர், பிளிஸ்டர் போடுவதை ஆக்ஷேபிக்கி றார்கள். ரஸபஸ்மமும் அபினியும் சேர்த்து, கொடுக்கலாம். வேதனை தணிய அபினி கொடுக்கலாம். ஷை சிகிச்சையால் ரோகத்தின் வேககுணம் மாறி னால், பிறகு காலைக் கம்மளித்துணியால் இழுத்துக் கட்டிவைக்கவும் ; உஷ் ணபூசுத்தயிலத்தையிட்டு காலைத்தேய்ப்பதில் சுகுணம் பிறக்கும். பிளிஷ்டர் போடலாம் ; ஆக்ஷேபனை இல்லை. குவைனா முதலிய தாருட்டியகாரிகளும், நல்ல போஜனமும், திராக்ஷரஸசாராயமும், கொடுத்து சரீரத்தைத்தேற்றி ரோகத்தைக் கண்டிக்கவேண்டியது. கருப்பத்திலிருந்து விழுகிற அழுக்கு துர்வாஸனை அடைந்திருந்தால், பாலில் ஜலம்விட்டுக் கலந்து யோனியில் வஸ்திசெய்யலாம்.

13. பிரஸவ பைத்தியம். (பியு அர்பிரல் மேனியா, Puerpera Mania).—கருப்பவதிகளுக்கும், பிரஸவவேதனையிலும், பிரஸவித்த பிறகும், ஒருவித உன்மாவம் காணுகிறதுண்டு ; அது காண்பதற்குமுன், நித்திராபங் கம், முகம் ஊதல், சிரசு பிகுவாய் கட்டி இருப்பதுபோல் இருக்குதல், கண் ணில் பிரகாசம், மிரக்ஷியான பார்வை, க்ஷீரஸ்தம்பனம் ஆகிய இவைகள்கா

ணும். இந்த உன்மாதத்தில், இரண்டு ஜாதிகளுண்டு ; ஒன்று பயித்தியம், மற்றொன்று மூளையின் தாபனம் ஆம். ஒன்றில் சுரமிராது, மற்றொன்றில் சுரம் இருக்கும்.

லக்ஷணங்கள்.—சுரம் இல்லாத பிரஸவ உன்மாதம் சாத்தியமாகும் ; சுரமிருந்தால், பெரும்பாலும் அசாத்தியமாகவே முடியும். இதில் மனது தடுமாறும், சந்தோஷமாவது, விசனமாவது இருக்கும் ; பாடல், விடாப்பேச்சு, அல்லது மௌனம் உண்டு ; எல்லோரையும் சமுசயமாய் பார்ப்பாள் ; புருஷனுக்கும், குழந்தைக்கும் என்னமோ அபாயம் நேரிட்டதென்று எண்ணுவாள் ; குழந்தையின்மேல் கியாபகம் இல்லாமல்போவதும் உண்டு ; சரீரம் கொஞ்சம் உஷ்ணமாயிருக்கும் ; தலைச் சூடாயும், தலையில் வேதனையும், தலையை இழுத்துக்கட்டினது போலும் இருக்கும் ; கன்னப்பொறியில் நாடி துடித்து, அடித்துக்கொள்ளும் ; காதில் இரைச்சல் இருக்கும் ; தேகம் இளைக்கும் ; மேனி பேதப்படும் ; முகத்தில் வெளுப்பு காணும் நாக்கு வெளுத்து அழுக்கு படிந்திருக்கும் ; வயிறு மிருதுவாய் வேதனையில்லாமலிருக்கும் ; நாடி துர்ப்பலமாய் நடக்கும், தூக்கம் அற்பமாய் இருக்கும் ; தாகம் அதிகரித்திருக்கும்; மலம் பந்தித்திருக்கும் அதில் துர்வாசனையுமுண்டு. சிலரில் சரீரம் உஷ்ணமாய், நாடி தீவிரமாய் சிறுத்து, கண்கள் சிவந்து, சுரத்தில் காணுகிற விகாரம் கண்டிருக்கும். பிரஸவ உன்மாதரோகம், நாள்பட இருப்பதும் உண்டு. சிலர் இதனால் மரணமடைகிறார்கள். இதில் கருப்பைக்கு வியாதி கண்டால், அசாத்தியமென்றே யோசிக்கவேண்டியது.

சிகிச்சை.—இதற்குச் செய்கிற சிகிச்சை அற்பம் ; இதில் ரத்தம் வாங்கலாகாது ; வாந்திக்குக் கொடுப்பது நல்லது ; வாந்தி உப்பு, ஸெலைன்மிகிச்சர்டிஜிடேலிஸ் ஆகிய இவைகள்,வியாதியின் உக்கிரத்தை அடக்கும்; பேதிக்குக் கொடுப்பதும் நல்லது ; துர்மலாதிகளை நீக்கினபிறகு, அபினி, டோவர்ஸ் பவுடர், குரோசானியோமம் ஆகிய இவைகளைக் கொடுக்கலாம். குளோரோபாரத்தை, ஆக்கிராணம் செய்துவைத்தால் வெகு நன்மை உண்டென்று கண்டிருக்கிறது. சிரசை க்ஷவரம் செய்துவைத்து, ஈரத்துணியைப் போட்டுவைக்கலாம் ; பிளிஸ்டர் போட ஆவசியமிராது, தேகம் உலர்ந்துபோனால், நல்ல ஊட்டமும், மாமிஸரஸமும், பலகாரி மருந்துகளாகிய அம்மோனியா, ஸிங்கோனு, டர்பன்டையின், ஒயின் முதலியவைகளும்கொடுத்து ஆதரிக்கவேண்டியது கருப்பையின் தாபனமுங் சம்பந்தப்பட்டிருந்தால், ரஸம் கொடுத்து, ரஸக்களிம்பை தேய்ப்பிக்கலாம்; ஒற்றிடம் செய்விப்பதிலும் நலந்தரும் ; ரோகியை வெகு பத்திரமாய்ச் சூக்ஷித்து, பார்த்துக்கொண்டிருக்கும்படி காவலாளியை வைக்கவேண்டியது. அன்னியரை அருகில் விடலாகாது ; நிஸப்தம் செய்துவைத்து, இருப்பிடத்தை இருளடையச் செய்துவைக்கவேண்டியது. விகாரசேஷ்டை நின்றபிறகு, ஸ்தலத்தை மாற்றுவதில் பிரயோஜனமுண்டு.

14. க்ஷீரசுரம். (எபிமரல் பீவர், Ephemeral Fever அல்லது வீட், Weid).—இந்த அற்ப சுரம், பிரஸவித்த ஸ்திரீகளுக்குக் காண்பது வழக்கம். இது குளிர்ச்சியாலும், இடத்தை மாற்றுதலாலும், அக்கினி மந்தத்தாலும், ஆயாசத்தினாலும், கவலையினாலும், நித்ராபங்கத்தினாலும் பிறக்கின்றது. லக்ஷணங்கள்.—ஆரம்பத்தில் ஆயாசம், சரீர அசவுக்கியம், மார்துடிப்பு, குளிர், தலை, முதுகு, கால், ஸ்தனம் ஆகிய இவைகளில் வலி, தாகம், கொட்டாவி, திமிர் ஆகிய இந்த பூர்வரூபங்கள் பிரசன்னமாகி, நடுக்சல் பிறக்கும் ; பிறகு உஷ்ணம் காணும், அதினின்று வியர்வை முறைப்படி

ஜனிக்கும். இதில் விகாரம் காண்பது வழக்கம். பால்சுரப்பு குறையும் அல்லது நின்றுவிடும்; அழுக்கும் அப்பிரகாரமாகவே இருக்கும் இந்தச் சுரமானது 1-2-நாள் இருந்து போய்விடும்; ஒவ்வொருவேளை முறையில் விழுவதும் உண்டு.

சிகிச்சை.—சாதாரண சுரத்துக்குச் செய்கிற சிகிச்சையே இதற்கும் நடப்பிக்கவேண்டியது. குளிர் சமையத்தில், வெந்நீர் புட்டிகளைக் கால்களுக்குவைத்து, உஷ்ணபோர்வையிட்டு மிளகுநீர், வெந்நீர், பிராந்தி முதலியவைகளைக் கொடுத்து, உஷ்ணத்தைச் சீக்கிரத்தில் பிறப்பிக்கவேண்டியது. சுரம் வெளிகண்டபிறகு, சுவேதகாரிகளைக் கொடுத்து,வியர்வைப் பிறப்பிக்கவேண்டியது. வியர்வை பிறந்தபிறகு, சீதவாயு தேகத்தில் படாமல் ரக்ஷிக்கவேண்டியது. பிறகுபேதிக்கும், (விரோதமில்லாதிருந்தால்)வாந்திக்கும்கொடுத்து,தூர்மலாதிகளை நீக்கிவிட வேண்டியது.நிலவாகை கஷாயத்துடன்,உப்பும், டார்டர்மெடிக்கும் சேர்த்து கொடுத்தால், வெகு பிரயோஜனம் உண்டாகும். பத்தியத்துக்கு போஷாப்புக்குடையவைகளைக் கொடுத்து, க்ஷீணம் வராமல் செய்யவேண்டியது. கர்ப்பூரமும் கொடுக்க உதவும், குவைனு கொடுக்கும்படி சிலர் சொல்லுகிறார்கள். சுரம் மறுபடியும் வராமலிருக்கும்படி ரக்ஷிப்பதே நமது முக்கிய கடமை.

15. ஸ்தனமுகவிரணம். முலைக்காம்பு விரணம். (ஸோர் நிப்பில், Sore nipple).—பிள்ளைபெற்ற ஸ்திரீகளுக்கு இது அடிக்கடி காண்பது வழக்கம், மெத்த உபத்திரவத்தைத் தரும்; ஆனால் சீக்கிரத்தில் சொஸ்தமாகிவிடும். லக்ஷணங்கள்.—பிரதமையில், முலைக்காம்பும் அதைச் சுற்றிலுமிருக்கிற ரேகையும் உலர்ந்து சுறசுறப்பாய் இருக்கும்; பிறகு அவைகள் வெடிக்கும், அல்லது தோல் உரியும்; சிலைநீர் வடியும், அல்லது காம்பு 3-4 பாகங்களாய் ஆழமாய் வெடித்துவிடும்; ஒவ்வொருவேளை விரணமாகும்; சிலருக்கு முலைக்காம்பைத் தின்றுவிடும்; ரத்தம் வடிகிறதும் உண்டு.

சிகிச்சை.—இந்த உபத்திரவம் நேரிடுமென்று சமுசயத்துக்கிடமான போது, போதுகாலத்தில்தானே சவுக்கார ஜலத்தால் காம்பைக் கழுவித் துடைத்து பிறகு ஜலம்விட்டு விளாவின சாராயத்தால், காலை மாலை இரண்டு வேளையும் கழுவிக்கொண்டு வரவேண்டியது. இவ்விதமாகச் செய்தால், பெரும்பாலும் வியாதி அணுகாது. முலைக்காம்பு அழுந்தி இருந்தால், ஸ்தனமுக உத்கருசியால் (Breas to pump)வெளிக்கு இழுக்கவேண்டியது. மெழுகோடுவெண்ணெயைச்சேர்த்து உருக்கி முலைக்காம்புக்குப் பூசுவது நல்லது. ஸிட்ரன் ஆயின்ட்மெண்டும் பூசலாம்; பொரித்த படிக்காரத்தை வைத்து அழுத்தலாம்; காஷ்டிக் ஜலம் பூசலாம்; அரிசிமாவைத் தூவலாம். இவ்வித பிரயத்தினங்களுக்கும் நிற்காமல் வியாதி கண்டால்,படிக்காரத்தை பனிநீரில் கரைத்து தடவிக்கொண்டிருக்கலாம். வெள்ளை மெழுகு, பாதம் நெய், தேன் இவைகளைக் கரைத்து, மெழுகுசெய்து, விரணத்துக்கு போட்டுக்கொண்டு வரலாம். முலைக்காம்புக்கு கவசம் (மரம், வெள்ளி) (Nipple shield) இட்டு. ஸ்தன்னியம் குடிப்பிப்பதும் நல்லது. ஆனால் அது பிரயாசையான செய்கை, குழந்தைக்குக் கைப்பால், அல்லது வேறு முலைப்பால் கொடுத்து ரக்ஷிக்கவேண்டியது; தாயின் ஸ்தனத்தில் பால் கட்டும்படி செய்யலாகாது; இந்த உபத்திரவரோகம் சவுக்கியமடைய சுமார் 2-3-வாரங்கள் செல்லும்.

7-ம் புஸ்தகம்

BOOK VII

சுகபரிபாலனம் தினசரியை

ஹைஜீன், Hygiene

(in Tamil)

நமது சரீர சவுக்கியாபி விருத்திக்குடைய விதிகளைத் தெரிவிக்கிற நூலுக்கு, சவுக்கியபரிபாலனம் என்று பேர். மனிதன் அனுபவிக்கிற சகல சம்பத்துகளில், நோயற்றவாழ்வே முக்கியமானது. தேக உறுப்புகளின் தொழிலை யனுசரித்தும், வாயு, உஷ்ணம், சீதளம் இவைமுதலியவைகளை யனுசரித்தும், நமது தேகசவுக்கியமிருக்கும்; ஆகையால் அடியிற்கண்டிருக்கிற சில முக்கிய விஷயங்களை யனுசரித்து நடந்தால், நாம் இங்கிருக்கிற வரையில் பெரும்பாலும், சரீர சவுக்கியமாய் சுகமுற்று வாழலாம்.

சில வருஷங்களாய், யாவரும் சவுக்கியபரிபாலனத்தைக் குறித்து கவனிக்கிறார்கள். நாளுக்குநாள் ஜனசங்கியை யதிகப்படுவதினாலும், பட்டணங்களும், நாட்டுப்புறங்களும் விருத்தியாகிறதினாலும், ஜனநெருக்கமுள்ள விடத்தில், சாங்கிராமிக ரோகங்கள், இடைக்கிடை கண்டு வியாபிக்கிறதினாலும், நாம் யோசிக்கப்போகிற விஷயத்தைக்குறித்து, இப்போது துரைத்தனத்தாருக்கு அதிக ஞியாகபகம் உண்டாயிருக்கின்றது. நமது தேகசவுக்கியம், பிராணனுக்கிரண்டாவது; இந்தவிஷயம், சகலருக்குந் தெரிந்திருக்க வேண்டியது.

நமது தேசத்தில் சவுக்கிய பரிபாலன விதிகளை யனுசரித்து நடக்கிற ஸ்திரீகள், மிகவுங்குறையும். அவர்களால் இந்தவிஷயம் நடப்பில் வரவேண்டியதாய், இருக்கிறபடியால், பாலிகா பாடசாலைகளில் இதைக் கற்பித்துக் கொடுத்தால் விருத்தியடையும்.

நாம் வியாதிகளுக்கு உட்பட்டிருக்கிறது சகலருக்குந் தெரிந்த விஷயம், அவைகளை விளைவிக்கிற காரணங்கள் நமக்குத் தெரிந்திருந்தும், சில தருணங்களில் சூக்ஷித்துக்கொள்வது பிரயாசையாகின்றது சுகத்துக்குடைய விதிகளை யனுசரித்து நடந்தால், வியாதி பெரும்பாலும் அணுகாது. சவுக்கியத்தை அபிவிர்த்திசெய்துகொள்ள சர்வேஸ்வரர் நமக்கு அநேகம் பொருள்களைக் கொடுத்திருக்கிறார்; அவைகளை யுணர்ந்து உபயோகித்துக்கொள்வது நமது கடமை. வாயு, தேகசுசி, வஸ்திரம், போஜனம், நித்திரை ஆகிய இவை முதலியவைகளைக் குறித்து, சில கிரமங்களுண்டு; அவைகளை நாம் அனுசரிக்கவேண்டியது. அந்தக்கிரமங்களை மீறிநடந்தாலும் சரி, அல்லது கவனிக்காவிட்டாலும் சரி, ரோகமணுகும். தாய்தந்தைகளாலும், தாதி

களாலும், கிரமமாய்ப் பரிபாலனஞ்செய்யாத குழந்தைகள், தத்காலம் சுகஸ்திதியில் காணப்பட்டபோதிலும், பிறகு வயசு அதிகரிக்க, வியாதிகள் அணுக வாரம்பித்து சவுக்கியக் கேடுண்டாக்கும். வைத்திய சிகிச்சையும், மித்திராதிகளுடைய உபசரணையும் நிஷ்பலமாகிவிடும்.

சாதாரணப் பொருள்களை அலக்ஷியஞ்செய்வது நமது வழக்கம். வாயு, ஜலம் ஆகிய இவ்விரண்டு சாதாரணப் பதார்த்தங்களையும், அவைகளின் பிரயோஜனத்தையும் நாம் கவனிப்பதரிது ; தேக சுகத்துக்கும், சம்பத்துக்கும் பிரயோஜனமாகும்படி ஜகத்ரக்ஷகர் அவைகளை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

தன் சரீர சவுக்கியத்தை ஏன் மெத்த ஜாக்கிரதையாய் ரக்ஷிக்கவேண்டியது? சரீரசுகங் கெட்டிருந்தாலும், செல்வமிருந்தால் போதாதாவென்று சிலர் கேழ்ப்பார்கள். சரீரசுக மில்லாதவன் செல்வத்துடன் சந்தோஷித்திருப்பது கஷ்டம். குடும்ப சம்ரக்ஷணை செய்கிறவனுடைய சரீரசவுக்கியம் விகற்பப்பட்டால், அவனை அனுசரித்திருப்பவர்களுக்கு அவன் கஷ்டப்பட்டு போஜனம் கொடுக்க தாருட்டிய மில்லாதவனாகிவிடுகிறான். இதுவுமன்றி மனதையும், தேகபலத்தையும் எவன் தன்முயற்சியால் காப்பாற்றிக்கொள்ளுகிறானோ, அவன் பிரபஞ்சத்துக்கு நன்மைசெய்யப் பாத்திரனாயிருக்கிறான், லோகரக்ஷகர் கிருபைசெய்திருக்கிறவைகளைச் செவ்வையாய் அனுபவிக்கும் படியாகவுமிருக்கும். தாரித்திராம்சையி லிருப்பவர்கள், முக்கியமாய்த் தங்களுடைய சரீர சவுக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது ; வியாதியால் காலஹரணமும், திரவ்விய விரயமும் நேரிடும் ஏழைகள் அவைகளைச் சகிக்கமாட்டார்கள். தேகசவுக்கிய விரோதங்களை நாம் தெரிந்துகொண்டு, அவைகளை விலக்காவிட்டால், அது தப்பிதம். சவுக்கியத்தைக்குறித்து பெரியோர் சொல்கிற புத்தியைச சிறியோர் பேதமையால் அலக்ஷியம் செய்வது வழக்கம்.

தேக சம்ரக்ஷணைக்காக, நமது தேகத்தில் இருதயம், நுரையீரல், அன்னாசயம், மூளை ஆகிய பலவித உறுப்புகளுண்டு ; ஒவ்வொன்றுக்கும், பிரத்தியேகமான தொழிலுமுண்டு: மூளை புத்தியைத் தருகின்றது. இருதயம், ரத்தத்தைச் சர்வாங்கமும் வியாபிக்கச் செய்கின்றது—நுரையீரல் கறுத்த கெட்டரத்தத்தைச் சிவப்பித்து, பரிசுத்தமாக்கி விடுகின்றது—தீனிப்பை, அன்னபானாதிகளைத் தகித்து விடுகின்றது. ஒவ்வொரு உறுப்புக்குடைய பிரத்தியேகத் தொழில் கிரமமாய் நடந்து வருவதே "தேகசவுக்கியம்," அது விகற்பப்படுவதே "அசவுக்கியம்," அதனை வியாதி யென்று கூறுவர். தேகசவுக்கியத்தை விகற்பப்படுத்துகிற காரணங்கள் அனந்தம் ; அக்காரணங்கள் நம்மைப் பெரும்பாலும் அணுகவொட்டாமல் செய்வதற்குச் சில வியாதிகளுண்டு. அவைகளில் முக்கியமானவைகளை மாத்திரம் இதனடியில் விவரிக்கப்படும். நாம் யாவரும் அந்தவிதிகளை யனுசரித்து, நம்மால் கூடியவரையில் நடப்போமாகில் இவ்வுலகவாழ்க்கையிலிருக்கு மளவும் சரீரசவுக்கியத்தையும், பூரணாயுளையும், சந்தான சவுபாக்கியங்களையும் பெற்று மங்களகரமாக ஜீவித்திருக்கலாம்.

சவுக்கியபரிபாலனத்துக்கு முக்கியமாய் அனுசரிக்கவேண்டிய விதிகளாவன:—

1-வது பரிசுத்த காற்றுள்ள ஸ்தலத்தில் வாசஞ்செய்யவேண்டியது.

2-வது நிர்த்தோஷ ஜலபானஞ் செய்யவேண்டியது.

3-வது போஜனக்கிரமம் அனுசரிக்கவேண்டியது.

4-வது தேகசுசி, சுப்பிர வஸ்த்திரதாரணம் ஆகிய இவைகளைக் கவனிக்க வேண்டியது.

5-வது மல மூத்திராதிகளைக் கிரமத்தில் வைக்கவேண்டியது.

6-வது வியாயாமம் (சுகசஞ்சாரம் கேளீவிலாசமாய் உலாத்திக்கொண்டுவருதல்) செய்துகொண்டு வரவேண்டியது.

7-வது பாடல், ஆடல் முதலியவைகளில், நாள்தோறும் சற்றுநேரம் மனதைச் செலுத்தி, உல்லாசமாய் இருக்கவேண்டியது.

8-வது நித்திரையை மிதப்படுத்தவேண்டியது.

9-வது வாஸக்கிரகத்தைச் சுத்தியாய் வைக்கவேண்டியது.

10-வது சாங்கிராமிக ரோகங்கள், (விஷபேதி, அம்மை முதலிய தொத்து வியாதிகள்) வியாபிக்கிற காலங்களில் அவைகள் நம்மை யனுசரிக்காமல் ரக்ஷித்துக்கொள்ளவேண்டியது.

வாயு

(எர், AIR)

பிரதிபதங்கள்—காற்று, ஆகாயம், பூச்சக்கிரவாயு.

கேசரம், பூசரம், ஜலசரம் ஆகிய இவைகளுக்கு ஆவசியமான வாயுவைக்குறித்து, ரஸவாத ஸாஸ்திரத்தில் விபரமாய்க் கண்டிருக்கிறது, அதைப் பார்வை யிடவேண்டியது. பிரஸவித்த பெண்களையும், ரோகிகளையும், காற்றுக்கு மறைவிடமாய்ச் சிறியஅறைகளில் அடைத்துவைக்கிற வழக்கத்தை இப்போதே நீக்கிவிடவேண்டியது. அவ்விதமாய் யாராகிலும் செய்தால் நல்ல வார்த்தைகளைக்கொண்டு அவர்களுக்குப் போதித்து, ரோகியுள்ள ஸ்தலத்தில் நல்லகாற்று சஞ்சரிக்கும்படியாகச் செய்துவைப்பது புத்திமான்களுடைய கடமை. கும்பல்கூடி இருக்கிற ஸ்தானத்திலும், சிறிய அறையிலும், ஆள்களுக்கு மூச்சுமுட்டல் காணுமென்று எல்லோருக்கும் தெரிந்திருந்தும், நமது வீட்டுப்பெண்கள் அதற்கு விரோதமாய் நடப்பிப்பது, அவர்களுடைய அக்ஞானம். இனிக் கல்விகற்ற ஸ்திரீகள் புராதன மார்க்கத்தை யனுசரிக்காமல், யுக்தா அயுக்தங்களைத் தெரிந்து நடப்பார்களேயானால் க்ஷேமகரமுண்டு. முன்னோர் வழக்கத்தைப் பின்னோர் அனுஸரிக்கவேண்டியதே முறை ; ஆனால் விவேகிகள் யுக்தத்தை யனுசரித்து, அயுக்தத்தை நிக்கிரகிக்கவேண்டியது.

நல்ல காற்றில்லாதவிடத்தில் மனிதனிருந்தால் மரணமென்பதற்கு ஒரு சிறிய கதையுண்டு, அதாவது—பெங்காளத்தில் யுத்தம் நடந்தபோது, நபாப்பு ஆனவர், 146-இங்கிலீஷ்காரரை பலாத்காரமாய், 18-சதுர அடியுள்ள ஒரு சிறைசாலையில் தள்ளி அடைத்து வைக்கும்படிக் கல்பனைசெய்தார் அன்று ராத்திரி 8-மணிக்கு நடந்தது. மறுநாள் காலையில் 7-மணிக்கு, பந்தேகனுவைத் திறந்துபார்க்கும்போது, 23-பேர் மாத்திரம் உயிரோடிருந்தார்கள், சிலருக்கு விஷசுரமும் கண்டிருந்தது. காற்று இல்லாததினால், 11-மணிக்குள் 123-பேர் அனியாயமாய் பிராணனை விட்டனர். காற்று அடக்கமுள்ள விடத்தில் மனுஷனிருந்தால் அபாயமென்று அந்த நபாப்பு அவர்கள் அறிந்திருந்தால், அவ்வித கல்பனை கொடுக்கமாட்டாரென்று தோன்றுகிறது.

நாம் சுவாஸம் விடும்போது கார்போனிக் ஆஸிட் (Carbonic acid) என்னும் விஷவாயு வெளிக்கு வந்து காற்றில் கலந்துவிடும். காற்று வாடையில்லாவிட்டால், அது அவ்விடத்தில் தானே நின்றிருக்கும்; அதையே நாம், மறுபடியும் ஸ்வாஸிக்கவேண்டியதாகின்றது. பாடசாலை, க்ஷேத்திரங்கள் முதலிய ஜனநெருக்கமுள்ள இடங்களில் இந்த விஷவாயு அதிகமாய்ச் சேருமாகையால், நல்ல காற்று வீசும்படி செய்து, அதை ஓட்டிவிட வேண்டியது. முட்டாக்கிட்டுக்கொண்டுச் சயனிப்பதும், பள்ளியறைக்குள் காற்று புகாமற் செய்துகொண்டு நித்திரை செய்வதும், கெட்ட வழக்கம், அதை தக்ஷணமே நீக்கவேண்டியது.

இவ்விஷயங்களை நன்ருய் கவனித்து, சுவாசத்துக்கு ஆவசியமான வாயுவைப் பரிசுத்தப்பத்திக்கொண்டால், தேகசுகம் கெடாது, நிச்சயம்.

ஜலம்

(வாடர், WATER.)

ஜலத்தைக்குறித்து, ரஸவாத ஸாஸ்திரத்தில் விபரமாய் கண்டிருக்கிறது; அதைப்பார்வையிட்டால் ஜலத்தின் குணதோஷங்கள் அறியலாம். தோஷகுணமுடைய நீரைப் பரிசுத்தப்படுத்துகிற விதங்களை யுணரலாம். கிணரு, ஆரு, ஊற்று முதலிய பலவகை நீர்களுடைய வித்தியாசங்களைக் கண்டுகொள்ளலாம், ஸ்நான பான முறைகளையும் தெரிந்துகொள்ளலாம், ஜலமும் தேகசவுக்கியத்துக்கு வேண்டிய ஒரு முக்கிய பதார்த்தமாகையால், அதையும் நாம் திரஸ்கரிக்கலாகாது.

போஜனம்.

(பூட், FOOD.)

பிரதிபதங்கள்.—ஆகாரம், அசனம், இரை, உணவு, தீன், உண்டி.

தேகத்தில் சதாகாலமும் தாதுக்கள் க்ஷீணமடைந்துகொண்டே இருக்கின்றன. ஒருவனில், 1-நாள் முழுமையும் தேகத்திலிருந்து விசர்க்கமாகிற, மலமூத்திராதிகளாகிய அப்பிரயோஜன பதார்த்தங்களை நிறுத்தால், சுமார் 3.4-ராத்தலிருக்கும். இவ்விதமாய் க்ஷீணமாகிற பதார்த்தங்களுக்குப் பதில், போஜனத்திலிருந்து சேகரமாகிக்கொண்டே இருக்கின்றன. மேலும், போஜனபதார்த்தங்களில் தேக உஷ்ணத்துக்கு அவசியமான பொருள்களும் உண்டு; ஆகையால் அன்னபானுதிகளால் தேக சம்ரக்ஷணையும், சரீர உஷ்ணமும் உண்டாகின்றன. மாமிஸபக்ஷணை மாமிஸதாதுவை வர்த்திக்கும். சருக்கரை, நெய், கொழுப்பு, எண்ணெய் இவை முதலியவைகள் தேக உஷ்ணத்தையும், கொழுப்பையு முண்டாக்கும்.

நாம் மாமிஸமும் மரக்கறியும் சேர்க்கையாய்ச் சாப்பிடுவதில், தேகத்துக்குச் சவுக்கியமுண்டு; மரக்கறிகள் மலத்தை யுதைக்கும். துவரம்பருப்பு முதலிய பயருகளில், மாமிஸபோஷணைக்குடைய சத்துகளுண்டு. கிழங்கு, அரிசி முதலிய தானியங்கள் இவைகளைச் சாப்பிட்டால், தேக உஷ்ணத்தை ஆதரிக்கும், மேதஸை விருத்தியாக்கும்; மாமிஸ போஷணைக்குடைய பதார்த்தங்கள் விஸ்தரித்தில்லை. மரக்கறி பக்ஷிப்பவர்கள் அதிகபோஜனம் சாப்பிடுவார்கள; தேகத்தில் கொழுப்படைந்து ஸ்தூலதேகமாய் இருப்பவர்களுக்கு தாருட்டியமிராது. கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகிய இவைகளைப் பக்ஷிக்கிறவர்களுக்கு பலம் அதிகம். வியாதிகளும் அதிகமாய் அணுகாது பூரணயுளாய் ஜீவித்திருப்பபார்கள். சத்தில்லாத சன்ன அரிசி சாதத்தைப்

போஜனஞ்செய்து, சுகானுபவத்திலிருப்பவர்கள், அவ்வளவு பலசாலிகளாயிரார்கள், எப்போதும் வியாதிகள் அனுசரித்துக்கொண்டே யிருக்கும்.

சத்துள்ள பதார்த்தங்களைப் பக்ஷிப்பதில், தேகத்துக்குச் சுகமும் பலமுமுண்டு; அவைகள் செவ்வையாய் வெந்து பக்குவமாய் இருக்க வேண்டியது. இல்லாவிட்டால், சீக்கிரத்தில் ஜீரணமாகாமல், மந்தித்து தீபனத்தைக் கெடுக்கும். ஈயம், தாம்பிரம் முதலிய பாண்டங்களில் சமைத்த போஜனபதார்த்தங்கள், தேகசுகத்தைக்கெடுத்து துர்க்குணம்செய்யும், மண்பாண்டங்களே சமையலுக்கு நல்லது. ஈயச்சத்து உடம்பில் ஊறினால், வயிற்றுவலி முதலிய வாதரோகங்கள் காணும்.

சரீரப் பிரயாசையோடு வேலைசெய்து ஜீவனம் செய்கிற தொழிலாளிகள், அதிகமாயும் உட்கார்ந்துகொண்டு அலுவலைப் பார்க்கிறவர்கள், மிதமாயும் சாப்பிடவேண்டியது. பெருந்திண்டியால் தேகத்துக்குச் சவுக்கியமில்லை. அரைவயிறு சாதமும், கால்வயிறு ஜலமும் சாப்பிட்டு, மற்றக் கால் வயிற்றை வெறுமையாய் வைத்திருக்கவேண்டியதே விதி.

தினத்துக்கு மூன்று வேளை போஜனம், காலக்கிரமமாய்ச் செய்யவேண்டியது. சிலர் இடைக்கிடை நாஸ்தா செய்கிற வழக்கம் கெட்டது, காலையில் 9-10-மணி வேளையிலும், பகலில் 2-3-மணி சமையத்திலும், இராத்திரியில் 8-9-மணி நேரத்திலும், இஷ்டமானப் பதார்த்தங்களோடு சாப்பிட்டு ; மத்தியில் ஒன்றும் தொடாமலிருப்பதே நல்லவழக்கம். நாம் புசிக்கிற அன்னபானாதிகள் தகனமடைய சுமார் 3-மணிகாலஞ் செல்லும், அதின்பிறகு சுமார் 2-மணி நேரமாவது, அன்னாசையம், சும்மாயிருக்கவேண்டியது ; சாப்பிட்டு 5-6-மணி நேரஞ்சென்றபிறகு, மறுபோஜனம் செய்யவேண்டிய கிரமம். சுகுமாரர்களுக்கு இரண்டு வேளை போஜனம் போதுமானது. எப்போதும் இராபோஜனம் குருத்துவமில்லாமல் குறைந்திருக்கவேண்டியது.

போஜனத்தைச் செவ்வையாய் மென்று, மெதுவில் சாப்பிடுகிறவர்களுக்கு, பெரும்பான்மை ரோகமணுகாது. உமிழ்நீர் அன்னபானாதிகளைத் தகிக்கச் செய்கின்றது ; ஆகையால், வாயிலிருந்தூருகிற நீர் பதார்த்தங்களோடு செவ்வையாய் மிஸ்ரமமாகும்படி செய்து, மெதுவில்போஜனம் செய்யவேண்டிய தொருவிதி, அவசரபோசனத்தால் மந்தாக்கினி தொடரும் ; அதிக சூடுள்ள பதார்த்தங்கள் பற்களைக்கெடுக்கும்.

மாமிசங்களைக் குழம்புசெய்வதில் இருக்கிற பிரயோஜனம், வறுப்பதிலிராது. உஷ்ண தேகத்துக்கு அதிக கொழுப்புள்ள மாமிஸம் உதவாது.

ஊறுகாய் மிதமாய்ச் சாப்பிடுவதில் அரோசகம் நீங்கும், சாதமும் இனிப்பாகும்.

காலையில் தேயிலைத்தண்ணீர், காப்பி இவைகளைச் சாப்பிடுவதும் நல்லது, ஆனால், நீராகாரத்துக்கு நிகராகமாட்டாது. மோரும், தயிரும் உப்பிட்டு சாப்பிடுவதில், தேகத்திற்கு சுகம் உண்டாகும், பால் தேகத்தை போஷிக்கும் ; நெய் மந்தப்பதாரத்தம் ; சில தேசங்களில் இதைச்சேர்ப்பதே இல்லை. அவர்கள் நம்மைப்பார்க்கிலும், தாருட்டியமுள்ளவர்களாய் சவுக்கிய ஸ்திதியிலிருக்கிறார்கள். துரைகள் சாப்பிடுவதற்குமுன், உலர்ந்த நெஞ்சில் சாதம் அடைந்து கொள்ளாமல், ஜலமாவது, சூப்பாவது கொஞ்சம் சாப்பிட்டு நெஞ்சை நனைத்துக்கொள்வது வழக்கம். அதற்குப்பதில், நமது தேசத்தில் நெய் விட்டுக்கொண்டு முதல் சாப்பிட்டு, நெஞ்சில் வழவழப்பையுண்டாக்கிக்கொள்வது வழக்கமாய்விட்டது.

காலையில் பழையது சாப்பிட்டால் தேகத்துக்குச்சவுக்கியம், ஆனல் சிலர் அதை வேண்டுமென்றே நீக்கிவிடுகிருர்கள் ; அதை விட்டுவிட விதியில்லாதவர்களாகிய அனந்தக்கோடி ஏழை பரதேசிகளுக்கு, அதனுடைய பிரயோஜனம் நன்ருய்த் தெரியும்.

சாராயம் சாப்பிடுவது கெட்டவழக்கமாய் இருந்தபோதிலும், அதைக் காலமறிந்து மிதமாய்ப் சாப்பிட்டால், ஜீரணசக்தியை விருத்திப்படுத்தி, தேகசவுக்கியத்தைத் தரும், இதைச்சாப்பிட விரும்புகிறவர்கள், இராப் போஜன காலங்களில் சாப்பிடலாம். வெறிக்கும்படிச் சாப்பிட்டால் தேக சவுக்கியம் கெடும். போர்ட் ஒயின், பீர், பிரந்தி இவைகளில் தேகத்துக்கு ஏற்றுக்கொள்ளுகிற ஒன்றைச்சாப்பிடலாம் ; முக்கியமாய்ப் பீர் சாராயமே நல்லது, தாகத்தையடைக்கும், தாருட்டியங்கொடுக்கும், கிருமிகளைப்போக்கும்.

பதார்த்தங்களில் சேர்க்கிற புளியை மட்டுப்படுத்தி, எலுமிச்சம்பழரசத்தைச்சேர்த்துக்கொள்வது நல்லது; வெங்காயம், இஞ்சி, கடுகு முதலிய பச்சடிகள், போஜனத்தோடு சேர்த்துக்கொண்டு வரவேண்டியது. மந்தித்து வாயுசெய்திருந்தால், கடுகு, வெள்ளுள்ளி முதலியவைகளைக் குழம்பிட்டு சாப்பிட்டால், வாயுவைக் கண்டிக்கும்.

தாகத்துக்கு வெந்நீரைக் குளிரவைத்து சாப்பிடுவது நல்லது ; ஆனல் குளிர்ந்த ஜலபானமே தேகத்துக்காரோக்கியம்.

போஜனம்செய்து கையை யலம்பும்போது பற்சந்துகளிலிருக்கிற பதார்த்தங்கள் நீங்கும்படியாய், வாயில் ஜலம்விட்டு கொப்பளித்து விடவேண்டியது, அவைகளிலிருந்தால், அழுகி துர்வாசனையுண்டாகி வாய்நாறும்.

ஊழிக்காற்று வியாபிக்கிற காலங்களில், சீக்கிரத்தில் சீரணமாகிற பதார்த்தங்களைச் சாப்பிடவேண்டியது. அகாலபோஜனம் தேகசவுக்கியத்தைக் கெடுக்கும்.

தாம்பூலம் போட்டுக்கொள்வதில், ஜிரணசக்தி யதிகப்படும். துரைகளுக்கு சாராயமும், நமக்குத் தாம்பூலமும் எடுத்தது. தாம்பூல ரஸத்தை விழுங்கிவிடவேண்டியது. அதிகமாய்ச் சுண்ணும்பு சேர்ப்பது நல்லதல்ல.

சுருட்டு, தூள் இவைகளை அப்பியாசிப்பதில் தேகத்துக்கு சவுக்கியமில்லை ; ஆனல் அதைகளை வழக்கப்படுத்தினபிறகு, விட்டுவிட்டால் துர்க்குணங்கள் சம்பவிக்கும்.

தேதஸுசி, ஸ்நானம் சுப்பிரவஸ்திரதாரணம்

(கிளீன்லினெஸ், பேதிங், குளோதிங். PERSONAL CLEANLINESS, BATHING, CLOTHING.)

சருமத்தில் சிறிய துவாரங்கள் அனேகமுண்டு, அவைகளின் வழியாய், வியர்வை வெளிப்பட்டுக்கொண்டிருக்கும். வியர்வையோடு, அப்பிரயோஜன பதார்த்தங்களும் தேகத்திலிருந்து வெளிப்பட்டுவிடும். வியர்வையடைந்து சரீரத்தில் தானே நின்றுவிட்டால், தேகசவுக்கியம் கெடும் ; பல ரோகங்களும் அனுசரிக்கும், தேகத்தின்மேல் அழுக்கடைந்து துவாரங்கள் மூடிக்கொண்டால், வியர்வை செவ்வையாய் வெளிப்படாது ; ஆகையால் அழுக்குப் போகும்படித் தேய்த்து ஸ்நானம்செய்து சருமத்தைச் சுத்தியாய் வைக்கவேண்டியது. சுரசுரப்பான முரட்டுத்துணியால் சர்வாங்கமும் நன்ருய்

தேய்த்து, அழுக்கைப்போக்கி ஜலம் விட்டுக்கொள்ளவேண்டியது; பேருக்கு நீராடுவதில் பிரயோஜனமில்லை.

அவகாஹம்

பிரதிபதங்கள்.—ஸ்நானம். ஜபம், நீராடல், குளிக்குதல், முழுகல்

1—வது, 33 முதல் 60-டிக்கிரி ஜலஉஷ்ண மிருப்பதற்கு, கோள்ட் பாத் (Cold Bath) என்று பேர்.

2—வது, 60 முதல் 75-டிகிரி ஜலஉஷ்ணமிருப்பதற்கு, கூல் பாத் (Cool Bath) என்று பேர்.

3—வது, 75 முதல் 85-டிக்கிரி ஜலஉஷ்ண மிருப்பதற்கு, டெம்பெரெட் பாத் (Temperate Bath) என்று பேர்

4—வது, 85-முதல் 92-டிக்கிரி ஜல உஷ்ண மிருப்பதற்கு, டெபிட்பாத் (Tepid Bath) என்று பேர்.

5—வது, 92-முதல் 98-டிக்கிரி ஜல உஷ்ண மிருப்பதற்கு, வாரம்பாத் (Warm Bath) என்று பேர்.

6—வது, 98-முதல் 112-டிக்கிரி ஜல உஷ்ண மிருப்பதற்கு. ஹாட் பாத் (Hot Bath) என்று பேர்.

சீதஉதக அவகாஹம்.—சீதஉதக ஸ்நானம். குளிர்ந்த ஜலஸ்நானம் (கோள்ட்பாத், Cold Bath).—காலையில் குளிர்ந்த ஜலஸ்நானம் செய்வது நல்லது. சரீரம் அதிகமாய் வேர்க்கும்போதும், திருப்தியாய் போஜனம் செய்தபிறகும், குளிர்ந்த ஜலத்தில் முழுகுவது விரோதம். நடுக்கலும், நகம் நீலநிறமாகிறவரையிலும், ஜலத்திலிருக்கலாகாது. ஒவ்வொரு ஆவர்த்தி 15-20-நிமிஷம்வரையில் ஜலத்திலிருந்தால் போதும். ஸ்நானம் செய்த உடன், ஈரமில்லாமல் தேகத்தைத் துடைத்துக்கொண்டு, மெதுவாய் உலாத்திக்கொண்டிருந்தால் நல்லது. ஸ்திரீகளுக்கு மாதாந்திர ருது கண்டிருக்கிறபோது, குளிர்ந்த ஜலஸ்நானம் செய்யலாகாது. கருப்பிணிகளும், வெகு ஜாக்கிரதையாய் முழுகவேண்டியது. ; அதிஸ்தூல ரோகிகளுக்கும், இருதய ரோகிகளுக்கும், மலபந்தரோகிகளுக்கும், சருமரோகிகளுக்கும், மெலிந்த தேகிகளுக்கும், கண்டமாலை சம்பந்தமான ரோகிகளுக்கும், குழந்தைகளுக்கும், வயது சென்றவர்களுக்கும், குளிர்ந்த ஜலஸ்நானம் உதவாது. அதில் வியர்வையுள்ளவர்களும், அதிக வாசிப்பால் தேகஆரோக்கியம் விகற்பப்பட்டு இருக்கிறவர்களும், குளிர்த ஜலஸ்நானம் செய்தால் சவுக்கியமுண்டாகும்.

சமுத்திர ஸ்நானம் (ஸீபேதிங், Sea Bathing).—கண்டமாலை ரோகிகள் சமுத்திரஸ்நானம் செய்துகொண்டுவந்தால் மெத்த சவுக்கியந்தரும். சமுத்திர தீரத்துக்கு தூரமாயிருப்பவர்கள், ஜலத்தில் உப்பைக் கரைத்து அதில் ஸ்நானம் செய்துகொண்டு வரலாம்.

அர்த்தாங்க ஸீத அவகாஹம். (கோல்ட்ஹிப் பாத், Cold Hip Bath) —சொப்பனஸ் கலிதமுடைய ரோகிகள், இடுப்புமாத்திரம் நனையும்படி, குளிர்ந்த ஜலத்தில் தினத்துக்கிரண்டு ஆவர்த்தி உட்கார்ந்துகொண்டு வந்தால் மெத்த சவுக்கியமுண்டாகும்.

சஹஸ்திரதாராமஞ்சனம். (மஜ்ஜனம்) (ஷவர்பாத், Shower Bath).—இங்கிலீஷ் வைத்தியர் ஓர்வித கருவியைக்கொண்டு இந்த ஸ்தானத்தைச் செய்விக்கிறார்கள். அந்த கருவி அகப்படாதபோது, ஒரு பானைக்கடியில்

சிறிய துவாரங்கள் செய்து, உயரக்கட்டி, அதில் ஜலத்தை ஊற்றிக்கொண்டிருந்தால், மழைதாரைகள்போல் ஜலஜலவென்று ஜலம் விழும்; அதற்கடியில் நோயாளியை உட்காரவைத்து, ஸ்நானஞ் செய்விக்கலாம். குளிர்ந்த ஜலத்துக்குடைய செய்கையும்,உபயோகமும் இந்த ஸ்நானத்துக்கும் உண்டு; உன்மாதரோகிகளுக்கு இந்த ஸ்நானத்தை செய்துவைக்கலாம்.

தார மஜ்ஜனம். (ஷேபாத், Dousche Bath).—ஒரு குழலைக்கொண்டு சிறியதாரையாப் கொஞ்சம் விசையுடன் ஓரோ ஸ்தானத்தில் விழும்படிச் செய்வதற்கு, இங்கிலீஷில், ஷேபாத் என்று சொல்லுவதுண்டு. சுதேசிகள் சாதாரணமாய் பயித்திய ரோகிகளையும், கஞ்சா, ஊமத்தங்காய் முதலியவைகளையுந் தின்று வெறிகொண்டவர்களையும், கிணற்றுக்கருகில் உட்காரவைத்து, ஜலத்தைமொண்டு உயரவிருந்து சிரசின்மேல் ஊற்றுகிற வழக்கத்தையும், ஓர்வித ஷேபாத் என்று சொல்லலாம்.

உஷ்ணஉதக அவகாஹம் வெந்நீர் ஸ்நானம், (ஹாட் அன்ட் வாரம் பாத். Hot and Warm Bath) இந்த ஸ்நானம், நரம்புகளின் கொதிப்பைத் தணித்து சரீர உஷ்ணத்தையும், ரத்தஓட்டத்தையும் சமரசப்படுத்தும் சருமரந்திரங்களைச் சுத்திப்படுத்தி, வியர்வையைத் தாராளப்படுத்தும்; மாமிஸதாதுக்களைத் தளர்ச்சிசெய்யும். நோயுற்றெழுந்தோர்களுக்கும், துர்ப்பலமுடைய ரோகிகளுக்கும், அதிக சூடான வெந்நீர் ஸ்நானம் செய்யவேண்டியது.

இங்கிலீஷ்கார் ஜலத்தொட்டியில் உட்கார்ந்து ஸ்நானம் செய்வதுவழக்கம்; ஆகையால் ஸ்நானமென்றால், நமது ஸ்நானமல்ல, இங்கிலீஷ் முறைக்கு அருத்தம் கொள்ளவேண்டியது.

பாதஉஷ்ண அவகாஹம். (ஹாட் புட்பாத், Hot Foot Bath.)தலைவலிக்கு, கால்களை முழங்கால்வரையில் வெந்நீரில் சற்றுநேரம் வைத்திருந்து துடைத்துவிட்டால், வேதனைச் சமனமடையும்.

வேது. சுவேதீகர்னம். (வேபர்பாத். Vapour Bath.)வெந்நீர் ஆவியையாவது, உஷ்ணவாயுவையாவது, தேகத்தில் படும்படி செய்து வியர்வை பிறக்கச்செய்தலுக்கு, வேது என்றுபேர்.

எண்ணெய் இட்டுக்கொண்டு ஸ்நானம் செய்வதில், சருமத்தை மிருதுவாக்கும். தினத்துக்கு இரண்டுவேளை குளிப்பது நல்லது. இரவில் குளித்து, சாப்பிட்டு நித்திரை செய்தால் நித்திரை ஆரோக்கியமாய்வரும். குளித்த பிறகு, ஈரம் ஊறாமல் சீக்கிரத்தில் உடம்பைத் துடைத்துக்கொள்ள வேண்டியது. உடம்பு ஈரமாயிருக்கிறபோது குளிர்ந்தகாற்றுப் படலாகாது.

எப்போதும் சுத்தியான வஸ்திரம் அணிந்துகொள்வதே தேகத்துக்குச் சவுக்கியம். அழுக்குவஸ்திரத்தில், நமது தேக அசுசியும், வெளியிலிருந்து ஒட்டிக்கொள்ளுகிற விஷங்களும், இருக்கின்றன; ஆகையால் அவைகளை அடிக்கடி மாற்றிவிடவேண்டியது. இராத்திரி காலங்களில் தரித்துகொள்ளுகிற வஸ்திரங்களையும், படுக்கைத் துணிகளையும், பகலில் வெயிலில் விரித்து உலர்த்தி, உதறிவிட்டால் அசுத்தமெல்லாம் நீங்கிவிடும். முக்கியமாய் விஷரோகம், வியாபிக்கும்போது, அழுக்குத்துணிகளைக் கட்டிக்கொண்டிருக்கலாகாது. சொக்காய் முதலிய உடுப்புகள் எப்போதும் தளர்ச்சியாகவே யிருக்கவேண்டியது; பிகு உற்றிருந்தால் ரத்த ஓட்டம் தடைப்படும். குழந்தைகளையும், வயது தளர்ந்தவர்களையும், க்ஷயரோகிகளையும், வாதரோகிகளையும் கம்பளித்துணி தரிக்கச்செய்வது ஆவசியம். நமது தேசத்தில், குழந்தை

களை வஸ்திரமில்லாமல் நிர்வாணமாய் வைக்கிற வழக்கங் கெட்டது. ஈர வஸ்திர மணிந்துகொண்டிருப்பதில் தேகசவுக்கியம் கெடும்.

நகம் நகங்களில் அழுக்குசேராமல் சுத்தியாய்வைத்திருக்கவேண்டியது.

சிரசு ரோமத்தைச் சீவிச் சுத்தியாய் வைக்காவிட்டால் அழுக்குப்படிந்து துர்வாசனை வீசும் பேனும் பிடிக்கும்.

மலக்கிரமம்.

(ரெகுலாரிடி ஆப் பௌவல்ஸ், Regularity of Bowels.)

மலச்சிக்கலால், அநேக ரோகங்கள் விளையும்; முக்கியமாய் அரிவிஸ் ரோகங்காணு மாகையால், லகுவிரேசனங்களாலும், மலம் இளகச்செய்கிற போஜனபதார்த்தங்களாலும், பிரதிதினமும் மலம் தாராளமாய் இறங்கும் படிச் செய்துகொள்ளவேண்டியது தேகசவுக்கியத்துக்கு இது பிரதான விஷயம். மலபந்த முடையவர்கள் தேக சவுக்கியத்திலிருப்பது பிரயாசை.

வியாயாமம்

(எக்ஸர்ஸைஸ், EXERCISE)

பிரதிபதங்கள்.— சுகஆயாசம், உலாத்துதல், சந்தோஷநடப்பு, சரீர பரிசிரமம்.

காலையிலும், சாயரக்ஷையிலும் வெளியில் போய்க் காற்றோட்டமாய் உலாத்திக்கொண்டு வருவதில், தேகத்தில் ரத்தம் செவ்வையாய்ப் பரவும், மாம்சாதிகளும் தாருட்டியமடையும்; இல்லாவிட்டால் தினே தினே சோம்பல் அதிகரித்து முடிவில் இருந்த ஸ்தானத்தை விட்டு எழுந்திரிப்பதற்கே கஷ்டமாயிருக்கும்; முக்கியமாய் வீட்டிலிருப்பவர்களும், வீட்டிலிருந்து வேலை செய்கிறவர்களும், இந்த விஷயத்தை மறக்கலாகாது. பனிக்காலத்தில், பனி நின்றபிறகு உலாத்தவேண்டியது. நடப்பதே நல்லது, நடக்கதாருட்டியமில்லாதபோது,குதிரைமேலேறிப்போகலாம். தோள்களைப் பின்னுக்குவைத்து, மார்பை விசாலமாக்கிக்கொண்டு நடந்தால், நுரைஈரலில் அதிககாற்றுச் சென்று, ரத்தம் செவ்வையாய்ச் சுத்தியாகும்.

தோட்டவேலை, ஓடுதல், பந்து விளையாடல், கனமுள்ளவைகளை எடுத்து தூறவிட்டெறிதல், கால்லாசுற்றுதல், தாண்டால்வாங்குதல் ஆகிய இவைகளாலும் தேகசவுக்கியம் பிறக்கும். வெளியிற் சென்று உலாத்துவதற்குச் சமயம் நேரிடாவிட்டால், கிரகத்துக்குள்ளாகவே நடந்து உலாத்தலாம். தோட்டவேலை சுகத்தைத் தருவதுமன்றி, துஷ்டக்கிரித்தியங்களில் மனதை பிரவேசிக்கவொட்டாது, முடிவில் லாபத்தைத்தரும்.

சிறுவர்களைத் தோட்டவேலையில் பிரவேசிக்கச்செய்தால், அவர்களைச் சோம்பலணுகாது, உழைப்புக்கும் பின்னிடார்கள். பெரிய பட்டணங்களில் (பார்க், Park) என்னும் உத்தியானவனங்களை ஏற்படுத்தி, அவைகளில் வேடிக்கை, விநோதப்பொருள்களைவைத்து, ஜனங்கள் உல்லாஸமடையும்படிச் செய்வது சகலருக்கும் தெரிந்த விஷயம்.

சுறுசுறுப்பாய் நடந்து வேலைசெய்வதில், எலும்புகளுக்கு வைரமும், சதைகளுக்கு தாருட்டியமும் உண்டாகும். சிறுவர்களும், வார்த்திபர்களும், இலேசானவேலையைச் செய்யவேண்டியது. சிறுவர்கள் எப்போதும் நிமிர்ந்திருக்கவேண்டியது; இதைக் கவனிக்காவிட்டால் முதுகுவளைந்து கூன்

உண்டாகும். நாம் உட்கார்ந்து நிமிர்ந்து வேலைசெய்வதில், சவுக்கியமுண்டு; வளைந்திருப்பதில் இடுப்புவலிகாணும். கைகளை வீசிக்கொண்டு நடக்கவேண்டியது. கடினவேலை செய்தபிறகு, அற்பகாலம் நிம்மதியாய் இருந்தால், ஆயாஸம் தீர்ந்துவிடும். சரீரம் அலுத்து வியர்வைகொண்டிருக்கிறபோது, சீதக்காற்றுவாடையி லிருக்கலாகாது. கஷ்டவேலை செய்தபிறகு, ஸ்நானம் செய்வது நல்லது. காலையில் வெறும் வயிற்றோடு வெளியிற்சென்று சஞ்சரிக்கலாகாது.

ஸந்தோஷ காலக்ஷேபம்

(சீயர்புல் எஞ்ஜாய்மென்ட், Cheerful enjoyment.)

பகலில் நமக்குச் சம்பவிக்கும் ஆயாஸத்தை, சாயரக்ஷையில் கேளிவிலாஸமாய், கீதவாத்திய சம்பாஷணை முதலிய உல்லாஸ விஷயங்களில், அற்பநேரம் மனதைச் செலுத்தி, நீக்கிக்கொள்ளவேண்டியது. வாத்தியங்களில் வீணை, தம்புரு, பிடில் ஆகிய இவைகளும்—ஆட்டத்தில் சதுரங்கமும், விசேஷ்டமானவைகள். சொக்கட்டான், சீட்டுகடுதாசி முதலிய சூது விளையாடல்களை அபேக்ஷிக்கலாது; அவைகளால், துவேஷமும், பொருள்நஷ்டமும், விசனமும் சம்பவிக்கும்; மனக்கிலேசம் நேரிட்ட காலங்களில், ஞாபகத்தைச் சற்றுநேரம் விநோத விஷயங்களில் செலுத்தி, அதை மறந்துவிடவேண்டியது. மேற்கண்ட உல்லாஸ காலக்ஷேபங்களை யனுசரித்து நடப்போர், பெரும்பான்மையும் விசனமில்லாமல், சந்தோஷ சௌபாக்கிய ஸ்திதியிலிருப்பார்கள். தேக ஸவுக்கியத்துக்குச் சந்தோஷ வாழ்க்கையே பிரதானமானது.

நித்திரை

(ஸ்லீப், Sleep)

க்ஷீணமடைகிற உறுப்புகள், நித்திரையால் யதாஸ்திதிக்குவருகின்றன; போஜனம் கிரமமாய் ஜீரணமாகும். நித்திராபங்கத்தால், தேகசவுக்கியம் கெடுவதுமன்றி, புஜித்த அன்னபானாதிகளாலும் செவ்வையாய் தகனமாகாமல் பலவித ரோகங்கள் ஜனிக்கும். மனோ சஞ்சலமும், தேக ஆயாசமும், நித்திரையால் நீங்கிவிடும். கஷ்டப்படுவோர் விசேஷமாயும், சுகானுபவிகள் அற்பமாயும் நித்திரையை அபேக்ஷிக்கவேண்டியது.

பிரதிதினம், 6-7-மணிநேர நித்திரை தேகத்துக்குப் போதுமானது. அதிகநித்திரை, பகல் நித்திரை இவைகள் தேகசவுக்கியத்தை விகற்பப்படுத்தும். இராத்திரி 10-மணிக்குச் சயனத்துக்குச் சென்று, பிராதக்காலம், 5-மணிக்கு எழுந்திருந்து, வெளியில்போய் சுகசஞ்சாரஞ் செய்துகொண்டுவருவதில் தேகசவுக்கியமுண்டு. பகல்போஜனம் செய்த உடனே காணுகிற நித்திராசோகத்தை மெதுவில் விலக்கிவிடுவதே உத்தமம். நித்திராபங்கத்தால், உபத்திரவப்படுகிறவர்கள், இராத்திரியில் கொஞ்சம் மதுபானம் செய்துகொண்டுவந்தால், நித்திரை ஆரோக்கியமாய் வரும்.

பள்ளியறையில் காற்று தாராளமாய் வியாபிக்கும்படி செய்துகொள்ளவேண்டியது; காற்றடைப்பு செய்துகொண்டும், முகத்தை மூடிக்கொண்டும் நித்திரைசெய்கிற வழக்கம் கெட்டது பள்ளியறையில் புஷ்பம்வைப்பதையும், ஸ்திரீகள் முடியில் புஷ்பம் தரித்துக்கொண்டு சயனிப்பதையும், விலக்கவேண்டியது.

வாஸஸ்தானம்

(ஹாபிடேஷன், Habitation.)

பிரதிபதங்கள்.—வீடு, கிரகம், வாஸக்கிரகம்

உயர்ந்த மேட்டின்மேல் வாஸக்கிரக மிருக்கவேண்டியது. உலர்ந்த பூமி வாஸஸ்தலத்துக்கு நல்லது; களிமண்ணில்லாமல், மணற்பாங்காய் இருக்கிற நிலமே விசேஷம். பள்ளத்தாக்கிலும், சதுப்பு நிலத்திலும் குடியிருக்கலாகாது. மெத்தைவீடுள்ளவர்கள், மேல்மெத்தையில் இருந்தால் கூடியவரையில், பரிசுத்தக்காற்றை அனுபவிப்பார்கள், அது தேகசவுக்கியத்தைத்தரும்.

வாஸஸ்தலத்திலிருக்கிற காற்று பரிசுத்தமாய் இருக்கவேண்டியது. குப்பை, சாக்கடை முதலியவைகளிலிருந்து ஜனிக்கிற துர்வாசனையால், காற்றின் குணம் கெடும். கெட்டகாற்று சரீர ஆரோக்கியத்தை விகற்பப்படுத்தும்; ஆகையால் கிரகங்களிலும், வாஸஸ்தல ஸமீபங்களிலும், குப்பை முதலிய அசுசிகள், சேராமல் ஸம்ரக்ஷிக்கவேண்டியது. சாக்கடையைச் சுத்திசெய்து, துர்வாசனை யில்லாமல் செய்துகொள்ளவேண்டியது. மிருகங்களுடைய மல ஜலாதிகளாலும், காற்றின்தன்மைக் கெடும்; ஆகையால் மிருகங்களை, வாஸஸ்தலத்துக்குப் பிரத்தியேகப் படுத்திவைப்பது உத்தமம். சேர்ந்த குப்பைகளை நெருப்பிட்டுக் கொளுத்திவிட வேண்டியது.

கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்துவைத்து, வீட்டுக்குள் காற்று தாராளமாய் வியாபிக்கும்படிச் செய்யவேண்டியது விதி. காற்றடைப்புள்ள ஸ்தானங்களில் ஜனங்கூட்டங்கூடுவது அயுக்தம்; ஜன்னல்மார்க்மாய் வருகிற காற்றுவாடையில்படுத்து நித்திரைச்செய்தால், உடம்புவலிகாணும்; சுரம், இருமல் முதலிய ரோகங்கள் அனுசரிப்பது முண்டு.

பகல்காலத்தில், செடிகளின் நிழலிலும், தோப்புகளிலும் போய் ஆனந்தகளிப்புடன், காலத்தைப் போக்குவது நல்லது; இரவில் அவ்விடங்களிலிருந்தால், சரீரத்துக்கு அஸவுக்கியம் உண்டாகும்.

வீட்டுச்சுவர்களை அடிக்கடிச் சுண்ணும்பு அடித்து சுத்தியாய் வைக்க வேண்டியது. சாங்கிராமிக ரோகங்கள் வியாபிக்கும்போது, இந்த விஷயத்தை முக்கியமாய் கவனிக்கவும்.

ஸாங்கிராமிக ரோகங்கள்

(இன்பெக்ஷியஸ் அன்ட், கன்டேஜியஸ் டிஸீஸெஸ், Infectious and contagious diseases.)

பிரதிபதங்கள்.--ஒட்டுவியாதிகள், தொத்துவியாதிகள், ஒட்டுவாரொட்டி.

விஷபேதி, அம்மை முதலிய ஸாங்கிராமிக ரோகங்கள் வியாபிக்கும்போது, நாம் அனுசரிக்கவேண்டியதற்குச் சில விதிகளுண்டு, அவைகளை கவனித்து நடத்திக்கொண்டால், பெரும்பாலும் அவைகள் நம்மையணுகாது.

அந்த விதிகளாவன.—ஸ்நானம் செய்து கூடியவரையில் சரீரத்தை சுசியாய் வைத்திருக்குதல்—வெளியில்போய் சஞ்சரித்து வீட்டுக்கு வந்தவுடனே, கைகால்களைச் செவ்வையாய் சுத்தம் செய்துகொள்ளல்—போஜனம், தாகம், வஸ்திரம், வீடு இவைமுதலியவைகளைக்குறித்து முன்பு சொல்லிய திதி

களை அனுசரித்தல்—சகல ஜன பிரயோஜனத்துக்காக வைத்திருக்கிற அசுசியான வாடகை வாகனங்களி லேறிப்போகுதலை நிக்கிரகிக்குதல்—இராசஞ்சரிப்பை விலக்கி, நித்திராபங்கம் வராமல் செய்துகொள்ளல், ஆகிய இவைகளாம்.

அனுபந்தம். மருந்துமட்டோலைகள்
APPENDIX OF FORMULÆ

வைத்தியர் ரோகத்துக்கு, ஔஷதம் பத்தியம் முதலியவைகளைக் குறிப்பிடும்போது, கவனிக்கவேண்டிய விஷயங்கள் சிலவுண்டு, அவைகளை இதனடியில் விவரிக்கப்படும்:—

பெரியவர்களைப்பார்க்கிலும், குழந்தைகள் ரஸமருந்துகளை அதிகமாய்ச் சகிப்பார்கள்; ஆனால், அபினி மருந்துகளைச் சகிக்கமாட்டார்கள். ஆகையால், அபினிமருந்துகளைக் குழந்தைகளுக்கு வெகு ஜாக்கிரதையாயும், மாப்திரையில் அதிகமாய்க் குறைத்தும், கொடுக்கவேண்டியது. புருஷரைத்போல், ஸ்திரீகள் வெப்பமுள்ள மருந்துகளைச் சகிக்கமாட்டார்கள்.

ரோகத்தின் நிதானம் கண்டறிந்து, அதற்குத் தகுதியான ஔஷதங்களைக் காலமறிந்து பிரயோகித்து, சிகிச்சை செய்பவனே, வைத்தியன்; அப்படிச் செய்வதில், அவனுடைய சாமர்த்தியம் தெரியவருகின்றது. மருந்து விக்கிரயம் செய்பவனுக்கு, பலானது கொடுத்தால் பேதியாகும், பலானது வாந்தியையுண்டாக்கும், பலானது வியர்வையைப் பிறப்பிக்கும் என்று மாத்திரம் தெரியும். ஆனால், பழக்கப்பட்ட வைத்தியனுக்கு, அந்த மருந்துகளை, ரோகநிலைக்குத் தக்கபடி பிரயோகிக்கிற மார்க்கம் தெரியும்.

வைத்தியன் அடியில்வரும் நிபந்தனைகளை அனுசரித்தால் மெத்த உத்தமம். (1) ஒரு வியாதியானது வசப்பட்டு, சவுக்கியமடைந்து வருகிற காலத்தில், ஔஷதங்களைக் கொடுத்து அதின் சுகுணமார்க்கத்தை விகல்பப்படுத்தலாகாது. (2) ஔஷதங்களைச் சுலபமாய்ச சாப்பிடும்படியான ரூபமாய்ச செய்யவேண்டியது; குழந்தைகளுக்கு, மருந்துகளை இனிப்பேற்றிக் கொடுக்கவேண்டியது. (3) ஔஷதம் சேவித்தபிறகு, அது தேகத்தில் ஊறும்படியான ஸ்திதியில், ரோகியை வைக்கவேண்டியது. (4) ஔஷதக் கூட்டுகளில், சத்துரு மித்துரு பதார்த்தங்களைத் தெரிந்து சேர்க்கவேண்டியது; சத்துரு பதார்த்தங்களைச் சேர்த்தால், மருந்தின் குணம் கெடும். (5) வியாதி அசாத்தியமாய் இருந்தால், ரோகிக்குப் பிரியவசனமாய், வியாதியைச் சவுக்கியப்படுத்துகிறேனென்று அபத்தம் சொல்லலாகாது; வியாதி தீராதென்றும், ஆளை விட்டுவிடுவது தோஷம். வைத்தியன் தன்னால் கூடிய உபசரணைசெய்து வியாதியை சமனப்படுத்தவேண்டியது. (6)—கூட்டுவர்க்கங்கள் தெரியாத, கள்ள மருந்துகளை உபயோகிக்கலாகாது; மறைபொருளான மருந்துகளை உபயோகிக்கும்படியாகச் செய்யவும் கூடாது.

ஔஷதமுறைப் பத்திரங்களில் (Formulæ) கண்டிருக்கிற மருந்துகளை விகற்பப்படுத்தாமல், சேர்ந்துக்கொடுத்தால் பெரும்பாலும், சுகுணம் பிறக்கும். அப்படி இருந்தபோதிலும், ரோகத்துக்குத் தக்கபடி, மருந்துகளை மாத்திக்கொடுக்கவேண்டியதாய் இருக்கின்றது. இந்தவிஷயத்தில் கவனிக்காமல், புஸ்தகங்களில் கண்டிருக்கிற டாம்புகளின்பிரகாரம் மருந்துகளைக் சேர்த்துக் கொடுப்பதில், சிலவேளை அப்பிரயோஜனமாகிவிடும். நமது பெரியோர்கள் செய்திருக்கிற நூல்களில் செப்பி இருக்கிற ஔஷத

முறைப்பட்டோலைகளின் பிரகாரமே நாட்டுவைத்தியர்களில் சிலர் செய்து வருகிறார்கள். அவைகளால் நன்மை துன்மைகளிரண்டும் சம்பவிக்கின்றன. துன்மைநேரிடும்போது, மருந்துகளை மாற்றிக்கொடுப்பாராகில், ஔஷதடாப் பின் பெருமை கெடாது, வைத்தியனுக்குப் புகழும் கீர்த்தியும் கிடைக்கும். அப்பேர்ப்பட்ட டாப்புகளை பாடம்பண்ணின சிலர், பிரபல வைத்தியர்களாகி, வீணில் ஜனங்களின் பிராணனை வதைக்கிறார்கள்; அன்னியன் உடல், தன்னுடலாய்ப் பாவித்துக்கொண்டு, சிகிச்சை செய்பவனே வைத்தியன், மற்றவன் பாமரன்.

ஆகாரங்கள். (ALIMENTS)

ஆட்டிறைச்சி சத்து. (Extract of mutton) ஒருராத்தல் ஆட்டிறைச்சியை, சன்னமாய்க்கொந்தி 1-பயின்ட் குளிர்ந்த ஜலத்தில் கலந்துகொள்ளவும்; அதை அனலில் 2-3-மணிநேரம், மெதுவில், சுடவைத்து, பிறகு 15-நிமிஷம் மெதுவில், கொதிக்கக் காசிக்கொள்ளவும். மேலே படிந்திருக்கிற துஷ்டுகளை எடுத்துவிட்டு, உப்பு சேர்த்துக்கொடுக்கவும்.

ஆட்டிறைச்சி ரசம். (Essence of mutton) கொழுப்புப்போக்கிய, ஆட்டிறைச்சி 1-ராத்தல் அதைக்கொந்தி, ஒரு பெரிய மண்ஜாடியில்போட்டு மூடி, மாவுபசையில் வாய்ஓரத்தை அடைத்து, ஒருதுணியில் வைத்து இறகக் கட்டி, ஜலம் உள்ள பாத்திரத்தில் முழுகவைத்து, 2-மணிநேரம் கொதிக்கக் காய்ச்சி, ஜலத்தை இறுத்துக்கொண்டு, குளிரவைத்து, துஷ்டுகளை நீக்கிவிடவும். இதை அதிக துர்ப்பலத்துக்குக் கொடுக்கலாம்.

திராக்ஷ உப்புக் குடி நீர் (Imperial drink) திராக்ஷ உப்பு, $\frac{1}{4}$-அவுன்ஸ்; கொஞ்சம், எலுமிச்சம்பழத்தோல், ஆரஞ்சிப் பழத்தோல், கற்கண்டு, $\frac{1}{2}$-அவுன்ஸ் இவைகளை ஒருசேர் நல்ல காய்ந்துக் கொதிக்கிற வெந்நீரில் போட்டு, ஊறவைத்து, குளிர்ந்தபிறகு, தெளிந்த ஜலத்தை இறுத்துக்கொள்ளவும் இதைச் சுரத்தில் தாகமடக்கவும், நீர்ச்சுருக்குக்கும் கொடுக்கலாம்.

முட்டையை, தேயிலைத் தண்ணீரிலாவது, அல்லது பாலில் மிஸ்ரமித்தாவது, கொடுத்தால், போஷாப்பைத்தரும்.

ஆட்டுக்காலில், ஜலமும், பாலும் சேர்த்து, பாத்திரத்தை அழுத்திமூடி 3-4-மணிநேரம் அவித்து, குளிர்ந்தபிறகு, கொழுப்பை நீக்கி, சருக்கரையைச் சேர்த்துக் கொடுக்கவும், வாசனைக்கு, எலுமிச்சன் தோலாவது, சன்னலவங்கப்பட்டையாவது, சாதிபத்திரியாவது சேர்த்துக்கொள்ளலாம்.—இது தேகத்துக்கு ஆதரவு கொடுக்கும்.

திராக்ஷரஸ சாராயத்தைப் பதப்படுத்துதல் (To Mull Wine) ஒரு பெரிய கோப்பை ஜலத்தில், ஒரு துண்டு சன்ன லவங்கப்பட்டையையும், சுறண்டி எடுத்த கொஞ்சம் சாதிக்காய்த் தூளையும் சேர்த்து, சற்றுநேரம் கொதிக்கவைத்து, பிறகு அதில் ஒரு பையின்ட் திராக்ஷரஸ சாராயத்தை ஊற்றி, இனிப்பேற்றி, மிஸ்ரமித்துக்கொள்ளவும்.

வெதுப்பிய ரொட்டிப்போட்ட ஜலம். (Toast Water) சன்னமாய் அறுத்த ரொட்டித்துண்டை, கறுத்துப்போகாமல் மெதுவாய் தீச்சு, அதை

ஒரு குடுவை குளிர்ந்த ஜலத்தில் போட்டு, ஒருமணிநேரம் சென்றபிறகு உபயோகிக்கவேண்டியது. இது தாகசமனி ரொட்டியைப் பக்குவப்படுத்தி அதில் வெந்நீரை ஊற்றி, ஜலம் குளிர்ச்சியாகிறவரையில் மூடிவைத்து பக்குவப்படுத்திக் கொள்ளுகிறதும் ஒருமுறை.

பார்லி அரிசிஜலம்.—(Braley Water) ஒரு பலம் பார்லி அரிசியைக் கொஞ்சம் ஜலத்தில் போட்டு துஷ்டுகள் நீங்கும்படி கொஞ்சநேரம் கொதிக்கக் காய்ச்சி, பிறகு அதில், ஒருசேர் ஜலம் சேர்த்து, ஒருநாழிகை வேக வைத்து, பாதி சுண்டினபிறகு, அதில் ஒருதுண்டு பச்சை எலுமச்சம்பழத் தோலும், ஒரு கட்டி சருக்கரையும், கூட்டிக்கொள்ளவும். ஒருவேளை கஞ்சி தளமாகிவிட்டால், ஒரு ஆழாக்கு ஜலம் சேர்த்துகொள்ளலாம். தேவையிருந்தால் எலுமிச்சம்பழரஸமும் சேர்த்துகொள்ளலாம்.

திவ்வியமான ஜம்பீர குடிநீர். (Lemon water). இரண்டு எலுமிச்சம் பழச்சுளேயும் ஒரு துண்டு அதின்தோலேயும், கொஞ்சம் சருக்கரையும் சேர்த்து, அதில், ஒரு குப்பி வெந்நீரைவிட்டு, 2-மணிநேரம், ஆவிவெளிப்படாமல் மூடிவைக்கவும். குளிர்ந்தபிறகு, வடிகட்டி உபயோகிக்கலாம்.

சவ்வரிசி. (sago). சவ்வரிசியிலிருக்கிற மணவாசனேயை எடுத்துவிட்டு, அதை ஒருமணிநேரம் குளிர்ந்த ஜலத்தில் ஊறவைத்து, ஜலத்தைப்போக்கி, செவ்வையாய்க் கழுவி, பிறகு கொஞ்சம் ஜலம்விட்டு, தெளிவாகிறவரையில் கொதிப்பித்து, தேவையிருந்தால் எலும்பிச்சம்பழத்தோலும், பரிமள வர்க்கங்களும் சேர்த்துக்கொள்ளவும்.

சவ்வரிசிப்பால். (Sago milk). சவ்வரிசியை மேற்படி மார்க்கமாய்ச் சுத்திசெய்து, புதிய பாலில் போட்டுக் கொதிக்கக் காய்ச்சினல், அரிசி மலர்ந்து, கஞ்சி உபிரியாகும். அதில் சருக்கரையும், பரிமளவர்க்கங்களேயும் சேர்க்காமல் கொடுக்கலாம்.

பார்லி அரிசி கஞ்சி. (Barley Gruel). 4-அவுன்ஸ் பார்லி அரிசியைக் கழுவி, 4-பைன்ட ஜலத்திலிட்டு, சன்னலவங்கப்பட்டையில் ஒரு துண்டு சேர்த்து, 2-பைன்ட்டுக்குச் சுண்டக் காச்சி, வடிகட்டி, அதில் சருக்கரையும் $\frac{3}{4}$-பைன்ட் போர்ட் ஒயினும் சேர்த்துக் கலந்துகொண்டு, தேவையானபோது ரோகிக்குக் கொடுக்கலாம்.

திந்திரிணீ குடிநீர் (Tamarind drink). புதுப்புளியை, ஜலத்தில் கரைத்து, இனிப்புக்குத் தக்கபடி, பஞ்சதாரையைச் சேர்த்து, பக்குவப்படுத்திக்கொண்டால், வெகு மதுரமான குடிநீராகும், தாகத்தை யடக்கும்.

சுரங்களுக்கு, பார்லி அரிசி ஜலக் குடிநீர், 1-அவுன்ஸ் பார்லி அரிசியை செவ்வையாய்க் கழுவிக்கொண்டு இரண்டு ஆவர்த்தி புடைத்து, பிறகு 3-பைன்ட் ஜலத்தில்போட்டு, அதில் 1-அவுன்ஸ் இடித்த தித்திப்பு வாதுமையும், ஒருதுண்டு, எலுமிச்சம் பழத்தோலும், சேர்த்து, பதத்துக்குக் காய்ச்சி, பிறகு கொஞ்சம் சருங்கரையைச் சேர்த்துக்கொள்ளவும்

இருமல், தூர்ப்பலத்துக்கு. (A draught for cough and debility.) ஒரு புது முட்டைக்கருவை சிலுப்பி, அதை $\frac{1}{4}$-பையின்ட் சுடவைத்த, புதுப்

பாலில் மிஸ்ரமித்து, ஒரு கரண்டி காடி, 1-கரண்டி பந்நீர், கொஞ்சம் சாதிக்காய் தூள்; இவைகளைச் சேர்த்துக்கொள்ளவும். முட்டையைச் சேர்த்த பிறகு, சுடவைக்கலாகாது.

ஜம்பீரக்ஷீரஜலம். (Lemon whey). பாலைக் கொதிக்கவைத்து, அதில் எலுமிச்சம் பழரசம் கொஞ்சம் சேர்த்தால் தெளிவாகும், அதில் வெந்நீர் விட்டு விளாவி, 1, 2 கட்டி பஞ்சதாரையைச் சேர்த்துக்கொள்ளவும். இது தேகத்துக்குத் தணிவு கொடுக்குக், வியர்வையைப் பிறப்பிக்கும்.

ஜம்பீர பானகம் பொன்சு. (Lemonade). எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து, ரசமெடுத்துக்கொண்டு, அந்தத்தோலில் கொஞ்சமெடுத்து, அதில் வெந்நீர்விட்டு மூடிவைக்கவும். பஞ்சதாரையும், ஜலமும் சேர்த்து, பாணிதம் செய்து நுரையைப்போக்கிப் பக்குவப்படுத்திக்கொள்ளவும். சகலமும் குளிர்ந்தபிறகு, பழரசத்தையும், கஷாயத்தையும், பாணிதத்தையும் மிஸ்ரமித்து, தேவையான ஜலம்விட்டு வடிகட்டிக்கொள்ளவும்.—பழரசத்தை வடிகட்டி அதில், ஜலமும் சருக்கரைப் பாகும்சேர்த்து செய்துகொள்ளுவது ஒருமுறை இது தாசகமனி, சீதளகாரி.

மாங்காய்ச் சுண்டாங்கி, அல்லது துவையல்— (Mango Chutney, or Bengal Chutney). தோலைப்போக்கிய மாங்காய்ச்சதை க-பலம்—விரையைப் போக்கிய மிளகாய், $1\frac{1}{2}$-பலம்; தொக்கைப்போக்கிய புதுப்புளி, 2-பலம்; கற்கண்டு, 1-பலம்; இஞ்சிவேர், $1\frac{1}{2}$-பலம்; வெள்ளுள்ளி $\frac{3}{4}$-முதல் $1\frac{1}{2}$-பலம, விரையைப் போக்கிய திராக்ஷப்பழம், $1\frac{1}{2}$-பலம்—நல்ல உப்பு 1-பலம்-காடி-1-ஆழக்கு அல்லது தேவையானது. மிளகாயை காடியில் 1-மணிநேரம் ஊறவைத்து பிறகு எல்லாவற்றையும், அம்மியில்வைத்து மைய அரைத்து காடியைச்சேர்த்து சுண்டாங்கி பதமாய் செய்துகொள்வவும்.இது மெத்த இனிப்பாய் இருக்கும்; அரோசகத்துக்கு நல்லது; அதிக போஜம் கொள்ளும்.

நில ஆவாரைத்துவையல்.—நில ஆவாரை இலையுடன், புதுப்புளி, இஞ்சி, பச்சைக் கொத்தமல்லித்தழை சருக்கரை, எலும்சசம்பழரசம் திராக்ஷப்பழம், உப்பு, மிளகாய் ஆகிய இவைகளைச்சேர்த்து, அரைத்து, துவையல்செய்து, நெய்விட்டுத் தாளித்து, அதில் கொட்டைப்பாக்குப் பிரமாணம், இராப்போஜனத்துடன் சாப்பிட்டுக்கொண்டுவந்தால், கிரமமாய்க் காலப்பிவர்த்தியாகி, தேகத்துக்கு ஆரோக்கியமுண்டாகும். இந்த துவையல் மலபந்தமுடையவர்களுக்கு நல்லது.

சரக்கொன்றைக் கொழுந்து துவையல்.—சரக்கொன்ரைக்கொழுந்தை வதக்கி, அதனுடன், புளி மிளகாய், உப்பு, சருக்கரை, இஞ்சி இவை முதலியவைகள் சேர்த்து, அரைத்து, துவையல் செய்துகொண்டு, இராபோஜனத்துடன் கொட்டைப்பாக்குப் பரிமாணம் சாப்பிட்டுக்கொண்டுவந்தால், காலையில் மலம் தாராளமாய் இறங்கும்.—சரக்கொன்றைப்புளியை, மேற்படி விதமாய்த் துவையல்செய்தாவது மிளகுநீர் செய்தாவது சாப்பிடலாம்; அவைகளுக்கும் மல சுத்தியாகும். இவைகள் மலபந்த ரோகிகளுக்கும், அரிவிஸ் ரோகமுடையவர்களுக்கும் நல்லது.

நெல்லிக்காய்த் துவையல்.—10-15-நெல்லிக்கனிகளை அடுப்புக்கும்பியில் புழுங்கவைத்து எடுத்து, விரைகளைப்போக்கி, அதனோடு கொத்துமல்லித்தழை, கொப்பரைத் தேங்காய், வகைக்கு ரூபாயெடை 1; உப்புரூபாயெடை 2; வெள்ளைப்பூண்டு, வெங்காயம், வகை 1-க்கு ரூபாயெடை $\frac{1}{2}$; பச்சைமிளகாய் 12 ஆகிய இவைகளை ஒன்றாக அரைத்து, பழரசம்விட்டுப் பிசைந்து, உபயோகிக்கவேண்டும். இது பித்தசமனி ; அரோச த்தைப்போக்கும்.—(புலவு நூல் முறை).

இஞ்சித்துவையல்.—இஞ்சி, வெள்ளுள்ளி, தேங்காய், வறுத்த கடலைப் பருப்பு, கசகசா, கொத்துமல்லிவிதை ஆகிய இவைகளை நிதானமாய் எடுத்துக்கொண்டு மையஅரைத்து, ஒரு ஏனத்தில்போட்டு, அதில் உப்பைத்தூவி, பச்சைமிளகாய், வெங்காயம் இவைகளையும் அரைத்துப்போட்டு, தயிர் வடிகட்டி அதில் விட்டு, எலுமிச்சம்பழம்சேர்த்து, எல்லாவற்றையும், செவ்வையாய்ப் பிசைந்து, பக்குவப்படுத்திக்கொள்ளவும். இந்தத்துவையல் இனிப்பாய் இருக்கும்; வாயுவைக் கண்டிக்கும்; அரோகத்தை நீக்கும்.